Supplement to "Practical Life"
"பிழைக்கும் வழி"க்கு அனுபந்தம்.



MOTOR-CAR.—மோட்டார் கார்.

"உலகத்தில் எந்த தேசத்திலும் மோட்டார் வண்டிகள் பிரபலமாகி விட்டன"—20-ம் பக்கம்.

BY THE COURTESY OF MESSRS. OAKES & CO., LTD.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.
G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஷம் ஜப்பான் தேச
தற்கு வேண்டி
கற்று வந்தவர்.
கல்கத்தாவில்

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.
EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. | ஸௌமிய வருஷம் தைமீ—JANUARY 1910. | ஸஞ்சிகை No. 1.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்நிய நாடு.
வருஷம் 1க்கு	.. 4 0 0	..	6 0 0
6 மாதத்திற்கு	.. 2 0 0	..	3 0 0
தனிப்பிரதி	.. 0 6 0	..	0 8 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்படவேண்டும்.

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க மரியாதை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸமும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டில் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட், மதராஸ்.

PRACTICAL LIFE.

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		*Foreign.* Rs. A. P.
Per annum ...	4 0 0	... ...	6 0 0
„ half year ...	2 0 0	... ...	3 0 0
Single copy ...	0 6 0	... ...	0 8 0

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers Messrs. G. A. Vaidya Raman & Co., 10, Esplanade, Madras.

EDITORIAL NOTES.

பத்திராதிபர் குறிப்புகள்.

Seeds.

விதைகள்.—தஞ்சாவூர் முதலான ஜி[illegible]களில் நஞ்சை மாகுல் அறுவடைக்காலம் [illegible]பித்து விட்டது. இதன் பிறகு ம[illegible]யும் செய்நேர்த்தி செய்யும்பொழுது [illegible]ளுக்கு வேறு யாதொரு உரமுமிடாமல் [illegible] வளப்பத்தை உண்டாக்கக்கூடிய ச[illegible] அவுரி, கொழிஞ்சிப் பயிர்களைப்போட [illegible] அதற்காக திருச்சினாப்பள்ளி டிவிஷ[illegible] சாய டிப்டி டைரக்டர் மிஸ்டர் எச். [illegible]ஸன், நயமாய்க் கிடைக்கக்கூடிய இ[illegible]ருந்து நேர்த்தியான வித்துகள் வரவழைத்துத் தஞ்சாவூர் ஜில்லா ரெயில்வே ஸ்டே[illegible] பலவற்றில் வைத்திருக்கிறார். வேண்டி[illegible] நன்னிலம் விவசாய இன்ஸ்பெக்டர் ஸி. நாராயணஸாமி அய்யருக்கெழுதி [illegible]துக்கொள்ளலாம். **விலை விபரம்.**—[illegible]ஞ்சி : பட்டணம் பக்கா ஐம்பது படி மூட்டை 1-க்கு ரூபா 5-8-0; அவுரி : மூட்டை 1-க்கு ரூபா 6-0-0; சண[illegible] படி மூட்டை 1-க்கு ரூபா 9-0-0

ந் 'இஸ்[illegible]ல்.—பட்டண ரில் உள்ளவர்கள் வண்ணானுக்குப் போ ம் துணிகளையும் சட்டைகளையும் நன்றாய் வெளுத்து 'இஸ்திரி' பண்ணிக்கொண்டுவரவே என்று சொல்லி வண்ணானிடத்தில் டுப்பார்கள். இஸ்திரி செய்தால் கூலி தி கொடுக்கவேண்டியிருக்கும். அதற் சோம்பி சிலபேர்கள், முக்கியமாய் கிரா ந்தரங்களில் உள்ளவர்கள், துணி வெள் யாய் அழுக்கில்லாமல் இருக்க வேண்டிய ான்றே ஒழிய இஸ்திரி போடுவதுவீண் வென்றும் 'டம்பம்' என்றும் சொல்லி ிகளை உழமண்ணிலோ, அதாவது, சார ணிலோ அல்லது வெள்ளாவியிலோ க்குக்கொண்டு வந்தால் போதும் என்று லுவார்கள். இது பிசகு. வண்ணான் ிடுகளில் துணிகள் எடுக்கிறான். அம் பாட்டினவன் துணியோ, சிரங்கு பிடித் துணியோ எல்லாவற்றையும் எடுத்து ய்ச் சேர்த்து வெளுக்கிறான். ஆகையால் வாரொட்டி முதலான வியாதிகளை உண் ும் பாக்ட்டீரியாக்கள், அதாவது, சிறு ள், எல்லாத்துணிகளிலும் ஒட்டிக் ள ஹேதுவாகிறது. அப்படிப்பட்ட களை வெள்ளாவியில் வைத்து எடுத்து ல் துணி வெள்ளையாகிவிட்டாலும் அ ட்டிக்கொண்டிருக்கும் பாக்ட்டீரியாக்க ாம் சாகாமல் அதிலேயே ஒட்டிக்கொ து அந்தத்துணிகளை மறுபடியும் கட் ள்ளுகிறவர்களுக்கு வியாதியை விளை வெள்ளாவியில் வைத்து எடுப்பதால் பாக்ட்டீரியாக்களெல்லாம் செத்துப் டும். ஏனென்றால் அவைகளைக்கொல்ல ூடு அதாவது 70 டிக்ரீ சூடு போ ியில் ஒட்டிக்கொண்டிருக்கும் சிறு பாக்ட்டீரியாக்க[illegible] ஜாஸ்தி அதாவது 130 இதற்கு இஸ்திரிபோடுவது இஸ்திரிப் பெட்டியி நல்ல சூடாக்கியே வண்ணா வான். இப்படிச் செ[illegible] சிறு பாக்ட்டீரியாக்கள் இறந்து போய்விடும். இதை நிதர்சனமாகப் பரீக்ஷித்துப் பார்த்திருக்கிறார்கள். பலவிதமான தொத்து வியாதிகளில் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த குழந்தைகளின் துணிகளைக் கொஞ்சம் ஈரப்படுத்தி "இஸ்திரி" செய்தார்கள். பிறகு பாக்ட்டீரியாக்கள் வளர்வதற்கு அனுகூலமான வச்சிரப் பசையுள்ள தகடுகளில் அந்த "இஸ்திரி" போடப்பட்ட துணிகளை வைத்துத் தேய்த்தார்கள். பின்னால் துணிகளை சாஸ்திர ரீதியாய்ப் பரிசோதித்ததில் பாக்ட்டீரியா ஒன்றுகூட இல்லாமலிருந்தது. ஆகையினால் துணிகளுக்கு "இஸ்திரி" போட்டு உபயோகிப்பது சுகாதாரத்துக்கு அனுகூலமானது என்று ஏற்படுகிறது.

Printing Ink.

அச்சிட மை.—உலகத்தில் படிப்பும் நாகரீகமும் ஜாஸ்தியாகி வரவர புஸ்தகங்களும் பத்திரிகைகளும் அதிகமாகிக்கொண்டே வரும். இவைகளை அச்சிடுவதற்கு வேண்டிய மையும் வரவர அதிகமாகவே வேண்டியிருக்கும். நம்முடைய தேசத்தில் பல அச்சாபீஸுகள் இருந்தும், அவைகளுக்கு வேண்டிய மை முழுவதும் இதர தேசங்களிலிருந்து வரவழைக்கப்படுகிறது. போன மேயீ முதல் இந்த மை செய்ய வடக்கே டாக்கா பட்டணத்தில் ஜமீன்தாராகிய பாபு ப்ரமோத குமார் போஸ் என்பவர் ஒரு 'பாக்டெரி' ஏற்படுத்தி இருக்கிறாராம். இதை பாபு ஜோகேந்திர ப்ரொஸாத் போஸ் என்பவர் பார்த்து வருகிறார். இவர் மூன்று வருஷம் ஜப்பான் தேசத்தில் போய் அச்சிடுவதற்கு வேண்டிய பலவித மைகள் செய்வதைக் கற்று வந்தவர். மேற்படி மை செய்வதற்காக கல்கத்தாவில் வருஷம் ஒன்றுக்கு 1,800 ரூபாய் வாடகை பேசி ஒரு இடம் வாங்கி இங்கிலாந்திலிருந்து ஒரு நீராவி இஞ்சினும் ஜெர்மனியிலிருந்து வேறு ஐந்து யந்திரங்களும் வந்திருக்கின்றனவாம். தினம் ஒன்றுக்கு 1,000 ராத்தல் மை செய்யப்படுகிறது. இந்த மை அன்னிய தேசங்களிலிருந்து வரும் மைக்கு சமமாயிருப்பதாகவும் விலையும் ஸரஸமாக இருப்பதாகவும் கேள்விப்படுகிறோம். தவிர, போன மாஸத்தில் 'கண்ட்ரோலர் ஆப் ப்ரிண்டிங்' என்று சொல்லப்படும் இந்தியா கவரன்மெண்டாருடைய அச்சாபீஸ் கணக்குகளை ஆராய்ச்சி செய்பவராகிய எம். ஜே காக்ஸ்வெல் என்பவர் மேலே சொல்லிய மை செய்யப்படும் ஆபீஸைப்போய்ப் பார்த்தாராம். இது வரையில் அச்சிட மை செய்வதற்கு இந்தியாவில் பெரிய பாக்டெரிகள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இது முதல்முதல் ஏற்பட்ட கைத்தொழிலாகையால் அந்த பாக்டெரியின் மையின் மாதிரியைக் கொஞ்சம் வரவழைத்துப் பார்த்து, அது நன்றாயிருந்தால் அந்த மையை வரவழைத்து நம்முடைய தேசத்தில் அச்சாபீஸ் வைத்திருப்பவர்களெல்லாரும் உபயோகிப்பார்களென்று நம்புகிறோம்.

Ruby.

கெம்பு.—கல் இழைத்த நகைகளை நம்முடைய தேசத்தில் பணக்கார ஸ்திரீகள் வெகுசாய் உபயோகிக்கிறார்கள். நகை வாங்கவேணுமானால் கல்லுப்பரீக்ஷை தெரிந்த தட்டானிடத்திலும் இன்னும் தெரிந்தவர்களிடத்திலும் காண்பித்து வாங்குவது வழக்கமாக இருக்கிறது. அவர்கள் பாடவேளைகளில் தான் பார்ப்பார்கள். கெம்பில் அதாவது சிவப்பில் பொய்க்கெம்பு, நிஜக்கெம்பு என்று இரண்டு விதம் உண்டு. இது அனுபோகமுள்ளவர்களுக்கு சுலபமாய்த் தெரியும். அப்படிக்கு அனுபோகமில்லாதவர்களும் பொய்க் கெம்பை சுலபமாய்க் கண்டுபிடிக்க ஒருவழி உண்டு. சில தாதுப்பொருள்களை இரண்டு விதமாக சாய்த்துப் பார்த்தால் இரண்டு வெவ்வேறு நிறமாகத் தோன்றும். அதே மாதிரி கெம்பையும் சோதிக்கலாம் இதற்காக 'டைக்ராய்ஸ்கோப்' என்பதாக ஒரு கருவி ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கருவியில் கெம்பை வைத்துப்பார்த்தால் நிஜக்கெம்பாயிருந்தால் ஒரு சிவப்பு கிரணம் தோன்றும். சூது கெம்பாயிருந்தால் சிவப்போடு கொஞ்சம் நீலம் கலந்ததாகக் காணப்படும். ஆகையால் கெம்புகள் வாங்கும்பொழுது ரொம்பவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்து வாங்கவேண்டியது அவசியம். கொஞ்ச காலமாக சூதுக்கெம்புகள் அதாவது மின்சார உதவியால் செய்யப்பட்ட செயற்கைக்கெம்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளை ஜெர்மனியில் உள்ள ஒயில்டு என்பவரும், ப்ரொபெஸர் ஏ. மீத் என்பவரும் கண்டுபிடித்து செய்து வருகிறார்கள். இதில் லாபம் இருக்கக்கண்டு செயற்கைக் கெம்புகள் செய்வதற்கென்றே ஜெர்மனியில் ஒரு கம்பெனி ஏற்பட்டு விட்டது. இந்தக் கம்பெனிக்கு முதல் 4½ லக்ஷம் ரூபாய்.

◆

சென்னை ராஜதானி விவசாய இலாகா வருஷாந்தர ரிபோர்ட்டும், கைத்தொழில் இலாகா வருஷாந்தர ரிபோர்ட்டும், நம்முடைய பார்வைக்கு வந்திருக்கின்றன. இவைகளில் அடங்கிய விஷயங்கள் '**பிழைக்கும் வழி**'க்கு ரொம்பவும் சம்பந்தமானவைகள். அவைகளைப் பற்றி இனிமேல் வரும் சஞ்சிகைகளில் அடிக்கடி எழுதுவோம்.

The Indian Industrial Conference.

இந்திய கைத்தொழில் சபை.— போன டிசம்பர் மாஸத்தில் லாகூரில் கூடிய இந்திய கைத்தொழில் சபையில் வந்திருந்த பிரதிநிதிகள் செய்த தீர்மானங்களை இந்த சஞ்சிகையின் இன்னொரு பக்கத்தில் சொல்லியிருக்கிறோம் இந்த சபைக்கு அக்கிராசனாதிபதியாயிருந்த தர்பங்கா மகாராஜா அவர்கள், இந்தியாவின் கைத்தொழில்களை முன்னுக்குக் கொண்டுவர அவசரப்படுவதில் பிரயோஜனமில்லையென்றும், அப்படிப்பட்ட பெரிய காரியத்தை நாளாவர்த்தியில்தான் எல்லாரும் ஒன்று சேர்ந்து நடத்த வேண்டுமென்றும் சொன்னார். இந்தியாவின் கைத்தொழில்களில் முதன்மையானது விவசாயம். சாஸ்திர முறைகளை அறிந்து உபயோகிப்பதனால் இப்பொழுது ஆகும் விளைவைவிட வெகுசாய் அதிகப்படுத்தலாம் என்றும், அதனால் சோற்றுக்கில்லாத அநேக ஏழைகள் பிழைக்கக் கூடுமென்றும் சொன்னார். இப்படிக்கு விவசாயம் விருத்தியாவதற்கு, ஒவ்வொரு சிறு பள்ளிக்கூடத்தையும் ஒட்டி, ஒரு தோட்டம் ஏற்படுத்தி, அதில் பையன்களுக்கு விவசாய விஷயங்களைக் கற்பிக்க வேண்டுமென்றும் சொன்னார். பிறகு இந்தியாவில் பற்பல இடங்களில் பலவிதமான படிகளும், நிறைகளும், உபயோகப்படுவதால் ஜனங்களுக்கு ரொம்பவும் அசௌகரியமாயிருக்கிறதென்று எடுத்துக் காட்டினார். ஐக்கிய நாணயச் சங்கங்கள், ஸ்வதேசி பாங்கிகள் முதலிய பொது ஸ்தாபனங்கள் அபிவிருத்தியாய்க்கொண்டே வருவது நம்முடைய தேச அபிவிருத்திக்கு நல்ல குறிகளென்று சொன்னார். தேசத்தில் செல்வம் அபிவிருத்தியாகவேண்டுமானால் ராஜாங்க விஷயத்தில் எல்லாரும் ஒன்று சேர்ந்து அமைதியாய் நடந்துகொள்ள வேண்டுமென்று எடுத்துக் காட்டி, ஜனங்கள் எவ்வளவு பணக்காரர்களானாலும் புருஷர்களும், பெண்களும் பக்தர்களாயும் யோக்கியர்களாயும் நடந்து ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்து உழைத்துவர வேண்டுமென்று சொன்னார். பொதுவாய்ப் பேசும்பொழுது பருத்தி, சணல், நிலக்கரி, மீன் பாடம் செய்தல், இன்னும் இப்பேர்ப்பட்ட பெரிய கைத்தொழில்களில் லாபம் சம்பாதிக்க இன்னும் ரொம்ப இடம் இருக்கிறதென்றும், இவைகளைத்தவிர மின்சார உதவியால் பலவகைத்தொழில்கள் ஏற்படுத்தக் கூடுமென்றும், அதற்காகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மின்சாரத்தை யொட்டிய தொழில்களைக் கற்பிக்க வேண்டுமென்றும் சொன்னார். மேலே சொல்லிய பெரிய கைத்தொழில்களைத்தவிர சாமான்ய காடா, மல்லு முதலியவைகளல்லாமல் எவ்வளவோ விதமான கரைபோட்ட அழகான துணிகள் நெய்தல், பட்டு நெய்தல், பூப்போடுதல் முதலான சிறு கைத்தொழில்களால் உண்டாகும் சாமான்கள்மட்டும் வேண்டிய அளவில் அகப்படும் பக்ஷத்தில் அவைகளெல்லாம் நன்றாய் விற்பனையாகுமென்றும் சொன்னார். அதற்காக ஜப்பானியர்கள் ஜெர்மனி தேசத்தார்கள் இதர தேசங்களில் தங்கள் தங்கள் சாமான்களைக் கொண்டுபோய் ம்யூஸியம் அதாவது பொருட்காட்சிகளாக வைத்து விற்பதுபோல் நாமும் செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

மேலே சொல்லிய விஷயங்களில் ஒன்றிரண்டைப்பற்றி நமக்குக் கொஞ்சம் அபிப்பிராய பேதம் இருந்தாலும், மகாராஜா அவர்கள் சொல்லிய விஷயங்களெல்லாம் நம்முடைய தேசத்துக்கு நன்மை உண்டாக்கத் தக்கவைகளேயாகும். ஒவ்வொன்றையும் பற்றி இந்த சஞ்சிகையில் விவரிக்க இடமில்லாததால் இனிமேல்வரும் சஞ்சிகைகளில் எழுதுவோம்.

The Government's Budget.

கவரன்மெண்டின் வரவு செலவு திட்டம்— ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்குமேலிருந்தால், முதல் பெண்ணுக்குக் கலியாணம் பண்ணவேண்டிவரும் பொழுது வீட்டில் பெரியவர்கள் கலியாணத்துக்கு எவ்வளவு செல்லுமென்று உத்தேசமாக ஒரு திட்டம் போடுவது வழக்கமாக இருக்கிறது. "வீட்டைக்கட்டிப் பார், கலியாணத்தைப்பண்ணிப்பார்" என்னும் பழமொழிப்படி இந்த திட்டப்பிரகாரம் செலவாகமால் அநேக கலியாணங்களில் திட்டத்துக்கு அதிகமாகவே செலவுஆகிவிடும். முதல் கலியாணத்துக்கு இப்படியாகும். இரண்டாம் பெண்ணுக்குக் கலியாணம் ஏற்படும்பொழுது அநேகமாய் புதிதாக திட்டம் போடுவதில்லை. முன் பெண் கலியாணத்துச் செலவு கணக்கை எடுத்துப்பார்த்து அப்படிச் செய்தால் எவ்வளவு செலவாகுமென்று அறிந்துகொள்ளுவார்கள். சில வேளைகளில் முன்பெண்ணுக்குச் செய்ததைவிட இளையபெண்ணுக்கு சீர் முதலியவைகளில் ஜாஸ்தியாகவோ குறைச்சலாகவோ செய்யும்படி நேரிடும். இப்படி நேர்ந்தால் ஏற்றக்குறைச்சலுக்குத் தக்கபடி திட்டத்தை மாற்றி கடைசியாகக் கலியாணத்திற்கு இவ்வளவு பணம் வேணும், கையில் இருக்கும் பணம் போதும் போதாதென்று பார்த்து, வேண்டுமானால் கடன்வாங்கியோ எப்படியோ பணத்தைச்சேகரிப்பார்கள். இதுதான் சாதாரணக்குடித்தனமுறை. "குடித்தனமோ துரைத்தனமோ" என்னும் பழமொழிப்படி, துரைத்தனமும் இப்படித்தான் நடத்தப்படுகிறது.

'அபீஷியல்' வருஷம் என்று சொல்லப்பட்ட ஏப்ரல்௴ முதல் தேதி முதல் மார்ச்சு௴ 31௳ வரையில் இந்தியா கவரன்மெண்டாரும் மாகாண கவரன்மெண்டார்களும் பிரதி வருஷமும் வரப்போகிற வருஷத்திற்கு ஒரு வரவு செலவு திட்டம் போடுவது வழக்கம். இந்த திட்டம் ஒவ்வொரு சின்ன உத்தியோகஸ்தரும், அவரவர் உத்தியோக முறைமையில் வசூலிக்க வேண்டியவும் செலவழிக்க வேண்டியவுமான தொகைகளைத் தெளிவாய் எடுத்துக்காட்டி ஒரு கணக்குத் தயார் செய்து மேல் உத்தியோகஸ்தருக்கு அனுப்பவேண்டும். அந்தக் கணக்குகளை அந்த மேல் உத்தியோகஸ்தர் பார்த்து ஒப்பி கடைசியில் மாகாண கவரன்மெண்டாருக்கு சகல திட்டங்களும் செப்டம்பர் மாஸம் முதல் அநேகமாய் நவம்பர் 30 தேதிக்குள் வந்து சேர்ந்து விட வேணும். இந்த திட்டங்களையெல்லாம் மாகாண கவரன்மெண்டார் கவனித்துப்பார்த்து ஏற்ற வேண்டிய இடங்களில் ஏற்றி, குறைக்க வேண்டிய இடங்களில் குறைத்து, இந்தியா கவரன்மெண்டாருக்கு டிசம்பர் மாஸம் 20-ம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும். இப்படிக்கு ஒவ்வொரு மாகாண கவரன்மெண்டின் கணக்குகளையும் பார்த்து இந்தியா கவரன்மெண்டார் இந்தியா முழுமைக்கும் ஒரு திட்டம் ஏற்படுத்துவது வழக்கம்.

மேலே சொல்லியபடி திட்டங்கள் போடுவதில் திட்டம்போடவேண்டிய ஒவ்வொரு அதிகாரியும், அவரவருக்கு முந்திய வருஷத்தில் அயனாக என்ன வரவு செலவாகியிருக்கிறதோ, அதையே திட்டத்துக்கு ஆதாரமாக வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு உதாரணத்தை எடுத்துச்சொன்னால் இந்த விஷயம் நன்றாய்த் தெரியும். வருகிற 1910-11-ம் வருஷத்திற்கு திட்டம் ஏற்படுத்தவேண்டியதாக வைத்துக் கொள்வோம். மேலே சொல்லியபடி இதற்கு முந்திய வருஷமாகிய 1909-10-ம் வருஷத்து அயன் வரவு செலவை ஆதாரமாக வைத்துக்கொண்டு அந்த திட்டம் ஏற்படுத்த வேணும். ஆனால் 1909-10-ம் வருஷத்து

அயன்கள் அகப்படா. ஏனென்றால் கீழ் அதிகாரிகள் 1910-11-ம் வருஷத்து திட்டங்களை 1909-10-ம் வருஷம் முடிவதற்கு முன்னாலேயே அந்த வருஷத்து ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களிலேயே தயாரிக்க ஆரம்பிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு 1909-10-ம் வருஷம் 6 மாதத்து அயன்தான் கிடைக்கும். ஆகையால் அதற்கு முந்தி வருஷம் முழுவதும் கணக்கு கூட்டப்பட்ட 1908-1909ம் வருஷத்து அயன் வரவு செலவுகளை எடுத்துக் காட்டுவது வழக்கம். இதையும் 1909-10 ம் வருஷத்து முன் 6.7 மாத அயன்களையும் வைத்துக்கொண்டு, 1909-10-ம் வருஷத்திற்கு மறு திட்டம் ஒன்று போட்டு காண்பிக்கவேண்டியது. இந்த மறு திட்டம் போட இரண்டு மூன்று வழிகளுண்டு. வருஷ முன் பாகத்தில் ஒரு விதமாயும் பின் பாகத்தில் ஒரு விதமாயும் உள்ள வரவு செலவு அம்சங்களாயிருந்தால் 1909-10-ம் வருஷத்து முன் மாதங்களுக்கு அயனாகத்தெரிந்த 6,7 மாத வரவு செலவோடு 1908-09 வருஷத்து பின் 6 அல்லது 5, மாத அயன்களைக் கூட்டி மொத்த திட்டம் போடுவது ஒரு விதம். வருஷம் முழுவதும் ஒரே விதமான வரவு செலவு அம்சங்களாயிருந்தால் முதல் 6 மாதத்திற்கு இவ்வளவு வரவு செலவென்று தெரிந்ததை இரட்டித்து 12 மாதத்து வரவு செலவு இவ்வளவு என்று போட்டு விடுவது ஒரு விதம். ஸ்டாம்பு போன்ற சில அம்சங்கள் ஒவ்வொரு வருஷமும் முன்வருஷத்தை விட கொஞ்சம் அதிகமாகவே வரவு உண்டு. இப்படிப்பட்ட அம்சங்களுக்கு 1908-09-ம் வருஷத்தில் என்ன அயன் கூடுதலாயிருக்கிறதோ அதற்குமேல் 100-க்கு இவ்வளவு கூட ஆகுமென்று உத்தேசித்து கூட்டிப் போட்டு விடுவது ஒருவிதம். இப்படிக்கெல்லாம் மறுதிட்டம் போட்டு ஏதாவது வெளிப்படையான காரணங்களால் இதில் நிச்சயமாகவாவது, அநேகமாகவாவது ஏறும் குறையுமென்று தெரியும் பக்ஷத்தில், அதற்குத் தக்கபடி மறுதிட்டத்தை மாற்றிக் காண்பிக்க வேண்டியது. இப்படிப்பட்ட 1909-10-ம் வருஷத்து மறு திட்டத்தைய 1910-11-ம் வருஷத்து மதிப்பு திட்டமாகவைத்து, அந்த வருஷத்தில் நிச்சயமாய் ஏதாவது அம்சங்களில் ஏறும் குறையும் என்று தோன்றினால் அவைகளுக்குத் தக்கபடி திட்டங்களை மாற்றி மதிப்பு திட்டம் போடுவது வழக்கம்

மேலே சொல்லியபடி திட்டங்கள் போடுவதில் பெரிய உத்தியோகஸ்தர்கள் மாதம் ஒன்றுக்கு இத்தனை சம்பளமுள்ள இத்தனை பேர்களுக்கு மொத்தச் சம்பளச்செலவு இவ்வளவு, இன்னின்ன சிப்பந்திகளுக்கு இன்னின்ன சம்பளம், அவைகளினால் மொத்தச் செலவு இவ்வளவு, ஆபீசுக்கு வேண்டிய மேஜை நாற்காலி முதலியவைகளால் செலவு இவ்வளவு, என்று ஒவ்வொரு அம்சங்களையும் வியக்தமாக எடுத்துக் காண்பிக்கவேண்டும். இப்படி திட்டம் போடுவதற்குக்காரண மென்னவென்றால் ராஜாங்கச் செலவுக்குவேண்டிய பணம் இருக்குமா இருக்காதா என்று பார்க்கத்தான். வரவு அதிகமாயிருந்து செலவு குறைச்சலாயிருந்தால் கவரன்மெண்டார் கவலைப்படமாட்டார்கள். அப்படிக் இல்லாமல் வரவுக்கு மிஞ்சி செலவு ஏற்படும்போலிருந்தால் அதிகச் செலவுக்கு வேண்டிய பணத்தை பழய வரிகளை ஜாஸ்திப் படுத்தியோ, புது வரிகள் போட்டோ அல்லது கடனாகவாங்கியோ ராஜாங்கத்தை நடத்த ஏற்பாடு செய்வார்கள். இந்த விஷயங்களில் பொது ஜனங்களின் அபிப்பிராயம் எவ்வளவு தூரம் ஏறக்கூடியது என்பதைப் பற்றி இன்னொரு சஞ்சிகையில் விசாரிப்போம்.

Trade and Crops.

வியாபாரமும் மாசூலும்.—மலையாளத்திலிருந்து இதர தேசங்களுக்குக் கொப்பரை ஏற்றுமதியாவது அனேகருக்குத் தெரிந்த விஷயம். இதை ஏற்றுமதி செய்கிறவர்கள் முக்கியமாய் ஐரோப்பியர்கள். இவர்கள் மலையாளத்தில் கொப்பரை விற்கிறவர்களோடு இன்ன விலை விதம் தங்களுக்கு விற்கவேண்டுமென்பதாக முன் ஒப்பந்தம் செய்து கொள்வது வழக்கம். இப்படி ஒப்பந்தம் செய்த பிறகு அந்த ஐரோப்பியர்கள் இதர தேசத்து வர்த்தகர்களோடு எவ்வளவு தவணையில் எவ்வளவு சரக்கு அவர்களுக்கு அனுப்புவதென்று முன் ஒப்பந்தம் செய்வார்கள். இந்த வருஷத்தில் மலையாளத்தில் கொப்பரை விற்பவர்களுக்கும், அங்கிருந்து அதை ஏற்றுமதி செய்யும் ஐரோப்பியர்களுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு சீமையில் கொப்பரை விலை அதிகமாகப் போய்விட்டது. அதை அறிந்துகொண்டு, மலையாளத்தில் கொப்பரை விற்பவர்களில் அநேகம் பேர்கள், ஒப்பந்தத்தை நிறைவேற்ற வில்லையாம். அதனால் ஐரோப்பிய வர்த்தகர்கள் இதர தேச வர்த்தகர்களோடு செய்துகொண்ட முன் ஒப்பந்தத்துக்கு சரக்கு அகப்படாமல் தபித்து மட்ட கொப்பரைகளைக்கூட வாங்கிக்கொள்ளுகிறார்களாம். இது போலவே சென்னப்பட்டணம், புதுச்சேரி, கூடலூர் முதலான இடங்களில் பல ஐரோப்பிய வியாபாரிகள் மணிலாக்கொட்டை முதலான மாசூல்கள் அறுவடையாகும் முன்னமேயே விவஸாயிகளிடத்தில் இன்ன விலை மேனிக்கு, மாசூல் அறுவடையானதும் தங்களுக்கு விற்கவேண்டியதென்று ஒப்பந்தம் செய்து கொண்டு முன்பணம் கொடுப்பதையும் நாம் பார்க்கிறோம். இவர்கள் வைத்திருக்கும் கணக்குகள் மூலமாயும் அனுபோக மூலமாயும் அவர்கள் வியாபாரம் செய்து வரும் சரக்கு வருஷா வருஷம் எவ்வளவு செலவழிகிறதென்றும், கையிருப்பில் எவ்வளவு சரக்கு இருக்கிறதென்றும், போகபாக்கி எவ்வளவு வேணுமென்றும், அப்போதைக் கப்போது கவனமாய்ப்பார்த்து வருவார்கள். சில்லரை வியாபாரிகளும் மேலே சொல்லிய பெரிய வியாபாரிகளைப்போல விஷயங்களை வெகுநுட்பமாய் ஆராய்ச்சி செய்யாமல்போனாலும், தோராயமாய் சரக்கின் விலை ஏறும் இறங்குமென்று சொல்லுவார்கள். உதாரணமாக நம்முடைய தேசத்தில் சில மாஸங்களில் குறிப்பிட்ட தேதிகளில் மழைபெய்ய வேணுமென்ற ஒரு கொள்கை ஏற்பட்டிருக்கிறது. அப்படி மழைபெய்யாவிட்டால் அகவிலை உயர்ந்து விற்குமென்று ஜனங்கள் சொல்லுவார்கள். இதை நம்பி சிலவருஷங்களில் தேதி மழை பெய்யாதபோனால். அரிசி வியாபாரிகள் வழக்கமான விலைக்கு விற்காமல் விலையை உயர்த்தி விடுவார்கள். அல்லது விற்காமலே அவர்கள் விலை வருகிற வரையில் அரிசியைக் கட்டிப்போட்டு விடுவார்கள். இது நம்முடைய அனுபோகத்தில் நிதர்சனமாய்ப்பார்க்கிற விஷயம்.

இப்படிக்கெல்லாம் சரக்குகளை அறுவடையாகு முன்னமேயே விலைதீர்த்து வாங்குவதில் சில பேர்கள் நல்ல லாபம் அடிப்பார்கள், சில பேர்கள் நஷ்டப்பட்டு ஓட்டை ஆண்டியாய்ப் போவதுமுண்டு. இப்படி வியாபாரம் செய்வதில் சில அந்தரங்க விஷயங்கள் இருக்கின்றன. வாஸ்தவமென்ன வென்றால், உலகத்தில் நடக்கும் சகலவிதவியாபாரங்களுக்கும் விளைபொருள்களே முக்கிய ஆதாரமாகும். அறுவடையாகும் பொருளை அப்படியேயோ அல்லது அவைகளைக் கொண்டுவேலை செய்து மாற்றியோ விற்றுத்தான் வியாபாரம்

நடக்கவேண்டும். இப்படிப்பட்ட விளை பொருள்களில் முக்கியமானவைகள் நெல், கோதுமை, பருத்தி முதலியவைகளே. இவைகள் உலகமெங்கும் வாங்கி உபயோகப்படுத்தப் பட்டுவருகின்றன. எந்தமனுஷனாயிருந்தாலும் பசியாரச்சாப்பிட்டு, மானம் போகாமல் துணியும் கட்டித்தான் தீரவேண்டும். ஆகையால் மேலே சொல்லிய மூன்று விளை பொருள்களும் ஒரு தேசத்தில் விளையாமற் போனாலாவது, அல்லது வேண்டிய அளவில் கிடைக்காவிட்டாலாவது, இதரதேசங்களிலிருந்து தருவிக்கப்படுகின்றன. இப்படிச்செய்ய தற்காலத்தில் பலவித சாதகங்கள் இருக்கின்றன. தந்தி, தபால், ரயில், கப்பல் இவைகளின் உதவியால் எந்த தேசத்துக்கு என்ன சாமான் வேண்டுமானாலும், வெகு சீக்கிரத்தில் ஒரு விதத் தொந்தரவு மில்லாமல் தருவித்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட வியாபாரத்திற்கென்றே உலகத்தில் அங்கங்கே அநேக பெரிய வர்த்தகர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள்.

உலகத்தில் நாகரீகமுள்ள கவர்ன்மெண்டார்களெல்லாம் அவரவர்கள் தேசத்தில் உண்டாகும் முக்கியமான விளைபொருள்களின் பயிர் ஸ்திதியைப்பற்றியும், மாசூல் புள்ளி அதாவது எஸ்டிமேட்டைப் பற்றியும், அறுவடையான மாசூல் அளவைப் பற்றியும், அப்போதைக்கப்போது ரிபோர்ட்டுகள் தயாரித்து பிரசுரப்படுத்துகிறார்கள். பெரிய வியாபாரிகள் இப்படிப்பட்ட ரிபோர்ட்டுகள் பிரசுரமானதும் தந்திமூலமாயும், பிரத்தியேகமாயும், முடியுமானால் ரகசியமாயும், சமாசாரத்தைத் தருவித்து அறிந்துகொண்டு, மொத்தத்தில் தாங்கள் வியாபாரம் செய்யும் சரக்கு எவ்வளவு விளையக்கூடும், அது சாதாரணமாய் எவ்வளவு செலவாகிறது என்பதைக் கணக்கிட்டு, லாபம் சம்பாதிக்க முடியும் என்று தோன்றினால், எவ்வளவு வாங்கவேண்டுமோ அவ்வளவையும் வாங்கச் சொல்லி, அங்கங்கேயுள்ள ஏஜெண்டுகளுக்கு தந்திமூலமாய் உத்தரவு கொடுத்து விடுகிறார்கள். இப்படிக்கு "மலைவிழுங்கி மகாதேவன்" போன்ற வியாபாரிகள் அமெரிக்கா தேசத்தில ஜாஸ்தி. இவர்களில் பேட்டன் என்பவர் ஒருவர். இவர் சமீபத்தில் அகப்படக்கூடிய கோதுமையெல்லாம் வாங்கித் தன் கைவசப்படுத்திவிட்டார். அப்படிச் செய்யவே ஐரோப்பியர்கள் சாப்பிடும் ரொட்டிவிலை ரொம்ப ஏறி "அல்லோல கல்லோலப்" பட்டது. அவரை ஜனங்களெல்லாம் திட்டினார்கள். அவர் மனைவியும் ரொட்டியின் விலையை உயர்த்தி ஏழைகளைப் பட்டினிபோடுவது தர்மம் அல்லவென்று சொன்னாளாம். அதன்பேரில் கையிலிருந்த கோதுமை முழுமையும் கொஞ்ச லாபம் வைத்து விற்றுவிட்டார். இதே மாதிரியாக இப்பொழுது அகப்பட்ட பருத்தியையெல்லாம்வாங்கியிருக்கிறாராம். இதில் எவ்வளவோ லக்ஷம் லாபம் அடிப்பாராம்.

இவ்வளவு தூரம் எழுதியது எல்லாரும் படித்து ஆச்சரியப்படுவதற்காக அல்ல. தற்காலத்து வியாபாரத்தில் உலகத்திலுள்ள தேசங்களுக்குள் ஒன்றுக்கொன்று எவ்வளவோ சம்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு தேசத்தில் ஒரு வருஷத்தில் விளைவு குறைந்தால் உடனே அந்த தேசத்துக்கு இதரதேசங்களிலிருந்து ஒரு நொடியில் சரக்குகள் வந்து விழுந்துவிடுகின்றன. இப்படி ஏராளமாய் சரக்குகளை வாங்குவதற்கும் விற்பதற்கும் பாங்கிகளே வர்த்தகர்களுக்கு முக்கிய ஆதாரமாகின்றன. இதனால் வியாபாரத்துக்கும், விவசாயத்திற்கும் எவ்வளவு சம்பந்தம் இருக்கிறதென்று நன்றாய்த் தெரிகிறதல்லவா? இந்த சம்பந்தத்தை விவசாயிகளும் வியாபாரிகளும் ஒரு பொழுதும் மறக்கக்கூடாதென்றே, நம்முடைய பத்திரிகையில் முக்கிய பயிர்களின் ஸ்திதியைப் பற்றியும், மாசூல் புள்ளியைப்பற்றியும், அறுவடையைப் பற்றியும் அடிக்கடி எழுதிவருகிறோம்.

THE TRAINING FOR PRACTICAL LIFE.

BY

THE HON. MR. JUSTICE

V. KRISHNASWAMI AIYAR,

Judge, Madras High Court.

பையன்கள் படிப்பு.

ஒருவனுக்கு ஆண்பிள்ளை பிறக்கும்பொழுதே அந்தப் பிள்ளைக்கு பிந்தி என்ன தொழில் கற்பிக்கலாமென்று கவலை உண்டாக வேண்டியது. தகப்பனுக்குப் பணமிருந்தாலும், அதைக்கொண்டு மாத்திரம் பிழைப்பது பிள்ளைக்கு கௌரவமல்ல. உலகத்தில் மற்றவர்கள் மதிக்கவேண்டுமானால், தான் ஒரு தொழில் செய்து பணம் சம்பாதித்தாலொழிய வேறு மார்க்கமில்லை. ஆகையால், பணமுள்ளவர்கள்கூட தங்கள் பிள்ளைக்குக் கல்வி கற்பிப்பதும் தொழில்களில் தயார் செய்வதும் வழக்கமாக இருக்கிறது. முன்னோர்கள் சம்பாதித்த பணம் எவ்வளவு இருந்தாலும் அது ஏதோ எதிர்பாராத காரணத்தினால் போய்விடலாம். அப்போது ஒருவனுக்கு ஏதாவது தொழில் தெரிந்திருந்தாலொழிய ஜீவிக்க முடியாமல் போகும். பிள்ளை வீட்டை விட்டு பள்ளிக்கூடத்திற்கோ அல்லது வேறு தொழில்கள் கற்குமிடத்திற்கோ போய் ஒரு வித்தையை கற்றுக்கொள்வதற்கு முன்னமே ஏதாவது சில விஷயங்கள் தெரிந்துகொள்ளக் கூடும். நமது தேசத்தில் வித்தியாப்பியாசம் அல்லது பள்ளிக்கூடத்தில் வைப்பது என்று ஒரு சடங்கு செய்வது வழக்கமுண்டு. அது பிராம்மணர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பல ஸம்ஸ்காரங்களில் ஒன்றாகும். அதையனுசரித்தே மற்ற ஜாதியாரும் அந்தச் சடங்கு செய்வதுண்டு. இதை ஒரு ஸம்ஸ்காரமாக கைக்கொள்வதினால் உண்டாகும் பயன் என்னவென்றால் வயது வந்த ஒவ்வொருவனும் எழுதப்படிக்கத் தெரிந்தவனாகவே இருக்கவேண்டுமென்பதே. அதனால் ஜனஸங்கியை செய்யும்போது இந்த ஸம்ஸ்காரத்தை அனுசரிக்கும் ஜாதிகளில் ஒருவன் கூட எழுதப்படிக்கத் தெரியாமலிருப்பது நியாயமில்லை. ஆகிலும் எந்த காரணத்தினாலேயோ கடைசியில் 1901-ம் வருஷத்தில் நடந்த ஜனஸங்கியைப் பிரகாரம் பிராம்மணர்களில்கூட படித்தவர்கள் நூற்றில் ஐம்பதுக்குக் கொஞ்சம் மேலாக இருப்பதாக வெளியாகிறது. இது ஒருக்கால் மதாசாரங்களில் உண்டாகியிருக்கும் குறைவினாலிருக்கலாம். இதை யாவரும் கவனித்து முன்கால ஏற்பாட்டின் பிரகாரமே வித்தியாப்பியாசம் என்னும் சடங்கை அனுஷ்டிக்க வேண்டியது. அப்படிச் செய்தால் முதல் படிப்பு அதாவது ப்ரைமரிப்படிப்பு என்று சொல்லும் பெரிய ராஜ்ய நீதி சம்பந்தமான குறைவானது சற்றுத்தீரலாம். இந்தப்பிரகாரம் ஒவ்வொரு பிள்ளைக்கும் வீட்டிலேயே மதாசாரமென்று கற்பித்துக்கொடுப்பதுடன், தோட்டம் போடுவது, மரம் வைப்பது, செடிகள் பயிர் செய்வது, முதலான தொழிலை ஒவ்வொரு பிள்ளைக்கும் கற்பித்துக்கொடுப்பது அவசியம். இதை விளையாட்டுப் போல் ஒவ்வொரு பிள்ளையும் தெரிந்து கொள்ளக்கூடும். செடிகளுடைய ஸ்வபாவமும், அவைகளுக்கு வேண்டிய எருவின் தன்மையும், தண்ணீர் பாய்ச்சுவதும் பூ, காய், பழம் முதலியவைகள் நன்றாய்ச் செழிப்பதும், பிள்ளைகள் எளிதில் தெரிந்து கொள்ளலாம். உயர்ந்த ஞானம் ஏற்பட்டால், பாடெனி அதாவது, தாவரநூல் என்னும் சாஸ்திரம் படித்ததாக ஆகும். பிந்திய வயதில் பயிர்த்தொழில் செய்கிறவர்களுக்கு அடிப்படைப் பயிற்சியாகும். மற்றவர்களுக்குக் கூட தம்தம் வீட்டைச் சுற்றித் தகுந்த

புஷ்ப விருக்ஷங்களோ, பல விருக்ஷங்களோ, [illegible] கொண்டு அதினால் சுகிப்பதற்கு முன் சொல்லிய ஞானம் உதவியாகும். நல்ல புஷ்பங்களைக் கண்டு முகர்ந்து அல்லது சூட்டி களிக்காதவர்கள் இலர். புசிப்பதற்கு நல்ல பழங்களை விரும்பாதவர்கள் உலகத்திலில்லை. நல்ல தோட்டம் போட்டு அவைகளுடைய அழகையும் அவைகளில் வீசும் காற்றையும் யாவரும் அனுபவிக்க ஆவலுள்ளவர்களே. பால்யத்திலேயே தோட்டம் போடும் அப்பியாசமானது எல்லோருக்கும் பலவித நன்மையை விளைவிக்கும்.

எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வதும் தோட்டம் போடக்கற்றுக் கொள்வதும் தவிர எல்லாப் பிள்ளைகளும் ட்ராயிங் அதாவது ஒரு வஸ்துவைக் கண்டால் அதைப் போல் வர்ணமில்லாமலேயே சித்திரம் எழுதுவது தெரிந்துகொள்ளவேணும். எந்தத்தொழிலுக்கும் இது உபயோகமானதே. எந்தப் பிள்ளைகளுக்கும் ஒரு வஸ்துவைக்கண்டால் அதைப் போல் கோடுகள் வரைந்து சித்திரம் எழுதுவது ஸ்வபாவமான பிரவிர்த்தியே. அதைப் பயிற்சி செய்வது எளிதில் முடியும். எந்தக் கைத்தொழிலுக்கும் அது உபகாரமானது. எழுத்தைக்கொண்டு செய்யும் தொழில்களுக்கும் இந்தப்படி சித்திரம் எழுதுவது உத்தமமானசாதனமே. இதை எல்லோரும் உணர்ந்தால் வெகு சீக்கிரத்தில் தேசம் முழுவதும் இந்தப்பயிற்சியைக் கைக்கொள்ளலாம்.

பிழைக்கும் வழி யென்னவென்று எல்லாரும் கவலைப்படுவதுண்டு. ஆகையால் இளமைப் பருவத்திலேயே அதற்குத்தக்க உபாயத்தைத் தேடவேண்டியது அவசியம். ஒவ்வொரு பிள்ளையினுடையவும் சரீரம், உறுப்புகள், புத்தி, இவைகளுக்குத்தக்கபடி தொழில் எது என்று முந்தியே தாய் தந்தையர்கள் சிந்திக்கவேண்டியதுண்டு. கைத்தொழிலுக்குத் தக்க பிள்ளையை புஸ்தகப் படிப்பிற்கு ஏற்படுத்துவதும், புஸ்தகப் படிப்புக் கேற்றவனை கைத்தொழிலுக்குத் தயார் செய்வதும் விசேஷப் பயன்படாது. புஸ்தகப்படிப்பிலேயும் பலவர்க்கங்களுண்டு. அவைகளில் இன்னது தான் இந்தப்பிள்ளைக்கு தக்கதென்று ஆராய்ந்து பார்த்து அந்தப்படி அவனை ஏவல் செய்ய வேண்டியது. ஆனால், இந்த காலத்தில் இந்த தேசத்தில் பலவிதமான கைத்தொழில் சாலைகளில்லை. மேலும் தகப்பன் தொழிலிலேயே பிள்ளைகள் செல்லவேண்டியதென்று வெகு கால ஜாதி வழக்கமும் ஏற்பட்டிருக்கிறது. அந்தப்படி ஜாதிக் கட்டுப்பாட்டை அனுசரித்திருப்பது அயுக்தமானாலும் பரம்பரையில் வந்த ஸாமர்த்தியமானது பிள்ளைக்கும் இருக்கும் என்கிற நியாயமும் உண்டு. ஆகிலும் ஒருதொழிலைக் கைக்கொளவது ஒரு ஜாதியென்றே யிருப்பது தேசத்தினுடைய அபிவிர்த்திக்கு ஹேதுவாக மாட்டாது. ராஜாங்கத்தாரும் ஜனங்களும் பற்பல இடங்களில் கைத்தொழில் சாலைகள் சீக்கிரம் ஏற்படுத்துவது அவசியம். அவைகள் ஒவ்வொரு தொழிலை ஒவ்வொரு சாலையிலாக கற்பிக்க பிரயத்தனிக்கலாம். இந்த சாலைகள் இப்போது இந்த தேசத்தில் வழங்கிவரும் தொழில்கள் மாத்திரமல்லாமல் வேறு புதிதான தொழில்களையும் கற்பிக்க ஏற்பாடு உள்ளவைகளாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் ஏதாவது ஒரு கைத்தொழிலைத் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியம். கைத்தொழில் செய்வது அகௌரவ மென்று இந்த தேசத்தில் இதுவரையில் ஏற்பட்டிருக்கிறது. இந்த புத்தியைத் தள்ளி ஈசுவரன் கைகால்களைக் கொடுத்ததற்கு கைத்தொழில் செய்வதுதான் பெரிய பிரயோஜனமென்று எண்ணி யாவரும் கைத்தொழில் பயிற்சியை ஆதரிக்கவேண்டும். புஸ்தகப்படிப்புக்கு ஒருக்கால் விலையில்லாமல் போகலாம். கைத்தொழிலுக்கு அந்தஸ்திதி ஒருக்காலும் வரமாட்டாது கைத்தொழில்கள் குறைவினாலேயே, மழையில்லாத காலங்களில் பயிர் விளையாமல் போகும்போது சாப்பாட்டுக்கு வேண்டிய வஸ்துக்களை வாங்க கைத்தொழில் மூலமாய் ஏற்படும் வஸ்துக்களில்லாமல் பஞ்சத்திலடிபட்டு ஜனங்கள் துயரப்படுகிறார்கள். ஆகையால் தேசாபிமானிகளாக இருக்கிற யாவரும் கைத்தொழில் அபிவிர்த்தியைக் குறித்து முயலவேண்டும்.

வி. கிருஷ்ணஸாமி அய்யர்.

OFFICE OF THE
REGISTERED
31 MAR 1910
MADRAS

PADDY CULTIVATION.

BY

S. RAGHUNANDANA SASTRIAR, B.A., B.L.

நெல் சாகுபடி.

சாகுபடி விஷயத்தில் மற்ற எந்த தானியத்தையும் விட நெல்லையே முக்கியமாக கவனிக்க வேணுமென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஏனென்றால் அது ஒரு முக்கிய உணவு தானியமாக இருக்கிறது. "பிழைக்கும் வழி"யில் ஒற்றை அலகு சாகுபடியைப்பற்றி சில கனவான்கள் எழுதின வியாசங்களைப் பார்வையிட்டதின்பேரில் நான் என்னுடைய கிராமமான மாயவரம் தாலூக்கா திருவாலங்காட்டில் ஸ்வல்ப (4 மா அதாவது ஒன்றே கால் வீசம் ஏகரா) நிலத்தில் செம்பிலியன் என்கிற நெல்லை ஒருபோக சாகுபடியாகச்செய்தேன். நாற்றங்காலில் விதையை வழக்கப்படி தெளிக்காமல் மட்டாகத் தெளிக்கச் செய்தேன். ஷை வியாசங்களில் சொல்லப்பட்டிருக்கிற அளவுப்படி தெளிக்காமல்போனாலும், கொஞ்சம் முன்னேப்பின்னே சரியாக இருந்திருக்கும். நாற்று, நடவுக்காக பறிக்கும் காலத்தில், உரப்பாகவும் வளர்த்தியாகவும் இருந்தது. கேழ்வரகு நாற்று மாதிரி இருந்தது. இதை ஒற்றை அலகாக நடலாமோ என்னமோ என்று கொஞ்சம் பீதியிருந்தபடியினால் இரண்டு அலகுகளாக நடச்சொன்னேன். சில இடங்களில் நாலு அலகுகளாகவும் நடச்சொன்னேன். ஆனால் நடவுகாரர்களை நம்முடைய இஷ்டப்படி நடச்செய்ய கொஞ்சம் சிரமம் உண்டாயிற்று. நடவான நிலம் ஏற்கனவே 2 சால் அடிக்கப்பட்டிருந்தது. ஜலம் பாய்ச்சின பிறகும் 5-6 சால் அடிக்கும்படி செய்தேன். ஸுமாராக எருப் போட்டேன். இந்த நிலம் நடப்போரமாக இருக்கிறபடியினால் எல்லாரும் இந்த நடவை கொஞ்சம் கவனமாகப் [illegible] மாதமாகவே தூர்கள் 7-8 வெடித்து [illegible] ஓங்கி வளர்ந்து ரொம்பவும் செழிப்பாக இருந்தது. ஜனங்களெல்லாரும் பார்த்து [illegible] மட்டுப்பண்ணி நட்டபோதிலும் பயிர் ரொம்ப நன்றாக இருக்கிறது, இனிமேல் ஒற்றை அலகு தான் நடவேணு மென்று சொல்ல ஆரம்பித்தார்கள். நாளாக நாளாக இன்னும் தூர்கள் ஜாஸ்தியாக வெடித்து சில இடங்களில் 8-9 தூர்கள் இருந்த போதிலும் சில நடவுகளில் 18-19 தூர்கள் வரையில் இருக்கின்றன. பயிரும் ஆள் உயரம் இருக்கிறது. கதிராகி திருப்திகரமாக இருக்கிறது.

இந்தப் பயிர்களைப் பார்த்து திருப்தி அடைந்து தாளடி வயலில் அதாவது, இரண்டாம் போக வயலில், ஒரு தாக்கில் ஒற்றை அலகும், இன்னொரு தாக்கில் இரண்டு அலகுகளும் நடும்படி செய்ய ஏற்பாடு செய்தேன். தாளடிக்கு வெள்ளைச் சிறுமணியன் விதை போட ஏற்பாடு செய்தேன். கிரமமாக விதையை விஸ்தாரமாக விட்டு நட என் காரியஸ்தரை மேற்பார்வைக்கு அனுப்பினேன். பிழைக்கும் வழியாக இருந்தாலும் புது வழியில் நம்பிக்கையில்லாத என் காரியஸ்தர் மறுபடியும் 2 அலகும் 4 அலகுமாக நடச்செய்தார். நாற்றுப் போரவில்லை என்று வந்து சொன்னார். உடனே நான் நேரப்போய் பாக்கி இருந்த முடிகளை ஒற்றை அலகாக நடச்சொன்னேன். கிட்ட இருந்து நடச்சொன்னதில் அந்தப்படி நட்டார்கள். பிறகு இப்போது பார்ப்பதில் ஷை நடவுகள் எல்லாம் 10-12 தூர்கள் வெடித்து, 10-12 அலகுகள் வைத்து நட்ட அடுத்த வயலை விட பயிர் திடமாகவும் ஓங்கியுமிருக்கிறது. வெள்ளைச் சிறுமணியனபடியினால் மற்ற தாளடி வயல்களை விட சீக்கிரம் கதிராகியும் விட்டது. இதைப்பார்த்த ஜனங்களும்

இந்த நெல்லையே போடவேணும், ஒற்றை அலகாகவே நடவேணுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் விதையை விஸ்தாரமாக விட்டு நாற்றை ஒற்றை அலகு அல்லது 2 அலகுகளாக நட்டு, விதை மட்டுப் படுவதினால் உண்டான லாபத்தையும், ஜாஸ்தி விளைச்சலுக்கும் உண்டான லாபத்தையும் அடைந்து எல்லா பிராசுதாரர்களும் ஆனந்தத்தையும் க்ஷேமத்தையும் அடைவார்களென்று நம்புகிறேன்.

இன்னும் ஒரு விஷயம். இரண்டாம் போகத்தில் நம்முடைய ஜனங்கள் பழமையை அனுஸரித்தே ஒரு போகத்துக்குப் போடுகிற நெல்லையே ஸாகுபடி செய்கிறார்கள். இது தப்பென்று நான் நினைக்கிறேன். கார்த்திகை மார்கழி மாதங்களில் ஆற்று ஜலத்தையாவது மேல் மழையையாவது நம்பக்கூடவில்லை. அப்படி இருக்கும்போது 6 மாதத்துப்பயிரை என்னமாக தாளடிக்கு போடலாம்? சில இடங்களில் வெள்ளைச் சிறுமணியன் போடுகிறார்கள். அதைப் போடலாமென்று நினைக்கிறேன். இன்னமும் சீக்கிரத்தில் விளைவுக்கு வரக்கூடிய சம்பா தினுஸைச் சேர்ந்ததாக சொல்லப்படுகிற ஸ்வர்ணவாரியையும் போட்டுப்பார்க்கலாமென்று நினைக்கிறேன்.

எஸ். ரகுநந்தனன்.

◆

மைலாப்பூர் ஜனரல் சப்ளைஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டுவரும் விவேக போதினியின் டிசம்பர் மாஸத்திய சஞ்சிகையில் "நெற்பயிர்—விதை விதைத்தல்" என்னும் ஒரு வியாஸமும், இரும்புக் கனிகளைப் பற்றியதொன்றும் இருக்கின்றன. நெற்பயிர் வியாஸத்திலுள்ள முக்கிய சாராம்சத்தை "பிழைக்கும் வழி" யின் மற்றொரு பக்கத்தில் காணலாம்.

GREEN MANURE.

BY

T. D. S. MURTHI.

பசுந்தாள் உரம்.

பசுந்தாள் உரம் என்பது பசுந்தழைகளை எருவாக நிலத்தில் சேர்த்து உழுவது. இது வளமில்லாத பூமிகளை வளமாக்குவதற்கும், வளமான பூமியின் வளமையை குறைவுபடாமல் வைப்பதற்கும், உயர்ந்ததும், சரஸமுமானதென்று புத்திமான்களான விவசாயிகள் எல்லாரும் அறிந்திருக்கிறார்கள். அப்படிப் பசுந்தாளை நிலங்களில் உரமாகச்சேர்த்து உழுவதால், பூமி தக்க செழிப்பான மண்ணுடையதாயும், காரமுள்ளதாயும், இளகலாயும் ஆவதுடன், பயிருக்கு முக்கியமாய் வேண்டிய பொட்டாஷ் உப்பு, பாஸ்பரஸ் முதலிய பதார்த்தங்கள் மேல் மண்ணில் இருந்து உடனே சாகுபடி செய்யும் பயிருக்கு உதவுகின்றன. அப்படி உழும் தழைவகைகள் பட்டாணி போன்றவைகளின் இனத்தைச் சேர்ந்தவைகளாக இருந்தால், ஆகாயத்திலும், அடி மண்ணிலும் உள்ள முக்கிய மூலவஸ்துவாகிய நைட்ரஜனை, அதற்கு அப்புறம் பயிர் செய்யும் பயிருக்கு வேண்டிய அளவு அந்த பூமியில் சேகரித்து விடுகின்றன.

உறுதியான மண்ணுள்ள பூமிகளில் பசுந்தாள் உரத்தின் குணம், அதிக நிதர்சனமாகக் காணப்படுகிறது. எந்த விதமென்றால் மேல் மண்ணை இளக்கி உழவுக்கு லாயக்காக செய்விக்கிறது மட்டு மல்லாமல், பயிர்களின் வேர்கள் ஊடுருவி ஆழத்தில் சென்று அங்கேயுள்ள பயிர் விருத்திக்கான உணவுகளை ஏற்கவும் செய்கின்றது.

செட்டும், குணமுமுள்ள மார்க்கம் பசுந்தாள் உரம் போடுவதே. இது இருவகைப்படும். காடுகளிலும், புதர்களிலும், தோப்புகளிலும், முளைத்திருக்கும் செடி, கொடி, பூடு, மரக்கிளைகளின் தழை காம்புமுதலியவற்றை நிலத்தில் ஜலம் பாய்ச்சி இரண்டு உழவு ஆன பிறகு போட்டு, இரண்டொரு நாள் மக்கச் செய்து பிறகு உழுவது ஒன்று. மற்றோர் விதம் அதே பூமியிலேயே உரத்துக்காக சில விதைகளை விதைத்து, பயிர்களைவளர்த்து, பசுந்தழைகளை மடக்கி நிலத்தில் உழுது விடுவது.

இவைகளில் முதல் விதமே நம்முடைய ராஜதானியில் பல விவசாயிகள் செய்துவருவது. இதற்கு உபயோகப்படும் தழைகள்:— பூவரசு, வேம்பு, எருக்கு, காவாளை, ஆவாரை, காட்டாமணக்கு, கொன்னை, காட்டுவாகை, ஆத்தி, அவுரிச்சக்கை, ஆடாதோடை, முதலியன. மேலே சொல்லிய தழைகளைக் கலந்து போடுவதில் பலவகை குணங்களுண்டு. சில தழைகள் மண்ணையிளக்கவும், சில, பயிருக்கு விரோதமான பூச்சிவகை, நோய் வகைகளைத் தடுக்கவும், மற்றும் சில, பயிரின் உணவைச் சேகரித்துக்கொடுக்கவும், இன்னும் சிற்சில, களைகளை மட்டுப்படுத்தவும் கூடிய குணங்கள் உள்ளவைகளாகையால் கலப்பாக நிலவளத்துக்கும், பயிரின் சுபாவத்துக்கும், தக்கவிதப் புத்தியையும், யுக்தியையும் உபயோகித்து பசுந்தழைகளைப் போடுவதே நலம். ஏகர் ஒன்றுக்கு 6 வண்டி கலப்புத்தழை தேவை. அனேக கிருஷிகர்கள், பாலுள்ள செடி, கொடி, மரங்களின்தழைகளையே உபயோகிக்கிறார்கள்.

சில தழை வகைகளின் அனுபவமான குணங்கள்:—

(1) ஆடாதோடை, எருக்குப் போன்றவைகளுக்கு, பயிரின் நோய்கள், பூச்சி, இவைகளை நீக்கும் குணம் மேலிட்டிருக்கிறது.

(2) ஆத்தி, அவுரி போன்ற சில தழைகளுக்கு பூமியை இளக்கி சேற்றை நயப்படுத்தும் குணம் அதிகம்.

(3) கொன்னை, காட்டுவாகை, இவைபோன்றவைகளுக்கு பயிரின் ஊட்டத்தை அதிகப்படுத்தும் சக்தி அமைந்திருக்கிறது.

(4) வேம்பு போன்றவைகளுக்கு பூமியின் இயற்கையை மாற்றும் குணமுள்ள சக்தி ஜாஸ்தி.

வேம்பு, காட்டுவாகை, ஆடாதோடை, எருக்கு இவைகளைச் சேர்த்து உபயோகிப்பதால், களை அதிகமாகாமல் நோயில்லாமல் பயிர்கள் திடமாகக்கிளம்பி நல்ல பலனைத்தருகின்றன. மேலே கண்ட விதப்படி, தன் நிலத்தின் சுபாவத்துக்கும், பயிரின் சுபாவத்துக்கும், சுய அனுபவத்தால் காலத்துக்கும் தகுந்த விதமாக, பசுந்தழைகளின் சேர்க்கையைக் கண்டறிந்து சாகுபடி செய்வதே புத்திமானான விவசாயியின் லக்ஷணம்.

எருத்தழைக்கு, நிலத்திலேயே சாகுபடி செய்து வரும் விதத்தில் நிலம் அடிக்கடி உழப்படுவதாலும், களை எடுபடுவதாலும் களையே அற்றுப்போகிறது; அடி மண்ணில் உள்ள பயிருணவு மேல் மண்ணுக்குப்போய்ச் சேருகிறது. நீர்க்குறைவு உண்டானாலும் பயிருக்குத்தாங்கக்கூடிய சக்தியை உண்டாக்குகிறது. பூமியிலேயே வளர்த்து உழக்கூடிய பசுந்தாள் உரப்பயிருக்கு முக்கியமாய் சில குணங்கள் வேண்டியது. சீக்கிரம் பயிராகக் கூடியதாயும், சொல்ப காலத்தில் ஜாஸ்தி தழை மண்டக்கூடியதாயும், சீக்கிரம் அழுகக்கூடிய காம்பு, கிளை, வேர் உள்ளதாயுமிருக்கப்பட்ட பயிர்கள் சிலாக்கியமானவைகள். சிலபேர்கள், மாடுகளுக்குத் தீவனத்துக்கு உபயோகமுள்ள வித்துக்களாகப் பயிரிட்டு முதல் இரண்டொரு பறியை தீவனத்துக்கும், மற்றதை எருவுக்கும் உபயோகிப்பது வழக்கம். எருவுக்கு உபயோகமாக வளர்க்கும் பயிருக்கு தண்ணீர்த் தீர்வை கிடையாது.

பசுந்தழை எருவுக்கு பூமியில் "லெகியூம்" என்று சொல்லப்படும் பயறு போன்ற பயிர் வகைகளைப் பயிரிடுவதுதான் நலம். ஏனென்றால் இவைகளில் பொடாஷ் உப்பு, பாஸ்பாஸ் இவைகள் ஜாஸ்தி. ஆகாயத்திலுள்ள, பயிரின் முக்கிய உணவும், கிடைப்பதற்கு அரிதுமான, நைட்ரஜனை ஏராளமாக பூமியில் சேகரித்து வைக்கும் குணமும் அவைகளுக்கு உண்டு. மற்றவகை வித்துக்கள் பூமியில் ஏற்கனவே உள்ள ஷை சத்துக்களை உபயோகப்படுத்திக் கொள்ளும் குணத்தை உடையன. அப்படி உபயோகப்பட்டு வரும் விதைப்பயிர்கள் :—மலைகுலுக்கி, சணல் வித்து, அவுரி, குதிரை மசாலை, காராமணி, பனிப்பயறு முதலியன. மேலே சொன்னவிதம் பலவிதப் பயிர்கள் உபயோகப்பட்டு வந்தாலும், தட்டைப்பயிர் அல்லது காராமணிப்பயிரே அநுபவத்தில் சிலாக்கியமானது என்று கண்டிருக்கிறோம். நிலத்தின் செழுமையை விருத்தி பண்ணக்கூடியதாயும், சொல்ப காலத்தில் பயிரிடக்கூடியதாயும், எந்த வித ஜலத்திலும் பயிராகக்கூடியதாயும், உள்ளது இது ஒன்றே. இந்தப்பயிரை பசுந்தாள் "உரத்துக்கென்றே" அமெரிக்கர்கள் மிகவும் சிலாக்கியமாகப் பயிரிடுகிறார்களாம். இதில் அநேக நிறமுள்ள தினுசுகளுண்டு. இது செடிக்காராமணி, கொடிக்காராமணி என்று இருவகைப்படும். இது மூன்று மாதத்திய பயிர் இதர பயிர்களைப்போல் தான் இதற்கு கொத்தல், களை எடுத்தல் முதலியன செய்யவேண்டும். இது மழைகாலப் பயிராக இருந்தாலும், பசுந்தாள் உரத்துக்கு வேண்டி முந்தியும் பயிரிடலாம். பயிருக்காகவாவது, தீவனத்துக்காகவாவது பயிரிட்டால் 15 முதல் 20 ராத்தல் விதையும், உரத்துக்காக என்றால் 55 முதல் ராத்தல் விதையும் ஏகரா ஒன்றுக்கு விதைக்கவேண்டும். இதில் 500 முதல் 600 ராத்தல் விதை தானியம் கிடைக்கும். காய வைத்த தீவனமானால் 2 டன் முதல், 3 டன் வரையில் கிடைக்கும்.

வேர் வகைகள் மட்டில் பூமியில் மடக்கி உழுதால் எருவுக்குப் போதுமா, அல்லது ஷை முழுப்பயிரையும் உழுது விடுகிறதா, என்கிற சந்தேகம் பலருக்கு ஜனிப்பதுண்டு. இது நிலத்தின் வளமையையும், காலத்தையும் பொறுத்தது. கெட்டியான மண் உள்ள நிலங்களில் முழுப்பயிரையும் மடக்கி உழுவது தான் நலம். அதினால் பூமி பொல பொலத்து, சேற்றுப்பதமாகி, நயத்து, வருகிறது. சற்று மணல் பாங்கான, பூமியில் முழுவதும் உழுவது சிலாக்கியமல்ல. அப்படிப் பட்ட நிலங்களில் மாடுகளை விட்டு ஷை பயிரை மேய்த்தால் மாடு ஷை நிலங்களில் நிற்பதால் சாணம், மூத்திரம், முதலியவைகள் சேரும். அவைகள் நிலத்தில் ஷை பயிரின் மீதி வேருடன் சேர்த்து உழப்பட்டால்தான் நலம். பொல பொலத்த மண்ணுக்கு நயப்புத்தேவையில்லை. காரமும், இறுகலும் தேவை. இவ்விரண்டும் மேற்சொல்லிய படி செய்தலால் உண்டாகிறது.

தி. தே. ஸ்ரீ. மூர்த்தி.

THE DECEMBER CONFERENCES.

டிஸம்பர் மாஸத்தில் கூடிய ஸபைகள்.

வருஷாவருஷம் டிஸம்பர்மாஸத்துக் கடைசியில் கிரிஸ்ட்மஸ் வீவில் இந்தியாவிலுள்ள பிரமுகர்கள், ஜனங்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் ஆகிய எல்லாரும் கூடி ராஜாங்க விஷயமாயும், கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாயும், ஆசாரசீர்திருத்த விஷயமாயும், இன்னும் பல விஷயங்களைப்பற்றியும் எல்லாரும் கூடிப்பேசி அனேகதீர்மானங்கள் செய்துவருவது நம்முடைய நண்பர்கள் அறிவார்கள். இப்படிக் கூடும் ஸபைகளில் "இந்தியன் நாஷனல் காங்கிரஸ்" என்னும் மகா

ஸபை ஒன்று. இந்த சபை சென்ற வருஷம் டிசம்பர்௴ 17௳ லாகூரில் கூடிற்று. 25-வது தரம் கூடிய இந்த காங்கிரஸுக்கு 300 டெலிகேட்டுகள் அதாவது பிரதிநிதிகள் வந்திருந்தார்களாம். உபசரணைக்கமிட்டி சேர்மனான ஹரிகிஷன் லால் அவர்கள் வந்த பிரதிநிதிகளை உபசரித்து அழைத்த பிறகு, பண்டித மதன்மோஹன் மாலவியா அவர்கள் அக்கிராஸனாதிபதியாக இருந்து தமது பிரசங்கத்தை செய்து முடித்தார். காங்கிரஸ் கூடியிருந்த மூன்று தினங்களிலும் ராஜாங்க விஷயங்களைப் பற்றி பல தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவைகளில் "பிழைக்கும் வழி" க்கு மிகவும் முக்கியமாவன :—

1. பிழைப்புக்காக டிரான்ஸ்வாலில்போய்க் குடியேறிய இந்தியர்களின் கஷ்டங்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பிரேரேபிக்கப்பட்டு எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தை விட்டுவிடக் கூடாதென்று, பாபு சுரேந்திரநாத்பானர்ஜி, டிரான்ஸ்வால் இந்தியர்களின் கஷ்ட நிவர்த்தி நிதிக்குப் பொருளுதவி செய்யப்படவேண்டுமென்று மிக்க வாக்குச்சாதுரியமான பிரசங்கமொன்றைச் செய்து கேட்டுக்கொள்ளவே 18,000 ரூபாய் சேர்ந்தது.

2. இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டுமென்பதைப் பற்றியும், இந்தியர்களுக்கு ராணுவத்தில் உத்தியோகம் கொடாமல் அவர்களை ஒதுக்கி வைக்கக்கூடாதென்பதைப் பற்றியும் இரண்டு தீர்மானங்கள் செய்யப்பட்டன.

3 உணவுப் பொருள்களெல்லாம் கிராக்கியாய் விற்பதைப்பற்றி விசாரணை நடத்தப்படவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4. சுதேசியத்தை விருத்திசெய்யவும், வித்தியாபிவிருத்தி விஷயமாய்த் தாராளமாய்ச் செலவு செய்யவும்; நீதிசெலுத்தும் அதிகாரத்தை நிர்வாக அதிகாரிகளை விட்டுப்பிரித்து விடவும் வேண்டுமென்றும், நிலவரியை கவர்ன்மெண்டார் உயர்த்திக்கொண்டே போகக்கூடாதென்றும், 30 வருஷத்துக்கொருதடவை செட்டில்மெண்டு செய்வதைவிட்டு நிலவரியை 60 வருஷத்துக்கொருதடவை செட்டில்மெண்டு செய்யவேண்டுமென்றும், ஸ்தலஸ்வய ஆட்சி சம்பந்தமாய் எலெக்ஷன் முறையை மிகுதியும் வழக்கத்துக்குக் கொண்டுவருவதோடு கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு தெரிந்தெடுக்கப்பட்ட சேர்மென்கள் நியமிக்கும் முறையை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டுமென்றும், ராணுவச்செலவைக் குறைக்கவேண்டுமென்றும் எடுத்து வற்புறுத்தப்பட்டது.

காங்கிரஸ் ஆன பிறகு 30 ம் தேதியில் ஐந்தாவது இந்திய கைத்தொழில் சபை கூடிற்று. அந்த சபையில் கைத்தொழில்களைப் பற்றி சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவைகளில் முக்கியமானவைகள் :—

1. கவர்ன்மெண்டு இலாகாக்களுக்கு வேண்டிய சாமான்களை இந்தியாவிலேயே வாங்கலாமா அல்லது சீமையிலிருந்து வரவழைக்க வேண்டுமா என்பதை விசாரித்து ரிபோர்ட்டு செய்வதற்காக இந்தியா கவர்ன்மெண்டாரால் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அந்தக் கமிட்டியார் செய்த ரிபோர்ட்டின் பேரில் வெளி நாடுகளில் செய்யப்பட்டு, இறக்குமதியாகும் சாமான்களை வாங்காமல்; சுதேச கைத்தொழிலாளர்களால் செய்யப்படும் நாட்டுச்சாமான்களையே வாங்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்தியா காரியதரிசியும் உத்தரவு பிறப்பித்தார்கள். அதற்காக அவர்களுக்கு வந்தனம் செலுத்தப்பட்டது. தவிர, இந்த உத்தர

வானது சுதேச கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு அனுகூலமானதால், இந்த விஷயங்களைப் பற்றி யோசித்த ஆலோசனைக் கமிட்டியாரின் ரிபோர்ட்டை வெளியிட வேண்டுமென்றும் சபையார் வேண்டிக்கொண்டார்கள்.

2, கான்பூரில் பல தொழிற்கலாசாலை ஒன்று ஏற்படுத்த வேணுமென்பது ஐக்கிய மாகாண கவரன்மெண்டாரால் பிரேரேபிக்கப்பட்டு இந்தியா கவரன்மெண்டாரால் ஆதரிக்கப்பட்டிருக்க, இந்தியா காரியதரிசி அந்த பிரேரேபணையை அங்கீகாரம் செய்யாதது விசனிக்கத்தக்கது.. பின் வரும் காரியங்களையாவது கவரன்மெண்டார் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது:—

(i) ரசாயன சாஸ்திரம், யந்திர சாஸ்திரம் ஆகிய இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களைப் பற்றியும் பம்பாய் ராஜதானியிலுள்ள ஜனங்களுக்கு படிப்பு சொல்லிக்கொடுக்கும்படி பம்பாயில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் "விக்டோரியா ஜூபிலி பல தொழிற்கல்விச்சாலை"யையும், பூனாவில் உள்ள "சாஸ்திரீயக்கலாசாலை"யையும் இன்னும் அதிகமாகப் பலப்படுத்தி பெரிதாக்க வேண்டும். (ii) ஸிப்பூர் இஞ்சினீரிங் காலேஜில் கைத்தொழில்களுக்குச் சம்பந்தப்பட்டவரையில் ரசாயன சாஸ்திரத்தைச் சொல்லிக்கொடுக்க கிளாஸுகள் ஏற்படுத்த வேண்டுமென்று வங்காள மாகாண கவரன்மெண்டார் செய்திருக்கும் பிரேரேபணையை அங்கீகாரம் செயய வேண்டும். (iii) மதராஸ் இஞ்சினீரிங் காலேஜை ஒரு பெரிய பல தொழிற்கலாசாலையாகச் செய்யவேண்டு மென்பதாக உதகமண்டலம் கைத்தொழில் மகா சபையில் தீர்மானமானபடி மதராஸ் கவரன்மெண்டார் செய்யவேண்டும். (iv) கான்பூரில் ஒரு பல தொழிற்கலாசாலை, ஏற்படுத்த வேண்டுமென்ற ஐக்கிய மாகாண கவரன்மெண்டாரின் பிரேரேபணையை இந்தியா காரியதரிசி அங்கீகாரம் செய்ய வேண்டியது. (v) பஞ்சாப், பர்மா, கீழ்வங்காளமும் அஸ்ஸாமும், ஆகிய இந்த மாகாணங்களிலும் மேலே சொன்ன மாதிரி பல தொழிற் கல்விச்சாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

4 இந்தியா நெசவு சாலைகளில் நெய்யப்படும் துணிகளின் மேல் தீர்வை விதித்திருப்பது அநியாயமாயும் சுதேச நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்கு ஒரு பெருத்த இடையூறாயும் இருப்பதால் அந்தத் தீர்வையை கூடிய சீக்கிரத்தில் நீக்கிவிட வேண்டுமென்றும் ஸபையார் வேண்டிக்கொண்டார்கள்.

5. தற்காலத்தில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு உதவியாக விவசாய பாங்கிகளை வெகு சீக்கிரத்தில் ஏற்படுத்த வேண்டுமென்றும், இந்தியா விவசாயிகளை தரித்திரமான ஸ்திதியிலிருந்து நீக்கும்பொருட்டு எந்தெந்த இடங்களில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்படவில்லையோ அந்தந்த இடத்து விவசாயிகளுக்கு விவசாய பாங்கிகளைக் கொண்டு சொல்ப வட்டிக்கு கடன் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டு மென்றும், மாகாண கவரன்மெண்டார்களையும் இந்தியா கவரன்மெண்டாரையும், வேண்டிக்கொண்டார்கள்.

6. இந்திய சர்வகலாசாலைகளில் வியாபாரத்தைப் பற்றிய வித்தியாதிபர்களை ஏற்படுத்தவும், வியாபாரப் படிப்பில் பட்ட பரீக்ஷைகள் ஏற்படுத்தவும், அப்படிப்பட்ட பரீக்ஷைகளுக்கு மாணாக்கர்களை "தற்பித்து" செய்யும் வியாபார காலேஜுகளை சர்வகலாசாலையுடன் சேர்த்துக்கொள்ளவும், இப்பொழுது தகுந்த காலம் வந்து விட்டதென்ற அபிப்பிராயத்தை வெளியிட்டு, ஒவ்வொரு மாகாணத்து முக்கிய பட்டணத்திலும் ஒவ்வொரு வியாபார காலேஜு ஸ்தாபித்து, உள்நாட்டு வியாபாரப் பாடசாலைகளுக்கு உபாத்தியாயர்களைப் பழக்குவதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யவேண்டு மென்றும் வேண்டிக்கொண்டார்கள்.

SELECTIONS.

விசேஷத்திரட்டு.

DEEP DRAINING FOR SUGARCANE

BY

MR. H. C. SAMPSON

Dy. Director of Agriculture, Southern Division.

கரும்புப்பயிருக்கு ஆழத்தில் நீர்வடியச்செய்தல்.

இந்த ராஜதானியில் பற்பல இடங்களில் கரும்பு சாகுபடிசெய்யும் பழக்கங்களில் பற்பல வித்தியாசங்களைப்பார்க்கலாம். இன்னும், கரும்புச் சாகுபடிக்கு அவசியமான விஷயங்களைப்பற்றிப் பற்பல இடங்களிலுள்ள கிருஷிகர் பற்பல விதமான அபிப்பிராயங்களைச்சொல்வதையும் கேட்டிருக்கலாம். மேலும், ஒவ்வொரு இடத்திலுமுள்ள கிருஷிகர் அவ்வவ்விடத்திலுள்ள பழக்கங்களே சிலாக்கியமானவைகளென்றும் வற்புறுத்திச் சொல்லுகிறார்கள். ஆகவே, அந்தப் பயிருக்கு அவசியமான சாதனங்களைப்பற்றிக் கிருஷிகர்களுக்கு அதிகமாகவோ, அல்லது கொஞ்சமாகவோ எவ்வளவு தெரிந்திருக்கிறதோ தெரியவில்லை,

சில இடங்களில் கரும்பு சாகுபடி செய்வதற்காக செய்நேர்த்தி செய்யும்போது நிலத்தை சேற்றில் உழுது வைக்கிறார்கள்; சில இடங்களில் புழுதியில் உழுது போடுகிறார்கள். வேறு சில இடங்களில் நிலத்தைக் கடப்பாரைகொண்டு பேர்த்துத் தோண்டுகிறார்கள். மற்றும் சிலஇடங்களில் வரிசைவரிசையாய் நீண்ட கிடங்குகள் வெட்டிவைக்கிறார்கள். சில இடங்களிலோவெனில், நிலத்தை உழுது வெட்டி செய்நேர்த்திசெய்யாமல் நெல் அறுவடையான தாள்களின்மேலேயே கரும்புக் கணுக்களை நட்டு விடுகிறார்கள்.

இந்தப் பயிருக்கு எருவிடுவதிலும் நடுகைசெய்யும் முறைகளிலும், பயிருண்டானபின் செய்யப்படும் களைபறிப் பருவங்களிலும், மேற்கண்ட விதமாக அனேக இடங்களில் அநேக விதமான அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. ஆனால், முக்கியமாக (1) கரும்பு சாகுபடிக்கு ஏற்றதான நிலம்; (2) அதற்கு நீர்ப்பாய்ச்சல், நீர்வடித்தல், ஆகிய இரண்டு விஷயங்களிலும் தப்பிதமான அபிப்பிராயங்களிருப்பதாகத்தோன்றுகிறது. பொதுவாகக் கரும்பு சாகுபடிக்கு நிலத்தைத் தெரிந்தெடுக்கும்போது கிருஷிகர் தங்களுடைய மேன்மையான நன்செய் நிலத்தையே குறிப்பிடுகிறார்கள். அது வழக்கமாய் நேர்த்தியான வண்டல் கலந்த கொழுமையான களிமண் நிலமாகவேயிருக்கும். அதில் அதிகமான நீர்ப்பாய்ச்சலுக்கு இடமிருக்கிறதா என்பதை மட்டும் கவனிப்பார்களேயன்றி, நீர்வடிவுக்கு மார்க்கமிருக்கிறதா என்று ஏகதேசமாய்க்கூடக் கவனிக்கமாட்டார்கள். ஆனால், மேற்சொன்னவைகள் கரும்புக்கு அனுகூலமான விஷயங்கள்தானா? கரும்பின் சுபாவத்தைப்பற்றி நிதானிக்குமிடத்தில் அவை அதற்கு அனுகூலமானவையல்ல. அப்படிப்பட்ட களிநிலங்களில் நட்ட விதைக் கணுக்களிலிருந்து முளைகள் எழும்பி மேல்வருவதில் அதிகப் பிரயாசையுண்டாகும். மேலும், விதைக்கரும்பு நட்டவுடன் கனத்த மழைபெய்தால் அந்த விதைக் கணுக்களில் நூற்றுக்கு 50 முதல் 75 வரையில் அநேகமாய் அழுகிக் கெட்டுப்போகும். என்றாலும், நீர் வடிவு சரியாயுள்ள இலகுமண் நிலங்களில் இப்படி சம்பவிப்பதில்லை. அவைகளில் நட்ட எல்லா விதைக் கணுக்களும் ஒன்று தவறாமல் முளைக்கும். மேலும், அதிகக் களி நிலங்களில் பயிர் வளர்ந்து மேல்வந்தவுடனே அதாவது நடுகை செய்த இரண்டு அல்லது மூன்று மாதமானவுடனே அதற்கு அடிக்கடி நீர் பாய்ச்சவேண்டியது அவசியமாகும். என்றாலும், தரையின் மேல்மட்டத்தின் கீழ் சில அங்குல ஆழத்தில் மண்ணானது அதிக ஈரங்கொண்டிருக்கும். நன்றாய் நீர்வடியக்கூடிய நிலத்திலோ இப்படி அடிக்கடி நீர் பாய்ச்ச வேண்டியிருக்காது. உதாரணமாக மலையாளப் பக்கத்தில் நீர்வடிவுள்ள நிலங்களில் வடிகால்கள் வெட்டிக் கரும்பு பயிரிட்டால், அதற்கு மழைகாலத்துக்குப்பின் 5, 6 மாதங்களுக்கு (அதாவது அக்டோபர்௴ முதல் மார்ச்சு௴ வரையிலும்) தண்ணீர் பாய்ச்சவேண்டிய அவசியமே இல்லை. இதற்குக் காரணம் தெளிவாய்த்தெரிகிறது. நீர் வடிவு சரியாயுள்ள நிலத்தில் கரும்பின் வேர்கள் அதிக ஆழத்தில் இறங்கி அங்குள்ள ஈரத்தை உப

யோகப்படுத்திக்கொள்ளுகின்றன. ஆனால், நீர் வடியில்லாத நிலங்களில் தண்ணீர் கட்டினால் மண்ணில் காற்றோட்டம் சற்றுமில்லாமல்போகும். ஆகையால் பயிரின் வேர்கள் அதிக ஆழமாய்ச் செல்லமுடியாது. இந்தக் காரணத்தால் நீர்வடியில்லாத நிலங்களிலிட்ட பயிருக்கு, மண்ணின் மேல்பரப்பிலுள்ள பயிருணவுமட்டுமே கிடைக்கும். களிமண் நிலங்களிலிடப்பட்ட கரும்புப்பயிர் காற்றில் சாய்ந்துபோவதற்குக் காரணமும் இதுவே. அவைகளின் வேர்கள் மேற்பரப்பிலேயே சென்றிருக்கும். அதனால் அவைகள் எளிதில் சாய்ந்துபோகின்றன. இப்படி சாய்ந்துபோன கரும்புக்கோல்களில் செட்டி சர்க்கரை சத்து அதிகமாய் இருக்காது. மற்றக் கரும்புடன் அதை ஆலையில் ஆட்டினால் சர்க்கரையின் தரம் குறைந்துபோகும். ஆகையால், இதனால் கிருஷிகருக்கு அதிக நஷ்டமுண்டாகின்றது. நீர்வடிவு அதிகமாயிருக்கும் நிலங்களிலோ கரும்பின் வேர்கள் ஆழமாய்ச்சென்று பிடித்துக் கொள்வதால் பயிர் எளிதில் சாய்ந்து போகாதிருக்க ஹேதுவாகிறது.

சாதாரணமாய் இப்போது பயிராகிற பிரகாரம் கரும்பு, நிலத்தின் வளத்தை அதிகமாய்க் குறைக்கும் பயிரென்று சொல்லுவார்கள். வாஸ்தவத்திலும் அப்படித்தான். இந்தப் பயிரானது வழக்கப்படி சாகுபடி செய்வதில் நிலத்தின் மேல்பரப்பிலுள்ள உணவையே கிரஹித்துக்கொள்ளுகிறது. இதோடு நிலத்திலிருந்து ஏராளமாய் கரும்புக்கட்டுகளை வெட்டிக்கொண்டு போய்விட்டால் அந்தக் கரும்பையடுத்து நடும் நெற்பயிரானது, முன்சாகுபடியான கரும்பைப்போலவே நிலத்தின் மேற்பரப்பிலுள்ள ஆகாரத்தை கிரஹிப்பதாகையால் அதின் மாசூல் மிகவும் குறைவாகத்தான் இருக்கும். ஆனால், நீர்வடிவு சரியாயிருக்கும் நிலங்களில் கரும்புப்பயிரானது தனக்கு வேண்டிய உணவை அதிக ஆழமான மண்ணிலிருந்து கிரஹித்துக்கொள்ளக்கூடும். அதனால் மேல் மண்ணிலுள்ள பூசாரக்குறைவு அதிகமாயிருக்காது. இந்த சங்கதியை ருசு செய்வதற்கு நெல்லிக்குப்பத்திலுள்ள பசளைமண் புன்செய் நிலத்தில் கிணற்றிறவையின் உதவியால் சாகுபடி செய்யப்பட்ட கரும்புப் பயிர் ஒன்றுதான் ஆதாரமாயிருக்கிறது. இந்தக் கரும்புப்பயிர் முதல் வருஷத்திலும் மேன்மையாயிருந்தது; இரண்டாம் வருஷத்தில் மறுதாள் பயிரும் மேன்மையாயிருந்தது. கரும்பு வெட்டியபின் அந்த நிலத்தில் அடுத்தபோகம் கம்புப் பயிர் சாகுபடி செய்யப்பட்டது. அதற்கு கரும்புப் பயிருக்குப் போட்டுப்போக மீந்திருந்தகொஞ்சம் எருவைத்தவிர வேறு எரு ஒன்றும் போடவில்லை. இந்த ஜில்லாவில் நாம் பார்த்த கம்புப்பயிரில் இது மேன்மையானதாயிருந்தது. இதனால் நீர்வடிவு சரியாயுள்ள நிலங்களில் கரும்பு சாகுபடிசெய்தால், அது நிலத்தின் மேல்பரப்பிலுள்ள பயிருணவைமட்டும் கிரஹிப்பதில்லையென்பதும் கீழ்மண்ணிலுள்ள பயிருணவையும் எடுத்துக் கொள்ளுகிறதென்பதும் நன்றாய் ஏற்படுகிறது. முதல்தரம், புன்செய் நிலத்தில் கரும்பு பயிரிட்டு அதில் பயன் பெற்றபின், மிஸ்டர் நீல்சன் துரையவர்கள் இப்போது நீர்வடிவுள்ள மணல்பாங்கு நிலத்தில் அதிகமான விஸ்தீரணத்தில் கிணற்றிறவையால் கரும்பு சாகுபடிசெய்து அதிக லாபம் பெற்றுவருகிறார். இந்தவகை நிலத்தில் விதைக்கணுக்களில் முளை கிளம்புவதில் யாதொரு பிரயாசையுமுண்டாவதில்லை. களைவெட்டுதல் எளிதாயும் குறைந்த செலவிலும் நடத்தலாம். மண்ணணைத்தலும், அப்படியே சுலுவாய்ச் செய்யலாம். மேலும் அந்தப் பக்கங்களிலுள்ள நன்செய் நிலங்களில் பயிரிட்டிருக்கும் கரும்பில் கிடைப்பதைப்பார்க்கிலும் அதிகமான சர்க்கரை மாசூலும் இதில் கிடைக்கிறது.

திருநெல்வேலி ஜில்லாவில் நன்செயிலும் புன்செயிலும் வெகு சேர்த்தியான கரும்புப் பயிர்கள் சாகுபடியாயிருக்கக் காண்கிறோம். அந்தப் பயிர்களின் மேன்மைக்குக் காரணமெல்லாம் நிலத்தில் சரியாய் நீர்வடியும்படியான ஏற்பாடுகள் செய்திருப்பதுதான். மலையாளப்பக்கத்திலும் கரும்புப்பயிர் சிலாக்கியமாயுண்டாவதற்குக் காரணம் நிலத்தில் சரியானபடி நீர்வடிவுக்கு வேண்டிய அனுகூலங்களிருப்பதுதான். அந்தப் பிராந்தியத்திலுள்ள அநேக நிலங்களில் சாகுபடியான கரும்புப்பயிரைச் சுற்றிப்பார்த்ததில் நிலத்தின் நீர்வடிவு எவ்வளவுக்கெவ்வளவு நன்றாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிலிட்ட பயிரும் சிலாக்கியமாகவேஇருந்தது.

இதனால் நாம் இவ்விஷயத்தில் சொல்லக்கூடிய யோசனை என்னவெனில்:—கரும்பு பயிர் செய்ய வேண்டுமானால் உங்களுடைய செழுமையான நிலத்தில்போடவேண்டாம். நீர்வடிவு அதிகமாயுள்ளனவும், சுலபமாய் நீர்வடியக் கூடிய சாதனங்கள் அமையப் பெற்றனவுமான நிலங்களைப்பார்த்துப் போடுங்கள். அதிக லாபந்தரத்தக்கதான இந்தப் பயிருக்கு எரு எப்போதும் போடலாம். மேற்சொன்னபடி நீர் வடிவுள்ள நிலங்களில் போடப்பட்ட எருவைப் பயிரானது பூராவாய் உபயோகப்படுத்திக்கொள்ளும். அப்படிப்பட்டநிலமானது சுபாவத்தில் அதிக ஆழத்துக்கு மண்கண்டமுள்ளதாயும் கொஞ்சமுங் களரில்லாததாயும் கொஞ்ச அளவுக்கு மணல் கலந்ததாயுமிருக்கும். நிலமானது இயல்பில் எவ்வளவுநீர் வடிவுள்ளதாயிருந்தபோதிலும், மழைத் தண்ணீராவது, பாய்ச்சல் தண்ணீராவது அதில் கட்டித்தேங்கும்படி விடக்கூடாது. ஆகையால் எப்போதும் வடிகால்கள் வெட்டிவைக்க வேண்டியது அவசியம். இப்படிச் செய்யவேண்டுமானால் பயிரை வரிசை வரிசையாய் நடவேண்டியது அவசியமாகும். அப்படி நட்டால்தான் வடிகால்கள் தொடர்ச்சியா யிருக்கக்கூடியதுமன்றி இவைகளில் வடியும் தண்ணீர் ஆழமான பெரியவடிகால்களில் விழுந்து கழிவாகும். இப்படி வெட்டின வடிகால் மண்ணைக்கொண்டு பயிருக்கு அணைத்து விடலாம். அனேக இடங்களில் பயிரை வரிசை வரிசையாய் நட்டு, கிடங்குகள் வெட்டி மண்ணைப் பயிருக்கு அணைக்கிறார்கள். இருந்தபோதிலும் கிடங்குகளை ஆழமாக வெட்டி தண்ணீர் நன்றாய் வடியும்படி செய்வதில்லை. அநேக இடங்களில் ஒருவரிசையும் அதற்கடுத்த வரிசையும் அதிக பக்கம்பக்கமாய் இருப்பதனால் ஆழமான வடிகால்கள் வெட்ட முடியாமலிருக்கிறது. ஒருவரிசையும் இன்னொருவரிசையும் 1½ அல்லது 2½ அடிதூரத்தில் இருப்பதை விட 3 அல்லது 4 அடிதூரத்தில் இருந்தாலும் பயிர் வளர்ச்சியிலும் விளைவிலும் யாதொருகுறைவுமுண்டாகாது.

நீர் பாய்ச்சுவதற்கும், நீர்வடிப்பதற்கும் வெட்டப்படுகிற கால்வாய்கள் பூமியின் சுபாவத்துக்குத்தக்கபடி ஆழமுள்ளவைகளாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு வரம்பின் உயரத்துக்கு 2½ அடிக்கு கீழேயே ஜலம் பாயும்படி 3 அடி ஆழமுள்ள கால் வாய்கள் வெட்டி பயிர் செய்யப்பட்டிருந்த கரும்பு வெகு சிலாக்கியமாய் விளைந்ததை நாம் பார்த்திருக்கிறோம். தண்ணீர் பாய்ச்சினதும் ஜலம் தேங்கி நிற்காமல் சீக்கிரம் வடிந்து போகும்படியான பூமிகளில் 1½ அல்லது 2 அடி ஆழமுள்ள கால்வாய்கள்போதுமானவை, லேசாயும் மணற்பாங்காயுமுள்ள பூமிகளில் இன்னும் ஆழம் குறைந்திருக்கலாம். பயிருக்கு கடைசியாக மண் அணைத்தபிறகு, வரம்பின் மேலிருந்து ஒரு அடி ஆழத்துக்கு கீழேயே ஜலம் இருக்கும்படி எப்பொழுதும் ஜலம் பாய்ச்சவேணும். கெட்டியான மண்ணுள்ள பூமியாயிருந்தால் ஜலம் இன்னும் கொஞ்சம் அதிக ஆழத்திலேயேயிருப்பது சிலாக்கியம்.

எச். ஸி. ஸாம்ப்ஸன்,
தென் டிவிஷன் விவசாய டெப்டி டைரெக்டர்.

THE INDIAN LEATHER TRADE.

இந்தியாவின் தோல் வியாபாரம்.

இந்தியாவானது விவசாய தேசமா யிருப்பதால் கணக்கில்லாத ஆடு மாடுகள் வேண்டியவைகளா யிருக்கின்றன. மற்ற காரியங்களுக்கும் அவைகள் அவசியமா யிருக்கின்றன. அவைகள் உயிரோடிருக்கும்போது மனுஷனுக்கு உபயோகமாயிருக்கிறதுமன்றி இறந்துபோனாலும் அவைகளின் மாமிசம், தோல், எலும்பு, இவைகள் உபயோகப்படுகின்றன. மாமிசம் வெளித்தேசங்களுக்கு அனுப்பப்படுவதில்லை. ஆஸ்திரேலியா தேசத்திலிருந்தும், பெல்ஜியம், ஹாலண்டு, தேசங்களிலிருந்தும் மாமிசம் தக்கபடி பெட்டிகளில் அடைத்து இங்கிலாந்து முதலான தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றது. இந்தியாவில் மாமிசம் புசிப்பவர் வேண்டிய மட்டும் இருப்பதால் அது இங்கேயே செலவாகிவிடுகின்றது. தோலும் எலும்பும் இங்கேயே செலவாகக் கூடியனவாயினும், நமக்குத் திறமையில்லாமல் அவைகளை அன்னிய தேசங்களுக்கு அனுப்பிவிடுகிறோம். சகலவிதமான எலும்பையும் அது அகப்படும் இடங்களிலெல்லாம் சேர்த்துப் பொறுக்கிப்பொடியாக்கி அன்னியர் கப்பலில் ஏற்றிக்கொண்டு போய் எருவாக உபயோகப்படுத்துகிறார்கள். தோலும் ஒரு பங்கு அன்னியராலும் ஒரு பங்கு நம்மவராலும் பதனிட்டும் பதனிடாமலும் அன்னிய தேசங்களுக்கு

அனுப்பப்படுகின்றது. வருஷம் 4 கோடி ரூபாய்க்கு அதிகப்பட்ட மதிப்புக்கொண்ட தோல் அன்னிய தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றது. இப்போது இந்தத் தோலின் விலை லண்டன் மார்க்கெட்டில் நூற்றுக்கு 30 விகிதமும், சில மாதிரி நல்ல தோலுக்கு நூற்றுக்கு 40 விகிதமும் அதிகப்பட்டிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.

இதற்குக் காரணங்கள் பலவுண்டு. முதலாவது, அமெரிக்காவில் விஸ்தாரமான பல இடங்களில் மேய்ச்சலுக்காகப் புல் முதலியவைகள் பயிரிடப்பட்டது போய் உணவுப்பொருள்கள் பயிரிடப்படுகின்றன. ஆகையால் ஆடுமாடுகள் வளர்ப்பது குறைந்து அத்தேசத்துக்கு வேண்டிய தோல் இந்தியா முதலான வேறு தேசங்களிலிருந்து வாங்கப்படுகிறது. இரண்டாவது காரணம், அந்த அமெரிக்கா தேசத்தில் இறக்குமதியாகும் தோலுக்கு இது வரை நூற்றுக்கு 15 வீதம் வரி விதிக்கப்பட்டிருந்தது. அது இப்போது இல்லை. ஆகையால், அங்குதோல் வியாபாரம் செய்வோர் அதை அதிகமாக வாங்கி உபயோகப்படுத்துகிறார்கள். மூன்றாவது காரணம், உலகத்தில் எந்தத்தேசத்திலும் மோட்டார் வண்டிகள் பிரபலமாகிவிட்டன. சாமானிய குதிரை வண்டிக்கு வேண்டிய தோலைவிட மோட்டார் வண்டிக்கு 4 பங்கு தோல் அதிகமாக வேண்டியிருக்கிறதாம்.

இப்படி எப்போது தோல் விலை அதிகப்பட்டதோ அப்போது தோல் சாமான்கள் விலை அதிகப்பட்டு விற்கின்றன. ஐரோப்பிய நாடுகளில் பூட்ஸ் முதலான சாமான்கள் செய்வோர் ஒரு ஜதைக்கு இரண்டு ஷில்லிங் (அதாவது ஒன்றரை ரூபாய்) விலை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால், இந்தியாவில் அன்னிய நாடுகளிலிருந்து வரும் தோல் சாமான்களை வாங்குவோர் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டும். ஆனால், நாம் தோலை அன்னிய தேசங்களுக்கு அனுப்பி விற்கிறவர்களானதால் நாம் அதற்கு அதிக விலை பெறுவதும் அன்னியர் நமக்கு விற்கும் சாமான்களுக்கு அதிக விலை கொடுப்பதும் சரிக்கட்டிப் போகின்றனவென்று சிலர் சொல்லுகிறார்கள். நாம் வாங்கும் சாமான்கள் 4 கோடி ரூபாய் மதிப்புக் கொண்டனவல்லவாகையால், நாம் விற்கும் தோலால் கிடைக்கும் மிகுதிப் பணம் நமக்கு லாபமென்றும் சொல்லுகிறார்கள்.

இது உண்மையானால், தோல் விலை அதிகப்பட்டிருப்பதால் நமக்குச் சந்தோஷமேயொழிய விசனமில்லை. ஆனால் இந்தியாவின் வாஸ்தவ நிலைமையை இவர்கள் அறியாமல் இப்படிச் சொல்லுகிறார்களே தவிர, அறிந்திருந்தால் சொல்லமாட்டார்கள். 4 கோடி மதிப்புள்ள தோலை விற்கும் நாம், அந்தத் தோல் விலையில் நூற்றுக்கு 30 அல்லது 40 அதிகமாய் விற்கும்போது, விசேஷ லாபத்தை அடையவேண்டுமென்பது அறியாதவர்களின் மலைப்பேயாகும். உண்மையில், இந்த லாபத்தில் கேவலம் சொற்ப பாகம் நமக்குக் கிடைக்கின்றதேயன்றி, பெரும்பாகம் அன்னியருக்கே கிடைக்கின்றது. எப்படியெனில், இந்தியாவில் கிடைக்கக்கூடிய தோலை அன்னியருக்கு விற்கிறவர்கள் பெரும்பாலும் நாமல்ல. ஐரோப்பியர்களே விற்கிறார்கள். ஐரோப்பிய ஏஜெண்டுகள் தேசத்தில் மூலைக்கு மூலைபோய், மாடடிப்பவர்களிடமிருந்தும் சக்கிலியர் முதலானவர்களிடமிருந்தும் தோலை நேராக வாங்கித் துறைமுகங்களில் ஒன்றாகச் சேர்த்து அன்னியதேசங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். இவர்கள் மாடடிப்பவர்களுக்கும் சக்கிலியருக்கும் அதிக விலை கொடுப்பதில்லை. மகா தரித்திரர்களாயும் மூடர்களாயுமுள்ள இவர்கள் லண்டன் மார்க்கெட்டில் விலை அதிகமாயிருப்பதை எப்படி அறிவார்கள்? அறிந்தால் ஒருக்கால் கிராக்கி செய்வார்கள். இவர்கள் அறிந்தவர்களுமல்ல. கிராக்கி செய்கிறவர்களுமல்ல. தரித்திரரானதால் கிடைத்ததைப்பெற்றுத் திருப்தியடைகிறார்கள். உண்மை இப்படி இருப்பதால், லண்டன் மார்க்கெட்டில் இந்தியத் தோலுக்குக் கிடைக்கும் அதிக விலையால் லாபம் பெறுகிறவர்கள் இந்தியத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யும் ஐரோப்பியர்களேயன்றி, ஆடுமாடுகளின் சொந்தக்காரர்களாவது அவைகளின் தோலை உரித்து விற்பவர்களாவது அல்ல.

விற்பது இப்படி இருக்க, அன்னியத் தோல் சாமான்களை வாங்குவோர் பெரும்பாலும் நாமேயானதால் அவைகளுக்கு அதிகப்பட்டிருக்கும் விலையைக் கொடுத்து நஷ்டப்படுகிறவர்கள் நாமேயாகும். நம் தேசத்தில் கிடைக்கும் தோலை நாமே ஏற்றுமதி செய்தாலும் அல்லது இந்தத் தோலை வெளியேற்றாமல் நாமே சாமான்களாகச் செய்தாலும் மேற்கண்ட

வாறு இரண்டு விதமாயும் நஷ்டம் நேரிடாமல் விசேஷ லாபம் கிடைக்கும். சுதேசிய முயற்சியின் ஊக்கத்தால் அங்கங்கு நம்மவர்தோல் சாமான்கள் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த முயற்சி ஸ்திரப்பட்டுப் பிரபலப்படுமானால் அன்னியர் பெறும் லாபத்தை நாமே பெறுவோம். இன்னும் நம்மவர்களுக்குப் புத்தியும் ஊக்கமும் இருக்குமானால் நம் தேசத்து ஆடுமாடுகளைத் தக்க தீனி போட்டு வளர்த்தும் அவைகளைச் சூடுபோட்டு விகாரப்படுத்தாமலும் பெரும் லாபம் பெறலாம். ஆடுமாடுகள் போன்ற மிருகங்களை நாம் தக்கபடி சம்ரக்ஷிக்காமலிருப்பது நாம் செய்யும் பெருங்குற்றம். இவைகள் உயிருடனிருக்கும்போது நல்ல பலமும் ஆக்கிருதையும் கொண்டிருந்தால் அவைகளால் நமக்குக்கிடைக்கும் பிரயோசனம் ஒன்றுக்கு இரண்டாய்க் கிடைக்கும். இறந்து போனாலும் மாமிசம், தோல், எலும்பு, முதலியவைகள் அதிகமாகக் கிடைத்து அதிக லாபம் பெறலாம். உலகத்தில் எந்தப் பதார்த்தமானாலும் வீண் போகக்கூடியதல்ல. பிராணிகளின் மல மூத்திராதிகளும் மனுஷனுக்கு விசேஷ பிரயோசனத்தைச் செய்யக்கூடியனவானால், தெருவில் சேரும் குப்பையும் மதிப்புக்கொண்டதானால், மிருகங்களைக் கருத்துடன் பராமரிக்காமல் அவைகளை எலும்பும் தோலுமாக்கி, யானை போல் ஆகக்கூடிய மாடுகளை ஆடுகள் போல் உருவங்கொண்டவைகளாக்கி, நஷ்டப்படுவது எவ்வளவு மதியீனம்!-சுதேச மித்திரன்.

◆

லங்கை விவசாய சங்கத்தார் அனுமதியின் பேரில் மிஸ்டர். ஜே. பி. கூக் என்பவரால் பிரசுரம் செய்யப்பட்டுவரும் "கமத்தொழில் விளக்கம்" என்னும் பத்திரிகையின் டிசம்பர் மாசத்திய சஞ்சிகையில் "கனி விருக்ஷங்கள்" "தோடைச்செய்கை" அதாவது கிச்சிலிச்செடி சாகுபடி, "ஈரவெங்காயச் சாகுபடி" முதலியவைகளைப் பற்றிய வியாஸங்கள் அடங்கியிருக்கின்றன.

◆

REVIEW OF THE PRESS.

பத்திரிகை ஆராய்ச்சி.

SOWING SEEDS AND TRANSPLANTING OF SEEDLINGS.

விதை விதைத்தலும், நாற்று நடுதலும்.

மிஸ்டர். சி. பி. வெங்கட்ராமய்யர் அவர்கள் "நெற்பயிர்" விதைத்தலைப்பற்றி விவேகபோதினியின் டிசம்பர் மாஸத்திய சஞ்சிகையில் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். விதையை அப்படியே சும்மாவிதைத்துப் பயிர் செய்வதினாலும், விதையைவிதைத்து நாற்று உண்டாக்கி நாற்றைப்பிடுங்கி நட்டுப் பயிர் செய்வதினாலும் உண்டாகும் பலாபலன்களை எடுத்துக்காட்டியிருக்கிறார். விதையை அப்படியே விதைத்துப் பயிர் செய்வதாலுண்டாகும் கெடுதிகளாவன:— ஒரு இடத்தில் விதை அதிகமாயும் மற்றொரு இடத்தில் குறைவாயும் விழுந்து நஷ்டமாகிறது. வீண் செலவும் அதிகமாகிறது. சில விதைகள் முளை கிளம்பாமல் கெட்டுப்போகின்றன. பூமியில் ஒரு இடத்தில் பயிர் அடர்த்தியாயும் இன்னொரு இடத்தில் அதிக இடைவெளியுள்ளதாயும் இருக்கிறது.

"இடம் தாராளமில்லாமல் குறுகிய இடத்தில் அதிக விதை வளரவேண்டிவந்தால் முளை அதிக உயரம் வளரக்கூடாமல் நிற்கும். மேலும் ஒவ்வொரு விதை பழுதாயிருக்கலாம். அந்த விதையிலிருந்து உற்பத்தியாகும் பயிரும் பிற்பயிரோடு சேர்ந்து வளர்ந்து மொத்த மேனியைக் குறைவு பெறச் செய்யும்". எங்கும் பயிர் பரவியிராமல் சில மூலைமுடக்குகளிலும் ஓரங்களிலும் பயிரில்லாமல் வெற்றிடமாகவே நிற்கும். அவ்விடங்களில் சேரும் நீர், எரு, முதலியவை வீணேயாகும். "விதையை விதைத்து, பயிர் அடர்ந்து வளர்ந்த இடங்களில் அதிகப் பயிரைப்பிடுங்கி வேறிடங்களில் நடவும், பிடுங்கின இடங்களில் மண்ணைப்போட்டு நிலத்தைச் சமப்படுத்தவும், பிறகு வெகு சிரமப்பட்டு களைபிடுங்கவும் செலவழிக்கும் பணம், நாற்றை நேரே வாங்குகிற கிரயத்தைவிட அதிகமாகுமே தவிர குறையாது. அப்படி கஷ்டப்பட்டு

களைபிடுங்கினாலும் அநேக இடங்களில் பயிர் அடர்த்தியாய் . களையிருப்பது தெரியாமல் போவதும் உண்டு.”

நாற்றைப்பிடுங்கி நடுவதால் உண்டாகும் அனுகூலங்களாவன :—

நாற்று நடுவதில் விதை அதிகம் வீண்செலவாகாது. தனித்தனியே அழகாய் சமதூரத்தில் நடலாம். அப்படிச் செய்வதில் தானியத்தின் ஜாதி பேதத்திற்கும் விளைச்சல் வளர்ச்சி பேதத்திற்குந் தக்கபடி நாற்றைநட சௌகரியமாக இருக்கும். மிகவும் உயரமாய் வளரக்கூடிய பயிராயிருக்கும் பக்ஷத்தில் சற்று தூரமாகவே நட்டு பயிர் நாலாபக்கமும் பரவி நிர்ப்பந்தமில்லாமல் செழித்து வளர இடங்கொடுக்கும்படி நடலாகும். தவிர ஒரு நாற்றுக்கும் மற்றொரு நாற்றுக்கும் இடையில் ஒரே சமமான தூரமிருக்கும்படி நடக்கூடுமாதலால் காற்றும் நீரும் ஒவ்வொரு நாற்றுக்கும் ஒரே ரீதியாய் எட்டி பயிர் ஒரே நிலையாய் வளர்ந்துவரும். நாற்று நடுவதிலோ அதிக உயரம் வளராத இளைத்த நாற்றுகளைத்தள்ளிவிட்டு செழித்தோங்கின நாற்றுகளை மட்டில் எடுத்து நடலாகும். நாற்று நடுவதில் களைபிடுங்கும் வேலையும் சுலபமாய் முடியும். பிடுங்கி யெறியப்பட்ட களை சேற்றில் மிதிபட்டு அழிந்துபோம். நாற்று நட்ட ஒருமாதத்திற்கெல்லாம் ஒருகளை பிடுங்கினால் போதுமானது. நாற்றைப் பிடுங்கி நடுவதால் பயிரின்வேர் நிலத்திற் செம்மையாய் ஊன்றும். வேர் பலமாயிருந்தாலன்றி செய்நேர்த்திக்குத்தக்க பலன் கிடைப்பது அருமையாதலால் நாற்று நடுவது உபயோகமானதாய்த்தோன்றும். ஆகவே மாசூலும் நிரம்பக்காட்டும். நாற்றுவாங்கி நடுவதில் செலவும் அதிகம் இல்லை.

நிரம்ப ஜலாதாரமில்லாத இடங்களில் வேறிடங்களில் பயிரிடப்பட்ட நாற்றுமுடிகளை வாங்கி நடுவதே நல்ல யுக்தியாகும். அதிக நிலம் இருப்பவர்கள் நீர்வள மிகுந்த ஒருபாகத்தில் நாற்றைப் பயிர் செய்து பிற நிலங்களில் கொண்டுவந்து நடலாம். அப்படி நாற்றுப்பயிர் செய்யும் காலங்களில் இதர நிலங்களில் பச்சைச் செடிகளைப் பயிர்செய்து பிறகு உழுது நிலத்தோடு செடிசேர்ந்து மக்கி நல்ல உரமாகும்படி செய்யப் போதுமான சாவகாசமு மிருக்கிறது.

THE COIMBATORE AGRICULTURAL COLLEGE.

கோயமுத்தூர் விவசாய காலேஜ்.

◆

கோயமுத்தூர் விவசாய காலேஜுக்குச் சம்பந்தப்பட்ட சில முக்கியமான விஷயங்களைப்பற்றி சமீபத்தில் ஒருவர் ஒரு பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். இந்த காலேஜும் சோதனைப்பண்ணையுமாகச் சேர்ந்து 400 ஏகராவுக்கு மேலாக இருக்கின்றன. கவரன்மெண்டார் அதிகப்பணம் செலவழித்து காலேஜ்கட்டிடத்தை வெகுஅழகாக கட்டிமுடித்திருக்கிறார்கள். ஆனால் வருஷத்திற்கு 20 மாணாக்கர்கள் வீதம் மூன்று வருஷப்படிப்புக்கு 60 மாணாக்கர்களைத்தான் எடுத்துக்கொள்ளுவார்கள். அவர்கள் குறைந்த பக்ஷம் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையாவது பாஸ்செய்தவர்களா யிருக்கவேண்டும். மாணாக்கர்களெல்லாம் காலேஜில் கற்ற அறிவைக்கொண்டு தங்கள் சொந்தப்பூமிகளில் நூதன முறைப்படி விவசாயம் செய்யக்கூடியவர்களாயிருக்கவேண்டும். மேலே சொல்லப்பட்ட விஷயங்களினால் இந்த காலேஜு ஏழை விவசாயிகளுக்கு அவ்வளவு பிரயோஜனத்தைக் கொடுக்கமாட்டாது என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இந்தக்குறைவை நீக்க வியாஸம் எழுதியவர் பின்வரும் உபாயத்தைச் சொல்லுகிறார். நாட்டுபுறத்து எலிமெண்டெரி பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களில் இங்கிலீஷ் தெரிந்தவர்களாயும் விவசாயப்படிப்பைக் கற்றுக்கொள்ள விரும்புகிறவர்களாயுமுள்ளவர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். அவர்களுக்கு விவசாய காலேஜில் மூன்று வருஷம் படிப்பு சொல்லிக்கொடுத்து தங்கள் சொந்தமான தொழிலுடன் விவசாய போதகர்களாயுமிருந்து பிள்ளைகளுக்கு அவர்கள் கற்றுக்கொண்டதைக்கற்பித்து, பிரத்தியக்ஷமாக நிரூபணமும் செய்து காட்டவேண்டும். வித்தியாபிவிருத்தி இலாகா டைரெக்டரும் ஒவ்வொரு பாடசாலையையும் ஒட்டி ஒருசிறு தோட்டமிருக்கவேண்டுமென்றும், அதில் பிள்ளைகளுக்கு விவசாய போதனை செய்யப்பட வேண்டுமென்றும் சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறார். மேற்சொன்ன உபாயம் இதற்கும் ரொம்ப அனுகூலமாயிருக்கும். ஆகையினாலே இப்பொழுது

முதல் முதல் செய்யவேண்டியது என்னவென்றால், கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு அடுத்த ஜில்லாக்களிலுள்ள தாலூகா ஒவ்வொன்றிலிருந்தும் தவணைக்கு இவ்வளவு உபாத்தியாயர்கள் கோயமுத்தூர் விவசாய காலேஜுக்குப் போய் படித்து வர வேண்டுமென்று ஏற்பாடு செய்யவேண்டும். ஒருதவணை என்பது ஆறுமாத காலத்திற்குக் குறையாத காலமாக ஏற்படுத்தி அப்படிப்போகும் உபாத்தியாயர்களுக்கு விவசாயப் படிப்பைக் கற்றுக்கொண்டுவந்த பிறகு சம்பளம் ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் உயர்த்த வேண்டும். விவசாயக் காலேஜில் படிக்கும் காலத்தில், தற்காலம் கொடுக்கப்படும் சம்பளத்தை குறைவில்லாமல் கொடுக்கவேண்டும். காலேஜுக்குப் போகவும் வரவும் வழிச்செலவு கொடுக்கவேண்டும். இப்படிச் சில வருஷகாலம் உபாத்தியாயர்களை அனுப்பி மேற்படி காலேஜில் கற்பித்துவந்தால் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு விவசாயப் பண்ணை ஏற்பட்டு ஏழை விவசாயிகளுக்கு மிகுந்த பலனைக்கொடுக்குமென்பதில் தடையில்லை. இந்தவித ஏற்பாடு செய்வதற்குக் கவரன்மெண்டார் அதிகப் பணச்செலவு செய்யவேண்டிய அவசியமுமிராது. எப்படியென்றால், உபாதியாயர்களை அனுப்புகிற லோகல் பண்டுபோர்டார்களே அந்தந்த உபாத்தியார்களின் செலவைப் பொறுத்துக்கொள்ளும்படிச் செய்யலாம். ஒரு தவணைக்குக் குறைந்தது 50 உபாத்தியாயர்களாவது பழக்கப்பட்டால் வருஷத்திற்கு 100 உபாத்தியாயர்கள் விவசாய முறைகளைக் கற்றவர்களாவார்கள். சில வருஷங்களுக்குள் அநேக உபாத்தியாயர்கள் இந்தப்படிப்பில் தேர்ந்து கிராமங்களில் விவசாய முறைகளைக் கற்றுக்கொடுப்பார்கள்.

“கிருஷிகன்” என்பது ஒரு மாதாந்தர விவசாயப் பத்திரிகை. சென்னப்பட்டணம் மௌண்டரோட் ஜெ. ஆர். ரங்கராஜு அவர்களால் இயற்றப்படுகிறது. இது ஒரு அருமையான சிறு பத்திரிகை. அதன் வருஷசந்தா 12 அணாத்தான். நாளது தை மாசத்து சஞ்சிகையில், “கால் நோய் வாய் நோய்,” “கேழ்வரகு சாகுபடியில் செல்லும் விதை அளவு” என்னும் வியாஸங்களும் தர்மரங்கராஜு அவர்களால் எழுதப்பட்ட ‘நெல் விதைப்பும் நடுகையும்’ என்னும் செய்யுளும் அடங்கியிருக்கின்றன.

◆

NEW METHODS OF EARNING MONEY.

புது உபாயங்களால் பொருள்தேடுதல்.

◆

‘இந்துநேசன்’பத்திரிகையில் மேலே குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது. யாராவது ஒருவர் கைத்தொழில்முதலானவைகளின் அபிவிருத்திக்கு அவசியமான புதிய உபாயங்களைக்கண்டுபிடித்துச் சொன்னால் உடனே நம்முடைய ஜனங்கள் அவைகளை அங்கீகரித்து அவைகளின்பிரகாரம் நடந்து விருத்திக்கு வருவதில்லை. ஜப்பானியர்கள் ஐரோப்பியரைப் போலவே எல்லா விஷயங்களிலும் நூதன யந்திரமுறைகளை அனுசரித்து விருத்திக்கு வந்திருக்கிறார்கள். ஆகவே நாமும் புதிய உபாயங்களையும் யந்திரமுறைகளையும் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யவேண்டும். பெரும் கைம்முதல் வைத்திருக்கும் ஜமீன்தார்களே புதிய முறைகளை அனுஷ்டிக்க முன்வரவேண்டும். பணக்கார ஜமீன்தார்களும் வர்த்தகர்களும் இந்த விஷயங்களில் பிரயாசைப்படாமற்போனால் நம்முடைய தேசம் அபிவிருத்தியடைவது அசாத்தியம். சொற்பமான முதலைவைத்துக்கொண்டு பெருத்தலாபம் சம்பாதிக்கக்கூடிய தொழில்கள் பல உண்டு. இந்த விதமான தொழில்களை அன்னிய தேசத்தார் பின் சொல்லப்பட்டபடி செய்கிறார்கள்.

நம் நாட்டில் அன்னியர்கள் ஆடுமாடுகளின் எலும்பைக் கண்டவிடத்தில் பொறுக்கிச்சேர்த்து லட்சக்கணக்கான விலைக்கு மேல்நாடுகளுக்கு கப்பலேற்றி விடுகிறார்கள். நாய், நரி, ஆடு, மாடு, குதிரை இவைகள் செத்துப்போகும் இடங்களைத் தேடிப்போய் இவைகளின் தோலைப்பதனிட்டு அதனால் வெகு உபயோகமான பலவித ஸாமான்கள் செய்கிறார்கள். இன்னும் சில இடங்களில் பட்டணங்களில் சேரும் குப்பைகளையும் மாடு மனுஷர்களின் மலங்களையும் கைகூசாமல் சேர்த்து வேண்டிய பக்குவம்செய்து பயிர்களுக்கு எருவாக உபயோகப்படுத்திவருகிறார்கள். இந்தமாதிரி பொருளுக்காசைப்பட்டு முயற்சி செய்யும் ஜனங்கள், இந்த வேலை உயர்ந்தது என்றும் இந்த வேலை இளப்பமென்றும் பாராமல் எந்த வேலையானாலும் இரந்து குடிப்பதையும் திருடுவதையும் விட மேலானதென்று தைரியப்பட்டு உழைத்துவர நாம்மட்டும் ஜாதிக்கட்டுப்பாடுகள்தழுவி,இன்னின்ன ஜாதியார் இன்னின்ன தொழிலைச் செய்யக்கூடாதென்று நிர்ப்பந்தங்கள் உண்டாக்கிக்கொண்டிருக்கிறோம். இப்பேர்ப்பட்ட நிர்ப்பந்தங்களை ஜப்பானியத்தலைவர்கள் கவனித்ததேயில்லை. கொஞ்சமேனும் அஞ்சாநெஞ்சினராய்ப் புது உபாயங்களை அவசியமானமட்டும் அனுஷ்டித்து வந்தார்கள். இன்னும் வருகிறார்கள்.

SEASONS IN THE COIMBATORE DISTRICT.

கோயம்புத்தூர் ஜில்லாவின் காலஸ்திதி.

இந்த விஷயமாக 'கிருஷிகன்' பத்திரிகையின் தைமாசத்து சஞ்சிகையில் ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

சென்ற நூறுவருஷ காலமாக கலெக்டர்களால் அனுப்பப்பட்ட ஜமாபந்தி முதலான ரிபோர்ட்டுகளினால் இந்த ஜில்லாவின் காலஸ்திதி அதிகப் பரிதாபமானதென்று வெளியாகிறது. விவசாயத்துக்கு அனுகூலமான மழைகளைப்பற்றி யோசிக்கும்போது 1210-ம் பசலிமுதல் 1302-ம் பசலிவரையில் ஒரு வருஷமாவது கிருஷிகருக்கு முற்றிலும் அனுகூலமானதென்று சொல்ல இடமில்லை. அனேக வருஷங்களில் கார்காலத்து மழைகள் நிதானமற்றும் கேவலமாயும் பெய்திருக்கின்றன. ஜூன், ஜூலை மாதங்களில் பெய்யும் சாரல் மழைகள் தாமதப்பட்டும் சில காலங்களில் மிகக் குறைவாயும் பெய்திருக்கின்றன. அனேக வருஷங்களில் அக்டோபர்௴ முதல் பெய்யும் காலமழைகள் சரியான அளவுக்குப் பெய்யாமலும் சில வருஷங்களில் அளவுக்குமிஞ்சிப் பெய்தும் விவசாயத்துக்குக் கெடுதியுண்டாக்கியிருக்கின்றன.

1865-ம்௵த்தில் அந்த ஜில்லா கலெக்டர் அதற்கு முன்சென்ற 62-வருஷங்களின் மழையளவு காலஸ்திதிகளைக் கவனித்து, அவைகளில் இரண்டு வருஷங்களில் மட்டும் திருப்திகரமாய் மழை பெய்திருக்கிறதென்றும், 11-வருஷங்களில் நிதானமாய் மழை பெய்ததென்றும், 40-வருஷங்களில் மழையளவு கேவலம் என்றும், 9-வருஷங்களில் அதிகக் கேவலம் என்றும் எழுதியிருக்கிறார்.

இதனால் அந்த ஜில்லாவில் அனேகம் தடவை பஞ்சம் சேர்ந்திருப்பதற்குக்காரணம் வெளியாகிறது.

விவசாய இன்ஸ்பெக்டராயிருந்து பென்ஷன் பெற்று வரும் மிஸ்டர். ஜி. ராஜகோபால் அவர்களால் எழுதப்பட்டு வெளியாகிற "தென்னிந்தியா விவசாயம்" என்னும் பத்திரிகையின் தை௴ சஞ்சிகையில் "மாம்பழம்", "மருதாணிச்செடி" "எருதுகள்" முதலியவைகளைப்பற்றிய வியாசங்கள் அடங்கியிருக்கின்றன.

SPICES.

வாசனைத்திரவியங்கள்.

"சக்ரவர்த்தனி" என்னும் பத்திரிகையின் டிஸம்பர்மாஸ ஸஞ்சிகையில் வாசனைத்திரவியங்களைப் பற்றின ஒரு வியாஸம் அடங்கியிருக்கிறது. வியாஸம் எழுதினவர் வாசனைத்திரவியங்களைப்பற்றிப் பொதுவாக சில விஷயங்கள் சொல்லி, மிளகு, லவங்கப்பட்டை, இஞ்சி, ஜாதிக்காய், கிராம்பு முதலியவைகளில் ஒவ்வொன்றையும் பற்றி எழுதியிருக்கிறார். வாசனைத்திரவியங்களை மிதமாகச்சேர்த்துக் கொண்டால் ஜீரணசக்தி விருத்தியாவதல்லாமல் தேக ஆரோக்கியமும் உண்டாகும். மிதமிஞ்சி உபயோகித்தால் உயிருக்கே ஹானிவருமென்று சொல்லப்படுகிறது. கிராம்பு என்பது ஓர்விதச் செடியின் பூக்காத புஷ்பங்களே. கிராம்புச் செடியின் ஒவ்வொரு கிளை நுனியிலும் கொத்துக்கொத்தாக புஷ்பங்கள் காய்த்துத்தொங்கும். அவைகள் மஞ்சள் நிறமானவுடன் அவைகளைப் பறித்து நெருப்பில் வாட்டி வெயிலில் உலர்த்தினால் கிராம்புகளாகிவிடும். ஜாதிக்காயைப்பற்றி பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது :

"கீழ் இந்திய தீவுகளில் பயிராகும் ஓர்வித சிறிய செடியின் கொட்டைகளின் உள்விதையையே ஜாதிக்காய் என்று சொல்லுகிறார்கள். ஜாதிக்காய்ப் பழமானது உருண்டையாகவும் அழகாகவுமிருக்கும். காய்முற்றிப் பழம்பழுத்தவுடன் மேல்தோல் திடீரென்று வெடித்துப்போய்விடும். அப்பொழுது பார்த்தால் ஏதோ ஒரு கொட்டையை சுற்றிலும் நார் போன்ற ஒருவஸ்துவானது சுற்றிக்கொண்டு இருப்பதாகத்தோன்றும். அப்பொழுது உள்ளே காணப்படும் கொட்டையானது கறுப்பாயும், அதனைச்சுற்றிக்கொண்டிருக்கும் நாரானது சிவப்பாயுமிருக்கும். இந்த நாரைத்தான் ஜாதிபத்திரி என்று நாம் வழங்கிவருகிறோம். ஜாதிபத்திரியை எடுத்துக்கொண்டு கொட்டையை வெயிலில் முதலில் உலர்த்தி எடுத்துக்கொள்ளுவார்கள். பின் நெருப்பின் மேலும் உலர்த்துவார்கள். கொட்டையின் மேலுள்ள ஓட்டை உடைத்தால் ஜாதிக்காய் அகப்படும்."

AGRICULTURAL NOTES.

விவஸாயக் குறிப்புகள்.

HELP TO AGRICULTURISTS.

விவஸாயிகளுக்கு ஒத்தாசை.—தற்காலத்தில் எலும்புகளும், பிண்ணாக்கும் ஏராளமாய் இந்தியாவிலிருந்து இதர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பயிர்த்தொழில் செய்பவர்கள் இந்தப்பொருள்களை எருவாக உபயோகப்படுத்தும் விஷயத்தில், அவைகளுக்கும் ஆடுமாடுகளின் எருவிற்கும் உள்ள சரியான தாரதரத்தை ஒத்துப்பார்த்து தெரிந்துகொள்ளவில்லை. அதனால் அவைகளை சரியான விலைக்கு விற்காமல் குறைச்சலான விலைக்கு விற்றுவிடுகிறார்கள்.

பூஸ்திதிக்காரர்களும் பயிர்த்தொழில் செய்பவர்களும் அந்தவித எருக்களை கோயம்புத்தூரிலுள்ள விவசாய ரசாயன சாஸ்திரிக்கு அனுப்பினால் அவர் யாதொரு செலவுமில்லாமல் பரிசோதித்துப் பார்த்து, கிராமங்களிலுள்ள சாதாரண ஆடுமாடுகளின் எருவின் உபயோகத்தையும், அவைகளின் உபயோகத்தையும் தாரதரம் பார்த்துச்சொல்லுவார். தவிர, மண்ணின் தினுசுகளைப் பரிசோதித்து எந்த எரு எந்தெந்த பூமிக்கு மிகவும் நன்மைதரக்கூடியதென்றும் பார்த்துச் சொல்லுவார்.

ராணிப்பேட்டையிலுள்ள பாரி அண்டு கம்பெனியாராலும், கோயம்புத்தூரிலுள்ள ஸ்டேன்ஸ் கம்பெனியாராலும், இன்னும் இதர வியாபாரிகளாலும் விற்கப்படும் செயற்கை எருக்கள் சரியானவிதமாய் உபயோகிக்கப்பட்டால் அனேக பயிர்களுக்கு பிரயோஜனப்படும். ஆனால், தென்னிந்தியாவில், அவைகளை பிண்ணாக்கு, ஆடுமாடுகளின் எரு, தழை முதலியவைகளோடு ஒன்றாய்ச்சேர்த்து உபயோகப்படுத்த வேண்டியது. அப்படிக்கொத்த எருக்களை விவசாயிகள் வாங்குவதில் பணத்தை செலவழிப்பதற்கு முந்தி, அவர்கள் கோயம்புத்தூர் காலேஜ் விவசாய ரஸாயண சாஸ்திரியினிடமாவது அல்லது தென் டிவிஷன் திருச்சினாப்பள்ளி டிப்டி டைரெக்டரிடமாவது யோசித்துச் செய்வது நலம். அவர்கள் வேண்டிய ஒத்தாசையை யாதொரு பணச்செலவுமில்லாமல் செய்வார்கள்.

MANURING COCOANUT TREES.

தென்னைமரங்களுக்கு எருவிடுதல்.—ஒருவருடைய தோப்பில் தென்னைமரங்களிலுள்ள மட்டைகளெல்லாம் பழுத்து, அனேகமட்டைகள் கீழே விழுந்து, ஒவ்வொருமரத்திலும் ஒவ்வொரு மட்டை மாத்திரம் தங்கியிருந்ததாம். நிலம் மணல்பாங்கானதாயிருந்ததாலும், அந்த வருஷத்தில் மழைக் குறைவாயிருந்ததாலும், அதிக ஜலத்தால் மரங்கள் மேலே சொல்லியபடி கெட்டுப்போயின என்று சொல்ல முடியவில்லை. பூச்சி விழுந்ததால் மரங்கள் மொட்டையாய்ப் போயினவோ என்று சொல்வதற்கும் இடமில்லை. ஏனென்றால் குருத்தில் யாதொரு பிசகும் இல்லை. ஆகவே தோப்புக்காரர் என்ன செய்தாரென்றால், ஒவ்வொரு மரத்திற்கும் சுற்றிலுமுள்ள புல், பூண்டுகளைப் பிடுங்கியெறிந்து, பசுமாடுகளைக் கொண்டு போய் ஒவ்வொரு மரத்துக்கும் கட்டி, அந்த மாடுகளுக்கு கட்டுத்தறியிலேயே தீனியைப் போட்டு வந்தார். ஒரு வாரமானதும் மாடுகளை அவிழ்த்து, மாடுகள் கட்டியிருந்த இடத்தைக் கிளறிவிட்டு, மாடு மிதித்தும் துவைத்துமிருந்த ஈரலைக் கோல்களைப்போட்டு மூடினாராம். இப்படிச் செய்த சில காலத்துக்கெல்லாம் மரங்கள் புது மட்டைகள் வைத்து, காய்க்க ஆரம்பித்து, பிற்பாடு நன்றாயும் காய்த்தனவாம்.

PLOUGHING AFTER HARVEST.

அறுப்பான உடனே உழுது விடுதல்.—நெல் அறுவடையானவுடன் அரிதாளை உழுதுவிட்டால் குருத்துப் புழுவின்பாதை ஒழிந்துவிடும்.

PRICKLY-PEAR MANURE.

சப்பாத்தி எரு.—சப்பாத்துக்கள்ளியை வெட்டிக் குழிகளில் போட்டு மூடி மக்கவைத்து மறுவருஷத்தில் அதை வாரியாவது அல்லது அதைக்காயவைத்து எரித்த சாம்பலையாவது நிலங்களுக்குப் போட்டால் நல்ல எருவாம்.

DISEASE OF SUGAR-CANE.

கரும்பின் நோய்.—நஞ்சை நிலங்களில் பயிரிடும் கரும்புக்கு உண்டாகும் நோய் ஜாஸ்தியாய் தண்ணீர்கட்டுவதாலும், கட்டுத்தண்ணீர் மண்ணில் சுவர்ந்து வடியஇடமில்லாததாலுமே உண்டாகிறதென்று சொல்லப்படுகிறது.

INDUSTRIAL NOTES.
கைத்தொழில் குறிப்புகள்.

—:o:—

THE LEATHER INDUSTRY.

தோல் கைத்தொழில்.—பம்பாயில் தோல் தொழிலைப்பற்றி விசாரணை செய்வதற்காக மிஸ்டர் கத்ரீ என்ற ஒரு இந்திய நிபுணர் நியமிக்கப்பட்டு விசாரணை செய்து வருகிறார். மிஸ்டர் கத்ரீ 7 வருஷம் இந்தத் தொழிலை இங்கிலாந்திலும் மற்ற இடங்களிலும் கற்றறிந்தவர். அவர் ஜனவரி மாஸம் முதல் 6 மாஸத்தில் இந்த விசாரணையைச் செய்து முடிக்க வேணும். இவர் விசாரணை நடத்தவேண்டிய அம்சங்களாவன.—(1) பம்பாயில் எவ்வளவு தோல்கள் கிடைக்கின்றன. அவைகள் என்ன நிலைமையில் பதம் செய்கிறவர்கள்கைக்கு எட்டுகின்றன. (2) பெரிய வியாபாரிகளும் சிறிய வியாபாரிகளும் என்ன உபாயங்களை அனுசரித்துப் பதம் செய்கிறார்கள். (3) பதம் செய்யப்பட்ட தோல்கள் எந்த விதமாய் விற்கப்படுகின்றன. (4) என்ன தோல் சாமான்கள் செய்யப்படுகின்றன. (5) இந்த மாதிரிப் பற்பல தோல் தொழில்கள் செய்கிறவர்களுடைய நிலைமையென்ன.

PLANTAIN.

வாழைப்பழம்.—வாழைப்பழம் நன்றாய்ப்பழுத்த பிறகு காலங்குலத் தடிப்பிருக்கும்படி அறுத்து வெள்ளைச்சர்க்கரையை அதன்மேல் தெளித்துப் பலகைமேல் உலர்த்துவதுண்டு. பழம் உலர உலர, அதை அனேகந்தரம் திருப்பிக்கொடுத்து ஒவ்வொரு தரமும் சர்க்கரையைத் தெளித்தால் சில நாளில் உலர்ந்துவிடும். அது நெடுநாள் கெடாமலிருக்கும். இதை ஜாடிகளில் அடைத்து விற்பதுண்டு.

WORN-OUT HORSESHOES.

தேய்ந்துபோன குதிரைலாடம்.—தேய்ந்துபோன குதிரை லாடத்து இரும்பானது, நல்ல விலை உயர்ந்த கத்திகளும் ஆயுதங்களும் செய்ய, மிகவும் பிரயோசனமானதென்று சீனாதேசத்து இரும்பு வியாபாரிகள் சொல்லுகிறார்கள். குதிரைகள் ஓடும்போது அடிக்கடி நிலத்தில் பட்டுப்பட்டு லாடங்கள் உஷ்ணமாவதால், அவைகளின் இரும்பு உயர்ந்த குணமுள்ளவைகளாகின்றனவாம். இந்த இரும்பிலிருந்து செய்யப்பட்ட ஆயுதங்கள் மிகவும் உயர்ந்ததினுசானவையால், சீனாதேசத்தில் கத்தி முதலிய ஆயுதங்கள் செய்வோர்கள், எல்லா இரும்பிலும் இதுவே சிறந்ததென்று இதை ஜாஸ்தியாய் வாங்குகிறார்களாம்.

REVENUE NOTES.
ரெவினியூக் குறிப்புகள்.

—:o:—

IRRIGATION WORKS.

ஜலாதாரங்கள்.—ஸாதாரணமாய்க் கிணறு தவிர வேறுவித ஜலாதாரங்களைப் பாசனத்துக்காக ஒருவன் சொந்தமாக ஏற்படுத்திக் கொள்வதாயிருந்தால், அதைப்பற்றி கலெக்டருடைய முன்அனுமதி பெற்றுக்கொள்ள வேணும். இப்படிப்பட்ட பாசனங்களெல்லாம் கலெக்டருடைய இன்னதேதி இன்ன உத்தரவுப்படி ஏற்படுத்தப்பட்டது என்று கிராமக் கணக்குகளில் பதியப்பட வேண்டும். அப்படிப் பதிந்திருந்தால்தான், அவைகளிலிருந்து நீர்பாய்ச்சுவதற்குத் தண்ணீர்த் தீர்வை இல்லாமலிருக்கும். ஆகையால் அவைகளுடைய சொந்தக்காரர்கள் அவைகளை கிராமக்கணக்குகளில் பதிய வைக்கவேணும்.

JAMABANDI OF THE TANJORE DISTRICT.

தஞ்சாவூர் ஜில்லா ஜமாபந்தீ.—கலெக்டர் அவர்களால் ஜமாபந்தி நடத்தப்படும். கும்பகோணம், மன்னார்குடி தாலூகாக்களைத் தவிர தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள தாலூகாக்களின் வருஷாந்திர ஜமாபந்தி 1319 பசலிக்கு முறையே உள்ள டிவிஷனல் ஆபீசர் அவர்களால் நடத்தப்படுமாம். 1910௵ மே௴ கடைசியில் ஜமாபந்தியை முடிக்கவேண்டிய நிமித்தியமாய் கடைசியாயுள்ள காலமாக குறிப்பிடப்பட்டிருக்கிற 1910௵ பிப்பிரவரி௴ மத்திய காலத்தில் ஜமாபந்தி ஆபீசருக்குத் தயாராயிருக்கும் பொருட்டு, அடங்கலை 1909௵ டிசம்பர்௴ 31௳யிலும் இதர கிராம கணக்குகளை 1910௵ ஜனவரி௴ 31௳யிலும் முடித்திருக்கவேண்டியதென்று எல்லா கர்ணன்களும் அறியவேணும்.

BOUNDARY MARKS.

எல்லைப்பொழிகள்.—நமது ராஜதானியில் ஸர்வே செய்யப்பட்ட இடங்களில் எல்லாம் பாறைக்கல்களை எல்லைக்கல்களாகப் புதைக்கிறார்கள். இப்படிச்செய்யாமல் வடக்கே கீழ்வங்காள ஆஸாம் மாகாணத்தில் மரங்களையே பொழியாக நாட்டக்கூடாதா என்று பரிசோதித்துவருகிறார்களாம்.

Oakes & Co., Ltd.,
9, Broadway, Madras.

—(o)—

அடியில்கண்ட சாமான்கள் எங்களிடத்தில் அகப்படும்.

(1) விவசாயத்திற்கு வேண்டிய யந்திரங்கள்,

(2) மனிதர்களாலும், மாடுகளாலும் வேலை செய்யக்கூடிய தண்ணீர் பாய்ச்சும் பம்புகள்,

(3) நீராவியாலும் வேறு எந்த சக்தியாலும் வேலை செய்யக்கூடிய எல்லாவித தொழிலுக்கும் வேண்டிய யந்திரங்கள்,

(4) தச்சு வேலைக்கு வேண்டிய உளி, வாச்சி முதலிய சாமான்கள்,

(5) பலவித பெயிண்டுகள், எண்ணெய்கள், வார்னீஷுகள், புருஷுகள்,

(6) வியாபாரிகளுக்கு வேண்டிய நிறுக்கும் யந்திரங்கள் லேப்கள், பணம் வைக்க இரும்புப் பெட்டிகள், பூட்டுகள்,

(7) விவசாயிகளும், குடித்தனக்காரர்களும் உடைக்கவும், அரைக்கவும் வேண்டிய யந்திரங்கள்,

(8) கம்பி வேலிகள், இரும்பு மாடிப்படிகள், வீடு கட்டுவதற்கு வேண்டிய இரும்புச் சாமான்கள்,

இன்னும் எது வேணுமானாலும் எழுதியனுப்பினால் அனுப்பத் தயாராய் இருக்கிறோம். காட்டலாக் அனுப்பப்படும்.

ஓக்ஸ் அண்டு கம்பெனி,
9, பிராட்வே, சென்னபட்டணம்.

Paddy Cultivation.

நெல் சாகுபடி.

ராணிப்பேட்டை ரஸாயந உரக்கிடங்கில் எங்களால் தயாரிக்கப்படுகிற உரங்கள் சாஸ்திரோக்தமானவைகள். அதாவது பயிர், பயிருணவு இவைகளின் சாஸ்திர முறைப்படி பயிருணவு சத்துக்கள் அதிகமாயுள்ளதும், அந்த சத்துக்கள் பயிர்களுக்கு உணவாகக்கூடிய நிலமையிலுள்ளதுமான சரக்குகளைக் கொண்டு அந்தந்த பயிர்களுக்குத் தக்கப்படி தயார் செய்யப்படுகின்றன. தற்காலத்தில் ஜர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களில் வியவஸாய ரஸாயந சாஸ்திர நிபுணர்களால் வியவஸாய சாஸ்திர ஆராய்ச்சிகள் விசேஷமாய் செய்யப்பட்டு வருகின்றன. அந்த ஆராய்ச்சிகளை யனுசரித்ததும், இந்த நாட்டு பயிர்களின் காலம், சீதோஷ்ண ஸ்திதி இவைகளுக்குத் தக்கபடியும் உரங்கள் செய்யப்படுகின்றன. இப்படி தயாரிக்கப்பட்ட உரங்களை கிடங்கு தோட்டத்து நிலங்களில் அந்தந்த பயிர்களுக்குப் போட்டு சாகுபடி செய்கிறோம். சென்ற வருஷம் 30 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் எங்கள் நெல் உரம் இரண்டாந்தரம் (B) 168 ராத்தல் உழுது சின்னசம்பா நாற்றை ஒற்றை அலகாக முக்காலடிக்கொன்று நட்டதில் 558 படி அல்லது 1843 ராத்தல் தானியம் கிடைத்திருக்கிறது. இது ஏகருக்கு 5812 ராத்தல் வீதம் ஆகிறது. அதே உரத்தைப் போட்டு சாதாரணமாய் நட்டதில் ஏகருக்கு 3750 ராத்தல் முதல் 5000 ராத்தல் வரை நெல்கண்டு முதலாயிருக்கிறது. இவ்வாறு ரஸாயந உரம்போட்ட நிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொருட்டு நாட்டு உரங்களாகிய தொழு எரு, சாம்பல், தழை முதலியவைகள் போட்டு பயிர் செய்ததில், ஏகருக்கு 2344 ராத்தல் முதல் 2625 ராத்தல் வரை நெல் கிடைத்திருக்கிறது. ரஸாயந உரம் மூன்று சாகுபடிக்கொருதடவை உபயோகப்படுத்தப்படுகிறது. நாட்டு உரங்கள் சாகுபடிதோறும் உபயோகப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, 32 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் 180 ராத்தல் நெல் உரம் (B) போட்டு பயிர் செய்ததில், முதல் போகம் சின்னசம்பா 1611 ராத்தல் நெல்லும், இரண்டாம் போகம் வெள்ளைக்கார் 1467 ராத்தல் நெல்லும், மூன்றாம் போகம் ஸ்வர்ணவாரி 1425 ராத்தலும் கிடைத்தன. இது ஏக்கருக்கு முதல் போகத்தில் 5034 ராத்தல் வீதமும், இரண்டாம் போகம் 4584 ராத்தல் வீதமும், மூன்றாம் போகம் 4453 ராத்தல் வீதமும் ஆகிறது. நாட்டு உரங்கள் போட்டு சாகுபடி செய்துவந்து 25 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் 56 ராத்தல் ஸூபர்பாஸ்பேட் மாத்திரம் நாலு மடங்கு மணலுடன் கலந்து ஒரு மாதத்திய சின்னசம்பாப் பயிர் மேல் தெளித்ததில், அந்த போகத்தில் ஏகருக்கு 4875 ராத்தல் வீதமும், அடுத்த போகம் வெள்ளைக்கார் 4500 ராத்தல் வீதமும், அதற்கடுத்த போகம் ஸ்வர்ணவாரி 4218 ராத்தல்வீதமும் கொடுத்திருக்கிறது. 32 ஸெண்டுள்ள ஓர் நிலத்தில் 56 ராத்தல் ஸூபர்பாஸ்பேட் போட்டு உழுதும், 20 ஸெண்டுள்ள மற்றொரு நிலத்தில் ஒன்றும் போடாமல் உழுதும், இரண்டிலும் சிறுமணி நாற்று நட்டு, நாகதாளி அழுகின தண்ணீர் பாய்ச்சினதில், பயிர் இரண்டிலும் மதாளித்து வந்தது. அறுவடையில் முதல் தாக்கில் 1641 ராத்தல் நெல் முதல்தரமானதாக கிடைத்தது. இரண்டாவது தாக்கில் சுத்த கசப்பான நெல் 225 ராத்தல் கிடைத்தது.

The Presidency Manure Works, Ltd.,
Ranipet.
Managing Agents: Parry & Co., Madras.

ராஜதானி ரஸாயந உரக்கிடங்கு,
ராணிப்பேட்டை.

மானேஜிங் ஏஜண்டு:—
பாரி அண்டு கம்பெனி,
மதராஸ்.

EDUCATIONAL NOTES.

வித்தியா விஷயக் குறிப்புகள்

THE PUSA AGRICULTURAL COLLEGE.

ப்யூஸா விவசாய காலேஜ்.—ப்யூஸா விவஸாய காலேஜைப்பற்றியும் சோதனைப்பண்ணையைப் பற்றியும் ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாணாக்கனுக்கும் விவசாய சாஸ்திரத்துக்குச் சம்பந்தப்பட்ட பின்வரும் பாகங்களில் ஏதாவது ஒன்றைத்தான் காலேஜில் சொல்லிக்கொடுப்பார்கள். இந்தப் படிப்புமுடிய இரண்டு வருஷம் செல்லும். ஒரே காலத்தில் ஒரு பாகத்துக்குமேல் இரண்டு மூன்று பாகங்களில் ஒரு மாணாக்கனுக்கும் படிப்புச் சொல்லிக் கொடுக்கமாட்டார்கள். விவசாய சாஸ்திரத்துக்கு சம்பந்தப்பட்ட பாகங்களாவன :—

1. "அக்ரிகல்சரல் கெமிஸ்ட்ரி" என்னும் விவஸாய ரஸாயன சாஸ்திரம். 2. 'இகனமிக் பாடெனி' என்னும் பொருளாதார ஸ்தாவர சாஸ்திரம். 3. "இகனமிக் ஆண்டமாலொஜி" என்னும் பொருளாதார சிற்றுயிர் லக்ஷண சாஸ்திரம் 4. 'மைகாலொஜி' என்னும் காளான் முதலிய பயிர் வியாதிகளைப் பற்றிய சாஸ்திரம். 5. "அக்ரிகல்சரல் பாடெனி" என்னும் விவஸாய ஸ்தாவர சாஸ்திரம்.

விவசாய மாணாக்கர்களுக்குப் படிப்புச்சொல்லிக்கொடுக்கிற காலம் பின் வருமாறு :—ஜூன்௴ 1௳ முதல் நவம்பர்௴ 15-ம்௳ வரையில் பள்ளிக்கூடமுண்டு. நவம்பர்௴ 16-ம் தேதியிலிருந்து ஜனவரி௴ 5௳ வரையில் லீவு. ஜனவரி௴ 6-ம் தேதியிலிருந்து மார்ச்சு௴ 31-ம் தேதிவரையில் பள்ளிக்கூடமுண்டு. ஏப்பிரல்௴ 1-ம் தேதியிலிருந்து மே௴ 31-ம்௳ வரையில் லீவு.

44 மாணாக்கர்களைத் தான் சேர்த்துக்கொள்ளுவார்கள். ஒரு மாணாக்கனுக்கு 25 ரூபாய்க்கு மேல் செலவாகாது. மாணாக்கர்களில் மூன்று விதம் உண்டு :—(1) மாகாண கவரன்மெண்டார்களால் நியமிக்கப்பட்டவர்கள். (2) சுதேச ராஜாங்கத்தார்களால் அனுப்பப்பட்டவர்கள். (3) தாங்களாகவே வந்து படிக்கும் மாணாக்கர்கள். கவரன்மெண்டாரால் நியமிக்கப்படும் மாணாக்கர்கள் ஏதாவது ஒரு மாகாண விவஸாய காலேஜில் படித்து உயர்ந்த வகுப்பில் தேறியவர்களாகவோ, அல்லது ஒரு சர்வ கலாசாலையின் பட்டப் பரீக்ஷையில் தேறினவர்களாகவோ இருக்கவேண்டியது அவசியம்.

A TRADES SCHOOL.

வியாபாரத்திலுள்ளவர்களுக்கு ஒரு பள்ளிக்கூடம்.—சென்னப்பட்டணத்தில் வர்த்தகர்களிடத்திலும் கைத்தொழில் சாலைகளிலும் எவ்வளவோ ஜனங்கள் அலுவலாயிருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் அனேகமாய் சொல்ப சம்பளத்தில் இருக்கிறவர்கள். ஆகையால் ஸம்ஸாரம் குழந்தைகளை வைத்துக்கொண்டு இவர்கள் தற்காலத்தில் ஜீவனம் செய்வதே வெகு கஷ்டமாயிருக்கிறது. இன்னும் படிக்க வேண்டிய வயதுள்ள பிள்ளைகள் இருந்தால் கஷ்டத்தைக் கேட்கவேண்டியதேயில்லை. ஆகையால் இப்படிப்பட்டவர்களுடைய குழந்தைகளுக்கு ஒருவித ஸ்கூல் சம்பளமுமில்லாமல் இனாமாய் எழுதப் படிக்கச் சொல்லிக்கொடுத்து அதோடு அவர்கள் வயதான பிறகு ஜீவனத்திற்கு ஹேதுவான ஒரு தொழில படிப்பும் கற்றுக்கொடுப்பதாக உத்தேசித்து சில பேர்கள் இது விஷயத்தில் சிரத்தை செலுத்தி வருகிறார்கள். சென்னப்பட்டணம் மௌண்ட் ரோட்டில் அனேக பெரிய ஷாப்புகள் இருப்பதால் மேலே சொல்லிய பள்ளிக்கூடம் முதல் முதலில் அங்கே ஏற்படும். இதற்கு ஒரு சாஸ்வத பண்டு ஏற்படுத்தவும், இன்னும் வேண்டிய ஒத்தாசையைச் செய்யவும், அனேக மௌண்ட் ரோட் வர்த்தகர்களும் சென்னை வியாபார சங்கத்தாரும் முன் வந்திருப்பதாகத் தெரிகிறது.

THE MADURA TECHNICAL INSTITUTE.

மதுரை தொழில் படிப்புச் சாலை.—இருபது வருஷகாலமாய் மதுரை ஜில்லா போர்டார் மதுரையில் "டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்" என்று சொல்லப்பட்ட ஒரு தொழில் படிப்புச்சாலையை வைத்து பரிபாலித்துவந்தார்கள். இதில் பலவித விசித்ரமான மரவேலைகள், பாத்திர வேலைகள் இன்னும் பலவித கைத்தொழில்கள் எல்லாம் நடந்துவருகின்றன. இந்தப் பள்ளிக்கூடம் நல்ல ஸ்திதிக்கு வரவர ஜில்லா போர்டாருக்கும் செலவு ஜாஸ்தியாகிக்கொண்டே வந்தது. போனவருஷத்தில் 14,000 ரூபாய் செலவாயிற்று. இவ்வளவு செலவு தங்களால் செய்யமுடியாது என்று சொல்லி இந்த ஸ்கூலை ஸர்க்கார் ஒப்புக்கொண்டு விருத்திக்குக்கொண்டுவரவேணும்என்று போர்டார் கேட்டுக்கொண்டார்கள். இதை கவரன்மெண்டார் அங்கீகரித்து வருகிற ஏப்பிரல் மாதம் முதல் ஒப்புக்கொள்ளப்போவதாய்த் தெரியவருகிறது.

LITERARY NOTES.

புஸ்தகக்குறிப்புகள்.

ELEMENTARY BOTANY.

தாவர நூல். -தற்காலம் கோயம்புத்தூர் விவஸாய காலேஜில் போதகாசிரியராக இருக்கும் ஸ்ரீமத். கே. ரங்காசாரியாரவர்களால் இந்த நூல் தமிழில் வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான நூல் இது வரையில் ஒருவராலும் தமிழில் வெளியிடப்படவில்லை.

இங்கிலீஷ் அறிந்தவர்கள் மட்டுமே அல்லாமல் அது தெரியாத மற்றவர்களும், தென்னிந்தியாவில் காணப்படும் பூக்கும் செடிகளைப் பற்றிய விஷயங்களையெல்லாம் நன்றாகத் தெரிந்துகொள்ளும்படி இந்த நூலாசிரியர் ஸுலபமான தமிழ் நடையில், சிறு சிறு வாக்கியங்களால் விளக்கியெழுதியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. தாவர ஸம்பந்தமான 233 படங்கள் இந்த நூலின் இடையிடையே சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்த சாஸ்திரத்தைப் பற்றிய நூல்கள் இங்கிலீஷ் பாஷையில் மிகுதியாக இருந்த போதிலும், அவைகள் தென்னிந்தியாவிலுள்ள தாவரவர்க்கத்தைப்பற்றிய விஷயங்களையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து விளக்கமாய்ச் சொல்லவில்லை. அல்லாமலும், எந்த விஷயமும் அவரவர்கள் ஸ்வயபாஷையில் எழுதப்படுமானால், அது மிகவும் தெளிவாக விளங்குமென்பது எல்லாரும் அறிந்த விஷயம். ஆதலால் இந்த நூல் தமிழர்களுக்கு ரொம்பவும் பயன் விளைவிக்குமென்பதில் ஸந்தேகமில்லை.

இது 14-அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகளில், உயிருள்ளவைகளின் குணங்கள், செடிகளின் அமைப்பு, அவற்றின் உறுப்புக்கள், அவை செய்யும் வேலைகள், புஷ்பங்கள், கனிகள், விதைகள் முதலிய விஷயங்கள் அமைந்துள்ளன.

இந்த நூலின் சிற்சில இடங்களைப் படித்துப் பார்த்தபோது, அனேக வார்த்தைகள் நூதனமாக உற்பத்தியாக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளை அடுத்த பதிப்பில் மாற்றி அவைகளுக்கு பதிலாக இங்கிலீஷ் பாஷையில் வழங்கி வரும் வார்த்தைகளையே உபயோகிப்பது சுலபமும் சௌகரியமுமான வழியென்று தோன்றுகிறது. விலை 1-8-0. சென்னப்பட்டணம் பி. ஆர். ராமய்யர் கம்பெனி.

SCIENTIFIC NOTES.

சாஸ்திரீயக் குறிப்புகள்.

THE RAIN.

மழை.—பூமியிலும் சமுத்திரத்திலும் உள்ள நீர், சூரிய வெப்பத்தால் ஆவிரூபமாக மாறி, மேலே கிளம்பி மேகமாய்விடுகின்றது. பிறகு குளிர்ந்த காற்றுப் பட்டவுடன், இந்த மேகத்தில் உள்ள நீராவி குளிர்ந்து சிறு மழைத்துளிகளாக பூமியில் வருஷிக்கிறது. உலக முழுவதும், பூமி சமுத்திரம் இரண்டையும் சேர்த்து கணக்கெடுத்துப் பார்த்ததில், வருஷத்தில் 110,000 கன மையில் தண்ணீர், மழையினால் உண்டாகிறதென்று தெரிகிறது. அதாவது, பூமி எங்கும் ஒரே தட்டையாயும் சமமாயும் இருந்தால், பூமிக்கு மேல் மூன்றடி ஜலம் நிற்கும். பெய்யும் மழையில் சமுத்திரத்தில் முக்கால்பங்கும், மீதி பூமியிலும் விழுகிறது. பூமியில் விழும் நீரில் பூமி யிழுத்துக்கொண்டது போக பாக்கி நதிகளில் போய்விடுகிறது. மழைக்கு ஆதாரமான நீராவியெல்லாம் சமுத்திரத்திலிருந்தே வருகிறதென்று எண்ணுவது தவறென்று தோன்றுகிறது. மூன்றில் ஒரு பங்குதான் சமுத்திரத்திலிருந்து வருகிறது. மீது இரண்டு பங்கும் பூமியில் உள்ள ஈரம் உலர்ந்து ஆவியாகியே வருகிறதென்று தீர்மானிக்கப்படுகிறது.

GERMS.

பூச்சிகள்.—ஒரு சுவாசத்தில் 40,000 கண்ணுக்குத் தெரியாத நுட்பமான பூச்சிகள் உள்ளே புகுவதாயும், 40 மாத்திரம் வெளியே திரும்பி வருவதாயும், ஸ்ட்ராஸ் என்ற சாஸ்திர நிபுணர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். ஆகவே பாக்கியிருக்கும் 39,960 பூச்சிகள் மூக்கிலும், தொண்டையிலும், சுவாசாசயங்களிலும் தங்கி வியாதிகளுக்குப் பெரும்பாலும் ஹேதுவாகின்றன என்று சொல்லப்படுகிறது.

ANTS.

எரும்புகள்.—சில செடிகளில் எரும்புகள் கூடு கட்டியிருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த எரும்புகளெல்லாம் இதர ஆகாரங்களோடு செடியின் இலைகளின் நுனியில் உள்ள சில ஆகாரப்பொருள்களையும் சாப்பிட்டு பிழைக்கின்றன. இப்படிக்கு குடியிருக்க இடங்கொடுத்து சாப்பாடு போடும் செடிகளை வேறு பூச்சிகள் அழிப்பதற்கு வந்தால், அவைகளோடு எரும்புகள் சண்டை போடுகின்றனவாம்.

V. KALYANARAMA IYER & CO.,

Booksellers, Esplanade, Madras.

சுவல்பக் காலத்திற்கு

பிழைக்கும் வழி சந்தாதாரர்களுக்குக் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

ஸ்ரீமத்

வால்மீகி ராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,
தகுந்த தமிழ் வித்வான்களால் பார்வையிடப்பட்டு, பிழையறப்
பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

தயாராயிருக்கும் காண்டங்கள்.

பாலகாண்டம்	ரூபா 1 12	ஆரணியகாண்டம் ...	ரூபா 1 12
அயோத்தியாகாண்டம் ...	,, 3 0	கிஷ்கிந்தாகாண்டம் ...	,, 1 6

பிழைக்கும் வழி சந்தாதாரர்களுக்கு, நாலு காண்டமும் சேர்த்து வாங்கினால் ... ,, 6 8

சுந்தரகாண்டம் தயாரானவுடன் 1-12, உள்ளதை 1-4 க்குக் கொடுக்கப்படும்.

அடியில் குறிப்பிட்ட எங்கள் விலாசத்திற்கு அட்ரஸ், போஸ்டு ஆபீஸ், ரயில்வே ஸ்டேஷன் சமீபமானால் இவைகளைத் தெளிவாய் எழுதியனுப்பவும்.

வேறு புஸ்தகங்கள்.

ஸ்திரி புருஷ சாமுத்ரிகா லக்ஷணம்	1 0
குறள் (மூலம்)	0 4
பஞ்சதந்திரம்	0 4

மனுதர்ம சாஸ்திரம் 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பும்—560 பக்கம் 2 4

வியவசாய போதினி.—நிலம், எரு, விதை, பயிரிடும் வகை முதலிய சகல விவசாய விஷயங்களையும் பற்றியது. மிராசுதாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்றி யமையாதது. தஞ்சாவூர் ஜில்லா, நீடாமங்கலம் அ. சேதுராமய்யர் இயற்றியது. 400 பக்கம், 80 படங்கள். ரூ. 1 4 0

மானிட மர்ம சாஸ்திரம்.—அல்லது "சிசு உற்பத்தி சிந்தாமணி." இது யாவரும் படித்து அறியவேண்டிய அடியிற்கண்ட அரிய பெரிய விஷயங்களடங்கியது. 500 பக்கம், 190 சித்திர படங்களடங்கியது ரூ. 5 0 0

அடங்கிய விஷயங்கள்.—மானிட ஜீவியத்தில் பலபருவங்கள்—இல்லற இன்ப ரகசியம்—ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும்—மாதாவின் மாக்ஷிமை—சிசு உற்பத்தி—கர்ப்பகால சுகாதாரவிதிகள்—கர்ப்பகால நோய்களும் பரிகாரங்களும்—மருத்துவ சாஸ்திரம்—சிசுபரிபாலனம்—மலட்டிற்கு நிவாரணம்—ஆண்மையினழிவும் அதன் மீட்சியும்—சமயோசித சஞ்சீவி.

☞ ஆர்டர் அனுப்பும்போது இப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடுக.

வி. கல்யாணராமய்யர் அண்டு கோ.,
புக்ஸெல்லர்ஸ், எஸ்பௌனேட், மதராஸ்

P. S. Sastri **Artist and Photographer,**

Carnatic Studio, Mount Road, Madras.

SPECIALITIES.
- SCHOOL GROUPS.
- FAMILY GROUPS.
- BROMIDE ENLARGEMENTS.

பொட்டகிராப் படங்கள்.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையும் குடும்பங்களையும் பொட்டகிராப் படம் பிடிப்பதிலும் சிறியபடங்களை பெரிதாக்கிக்கொடுப்பதிலும் நிபுணர்.

பி. எஸ். சாஸ்திரி,
பொட்டகிராப் பிடிப்பவர், கர்நாடிக் ஸ்டூடியோ,
மவுண்ட் ரோட், மதராஸ்

காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்.

இந்தியா, பர்மா, சிலோன், முழுமையும் பெயர்பெற்று யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனி,
கெடியார வர்த்தகர்கள், இந்திய ரெயில்வேக்களுக்கும், கவரன்மெண்டு
உத்தியோகஸ்தர்களுக்கும் கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள்.
நெம்பர் 47, P. L. சென்னை.



சாவியுள்ளது. ஸ்காந்தமல்லாத (Non-magnetic) சர்தார் (Sardar) லீவர் ரூபா 12, வெள்ளி ரூபா 18, Oxydised ரூபா 14.

வெள்ளி மேல்பார்வையில் மணிபார்க்கும்படி கடியாரம் மேல்சாவியுள்ளது. ஸ்காந்தமல்லாத (Non-magnetic) பஹதூர் (Bahadur) லீவர் ரூபா 14, வெள்ளி ரூபா 20.

நெ. 2. நிக்கல் மேல்பார்வையுள்ளதும் மேல்சாவியுள்ளதுமான ரெயில்வே ரெகுலேடர் கடியாரம். டயல்மேல் இஞ்சின் மார்க்கு, நடு அளவுள்ளது ரூபா 4-8-0.

நெ. 102. ஷி மாதிரி லீவர் ராஸ்கோப் சிஸ்டம் பேடண்டு கெடியாரம் ரூபா 3-0-0.

LEGAL NOTES.
சட்டக் குறிப்புகள்.

INDEMNITY FOR BAIL.

ஜாமீன் கொடுத்ததற்காக ஜாமீன் வாங்கிக்கொள்ளுதல்.—இங்கிலாந்தில் ஒருவன் ஒரு குற்றவாளி கோர்ட்டில் ஆஜராவதற்காக ஜாமீனாக நின்றான். ஜாமீன் கொடுத்தவன் எவ்வளவுக்கு ஜாமீன் கொடுத்தானோ அவ்வளவுக்குக் குற்றவாளியினிடத்திலிருந்து ஜாமீன் பத்திரம் வாங்கிக்கொண்டுவிட்டான். குற்றவாளியினிடத்தில் வாங்கிக்கொண்ட பத்திரம் செல்லுமா செல்லாதா என்பது வியாச்சியம். ஜாமீன் கொடுப்பதன் கருத்து என்னவென்றால், குறித்த தேதியில் குற்றவாளி கோர்ட்டில் ஆஜராவதற்கு ஜாமீன் நபர் உத்தரவாதமாக வேண்டும் என்பதே. எப்பொழுது ஜாமீன் நபர் குற்றவாளியிடமிருந்து ஈடு பெற்றுக்கொள்ளுகிறானோ, அப்பொழுது குற்றவாளி கோர்ட்டில் ஆஜரானாலும் சரி, ஆகாவிட்டாலும் சரி, ஜாமீன் நபருக்கு யாதொரு நஷ்டமும் உண்டாவதில்லை. ஆகையினாலே ஜாமீன் கொடுத்தவனுடைய செய்கையானது பொதுஜன நன்மைக்கு மிகவும் விரோதமாயிருக்கிறது. ஆகையால் அவன் குற்றவாளியினிடத்தில் வாங்கிக் கொண்ட ஜாமீன் பத்திரப்படி அவன் பேரில் தொடர முடியாது; அந்த ஜாமீன் பத்திரம் செல்லாமல் போனாலும் அப்படி பத்திரம் வாங்கினது குற்றமென்று சொல்ல முடியாது.

AN AGREEMENT WITH A MINOR.

சிறுவனோடு செய்த உடன்படிக்கை.—ஏ என்கிற ஒருவன் மைனராகிய, பி என்பவனுக்குத் தன் நிலங்களை விற்றுப்போடுவதாய் ஒப்புக்கொண்டு, நிலங்களை விற்றுப்போட்டான். நிலங்கள் தக்ஷணமே சுவாதீனம் செய்யப்பட்டன. சில தினங்களுக்குப்பிறகு, ஏ என்பவன் தன் நிலங்களைச் சுவாதீனம் செய்துகொள்ள டிஸ்டிரிக்ட் முன்சீப் முன் வியாஜ்யம் கொண்டுவந்தான். முன்சீப் அவர்கள் மைனராயிருந்த, பி என்பவனுக்கு விற்றது விற்பனையாகாது என்று வாதி பக்கம் தீர்ப்புச்செய்து, நிலங்களுக்குச் சொந்தக்காரன், ஏ என்பவன்தானென்று தீர்ப்புச்செய்தார். பிறகு அப்பீல் செய்ய, டிஸ்டிரிக்ட் ஜட்ஜியும் ஐகோர்ட் ஜட்ஜிகளும் மைனருக்கு விற்ற சொத்து விற்பனைக்குத்தகாது என்று தீர்மானம் செய்து விட்டார்கள்.

MEDICAL NOTES.
வைத்தியக் குறிப்புகள்.

GARLIC.

வெள்ளைப்பூண்டு.—வெள்ளைப்பூண்டு மார்பிலுண்டாகும் வலி முதலான வியாதிகளுக்கு கைகண்ட ஔஷதம் என்று வெகுகாலமாய் பிரான்ஸ் தேசத்தில் கொண்டாடப்படுகிறதாம். வெள்ளைப்பூண்டு குரலையும், புத்தியையும், தேஜஸ்ஸையும் விருத்தி செய்யும். ஒடிந்த எலும்புகளை ஒட்டும்படி செய்விக்கும் குணமுள்ளதாம். மேலும் தேகத்திலுண்டாகும் சகல வியாதிகளையும் குணப்படுத்தும் என்று ஆதி கிரந்தங்களில் சொல்லப்பட்டிருப்பதை அனுசரித்தே அனேகம் வீடுகளில் கைமருந்தாக இந்தியாவில் உபயோகிக்கப்படுகிறது. இதை ஐரோபியர்களும் அமெரிக்கர்களும் கொண்டாடுகிறார்கள். வெள்ளைப்பூண்டில் ஒருவித தைல சத்து இருக்கிறது. வெள்ளைப்பூண்டுக்கு க்ஷயரோகத்தை நிவர்த்தி செய்யும் குணம் இருக்கிறதாவென்று இட்டலி தேசத்து வைத்தியர் ஒருவர் சோதித்து வருகிறார் என்று சொல்லப்படுகிறது.

ASAFETIDA.

பெருங்காயம்.—இதை நம்முடைய வைத்தியர்கள் நல்ல மருந்தென்று சொல்லுகிறார்கள். இதற்கு ஜீரண சக்தி யுண்டு. வாயுவைக்கண்டிக்கும். நரம்புகளை இழுக்கும் உபாதிகளுக்கு நல்ல மருந்து. தினந்தோறும் பெருங்காயத்தைச் சேர்த்துக்கொண்டு வந்தால் முறைஜுரம் வாராதாம். வயிற்றில் பூச்சியையும் அடிக்கும்.

COLD.

ஜலதோஷம்.—ஜலதோஷமென்பது ஒருவித சுரமென்றும், அது தொத்து வியாதி என்றும், ஸெய்மோர் டேய்லர் என்ற ஒரு வைத்தியர் சொல்லுகிறார். ஜலதோஷம் பிடித்தவர்கள் வெளியே எங்கும் போகாமல் வீட்டில் படுத்துக்கொண்டாவது, அல்லது நல்ல காற்றுள்ளவும் இறுக்கமானவுமான அறைகளிலேயே இருக்கவேண்டும். கஞ்சி போன்ற திரவ பதார்த்தங்களையே ஆகாரமாகச் சாப்பிட்டு வரவேண்டும். நிறைய கிச்சிலிப்பழங்களையும் இன்னும் இதர ரஸமுள்ள பழங்களையும் சாப்பிட்டு, வால் கோதுமைக் கஞ்சி, டீ முதலியவைகளை அடிக்கடி குடிக்கவேண்டுமாம். இப்படிக்குச் செய்து வந்தால் ஜலதோஷம் வெகு சீக்கிரத்தில் போய்விடுமாம்.

THE LADIES' COLUMN.

பெண்கள் பத்தி.

ULCERATION OF THE NAVEL.

நாபிப் புண்.—குழந்தைகளுக்கு நாபிக்கொடி விழுந்த பிறகு நாபியில் புண்ணாயிருந்தால் கொஞ்சம் படிக்காரத்தைச் சுட்டுப் பொடி பண்ணி புண்ணின் மேல் தூவவேண்டும். இப்படிச் செய்தால் புண் சீக்கிரத்தில் ஆறிவிடும். இப்படிப்பட்ட புண்ணுக்கு கத்தைக்காம்பு அல்லது காசுக்கட்டியை பொடி பண்ணியும் உபயோகிக்கலாம்.

KEROSINE OIL.

கெரோஸின் எண்ணெய்.—தப்பித்தவறி சில குழந்தைகள் அஜாக்கிரதையான வீடுகளில் சீசாக்களில் வைக்கப்பட்டிருக்கிற கெரோஸின் எண்ணெயை ஜலம்போலக் குடித்து அதனால் அவதிப்படும். புளித்த தயிரை அந்த குழந்தைகளுக்குக் கொடுத்தல், ஒரு மாற்று மருந்தாகும் என்பது ஒரு வைத்திய நிபுணரின் அபிப்பிராயம். இதைக் குடும்பத்து ஸ்திரீகள் கவனித்து ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேணும்.

FILTERING WATER BY SAND.

மணலினால் நீரை வடிகட்டுதல்.—ரெயில்வே ஸ்டேஷன்களில் ஜலத்தைச் சுத்தி செய்வதற்காக வைத்திருக்கிற முக்காலியையும் அதன் மேலுள்ள மூன்று பானைகளையும் எல்லாரும் பார்த்திருக்கக் கூடும். மேலேயிருக்கும் முதற்பானையில் கலங்கின ஜலம் இருக்கும். இரண்டாம் பானையில் மணலும் கரியும் போடப்பட்டிருக்கும். கலங்கின ஜலத்திலுள்ள மிதக்குமழுக்குகள் இரண்டாம் பானையிலுள்ள மணல், கரிகளின் வழியாய் இறங்கும்போது மணலில் ஒட்டிக்கொண்டு விடும். இரண்டாம் பானையின் அடியிலுள்ள துவாரங்களின் வழியாய்த் தெளிவான ஜலம் கீழேயிருக்கும் மூன்றாம் பானையில் இறங்கும். மணலின் இடையிலுள்ள துவாரங்கள் அழுக்குகளைவிடச் சிறியவையானதனால் அந்தத் துவாரங்களின் வழியாய் அழுக்குகள் இறங்க முடிகிறதில்லை. ஜலத்திலிருந்து முக்கியமாய் நீக்க வேண்டியவை பூச்சிகள், பூச்சிமுட்டைகள், வியாதிக்கிருமிகள் ஆகிய இவைகளே. நீரைத் தளதள என்று கொதிக்கவைத்தால் இவைகள் செத்துப் போய்விடுகின்றன. ஆதலால் நீரைக் காய்ச்சி மேற் சொன்ன விதம் மணலின் மூலமாய் வடிகட்ட வேண்டும்.

THE BOYS' COLUMN.

பையன்கள் பத்தி.

THE BIGGEST COWS.

பசுக்களில் பெரியவை.—இந்திய மகாராஜா ஒருவர் லண்டனிலுள்ள தம் ஏஜெண்டுக்கு ஒரு வருஷத்திற்கு முன் ஒரு ஆர்டர் அனுப்பினார். அதாவது, உயரத்தில் 5 அடி 4 அங்குலமுள்ளவும், நீளத்தில் 14 அடியுள்ளவுமான பசுக்களிருந்தால் அனுப்பும்படி எழுதியிருந்தார். இப்படிப்பட்ட பசுக்கள் அகப்படுவது அருமையாதலால் சுமார் 14 மாதகாலமாக அலைந்து திரிந்து, லண்டன் ஏஜெண்டு மேற்சொன்ன அளவுள்ள பசுக்களில் நான்கைப் பொறுக்கியெடுத்து, சென்ற நவம்பர் மாசம் 16-ம்தேதி லிவர்பூல் துறைமுகத்திலிருந்து கல்கத்தாவுக்குக் கப்பலேற்றினார். இப்படிப்பட்ட பசுக்களுக்காக தேசதேசமாய்த் தேடியும் அகப்படாமல் கடைசியில் இங்கிலாண்டிலுள்ள மிட்லண்ட்ஸ், யார்க்ஷைர் இவ்விடத்தில் அவைகளைக்கண்டு தெரிந்து அந்த ஏஜண்டு அனுப்பியிருக்கிறார். அவைகளுடைய கொம்புகள் எல்லாம் குட்டையாம். அந்த நூதன பசுக்களை வரவழைத்த மகாராஜா எவரோ தெரியவில்லை.

HORN AND ITS USES.

கொம்பின் உபயோகம்.—மாட்டின் கொம்பு அநேக விஷயங்களுக்கு உபயோகமாகிறது. முக்கியமாய் கத்திப்பிடி, சீப்பு, பொத்தான், இவைகள் செய்வதற்கு அதிகமாய் உபயோகப்படுகிறது. முதலில் கொம்பின் மேல்புறத்தை செம்மையாய்ச் சீவி விட வேண்டும். பிறகு அதன் நுனியைமட்டும் நறுக்கி எடுத்துவிட வேண்டும். இந்த நுனி கத்திப் பிடிக்கு உபயோகமாகும். இது தவிர, மற்ற பாகத்தை நீளத்தில், எந்த வேலை செய்யவேண்டுமோ அதற்குத்தக்கபடி துண்டு துண்டாய் வாளால் அறுத்தும் அறுத்த ஒவ்வொரு துண்டையும் ஒரு பிளவு பிளந்தும் வைத்துக் கொள்ளவேண்டும். இந்தத் துண்டுகளை வெந்நீரில் அரைமணி நேரம் நன்றாய் ஊறவைத்து பிறகு எடுத்து தணலின்பேரில் உள்ளும் புறமும் காய்ச்ச வேண்டும். இந்த மாதிரி காய்ச்சினால் கொம்பு துவண்டு பக்குவத்திற்கு வரும். இந்தப்பக்குவத்தில் பிளவுபட்ட இரண்டுபக்கங்களையும் ஆயுதங்களால் விரித்து அழுத்தினால் கொம்பு அகலப்பட்டு உபயோகத்திற்கு வரும்.

WANTED.

தேவை.

“பிழைக்கும் வழி” 1909-ம் வருஷம் ஜனவரி, பிப்ரவரி, ஏப்ரல், மே, சூலை, ஆகஸ்டு மாதத்து ஸஞ்சிகைகள் தேவை. ஸஞ்சிகைகளை விற்க இஷ்டமுள்ளவர்கள் விலையைச் சொல்லி எங்களுக்கு எழுதவேணும்.—

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளநேட்,
மதராஸ்.

‘நாலு பலத்த காரணம்,’

ஏன், எங்கள் “வெண் பட்டாடை” களை வாங்க வேண்டும்?

ஏனென்றால்? சாதாரண நித்திய தினங்களிலும், சுபதினங்களிலும், வாலிபர்களும், வயோதியர்களும், நாகரீகமாக அணிந்து கொள்ளத் தகுதியுள்ளது.

ஏனென்றால்? மிருதுவும், அழகும் வாய்ந்தது. இரைந்தும், சுருங்கியும் போகமாட்டாது. சலவை செய்தும் அணிந்துகொள்ளகூடிய பலமுள்ளது

ஏனென்றால்? ஏழைகளும், பணக்காரர்களும் வாங்கி அணிந்துகொள்ளத் தகுதியானது. மேல் நாட்டு (மல்) நூல் வஸ்திரங்களை தோர்க்கச் செய்யும்படியான நேர்த்தியும், சகாயமுமுள்ளது.

ஏனென்றால்? மதுரை, சேலம், துயிலி, கோயம்புத்தூர் முதலிய விடங்களில் தயாரிக்கப்பட்ட நூல் வஸ்திரங்களில் போட்டுவருகிற கரைகள் மாதிரி நாணயமும் அழகுமுள்ள கரைகளோடு கூடியது.

(1) 4 முழம் நீளம் 27 இஞ்சு அகலம் விலை ரூ. 4-0-0
(2) 5 ,, ,, 44 ,, ,, ,, ரூ. 7-0-0
(3) 6 ,, ,, 48 ,, ,, ,, ரூ. 8-0-0
(4) 7 ,, ,, 48 ,, ,, ,, ரூ. 9-0-0
(5) 8 ,, ,, 48 ,, ,, ,, ரூ. 11-0-0

ஜெனரல் கேட்லாக் (தமிழில்) சித்தமாகயிருக்கிறது. விலை இன்றி அனுப்புவோம்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
பட்டு பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீ காசி.
Benares City.

DR. WAMAN GOPALS' IODIZED SARSAPARILLA.

டாக்டர் வாமன் கோபாலின் அய சம்பந்தமான ஸரஸபரில்லாவுக்கு பொன் பதக்கங்களும் வெள்ளிப் பதக்கங்களும் பரிசு கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ரத்த சுத்தி செய்வதில் இம்மருந்து முதல்தரமானதென்று பேரெடுத்திருப்பது. இந்த ஔஷதம் 50 வருஷங்களுக்கு அதிகமாகவே சோதனையிலிருந்து நாள்பட்ட முடக்குவாதம், சரீர சம்பந்தமான வியாதி, பாரிசவாயு, அசுத்த ரத்தத்தினால் உண்டாகும் வியாதிகள், முதலியவற்றைப் போக்கி தாதுக்கு வலிமையைக் கொடுக்கக்கூடியது. மேக ரோகத்தையுங் கண்டிக்கும்.

ஒரு புட்டி விலை ரூபா 1-4-0. பாக்கிங்கும் தபாற் கூலியும் வேறு) 5 அணா.

கௌதம ராவ் கேசவ், தாகுர்த்தவார், பம்பாய்.

Dr. Gowtamrao Keshao, Bombay. No. 2.

குறிப்பு :—ஆர்டர் செய்வோரெல்லோரும் இங்கிலீஷிலேயே எழுதவும்.

MADHAV BOOK-DEPOT,
Gangaram Khatri's Vadi, BOMBAY. No. 2.

Supply English or Sanskrit Books on Medicine, Law History, General Literature, Novels of Standard Authors Presentation Books, etc. Catalogue sent free.

HENKE'S TILE WORKS,
10, Esplanade, MADRAS, E.

எங்களால் நல்ல மங்களூர் ஓடுகளும், தள வரிசைக்கல்களும், வயல்களுக்கு தண்ணீர் மடைக்குழாய்களும் செய்யப்படுகின்றன. இவைகளெல்லாம் ஸர்க்கார் இஞ்சினீர் உத்தியோகஸ்தர்களாலும், ஜில்லா போர்ட்டுகள், முனிஸிபாலிடிகள், ஜமீன்தார்கள், ரெயில்வேகம்பெனிகள் முதலியவர்களாலும் ஏராளமாய் வாங்கப்பட்டு வருகின்றன. வீடு கட்டுகிறவர்களுக்கும் மிராசுதார்களுக்கும் வெகு உபயோகமானவைகள். வேண்டிய மற்ற விவரங்களுக்கு, அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளவும்.

ஹெங்கிஸ் ஓட்டு கம்பெனி,
நெ. 10, எஸ்பிளநேட்,
மதராஸ்.

INDIAN NEWS.
இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

AGRICULTURAL METHODS.

விவஸாய முறைகள்.—வடக்கே குஜராத் ஜில்லாவில் கோணாமல் ஒரே லயனாக விதைப்பதும் உழுவதும் வழக்கம். இந்த முறைகளைக் கற்றுவரும்படி பஞ்சாப் மாகாணத்து லையால்பூர் விவஸாயப்பண்ணையிலிருந்து இரண்டுபேர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்களாம்.

AGRICULTURAL SHOW.

விவசாயக் காட்சி—பிப்ரவரி மாசம் 19, 20, 21-ம் தேதிகளில் கிருஷ்ணா ஜில்லாவைச் சேர்ந்த எல்லூரில் ஒரு விவசாயக் காக்ஷி நடக்குமாம். அதில் விவசாயக் கருவிகள் பழங்கள், விதைகள், கால்நடைகள் முதலியவைகள் வைக்கப்படுமாம்.

UNFAVOURABLE SEASON FOR BANKERS.

பாங்கிகளுக்கு பிரதிகூலமான காலம்.—1909-ம் வருஷத்தின் இரண்டாவது ஆறுமாஸத்தில், பாங்கிகளுக்கு கையிருப்பில் பணம் அதிகமாய்த்தங்கி சரியாய் எடுபடவில்லை. ஆகையினாலே லாபம் முதலாவது ஆறு மாஸத்தில் கிடைத்ததைவிட, இரண்டாவது ஆறு மாஸத்தில் அதிகக்குறைவாய்க் கிடைத்தது.

SOVEREIGN.

பவுன்.—தற்காலத்தில் ஏற்றுமதி வியாபாரம் அதிக மும்முரமாய் நடந்து வருவதால் இந்தியாவுக்கு பவுன் அதிகமாய் வந்துகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. 1908-ம் வருஷத்தில் இருந்த வியாபாரக்குறைவின்போது இந்தியாவிலிருந்து போன பவுனெல்லாம் பழையபடி சீக்கிரம் இந்தியாவுக்கே வந்து சேர்ந்து விடுமாம்.

CO-OPERATIVE CONFERENCE.

கூட்டுறவுச் சங்கம்.—நாளது ஜனவரி மாஸம் 22௳ காஞ்சிபுரத்தில் செங்கல்பட்டு ஜில்லா ஐக்கிய நாணயச்சங்கத்தார்களின் இரண்டாவது வருஷாந்தரக் கூட்டம் கூடிற்று. அதற்கு சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டு வக்கீலாகிய பி. ஆர். சுந்தரய்யர் அக்கிராசனாதிபதியாயிருந்து ஐக்கிய நாணயச்சங்கங்களின் பிரயோஜனத்தைப் பற்றி பேசினார். அதே விஷயமாக ஸர். வி. ஸி. தேசிகாசாரியாரவர்களும், ராவ் பகதூர் எம். ஆதிநாராயணய்யா அவர்களும், திவான் பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை அவர்களும் பிரஸங்கம் செய்தார்கள்.

FOREIGN NEWS.
அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

COTTON SEED OIL.

பருத்திக்கொட்டை நெய்.—ஐரோப்பாவில் நார்வே தேசத்திலிருந்து ஸார்டின் என்னும் ஒருவித மீன் பாடம் செய்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. இப்படி ஏற்றுமதி செய்வதற்காகத் தயார்செய்வதில் "ஒலிவ்" எண்ணெய் விசேஷமாய் உபயோகப்படுகிறது. இந்த எண்ணெய்க்குப் பதிலாக, பருத்திக்கொட்டை நெய்யை உபயோகித்துப் பார்க்கலாமென்று அந்த தேசத்திலுள்ள ஆறுமுக்கிய வர்த்தகர்கள் பரீக்ஷை செய்துவருகிறார்களாம். இப்படிச் செய்வதினால் பாதகம் ஒன்றுமில்லை என்று ஏற்படும் பக்ஷத்தில் இந்தியாவிலிருந்து பருத்திக்கொட்டைநெய் ஏற்றுமதி செய்ய ஒரு நல்ல தாவு ஏற்படும்.

NATIONAL INDUSTRIAL EDUCATION LEAGUE.

தேசிய கைத்தொழில் படிப்பு சங்கம்.—இந்தியா எப்படி விவசாயத்தில் பெருத்த தேசமோ அதைப்போல இங்கிலாந்து கைத்தொழிலில் பெருத்த தேசம். அங்கே ஜனங்கள் பிழைப்பது முக்கியமாய் தொழில் வேலைகள் செய்தே. அப்படி ஒவ்வொரு தொழில் செய்கிறவர்கள் சங்கங்களாகச் சேர்ந்து, அவரவர்கள் தொழில்களுக்குக் குறைவு வராமல் காரியங்களையும் செய்து வருகிறார்கள். கைத்தொழில்களில் பெருத்த தேசமானதால் தொழில் சரிவரச் செய்யத்தெரியாத ஜனங்கள் பிழைப்பது அசாத்தியமாகும். ஆகையால் சிறு வயதிலேயே ஏதாவது ஒரு தொழிலைச் செய்யும்படியான சாமர்த்தியம் உண்டாக்கக் கூடிய படிப்பு ஒவ்வொரு பையனுக்கும் சொல்லிக் கொடுக்கப்பட வேணுமென்பதாக யோசித்து மேலேசொல்லிய சங்கங்களும் சில பிரமுகர்களும் முயற்சிசெய்து வருகிறார்கள்.

AGRICULTURE IN JAPAN.

ஜப்பானில் விவசாயம்.—ஜப்பான் ராஜ்யத்தில் 2பெரிய விவசாய காலேஜுகளும், 36 சின்ன காலேஜுகளும், 200 பரீக்ஷார்த்தப்பண்ணைகளும், 300 முசாபரிபோதகரும் ஜனங்களுக்காக வேலை செய்து வருகிறார்கள்.

SEASON.
கால ஸ்திதி.

RAINFALL.

மழை.—ஏப்பிரல்௴ 1-தேதியிலிருந்து ஜனவரி௴ 31-ம்தேதி முடியப் பெய்த மழை அளவும், இந்த காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், கீழே அங்குலத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் அநேக இடங்களில் மழை சரிவரப் பெய்யவில்லை என்று ஏற்படுகிறது.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	29	46
வால்டேர்	35	43
காக்கினாடா	34	39
மசூலிப்பட்டணம்	37	41
நெல்லூர்	28	31
மதராஸ்	42	50
கூடலூர்	34	52
நாகப்பட்டணம்	23	54
பாம்பன்	30	38
கொளும்பு	62	83
ட்ரின்காமலி	42	59
திருவநந்தபுரம்	68	59
கொச்சி	95	113
கள்ளிக்கோட்டை	126	114
மங்களூர்	145	124
பெல்காம்	..	..
ஐதராபாத்	..	..
ரெய்ச்சூர்	25	30
பல்லாரி	18	20
கர்நூல்	18	25
கடப்பை	42	33
ஹாஸ்ஸான்	41	35
பெங்களூர்	39	34
கொடைக்கானல்	55	56
உதகமண்டலம்	59	..
கோயம்புத்தூர்	21	20
வேலூர்	59	..
சேலம்	50	39
திருச்சினாப்பள்ளி	32	31
புதுக்கோட்டை	37	..
மதுரை	49	32
திருநெல்வேலி	27	20

CROPS AND MARKET REPORT.
பயிர்களும் மார்கெட் நிலவரமும்.

MADRAS GINGELLY CROP.

மதராஸ் எள்ளுப் பயிர்.—போன டிசம்பர் ௴ கடைசி வரையில் ரயத்துவாரி கிராமங்களில் 497,400 ஏகராவில் எள்ளுசாகுபடியாயிருக்கிறதாம். இது 1908-ம் வருஷத்தை விட 100-க்கு 13 பங்கு அதிகம். தகுந்த காலத்தில் நல்ல மழைபெய்ததால் வட ஆற்காடு, செங்கல்பட்டு, தென் ஆற்காடு, கிருஷ்ணா, பல்லாரிமுதலிய ஜில்லாக்களில் அதிகமாய் எள்ளுப்பயிர் செய்தார்கள். அறுவடையாயிருக்கும் ஜில்லாக்களில் விளைச்சல் சாதாரணமாய் இருந்ததென்றும், பாக்கி ஜில்லாக்களில் பயிர் சுமாராய் இருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. ரயத்துவாரி அல்லாத கிராமங்களில் 3,800 ஏகரர்வில் எள்ளுப் பயிர் செய்யப்பட்டிருக்கிறதென்றும், இது 1908-ம் வருஷத்திய விஸ்தீரணத்தைவிட 100-க்கு 8 பங்கு குறைவு என்றும் தெரியவருகிறது.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—ஜனவரி௴ 19௳ சென்னப்பட்டணத்தில் விசாரித்ததில் சீமைத்துணிகளில் சங்கராந்தி வியாபாரம் ரொம்ப உபாயமாயிருந்ததாகத்தெரியவருகிறது. அமெரிக்காவில் பருத்தி விலை குறைந்ததால் இங்கிலாந்திலும் பருத்தி விலை இறங்கிற்றாம். ஆனாலும் சீமையில் துணிகளின் விலை தக்கபடி இறங்கவில்லையாம். ஜனவரி மாஸம் முதல் தேதியிலிருந்து 22-ம் தேதி வரையில் அந்நிய தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி சாமான்களின் விவரம்.—நூலும் முறுக்கு நூலும் 448,280 ராத்தல், காரிகத்துணிகள், 2,229,297 கஜம், சலவைத்துணிகள் 1,357,485 கஜம், இதர தினுசுத்துணிகள் 4,079,356 கஜம். இதே காலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 20,200 அந்தர் துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். ஜனவரிமாஸம் 25-ம் தேதியன்று பம்பாயில் காரிக நூல் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-3 முதல் 0-8-0 வரையில் இருந்ததாகத் தெரியவருகிறது.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி—சென்ற டிசம்பர்௴ 26௳ முதல் ஜனவரி௴ 22௳ வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 49 அந்தரும், ஆஸ்டிரியா ஹங்கேரியிலிருந்து 1,000 அந்தரும், ஜாவாவிலிருந்து 9,320 அந்தரும், இறக்குமதியாயின.

"POOR INDIA":

Being a description and an exposition on the Indian Poverty question discussed and explained in the works of Sir W. Digby, Dadabhoy Nowroji, D. E. Wacha, R. C. Dutt, giving a reply to Dewan Bahadur Srinivasa Raghava Iyengar's forty years of Economic Progress Madas Presidency. By a High Court Vakil. Re. 1-0-0. Post free V. P. P. Rs. 1-1-0.

Report Second-hand Books for sale. Apply to:—

I. V. RAGHAVA ROW, Book-seller and Book-buyer,
Sarasvathe Jaya Nevas, Mylapore, Madras.

Dr. H. L Batliwalla, Dadar, Bombay.

குளிர் ஜுரத்திற்கு மாத்திரைகள் ..	1-0-0
விஷபேதிக்கு	1-0-0
நரை மயிருக்கு	3-0-0
பலஹீனத்திற்கு மாத்திரைகள் .	1-8-0
பல் பொடி	0-4-0
சலையை ஒரே நாளில் சொஸ்தப்படுத்த புட்டி	0-4-0

எங்கும் விற்கப்படுகிறது.

"மடி தாவளி."

இது கலப்பற்ற வெண்மை நிறமுள்ள கம்பளி ரோமத்தால் நிசவு செய்தது. பிராமணோத்தமர்கள் ஸ்நானம் செய்தவுடனும், வைதிகசடங்குகள் செய்யும் போதும் அணிந்துகொள்ள தகுதியுள்ளது.

(1)	24 இஞ்சு அகலம்	5 முழநீளம்	1 விலை	ரூ. 0-13-0
(2)	24	,, 6	,,	ரூ. 1—0-0
(3)	29	,, 7	,,	ரூ. 1—6-0
(4)	29	,, 8	,,	ரூ. 1-10-0
(5)	29	,, 9	,,	ரூ. 1-12-0
(6)	37	,, 10	,,	ரூ. 2—8-0
(7)	40	,, 12	,,	ரூ. 3—0-0
(8)	40	,, 15	,,	ரூ. 4—8-0

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி, ஸ்ரீ காசி.
Benares City.

தண்டசோத்து தடிராமன் கதை.

இந்த தண்டசோத்து தடிராமன் என்ற நாமதேயம் பார்ப்பவர்கட்கு பரிகாசமாயிருந்தாலும் படிக்கப்படிக்க கலீர் கலீரென விடா நகைப்பைக்காட்டி படிப்போர்க்கும் கேட்போர்க்கும் அபரிமித ஆச்சரியத்தை உண்டாக்குவதன்றியும், இக்கதையில் சாப்பாட்டுராமன் கதை, தண்டசோற்று ராமன் கதை, அடிமுட்டாள் குமாரனாகிய நுனிமுட்டாள் கதையும், சிற்சில விடத்தில் பலவித பாட்டுகளோடு நூதன ஜாவளிகளும் சேர்த்து ஜாதீக படங்களும் அமைத்து அச்சிட்டு தயாராயிருக்கிறது. இதன் விலை 4-அணா. 1-புஸ்தகம் வாங்குவோருக்கு வி. பி. சார்ஜ் 2-அணா; 2-புஸ்தகம் ஒரே தடவையில் வாங்குவோருக்கு வி. பி. சார்ஜ் இனாமாக அனுப்புவதுடன் 1909-வருஷத்திய காலண்டர் இனாம்.

மானேஜர், கே. எ சாமி அன்கோ.,
மின்ட் பில்டிங் போஸ்ட், மதராஸ்.

பார்வைத்தோட்டம்

நல்ல செடிகள் வேண்டுமா!
புது விதைகள் வேண்டுமா!!

சேலம் ஒட்டுமாங்கன்றுகள், அநேகஜாதி பழவகை ஒட்டு செடிகள், புஷ்பம், காய்கறி விதைகளின் 1909-ம் வருஷத்திய புதியக் கேட்லாக் அரையணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ச கோ. இ. அப்துல் ரகிமான் சாயபு,
விதைகள், மாங்கன்று வியாபாரி, சேலம்.

"நீங்களே நினைத்துப் பாருங்கள்."

நம்மவர்களால் (இந்தியர்) நம் தாய்நாட்டில் (இந்தியா) நம் தேசத்திலுள்ள சுத்தமான கம்பளி ரோமத்தால் நிசவு செய்த "போர்வைகள்" அன்னிய நாட்டு கம்பளிப்போர்வைகளைப் பார்க்கிலும் குளிர் தாங்கும் சக்தியும், நாணயமும், நேர்த்தியும், அழகும், சரசமுமுள்ளது. சகல நிறங்களிலுமுண்டு. 6 முழ நீளம் 3 முழ அகலம் 1-க்கு ரூபா 5-0-0.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
பட்டு பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீ காசி.
கேட்லாக் இனாமாக அனுப்புவோம்.] Benares City.

இனாம்! இனாம்!! இனாம்!!!

பிருங்கராஜ தைலம்.

கரிசலாங்கண்ணித்தைலம். இதில் வைத்திய சாஸ்திரப்பிரகாரம் 32 வகை சரக்குகள் சேர்ந்திருக்கிறபடியால் தலைவலி, மண்டைக்குத்தல், ஒருதலைவலி, கண்மக்கல், புகைச்சல், கண் எரிச்சல், காதிரைச்சல், காதிலிருந்து சீழ்வடிதல், வெள்ளெழுத்து, கண் பொங்குதல், மயிர் உதிர்தல், இரவில் நித்திரையின்றி அவஸ்தைப்படுதல், தலை மயிர் வெடித்தல், இன்னும் சகலவிதமான சிரோரோகங்களையும் நிவர்த்திசெய்து மூளைக்கும் நரம்புகளுக்கும் பலத்தை கொடுத்து மனதுக்கு உத்ஸாகத்தை உண்டுபண்ணும். ஒரு புட்டி 6 முறை ஸ்நானத்துக்கு உபயோகிக்கலாம். புட்டி 1-க்கு அணா. 12.

மூன்று புட்டி வாங்குபவருக்கு அடியிற்கண்ட சாமான்கள் இனாம்:—

1. பரிமளஸ்நானப்பொடி டப்பி 1-க்கு அணா. 4.
2. அற்புதப்பற்பொடி டப்பிக்கு 1-க்கு. அணா. 3.

எஸ். எஸ். அய்யர் அண்டு கோ,
325, தம்பு செட்டி தெரு, சென்னை.

The Complete Letter Writer 2nd Edition Revised and Enlarged.

BY HARI CHARAN DAS. Price Re. 1. *(Full Cloth, Gilt.)*

A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.

To be had of—M. L. DAS & CO., *122, Baitakkana Road, Calcutta.*

LODHRA: UTERINE TONIC A BOON TO WOMEN.

ஸ்திரீகளுக்கு ஓர் வரப்பிரஸாதினி.

"லோத்திர."

ஸ்திரீகள் பல காரணங்களால் ரஜோகர்ப்பாசயங்கள்கெட்டு, மாதவிடாய் ஆகும்போதும் அதற்கு முன்னும் பிறகும் பொருக்க முடியாத வயிற்றுவலி, (முட்டுநோய் Painfull menstruation) சூலையில் மிகவும் வருத்தப்படுகிறார்களென்பது, எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. அதுவும் தவிர தங்கள் நோயைச்சொல்ல வெட்கத்தினால் இன்னும் இதர நோய்களை வருவித்துக் கொள்ளுகிறார்கள். "லோத்திரா" மருந்தினால் மேல் சொன்ன முட்டு நோய் சவுக்கியமாகிறதுமல்லாமல் குசுமரோகம், (Leucorhoea) காலத்தில் மாதவிடாய் ஆகாமலிருப்பது, (Irregular menses) மாதவிடையே ஆகாமலிருப்பதும், (Suppression or absence of menses) மூர்ச்சை (Hysteria) கீல்நோய்கள் (Rheumatic pains) தலைநோய், மலபந்தம், (Constipation) வெளுமை (Bloodlessness) இன்னும் அநேக ரோகங்களும் சந்தேகமில்லாமல் சவுக்கியமாகிறது.

இம்மருந்தை உபயோகித்தால், முகத்திற்கு தேஜஸையும், சரீரத்திற்கு பலத்தையும் உண்டாக்கி இப்பிரபஞ்ச சுகங்களை நன்றாய் அனுபவிக்கும்படி செய்கிறது.

அநேக ஸ்திரீகள் சந்தானமில்லாமல் அரசமரப்பிரதக்ஷணம், அனுமான் பிரதக்ஷணம், நாகப்பிரதிஷ்டை, முதலியவைகளைச்செய்து, அநேக புண்ணிய க்ஷேத்திரங்களைச் சேவித்தவர்களாகி, அவைகளின் பலனை அடையமாட்டாமல், கடைசியாக, எங்களுடைய "லோத்திரா" என்னும் அவுஷதத்தை உபயோகித்து, புத்திரன் புத்திரி என்னும் ரத்தினங்களை யடைந்து சுகமாக இருக்கிறார்கள்.

இதன் விலை 12 அவுன்சு கொள்ளும் புட்டி 1-க்கு ரூபா. 3-0-0.
ரூபா. 1-10-0.

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை, பந்தர் வீதி, சென்னை

BRUSH MANUFACTURE.

புருஷ் செய்தல்.

B. V. K. CHETTY & CO.,
No. 22, Broadway, Madras.

"பட்டு வஸ்திரம்."

அழகான பட்டு பீதாம்பர புடவைகள், ரமணியமான ரவிக்கைகள், தலைகுட்டைகள், உருத்திராக்ஷம், கஸ்தூரி, பால்சாயம் முதலிய தினுசுகள் சகாய விலைக்கு விற்று வருகிறோம். பரீக்ஷித்து பாருங்கள். சென்னையில் தம்புசெட்டி தெரு 1-வது நம்பர் வீட்டில் சுதேசிவேர் ஹவுஸ் சொந்தக்காரர் மெஸர்ஸ் கோபாலாசாரியார், பாஷியமய்யங்கார் இவர்கள் ஏஜண்டாக நியமித்திருக்கிறோம். அவ்விடத்திலும் சகல சாமான்களும் கிடைக்கும். கேட்லாக் விலையின்றி அனுப்புவோம்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
பட்டு பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீ காசி.
Benares City.

Opinions of Eductionists on Practical Life

MR. S. RADHAKRISHNA AIYAR, B. A., F.M.U., DIRECTOR OF EDUCATION, PUDUKOTTAI writes:—"Very valuable periodical. It is very likely that several recipes and suggestions that are found in the pages of your *Practical* monthly are tried by many. Will it not be well to invite these to communicate to you the results of their trials and to refer to the results also in your journal."

THE ACTING HEADMASTER OF THE MALAYANDIPATNAM L. M. SCHOOL, POLLACHI TALUK:—"I have strongly recommended to the Manager who is at Coimbatore to be good enough to send for this journal on behalf of the Schoolmasters here."

THE SUB-ASST. INSPECTOR OF SCHOOLS, PATTUKKOTTAI RANGE, writes:—"I have already recommended the supply of your Journal to the Board Schools of Pattukkotta Taluq which are 30 in number.

THE HEADMASTER OF THE SECONDARY SCHOOL, PARAMAKUDI, WRITES.—"It decidedly supplies the great want felt by the mass, in the most useful matters, such as Industrial, Agricultural and Commercial. It deserves the name "*Practical Life*" in every way."

THE HEADMASTER, L. F. SCHOOL, YEDAPALLI, WRITES.—"The whole scheme of the Journal, when its contents are taken into consideration, is admirable. Teachers seeking books for teaching "General Knowledge," an important subject in every Elementary School will find the journal very useful. To my mind the appearance of this journal is one of the most hopeful signs of the nation's future. To-day, I am applying to the authorities for the supply of this journal to all the Board Elementary Schools in the district."

THE HEADMASTER OF THE A. I. TRAINING SCHOOL, NAZARETH, writes:—"I read through the magazine with great interest and found it extremely useful to the public and to the teachers of Elementary Schools in particular. The Journal provides the teachers and the taught with the means of obtaining real knowledge of the world and it is expected to be a good guide to beginners on account of its great educative value. At a time, when there is a loud outcry for Technical Education and improved methods of agriculture, your valuable journal is a God-send. I shall recommend it to the teachers and pupils of Elementary and Secondary Schools in these parts."

THE SUB-ASST. INSPECTOR OF SCHOOLS, COIMBATORE, in recommending the Journal to the Assistant Inspector for supply to the Municipal and Board Schools in the District, writes:—"I hope the perusal of the Journal will increase the capacity of the teachers, to impart practical and useful knowledge to the pupils."

'**Practical Life**' is very useful to Teachers and pupils in the Elementary and Secondary Schools as it covers the curriculum of studies in these Schools.

Students preparing for the School Final and Intermediate Examinations will find the journal extremely useful for their Tamil composition.

A New volume begins with this number. Subscribe early.

OFFICE OF THE ... OF BOOKS, 31 MAR 1910 MADRAS.

Supplement to the "Practical Life"

"பிழைக்கும் வழி" க்கு அனுபந்தம்.



PRINTING MACHINE

OFFI 31 MAR MADRAS

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜீ. ஏ. வைத்தியராமன், பி.ஏ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.
EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. — ஸௌமிய௵ மாசி௴ —FEBRUARY 1910. — ஸஞ்சிகை 2. No. 2.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவசாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாவுரிமை, வித்தியா விஷயங்கள் அடங்கியதாகவிருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள்நாடு.	அந்நிய நாடு.
வருஷம் 1க்கு	4 0 0	6 0 0
6 மாதத்திற்கு	2 0 0	3 0 0
தனிப்பிரதி	0 6 0	0 8 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. பணமும் கடிதங்களும் நேரில் அனுப்பப்பட வேண்டும்.

வியாசம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவசாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாசங்கள் தேவை. அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அவைகளை எழுதினவர்களுக்கு தக்க வெகுமானத்தை கொடுக்கப்படும். ஒவ்வொரு வியாசமும் காகிதத்தின் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டும் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஜீ. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேடு, மதராஸ்.

Practical Life.

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.	*Foreign.* Rs. A. P.
Per annum	4 0 0	6 0 0
„ half year	2 0 0	3 0 0
Single copy	0 6 0	0 8 0

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers **Messrs. G. A. Vaidya Raman & Co., 10, Esplanade, Madras.**

EDITORIAL NOTES.

பத்திராதிபர் குறிப்புகள்.

Old Rupees.

பழைய ரூபாய்கள்.—1835-ம் ௵ செப்டம்பர் ௴ 1உக்கு முன் அச்சடிக்கப்பட்ட ரூபாயாயிருக்கும் பக்ஷத்தில் அது செலாவணி ஆகாது. அந்தத் தேதிக்குப் பிறகு அச்சிடப்பட்ட ரூபாய்களெல்லாம் செல்வாக்கு ரூபாய்கள் தான். ஆனால் அப்படிப்பட்ட ரூபாயெல்லாம் பின்னமில்லாமலும் நிறையில் குறைவு இல்லாமலும் இருக்க வேண்டும். முழு ரூபாயும் அரை ரூபாயுமாயிருந்தால் 100-க்கு இரண்டிற்கு மேலும், கால் ரூபாய் அரைக்கால் ரூபாயாயிருந்தால் 100 க்கு 12½க்கு மேலும் தேய்ந்திருக்கக் கூடாது. பழைய ரூபாயைப்பற்றி பேசும் பொழுது புது ரூபாயைப் பற்றியும் கொஞ்சம் சொல்லவேண்டியதாயிருக்கிறது. தற்காலத்தில் நம்முடைய தேசத்தில் வழங்கிவரும் ரூபாய்களைப் போலவே கள்ள நாணயங்கள் சீனா தேசத்தில் அடிக்கப்பட்டு நம்முடைய தேசத்தில் ஏராளமாய் வந்திருக்கின்றனவாம். அந்தக் கள்ள நாணயங்களுக்கும் நம்முடைய தேசத்தில் வழங்கிவரும் நிஜரூபாய்களுக்கும், விசேஷ வித்தியாஸம் தெரியாதாம். ஆகையால் ரூபாயில் கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்கள் வெகு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

UIRIHAM IE

Cowpea Seed.

செடிக்காராமணி விதை.—ஜனவரி மாஸத்து ஸஞ்சிகையில் பசுந்தாள் உரம் என்னும் வியாஸத்தைப்படித்து அதில்கண்ட செடிக்காராமணி விதை எவ்விடத்தில் அகப்படுமென்று சிலபேர்கள் நமக்கு எழுதியிருக்கிறார்கள். இந்தவிதைதேவையுள்ளவர்கள் சிதம்பரத்துக் கடுத்த கிள்ளையைச் சேர்ந்த திருநாள் தோப்பில் டி. எல். எஸ். கோஸை என்பவருக்கு எழுதினால் அவர் வேண்டிய வித்து வாங்கி அனுப்புவார். விலை ஒரு நிலையில்லாததால் அது விஷயமாய் அவரைக் கேட்டு அறிந்து கொள்ளவேண்டும்.

Books Received.

புஸ்தக வரவு.—ஜீவவர்க்க போதினி: முதல் பாகம். வி. ஆர். துரைசாமி அய்யர், எம். ஏ., எல். டி., அவர்களால் எழுதப்பட்டது. சென்னப்பட்டணம் தம்புசெட்டித் தெரு கணேஷ் கம்பெனி யாரிடத்தில் கிடைக்கும். 0-10-0.

மதிமோச விளக்கம்.—முதல் பாகம். தூசி. ராஜகோபால பூபதி அவர்களால் இயற்றப்பட்டது. சென்னப்பட்டணம் தம்புசெட்டித் தெரு 142 நெம்பர் கெ. வரதாசாரியாரிடத்தில் கிடைக்கும் 0-8-0.

திருவிசநல்லூர் ஐயாவாள் சரித்திரம்.—நெய்த்தானம் நரஸிம்மபாகவதஸ்வாமி அவர்களால் இயற்றப்பட்டது. 0-1-0.

ஐவன்ஹோ.—கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூல் உபாத்தியாயரான எஸ். பஞ்சாபகேச சர்மா பி.ஏ., அவர்களால் எழுதப்பட்டது. 0-6-0.

ஸுகபிரஸவம்.—ப. ரா. கோபாலா சார்லு, பி. ஏ., பி. எல். அவர்களால் இயற்றப்பட்டது. 0—4—0.

Testing of Diamonds

வைரப்பரீக்ஷை.—முன்னொரு ஸஞ்சிகையில் கெம்புப் பரீக்ஷையைப்பற்றிச் சொன்னோம். வைரம் முதலிய ரத்தினங்கள் வாங்குவதிலும் அநேகர் அவைகளை விற்பனை செய்யும் வியாபாரியின் வார்த்தையிலேயே வெகுவாய் நம்பிக்கை வைக்க வேண்டியதாயிருக்கிறது. உண்மையான சுத்த ரத்தினமா அல்லது சூது ரத்தினமா என்பதையும், அதன் விலைமதிப்பு எவ்வளவு என்பதையும் கண்டறிய, அந்த வியாபாரத்தில் பல வருஷத்து ஆராய்ச்சியும் அநுபோகமும் வேண்டியிருக்கின்றன. ஆனால் ரத்தினப்பரீக்ஷைகளில் நிபுணரான ஒருவர், வைரக்கல்லுகளைப்பரீக்ஷித்துப்பார்க்க யாதொரு அநுபோகமும் இல்லாதவர்கள் கூட அநுஷ்டிக்கக்கூடிய சில சுளுவான வழிகளைச் சொல்லுகிறார். அவைகளில் பின்சொல்லுவது ஒன்று. சாதாரண ஒரு காகித அட்டைத்துண்டில் ஒரு ஊசியினால் ஒரு சிறிய துவாரம் செய்யவேண்டும். எந்த ரத்தினக்கல்லைப் பரீக்ஷிக்கவேண்டுமோ அதன் வழியாய் அந்த அட்டையிலுள்ள துவாரத்தைப் பார்த்தால் இரண்டு துவாரங்கள் தெரியும் பக்ஷத்தில் சூது வைரமென்றும், ஒரே ஒரு துவாரம் தெரியும் பக்ஷத்தில் உண்மையான வைரமென்றும் நிச்சயிக்க வேண்டியது. தவிர, உண்மையான வைரமாயிருந்தால் எந்த திராவகத்தை அதன்மேல் ஊற்றினாலும் அந்த வைரம் கரையாது.

Fibres.

நார்கள்.—சணல் முதலிய நார்கள் உரிப்பதாயிருந்தால் அவைகளை கையினால் எடுக்கிறது நல்லதா அல்லது யந்திரங்களைக் கொண்டு எடுப்பது நல்லதா? இதைப்பற்றி சிலபரீக்ஷைகள் நடந்தன. கையினால் உரிக்கப்பட்ட நாரைவிட யந்திரசகாயத்தால் உரிக்கப்பட்ட நாரே மிகவும் உறுதியானதாம். இரண்டு விதமான நார்களும் பார்வைக்கு ஒரேவிதமாயும் சுத்தமாயும் இருப்பதினால் ஒன்று உறுதியாயும் மற்றொன்று உறுதிக் குறைவாயும் இருப்பதற்குச் சரியான காரணம் வெளிப்படையாய்த் தெரியவில்லை. ஆனாலும் கையினால் உரிக்கப்படும் நார்கள் ஒரு நிதானமில்லாமல் ஒரு தடவை பலமாயும், ஒரு தடவை மெதுவாயும் பலவிதமாய் உரிக்கப்படுவதால் அவைகளின் உறுதி குறைந்து போயிருக்கவேண்டுமென்றும், யந்திரத்திலோ என்றால் எல்லா நார்களும் ஒரே சமமான பலத்தால் உரிக்கப்படுவதால் அவைகள் உறுதி குறையாமலிருக்க வேண்டுமென்றும் ஊகிக்கிறார்கள். மேலும் கையினால் உரிக்கப்பட்ட நார்க்கட்டு ஒன்றில், ஒரு நார் நீளமாயும், இன்னொரு நார் குட்டையாயும், சில நார்கள் அறுந்தும் இருக்கின்றன. யந்திரத்தால் உரிக்கப்பட்ட நார்களோ என்றால், எல்லாம் ஒழுங்காயும், சமமாயும், ஒரே நீளமுள்ளவைகளாயும் இருக்கின்றன. அறுந்த நார்கள் கிடையாது. இந்த விஷயமும் இரண்டுவித நார்களின் உறுதி வித்தியாஸத்துக்குக் காரணமாயிருக்க வேண்டுமென்று உத்தேசிக்க வேண்டியிருக்கிறது.

Printing Without Ink.

மையில்லாமல் அச்சடித்தல்.—முன்னொரு குறிப்பில் புஸ்தகங்களும் பத்திரிகைகளும் அச்சிடுகிறதற்கு வேண்டிய மை இந்தியாவிற்கு இதரதேசங்களிலிருந்து வருகிறதென்றும், அந்த மையை இந்தியாவிலேயே செய்ய கல்கத்தாவில் ஒரு பாக்டெரி (தொழிற்சாலை) ஏற்பட்டிருக்கிறதென்றும் சொன்னோம். இனிமேல் மையில்லாமலே அச்சடித்து விடலாமாம். புஸ்தகம் படிக்கும் சிலருக்கு அச்சடிப்பதே எப்படி என்று தெரியாமலிருக்கலாம். அச்சு என்பது முக்கியமாய் ஈயத்தால் வார்க்கப்பட்டது. இதன் ஒருமுனையில் ஒரு எழுத்து வெட்டப்பட்டிருக்கிறது. ஒரு பிரதியை அச்சிடவேண்டுமானால் அதிலுள்ள எழுத்துக்களை தனித்தனியாகப் பொறுக்கி யெடுக்கவேண்டும். பிறகு அவைகளை கிரமப்படி வரிசை வரிசையாக அடுக்கவேண்டும். இப்படி அடுக்கினவரிகளை எடுத்து "சேஸ்" என்று சொல்லப்படும் இரும்புச் சட்டங்களுக்குள் வைத்து, அச்சுக்கள் கீழே விழாதபடி இறுக முடுக்கவேண்டும். இப்படி முடுக்கினதை 'பாரம்' என்று சொல்வது வழக்கம். பிற்பாடு இந்த பாரத்தை அதாவது "சேஸை" முழுமையும் தூக்கி அச்சடிக்கும் யந்திரத்தின்மேல் போடவேண்டும். இந்த யந்திரத்தைச் சுற்றினால், மை உருளைகள் "சேஸில்" முடுக்கப்பட்ட அச்சுகளின்மேல் ஓடி மையை அந்த அச்சுக்களின்மேல் ஸன்னமாக ஈஷி விடும். அப்பொழுது வெற்றுக்கடுதாசியை யந்திரத்தில் கொடுத்தால் அது அச்சுக்களின் மேல்தங்கி, மேற்புரத்திலிருந்து அமிழ்த்தப்பட்டு, அச்சில் ஏற்கனவே ஈஷியிருக்கும் மை அக்ஷரரூபமாக கடுதாசியில் பதிந்து விடும். இப்படி அச்சிடுவதில் வரிகள் கோணல்மாணலாய்ப் போகாதிருக்கிறதற்காக பாரத்தைத்தூக்கி யந்திரத்தில் போட்டு கொஞ்சநாழி "ரெடி" என்னும் வேலை செய்ய வேண்டியதாயிருக்கும். இப்படிப்பட்ட அசௌகரியம் இல்லாமலும் மையில்லாமலும், மின்சார உதவியால் அச்சிடும்படியான புதுமுறை ஒருவர் கண்டுபிடித்திருக்கிறாராம். இதனால் "ரெடி." செய்யும் காலதாமதமும் தொந்தரவும் இல்லை. மின்சாரசக்தியை வேண்டிய அளவில் பாய்ச்சுவதினால் கருப்போ, செகப்போ, எந்த நிறம் வேணுமோ அப்படி அச்சிட்டுக்கொள்ளலா

மாம். இப்படி அச்சிட்ட ஒருவித சாமர்த்தியமும் இல்லாமல் ஒரு பையன் கூட செய்துவிடலாமாம். தவிர, இன்னொரு பெரிய லாபம் இருக்கிறது. தற்காலத்தில் மையைக்கொண்டு அச்சிட்ட காகிதங்களை திரும்பியும் மையை அழித்து வெற்றுக்காகிதமாக ஆக்கமுடியாது. ஆகையால் அச்சடிப்பதற்கு வேண்டிய காகிதம் ஒவ்வொரு தடவையும் புதிதான வெற்றுக்காகிதமாயிருக்கவேண்டும். அப்படிக்கல்லாமல் மின்சாரத்தால் அச்சிடப்பட்ட காகிதத்தை ஒருவித திராவகத்தில் தோய்த்து எடுத்தால் எழுத்துக்கள் அழிந்து போய் வெற்றுக்காகிதமாகி மறுபடியும் அந்தக்காகிதம் அச்சிட உதவுமாம்.

The Ongole Cattle show.

ஒங்கோல் மாட்டுக் காக்ஷி.—நம்முடைய ராஜதானியில் நெல்லூர் ஜில்லாவில் மாடு வளர்ப்பது ஒரு பெருந்தொழிலாக இருக்கிறது. போன புரட்டாசி மாஸத்து "பிழைக்கும் வழி"யில் போன வருஷத்தில் ஒங்கோலில் நடந்த மாட்டுக்காக்ஷியில் பிலிப்பைன் தீவு, ஜாவா தீவு, பிரேசில், ஆகிய இந்ததேசங்களின் கவரன்மெண்டார்களெல்லாம் ஏஜெண்டுகளை அனுப்பி நெல்லூர் மாடுகளைவாங்கிக் கொண்டுபோனார்களென்று சொல்லியிருக்கிறோம். நாளது பிப்ரவரி மாஸம் 22 தேதியில் இந்த வருஷத்து மாட்டுக் காக்ஷி ஒங்கோலில் நடந்தது. இதில் நமது ராஜதானி விவஸாய இலாகாவுக்கு தலைவராகிய கனம் காவலில் ஸ்டூவர்ட் ஸ்டூவர்ட் அவர்கள் மாட்டுக் காக்ஷிகள் வைப்பதால் மாடுவளர்க்கும் தொழிலுக்கு உண்டாகும் நன்மைகளை எடுத்துச்சொல்லி பிலிப்பைன் கவர்ன்மெண்டார் எழுதியிருந்த ஒரு கடிதத்தையும் படித்துக்காட்டினார். அந்தக்கடிதத்தில் "பிலிப்பைன்" தீவுகளுக்கு வந்த மாடுகளிலெல்லாம் ஒங்கோலிலிருந்து வாங்கிக்கொண்டு போன மாடுகளே முதல் தரமானவைகளென்றும், அவைகளால் தங்கள் தீவு மாடு வளர்க்கும் தொழில் முன்னுக்கு வெகு சீக்கிரத்தில் வந்து விடுமென்றும் எழுதியிருக்கிறார்கள். மாடுகளை அபிவிருத்தி செய்வதற்காக மாட்டுக் காக்ஷிகள் வைப்பது மட்டும் போதாது மாடுகளை வளர்ப்பதில் அவைகளின் குணகுணங்கள், தேசசௌகரியங்கள் மேய்ச்சல் வசதிகள், வர்க்கவழிகள், முதலானவைகளை ரொம்பவும் கவனிக்கவேணும். இது விஷயமாய் நாளது பிப்ரவரி௴ 21௳ முதல் 26௳ வரையில் வங்காளத்தில் புயூஸாவில், போர்டு ஆப் அக்ரிகல்சர் என்னும் விவஸாய நிபுணர்கள் கூடும் கூட்டத்தில் யோசனை செய்யப்போகிறார்கள்.

High Price of Yarn.

நூலின்விலை ஏற்றம்—துணிகளின் விலை பருத்தியின் விலையைப் பொறுத்திருக்கிறது. பருத்திவிலை குறைந்தால் துணியும் விலை குறைகிறது. பருத்திவிலை ஏறும்பக்ஷத்தில் துணியின் விலையும் ஏறுகிறது. இது சீமைச்சரக்குகளைப் பற்றிய மட்டில் வாஸ்தவமென்றே சொல்லலாம். நம்முடைய தேசத்தில் கைத்தறிகளில் நெய்யப்படும் துணிதினுசுகளைப் பற்றி அப்படிச் சொல்லமுடியாது. நம்முடைய தேசத்தில் எந்த விஷயத்திலும் வாடிக்கை என்பதும், வழக்கம் என்பதும், அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. வியாபாரத்திலும் அப்படியேதான். கிராமங்களில் ஒரு நெசவுகாரன் தான் நெய்த துணியைக் கொண்டுபோய் விற்கப்போனால் அதை முன்னால் எந்தவிலைக்கு வாங்கியிருக்கிறார்களோ அதற்கு கொஞ்சம் ஏறக்குறைய அந்த விலைக்கே ஜனங்கள் கேட்பார்கள். துணிகளின் விலை, நூலின் விலையை, அதாவது, பருத்தியின் விலையைப் பொறுத்ததென்பதை வாங்குகிறவர்கள் அநேகமாய் அறிய மாட்டார்கள். ஆகையால் துணி வாங்குகிற சமயத்தில் நூலின் விலை அதாவது பருத்தியின் விலை குறைந்திருக்கும் பக்ஷத்தில் துணியை வழக்கமான விலைக்கு விற்று, நெசவுகாரன் நல்ல லாபம் அடிப்பான் அப்படிக்கில்லாமல் தற்காலத்தைப் போல் நூலின் விலை, அதாவது பருத்தியின் விலை ஏறி இருக்கும் பக்ஷத்தில் நெசவுகாரன் பழைய விலைக்கே விற்று நஷ்டமடைய வேண்டியதாகவே ஏற்படும்.

Spices and Digestion.

வாஸனைத்திரவியங்களும் ஜீரணமும்.—நம்முடைய தேசத்தில் சாப்பாடு ஆனவுடனே வெற்றிலை பாக்கு போட்டுக்கொள்வது சாதாரணமாய் அநேகம் பேர்களுக்கு வழக்கமாயிருக்கிறது. இப்படிக்குப் போட்டுக் கொள்ளுகிறவர்கள் பணக்காரர்களாயிருந்தால் அவர்கள் ஏலக்காய், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வால்மிளகு, இவைகள் போன்ற வாஸனைத் திரவியங்களையும் சேர்த்துப் போட்டுக் கொள்ளுகிறார்கள். சில பேர்களுக்கு சாதாரண சமையலே பிடியாமல் எப்பொழுதும் வாஸனைத் திரவியங்கள் சேர்ந்த மசாலை போட்டே சமையல் செய்வார்கள். இப்படிக்கெல்லாம் வாஸனைத்திரவியங்களை ஏன் சேர்த்துக்கொள்ளவேணும் என்று கேட்டால் அதற்குப்பதில் அவைகள் "ஜீரணகாரி" என்று சொல்லுவார்கள். சாதாரணமாய் நாம் சாப்பிடும் ஆகாரம் இரைப்பைக்குள் போய் சேர்கிறது. இப்படிச் சேர்ந்தவுடனே இரைப்பையின் பல பாகங்களிலும் அசைவு உண்டாகி, அதிலுள்ள ஆகாரம் நன்றாய்க் கலக்கப்பட்டு, சிலவிதத்திராவகங்கள் பக்கத்து அவயவங்களிலிருந்து கசிந்து, ஆகாரத்தோடு சேர்ந்து அதை ஜீரணம் செய்கின்றன.

ஆகவே சாப்பாடு ஜீரணமாவதற்கு இரைப்பையின் அசைவும் சிலவித திராவகங்களும் அவசியம். வாஸனைத்திரவியங்களுக்கு இரைப்பையை வேலைசெய்யத்தூண்டுகிற சக்தி ஜாஸ்தி உண்டு. ஆனால் அவைகள் நாளாவட்டத்தில் ஜீரணத்துக்கு அவசியமான திராவகங்களை கசியாமல் செய்கின்றனவாம். ஆதலால் ஒருவனுக்கு ஜீரணசக்தி குறைவாயிருப்பது இரைப்பையின் அசைவுக்குறைவினாலிருக்கும் பக்ஷத்தில் வாஸனைத்திரவியங்களை சேர்த்துக்கொள்வது ஒருக்கால் நலமாயிருக்கலாம். மொத்தத்தில், அவைகளால் நன்மையைவிட கெடுதியே ஜாஸ்தி என்பதாக சில ஆராய்ச்சிகளால் தெரியவருகிறது.

THE CO-OPERATIVE MOVEMENT

BY

SIR. V. C. DESIKACHARIAR, Kt.
Judge, Small Cause Court, Madras.

கூட்டுறவு எழுச்சி.

நமது தேசத்திற்கு கூட்டுறவு எழுச்சி என்பது நூதனமானதென்றும், இதற்கு முன் இந்த தேசத்தில் கூட்டுறவுச்சங்கங்கள் இருந்ததில்லையென்றும் சிலர் சித்தாந்தமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் மற்றும் சிலர் இது நூதனமல்லவென்றும், நமது தேசம் நல்ல ஸ்திதியிலிருந்த போது இப்படிப்பட்ட சங்கங்கள் ஜாதி பஞ்சாயத்துகள் மூலமாயும், கிராம பஞ்சாயத்துகள் மூலமாயும், சபையோகங்கள் என்கிற பெயருடனும் இருந்ததாக நிச்சயமாகச் சொல்லுகிறார்கள். புதிதோ பழையதோ, எப்படியிருந்த போதிலும், இந்தக்கூட்டுறவு எழுச்சியானது பயிர்த்தொழில் செய்யும் எளிய குடியானவர்களுக்கும், மற்ற எவ்வித கைத்தொழிலாளிகளுக்கும் ரொம்ப உபயோகமானதாகவும், நமது தேச அபிவிருத்திக்கு அனுகூலமாகவும், ஜனசமூகத்துக்குப் பொருளாதாரமாகவும் இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

1903-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு கவர்னர் ஜெனரலாயிருந்த பிரபு கர்ஸன் துரையவர்கள், அப்போது கல்கத்தா சட்ட நிரூபண சபையில் ஆலோசனையிலிருந்த ஐக்கிய நாணயச்சங்கங்களின் மசோதா சட்டத்தை மதராஸ் மாகாண கவர்னர் அவர்களுக்கு அனுப்பி, இம்மாகாணத்திலுள்ள முக்கியமான உத்தியோகஸ்தர்களுடையவும், இதர பிரமுகர்களுடையவும் அபிப்பிராயத்தைத் தெரிந்தெடுத்தனுப்பும்படி ஆக்ஞாபித்தார். அந்தக்காலத்தில் இந்த மதராஸ் மாகாணத்துக்கு கவர்ன

ராக இருந்த மகாதயாளுவானவரும், ஜனங்களிடத்தில் விசேஷ பச்சாத்தாபமுள்ளவருமான பிரபு ஆம்த்தில் துரையவர்கள் ஒரு சிறு சபை கூட்டினார். அதற்கு அவருடைய கௌன்ஸில் மெம்பர்களும், செகர்ட்ரிகளும், போர்டு மெம்பர்களும், நமது மாகாணத்திலுள்ள 23 ஜில்லாக்களிலிருந்து பிரமுகர்களாயுள்ள சில கனவான்களும், இந்த சென்னப்பட்டணத்திலுள்ள சில கனவான்களும் அழைக்கப்பட்டு வந்திருந்தார்கள். அப்படியழைக்கப்பட்டவர்களில் நானும் ஒருவனாய்ப் போயிருந்தேன். அந்த மீட்டிங்கில் சுமார் 8 மணி காலம் விசேஷ சர்ச்சை நடந்தபின்பேரில் அவரவர்கள் அபிப்பிராயத்தைச் சொல்லும்படி கவர்னர் துரையவர்கள் கேட்டார்கள். என்னைக் கேட்டபொழுது இந்தமாதிரிச் சங்கங்கள் நம்முடைய கிராமங்களில் ஏற்படுவது ரொம்ப கஷ்டசாத்தியமென்றும், பணக்காரர்களாயிருக்கிறவர்கள் தங்கள் கிராமத்திலிருக்கும் ஏழைகளுக்கு ஜாமீனாக இருந்து கடன் வாங்கிக்கொடுப்பது அசம்பாவிதம் என்றும், இந்த மசோதாச் சட்டம் நடவடிக்கைக்கு வந்தால் மலையாளத்தில் கலியாணத்துச் சட்டத்தைப் போல் உபயோகமில்லாததாக இருக்குமென்றும், இதற்காகப்படுகிற சிரமம் வீண் என்றும் சொன்னேன். அப்பொழுது கௌன்ஸிலில் முதல் மெம்பராக இருந்த கனம் (இப்பொழுது ஸர்) கேப்ரீல் ஸ்டோக்ஸ் துரையவர்கள் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து வந்து, நான் சொன்னது தான் தன்னுடைய அபிப்பிராயம் என்றும், நான் அதைத் தைரியமாகவும், கபடமில்லாமலும் உறுதியாகச்சொன்னதற்காக என்னை ரொம்பவும் மெச்சிக்கொண்டாடினார். அந்த மீட்டிங்குக்கு வந்திருந்தவர்களில் பெரும்பான்மையோர் நான் சொன்னது போல் அவ்வளவு வெளிப்படையாகச் சொல்லாமல், இருக்கிற கஷ்டங்களையும், அசந்தர்ப்பங்களையும் எடுத்துக்காட்டினார்கள். ஆனால் அந்த மகானான ஆம்த்தில் பிரபுவானவர் நமது தேசம் விருத்தியாகவேணுமென்கிற ஊக்கத்தோடு அந்த மீட்டிங்குக்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் ஒரே முகமாக அந்த மசோதா சட்டத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில் அப்படியே தீர்மானிக்கப்பட்டது.

அந்த மீட்டிங்கில் நாங்கள் கேட்டுக்கொண்டபடியே இந்தியா கவர்ன்மெண்டாராலும், நமது மாகாண கவர்ன்மெண்டாராலும் அநேக வித அனுகூலங்கள் அளிக்கப்பட்டன. அதாவது ஐக்கிய நாணயச்சங்கங்களில் ஏற்படும் கடன் பத்திரங்கள், அடமானப்பத்திரங்கள், ரசீதுகள், இவைகளுக்கு ஸ்டாம்பு வேண்டியதில்லையென்றும், ஷை தஸ்தாவேஜுகளை சப்ரிஜிஸ்திரார்கள் சார்ஜ் வாங்காமல் இனாமாக ரிஜிஸ்தர் செய்யவேணுமென்றும், இந்தச்சங்கங்களுக்கு வருமான வரி கிடையாதென்றும், இந்தச்சங்கங்களின் கணக்குகளை வருஷவாரியில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் யாதொரு கட்டணமும் இல்லாமல் பரிசோதிக்க வேண்டுமென்றும், ஒரு சங்கத்திலிருந்து வேறொரு சங்கத்துக்கு பணம் அனுப்பவேணுமானால் அங்கங்கிருக்கும் கவர்ன்மெண்டு கஜானாக்கள் யாதொரு செலவும் இல்லாமல் ரெமிட்டன்ஸ் டிரான்ஸ்பர் ரசீட் என்று சொல்லப்படும் ரசீதுகள் மூலமாக அனுப்பவேணுமென்றும், இப்படிப்பட்ட அநேக விதமான அனுகூலங்கள் கிடைத்திருக்கின்றன.

இப்படி நமது ராஜாங்கத்தாருடைய நல்ல எண்ணமும், முதல் முதல் ஏற்பட்ட ரெஜிஸ்திரார் திவான் பகதூர் பி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களுடைய முயற்சியும் சேர்ந்து, நமது மாகாணத்தில் 1905-ம் வருஷத்தில் சில பாங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டன. அப்படி செங்கல்பட்டு ஜில்லாவில்தான் முதலில் பாங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டன. அதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. சாதாரணமாக செங்கல்பட்டு ஜில்லா ரொம்பவும் எளிமையான ஜில்லா என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஞாபகத்துக்கு வரக்கூடாத சில கிராமங்களில்கூட பாங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் மேலே சொன்ன அநேக உபகாரங்கள் தவிர சில சங்கங்களுக்கு வேலையாரம்பிக்க வேண்டியதற்காக பொருளுதவியும் நமது ராஜாங்கத்தார் செய்து வந்தார்கள். அதாவது சில சங்கங்களுக்கு கடனாக 200 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரையிலும், முதல் நாலு வருஷத்துக்கு வட்டியில்லாமலும், அடுத்த பத்து வருஷத்துக்கு சொல்ப வட்டிக்கும் கொடுத்தார்கள். இதுவுந் தவிர கல்கத்தா நகரத்திலிருக்கும் மகா காருண்யவானான ஒரு ஐரோப்பிய வர்த்தகர், ஸர். டி. ஹமில்டன் துரையவர்கள், தன் சொந்தப் பணத்திலிருந்து இந்தமாகாணத்திலுள்ள ஐக்கிய நாணயச்சங்கங்களின் அபிவிருத்திக்காக ரூபாய் 5,000 கவர்ன்மெண்டு மூலமாக வட்டியில்லாமல் கடனாகக்கொடுத்தார்.

இப்படி ராஜாங்கத்திலிருந்தும், இதர தேசஸ்தர்களிடத்திலிருந்தும் பொருளுதவி யடைவது அவ்வளவு சிலாக்கியமில்லையென்றும், ஐக்கிய நாணயச்சங்கங்களின் அபிவிருத்திக்கு க்ஷேமகரமல்லவென்றும், வெகு தீர்க்கதரிசியான ரிஜிஸ்திரார் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அபிப்பிராயப்பட்டு நமது மாகாணத்துக்கு ஒரு ஸெண்ட்ரல் பாங்கி அதாவது ஒரு தாய்ப்பாங்கி ஏற்படுத்துவது, அவசியமென்றும் தீர்மானித்தார். அப்போது சுமார் இருபது கிராம நாணயச்சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த ஸெண்ட்ரல் பாங்கிக்காக தானே விடுவிடாய்ப் போய் சென்னைவாசிகளில் பதினேழு பேரிடத்தில் ஒவ்வொருவரும் 500 ரூபாய்க்கு ஒரு பங்கு எடுத்துக் கொள்வதாய் சம்மதிக்கும்படி செய்தார். இந்த 17 பேர்களும் ஒருவரை ஒருவர் பார்க்கவுமில்லை, சந்திக்கவுமில்லை. ரிஜிஸ்திராரே இந்தத்தாய்பாங்கிக்கு வேண்டிய விதிகளை தானே ஏற்படுத்த, அப்போது ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்த நமது தேசாபிவிருத்தியில் சகல விதங்களிலும் விசேஷ ஊக்கமுள்ள திவான் பகதூர் ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்களுடைய பங்களாவில் மேலே சொன்ன 17 பேர்களில் 12 பேர்கள் ஒரு சபைகூடி அப்படிப்பட்ட தாய்ப்பாங்கி இந்த சென்னப்பட்டணத்தில் ஸ்தாபிக்கவேண்டியது அவசியமென்று, அதை ரிஜிஸ்தர் செய்ய வேண்டியதற்காக கவர்ன்மெண்டாருக்கு ஒரு மனு எழுதி கையெழுத்துப் போட்டார்கள்.

அந்த பாங்கிக்கு முதல் முதல் காரியதரிசியாக என்னை நியமித்தார்கள். ஷை பாங்கிக்கு மூலதனம் 500 ரூபாய் பெறுமான 50 பங்குகள். அதாவது ரூபாய் 25,000 என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனாலும் பங்கு 1-க்கு ரூபாய் 500 உடனே கொடுக்கவேண்டியதில்லையென்றும், 50, 50 ரூபாயாகத்தவணைகளாகக் கொடுக்கலாமென்றும் ரிஜிஸ்திரார் அவர்கள் சொன்னார். அப்படியே பங்கு ஒன்றுக்கு 3 தவணை அதாவது ரூபாய் 150 வசூல் செய்யப்பட்டு முதல் முதலில் காஞ்சீபுரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட நெசவுகாரச் சங்கத்திற்கு 1906-ம் வருஷம் பிப்ரவரி௴ 18-ம் தேதியில் ரூபாய் 1,000 கடன் கொடுக்கப்பட்டது. அப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களுக்காக ஏற்பட்ட வருஷம் மார்ச்சு௴ 31-ம் தேதியோடு முடிந்தது. அது வரையில் மேற்சொன்ன கடனைச் சேர்த்து செண்ட்ரல் பாங்கிலிருந்து

ரூபாய் 2,000 கடனாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வருஷத்து நிகர லாபம் ரூபாய் 20-9-0.

அடுத்த வருஷத்தில் ஐக்கிய நாணயச்சங்க வருஷம் ஜூலை முதல் தேதியில் ஆரம்பித்து ஜூன் 30-ம் தேதியில் முடியவேணுமென்று ராஜாங்கத்தாரால் தீர்மானிக்கப்பட்டபடியால், 1907-ம் வருஷம் ஜூன் 30-ம் தேதியோடு முடிந்த 15 மாசங்களுக்குக் கணக்குப்பார்த்ததில் ஸெண்ட்ரல் பாங்கிலிருந்து ரூபாய் 80,900 கடனாக கிராம நாணயச் சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. உடனே ரிஜிஸ்திரார் அவர்கள், நூதனமாய் ஸ்தாபிக்கப்படும் சங்கங்களுக்கு கவர்ன்மெண்டு பொருளுதவி கிடைக்காதென்றும், பொருளுதவி வேண்டுமானால் சென்ட்ரல் பாங்கிலிருந்து கடன் வாங்கிக்கொள்ளலாமென்றும் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். அடுத்த வருஷத்தில் அதாவது 1908-ம் ௵ ஜூன் 30-ம் தேதியில் சென்ட்ரல் பாங்கிக் கணக்கைப் பார்த்தபொழுது ரூ. 1,75,050 கிராம நாணயச்சங்கங்களுக்குக் கொடுத்திருப்பதாக ஏற்பட்டது. அதற்கடுத்த வருஷமோ அதாவது 1909-ம் ௵ ஜூன் 30-ம் உயில் ரூ. 4,61,700 இம்மாகாணத்தில் அது வரையில் ஸ்தாபிக்கப்பட்ட கிராம நாணயச்சங்கங்கள் கடனாக வாங்கிக்கொண்டன.

இந்த மூன்று வருஷத்தில் ஸெண்ட்ரல் பாங்கியில் இந்தச் சென்னபட்டணத்திலுள்ள அநேக கனவான்களும் வெளி ஜில்லாக்களிலுள்ள உத்தியோகஸ்தர்களும் டிபாசிட்டாக பல தொகைகள் வைத்தார்கள். மூலதனம் கொஞ்சமாயிருந்த போதிலும், இந்த பாங்கியிலுள்ள நம்பிக்கையினால் வேண்டும் போதெல்லாம் விசேஷமான டிபாசிட்டுகள் எளிதில் கிடைத்தன. இது வரையில் கடனுக்காகக் கொடுத்த ஒரு மனுவாவது பணமில்லையென்கிற காரணத்தினால் தள்ளுபடியாகவில்லை. இந்த கூட்டுறவு எழுச்சி விஷயத்தில் முதல் முதலில் நல்ல அபிப்பிராயமும் நம்பிக்கையும் இல்லாத நான், இப்பொழுது இந்த ஸெண்ட்ரல் பாங்கில் முக்கிய முயற்சிசெய்ய வேண்டியவனாக ஏற்பட்டதும் தெய்வானுக்கிரகந்தான்.

இதன் மத்தியில் இந்தக் கூட்டுறவு எழுச்சியின் துர்ப்பாக்கியத்தினாலும், திருவாங்கூர் ராஜ்யத்தினுடைய அதிர்ஷ்டத்தினாலும் திவான்பகதூர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் அவ்விடம் திவானாகப்போய் விட்டார்கள். ஆனால் அவர் ஸ்தானத்துக்கு வந்த மகா-௱-௱-ஸ்ரீ ராமச்சந்திரராயர் அவர்கள் தம்முடைய திறமையாலும், இந்த ஐக்கிய நாணயச்சங்கங்கள் விஷயத்தில் அவருக்கிருக்கிற அபிமானத்தினாலும் சுபாவத்தில் ஜனங்களிடத்தில் உள்ள ப்ரீதியினாலும் மகா-௱-௱-ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் திருவாங்கூருக்குப் போனதை வெகுசீக்கிரத்தில் நாம் மறக்கும்படி செய்து விட்டார். நாம் இப்பொழுது கோரவேண்டியது மகா-௱-௱-ஸ்ரீ ராமச்சந்திரராயர் அவர்கள் சில வருஷங்களுக்காவது ரிஜிஸ்திராராக இருக்கவேண்டுமென்பதுதான்.

இந்த மூன்று வருஷகாலமாய் எனக்குத் தெரிந்தமட்டில் அங்கங்கே ஏற்படுத்தப்பட்ட கிராம நாணயச்சங்கங்கள் கூடியவரையில் திறமையாய் நடவடிக்கை நடத்துவதாகத் தோன்றுகிறது. இந்தக்கூட்டுறவு எழுச்சி வெகு ஆச்சரியமானதென்பதில் சந்தேகமில்லை. ஒருவேலையை பலபேர் சேர்ந்து, ஒவ்வொருவரும் சில பாகங்களைச் செய்வதால் உண்டாகும் விசேஷ நன்மை தெளிவாக ஏற்படுகிறது. ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய எல்லா வேலைகளையும் தானே செய்வதைவிட பலர் ஒன்று சேர்ந்து அந்த வேலையைத் தமக்குள் பிரித்துக்கொண்டு பூர்த்திசெய்வது வெகுசிலாக்கியம். நம்மில் ஒவ்வொருவரும் தானே க்ஷவரம் செய்து கொள்வதும், தன் துணிகளைத்தானே நெசவுசெய்து வெளுத்துக்கொள்வதும், தனக்கு வேண்டிய தானியங்களை தானே பயிர் செய்து கொள்வதும், தனக்கு வேண்டியமற்றுமுள்ள சாமான்களை தானே உற்பத்தி செய்து கொள்வதுமானால் அவனவனுடைய ஆயுள் அவனுக்கே கொஞ்சமேனும் போதாது. ஆகையினால்தான் ஒருபொதுக்கோட்பாட்டினாலும், ஐக்கிய மித்தியத்தினாலும் வேண்டிய காரியங்களை சிலவற்றை ஒருவரும், மற்றும் சிலவற்றை வேறொருவரும் இப்படியாக நமது காலத்தையும், புத்தியையும், சிரமத்தையும், தனத்தையும் ஒன்று சேர்த்து வேலையைப் பிரித்துச்செய்வதினால் பொது நன்மையுண்டாவதுடன் அப்படிச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தனித்தனியே விசேஷமான நன்மையும் உண்டாகும்.

இந்தக் கூட்டுறவு எழுச்சிக்கு முக்கியமான அம்சம் ஒன்றுண்டு. அதாவது, இங்கிலீஷில் க்ரெடிட் என்றும் தமிழில் நாணயம் என்றும் சொல்லப்படும். இந்த நாணயமென்கிற வார்த்தைக்கு தமிழ் பாஷையில் இரண்டு அர்த்தம் உண்டு. அதாவது நாணயமென்றால் வெள்ளி நாணயம் பொன் நாணயம் என்று சொல்லும் ராஜாங்கத்தாருடைய முத்திரையுடன் வழங்கிவரும் செல்வாக்கு நாணயம். இது தவிர நாணய மென்றால் மதிப்பு, நம்பிக்கை என்றும் அர்த்தமாகும். அதாவது, சொத்து முதலான ஜாமீன் இல்லாமலே கடன் வாங்கும் சக்தி என்றும் சொல்லலாம். அதற்கு முக்கிய காரணம் குறித்த காலத்துக்குள், கடனைத்தவறாமல் திருப்பிக்கொடுக்கும் திறமையே. அநுபோகத்தில் ஐஸ்வரியமுள்ளவர்கள் அவர்களுக்குள்ள ஐஸ்வரியத்துக்குத் தக்க நாணயமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஐஸ்வரியமில்லாத ஏழைகளுக்கு நாணயம் கிடையாது. இது கேட்பதற்குப் பொய் போலிருந்தாலும் நிஜமான விஷயமே. விசேஷ தனமுள்ளவன் தனக்கு வேண்டிய வஸ்துக்களை விலைக்கு வாங்கவேண்டியபோது கையில் பணம் கொடுக்க சக்தியுள்ளவனாயிருந்தும் அவனுக்குத்தான், கடைக்காரர்களும், வர்த்தகர்களும் கையில் பணம் வாங்காமல் கடனாக வேண்டிய சாமான்களைக் கொடுக்கிறார்கள், கைப்பொருளில்லாத ஏழைக்கோ இது அசாத்தியம். ஆகையால் பணக்காரனுடைய பணத்தையும், ஏழையினுடைய வேலை செய்யும் திறமையையும் ஒன்று சேர்த்து உபயோகித்தால் இருதிறத்தாருக்கும் விசேஷ லாப முண்டாகும். சுருக்கமாக ஒரு உதாரணம் சொல்லுகிறேன்.

சென்னபட்டணத்தில் கையில் பணம் உள்ள ஒரு கனவான் பணமில்லாத ஒரு ஏழைக்கு பிரதி தினமும் சாயங்காலம் ஒரு ரூபாய் கடன் கொடுக்கிறார். அந்த ஏழை அந்த ஒரு ரூபாயைக் கொண்டுபோய் கடலை, காராமணி, மொச்சைக்கொட்டை, பட்டாணி முதலானவைகளை வாங்கி கொஞ்சம் உப்புச்சேர்த்துச் சுண்டல் செய்து சென்னபட்டணத்து ரோட்டுகளில் வண்டியிழுக்கும் எளியர்களுக்கும் மூட்டை சுமக்கும் கூலியாள்களுக்கும் தம்படிக்கும் காலணாவுக்கும் விற்று பிரதிதினமும் ஒரு ரூபாய் பத்தணா சம்பாதிக்கிறான். இதில் கடன் வாங்கினவரிடத்தில் அசலுக்குரூபாய் ஒன்றும், கடன் கொடுத்தற்காக லாபம் அணா நாலும் கொடுத்து, தன்னுடைய சிரமத்துக்காக தினம் ஒன்றுக்கு அவனுக்கு 6 அணா கிடைக்கிறது. இதுதான் கூட்டுறவு என்பது. மகாராஜனுடைய பணமும் ஏழையுடைய உழைப்பும் சேர்ந்து ஒரு நாளில் ஒரு ரூபாய்க்கு 10 அணா

லாபம் கிடைக்கிறது. இந்த ஒரு ரூபாய் பணக்காரன்கையிலேயே யிருந்து சாதாரணமாய் கடன்கொடுக்கப்பட்டால், கேவலம் மாசம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா வட்டி வாங்கினால்கூட அதாவது வருஷத்துக்கு 100-க்கு 75 வட்டிவாங்கினால்கூட, நாளொன்றுக்கு பாதி தம்படிகூட ஆகாது.

ஆகையால் நமது தேசம் விருத்திக்கு வரவேணுமானால் பணக்காரர்களிடத்தில் இருக்கும் பணத்தை புத்திசாலித்தனமாயும், ஜாக்கிரதையாயும், பயிர்த்தொழில் செய்பவர்களையும், இதர கைத்தொழில் செய்பவர்களையும் சங்கங்களில் சேர்த்து, ஒருவருக்கொருவரை ஜாமீனாக்கி, காலாகாலத்தில் அவர்களுக்கு கடனாகப் பொருளுதவி செய்து, நாணயத்தை உண்டு பண்ணினால் அந்தச்சங்கங்களில் சேர்ந்த எல்லாருக்கும் பெரு நன்மை உண்டாவதுடன் ஒருவருக்கொருவர் நம்பிக்கையும் விசுவாசமும் அதிகரிக்கும். கிராமங்களிலிருக்கிற கக்ஷிப்பிரதிகக்ஷிகளும் குறையும். கஷ்டப்பட்டு உற்பத்தி செய்தவனுடைய லாபத்தில் பெரும்பான்மை துராசையுள்ள வியாபாரிக்கும் போகாது. குறைந்த வட்டிக்கும் பணம் கிடைக்கும். ஏழைகளுக்கும் நாணயமுண்டாகும். இதனால் ஜனாபிவிருத்தியும், சர்வஜன சௌக்கியமும், தேசவளமையும் உண்டாகுமென்பதை அநேக நூலாசிரியர்கள் புஸ்தகத்தில் எழுதியிருப்பதைத் தவிர நாமும் நேரில் அனுபவத்திலும் பார்க்கலாம். தேசாபிமானிகளாகிய ஒவ்வொருவரும் இந்தக்கூட்டுறவு எழுச்சியை அபிவிருத்திக்குக் கொண்டுவருவதற்குவேண்டிய முயற்சியையும், உதவியையும் செய்வார்களாக.

வி. வி. தேசிகாச்சாரி.

SCHOOL LEAVING CERTIFICATE

BY

V. S. SRINIVASA SASTRI, B.A. L.T., F.M.U.

ஸ்கூல் முடிவு ஸர்டிபிகேட்.

சென்னை மாகாணத்தில் பப்ளிக் பரீக்ஷைகள் பெரும்பாலும் இருவகைப்படும். ஒருவகை சர்க்காரால் நடத்தப்படுகின்றன. சர்க்கார் உத்தியோகத்திற்கு உதவியாயிருக்கும் ஸ்பெஷல் டெஸ்ட்களும் முதல்க்ரேட் இரண்டாம்க்ரேட் வக்கீல் பரீக்ஷைகளும் இதற்கு உதாரணம். மற்றொருவகைப் பரீக்ஷைகள் யூனிவர்ஸிடியால் ஏற்படுத்தி நடத்தப்படுகின்றன. அவை பி.ஏ., எம்.ஏ., பி.எல்., எம்.எல்., பி இ, எம். டி., எல். எம். எஸ்., முதலியன. யூனிவர்ஸிடியை சர்வகலா சாலை யென்று சொல்லுவது வழக்கம். அதைவிட உயர்படிப்பை அபிவிருத்தி செய்வதற்கு அமைந்திருக்கும் ஓர் ஸ்தாபனமென்று சொல்வது உசிதம். இதற்கு அதிகாரிகள் ஸர்க்கார் மேல்விசாரணைக்குட்பட்டிருக்கும் சுமார் நூறு கனவான்கள் கூடிய ஒரு சங்கம். இந்தச்சங்கம் அடிக்கடி கூடுவது முடியாததால் முக்கியமான முறைகளையும் விதிகளையும் மட்டும் ஏற்படுத்தி, இவற்றிற்கேற்க நடை முதல் காரிய நிர்வாகம் செய்ய தங்களுக்கு வருஷந்தோறும் பத்துப்பேரைத்தெரிந்தெடுத்து நியமிப்பார்கள். பெரிய சங்கத்திற்கு ஸெனேட் என்றும், சிறிய சங்கத்திற்கு ஸின்டிகேட் என்றும், பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன.

யூனிவர்ஸிடி ஸ்தாபிக்கப்பட்ட காலம் முதல் ஒவ்வொரு வருஷமும் மெட்ரிகுலேஷன் பரீக்ஷை நடக்கிறது. இதில் தேறியவர்களைத்தான் காலேஜ்களில் மேற்படிப்புக்குச் சேர்ப்பார்களாதலால் இதை யூனிவர்ஸிடி பிரவேசப் பரீக்ஷை யென்றும் விவகரிப்பதுண்டு. மேலும் இந்தப்பரீக்ஷை தேறியவர்கள் ஸர்க்காரில் சின்ன உத்தியோகங்களுக்கு லாயக்கானவர்கள் என்று இது வரையில் கவரன்மெண்டார் ஏற்றுக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது சில தினங்களுக்கு முந்தி ஸர்க்கார் உத்தியோகத்திற்கு லாயக்கான பரீக்ஷைகளென்று விளம்பரம் செய்யப்பட்ட அட்டவணையிலிருந்து மெட்ரிகுலேஷனை நீக்கிவிட்டார்கள்.

சென்ற சில வருஷங்களாக இந்த மெட்ரிகுலேஷன் பரீக்ஷையின்பேரில் எல்லாருக்கும் மிகுந்த அதிருப்தி உண்டாயிருக்கிறது.

பிரதிவருஷமும் சுமார் ஏழாயிரம் அல்லது எண்ணாயிரம் பிள்ளைகள் இந்தப்பரீக்ஷைக்குப் பணம் கட்டிவருகிறார்கள். இவ்வளவுபேர்களுடைய பேபர்களை பார்வையிட்டு தகுந்த மார்க்குகள் போட அநேக பரீக்ஷகர்கள் நியமிக்க வேண்டிவந்து ஒருவர்போல் மற்றொருவர் மார்க்குப் போடாததினாலோ, கேள்விப்பத்திரிகைகள் வருஷந்தோறும் ஒரே சீரானவைகளாயில்லாததினாலோ, ஸ்கூல்களில் படிப்புச் சொல்லிவைக்கும் உபாத்தியாயர்களின் திறமையும் சிரத்தையும் குறைந்திருப்பதாலோ, இவ்வெல்லாக்காரணங்களாலுமோ நூறு பிள்ளைகளுக்கு இருபது முதல் முப்பது வரையில்தான் சாதாரணமாய்த்தேறுகிறார்கள். சில வருஷங்களில் நூற்றுக்கு இருபதுகூட இல்லாமலும் போயிருக்கிறது. இந்த வருஷத்திய பஞ்சமானது மிகக்கொடுமை. நூற்றுக்குப்பதினொன்றுதான் தேறியிருக்கிறது.

பரீக்ஷை தேறவில்லை யென்றால் பிள்ளைகளும் பெற்றோரும் பத்து வருஷமாய்ப்படித்த படிப்பு, பட்ட துன்பம், செய்த செலவு எல்லாம் வியர்த்தமாய் விட்டதென்று ஏங்கிப்போகிறார்கள். கற்பிப்பவரும் சொல்லிவைத்தது சோபிக்க வில்லையே யென்று துக்கிக்கிறார்கள்.

நியாயமாய்ப்பார்த்தாலோ பரீக்ஷை தேறுவதற்கு நிர்ப்பந்தங்கள் அநேகம். மேலே காட்டிய காரணங்கள் தவிர, பிள்ளைகளில் பெரும்பாலருக்குப் பரீக்ஷை காலத்தில் மனத்துயரம், வியாதி, மலைப்பு, திகில் முதலிய தற்செயலான கெடுதிகள் நேர்கின்றன. இதற்கெல்லாம் யாதொரு பரிகாரமும் கிடையாது. பத்தடி அகலமுள்ள அகழியைத் தாண்ட முயன்றவர்களில் ஒன்பதேமுக்காலடி தாண்டினவனும் ஓரடி தாண்டினவனும் எப்படி ஒரே கதியை அடைவார்களோ அப்படியே ஒரு பேபரில் ஒரு மார்க்கு இரண்டு மார்க்குக் குறைவால் தவறினவனும், எல்லா பேபர்களிலும் தாழ்ந்த மார்க்கு வாங்கித்தவறினவனும் பேதமில்லாமல் தவறினவர்கள் என்று பெயர் பெற்றுத்திரும்புகிறார்கள். தேறவேண்டியவர் அநேகர் தவறியும், தவற வேண்டியவர் அநேகர் தேறியும், வருஷந்தோறும் முடிவு பெறுமானால் பரீக்ஷை ஒரு பெரிய சீட்டென்று காணப்படுமே தவிர, உழைப்புக்குத் தகுந்த பலனைக்கொடுக்கும் ஒரு நல்ல ஸ்தாபனமென்று தோன்றுமா? அல்லாமலும் பத்து வருஷம் ஸ்கூலில் படித்தால் எவ்வளவு "மக்கேனும்" ஒரு பிள்ளைக்குச்சிறிதேனும் வித்தியாலாபமும் புத்திப்பயிற்சியும் இல்லாமற்போய் விடுமா? அது எவ்வளவென்று கூடுமான வரையில் சரியாய் ஆராய்ந்தெடுத்துக்காட்டும் பரீக்ஷையல்லவா பரீக்ஷை?

காலேஜ்களில் பெரிய படிப்புக்கற்பிக்கும் உபாத்தியாயர்களும் மெட்ரிகுலேஷன் தேறி வரும் பிள்ளைகள் வரவர தாங்கள் இங்கிலீஷில் சொல்லும் விஷயங்களை கிரகிக்கும்படியான அறிவில்லாதவர்களாய் இருக்கிறார்களென்று முறையிடுகிறார்கள்.

மற்றொரு விதத்திலும் மெட்ரிகுலேஷன் ஸ்கூல் படிப்பைக் கெடுத்துவிட்டதென்று

தோஷம் சொல்வதுண்டு. ஒவ்வொரு வருஷத்திலும் ஆறாவது கிளாஸில் பதினாயிரம் பிள்ளைகள் படிப்பதாய் வைத்துக்கொண்டால் சுமார் மூவாயிரம் பிள்ளைகளுக்குத்தான் காலேஜ்களில் சேர்ந்து மேற்படிப்புப் படிக்க வேண்டுமென்கிற எண்ணமிருக்கும். பாக்கி ஏழாயிரம் பேருக்கும் சர்க்காரிலாவது, ரைல்வேக்களிலாவது,வியாபாரம்செய்யும் ஹௌஸ்களிலாவது சிறு உத்தியோகங்களைச் சம்பாதிக்கவேண்டுமென்பதுதான் கருத்து. உண்மையில் மேல்படிப்பை நோக்கும் மூவாயிரம் பிள்ளைகளுக்கு எந்தப் படிப்புத் தருமோ அந்தப்படிப்பு உத்தியோகாபேக்ஷிகளான ஏழாயிரம் பிள்ளைகளுக்கு உதவாது. இந்த இரண்டு வகுப்பாரையும் வெவ்வேறாய்ப் பிரித்துக் கற்பிப்பதே நலம். ஹை ஸ்கூலிலாவது இதுவரையில் இந்த பேதம் செய்ததில்லை. பதினாயிரம் பேரும் மேற்படிப்பைக் கருதியவர்கள் போல யூனிவர்ஸிடி ப்ரவேசத்திற்குச் சாதகமான மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்காக உத்தேசித்திருக்கும் படிப்பையே படித்து வருகிறார்கள். இதைப்பற்றி ஸர்க்காரில் வெகு காலமாய்ப் புகார் செய்தும் ஒன்றும் மாறாததினால் இருபது வருஷத்திற்கு முன்னால் அப்பர் ஸெகண்டரி என்று ஒரு புதுப்பரீக்ஷை வைத்து அதற்கு நியமித்த பாடங்களில் உத்தியோகாபேக்ஷிகளான பிள்ளைகளுக்கு உபயோகமான சில லௌகிகப் படிப்புகளையும் சேர்த்து இந்தப் பரீக்ஷையும் மெட்ரிகுலேஷனைப் போலவே ஸர்க்கார் உத்தியோகத்திற்கு லாயக்கானது என்று பிரசுரம் செய்யப்பட்டது. ஆனால் இந்தப்புதிய பரீக்ஷை விளங்கவேயில்லை. இதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. முதலாவது, மெட்ரிகுலேஷனைக் காட்டிலும் கடினமானது. இரண்டாவது, மெட்ரிகுலேஷன் தேறியவர்கள் உத்தியோகத்திலும் சேரலாம், காலேஜ்களிலும் சேரலாம் என்றிருக்க, அப்பர் ஸெகண்டரிக்காரர் உத்தியோகத்தில் மாத்திரம் சேரலாம் என்றிருந்தது. ஆகையால் மெட்ரிகுலேஷனே முன்னின்று அப்பர் ஸெகண்டரி க்ஷயித்தது ஆச்சரியமல்ல.

சென்ற 1909-ம் வருத்தில் ஸ்கூல் முடிவு ஸர்டிபிகேட்டை ஏற்படுத்திய ஸர்க்கார் உத்தரவாலும் அதையநுஸரித்து யூனிவர்ஸிடி ஸெனேட்டார் செய்த தீர்மானத்தாலும் நாம் மேற்கூறிய வித்தியாஸங்கள் தலை கீழாய் மாறிவிட்டன. அதாவது, மெட்ரிகுலேஷன் பரீக்ஷை கடினமாயும், ஸர்க்கார் உத்தியோகம் பெற உதவியில்லாமல் காலேஜ்களுக்குப் பிரவேசமாய் மட்டும் உபயோகப்பட்டதாயும் நிற்கிறது. புதிதாய் ஏற்பட்டிருக்கும் ஸ்கூல் முடிவு ஸர்டிபிகேட்டோ எளிதாயும் ஸர்க்கார் உத்தியோகத்திற்கும் காலேஜ் பிரவேசத்திற்கும் சாதகமாயும் இருக்கிறது. ஆகையால் மெட்ரிகுலேஷன் வரவர துர்க்கதியை யடைந்து ஸ்கூல் முடிவு ஸர்டிபிகேட் நன்றாய் நிலைபெறுமென்று தோன்றுகிறது.

இந்த ஸர்டிபிகேட் எளிதென்றோமே, அதனால் கேள்விப் பத்திரங்கள் எளிதாயிருக்குமென்று அர்த்தமல்ல. மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு இராத சில குணங்களுண்டு. இந்த ஸர்டிபிகேட்டானது ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒன்றுண்டு. உத்தியோகஸ்தரின் ஸர்விஸ் ரிஜிஸ்டர் போலிருக்கும். சுமார் இருபது பக்கங்களிருக்கலாம். அவைகளில் நாலு, ஐந்து, ஆறாவது பாரங்களில் பையன் படித்த ஸப்ஜக்ட்களையும் அதாவது விஷயங்களையும், ஒவ்வொரு ஸப்ஜக்டில் வாங்கிய மார்க்கையும் வருஷத்திற்கு இருமுறை ஹெட் மாஸ்டர் எழுதவேண்டியது. ஆறாவது பாரத்தின் முடிவில் ஸ்கூல்முடிவு பரீக்ஷையென்று பப்ளிக் பரீக்ஷை முக்கியமான சில ஸப்ஜக்ட்களில் மட்டும் நடக்கும். அதற்கு ஹெட் மாஸ்டர் அனுமதிபெற்றுப் போகவேண்டியது. கட்டாயி ஸப்ஜக்ட் மூன்றும், இஷ்டமான ஸப்ஜக்ட் ஒன்றும் உண்டு. இவைகளில் கிடைத்த மார்க்கையும் அந்த ஸர்டிபிகேட்டில் தாகல் செய்து கொடுப்பார்கள். ஆதலால் உள்ளபடி பையன் யோக்கியதையும், படிப்பால் பெற்றிருக்கும் பிரயோஜனமும் சொல்லிவைத்த வாத்தியார் அன்னிய பரீக்ஷகர் இவ்விருவர் மூலமாய் வெளிப்படும். மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குள்ள தற்செயல்களால் உண்டாகும் கெடுதல் மூன்று வருஷத்திய ரிகார்ட்டால் மாற்றப்படும். பரீக்ஷையில்தேறினான், தவறினான் என்று கெஜட்டில் பிரசுரம்செய்கிறதில்லை. வாங்கியிருக்கும் மார்க்கைப்பார்த்து காலேஜ் தலைவர்களோ உத்தியோகம் கொடுக்கும் பிரபுக்களோ ஒருவனை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் மறுபடியும் ஸ்கூலில் ஒருவருஷம் படித்து சப்ஜக்ட்களில் அதிக மார்க்கு வாங்கி அவனுடைய யோக்கியதை வெளியாக வேண்டும்.

OFFICE 31 MAR 1910 MADRAS

ஒவ்வொரு பையனுக்கும் இஷ்டமான சப்ஜக்ட் ஒன்று எடுத்துக்கொள்ள வேண்டியது என்றோமல்லவா? இவைகளுக்கு ஒரு அட்டவணை போடப்பட்டிருக்கிறது. அதில் காலேஜுக்குரியமேற்படிப்புக்கு உபயுக்தமான சில சப்ஜக்ட்களும் உத்தியோகங்களில் வேண்டியதாயுள்ள லௌகிகமான ஞானத்தைக்கொடுக்கும் சில ஸப்ஜக்ட்களும் சேர்ந்திருக்கின்றன. அந்தந்த ஸ்கூல் சௌகரியங்களையும் அந்த அந்த ஸ்தல நிலைமைகளையும் கொண்டு இந்தப் பாடங்களை ஹெட் மாஸ்டர்களும் ஸ்கூல் மானேஜர்களும் நிர்ணயம் பண்ணிக்கொள்ளலாம். சொல்லிவைக்கும் விஷயங்களைப் பற்றியும் மெட்ரிகுலேஷனிற்போல் எல்லாருக்கும் ஒரே விதி என்று இருக்காமல் அவரவர் மனோதர்மத்திற்கும் அவகாசம் கொடுக்கப்படும்.

ஆனால், தந்தலையாட்டம்போல ஒரு கட்டுக்கும் உள்ளாகாமல் போகலாகாதென்று இந்த ஸ்ர்டிபிகேட் விஷயமாயுள்ள காரிய நிர்வாகம் செய்ய ஒரு சிறிய சபை சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச்சபையின் அங்கத்தினர் எட்டுப்பேரும் ஹை ஸ்கூல்படிப்பு விஷயத்தில் நல்ல அனுபவமுள்ளவர்கள். அதனால் மெட்ரிகுலேஷன் பரீக்ஷகர்கள் செய்து வந்த பிழைகளுக்கு இடமில்லை. ஹெட் மாஸ்டர்கள் புதிய ஏற்பாட்டுப் பிரகாரம் அதிக அந்நியாயம் செய்யலாம். செய்யவும் செய்வார்கள் என்று ஒரு பயம் சிலருக்கு உண்டாயிருக்கிறது. அதிக அந்நியாயம் செய்யாமல் இந்தச்சபையாரும் இன்ஸ்பெக்டர்களும் சுலபமாய்ப் பார்த்துக்கொள்ளலாம்.

காலேஜ் தலைவர்கள் தத்தமிஷ்டப்பிரகாரம் ஸர்டிபிகேட்டுக்களை ஏற்றுக்கொள்ளவும் தள்ளிவிடவும் அதிகாரம் இருப்பதால் ஒரு திட்டமில்லாமற்போய் பிள்ளைகளும் உபாத்தியார்களும் தடுமாறுவார்களென்று ஒரு சந்தேகம் ஜனிக்கலாம். இதற்காகவென்று ஸின்டிகேட்டார் சில நிபந்தனைகள் காலேஜ் அதிகாரிகளுக்கு ஏற்பாடு செய்யப்போகிறார்கள்.

வேறு சில ஆக்ஷேப ஸமாதானங்களுண்டு. ஆனால் அவைகளைப்பற்றி இந்த ஸமயத்தில் விவரித்தெழுத அவகாசமில்லை. ஸ்தூலமாய் முன்னிருந்த கெடுதல்களையும் அதை நீக்கப் புது ஏற்பாட்டிலிருக்கும் குணங்களை மட்டும் சொன்னாற் போதுமென்று அபிப்பிராயம். பழகாத விஷயங்களில் ஜனங்களுக்குச் சாதாரணமாய் சந்தேகமும் பயமும் இருப்பது சகஜந்தான். ஆனால் புத்திமான்களும் படித்தவர்களுமான உபாத்தியார்களும் ஸ்கூல் மானேஜர்களும் இந்த ஸ்கூல் முடிவு ஸர்டிபிகேட் என்கிறதின் ஸ்வரூபத்தையும், ரீதியையும் நன்றாய் மனதில் வாங்கி அக்கறையுடனும் பூர்ண சம்மதத்துடனும் நடத்துவார்களானால் ஹை ஸ்கூல் படிப்புக்கே நல்ல கதி உண்டாய் நம் தேசத்திற்கும் சிறப்புண்டென்று தைரியமாய்ச் சொல்லலாம்.

வி. எஸ். ஸ்ரீநிவாஸன்.

NITROGEN IN MANURES

BY

P. S. MINAKSHISUNDARAM, B.A., D.A.,

Agricultural Chemist, Messrs. Parry & Co.

உரங்களில் நைட்ரஜன்.

◆

போன நவம்பர் மாஸத்து ஸஞ்சிகையில் வெடியுப்பு வாயு என்று சொல்லப்படும் நைட்ரஜன் எல்லாப்பயிர்களுக்கும் அவசியம் என்றும், ஒவ்வொரு சாகுபடிக்குப் பிறகும் அது முன் இருந்ததைவிட மாகூல் அறுவடையானதும் குறைந்திருக்கும் என்றும், ஆகையால் நிலம் நன்றாய் விளையவேணுமானால் நைட்ரஜனுள்ள உரங்களை எருவாகப் போடவேணுமென்றும் சொன்னேன். எந்தெந்த எருக்களில் எவ்வெவ்வளவு நைட்ரஜன் இருக்கிறதென்று இப்பொழுது பார்ப்போம்.

நைட்ரஜனை பயிர்களுக்கு உணவாகக் கொடுக்கக்கூடிய சரக்குகளுக்கு நைட்ரஜன் உரங்கள் என்று சொல்லலாம். இந்த நைட்ரஜன் உரங்களை அவைகளில் அடங்கிய நைட்ரஜனின் நிலைமைக்குத் தக்கபடி, நைட்ரேட் உப்புகள் என்றும், அம்மோனியா உப்புகள் என்றும் பிராணி, ஸ்தாவர சம்பந்தமான சரக்குகள் என்றும் மூன்று வகைகளாக பிரிக்கலாம். நைட்ரேட் உப்புகளிலுள்ள நைட்ரஜனுக்கு, நைட்ரிக்நைட்ரஜன் அல்லது நைட்ரேட் நைட்ரஜனென்றும், அம்மோனியா உப்புகளிலுள்ள நைட்ரஜனுக்கு அம்மோனியா நைட்ரஜனென்றும், பிராணி, ஸ்தாவர சம்பந்தமான நைட்ரஜன் உரங்களிலுள்ள நைட்ரஜனுக்கு ஆர்கானிக் நைட்ரஜனென்றும் சொல்லுகிறார்கள். நைட்ரேட் உப்புகளில்முக்கியமானது நைட்ரேட் ஆப் ஸோடா. இது தென்அமெரிக்காவிலுள்ள 'சிலி' தேசத்தில் ஏராளமாய்க்கிடைக்கிறது. அந்த தேசத்திலிருந்தே இதர தேசங்களுக்கு அனுப்பப்படுகிறது. இது ரஸாயந முறையில் வெடியுப்பை யொத்தது. அதன் நிமித்தம் இதை 'சிலி' தேசத்து வெடியுப்பு என்று சொல்லுகிறார்கள். இதில் 100-க்கு 15½ முதல் 16 வரையில் நைட்ரஜன் இருக்கிறது. நைட்ரேட் ஆப் பொடாஷ் என்ற வெடியுப்பும் ஒரு முக்கியமான உரந்தான். இது நமது தேசத்தில் விசேஷமாய்க் கிடைக்கிறது. வெடியுப்பில் நைட்ரஜனோடு பொடாஸியம் என்ற மற்றொரு பயிருணவு சத்தும் இருக்கிறது. ஆனால் இது வெடி மருந்து செய்வதிலும் உபயோகப்படுத்தப்படுகிறபடியால் விலை கிராக்கியாயிருக்கிறது. வெடியுப்பில் 100க்கு 11 முதல் 13 வரையில் நைட்ரஜனும், 38 முதல் 40 வரை பொடாஸியம் என்ற மூலவஸ்து அடங்கிய பொடாஷ் என்னும் சத்தும் இருக்கிறது.

அம்மோனியா உப்புகளும் சற்றேறக்குறைய நைட்ரேட் உப்புகளைப்போன்றவைகளே. அம்மோனியா உப்புகளில் முக்கியமானது ஸல்பேட் ஆப் அம்மோனியா. இது நமது தேசத்தில் பம்பாய் கல்கத்தாவிலுள்ள 'காஸ்வொர்க்ஸ்' அதாவது சில வகை வாயுக்கள் தயார் செய்யப்படும் சாலைகளில் தயார் செய்யப்படுகிறது. இதில் 100-க்கு 20½ வரையில் நைட்ரஜன் இருக்கிறது. நைட்ரேட், அம்மோனியா உப்புகளை வளருகிற பயிரில் கொஞ்சங் கொஞ்சமாய்த் தண்ணீரில் கரைத்து தெளிப்பது நலமாயிருக்கும்.

பிராணி ஸ்தாவர சம்பந்தமான நைட்ரஜன் உரங்கள் அநேகம். அவைகளில் பிண்ணாக்குகள் முக்கியமானவைகள். மணிலாக்கொட்டைப் பிண்ணாக்கில் 100-க்கு 7 முதல் 9 வரையிலும், ஆமணக்குப்பிண்ணாக்கில் 4 முதல் 6 வரையிலும், வேப்பம் பிண்ணாக்கிலும், புன்னைப்பிண்ணாக்கிலும் 3 முதல் 4 வரையிலும், பின்னைப் பிண்ணாக்கிலும், இலுப்பைப் பிண்ணாக்கிலும் 1 முதல் 3 வரையிலும், நைட்ரஜன் இருக்கிறது. இலுப்பைப்பிண்ணாக்கை அறப்பாக உபயோகிக்கிறார்கள். எலும்புத்தூளில் 100க்கு 4 பங்கும் எலும்பிலிருந்து எடுக்கப்படுகிற ஜவ்வுகளில் 10 முதல் 12 வரையிலும், காய்ந்த ரத்தத்தில் 10 முதல் 15 வரையிலும் நைட்ரஜன் இருக்கிறது. ஆடுமாடுகளின் குளம்பு, கொம்புகளில் 10 முதல் 15 வரையில் நைட்ரஜன் இருந்த போதிலும், அவைகளைத் தூளாக்குவது கஷ்டம். தவிரவும் அவைகள் வேறுவேலைகளில் உபயோகமாகின்றன. சாதாரணமாய் சமுசாரிகள் உபயோகிக்கிற தொழு எருவில் 100-க்கு அரைப்பங்கு நைட்ரஜனும், தழை எருவில் 100 க்கு 1 பங்கு நைட்ரஜனும் இருக்கிறது.

நைட்ரஜன் தழையை விருத்திபண்ணுகிற சத்து. செடிகள் நன்றாய்க் கொழுத்துதளிர்த்து வளருவதற்கு நைட்ரஜன் வேண்டிய அளவு நிலத்திலிருக்க வேண்டும். நைட்ரஜன் குறைவாயிருந்தால் செடிகள் கொஞ்சம் வெளுத்தால் போலிருக்கும். அப்பேர்க்கொத்த செடிகளின்மேல் கொஞ்சம் நைட்ரேட்டையாவது, அல்லது அம்மோனியா உப்பையாவது தண்ணீரில் கரைத்து தெளித்து விட்டால் இரண்டு மூன்று தினத்துக்குள் கொழுத்த பச்சை நிறமாக மாறிவிடும். நைட்ரஜன் அதிகமாயுள்ள நிலங்களில் எந்தப்பயிரும் அதிகமாய்த் தழைக்கும். தேயிலை, வெற்றிலை, புகையிலை போன்ற தழைப்பயிர்களுக்கு, மற்ற தானியம், காய், கிழங்கு முதலிய பயிர்களைக் காட்டிலும் நைட்ரஜன் அதிகமாய் உபயோகிக்கவேண்டும்.

பி. எஸ். மீனாக்ஷிசுந்தர சாஸ்திரி.

SOUTH INDIAN AGRICULTURE

BY

S. K. NARAYANASAMI MUDALIAR.

தென்னிந்தியாவின் வேளாண்மைத் தொழில்.

◆

கிருஷித்தொழில் அபிவிர்த்தியடைவதற்கு வேண்டிய வழிகள் இந்தக்காலத்தில் அநேகமிருக்கின்றனவென்பது வாஸ்தவமே. ஆனால் அந்தவழிகளை அறியக்கூடியவர்கள் இந்து தேசத்தில் சொற்பப்பெயர்கள்தான் இருப்பார்களென்பது நமது நம்பிக்கை. எந்த வகைத் தொழிலுக்கும் முதல்காரணம் அறிவு. அறிவுடன் செய்யும் எந்தத்தொழிலும் அபிவிர்த்தியடையும். ஆகையால் கிருஷித்தொழில் இந்துதேசத்தில் வளர்ந்தோங்கவேண்டுமானால், அந்த தொழிலுக்கேற்ற அறிவுடையவர்கள் அந்த தேசத்திலிருக்கவேண்டியது அவசியம். இந்தியாவிலுள்ள கிருஷிகர்களுக்குத் தொழில் கல்வி கிடையாது, அதில் கைதேர்ந்த பழக்கமும் கிடையாது. தக்கவிதத்தில் தூண்டுதலும் ஒத்தாசையும் இருந்தாலல்லாமல் ஐரோப்பிய தேசங்களைப்போல் இந்துதேசம் முன்னுக்கு வருவது மிகவும் பிரயாசம். வம்ச பரம்பரையாய் இந்துதேசத்து வேளாண்மைத் தொழிலாளிகள் மிக்க தரித்திரர்களாகையால், அவர்கள் தாங்களாகவே சுதாவில் பெருத்த விஷயங்களை மேற்போட்டு நடத்துவதற்கு அசக்தர்களாயிருக்கிறார்கள். இந்து தேசத்தில் வேளாண்மைத்தொழில் அபிவிர்த்தியடையாமலிருப்பதற்குக் காரணம் முக்கியமாய் தரித்திரம் ஒன்றே என்று சொல்லலாம். கிருஷிகர்களுக்குக் கல்விப்பயிற்சியில்லை என்று சொல்வதுகூட ஒரு தகுந்த காரணமல்ல. உழவுத்தொழிலுக்கு அதிகமான கல்விப்பயிற்சி வேண்டுமென்கிற அவசியமில்லை. இரும்புக் கலப்பைகளாலும், நீராவியந்திரக்கருவிகளாலும் உழவுத்தொழில் செய்யும் விதத்தை எவர்களும் எளிதில் கற்றுக்கொள்ளக்கூடும். இப்படிக் கற்றுக்கொள்ளுவதற்கு ஒருவன் கைத்தொழில் சாலைகளிலே போய் ஒருவருஷம் இரண்டுவருஷம் தாமதிக்க வேண்டுமென்கிற கட்டாயமில்லை, அப்படித்தாமதித்த

போதிலும் கெடுதலொன்றுமில்லை. பூஸாரத்தின் தன்மையை யுணர்ந்து அதற்குத் தகுந்தால்போல் கிருஷித்தொழில் செய்வது மெத்த அனுகூலமானாலும், இந்து தேசத்துக் கிருஷிகர்கள் இந்த விஷயத்தை அவ்வளவாகக் கவனிக்கவேண்டியதில்லை. வம்ச பரம்பரையாகவே இந்துதேசத்துக் கிருஷிகர்களுக்கு இந்த விஷயத்தில் ஒருவித அனுபவமும், பழக்கமுமிருக்கிறபடியால், தற்சமயம் அவர்களுக்கு அந்த இரண்டுமே போதுமானவை. இந்திந்த பூமியின் இயல்பு இன்னின்னமாதிரி என்கிற அனுபவமும், அவைகளில் இன்னகாலத்தில் இன்னவிதமாகப் பயிர் செய்ய வேண்டுமென்கிற பழக்கமும், இன்ன தானியங்கள் விதைத்தால் இவ்வளவு விளையுமென்கிற அறிவும் அவர்களுக்கு எந்தக்காலத்திலுமுண்டு. இந்த வித அறிவையொட்டி இங்கிலீஷ்காரர், பிரான்சுக்காரர் என்கிற தேசத்தவர்களால் உழவுத்தொழிலுக்கு முக்கிய சாதனங்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் கருவிகளையும் தங்கள் கிருஷித்தொழிலுக்கு ஆதாரமாகக் கொண்டு அந்தத் தொழில் நடத்துவார்களேயானால், முன்னைவிட அதிகமான லாபத்தை அவர்கள் அடைவார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த விதமாக லாபம் உண்டென்றும் சங்கதி இந்து தேசத்திலுள்ளவர்களுக்குத் தெரியுமா அல்லது தெரியாதா என்று கேட்டாலோ ஒருவருக்கும் தெரியாதென்று சொல்லுவதற்கு வகையில்லை. கிருஷித்தொழிலுக்குரிய கருவியின் பயனையும், மற்ற சங்கதிகளையும் செவ்வையாகக் கற்றுணர்ந்தவர்களும் இருக்கிறார்கள், கேட்டிருப்பவர்களுமிருக்கிறார்கள், பார்த்திருப்பவர்களுமிருக்கிறார்கள். இந்த விதமாக லாபம் உண்டென்கிற சங்கதிகளை அறிந்திருப்பவர்களிருந்தும் கிருஷிசம்பந்தமான விஷயங்களில் இரும்புக்கலப்பைகளையும் மற்ற யந்திரக் கருவிகளையும் ஏன் அவர்கள் உபயோகிக்கிறதில்லை.

கிருஷி முறைமைகளை அறிந்திருப்பவர்களுக்கு கையில் பணமில்லை. பணமிருப்பவர்களுக்கு மனமில்லை. ஆகையால் எல்லாவிஷயங்களும் பொருந்தியுள்ள கிருஷிகர்கள் இந்து தேசத்தில் வெகுபெயர்களில்லை. வாஸ்தவத்தில் அநேகர் ஏழைகளே. ஆள் ஒன்றுக்கு ஒரு ஏகரா, இரண்டு ஏகரா, மூன்று ஏகரா என்று சொல்லும்படிக்கு சொல்ப நிலங்களையுடைய கிருஷிகர்கள் அநேகரிருக்கிறார்கள். இரும்புக் கலப்பைகளும் நீராவி யந்திரக்கருவிகளும் வாங்குவதற்கு அவர்களுக்கு வகை ஏது? ஏழைக் கிருஷிகர்கள் சர்க்காருக்கு வரி செலுத்தி அரைக்கஞ்சி குடிப்பதே அரிதாயிருக்கிறது. கடன் வாங்கியாகிலும் கிருஷியை அபிவிர்த்தி செய்யலாமென்றால், கடன் கொடுப்பதற்கும் ஆள்களில்லை. மேலும் யந்திரங்கள் வேண்டுமானால் இங்கிலாந்திலிருந்து வரவழைக்க வேண்டியதாகின்றது. அன்றியும் ஒவ்வொன்றுக்கும் விலையதிகம். இப்படி அதிகவிலை கொடுத்தாகிலும் வாங்கலாமென்றால், எப்போதாவது தவறி ஒடிந்து போய்விடுமோவென்கிற பயம் ஒவ்வொருவர் மனதிலும் குடிகொண்டிருக்கிறது. இரும்புக் கலப்பைகளாவது, நீராவியந்திரக்கருவிகளாவது, அல்லது கிருஷித்தொழிலுக்குரிய மற்ற ஏனங்களாவது சீர் குலைந்துபோனால், அவைகளைச் சீர்ப்படுத்திக் கொடுப்பதற்கு வேண்டிய தொழிலாளிகள் இந்தியாவிலில்லை. இங்கிலாந்து முதலான தேசங்களில் ஆயிரம் மணங்கு இரும்பை ஒரே காலத்தில் உருக்குவதற்குரிய ஆள்கள் இருக்கிறார்கள். மேலும் ஆங்கிலேய தேசத்துத் தொழிலாளிகள் ஓர் யந்திரத்தை வெகுநேர்த்தியாகவும், மிக்க அழகாகவும் தோன்றும்படிக்குச் செய்வார்கள். இந்துதேசத்திலுள்ள தொழிலாளிகள் செய்யும் வேலை ஆங்கிலேய தேசத்தவர்களது வேலைகளைப்போல் அவ்வளவாக நேர்த்தியாகவும், அழகாகவும் இருக்கிறதில்லை. கலப்பைக்கு ஒரு கொழுசெய்தால், அதில் எட்டுக் கோணல்கள் இருக்கின்றன. இவ்வளவு புத்திசாதுரியத்தையுடைய தொழிலாளிகள் பெரிய இரும்புக்கலப்பைகளையும் நீராவி யந்திரக்கருவிகளையும் சீர்ப்படுத்துவதெளிதோ? மேல்சொன்ன காரணங்கள் பற்றியே இந்து தேசத்துக் கிருஷித்தொழிலாளிகள் இங்கிலாந்து, ப்ரான்ஸ் முதலான இடங்களில் செய்யப்படும் கலப்பைகளையும் நீராவியந்திரக்கருவிகளையும் விலைக்கு வாங்கித் தங்கள் தொழிலுக்கு உபயோகிக்கிறதில்லை.

சி. கு. நாராயணசாமி முதலியார்.

SELECTIONS.

விசேஷத்திரட்டு.

THE EXPORT OF MANURES FROM INDIA

BY

MR. W. H. HARRISON,

Agricultural Chemist.

இந்தியாவிலிருந்து எரு வகைகளின் ஏற்றுமதி.

சாகுபடியாகும் எல்லா நிலங்களிலும் பயிர்களுக்கு உணவாக உபயோகப்படும் வஸ்துக்கள் இருக்கின்றன. இவைகளில் கொஞ்சபாகம்தான் பயிர்களுக்கு அப்போதே ஆகாரமாகக் கூடிய பக்குவத்தில் இருக்கிறது. மற்றப்பாகம் அப்படி உடனே உபயோகப்படாமல், நிலத்தில் தங்கி அனேக வருஷகாலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக பக்குவமடைந்து, பயிர்களுக்கு நாளாவட்டத்தில் உபயோகப்படக்கூடியதாயிருக்கின்றது. முன் பயிரிடப்படாமல், வளம் மிகுந்திருக்கும் புதுநிலத்திலிட்ட பயிர்களில் அதிகமான விளைவு கிடைக்கிறதென்றும், அந்த நிலத்திலிருந்து நாம் மாசூல் ரூபமாக அப்புறப்படுத்தும் உணவுப்பொருட்களை எரு ரூபமாகத் திரும்பவும் நிலத்தில் போட்டுவந்தால், அனேக வருஷங்களுக்கு அந்த நிலத்தில் கிடைக்கும் மாசூல் குறைவுபடாமலிருக்குமென்றும், அனேக இடங்களில் அனுபவ பூர்வமாகக் கண்டிருக்கிறோம். அப்படி எருவிடாமல் அந்த நிலத்தில் பயிரிட்டுவந்தால் விளைவு கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்து கொண்டேவரும். இப்படி சில வருஷங்களாய்க் குறைந்துகொண்டுவந்தபின், கடைசியாய்க் கிடைத்த விளைவைவிடக் குறையாமல் ஒரு நிதானத்தை அடைந்து, அதே அளவு மாசூல் பின்னால் விளைந்துகொண்டிருக்கும். இப்படி நிலங்கள் தாழ்ந்த மாசூல் நிதானத்தை அடைந்தபின்; அவைகளில் அந்தந்த போகத்தில் பக்குவப்பட்டுவரும் உணவுப்பொருள்களே பயிர்களுக்கு ஆகாரமாக உபயோகப்பட்டுவரும். இந்து தேசத்திலுள்ள அனேக நிலங்களுக்குச் சரிபூர்ணபடி எருவிடாமலிருக்கும் காரணத்தால், அவைகளில் தாழ்ந்த நிதானமுள்ள மாசூல்தான் விளைகிறது. ஜன்சங்கியை வெகு சீக்கிரத்தில் விர்த்தியடைந்துவருவதால் பயிர் செய்வோர்கள் தங்கள் நிலங்களின் விளைவை அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகும். தற்காலத்தில் இந்தியாவிலிருந்து அயல்தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் அதிகவிலையுள்ள ஏராளமான எருவகைகளை இங்கேயே அதிகமாய் உபயோகித்து வருவதினாலேயே நிலங்களின் விளைவை அதிகப்படுத்தலாம்.

நிலத்திலுள்ள பயிருணவுப் பொருள்களே கிருஷிகருடைய முதலாக இருக்கிறது. ஆகையால் இந்தத் தேசத்திலுள்ள நிலங்களின் விளைபொருள்களை அயல்தேசங்களுக்கு அனுப்பிவிட்டு, அவைகளுக்கு ஸரியான அளவுக்கு எருவிடாமல் விட்டுவிடும் வழக்கமானது ஏறக்குறைய சில வருஷங்களில் கிருஷிகரின் ஸ்திதி வெகுவாய்த் தாழ்வடையவும், அவர்களின் நிலங்கள் வளங்குறைந்து கேவலமடையவும் ஹேதுவாயிருக்கும். விவசாயமே முக்கிய ஜீவனாதாரமாயிருக்கும் தேசங்களில் இப்படிப்பட்ட வழக்கம் தேசத்தின் செல்வம் முழுவதையும் குறைத்துவிடும்.

தற்காலத்தில் தென்னிந்தியாவில் இப்படி தேசவளத்தைக் குறைக்கும் காரியம் நடந்துகொண்டிருக்கிறது. அதிக விலைமதிப்புள்ள எருவகைகள் இடைவிடாமல் இந்தத்தேசத்திலிருந்து வெளிப்பட்டு அயல்தேசங்களின் நிலங்களை வளமடையச் செய்கின்றன. இந்தத்தேசத்து நிலங்களுக்கு கிருஷிகர்போடும் எரு மிகக்குறைவு. இந்த விதமாய் விளைபொருள்களை ஏற்றுமதிசெய்யும் முறையானது அதிகக் கெடுதியை யுண்டாக்கக்கூடியது. இந்த தேசத்துக்கும், அயல்தேசங்களுக்கும் தற்காலத்தில் நடந்துவரும் வியாபார நன்மைக்குக் கெடுதியில்லாமல், எம்மட்டுக்கு செய்யக்கூடுமோ அம்மட்டுக்கு, இந்த தேசத்தின் கைம்முதலுக்கு சரி சமானமாயுள்ள விளைபொருள்களை அயல்தேசங்களுக்கனுப்பாமல் இங்கேயே செலவாகும்படிக்கான எல்லா வகையான ஏற்பாடுகளும் செய்யவேண்டும்.

பயிர்கள் நிலத்திலிருந்து எடுத்துக்கொள்ளும் பயிருணவுப்பொருள்கள் அனேகவித ரூபங்களாக மாறுகின்றன. அவைகளில் அனேகம் எருவாக உபயோகிக்க லாயக்காயிருக்கின்றன. சிலபாகத்தை ஜீவஜெந்துக்கள் உண்கின்றன. அது அவைகளின்

சரீராம்ஸமாகவும், கோமியம், கோமூத்திராதிகளாகவும் மாறுகின்றது. சிலபாகம் சில பயிர், செடிமுதலியவைகளின் வித்துக்களாகின்றன. மற்றும் ஒருபாகம் மழைத்தண்ணீரிலும், பாய்ச்சல் தண்ணீரிலும் கரைந்து, மண்ணிலிருந்து அப்புறப்பட்டுக் கழிவு தண்ணீரில் சேர்ந்து, கடைசியில் சமுத்திரத்தையடைந்து, அங்குள்ள மீன்களுக்கும், சமுத்திரச் செடிகளுக்கும் ஆகாரமாகின்றது.

இந்த வஸ்துக்களிலெல்லாமிருந்து சேர்த்தியான எருப்பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன. இந்த விதமாக ஜீவஜெந்துக்களிலிருந்து எலும்புகளும், தைல வித்துக்களிலிருந்து பிண்ணாக்கு வகைகளும், மச்சங்களிலிருந்து மீன் எருவும் கிடைக்கின்றன. இந்த வஸ்துக்கள் ஏராளமாக வருஷா வருஷம் சென்னை ராஜதானியிலிருந்து ஏற்றுமதியாகின்றன.

1907—08-ம் வருஷத்தில், 4;30,000 ரூபாய் பெறுமான எலும்புகளும், 7½ லக்ஷம் ரூபாய் பெறுமான மீன் எருவும், 15 லக்ஷம் ரூபாய் பெறுமான பிண்ணாக்கு எருவும், 28 லக்ஷம் ரூபாய் பெறுமான கால்நடைகளுக்கு உணவாக உபயோகப்படும் பிண்ணாக்கு வகைகளும், ஆக 54,80,000 ரூபாய் பெறுமான வஸ்துக்கள் ஏற்றுமதியாயின. இப்படியிருக்க கால் லக்ஷம் ரூபாய் பெறுமான எருவகைகள்தான், மற்ற தேசங்களிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாயின. இப்படி யுண்டான ஏற்றுமதி இறக்குமதிகளுக்குள்ள பேதம் பெரிதாயிருக்கிறது. இதைத் தவிர அயல் தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் தைல வித்துக்களையும் சேர்த்துக்கணக்கிட்டால் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமுள்ள வித்தியாசம் மிக்கப் பெரிதாகும். ஏனென்றால் அவைகளிலிருந்து அதிக உபயோகமுள்ள பிண்ணாக்கு செய்யப்படுகிறது அந்த வருஷத்தில் ஏற்றுமதிசெய்யப்பட்ட தைல வித்துக்களின் மொத்த விலை மதிப்பு 169 லக்ஷம் ரூபாயாகிறது. இவ்விதமாக இந்த ராஜதானியிலிருக்கும் நிலங்கள் ஒவ்வொரு வருஷமும் அடையும் நஷ்டம் சுமார் இரண்டு கோடி ரூபாய் விலைமதிப்புள்ளதாயிருக்கிறது.

எலும்புத்தூள், எலும்பு எருவகைகள், பிண்ணாக்கு எருவகைகள், மீன்எரு முதலாகிய இந்த நாட்டு எருப்பொருள்களை இங்கேயே முன்னிலும் அதிகமான அளவுக்கு உபயோகப்படுத்துவதால், மேற்சொன்னபடி யுண்டாகும் அதிகமான கெடுதியை நிவர்த்திக்கக்கூடும்.

எலும்புத்தூளை புன்செய் சாகுபடியில் உபயோகித்தால், அது பக்குவமடைந்து, பயிர்களுக்கு உணவாவதற்குக் காலதாமதப்படுவதாயிருந்தாலும், நன்செய் சாகுபடியில் உபயோகித்தால் அதைவிட சீக்கிரத்தில் பயிருணவாகிறது. மேலும் “போட்டாஷ் எரு” என்று சொல்லும் சாம்பல்காரத்துடன் கலந்தால், அந்தக்கலப்புப் பொருள் பயிர்களுக்கு அவசியமான எல்லா உணவுப்பொருள்களையும் கொடுக்கக்கூடிய “ஸம்பூர்ண எரு” வாகிறது. இந்தக்கலப்பெருவானது நெற்பயிருக்கு அதிக பயன் தருவது என்று நிரூபிப்பதற்கு போதுமானமட்டிலும் வேண்டிய ஆதாரம், விவஸாய இலாகா அதிகாரிகளால் சேகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ராஜதானியில் எலும்புத்தூள் அனேக தரங்களாக செய்யப்படுகிறது. மேலும் “எலும்பு ஸூபர்பாஸ்பேட்” என்னும் எருவும் இப்போது செய்யப்படுகின்றது. இந்த எரு வகைகள் கிருஷிகருக்கு அதிகமாய்த் தேவையாகும்போது, எலும்புத்தூள் செய்யும் வியாபாரம் அதிகமாக விர்த்தியடையக்கூடும். “எலும்பு ஸூபர்பாஸ்பேட்” அனேக பயிர்களை சீக்கிரத்தில் வளரச்செய்து பலன் கொடுக்கச்செய்யும் எருவாகும்; மேலும் அதைப்புன்செய் சாகுபடியிலும் உபயோகிக்கலாம்.

இந்த ராஜதானியின் சமுத்திரக்கரையோரத்திலிருந்து அளவற்றமீன் எருவை வேண்டுமானால் தருவித்துக்கொள்ளலாம். இப்படி இங்கே கிடைக்கும் மீனானது, அந்தக் கரையோரத்து ஜில்லாக்களிலுள்ள நிலங்களுக்கு, போதுமான அளவுக்கு சகாயமானதும், அதிக உபயோகமுள்ளதுமான எருவைத்தரக்கூடியதாயிருக்கிறது. மீன்களிலுள்ள எண்ணெய் சத்தை நீக்கிவிட்டால் அந்த எருவானது எலும்புத்தூளைவிட அதிக சீக்கிரத்தில் பயிருணவாகின்றது. மேலும் எலும்புத்தூளைப்போலவே மீனையும் சாம்பல்கார உப்புக்களுடன் கலந்தால் அவை “ஸம்பூர்ண எரு” வாகின்றன. இந்த தேசத்து மீன் எருவை ஜப்பான் தேசத்தில் முக்கியமாக வாங்கி உபயோகிப்பதனாலேயே இந்த எருவின் விசேஷ உபயோகம் வெளியாகின்றது.

சென்னை ராஜதானியில் பலவிதப் பிண்ணாக்குகள் செய்யப்பட்டு, உரமாக ஏராளமாய் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. என்றாலும், பிண்ணாக்குகளை ஆடுமாடுகளுக்குத் தீனியாகவும், உரமாகவும் இன்னும் அநேகர் அதிகமாக உபயோகப்படுத்த இடமிருக்கிறது. எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகப் பிண்ணாக்குச் செலவாகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு தென்னிந்தியாவில் எண்ணெய் இறக்குதல், எண்ணெய் ஏற்றுமதி செய்தல் ஆகிய இந்தக் கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் பலவிதத்திலும் அனுகூலங்கள் ஏற்படும். பயிர்களுக்கு உணவாவதற்கு முன்னால், எலும்புத்தூள், மீன்எரு முதலியவைகளைப்போலவே பிண்ணாக்கும் நன்றாய் மக்கியிருக்கவேண்டும். ஆகையினால் அது அதிக நாள் சென்று பயிருணவாகும் உரங்களின் இனத்தைச் சேர்ந்தது. உரமாக உபயோகமாகும் சத்தைத் தவிர, மக்கி இந்திரிய வஸ்துவாக மாறும் கரியமில ஸத்தும் அதில் ஏராளமாயிருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள நிலங்களுக்கு, “ஹ்யூமஸ்” என்று சொல்லப்படும் மக்கின இந்திரிய வஸ்துவின் முக்கிய பிரயோஜனத்தை அதிகமாக எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? நிலங்களுக்கு மிகவும் உயர்ந்த உரமாக உபயோகப்படும். இந்த ஒரு காரணமே, பிண்ணாக்குகளை வெளித்தேசங்களுக்கு அனுப்பாமல் நம்தேசத்திலேயே உபயோகப்படுத்துவதற்குப் போதுமான ஆதாரமாகும்.

இந்தியாவிலுள்ள எலும்புத்தூள், மீன் உரம் ஆகிய இவைகளை வாங்கி, ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள தங்கள் தேசங்களுக்குக் கொண்டு போவதற்கு வேண்டிய செலவையும் செய்து, அவைகளை நிலங்களுக்கு உரமாகப்போட்டு, ஜப்பான், ஆஸ்ட்ரேலியா முதலிய தேசத்து விவஸாயிகள், லாபம் சம்பாதிக்கும். போது, நம்முடைய தேசத்து விவஸாயிகள் பிண்ணாக்குகளை வெளிதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யாமல், தங்கள் நிலங்களுக்கே உரமாக உபயோகித்தால், அதிக லாபம் பெறலாமென்று சொல்லவும் வேண்டுமோ? இந்த முக்கியமான விஷயங்களை விவஸாயிகளுக்குப் போதிப்பதில் பெருமுயற்சி செய்து, இந்த இயற்கை உரங்களையே ஏராளமாய் எல்லாரும் உபயோகிக்கும்படி தூண்டுவது படித்த ஒவ்வொருவனும் செய்யவேண்டிய முக்கிய கடமையாகும்.

டப்ளியூ. எச். ஹாரிசன்,
விவஸாய ரஸாயன சாஸ்திரி.

SEED RATE IN RAGI CULTIVATION.

கேழ்வரகு சாகுபடியில் செல்லும் விதையின் அளவு.

கேழ்வரகு மிகவும் உபயோகமுள்ள ஆகார தானியம். தேகத்தைப் போஷிக்கும் சத்தில் இது கோதுமைக்கு அடுத்த தரமுள்ளதாகச் சொல்லலாம். நெல்லைவிடக் கேழ்வரகு அதிகச் சத்துள்ள ஆகாரமாகின்றது. ஆகையால் சென்னை ராஜதானியில் இது அனேக இடங்களில் ஏராளமாய்ச் சாகுபடி செய்யப்படுகிறது. அதை விர்த்திசெய்யக்கூடிய அனேக வழிகளில் ஒன்றை இம்முறை கவனிப்போம்.

தற்காலத்தில் இறவையில் பயிரிடப்படும் கேழ்வரகைச் சாதாரணமாய் நாற்றுவிட்டு நடுகிறார்கள். **கொல்லைக்கேப்பை** அல்லது **புன்செய்க்கேப்பையை** மட்டும் புழுதியில் விதைத்துத் தண்ணீர் பாய்ச்சாமல் மழையின் உதவியால் விளைவாகும்படி விட்டு விடுகிறார்கள். சேலம் ஜில்லாவிலுள்ள சில இடங்களில் செவ்வல் நிலங்களை இரண்டு மூன்று தரம் கோடையில் உழுதுபோட்டு வைக்கிறார்கள். கிணற்றிறவையின் கீழ் பாத்திகளில் கேழ்வரகு நாற்றுவிட்டு வைத்திருந்து புரட்டாசி மாதம் மழை பெய்தவுடன் அந்த நாற்றைப் பிடுங்கி வைத்துக்கொண்டு, நடவேண்டிய நிலத்தைப் புழுதியில் உழும்போது அந்தப் படைச்சால்களில் ஒவ்வொரு நாற்றாய் ஒருவன் போட்டுக்கொண்டுபோக, மறுசால் உழும்போது அந்தமண் விழுந்து நாற்று நிலைபெற்று நடுகை செய்ததுபோலாகிறது. இவ்விதமாய்ப் புழுதியில் நட்ட நடுகைக்குத் தண்ணீர் பாய்ச்சுவதில்லை. அது ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அடிக்கடி பெய்யும் மழையின் உதவியால் வளர்ந்து விளைவடைகிறது.

இப்படி நடுகை செய்த பயிரினூடே உண்டாகும் களைப்பூண்டுகளை எடுத்தெறிவதற்காக அதில் பயிருழவு நடத்துவார்கள். இவ்விதமாகப் பயிருழவு செய்து களையெடுக்கும் முறையில் செல்லும்செலவு மிகவும் குறைவு. மழைகள் அடிக்கடியும் குறிப்பிட்ட காலத்திலும் பெய்யக்கூடிய இடங்களிலெல்லாம் இம்முறையை அனுசரிக்கலாம்.

இவ்விதமான நடுகைக்கும் சாதாரணமாக எல்லா இடங்களிலும் கிருஷிகர் செய்யும் நடுகைக்கும் தற்காலத்தில் ஒரு ஏக்கர் நிலம் நடுவதற்கு ஒரு சென்டு விஸ்தீரணத்தில் ஒரு பட்டணம் படி விதையை நாற்று விடுகிறார்கள். இப்படி நெருக்கமாய் விடுவதில் நாற்று திடமாய் உண்டாகாமல் ஊசித்தான் பிடித்து மேல் வருகிறது. நடுகைசெய்யும் கூலியாட்கள் இந்த நாற்றைப் பிடுங்கி நடும்போது திடமாயிருக்கும் நாற்றை நட்டுவிட்டு, சோர்ந்து நரைத்துப்போயிருக்கும் மெல்லிய நாற்றை தூரத்தில் வீசியெறிந்து விடுகிறார்கள். ஒரு ஏக்கர் நிலம் நடு

வதற்கு எவ்வளவு விதை அவசியமென்பதையும், அவ்விதையை எவ்வளவு விஸ்தீரணத்தில் விதைக்க வேண்டுமென்பதையும் பரிக்ஷை செய்துபார்த்ததில் பட்டணம் படிக்குக் கால்படி விதையை ஒரு செண்டு விஸ்தீரணத்தில் பாவினால் அந்த நாற்று ஒரு ஏக்கர் விஸ்தீரணம் நடுவதற்குப் போதுமானதாயிருக்கிறது. இதுவுமன்றி, உண்டாகும் நாற்று முழுவதுமே திடமுள்ளதாயிருக்கும். அந்த நாற்றை நடுவதில் கிடைக்கும் மேனியும் அதிகமாயிருக்கிறது.

சாதாரணமாக அநேக இடங்களில் கேழ்வரகு நாற்று ஜூன்மாதக் கடைசியிலும் ஜூலை மாத ஆரம்பத்திலும் பாவுவார்கள். அது நடுகையாகி விளைவடைந்து செப்டம்பர் மாத முடிவிலாவது அக்டோபர் மாத ஆரம்பத்திலாவது அறுவடையாகும். இந்தக் காலத்தில் சாதாரணமாக மழைகள் பெய்துகொண்டிருக்கும். ஆகையால் பயிர் அறுவடைக்கு முன் மழையில் அடிபட்டுத் தானியமும் வைக்கோலும் கெட்டுப்போகக் கூடியதாயிருக்கும். நாம் சொல்லுகிறபடியாய்க் குறைந்த அளவு விதைபாவிய நாற்று நடுகைசெய்தால் சாதாரணமாய்ப் பாவிய நாற்றுநட்ட பயிர் விளைவடையச் செல்லுங்காலத்தில் ஒரு வாரத்துக்கு முன் விளைவடையும். இப்படி முன் கூட்டி விளைவடைவதால் மாசூல் மழையில் அடிபடாமல் காக்கலாம். மாசூல் அதிகமாய்க் கிடைப்பதும் முன் கூட்டிவிளைவடைவதும் முக்கியமான அனுகூலங்கள். இத்துடன் விதையின் அளவு குறைவாய்ச் செல்லுவதும் ஒரு அனுகூலமாகும்.

ஆகையால் கிருஷிகர் ஒவ்வொரு செண்டுநிலத்தில் முக்கால்படி, அரைப்படி, கால்படி, அரைக்கால்படி விதையை வெவ்வேறாகப்பாவி அந்த நாற்றை நட்டு அதின் அனுகூலப் பிரதிகூலங்களைப் பரிக்ஷித்துப் பார்த்துக்கொள்ளலாம்.. நம்மனுபோகத்தில் ஒரு செண்டு நிலத்தில் கால்படிவிதை பாவிய நாற்று அதிக விசேஷமாய்ப் பலன் கொடுத்திருக்கிறது அந்தந்த இடத்தின் மண்பாங்குக்கும், சீதோஷ்ணத்துக்கும், காலஇயல்புக்கும், செய்நேர்த்திக்கும், எருவிடும் முறைகளுக்கும், நீர்ப்பாய்ச்சும் விதத்துக்குந் தக்கதாக விதைமுதல் சற்றுகூடியுங் குறைந்தும் இருக்கலாம். அப்படியிருந்தாலும் அங்கங்கே நாம் சொல்லும் பரிக்ஷையைக் கவனத்துடன் நடத்தினால் ஒரு ஏக்கர் நடக்குறைந்தது எவ்வளவு விதைதான் விதைக்கவேண்டும் என்னும் விஷயம் திட்டமாய்த் தீர்மானமாகும். இவ்விராஜதானி முழுவதிலும் சாகுபடியாகும் நிலங்களில் 100-க்கு 5½ பாகத்தில் கேழ்வரகு பயிராகின்றது. தென்னார்க்காடு, வடஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திரிச்சினாப்பள்ளி, மதுரைஜில்லாக்களில் இது முக்கியமாய்ச் சாகுபடியாகின்றது. இவ்விடங்களிலுள்ள கிருஷிகர் இவ்விஷயத்தை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.—கிருஷிகன்.

REVIEW OF THE PRESS.

பத்திரிகை ஆராய்ச்சி.

◆

THE NECESSITY OF GOOD SEEDS.

நல்ல வித்து அவசியம்.

◆

லங்கைக் “கமத்தொழில் விளக்க” த்தின் தைமாஸத்திய ஸஞ்சிகையில் நல்ல வித்து அவசியம் என்பதைப்பற்றி ஒரு வியாஸம் இருக்கிறது. நல்ல விளைவு, விதையின் குணத்தைப்பொறுத்தது என்று நம்முடைய விவஸாயிகள் அறிந்திருந்த போதிலும், விளையும் தானியத்தின் ஒரு பாதியை சாப்பாட்டுக்கு எடுத்துக்கொண்டு இன்னொரு பாதியை விதைத்தானியமாக பத்திரப்படுத்திவைத்து மறு வருஷத்தில் அதை உபயோகப்படுத்துகிறார்கள். இதனாலேயே விதைத்தானியத்தைப்பற்றி நம் விவஸாயிகள் அதிகக் கவலைப்படுவதில்லையென்று தெரியவருகிறது. ஆனால் ஐரோப்பா முதலிய தேசங்களிலோ, நல்ல விதைத்தானியங்களைப் பக்குவம்செய்து கொடுப்பதையே தொழிலாய்க்கொண்ட எத்தனையோ வர்த்தக சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கங்கள் நல்ல விதைகளைத்தயார்செய்து கொடுப்பதைத்தவிர புதியதானியவகைகளையும், வித்துக்களையும் சாஸ்திர முறையாய் உண்டாக்கியும், சம்பாதித்தும் வைத்திருந்து அவைகளை விவஸாயிகளுக்குள் பரவும்படியும் செய்கின்றன. விவஸாய, ரஸாயன சாஸ்திரங்களில் தேர்ந்தவர்களைக்கொண்டு பலபரிசோதனைகள் செய்து, இடத்துக்கும் காலத்துக்கும் தகுந்த முதல்தரமான வித்துக்களை விவாஸாயிகளுக்குக்கொடுத்து, விவஸாய அபிவிருத்தியில் பல சௌகரியங்கள் செய்கின்றன. மேலே சொன்ன விஷயங்களைக் கவனித்து விவஸாயிகள் நல்ல வித்துகளைப் பொறுக்கி எடுக்கவேண்டும். நல்ல வித்தின் குணங்களில் மூன்று முக்கியம். அவையாவன :—

I. போட்ட விதைகளெல்லாம் அநேகமாய் ஒன்று தவறாமல் முளைக்கவேண்டும். நம் விவஸாயிகள் விதைக்கும் விதைகளில் சுமார் அரைப்பங்கு முளைப்பதேயில்லை சுமார் 100 விதைகளில் 90 விதைகளாவது தவறாமல் நன்றாய் முளைப்பதுதான் நல்ல வித்து.

இந்த மாதிரி அதிக ஜீவஸத்துள்ள விதைகளில் இன்னொரு விசேஷமுண்டு. அநேகமாய் எல்லாவிதைகளும் ஒரேகாலத்தில் முளைக்கிளம்பி, ஒரேவிதமாய் வளர்ந்து, ஒரேகாலத்தில் பலனைத்தரும். ஒரேகாலத்தில் பயிர்செய்யப்பட்ட ஒரு நெல்வயலில், சில இளம் பயிராகவும், சில கதிர்கள்விட்டும், சில பால் பிடித்தும், சிலதானியம்முதிர்ந்து அறுவடைப் பருவத்திலும், இந்த விதமாகப் பயிர் பல பருவத்திலிருப்பதை நாம் காண்கிறோம். பயிர் இப்படி இருந்தால் ஒருபோதும் பூரணவிளைவு கிடைக்காது.

2 நல்ல விதையில் களைப்பூண்டு வித்துக்கள் இல்லாமல் இருக்கவேண்டும். விதைத்தானியத்தில் அரைப்பங்கு சாவியாயும், கொஞ்சம் இளம் விதையாயும், இன்னும் கொஞ்சம் மண்ணாங்கட்டி, குப்பை கூளங்களுள்ளதாயும் இருந்தால், குதிரைவாலி, கோழிச்சூடன் முதலிய களைப்பூண்டுகளும் பயிரோடுவளர்ந்து, களையெடுப்பதில் பணச் செலவுண்டாக்கி நன்றாய் விளையாமல் பெருத்த நஷ்டமுண்டாக்கும்.

3. விதைத்தானியம் வெவ்வேறு விதமான ஜாதியைச்சேர்ந்த விதைகள் கலப்பில்லாமல், ஒரே ராசியாய் இருக்கவேண்டும். வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த விதைகளாயிருந்தால், சில முன்னால் முளைகிளம்பியும், சில அதிகமாய் வளர்ந்தும், சில இளம் பயிராயிருக்கும்போதே வேறு சில அறுவடையாகும் தருணத்தையடைந்தும், தண்ணீர் கட்டுவதிலும் களைபிடுங்குவதிலும், நாற்று நடுவதிலும், அறுவடையிலும் பல விதமான கஷ்டமும் நஷ்டமும் உண்டாக ஹேதுவாகும்.

மேலே சொன்னவிஷயங்களை விவஸாயிகள் நன்றாய்க்கவனித்து, நல்ல ஜீவஸத்துள்ளதாயும், களைப்பூண்டு வித்துக்களில்லாமல் சுத்தமானதாயும், ஒரே ஜாதியைச் சேர்ந்ததாயும் உள்ள விதையைப் பார்த்துப் பொருக்கி விதைத்தால் நல்ல விளைவுண்டாகி அதிக லாபம் கிடைக்கும்

——0:0——

“கிருஷிகன்” பத்திரிகையின் பிப்ரவரிமாஸ சஞ்சிகையில் “நெல் சாகுபடியில் சில சீர்திருத்தங்கள்” என்னும் விஷயத்தைத் தவிர, “கால் நோய், வாய் நோய்”, “தொழு எருச்சேர்க்கும் விதம்”, “பனிக்குட்டங்கள்” “மக்காச்சோளம்”, “வாழை” என்பவைகளைப்பற்றிய வியாசங்களும், எழுதப்பட்டிருக்கின்றன.

MAT-PLAITING IN JAPAN.

ஜப்பானில் பாய் பின்னுதல்.

◆

மதுரை “செந்தமிழ்” ப்பத்திரிகையில் பாய்பின்னும் தொழிலைப்பற்றி ஒரு வியாஸம் காணப்படுகிறது. ஜப்பான், கைத்தொழிலின் பலத்தால் முன்னுக்கு வந்த தேசம். ஐரோப்பாக்கண்டத்திற்கு ப்ரிட்டன் அதாவது இங்கிலாந்து எப்படியோ, அப்படியே ஆசியாக் கண்டத்திற்கு ஜப்பான். ஜப்பான்தேசத்தில் கைத்தொழில் விஷயமாயுள்ள கொள்கைகளை நாம் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து, ஜப்பான் மாதிரிகளையும் கைக்கொண்டால் நமது தேசத்துக் கைத்தொழில் வெகுசீக்கிரத்தில் அபிவிருத்தியடையும். ஜப்பான் கைத்தொழில்களில் முக்கியமானதொன்று பாய்பின்னுந்தொழில். ஒவ்வொரு ஜப்பானிய வீட்டிலும் புருஷர்கள் ஸ்திரீகள், குழந்தைகள் ஆகிய எல்லாரும், வேறுவேலையுள்ளவர்களாயிருந்தால் ஒழிவுகாலங்களிலும், பலர் ஓயாமல் எப்பொழுதும் இந்தத்தொழிலையே செய்து வருகிறார்கள். 1907-ம் வருஷத்தில் ஜப்பானிலிருந்து அயல் நாடுகளுக்கு 8,760,000 ரூபாய் விலை மதிப்புள்ள கோரைப்பாய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனாலேயே ஜப்பானில் இந்தக் கைத்தொழிலின் அபிவிருத்தி வெளியாகிறது.

இந்தப்பாய்கள் ஒருவித கோரைப்புல்லுகளால் பின்னப்படுகின்றன. இந்தக் கோரைப்புல்லுகள் ஜப்பான் தேசத்து நெல் வயல்களின் ஓரங்களில் விசேஷமாய்ப்பயிராகின்றன. இவைகளை ஜப்பானியர்கள் தகுந்த உரம்போட்டு சாகுபடி செய்கிறார்கள். கோரைப்புல்லுகள் நன்றாய்விளைந்ததும் அவைகளை வெட்டி வெயிலில்காயப்போட்டு, அவைகளின் நீளத்தை அனுஸரித்துத் தரவாரியாய்ப் பிரித்து, அவசியமானால் சாயத்திலேயும் தோய்த்தெடுத்து, தறிகளின் உதவியால் பலவித அலங்காரமானபாய்களைப் பின்னுகிறார்கள்.

உபயோகமற்ற பாய்களை ஏற்றுமதி செய்து ஜப்பான் தொழிற்பெருமையைக் கெடுத்து விடாமற்படி பார்த்துக்கொள்ள 1905-ம் ௵த்தில் கவர்ண்மெண்டார் ஒரு இன்ஸ்பெக்டரை ஏற்படுத்தினார்கள். அவருடைய முயற்சியால் ஏற்றுமதி செய்யப்படும்

பாய்கள் அநேகமாய் நல்லவைகளாயும் உயர்ந்தவைகளாயும் இருக்கின்றன.

இந்தியாவிலும் பாய் பின்னுந்தொழில் இல்லாமல் போகவில்லை. சென்னைராஜதானியில் தென்னாற்காடு ஜில்லாவில் முக்கியமாய்ப் பறங்கிப்பேட்டை; கடலூர் முதலிய இடங்களிலும், தஞ்சாவூர் ஜில்லா சீகாழி தாலூக்காவிலுள்ள கொள்ளிடக்கரைக்கு இப்புறத்திலுள்ள ஆணிக்காரன் சத்திரம், மதுரை ஜில்லாவில் துருக்கர் வாசஸ்தானமாகிய தைக்கால் முதலிய இடங்களிலும், மலையாளத்தில் பாலக்காடு, கள்ளிக்கோட்டை, திருநெல்வேலிக்கடுத்த பத்தமடை போன்ற சில கிராமங்களிலும், இந்தப் பாய்வேலை வெகு நேர்த்தியாகவும், விதம் விதமாகவும் செய்யப்பட்டுப் பாயொன்று ரூபா 50, 60, 100, 150 வரையில் விலையில் மதிப்புப் பெற்றிருக்கின்றன. இந்தப்பாய்களில் பட்டுகள் சேர்த்து வெகு நேர்த்தியாய்ப் பின்னும் மாதிரி மிகுதியும் வியாபிக்கத்தகுந்தது. தினுசுக்குத்தகுந்தாற்போல விலை மதிப்பேறப்பெற்ற, ஒருமனிதன் படுக்கக்கூடிய அகலமும் நீளமுமுள்ள, ஒருபாயை உள்ளங்கையில் சுருட்டிமடக்கிவைத்துக் கொள்ளும்படியான அந்தஸ்தில் செய்யப்படுவதென்றால், நம் நாட்டுக் கைத்தொழிலைப்பற்றிக் கேட்பானேன். இந்த அருமையான பாய்களைத் தவிர கிராமங்கள் தோறுமுள்ள நிலங்களின் ஓரங்களில் யாதொரு எருவுமில்லாமல் தானாகவே, ஜலத்தில் வளர்ந்து கிடக்கும் கோரைப்புல்லுகளைக்கொண்டு நம் நாட்டு ஸ்திரீ புருஷர்களும் நேர்த்தியான கோரைப்பாய்களைப் பின்னி வீட்டுபயோகத்திற்குப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

ஆனால் இப்பொழுது சில வருஷங்களாக இந்தத் தொழிலைக் கவனிப்பாரே கிடையாது. ஜப்பான் கவர்ன்மெண்டாரைப் போல நமது கவர்ன்மெண்டாரும் இன்னும் பல முதலாளிகளும் தொழிலாளிகளும் சேர்ந்து இந்தத்தொழிலில் கவனம் செலுத்தி அபிவிருத்திக்குக்கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமென்று நிருபர் எழுதியிருக்கிறார். படுக்கைக்குக் கீழே ஜமக்காளங்களையும் கம்பளிகளையுமே உபயோகப் படுத்தும் வழக்கம் மும்மரித்து வருவதால் நிருபர் பேச்சு ஏறும் என்பது சந்தேகமாகத்தோன்றுகிறது.

IMPROVEMENTS IN IRRIGATION.
நீர்பாய்ச்சுவதில் சில சீர்திருத்தங்கள்.

“கிருஷிகன்” பத்திரிகையின் பிப்ரவரி மாஸத்து ஸஞ்சிகையில் நெல் சாகுபடி செய்யவேண்டிய விஷயமாய்ப் பேசும்பொழுது தண்ணீர் பாய்ச்சுவதில் செய்யவேண்டிய சில சீர்திருத்தங்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஆற்றுக்கால்களிலிருந்து தண்ணீர் வரவுள்ள குளங்கள், மானவாரிக்குளங்கள், ஆற்றுக்கால்களிலுள்ள மடைகள், ஆகிய இந்த மூன்று ஜலாதாரங்களின் உதவியால்தான் சாதாரணமாக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. சில இடங்களில் கிணற்றிறவையால் நெல் சாகுபடி செய்வதுமுண்டு. இவைகளில் மானவாரிக் குளங்களின் ஆயக்கட்டுகள் அநேகமாய் ஏகபோகப்பட்டாதார்களுக்காவது அல்லது இரண்டு மூன்று பெரிய பட்டாதார்களுக்காவது சொந்தமாயிருக்கும். இந்த மாதிரி ஸொந்தமாயிருந்தால் குளத்தின் பாசன மடைகளைத் திறப்பதும் மூடுவதும் கிரமமாய் நடந்து வரும். குளத்திற்கு வந்திருக்கும் ஜலம் எவ்வளவோ அவ்வளவுக்குத் தகுந்த விஸ்தீரணந்தான் சாகுபடி செய்யப்படும். நாற்று விடுவதும் நடுவதும் காலாகாலங்களில் சரிவர நடக்கும். ஆனால் ஆற்றுக்கால்களிலிருந்து நீர் வரவுள்ள குளங்களின் ஆயக்கட்டுகள் அநேக பட்டாதார்களுக்குச் சேர்ந்தவைகளாயிருக்கும். இவைகளில் பாசன மடைகளை அடைப்பதும், திறப்பதும், விதை விதைப்பதும், நாற்று நடுவதும் ஒருவிதமான கிரமமுமில்லாமல் செய்யப்படும். ஒருவன் தன் வயலில் விதைத்துக்கொண்டிருக்கும்போது, மற்றொருவன் நாற்றுப்பாவுதற்காக மடையைத்திறந்து தன் வயலுக்கு நீர் பாய்ச்சியானதும் குளத்தின் மடையை மூடாமல் அப்படியே திறந்துவைத்து விடுவான். இதனால் ஜலம் வீணாய் ஓடியும், தண்ணீர் வேண்டாத வயல்களுக்கு சில சமயங்களில் தண்ணீர் பாய்ந்தும் நஷ்டம் உண்டாகும். இதைத்தவிர இந்தமாதிரி எப்பொழுதும் கால்வாயில் ஜலம் ஓடிக்கொண்டிருப்பதால், கால்வாய்க்கு இருபுறமும் உள்ள வயல்களில் தண்ணீர் ஊற்றுண்டாகிப் பயிர்களைக் கெடுக்கும்.

மேலும் ஒரு குளத்து ஆயக்கட்டு நிலங்களுக்கு அநேக பட்டாதார்களிருந்தால் குளத்தில் தண்ணீர் குறைவாயிருக்கும் போதும், எல்லாப்பட்டாதார்களும் அதிகமாக நெல் சாகுபடி செய்வார்கள். இதனால் எல்லா வயல்களுக்கும் தண்ணீர்த்தட்டு உண்டாய்ப் பயிர்கள் காய்ந்துபோகும். சில இடங்களில் ஒருபோக நிலங்களும் இருபோக நிலங்களும் கலந்திருக்கும். முதல் போகம் அறுவடையான பின் கொஞ்சம் தண்ணீர் இருந்தால் அதை இருபோக நிலக்காரர்கள் தான் சாகுபடி செய்ய உபயோகப் படுத்திக்கொள்ளுவது நியாயம். இப்படிச் செய்யவிடாமல் ஒருபோக நிலக்காரர்களும் சாகுபடி செய்தால் எல்லாருக்கும் நஷ்டமுண்டாகும். இன்னும் சில இடங்களில் ஒருபோக நிலங்கள் மடைக்குப் பக்கமாயும் இருபோக நிலங்கள் கொஞ்சம் தூரமாயும் இருக்கும், இதனால் சில சமயங்களில் இருபோக நிலங்களில் விளைவில்லாமல் போக ஒருபோக நிலங்களில் விளைவுண்டாகும். இந்த நஷ்டங்களெல்லாம் விவஸாயிகளுக்குள் ஒற்றுமையில்லாததினால் உண்டாகின்றன.

தவிர கூலியாட்களாலும் நஷ்டம் உண்டாவதுண்டு. தண்ணீர் பாய்ச்சும்போது கால்வாயின் மடையைச் சரியாய் அடைக்காததினால், தண்ணீர் வரப்புகளுக்குமேல் வழிந்து எல்லாவயல்களையும் ஒரே வெள்ளக்காடாக்கிவிடும். இந்தக் காரணத்தினால் வயல்களுக்குப்போட்டிருக்கும் உரத்தின் சத்தெல்லாம் ஜலத்தோடு ஜலமாய்க்கொண்டுபோகப்பட்டு வீணாகும். இப்படி ஜலத்தில்கரைந்து வீணாகும் உரத்தின் நஷ்டத்தை அநேகர் கவனிப்பதில்லை. காரில் அதிக மழைபெய்வதில்லையாகையால் சாம்பல், தொழு எரு முதலிய உரங்கள் போடுகிறார்கள். பிசானத்திலோ மழை அதிகமாய்ப்பெய்வதால் உரத்தின் சத்துப்போய்விடும் என்பதற்காக தழைமிதிக்கிறார்கள். இந்த விஷயங்களையெல்லாம் அறிந்திருந்தும் அநேகர் உரங்களின் சத்தெல்லாம் ஜலத்தில் கரைந்து போகும்படிவிடுவது அறிவீனமே.

ஆகையால் “தண்ணீர்ப்பாய்ச்சலை மேற்பார்ப்பதற்கும், மடைகளை அடைக்கவும், திறக்கவும், தண்ணீர்த்தட்டுக் காலங்களில் வயல்களில் பாடுகண்டு தண்ணீர்பாய்ச்சவும், குளத்தின் மராமத்து முதலானபொது வேலைகளை” க்கவனிக்கவும் குறைந்த சம்பளத்தில் சிப்பந்திகளை நியமித்து வேலை செய்துவந்தால், ஒருவருக்கும் நஷ்டம் உண்டாகாமலிருக்கும் என்பதாக இந்த வியாஸம் எழுதியவர் சொல்லுகிறார்.

THE PLANTAIN.
வாழை.

சாதாரணமாக வாழை தினுசுகளை 5 பிரிவுகளாகப்பிரிக்கலாம் :—(1) பழங்களுக்கென்றே வளர்க்கும் தினுசுகள், (2) சமையல் செய்ய காய்களுக்காக வளர்க்கும் தினுசுகள், (3) இலைகளுக்காக வளர்க்கும் தினுசுகள், (4) தண்ணீரில்லாத பாலைவனங்களில் தாகத்துக்குத் தண்ணீருக்காக வளர்க்கும் தினுசுகள், (5) அலங்காரத்திற்காக வளர்க்கும் தினுசுகள். சென்ற டிசம்பர் மாசத்துப் “பிழைக்கும் வழியில்” சொல்லப்பட்ட 20 வாழை தினுசுகளும் இந்த 5 பிரிவுகளில் அடங்கும். ஆராய்ந்து பார்த்தால் வெவ்வேறு பெயர்களுடன், உருவத்திலும், வர்ணத்திலும், அளவிலும், ருசியிலும் வித்தியாசப்படும் வாழை தினுசுகளெல்லாம் ஆதியில் ஒரே தினுசாய்த் தான் இருந்திருக்கவேண்டும் என்று நம்பவேண்டியதாயிருக்கிறது. நீர்வளம், நிலவளம், சீதோஷ்ணம் முதலிய பேதங்களாலேயே இப்படிப் பல தினுசு வாழைகள் உண்டாயிருக்கின்றன. ஏனென்றால் ஒரு இடத்தில் ஒரு தினுசாய் இருக்கும் வாழையானது மற்றொரு இடத்துக்குக் கொண்டுபோய்ப் பயிரிடப்பட்டால் வேறு தினுசாகிவிடும். உதாரணமாக மதுரை ஜில்லாவிலுள்ள சிறுமலை வாழைக்கன்றுகளைக் கொண்டுவந்து சமவெளியில் வைத்துப் பயிரிட்டதில், பழம் பெரிதாயிருந்தபோதிலும் ருசிக்குறைவாக இருந்தது. சென்னப்பட்டணத்துக்கடுத்த சைதாப்பேட்டைக்கு சமீபமாய் “கிருஷிகன்” பத்திராதிபருக்கு சொந்தமான “ஜெகந்நாதபாக்” என்னும் சோதனைத்தோட்டத்தில் 32 தினுசுவாழைகள் பயிர்செய்யப்பட்டிருக்கின்றனவாம். அந்தத் தோட்டத்தில் அபூர்வமான ஒரு செவ்வாழைக்குலை போட்டிருக்கிறதாம். அந்தக்குலையில் ஒரு சீப்புமுழுவதும் செவ்வாழையாகவும், இன்னொரு சீப்புமுழுவதும், பச்சையாகவும், இரண்டு சீப்புகளில் பாதிக்காய்கள் சிவப்பாகவும், பாதி பச்சையாகவும், இன்னும் இரண்டுகாய்கள் ஒருபக்கம் பச்சையாகவும், மற்றொருபக்கம் சிவப்பாகவும் இருக்கின்றனவாம்.

THE ROSE FLOWER.

ரோஜாப் புஷ்பம்.

ரோஜாப் புஷ்பம் சிறந்த அழகும்; நல்ல வாசனையுமுள்ளது. ஆதியில் இந்தப்புஷ்பம் இந்தியாவில் இல்லாதிருந்த காரணம்பற்றியே பழைய நூல்களிலும், காவியங்களிலும் இதைப்பற்றி பிரஸ்தாபிக்கப்படவில்லை. இதைப்பற்றி 'வித்தியாபானு' என்னும் பத்திரிகையில் ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

உலகத்தில் பல இடங்களில் காடுகளில் தானாகவே ரோஜாச்செடி உண்டானபோதிலும், அநேகமாய்ச் சாகுபடிசெய்யப்பட்டு வருகிறது. ரோஜாச்செடியில் 250 வகைகள் உண்டாம். ரோஜா ஆசியாக்கண்டத்தில் இந்தியா, பர்ஷியா, துருக்கி, சீனா முதலிய இடங்களிலும், ஆப்பிரிக்காவில் ஈஜிப்ட் முதலிய இடங்களிலும், ஐரோப்பாவில் ப்ரான்ஸ், இங்கிலாந்து முதலிய இடங்களிலும், அமெரிக்காவில் சில பாகங்களிலும், தோட்டங்களிலும் மிகுதியாகப்பயிர் செய்யப்படுகிறது. இந்தியாவில் பாட்னா, லாகூர், காஸிப்பூர் முதலிய பட்டணங்களும், வங்காளத்திலுள்ள குலிஸ்தான் என்னும் இடமும், பர்ஷியாவிலுள்ள ஷைராஸ் என்ற பட்டணமுமே ரோஜாப்புஷ்பத்திற்குப் பேர்போன இடங்கள்.

ரோஜா, செடியாகவும், புதராகவுமேதான் வளரும். மரமாகாது. நன்றாய் வளர்ந்தால் 8 அடி உயரம் வரையில் வளரும். ரோஜாப்புஷ்பம், சித்திரை, வைகாசி மாஸங்களில்தான் ஜாஸ்தி. அதன் நிறம் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் முதலான பல வகைப்படும். உஷ்ணதேசங்களில்வளரும் ரோஜா, சீதள தேசங்களில் உண்டாகும் ரோஜாவைக்காட்டிலும், அழகிலும், வாஸனையிலும் உயர்ந்ததாகவே இருக்கும்.

பரிமள அத்தர் செய்வதற்காகவும், பனிநீர் செய்வதற்காகவுமே ரோஜா முக்கியமாய்ப் பயிரிடப்படுகிறது. சிறிதாயும் நீளமாயுமுள்ள குழாய் ஒன்று இருக்கும் வாய்குறுகின பாத்திரத்தில் தண்ணீர் விட்டு, புதியனவாயும் நல்ல வாசனையானவையாயுமுள்ள ரோஜா புஷ்பங்களைப் போட்டு பாத்திரத்தின் வாயை மூடி, அந்தக்குழாயின் மறு நுனியை ஏற்கனவே நன்றாகக்குளிரவைத்துள்ள ஒரு பாத்திரத்தில் சொருகி, புஷ்பமும் நீருமுள்ள பாத்திரத்தைக்காய்ச்சினால் அதிலிருந்து நீராவி கிளம்பும். கிளம்பிய நீராவியானது குழாயின் வழியாய்க் குளிர்ந்திருக்கும் இன்னொரு பாத்திரத்தினுள் போய்த்தங்கி வாயுரூபம் நீங்கி திரவரூபம் ஆகிறது. இதுதான் பனிநீர். 1000 புதுப்புஷ்பங்களிலிருந்து 'அசல்' பனிநீராக 3 வீசம் படியே எடுக்கக்கூடும். இந்தப்பனிநீரை வாய் அகன்ற தொட்டிகளில் வார்த்து, திறந்த வெளியில் சில நாள் வைத்திருந்தால் இராக்காலங்களில் அந்த பனிநீரின்மேல் சிறுசிறு துளிகளாக ஒருவகைத் தைலம் மிதக்கும். இதுதான் அத்தர். இதை சுத்தமான ஒரு இறகினால் அதிக ஜாக்கிரதையாய் ஒற்றி எடுக்கவேண்டும். ஒரு ரூபாய் நிறையுள்ள அத்தர், அது செய்யப்படும் இடத்திலேயே 100 ரூபாய் முதல் 150 ரூபாய் வரையில் விலைப்போகுமாம். இரண்டு லக்ஷம் புஷ்பங்கள் இருந்தால் தான் ஒரு ரூபா எடையுள்ள சுய அத்தர் கிடைக்கும். 2000 செடிகள் இருந்தால்தான் இரண்டு லக்ஷம் புஷ்பங்கள் கிடைக்கும். ஆகையால் அத்தனை செடிகள் பயிரிடுவதற்காகும் செலவைக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு ரூபாய் எடையுள்ள அத்தருக்குக் கொடுக்கப்படும் விலை ரூபாய் 100 அதிகமாக மாட்டாது. இந்த அத்தருக்கு "ஜிஹாங்கீர் அத்தர்" என்றும் பெயராம்.

அத்தர், பனிநீர் செய்வதைவிட இன்னும் பல விதத்தில் ரோஜாப்புஷ்பம் உபயோகப்படுகிறது. ஐரோப்பாவில் தென்பாகத்திலுள்ளவர்கள் பஞ்சுக்குப் பதிலாக ரோஜா இதழ்களைத் திணித்து தலையணை செய்து கொள்ளுகிறார்களாம். ரோஜாமொட்டுகளை பிஞ்சுக்கடுக்காய், கொட்டைப்பாக்கு முதலியவைகளோடு சேர்த்து கஷாயம் இறக்கி பேதி மருந்தாக உட்கொள்ளுவார்கள். இதன் இதழ்களால் "குல்குந்து" என்னும் ஒரு இனிய லேகியமும் செய்வதுண்டு. இந்த லேகியம் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் அரோக்கியத்தையும் உண்டாக்கும்.

——:o:——

AGRICULTURAL NOTES.

விவஸாயக் குறிப்புகள்.

ACACIA FRONDOSA.

தகரை.—மலையாளத்தில் கவளைப்பாறை யென்னும் இடத்தில் பரீக்ஷைக்காக ஒரு வயலில் வழக்கப்படி தோல் முதலியவைகளை உரமாகப்போட்டுச்சாகுபடி செய்ததுடன் மற்றொரு வயலில் தகரைச்செடியை (வட்டத்தகரையை) உரமாகப்போட்டுச் சாகுபடி செய்தார்களென்றும், தகரை யுரம் போட்ட இடத்தில் எவ்வளவோ அதிகப்பலன் கிடைத்ததென்றும், மலையாளத்து கலெக்டர் பிரசித்தம் செய்திருக்கிறார். செலவைப்பார்த்தாலும் தோல்களைச்சேர்ப்பதைவிட தகரையைச் சேர்ப்பது ஆதாயமேயாம்.

தகரையின் விதை விலைக்குக்கிடைக்காது. ஆனாலும் தனியே தரிசு பூமிகளில் இந்தச் செடிகள் உண்டாகின்றன. ஐப்பசி முதலிய மாதங்களில் காய்க்கிறபடியால், விதை எடுப்பது அரிதல்ல. நெல் சாகுபடி தீர்ந்து ஜலம் வற்றினவுடன் தகரை விதையை விதைத்தால் மூன்று மாதமானவுடன் உரத்துக்கு உதவும்படி செடிகள் வளர்ந்து விடும்.

தகரை, நிலக்கடலை முதலிய அநேகம் செடிகளுக்கு நைட்ரஜன் என்னும் வாயுவை ஆகாயத்திலிருந்து எடுத்து தங்களுடைய போஷணைக்கு உபயோகித்துக்கொள்வதுடன் தங்களைப்போல் ஆகாயத்திலிருந்து நைட்ரஜன் எடுக்க சக்தியில்லாத வேறு செடிகளுக்கு உதவும்படி தங்களுடைய வேரின் நுனிகளில் வைத்து மண்ணையும் பயன்படச் செய்ய சக்தியுண்டு. மண்ணில் கலந்து கிடக்கும் நைட்ரஜனைப் பிற்படப்பயிர் செய்யும் எல்லாச்செடிகளாலும் எடுத்துக் கொள்ள முடியும். 'லெகுமினோஸா' என்று பெயருள்ள தகரை, நிலக்கடலை, பயறு முதலிய செடிகள் வளரும் மண்ணில் உரங்குறைவதில்லை; மண் அதிகம் பயன்படுகிறது.

நெல் சாகுபடி செய்யவேண்டிய வயல்களில் சில இடங்களிலெல்லாம் இந்த விதச்செடிகளை முதலில் பயிர் செய்து, அவைகள் வளர்ந்து காயும் பூவும் ஆரம்பிக்கும்போது முழுதும் உழுது வயலிற்சேர்த்தால் நெல் மிகவும் நன்றாய் விளையும்.

TREE COTTON.

இலவம் பஞ்சு.—இலவம் பஞ்சை, நாம் மெத்தைகள், தலையணைகள் முதலியவைகளுக்கு அடைப்பதற்காக உபயோகிக்கிறோம். ஆனால் அதற்கு இப்பொழுது ஒரு நூதனமான உபயோகம் ஏற்பட்டிருக்கிறது. கப்பல்களிலும், இன்னும் ஜலத்தில் வேலை செய்யும் இடங்களிலும் ஜனங்கள் தப்பித்தவறி ஜலத்தில் விழுந்து விட்டால் உயிர் தப்பிப்பிழைப்பதற்காக நெட்டி மிதப்புகளை வைத்திருப்பது வழக்கம். இலவம்பஞ்சு நெட்டியைவிட லேசாயிருப்பதினால் இரண்டு பங்கு கனத்தை அதன்மேல் வைத்தாலும் அது தூக்கிக்கொண்டு மிதக்கும். மேலும் இலவம் பஞ்சு வளையக்கூடியதாயும், உறுதியாயும், கெடாமலும் நீடித்த காலம் தாங்கக்கூடியதாயுமிருப்பதால் வெகு சிலாக்கியமானதென்று, பல பரீக்ஷைகள் செய்து பார்த்ததின் பேரில் 1905-௵ ஜூலை மாஸத்திலிருந்து மிதப்புகள் செய்ய உபயோகப்பட்டு வருகிறது. ஆகையால் இந்தியாவில் இனிமேல் இலவம் பஞ்சுக்கு கிராக்கி அதிகமாகுமென்று தோன்றுகிறது.

THE USE OF GUN POWDER IN AGRICULTURE.

விவசாயத்தில் வெடி மருந்து உபயோகம்.—சில நிலங்களில் அடித்தரையானது 4 அல்லது 5 அடி ஆழத்தில் அதிகக்கடினமாயிருப்பதினால் நன்றாய் வளர்ந்திருக்கும் மரங்கள் திடீரென்று பட்டுப்போவதுண்டு. இப்படிப்பட்ட இடங்களில் இரண்டு அங்குல ஆகர் கருவியினால் 2 அடி முதல் 6 அடி வரையில் நிலத்தில் துவாரம் செய்து, வெடி மருந்தை உள்ளே போட்டுக்கட்டித்து நெருப்பு வைத்தால் மண்ணுக்குத் தக்கபடி 20 அடி முதல் 30 அடி வரையில் மண்ணாங்கட்டிகள் பெயர்ந்து போகும். ஒரு ஏகராவுக்கு மருந்து, வர்த்தி, கேப்பு முதலியவைகளெல்லாம் சேர்ந்து 10 ரூபாய்க்குள் ஆகுமாம். இந்த மாதிரி கெட்டி மண்ணை வெடி மருந்தால் பிளக்கச்செய்வது நிலத்தில் சாகுபடி செய்வதற்கு ரொம்ப அனுகூலமாகும். தவிர, வெடிமருந்து வெடிக்கும்போது உண்டாகும் புகை மண்ணோடு கலந்து அதைக்கொழுப்பிக்கச்செய்து நிலத்துக்கு உரமுமாகிறதாம்.

INDUSTRIAL NOTES.
கைத்தொழில் குறிப்புகள்.

HENNA.

மருதாணி.—இதன் இலையைப் பெண்கள் காசுக்கட்டி முதலியவைகளோடு அரைத்து நகத்துக்கு சாயம் ஏற்றுவதுண்டு. இந்தப் பயிரில், அரேபியா முதலிய துருக்கர் வசிக்கும் தேசங்களில் அதிக வியாபாரம் நடக்கிறது. இது சாதாரணமாய் நமது ராஜதானியில் வேலிக்காகப் பயிரிடப்படுகிறது. இதன் கிளைகளை வெட்டிப் புதைத்தாலே வேர் ஊன்றி துளிர்க்கும். இது மரமாகாமல் செடியாகவே இருக்கும். இதன் வாசனையுள்ள புஷ்பங்களிலிருந்து தைலம் செய்யப்படுகிறது. இதை உபயோகிப்பதால் தேகத்துக்குக் குளிர்ச்சியும் ஆரோக்கியமும் உண்டாகும். வியர்வை அதிகமாய் வரும் குணத்தைக் கண்டிக்கக்கூடியதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் அரேபியா, ஈஜிப்ட், ஆப்பிரிக்கா முதலான இடங்களில் ஜனங்கள் இந்தப்பயிரினால் லாபமடைவது போல நாமும் தைலம், அத்தர் முதலியவைகள் செய்து விற்றால் லாபம் அடையலாம்.

INDUSTRIAL SURVEYS.

தொழில் விசாரணைகள்.—இப்போது அந்தந்த மாகாணங்களில் தொழில்களின் நிலைமையைப்பற்றி கவர்ன்மெண்டுகளால் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. வங்காளத்திலும் ஐக்கிய மாகாணங்களிலும் இந்தமாதிரி விசாரணை செய்யப்பட்டு முடிந்து போயிற்று. நமது மாகாணத்திலும் இந்தமாதிரி விசாரணையொன்று சமீபத்தில் செய்யப்படுமென்று நம்புகிறோம்.

THE GHEE INDUSTRY.

நெய் விற்பனைத் தொழில்.—வடக்கே ஐக்கிய மாகாணங்களில், ஆக்ரா, ரோஹில்கண்ட் ஜில்லாக்களில் நெய் விசேஷமாய் அகப்படும். இந்த ஜில்லாக்களில், எருமைக்கிடாரி மாடுகள் மட்டும் 5 வருஷத்திற்கு முன் இருந்ததைவிட இப்பொழுது ஜாஸ்தி இருக்கின்றனவாம். பால், நெய் வியாபாரத்திற்கு பசுமாடுகளை விட எருமை மாடுகள் நல்ல லாபத்தைததரும். ஆகையினால்தான் மேற்கண்ட ஜில்லாக்களில் எருமை மாடுகள் ஜாஸ்தியாக வைக்கப்பட்டிருக்கின்றன.

REVENUE NOTES.
ரெவினியூக் குறிப்புகள்.

THE MADRAS PROPRIETARY ESTATES VILLAGE SERVICE ACT.

மதராஸ் ப்ரொப்ரைட்டேரி எஸ்டேட்டு கிராம ஊழிய ஆக்டு.—மேற்படி ஆக்டின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருக்கிற கிராம நவுக்கர்கள் விஷயமாய் மேற்படி ஆக்டு பூராவும் அனுஷ்டானத்துக்குக்கொண்டு வரப்படாத இவ்விராஜதானியிலுள்ள ஷை ஆக்டு 4 வது பிரிவில் அர்த்தம் சொல்லியிருக்கிறபடி எல்லா ப்ரொப்ரைடெரி எஸ்டேட்டுகளிலும் 1909-ஹு அக்டோபர்மீ 1உயிலிருந்து ஊர்ஜிதத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

LOANS FOR SINKING WELLS.

கிணறு வெட்டக் கடன்.—புன்செய் நிலமுடைய ஒவ்வொருவரும் க்ஷாமகாலங்களில் உதவும் பொருட்டு கிணற்று சாகுபடி கொஞ்சம் வைத்திருக்க வேண்டியது அவசியம். மழை பெய்து காலஸ்திதி சாதாரணமாயிருக்கிற வருஷங்களில் கிணற்றுப் பாசனமுள்ள நிலமிருந்தால், விவசாயி கோடைகாலத்தில் கூட அந்த நிலத்தில் பயிர்கள் உண்டாக்கலாம். அப்படிப்பயிருண்டாக்கினால் மாடுகளும் வேலை செய்யும். நல்ல உணவும் அவைகளுக்குக் கிடைக்கும். சொந்தக்காரனும் கோடைகாலத்தில் கூலிவேலைக்காக தூரமான இடங்களுக்கு தன் ஊரைவிட்டு குடும்பத்தோடு போகவேண்டியதில்லை. வருஷம்முழுவதும் தன் நிலத்திலேயே பாடுபட்டு ஜீவனம் செய்யலாம். கிணறுகளை கோடைகாலத்தில் வெட்டுவதுதான் சௌகரியம். ஆகவே தகுந்த காலம் வந்துவிட்டது. கையில் பணமில்லாதவர்களுக்கு கவரன்மெண்டார் லாண்ட் இம்ப்ரூவ்மெண்ட் லோன்ஸ் ஆக்ட் என்கிற நிலவிர்த்திக் கடன்கள் சட்டப்படி, வருஷத்திற்கு நூறு ரூபாய்க்கு 6 ரூபாய் 4 அணா வீதம் வட்டி ஏற்படுத்தி கிணறு, குளங்கள் (ஏரிகள்) வெட்டவும், சீர்திருத்தவும் கடன் கொடுக்கிறார்கள். இதற்காக வேண்டிய அப்ளிகேஷன் (மனு) பாரங்கள் எல்லா சர்க்கார் (ரிவினியூ) கச்சேரிகளிலும், ரிவினியூ இன்ஸ்பெக்டரிடத்திலும் விலையில்லாமல் பெற்றுக்கொள்ளலாம்,

EDUCATIONAL NOTES.
வித்தியா விஷயக் குறிப்புகள்.

INDUSTRIAL CLASSES.

கைத்தொழில் கற்கும் சாலைகள்.—கைத்தொழில் கற்பிப்பதற்கு ஏற்பட்டிருக்கும் சாலைகளின் வழக்கம் எப்படி என்றால், தொழிலில் தேர்ந்தவன் ஒருவன் இருக்கிறான். பிள்ளைகள் பழகுவதற்காக அவன் அவர்களுக்கு வேலை ஏவுகிறான். காட்டிக்கொடுப்பதைத் தவிர அவன் ஆயுதமெடுத்து வேலை செய்வதில்லை. கொஞ்சம் கைப்பழக்கம் உண்டானவுடன் சில பிள்ளைகளைக்கொண்டு சில சாமான்களைச் செய்யச்சொல்லுகிறான். ஒவ்வொரு பிள்ளையும் ஒரு சாமானைப் பூர்த்தியாக வேலை செய்கிறான்; அதில் சுலபமான பாகத்தையும் கூட அவனே செய்கிறான். அவனுடைய சாமர்த்தியத்திற்குத் தகுந்த சாமான் செய்கிறானேயொழிய அது விற்பனைக்குத் தகுந்த சாமானா இல்லையா என்று கவனிப்பதில்லை. ஒரே உபாத்தியாயர் ஏறக்குறைய இருபது பிள்ளைகளுக்கு வேலை கற்றுக்கொடுக்கவும் அவர்கள் செய்த வேலையை தான் பார்த்துச் சரிப்படுத்தவும் கூடும். அவனுக்கு மாதச்சம்பளம் வந்து விடுகிறது; அந்தச் சாலையினால் நஷ்டமா லாபமா என்னும் விசாரம் அவனுக்கு இல்லை. மாதந்தோறும் சாப்பாட்டுக்காக "ஸ்டைபெண்டு" கொடுத்துச் சம்பளமில்லாமல் எழுதப்படிக்கவும் கற்றுக்கொடுக்கிறதனால் பிள்ளைகள் இந்தத் தொழிற்சாலைகளில் வந்து சேர்கிறார்கள். தொழில் கற்றுக்கொள்வதற்கு வேண்டிய ஆயுதங்களும் சாமான்களும் சாலையிலிருந்து கொடுக்கிறார்கள். அவர்கள் செய்யும் சாமான்களை விற்று வரும் பணம் பள்ளிக்கூடத்தைச் சேர்கிறது. ஆயுதங்களை நன்றாய் உபயோகிக்கக் கற்றுக்கொடுப்பதே இந்தச்சாலைகளின் கருத்து.

ELEMENTARY SCHOOLS.

"எலிமெண்டெரி" பள்ளிக்கூடங்கள்.—போன 1908-09-ம் வருஷத்தில் 5668 பையன்களுக்கான எலிமெண்டெரி பள்ளிக்கூடங்கள் புதிதாய் ஏற்படுத்தப்பட்டனவாம். ஏற்கனவே உள்ள பழைய பள்ளிக்கூடங்களில் 5183 பள்ளிக்கூடங்கள் எடுபட்டுப்போயின. நம்முடைய ராஜதானியில் சின்னப் பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

LITERARY NOTES.
புஸ்தகக்குறிப்புகள்.

TIRUKKURAL VACHANAM.

திருக்குறள் வசனம்.—இந்தப் பெயர் கொண்ட ஒரு நூல், திருமுல்லைவாயில் ஸப்போஸ்ட்மாஸ்டராகிய ம-ள-ள-ஸ்ரீ. பு. து. இரத்தினம் பிள்ளையவர்களால் தமிழில் வசன நடையாக எழுதப்பட்டு வெளியாயிருக்கிறது. இதற்கு முதல் நூல் திருக்குறளாகும். மனிதர்கள் அடைவதற்கு உரிய நால் வகைப் புருஷார்த்தங்களில் அறம், பொருள் இன்பம் ஆகிய மூன்றின் பகுதிகளையும் சுருக்கமாக இனிய குறள் வெண்பாக்களால் விளங்கச் சொல்லும் நூல் திருக்குறளென்பது விவேகிகள் பலரும் அறிந்த விஷயமே.

இந்த வசன நூலின் சிற்சில பகுதிகளைப் படித்துப் பார்த்தபோது பரிமேலழகருடைய சிறந்த உரையையே பெரும்பாலும் தழுவி அந்த உரையில் காணப்படும் கடினமான பதங்களுக்கு ஏற்ற ஸுலபமான பதங்களையமைத்து இது எழுதப்பட்டுள்ளதென்பதும், ஒவ்வொரு அதிகாரத்தின் முதலிலுள்ள அவதாரிகைகள், தெளிபொருள் விளக்க உரையில் உள்ளவைகளாகக் காணப்படுகின்றனவென்பதும் தெரியவந்தன.

இந்தப் புஸ்தகத்தைத் திருக்குறளின் பொழிப்புரையென்று சொல்லல்தகும். அறம், பொருள் என்னும் இரண்டு பகுதிகளே இந்த நூலில் அமைந்துள்ளன. ஒவ்வொரு அதிகாரத்துக்கும் ஏற்ற ஆங்கில மொழிகளை இந்த நூலாசிரியர் அவ்வவ்விடத்தில் சேர்த்திருப்பது மிக்க உபயோகமானது.

திருக்குறளின் விஷயங்களை ஸுலபமாகத் தெரிந்து கொள்வதற்கும், திருக்குறளைப் படிப்பதற்கும் இந்த வசன நூல் தக்க கருவியாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

டெம்மி 8 பக்க அளவில் 152 பக்கங்கொண்ட இதன் விலை ரூ. 1-0-0. சென்னப்பட்டணம் ஜீ. ஏ. நடேசன் கம்பெனியில் கிடைக்கும்.

SCIENTIFIC NOTES.
சாஸ்திரீயக் குறிப்புகள்.

INDIAN GUILD OF SCIENCE.

இந்திய சாஸ்திரீய ஸங்கம்.—இங்கிலாந்துக்கு அநேக பிள்ளைகள் படிக்கப் போயிருக்கிறார்கள். இவர்களெல்லாரும் லீட்ஸ் என்னும் பட்டணத்து சர்வ கலாசாலையில் ஒரு சங்கம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தின் நோக்கம் பொதுவாய் இந்தியாவில் கைத்தொழில்களில் சாஸ்திர முறைகளைப் பிரயோகப்படுத்தும்படி செய்யவேண்டுமென்பதே. இந்த விஷயத்தில் பல இங்கிலீஷ் சாஸ்திர நிபுணர்கள் ஒத்தாசை செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

A WONDERFUL INSTRUMENT.

ஒரு அதிசயமான கருவி.—அயர்லாந்தில் பெல்பாஸ்ட் நகரத்தில் கூடின வைத்திய சாஸ்திர பண்டிதர்கள் கூட்டத்தில் ஒரு அதிசயக் கருவியின் தன்மையைப்பற்றிப் பிரஸ்தாபம் நடந்தது. அந்தக் கருவி ஒருவனுடைய வயிற்றுக்குள் இருக்கிற உறுப்புகள் எந்த மாதிரி ஜீரணத்தொழிலை நடப்பிக்கின்றன என்று காண்பிக்கக்கூடியதாயிருக்கிறதாம. ஒரு இங்கிலீஷ் பண்டிதர் இதைச்செய்திருக்கிறாராம்.

PLAGUE.

ப்ளேக் வியாதி.—ப்ளேக் வியாதி எலிகளால் பரவுகிறதாம். ஆனால் சென்னப்பட்டணத்துக்கு இதுவரையில் ப்ளேக் வரவில்லை. அதற்குக்காரணம் அவ்விடத்தில் எலிகள் விசேஷமாயில்லாமல் பெருச்சாளிகளே அதிகமாயிருப்பது தானாம்.

INHALING AND EXHALING OF WATER BY PLANTS.

செடிகள் ஜலத்தை உறிஞ்சுதலும், வெளிவிடுதலும்.—செடிகள் ஜலத்தை வேர்களால் உள்ளே இழுத்துக்கொள்ளுவதும் நீராவியாக வெளியே விடுவதும் பலர் அறிந்த விஷயம். வெயில் காலத்தில் ஒரு பெரிய பீன்ஸ் அவரைச்செடி ஒரு நாளில் ¾ புட்டி ஜலத்தை நீராவியாக வெளியே விடுகிறதாம். ஒரு ஏகரா கோதுமைப் பயிரானது ஒரு உஷ்ணமான நாளில் 22,400 ராத்தல் நிறையுள்ள ஜலத்தை உள்ளே இழுத்து, வெளியே விடுகிறதாம். பயிரின் அடிப்பாகத்தின் வழியாக மணிக்கு 20 அடி வீதம் ஜலம் உள்ளே ஏறுகிறதாம்.

LEGAL NOTES.
சட்டக் குறிப்புகள்.

TRADE MARK.

வியாபார மார்க்.—கத்திரிக்கோல் மார்க்கை ரிஜிஸ்தர் செய்து வெகு காலமாக ஒரு வியாபாரி தன் நூல் கட்டுகளின் பேரில் அதைப்போட்டு உபயோகப்படுத்தி வந்தான். மற்றொருவன் அனேகமாய்க் கத்திரிக்கோலைப் போலவே இருக்கும் டிரேட்மார்க் அதாவது வியாபாரமார்க் ஒன்றை தன் சரக்கின் பேரில் உபயோகித்தான். சாதாரண மனுஷர்களுக்கு ஒரு மார்க்குக்கும் மற்றொரு மார்க்குக்கும் வித்தியாசம் தெரியாது. ஆகையால் பின்னால் உபயோகப்படுத்த ஆரம்பித்தவன் அந்த டிரேட் மார்க்கை உபயோகப்படுத்தக் கூடாதென்று கோர்ட்டார் இன்ஜங்ஷன் உத்தரவு செய்தார்கள். 10 பஞ்சாப் லா. ரி. 49 பக்கம்.

EXECUTION OF A DECREE.

டிக்ரீயை நிறை வேற்றல்.—ஏ என்பவன் ஒரு பிராமிசரி நோட்டின் பேரில் பி என்பவனிடத்தில் கடன் வாங்கியிருந்தான். கடனை திருப்பிக்கொடுக்காமல் ஏ இறந்து போய் விட்டான். பி பணத்துக்காக ஏ என்பவனுடைய விதவையின் பேரில் பிரியாது செய்தான். பி யின் பக்ஷம் கோர்ட்டில் டிக்ரி ஆயிற்று. பின்னால் ஏ என்பவனுடைய பெண் வயிற்றுப் பேரன் ஒருவன் தன் பாட்டனார் செய்த உயில்படி சொத்து தனக்குச் சேர்ந்தது என்று வியாஜ்யம் செய்து ஏ யின் விதவையிடமிருந்து சொத்தை தன்சுவாதீனப்படுத்திக்கொண்டான். பி என்பவன் இந்தப் பேரனிடத்தில் தன் டிக்ரியை நிறைவேற்ற முயன்றான். பெண் வயிற்றுப் பேரனுக்கு அந்தக் கேஸில் ஒருவிதமான சம்பந்தமும் இல்லாததினாலும், சட்டப்பிரகாரம் அவன் விதவையின் வார்சு அல்லாததினாலும் அந்த டிக்ரி பேரன் பேரில் செல்லாது என்று தீர்மானிக்கப்பட்டது. 6 மதராஸ் லா. டைம்ஸ் 199 பக்கம்.

HUSBAND AND WIFE.

புருஷனும் பெண்ஜாதியும்.—புருஷனுடைய பாதுகாப்பை விட்டுவிட்டு 15 வருஷகாலம் ஒரு ஸ்திரீ தன் தாய் தகப்பனார் வீட்டிலேயே இருந்து வந்தாள். அந்தக்காலத்தில் புருஷன் அவளை தன் வீட்டுக்கு கொண்டுவர ஒரு பிரயத்தனமும் செய்யவில்லை. பெண்ஜாதிக்கு ஜீவனாம்சமும் கொடுக்கவில்லை. அவளை தன்னிடத்தில் வந்து இருக்கும்படி சொல்லவுமில்லை. இப்படி இருந்து அந்த புருஷன், பெண்ஜாதி தன்னிடத்துக்கு வரவேணுமென்று வியாஜ்யம் செய்தால் அதைக்கோர்ட்டார் ஒப்பமாட்டார்கள். 10. பஞ்சாப். லா. ரி. 486 பக்கம்.

MEDICAL NOTES.
வைத்தியக் குறிப்புகள்.

SUGAR-CANDY.

கற்கண்டு.—கண்ணில் சதை வளருகிறவர்கள் சீனாக் கற்கண்டு ஒரு துண்டை. வளர்ந்த சதைமேல் கிரமமாகத் தேய்த்தால் சதை குறையுமாம்.

VACCINATION FOR COLD.

ஜலதோஷத்துக்கு அம்மைகுத்தல்.—வடக்கே இண்டோரில் வேலையாயிருக்கும் டாக்டர் ஜே. ஆர். ராபர்ட்ஸ் என்பவர் ஒருவித பால் கண்டுபிடித்திருக்கிறாராம். இதைக்கொண்டு அம்மைவைப்பது போல் குத்தினால் கொஞ்சமணிக்குள் ஜலதோஷம் நீங்கிவிடுமாம்.

THE USES OF SUGAR.

சர்க்கரையின் பிரயோஜனம்.—சர்க்கரையில் துவர்ப்பு இருக்கிறதாம். ஆகவே இது சீதபேதிக்கு உத்தமமான மருந்து. ஸகூல் விதையுடன் சர்க்கரை, லவங்கப்பட்டை பஸ்மம், இவைகளைக் கலந்து கொடுத்தால் சீதபேதி நிவாரணமாகிறதாம். பம்பாய் நாட்டில் கண்ணோய் வருகிறவர்கள் சர்க்கரையை நீரில் கரைத்து அந்த நீரை கண்ணுக்கு விட்டுவர நோய் நீங்குகிறதாம்.

SYMPTOMS OF SMALL POX.

பெரிய அம்மையின் அறிகுறிகள்.—இது வருவதற்கு முன்னமே சில அறிகுறிகளுண்டு. அவையாவன—முதுகிலும், இடுப்பிலும் அதிகவலி, வாந்தி, கொடூரமான தலைவலி, முதலியன. தேகத்தில் அதிகக் குளிர்கண்டு பின்னால் கொடூரமான ஜுரம்வரும். மூன்றுநாள் அதிக ஜுரங்கண்டு மூன்றாவது நாளில் மூட்டைப்பூச்சி கடிகள் போல் சிறிய தடிப்புகள் முதல் முதல் முகத்தில் காணும். முகத்திலேயே அதிகமாகக் காணப்படும். ஒரே தடவையில் எல்லாத் தடிப்புகளும் கிளம்பும். வாயிலும் கண்களிலும் ஆசனவாயிலுங்கூடத் தோன்றும். இந்தத் தடிப்புகள் 5-ம் நாளில் நீர்க்கோத்துக்கொண்டு தட்டையாகி நடுவில் 'தொப்புளை'ப்போல் ஒருபள்ளத்தையுடையனவாயிருக்கும். அது நல்ல அடையாளம். 9-ம் நாளில் நீர்க்கோத்துக்கொண்டிருந்த முத்துகள் சீக்கோத்துக் கொள்ளுகின்றன. 9-ம் நாளிலிருந்து மூன்றுநாள் பழைய படிக்கு 3 நாள் ஜுரமடிக்கும். சீக்கோத்த முத்துகள் காய்ந்து 21நாள்களுக்குள் கீழே விழுந்துவிடும்.

THE LADIES' COLUMN.
பெண்கள் பத்தி.

DRINKING WATER.

தண்ணீர் குடித்தல்.—சில வேளைகளில், முக்கியமாய் கோடை காலத்தில், குழந்தைகள் சோற்றைத் தின்னாமல் தண்ணீரைக்குடித்து வயிற்றை நிரப்பும். இதற்காக சில தாயார்கள் குழந்தைகளை அடித்து சோற்றைத் திணிப்பார்கள். இப்படிச் செய்வது தவறு. வெயிற்காலத்தில் அதிகமாக ஜலம் குடிக்க வேண்டியேயிருக்கும். அப்படிச்செய்வதைத் தடுப்பது மகாகுரூரமானது. அதிகஜலம் குடிப்பதால் உண்மையாகவே நமது தேகத்திலிருந்து சிறிய துவாரங்களின் வழியாக வரும் வேர்வை அதிக நன்மையை யுண்டாக்கும். தாகமெடுக்கும் பொழுது தண்ணீரைக்குடிக்கவேண்டும்; ஆனால் சாப்பிடும் பொழுது அத்துடன் தண்ணீரைக்குடிக்கக்கூடாது. அப்படிச்செய்வதால் கெடுதலுண்டு; இரப்பையில் ஜீரணிப்பிக்கிற ரஸத்தை நீராக்கி ஜீரணசக்தியை அழிக்கிறது. சாப்பிடும்பொழுது அதிகத்தண்ணீர் குடிப்பதை நிறுத்தவேண்டும்; ஜலம் குடிக்கவேண்டுமானால் சாப்பிட்ட பிறகு குடிப்பதுதான் மிக நலம். இப்படிக் குழந்தைகளையும் பழக்கிவரவேண்டும். அவைகளுக்கு ஜலம் கொடுத்து பழக்கிவைக்கவே கூடாது. இதைத் தாயார்கள் கவனிக்கவேணும்.

GIFT OF A DOG.

நாய் வெகுமதி.—சீனாவைச் சேர்ந்த மஞ்சூரியா தேசத்தில் தகப்பன் தன் மகளுக்குக் கலியாண வெகுமதியாகப் பணத்திற்குப் பதிலாக ஒரு நாயைக் கொடுப்பது வழக்கமாம்.

GHEE.

நெய்.—பர்மாவில் நெய் ஏதோ ஒருவிதமாகக் காய்ச்சுகிறார்களாம். அதனால் அது நாள்பட நிற்கிறதில்லையாம்.

ALUM.

படிக்காரம்.—கலங்கலான ஜலத்தில் படிக்காரத்தைப் பொடி பண்ணிப் போட்டுக்கொஞ்ச நேரம் வைத்திருந்தால் ஜலம் தெளிந்து குடிக்க உபயோகப்படும். தஞ்சாவூர் ஜில்லாவில் ஆறுகளில் புது ஜலம் வரும்காலத்தில ஜலத்தை மேல் சொல்லியபடி தெளியவைப்பது வழக்கம்.

THE BOYS' COLUMN.

பையன்கள் பத்தி.

TOBACCO PRODUCING COUNTRIES.

புகையிலை விளையும் தேசங்கள்.—உலகத்திலுள்ள தேசங்களிலெல்லாம் அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் தான் புகையிலை விளைவு ஜாஸ்தி. இந்தியா அடுத்தபடி, அதற்கு அடுத்தது க்யூபா தீவு, அதற்கடுத்தது ருஷி. அதற்கு அடுத்தபடி கிழக்கே டச்சுக்காரர்கள் குடியேறியிருக்கும் தீவுகள், முக்கியமாய் சுமாத்திரா தீவு. உலகத்தில் விளையும் புகையிலையில் சுமார் 9-ல் 7-பங்கு இந்த தேசங்களில் தான் விளைகிறது. சென்ற சில வருஷங்களின் விளைவைக் கணக்கிட்டுப் பார்த்தால் வருஷாவருஷம் சராசரி 60 கோடி ரூபாய் பெறுமான 10 லக்ஷம் டன் புகையிலை விளைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

SUGAR.

சர்க்கரை.—வருஷம் ஒன்றுக்கு சராசரியில் தற்காலத்தில் உலகத்தில் சுமார் 7 கோடி பாரம் சர்க்கரை உற்பத்தியாகிறதாம். இதில் பாதி, கரும்பிலிருந்து உண்டாகும் சர்க்கரை. பாக்கி அநேகமாய் "பீட்ரூட்" என்னும் கிழங்கிலிருந்து எடுக்கப்படுகிறது. மேலே சொல்லிய தொகையில் இந்தியாவில் செலவழியும் சர்க்கரை சேரவில்லை. அது சுமார் ஒன்றே காலே அரைக்கால் கோடி பாரமாகிறது. இந்தச்சர்க்கரை முழுமையும் கரும்பிலிருந்தே செய்யப்படுகிறது.

THE ELEPHANT.

யானை.—யானை 12 வயதிலிருந்து 80 வயது வரைக்கும் வேலைசெய்யுமாம். ஒரு சாதாரண யானை 67 பாரம் கனமுள்ள பொருளை இழுக்கக்கூடுமாம். 2½ பாரத்தைத் தூக்கக்கூடுமாம். 13½ பாரம்நிறையை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு சுமந்து கொண்டுபோகக்கூடுமாம்.

POSTAGE STAMPS.

தபால் ஸ்டாம்புகள்.—உலகத்திலுள்ள பல தேசங்களிலும் 13,400 வெவ்வேறு விதமான ஸ்டாம்புகள் உபயோகப்பட்டு வருகின்றனவாம்.

INDIAN NEWS.

இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

CO-OPERATIVE SOCIETIES.

கூட்டுறவுச் சங்கங்கள்.—பம்பாய் ராஜதானிக்கு ஒரு விவசாய பாங்கி ஸ்தாபிக்க வேண்டுமென்று அங்கே உள்ள பணக்காரர்களான ஸர் தாமோதரதாஸ் தாக்கர்ஸே அவர்களும், லாலூபாய் ஸாமல்தாஸ் என்பவரும் கவர்ன்மெண்டாருக்கு சில பிரேரேபணைகள் செய்திருக்கிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி பம்பாய் கவர்ன்மெண்டாருடைய அபிப்பிராயம் தெரிந்தவுடன் இந்தியா கவர்ன்மெண்டார் அதைப்பற்றி இங்கிலாந்திலுள்ள இந்தியா காரியதரிசிக்கு எழுதுவார்களாம். இதைத்தவிர, சில பெரிய ஐரோப்பிய வியாபாரிகளும் வட இந்தியாவில் ஒரு விவசாய பாங்கி ஸ்தாபிக்க சில பிரேரேபணைகள் செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

SALT AND TOBACCO.

உப்பும் புகையிலையும்.—உப்பு ஏழை ஜனங்கள் கூட உபயோகிக்கவேண்டியிருப்பதால் அதன் மேல் தற்காலத்தில் கவர்ன்மெண்டார் போட்டிருக்கும் வரியை நீக்கிவிட வேணும் என்று நம்முடைய ராஜதானி சட்ட நிரூபண சபையில் மெம்பராகிய கனம் பேர்ராஜு பந்துலு பல பத்திரிகைகளுக்கு எழுதியிருக்கிறார். உப்பு வரியை எடுத்துவிட்டால் கவர்ன்மெண்டார் ராஜாங்கத்துக்கு வேண்டிய செலவுக்குக் கஷ்டப்படுவார்கள். ஆகையால உப்பு வரியை எடுத்தால் அதற்கு பதிலாக ஒரு புதிதான வரும்படி ஸர்க்காருக்குக் காட்டவேண்டும். ஆனரபில் மிஸ்டர் பேர்ராஜு பந்துலு புகையிலை சாகுபடியைக் கவர்ன்மெண்டார் மட்டும் செய்யக்கூடியதாக்கி, உப்புக்கு வரி விதித்திருப்பது போல் புகையிலைக்கு வரி விதித்து விற்றால் அந்த நஷ்டத்திற்கு ஒருவாறு ஈடு கிடைக்குமென்று எழுதியிருக்கிறார். இந்தப் பிரேரேபணை புதிதல்ல. 50 வருஷத்துக்கு முன்னால், கவர்ன்மெண்டு வரும்படிக்குறைவால் கஷ்டப்பட்டபோது, புகையிலைக்கு வரி விதிப்பதும் வருமான வரி விதிப்பதும் ஆகிய பிரேரேபணைகள் செய்யப்பட்டுப் புகையிலை வரி விதித்தல் சாத்தியமானதல்ல என்று விடப்பட்டுப்போயிற்று. முதலாவது, புகையிலைக்கு வரி விதிப்பதால் உப்பு வரியால் கிடைக்கக்கூடிய வரும்படி கிடைக்காது. இரண்டாவது, இந்தியாவில் பயிராகும் புகையிலை சுருட்டுகளாகவும் சிகரெட்டுகளாகவும் செய்யப்பட்டு அன்னிய தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றது. வரி விதிக்கப்பட்டால் ஏற்றுமதியாகும் புகையிலைச் சாமான்கள் குறைந்துபோம். இந்தியாவிலிருந்து செய்யப்படும் ஏற்றுமதிகள் குறையக்கூடாதென்பது இந்தியா கவர்ன்மெண்டாரின் கவலையாகவே இருந்து வருகிறது. மேலும், புகையிலையும் ஏழைகள் உபயோகப்படுத்துகிற வஸ்துவாகையால் அதற்கு வரி விதித்தால் அதுவும் விலை அதிகமாகிவிடும். காரணங்கள் எவையானாலும் இந்த விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்வது விரும்பத்தக்கதே.

PEACHES.

'பீச்' பழங்கள்.—'பீச்' என்பது ஒருதினுசு பழம். இதை ஐரோப்பியர்கள் வெகுசாய் சாப்பிடுவார்கள். இந்தப்பழம் வடஇந்தியாவிலும், நம்முடைய ராஜதானியில் நீலகிரி முதலிய இடங்களிலும் சாகுபடி ஆகிறது. இதை ரெயில் மார்க்கமாய் வெகு தூரங்களுக்கு அனுப்பினாலும் அவைகள் கெட்டுப்போகாமலிருக்கும்படியான வழி ஒன்றை ப்யூஸாவிலுள்ள ஸ்தாவர சாஸ்திரி கண்டுபிடித்திருக்கிறாராம்.

PROVIDENT FUNDS.

பிராவிடெண்டு பண்டாபீஸ்கள்.—கொஞ்ச காலமாக அநேக ஜில்லாக்களில் முக்கியமாய் தஞ்சாவூர் ஜில்லாவில் கல்யாண பண்டு என்றும் சாவுபண்டு என்றும் அநேக பண்டுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த பண்டுகளில் அநேகம் மோசடியானவைகள். இப்படிப்பட்ட பண்டுகளில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் கிராம அதிகாரிகளுக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கும் பக்ஷத்தில் அதைப்பற்றி கண்டிக்க வேண்டியதாய் ஏற்படுமென்று கவர்ன்மெண்டார் எல்லாருக்கும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். இதோடு இப்படிப்பட்டபண்டுகள் ஏற்படுத்த முடியாமல் ஒரு சட்டமும் செய்யப்போகிறார்களாம்.

IMPORTS OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற ஜனவரி ௴ 23௳ முதல் பிப்ரவரி ௴ 19௳ வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 51 அந்தரும், ஆஸ்ட்ரியா ஹங்கேரியிலிருந்து 4,100 அந்தரும், ஜாவாவிலிருந்து 48 அந்தரும், இறக்குமதியாயின.

FOREIGN NEWS.

அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

INDIANS IN THE TRANSVAAL.

ட்ரான்ஸ்வாலில் உள்ள இந்தியர்கள்.—ஆப்பிரிக்காவில் ட்ரான்ஸ்வால் மாகாணத்துக்குப் பிழைப்புக்காகப்போய் அங்கே குடியேறியிருக்கும் இந்தியர்களை அந்த மாகாணத்து ராஜாங்கத்தார் அங்கே தங்கக்கூடாதென்று நிர்ப்பந்தமான சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சட்டங்கள் அநியாயமானவைகளென்றும் அவைகளை ரத்து செய்துவிட வேணும் என்றும் இந்தியர்கள் மன்றாடி வருகிறார்கள். மேலே சொல்லிய சட்டங்களுக்கு உள்படாதவர்களை அந்த கவர்ன்மெண்டார் தண்டித்தும் ஜெயிலில் போட்டும், பலாத்காரமாய்ப் பிடித்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பியும் வருகிறார்கள். இப்படித் தொந்திரவு படுகிறவர்களுடைய குடும்பங்கள் சம்பாதிக்கும் புருஷனில்லாமல் போவதால் ரொம்பவும் வருத்தப்படுகின்றன. அதற்காக இந்தியாவிலுள்ள கனவான்களெல்லாரும் அநுதாபப்பட்டு ட்ரான்ஸ்வாலிலுள்ள இந்தியர்களுக்கு பண உதவி செய்து வருகிறார்கள். "பிழைக்கும் வழி" முதல் ஸஞ்சிகையில் ஜே. என். டாடா என்பவரின் சரித்திரத்தையும் அவருடைய குணதிசயங்களையும் பிரசுரித்திருக்கிறோம். அந்த மகானுடைய குமாரரான ஆர். டி. டாடா என்பவர் 25,000 ரூபாய் கஷ்டப் படுகிறவர்களுக்கு அனுப்பி யிருக்கிறார். ட்ரான்ஸ்வால் இந்தியர்களைசரிவர நடத்ாதபட்சத்தில் அந்த ராஜாங்கத்தாருக்கு உறைக்கும் படியான ஒரு சட்டம் செய்வதாக இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கிறார்கள்.

THE BANANA IN ENGLAND.

இங்கிலாந்தில் வாழைப்பழம்.—பொருள்காட்சிகளால் வியாபாரத்திற்கு உண்டாகும் பலனை கீழே சொல்லிய விஷயத்தைக்கொண்டு சுலபமாய் அறிந்துகொள்ளலாம்.

1886-ம் ௵த்துக்கு முந்தி எப்போதாவதுதான் இங்கிலாந்து தேசத்தில் வாழைப்பழம் கிடைப்பது வழக்கம். அந்த வருஷத்தில் இங்கிலாந்தில் பல தேசங்களிலுள்ள விளைபொருள்களெல்லாம் சேகரிக்கப்பட்டு ஒரு பெரிய பொருள்காட்சி நடந்தது. அது முதல்கொண்டு வருஷாவருஷம் வேண்டிய வாழைப்பழங்கள் இங்கிலாந்துக்கு அனுப்பப்படுகின்றன.

SEASON.
கால ஸ்திதி.

RAINFALL.

மழை.—ஏப்பிரல்௴ 1-தேதியிலிருந்து பிப்ரவரி௴ 27-ம்தேதி முடியப் பெய்த மழை அளவும், இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், கீழே அங்குலத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் அநேக இடங்களில் மழை சரிவரப் பெய்யவில்லை என்று ஏற்படுகிறது.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	29	47
வால்டேர்	35	43
காக்கிநாடா	34	39
மசூலிப்பட்டணம்	37	41
நெல்லூர்	28	31
மதராஸ்	42	50
கடலூர்	35	52
நாகப்பட்டணம்	24	55
பாம்பன்	32	38
கொழும்பு	63	85
திருவநந்தபுரம்	68	60
கொச்சி	97	113
கள்ளிக்கோட்டை	126	114
மங்களூர்	145	124
மெர்க்காரா	136	125
ஐதராபாத்	29	31
ரெய்ச்சூர்	25	30
பல்லாரி	18	20
கர்நூல்	18	28
கடப்பை	42	33
ஹாஸ்ஸான்	41	35
பெங்களூர்	39	34
கொடைக்கானல்	57	58
உதகமண்டலம்	60	..
கோயம்புத்தூர்	22	21
வேலூர்	59	..
சேலம்	51	40
திருச்சிநாப்பள்ளி	33	32
புதுக்கோட்டை	38	..
மதுரை	50	33
திருநெல்வேலி	27	20

CROPS AND MARKET REPORT.
பயிர்களும் மார்கெட் நிலவரமும்.

THE COTTON CROP.

பருத்திப்பயிர்.—சென்னை ராஜதானியில் 1910 வருஷம் ஜனவரி௴ முடிய ஸர்க்கார், இநாக் கிராமங்கள், சுதேச மன்னர்கள்ராஜ்யம் ஆகிய எல்லாவற்றிலுமாகச்சேர்ந்து சுமார் பதினாறேகாலே அரைக்கால் லக்ஷம் ஏகரில் பருத்தி சாகுபடி ஆகியிருக்கிறதாம். இதில் ஒவ்வொன்றிலும் 400 ராத்தலுள்ள சுமார் ஒன்றே முக்கால் லக்ஷம்பேல் (மூட்டை) பஞ்சு கிடைக்குமாம். இந்தியா மொத்தத்திற்கு 202¼ லக்ஷம் ஏகர் சாகுபடியாயிருப்பதாகவும், அதில் சுமார் 45¼ லக்ஷம் பேல் பஞ்சு கிடைக்கக்கூடுமென்றும் சொல்லுகிறார்கள்.

THE GROUNDNUT GROP.

மணிலாக்கொட்டைப் பயிர்.— 1910-ம் வருஷம் ஜனவரி௴ முடிய சென்னை ராஜதானியில் மொத்தத்தில் 6,78,000 ஏகராவில் மணிலாக்கொட்டை சாகுபடியாயிருக்கிறதாம். இது சென்ற வருஷத்தில் இதே காலத்தில் சாகுபடியாயிருந்த விஸ்தீரணத்தில் 100-க்கு 11 பங்கு குறைந்திருக்கிறது. இதில் தோல் உரிக்காமல் சுமார் 9 லக்ஷம் பாரம் கொட்டை கிடைக்கக்கூடுமாம். அதாவது போன வருஷத்து விளைச்சலை விட பத்தில் ஒன்று, குறைச்சலாகும். இந்தியா மொத்தத்தில் 940,000 ஏகரில் மணிலாக்கொட்டை சாகுபடியாயிருப்பதாயும், அதில் 18,61,650 பாரம் கொட்டை கிடைக்கலாமென்றும் சொல்லுகிறார்கள். அதாவது போன வருஷத்தை விட இந்த வருஷத்தில் சாகுபடி விஸ்தீரணத்திலும் ஸரி, விளைவிலும் ஸரி, நூற்றுக்கு 14 பங்கு குறைச்சலாகிறது.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—ஜனவரி௴ 23௳-யிலிருந்து பிப்ரவரி௴ 19௳- வரையில் அந்நியதேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி சாமான்களின் விவரம்.—நூலும், முறுக்கு நூலும் 496,585 ராத்தல், காரிகத்துணிகள் 3,185,979 கஜம், சலவைத்துணிகள் 1,952,612 கஜம், இதர தினுசுத்துணிகள் 4,059,531 கஜம். இதே காலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 13,590 அந்தர் , துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். பிப்ரவரிமாஸம் 22-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூல் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-0 வரையில் இருந்ததாகத் தெரியவருகிறது.

Supplement to "The Practical Life"

"பிழைக்கும் வழி" க்கு அனுபந்தம்.

PULIKOLUM OR JELLICUT BULL.

புலிக்குளம் அல்லது ஜெல்லிக்கட்டு காளை.

ஜீ. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.

G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
31 MAR 1910
MADRAS.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜீ. ஏ. வைத்தியராமன், பி.ஏ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.
EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. } ஸௌமியஹு பங்குனிமீ —MARCH 1910. { ஸஞ்சிகை. 3. No. 3.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.				அந்நிய நாடு.		
வருஷம் 1க்கு ..	4	0	0	..	6	0	0
6 மாதத்திற்கு ..	2	0	0	..	3	0	0
தனிப்பிரதி ..	0	6	0	..	0	8	0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்படவேண்டும்.

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க மரியாதை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸமும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டில் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஜீ. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட்; மதராஸ்.

Practical Life.

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland.					Foreign.		
	Rs.	A.	P.			Rs.	A.	P.
Per annum ...	4	0	0	...	...	6	0	0
„ half year ...	2	0	0	...	...	3	0	0
Single copy ...	0	6	0	...	...	0	8	0

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers Messrs. G. A. Vaidya Raman & Co., 10, Esplanade, Madras.

EDITORIAL NOTES.

பத்திராதிபர் குறிப்புகள்.

Irrigation Facilities.

பாசன சௌகரியங்கள்.—கோடைகாலம் பிறந்து விட்டபடியால் ஜலாதாரம் இல்லாத சாகுபடி நிலங்களுக்கு பாசன சௌகரியங்களை ஏற்படுத்திக்கொள்ள இதுவே தகுந்த காலம். கிணறுகள் வெட்டுவதைப்பற்றியும், தண்ணீர் இறைப்பதற்காக ஆயில் எஞ்சின்கள் போடுவதைப்பற்றியும் விவரங்கள் வேண்டுமென்று சிலபேர்கள் நமக்கு எழுதி யிருக்கிறார்கள். இவைகளைப்பற்றிய விவரங்களை இந்த ஸஞ்சிகையில், 'விசேஷத்திரட்டு' என்னும் பகுதியில் பிரசுரித்திருக்கிறோம்.

Paddy Seeds.

நெல் விதைகள்.—ஒற்றை நாற்றாய் நட்டு எடுக்கப்பட்ட பாங்குநெல் விதை ரூபாக்கு 9 பட்டணம் படி வீதம் நெல்லிக்குப்பத்திற்கு அடுத்த பாலூர் கவரன்மெண்டு பண்ணையில் கிடைக்கும். வேண்டியவர்கள் ஷை பண்ணை மானேஜருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். இதோடு, இரண்டாம் போகமாகப் போடக்கூடிய அடியில்கண்ட விதைகளும் அவ்விடத்தில் அகப்படும். அவைகள், கருடன் சம்பா, மிளகு சம்பா, மல்லிகைச் சம்பா, முத்துச் சம்பா, சடைச்சம்பா, வெள்ளைச் சம்பா, வெள்ளைச் சிறுமணியன், ஜீரகச்சம்பா, முதலியவை,

The Cotten Industry.

பருத்திக் கைத்தொழில்:—போன பிப்ரவரி மாஸத்தில் நூலின் விலையேற்றத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது அதனால் நெசவுக்காரர்களுக்கு வெகுவாய் நஷ்டமுண்டாகுமென்று சொன்னோம். அனுபோகத்திலும் அப்படியே இருப்பதாகத் தெரிகிறது. போன வருஷத்தைவிட இந்த வருஷம் நூலின் விலை ராத்தல் ஒன்றுக்கு 2 அணா அதிகமாயிருக்கிறது. 10ம் நெம்பர் நூல் போனவருஷத்தில் விற்றதைவிட இந்த வருஷத்தில் ராத்தல் ஒன்றுக்கு 1½ அணா அதிகமாக விற்கிறது. இதே மாதிரி 20ம் நெ. நூல் 1¼ அணா அதிகமாக விற்கிறது. ஆகவே தற்காலத்தில் பருத்தியை நூலாய்த்திரித்து விற்றால் ராத்தல் ஒன்றுக்கு 10ம் நெ. நூலில் ½ அணாவும், 20ம் நெ. நூலில் ¼ அணாவும் நஷ்டமாகிறது. போனவருஷத்தைவிட இந்த வருஷத்தில் துணியின் விலை ராத்தல் ஒன்றுக்கு ¼ அணாத்தான் அதிகமா இருக்கிறது. ஆகவே துணியாய் நெய்து விற்பதினால் ராத்தல் ஒன்றுக்கு 1¾ அணா வீதம் நஷ்டமாகிறது. இப்படிச்செல்லாம் நஷ்டப்படுவதைப் பார்க்கிலும் வாரத்துக்கு ஒரு நாளோ இரண்டு நாளோ பஞ்சு ஆலைகளில் வேலையை நிறுத்திப்பார்க்கலாமென்று பம்பாய் பஞ்சாலைச் சொந்தக்காரர்கள் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இதே மாதிரியாக இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்ட்ரியா, ப்ரான்ஸ், ஜெர்மெனி, ஜப்பான், ருஷியா இட்டலி, இன்னும் பல தேசங்களிலும் வேலையை நிறுத்தியிருக்கிறார்கள். இப்படி நிறுத்துவதின் கருத்து விலைக்கு, வரும் சரக்குகள் குறைந்து அவைகளின் விலை ஜாஸ்தியாகும் என்பதுதான்.

India Government's Budget.

இந்தியா கவரன்மேண்டார் வரவு செலவு திட்டம்.—இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாண கவரன்மெண்டாரும், இவர்களுக்கு மேலான இந்தியா கவரன்மெண்டாரும், வருஷாவருஷம் "அபீஷியல் இயர்" என்று சொல்லப்படும் ஏப்ரல் மாஸம் முதல் தேதி முதல் மார்ச்சுமாஸம் 31உ வரையிலுள்ள ஒரு வருஷத்திற்கு ராஜாங்கத்தை நடத்த என்ன செலவாகும், என்ன வரும்படி வரும், என்று ஒரு வரவு செலவு திட்டம் போடுவது வழக்கமென்றும், அந்த திட்டத்தை என்ன விதமாகப் போடுவது வழக்கமென்றும், போன ஜனவரிமாஸத்து ஸஞ்சிகையில் சொன்னோம் இப்பொழுது அந்தந்த மாகாண கவரன்மெண்டுகளின் திட்டங்களும், இந்தியா கவரன்மெண்டின் திட்டமும் வெளியாகி யிருக்கின்றன.

இந்தியா கவரன்மெண்டின் திட்டம் பின்வருமாறு:—

1908-09.
பவுன்.

அயன் வரவு	69,761,535.
செலவு	73,499,245.
குறைவு	3,737,710.

1909-10.
மறு திட்டம்
பவுன்.

வரவு	74,303,700.
செலவு	74,034,200.
மீதி.	2,69,500.

1910-11.
மதிப்பு திட்டம்
பவுன்.

வரவு	75,261,600.
செலவு	75,018,700.
மீதி.	245,900.

இதனால் செலவு அதிகமாகிக்கொண்டே வருவதாகத்தெரிகிறது 1910-11 வருஷத்தில் வேண்டிய செலவுக்கு இப்பொழுது வரும் வரும்படி போதாததால் அடியில் கண்டபடி புதுத் தீர்வைகள் விதித்து சுமார் 1,149,600 பவுன் வசூல் செய்யாலாமென்று எண்ணியிருக்கிறார்கள். சாராய தினுசுகளின் பேரில் இப்பொழுது இருப்பதைவிட பாதித்தீர்வை ஜாஸ்தியாகப் போட்டிருக்கிறார்கள் இதர தேசங்களிலிருந்து இறக்குமதியாகும் புகையிலையின் பேரில் ராத்தல் 1க்கு ரூ. 1-8-0ம், சுருட்டின் பேரில் ராத்தல் 1க்கு ரூபாய் 2—8—0ம், ஸிகரெட்டின்பேரில் ராத்தல் 1க்கு சுமார் ரூபாய் 2-0-0ம், இன்னும் இதரப் புகையிலைச் சரக்குகளின்மேல் ராத்தல் 1க்கு ரூபாய் 1-10-0ம், கட்டிவெள்ளியின்மேல் அவுன்ஸ் 1க்கு நாலு அணாவும், கெரோஸின் எண்ணெயின்மேல் புட்டி 1க்கு மூன்று தம்படியும் புதிதாக வரிபோட்டு, இவைகளோடு வியாபார விஷயமான ஸ்டாம்புத் தீர்வைகளையும் சில அம்ஸங்களுக்கு ஜாஸ்திப்படுத்தியிருக்கிறார்கள் மேலேசொல்லிய புதுத்தீர்வைகளால் வசூலாகக்கூடிய பணமும் மதிப்பு திட்ட வரவில் சேர்த்தே காண்பித்திருக்கிறோம்.

The Madras Government's Budget.

மதாாஸ் கவரன்மேண்டின் வரவு செலவு திட்டம்.—மதராஸ் கவரன்மெண்டின் வரவு செலவு திட்டங்கள் பின் வருமாறு:—

1908-09.
ரூபாய்.

அயன் வரவு	582,15,000.
செலவு	561,90,000.
மீதி.	20,25,000.

1909-10.
மறு திட்டம்.
ரூபாய்.

வரவு	598,15,000.
செலவு	586,03,000.
மீதி.	12,12,000.

1910-11.
மதிப்பு திட்டம்
ரூபாய்.

வரவு	613,04,000.
செலவு	632,31,000.
குறைவு	19,27,000.

1910–11ம் வருஷத்தில் முன் வருஷங்களைப்போல் மிச்சம் ஏற்படாமல் செலவு ஜாஸ்தியாவதற்குக் காரணம் என்னவென்றால்: சுகாதார அபிவிருத்திக்காகவும், சென்னப்பட்டணம் முனிஸிபாலிடிக்கும், இன்னும் இதர முன்ஸிபாலிடிகளுக்கும், சென்னைப்பட்டணம் துறைமுகக் கமிட்டியாருக்கும், ஆக பலவிதமாய் சுமார் 37 லக்ஷம் ரூபாய் செலவு செய்யவேண்டியதாய் வருமென்று திட்டம் போட்டிருப்பதினால்தான்.

மதராஸ் கவரன்மெண்டார் இப்படி வரவுக்கு மிஞ்சி செலவு ஜாஸ்தியாய்ப் போவதற்காக புதுவரி ஒன்றும் போடமாட்டார்களா. ஜாஸ்திச் செலவை முன் வருஷங்களில் மிகுந்து கையிலிருக்கும் பணத்திலிருந்து செய்வார்கள். இப்படிக்கெல்லாம் செய்தும் 1910–11ம் வருஷத்தின் கடைசியில் மதராஸ் கவர்ன்மெண்டார் கையில் 112,92,000 ரூபாய் பாக்கியிருக்கலாம்.

CO-OPERATION IN EUROPE AND INDIA

BY
DIWAN BAHADUR L. D. SWAMIKANNU PILLAI,
M. A., B. L., L.L.B.,
Secretary, Board of Revenue, Madras.

ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் கூட்டுறவு.

கூட்டுறவுச் சங்கங்களினால் ஐரோப்பியர்கள் அடைந்துவரும் மகத்தான நன்மைகளைப்பற்றி நாம் வெகுவாய்க் கேள்விப்படுகிறோம். ஐரோப்பாவில் அபரிமிதமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஐக்கிய நாணயப் பண்டசாலைகள், ஐக்கிய நாணயத்தொழிற் சாலைகள் முதலிய ஸ்தாபனங்களுக்கு சொந்தக்காரர்கள் கோடீஸ்வரர்களா யிருக்கவேணுமென்று சில பேர்கள் எண்ணக்கூடும். இது பிசகு. அவர்கள் பணக்காரர்களே அல்ல. அவர்களெல்லாரும் அநேகமாய்ச் சாமானிய கைத்தொழிலாளிகளும், கூலியாட்களுமே. இவர்கள் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்திராவிட்டால் அவர்கள் எல்லாரும் அன்றாடும் ஜீவனத்துக்கு வழியில்லாதவர்களாயிருக்க வேண்டியவர்கள். ஐரோப்பாவில் சீதோஷ்ண வசதியும், நிலக்கரி, இரும்பு உற்பத்தி முதலிய சௌகரியங்கள் இருக்கின்றன என்றும், இப்படிப்பட்ட சௌகரியங்கள் இந்தியாவில் இல்லாதிருப்பதோடு, ஜாதி என்ற கட்டுப்பாட்டினால் ரொம்ப நிர்ப்பந்தமாயிருக்கிறதென்றும் சில பேர்கள் சொல்லுகிறார்கள். இந்த விதமான குறைகளை யெல்லாம் ராஜாங்கத்தார் பரிஹரிக்கவில்லை யென்று ராஜாங்கத்தின் பேரிலும் சிலபேர்கள் குற்றம் சொல்லுகிறார்கள். ஐரோப்பாவைப்பற்றி இவர்கள்கொண்டிருக்கிற அபிப்பிராயம் தவறானது. அங்கேயும் ஏழைகள் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், லக்ஷக்கணக்கான ஜனங்கள் பிழைப்பில்லாமல் தவிக்கிறார்கள். அவ்வளவு திக்கற்றவர்கள் நம்முடைய தேசத்தில் கிடையாது. இந்த ஏழைகளை எப்படி முன்னுக்குக் கொண்டுவரலாமென்று, ஐரோப்பாவில் ஜெர்மெனி, இட்டெலி, ப்ரான்ஸ் தேசங்களில் ரெய்பீஸன், ஷுல்ஸ்டிலிட்ச், லூஸட்டி போன்ற அநேக மகான்கள், ராப்பகலாக யோசித்து, உழைத்துக், கடைசியாய் ஏழைகளைச்சேர்த்துக் கூட்டுறவுச் சங்கங்களாக உழைக்கச்செய்வதுதான் அவர்களுக்கு விமோசனத்தைத் தருமென்று கண்டு பிடித்தார்கள். ஏழைத்தனத்தால் உண்டாகும் கொடுமைகளுக்கெல்லாம் கூட்டுறவு உழைப்பே தகுந்த பரிஹாரமென்று கண்டறிந்தார்கள். ஆகையால் நம்முடைய தேசத்து வறுமையை நீக்க இந்த பரிஹாரத்தையே நாமும் கைக்கொள்ளவேணும்.

எந்த வியாபாரத்திலும் முதல் முதல் பரஸ்பர நம்பிக்கை வேண்டியது அவசியம். ஒருவன் பணத்தை மற்றொருவனிடத்தில் கொடுத்தால் மோசம் போகாது என்ற முழுநம்பிக்கை ஏற்படவேணும். மனித சுபாவம் எங்கும் ஒன்றேதான். ஏழைகள் தாங்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தை லாபமுண்டு என்று தெரிந்தாலுங்கூட, லகுவில் பிறரிடத்தில் கொடுக்கமாட்டார்கள். இந்த உண்மையை கிராம ஐக்கிய நாணய பாங்கிகளை நடத்தும் விஷயமாய் ஆதியில் ஒழுங்கு ஏற்படுத்தியவர்கள் மறக்கவில்லை. பாங்கியில் பணம் போட்டவர்கள், பணம் எப்படி செலவழிக்கப்படுகிறது என்பதைப் பார்த்து வரும்படியே ஐரோப்பாவில் ஏற்பட்டது.

இது போலவே நம்முடைய தேசத்து சட்டமும், கிராம ஐக்கிய நாணய பாங்கிகளின் விஷயங்களை எப்பொழுதும் கவனித்து வருவதற்காக அந்தப் பாங்கிகளின் மெம்பர்கள் அந்தந்த கிராமங்களில் குடியிருக்கிறவர்களாகவே யிருக்கவேணும். கிராமங்களில்

நடக்கும் விஷயங்கள் கிராமத்தில் குடியிருக்கிறவர்களுக்கு சுலுவாய்த் தெரிந்து விடும். ஆதலால், கிராம பாங்கிகளின் காரியங்கள் சரிவர நடக்காவிட்டால் அவைகளில் நடக்கும் க்ருத்ரமங்களும், ஊழல்களும் வெளிவந்துவிடும். ஆகையால் கிராமத்தார்கள் பாங்கி விஷயங்களில் கண் வைத்திருக்கிறார்களென்று ஏற்படவே, பாங்கிகளை நிர்வாகம் செய்கிறவர்கள் எப்பொழுதும் உஷாராயும் யோக்கியமாயும் நடந்துகொள்ளும்படியாய் ஏற்படுகிறது. ஆகவே மனிதன் சுபாவத்திலேயே யோக்கியனா யில்லாவிட்டாலும் இந்த பாங்கிகளின் மூலமாய் யோக்கியமாய் நடந்துகொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இப்படிக்கு பரஸ்பரம் நம்பிக்கையை உண்டு பண்ணியும் பிறர் சொத்தை தன் சொத்துப் போல் பார்த்து வரும்படியும் செய்வதால் இந்த கிராம பாங்கிகளினால் உண்டாகும் நன்மைகள் மகத்தானவைகள்.

நாம் பெரும்பாலும் விவசாயிகளே அல்லாமல் வர்த்தகர்களுமல்ல, கைத்தொழிலாளிகளுமல்ல. ஒவ்வொரு குடியானவனும் குடித்தனத்துக்கு வேண்டியவைகளை தன் நிலத்திலேயே விளையித்துக்கொண்டு திருப்தி அடைகிறான். இது வெகுகாலமாய் நடந்து வருகிற வழக்கம். ஆனால் இப்பொழுது நம்முடைய தேசத்தில் நாளுக்குநாள் விருத்தியாகிவரும் ஜனப்பெருக்கத்தாலும், அந்நிய தேசத்தாருடைய பழக்கத்தாலும், வர்த்தமானப் பத்திரிகைகளை படிப்பதாலும், நாம் கைத்தொழில்களையும், வர்த்தகத்தையும் விசேஷமாய் கையாளவேண்டிய அவசியம் நேரிட்டிருக்கிறது.

நம்மவர்களில் அநேகம்பேர்கள், முக்கியமாய் இங்கிலீஷ் படித்தவர்கள், வியாபார விஷயங்களிலும், கைத்தொழில் விஷயங்களிலும், ஏதோ எண்ணிக்கொண்டு, எடுத்த உடனேயே ஆகாயத்தில் பறக்கவேணுமென்று நினைக்கிறார்கள். இது முடியாதகாரியம். கைத்தொழில்களிலும், வியாபாரத்திலும், தேர்ச்சி அடைவதற்கு முன்னால், எல்லாரும், அதிலும் முக்கியமாய் விவசாயிகளாயிருப்பவர்கள், அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இரண்டுண்டு. அவைகளாவன :—

(1) தொழிலின் முறைமையும் (2) வர்த்தக நாணயத்தின் மகிமையும். இவை இரண்டையும் அறியாதவர்கள் வர்த்தகம், கைத்தொழில், இவைகளில் முன்னுக்கு வருவது கஷ்டமாகும்.

ஐக்கிய நாணய கிராம பாங்கிகளை நிர்வாகம் செய்வதினால் வியாபாரம், கைத்தொழில் இவைகளைச் செய்வதற்கு தேர்ச்சி உண்டாகிறது. ஆனால் அதிகத் தேர்ச்சி உண்டாவதற்கு இந்த பாங்கிகளின் விஷயமாக சில சீர்திருத்தங்கள் செய்யவேணும்.

1. ஒவ்வொரு பாங்கிக்கும் ஒரு ரிஸர்வ் பண்டு, அதாவது, சிறுகச்சிறுக லாபத்திலிருந்து மிகுத்துவைக்கப்பட்ட ஒருநிதி, ஏற்படவேண்டும். இந்த ரிஸர்வ் பண்டுதான் நஷ்டம் வருகிற சமயங்களில் பாங்கியைத் தாங்கும்.

2. மேலே சொல்லிய ரிஸர்வ் பண்டு ஒருநாளும் மூழ்கிப்போகக்கூடாமல் அதை ப்ரைவேட் பாங்கிகளிலும் அல்லது வேறு ஐக்கிய நாணயப் பாங்கிகளிலும் போடாமல், தகுந்த சொத்துக்களின் பேரில் போட்டுவைக்க வேண்டியது.

3. ஒவ்வொருவரும் சிக்கனமாய், அதாவது, செட்டாய்ச் செலவுசெய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் பரம்பரையாய் சில சுபாசுபங்களில் செய்துவரும் செலவை செட்டு என்று சொல்லமுடியாது. கொஞ்ச வருஷ முன்வரைக்கும் கல்யாணம் போன்ற சமயங்களில் பந்துக்கள் மோதரப் பணம் அல்லது

மொய்ப்பணம் போடவேணுமென்ற வழக்கம் இருந்தது. இந்தப் பணங்களெல்லாம் சேர்ந்து கல்யாணம் செய்கிறவர்களுக்கு கொஞ்சம் சௌகரியமாயிருந்தது. இப்பொழுது அந்த வழக்கம் நின்றுபோய்விட்டது. ஆனாலும் கல்யாணம் பண்ணுகிறவன் செலவைக்குறைக்க முடியாமல் வழக்கம்போல் கையிலிருந்தோ, கடன் வாங்கியோ செலவுசெய்ய வேண்டியதாக இருக்கிறது. இப்படிச் செலவு செய்ய வேண்டியதாயிருப்பது கஷ்டந்தானென்று ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையால் கிராமத்தார்கள் எல்லாரும் சேர்ந்து ஒவ்வொருவனுடைய அந்தஸ்தையும் பார்த்து அவனவன் இவ்வளவுதான் செலவழிக்கலாமென்று போதிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட செலவுகளுக்கு கிராம பாங்கிகளிலிருந்து கடன் கொடுக்கக்கூடாது. அவைகளிலிருந்து கடன் வாங்கி செலவழிப்பதினால் லாபம் உண்டென்று தெரிந்தாலொழிய, கடன் கொடுப்பதில்லையென்று கிராம பாங்கிகளில் ரூல் ஏற்பட்டிருக்கிறது. கல்யாணத்துக்குச் செலவாகும் பணம் லாபத்தைக் கொடுப்பதில்லை. ஆகையால் கல்யாணச் செலவுக்காக கிராம பாங்கிகளிலிருந்து பணம் கொடுக்கக்கூடாதென்று ஏற்படுகிறது.

4. கிராம பாங்கிகள் நாளடைவில் தங்கள் வட்டி விகிதத்தைக் குறைக்க முயலவேண்டும். ஐரோப்பாவில் சில தேசங்களில் கடன் கொடுக்கிறவனுக்கு வருஷத்துக்கு மூன்று வட்டி கிடைத்தால் அவன் எவ்வளவோ சந்தோஷமாய்க் கடன் கொடுப்பான். கிராம பாங்கிகளால் ஏற்பட்டிருக்கும் ஒரு பெரிய நன்மை அவைகள் சாவ்காரர்களைவிட குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பதே. கிராம பாங்கிகளின் வட்டி வீதம் 100க்கு 9½ யாய் இருக்கிறது. இந்தப்பாங்கிகளை சரிவர நடத்திவரும் பக்ஷத்தில் 6 வட்டிக்கும் அதற்குக் குறைந்தும் கடன் கொடுக்கக் கூடும்.

எல். டி. ஸ்வாமிக்கண்.

SOME AGRICULTURAL QUESTIONS.

BY THE EDITOR.

சில விவஸாய விஷயங்கள்.

நாளது மார்ச்சு௴ 12௳ யன்று நம்முடைய ராஜதானிச் சட்ட நிருபண ஸபையின் மீட்டிங் ஒன்று நடந்தது. அந்த மீட்டிங்கில் விவஸாயத்துக்கு சம்பந்தமான அடியில்கண்ட விஷயங்களைப்பற்றி மெம்பர்கள் கேள்விகேட்க, கவரன்மெண்டார் பதில் சொன்னார்கள். கனம் பி. கேசவப்பிள்ளை கிராமத்தார்களுக்கு உபயோகப்படக்கூடிய காடுகளைப்பற்றி பின்வருமாறு கேட்டார்:—

பாரஸ்டு (காடு) ஆக்ட்டுப்படி கிராமத்தார்களுக்கு உபயோகப்படக்கூடிய காடுகளை வளர்த்துப்பார்த்து அவைகளை நிறுத்தினதுண்டா? அப்படியானால் எப்பொப்பொ? எந்தெந்த இடங்களில் அப்படியாயிற்று? அவைகளை நிறுத்திவிடும்படி ஏற்பட்ட காரணங்கள் என்ன?.

இந்தக் கேள்விகளுக்கு பின்வருமாறு பதில் சொல்லப்பட்டது. செங்கல்பட்டு ஜில்லாவில் கிராமத்தார்கள் உபயோகத்திற்கென்றே அனேக இடங்கள் பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கப்பட்டன. நெல்லூர் ஜில்லாவில் சேகடா என்று சொல்லப்பட்ட எல்லாமாடுகளும் மேயக்கூடிய மேய்ச்சல் ஸ்தலங்களும் இருக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களிலுள்ள மரஞ்செடிகளெல்லாம், அடியோடு போய்விட்டன. இதே மாதிரியாக இதர ஜில்லாக்களிலும் செய்து பார்த்திருக்கிறோம். ஆனால் அவைகளைபற்றிய விவரங்களை இப்பொழுதே சேகரித்துச்சொல்லுவதற்கு அவகாசமில்லை. கிராமங்களை ஒட்டி காடுகளை வைத்துக் காப்பாற்றுவதின் தாத்பரியம் கிராமத்தார்கள் தங்களுக்கு வேண்டிய

விறகு, மரம், மட்டைகளை எடுத்துக் கொள்வதற்காகவும், மாடுகளை மேய்த்துக்கொள்வதற்காகவுமே. இவைகளுக்காக வேறு சில காடுகளை சில அற்ப நிபந்தனைக்கு உள்பட்டு கிராமத்தார்கள் உபயோகித்துக் கொள்ளலாம். ஆகையால் கிராமங்களை ஒட்டிக் காடுகளை பிரத்தியேகமாக வளர்த்து கிராமத்தார்கள் உபயோகத்துக்கென்றே அவைகளை ஒப்பிவிக்கும் வழக்கம் நிறுத்தப்பட்டது. கிராமத்தார் வசம் ஒப்பிவித்த காடுகளில் மரங்கள் அற்றுப்போனதினாலேயே காடுகளை வளர்த்துக் கிராமத்தார் வசம் ஒப்பிவிப்பது பிரயோஜனமில்லாத காரியமென்று ஏற்படுகிறது. கனம் கேசவப்பிள்ளை கேட்ட கேள்விகளுக்குக் கவரன்மெண்டார் இந்த மாதிரி பதில் சொன்னார்கள்.

மேலே சொன்ன பதிலில் கவரன்மெண்டாரைக் குற்றம் கண்டுபிடிக்க இடமில்லை. நாமே யோசித்துப் பார்ப்போம். கிராம சமுதாய விஷயங்களெல்லாம் சரிவர நடந்து வருகின்றனவா? ஏதோ இங்கே அங்கே தவிர மற்றக்கிராமங்களிலெல்லாம் வாயாடியோ, வாசாலகனோ, பெரியமிராசுதாரோ, யாராயினும் ஒருவன் சமுதாயப்பணங்களை வசூல் செய்து கிராமத்தார்களுக்கு கணக்குச் சொல்லாமல் சொந்த உபயோகத்திற்கோ, அல்லது வேறு உபயோகங்களுக்கோ, பொது வரும்படியை செலவழித்துவிடுகிறான். இது நாம் தினம் பார்க்கிற விஷயம். எல்லாருக்கும் பாத்தியமுள்ள சொத்து என்றால் ஒவ்வொருவனும் அதிலிருந்து எவ்வளவு சுரண்டிக்கொள்ளலாமோ அவ்வளவையும் சுரண்டிவிடுவான். இது சாமான்ய ஜனங்களின் ஸ்வபாவம். அதிலும் தற்காலத்தில் ஒவ்வொருவனுக்கும் ஜீவனம் நடக்கிறதே கஷ்டமாயிருப்பதால் பொதுஜன நன்மையைப் பற்றி கவனிப்பவர்கள் எத்தனைபேர்கள்?

கனம் காமேஸ்வர ராவ் நாயுடு பின்வருமாறு கேள்வி கேட்டார்:—கவரன்மெண்டுக்கு மனுச் செய்துக்கொள்ளாமல் புன்செய் நிலத்துக்கு ஜலம் பாய்ச்சினதாகக் கர்ணம் அடங்கல் கணக்கில் எழுதிக் கொள்ளும்போது, அப்படி எழுதிக்கொண்டதைப் பட்டாதாரனுக்கு உடனே அறிவிப்பதுண்டா? பட்டாதாரனை வைத்துக்கொண்டு நிலத்தைப் பரிசோதிப்பதுண்டா? கர்ணம் எழுதிக்கொண்டதைச் சரிபார்க்க ரெவெனியூ இன்ஸ்பெக்டர் தாமசமில்லாமல் நிலத்தை வந்துபார்ப்பதுண்டா? ஜமாபந்தியானபிறகு தண்டத்தீர்வையைச் சேர்த்து டிமாண்டு நோட்டீஸ் வரும்போது பட்டாதாரனுக்கு அப்படி விதித்ததாகத் தெரிகிறதைத் தவிர அவனுக்கு முன்னதாக அறிவிப்பதுண்டா? பட்டாதாரன் அப்பீல் செய்துகொண்டால் கர்ணனுடைய கணக்கையும் ரெவெனியூ இன்ஸ்பெக்டருடைய ரிப்போர்ட்டையும் வைத்துக்கொண்டு இந்த அப்பீலைப் பைசல் செய்வது வழக்கமா? புன்செய் நிலத்துக்கு ஜலம் பாய்ச்சினதாகக் கர்ணன் கணக்கெழுதும்போது கிராமத்திலுள்ள சில தக்க மனிதர்களை வைத்துக்கொண்டு நிலத்தைப் பரிசோதிக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு கிராமத்திலும் இந்த மாதிரியான தக்க மனிதர்களை டிவிஷனல் ஆபீஸர் முன்னதாகவே குறிப்பிட்டு வைக்கவேண்டுமென்றும், கவரன்மெண்டார் உத்திரவு செய்வார்களா?

இதற்கு கவர்ன்மெண்டார் சொன்னபதில்:—இந்தமாதிரி திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் செய்துபார்த்து அது வீண் தாமசத்துக்குக் காரணமானதால் நிறுத்தப்பட்டுப்போயிற்று. நிலத்தைக் கர்ணன் பரிசோதிக்கும்போது, பட்டாதாரனை வைத்துக்கொண்டே செய்வதில்லையாயினும், அவன் கூடயிருப்பதால் ஆட்சேபமில்லை. ரெவெனியூ இன்ஸ்

பெக்டர் தாமசமில்லாமல் கர்ணன் எழுதின கணக்கு சரியா என்று பார்ப்பது கடமை. அப்படி அந்தக்கடமையைச் செலுத்துகிறானென்று பார்ப்பது தாசில்தாரின் கடமை. எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் அப்போது வில்லேஜ் கணக்குகளைப் பட்டாதாரன் பார்த்துத் தனக்குச் சம்பந்தமான கணக்குகள் சரியாயெழுதப்பட்டிருக்கின்றனவா என்று தெரிந்துகொள்ளக்கூடும். அப்படிச் செய்வதால் தன் நிலத்துக்கு எந்த மாசத்திலாவது ஜலம் பாய்ச்சினதாக எழுதப்பட்டிருக்கிறதா, மேலான அதிகாரிகளிடத்திலிருந்து என்ன உத்திரவு வந்திருக்கிறது, என்பதை அறிந்து கொள்ளலாம். ஜமாபந்தி நடக்கும்போது ரயத்துகள் வந்திருந்து 6-ம் நம்பர் கணக்குகளைப்பற்றி செய்திருக்கும் உத்திரவுகளை ஜமாபந்தி ஆபீஸர் விவரித்துக்காட்டும்போது அவர்கள் ஆட்சேபங்கள் செய்தால் அவைகளைக்கேட்பது அந்த ஆபீஸரின்கடமை. அப்பீல்களைப் பைசல் செய்வதில் கர்ணனுடைய கணக்குகளும் ரெவெனியூ இன்ஸ்பெக்டருடைய கணக்குகளும் சாமானியமாய் ஆதாரமாயிருந்தாலும் வேறு ஆதாரமிருந்தால் அதையும் கவனிக்கலாம். அக்கம்பக்கத்து ரயத்துகளைக்கேட்டும் தாசில்தாரும், டிவிஷனல் ஆபீஸரும், ரெவெனியூ இன்ஸ்பெக்டருடைய வேலையைத் தணிக்கை செய்வதற்காக சோதனையும் அல்லது இந்த அப்பீல்களுக்காக விசாரணையும் செய்தால் அவைகளில் ஏற்படும் விஷயங்களை ஆதாரவாகக்கொண்டும் ஜமாபந்தி ஆபீஸர் அப்பீல்களைப் பைசல் செய்யலாம். கிராமத்தில் தக்கவர்களை வைத்துக்கொண்டு கர்ணன் நிலத்தைப் பரிசோதிக்க வேண்டுமென்பது அனுபோகத்தில் நடவாது. இவ்வாறு கனம் காமேஸ்வர ராவ் நாயுடு கேட்க, பதில் சொல்லப்பட்டது.

கனம் காமேஸ்வர ராவ் நாயுடு நூதன விவசாய முறைகளைப் பரவச்செய்யும் விஷயமாக பின்வருமாறு கேட்டார். எந்தெந்த ஜில்லாக்களில் எத்தனைப் பரிசோதனைப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சென்ற மூன்று வருஷங்களுக்கு அவைகளுக்கான வரவு செலவு என்ன? கர்ணங்களை ஸர்வே ஸ்கூல்களுக்கு அனுப்பி ஸர்வே சொல்லிக்கொடுப்பதுபோல கிராம முன்சிப்களுக்கு வருஷத்திற்கு 15 நாளைக்கு விவஸாயத்தில் நூதனமுறைகளைச் சொல்லிக்கொடுத்து அவர்கள் மறுபடியும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப்போய் கிராமத்தார்களுக்குப் பிரயோஜனப்படும்படிச் சொல்லச்சொல்வது முடியுமா?

இதற்கு பின்வருமாறு கவரன்மெண்டார் பதில் சொன்னார்கள்.

அங்கங்கேயுள்ள விவஸாய சோதனைப் பண்ணைகளையும் அவைகளுக்கான வரவு செலவுகளையும் காட்டும் ஒரு ஸ்டேட்மெண்டு தயார் செய்து கொடுக்கிறோம்.

நூதன விவஸாய முறைகளைப் பரவச்செய்வது கிராமமுன்சிபுகளின் கடமையல்ல. அவர்களுக்கு 15 நாளைக்கு நூதன விவஸாய முறைகளைப் போதிப்பதினால் பிரயோஜனமுண்டாகுமென்று தோன்றவில்லை.

கனம் பெர்ராஜு பந்துலு அவர்கள் கேட்ட கேள்வியாவது:—1907-08, 1908-09, ஆகிய இந்த இரண்டு வருஷங்களிலும் ஸர்க்கார்ப் பரிசோதனைப்பண்ணைகளில் செய்து பார்த்து. நல்ல முறைகளென்று ஏற்பட்ட விஷயங்களை விவரித்து எத்தனைத் துண்டுப்பத்திரிகைகள் தமிழிலும், தெலுங்கிலும் பிரசுரம் செய்யப்பட்டன. அந்தப் பத்திரிகைகளை எல்லா கிராம அதிகாரிகளுக்கும், ஸ்கூல்மாஸ்டர்களுக்கும் அனுப்புவீர்களா? அந்தப்பத்திரிகைகள் விவசாயிகளை எட்டி ஏறும்படியான ஏற்பாடுகள் செய்வீர்களா? என்றுகேட்டதற்கு அடியில் கண்டபடி பதில் சொல்லப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
31 MAR 1910
MADRAS.

1907-08ம் வருஷத்தில் ஜ-ஏட் (ஒரு விதசணல்) சாகுபடியைப்பற்றி தமிழில் ஒரு துண்டுப்பத்திரிகை போடப்பட்டது. 1908-09ம் வருஷத்தில் "சீமை அத்தி" சாகுபடியைப்பற்றி தமிழிலும், தெலுங்கிலும் ஒரு பிரசுரமும், மணிலாக்கொட்டைசாகுபடியைப்பற்றி தெலுங்கில் ஒரு பிரசுரமும், திருநெல்வேலி ஜில்லா சிவகிரி ஜமீன் பண்ணையில் ஏற்பட்ட நெல் சாகுபடியில் சில நூதன முறைகளைப் பற்றி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய இந்த நாலு பாஷைகளில் பிரசுரங்களும் செய்யப்பட்டன. இவைகளைத்தவிர நெல் விதைத்தல், பசுந்தாள் உரம், விதை பொறுக்கி எடுத்தல், பருத்தி சாகுபடி ஆகிய இவைகளைப்போன்ற முக்கியமான விவசாய விஷயங்களைப்பற்றி விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் குறிப்புகள் எழுதி தமிழ், தெலுங்கு போன்ற ஸ்வதேச பாஷாபத்திரிகைகளுக்கு அனுப்பினதோடு அவைகளைத் துண்டுப் பத்திரிகைகளாகவும் பிரசுரம் செய்தார்கள். 1908-09ம் வருஷம் முதல் விவசாய பஞ்சாங்கம் என்பதாக இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, இந்த பாஷைகளில் வருஷாவருஷம் ஒரு புஸ்தகம் பிரசுரமாகிவருகிறது. இதில் விவசாய இலாகாக்காரர்கள் நல்ல முறைகள் என்று கண்டறிந்த விஷயங்களை எடுத்துச் சொல்லுவதோடு விவசாயிகளுக்கு அவர்கள் என்ன விதமாக ஒத்தாசை செய்யக்கூடும் என்பதையும் காட்டியிருக்கிறார்கள். பிரசுரம் செய்யும் பத்திரிகைகளை விவசாய இலாகாக்காரர்கள் வேண்டியவர்களுக்கு இனாமாகக் கொடுக்கிறார்கள். இந்த ராஜதானியிலுள்ள ஒவ்வொரு ஸ்கூலுக்கும் விவசாய பஞ்சாங்கம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதை கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் அனுப்புவதைப்பற்றி யோசனையிலிருக்கிறது. இந்த விதமாக கனம் பேர் ராஜு பந்துலு கேட்ட கேள்விகளுக்கு கவரன்மெண்டார் பதில் சொன்னார்கள்.

"பிழைக்கும் வழி" யில் போன வருஷம் மார்ச்சுமாஸம் முதல் ஒற்றை நாற்று நடுதலைப்பற்றி பிரசுரமாகிவரும் வியாஸங்களைச் சுட்டிக்காட்டி கனம் டி. வி. சேஷகிரி அய்யரவர்கள் பின்வருமாறு கேட்டார்.

சென்னை ராஜதானியில் ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு ஏகராவில் ஒற்றை நாற்று நடுகை ஆகிறது. ஒற்றை நாற்று நடுதலைப் பற்றிக் குடித்தனக்காரர்களுக்கு போதிப்பதற்காக சிலபேர்களை நியமித்து அவர்கள் ஊர் ஊராய்ப் போய் பிரசங்கம் செய்யும்படி செய்வீர்களா? ஒற்றை நாற்று நடாத இடங்களில் ஒற்றை நாற்றை நடும்படி அங்கங்கேயுள்ள தாசில்தார்களையும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களையும் கொண்டு நிலக்காரர்களுக்குச் சொல்லும்படி செய்வீர்களா?

இந்தக் கேள்விகளுக்கு கவரன்மெண்டார் பின்வருமாறு பதில் சொன்னார்கள்.

ஒற்றை நாற்றாக நடுவதால் உண்டாகும் பயன் எங்களுக்கு நன்றாய்த் தெரியும். அதை கிருஷிகர்களுக்குத் தெரிவிக்க தக்க ஏற்பாடுகளும் செய்து வருகிறோம். 1908-09ம் வருஷத்தில் சிவகிரி பண்ணையின் சூபரின்டெண்டெண்ட் திருநெல்வேலி ஜில்லாவில் பல இடங்களில் இதைப்பற்றி பிரசங்கங்கள் செய்தார். இந்த நூதன முறையை இன்னும் எந்த விதமாகப்பரவச் செய்யலாம் என்பதைப்பற்றி விவஸாய இலாகா உத்தியோகஸ்தர்களை இன்னும் யோசனை செய்யச்சொல்லுகிறோம்.

என்று கனம் சேஷகிரி அய்யர் அவர்களுக்குப் பதில் சொன்னார்கள்.

குடிகளுக்குள்ளே நூதன விவசாயமுறைகளை எப்படிப் பரவச்செய்கிறது என்பதைப் பற்றி பலபேர்கள் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். சிலபேர்கள் நூதன முறைகளை விவரமாய் எழுதி துண்டுப்பத்திரிகைகள் அச்சிட்டு குடிகளுக்குக் கொடுக்கவேணுமென்று சொல்லுகிறார்கள். சிலபேர்கள் அனேகம் குடிகளுக்கு எழுதப்படிக்கத் தெரியாது, அவர்களுக்கு புஸ்தகத்தைக் கொடுத்தால் பிரயோஜனமில்லை, நேரில் போய்ச்சொல்லவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இன்னும் சிலபேர்கள் நூதன முறைகளைப் புஸ்தக மூலமாய்ச் சொன்னாலும் நேரில் போய்ச்சொன்னாலும் விவசாயிகள், சொல்வதை லகுவில் நம்பமாட்டார்கள். ஆகையால் நூதன முறைகளை ஒவ்வொரு இடத்திலும் ப்ரத்தியக்ஷமாகப் பண்ணிக்காண்பித்து அவைகளின் பயனை அவர்களுக்கு நிதர்சனமாய் ரூபிக்கவேணுமென்று சொல்லுகிறார்கள். இந்த விஷயங்களைப்பற்றி எழுதுவதற்கு இடமில்லாததால் இன்னொரு ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

பத்திராதிபர்.

BANKU PADDY.

பாங்கு நெல்லு

கார்த்திகை மாஸத்துப் 'பிழைக்கும் வழி' யில் 'பாங்கு நெல் சாகுபடியில் ஒரு பரீக்ஷை' என்னும் வியாஸத்தில் அந்த நெல் கார்நெல்லை விட மூன்றில் ஒன்று அதிகம் கண்டதென்றும், அது அறுப்புக்குக்கொஞ்சம் பிந்தியதென்றும், ஆகையால் அதை தாளடி, அதாவது, இரண்டாம் போகமாகப்போட்டுப் பார்க்க வேண்டுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. பாங்குப் பயிர் காய்ச்சல் தாங்கும். மழையைத் தாங்காது. இரண்டாம் போகமாக நடும்பக்ஷத்தில் ஐப்பசி கார்த்திகை மாஸத்து அடைமழையில் அகப்பட்டுப் பயிர் நன்றாய் வராதென்று நாம் விசாரித்ததில் சிலபேர்கள் சொல்லுகிறார்கள். இது விஷயமாய் பரீக்ஷை செய்தவர்கள் இருந்தால் அவர்கள் தங்களுடைய அனுபவத்தைத் தெரிவிப்பார்களென்று நம்புகிறோம். பாங்கு நெல்லின் விசேஷத்தை போன சித்திரை மாஸத்து ஸஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம்.

THE CATTLE OF SOUTHERN INDIA

BY

C. RAMASWAMI AIYANGAR, B.A.

தென்னிந்தியா மாடுகள்.

◆

> "வானமழைபொழிந்தாலும், வளம்படுவதெவராலே,
> ஞானமறை யவர்வேள்வி நலம் படுவதெவராலே
> சேனைகொடு பொரு மன்னர் செருக்களத்திற் செருக்குமத
> யானை வலி எவராலே இவரெருத்தின்வலியாலே."
>
> —கம்பர்.

இந்தியா தேசத்திலிருக்கும் ஜனங்கள் விசேஷமாய் விவசாயத்தினால் ஜீவிக்கிறார்கள். விவசாயத்திற்கு முக்கியமாய் வேண்டியவைகளில் எருது ஒன்று. ஏர் உழுவதற்கும், கிணற்றிலிருந்து கவலைபோட்டுத் தண்ணீரிறைத்து வயல்களுக்குப் பாய்ச்சுவதற்கும், பரம்படிப்பதற்கும், தானியங்களை வியாபாரஸ்தலங்களுக்குக் கொண்டுபோய் விற்பனை செய்வதற்கும் எருதுகளுடைய உதவி அவசியம். அவைகளின் சாணி வயலுக்கு வளப்பத்தைக் கொடுக்கக்கூடிய முக்கிய உரமாகிறது. குடித்தனக்காரர்களுக்கு எருதுகள் பெரிய தனம். இவைகளை அவர்களுக்கு கண்ணென்று சொல்லலாம். இந்த தனத்தைத் தேடுவதும் அதை காப்பாற்றுவதும் அவர்களுடைய ஒரு பெரிய கடமையாகும்.

அப்படியிருக்க, இப்பொழுது கிராமங்களில் குடித்தனக்காரர்கள் எருது பரிபாலனஞ் செய்வதில் விசேஷ கவனம் வைக்கிறதில்லை. தங்களுக்கு முக்கிய ஆதாரமாகிய மாடுகளை வாங்காமலும், வாங்கியும் அவைகளுக்கு வயிறு நிரம்பத் தீனி போடாமலும் தங்கள் உழவுத்தொழிலை அசட்டை செய்கிறார்கள். கொஞ்சம் தவிட்டினாலும், கொஞ்சம் வைக்கோலினாலும் ஜீவிக்கும் எருதுகள் வேலையில் எப்படிச் சுறுசுறுப்பாயிருக்கக்கூடும்? நல்ல எருதுகளை வாங்கி அவைகளைத் தக்க படி போஷித்தால், விவசாயிகளுக்கு ஜீவனம் கஷ்டமில்லாமல் நடக்கும். எங்கெந்த இடங்களில் நல்ல எருதுகள் அகப்படுமென்பதையும் அவைகளின் குணாகுணங்களையும் சுருக்கமாகச் சொல்லுவோம்.

சென்னைராஜதானியில் சில சில இடங்களில் வளரும் எருதுகள் மிகப் பிரசித்தி பெற்றவைகள். இந்தராஜதானியிலும் இதற்கு வெளியேயுள்ள அநேக தேசங்களிலும் அவைகளை ஜனங்கள் கொண்டாடுகிறார்கள். மைஸூர், நெல்லூர், ஆலம்பாடி, காங்கெயம், புலிக்குளம் என்று சொல்லப்பட்ட எருதுகளை சந்தைகளில் அதிக விலை கொடுத்து வாங்க ஜனங்கள் பின்வாங்க மாட்டார்கள்.

மைஸூர் மாடு—இது ரொம்ப பேர் போனது. மைஸூரில் இதை நாட்டுதனம், தொட்டதனம் என்று இரண்டு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். நாட்டுதனத்தை லேசான பயிர்வேலைக்கு உபயோகப் படுத்துகிறார்கள். அமிர்த மஹால், ஹல்லிக்கார், ஆலம்பாடி, இந்த ஜாதிகளுக்கெல்லாம் தொட்டதனம் என்றுபெயர். இவைகள் உயரத்திலும், நிறத்திலும் ஒழுங்கானவைகள், சவாரிக்கும் பாரவண்டி இழுப்பதற்கும் முக்கியமாய் உபயோகப்படுகின்றன. இந்த எருதுகளை பணக்காரரிடம் காணலாம். அமிர்தமஹால் எருதுகள் சண்டையில் ராணுவ சாமான்களைக் கொண்டு போவதில் அதிக துரிதம் என்று கீர்த்தி பெற்ற ஸேனாதிபதியாகிய வெல்லிங்டன் பிரபு அடிக்கடி புகழ்ந்திருக்கிறார். காலாட்படைகளைவிட வேகமாய்ச்செல்லும். இது அதிக சுறுசுறுப்பும் ரோஷமுமுள்ள ஜாதி. மிகப் பாரமான வண்டிகளை வெகு தூரம் இழுக்கும். எருது ஒன்று 80 ரூபாய் முதல் ரூபாய் 130 வரையில் விலைபோகிறது. கொஞ்ச நாளைக்கு முன் ஹைதராபாகத்தில்

இந்த ஜாதியில் ஒரு ஜோடி மாடு ரூபா 800-க்கு ஒருவர் வாங்கினதாகக்கேள்வி.

ஆலம்பாடி மாடுகள்—இவைகள் காவேரி நதியின் கரையிலுள்ள ஆலம்பாடி கிராமத்தில் விசேஷமாய் வளர்க்கப்படுவதால், அவைகளுக்கு அந்தப்பெயர். கோயம்புத்தூர், சேலம், ஜில்லாக்களுக்கும் மைஸூர் மாகாணத்திற்கும் இடையிலுள்ள காவேரிஆற்றின்இருபுறங்களிலுமுள்ள செழிப்பான காடுகளில் இவைகள் திரள் திரளாயிருக்கின்றன. இந்த மாடுகளை மந்தை மந்தையாய் வாங்கி, கோலார், மைஸூர், பெங்களூர் ஜில்லாக்களிலுள்ள செழிப்பான மைதானங்களில் மேய்த்து வளர்த்து விற்கிறார்கள். இங்கேயிருந்துதான் சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளி நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். தென்னிந்தியாவில் முக்கியமாய் வண்டி யிழுக்கும் மாடுகளும் இவைகளே. மைஸூரிலுள்ள அமிர்த மஹால் மாடுகளைப்பார்க்கிலும் உருவத்தில் சிறிதாயும் பருமனாயுமிருக்கும்.

நெல்லூர் மாடு—இது இந்தியா முழுவதும் மிகப்பிரசித்திபெற்றது. இதுபார்வைக்குவெகு பெரிதாயும் காம்பீரமாயுமிருக்கும். குண்டூர் ஜில்லாவில் ஒங்கோல் தாலூகாவில் இதை விசேஷமாய்க்காணலாம். மழை இல்லாமல் விளைவு குறைந்து வருத்தப்படும் குடித்தனக்காரர்கள் இந்த ஜாதி மாடுகளை கூட்டம் கூட்டமாய் விற்பதற்காகவே வளர்க்கிறார்கள். இதுவே அவர்களுக்கு முக்கிய ஜீவனம். கன்றுகளை வெகு சிரத்தையோடு கவனிக்கிறார்கள். ஆகையால்தான் இந்த மாடுகளை ஜனங்கள் தேடுகிறார்கள். இவைகளைப் பரிபாலித்து விற்பதில் அதிக லாபம் கிடைக்கிறது. நல்ல கன்றுகள் 80 ரூபாய் முதல் ரூபாய் 250 வரையில் விலை போகின்றன. அமெரிக்காவைச் சேர்ந்த பிலிப்பயன் தீவுக்கு இந்த மாடுகளில்

சில அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தத்தீவில் கொஞ்சகாலமாகக் கொண்டுவரப்பட்ட எல்லா மாடுகளைக்காட்டிலும் ஓங்கோல்மாடுகள் அதிக சிரேஷ்டமானவைகளென்பது அந்தத் தீவு துரைத்தனக்காரர் அபிப்பிராயம். அந்த தீவுகளில் இந்த மாடுகளை அனேக ஜனங்கள் மிகவும் கொண்டாடுகிறார்கள் என்று தமக்குக் கடிதம் வந்ததாக ஓங்கோலில நடந்த கால்நடைக் காக்ஷியில் விஜயம் செய்திருந்த கனம் காவலில் ஸ்டுவேர்ட் துரை அவர்கள் சொன்னார். நல்ல பசு ரூபாய் 80 முதல் ரூபாய் 150 வரையில் அது கறக்கிற பாலுக்குத் தக்கபடி விலையாகிறது. மைஸூர், ஆலம்பாடி மாடுகளைப்போல நெல்லூர் எருதுகள் அவ்வளவு அதிக சுறுசுறுப்பில்லாவிட்டாலும், பளுவான சுமைகளை இழுப்பதற்கு இந்த ஜாதி மாடுகள் மிகவும் உபயோகமானவை.

காங்கேயம் மாடு—கோயம்புத்தூர் ஜில்லாவின் தென்பாகத்திலும் தென்கிழக்குப் பாகத்திலுமுள்ள தாலூக்காக்களில் விசேஷமாய் இவைகளை வளர்க்கிறார்கள். இந்த மாடு பெரியதென்றும், சிறியதென்றும் இரண்டுவகை உண்டு. இவைகள் காங்கேயம் தாலூகாவில் அதிகமாய் வளர்க்கப்படுவதால் இவைகளுக்கு இந்தப்பெயர். இந்த மாடு வாங்கப் பிரியப்படுகிறவர்கள் மாடு இருக்கும் இடத்தைத்தேடிவர வேண்டும். சாதாரண சந்தைகளில் அகப்படாது. ஆனால் சில பெரிய சந்தைகளில் கிடைக்கும். இந்த ஜாதி மாடுகள் பலமும் சுறுசுறுப்புமுள்ளவைகள்.

புலிக்குளம் அல்லது ஜெல்லிக்கட்டுமாடு—இது மதுரை ஜில்லாவில் விசேஷம். பார்வைக்கு சிறிதாய்த்தோன்றினாலும் வெகு சுறுசுறுப்புடையது. சிரமத்தினால் தளர்ச்சி யடையாது. மதுரை ஜில்லாவில் அனேக இடங்களில் நடக்கும் ஜெல்லிக்கட்டு என்னும் வேடிக்கைக்கு இந்த மாடுகளையே தேடுகிறார்கள். இவைகளுக்கும், காங்கேயம் மாடுகளுக்கும் அதிக வித்தியாசமில்லை. விசேஷமாய் வண்டிகளில் பூட்டப்படும் மாடுகளும் இவைகளே. ஓய்வில்லாமல் மணிக்கு சுமார் 5 அல்லது 6 மைல் வீதம் வெகு தூரம் போகும். இந்த ஜாதிப் பசு அதிக பால் கறக்காது.

வி. ராமஸ்வாமி அய்யங்கார்.

MINING ENTERPRISE

BY

T. M. SUNDARAM AIYAR.

சுரங்கமறுத்தல்.

தாது வர்க்கங்கள் விஷயத்தில் உலகத்திலுள்ள அநேக தேசங்களைப் பார்க்கிலும் இந்தியா தேசம் மிகச்சிறந்ததென்று சொல்லவேண்டும். பூஸாரமும் தாதுக்களின் ஸமுர்த்தியும் பெரிய காடுகளும் நதிகளும் இந்தியா தேசத்தை பல விதமாக மேன்மைப் படுத்துகின்றன. ஆகையால் இந்தியா முன்னுக்குவர சாஸ்திரீயமாக பரிசோதனை செய்பவர்களும், யுக்தி, பொறுமை, உழைப்பு, முயற்சி ஆகிய நல்ல குணங்களுள்ள தனவான்களுந்தான் தேவை.

பலவித முயற்சிகளில் ஒன்றாகிய உலோகங்களுக்காக சுரங்கம் வெட்டுவது அதிக லாபம் தரத்தக்க தொழிலென்று நம்மவர்களுக்குத் தோற்றுவதில்லை. இந்தத் தொழில் இந்த தேசத்தில் மிகுந்த தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றது. சுரங்கம் எடுத்து வேலை செய்யும் நம்மவர்களுக்கு சுரங்கம் வெட்டுவதும் உலோகத்தைத் துண்டிப்பதும் அவைகளை அப்படியே அந்நிய தேசங்களுக்கு அனுப்புவதும்தான் தெரியும். அந்த உலோக சத்துக்கள் எவ்வித வேலைக்கு எந்த மாதிரியாக உபயோகப்படுகின்றன என்று தெரியாது. அவைகளைத்தெரிந்துகொள்ள நம்மவர்கள் பிரயத்தனம் செய்கிறதில்லை.

பொன், வைரம், முதலானவைகளுக்குச் சுரங்கம் வெட்டுதல் கோடீஸ்வரர்களுக்குத்தான் தகுந்த வேலை. கோலார் பொன் கனிகளும் சிங்கரேனி நிலக்கரி கனிகளும்போன்ற மகத்தான வேலைகள் தனிமையாய் ஒரு மனிதருடைய திரவிய சகாயத்தால் நடத்தமுடியாத வேலைகள். அவைகள் பல தனவான்கள் ஒன்று சேர்ந்து நடப்பிக்கவேண்டிய காரியங்கள்.

நான் இவ்விடத்தில் அந்நிய தேசத்தார்களுடைய பணஸகாயத்தால் நடந்துவரும் பெரிய கனிகளைப்பற்றிச்சொல்ல எண்ணங்கொண்டவனல்ல. நம்மவர்கள் சுவல்ப முதலைக்கொண்டு அடியில் சொல்லப்படும் உலோக சத்துக்களின் கனிகளை ஜாக்கிரதையுடன் வேலை செய்யும் பக்ஷத்தில் அதற்குத்தகுந்த லாபம் அடைவார்கள். நம்முடைய தேசத்தில் மிகுதியாய் நில முடையவர்களும் ஜமீன்தார்களும் தங்களால் கூடிய வரையிலுங்கூட தங்களுடைய ஜமீன்களிலுள்ள சுவல்ப கனிகளில் சிரத்தையெடுத்துக்கொள்ளுவதில்லை. கல்கத்தா நகரில், ஜியோலாஜிகல் இன்ஸ்டிட்யூட் என்று சொல்லப்பட்ட பூகோள உறுப்பு லக்ஷண சங்கத்தில் அப்போதைக்கப்போது பிரசுரமாகி வரும் கனி சம்பந்தமான கிரந்தங்களைப்படித்த பூஸ்திதியுள்ளவர்களும் ஜமீன்தார்களும் நிராகரிக்கிறார்கள். அவைகளின் பயனைத்தெரிந்து அடைவதில்லை.

முன்காலத்தில் நம்முடைய தேசத்தில் அந்நிய தேசத்தார்களுடைய உதவியில்லாமல் சுரங்கங்களை வெட்டி உலோக சத்துக்களை வெளியெடுத்து வந்ததாகத்தெரிய வருகிறது. அநேக காலமாய் அப்படி நடந்துவந்த சுரங்கம் அறுத்தலை மறந்து நாம் நமக்கு அத்தியாவசியமாய் வேண்டிய பொருள்களுக்கு அந்நிய தேசத்தார்களை எதிர்பார்க்கிறோம். நம்முடைய தேசத்தில் அகப்படும் பொருள்களாகிய உப்பு, செம்பு, இரும்பு, எஃகு, தகரம், ஈயம், கிரோஸின் எண்ணெய், நிலக்கரி, நவரத்தினங்கள், கட்டிடங்களுக்கு வேண்டிய சலவைக்கல் முதலியவைகளை நாம் அந்நிய தேசங்களிலிருந்து தருவித்துக்கொள்ளுகிறோம்.

நம்முடைய தேசத்தில் சில கிராமங்கள் அவைகள் சமீபத்தில் அகப்படும் உலோக சத்துக்களின் பெயர்களை அடைந்திருக்கின்றன. பங்கனபல்லிக் கடுத்த வஜ்ரகரூரில் வைரக்கல்லுகள் எடுக்கப்பட்டனவாம். காளஹஸ்தியிலாகா கனகதுர்க்கம், கனகம்போடு என்கிற கிராமங்களின் பக்கத்திலும், சுவர்னமுகி நதியிலும் பொன் அகப்பட்டமையால் அவைகள் அந்தப் பெயரைப்பெற்றன. இப்படிப்பட்ட உதாரணங்களினால் நம்முடைய தேசத்தில் கனிவேலைகள் பூர்வத்தில்நடந்தேறிவந்தன என்று தெரிகிறது.

நம்முடைய ஸர்வகலா சாலையில் வருஷந்தோறும் ஒருடஜனுக்குக்குறையாமல் பூகோள உறுப்பு லக்ஷணம்தெரிந்தவர்கள் வித்தியா பட்டம் பெறுகிறார்கள். கனித்தொழிலில் அவர்களுடைய உதவி யின்றியமையாதது. ஏனென்றால் ஸர்க்கார் இலாகா இல்லாத சுரங்கமுடையவர்களுக்கும் சுரங்கக்குத்தகைக்காரர்களுக்கும் தாங்கள் வெளியெடுக்கும் உலோகசத்துக்கள் என்ன வேலைக்கு உபயோகப்படுமென்பது தெரியாது. இவர்கள் மேல்சொல்லப்பட்ட மாணவர்களின் உதவியை ஏன் அடையக்கூடாது?

உலோக சத்துக்கள் இரண்டு வகைப்படும். ஒருவகை பொன், வெள்ளி, செம்பு போன்ற கெட்டியானவையும், ஒளி செல்லக்கூடாதவையுமான உலோகங்கள். இவைகள்சாதாரணமாய் பூமியில் மிகவும் ஆழத்திலிருப்பதால் அவைகளை வெட்டி யெடுக்க விசேஷமான திரவியமும் ஜீயாலொஜிஸ்ட்ஸ், அதாவது, பூகோள உறுப்புலக்ஷண சாஸ்திரிகளின் உதவியும் வேண்டியிருக்கின்றன. நவரத்தினங்கள், நிலக்கரி, கட்டடங்களுக்குரிய கல்லுகள், பாதைக்குவேண்டிய கூழாங்கல்லுகள், ரஸாயன வஸ்துக்களாகிய வெண்காரம், உப்பு, சிலாசத்து என்று சொல்லப்படும் 'ஜிப்ஸம்', கந்தகம் முதலியவைகளும், தேக ஆரோக்கியத்திற்கு பிரயோசனமான தாதுக்கள் நிறைந்த ஜலங்கள், வர்ணத்திற்கு உபயோகமான காவிக்கல்

லுகள் முதலியவைகள், நிலத்தைச் செழிப்பிக்கும்படியான பிரகாசித உப்பு என்று சொல்லப்படும் பாஸ்பேட் முதலியவைகள், இதர உலோகங்களுக்கு மெருகிடப் பிரயோசனமுள்ள குருந்தக்கல், செம்மணிமுதலியவைகள் சூட்டைத் தாங்கும்படியான கல்நார், அப்ரகம், மாக்கல் முதலியவைகள், இவைகள் இரண்டாவது வகுப்பை சேர்ந்தவை. இவைகள் சுவல்ப திரவிய சகாயத்தாலும் எளிதாயும் அகப்படக்கூடியவைகள். இங்கே சொன்னவைகளில் நம்முடைய ராஜதானியில் அகப்படக்கூடிய சில வற்றைப்பற்றி சொல்லுவோம்.

பூமியின் ஸாரத்தை விர்த்தி செய்யும் தன்மையுள்ள பாஸ்பேட் திருச்சினப்பள்ளி ஜில்லா ஊட்டத்தூரிலும், புதுச்சேரியிலும் ஏராளமாய்க் கிடைக்கின்றது. வெடியுப்பு, கோதுமை, புகையிலை விளைவுக்கு மிகஉபயோகமானது. கடப்பை, கர்னூல் ஜில்லாக்களில் மிகுதியாய்க்கிடைக்கிறது. ஜிப்ஸம், அதாவது, சிலாசத்து கொடிப்பயிர்களுக்கும், அவுரிவிளைவுக்கும் உபயோகமானது. இது அசுத்த நிலைமையில் செங்கல்பட்டு ஜில்லாவில் களிமண்ணில் விசேஷமாயிருக்கிறது. கடப்பையில் மிகநேர்த்தியான பலகைக்கல்லுகள் அகப்படுகின்றன. நெல்லூர், சேலம் ஜில்லாக்களிலும் திருவாங்கூர் ராஜ்யத்திலும் அப்ரகம் எடுக்கப்பட்டுவருகின்றது. நெல்லூர் ஜில்லாவில் அகப்படும் அப்ரகம் வங்காளத்தில் அகப்படுவதைக்காட்டிலும் சிரேஷ்டமானது. அப்ரக வியாபாரம் மிகவும் லாபகரமானது. அது கண்ணாடிக்குப் பதிலாக அனேக விதமாக உபயோகப்படுகிறது. அஸ்பெஸ்டாஸ் என்று சொல்லப்படும் கல்நாரினால் ஓடுகளும் செங்கல்களும் பலகைகளும் செய்யப்படுகின்றன. சிம்மிட்டிக்கு உபயோகமான மைக்நிசட் என்கிற சுண்ணாம்புக்கல் சேலத்திற்குச் சமீபத்தில் கிடைக்கிறது. இதிலிருந்து பேதி உப்பும் செய்யப்படுகின்றது. சேலம் கடப்பை சித்தூர் நெல்லூர் ஜில்லாக்களில் மாக்கல் விசேஷமாய்க் கிடைக்கிறது இது எழுதும் குச்சிகள், கிண்ணங்கள், பிரதிமைகள் முதலியவைகள் கஷ்டமில்லாமல் எளிதில் கடையக்கூடிய வஸ்து. இதன் பொடி சுவர்களுக்கும் முகத்திற்கும், ஜோடுகளுக்கும், துணிகளுக்கும். சோப்பு செய்வதற்கும் சாதாரணமாய் ஐரோப்பா கண்டத்தில் உபயோகப்பட்டுவருகிறது. ஒருடன் அதாவது சுமார் 4½ பாரம் பொடி அறுபது ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சாணைக்கல்லுகளுக்கும் உப்புகாகிதங்களுக்கும் உபயோகப்படும் குருந்தக்கல் சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களில் அகப்படுகிறது தென்னிந்தியாவில் அகப்படும் இந்தக் கல் அமெரிக்காவில் பத்து பவுண்டு கல்லுகள் 4 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. இந்தக்கல்லுகள் சாதாரணமாய் மற்றெந்தத்தேசத்திலும் அதிகமாய் அகப்படாததினால் இந்த வியாபாரம் நல்ல லாபத்தைக்கொடுக்கும் என்பதற்கு சந்தேகமில்லை. கர்னூல் ஜில்லாவில் நல்ல மலையிலும் எர்ர மலையிலும் எழுதும் ஸ்லேட் பலகைகள் விசேஷமாய் வெட்டியெடுக்கப்பட்டு ஐரோப்பாகண்டத்திற்கு ஏற்றுமதியாகின்றன. கட்டிடங்களுக்கு உபயோகமான பலவித கல்லுகள் இந்த ராஜதானியில் அநேக இடங்களில் கிடைக்கின்றன. பல்லாரி, கடப்பை, சித்தூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, இந்த ஜில்லாக்களில் கட்டிடங்களுக்கு மிக அழகைத்தருவதும் பளபளப்புள்ளதுமான கருங்கல் ஏராளமாய் அகப்படுகிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில் சிவமலையில் காரீயம் அகப்படுகின்றது. இது காகிதத்தில் எழுதும் பென்வில்கள் செய்ய உபயோகப்படுகிறது. வெண்கலம் செய்வதற்கும் வர்ணக் கண்ணாடி செய்வதற்கும் எஃகைப்பதப்படுத்துவதற்கும் உபயோகமுள்ள 'மாங்கனீஸ்' என்கிற உலோகம் சண்டூரிலும் விஜயநகரத்திலும், மைஸூரிலும் அகப்படுகிறது. ஈயம் கடப்பை, கர்நூல், பல்லாரி இந்த ஜில்லாக்களில் அதிகமாயிருக்கிறது. மெற்குரி என்று சொல்லப்பட்ட பாதரசம் கன்னனூருக்கடுத்த லாடெரைட், அதாவது துருக்கற்களில் கிடைக்கிறது. நெல்லூர் ஜில்லாவில் பாமூருக்கடுத்த கரிமன்பெண்ட என்ற இடத்தில் செம்பு அகப்படுவதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். பீங்கான் கண்ணாடி செய்ய விசேஷமான களிமண் வகைகள் திருச்சினப்பள்ளி ஜில்லாவில் பேரளைக்கும் காவேரிக்கும் மத்தியில் அகப்படுகின்றன. கூடலூர் ஜில்லாவில் பன்ருட்டிக்கடுத்த கடிலம் நதியின் தென்கரைக்கு ஸமீபத்தில் கூடலூர் கல்லுகளில் மிருதுவான களிமண் ஏராளமாயிருக்கிறது. இன்னும் லாபகரமானவையும் ஆபூர்வமானவையுமாகிய 'உல்ப்ரம்' திருச்சினப்பள்ளி ஜில்லாவிலும் ரேடியம் என்கிற அற்புத உலோகத்தைத் தருவதாகிய மானஜைட் மணல் கன்னியாகுமரிக்கரையிலும், பேரைட் என்னும் உலோகம் காளஹஸ்தி இலாகாவிலும் அகப்படுகின்றன.

இப்படி தாது ஸமர்த்தியினால் நம்முடைய தேசம் சிறந்திருக்க நம்மவர்கள் அதன் பயனை அடையாமல் உத்தியோகத்தை முதன்மையாகப் பாராட்டிக்கொண்டு வியாபாரத்தையும், கைத்தொழிலையும், விவசாயத்தையும் கைவிட்டார்கள். அதனால் லட்சுமி நம்மவர்களைத் துறந்து அந்நிய தேசத்தார்களிடம் சென்றாள். இனிமேலாவது வியாபாரம் முதலானவைகளை நம்மவர்கள் விருத்தி செய்வார்களென்று நம்புகிறேன்.

டி. எம். சுந்திரம் அய்யர்.

A PLEA FOR SCHOOL GARDENS

BY

N. RAMABHADRA DIKSHIDAR.

பள்ளிக்கூடத் தோட்டங்களின் அவசியம்

இப்பொழுது பாடசாலைகளில் அனேக புதிய ஏற்பாடுகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. சிறுவர்கள் படிப்பில் அதிகக் கவனம் வைக்கவேண்டுமென்பதற்காக கிண்டர்கார்டன், பொருள்பாடம், சம்பாஷணை முதலிய நூதனப்பிரயத்தனங்கள் உண்டாயிருக்கின்றன. நாம் எவ்வளவுக்கெவ்வளவு சிறுவர்களுடைய மனதை உற்சாகப்படுத்துகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் அவர்களுடைய தேக சௌக்கியத்தைக் கவனிக்க வேண்டும்.

தேகசௌக்கியத்தை விருத்தியாக்குவதற்கு ட்ரில், ஜிம்னாஸ்டிக்ஸ் போன்றவைகள் ஏற்பட்டிருக்கின்றன. தேசிய விளையாட்டுகளான பல்டி, தண்டா, முதலியவைகளும் பழக்கத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. இவ்வளவு ஏற்பாடுகளும் சிறுவர்களை உற்சாகப்படுத்துகிறதில்லை. தற்காலத்தில் பள்ளிக்கூடங்களில் அமர்ந்திருக்கும் ட்ரில் உபாத்தியாயர்களைக்கண்டால் சிறுவர்களுக்குப் பிடிப்ப இல்லை. அனேக பள்ளிக்கூடங்களில் ட்ரில் செய்ய அபிப்பிராயமில்லாத மாணாக்கர்கள் சிரங்கென்றும், சீக்கு என்றும் சாக்குச் சொல்லி தேகாப்பியாசம் செய்யாமல் நின்றுவிடுகிறார்கள். டாக்டர்களிடத்தில் இரண்டு மூன்று ரூபாய் கொடுத்து மெடிகல் ஸர்டிபிக்கேட்டுவாங்கி உபாத்தியாயர்களை ஏமாற்றித் தங்களையும் ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள்.

இந்தியா பாடசாலைகளில் தேகாப்பியாசம் சீர்குலைந்திருப்பதற்கு அனேக காரணங்களுண்டு. சிறுவர்களுடைய மனதைக்கவரும்

படியான தேகாப்பியாசங்களை உபாத்தியாயர்கள் அறிவதில்லை. அட்டென்ஷன், ரைட், லெப்ட், முதலிய கொடுமையான கட்டளைகளை சிறுவர்கள் வெகுகாலம் கேட்டுக்கொண்டிருக்கமாட்டார்கள். பலனற்ற வேலைகளில் சிறுவர்கள் பிரயாசைப்படுவதில்லை. தாங்களே வேலை செய்து சம்பாதிக்கப்பட்ட கறி, காய், பழங்களில் அவர்கள் மகிழ்ச்சி யடைவார்கள்.

ஆகையால், ஒவ்வொரு பாடசாலையிலும் ஒரு தோட்டம் இருக்கவேண்டியது அவசியம். அனேக இடங்களில் மாணக்கர்களால் பாதுகாக்கப்பட்ட தோட்டங்களிருக்கின்றன. ஆனால், சிறுவர்களைப் படிக்கவைக்கும் பள்ளிக்கூடங்களில் ஏன் தோட்டங்கள் அவசியமாக இருக்கவேண்டும்? நம்முடைய பாட்டன்மார்கள்தோட்டங்களில் மண்வெட்டி பிடித்துக் கொத்தித்தான் டிப்டி கலெக்டர் உத்தியோகம் செய்தார்களோ? என்று சில பேர் கேட்கலாம்.

குழந்தைகளுடைய தேகசௌக்கியத்திற்கும் நரம்பின் அபிவிருத்திக்கும் வெளிவேலைகள் மிகவும் அவசியம். ஆதிகாலத்தில், மண்வெட்டிபிடித்துக் கொத்தி உழுது வேலை செய்வதே மனிதர்களின் முக்கிய ஜீவனமாக இருந்தது. என்றாலும், நம்முடைய நிலம், நம்முடைய வீடு, நம்முடைய பணம் என்பது மனிதஜாதிக்கு ஸகஜம். ஆகையால் நிலத்தில் உள்ள அபிமானம் மனித ஜாதி ஆரம்பம் முதலிருக்கிறது. குழந்தைகளுக்கும் தங்கள் தோட்டங்களில் ஒருவித அபிமானம் ஜனிக்கிறது. வேலை செய்வதில் கௌரவமும், சொத்தில் அபிமானமும், கிழத்தனத்தை வகிக்கக்கூடிய திடசரீரமும். ஒருவரோடொருவர் நேசித்து நிற்கக்கூடிய நட்பும் பால்யத்தில் தோட்டங்களில் வேலைசெய்து அடையும் பயன்களே.

குழந்தைகள், சுயேச்சையாய் விளையாடக்கூடியஇடங்களைப்போல் தோட்டங்களைநினைப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. குழந்தைகளைத் தோட்டங்களில் வேலைசெய்யென்று மற்றவர்கள்கட்டாயப்படுத்தவேண்டியதில்லை. அவர்களுக்குத் தானாகவே ஒருஉற்சாகம் பிறக்கும். சிறுபிராயத்தில் தோட்டங்களில் வேலை செய்வதனால் முதிர்ந்த வயதில் நமக்கு மிகவும் நன்மையுண்டு. கறிகாய்கள், இலை, புஷ்பம் முதலியவைகள் கிடைப்பதற்கு மாத்திரம் தோட்டங்களில் நாம் வேலை செய்யக்கூடாது. அங்கே விதைகள் முளைக்காமல் இருக்கலாம்; பூச்சி புழுக்குள் செடிகொடிகளைக் கெடுத்துவிடலாம்; இவைகளின் காரணங்களை முதிர்ந்தவர்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். கறிகாய்களை விற்பதால் லாபம் கிடைப்பதோடு பிற்காலத்தில் உதவக்கூடிய அனேக வித அனுபோகங்களையும் கற்றுக்கொள்ளுகிறோம்.

தோட்டம் வைத்துக்கொண்டே சிலர் ஜீவனம் செய்யலாம். அப்பொழுது பத்துப்பன்னிரண்டு வயதில் கற்றுக்கொண்ட வேலை மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கும்.

தோட்டங்களைப் பள்ளிக்கூடத்திற்கு சமீபத்தில் வைப்பதற்கு யார் திரவிய உதவிசெய்வார்கள்? யார் குழந்தைகளுடன் மாரடித்துக்கொண்டு வீண்பொழுது போக்குவார்கள்? தோட்டமும் வேண்டாம், குளமும் வேண்டாம், குழந்தை வாசித்தால் போதும் என்று சிலர் எண்ணுகிறார்கள். அது மிகவும் தப்பு. யார் உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்களோ, யார் பள்ளிக்கூடங்களை நிர்வகிக்கிறார்களோ, எந்தத் தகப்பனார் பிள்ளைக்குச் சம்பளம் கொடுத்துப்பள்ளிக் கூடத்தில் வைக்கிறாரோ, அவரே தோட்டங்களை வைத்து நிர்வகிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

உதாரணமாக, கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல், ப்ரைமரி பாடசாலைக்குச் சமீபத்தில் குழந்தைகளால் பாதுகாக்கப்பட்ட ஒரு தோட்டமிருக்கிறது. மன்னார்குடி, பிண்ட்லே காலேஜுக்குச் சமீபத்தில் ஓர் அற்புதமான தோட்டமிருக்கிறது. இந்த இரண்டிடங்களிலும் வேலை சரிவர நடந்து வருகிறது. இதே விதமாக ஒவ்வொரு ப்ரைமரி, ஸெகண்டரி பாடசாலைகளிலும் தோட்டங்கள் ஏற்படுமென்று நம்புகிறோம்.

நா. ராமபத்திர தீக்ஷிதர்.

SELECTIONS.

விசேஷத் திரட்டு.

THE DEPARTMENT OF INDUSTRIES.

தொழில் முயற்சி டிபார்ட்மெண்ட்.

இந்த டிபார்ட்மெண்ட் நீர்ப்பாய்ச்சலுக்காக வேண்டிய ஆயில் எஞ்சின்களை நாட்டவும், பம்புகள், தண்ணீர் இறைக்கும் குழாய்கள் வைக்கவும், கிணறுகள் வெட்டவும், மற்றக் கைத்தொழில் வேலைகளுக்காக வேண்டிய யந்திரங்களைச் சாதாரணமாய் ஜோடிக்கவும், அவைகளை மேல்பார்வை யிடவும், குடிகளுக்கு உதவிசெய்யும் பொருட்டு கவரன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த டிபார்ட்மெண்டார் ஜனங்களின் விண்ணப்பங்களின்பேரில் இடங்களைப் பார்வையிட்டு அவசியமான புத்திமதி சொல்லுவார்கள். இதோடு சேர்த்திருக்கும் கவரன்மெண்டு விளம்பரத்தில் குறிக்கப்பட்ட கட்டணங்கள் மாத்திரம்தான் இதற்காக சார்ஜ் செய்யப்படும்.

சர்க்கார் தரப்பில் தோல்களை க்ரோம் என்னும் ஒரு உப்பினால் பதனிடும் தொழிலும் இந்த டிபார்ட்மெண்டார் வசத்தில் நடக்கிறது. சென்ற இரண்டு வருஷகாலமாய் வடஆற்காடு, செங்கல்பட்டு இந்த ஜில்லாக்களில் க்ரோம் என்னும் உப்பினால் பதனிடப்பட்ட தோல்கள் சாதாரணமாய் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அவைகள் கவலைகளுக்கும் தொண்டான்களுக்கும் மாப்பட்டையால் பதனிடப்பட்ட தோல்களைப்பார்க்கிலும் மிகவும் மேலானதாயிருப்பதாக அனுபவத்தில் தெரிகிறது. இந்தத் தோல் முரட்டு வேலைகளில் நெடுநாள் தாங்குகிறதைத்தவிர, எப்பொழுதும் மிருதுவாயிருக்கும். வடஆற்காடு ஜில்லாவில் அரக்கோணம், மணவந்தாங்கல், மாங்காடுச்சேரி, ராணிப்பேட்டை, வேலூர், கொத்தமங்கலம்; காளஹஸ்தி இந்த இடங்களிலும், செங்கல்பட்டு ஜில்லாவில் திருவள்ளூர், பொன்னேரியிலும், சேலம் ஜில்லாவில் தர்மபுரியிலும், கோயம்புத்தூர் ஜில்லாவில், கோயம்புத்தூரிலும், சென்னபட்டணத்திலும் இந்தத் தோலை விற்பனை செய்ய ஏஜன்ஸிகளும், டிப்போக்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த டிபார்ட்மெண்ட் வேலைக்குச் சம்பந்தமான இதர சமாசாரம் ஏதாவது தெரிய வேணுமானால் கஸ்பா பம்பிங் எக்ஸ்பெரிமெண்டு சூபர்வைசருக்காவது, மதராஸ் பூனமல்லி ரோட் 112-ம் நெ. தபால் பெட்டி, இண்டஸ்டிரீக்களின் டைரெக்டருக்காவது எழுதிக்கொள்ளலாம்.

கிணற்றுப்பாய்ச்சலை விருத்தி செய்யும்பொருட்டு, பூமிக்குள் குமிழ்ஜலம் கிடைக்கும் இடங்களில் குடிகளுக்கு தங்களுடைய அனுபோகத்திலுள்ள அபிப்பிராயத்தைக்கொண்டு உதவிசெய்ய பரிசோதனையாக ஆகர் போடுவதற்காகவும், மட்டி எண்ணையினால் வேலைசெய்யும் யந்திரத்தினால் ஓடும்படியான பம்பு முதலானவைகள் போட்டுக்கொள்ள ஒத்தாசை செய்வதற்காகவும் கவரன்மென்டார் கைத்தொழில் டிபார்ட்மென்டின் கீழ் ஒரு டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பரிசோதனை நிமித்தம் ஆகர் போடுவதற்காக ஆகர் முதலிய ஆயுத முஸ்தீப்புடன் ஆகர்போடும் பார்ட்டிகளை நியமித்திருக்கிறார்கள்.

ஸர்க்காரிடமிருந்து கடன்வாங்கி அந்தப்பணத்தைக் கொண்டோ அல்லது தன் சொந்தப்பணத்தைக்கொண்டோ ஒரு புதிய கிணறு இறக்கவேண்டுமென்றாவது அல்லது ஏற்கனவே இருக்கும் கிணற்றைச் செவ்வைப்படுத்த வேணுமென்றாவது அபிப்பிராயம் இருந்தால் குடித்தனக்காரர்கள் புதிதாகக் கிணறு இறக்குவதற்குக் குறித்திருக்கும் இடத்தில் பரிசோதிக்கும் பொருட்டு ஆகர்போடும்படி இதற்காக நியமித்திருக்கும் இலாகா உத்தியோகஸ்தர்களிடம் மனுசெய்து கேட்டுக்கொள்ளலாம். ஸர்க்காரிடத்திலிருந்து கடனாகவாங்குகிற பணத்தைக்கொண்டாவது தன் சொந்தப் பணத்தைக்கொண்டாவது அல்லது ப்ரைவேட் கம்பெனி வர்த்தகர்களிடத்தில் வாடகை வீதத்திலாவது ஆயில் எஞ்ஜின், பம்பு முதலானவைகள் போட்டுக்கொள்ளப்பிரியமுள்ள குடித்தனக்காரர்கள் அவ்விஷயத்திற்குரிய நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள மேற்கூறிய உத்தியோகஸ்தர்களிடத்தில் மனுசெய்து கொள்ளலாம். கவரன்மெண்டார் ஷை யந்திரங்கள் வாங்குவதற்காக விவசாய கடன் சட்டப்படி பத்து வருஷத்தில் வருஷவாரி வீதப்படி 6¼ ரூபாய் வட்டி

போட்டு திருப்பிக்கொடுக்கும்படி கடன் கொடுக்கிறுர்கள்.

கம்பெனியாரும் ஷை யந்திரங்களை வாடகை வீதத்தில் கொடுக்கிறுர்கள். மொத்தவிலையில் கால் பாகம் (100 க்கு 25) முதலில் கட்டவேண்டும். மீதியை வட்டிபோட்டு 6 மாதத்திற்கு ஒரு முறையாக மூன்று தவணையில் கொடுத்துவிடவேண்டும். அதாவது 1½ வருஷத்தில் முழுத்தொகையையும் கட்டிவிடவேண்டும்.

சமார் 20 ஏக்கர் புஞ்சை அல்லது 15 ஏக்கர் நஞ்சை இறைத்து சாகுபடி செய்யக்கூடுமான யந்திரம் விலை சாதாரணமாய் 1,750 ரூபாயாகிறது. ஆனுல் ஷை விலை சாகுபடி செய்யக்கோரும் விஸ்தீர்ணத்தையும், கிணற்றின் ஆழத்தையும், ஷையின் பாங்கையும் பொருத்தது.

விவசாயிகள் கிணற்றுப்பாய்ச்சலை செம்மைப்படுத்துவதற்கும், விருத்தி செய்வதற்கும் இப்பொழுது அவர்களுக்கு நேரிட்டிருக்கும் அனுகூலமான சமயத்தை தங்களுக்கு இயன்றமட்டில் உபயோகப்படுத்திக்கொள்வதற்குக் கொஞ்சமேனும் தாமதம் செய்யக்கூடாது.

இந்த விஷயத்தைப்பற்றி திருவள்ளூரில் பம்பிங் டிபார்ட்மெண்டு ஓவர்ஸீயர் அவர்களுக்கும், மற்ற ஜில்லாக்களில் அடியில்கூறிய ஸூபர்வைஸர் அவர்களுக்கும் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டியது :—

கோயம்புத்தூர், திருச்சினுப்பள்ளி—ஸூபர்வைஸர், கஸ்பா, கோயம்புத்தூர்.

சேலம், வடஆற்காடு—ஸூபர்வைஸர், கஸ்பா, ராயவேலூர்.

தென் ஆற்காடு, தஞ்சாவூர்—ஸூபர்வைஸர், விழுப்புரம்.

சாதாரணமாக போட்டுக்கொள்ளக்கூடுமான ஆயில் எஞ்சின்கள், பம்புகள், அவைகளுக்கு வேண்டிய இதர சாமான்களின் கிரயம் முதலான விவரங்கள் அடியில்கண்ட ஸ்டேட்மெண்டில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

பொன்னேரி, திருவள்ளூர் தாலூக்காக்களில் போரிங், அதாவது, ஜலம் இருக்கிறதா என்பதை அறியப் பூமியில் துளைபோடும் வேலை ஏற்கனவே நடந்துகொண்டு வருகிறது. இப்பொழுது இந்த ஜில்லாவின் இதர தாலூக்காக்களிலும், வடஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், திருச்சினுப்பள்ளி ஜில்லாக்களிலும் வேலை ஆரம்பமாய்விட்டது.

தண்ணீர் இறைக்கும் குழாயின் குறுக்களவு.	ஒரு நிமிஷத்தில் இறைக்கக்கூடுமான தண்ணீர்.	சாகுபடி செய்யப்படும் நிலத்தின் விஸ்தீர்ணம்.	ஜலம் எடுக்கப்படவேண்டிய உயரம்.	யந்திரத்தின் வலுவு, குதிரை ஓட்டம்.	யந்திரங்களின் விலை.	இஞ்சின் கொட்டகை எஸ்டிமேட்.
	காலன்.	ஏகரா.			ரூ.	ரூ.
3 அங்குலம் ..	184	10 முதல் 15	20 அடி. 27 ,, 30 ,,	5 6 7½	1,800 2,000 2,100	150 முதல் 300
4 ஷை ..	325	16 முதல் 25	20 ,, 25 ,, 30 ,,	6 7½ 9	2,025 2,350 2,500	200 முதல் 300
5 ஷை ..	480	25 முதல் 50	17 ,, 25 ,,	7½ 12	2,500 3,125	250 முதல் 400

INSTALLATION OF OIL ENGINES AND PUMPS.

ஆயில் எஞ்சின்களும் தண்ணீர் இறைக்கும் குழாய்களும் வைத்தல்.

◆

ஆயில் எஞ்சின்களும் தண்ணீர் இறைக்கும் குழாய்களும் வைக்கும் விஷயத்தில் கைத்தொழில் இலாகா டைரெக்டரின் ஆலோசனை கேட்க விருப்பமுள்ள நிலஸ்வான்களும், குடிகளும் அதற்காகக் கொடுக்கும் விண்ணப்பங்களுடன் ரூபாய் 10 கட்டணம் செலுத்தவேண்டும்.

இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டாரால் ஆயில் எஞ்சின்களும், தண்ணீர் இறைக்கும் குழாய்களும் ஜோடித்து மேல்பார்வை யிடுவதற்கு சென்னைப்பட்டணத்தில் யந்திரம் வகைராவின் விலை யின்பேரில் நூற்றுக்கு 2½ ரூபாய் வீதம் மொத்தத்தில் 50க்கு மேல்படாமல் சார்ஜ் செய்யப்படும். யந்திரம் வைத்த ஒரு மாதம் வரைக்கும் அது திருப்திகரமாய் ஓடுவதற்கும் மேல்பார்வை செய்வதற்கும் சம்பந்தமான எல்லாச் செலவுகளும் இந்தக் கட்டணத்தில் அடங்கியிருக்கின்றன.

யந்திரங்களை அப்போதைக்கப்போது சோதித்து சரிப்படுத்த விரும்பும் நிலஸ்வான்களும், குடிகளும் இந்த டிபார்ட்மெண்ட் ஆபீஸர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ளலாம். இந்த வேலைக்காக "அப்பர் ஸபார்டினேட்" என்னும் மராமத்திலாகா உத்தியோகஸ்தரை ஏற்படுத்தினுல் கட்டணம் ரூபாய் 10ம், "மெகானிகல் போர்மேன்" என்னும் யந்திர விசாரணைக்காரனுக்கு இந்த வேலை கொடுத்தால் ரூபாய் 5ம், சார்ஜ் செய்யப்படும். யந்திரத்தின் சொந்தக்காரர்கள், இது தவிர இன்னும் எல்லா ரிபேர் செலவையும் செலுத்த வேண்டியதாயிருக்கும்.

இந்த ராஜதானியில் செய்யும் வேலைகளுக்கு பிளான்களும், எஸ்டிமேட்டுகளும் தயாரிக்கும் விஷயத்தில் இண்டஸ்டிரீஸ் டைரெக்டரின் ஆலோசனை பெற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு அவரே "கன்ஸல்டிங்கு எஞ்சினீராக" இருக்க அவருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது. இதற்கு ரூபாய் 50க்கு மேற்படாமல் கட்டணம் சார்ஜ் செய்யப்படும்.

கட்டணங்கள் சார்ஜ் செய்வதில் விண்ணப்பதாரர்கள் சொற்ப வரும்படியுள்ளவர்களாயிருந்து அவ்வளவு சார்ஜ் கொடுக்கமுடியாதவர்களாய் இருக்கக்கூடிய கேஸ்களில் இண்டஸ்டிரீஸ் டைரெக்டர் தனக்கு இஷ்டமிருந்தால் கட்டணங்கள் பூராவையுமாவது, அல்லது, அதில் ஒரு பாகத்தையாவது தள்ளிக்கொடுக்கலாம்.

BORING FOR WELLS.

கிணறுகளுக்காக துளைபோடுதல்.

இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டார் செய்யும் கிணற்று வேலைக்காக கட்டணங்கள் சார்ஜ் செய்வதற்கு விதிகள் :—

ஒரு தாலூக்காவில் கிணற்றுவேலைச் சிப்பந்திகளை ஏற்படுத்தும்போது அந்தச் சமாசாரம் டிஸ்டிரிக்ட் கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும். கிணற்றுவேலை சிப்பந்திகளின் விசாரணை ஆபீசருக்கு ரூபாய் 3 கட்டணத்துடன் மனுக்கள் கொடுக்கவேண்டும். அந்தக் கட்டணம் ஒரு பொழுதும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மனுதார் ஆயுதங்களை தன் செலவில் வண்டியில் ஏற்றி கிணறு வெட்டவேண்டிய இடத்தில் காலதாமதமில்லாமல் கொண்டுபோய்ச் சேர்க்கவேணும். ஒருபொழுதும் 10 மைல்களுக்கு மேல்பட்ட தூரத்திலிருந்து சாமான்களைக் கொண்டு போகும்படி நேரிடாது. சாதாரணமாய் சாமான்களை வண்டியில் போட்டனுப்ப வேண்டிவரும். தூரம் இதைவிட மிகவும் குறைவாக இருக்கும்படியே ஏற்பாடு செய்யப்படும்.

கிணற்றுவேலை ஆயுதங்கள் ஒரு தகுந்த மேஸ்திரி வசத்திலிருக்கும். அவர் வேலைக்கு நாள் 1-க்கு ரூபாய் 1 சார்ஜ் செய்யப்படும். யார் உபயோகத்துக்காக கிணறு வெட்டப்படுகிறதோ அந்த மனுதார் தேவையான கூலிக்காரர்களை சப்ளை செய்யவேண்டும். கிணறு வெட்டித்தேருத பக்ஷத்தில் கட்டணம் வாபஸ் செய்யப்படும். அல்லது மனுதார் நிலத்தின் ஊறத்துக்குள் இரண்டு, அவசியமானுல், மூன்று தடவை வரையில் கட்டணம் வாங்காமல் கிணறுவெட்டிப்பார்க்கப்படும். ஆனுல் அப்படி செய்வதில்வேறு எவ்விதமாயாவது ஜலம் அகப்படும் என்ற நம்பிக்கைக்கு ஆதாரம் ஏதாவது இருக்கவேண்டும்.

கிணற்று வேலையின் முடிவை மனுதாரருக்குத் தெரிவிப்பார்கள். தவிர, இந்த மாதிரி அகப்பட்ட ஜலத்தினுல் பூராப் பிரயோஜனத்தையும் அடைவதற்கு எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சிகளைப் பற்றி அவருக்கு வேண்டிய ஆலோசனையும் சொல்லுவார்கள். கீழ்ஊற்றுத்தென்படும் பக்ஷத்தில் மனுதார் செலவில் தகுந்த காயமான குழாயை வைப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுப்பார்கள். இதற்காகும் செலவை மனுதாரனே கொடுக்கவேணும்.

இண்டஸ்டிரீஸ் டிபார்ட்மெண்டார் முன்னுடியே இருக்கும் கிணறுகளில் ஜலம் எவ்வளவு இருக்கிறதென்பதைப் பரிசோதிக்க அவர்களால் கூடுமான வரையில் தண்ணீர் இறைக்கும் சாதனங்களை சப்ளை செய்வார்கள். கிணற்றிற்கு யந்திரத்தையும் தண்ணீர் குழாயை (பம்பு) யும் கொண்டுபோகப்பிடிக்கும் எல்லாச் செலவும் ஷை யந்திரங்களை வைத்துப்பரிசோதிக்கப் பிடிக்கும் கூலி, இந்தசெலவுகளையும் கிணற்றின் சொந்தக்காரர்கள் கட்டவேண்டும்.

REVIEW OF THE PRESS.
பத்திரிகை ஆராய்ச்சி.

IMPROVEMENTS IN PADDY CULTVATION.
நெற்பயிரிடுவதில் சில திருத்தங்கள்.

இலங்கையில் பிரசுரமாகும் "கமத்தொழில் விளக்கம்" என்னும் பத்திரிகையின் மாசிமாதச் சஞ்சிகையில் "நெற்செய்கை திருத்தம்" என்று ஒரு விஷயம் காணப்படுகிறது. அதில் சிவகிரியில் நெற்பயிரிடும் விதத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

முதலாவது, சிவகிரியில் சாதாரணக் கலப்பைக்குக் கொஞ்சம் மாறுபட்டிருக்கும் இருப்புக் கலப்பையினால் உழுகிறார்கள். சுதேசக்கொல்லர்களைக்கொண்டே இந்தக் கலப்பையைச் செய்யலாம். சாதாரணமரக் கலப்பையைப்போல இது நிலத்தைக் கீறாது. உழுதுகொண்டுபோகும்போது இந்த இரும்புக் கலப்பை நிலத்தை பாளம் பாளமாய்ப்பிளந்து அந்தப்பாளங்களை மேல்கீழாய்த் திருப்பிவிடுகிறது. இப்படித் திருப்புவதனால் களை, புல், பூண்டு முதலியவைகள் நிலத்துக்குள் அகப்பட்டு மடிந்து உரமாகின்றன. உலர்ந்த நிலத்தில் மட்டுமே அல்லாமல் சேற்று நிலத்திலும் இந்தக் கலப்பையால் உழலாம். சாதாரணக் கலப்பையை மாடுகட்டி உழுவதுபோலவே இதையும் மாடுகட்டி உபயோகப்படுத்தலாம். இந்தக் கலப்பையால் மூன்று தரம் உழுதால் சாதாரணக் கலப்பையால் ஐந்து தரம் உழுவதால் ஏற்படும் நன்மை நிலத்துக்கு உண்டாகிறது. இந்தக் கலப்பையின் விலை ரூபா 6 தான். சிவகிரிப்பண்ணை மானேஜரிடம் இது விலைக்குக் கிடைக்கும்.

இரண்டாவது திருத்தம் எரு இடுவதைப்பற்றியது. ஆடு மாடுகளின் சாணம், மூத்திரம், படுக்கைக் குப்பை கூளங்கள் முக்கியமான எருக்களாகும். சிவகிரியில் உள்ளவர்கள் மிருகங்களால் கழிக்கப்பட்ட இரைகளுடன் மேல்சொன்ன எருக்களைக் கலந்து கிடங்குகளில்சேர்த்து மக்கும்படிச்செய்கிறார்கள். எரு சீக்கிரம் மக்கவேண்டுமானால் அடிக்கடி தண்ணீரையும் மிருக மூத்திரங்களையும் எருக்குப்பல்கள் மேல்தெளிக்கவேண்டும். எருவினுடைய சத்து காற்றுப்பட்டுக் குறைந்துபோகாதபடி குளத்து மண்ணாலாவது; வயல் மண்ணாலாவது, எருக் குப்பல்களை மூடிவைக்கவேண்டும். போதுமான மிருக எரு கிடைப்பது கஷ்டமாதலால் நிலத்து எருக்களையும் உபயோகப்படுத்தவேண்டும். சிவகிரியில் வேளாண்மை ஆனபின்பு காவிராய் அதாவது கொழுஞ்சி என்னும் விதையை நிலத்தில் விதைக்கிறார்கள். பங்குனி சித்திரை மாதத்தில் விதைத்தால் ஆவணி புரட்டாசி மாசத்தில் நிலத்தோடு சேர்த்து உழுவதற்கு பக்குவமாயிருக்கும். நெல் விதைப்பதற்குச் சில நாளைக்கு முன்பு நிலத்தை உழுவார்கள். இந்தப் பச்சைப் பூண்டு பின்விளையும் நெல்பயிருக்குத் தகுந்த உரமாகிறது. இந்தக் 'கொழுஞ்சி விதையை நிலத்தில் அதிகமாய்ப் பயிர்செய்து உழுதால் உவர் நிலங்கூட நல்ல நிலமாக ஆகிவிடும்.

இன்னொரு நல்ல எரு சணல். இதைக்கொழுஞ்சிபோல ஐந்தாறு மாசத்திற்கு முன் விதைக்கவேண்டியதில்லை. நெல் விதைப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு விதைத்தால் போதுமானது. ஏக்கர் ஒன்றுக்கு 32 பறை வீதம் விளைந்த நிலம், சணற்பூண்டு எருவிடுவதால் 55 பறை விளைச்சலைக் கொடுக்கும்.

சிவகிரியில் உபயோகப்படுத்தப்படும் இன்னொரு வகையான எரு குளத்துமண். குளம் தண்ணீர் வற்றி இருக்கும்போது அடியிற் கிடக்கும் வண்டல், பொருக்குமண் இவைகளைக்கிண்டி அள்ளி வெளியில் போட்டு, பின்பு வயல்களுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். சில சமயங்களில் இதை மிருக எருக்களுடன் கலந்தும் உபயோகப்படுத்துவார்கள். உவர் நிலங்களுக்கு இதைத் தனியாய் இட்டால் நல்ல நிலமாக மாறிவிடுகின்றன.

மூன்றாவது திருத்தம் விதை நெல் சேர்ப்பதைப் பற்றியதாகும். நம் நாட்டில் நெல்லை அறுவடை செய்து கொண்டுவந்த பின்பு ஒரு பாகத்தை விதைக்கென்று எடுத்து வைத்துக்கொண்டு பாக்கியை சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் சிவகிரியில் நெல்விளைந்திருக்கும்போது வேலையாட்கள் வயல் முழுவதும் உலாவிப்பார்த்து, நன்றாய் விளைந்திருக்கும் கதிர்களாகப்பார்த்துப் பிடுங்கிவந்து, தனியாக அடித்து எடுத்து, அந்தத்தானியங்களை விதைக்காக வைத்துக் கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்வதால் விதை நெல் வேறு இனத்துக் கலப்பு இல்லாததும், சுத்தமானதும், நல்ல ஜீவசத்து உள்ளதுமாக இருக்கும். அதிகத் தண்ணீர்கட்டின நிலத்தில் விளைந்த நெல்லைவிட, நீர்ப்பாய்ச்சல் குறைவான இடங்களில் விளைந்த நெல்லே விதைப்பதற்கு சிலாக்கியம். ஏனென்றால் அந்த நெல்லைவிதைத்தால் மழையில்லாத காலத்திலும் நெல் விளையக்கூடும்.

நாலாவது திருத்தம் நாற்று நடுவதைப்பற்றி. நம்மவர்கள் நாற்று நடும்போது நெருக்கமாயும் ஒரே குழியில் பல பயிர்களைச் சேர்த்தும் நடுகிறார்கள். சிவகிரியில் நாற்றுகளைத் தனித்தனியாக விலக விலக நடுவது வழக்கம். இப்படி விலக விலக நாற்று நடுவதால் அதிக லாபம் இருக்கிறதென்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஐந்தாவது திருத்தம் நீர்பாய்ச்சும் முறையைப் பற்றி. நெல்லுக்கு எவ்வளவு அதிகமாக ஜலம் கட்டப்படுகிறதோ அவ்வளவுக்கு நன்மை என்று நம்மவர்கள் எண்ணுகிறார்கள். அளவுக்கு அதிகப்படாமல் அவசரமில்லாமல் நீர்பாய்ச்சுவதே நலமென்று சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அறுபது அங்குலம் நீர்ப்பாய்ச்சி விளைவிக்கப்படும் தானியம் புத்திசாலித்தனமாய் சரியானபடி ஜலம் பாய்ச்சினால் முப்பது அங்குலம் நீர் பாய்ச்சுவதினாலேயே விளைவித்துவிடலாமென்று பரிசோதனை முறையால் கண்டுபிடித்திருக்கிறார்கள். நெல்லுக்கு நீர்பாய்ச்சுகிறவர்கள் எப்போதும்தண்ணீர்நிற்கும்படி ஒரே முறையில் பாய்ச்சாமல், காயக்காய நீர்பாய்ச்சுவதே நயத்தைக்கொடுக்கும்.

இந்த முறைகளை அனுசரித்துப் பயிரிடுவதால சிவகிரியில் விசேஷ லாபம் கிடைக்கிறதாம்.

சிலங்கூர் வித்யாபாஸ்கரன்:— "பிழைக்கும்வழி" இது சென்னையிற் பிரசுரமாகும் அற்புத மாதாந்திரப்பத்திரிகை. எழுத்துக்காகிதம் முதலியனவற்றில் அதிக தெளிவாயிருப்பதனால் படிப்போர்க்கு விருப்பத்தைக்கொடுக்கும். அதன் பெயருக்குத் தக்கவாறே உள்ளுரைகளும் இந்தியர்கள் பிழைப்பதற்கான வழி முறைகளை எடுத்துரைக்கின்றது. இதன் பத்திராசியர் ஸ்ரீமத் வைத்தியாராமன். B, A. அவர்கள் புல துறைகளிலும் கைபோனவர் என்பது அவருடைய வியாசங்களினால் அறியப்படும். இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்வோர் உயர்தரக்கல்வி கற்றவர்களாதலின் தமிழ் மக்கள் இதைப்பெற்றுப் படிப்பின் உண்மையில் அனுகூலமடைவார்கள். இதன் வருட சந்தா ரூபா 4—0—0.

COUNTRY LIFE AND TOWN LIFE.
நாட்டு வாசமும் நகர வாசமும்.

—:o:—

"வித்தியா விஹாரிணி" யின் மாசி மாதச்சஞ்சிகையில் ஸ்ரீமதி எஸ். பொன்னம்மாளால் இந்த விஷயத்தைப்பற்றி ஒரு வியாசம் எழுதப்பட்டிருக்கிறது. தேகசௌக்கியத்துக்கு முக்கியமாக வேண்டிய குடிதண்ணீர் வசதியும், சுத்தமான காற்றும், பெரிய பட்டணங்களில் இல்லாதபடியாலும், திருச்சினாப்பள்ளி போன்ற சில இடங்களில் ஜல சௌக்கியம் இருப்பதாக வைத்துக்கொண்டாலும், குடியிருக்கும் வீடுகள் தொம்பர் குடிசையைவிட மோசமாயிருப்பதாலும், வெளியே கிளம்பினால் நாசித்துவாரம் முதலியவைகளில் புழுதி அடைவதாலும், தேகசுகம் குறைந்து அதனால் மனச்சுகமும் குறைந்து போகிறது. தவிர, போக்கிரிகள் மத்தியில் அகப்பட்டு பல விதமான கஷ்டங்கள் உண்டாகின்றன. இவைகளை உத்தேசிக்கும்போது நகரவாசத்தைவிட நாட்டு வாசமே நல்லதென்று சிலபேர்களுக்குத் தோன்றுகிறது.

கிராமத்தார்கள் ஒரு நாளைப்போலவே தினம் உண்பதும் உறங்குவதுமாக இருந்து சரியான பொழுதுபோக்கு இல்லாமல் சோம்பேறிகளாகக் காலங்கழிப்பதாலும், பயிர், மழை, வெயில், விலைவாசி இந்தப் பேச்சுகளைத் தவிர வேறு பேச்சு நாட்டு வாசிகளுக்குத்தெரியாததாலும் சீட்டாட்டமும் வேறு விதமான வ்ருதா காலட்சேபங்களும் செய்து சர்வமானியங்களைப் பறக்கவிடுவதாலும், நகரவாசமே நாட்டு வாசத்தைவிடச் சிறந்தது என்று வேறு சிலருக்குத் தோன்றுகிறது.

நாட்டில் வசிப்பதால் ஏகாந்தமான இடங்களையும், காடு மலைகளையும், அருவிகளையும், பசும் புல் தரைகளையும் மனதில் நினைத்து சந்தோஷமடையலாம். பட்டணங்களில் பலவித வியாபாரங்களும் ஜனக்கூட்டமும் இருப்பதால் பட்டணத்தில் வசிப்பதால் ஒருவன் சோம்பேறியாயிராமல் தனது புத்திக்கும் சக்திக்கும் தகுந்தபடி அலுவல் தேடிக் கொள்ள இடமுண்டாகிறது. முழு மூடனும் புத்திமான்கள் சேர்க்கையால் கல்வியும் நாகரிகமும் அடையலாம். பலதேசத்து ஜனங்கள் கலப்

பதால் நடை யுடை பாவனைகளில் தேர்ச்சி பெற இடமுண்டு. காலத்தை இனிதாகப்போக்குவதற்கு விநோதசாலைகளும் மண்டபங்களும், நாடகசாலைகளும் இருப்பதால் கிராம வாசிகளைப்போல் திண்ணையைக் காத்துக்கொண்டிராமல் விநோதமாகப் பொழுதுபோக்க இடமுண்டாகிறது.

மொத்தத்தில் நாட்டு வாசமும் நகர வாசமும் கலந்தே இருக்கவேண்டுமென்றும், இளமைப்பருவத்தில்நகரத்திலும், முதுமைப்பருவத்தில் நாட்டிலும் வசித்தல் நலமென்றும் ஸ்ரீமதி பொன்னம்மாள் அபிப்பிராயப்படுவதாகத்தெரிகிறது.

ANTS.
எறும்புகள்.

ஜனவரிமாஸத்து‘மாதர் மனோரஞ்சனி’யில்எறும்புகளைப்பற்றி ஆர். கே. ஸ்வாமி என்பவர் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். நாம் கறவை மாடுகளைப் பரிபாலிப்பதுபோல சில எறும்புகள் பால் கொடுக்கும் சில பிராணிகளைப் பரிபாலிக்கின்றனவாம். மாதுளை போன்ற சில மரங்களின் இலைகளிலும் கிளைகளிலும் வெகு அடர்த்தியாக சில பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருப்பதை அனேகர் பார்த்திருக்கலாம். பூதக்கண்ணாடியால் பார்த்தால் இந்தப் பூச்சிகளின் பின் புறத்தில் நுனியில் முலைக்காம்பு போன்ற இரண்டு அவயவங்கள் நீண்டு இருக்கக் காணலாம். இந்தக் காம்புகளிலிருந்து பால் வருகின்றது. எறும்புகள் இந்தப்பூச்சிகளைத் தங்கள் இருப்பிடங்களில் கொண்டு போய் வைத்துக்கொண்டு அவைகளின் பாலை வெகு ஆவலோடு. குடிக்கும் சில செடிகளில் எறும்புகள் நிறைந்திருப்பதற்குக் காரணம் இந்தப் பூச்சிகள் இருப்பதுதானாம். சில எறும்புகளுக்கு மதுரமான பால் அவைகளின் சரீரத்திலேயே இருக்கிறதாம். இப்படிப்பட்ட எறும்புகள் அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோ நாட்டில் உண்டு. பிள்ளைகளும் பெண்களும் மெக்ஸிகோவில் இந்த எறும்புகளின் தலையையும் மற்றப் பாகங்களையும் கிள்ளி எறிந்துவிட்டு தேன் நிறைந்த பாகங்களை உண்பார்களாம். சிலர் இந்த எரும்புகளை யந்திரத்தில் வைத்து நசுக்கி சிறந்த சாராயம் இறக்குகிறார்களாம். தேனீக்கள் மட்டுமே அல்லாமல் சில. ஜாதி எறும்புகளும் தேனைச்சேர்த்தும், கூட்டியும், வருகின்றன என்று இதனால் தெரிகிறது.

THE CULTIVATION OF CUMBU.
கம்பு சாகுபடி.

“நல்லாசிரியன்” என்னும் மாதாந்தப் பத்திரிகையின் ஜனவரி மாஸத்திய சஞ்சிகையில் கம்பைப் பற்றிய வியாஸம் ஒன்றிருக்கிறது. கம்பு தேகத்துக்குக் குளிர்ச்சி தரக்கூடிய ஒரு அழுத்தமான புஞ்சைத்தானியம். மாடுகளுக்குப் பால் விருத்தி செய்யக்கூடியது. அது மானவாரிப் புன்செயில் விளைந்தால் காட்டுக் கம்பென்றும், தோட்டப்பாசனத்தில் விளைந்தால் அரிசிக் கம்பென்றும் பெயர் பெறும். மணல் கலந்த நிலமும், கரிசல் பூமியும் பயிரிடத்தகுந்த பூமிகள். சென்னை ராஜதானியில் பல்லாரி, கிருஷ்ணா, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களிலெல்லாம் கரிசல் பூமிகள் இருக்கின்றன.

ஆட்டுப்பட்டி, மாட்டுப்பட்டி ஆகிய இவைகளை பூமியில் முதல் முதல் கிடத்தவேண்டும். ஏகரா ஒன்றுக்கு 10 வண்டி குப்பைபோட வேண்டும். கோடைகாலத்து மழையில் நிலத்தைப் பலதரம் உழுது பண் படுத்தவேண்டும். சாதாரணமாய் ஆனி, ஆடி மாதங்களில்தான் கம்பு விதைப்பது வழக்கம். ஒரு ஏகராவுக்கு எட்டுப்படி முதல் பத்துப்படி வரையில் விதை விதைத்து மறுபடியும் உழவேண்டும். விதைத்த இருபது நாளைக்கெல்லாம் மறுபடியும் உழுவது வழக்கமுண்டு. கம்புப்பயிருக்கு ஜலம் ஜாஸ்தி வேண்டியதில்லை. மழை அதிகமானால் பயிர் தாங்காது. கதிர்பிடிக்கும் தருணத்தில் மழை பெய்தால் மணி பிடிக்காது. கம்பை நான்கு மாஸத்தில் அறுவடை செய்யலாம். கம்பந்தட்டையைக் கடிப்பது கடினமாதலால் அதை மாடுகளுக்கு அவ்வளவாகத் தீனியாகப்போடுவதில்லை. ஆகையினால் கதிர்களை மாத்திரம் அறுத்துக் கொண்டு தாள்களை அப்படியே விட்டுவிடுவது வழக்கம். கம்பந்தட்டை கூரை வேய்வதற்குப் பிரயோஜனமாகிறது. சாதாரணமாய் ஏகரா ஒன்றுக்கு செலவுபோக 20 ரூபாய் கிடைப்பதாகத் தெரியவருகிறது. நமது ராஜதானியில் 30 லக்ஷம் ஏகரா பூமியில் கம்புப்பயிர் செய்யப்படுவ்தாக கணக்கிட்டிருக்கிறார்கள்.

OUR LITTLE ENEMIES.
நமது சிறிய சத்துருக்கள்.

டாக்டர் ஒய். சுப்பிரமணிய ஐயர் என்பவர் “ரங்கூன் ரஞ்சித போதினி” யின் ஜனவரி மாதச் சஞ்சிகையில் இந்த விஷயமாக எழுதியிருக்கிறார். இவர் சிறிய சத்துருக்கள் என்று சொல்வது சிறு கிருமிகளையும் புழுக்களையும். இந்தக்கிருமிகள் இருக்குமிடத்தில் சுத்தமான ஊசிநுனியை வைத்தால் அவைகள் அதில் ஒட்டிக்கொள்ளும். இந்தக் கிருமிகளைத் தனித்தனியாக நாம் பார்க்க முடியாவிட்டாலும் அவைகள் திரண்டு இருக்கும்போது பார்க்கலாம். இவைகள் உருண்டை வடிவமாகவும் திண்மையாகவும் இருந்தபோதிலும் ஒவ்வொன்றிற்கும் உயிருண்டு. இந்தக் கிருமிகள் வளர்ந்து சிறிது பருமனானவுடன் ஒவ்வொரு கிருமியும் இரண்டாக விண்டு போகும். இவைகள் பெருகும் விதத்தைப் பார்த்தால் நமக்கே ஆச்சரியமாயிருக்கும். ஒரு சிறு கிருமியை எடுத்து அதை ஓரிடத்தில் வைத்து அதற்கு வேண்டிய போஷணை செய்தால் பன்னிரண்டு மணி நேரத்திற்குள் அது ஒரு கோடியே எண்பது லட்சம் கிருமிகளாகப் பெருகிவிடும். ஆனால் அப்படிப் பெருகுவதற்குத் தகுந்த சந்தர்ப்பங்களும் அனுகூலங்களும் இருக்கவேண்டும். கிருமிகள் பாதகக் கிருமிகளென்றும், சாதகக் கிருமிகளென்றும் இரண்டு வகைப்படும். பாதகக் கிருமிகள் நம்முடைய சரீரத்துக்குள் புகுந்து ஏராளமான விஷத்தைப் பிறப்பித்துச் சரீரம் முழுவதும் பரவச்செய்கின்றன. அதாவது, நம்மை ரோகிகளாக்கிவிடுகின்றன. மனுஷதேகத்துக்கு நேரிடக்கூடிய வியாதிகளில் அநேகம் இவ்வித விஷக்கிருமிகளாலேயே உண்டாகின்றன. இந்த விஷக்கிருமிகளால் உற்பத்தியாகும் வியாதிகளில் வாந்திபேதி, சன்னிபாத சுரம், க்ஷய ரோகம், கொள்ளைநோய், பிளவை, கருங்குஷ்டம். அம்மைகள் முதலியன சிலவாம். நாம் குடிக்கும் ஜலத்தில் விஷபேதிக் கிருமிகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். இந்த ஜலத்தைக் குடிப்பதால் கிருமிகள் , சரீரத்தில் புகுந்து வாந்தி பேதியை உண்டாக்குகின்றன. இந்த நோய்க்கிருமிகள் நோயாளியின்மலம், மூத்திரம, வாந்தி ’முதலியவைகளின் மூலமாய் வெளியேறுகின்றன. நோயாளியின் படுக்கை முதலியவைகளைச் சுத்தப்படுத்தும்போது இந்தக் கிருமிகள் தண்ணீரில் சேருகின்றன. நோயாளி வீட்டிலிருப்பவர்கள் குளத்தில் ஸ்நானபானம் செய்வதால் இக்கிருமிகள் குளத்திலும் கிணற்றிலும் சேருகின்றன.. இப்படியே நெடுக இந்தக்கிருமிகள் பரவி தொத்து வியாதியை உண்டாக்குகின்றன. மற்ற வியாதிகளுக்கும் இப்படியே பார்த்துக்கொள்ளவும். மற்றொரு வகையான சிறிய சத்துருக்கள் இக்கிருமிகளைவிடப் பெரியவை.அவைகள் கொசுக்களும் ஈக்களுமாம். கொசுவுக்கு மனுஷரத்தம் மிக ருசியான ஆகாரம். கொசு ரத்தத்தைக் குடிக்கும்போது அது உட்கொண்ட விஷக்கிருமி அவர் சரீரத்தில் பாய்ந்து ஜுரம் முதலிய நோய்களை உண்டாக்குகிறது. ஈக்கள் எலியின் ரத்தத்தை உண்டு ஜீவிக்கின்றன. இவைகள் எலியில் இருக்கும் பிளேக் கிருமிகளை உட்கொள்வதால் இந்த ஈக்கள் கடிக்கும் சரீரத்திற்கு பிளேக் வியாதி உண்டாகிறது. சாதகக் கிருமிகளும் நம்முடைய சரீரத்தில் இருக்கின்றன. இவைகள் விஷக்கிருமிகள் சரீரத்தில்புகுந்தால் அவைகளுடன் சண்டைபோட்டு அவைகளைக்கொன்று நம்முடைய சரீரத்தைப் பாதுகாக்கின்றன. நம்முடைய சரீரம் சுகமாயும் பலமுள்ளதாயுமிருந்தால் இந்தச் சாதகக் கிருமிகளும் பலமுடையனவாயிருக்கும். பாதகக் கிருமிகள் நம்முடைய சரீரத்தில் புகுந்து வியாதியை உண்டாக்காமல் முன் ஜாக்கிரதையாய் இருக்கச் சில வழிகள் இருக்கின்றன. நாம் சாப்பிடும் ஆகாரத்திலும் சுவாசிக்கும் காற்றிலும் இந்த விஷக்கிருமிகள் இல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். தண்ணீரையும் பாலையும் கொதிக்கவைத்துச் சாப்பிடவேண்டும். சுத்த காற்றை சுவாசித்தால் க்ஷய ரோகம் வராது. இரவில் தூங்கும்போது கொசு வலை போட்டுக்கொண்டு நித்திரை செய்யவேண்டும். வீடுகளில் எலிகள் நடமாடாமலும், சூரிய வெளிச்சம் படும்படிச் செய்வதாலும், வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பதாலும் பிளேக் வராமல் தடுக்கலாம். அகஸ்மாத்தாய்ப் பாதகக் கிருமிகள் உள்சென்றாலும் அவைகளை சாதகக் கிருமிகள் நாசமாக்கி நம்முடைய சரீரத்தைப் பாதுகாக்கின்றன.

THE RUBY.
மாணிக்கக் கல் அல்லது கெம்பு.

இது விஷயமாக "விவேக போதினி" யின் பிப்ரவரி மாதச்சஞ்சிகையில் மிஸ்டர் பி. வி. ஸ்வாமி ராவ், எம். ஏ., ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். கெம்பு என்று வழங்கப்படும் மாணிக்கக்கல் குருவிந்த ஜாதியில் சிறந்த ரத்நம். அழகிலும், மனோரம்மியத்தை உண்டாக்குவதிலும் மாணிக்கக்கற்கள் சிறந்தன. குணத்தில் வைரம் இதற்கு ஒவ்வாது. நிறைவின்மையாலும், கண்ணாடியைப்போல் கெம்பு வெடிப்பதாலும் இது வைரத்தை ஒவ்வாது. குற்றமுள்ள மாணிக்கம் கூட செதுக்கப்பட்டால் தன் ஒளியின் பிரகாசத்தால் மதிப்படையும். கெம்பை அஜாக்கிரதையாக உபயோகப்படுத்தினாலும் அதன் ஒளிமாறாது. கெம்பு என்று சொல்லப்படும் மாணிக்கம், மெய் மாணிக்கம், பொய் மாணிக்கம் என்று இரண்டு வகைப்படும். தாப்புக்கல் என்னும் பொய் மாணிக்கத்திற்குப் பிரகாச சம்பந்தமான நீரோட்டம் கிடையாதாதலால் அது சிறந்ததாக மதிக்கப்படுவதில்லை. மெய் மாணிக்கம் வலுவில் சிறந்தது. பிரகாசத்தில் உயர்ந்தது. பால் ரோஜாவர்ணத்திலிருந்து ரத்தவர்ணம் வரையில் கெம்புக்கல்லில் பிரகாசம்வீசும். இந்தக்குணந்தான் நீரோட்டமென்று சொல்லப்படுகிறது. சிறந்த மாணிக்கத்தின் வர்ணம் கருஞ்சிவப்பில் பால் நீலம் பாய்ந்தாப்போல் பிரகாசிக்கும். மாதுளம் பழத்தின் விதைபோல் ஒளிவீசும். ஒரு பக்கம்விட்டு மற்றோர் பக்கம் பார்த்தால் மாணிக்கக்கற்கள் நிறம் வேறாகத்தோன்றும். இதற்கே த்விவர்ண ஸ்வபாவம் என்று சொல்லப்படும். பொய் மாணிக்கத்திற்கு இந்த குணம் இல்லை. பொய் மாணிக்கத்திற்கும் மெய் மாணிக்கத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பதற்கு இது ஒரு வழியாகும். ஒரே (முகத்தலளவு) அளவான தாப்புக் கல்லையும், மெய் மாணிக்கத்தையும் நிறை போட்டால் மெய் மாணிக்கம் கனம் அதிகமாகவிருக்கும். பொய் மாணிக்கம் தன் அளவான ஜலத்தைக்காட்டிலும் நான்கு மடங்கு கனமானது. பொய் மாணிக்கமும், தாப்புக்கல்லுகளும் கெம்பைக்காட்டிலும் கனம் மிகக்குறைவு. பொய் மாணிக்கத்திற்கும் மெய் மாணிக்கத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க இதுவும் ஒரு வழியாகும். இன்னொரு விதத்தாலும் வித்தியாசம் அறியலாம். மாணிக்கக்கல்லின் கூர்மையான முனையால் பொய் மாணிக்கம், தாப்புக்கல் இவைகளின் மேல் கீறினால் கோடுகள் விழும். அவைகளால் மாணிக்கத்தின் மேல் கீறினால் கோடு விழாது. இந்த மூன்று குணங்களைக்கொண்டு கெம்புக்கல்லை மற்றப்பொய் மாணிக்கக் கல்லுகளிலிருந்துபிரித்தெடுக்கலாம். 150,000 ரூபாய் முதல் 300,000 ரூபாய் வரையில் விலை மதிக்கப்படும் கெம்புக்கல்லுகள் இருக்கின்றனவாம். இப்படிப்பட்ட உயர்ந்த விலை குற்றமற்ற கெம்புகளுக்குத்தான் உண்டு. ஒளி மழுங்கியிருத்தல், வெள்ளையாகி முகில் பாய்ந்திருக்கும் ரசனைகள், வெடிப்புக் கோடுகள், முதலான குற்றங்கள் கெம்புக்கல்லுகளில் காணக்கூடியன.

THE MADRAS GLASS WORKS.
சென்னைக் கண்ணாடி சாலை.

சென்னையில் சில நாளாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் 'மெட்ராஸ் கிளாஸ் ஒர்க்ஸ்' என்ற கண்ணாடிகள் செய்யும் தொழிற்சாலைக் கம்பெனியார் தங்கள் உலையில் செலவாகும் விறகைக் கவர்ன்மெண்டு காடுகளிலிருந்து இனாமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இப்போது அவர்களுக்குச் சாதகமாக உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த உலையில் செலவாகும் பாதியளவு, 7200 டன்னுக்கு அதிகப்படாமல், இரண்டு வருஷத்துக்கு விறகு இனாமாகக் கொடுப்பதாக உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. கடப்பை ஜில்லாவிலுள்ள கோடூருக்கு சமீபத்தில் சேஷாசலம் ரிஸர்வ்டு பாரஸ்டிலிருந்து இது கொடுக்கப்படுமென்றும், விறகை வெட்டுவதும் கொண்டுபோவதும கம்பெனியின் செலவாயிருக்கவேண்டுமென்றும், பாரஸ்டு உத்தியோகஸ்தர்கள அவசியமானபடி மேற்பார்வை பார்த்து வரவேண்டுமென்றும், ஏற்பாடு செய்யப்பட்டிருககிறது.

AGRICULTURAL NOTES.
விவஸாயக் குறிப்புகள்.

THE YIELD OF COWS.

பசுக்களின் கறவை.—பசுக்கள் நன்றாய்க் கறக்கவேண்டுமானால், நல்ல தீனி போடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். உலகத்தில் பல இடங்களில் பரிசோதனை செய்துபார்த்ததில், மாடுகளின் கறவை தீனியைப் பொறுத்தது அல்ல என்று தெளிவாக ஏற்பட்டிருக்கிறது. ஆகார வேற்றுமையால் பால் அளவு சொல்பமாகத்தான் ஏறலாம் குறையலாம். ஜாஸ்தியாகப் பால் கறப்பது மாட்டின் வர்க்கத்தைப் பொறுத்ததாம். ஆகையால் கறவைமாடு வாங்குகிறவர்கள் நல்ல பால்வர்க்க மாடாய்ப் பார்த்து வாங்கி, தக்கபடி போஷிக்கவேண்டும்.

THE AIM OF THE AGRICULTURAL COLLEGE.

விவசாய காலேஜின் நோக்கங்கள்.—கோயம்புத்தூர் விவசாய காலேஜின் நோக்கமானது நிலச்சுவான்களுக்கும், கிருஷிகர்களுக்கும் தங்கள் நிலத்தைத் தற்காலத்தில் பயிர்செய்வதைவிட அதிக லாபகரமாய்ப் பயிர்செய்ய சக்தியுண்டாக்கக்கூடிய அனுபோகமுள்ளதும் சாஸ்திரோக்தமுமான விவசாயத்தைக் கற்பிப்பதுதான். இந்தக்கல்விச்சாலையோடு சேர்ந்திருக்கும் பண்ணையில் அப்பியாச பூர்வகமாக க்ருஷிவித்தையைக் கற்பிக்கிறார்கள். இந்தப் பண்ணையில் நஞ்சை நிலமும், புஞ்சை நிலமும், தோட்டக்கால் நிலமும் உண்டு. சென்னை ராஜதானியில் சாகுபடியாகிற ஏறக்குறைய எல்லாப்பயிர்களும் இந்தப் பண்ணையில் பயிர் செய்யப்படுகின்றன. இந்தப் பண்ணையில் நடக்கும் பயிர்வேலையை மாணாக்கர்களும் கூடயிருந்து செய்து, உழுதல், விதைத்தல், முதலாகிய பண்ணைவேலைகளை எப்படிச் செய்வதென்று தாங்களே சுதாவாகச்செய்து கற்றுக்கொள்ளுகிறார்கள். இந்த விதமாகத்தானே இவர்கள் பின்னால் தங்களுடைய குடிகளுக்கோ, அல்லது கூலிக்காரர்களுக்கோ வேலையைக் கற்பிக்க கற்றுக்கொள்ளலாம்.

இந்தக்கல்விச் சாலையில் விவசாய சம்பந்தமான எல்லா முக்கிய சாஸ்திரங்களும் கற்பிக்கப் படுகின்றன. இந்தக் கற்பனையானது மாணாக்கர்களுக்கு ஏன் சில பயிர்கள் நன்றாய் வளர்கின்றன, மற்றவைகள் நன்றாய் வளர்கிறதில்லையென்று காண்பிப்பதற்காகத்தான். விவசாயத்தில் கொஞ்சம் சாஸ்திர ஞானமுள்ள நிலச்சுவான்கள் வெகு சுலபமாகவே தங்களுடைய குடிகளுக்கு எப்படி அதிக நல்ல பயிர்களை சாகுபடி செய்யலாமென்று காண்பிக்கலாம். ஆகையால் அதிக நிலமுள்ளவர்கள் தங்கள் குமாரர்களில் ஒருவரை இந்தக் கோயம்புத்தூர் விவசாயக்கல்விச்சாலைக்கு அனுப்பப் ப்ரயத்தனஞ் செய்யவேண்டும்.

படிப்பைப்பற்றிய எல்லாவிஷயங்களையும், இந்தக் கல்விச்சாலையின் சட்டங்களின் காப்பி ஒன்றையும் விலை யில்லாமலே ப்ரின்ஸ்பாலுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

INDIGO.

அவுரி.—இது பசுந்தாளுக்காகப் பயிரிடுவதற்கு வெகு உபயோகமுள்ள பயிர். இது நீடித்த கோடையிலும் உண்டாகும். களிமண் நிலங்களில் ஈரந்தங்கியிருக்கும்போது உண்டாகும். ஆனால் கொஞ்சமாவது களருள்ள நிலங்களில் உண்டாகாது. காவேரி நதி தீரத்தில் இது இப்போது அதிகமாய்ப் பயிராகிறது. சம்பாப்பயிர் அறுவடையாகுங் காலத்தில் இந்தப் பயிர் விதைக்கலாம். விதை முளைப்பதற்குப் போதுமான ஈரம் இருக்குமானால் அறுவடையானவுடனே கூடிய சீக்கிரத்தில் நிலத்தை உழுது விதைத்துவிடலாம். நிலம் அதிகமாய்க் காய்ந்துபோனாலும், அல்லது கலப்பையில் மண் ஒட்டும்படி அவ்வளவு அதிக ஈரமாயிருந்தாலும், நெற்பயிர் அறுவடையாவதற்கு ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு முன், வயலில் தண்ணீர் இருந்தால் அதை வடித்துவிட்டு அவுரி விதைகளை விதைத்துவிடவேண்டும். பெரம்பலூர் தாலூகாவில் குளத்துப்பாசன நிலங்களில் அவுரியைக் கம்புப்பயிருடன் கலந்து விதைத்துக் கிணற்றுத்தண்ணீர் பாய்ச்சும் மேன்மையான பழக்கம் இருந்து வருகிறது. கம்புப்பயிர் விளைவான உடனே அதை வெட்டிக்கொண்டு அவுரியை நிலத்தில் விட்டுவைக்கிறார்கள். இதில் அதிகமான தழைப்பயிர் உண்டாகிறது. சம்பாப்பயிர் நடுங்காலத்தில் இதை நிலத்தில் மடித்து உழுது விடுகிறார்கள்.

INDUSTRIAL NOTES.

கைத்தொழில் குறிப்புகள்.

THE TANNING INDUSTRY.

தோல் பதனிடும் தொழில்:—போன பிப்ரவரி மாஸத்து ஸஞ்சிகையில் சாஸ்திரக்குறிப்புகளின் கீழ் இங்கிலாந்தில் லீட்ஸ் பட்டணத்தில் இந்திய சாஸ்திரீய சங்கம் என்று ஒரு ஸபை ஏற்பட்டிருப்பதாகவும் இந்தியாவிலுள்ள கைத்தொழில்களை சாஸ்திர முறைப்படி செய்ய போதிப்பதே அந்தச் சங்கத்தின் நோக்கமென்றும் சொன்னோம். தற்காலத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் தோல்கள் சாஸ்திர முறைப்படிப் பதனிடப்படாமல் அந்தத்தொழில் செய்கிறவர்கள் நஷ்டப்படுகிறார்களென்றும், அதை சாஸ்திர விதிப்படி செய்யவேண்டுமென்றும், இந்தச் சங்கத்தார் விரும்புகிறார்கள். பலதேசங்களிலுள்ள தோல் தொழிற்காரர்கள் ஒரு மீட்டிங்காகச் சேர்ந்து இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கப்போகிறார்களாம். அந்த ஆலோசனையில் மேலேசொன்ன சங்கத்தாரும் சேரப்போகிறார்களாம். அந்த ஸமயத்தில் இந்தியாவில் செய்யப்படும் தோல் தொழில் முறைகளைப் பற்றி ப்ரஸ்தாபம் செய்யும்பொருட்டு இந்த முறைகளின் விவரங்கள் தெரியவேண்டுமென்று சங்கத்தின் காரியதரிசியாகிய மிஸ்டர் பணிக்கர் என்பவர் அறிவித்திருக்கிறார். இவைகளை அறிந்த எவரேனும் உண்டானால் அவர் தமக்கு எழுதவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறார். ஆடுமாடு அடிப்பவரிடமிருந்து தோலை வாங்கி அதைச் சரியாய் பதனிடத்தெரியாமல் ஏற்றுமதி செய்வதால் அன்னிய தேசத்தில் நமது தோல் மதிக்கப்படாமற் போகின்றது. அதனால் நம் தொழிலாளிகள் பெரும் நஷ்டமடைகிறார்கள். இப்படியிருப்பதால் மிஸ்டர் பணிக்கர் வேண்டிக்கொள்ளுகிறபடி அந்தத் தொழிலில் அனுபோகமுள்ளவர்கள் அவர் வேண்டுவதைச் செய்வார்களென்று நம்புகிறோம்.

A MILL.

ஒரு ஆலை:—திருச்சூரில் டி. ஆர். சுந்தரமய்யருக்குச்சொந்தமான புஷ்பகிரி நெசவுச் சாலையை ஸீதாராம் 'ஸ்பின்னிங் அண்ட் வீவிங் மில்' என்று பெயருள்ள ஒரு லிமிடெட் கம்பெனியார் வாங்கிவிட்டார்கள். இந்தக் கம்பெனிக்கு மூலதனம் 120,000 ரூபாய்.

REVENUE NOTES.

ரெவினியூக் குறிப்புகள்.

PENAL ASSESSMENT

தண்டத்தீர்வை:—1317ம் பஸலியில் கோதாவரி ஜில்லாவில் 6,763 ரூபாயும், மதுரை ஜில்லாவில் 20,504 ரூபாயும், திருநெல்வேலி ஜில்லாவில் 13,314 ரூபாயும் தண்டத்தீர்வையாய் வசூல் செய்யப்பட்டனவாம். அதாவது, சம்மந்தப்பட்ட நிலங்களின் பேரில் வீதித்துப்பார்த்தால் ஏகர் ஒன்றுக்கு கோதாவரியில் 23 ரூபாயும், மதுரையில் 25 ரூபாயும், திருநெல்வேலியில் 58 ரூபாயும் ஆகிறது. இவ்வளவு உயர்ந்த தீர்வை போட என்ன காரணம் என்று விசாரித்ததில் வருஷாவருஷம் தண்டத்தீர்வை போட்டும் துராகிரதமாய் ஆக்ரமித்தவர்கள், நிலங்களை விடாததால் அவ்வளவு உயர்ந்த தண்டத்தீர்வை விதிக்கப்பட்டதென்று தெரியவந்தது. இதனால் தண்டத்தீர்வையைக் கொடுத்தும் ஆக்ரமித்தவனுக்கு லாபம் இருந்ததென்று ஏற்படுகிறது. ஆகையால் இப்படிப்பட்டக் கேஸுகளில் தண்டத்தீர்வை விதிப்பதைவிட என்க்ரோச்மெண்டு ஆக்டுப்படி மாசூல் முழுவதையும் பிடுங்கிக்கொண்டு ஆக்ரமித்தவனையும் நிலத்திலிருந்து துரத்தி விடுவது நலமென்று கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கிறார்கள்.

NO ASSESSMENT FOR WELL IRRIGATION.

கிணற்று இறவைக்குத்தீர்வையில்லை:—கிருஷிகர் தாங்கள் சொந்தத்திலேயே கிணறு வெட்டினால் நிலங்களின் மாசூல் அதிகப்படும். அந்த மாசூல் அதிகத்தின் அளவுப்படி (தாமாஷாப்படி) ஸர்க்கார் அதிகத்தீர்வை ஏற்படுத்துவார்களென்று எண்ணுவது தப்பு அபிப்பிராயம். கவர்ன்மெண்டார் அப்படி அதிகத்தீர்வை ஏற்படுத்துவதில்லையென்று வாக்களித்திருக்கிறார்கள். நன்செய் நிலங்களில் சொந்தத்திலேயே கிணறு வெட்டி, அந்த நீரால் சாகுபடி செய்தால் அந்த நிலத்துக்கு ஸர்க்கார் நீர்ப்பாய்ச்சலாதாரம் இல்லாததுபோல் நினைத்துப் புன்செய்த் தீர்வையே தவிர நன்செய்த் தீர்வை ஏற்படாதென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட கிணற்றிற்கு ஸர்க்கார் சுவாதீனமான ஏரி, குளம், கால் முதலிய ஆதாரங்களிலிருந்து தண்ணீர் சுரந்தாவது, பாய்ந்தாவது இருக்கக்கூடாது.

EDUCATIONAL NOTES.

வித்தியா விஷயக் குறிப்புகள்.

POOR BOYS IN COLLEGES.

கலேஜ்களில் படிக்கும் ஏழைப் பிள்ளைகள்.—சென்னைப்பட்டணத்தில் காலேஜ்களில் படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்து உதவிசெய்ய **ஏழைப்பையன்கள் நிதி** என்பதாக ஒரு நிதி சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிக்கு முக்கியமாய் ஆனரெபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரும், மிஸ்டர் பி. ஆர். சுந்தர அய்யரும், மிஸ்டர் வி. பி. ராமசாமி அய்யரும், மிஸ்டர் கெ. சீனிவாச அய்யங்காரும் பொருளுதவி செய்திருக்கிறார்களாம். அந்த நிதி இந்த வருஷம் ப்ரொபஸர் ரெங்காச்சாரியாராலும், மிஸ்டர் கெ. பி. ராமநாதய்யராலும், மிஸ்டர் வி. எஸ். சீனிவாஸ சாஸ்திரியாலும் நிர்வகிக்கப்படும். அந்த நிதியிலிருந்து இன்டர்மீடியேட்டுக்கு வாசிக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு மாதம் 7 ரூபாயும், பி. ஏ. ஆனர்ஸுக்கு வாசிக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு மாதம் 10 ரூபாயும் கொடுக்கப்படும். மொத்தத்தில் 20 ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படும். ஸ்காலர்ஷிப்புகளுக்கு விண்ணப்பஞ் செய்து கொள்ளப் பிரியப்படுகிற ஏழைப் பிள்ளைகள் மைலாப்பூரிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண ஸ்டூடெண்ஸ் ஹோம் செக்ரெட்டேரிக்கு எழுதிக் கொள்ளவேண்டும்.

இந்த ஏற்பாடு ரொம்ப சிறந்தது. அனேக ஏழைப்பிள்ளைகள் வாரச்சாதம் சாப்பிட்டுக்கொண்டு சம்பளத்துக்கு வீடுவீடாய்ப்போய் அரை ரூபாயும் கால் ரூபாயுமாக பிச்சை எடுத்து சம்பளத்தைச் சேர்த்துக் கொடுக்கிறார்கள். இப்படிச் செய்வதில் அவர்களுக்குப் பிச்சை எடுப்பதில் காலம் போய்விடுகிறதே ஒழிய படிக்க நேரமில்லை. இப்போது ஏற்பட்டிருக்கும் ஏற்பாடு இந்த கஷ்டங்களை நீக்கும்.

SCHOOL FEES.

பள்ளிக் கூடச் சம்பளம்.—வித்தையிலாகா டைரெக்டர் டாக்டர் போரன் வித்தியா விஷயங்களை நன்றாய் அறிந்த சிலரைச்சேர்த்து ஒரு மீட்டிங் கூட்டி இப்போது பிள்ளைகள் கொடுத்துவரும் சம்பள விகிதங்களை உயர்த்துவதைப்பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

LITERARY NOTES.

புஸ்தகக் குறிப்புகள்.

CHANDRAKANTHA.

சந்திர காந்தா:—இது ஒரு துப்பறியும் நாவல். நாட்டில் அங்கங்கே நடக்கும் கொலை, களவு முதலிய குற்றங்களைச் சாதாரணமாய்க் கண்டுபிடிப்பதற்கு போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு சாத்தியமில்லாமலிருக்கும்போது, அவர்கள் போலீஸ் உடுப்புகளை எடுத்துவிட்டு சாதாரண உடுப்பு போட்டுக் கொண்டு குற்றத்துக்கு சம்மந்தப்பட்டதாக சந்தேகிக்கக்கூடிய இடங்களுக்குப்போய் அனுமானப்படக்கூடிய மனிதர்களிடம் பழகி கடைசியில் குற்றத்தைக் கண்டுபிடிப்பார்கள். அதற்கே துப்பறிவது என்று பெயர். இப்படி துப்பறிந்து குற்றத்தைக் கண்டுபிடிக்கும் காரியமே இந்த நாவலில் முக்கியமாக விவரிக்கப்பட்டாலும், மற்றப்படி ஜனங்களுக்குள் காணப்படும் துர்வழக்கங்கள், சில ஜமீன்தார்களின் அநியாயமான நடத்தை, பண்டார சந்நிதியின் மடங்களில் நடக்கும் அநீதிகள் முதலியவைகளும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதன் நடை சுலபமாயிருப்பதைப்பற்றி நமக்குச் சந்தோஷமேயென்றாலும், இலக்கணப்பிழைகளை நீக்கி எழுதுவது நல்லது. உதாரணமாக, 'நிச்சயம்' என்னும் சொல்லை அநேக இடங்களில் 'நிக்ஷயம்' என்று எழுதியிருக்கிறது. இதில் உள்ள சித்திரப்படங்கள் புகழத்தக்கவைகளாயிருந்தபோதிலும் பண்டார ஸந்நிதியையும், பிராமணப்பெண்ணையும் பற்றி வரைந்திருக்கும் சித்திரம் அனுசிதமென்பது நமது அபிப்பிராயம். இதை எழுதியவர் ரங்கராஜு அவர்கள். புஸ்தகத்தின் விலை 12 அணா.

KINDERGARTEN METHOD.

கிண்டர்கார்ட்டன் போதனா முறை.—முற்காலத்திலிது தனிப்பாடமாக இருந்தது. இப்போது எல்லாப் பாடங்களும், கிண்டர்கார்ட்டன் முறையாகவே கற்பிக்கவேண்டியிருப்பதால் இந்த அரிய நூலின் விஷயங்கள் அப்படி நடத்துவதற்குப் போதுமானவை. உபாத்தியாயர்களும், குழந்தைகளும் தங்களிருப்பிடத்தைவிட்டு நகராமல் படிப்பில் வெறுப்புண்டாகும்படி கற்பிப்பது பிசகென்று வித்தியாபிவிர்த்திகளறிந்து இந்த மாதிரி போதனா முறையைக் கைக்கொண்டு தழுவி வருகிறார்கள். தொடர்முறை போதனை பரவிவருமிக்காலத்து இதுதான் சிசுக்களுக்கு ஏற்ற முறை. இதை ஒவ்வொரு எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயரும் அறிந்து இந்த முறைப்படி சிசுக்களுக்குப் போதிப்பாராயின், அவர்களுக்கு சுகமும் அக்குழந்தைகளுக்கு ஆனந்தமுமுண்டாகும். சென்னப்பட்டணம், வெப்பேரி, நெ. 20, முத்தியாலு நாயக்கன் தெருவு, பி. வி. துரைசாமி அய்யங்கார் இயற்றியது. விலை 0—3—0.

SCIENTIFIC NOTES.
சாஸ்திரீயக் குறிப்புகள்.

KNOWLEDGE OF SCIENCE.

சாஸ்திர ஞானம்.—தற்காலத்தில் தொழில்கள் நடத்துவதில் சாஸ்திர ஞானம் அவசியம். பழைய காலத்தைப்போல முன்னோர் செய்த மாதிரியே செய்து தொழில்கள் செய்வது ஸாத்தியமல்ல. கெமிஸ்ட்ரி (ரசாயன சாஸ்திரம்), பிஸிக்ஸ் (பௌதிக சாஸ்திரம்), ஜியாலொஜி (பூகர்ப்ப சாஸ்திரம்), மெக்கானிக்ஸ் (யந்திர சாஸ்திரம்) இவைகள் போன்ற பல சாஸ்திரங்களில் பயிற்சி யிருந்தால் மட்டும் வெவ்வேறு தொழில்களைத் தற்கால மாதிரியாய் நடத்தக்கூடும். ஐரோப்பியர் இப்படி நடத்துவதாலும், நம்முடைய தேசத்தார் இப்படி நடத்தாமல் தகப்பன் செய்தது போல பிள்ளை செய்வது என்கிற வழக்கமாய் நடத்துவதாலும் ஐரோப்பியரோடு போட்டிபோட முடியாமல் நம்முடைய தொழில்கள் மடிந்துபோகின்றன. ஐரோப்பிய நாடுகளில் மேல்குறித்த சாஸ்திரங்களைச்சொல்லிவைக்க பெரிய வித்தியா சாலைகள் ஏராளமான செலவுடன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலோ, அப்படிப்பட்ட வித்யா சாலைகள் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை. இரண்டொரு இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வித்தியா சாலைகள் பிரபலமாய் நடத்தப்படவில்லை. ஐரோப்பியரைப்போல் நாம் தொழில்கள் நடத்தவேண்டுமானால் மேலே சொல்லிய சாஸ்திரங்களில் பயிற்சிபெற்று அவைகளின் உதவியினால் நடத்தவேண்டும். அதற்குத் தேசமெங்கும் சாஸ்திர ஆராய்ச்சி சாலைகள் தேவை. கவர்ன்மெண்டார் எவ்வளவு சாலைகள்தான் ஏற்படுத்தமுடியும்? கோவில்களை கட்டி, குளங்களை வெட்டி தர்மங்கள் செய்வதுபோல் நம்முடைய தேசத்து தனவான்கள் சிறுவர்கள் பழகக்கூடிய சாஸ்திர சாலைகளை ஏற்படுத்தவேண்டும் ஸமீபத்தில் பம்பாயில் பிரபல வர்த்தகரான கரிம்பாய் இப்ராஹிம் நாலரை லக்ஷம் ரூபாயை அந்த மாகாணத்து கவர்னராகிய ஸர் ஜார்ஜ் கிளார்க்குக்கு அனுப்பி அதைக்கொண்டு சிறுவர்களை, முக்கியமாய் மகமதியர்களை, சாஸ்திரங்களிலும் கைத்தொழில்களிலும் பழக்கும்படி எழுதினார். அந்தப்பணத்தைப் பெற்றுக்கொண்டு, கிளார்க்கு துரை கரிம்பாய் இஷ்டப்படியே நடத்துவதாகச்சொல்லி அவரை ரொம்பவும் மெச்சி எழுதினார். இப்படிப்பட்ட தர்மங்கள்தான் தற்காலத்தில் இந்தியாவில் அவசியம்.

LEGAL NOTES.
சட்டக் குறிப்புகள்.

A NEW DECISION ABOUT MARRIAGE.

விவாகத்தைப்பற்றிய ஒரு புதிய தீர்மானம்:—ஸமீபத்தில் சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டில் திருநெல்வேலியிலிருந்து ஒரு இரண்டாவது அப்பீல் விசாரிக்கப்பட்டுத் தீர்மானம் செய்யப்பட்டது. இந்தக்கேஸில் முக்கியமாகத் தீர்மானிக்கப்பட்ட விஷயம் என்னவென்றால, கிருஸ்துவர்களுக்குப் பிறந்த ஒரு ஸ்திரீ ஹிந்து குலத்தைச்சேர்ந்த கைக்கோளன் ஒருவனைக் கலியாணம் செய்துகொண்டு, கலியாணம் ஆனது முதல் ஹிந்து மதத்தையே அனுசரித்து வருவாளாகில் அவள் கலியாணம் ஒழுங்காகுமா? என்பதுதான். மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர், மிகுந்த சாமார்த்தியத்துடன் சாஸ்திரப் பிரமாணங்களையும், சட்டதிட்டங்களையும், பற்பல ப்ரிவி கவுன்ஸில் தீர்ப்புகளையும் ஹைகோர்ட்டு தீர்மானங்களையும் ஆதாரமாக எடுத்துக்காட்டி தொன்றுதொட்டு வழங்கும் வழக்கப்படிக்கும், த்விஜர்களல்லாத ஹிந்துக்களுக்குள் கலியாணம் செய்வதில் யாதொரு வரம்புகளையும் ஏற்படுத்தாத ஹிந்துக்களின் கோட்பாடுகள்படிக்கும், விவாகம் செய்துகொண்டவர்களின் உறவினர்களும் கூட்டத்தார்களும் யாதொரு குறையும் கூறாமல் இந்த கலியாணத்திற்குச் சம்மதித்து வதூவரர்களைத் தம் இனத்தார்களாகவே பாவித்து வெகுகாலம் நடந்து வந்ததாலும் அந்தக்கலியாணம் வெகு ஒழுங்காக நடந்திருப்பதாகத் தாம் அபிப்பிராயப் படுவதாக அவ்விதமே தீர்மானம் செய்தார். இந்தத்தீர்மானத்தில் இவருடன் கூடயிருந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீமும் சம்மதித்தார்.

SECOND GRADE PLEADER.

வக்கீல் தொழிலுக்கு ஒரு விபத்து:—இனி மூன்சீப் கோர்ட்டு (இரண்டாவது கிரேட்) வக்கீல்கள் என்ற ஸ்தானத்தையே கவர்ன்மெண்டார் எடுத்துவிட யோசித்து கொண்டிருக்கிறார்களாம். இந்த விஷயமாகக கவர்ன்மெண்டார் ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகளுடன் கலந்துகொண்டிருப்பதாய்த் தெரிகிறது. வக்கீல்கள் வரவர அதிகமாகி வருவதை உத்தேசித்து இந்த யோசனை யுண்டாயிருப்பதாகத் தோன்றுகிறது.

161181

MEDICAL NOTES.
வைத்தியக் குறிப்புகள்.

GUM BOIL.

எகரு கொழுத்து சீழ் பிடித்தல்:—சில பேர்களுக்கு எகரு கொழுத்து அடிக்கடி பொறுக்கப்படாமல் வலிக்கும். அந்தச் சமயங்களில் எகரு சீழ்ப் பிடித்தும் இருக்கும். இதனால் உண்டாகும் வலியை ஒரு நொடியில் தீர்த்து விடலாம். ஒரு பப்பாளிக் காயைக்கொண்டுவந்து அதை ஒரு பெரிய ஊசி அல்லது கத்தியால் குத்தினால் அதிலிருந்து பால் வடியும். அந்தப் பாலில் கொஞ்சம் பஞ்சை சதும்ப நனைத்து அந்தப் பஞ்சைக்கொண்டு மெள்ள சீழ்ப் பிடித்த இடத்தில் தேய்த்தால் இரண்டு நிமிஷத்தில் புண் உடைந்து விடுமாம்.

ONIONS AND EAR ACHE.

வெங்காயமும் காது வலியும்:—குளிரினால் சில பேர்களுக்குக் காதுவலி யுண்டாகும். இப்படிக் காது வலித்தால் ஒரு பெரிய வெங்காயத்தை எடுத்து அடுப்பில் போட்டுச்சுட்டு அதைக்காதில் சுடச்சுட வைத்துக்கட்ட வேணும். இப்படிச்சுடச்சுட வைத்துக்கட்டினால் வலி சீக்கிரம் போய்விடும். வெங்காயத்தைச் சுடச்சுட வைத்துக் கட்டினால் சில வேளைகளில் காதிலுள்ள குரும்பை உருகிவெளியே வரும். இப்படி ஆகும் பக்ஷத்தில் வெதுவெதுப்பான வெந்நீரைக் காதில் பீச்சாங்குழலை வைத்து அடிக்கவேணும். மறுபடியும் குளிரினால் வலிக்காமலிருக்கும்படி காதில் கொஞ்சம் பஞ்சை அடைத்து வைக்கவேணும்.

SHAVING THE MOUSTACHE.

மீசையைச் சிரைத்து விடுதல் :—மீசையைச் சிரைத்து விடுதலே சுகாதார மார்க்கமாம். இல்லாவிட்டால் பலவித நோய்களுக்கு இடமுண்டாம். நாம் சுவாசத்தை வெளிவிடும்போது அந்தச்சுவாசத்தில் நம் தேகத்துள் இருக்கும் அசுத்தங்களின் அணுக்களெல்லாம் கலப்புண்டிருப்பதால் அவைகள் வெளிப்படும்போது காற்று மட்டும் ஆகாயத்தில் கலந்துவிட, கனமான அணுக்கள் மீசையின் அடிப்பக்கங்களில் ஒட்டிக்கொண்டு விடுகின்றனவாம். இவைகள் வேர்வை முதலிய பலவற்றால் நாளடைவில் அழுகி நாம் சுவாசம் உட்கொள்ளும் போது அதனுடன் இந்த விஷ அணுக்கள் தேகத்திற்குள் சென்று வியாதிகளை உண்டாக்குகின்றனவாம். ஆகவே மீசையைச் சிரைத்து விடுவதே சிலாக்கியமென்று சொல்லப்படுகிறது.

THE LADIES' COLUMN.
பெண்கள் பத்தி.

(6)

CHILDREN SWALLOWING COINS.

குழைந்தைகள் நாணயங்களை விழுங்கிவிடுதல்:—குழந்தைகள் நாணயங்களை வாயில் போட்டுக்கொண்டு விளையாடும்பொழுது அவைகளை விழுங்கிவிடுவது ஸகஜம். ஆனால் அதினால் அபாயம் அதிகமில்லை. அந்த ஸமயங்களில் பெற்றோரும் மற்றோரும் உடனே பேதிக்கு மருந்து கொடுப்பது வழக்கம். இது பெருந்தப்பு. பேதிக்குக் கொடுக்கவே கூடாது. அப்படிக்கொடுத்தால் மலங்கரைந்து வெளியேறும்போது நாணயங்கள் குடலில் தங்கிப்போகும். திரும்ப பேதிக்குக் கொடுத்தால் குழந்தை தாங்க மாட்டாது. பெற்றோர் என்னசெய்வதென்று அறியாமல் அங்கலாய்க்கவும் குழந்தை கஷ்டப்படவும் இடமாகும். ஆகையால் பேதிக்குக்கொடாமல் அதற்கெதிரிடையாக மலங்கட்டும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். ஜலவடிவமான பால் முதலிய ஆகாரங்களை உபயோகிக்காமல் மலம் பெருகி இறுகுவதற்கேதுவான ரொட்டி, சோறு, முட்டை முதலிய ஆகாரங்களையும், ஓட்மீல், அரோரூட் மாக்கஞ்சிகளையும் பால் சேர்த்துக் கெட்டியாகக் காய்ச்சிக் கொடுக்கலாம். ஒரு வருஷத்திற்குட்பட்ட குழைந்தைகளுக்கு மேற்சொல்லிய அரோரூட் மாக்கஞ்சியே போதும். அதோடு மலம் இறுகும்படி ஜாதிக்காயை பாலில் உரைத்தும் கொடுக்கலாம். இவ்விதமாக மலம் பெருகி இறுகும்போது அதற்குள்ளே மேற்படி வஸ்துவும் சிக்கிக்கொண்டு வெளியேறும். ஒவ்வொரு நாளும் மலத்தைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

A JEWEL FRAUD.

ஒரு நகை மோசம்:—ப்ராங் காசுக்குப் பர்த்தியாக தென்னிந்தியாவில் திருநெல்வேலி, நாகைப்பட்டணம், சென்னப்பட்டணம் ஆகிய பெரிய பட்டணங்களிலெல்லாம் சிலபேர்கள் லட்சுமி பிம்பம் முதலியவைகளைப்போட்டு ப்ராங் காசின் விலைக்குக் கொஞ்சம் ஸகாயமாய் விற்று வருகிறார்கள். அதை வர்த்தகர்கள் போஸ்ட்டு மூலமாய்த் தருவித்து விற்றதில் வாங்கின பல ஜனங்கள் பொத்தான், காசுமாலைகளாக இணைக்கும்போது செம்பில் செய்து பொன் கலர் போட்டதாக வெளிப்பட்டு அநேகர் மோசம் போய் விட்டதாகத் தெரிகிறது. காசு மாலைக்கார இப்படிப்பட்ட காசுகளை வாங்குகிறவர்கள் இதை நன்றாய்க் கவனிக்கவேணும்.

THE BOYS' COLUMN.

பையன்கள் பத்தி.

—(o)—

THE MERITS OF TEAK WOOD.

தேக்கு மரத்தின் குணங்கள்.—அதிக நீளமாயும், வீரம் பாய்ந்ததாயும், பெரிய உத்தரங்களாய்க் கிடைக்கக்கூடியதுமான மரம் இது ஒன்றே. மிகவும் கனமுள்ளதுமல்ல. ஏனென்றால் கோடாரி, அரிவாள், இழைப்புளி, இவைகளைக் கொண்டு சேதமில்லாமல் இந்த மரங்களில் வேலை செய்யலாம். மேலும் இந்த மரங்களினூடே கட்டைகளுக்குச் சேதமில்லாமல், ஆணிகளைச் செலுத்தலாம். சில மரங்களில் ஆணியை அடித்தால் கீறல் ஏற்படும். எல்லாவற்றிலும் சிலாக்கியமான குணம் எது என்றால் இந்த மரங்களோடு சேர்த்துள்ள இரும்பு ஆணிகளோ அல்லது இரும்பு உத்தரங்களோ இவைகள் ஒருபொழுதும் துருப்பிடிப்பதே யில்லை. இந்த குணம் வேறு மரங்களுக்கு இல்லாமலிருப்பதினால்தான் எல்லா தேசத்து ஜனங்களும் கட்டிடங்களுக்கு இந்த மரத்தையே உபயோகிக்கிறார்கள். இதைத் தவிர இதன் நிறமோ கண்ணுக்குத் திருப்தியான வார்னீஷ் கொடுத்தாற்போன்ற கருஞ்சிவப்பு. இதன் வாஸனையோ மரத்தை அரிக்கின்ற புழுப் பூச்சிகளை அண்டாமல் செய்கிறது. இந்த மரத்திலிருக்கும் ஒருவித எண்ணெய்ப் பசையால்தான் இது கெட்டுப் போகாமல் வெகு காலம் நீடித்திருக்கின்றது.

A PHYSICAL CULTURE ASSOCAITION.

ஒரு தேகப் பயற்சிச் சங்கம்:—சமீபத்தில் புனாவில் தேகப்பயற்சிச் சங்கம் ஒன்று புதிதாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது 1908-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டு வரவர விருத்தியடைந்து வருகிறது. இதற்கு 200 மெம்பர்களும் 100 மாணவர்களும் இருக்கிறார்கள். இதில் பலவிதமான ஸ்வதேச பிறதேச விளையாட்டுகள் நடக்கின்றன. இதற்கு டாக்டர் நானா சாஹிப் தேஷ்முக் என்பவர் 3,000 ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். கோலாப்பூர், பரோடா முதலிய நாட்டு அரசர்களும் இதற்கு போஷகர்களாய் உதவி செய்கிறார்கள். இதுவரையில் ரூபா 10,000 நிதி சேர்ந்திருக்கிறதாம்.

INDIAN NEWS.

இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

A NOVEL POST CARD.

ஒரு விநோத போஸ்ட் கார்ட்.—லாகூர் பொருட்காட்சி வித்தியா கூடத்தில் வெகு விநோதமான ஸாமான் ஒன்று வைக்கப்பட்டிருந்ததாம். அது என்னவென்றால் நம்முடைய கவர்னர் ஜெனரலாகிய லார்ட் மிண்டோவின் ஜீவிய சரித்திரம் எழுதப்பட்ட போஸ்ட்கார்டைத் தவிர வேறொன்றுமில்லை. அந்த போஸ்ட்கார்டில் ஒரு பார்ஸி லார்ட் மிண்டோவின் ஜீவிய சரித்திரத்தை 100 வரிகளில் அடக்கி எழுதியிருந்தாராம். அந்த 100 வரிகளில் 1737 வார்த்தைகளும் 9104 எழுத்துக்களும் அடங்கியிருந்தன. அந்த ஜீவிய சரித்திரம் நன்றாய் வாசிக்கப்படக்கூடியதாயுமிருந்ததாம். அந்த போஸ்ட் கார்ட் நன்றாய்ச் சட்டம் போட்டு வைக்கப்பட்டிருந்ததாம். ஒரு போஸ்ட்கார்டில் 100 வரிகள் எழுதப்பட்டிருக்க வேண்டுமானால் அவைகள் பொடி எழுத்தில் நெருங்க அல்லவோ எழுதப்பட்டிருக்கவேண்டும்? அப்படி எழுதப்பட்டிருந்தும் வரிகளை யாரும் நன்றாய் வாசிக்கமுடியுமெனப்படுகிறது. அந்தப் பொருட்காட்சி வித்தியாகூடத்துக்கு யார் போனாலும் சரி அவர்கள் அந்த போஸ்ட் கார்டைத்தான் வைத்த கண்வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு வந்தார்களாம்.

A STATE NEWSPAPER.

ஒரு ராஜாங்க சமாசாரப் பத்திரிகை.—பல சமாசாரப் பத்திரிகைகளை தம்முடைய நாட்டில் படிக்கக்கூடாதென்றும், வரவழைக்கக் கூடாதென்றும் க்வாலியர் மகாராஜா சிந்தியா அவர்கள் கொஞ்ச நாளுக்குமுன் உத்தரவு பிறப்பித்தார். தகுந்த பத்திரிகைகள் இல்லாததனால் தம்முடைய ஜனங்கள் உபயோகத்துக்காக ஒரு வாரப்பத்திரிகை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருப்பதாய்த் தெரியவருகிறது. ராஜாங்கத்தாரால் அங்கீகாரம் செய்யப்பட்ட வியாபார விஷயங்களும் ராஜாங்க விஷயங்களுமே முக்கியமாய் அதில் பிரசுரம் செய்யப்படும். அது க்வாலியர் ராஜாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டு வெளியிடப்படும் என்று தோன்றுகிறது.

HOUSES BUILDING IN BOMBAY.

பம்பாயில் வீடு கட்டுதல்.—பம்பாய் நகரம் ஜனநெருக்கத்தினால் சுகங்கெட்டு வருவதால் நெருக்கத்தைக் குறைக்கப் பிரயத்தனம் நடந்து வருகிறது. அதற்காக முனிஸிபாலிடியார் தேர்ந்தெடுத்திருக்கும் இடத்தைப் பூராவாகவோ, ஏகதேசமோ, வாங்கிக் கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக, கனம் விட்டல்தாஸ் தாமோதர தாகர்ஸி அவர்களும் இன்னும் சிலரும் முயன்று வருவதாகத் தெரிய வருகிறது. முதலாளிகள் பணத்துக்கு ஸரியான வட்டி கிடைக்காத பக்ஷத்தில் இப்பேர்ப்பட்ட வழிகளை ஆலோசிப்பது நலம்.

CATTLE DISEASES.

மாட்டு வியாதிகள்:—மைஸூர் ஸமஸ்தானத்து ஜில்லா மாட்டு வைத்தியர்களைக்கொண்டு மாட்டு வியாதி, மாடுகள் வளர்த்தல், மாடுகளுக்குத் தீனி சேகரித்தல், முதலான விஷயங்களைப்பற்றி துண்டுப்பத்திரிகைகள் எழுதி, மாடு வைத்திருக்கிறவர்களுக்குக் கொடுக்கும்படி ஏற்பாடாகியிருக்கிறது.

THE SALEM CO-OPERATIVE CONFERENCE.

சேலம் ஐக்கிய நாணயச் சங்கக்கூட்டம்.—நாளது மார்ச்சு மாஸம் 19, 20, இந்தத் தேதிகளில் சேலத்து ஐக்கிய நாணயச் சங்கத்தார் எல்லாரும் ஒரு கூட்டம் கூடினார்கள். அந்தக் கூட்டத்தில் கனம் வி. கிருஷ்ணசாமி அய்யர் அக்கிராஸனம் வகித்து, கூட்டுறவுச் சங்கங்களினால் உண்டாகும் பயன்களைப் பற்றி வெகு நன்றாய்ப் பேசினார்.

A SWADESI CHAMBER.

ஒரு ஸ்வதேச வர்த்தக சங்கம்.—கல்கத்தாவில் ஸ்வதேச வர்த்தகர்கள், தொழிலாளிகள், ஸாஹுகார்கள் எல்லாருங்கூடி ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தார் ஒரு தொழிலை மட்டில் கவனிக்காமல் ஸகல விதமான ஸ்வதேசி வியாபாரம், கைத்தொழில் முதலான எல்லாவற்றையும் கவனிப்பார்களாம்.

DAIRY FARMING

பால் தயிர் வியாபாரம்.—பம்பாய் ராஜதானியில் உள்ள கைரா, ஆமதாபாத் என்னும் ஜில்லாக்களில் அநேகம்பேர்கள் மாடுகள் வைத்துப் பால் தயிர் வியாபாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்களாம். இப்படிக்கு இந்த வியாபாரத்துறையில் நூதனமாய் இறங்கியிருப்பதுதான் இதில் விசேஷம்.

FOREIGN NEWS.

அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

STATE AID TO INDUSTRY IN TURKEY.

துருக்கி தேசத்தில் கைத்தொழிலுக்கு ஸர்க்கார் உதவி.—சுதேசக் கைத்தொழில் விர்த்தியாகும்பொருட்டுத் துருக்கி நாட்டு அரசர் விசேஷ முயற்சிகள் செய்வதுடன் பின்வரும் லாபகரமான உத்தரவும் செய்திருக்கிறார்:—

(1) கைத்தொழிற்சாலை முதலியவைகள் ஏற்படுத்துவதற்கு வேண்டிய நிலங்கள் இனாமாய்க் கொடுக்கப்படும்.

(2) நிலம் கொடுக்கப்பட்ட நாள் முதல் மூன்று வருஷங்களுக்குள் கட்டிடங்கள் கட்டி வேலை ஆரம்பிக்கப்படவேண்டும்.

(3) வருகிற 15 வருஷங்களுக்கு எவ்வித வரியும் அந்தக் கட்டிடங்களுக்கு விதிக்கப்பட மாட்டாது.

(4) சுதேசக் கைத்தொழில் அபிவிர்த்தியின் பொருட்டு யந்திரங்கள் முதலிய சாமான்கள் அந்நிய தேசங்களிலிருந்து வரவழைக்கப்பட்டால் அவைகளுக்குத் துறைமுகவரி விதிக்கப்பட மாட்டாது.

(5) கைத்தொழிற்சாலை ஸ்தாபிப்பவர்களுக்கு அரசாட்சியால் இன்னும் அநேக உதவிகள் செய்யப்படும்.

(6) துருக்கியில் உண்டாகும் பொருள்களிலிருந்து சாமான்களைச் செய்யும் கம்பெனியார் மற்ற தேசங்களிலிருக்கும் விலையில் நூற்றுக்குப் பத்து வீதம் அதிகமாய் விற்கக்கூடியதாகச் செய்வார்களானால் அவர்களுக்கு அரசாட்சியார் உபகாரஞ் செய்வார்கள்.

COTTON TRADE IN LANCASHIRE.

லங்காஷைரில் பருத்தி வியாபாரம்.—இங்கிலாந்திலுள்ள லங்காஷைரில் பருத்தி நூல் வியாபாரம் சென்ற 1909-ம் வருஷத்தில் குறைந்ததுபோல எந்த வருஷமும் அவ்வளவு குறைந்ததில்லையாம். நூல் நூற்கும் 82 கம்பெனிகளில் 68 கம்பெனிகளுக்கு நஷ்டமாம். 14 கம்பெனிகளுக்கு மாத்திரம் லாபமாம். எல்லாக் கம்பெனிகளுக்கும் சேர்ந்து சுமார் 36 லக்ஷம் ரூபாய் நஷ்டம் ஆயிருக்கிறதாம். அநேக கம்பெனிகளில் 'ரிஸர்வ் பண்டு' அதாவது, முன் வருஷங்களில் லாபத்திலிருந்து மீத்துச் சேர்த்து வைக்கப்பட்ட பணத்திலிருந்துகூட அதிகமாய்ச் செலவழித்திருக்கிறார்களாம். அப்படிப்பட்ட ரிஸர்வ் பண்டிலிருந்தே பல கம்பெனிகள் போன வருஷம் லாபம் பகிர்ந்து கொடுத்தார்களாம். சில கம்பெனிகளில் கையிருப்பே இல்லாமல் பெருத்த நஷ்டமாம்.

SEASON.

கால ஸ்திதி.

◆

RAINFALL.

மழை.—ஏப்பிரல் ௴ 1-தேதியிலிருந்து மார்ச்சு ௴ 19-ம்தேதி முடியப் பெய்தமழை அளவும்; இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், கீழே அங்குலத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	29	48
வால்டேர்	35	44
காக்கிநாடா	34	40
மசூலிப்பட்டணம்	37	41
நெல்லூர்	28	31
மதராஸ்	42	50
கடலூர்	35	53
நாகப்பட்டணம்	24	56
பாம்பன்	32	39
கொழும்பு	63	89
திருவநந்தபுரம்	69	62
கொச்சி	97	116
கள்ளிக்கோட்டை	127	115
மங்களூர்	146	124
மெர்க்காரா	137	126
ஐதராபாத்	29	32
ரெய்ச்சூர்	26	31
பல்லாரி	19	20
கர்நூல்	19	28
கடப்பை	42	33
ஹாஸ்ஸான்	42	35
பெங்களூர்	39	35
கொடைக்கானல்	57	60
உதகமண்டலம்	61	..
கோயம்புத்தூர்	22	21
வேலூர்	59	..
சேலம்	51	40
திருச்சிருப்பள்ளி	33	33
புதுக்கோட்டை	38	..
மதுரை	50	33
திருநெல்வேலி	27	23

CROPS AND MARKET REPORT.

பயிர்களும் மார்கெட் நிலவரமும்.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—பிப்ரவரி ௴ 19-தேதியிலிருந்து மார்ச்சு ௴ 19௳ வரையில் அந்நிய தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி சாமான்களின் விவரம்.—நூலும், முறுக்கு நூலும் 5,28,800 ராத்தல், காரிக்கத்துணிகள் 16,81,712 கஜம், சலவைத்துணிகள் 13,23,783 கஜம், இதர நிறுசுத்துணிகள் 21,35,824 கஜம். இதே காலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 18,785 அந்தர் துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். மார்ச்சு மாஸம் 22-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூல் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-0 வரையில் இருந்ததாகத் தெரிய வருகிறது.

CAUSES OF HIGH PRICES.

விலை ஏற்றத்தின் காரணங்கள். இந்தியாவில் விலைவாசியின் ஏற்றம் பின்வரும் காரணங்களால் உண்டாயிருக்கிறதென்று இந்தியா மாகாணத்தின் அக்கவுண்டெண்டு ஜனரல் சொல்லுகிறார். அடியில் கண்ட காரணங்களில் ஒவ்வொன்றினாலேயோ, சேர்க்கையினாலேயும் உயர்ந்திருக்கிறது. அவையாவன:—மழையில்லாமை, நாணயங்களின் பழக்கமில்லாமை, நாட்டுக்குத் தேவையாயுள்ள தானியங்களைக்கூட வெளியேற்றிவிடல், கோதுமையை வெளியேற்றிவிடல், கூலி வீதங்கள் அதிகமாயிருப்பது, அயல் நாட்டு சாமான்களை அதிகமாகத் தருவித்தல், அயல் நாட்டு முதல் இந்த நாட்டுக்கு விசேஷமாக வந்திருப்பது, ரயில்வே விர்த்தி, அயல் தேச விலை உயர்த்தி.

RICE CROP.

நெல் பயிர்.—சென்னை ராஜதானியில் ரயத்துவாரிக் கிராமங்களில் இது வரையில் 7,462,200 ஏகராவில் நெல் சாகுபடியாயிருக்கிறதாம். இந்த விஸ்தீரணத்தில் பட்டணம் படி 32 கொண்ட மூட்டையாக 44,788,100 மூட்டை அரிசி கிடைக்கக்கூடியது. ரயத்துவாரி அல்லாத இதரக் கிராமங்களில் 503,000 ஏகரா சாகுபடியாயிருப்பதாகவும், அதிலிருந்து 4,000,000 மூட்டை அரிசி கிடைக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற பிப்ரவரி மாஸம் 19-ந்தேதிமுதல் மார்ச்சு மாஸம் 19ம் தேதி வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 63 அந்தரும், ஆஸ்டீரியா ஹாங்கேரியிலிருந்து 500 அந்தரும் ஜாவாவிலிருந்து 2812 அந்தரும் இறக்குமதியாயின.

Supplement to the "Practical Life"

"பிழைக்கும் வழி"க்கு அனுப



KNGAYA M BULLOCKS.

காங்கேயம் காளைகள்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.

G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

---

30 JUN 19
MADRAS.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. எ. வைத்தியராமன், பி.எ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.
EDITOR.

புஸ்தகம் 2.
Vol. 2.

ஸாதாரண௵ சித்திரைமீ —APRIL 1910.

ஸஞ்சிகை. 4.
No. 4.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.			அந்நிய நாடு.		
வருஷம் 1க்கு ..	4	0	0 ..	6	0	0
6 மாதத்திற்கு ..	2	0	0 ..	3	0	0
தனிப்பிரதி ..	0	6	0 ..	0	8	0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்படவேண்டும்.

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க மரியாதை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸமும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டில் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட், மதராஸ்.

Practical Life.

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland.				*Foreign.*		
	Rs.	A.	P.		Rs.	A.	P.
Per annum ...	4	0	0	... ...	6	0	0
,, half year ...	2	0	0	... ...	3	0	0
Single copy ...	0	6	0	... ...	0	8	0

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers Messrs. G. A. Vaidya Raman & Co., 10, Esplanade, Madras.

EDITORIAL NOTES.

பத்திராதிபர் குறிப்புகள்.

◆

Feeding the Child.

குழந்தைகளுக்கு கஞ்சி போட்டுதல்.—குடித்தன ஸ்திரீகளுக்குள்ள முக்கியமான பொறுப்புக்களில் குழந்தைகளை வளர்ப்பது ஒன்று. ஆனாலும் அநேகம் ஸ்திரீகளுக்கு பெற்ற குழந்தைகளை வளர்க்கவே தெரியாது. பிறந்த ஒருவருஷத்தில் ஜ்வரத்தாலும். மாந்தத்தாலும் கட்டியாலும் இன்னும் பலவியாதிகளாலும் அளவற்ற குழந்தைகள் செத்துப்போவதே நாம் சொல்வதற்கு முக்கிய ஸாட்சி. குழந்தைகளுக்கு உண்டாகும் வியாதிகளெல்லாம் அநேகமாய் ஆகாரம் சரிவரப்போடாததினாலேயே என்று சொல்லலாம். குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு கஞ்சி போட்டவேணும், எத்தனை தடவை போட்டவேணும் என்ற விஷயம் அனேகம் தாயார்களுக்குத் தெரியாது. சாதரணமாய் குழந்தை பிறந்த ஒரு வாரத்துக்கு இரண்டு மணிக்கு ஒரு தடவை கஞ்சி போட்டவேண்டும். கஞ்சி தடவைக்கு ஒரு அவுன்ஸுக்கு மேல் போட்டக்கூடாது. ஒரு வாரத்துக்கு மேலே ஆறு வாரம் வரையில் இரண்டரை மணிக்கு ஒரு தடவை போட்டவேணும். அப்பொழுது 1½

முதல் 2 அவுன்ஸ்வரையில் போட்டலாம். ஆறு வாரத்துக்குமேல் பன்னிரண்டு வாரம் வரையில் இரண்டரை மணிக்கு ஒரு தரமே போட்டலாம். ஆனால் அப்பொழுது கஞ்சியை ஜாஸ்திப்படுத்தி 3 முதல் 4 அவுன்ஸ் வரையில் போட்டவேணும். குழந்தைகளுக்கு 6 மாஸமானதும் 3 மணிக்கு ஒரு தடவை 6 அவுன்ஸ் போட்டவேணும். 10 மாஸமானதும் 4 மணிக்கு ஒரு தடவை 8 அவுன்ஸ் போட்டவேணும். இப்படிக்கு மட்டும் செய்து வந்தால் குழந்தைக்கு அனேகமாய் வியாதி வராது.

Dry Cultivation.

புஞ்சை சாகுபடி.—அநேக இடங்களில் போதுமான அளவு ஜலம் இல்லாமையினால் புஞ்சை நிலங்களை சாகுபடி செய்யாமல் தரிசாய்ப் போட்டு வைக்கிறார்கள். நம்முடைய ராஜதானியில், ஜலம் தானாய்ப்பாயக் கூடிய வசதிகள் இல்லாமல் போனாலும், ஒரு இடத்திலாவது, மழை பெய்யாமல் போவதில்லை. அநேக தேசங்களில், முக்கியமாய் அமெரிக்காவில், ஒருவித பாசன சௌகரியமுமில்லாமல் அப்பப்போ பெய்யும் அற்ப மழையைக்கொண்டே, புஞ்சைப் பயிர்செய்து, நல்ல லாபம் சம்பாதித்து வருகிறார்கள். பெய்கிற மழைவழிந்து ஓடிவிடாமல் நிலத்திலேயே சுவறும்படி செய்யவேண்டும். இப்படி ஆவதற்கு மழைவருவதற்கு முன்னாலேயே நிலத்தை நன்றாய் உழுது தவிடு பொடியாக்கி வைக்கவேண்டும். இப்படிச் செய்துவைத்தால் அந்த நிலத்தில் பேயும் மழை ஜலம் அதிலேயே சுவறிப்போம். பிற்பாடு நிலத்தில் பெய்தமழை நீராவியாய்ப் போய்விடாமல் தடுக்கவேணும். ஆகையால் மழை பெய்தவுடனே மேல் மண்ணை உழுது போட்டுவிடவேண்டும். இப்படிச் செய்தால், பூமியில் இறங்கின தண்ணீர் மேல்நோக்கிவந்து நீராவியாய்ப் போய் விடாமல் உழுதுபோட்ட மண்ணின் கீழ்வரைக்கும் வந்து அவ்விடத்திலேயே தங்கியிருந்து பயிருக்கு ஈரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும். இந்த ஈரமே அநேகம் பயிர்களுக்குப் போதுமானது. ஆகையால் ஜலமில்லாத கஷ்டத்தை நீக்க அடிக்கடி நிலத்தை உழுது மழை ஜலத்தின் ஈரத்தைக் காயவிடாமல் பார்த்துக் கொள்ள வேணும்.

Village Schools.

கிராமப்பள்ளிக் கூடங்கள் :—நம்முடைய ராஜதானியில் பொதுவாய் படிப்பு விஷயங்களை கவனித்துவருவதற்காக “கௌன்ஸில் ஆப் நேடிவ் எஜுகேஷன்” என்று சொல்லப்பட்ட ஒரு சங்கம் இருக்கிறது. இந்தச் சங்கத்தார், “டிஸ்ட்ரிக்ட் போர்டு” களைக் கொண்டு அங்கங்கேயுள்ள கிராமங்களில் கமிட்டிகள் ஏற்படுத்தி, அந்தக்கமிட்டிகளைக் கொண்டு, கிராமங்களில் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து, அவைகளைப் பரிபாலித்துவர ஏற்பாடு செய்யவேணுமென்றும், அந்த மாதிரியாகத் தாங்களே, செங்கல்பட்டு ஜில்லாவில் பரீக்ஷார்த்தமாய்ச் செய்ய உத்தேசித்திருப்பதாகவும், அதற்காக 600 ரூபாய் கொடுத்து உதவவேணுமென்றும் போனவருஷத்தில் கவரன்மெண்டாருக்கு எழுதியிருந்தார்கள். கொஞ்ச வருஷங்களுக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட, “டீ ஸெண்ட்ரலைஸேஷன் கமிஷன்” என்று சொல்லப்படும் “அதிகாரப் பிரிவினைக்கமிட்டியார்” கிராமநிர்வாகவிஷயமாய், பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தி, அந்த பஞ்சாயத்துக்களுக்கு, கிராமப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதிலும் அவைகளைப் பரிபாலிப்பதிலும் அதிகாரம் கொடுக்கலாமென்று கவரன்மெண்டாருக்கு யோசனை சொல்லியிருக்கிறார்கள். இந்த விஷயங்களைப்பற்றி, கவரன்மெண்டார் யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம். ஆகையினாலே, மேலே சொல்லிய சங்கத்தார் கேட்டுக் கொண்டபடி உத்தரவு செய்யவாவது அல்லது ரூபாய் கொடுக்கவாவது முடியாதென்று கவரன்மெண்டார் சொல்லிவிட்டார்கள்.

OFFICE OF
REGISTERED
30 JUN 1910
MADRAS.

The Frog Trade.

தவளை வியாபாரம்.—ப்ரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களில், ஜனங்கள் தவளைகளைத் தின்கிறார்களென்றும், ஆகையால் இந்தியாவில் தவளைகளை வளர்த்து அவைகளை ஏற்றுமதி செய்யலாமென்றும், போன ஆவணி மாஸத்து ஸஞ்சிகையில்சொல்லியிருக்கிறோம். ப்ரான்ஸ் தேசத்தில் இந்தத் தவளை வியாபாரம் வெகு பலமாக இருப்பதாகத் தெரிகிறது. வருஷம் ஒன்றுக்கு 5 கோடி தவளைகள் வளர்க்கப்படுகின்றன இங்கிலாந்துக்கு ஏற்றுமதியானவைகள் போக, பாக்கித் தவளைகளெல்லாம், ப்ரான்ஸ் தேசத்திலேயே செலவாகி விடுகின்றன. தவளைகளை வளர்ப்பதற்காகப் பெரிய குட்டைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இரவில்தான் தவளைகளைப் பிடிப்பது வழக்கம். சிறுபையன்கள், தாரில் நனைத்த பந்தங்களை ஏற்றிக்கொண்டு, ஒரு வரிசையாக நெடுக நிற்பார்களாம். இந்த வெளிச்சத்தைப் பார்த்து தவளைகள் குதித்துக்கொண்டு வெளிச்சத்தின் கிட்டே வரும். பந்தம் பிடித்துக்கொண்டிருக்கும் பையன்கள் பக்கத்தில் சிலபேர்கள் வலையை வைத்துக்கொண்டு காத்துக் கொண்டிருப்பார்கள். தவளைகள் குதித்து வந்ததும், வலையைப்போட்டு, தடவை ஒன்றுக்கு 25, 30 மேனிக்குப் பிடித்துவிடுகிறார்கள். தவளையின் கால்கள் அநேக விதமாக சமையல் செய்யப்படுகின்றனவாம். நல்ல கொழுத்த கால்களாயிருந்தால் டஜன் ஒன்றுக்கு 4½ ரூபாய் வீதம் விலை போகுமாம்.

Village Administration.

கிராம பரிபாலனம் :—நம்முடைய தேசத்தில் கிராமந்தான் ராஜாங்க அரசாக்ஷிக்கு அஸ்திவாரமாயிருக்கிறது. சில்லரை உத்தியோகஸ்தர்கள் தொந்தரவு இல்லாமல் கிராமபரிபாலனத்தை செம்மைப்படுத்தினால் ராஜாங்க அரசாக்ஷி ஒருவித கஷ்டமும் இல்லாமல் நடக்குமென்பது நம்முடைய தேசத்து நண்பராகிய திவான் பகதூர் ஆர். ரகுநாதராவ் அவர்களுடைய அபிப்பிராயம். இது விஷயமாக ராயரவர்கள் போன ஜூலை மாஸத்தில் மதராஸ் கவரன்மெண்டாருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் லங்கையில் கிராமப் பஞ்சாயத்தைப்பற்றிய சட்டத்தில் செய்யப்பட்டவைகள் போன்ற ஏற்பாடுகளை நம்முடைய தேசத்திலும் செய்தால் நலமாக இருக்குமென்று சொன்னார். லங்கைத்தீவில் உள்ள சட்டத்தின் விவரங்களை போனவருஷத்து மார்ச்சு மாஸத்துப் “பிழைக்கும் வழி” யின் 100வது பக்கத்தில் விவரமாய் எழுதியிருக்கிறோம். லங்கையில் சுமார் 30 முதல் 50 வரையில் கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து அவைகளுக்கெல்லாம் ஒரு கமிட்டியும், அந்தக் கமிட்டிக்கு அக்ராஸனாதிபதியாக ஸர்க்கார்ச் சம்பளம் வாங்கும் ஒரு தலைவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய ராஜதானியிலும் இப்படிச் செய்தால் பண்டைக்காலம் முதல் வழங்கிவரும் கிராம ஸ்தாபனங்கள் அழிந்து போய் விடுமென்றும், ஆகையால் அப்படிச்செய்வது ராயரவர்கள் அபிப்பிராயமாயிராது என்றும் கவரன்மெண்டார் பதில் எழுதிவிட்டு, கிராமபரிபாலனத்தைச் சீர்படுத்துவதில், தங்களுக்கு ஸர்வ ஸம்மதமென்றும் அது விஷயமாக கொஞ்சகாலத்திற்கு முன் நியமிக்கப்பட்ட “டீ ஸெண்ட்ரலைஸேஷன் கமிஷன்” என்று சொல்லப்படும் அதிகாரப் பிரி

வினைக் கமிட்டியார் சில யோசனைகள் சொல்லியிருப்பதாகவும் அவைகளை சீக்கிரத்தில் யோசித்து கிராம பரிபாலனத்தை சீர்திருத்தும்படியான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

The Encroachment Act.

என்க்ரோச் மெண்டு ஆக்டு:—கவரன்மெண்டாருக்கு அனுப்பிய கடிதத்தில் 1905-ம் வருஷத்து 3வது ஆக்டாகிய "லாண்டு என்க்ரோச்மெண்டு" அதாவது நில ஆக்ரம ஆக்டைப்பற்றியும் ராயரவர்கள் எழுதியிருந்தார். இந்த ஆக்டு அனாவசியமென்றும், பொது நிலங்களை தாராக்ருதமாய்க் கட்டிக் கொள்ளுகிறவர்களை ஏற்கனவே உள்ள பினல்கோடு, கிரிமினல் ப்ரொஸீஜர் கோடு, இந்தச் சட்டங்களைக்கொண்டு தண்டிக்கலாமென்றும் எழுதியிருந்தார்.

1311ம் பஸலி முதல் 1317ம் பஸலி வரையில் பொதுநிலங்களில் ஆக்ரமித்ததற்காக விதிக்கப்பட்ட தண்டத்தீர்வை பின்வருமாறு.

		மொத்த தண்டத் தீர்வை வரவு. ரூபாய்	சராசரி வுகர் ஒன்றுக்கு ஏற்பட்ட தண்டத் தீர்வை ரூபாய்.
பஸலி	1311	3,76,283	8
,,	1312	4,01,068	7
,,	1313	4,16,269	8
,,	1314	3,60,149	8
,,	1315	3,41,305	7
,,	1316	3,47,551	10
,,	1317	3,96,211	8

என்க்ரோச்மெண்டு ஆக்டினால் நிலக்காரர்களுக்கு அதிகத்தொந்தரவு இல்லையென்று கலெக்டர்கள் கவரன்மெண்டுக்கு எழுதியிருக்கிறார்களாம். இந்த ஆக்டு ஏற்படுவதற்கு முன்னால் வசூலான தண்டத்தீர்வையைவிட ஜாஸ்தி தண்டத்தீர்வை விதிக்கப்படவில்லையென்றும், எப்பொழுதும் ஜனங்கள் துராசை கொண்டே பொது நிலங்களில் ஆக்ரமிப்பதாகச் சொல்லமுடியாதென்றும், ஆகையால் ராயரவர்கள் சொல்லுகிறபடி அவர்களை க்ரிமினல் குற்றத்துக்கு உள்ளாக்கி தண்டிப்பது ஜனங்களுக்கு ரொம்ப அத்ருப்தியை உண்டு பண்ணுமென்றும், கவரன்மெண்டார் பதில் சொல்லியிருக்கிறார்கள். பொதுஜன சௌகரியத்துக்காக ஏற்பட்டிருக்கும் நிலங்களை ஒருவரும் ஆக்ரமிக்காமல் பார்த்துக்கொள்ளுவது கிராமத்தார்களுடைய கடமையே ஆகும். கிராமத்தார்கள் மட்டும் இது விஷயத்தில் கவனம் செலுத்திவந்தால் "லாண்டு என்க்ரோச்மெண்டு ஆக்ட்டு" போன்ற சட்டங்களைச்செய்து கவரன்மெண்டார் புகுந்து நடவடிக்கையை நடத்த இடமிராது. பொதுஜன நன்மையை நாடும் குணம் எல்லா இடங்களிலும் இல்லாததால் அப்படிப்பட்ட விஷயங்களை கவரன்மெண்டார் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. அநேக கிராமங்களில் வயல்களின் வரப்பு ஒழுங்காயில்லாததினால் சில இடங்களில் குடிகள் தெரியாமல் ஸர்க்கார் நிலத்தில் அரை அடி அல்லது ஒரு அடி சேர்த்து நட்டுவிடுவதுண்டு. இப்படிப்பட்ட கேஸுகளில் நிலக்காரன் கர்ணனை விரோதித்துக் கொள்ளாமல் அவருக்குள்ள வருஷவர்த்தனையைத் தவறாமல் கொடுத்துவரும் பக்ஷத்தில் யாதொரு பாதகமும் ஏற்படுவதில்லை. இப்படிக்கில்லாமல் கர்ணனை விரோதித்துக் கொள்ளும் பக்ஷத்தில் அவர் தவறி நட்டது "என்க்ரோச்மெண்டு" என்பதாக தண்டத் தீர்வைக்கு கொண்டுவந்து விடுவார். இப்படிப்பட்ட சில்லரைத்தொந்தரவுகளினாலேயே "என்க்ரோச்மெண்டு" ஆக்டினால் ஜனங்களுக்கு கவரன்மெண்டாரிடத்தில் அதிக அத்ருப்தி உண்டாகிறது. ஆகையால் பொது ஜனங்களுக்கு ரொம்ப சங்கடம் உண்டாகுமென்று ஏற்பட்டாலொழிய கிராமங்களில் அங்கங்கே உள்ள துண்டு நிலங்களை பக்கத்துப் பட்டாதார்களுக்குக் கொடுத்து தீர்வைக்குக் கொண்டு வந்து விடவேணும். பொது ஜனங்களுக்கு அஸௌகரியம் ஏற்படுமானால் என்க்ரோச்மெண்டான நிலத்தைக் கர்ணனைக்கொண்டு என்க்ரோச்மெண்டு செய்தவனுக்கு நோட்டீஸ் கொடுக்கச் செய்யவேணும். கூடுமானால் நேரிலேயும் காண்பிக்கச்செய்யவேணும். இப்படிச்செய்த பிறகும் ஆக்ரமித்த நிலத்தைக் காலி செய்யாவிட்டால்மட்டும் மடங்கு அபராதம் போடவேணும். இப்படிச் செய்தால் ஜனங்களுக்கு கவரன்மெண்டு பேரில் "என்க்ரோச்மெண்டு" ஆக்டினால் உண்டாகும் பாதி அத்ருப்தி நீங்கிவிடும்.

Water Rate on Plantains.

வாழைக்குத் தண்ணீர்த் தீர்வை:—1900—ஆம் வருஷத்து 5 வது ஆக்டாகிய தண்ணீர்த் தீர்வைச் சட்டப்படிக்கு ஒரு பயிருக்கு ஸர்க்கார் ஜலாதாரத்திலிருந்து தண்ணீர் நேரில்பாயாமல், ஊறிப்பாய்ந்தாலும் தண்ணீர்த்தீர்வை விதிக்கலாம். ஊற்றத்தினால் பாயும் தண்ணீருக்குத் தீர்வை விதிப்பது நியாயமல்ல என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள் என்று ரகுநாதராயர் அவர்கள் கவரன்மெண்டாருக்கு எழுதியிருந்தார். ஆனால் ஊற்றுத்தண்ணீரால் பயிருக்கு ஸாதகப் படும்பொழுது ஏன் தண்ணீர்த் தீர்வை கொடுக்கக் கூடாதென்று கவரன்மெண்டார் சொல்லுகிறார்கள்.

ஸர்க்கார் ஜலத்தினால் பயிருக்கு ஸாதகமாகும் பக்ஷத்தில் தீர்வை கொடுக்கவேண்டியது நியாயந்தான். அநேகம் பயிர்களுக்கு ஸர்க்கார்ப்பாசனமில்லாமல் ஸ்வாமிகொடுக்கும் மழையே போதுமானது. ஆகையால் தீர்வை விதிப்பதற்கு முன்பு ஸர்க்கார் ஜலத்தினால் பயிருக்கு நன்மை உண்டாயிற்றென்று தீர்மானிக்க வேண்டியது அவசியம். இப்படிச்செய்வதில் தான் அபிப்பிராயபேதம் உண்டாகி தண்ணீர்த் தீர்வை விஷயத்தில் கவரன்மெண்டாரிடத்தில் ஜனங்களுக்கு அத்ருப்தி ஏற்படுகிறது. உதாரணமாக, தஞ்சாவூர் ஜில்லாபோன்ற இடங்களில் ஆற்றோரத்துப்படுகைகளில் வெகுகாலமாக வாழை சாகுபடியாகிவந்தது. வாழை நன்றாய்வளர்வதற்கு ஜலம் பாய்ச்சுவது அவசியமென்றும், ஆற்றிலுள்ள ஜலம் பக்கத்துப் படுகைகளில் ஊறி வாழைக்கு உபயோகப்படுகிறதென்றும் சொல்லி, கவரன்மெண்டார் தீர்வை வசூல் செய்கிறார்கள். குடிகளோ, வாழை நன்றாய்வளர்வதற்கு ஜலமே வேண்டியதில்லையென்றும், ஜலமில்லாமல் நத்தங்களில் வெகுசெழிப்பாய் வாழை வளர்வதே அவர்கள் சொல்வதற்கு முக்கிய ருஜுவென்றும், வாழைக்கு ஜலம் வேண்டியதில்லையென்பதல்லாமல் ஜலம் தங்கினால் வாழைக் 'கல்லுளி' தாக்கிப்போகிறதென்றும் சொல்லுகிறார்கள். வாழை விஷயத்தில் இவ்வளவு அபிப்பிராய பேதமிருப்பதாலும் தண்ணீர்த்தீர்வை ஏற்பட்ட பிறகு தஞ்சாவூர் ஜில்லா முதலான இடங்களிலுள்ள ஆற்றுப்பக்கங்களில் வாழை சாகுபடி வெகுவாய் குறைந்துவிட்டபடியாலும், கவரன்மெண்டார், வரும்படியைமட்டும் யோசிக்காமல், குடிகள் ஸௌகரியத்தையும் யோசிக்கவேணும்.

விவசாயிகள் ஸுகமாய் ஜீவனம் செய்வதற்கு வேண்டிய ஸாதகங்கள் நான்கு. முதலாவது சாப்பாட்டுக்கு வேண்டியது நெல்லோ அல்லது வேறு தானியமோ. இரண்டாவது தானியம் விளையும் வயல்களை உழுவதற்காகவும், ஜீவனத்திற்கு வேண்டிய பால் நெய், மோர், முதலியவைகளைக் கொடுப்பதற்காகவும், மாடுகள் அவசியம். மூன்றாவது, வீடுகள் கட்டுவதற்கும் பயிர்களை ஆடுமாடு

கள் சேதப்படுத்தாமல் வேலி கட்டுவதற்கும் மூங்கில் அவசியம். நான்காவது ஒவ்வொரு குடித்தனத்தாரும் கறியாகவோ, காயாகவோ, இலையாகவோ, பழமாகவோ, வாழையை உபயோகிக்காமல் ஜீவிப்பது கஷ்டம். ஆகையால் மேலேசொல்லிய நாலு அம்சங்களிலும் கவர்ன்மெண்டார் குடிகளுக்கு எவ்வளவு அநுகூலம்செய்யலாமோ அவ்வளவும்செய்து, வாழைக்குத்தண்ணீர்த் தீர்வை போட்டிருப்பதினால் தஞ்சாவூர் போன்ற ஜில்லாக்களில் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தியை நீக்கிவிடுவார்களென்று நம்புகிறோம்.

Petty Crimes in Villages.

கிராமங்களில் சில்லரைக் குற்றங்கள்.—கிராமாந்தரங்களில் ஒருவருக்கொருவர் அவதூறு பேசுவது, அடித்துக்கொள்ளுவது, வாழைத்தாரு திருடுவது, ஆகிய இப்படிப்பட்ட சில்லரைக் குற்றங்கள் நடப்பது ஸகஜம். இந்தக் கேஸுகளில் கிராமமுனிஸீப்பிடத்தில் சொல்லிக் கொள்ளும் பட்சத்தில் அவர் விசாரித்து தண்டனை விதிக்க அவருக்கு அதிகாரமுண்டு. ஆனால் அனேக கிராம முனிஸீப்புகள் இப்படிப்பட்ட கேஸுகளை விசாரிப்பதே இல்லை. அப்படி விசாரித்தாலும் திருட்டுப்போன வாழைத்தாரை தன் உபயோகத்துக்கு பிடுங்கிக்கொண்டு திருடினவனை விட்டு விடுவார்கள். இதனால் கிராமத்தார்களும் கிராம முனிஸீப்பினிடத்தில் போய் முறையிட்டுக்கொள்ளுவதில் பிரயோசனமில்லையென்று தங்களுக்குப் பொறுக்கமுடியாத கேஸுகளைக் கொண்டு போய் ஸப்-மாஜிஸ்ட்ரேட்டினித்தில் கம்ப்ளெயிண்ட் கொடுப்பார்கள். இப்படிக்கிராம முனிஸீப்புகள் சரிவர தங்கள் தொழிலை நடத்தாததினால் ஸப்-மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு வேலை அதிகப்படுகிறது. கிராமத்தார்கள் சில்லரைக் குற்றங்களை அந்தந்த கிராம முனிஸீப்புகளிடத்தில் தெரிவிக்கவேணுமென்றும், அப்படித்தெரிவித்தபிறகு கிராம முனிஸீப்புகள் சரிவர நடவடிக்கை நடத்தாத பக்ஷத்தில் தனக்குத்தெரிவித்தால்தான் அப்படிப்பட்ட முனிஸீப்புகளைக்கண்டிப்பதாயும் கோயம்புத்தூர் கலெக்டர் ஒரு நோட்டீஸ் போட்டிருக்கிறார். இப்படிக்கே இதரஜில்லா கலெக்டர்களும் செய்தால் கிராமங்களில் சில்லரைத் திருட்டுகள் ஓய்ந்துவிடும்

Single Planting

ஒற்றை நாற்றாக நடுதல்:—தஞ்சாவூர் ஜில்லா சாலிய மங்கலத்துக்கடுத்த இரும்புத்தலை எம். எஸ். சூரியநாராயண அய்யர் எழுதுகிறதாவது:—" தஞ்சாவூருக்கு வடகிழக்கில் 6 மைல் தூரத்திலுள்ளகொத்தங்குடி என்னும் கிராமத்தில் பெரியஸாமி அய்யர் என்னும் மிராசுதார் சென்ற 1909௵ ஜூலை௴ முதல் தேதியில் 34 ஸெண்டு நிலத்தில் நெல்லூர்ச் சப்பாளை நெல்விதை 12 படி விட்டு 45வது நாளில பறித்து 4 ஏகர் 34 ஸெண்டு நிலத்தில் ஏகர் 1க்கு 6 பள்ளத்தி வீதம் விட்டு ஒற்றை நாற்றாய் நட்டார். ஏகர் 1-க்கு பட்டணம்படி 1440 வீதம் கண்டுமுதல் செய்திருக்கிறார். ஏகர் 1க்கு செலவு, எரு, கிடை, உழவு, நடவு, களை, பறி எல்லாக்கூலியுமாக ரூபா 12 அணா 7 பைஸா 6 வீதமாகிறது. ஷை நிலத்தில் பயிர் 6¼ அடி உயரமிருந்தது. ஷை பயிர் உயரமில்லாமலிருந்தால் இதைப்போல் இன்னும் ஒரு பங்கு ஜாஸ்தி மாசூல் காணும். ஷை. நிலங்களுக்கு பசுந்தாள் உரம் போடவில்லை. பசுந்தாள் உரம் சேர்த்தால் ' ஜாஸ்தி மாசூல் கிடைக்குமென்று நிச்சயமாய்ச்சொல்லுவேன். ஷை மிராசுதார் இந்த வருஷத்தில் மேலே சொல்லியபடி 15 ஏகராவுக்குக் குறையாமல் நடப்போகிறார். இதே தினுசாக கும்பகோணம் தாலுக்கா, திருக்கருகாவூரில் கிழக்கு

மேற்கு லயனில் ஒரு அடிக்கும் தெற்குவடக்கு லயனில் நாலு அங்குலத்திற்கும் நூல்பிடித்து ஒரு அலகாக நட்டதில் பயிர் ஓங்காமல் ஏகர் 1க்கு 1800 படி கண்டுமுதலாயிருக்கிறது. இதற்கு 3 தடவை உரம் போடப்பட்டது. இதில் 2 தடவை எருவும், 1 தடவை வேப்பப் பிண்ணாக்கும் போடப்பட்டது. நட்டது 1 ஏகர் தான் செலவு ரூபா 16—12—0."

'பிழைக்கும் வழி' நேயர்களே !, ஒற்றை நாற்றாய் நடுவதைப்பற்றி ஒரு வருஷமாய் விடாமல் மாஸாமாஸம் எழுதியிருக்கிறோம். இப்பொழுதாவது இந்த விஷயத்தில் உங்களுக்கு சிரத்தை வந்திருக்கிறதா? பயம் நீங்கிவிட்டதா? ஒற்றை நாற்று நட்டுப்பார்த்துச்சொன்னவர்கள் அநுபோகங்களெல்லாம் இருக்கட்டும். வருகிற ஸாகுபடியில் உங்களுடைய நிலத்தில் இரண்டு குழியையோ நாலு குழியையோ ஒற்றை நாற்றாய் பரீக்ஷார்த்தமாகவாவது நட்டுப்பாருங்கள். இப்படிச் செய்வதில் உங்களுக்கு என்ன நஷ்டம் வந்து விடப்போகிறது? உங்களுடைய பயமாவது போகும். பிறகு தைரியம் பிறக்கும். அப்புறம், நீங்களே சொல்லாமல் செய்வீர்கள். இந்தக் காலத்தில் ஒற்றைக்காசு கிடைப்பது குதிரைக்கொம்பாயிருக்கிறது. ஒற்றை நாற்றாய் நட்டால் ஒரு தொந்தரவுமில்லாமல் ஏகர் ஒன்றுக்கு சுமார் ரூபாய் 5 மிச்சமாகுமே! இதைக்கொண்டு ஒருவர் கஷ்டமில்லாமல் ஒரு மாஸம் காலந்தள்ளலாமே!

Cattle Breeding.

மாடு வளர்த்தல் :—ஒரு மாடு, பால் கொஞ்சமாகக் கறப்பதும் ஜாஸ்தியாகக் கறப்பதும் அதனுடைய வர்க்க வழியைப் பொறுத்ததென்று "பிழைக்கும் வழியின்" முன் ஸஞ்சிகைகளில் சொல்லியிருக்கிறோம். ஆகையால் கறவைமாடுகளை அபிவிருத்தி செய்வதற்குத் தகுந்த காளைமாடுகளைக்கொண்டு பொலிய விடவேண்டும். நல்ல காளைமாடுகள் அங்குமிங்கும் ஒன்றிரண்டு அகப்படலாம். ஆனால் தேசமுழுவதும் மாடு வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதற்கு அவைகள் போதமாட்டா. இதை அறிந்து டென்மார்க் தேசத்தில் கூடும் மாட்டுச் சந்தைகளில் நல்லமாடுகளுக்கு "ப்ரைஸ்" அதாவது வெகுமதி கொடுக்கும் பொழுது ஒருமாட்டை மட்டும் வளர்க்கிறவனுக்குக் கொடுக்காமல் அநேக மாடுகளை வைத்துக் கொண்டு வளர்ப்பவர்களுக்குள் யாருடைய மாடுகள் திறமாயிருக்கின்றனவோ அப்படிப்பட்டவர்களுக்கு மட்டும், 1870ம் வருஷம் முதல் வெகுமதியைக் கொடுத்து வருகிறார்கள். பிறகு மேன்மையான காளைகளை சொந்தக்காரர்கள் சீக்கிரத்தில் விற்று விடாமல் வெகுநாளைக்குத் தங்களோடு வைத்திருக்க வேணுமென்ற எண்ணத்துடன், மேலே சொல்லியபடி, ஒருவனுடைய மாடுகள் வெகுமதி பெறவேணுமானால் 3-வயதுக்கு மேற்பட்டவைகளாயிருக்க வேண்டுமென்று ஒரு ரூல் செய்திருக்கிறார்கள். இன்னும் காக்ஷிகளுக்கு வரும் ஒருவனுடைய காளைகள் ஐந்து வயதுக்கு மேலானவைகளாயிருக்கும் பக்ஷத்தில் அவைகளுக்கு வெகுமதி கொடுப்பதற்கு முன்னால் அவைகளால் உண்டான கன்றுக்குட்டிகளைப் பரிசோதித்துப் பார்த்து அவைகள் நன்றாய் இருந்தால் மட்டும் வெகுமதியைக் கொடுத்துவருகிறார்கள். "டென்மார்க்கில்" மாடுகள் வளர்ப்பதற்கென்றே தற்காலத்தில் 1300 சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தச்சங்கங்களுக்குச் சொந்தமாக மொத்தத்தில் 1500 பொலிகாளைகள் இருக்கின்றன. ஆதிமுதல் இந்தச் சங்கத்தார் தங்கள் காளைகளை எல்லாப் பசுக்களோடும் பொலிய விடாமல் நல்ல பசுக்களோடு மட்டும் பொலிய

விட்டு வருகிறார்கள். தங்களுடைய பசுக்களில் சிலவற்றைப் பொறுக்கியெடுத்து அவைகளோடு வெகுமதி பெற்ற காளைகளைப் பொலியச் செய்யும் பக்ஷத்தில் காளை ஒன்றுக்கு வருஷம் 120 ரூபாய் வீதம் டென்மார்க் கவரன்மெண்டார் பண உதவி செய்து வருகிறார்கள். இந்தச் சங்கத்தார் வருஷம் ஒரு தடவை தங்கள் மெம்பர்களுடைய மாடுகள் நல்ல ஸ்திதியில் இருக்கின்றனவா என்று பார்த்தும் வரவேண்டும். இந்தச் சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள் ஒவ்வொருவரும் தம்முடைய பசுக்களுக்கு எவ்வளவு தீனி போடப்பட்டதென்றும், அவைகள் எவ்வளவு பால் கறந்தனவென்றும் குறிப்புகள் வைக்கவேண்டிய நிபந்தனை இருந்தது. இந்த நிபந்தனைப்படி மெம்பர்கள் நடப்பது வரவர முடியாமல் போனதினால், பசுக்களின் விஷயமாய்ச் சில சோதனைகள் செய்வதற்காக இந்தச் சங்கத்தார் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு உத்தியோகஸ்தரை நியமித்தார்கள். இந்த உத்தியோகஸ்தர் இரண்டு வாரம் அல்லது மூன்று வாரத்துக்கு ஒருதடவை மெம்பர்களுடைய பசுக்கள் இருக்கும் இடத்திற்குப் போய் ஒவ்வொரு மாடும் தினந்தோறும் எவ்வளவு பால் கறக்கிறதென்றும், அதில் எவ்வளவு சத்து இருக்கிறதென்றும், கணக்குக் குறித்துக்கொண்டு போய் விடுகிறார். இந்தக் கணக்குகளையெல்லாம் மேலே சொல்லிய சங்கத்தார் பார்த்து எந்தப்பசுக்கள் நல்லவைகளென்றும், எவைகள் உபயோகமற்றவைகளென்றும், காளைகளோடு எந்தப்பசுக்களை மட்டும் பொலியவிட வேணுமென்றும், ஏற்படுத்துவார்கள்.

நம்முடைய தேசத்தில் விவஸாயமே அநேக ஜனங்களுக்கு ஜீவாதாரமாக இருக்கிறது. விவஸாயத்துக்கு மாடுகள் இருக்கவேண்டியது அத்தியாவசியமென்று நாம் சொல்லவேண்டியதில்லை. மாடுகள் உயிரோடு இருக்கும்பொழுது வீட்டிற்கும் விவஸாயத்துக்கும் வெகுவாய் உதவியாயிருக்கின்றன. இறந்த பிறகும் அவைகளுடைய தோல், குளம்பு, மாமிசம் முதலியவைகள் பல கைத்தொழில்களுக்கு உபயோகப்படுகின்றன. ஆகையால் நம்முடைய தேசத்தில் ‘‘டென்மார்க்’’கில்போல மாடுவளர்த்துலாபம் சம்பாதிப்பதற்கு எவ்வளவோ இடம் இருக்கிறது.

நமக்குத் தெரிந்தவரையில் மாடுவளர்ப்பதையே ஒரு தொழிலாகச் செய்கிறவர் பாளையக்கோட்டைப் பட்டக்காரர். இவர் இந்த விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டு செய்வதுபோல செய்கிறவர்கள் இந்தியாவிலேயே இல்லை. காங்கேயத்து மாடு என்று சொல்வதுமுக்கியமாய் இவராலும்இவருடைய குடும்பத்தார்களாலுமட்டும் வளர்க்கப்படுகிறவைகள். இவர்கள் மந்தையில் 500 முதல் 1000 மாடுகள் வரையில் இருக்கும். அப்பட்டமான காங்கேயம் மாடுகள் இவரிடத்தில் மட்டும் கிடைக்கும். சிலபேர்கள் வைத்திருப்பதுபோல பட்டக்காரர் தம்முடைய மாடுகளை வைப்பதில்லை. இவர் எப்பொழுதும் மாடுகள் மேய்வதற்கென்றே ரொம்ப நிலத்தை ஒதுக்கிவைத்திருக்கிறார் இந்த நிலங்கள் வேலி அடைத்திருப்பதால் மாடுகளை, கடாரிகள் வேறாகவும், காளைகள் வேறாகவும், பிரித்து மறுபடி அவைகளை வயதுப்படி பிரித்து, மந்தைகளாகச் சேர்த்து வைக்கிறார். ஆகவே, கடாரிகளெல்லாம் ஒருமந்தை, காளைகளெல்லாம் ஒருமந்தை, பசுமாடுகளெல்லாம் ஒரு மந்தை ஆக இப்படிப் பலவிதமாக பிரிந்து நிற்கும். ஆகையால் காளைகளும் கடாரிகளும் வயதுக்கிரமம் இல்லாமலும் கண்டபடியும் பொலிய சாத்தியப்படாது. காலாகாலத்தில் இவர் பார்த்து கடாரிக்கன்று மந்தையில் தகுந்த காளை ஒன்றை மட்டும் சேர்த்துவிடுவார். இப்படிச்செய்வதால் உற்பத்தியாகும் கன்றுகள் திறமாகவே இருக்கும் என்பதற்கு கேட்பானேன்.’

EDUCATION

BY

THE HON'BLE DIWAN BAHADUR

R. RAGHUNATHA RAO, C. S. I.

படிப்பு.

மதங்கள் பலவாய் இருந்தபோதிலும் புஸ்தகங்கள் வேறு வேறாய் இருந்தபோதிலும் அவைகளில் கண்டிருக்கிற முக்கிய கட்டளைகள் மிகுதியும் ஒன்றாகத்தான் இருக்கின்றன. அவைகளாவன:—தன் சௌக்கியத்தையும் இதரர்களுடைய சௌக்கியத்தையும் ஒன்றாகப் பார்க்கவேண்டும்; கட்டளைக்குட் பட்டு இருக்கவேண்டும்; தெய்வபக்தி செய்யவேண்டும்; இவைகளுக்கு விருத்வமாய் நடக்கக்கூடாது என்பதுதான். இந்த முக்கிய கட்டளைகளைப் பாலியம் முதல் போதிக்க வேண்டியது முக்கியமான வித்தியாப்பியாஸமாய் இருக்கிறது. இவைகளை ஸம்பாதிக்க அனுகூலமாயிருக்கிற எல்லாக் காரியங்களும் கல்விச்சாலைகளில் போதிக்கப்படவேண்டும். இவ்ற்றிற்காக் அதிக சொல்பமான வார்த்தைகளில் முக்கியமான சங்கதிகளைத் தெரியும்படியாக புஸ்தகங்கள் ஏற்படுத்தி அவற்றில் கண்டிருக்கிற சங்கதிகள் சரியென்று நம்புகிற வாத்தியார்களைக் கொண்டு மாணாக்கர்களுக்குப் போதிக்க வேணும். இப்போதிருக்கிற வித்தியாசாலைகளில் இப்படிச் செய்யாமல் போனதைக் கண்டு அனேக தேசங்களில் வெகு தீங்குகள் உண்டாயிருக்கின்றன எனத் தெரியவருகிறது. அந்தந்த தேசத்தார் இந்தத் தீங்குகளை நிவர்த்தி செய்துகொள்ள எத்தனம் செய்துகொண்டுவருகிறார்கள். ஆனால் அவைகளினாலே விசேஷ பரிகாரம் உண்டானதாகத் தெரியவில்லை. நம்முடைய தேசத்திலும் இப்பேர்க்கொத்த எத்தனங்கள் நடந்து கொண்டுவருகின்றன. அவைகளை விர்த்தி செய்து நம்முடைய தேசத்திற்கு நன்மை உண்டாகும்படிச் செய்ய வேண்டியதற்கு எல்லாருடைய முயற்சியும் இருக்கவேண்டும்.

ஆர். ரகுநாதராவ்.

LIQUIDS AND THEIR PROPERTIES,

BY

S. GANAPATHI SUBRAMANYAN B. A.

Science Assistant, Findlay College, Mannargudi.

திரவப்பொருள்களும் அவைகளின் லக்ஷணங்களும்.

இரண்டு பாத்திரங்களை எடுத்துக்கொள்வோம். ஒன்றில் நிறைய மணலைப்போடுவோம். மற்றொன்றில் நிறைய தண்ணீரை வார்ப்போம். பிற்பாடு இன்னும் கொஞ்சம் மணலை எடுத்துக்கொண்டு மணல் பாத்திரத்தில் கொஞ்சம் கொஞ்சமாய்ப் போடுவோம். என்ன ஆகிறதென்றால் பாத்திரத்தின் விளிம்பிற்கு மேல் மணல் குவியலாய் நிற்கக்காண்கிறோம். அதே மாதிரியாக இன்னுங் கொஞ்சம் தண்ணீர் எடுத்துக்கொண்டு தண்ணீர்ப் பாத்திரத்தில் வார்ப்போம். முன் மணற் குவியலைப்போல் இப்போது ஜலம் குவிந்து நிற்கிறதா? இல்லை. கொஞ்ச ஜலம் வார்த்தால் விளிம்பிற்குமேல் தண்ணீரானது வழிந்து ஓடுவதைப் பார்க்கிறோம். தவிர, பாத்திரத்திற்குள்ளிருக்கும் ஜலத்தின் மேல்மட்டம் மேடுபள்ளமில்லாமல் ஒரே ஸமனாய் நிற்கக் காண்கிறோம்.

இன்னும் ஒரு பரீக்ஷை பார்ப்போம். சிறு குழந்தைகள் தீர்த்தம் குடிக்கும் ஒரு கிண்டியை எடுத்துக் கொள்வோம். இந்தக் கிண்டிகளில் அனேகமாய் எல்லாவற்றிற்கும் மூக்கின் மட்டம் கிண்டியின் வாயின் மட்டத்திற்குக் கீழேயே இருக்கும். இந்தக் கிண்டியில் ஜலத்தை வார்ப்போம். என்ன ஆகிறது? கிண்டியின் வாய் வழியாய் விடுகிற ஜலம் மூக்கிலும் பாய்ந்து கிண்டியிலுள்ள ஜலமும் அதன் மூக்கிலுள்ள ஜலமும் ஒரே ஸமமட்டமாயிருக்கும். கிண்டியின் வாயில் ஜலத்தை விட்டுக்கொண்டே போனால் மூக்

இலும் ஜலம் ஏறிக்கொண்டேவந்துகடைசியில் மூக்கின் மட்டத்திற்கு மேல் கிண்டியில் ஜலம் விட்டால் அப்படிவிடும் ஜலம் எல்லாம் மூக்கின் வழியாய் வழிந்து ஓடி விடுகிறது.

ஆகவே இந்த இரண்டு பரீக்ஷைகளிலும் தண்ணீர் எப்போதும் ஸமமட்டத்தை அடைகிறது. இதை நாம் ஓடுகிற தென்கிறோம். தண்ணீர் ஓடுவதினால்தான் அதை திரவப்பொருள் என்கிறோம். மணலானது ஒரு குவியலாய் நிற்கும்; அது அப்படியே எத்தனைகாலம் வேண்டுமானாலும் நிற்கும். ஆகவே மணலுக்கு ஸமமட்டத்தை அடையும் திறமை இல்லை. ஸமமட்டத்தையடையுந்திறமை எப்போது இல்லையோ அப்பொழுது அதற்கு ஓடுந்திறமையில்லை. எப்போது ஓடுந்திறமையில்லையோ அப்போது அது திரவப்பொருள் ஆகமாட்டாது.

இன்னும் நாம் கீழே கிடக்கும் ஒரு கல்லை எளிதாய்ப் பொறுக்கலாம். அந்த மாதிரியாகவே தண்ணீரைப் பொறுக்கி எடுக்கமுடியுமா? முடியாது. ஏனென்றால் நம்முடைய கைகளின் இடுக்குகளின் வழியாய் ஓடிவிடும். இதனாலேயல்லவா தண்ணீரை பாத்திரங்களில்வைக்கிறோம்? அந்தப் பாத்திரங்களில் சிறு துவாரங்கூட இருக்கக்கூடாது. இருந்தால் அதின் வழியாய் ஜலம் ஒழுகியோடிவிடும்.

ஒரு பாத்திரத்திலுள்ள தண்ணீரை மற்றொரு பாத்திரத்தில் ஊற்றுவதை எல்லாரும் பார்த்திருக்கிறோம். தண்ணீர் பாதிநிறைந்த பாத்திரத்தை மெதுவாய்க் கொஞ்சம் சாய்த்தாலும் போதும். தண்ணீர் விளும்பின் வழியாய் ஓடுகிறது. அந்த மாதிரியாகப் பாதி நிறைந்த மணல் பாத்திரத்தை சாய்த்தால் மணல் விளும்பின் வழியாய் ஓடாது. தண்ணீர் மாத்திரம் ஓடுவதற்குக் காரணம் என்னவென்றால் அதற்கு குவிந்து நிற்கும் சக்தியில்லை. எப்போதும் மட்டத்தையே அடையுந் திறமையினால் லகுவில் ஓடிவிடுகிறது.

மேலும் ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்தபோது தண்ணீர் கீழ் நோக்கிச் சென்றதேயொழிய மேல் நோக்கிச் செல்லவில்லை. அந்த மாதிரியாகவே மழைபொழிகிறது. பொழிந்து ஓடுகளில் விழுந்து, பின்பு ஒன்றுசேர்ந்து கீழே விழுகிறதேயொழிய மேல் நோக்கிச் செல்லுகிறதில்லை. ஏனென்றால் ஜலம் எப்போதும் தாழ்ந்த சமமட்டத்தையடைகிறதென்றுசொன்னோம். இப்போதும் சமமட்டத்தையடைவது வாஸ்தவமே. இன்னமும் எவ்வளவு தூரம் தாழ்ந்த சமமட்டத்தை அடையக்கூடுமோ அவ்வளவு தூரம் தாழ்ந்த சமமட்டத்தையுமடைகிறது.

இன்னும், ஒரு பாத்திரத்தில் ஜலத்தை விடுவோம். ஜலம் கொஞ்சங்கொஞ்சமாய் பாத்திரத்திற்குள் எல்லா இடத்தையும் அடைத்துக் கொள்ளுகிறது. இப்போது ஜலத்தின் உருவம் என்ன? பாத்திரத்தின் உருவமாகவே இருக்கிறது. மற்றொரு பாத்திரத்தில் மணலைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் போடுவோம். மணலானது தண்ணீரைப் போல் சமமாய்ப் பரவிக்கொள்ளாமல் நடுவில் ஒரு குவியலாய் நிற்கக்காண்கிறோம். ஆகவே பாத்திரத்தின் உருவத்தை மணல் அடைகின்றதில்லை. தண்ணீரை சீசாவில் ஊற்றுவோம். தண்ணீர் சீசாவின் உருவத்தை அடைகிறது. ஒரு குழாயில் ஊற்றுவோம், குழாய் வடிவை அடைகின்றது. ஆகவே தண்ணீருக்கு உருவமில்லை. அது எந்தப் பாத்திரத்தில் வைக்கப்படுகிறதோ அந்தப் பாத்திரத்தின் வடிவத்தையேஅடைகிறது.

எஸ். கணபதி சுப்பிரமணியன்.

PRESENT POSITION OF AGRICULTURE

BY

S. VYTHILINGAM PILLAI.

தற்கால விவசாய நிலைமை.

◆

ஆதிகாலத்தில மிராசுதாரரும் படித்த வகுப்பாரும் ராஜாங்கத்தாரும் மற்றெந்தத் தொழில்களிலும் விவசாயத்தை மதித்துத் தங்களால் கூடியவரையில் அது முன்னுக்கு வர பாடுபட்டு வந்ததால் நம்முடைய விவசாயம் செழிப்படைந்திருந்தது. ராஜாங்கம் ஆங்கிலேயர் கைக்குட்பட்ட சென்ற ஒரு நூறு வருஷங்களாக இது மதிப்பாரில்லாமல் தாயில்லாப் பிள்ளையைப்போலாகி விட்டது. எந்தத் தொழிலாயிருந்தாலும் சாஸ்திரத்தோடு கூடிச்செய்தாலல்லாமல் அது முன்னுக்கு வருவது பகற்கனவேயாகும். சாஸ்திரத்தை ஆராயக்கூடியவர்களாகிய படித்தவகுப்பாரும் பெரியமிராசுதார்களும்விவசாயத்தைமுழுவதும் அலக்ஷியம் செய்வதோடு நில்லாமல் அதைச் செய்வோர்களாகிய கிருஷிகர்களையும் நாகரிகமில்லாதவர்களென்று எண்ணித்தமது வேலையாள்களுக்கும் கீழாகப் பாவிக்கிறார்கள். தேசத்துக்காகப்பாடுபடும் காங்கிரஸ் போன்ற சபைகளில் விவஸாயத்தைப்பற்றி கவனிப்பது அத்திபூத்ததுபோலிருக்கின்றது. விவஸாயத்தைப்பற்றி கவரன்மெண்டாரிடம் மன்றாடும் விஷயங்கள் மலைபோலிருக்க அவைகளைக் கவனிக்கும் தேசாபிமானிகளைக் காணோம். தங்கள் விஷயத்தில் அவ்வளவாக கவனிக்காததால் காங்கிரஸ் முதலிய சபைகளுடன் விவஸாயிகள் பெரும்பாலும் சேர்வதில்லை. ராஜரீக விஷயங்கள் இவ்விதமிருக்கின்றன என்று ஏழைகளாகிய விவஸாயிகளுக்கு அநேகமாகத்தெரியாது. இதற்கெல்லாம் காரணம் தேசாபிமானிகள் விவஸாயத்தில் கவனியாததே. இதைத் தேசாபிமானிகள் அறிந்து அதன்படி நடவாதது விசனிக்கத்தக்கதாகும்.

முன்னொரு காலத்தில படித்தவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கிய தெய்வப்புலமை பொருந்திய திருவள்ளுவர் விவஸாயத்தினால் வாழ்பவர்களே சிறப்புள்ளவர்களென்றும் மற்றவர்கள் பிறர்பின்னோடிக்கெஞ்சி ஜீவிப்பவர்களாவார்களென்றும் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லார் தொழுதுண்டு பின் செல்பவர்." என்று தமது உத்திரவேதத்தில் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார். இவரைப்போலவே மற்றுமுள்ள சாஸ்திரிகளும் தங்கள் தங்கள் நூல்களில் சிறப்பித்திருப்பதோடு கௌரவமாயும் நடத்திவந்தால் அந்தக்காலத்துப் படிப்பாளிகளை இன்றைக்கும் நாளைக்கும் மதித்து அவர்கள் மொழியை பொன் மொழியாகப் போற்றுகின்றார்கள். இப்பொழுதோ என்றால் பெரிய உபகாரிகளால் பொது ஜனங்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட லைப்ரெரி, அதாவது, புஸ்தகசாலையில் போய்ப்பார்த்தால் ஆயிரக்கணக்கான புஸ்தகங்களுள் விவசாய விஷயமாய் ஒரு வரியாகிலும் காண்பது அருமையிலும் அருமை. இப்படிப் படித்த வகுப்பாருக்கும் விவசாயிகளுக்கும் இருந்த ஒற்றுமை தற்காலம் பிளவுபட்டுப்போக விவசாயத்துக்கு சாஸ்திரத்தைக் கற்ற புத்திவேண்டும். அந்த புத்தியும் கையும் கலந்து வேலை செய்ய வேண்டும் என்பதையே இந்திய விவசாயிகள் அறியக்கூடாமல் போய்விட்டார்கள். என்னுடைய வாஸஸ்தலமாகிய தஞ்சாவூர் ஜில்லாவைப் பார்ப்போமானால் மிராசுதார்களுக்கும் வயலில் வேலைசெய்யும் பண்ணை ஆள்களுக்கும் விவசாய விஷயத்தில் புத்தி ஒரே சமமாக இருக்கிறது. பரம்பரையாகத் தாங்கள் எவ்விதம் செய்தார்களோ அவ்

விதமே இப்போதும் செய்கிறார்கள். காலத்திற்கேற்றவிதமாய் மாற்றிச்செய்ய அவர்களுக்குத் தெரியவில்லை. மழையும், ஆற்றில் ஜலமும், நிலத்தில் இயற்கையாக உள்ள உரமும், அமோகமாக இருந்தகாலத்தில் எவ்விதம் செய்தார்களோ அவ்விதமே எல்லாம் பூச்சியமாயுள்ள இந்தக் காலத்திலும் செய்கிறார்கள். கண் மாசடைந்த ஒருவன் தன்னுடைய வீட்டுக்குள் தான் போகவர ஒருவாறாக அறிந்திருந்ததால் வெகு நாட்களாக வீட்டினுள் நடமாடிக் கொண்டிருந்தான். ஆனால் வீடானது நாளானதால் பழையதாகி இடிய ஆரம்பித்தது. இவனுக்குக் கண்தெரியாததால் வீட்டை ரிபேர் செய்யவேண்டுமென அறியாதவனாகி வழக்கம்போல் சும்மா இருந்துவிட்டான், வீடானது நாளடைவில் இடிந்து தரைமட்டமாகிவிடவே குடியிருக்க வீடில்லாது துர்ப்பாக்கியனாகிவிட்டான். இந்தத்துர்ப்பாக்கியவானைப்போலவே இந்திய விவசாயிகள் கலை என்ற கண் இல்லாதவர்களாக இருக்கையில் நாளடைவில் அவர்கள் வீடாகிய விவசாயமும் ஷை வீட்டைப்போலாகுமல்லவா? விவசாய வீட்டை ரிபேர் செய்யத்தக்க இஞ்சினீர்களாகிய படித்தவகுப்பார் விலகி நிற்பதற்குக்காரணம் ஆங்கிலேய சஹவாஸமென்று சொல்வது முழுவதிலும் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. ஏனென்றால் ஆங்கிலேயர் தங்கள் நாட்டில் விவஸாயத்தில் உழைப்பதை அளவிட்டு சொல்லமுடியாது. ஆங்கிலேய நாட்டில் கிருஷிசாஸ்திர கலாசாலைகளும் மாதிரிப்பண்ணைகளும் நூற்றுக்கணக்காக இருக்கின்றன. சோதனைப்பண்ணையை 18 விதவகுப்புகளுக்குமேல் பிரித்து காலத்திற்கேற்றபடி அப்போது பயன்படும் புதிய புதிய முறைகளைக்கண்டுபிடித்து பத்திரிகைகள் மூலமாகவும் துண்டுக்காகிதங்கள் மூலமாகவும் பிரசங்கங்கள் மூலமாகவும் அன்புடன் தெரிவிக்கிறார்கள். இதையே பெருந்தர்மமாகக் கொண்ட பலருள் ஸர் ஜான் லாஸ் என்ற துரை தம்முடைய சோதனைப்பண்ணைக்கு 40 ஏகரா நிலமும் ஆபீஸ்கட்டிடமும் இருப்பதோடு லக்ஷம் பவுன் மூலதனமும் வைத்திருக்கிறாரென்றால் அந்தப் பிரபுவின் உண்மையான பரோபகாரத்தை எந்த விதம் யாரால் சொல்லமுடியும்? ராஜரீகம், வர்த்தகம் முதலியவைகளில் தேசாபிமானிகள் பாடுபடுவது போலவே விவசாயத்திலும் அநேகர் தங்கள் ஆயுளையும் பொருளையும் செலவழிக்கிறார்கள். இவ்விதமிருக்க ஆங்கிலேய சஹவாஸமெனச் சொல்வது வெட்கம். நமது அறியாமையென்று சொல்வதேபொருத்தமாகும். எந்தக் காரணத்தாலோ விவசாயிகளுக்கும் படித்தவகுப்பாருக்கும் சேர்மானம் இல்லாமல்போக அதனால் ஏற்படும் நஷ்டத்தை மேலே சொன்னோம். தற்காலம் இந்தியாவானது விவஸாயத்தை விருத்தி செய்யும் தர்மத்தையே முதல் தர்மமாக நினைக்கிறது. இதை உணர்ந்த சிலர் விவஸாய தர்மத்தை விருத்தி செய்ய முன்வந்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டாரும் இதில் கவலைகொண்டவர்களென்று காட்டுகிறார்கள். அவை எல்லாம் இந்திய விவஸாயத்துக்குக் கடுகளவேயாகும்.

இந்தியா என்ற கொழுத்த பசுவிலிருந்து அநேக நூற்றாண்டுக் கணக்காய் யாதொரு சிரமமும் கவலையும் இல்லாமல் வேண்டும்பாலை வேண்டிய மட்டும் அருந்திவந்தோம். சிரமமில்லாமல் அருந்துங்காலம் போய்விட்டது. கொஞ்ச காலத்திற்குமுன் கூட கதிர் ஒரு முழம் இருந்ததாக சரித்திரங்களும் வயோதிகர்களும் சொல்லுகிறார்கள். இப்போது பயிர் ஒரு முழம் இருக்கின்றது. நிலத்திலிருந்து ஒரு கதிரையேனும் அதன் விலையின் ஒரு பாகத்தையேனும் அடையும் ஒவ்வொருவரும் தாங்களடையும் விதத்திற்கேற்றபடி திருப்பி அதற்குக் கொடாமல் போனால் நாளடைவில் விளைவு குறைந்து முடிவில் வரும் பரிதாபமான காலத்தை விரைவில் எதிர் பார்க்கலாம். ஆதலால் தங்கள் காலம், புத்தி, பொருள், முதலியவைகளைக் கொண்டு விவஸாயத்திற்கு எல்லாரும் காலத்திற்கேற்ற விதமாக உழைக்கவேண்டும். இதற்கு நாம் பின்னுக்கிழுப்போமானால் நம்மைவிடத் துர்ப்பாக்கியசாலிகள் உலகத்தில் எவருமில்லை.

எஸ். வைத்திலிங்கம் பிள்ளை.

OUR MERCHANTS & ADVERTISEMENTS

BY

D. NATESA AIYAR,

General Assistant, The Indian Bank Ltd.,

நமது வர்த்தகர்களும், சரக்குகளைப் பிரஸித்தி செய்தலும்.

நமது வர்த்தகர்கள் தாங்கள் செய்யும் அரிசி வர்த்தகமோ, மளிகை வர்த்தகமோ, அல்லது ஜவுளிவர்த்தகமோ, அதற்கு ஏற்படும் முதல் முழுமைக்குமே, சரக்கு வாங்கி வைக்கிறார்கள். அந்நியநாட்டு வர்த்தகர்களோ அப்படிச் செய்கிறதில்லை. அவர்கள் முதல் வைத்து வியாபாரம் செய்ய ஆரம்பிக்கும் பொழுதே, முதலின் ஒரு பாகத்திற்கு சரக்குகள் வாங்கி, பாக்கி முதலை அந்த சரக்குகளை ஸுலபமாய் விற்பதற்கு, அந்நிய நாடுகளுக்கு தங்கள் சரக்குகளின் மாதிரிகளோடு ஏஜண்டுகளை நியமித்து அனுப்புவதிலும், பத்திரிகைகளின் மூலமாய் லோகமெங்கும் தங்கள் சரக்குகளைப் பிரஸித்தி செய்வதிலும் செலவழித்து வருகிறார்கள்.

நம்மவர்களோ தங்கள் சரக்குகள் தளமாயிருப்பதினால் தானாகவே ஜனங்கள் அவைகளை வாங்குவார்களென்று நம்புகிறார்கள். மளிகை வர்த்தகத்திலுங்கூட சாமான்வாங்க வருபவர்களுக்கு "ஐயா இது திருப்பத்தூர் பருப்பு, ஜலத்தில் போட்டவுடனே வெந்து போம்", "இந்த நெய் தாட்பத்திரியிலிருந்து வந்தது, எப்படி மணக்கிறது பார்த்தீர்களா," என்று சரக்குகளின் உயர்வைப்பற்றிச் சொல்லவேண்டியது அவசியமாயிருக்கிறது. பூர்வகாலந்தொட்டு வழங்கிவரும் 'சரக்கு முடுக்கோ செட்டியார் முடுக்கோ" என்ற வசனத்தை நாமறிவோம். அந்த வசனத்தை அனுசரித்து, சரக்கு முடுக்காயிருந்தாலும், செட்டியார் முடுக்காய்ப்பேசுகிறதால், சரக்கு "நாணயமுள்ளதென்று, ஜனங்கள் நம்பி வாங்கிவருவதை நாம் பார்க்கிறோம். அது போலவே ஒவ்வொரு வியாபாரத்திலும் அந்தந்த வியாபாரிகள் சரக்கை மேன்மைப்படுத்தி வியாபாரம் செய்து வருகிறார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து முதலான தேசங்களில் வியாபாரிகள் அவரவர்கள் சரக்கை அதிகத்தீவிரத்தோடு மேன்மைப்படுத்தி பத்திரிகைகளில் பிரஸித்தி செய்வதில் பணத்தை விசேஷமாகச் செலவழிக்கிறார்கள். அப்படி செலவழிப்பதால், அவர்களுடைய சரக்குகளைப் பற்றின பிரஸ்தாபம் பல இடங்களில் பரவி, அவர்களுடைய சரக்குகள், நன்றாயிருந்தாலும் கெடுதலாயிருந்தாலும், ஏராளமாய் விலையாகி வருகின்றன. நாம் சென்னப்பட்டணத்தில் மவுண்ட்ரோட் என்று வழங்கிவரும் சாலையில் ஸ்தாபனமாகி நடந்து வரும் ரென்பென்னட், வைட்டவே லெயிட்லா, ஓக்ஸ் முதலான ஆங்கிலேய கம்பெனியார்கள் தங்கள் சரக்குகளை மோகமாய் விற்க சின்னம் சிறு துரைசானிகளை விற்பனை செய்வதற்கென்றே அமர்த்தி வைத்திருப்பதையும் அந்தக் கம்பெனிகளில் உள்ளே புகுந்த உடனே அந்தத் துரைசானிப் பெண்கள் நம்மை மரியாதையுடன் எதிர்கொண்டழைத்து பற்பல சாமான்களைக் கொள்ளவருகிறவர்கள் மனம்போலெல்லாம் காண்பிவித்து விநயமாய் விலை சொல்லி மோகமாய் விற்றுவருவதை நாம் பார்க்கிறோம். ஆகவே இங்கிலாந்து, அமெரிக்கா, ஜர்மெனி முதலான அந்நிய நாட்டு வியாபாரிகள் பிரஸித்திசெய்யும் வித்தையில் திறமையை விசேஷமாக அடைந்து விட்டார்கள். குண்டூசி போன்ற சிறு சாமான்களை மலையாகப்பெருக்கிக்காட்டும் சாமர்த்தியசாலிகள். அந்நிய நாட்டார்களுக்குள் இந்த வித்தையில் அமெரிக்கர்கள் அதிக சாமர்த்தியசாலிக

ளென்று பெயர் வாங்கி விட்டார்கள். லோகத்தில் மற்றவர்களும் அந்த வித்தையில் அவர்களை பின்பற்றவேணுமென்று சுட்டிக்காட்டும்படியான உன்னத ஸ்தானத்தை அடைந்தவர்களாயிருக்கிறார்கள்.

நம்மவர்கள், சித்திரவேலைகளிலோ, சில்பவேலைகளிலோ, நெசவுத்தொழில்களிலோ, இன்னும் இவைபோன்ற அற்புதக்கைத்தொழில் வித்தைகளிலோ, அந்நிய நாட்டார்களைவிட அதிசாமர்த்தியத்தோடு சாமான்களை செய்து முடித்தாலும், உட்கார்ந்து வியாபாரம் செய்யும் செட்டியாரின் முடுக்கான வார்த்தைகளில்லாமல் சரக்கு முடிக்கினால் மாத்திரம் எப்படி வியாபாரம் ஓங்கி நடக்கிறதில்லையோ, அதுபோல தற்காலத்திற்கு ஒத்தபடி சரக்குகளின் விமர்சையைப்பற்றி விஸ்தாரமாய்ப் பத்திரிகைகளின் மூலமாய் விசேஷசப் பணச்செலவிட்டு பிரஸித்திப்படுத்தினால் அல்லாமல், புத்தியுக்திகளால் செய்யப்பட்ட சரக்குகள் பலஇடங்களில் எல்லாஜனங்களாலும் வாங்கப்படமாட்டா.

அல்லாமல், இன்னென்ன இடங்களில், இன்னென்ன சரக்குகள் செய்யப்படுகின்றன என்றும், இன்னென்ன இடங்களில் அந்தச்சரக்குகள் விற்கப்படுகின்றன என்றும், பத்திரிகைகளின் மூலமாய் பிரஸித்தியாகத் தெரியவருவது போல வேறெந்த வழிகளாலும் தெரியவாராததால் நம்மவர்கள் ஏகதேசம் நவீன முறைகளை அனுசரித்து ஒருவாறு தங்கள் சரக்குகளைப் பத்திரிகைகளின் மூலமாய் பிரஸித்தி செய்து வருகிறார்களென்றாலும், அமெரிக்கர், ஜர்மானியர், முதலிய அந்நிய நாட்டார்களைப் போல விசேஷ ஆடம்பரத்தோடு பிரஸித்தி செய்வது அவசியமாகும்.

டி. நடேசய்யர்.

THE COCOANUT TREE.

BY

P. D. RATNAM PILLAI.

தென்னை மரம்.

◆

பூமி :—உப்பங்காற்றுள்ள மணல் சாரியும் ஆற்றுப்படுகையும் உரித்தானது. கடற்கரையோரங்களிலும் களிவாயிலும் இது சாகுபடி செய்யலாம். இது நஞ்சை புஞ்சை இரண்டிலும் நன்றாய் வளரும்.

பயிர் :—தென்னம்பிள்ளை சாற்றுகிற விஷயம் முன் ஒரு சஞ்சிகையில் எழுதியிருக்கிறோம். இப்பொழுது அது எவ்வாறு பயிர் செய்யப்படுகிறது என்பதைப்பற்றி சற்று எழுதுவோம் தஞ்சாவூர் ஜில்லாவின் பல பாகங்களிலும் கூடலூர் முதலிய பாகங்களிலும் பயிர் செய்யும் விதத்தைப்பற்றி எழுதுவோம்.

விஸ்தீர்ணம் :—இது பயிர் செய்வதற்கு ஒரு ஏகர் நிலம் எடுத்துக்கொள்ளுவோம்.

நிலம் செப்பனிடல் :—நிலத்தை நன்றாய் உழுது புல் பூண்டு முதலியவைகளைக் களைந்து விடல் வேண்டும். பிறகு 16 அடிக்கு ஒரு குழி விதம் மூன்றடி அகலம் மூன்றடி நீளம் 4 அடி ஆழமுள்ள குழிகள் வெட்டவேண்டும் குழி வெட்டி ஒருவாரம் மண் நன்றாய்க்காயும்படி விடவேண்டும். பிறகு ஒருபடி உப்பு, சப்பாத்திக்கள்ளி, அதன் அடிமண், மாட்டெரு, மீன் எரு முதலியவைகளால் மூன்றடி உயரம் குழியை நிரப்பவேண்டும். பிறகு குழிகளை மூன்று அல்லது நான்குவாரம் உலரப்போட்டு வைத்தல் வேண்டும். தென்னம்பிள்ளையை கறையான் அரிக்காமலிருக்கும் பொருட்டு ஒருசிறு கூடை சாம்பலாவது அல்லது மரச்சாம்பலாவது ஒவ்வொரு குழிக்கும் போடுவது மேன்மை.

காலம் :—தென்னம்பிள்ளை வைப்பதற்குத் தகுந்தகாலம் மழைகாலமே. ஆடிமீ தைமீ இந்த மாதங்களில் வைப்பது வழக்கம். சில இடங்களில் புரட்டாசி ஐப்பசி இந்த மாதங்களிலும் வைக்கிறார்கள்.

பிள்ளை வைத்தல் :—முன்னொரு சஞ்சிகையில் சொன்ன பிள்ளைகளை இந்தக்குழிகளில் நடவேண்டும். நட்ட பிறகு தினம் ஒரு வாரத்திற்குத் தண்ணீர் விடவேண்டும். பிறகு இரண்டு தினத்திற்கு ஒரு தண்ணீர் வேர் நன்றாய் இறங்குகிற வரையில் ஊற்றிக்கொண்டு வரவேண்டும். பிறகு ஐந்து வருஷம் வரையில் ஒரு வாரத்திற்கு ஒரு தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு வரவேண்டும். மழைபெய்த காலத்தில் குறைத்தும் மழை இல்லாத கோடைகாலத்தில் அதிகரித்தும் கொண்டுவருவது நல்லது.

வேறு சாகுபடி :—தென்னம்பிள்ளை வைத்த பிறகு அதற்கு இடை வெளியில் இரண்டு மூன்று வருஷம் வரைக்கும் வாழை, கரும்பு, கம்பு முதலியவைகளைச் சாகுபடி செய்கிறார்கள். இவ்வாறு செய்வதினால் பயிர் நன்றாய்க் கிளறப்பட்டு பூமி வளத்திலிருக்கிறது.

செய் நேர்த்தி :—பிள்ளை வளரவளர அதைச் சுற்றிலுமுள்ள புல் பூண்டு முதலியவைகளை நீக்கி கொத்திக்கொண்டு வரவேண்டும். மழைகாலத்தில் தென்னம் பிள்ளையைச் சுற்றிலும் இரண்டு அடி மூன்று அடி ஆழம் கொத்தி வேர்களைக்களைந்து முன் சொன்ன எருவை மண்ணுடன் கலந்து அடியில் அணைத்து மரத்தைச்சுற்றிலும் மழை ஜலம் வெளியே போகாதவண்ணம் வரப்புக் கட்டவேண்டும்.

வயது :—தென்னைக்கு வயது 100 வருஷம். ஆனால் 60 வருஷத்திற்கு மேல் தலை மாறிவிடுகிறது. முப்பது நாற்பது வயதான மரத்தை முதிர்ந்த மரம் எனச்சொல்லுகிறார்கள்.

காய்ப்புக்கு வருதல் :—நல்ல செய்நேர்த்தியுடன் தண்ணீர் தட்டில்லாமலும் இருந்தால் 5 வருஷத்தில் காய்க்கும். இல்லாவிட்டால் ஏழு அல்லது பத்து வருஷத்திலும் அதற்கு மேலும் காய்க்கும். கவனக்குறைவாக இருப்பதினால் சில மரங்கள் காய்க்காமல் அப்படியே நிற்கும். இதற்கு எல்லாம் காரணம் கவனக்குறைவே. எல்லாமரங்களும் கோடையில் பாளை விட்டுக்காய்க்கத் தொடங்கி அந்த காய்கள் மாரிகாலத்தில் முற்ற ஆரம்பிக்கும். ஒவ்வொரு மரத்திலும் வருஷந்தோறும் நூறு முதல். இருநூறு காய்கள் வரையில் காய்க்கும். நல்ல மரம் வருஷத்திற்கு மூன்று நான்கு தடவை காய் கொடுக்கும். நல்ல மரம் வருஷம் ஒன்றுக்கு 2 ரூபாய் பெறுமான தேங்காய் கொடுக்கும். மரவகையில் இவ்வளவு பலன் கொடுக்கக்கூடிய மரம் வேறில்லை.

உபயோகம் :—இதன் ஒவ்வொரு பகுதியும் உபயோகப்படுகிறது. அடி மரம் கட்டடங்களுக்கு உபயோகப்படுகிறது. மட்டையைக் கீற்றாக முடைந்து வீட்டுக்குக் கட்டுகிறார்கள். இதன் விலை 100க்கு ரூ 1-0-0 முதல் ரூ 1-12-0 வரையில் விற்கிறது. இதன் அடிமட்டை விறகாக உபயோகப்படுகிறது. இதன் ஓலை பாயாக முடைகிறதற்கும் உபயோகப்படுகிறது. தேங்காய் நமக்குப் பல விதமாய் உபயோகப்படுகிறது. இளநீர் பானத்திற்குச் சிறந்தது. முற்றின தேங்காய் எண்ணெய் எடுக்க உபயோகப்படுகிறது. 10 பவுண்டு தேங்காய் பருப்புக்கு 4 பவுண்டு எண்ணெய் கிடைக்கும். இது பலகாரம் சுடுகிறதற்கு மிகுதியாக உபயோகப்படுகிறது. எண்ணெயால் மெழுகுவர்த்தி சவுக்காரம் இவைகளும் செய்யப்படுகின்றன. மலையாளப் பக்கத்தில் ஸ்நானத்திற்கும் உபயோகிக்கிறார்கள். விளக்குக்கும் உபயோகப் படுகிறது. வெட்டுக்காயங்களுக்குத் தடவினால் குணப்படும். எண்ணெய் இரண்டு விதமாக எடுக்கப்படுகிறது.

(1) தேங்காய் நன்றாய் முற்றி உலர்ந்த பிறகு உடைத்து உள்ளே இருக்கும் பருப்பை எடுத்துத் துண்டு துண்டாக நறுக்கி ஒருவாரம் நன்றாய் காயவைத்து செக்கிலே போட்டு ஆட்டினால் எண்ணெய் புறப்படும். அதில் கிளம்பும் எண்ணெயைக் கந்தைத்துணியால் ஒற்றியெடுத்து ஒரு குடத்தில் பிழிந்து கொள்ள வேண்டும்.

(2) தேங்காயைத் துருவி வெந்நீர் தெளித்து நன்றாய்ப்பிசைந்து பால்பிழிந்து அதைக் காய்ச்சுவார்கள். காய்ச்சும்பொழுது தண்ணீரெல்லாம் ஆவியாகப் போகப்போக எண்ணெய் அடியில் தங்குகின்றது. இந்த எண்ணெய் அதிக இனிப்பானது. ஆனால் இதற்கு

அதிக நாள் இருக்கும் குணம் இல்லை. அதை உடனே உபயோகப்படுத்தி விடவேண்டும்.

பிண்ணாக்கு.—மாடுகளுக்கு உணவாகவும் நிலத்திற்கு எருவாகவும் உபயோகப்படுகிறது. இது ஜனங்களாலும் முருங்கைக் கீரையுடன் கலந்து சமையல் செய்து உபயோகப்படுத்தப்படுகிறது.

கொட்டாங்கச்சி.—அகப்பைக்கும் கிண்ணங்களுக்கும் உபயோகப்படுகிறது. இதை சிலர் மோதிரம் செய்து கையில் போட்டுக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் ஏழை ஜனங்களே. அடுப்பெரிக்கவும் உபயோகப்படுகிறது.

நார்.—தேங்காயை உரித்து மட்டையை எடுத்து இரண்டு மாசம் தண்ணீரில் அழுகப் போட்டுவைத்து பிறகு அதைக்கொட்டாப்பிடியினால் நன்றாய் அடித்து அதிலுள்ள சோறை நன்றாய் நீக்கி வெயிலில் செவ்வையாய்க் காயவைத்து எடுத்துக்கொள்ளல் வேண்டும். ஐந்து தேங்காயில் ஒரு ராத்தல் நார் அகப்படும். இது கயிறு, பாய், கோணி துடைப்பம் முதலான பொருள்களாகச் செய்யப்படுகிறது. மேற்குக் கடற்கரையோரமாய் உள்ள கொச்சி, கள்ளிக்கோட்டை முதலான இடங்களினின்றும் அபரிமிதமாய் இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகிறது. இதன் கயிறு அதிக உறுதி. உப்புத்தண்ணீரில் ஊறினாலும் மழையில் நனைந்தாலும் கெட்டுப்போகாது. இந்தக் காரணம் பற்றியே இந்தக்கயிறு கப்பலில் அதிகமாகக் கையாளப்படுகிறது.

கள்.—தென்னை மரத்தின் பாளையிலிருந்து கள் இறக்கலாம். பாளை புறப்பட்டு ஒரு மாதமானவுடனே அதில் அதிக ரசமூறுகின்றது. அப்பொழுது அப்பாளை இரண்டடி நீளம் மூன்று அங்குலம் கனமிருக்கும். அப்பொழுது அதைத் தென்னோலையால் இறுகக்கட்டி மலரவிடாமல் செய்து அதன் நுனியில் ஓரங்குலமளவு கத்தியால் அறுப்பார்கள். பிறகு சாணான் அதன் நுனியை அதனுள்ளிருக்கும் அரும்புகளெல்லாம் நன்றாய் நசுங்கி திரவமாக வடியும்படி தட்டுவான். பிறகு ஒரு நாரினால் அந்த முனையைக் கட்டுவான். இந்தப்படி சிலநாள் வரையில் பிரதிதினமும்காலை மாலை இரண்டுவேளையும் செய்து ஒவ்வொரு தடவையும் அதன் நுனியைச் சீவிக்கொண்டுவருவான். இவ்வாறு தயாராக சுமார் 15 நாள் வரையில் செல்லும். பிறகு அதன் நுனியினின்றும் கள் துளிப்பதனாலும், பறவைகள் கீச்சிடுவதாலும், சாணானுக்கு நன்றாய்த் தெரியவரும். அப்பொழுது ஒரு சிறு கலயத்தை அதன் நுனியில் கவிழ்த்து ரசம் கலயத்தில் விழும்படி ஒரு ஓலையை அந்தப்பாளையில் சொருகி அதன் மற்றொரு நுனியை பல்லாயில் விட்டுவைப்பான். கள் இறங்க ஆரம்பித்தவுடன் தட்டுவதை நிறுத்திவிடுவான். ஒரு பாளையிலிருந்து ஒரு மாதம் வரைக்குமே கள் வடிந்துகொண்டிருக்கும். ஒரு மரம் ஒரு வருஷத்தில் ஆறுமாதகாலமளவும் கள் கொடுக்கும். இதன் ரசம் நீரா என்னும் ஒரு தித்திப்பான மதுவாக உபயோகப்படுகிறது. அப்போது அது புளிக்காதபடி அது வைக்கும் குடத்தினுள் சுண்ணாம்பு பூசவேண்டும். இது மயக்கத்தைக் கொடுக்காது. இது புளிக்கும்படி செய்தால் மயக்கமுண்டாகும். கள்ளாக மாறி விடுகிறது. 24 மணி நேரத்தில் மிகுந்த மயக்கத்தைக் கொடுக்கும் குணமுள்ளது. கள்ளினால் சாராயம் செய்வதுண்டு. நான்கு புட்டிகள் ஒரு புட்டி சாராயமாக ஆகும். இதற்குக் கள்ளைப்பார்க்கிலும் மயக்கக் குணம் அதிகம். கள்ளினால் வெல்லம் செய்வதுண்டு. புளிக்கவைக்காமல் உடனே காய்ச்சவேண்டும். அதிலுள்ள நீரெல்லாம் ஆவியாய்ப் போக பாத்திரத்தில் ஒரு இனியவகைப் பாகு தங்குகின்றது. மறுபடியும் காய்ச்சினால் அதுவே வெல்லம். பத்துச்சேர் கள் காய்ச்சினால் ஒரு சேர் வெல்லமாகும். இந்த வெல்லத்தை எளிய ஜனங்கள் தின்பண்டங்களுடன் உபயோகப்படுத்துகிறார்கள். இதை வீட்டுக்கு வெள்ளைபூசச் சுண்ணாம்புடன் சேர்ப்பதுமுண்டு. இதனால் சம்மந்தப்பட்ட சுண்ணாம்பினால் பூசப்பட்ட சுவர் மிக வழவழப்பாயும் பளபளப்பாயும் இருக்கும்.

குறிப்பு.—நல்ல பூமியில் ஆயிரங்காய்ச்சி என்று ஒருவகைமரமுண்டு. அதாவது வருஷத்துக்கு 1000 காய் காய்க்கும். 700 காய் வரையில் ஒரு மரம் கொடுத்ததைக்கண்ணால் கண்டிருக்கிறோம். இது காவேரிக் கரையின் படுகைகளில் இருக்கிறது.

பு. து. இரத்தினம்பிள்ளை.

SELECTIONS.

விசேஷத் திரட்டு.

GREEN MANURING FOR WET LANDS

BY

MR. H. C. SAMPSON.

நன்செய்க்குத் தழை எரு இடுதல்.

இந்த ராஜதானி முழுமையிலும் உள்ள கிருஷிகர் மொச்சை பயறு முதலிய பருப்பு தினுசுச் செடிகளும் கொழுஞ்சி, ஆவாரை முதலிய கோதுப் பயிர்களின் தழைகளும் உரமாக (எருவாக) உபயோகப்படுகின்றன என்பதைப் பொதுவாய் அறிவார்கள். என்றாலும் உரத்திற்கென்றே வேறாய் விதைத்து வளர்க்கப்பட்ட ஒரு பயிரின் விலை மதிப்பு இன்னதென்று அநேகருக்குத் தெரியாது. அநேக கிருஷிகர் தங்கள் நன்செய் நிலங்களில் சம்பாவுக்குப் (பிசானத்திற்கு) பின்னும் கார் சாகுபடிக்கு முன்னும் ஏதாவது ஒரு பயறு தினுசை விதைத்து மாசூல் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் அப்படி விதைத்த பயறை உரத்துக்கென்றே அவர்கள் உபயோகப்படுத்துவது அபூர்வம். அந்தப் பயிர் தானியத்தை உடனே எடுப்பதற்காகச் செடிகளைப் பூராவாய் அறுவடைசெய்து களத்திற்குக் கொண்டுபோய் விடுகிறார்கள். மேலும் அநேக கிருஷிகர் கொழுஞ்சி, ஆவரை முதலாகிய கோதுச்செடிகளின் தழைகளை சேகரித்துக் கொண்டுவந்து நன்செய் நிலங்களில் போட்டு மிதிக்கிறார்கள். ஆனால் அந்த நன்செய் நிலங்களிலேயே மேல் சொன்ன கோதுச்செடிகளைப் பயிரிட்டு அதைத்தொழி (சேர்) ஆக்கும்போது அந்தச்செடிகளை மண்ணில் புதைய உழுதுவிடுவது அதிக லாபகரமானது என்னும் விஷயத்தை அநேகர் அறியார்.

இந்தவிஷயத்தில் ஒவ்வொரு கிருஷிகனும் இன்னின்னபடிதான் செய்யவேண்டுமென்று திட்டமாய் குறிப்பிடுவது கூடாத காரியம். அது அந்தந்த இடத்தின் சீதோஷ்ணத்தையும் காலஸ்திதியையும், மழைப்பதத்தையும், நிலத்தின் தன்மையையும் பொறுத்து இருக்கும். என்றாலும் அடியில் கண்ட பொதுவான குறிப்புகள் உபயோகப் படத்தக்கவை:—

ஜூன் ஜூலை மாசங்களில் சாரல் மழையின் உதவியினால் நன்செய் நிலங்கள் நடுகையாகும் ஜில்லாக்களில் மார்ச்சு ஏப்பிரல் மாசங்களில் கோடைமழை பெய்வது வழக்கமாயிருந்தால், ஏப்பிரல், மே என்னும் இந்த இரண்டு மாசங்களுக்குள் மழை ஆதாவினால் சீக்கிரத்தில் வளரக்கூடிய பயிர் ஒன்றை உண்டாக்கி நிலங்கள் தொழியாகும் சமயத்தில் அந்தப் பயிரை நிலத்தில் உரமாக உழுதுவிடக்கூடும். சடம்பு என்னும் சணல், அல்லது, காராமணி என்னும் பெரும்பயறு (தட்டப் பயறு) இவைகள் ஜாஸ்தியான பச்சைக்குழையை உண்டாக்கும். இவைகளை உபயோகிப்பதால் அதிகமான லாபத்தை நாம் அடையலாம். சடம்புக்காவது காராமணிப் பயறுக்காவது போதுமான மழை பெய்யவில்லையானால் அவைகளுக்குப் பதிலாக ஒருவேளை காணத்தை (கொள்ளை) விதைக்கலாம். ஆனால் அவ்வளவு ஜாஸ்தியான குழை இதில் கிடையாது. மழைகாலமாகிய அக்டோபர் நவம்பர் மாசங்களில் குளங்கள் பெருகின பிற்பாடு நிலங்கள் நடுகையாகும் ஜில்லாக்களில் மேற்சொன்னவைகளைத் தவிர வேறு கோதுச்செடிகளை உண்டாக்கலாம். பிப்ரவரி மாசத்தில் நெல் அறுவடை முடிந்த உடன் நிலத்தில் விதை முளைப்பதற்குப் போதுமான ஈரமிருக்குமாகில் உடனே அதை உழுது விதைத்துவிடலாம். இல்லையானால், மார்ச்சு, ஏப்பிரல் மாசங்களில் ஏதாவது மழை பெய்யுமாயின், அந்த மழையின் உதவிகொண்டு விதைக்கலாம். இப்படிச் செய்யவேண்டிய சந்தர்ப்பங்களில் நிலம் செப்டம்பர் அக்டோபர் மாசங்களில் தொழியாக்கும் காலம் வரையில் பச்சையாய் நிலத்தில் நிற்கக்கூடிய (நாள் பொறுத்து பூக்கக்கூடிய) தினிசுப்பயிர்கள் எவையோ அவைகளை விதைக்கவேண்டும். தண்ணீர் தாராளமாக வடிந்துபோகக்கூடிய இளக்கமான நிலங்களில் கொழுஞ்சி விதைக்கத்தகும். அவுரியை இந்தமாதிரி ஏகதேசம் பயிரிடுகிறார்கள். ஆனால் அதை எல்லாரும் பயிரிடலாம். நிலம் தண்ணீர் கட்டாமல் தாராளமாய் வடியக்கூடிய ஸ்திதியிலிருந்தால், களிப்பு நிலங்களிலும் அவுரி பயிரிடலாம். தண்ணீர் சாதாரணமாய் வடியக்கூடாத நிலங்களாயிருந்தால் அவைகளிலும் கூட பேய் அவரை உண்டாகும். ஆவாரை ஊசித்தகரை என்

னும் இவை போன்ற செடிகள் சுற்றுப்பக்கங்களில் காட்டுச்செடிகளா யுண்டாயிருக்குமானால் அவைகளையும் விதைத்துப் பார்க்கலாம். சாதாரணமாக அந்தக்காலத்தில் விதைமுளைப்பதற்கு மட்டும் போதுமான ஈரம் பூமியில் தங்கியிருக்குமாகையால் செடிகள் நன்றாய் உண்டாகும் பொருட்டு விதைக்குமுன் நிலத்தை ஆழமாய் உழுதுவைத்திருக்கவேண்டும். அந்த விதையானது சரியாய் மூடப்படும்படியான விதமாய் விதைப்பு உழவுநடத்தவேண்டும்.

நன்செய் நிலங்களில் குழைக்காக ஏதாவது ஒரு பயிர் செய்யவேண்டுமென்று சொல்லும்போது அதற்குக் கோடைமாசங்களில் கால் நடைகளுக்கு மேய்ச்சலுக்கு நன்செய் நிலங்கள் தரிசாயிருக்கவேண்டியது அவசியமென்று அநேகர் ஆக்ஷேபனை சொல்லுகிறார்கள். ஆனால் கால்நடைகளின் மேய்ச்சலுக்கு இது ஓர் தடையாயிராது. ஏனென்றால் மேற்சொன்ன செடிகளில் அநேகத்தைக் கால் நடைகள் தின்னா. இந்தக் குழைப்பயிர் முளைத்து நன்றாயுண்டான உடனே கால் நடைகளை அந்த வயல்களில் மேயவிடவும் செய்யலாம். வாஸ்தவத்தில் ஒரு நிலத்தில் குழைப் பயிரைக் கலப்பாய் வைத்திருந்தால் அதன் ஊடேயுண்டாகும் புல் சத்துள்ளதாயும் மேய்ச்சலுக்கு சிலாக்கியமானதாகவும் இருக்கும்.

தங்கள் நன்செய் நிலங்களில் இவ்வாறு தழைஎரு உண்டாக்கி உபயோகிக்கப் பிரயத்தினம் செய்யும் கிருஷிகரில் சிற்சிலர் ஆரம்பத்தில் அனுகூலமடையாமல் போவதுமுண்டு. என்றாலும் ஒரு தரம் பலனடையாமல் போனதால் அப்படிப் பலனடையாமல் போனதற்குக் காரணம் சாகுபடி செய்யும் முறையிலோ விதைவிதைக்கும் காலத்திலோ என்ன பிசகு இருக்கிறதென்று கண்டுபிடிக்கும் வரையிலாவது அல்லது அந்த நிலத்திற்கு இந்தப்பயிர்கள் ஒத்துவரும் வரையிலாவது, விடாமுயற்சியாய்ப் பயிரிட்டு வரவேண்டும்.

எச். வி. ஸாம்ப்ஸன்.

MADRAS PRODUCTS.
சென்னை விளைப்பயிர்கள்

நெல், இது கஞ்சம் முதலான ஏறக்குறைய எல்லா இடங்களிலும் முக்கியமாக அதிகத் தண்ணீருள்ள இடங்களில் விளைகின்றது.

கோதுமை, கர்நூல், கடப்பை, பல்லாரி, கோயம்புத்தூர், நீலகிரி முதலான இடங்களில் விளைகின்றது.

ஜவ்வரிசி, நீலகிரி, மலையாளம் ஜில்லாக்களில் கூந்தற்பனையில் விளையும்.

சோளம், கோதாவரி தவிர மற்றெல்லா இடங்களிலும் விளைகிறது. மக்காச்சோளம், திருச்சினாப்பள்ளி, மதுரை, திண்டுக்கல், வேலூர், பல்லாரி, பாலக்காடு முதலான இடங்களில் அதிகமாகவும், மற்ற இடங்களில் கொஞ்சமாகவும் விளைகின்றது.

கம்பு, இந்த ராஜதானியின் மேட்டாங்காடும் மணல் பாங்கான எல்லா இடங்களிலும் விளைகின்றது.

இராகி-கேழ்வரகு, மைசூர், மதனப்பள்ளி, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர், சித்தூர், மஞ்சக்குப்பம் முதலான ஜில்லாக்களில் விளைகின்றது.

தினை, பல்லாரி, கர்நூல், கடப்பை, கோயம்புத்தூர், முதலான இடங்களில் விளைகின்றது.

சாமை, வரகு, குதிரை வாலி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், திருச்சினாப்பள்ளி, சித்தூர், மஞ்சக்குப்பம் முதலான இடங்களில் விளைகின்றன.

கடலை, கர்நூல், கடப்பை, பல்லாரி திருச்சினாப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றக்கரிசல் நிலங்களிலும் விளைகின்றது.

துவரை, திருநெல்வேலி, திருச்சினாப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், செங்கல்பட்டு, கடப்பை, கர்நூல், பல்லாரி முதலான இடங்களில் விளைகின்றது.

மொச்சை, மதுரை, கர்நூல், கடப்பை, கோயம்புத்தூர், காஞ்சி, திருப்பதி, முதலான இடங்களில் விளைகின்றது.

பச்சப்பயிறு, உளுந்து, கர்நூல், கடப்பை, சித்தூர், கோதாவரி, முதலான இடங்களில் விளைகின்றன.

கொள், கல்லாங்க நாடுகளில் விளைகின்றது.

கத்திரி, எல்லா ஜில்லாக்களிலும் விளைகின்றது.

சேனைக்கிழங்கு, மலையாளம், சித்தூர், முதலான, இடங்களில் விளைகின்றது.

கருணை, சேலம், கரூர், திருச்சினாப்பள்ளி முதலானவிடங்களில் விளைகின்றது.

மரவள்ளி, கூடலூர், செங்கல்பட்டு முதலான இடங்களில் விளைகின்றது.

உருளைக்கிழங்கு, பெங்களூர், நீலகிரி முதலான இடங்களில் விளைகின்றது.

மஞ்சள், கோயம்புத்தூர், ஈரோடு, கர்நூல், கடப்பை, சித்தூர், கூடலூர், கோதாவரி, முதலான இடங்களில் விளைகின்றது.

மிளகாய், கோயம்புத்தூர், கோதாவரி, கர்நூல், பல்லாரி சேலம் முதலான இடங்களில் விளைகின்றது.

வெங்காயம், பல்லாரி, பெங்களூர், உதகமண்டலம், சேலம் கோயம்புத்தூர் முதலான இடங்களில் விளைகின்றது.

வெள்ளைப்பூண்டு, பல்லாரி, கர்நூல், கடப்பை, திருச்சினாப்பள்ளி, கோயம்புத்தூர், பல்லடம் முதலான இடங்களில் விளைகின்றது.

கொத்தமல்லி, பருத்தி கரிசல் பூமிகளில் விளைகின்றன.

சீரகம், கடப்பை, மைசூர், முதலான இடங்களில் விளைகின்றது.

மிளகு, மலையாளம், நீலகரி முதலான இடங்களில் விளைகின்றது.

இஞ்சி, மலையாளம், சென்னை முதலான இடங்களில் விளைகின்றது.

வெந்தியம், செம்மணல் கலந்த இடங்களில் விளைகின்றது.

ஏலம், ஆனைமலைகளிலும், திருவாங்கூர் மலைகளிலும் தானாக விளைகின்றது.

வாழை, மலையாளம், திருச்சி, தஞ்சை, கோதாவரி ஈரோடு, கரூர், கோயம்புத்தூர், கிருஷ்ணா, பர்லி ஆறு முதலான இடங்களில் விளைகின்றது.

முந்திரி, மலையாளம், செங்கல்பட்டு, தென் கூடலூர் முதலிய இடங்களில், விளைகின்றது.

திராக்ஷை, பெங்களூர், சேலம், கிருஷ்ணகிரி முதலான இடங்களில் விளைகின்றது.

மாதுளை, கோயம்புத்தூரைச் சேர்ந்த ஊற்றுக்குழி, திருப்பூர், பெருந்துறை, பெங்களூர், முதலான இடங்களில் விளைகின்றது.

எலுமிச்சை, கடப்பை, சேலம், மதுரை, திண்டுக்கல் முதலான இடங்களில் விளைகின்றது.

அன்னாசி, மலையாளம், நீலகிரி, பெங்களூர், முதலான இடங்களில் விளைகிறது.

பலா, மலையாளம் முதலான அதிக ஜலமிருக்கும் இடங்களில் விளைகின்றது.

மாமரம், கர்நூல், சித்தூர், மைசூர், பெங்களூர், சேலம், மலையாளம் முதலான இடங்களில் விளைகின்றது.

பாக்கு, மலையாளம், சேலம், கோயம்புத்தூர், முதலான இடங்களில் விளைகின்றது.

தென்னை, மலையாளம், கோயம்புத்தூர், தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி, செங்கல்பட்டு, கோதாவரி மற்றக் கடலோரங்களில் மணற்பாங்கான இடங்களில் விளைகின்றது.

கரும்பு, கோயம்புத்தூர், பல்லாரி, கர்நூல், கடப்பை, அநந்தப்பூர், கூடலூர், சித்தூர், சேலம், கோதாவரி, கிருஷ்ணா, நெல்லூர், திருச்சி, தஞ்சாவூர், முதலான இடங்களில் விளைகின்றது.

பனை, திருநெல்வேலி, செங்கல்பட்டு, சேலம், கோயம்புத்தூர் முதலான இடங்களில் விளைகின்றது.

ஈச்சை, கர்நூல், கடப்பை, பல்லாரி, மைசூர் முதலான இடங்களில் விளைகின்றது.

வேர்க்கடலை, கூடலூர், கரூர், மஞ்சக்குப்பம், செங்கல்பட்டு, சித்தூர், திருச்சினாப்பள்ளி முதலான இடங்களில் விளைகிறது.

எள்ளு, எல்லா ஜில்லாக்களிலும் விளைகிறது.

ஆமணக்கு, கோயம்புத்தூர், சேலம் முதலான மலையடுத்த இடங்களில் விளைகிறது.

பேய் எள்ளு, பல்லாரி. கடப்பையில் விளைகிறது.

ஆளி விதை, கர்நூல், பல்லாரியில் விளைகிறது.

நிலாவாரை, திருநெல்வேலியில் விளைகிறது.

புகையிலை, மதுரை, வேட செந்தூர், கோயம்புத்தூர், சேலம், சிவபுரி, கர்நூல், பல்லாரி, அநந்தப்பூர், கடப்பை, கோதாவரி இலங்கைத்தீவுகளில் விளைகிறது.

பருத்தி, சர்நூல், கடப்பை பல்லாரி, அநந்தப்பூர், கிருஷ்ணா, நெல்லூர், கோதாவரி, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம் முதலான இடங்களில் விளைகிறது.

சணல், கூடலூர் முதலான இடங்களில் விளைகிறது.

கத்தாழை, கர்நூல் கடப்பையில் விளைகிறது.

நீலம், அவுரி, கர்நூல், கடப்பை அநந்தப்பூர், கோதாவரி, கிருஷ்ணா, சித்தூர், செங்கல்பட்டு, கூடலூர், சேலம், திருச்சினாப்பள்ளி, முதலான இடங்களில் விளைகிறது.

குசும்பாவரை, கர்நூல், கடப்பை, திருநெல்வேலி, முதலான இடங்களில் விளைகின்றது.

புஷ்பங்கள், பெங்களூர், காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்பத்தூர், தஞ்சை, மதுரை, ஸ்ரீரங்கம் முதலான இடங்களில் விளைகிறது.

பழங்கள், கோயம்புத்தூர், ஆமம்பூர், சேலம், பெங்களூர், சாத்தூர், மேலூர், மேட்டுப்பாளையம், நீலகிரி, முதலான இடங்களில் விளைகிறது.

தேசாபிமானி.

JOINT STOCK COMPANIES.

ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகள்.

பஞ்சாப் மாகாணத்தில் லாண்டு ரிக்கார்டுடைரெக்டர் உத்தியோகம் வகிக்கும் மிஸ்டர் ஹாமில்டன், சமீபத்தில் நடந்த தொழிலாலோசனைச் சங்கத்தில் அம்மாகாணத்தில் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளின் அபிவிருத்தியைப்பற்றி ஒரு பத்திரிகை படித்தார். சென்ற 3 வருஷத்துக்குள்ளாக அந்த மாகாணத்தில் இந்தக் கம்பெனிகள் ஒன்றுக்கு இரண்டாய் அதிகப்பட்டிருக்கின்றனவென்றும், அவைகளின் விளம்பரப்படி மூலதனம் ஒன்றுக்கு மூன்றாயிருக்கிறதென்றும், ஆனால் செல்லான மூலதனம் நூற்றுக்கு 59-க்கு மேல் அதிகமாகவில்லையென்றும் சொன்னார். செல்லான மூலதனம் இவ்வளவு குறைந்திருப்பதற்குக் காரணம் இதுவரையில் இந்தக் கம்பெனிகள் நடத்தப்பட்டு வந்ததில் அவற்றை ஆரம்பித்தவர்கள் அயோக்கியர்களாயிருந்ததே முக்கியமென்று சொன்னார். இவர்கள் கம்பெனிகளை ஆரம்பிக்கும்போது தங்களுக்கும் தங்கள் பந்துக்களுக்கும் வரும்படி வேண்டுமென்ற எண்ணத்துடன் ஆரம்பிக்கிறார்களேயன்றி, அவைகளை ஸ்திரமாய் நடத்திப் பங்குக்காரர்களுக்காவது தேசத்துக்காவது நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணங் கொண்டு ஆரம்பித்தவர்களல்லவென்றும் சொன்னார். ரெஜிஸ்தர் செய்யப்படும் கம்பெனிகளின் கணக்குகளைத் தேர்ந்த ஆடிடர்களைக் கொண்டு சோதனை செய்யவேண்டும். இந்தியர்கள் இந்த முக்கியமான அலுவலை இங்கிலாந்திலாவது இந்தியாவிலாவது அறிந்தவர்களிடத்தில் கற்றுக்கொள்ளவேண்டும்.

தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, முதலான ஜில்லாக்களில் பண்டுகளை நானாவிதமான பெயர்களைக்கொண்டு ஏற்படுத்தி ஏழைகளுக்குப் பலவித ஆசைகளைக்காட்டி அவர்களுடைய பணத்தைப் பிடுங்கித் தாங்கள் சாப்பிட்டுவிட்டு, அவர்களை ஏமாற்றும் அயோக்கியர்களை நம் நேயர்கள் அறிவார்கள். இவர்களுடைய மோசத்தை யடக்கப் போதுமான சட்ட ஏற்பாடுகள் இப்போதில்லை. கம்பெனிகளை ஸ்தாபிக்க முன்வருவோர் தங்கள் விளம்பரங்களில் சொல்லுகிறபடி நிறைவேற்ற ஜாமீன் கொடுத்தாலன்றிக் கம்பெனிகளை ஆரம்பிக்கக் கூடாதென்று நிர்ப்பந்தமிருக்கவேண்டும். மிஸ்டர் ஹாமில்டன் சொன்னவாறும் சட்டம் செய்யப்படவேண்டும். ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளால் சொற்ப லரும்படியுள்ள ஏழைகளுக்கும் தொழில் செய்வோருக்கும் பலவிதமாய் நன்மை யுண்டாக்கக் கூடுமாயினும், அவைகள் மோசமில்லாமல் நடத்தப்பட்டாலன்றித் தீங்குகளே அதிகமாக உண்டாகும். பண்டுகளிலும் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளிலும் பணம் போடும் ஜனங்கள், அவைகளைத் தக்கபடி யோக்கியர்கள் ஆரம்பித்திருக்கிறார்களா என்று நிச்சயம் செய்துகொண்டு பிறகு பணம் போடவேண்டும். பணத்தைக் கொடுத்து விட்டு மாதமாதம் சந்தாவும் கொடுத்து பிறகுடைரெக்டர்கள் எது செய்தாலும் கவனிக்காமலும் மீட்டிங்குகளுக்குப் போகாமலும் அசட்டை செய்வது நம்மவர்களின் வழக்கம். இப்படிப்பட்ட ஜனங்களை ஏமாற்றிவிடலாமென்று மோசக்காரர்கள் துணிந்து முன்வந்தால் அது ஆச்சரியமல்ல.

DRAINAGE WATER UTILIZED TO ADVANTAGE.

சாக்கடை நீர் பயன்படும் விதம்.

குப்பைகளையெல்லாம் வண்டியிலேற்றி ஊருக்கு வெளியே கொண்டு போய்ச் சேர்த்து நிலங்களில் தூவலாம்; அல்லது ஜலசமுதாயங்களுக்கும் வீடுகளுக்கும் தூரமாயிருக்கும் பள்ளங்களில்போட்டு நிரப்பலாம். சாக்கடைகளின் மூலமாக ஊருக்கு வெளியே கொண்டுபோகிற அழுக்கு ஜலத்தை என்ன செய்கிறது ?

சாக்கடை ஜலத்தை ஊருக்கு வெளியே இருக்கும் நிலங்களில் பாய்ச்சலாம்; நன்செய் சாகுபடி செய்யும் நிலத்தில் பாய்ச்சுவதற்கு இஷ்டமில்லாவிட்டால் விளைவு குறைவாயிருக்கும் பிரதேசங்களில் பாய்ச்சிப் புல்லும் காய்கறிகளும் பயிரிடலாம்.

மண்ணில் அழுக்குக் கிருமிகள் என்பன இருக்கின்றன. அவை அழுக்கைத் தின்று ஜனங்களுக்கு அநுகூலம் செய்கின்றன. ஆதலால், அவைகளுக்கு ஸாதகக் கிருமிகள் என்று பெயர். சாக்கடை ஜலமானது பூமியின் கீழே ஊறிக்கொண்டு போகும்பொழுது அதிலுள்ள அழுக்குக்களையும் வியாதிக் கிருமிகளையும் மேற்சொல்லிய ஸாதகக் கிருமிகள் தின்று அவைகளை அபாயமற்ற வஸ்துக்களாக மாற்றுகின்றன. இது மாத்திரமே யல்லாமல் மண்ணிலுள்ள 'ஆக்ஸிஜன்' வாயுவும் செடிகளின் வேர்களும் சாக்கடை ஜலத்திலிருந்து நிலத்தில் படியும் அழுக்குக்களை நீக்குகின்றன.

அழுக்கைத் தின்னும் ஸாதகக்கிருமிகள் பூமியின் கீழ் ஒன்றரை அடி ஆழத்திற்குள் இருக்கின்றன. கிருமிகள் பெரும்பாலும் (முக்கால்வாசி) இந்த ஒன்றரை அடிக்குள்ளேயே இருக்கின்றன. கீழே இன்னும் ஆழமாய்ப் போகப்போக ஆறுஅடி மட்டும் கிருமிகள் சொற்பமாயிருக்கும்; ஆறு அடிக்குக் கீழே இரா.

சாக்கடைநீரானது பூமியின்கீழ் ஆறு அடி ஆழம் ஊறி இறங்கினால் அதிலுள்ள அழுக்குகள் சுத்தப்பட்டுத் தீமையற்ற வஸ்துக்களாய் மாறும். இந்த இடங்களில் செடிகள் இருக்குமானால் அது அவைகளுக்கு நல்ல எருவாகும். கீழே இறங்கும் ஜலம் சுத்தமாயிருக்கு மாததால் அது பூமி ஜலத்துடன் கலப்பதனால் அதிக பாதகமில்லை.

ஆரோக்கியபோதினி.

PARIAHS AND MIRASDARS.

பறையர்களும் மிராசுதார்களும்.

செங்கற்பட்டு ஜில்லாவில் சில புறம்போக்கு நிலங்கள் பயிர் செய்யாமற் கிடைக்கிறபடியால் சில பறையர் அவைகளைப்பயிர் செய்யவேண்டுமென்று விரும்பி, கவரன்மெண்டுக்கு மனுசெய்துகொள்வதாகவும் அப்படிச் செய்யும்போது, மிராசுதார்கள் அந்த நிலங்கள் தங்களுக்கு வேண்டுமென்று கேட்டுப் பறையர்களுக்குக் கிடைக்காமற் செய்து விடுவதாகவும், மிஸ்டர். வி. எச். மானொஹன் என்கிற பாதிரி ஒரு பத்திரிகைக்கு எழுதுகிறார். அந்த ஜில்லாவில் புறம்போக்கு நிலம் ஏதேனும் ஒருவன் பயிர் செய்யக்கேட்டால் அந்த நிலம் முதலாவது மிராசுதாரர்களுக்குக்கொடுக்கப்படவேண்டும். அவர்கள் வேண்டாமென்றால் மட்டும் மற்றவர்களுக்குக் கொடுக்கலாம் என்று சர்க்கார் ஒழுங்கிருக்கின்றது. இந்த ஒழுங்கை அனுசரித்துப் பறையர்களுக்கு நிலம் கிடைக்கக்கூடாதென்கிற கெட்ட எண்ணத்துடன் மிராசுதார்கள் தரிசு நிலத்தைத் தாங்கள் வாங்குவதுபோல வாங்கி இரண்டொரு வருஷம் அதற்குள்ள சொற்ப வாயிதாவையும் கொடுத்துப் பிறகு அதை வேண்டாமென்று விட்டுவிடுகிறார்கள். மறுபடியும் பறையன் அந்த நிலம் தனக்கு வேண்டுமென்று சர்க்காருக்கு மனுச் செய்துகொண்டால், மறுபடியும் மிராசுதாரன் ஒருவன் முன்வந்து மேற்படி சர்க்கார் ஒழுங்குப்படி அதைப் பெற்று இரண்டொரு வ்ருஷத்திற்குப் பிறகு அதை விட்டுவிடுகிறான். இவ்வாறு பறையர் சொந்தமாய் நிலம் பெற்று வாழக்கூடாதென்றும் அவர்கள் எப்போதும் தங்களுக்கு அடிமைகளாக இருக்கவேண்டுமென்றும் மிராசுதார்கள் கெட்ட எண்ணங்கொண்டிருக்கிறார்கள் என்று இந்தப் பாதிரி எழுதுகிறார்.

இது எந்தமட்டும் உண்மையோ நாம் அறியோம். இது உண்மையாயிருக்கும் பட்சத்தில் செங்கற்பட்டு மிராசுதார்களுக்குப் பெருமையாக மாட்டாது. அநாதிகால வழக்கத்தை அனுசரித்து மேற்குலங்களைச் சேர்ந்த மிராசுதார்கள் ஈன ஜாதியென்று நினைக்கப்படும் பறையர்களுக்கு சுவாதீனம் வரக்கூடாதென்றும் அவர்கள் சொத்துள்ளவர்களாகக் கூடாதென்றும், தங்களின் கீழ்ப்பண்ணை வேலை

செய்து கூலி பெற்று ஜீவிப்பதே அவர்களுக்குப் பொருந்துமென்றும் எண்ணுவது சகஜம். ஹிந்து சமூகத்தின் அமைப்பு அவ்விதமாகவே இது வரையிலும் இருந்து வருகின்றது. பறையர்கள் சொத்துக்காரர்களாகிவிட்டால் அவர்களின் கீழ் மற்ற ஜாதியார் வேலை செய்து ஜீவிப்பது சாமானிய ஹிந்துக்களுக்கு மனதிலும் எண்ணத் தகாததாகயிருக்கின்றது. பறையர் மிராசுதாராகவும் முதலிமாரும் பிராமணரும் பண்ணையாட்களாக வேலை செய்யவும் நேர்ந்துவிட்டால், உலகமே பாழாகிவிடுமென்று ஹிந்துக்கள் நினைக்கக்கூடியவர்கள். அந்தந்தக் குலத்துக்கு ஒவ்வொரு தொழில் பொருந்தியதாக ஏற்பட்டிருப்பது இன்று நேற்று உண்டானதல்ல. பல்லாயிரம் வருஷங்களாக ஜாதி வித்தியாசங்களை ஒட்டி இந்த ஏற்பாடு இருந்து வருகின்றது. ஆயினும் இந்தப் பூர்வீக ஏற்பாடுகளெல்லாம் பல காரணங்களால் மாறிக்கொண்டு வருவதை மிராசுதார்களாவது மற்ற மேற்குலத்தாராவது அறியாமலிருக்கவில்லை. இவர்களுடைய விருப்பம் எப்படியிருந்தாலும், எண்ணம் எப்படியிருந்தாலும், மேற் குறித்த நவீன காரணங்கள் அவைகளின் வேலையைச் செய்துகொண்டு தான்போகும். இந்தக் காரணங்கள் கலியுகமென்று நாம் சொல்லும் இக்காலத்தில் வேலை செய்து கொண்டிருக்கின்றனவாயினும், மேல் நாட்டாருடைய பிராபல்லியம் இத்தேசத்தில் நிலைத்தது முதல், இந்தக் காரணங்கள் விசேஷ சக்தியுடன் வேலை செய்து வருகின்றன.

எற்கனவே அநேக மாறுதல்கள் நேரிட்டிருக்கின்றன. அநேக இடங்களின் மேற்குலத்தார் தலைமுறை தத்துவமாய் அனுபவித்து வந்த சுதந்திரங்கள் அவர்களை விட்டு விலகி எல்லாக்குலத்தாரும் சாமானியமாய்ப் பெற்று அனுபவிக்கக் கூடியவைகளாகிவிட்டன. அநேக கிராமங்களில் இது வரையில் பிராமணரே மிராசுதார்களாய் இருந்துவந்தது போய், பறையர்களும் மகமதியர்களும் மிராசுதார்களாகி விட்டார்கள்.

வர வர யுகதர்மமென்று நாம் சொல்லுவதே மேம்பாடு பெற்று, ஹிந்து சமூக அமைப்பில் அநாதி லக்ஷணங்கள் மாறிக்கொண்டு போகுமென்பதில் சந்தேகமில்லை. இப்படி மாறிக்கொண்டு போவதைத் திருத்தல் பயன்படாதென்பதையும் நாம் அறிய வேண்டும். இன்னும் நூறு வருஷத்திற்குள்ளாக 21-வது நூற்றாண்டில் ஹிந்து சமூகத்தின் உருவம் எப்படி மாறிப்போகுமோ, நமது சனாதன தர்மங்களும், ஆசார அனுஷ்டானங்களும் எவ்வாறு குலைந்து போகுமோ, ஈசனே அறிவார். மத்தியில் விவேகிகளான நம்மவர்கள் காலவேற்றுமையைக்கருதி சமயோசிதமாய் நடந்து கொள்வது அவசியம். பறையர்கள் முன்னுக்கு வரக்கூடாதென்று பிராமணராவது முதலியாராவது முயற்சி செய்தல் பயன்படாது. அவர்களிடத்தில் தயவும் அன்பும் பாராட்டி அவர்களுடைய க்ஷேமத்தை மற்ற ஜாதியார் விரும்புவதே எல்லா வகுப்பாருக்கும் நலம் செய்வதாகும். ஆதிகாலத்தில் நம்முன்னோர்கள் செய்த ஏற்பாடுகள் அக்காலத்துக்குப் பொருந்தினவாயினும் இக்காலம் அவைகளையே பற்றி நிற்பது தீங்கு விளைப்பதாகும். ஆகையால் மிஸ்டர் வி. எச். மானொஹன் என்கிற பாதிரி செங்கற்பட்டு மிராசுதார்களின் பேரில் சொல்லும் குற்றம் உண்மையல்லவானாலும், பொதுவாய் நமது ஜனங்கள் ஜாதி வேற்றுமையைப் பாராட்டாமலும் வேறுவிதமாய்ப் பரஸ்பர துவேஷம் காட்டாமலும் சிநேக பாவத்துடன் ஒருங்கே வாழ்வது நம்தேசத்தின் க்ஷேமத்துக்கு அவசியமாகும்.

சுதேசமித்திரன்.

பிழைக்கும் வழி.

இந்த மாதாந்திரப் பத்திரிகையின் பங்குனி மாதத்துச் சஞ்சிகையொன்று நமது பார்வைக்கு அனுப்ப வந்தனத்துடன் பெற்று மகிழ்வுற்றோம். இப்பத்திரிகையில் ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் வியாசங்கள் ஒவ்வொன்றும் நமது தேசத்து வியாபாரிகள், விவசாயிகள் இவர்கள் ஒவ்வொருவருக்கும் அவசியம் பார்க்கத்தக்கவைகளாகவே காணப்படுகின்றன. இதன் பத்திராதிபர் மேனாட்டாருடைய வியாபார முறைகளையும் தொழில் முறைகளையும் நம் நாட்டாருக்குத் தெரிவிக்க வேண்டுமென்கிற முக்கிய நோக்கங்கொண்டே இப்பத்திரிகையை நடத்தி வருகிறார்களென்பதற்கையமில்லை. இதில் காணப்படும் விஷயங்கள் ஒவ்வொன்றும் தற்காலத்தில் பாலகர்களும் படிக்கத்தக்க அவ்வளவு இனியதமிழ் நடையிற் காணப்படுவதே சிலாகிக்கத்தக்கது. பகுதிக் குறிப்புகள் என்று தொடங்கியதன் கீழ்க்காணப்படும் விஷயங்களனைத்தையும் பத்திரிகையைப் பார்த்தவர் புகழாதிராரென்பதே நமது துணிபு.

லோகோபகாரி.

NECESSITY FOR CHANGE IN AGRICULTURAL PRACTICES.

BY

RAO BAHADUR, J. DHARMARANGA RAJU.

கிருஷிப்பழக்கங்களை மாற்றல்.

:o:

தேவாரமெட்டு.

1. கேட்டீரோ கிருஷிகரே கேடுறு நுங் காலகதி
மாட்டீரோ நும்முறைகள் மாற்றுதற்கே மனமிசைய.

2. நிலவளமும் நீர்வளமும் நிறைந்திருக்கும் நீள்தேசம்
மலைவளமும் குடிவளமும் மலிந்ததென மகிழ்வுறுவார்.

3. சித்திரை தை மாசியுமே சிறந்தபட்டம் தனித்தனியே
வைத்ததிரு வைகாசி வாய்த்தாக்கால் நலமென்பார்.

4. ஆடியிலே தேடிவிதை அதில்நன்மை அதிகமெனக்
கோடிதரம் கூறிமிகக் கொண்டாடும் பலருமுளர்.

5. பொன்னுருக வெயில்காயும் புண்ணியசீர் புரட்டாசி
மின்னலுடன் மன்னுருக மேலான மழைபொழியும்.

6. ஆர்த்தார்த்தாங் கைப்பசியில் அழுகைத் தூறல்பெய்யும்
கார்த்திகையில் கல்லுருகக் கனமழைகள் பொழியுமென்பர்.

7. காலமழை கோடை மழை சாரல் மழை கடும்பனிமுன்
ஞாலமதில் மாதமு மும்மாரிபெயு மெனநவில்வர்.

8. இக்காலம் கலிகாலம் இயல்பான மழைபெய்வ
தெக்காலம் என்றறியா தேங்கிமனம் வாடுகிறோம்.

9. ஒரு சமயம் முன்கூட்டி ஓயாமல் வருஷிக்கும்
தருணமது தக்கதென்று தாவிவிதைத் திடுவார்கள்.

10. காலத்தில் பின்மழைகள் கடுகளவும் பெய்யாமல்
ஞாலத்தில் பயிர்வாடி நஷ்டமுண்டாக் குவதுண்டு.

11. தென்னாட்டில் கன்னலுடன் செந்நெல்லும் விளைவடைய
முன்னாட்டி நிலமுழவே முடிவதில்லை முன்போல.

12. வைகாசிப் பருவத்தில் வயலில்நெல் விதைப்பதற்கும்
செய்காலில் நாற்றுவிடச் செய்வதற்கும் பெய்வதில்லை.

13. ஆற்றுக்கால் ஏரிகுளம், அவற்றில்நீர் நிறைந்தபின்னே
சேற்றுக்கால் நாற்றுவிட்டுச் செழுந்தொழியில் நடுவார்கள்.

14. அதனாலே கதிரீனும் அத்தருணம் நீர்குறைந்து
பதமழையும் பெய்யாமல் பரிதவிப்பர் பார்தனிலே.

15. வாடியுமே வயல்களில்நீர் வறண்டுபயிர் வருந்திமிகப்
பாடுகண்டு தீவடைந்து பலனற்றுப் போமையோ!

16. தாமதித்தும் தரங்குறைந்தும் தங்குமழை சற்றுமின்றிப்
போமதுவே காரணமாம் பொதுவாக இக்குறைக்கே.

17. விசும்பினின்று மழைத்துளிகள் வீழினில்லால் வியனுலகில்
பசும்புல்லும் பயிர்முளையும் பார்க்கரிதென் றேபகர்வர்.

18. தண்ணீர்தான் தண்பயிர்க்குத் தகுஜீவ தாரகமாம்.
எண்ணியிட்ட எருவும்நீர் இல்லையெனில் என்னாகும்.

19. ஆசையினால் நீர்செய்ய அவசியமா னதுகேளும்
ஊகமுடன் கிணறுகளை உமதுநிலங் களில்தோண்டும்.
20. வாடுங்கால் அண்ணாந்து வானத்தைப் பார்ப்பதிலும்
பாடுபட்டு நீரிறைத்துப் பயிரைநீர் காத்திடலாம்.
21. அறுவடைக்கிங் கறுமாதம் ஆகும் ஆனைக்கொம்பன்
சிறுமணியன் சம்பாவாம் செந்நெல்லைச் சிதறாமல்.
22. மூன்றாம் அல்லது நான்காம் மாதத்தில் முற்றிவிடும்
சான்றமணல் வாரி கார் சம்பாவாம் இளம்வித்தை.
23. பயிரிட்டு விளைவித்துப் பாங்குடனே பயனடைவீர்
துயரமுற வல்வித்தைத் தூற்றுகின்ற துரைமாரே!
24. தாமதித்து நிரம்பினும் தங்கும்நீர் குறைந்திடினும்
சாமிசெயல் இதுவன்றே தரிசிடுவீர் நிலமெல்லாம்.
25. நன்செய்நிலத் தெந்நாளும் நடுவீர்நெல் லதுதவறில்
புன்செய்வகைப் பயிரொருக்கால் போடவுநீர் மனங்கொள்வீர்.
26. மழைமாரிக் குளங்களிலே மறுபோகம் இருசோளம்
தழைவாகும் கம்பம்புல் தாழ்வில்லாக் கேழ்வரகு
27. மக்காச்சோ ளம்குதிரை வாலிமணி லாக்கடலை
எக்காலத் துந்தாங்கும் எய்துந்தண் ணீர்த்தட்டை
28. ஆற்றுக்கால் போக்குகளில் அதிமேடாம் நிலங்களிலே
ஊற்றுகளைத் தோண்டியபின் உன்னதமோ ரீஸ்கரும்பு
29. சுகமான வயல்வாழை ஜூட்முதலாம் நார்ப்பயிர்கள்
வகையான காய்கறியால் மிகலாபம் வரக்கக்கூடும்.
30. முன்னோர்கள் நடத்தியது முறைபிசகாய்த் தெரியவந்தால்
அன்னோர்கள் செய்தபடி ஆற்றுதல்நங் கடனல்ல.
31. மாற்றுவது பிசகென்னும் மனக்கோணல் சீர்திருத்தி
சாற்றுமிந்த நன்மொழியை சத்தியமாய்க் கைக்கொள்வீர்.
32. கிணறுவெட்டக் கைமுதலுங் கிருஷிகரே இல்லையென்பீர்
பணஉதவி சர்க்காரில் பரிவுடனே புரிகின்றார்.
33. அரைவட்டி கூட்டியுமே அறுநான்கோ டொருவருஷம்
திறமொடதைத் தீர்வையுடன் தீர்த்திடலாம் குறைகுறையாய்.
34. முனிசீபு கணக்கனோடு முதல் குமாஸ்தா கஜானாதார்
தினிசாகக் கைக்கூலி தீண்டார்கள் முன்போல.
35. சர்க்காரில் கடன்வாங்கிச் சரிவழியில் செலவிட்டால்
நற்காலம் உங்களுக்கு நாளடைவில் சுகமுறுவீர்.
36. வியாபாரி யிடம்பெற்றால் வியன்வட்டி சேர்த்திடுவான்
தயாவின்றிப் பணம்பறிக்கச் சமன்விடுவான் வெகுவிரைவாய்
37. குடிவீடுங் குளநிலமும் கூபமுறுங் கொல்லைகளும்
அடியோடு தொலைவதற்கிங் கானவழி யாகுமந்தோ!
38. ஆதலினால் தாசில்தார் அருமையுடன் தருங்கடனே
சாதனமாம் அதைப்பெற்று சதாசுகமாய் வாழ்ந்திருப்பீர்.

கிருஷிகன்.

தர்மரங்கராஜு.

REVIEW OF THE PRESS.

பத்திரிகை ஆராய்ச்சி.

SOUTH ARCOT AGRICULTURAL IMPLEMENTS.

தென்னாற்காடு விவசாயக்கருவிகள்.

◆

இது விஷயமாய் ஏப்ரல் மாதத்துக் "கிருஷிகனில்" சில குறிப்புகள் வெளி வந்திருக்கின்றன. ஒரு நிலத்துக்குப் பிரயோசனப்படும் உழவுக் கலப்பை வேறொருவகையான நிலத்துக்குப் பயன்படாது. உதாரணமாகப் பருத்திக் கரிசல் நிலங்களுக்கு மூச்சாண் கொழுவுள்ளதும், அதிகக் கனமும் நீளமும் உள்ளதுமான கலப்பை வேண்டும். மணல் கொண்டதும் புசளை மணல் உள்ளதுமான நிலத்துக்கு சிறிய கொழுவுள்ள லேசான கலப்பை போதுமானது. தென்னாற்காடு ஜில்லாவில் ஏழு தாலூகாக்கள் இருக்கின்றன. அவைகளுக்குள் சிதம்பரம் தாலூக்காவில் சாகுபடி நிலங்களில் 100க்கு 47 பங்கு களிக்கொண்ட கரிசல் நிலமாகவும், மற்றப் பங்குகள் பசளைக்கரிசல், பசளைச் செவ்வல், மணல் செவ்வல், மணல் கரிசல் முதலிய வேறுபாடுடையனவாயும் இருக்கின்றன. இப்படியே மற்றத்தாலூக்காக்களிலும் சில வேறுபாடு இருக்கிறது. ஜில்லா முழுவதையும் சேர்த்துப்பார்த்தால் 100க்கு 40 பங்கு மணல் செவ்வலாகவும், 27 பங்கு பசளைச் செவ்வலாகவும், 14 பங்கு பசளைக் கரிசலாகவும், 13 பங்கு களிக்கரிசலாகவும், மற்றவை வெண்மணல் நிலங்களாகவும் இருக்கின்றன. ஆகவே நூற்றுக்கு 13 பங்கு நிலங்கள்தான் இந்த ஜில்லாவில் களியான கடின நிலங்களாயிருக்கின்றன. இதனால் தான் இந்த ஜில்லாவில் லேசான சிறு கலப்பை உபயோகப் படுத்தப் படுகிறது. கடினமான கரிசல் நிலங்கள் அதிகமாயுள்ள இடங்களில் உபயோகப்படுத்தப்படும் **மூச்சாண்காட்டுக் கலப்பை, குண்டகா, தந்துலு, பெத்தமடகா,** முதலான பெரிய உழவுக்கருவிகளை இங்கு உபயோகிப்பதில்லை. நிலத்தைக் கிளறிக் காற்றாட விட்டுப் பண்படுத்தி விதை ஊன்றுவதற்கு லாயக்காகும்படிச் செய்வதும், விதை முளைத்துப் பயிர் வளரும் போது அந்தப்பயிருக்கு வேண்டிய உணவைப் பக்குவப்படுத்துவதும் உழவின் முதற்பயன்களாம். அநேக இடங்களில் மேல் மண்ணைவிட அடிமண் அதிகச் சத்துள்ளதாயிருக்கும். ஆனால் காற்றோட்டமில்லாமல் பக்குவப்படாமலிருக்கும். வேர்கள் ஆழத்தில் சென்றிருந்தால் நெடுநாளைக்கு மழை பேயாவிட்டாலும் பயிர் சீக்கிரம் பட்டுப்போகாது. அதிக நாளைக்கு நிலத்தில் ஈரந்தங்கும். இவ்விதமாக அதிகப்பயனுண்டாகும்படி உழவு நடத்த சிறு கலப்பை பிரயோசனப்படாது. உழவினால் உண்டாகும் இன்னொரு பயன் என்னவென்றால், தானாகவே ஏராளமாய் விளையும் புல் பூண்டு முதலியவைகள் பயிர்களை நெருக்கிக் கெடுக்காதபடி அவைகளைக் களைந்து நீக்குவது. இதற்கும் நாட்டுக் கலப்பை உதவாது. நாட்டுக்கலப்பையால் ஒரு நிலத்தை உழவேண்டுமானால் எட்டு முறை மாறி மாறி உழவேண்டியதாயிருக்கும். இதனால் காலதாமதமும் அதிகச்செலவும் ஏற்படும். ஆதலால் தென்னாற்காடு ஜில்லாவாசிகளுக்கு நாட்டுக்கலப்பையைவிட நல்லதும் அதிக வேலை செய்வதுமான ஒரு கலப்பை இருந்தால் நல்லது. திருநெல்வேலி விவசாயச் சங்கத்தார் இரும்புக்கலப்பையைச் செய்து அந்த ஜில்லாவாசிகளுக்குக் கொடுக்கிறார்கள். அதன் விலை 6-4-0. ஆகிறது. இந்தக்கலப்பை செய்யும் வேலை நாட்டுக்கலப்பை செய்யும் வேலையைவிட 4 பங்கு அதிகமாக இருக்கிறது. இந்தக் கலப்பை பத்துவருஷத்துக்கு நீடித்திருக்கும். சீமைக் கலப்பை ஒன்று 20ரூபா ஆகிறது. மாடுகளுக்கு அந்தக்கலப்பையை இழுப்பது கஷ்டமாயிருக்கும். திருநெல்வேலிக் கலப்பை இழுக்க லேசாயும் சுளுவாக அதிக ஆழம் உழக்கூடியதாயும் இருக்கிறது. இந்தக் கலப்பை விருத்தாசலத்திலுள்ள ஒரு மிராசுதாரிடத்தில் 40க்கு மேல் இருக்கிறது. தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள கிருஷிகர்கள் விருத்தாசலத்துக்குப் போய் அங்குள்ள இரும்புக்கலப்பையைப் பார்த்து அதைவிடச் சுலபமாய் இழுக்கக் கூடிய திருநெல்வேலிக் கலப்பையை வாங்கி உபயோகித்து அதிகமான பயன் அடைதல் நலம்.

◆

MAHOMEDAN AGRICULTURE.

மகம்மதியர்கள் விவஸாயம்.

தென்னிந்தியா விவஸாயத்தின் சித்திரை மாஸத்து ஸஞ்சிகையில், "மகம்மதியர்களின் விவஸாய ஊக்கம்" என்று ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது. தஞ்சாவூருக்கு ஸமீபத்தில், ராஜகிரி, ஐயம்பேட்டை, வழுத்தூர், என்ற கிராமங்கள் இருக்கின்றன. இந்தக்கிராமங்களில் மகம்மதியர் விசேஷம். இவர்கள் நன்செய் நிலங்களில் நெல் மாசூல் அறுவடையானவுடனே, அதாவது மாசி பங்குனியில், நிலத்தை உழுது ஆறப்போட்டு விடுகிறார்கள்.

சித்திரை மாஸம் அல்லது வைகாசி மாஸத்தில் மறுபடியும் ஒரு தடவை உழுது நன்செயில் தற்சமயத்துக்கு ஒரு கிணறு நோண்டி அதில் ஆள் ஒடி இறைக்கும் ஏற்றம் போட்டுக்கொண்டு முன் உழுது வைத்த நிலத்தில் குறுவை விதைகளை புழுதியில் வைத்து சின்னஞ்சிறிய பாத்திகளாய்க் கட்டி ஜலம் இறைக்கிறார்கள். ஷை. நாற்றுகளை சுமார் ஆனிமீ௴ முதல் தேதி வரையில் வளர்த்து ஆற்று ஜலம் வந்த முதலிலேயே ஆனி 10உக்குள் நட்டு விடுகிறார்கள். அப்படி நடப்பட்டகுறுவை மாசூல் ஆவணிமீ௴ நடுவில் அல்லது கடைசிக்குள் அறுவடையாய் விடுகிறது.

அப்படியறுவடையாகும் மாசூல் விசேஷமாய் மழையில் அடிபடாமல் ஆடிமீ௴ சம்பாநெல் விலைக்கு கலத்திற்கு இரண்டு அல்லது நாலணாக்குறைவாக நல்ல வாபத்துடன் விலையாகிவிடுகிறது.

சுமார் ஆவணி 10-15க்குள் அறுவடையான நிலத்தை உடனே உழுது செப்பனிட்டு, ஏற்கனவே தயார் செய்து வைத்திருக்கும் சம்பா நாற்றை நட்டு விடுகிறார்கள். அந்தச்சம்பா மாசூலும் பயிர் நன்றாய் ஏறி, தைமீ௴ இடையில் அல்லது கடைசிக்குள் அறுவடையாகிவருகிறதினால் மற்றவர்களுடைய நெல் அறுவடையாகி விலை இறங்குவதற்கு முன் லாபத்துடன் விற்றுவிடுகிறார்கள்.

நெல்லறுவடையானவுடன் மறுபடியும் நிலத்தை உழுது அவுரி அல்லது வயல் பயிறை விதைத்து அதினாலும் லாபம் அடைகிறார்கள்.

மாசி மாஸத்தில் நன்றாயுழுது தக்க உரமிட்டு புகையிலை, கத்திரி, மிளகாய் முதலிய பயிர்களையும், மக்காச்சோளம், வெள்ளரி, பாகல், முதலிய பயிர்களையும் சாகுபடி செய்து, கிணறு நோண்டி ஜலம் இறைத்து, நிலம் தரிசுபோடாமல் லாபமடைகிறார்கள்.

மூங்கில், எலுமிச்சை, இவைகள் இளம் பதிகம், அல்லது நன்றாயிருக்கும் காலத்தில், சூரிய வெப்பத்தால் பயிர் தீய்ந்து விடாமல் ஷை. பயிர்களுக்கிடையில் அகத்தி, செம்பை, இவ்விரண்டு பயிர்களையும் வளர்த்துப் பயிர்களை காப்பாற்றுகிறதுடன், அகத்தி, செம்பை, இந்த இரண்டின் தழைகளையும் அதிக உயர்ந்த பயிர் எருவாகவும் நன்செய்க்கு உபயோகப்படுத்தி மற்ற காலங்களில் அகத்திக்கீரையை விற்று லாபம் அடைகிறார்கள்.

நாற்று மூங்கில் கன்றுகளும் எலுமிச்சங்கன்றுகளும் ஏராளமாய் வளர்த்து எலுமிச்சைத் தோட்டங்களை தங்களூரில் விருத்தி செய்வதுடன் சேலம் ஜில்லா முதல் மதுரை ஜில்லா வரையில் கன்றுகள் ஏற்றுமதி செய்து தக்க லாபம் அடைகிறார்கள்.

இதே மாதிரியே தென்னம் பிள்ளையையும் பாக்குப் பிள்ளைகளையும் வளர்த்து விற்பனை செய்கிறார்கள்.

அவர்களுக்கு இயற்கையாயுள்ள கொடிக்கால் பயிரில் அவர்கள் படும் பிரயாஸைக்கும், எடுக்கும் லாபத்துக்கும் அளவு கிடையாது.

இவ்வளவு விவசாய வேலையையும் பார்த்துக்கொண்டு ஒழிந்த காலத்தில் செங்கல் ஓடு காளவாயினால் வருஷா வருஷம் லாபமெடுத்தும் வருகிறார்கள்.

ஒவ்வொருவிதமான கடை யெருக்களையும் விடாமல் சேர்த்தும் வேண்டிய ரூபாய் செலவு செய்தும் தங்கள் நிலத்தைக் கூடுமான வரையில் உரமேற்றுகிறார்கள்.

வருஷா வருஷம் மகம்மதியர்களுக்கு பலவிதமான பண்டிகைகளிலும் விருந்திலும் ஏராளமான ரூபாய்கள் செலவழிந்தும் வருஷா, வருஷம் புதிதாய் நிலங்கள் வாங்குவதிலும் நிலங்களை பணம் செலவிட்டு செய்கால் செய்வதிலும் குறைவு கிடையாது.

ஆதலால் ஆற்று ஜலம் வேண்டுங்காலத்தில் கிடைக்காததினாலும் வேண்டாத காலத்தில் வந்து பயிர்களை நாசம் செய்வதினாலும் நன்செய் விவசாயிகள் ஒவ்வொருவரும் மேல் கண்ட மாதிரி வசதியுண்டுபண்ணிக்கொண்டு மழைகாலப் பயிர்களுக்கு சமயங்களுக்கு முந்திக்கொண்டும் கோடைகாலப் பயிரை இஷ்டம்போல் விளைவித்துக்கொண்டும் லாபம் அடையக்கூடிய வழிகளை ஷை. மகம்மதியர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேணும்.

THE SILK INDUSTRY.

பட்டுநூல் கைத்தொழில்.

பட்டுக் கைத்தொழில் எப்படி நடக்கிறதென்பதைப் பற்றி மிஸ்டர் வி. எஸ். ரகுநாதராயரவர்கள் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். எந்தெந்த தேசங்களில் எவ்வளவு பட்டு உண்டாக்கப்படுகிறதென்பதும், எவ்வளவு செலவாகிறதென்பதும் அதனால் தெரியவருகிறது.

	உண்டாகும் பட்டின் விலை		செலவாகும் பட்டின் விலை
சீனா	290 லக்ஷம் பவுன்		164 லக்ஷம் பவுன்
ஜப்பான்	250 ,, ,,		101 ,, ,,
இட்டலி	100 ,, ,,		79 ,, ,,
லிவாண்டு	56 ,, ,,		
இந்துசைனா	24 ,, ,,	இந்தியா	11 ,, ,,
ஐரோப்பா	24 ,, ,,		32 ,, ,,
ப்ரான்ஸ	14 ,, ,,		100 ,, ,,
மற்றத்தேசங்கள்	12 ,, ,,		21 ,, ,,
அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள்			188 ,, ,,
ஜெர்மனி			74 ,, ,,
மொத்தம்	770 இலக்ஷம் பவுன்		770 இலக்ஷம் பவுன்.

மேற்கண்ட கணக்கினால் சீனாதேசத்தில் மற்றத் தேசங்களைவிட அதிகமான பட்டு உண்டாகிறதென்று தெரிகிறது. இருந்தபோதிலும் இந்தத் தொழிலில் ஜப்பான் தேசம் அடைந்திருக்கும் அபிவிருத்தியைப் பார்க்கும்போது அந்த நாட்டின் பெருமை வெளிப்படுகிறது. ஜப்பான் தேசத்து அபிவிருத்திக்குக் காரணங்கள் பின்வருமாறு.

(1) ஜப்பானின் சீதோஷ்ண நிலைமையானது பட்டுப்பூச்சிச் செடிகள் உண்டாவதற்கும் பட்டுப் பூச்சிகள் விருத்தியாவதற்கும் ஏற்றதாக இருக்கிறது.

(2) அந்த தேசத்து ராஜாங்கத்தார் பட்டுக்கைத் தொழிலை ஜாக்கிரதையுடன் மேல் பார்த்து அபிவிருத்தி செய்து வருகிறார்கள்.

(3) ஜப்பானில் எண்ணிறந்த வேலையாட்கள் அகப்படுகிறதுடன் அவர்கள் அந்தக் கைத்தொழிலை எளிதாயும், சீக்கிரமாயும் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

(4) ஜப்பானியருக்கு நூதன கைத்தொழிலை விருத்தி செய்வதில் பிரியமும், ஊக்கமும், விடா முயற்சியும் அதிகமாக இருக்கிறது.

ஜப்பான் தேசத்து கிருஷிகர் பயிரிடுந்தொழிலைச் செய்தால் அவர்களுடைய பெண்டு பிள்ளைகள் பட்டுப்பூச்சியை வீட்டில் வளர்த்துப் பட்டு உண்டாக்கி வருகிறார்கள். ஜப்பானியருக்கு ஊக்கமுண்டாகும்படி அங்கே முன்னிருந்த அரசன் தன் அரண்மனைத் தோட்டத்தில் நெல் வயல் ஒன்றுண்டாக்கித் தானே பயிரிட்டு வந்தாராம். அவருடைய மனைவி பட்டுப் பூச்சிகளை வளர்த்துப் பட்டு உண்டாக்கி வந்தாளாம். அரசனும் அரசியும் இவ்வளவு ஊக்கம் பாராட்டினால் ஜனங்களுடைய ஊக்கத்தைப்பற்றிச் சொல்லுவானேன்? 1805-ஆம் வருஷத்துக்கு முன் வங்காளத்தில் அதிகமான பட்டு உண்டாக்கப்பட்டு வந்தது. அந்த வருஷத்தில் வங்காளத்திலிருந்து இங்கிலாந்துக்கு 8,305,904 பவுன் விலையுள்ள பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டது. அது முதல் 1835-ஆம் வருஷம் வரையில் இந்தப்பட்டு வியாபாரம் ஈஸ்டு இந்தியா கம்பெனியாரால் செய்யப்பட்டு வந்தது. 1835-ஆம் வருஷத்தில் அந்தக் கம்பெனியார் அந்த வியாபாரத்தை மேல் நடத்தாமல் விட்டு விடவே இந்தியாவில் பட்டு வியாபாரம் க்ஷீணித்துப் போய் விட்டது.

1908–09-ஆம் வருஷத்தில் இந்த தேசத்திலிருந்து அயல் தேசங்களுக்கு ஏற்றுமதியான பட்டின் விலை 54-லட்ச ரூபாய் ஆயிற்று. இறக்குமதியான பட்டின் விலையோ ஒரு கோடி ரூபாய்க்கு மேலாயிற்று. இப்படியே வரவர ஏற்றுமதி குறைந்தும் இறக்குமதி அதிகமாயும் வந்திருக்கின்றன. வேண்டிய பட்டு நூல் முழுவதையும் நம் தேசத்திலேயே உண்டாக்கலாம். நமது கவர்ன்மெண்டாரும் ஜனத் தலைவர்களும் இந்த விஷயத்தில் தக்க முயற்சியெடுத்துக்கொண்டால் நம்தேசம் முன்னுக்குவரக்கூடும்.

THE BAT.
வெளவால்.

விவேக போதினியின் ஏப்பிரல் மாஸத்து ஸஞ்சிகையில் வெளவாலைப்பற்றி வெ. நரசிம்ம அய்யங்கார் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். வெளவால் பறவை அல்லவென்று சொல்வதற்கு சில காரணங்கள் உண்டு. பல பட்சிகளைப்போல் வெளவால் பறக்கிறபடியால்அதை பறவையென்று சொல்லக்கூடாது. பறப்பதினால் பறவை என்று சொல்ல ஆரம்பித்து விட்டால், தென்னிந்தியாவில், சில மீன்களும் பல்லிகளும் பறக்கின்றன, ஆகையால் அவைகளைப் பறவை என்றுதானே சொல்லவேண்டும், ஆனால் மீன்களும், பல்லிகளும், பறவையல்ல வென்று நாம் எல்லோரும் அறிந்த விஷயம். அவைகளைப் போலவே வெளவாலும் பறவையல்ல வென்று நாம் தெரிந்துக்கொள்ளக் கூடியது தான். முதலாவது, பறப்பதற்கு உதவியாகிய வெளவாலின் அவயவத்திற்கும், பக்ஷிகளின் சிறகிற்கும் பல வித்தியாஸங்கள் உண்டு. பக்ஷிகளில் சிறகு என்பது, முன்னங்கால் விகாரப்பட்டு, அதன் மேல் அநேக இறகுகள் உண்டாகி, அந்த இறகுகள் பிரித்தெடுக்கக் கூடியதான ஓர் அங்கம். இந்த இறகுகளுக்கும் பக்ஷியின் கால்களுக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. வெளவாலிற்கோ சிறகென்பது முன்னங்கால், பின்னங்கால் ஆகிய இரண்டு கால்களுக்குள், பரப்பவும், குறுக்கவும், இயல்புடைய ஒருவித நுட்பமான **தோல்** அவைகளின் இடையில் வளர்ந்திருக்கிறது.

வெளவாலை மிருகமென்று சொல்வதற்கு சில காரணங்கள் உண்டு:—

(1) பறவைகளுக்குப் பல்லுகளில்லை. வெளவாலோ மிருகத்தைப்போல் இருவரிசைப் பல்லுகள் உடையது.

(2) பறவைகள் யாவும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். வெளவாலோ, மற்ற மிருகங்களைப் போல் உயிரோடு குட்டிகளைப் பெற்றெடுத்து பால் கொடுத்து வளர்க்கும்.

(3) பறவைகளுக்கு சிறு துவாரம் தவிர, ஐவ்வான வெளிக்காது கிடையாது. வெளவாலுக்கோ அகண்ட காதுகள் உண்டு. வெளவால் இராக்காலத்து இருட்டான சமயங்களில் வெளியில் சென்று, சிறு பூச்சி புழுக்களைத்தின்று ஜீவிக்கும். அமெரிக்காவில் வசிக்கும் ஒரு ஜாதி வெளவால் இதர ஜெந்துக்களின் ரத்தத்தை குடித்து ஜீவிக்கும். இன்னும் சில வெளவால்கள் பழங்களைத்தின்னும். வெளவால்கள் இருண்ட இடங்களில் தங்கும்போது கால் நகங்களின் உதவியால் கட்டடங்களின் கீழ்புறத்தைப் பிடித்துக்கொண்டு தலைகீழாகத்தொங்கும். இதைக்கொண்டுதான் அது மலம் ஜலம் கழிக்கும்போதெல்லாம் தன் வாயினாலேயே அப்படி செய்கிறது என்று அநேகர் சொல்லுகிறார்கள். அது பிசகு. ஏனென்றால் வெளவாலொன்றைப் பிடித்து சுற்றிலும் பரீக்ஷித்துப் பார்த்தால் வாய் வேறு, அபானம் வேறு என்பது தெளிவாய் விளங்கும்.

வெளவால்களில் சுமார் நூறு இனங்களுக்கு மேலுண்டு. நமது வீடுகளிலும் கோயில்களிலும் வசிக்குஞ் சிறிய வெளவாலுக்குத் **துரிஞ்சில்** என்று பெயர். இரத்தங் குடிக்கும் அமெரிக்க வெளவாலுக்கு **உதிரமாகாளி** என்று பெயர். இன்னும், ஆசியா ஆபிரிக்கா கண்டங்களில் வசிக்கும் பெரிய வெளவால்களுக்குப் **பழந்தின்னி** என்று பெயர். இந்த இனத்தில் சேர்ந்ததும், **ஜாவா** தீவில் வசிப்பதுமான **காலாங்** என்னும் வெளவாலே எல்லாவற்றிலும் மிகப்பெரிது. அதன் சிறகை விரித்து ஒரு நுனியிலிருந்து மற்றொரு நுனிக்கு அளந்தால் ஐந்தடிக்கு மேற்பட்ட அகலமுள்ளதாக இருக்கும்.

வெளவாலின் உபயோகத்தைப்பற்றி போன ஆடி மாஸத்துப் "**பிழைக்கும் வழி**" யில் விஸ்தாரமாய் ஒரு வியாஸம் பிரசுரித்திருக்கிறோம்.

சிலங்கூர் வித்யாபாஸ்கரன்:— "பிழைக்கும்வழி" இது சென்னையிற் பிரசுரமாகும் அற்புத மாதாந்திரப்பத்திரிகை. எழுத்துக்காகிதம் முதலியனவற்றில் அதிக தெளிவாயிருப்பதனால் படிப்போர்க்கு விருப்பத்தைக்கொடுக்கும். அதன் பெயருக்குத் தக்கவாறே உள்ளுரைகளும் இந்தியர்கள் பிழைப்பதற்கான வழி முறைகளை எடுத்துரைக்கின்றது. இதன் பத்திராசிரியர் ஸ்ரீயுத் வைத்தியராமன். B, A. அவர்கள் பல துறைகளிலும் கைபோனவர் என்பது அவருடைய வியாசங்களினால் அறியப்படும். இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்வோர் உயர்தரக்கல்வி கற்றவர்களாதலின் தமிழ் மக்கள் இதைப்பெற்றுப் படிப்பின் உண்மையில் அனுகூலமடைவார்கள். இதன் வருட சந்தா ரூபா 4—0—0.

AGRICULTURAL NOTES.
விவஸாயக் குறிப்புகள்.

GRAFTING.

ஒட்டுக்கட்டுதல்.—அமெரிக்காவில் மாமரம் ஒட்டுக்கட்டவேண்டுமானால் பெரிய காய் காய்க்கும் காட்டு வகைகளின் கொட்டையைப்போட்டு செடியுண்டாக்கி, ஜாதிக் கிளைகளைப் பதிய வைப்பது சாதாரணம். நம்மூரில் அப்படிக் கவனிப்பதில்லை. கடையில் கிடைத்த விதைகளைப் பொறுக்கிப்போய் முளைப்பித்து ஒட்டுக்கட்டி வியாபாரம் நடந்தேறி வருகிறது.

AGRICULTURAL PROVERBS.

விவஸாயப் பழமொழிகள்:—

மாசி எள்ளு மடியிற்பணம்.
பங்குனி மழை பத்துக்கும் நஷ்டம்.
பால்குணத்தில் மழைபெய்தால் ரொம்ப நஷ்டம்.
எருது இளைத்தால் எல்லாம் இளைக்கும்.
சோளப்பயிர்மேய்ந்த எருதுக்கு சொர்க்கலோகம் வேண்டுமோ?
தாயைப்பார்த்து மகளைக்கொள்ளு, பாலைப்பார்த்து பசுவைக்கொள்ளு.
ஒரு நல்ல மாட்டுக்கொட்டகை கட்டவேண்டும்.
கால் நடைகளைக் கட்டவேண்டும்.
பால்கறக்கும் பசுக்களுக்கு பசுந்தீனிபோடவேண்டும்.

AN AGRICULTURAL FARM.

ஒரு விவசாயப் பண்ணை.—மதுரை ஜில்லா விவசாயச் சங்கத்தின் கிளையொன்று ராமநாதபுரத்தில் இருக்கிறது. அந்தக்கிளைச் சங்கத்தின் காரியதரிசி ராமநாதபுரம் தாலூகா போர்டுக்குச் சொந்தமாயிருக்கும் அரை ஏகர் நிலத்தையும் அதிலுள்ள கிணறையும் ஒரு விவசாயப்பண்ணை ஏற்படுத்த வாடகைக்கு விடவேண்டுமென்று ராமநாதபுரம் தாலூகா போர்டுக்கு மனு செய்து கொண்டார். அந்த போர்டார் அந்த நிலம் வாடகையில்லாமல் அது விவசாயப்பண்ணையாய் உபயோகப் படுத்தப்படும் வரையில் ராமநாதபுரம் விவசாயச் சங்கத்திற்கு விட்டு வைக்கப் படுமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள்.

WASHING THE TEETH OF THE COWS.

பசுமாடுகளின் பற்களைச் சுத்தம் செய்தல்.—பசுமாடுகளை தினம் குளிப்பாட்டி வைப்பதாலும், அவைகளின் பல்லுகளை தினம் மூன்றுதடவை நன்றாய்த்தேய்த்து சுத்தம்செய்வதாலும், வெயிற்காலத்தில் அவைகளின் மேல் ஈக்களும், கொசுக்களும் வந்து தங்காமலிருக்க ஒரு துணியால் அவைகளை போர்த்து வைப்பதாலும், அதிக நன்மையென்று தெரியவருகிறது. இப்படிச் செய்துவந்தால் மாடும் விருத்தியடையும், பாலும் வெகு நன்றாக யிருக்குமென்று ஒருவர் தெரிவிக்கிறார்.

SORGHUM POISONING.

சோளப்பயிர் விஷம்.--சோளப்பயிர் தின்ற கால்நடைகள் வெகு சடுதியாக இறப்பதனால் வயித்தியஞ் செய்வது துர்லபம். ஆயினும் அவைகளை **லிக்கர் அம்மோனியா போர்ட்டியார்** என்ற ஜலரூபமான மருந்தை சுவாசித்து உட்கொள்ளும்படிச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதோடு ஆக்கிராண உப்பு என்ற **அம்மோனியம் கார்போனேட்டு** மருந்தை ஒருவேளைக்கு மூன்று ரூபாய் எடை அளவு குளிர்ந்த ஜலத்தில் கரைத்து ஒரு மணிக்கு ஒருதரம் கொடுக்கவேண்டும். மேலே கூறிய அளவு மாட்டுக்குக் கொடுக்கும் அளவு; குதிரைக்கு அந்த அளவில் பாதி கொடுக்கவேண்டும். ஆட்டுக்கு நாலில் ஒரு பங்கு. ஷை ஆக்கிராண உப்புக் கைவசம் இல்லையானால் அதற்குப் பதிலாக பேக்கிங் ஸோடா என்ற சாதாரணமாகக் கிடைக்கும் மருந்தை உபயோகிக்கலாம். ஆனால் இது ஆக்கிராண உப்பைப்போல அவ்வளவு பிரயோஜனமானதல்ல.

GREEN MANURING.

பசுந்தாள் உரம்.—கனம் திவான் பகதூர் ஆர். ரகுநாதராயரவர்கள் எழுதுகிறார்—ஏப்பிரல், மே இந்த மாதங்களில நல்லமழை பெய்ந்த உடனே நிலங்களை செம்மையாய் உழுது அதில் எருவுக்கு உபயோகமாகும் பயிர்களைத் தெளிக்கவேணும். அவைகளாவன:—சணல், அவுரி, ஆவாரை, கொழுஞ்சி, டென்சா முதலியன.

ஜனவரி௴ 15உக்குத் தப்பாமல் ஆற்றில் ஜலம் வந்து விடும். மழை யில்லாததினால் ஷை பயிர்களுக்கு ஈரமில்லாமல் கெடுதியாகும் பக்ஷத்தில் வாய்க்கால் ஜலத்தைவிட்டு ஷை பயிர்களை காப்பாற்றிக்கொள்ளலாம். நஞ்சை ஸாகுபடிசெய்யும் காலத்தில் ஷை பயிர்களை கால்நடைகளை விட்டு மேய்த்துப் போடலாம். அல்லது அப்படியே வயலில் உழுதுப் போடலாம். அவைகள் வயலுக்கு நல்ல எருவாகும். மாசூலை விர்த்திசெய்வதற்கும் மார்க்கமாகும். அப்படிக்குச் செய்தால் அதில் பாய்ச்சலுக்கு உபயோகப்படுத்தின ஜலத்துக்கு தண்ணீர்த்தீர்வை கொடுக்கவேண்டியதில்லை.

INDUSTRIAL NOTES.

கைத்தொழில் குறிப்புகள்.

COST OF LIVING.

ஜீவனச்செலவு.—உலகத்தில் கூலிவேலைசெய்து பிழைக்கிறவர்கள் 100க்கு 60க்கு மேல் சாப்பாட்டிலும் வீட்டுவாடகையிலும் செலவழிக்க வேண்டியதாயிருக்கிறதாம்

ALCOHOL FROM SAW DUST.

மரத்தூளிலிருந்து சாராயம்.—அமெரிக்காவில் ஒரு நூதன முறையால் மரத்தூளிலிருந்து சாராயம் இறக்க கண்டுபிடித்திருக்கிறார்கள். 1 டன் நிறையுள்ள மரத்தூளிலிருந்து, 24½ காலன், அதாவது 147 புட்டி சாராயமும், ஆடுமாடுகளுக்குத் தீனியாக உபயோகப் படுத்தக்கூடிய 1700 ராத்தல் பிண்ணாக்கும் கிடைக்குமாம்.

WAX.

மெழுகு.— சர்க்கரை காய்ச்சும்பொழுது மேலே மிதக்கும் மஷ்டியிலிருந்து ஒரு வித மெழுகு எடுக்கலாமாம். மஷ்டுக்களையெல்லாம் சேர்த்துக் காயவைத்து, சிறியதாகப் பொடிசெய்து "பென்ஸீன்" என்னும் திரவப்பொருளைக் கொண்டு ஒரு வித மெழுகு எடுக்கப்படுகிறதாம்.

MANUFACTURE OF SUGAR.

சர்க்கரை செய்தல்.—போன பிப்ரவரி௴ 7௳யன்று மைசூர் ஸமஸ்தானத்து ரஸாயன சாஸ்திரியாகிய டாக்டர் கோல்மன் சர்க்கரை செய்யும் பல பேர்களைச் சேர்த்து ஹெப்பல் என்னும் ஊரில் ஒரு பிரசங்கம் செய்து சர்க்கரை செய்வதைக் காண்பித்தாராம்.

THE UNITED PROVINCES EXHIBITION.

ஐக்கியமாகாணப் பொருட்காட்சி.—இந்த வருஷம் டிஸம்பர் மாஸத்தில் ஆரம்பமாகப்போகிற ஐக்கிய மாகாணப் பொருட்காட்சியை வெகு சிறப்பாய் நடத்தவேண்டுமென்று போனவருஷம் முதலே அந்தமாகாண வாஸிகள் விசேஷ முயற்சிகள் செய்து வருகிறார்கள். அந்தக்காட்சி இந்த வருஷம் டிஸம்பர் மாஸம் 1-ம் தேதி திறக்கப்பட்டு அடுத்த 1911-ம் வருஷம் பிப்ரவரி மாஸம் 28-ம் தேதியோடு தான் மூடப்படும்.

A FISHING COMPANY.

மீன்பிடிக்கும் கம்பெனி.—இது ரங்கூனில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆற்றில் மீன்பிடித்து, அதைப்பச்சையாயும் கருவாடாக்கியும் விக்கிரயஞ்செய்து ஆதாயமடைவதே இந்தக் கம்பெனியின் நோக்கம். இதற்காக 2 லட்சம் ரூபாய் முதலிடப்படும். பங்கொன்று பத்துரூபாயாகும். ஆகவே பங்குகள் 20,000 ஆகும். இதை நடத்துவதற்காக ஒரு தொழிற்சாலையுங் கட்டப்படுகிறது.

MADRAS GLASS WORKS.

சென்னைப்பட்டணத்து கண்ணாடிச் சாலை.-இந்தத் தொழிற்சாலையைப்பற்றிப் போன வருஷம் ஏப்ரல் மாஸத்து ஸஞ்சிகையில் எழுதியிருந்த வியாஸத்தை அநேகர் படித்திருக்கலாம். இந்தச்சாலைக்கு முதல் முதல் இரண்டு லக்ஷம் ரூபாய் மூலதனமாக ஏற்பட்டது. அது போதாமல் இந்தக் கம்பெனியார் மூலதனத்தை நாலு லக்ஷமாக ஆக்கி, ஒரு லக்ஷத்தை உடனே வசூல் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்படி மூலதனத்தை ஜாஸ்திப்படுத்த வேண்டியதற்குக்காரணம் என்னவென்றால் உருக்கப்படும் கண்ணாடி முழுவதையும் சாமான்களாக செய்வதற்கு வேண்டிய யந்திரம் முதலானவைகளை வரவழைப்பதற்காகத்தான். இப்பொழுது கண்ணாடி ஓடுகளும், சோடாவாட்டர் பாட்டில்களும் மட்டும் செய்கிறார்கள். இனிமேல், இந்தப்பிரதேசத்தில் உபயோகமாகும் எல்லாக் கண்ணாடி சாமான்களையும் செய்யப்போகிறார்களாம்.

THE BENARES INDUSTRIAL CONFERENCE.

ஸ்ரீகாசியில் தொழில் ஆலோசனைக் கான்பரென்ஸ்.—போன மார்ச்சு மாஸம் 27-ம் தேதி சனிக்கிழமை யன்று ஐக்கிய மாகாணத்துத் தொழில் ஆலோசனைக் கூட்டம் ஸ்ரீ காசியில் பாபு கங்கப்ரசாத் வர்மாவின் அக்கிராஸனத்தின் கீழ் நடந்தது. அதில் இந்தியத் தொழில்களின் அபிவிருத்தியைக் கருதிச் சில வியாசங்கள் எழுதி வாசிக்கப்பட்டன. தொழிற் கல்விச்சாலை யொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியது அவசியமென்றும், சுதேசி ஸாமான்களுக்கு ரெயில்வே கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டுமென்றும், சுதேசிப் பண்டசாலைகள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன.

EDUCATIONAL NOTES.

வித்தியா விஷயக் குறிப்புகள்.

TEACHERS OF PRIMARY SCHOOLS IN BOMBAY

பம்பாயில் ப்ரைமரி ஸ்கூல் உபாத்தியாயர்கள்:— பம்பாய் ராஜதானியில் ப்ரைமரி ஸ்கூல் உபாத்தியாயர்களின் சம்பளங்களை உயர்த்துவதாய் ஏற்பாடாகி இருக்கிறது. 5 வருஷமும் அதற்கு மேற்பட்ட சர்வீஸும் உள்ள ட்ரெய்னிங் இல்லாத உபாத்தியாயர்களின் மாதச்சம்பளம் 10 ரூபாய்க்கு உயர்த்தப்படும்.

ட்ரெயினிங் உள்ள ஹெட்மாஸ்டர்கள் அதாவது தலைமை உபாத்தியாயர்களுக்கு மாதம் 12 ரூபாய்க்குக் குறையாமல் சம்பளம் கொடுக்கப்படும்.

ட்ரெயினிங் உள்ள உதவி உபாத்தியாயர்களுக்கு மாஸம் 11 ரூபாய்க்குக் குறையாமல் சம்பளம் கொடுக்கப்படும்.

ட்ரெயினிங் இல்லாத தலைமை உபாத்தியாயர்களுக்கு மாஸம் 11 ரூபாய்க்குக் குறையாத சம்பளம் கொடுக்கப்படும்.

சிந்து என்னுமிடத்தில் ட்ரெயினிங் இல்லாமல் மற்ற விஷயங்களில் வேலைக்கு லாயக்கான உபாத்தியாயர்களுக்கு மாஸம் ஒன்றுக்கு 10 ரூபாய்க்குக் குறையாமலும் 15 ரூபாய்க்கு அதிகப்படாமலும் சம்பளம் கொடுக்கப்படும்.

AGRICULTURAL DEGREES.

விவஸாயப் பட்டங்கள்.—இனிமேல் விவஸாய காலேஜ்களில் படித்துத்தேறும் பிள்ளைகளுக்கு பீ.ஏ. எம்.ஏ. என்பது போல ஒரு பட்டம் கொடுக்கப்படும். இந்தப்பட்டம் யூனிவர்ஸிடி என்கிற ஸர்வகலாசாலையைச் சேர்ந்த பட்டமல்ல. ஆனால் இந்தப் புதுப்பட்டம் கவரன்மென்டாரால் ஒப்புக்கொள்ளப்படும். இந்தப்பட்டம் பெற்றவர்களுக்கு அந்தந்த மாகாண கவரன்மென்டார் அவர்கள் இஷ்டப்படி உத்தியோகங்கள் கொடுக்கலாம்.

A UNIVERSITY IN BENARES.

காசியில் ஒரு யூனிவர்ஸிடி.—காசியில் ஒரு இந்திய யூனிவர்ஸிடி அதாவது ஸர்வகலாசாலை ஸ்தாபிக்க எட்வர்ட் சக்கிரவர்த்தியின் கற்பனையைப் பெற, கூடிய சீக்கிரத்தில் இந்த நாட்டிலிருந்து ஒரு விண்ணப்பம் அனுப்பப்படும். அந்த விண்ணப்பத்தில் இப்போது கையெழுத்துகள் வாங்கப்பட்டு வருகின்றன. அந்த யூனிவர்ஸிடி மதப்படிப்பும் லௌகிகப் படிப்பும் இரண்டும் பிள்ளைகளுக்குச் சொல்லி வைக்கப்படுவதை மேற்போட்டுக் கொள்ளும்.

SCHOOL GARDENS.

பள்ளிக்கூடத்துத் தோட்டங்கள்.—கிராமப் பள்ளிக்கூடங்களை ஒட்டி சிறு தோட்டப்பண்ணைகள் இருந்தால் அவைகள் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் பயிர்செய்யும் முறைகளைக் கவனித்துக் கற்றுத் தேர்ச்சியடைந்து அதனால் அவர்களுக்குப் புத்திக் கூர்மையும், அறிவு விசாலமும், காரணகாரிய விவேகமும், லோக வியாபாரங்களில் அநுபோகமும் உண்டாகக் கூடுமென்று நினைத்து, இவ்விதமான பண்ணைத்தோட்டங்களை ஸ்தாபிப்பதைப்பற்றிக் கவரன்மெண்டார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

A VISIT TO THE SINGARENI COAL MINES.

சிங்கரேனி நிலக்கரிச் சுரங்கங்களைப்பார்த்தல்.—இந்தியச் சிறுவர்களின் படிப்பு பள்ளிக்கூடங்களில் புஸ்தகங்களைப் படிப்பதினால் மட்டும் சம்பூரணத்தையும் தேர்ச்சியையும் அடையமாட்டாதென்றும், அவர்கள் பள்ளிக்கூடங்களை விட்டு சமயம் வாய்க்கும் போது வெளியே போய் இயற்கைப் பொருள்களின் அமைப்பையும் அவைகளிடம் காணப்படும் விசேஷங்களையும் தெரிந்து கொள்வதனால் அவர்களுடைய புஸ்தகப் படிப்பு முதிர்ச்சியடையுமென்றும் நாம் சொல்ல வேண்டியது அநாவசியம். சமீபத்தில் குண்டூர் ஹைஸ்கூலில் வாசிக்கும் ஒரு கூட்டம் பிள்ளைகள் (55 பேர்) சிங்கரெனி நிலக்கரிச் சுரங்கங்களைப் போய்ப் பார்த்துவிட்டு வர, உதவி உபாத்தியாயர்கள் சிலரோடு கூட அந்த ஹைஸ்கூல் ஹெட் மாஸ்டரால் அனுப்பப் பட்டார்கள். அந்தச்சிறுவர்கள் அந்தச்சுரங்கங்களில் இரண்டு நாள் தாமதித்து அந்தச் சுரங்க வேலைகளைப் பற்றிய நுட்பங்களை நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டு வந்தார்கள். அந்த சுரங்கங்களிலுள்ள உத்தியோகஸ்தர்கள் சிறுவர்களிடத்தில் வெகு ஆதரவாயிருந்தார்களென்று தெரிகிறது.

LITERARY NOTES.

புஸ்தகக் குறிப்புகள்.

IVANHOE.

ஐவன்ஹோ.—இது ஆங்கிலேய பாஷையில் நாவல்கள் எழுதுவதில் பிரசித்திபெற்ற ஸர் வால்டர் ஸ்காட் என்பவரால் இயற்றப்பட்ட இதே பெயருள்ள மூலக்கிரந்தத்தின் சுருக்கமான மொழி பெயர்ப்பு. ஆங்கிலேய ஜாதியாரின் ஆளுகைக்குள் நாம் இருப்பது பற்றி அவர்களுக்கும் நம்மவருக்கும் பரஸ்பரம் நேசப்பான்மை அதிகரிப்பதற்கு அவர்களுடைய ஆசாரவிவகாரங்களும் பழக்க வழக்கங்களும் நமக்குத் தெரிந்திருப்பதும் நம்முடைய சம்பிரதாயங்கள் அவர்களுக்குத் தெரிந்திருப்பதும் மிகவும் அவசியமாகையால் அதற்கு நம்மவருடைய கிரந்தங்களை அவர்கள் படிப்பதும் அவர்களுடைய நூல்களை நாம் படிப்பதுமே சிறந்த சாதனமாகும். ஆகவே நம்முடைய கிரந்தங்கள் ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்தும் மற்ற தேச பாஷைகளிலிருந்தும் இங்கிலீஷில் மொழி பெயர்க்கப்படுவது போல் இங்கிலீஷ் பாஷைப் புஸ்தகங்களும் தமிழில் மொழி பெயர்கப்படவேண்டும். இந்த நோக்கத்தை முன்னிட்டு இந்த **ஐவன்ஹோ** என்னும் புஸ்தகம் தமிழில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது தற்காலத்துக்கு மிகவும் பிரயோஜனகரமென்று நினைக்கிறோம். கிறிஸ்துவர்களுக்குப் புண்ய பூமியாய் ஆசியா கண்டத்திலிருக்கும் **பலஸ்தீன** நாட்டை முகம்மதியரின் வசத்திலிருந்து மீட்பதற்கு இங்கிலாந்தின் கிறிஸ்தவ அரசனை முதலாம் ரிச்சார்ட் என்பவன் செய்த க்ரூஸேட் சம்பந்தமான கற்பனைக் கதையொன்று இதில் வெகு அழகாய் சொல்லப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாய் அக்காலத்திய ஐரோப்பியர்களென்ன ஸாரஸென்கள் என்ன முகம்மதியரென்ன இவர்களின் பழக்க வழக்கங்கள் சமயோசிதமாய் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மொழி பெயர்ப்பின் நடை மிக சுலபமாய் இல்லாமற் போனாலும் அதிக கடினமாயில்லாமல் சொல் நயம் செறிந்திருப்பதால், தமிழபிவிர்த்தியில் நாட்டமுடையவரெல்லோரும் இதனை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். இந்த நூலாசிரியர் ஸர்வால்டரின் மற்ற நாவல்களுக்கும் இந்தமாதிரியாகவே சுருக்கமான மொழி பெயர்ப்புகள் செய்து வெளியிடும்பட்சத்தில் தமிழ் நாட்டுக்குப் பெரிய உபகாரமாகும். 15 அத்தியாயங்களும் 72 பக்கங்களுமுள்ள இந்த நூலின் விலை 0-6-0. இதனை எழுதியவர் கும்பகோணம் நேட்டிவ் ஹைஸ்கூல் உபாத்தியாயரான எஸ். பஞ்சாபகேசய்யர் பி.ஏ.

REVENUE NOTES.

ரெவினியூக் குறிப்புகள்.

REVENUE BOARD.

ரெவனியு போர்ட்.—சென்னை ராஜதானி ரெவனியூ போர்டில் நிலவரி விஷயங்களையும் காட்டிலாகா விஷயங்களையும் கவனித்து வந்த மெம்பர் இது வரையில் லாண்ட் ரெவனியூ கமிஷனர் என்ற பேரால் விளங்கி வந்தார். இனி மேல் அவருக்கு **லாண்ட் ரெவனியூ அண்ட் பாரெஸ்ட்** கமிஷனர் என்று பெயர்.

WATER RATE.

தண்ணீர்த் தீர்வை.—தண்ணீர் தானாய் ஓடிப் பாயும் நிலங்களுக்கு வசூல் செய்யும் தீர்வையைக் காட்டிலும் இறைத்துப் பாய்ச்சும் நிலங்களுக்கு கவர்ன்மெண்டார் தண்ணீர்த் தீர்வை கொஞ்சம் குறைத்து வசூல் செய்வது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் இறைத்துப் பாய்ச்சும் நிலங்களுக்கு நிலக்காரன் செய்த வேலையாலோ மற்ற எந்தக் காரணத்தினாலோ தண்ணீர் தானாகவே ஓடிப்பாயும் பட்சத்தில் பூரா தீர்வையும் வசூல் செய்யப்படும்.

AGRICULTURISTS LOANS.

விவஸாயிகளுக்குக் கடன்.—"அக்ரிகல்சரிஸ்ட்ஸ் லோன்ஸ் ஆக்ட்" என்னும் விவஸாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்காக ஏற்பட்ட சட்டப்படி சர்க்காரார் விதைகள், உழவுமாடுகள், கரும்பு ஆலைகள், நீர் இறைவை இஞ்சின்கள், குழாய்கள் ஆகிய இவைகளை வாங்குவதற்காக கடன் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு கச்சேரியிலும், ரிவினியூ இன்ஸ்பெக்டரிடத்திலும் இந்தக் கடன்களைப்பற்றிய விவரங்களும், மனுப்பாரங்களும், கிடைக்கும். நீர் இறைவை இஞ்சின் வேண்டியவர்கள், சென்னப்பட்டணம் கைத்தொழிலிலாகா டைரெக்டர் அவர்களைக்கேட்டால், அவர் இஞ்சின்வைத்து இறைப்பதற்குப் போதுமான தண்ணீர் கிணற்றில் கிடைக்குமா என்றும், இன்ன அளவு இஞ்சின்கள் வேண்டியிருக்குமென்றும் சொல்லுவார்.

SCIENTIFIC NOTES.

சாஸ்திரீயக் குறிப்புகள்.

PULSE.

தாது.—ஒரு நிமிஷத்துக்கு முயலின் தாது 200 மேனிக்கும், நாயின் தாது 90 மேனிக்கும், மனிதன் தாது 70 மேனிக்கும், குதிரையின் தாது 40 மேனிக்கும், யானையின் தாது 30 மேனிக்கும், அடிக்கிறது.

GLASS STOPPERS.

சீசாக் கண்ணாடி மூடிகள்—சீசாக்களை கண்ணாடி மூடிகளால் மூடுகிறோம். இப்படிச் செய்வதால் இதிலுள்ள திராவகம் அதி சீக்கிரத்தில் ஆவியாக மாறிவிடுகிறதென்றும், இப்படிக்கில்லாமல் சீசாவுக்குத் தக்கையால் செய்த மூடியை உபயோகித்தால் அவ்வளவு குறையாதென்றும் தெரிகிறது.

WATER.

ஜலம்.—டர்னிப் என்பது ஓர்வகைக்கிழங்கு. இதில் 100-க்கு 90-பாகம் நீரிருக்கிறது. காப்பேஜ் (மொட்டைக் கோசு) என்ற ஓர்வகைக்கீரையிலும் இம்மாதிரியே யிருக்கிறது. வெள்ளரிக்காய் பூசனிக்காய் முதலியவைகளில் 100-க்கு 95-பாகம் நீரிருக்கிறது.

THE HORE-POWER OF AN ORDINARY RY. ENGINE.

ஒரு சாதாரண ரயில்வே இஞ்சினுடைய சக்தி.—ஒரு சாதாரண ரெயில்வே இஞ்சினுடைய சக்தி ஒரு ரெஜிமெண்டு அல்லது சேனையிலிருக்கும் எல்லாக் குதிரைகளுகும் சேர்ந்து இழுக்கக்கூடிய சக்தியாம். அதாவது அதிக பலமான 900 குதிரைகள் சேர்ந்திழுக்கக்கூடிய பாரத்தை ஒரு இஞ்சின் இழுக்குமென்று கணிக்கப்படுகிறது. இதனால் நீராவியின் பிரயோஜனம் விளங்கும்.

HALLEY'S COMET.

ஹாலீ வால்நக்ஷத்திரம்.—இந்த வருஷம் மே-மாதத்தில் ஓர் வால்நக்ஷத்திரம் தோன்றும். இது ஏற்கனவே 1457, 1532, 1607, 1682, 1705, 1758, 1835, ஆகிய இந்த வருஷங்களில் காணப்பட்டதாம். இந்த வால் நக்ஷத்திரம் ஆகாயத்திலிருந்து பூமியை நோக்கிவரும்பொழுது நாள் ஒன்றுக்கு 25-லக்ஷம் மைல்கள் (அதாவது நிமிஷம் ஒன்றுக்கு 1736-மைல்கள்) வீதம் வேகமாய் பூமியைக் கிட்டிக்கொண்டு வருமாம். சில வால் நக்ஷத்திரங்கள் ஒழுங்காய் 5—10—30-வருஷங்களுக்கு ஒரு தடவை ஆகாயத்தில் தோன்றும். 1682-வருஷத்தில் ஹாலி என்னுமோர் ஆங்கிலேய வானசாஸ்திரியிருந்தார். அவர் இப்படிப்பட்ட வானஜோதிகளை மிக ஊக்கமாயும், கூர்மையாயும், அவைகளின் காலத்தோற்றம் முதலியனவைகளையும் கவனித்து வந்தார். 1682ம்-வருஷத்தில் தோன்றிய ஒரு வால்நக்ஷத்திரத்தின் தன்மையையும் அதற்கு முன்பாக 1607, 1532, 1457, முதலிய வருஷங்களில் காணப்பட்ட வால் நக்ஷத்திரங்களின் தன்மையையும் கவனித்ததில் அவைகள் ஒன்றேயென்று நிர்மாணித்தார். மேலும் அதே வால் நக்ஷத்திரம் இந்த உலகத்தார்களுக்கு 75-வருஷங்களுக்கு ஒரு தடவை காணப்படுமென்றும், அவர் உத்தேசம் சரியென்றால் திரும்பவும் 1758-ல் காணப்படுமென்றும் சொன்னார். அந்தப்படியே 1758-ம் வருஷம், டிஸம்பர் 25-ல் அந்த வால் நக்ஷத்திரம்காணப்பட்டது. இப்பொழுது இந்த வால் நக்ஷத்திரத்தை வெடியற்காலம் 4½ மணிக்கு சுக்கிரனுக்குக் கீழே வடகிழக்கில் பார்க்கலாம்.

RIPENING GREEN FRUITS.

காய்களைப்பழுக்க வைத்தல்.—வாழைக்காயை வெட்டி சில நாளைக்கு வைத்திருந்தால் அது தானாகவே பழுத்து விடும். சீக்கிரம் பழுக்கவேணுமானால் வாழைக்காயை 'குடகாப்பு'ப்போட்டு நெருப்பு வைத்து தினம் காலமே ஸாயந்திரம் இரண்டு தடவை ஊதுவது வழக்கம். காயைப் பழுக்கவைக்க இன்னொரு உபாயம் உண்டு. பேரீச்சை பழுப்பதற்கு நாளானால் அதைப் பழுக்க வைப்பதற்காக அராபியர்கள் காடியை உபயோகப்படுத்துகிறார்களாம். இதையறிந்து ஏ. இ. வின்ஸன் என்பவர் பேரீச்சம் குலையின் மேல் அஸெடிக் ஆஸிட் என்னும் கடுமையான காடியை சுமார் அரைநாளுக்குத் தெளித்துக் கொண்டேயிருந்தார். பிறகு மூன்று நாளானதும் திவ்வியமான பேரீச்சம்பழம் ஆகிவிட்டதாம். காய்களின்மேல் காடியைத் தெளித்து வெயிலில் வைத்தால் இன்னும் சீக்கிரம் பழுக்குமாம். அல்லது கொஞ்சம் நெருப்பினால் சூடு உண்டாக்கினாலும் சீக்கிரம் பழுக்குமாம். இந்த மாதிரி செய்வதால் இவைகளை காய்களாகவே பறித்து எந்த இடங்களுக்கு அனுப்பவேண்டுமோ அங்கே அனுப்பினால் பழுக்கவைத்துக் கொள்ளலாம்.

LEGAL NOTES.

சட்டக் குறிப்புகள்

PLEADER.

ப்ளீடர்.—ஒரு கேஸின் விசாரணையைத் தள்ளி வைத்துக்கொள்ளும்படி பேசமட்டிலும் வக்காலத்து வாங்கிய ப்ளீடர் முழுக்கேஸையும் நடத்த வக்காலத்து வாங்கினவராக எண்ணப்படமாட்டார் என்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

RATE OF INTEREST.

வட்டி வீதம்.—ஹிந்துக்கள் கக்ஷிக்காரர்களாக இருக்கும் ஒரு பெந்தகப் பத்திரத்தில் பெந்தகம் வைத்துக் கடன்வாங்கியவர்கள் 100-க்கு இரண்டு ரூபாய் மேனிக்கு வட்டிசேர்த்துக் கூடின வட்டியும் முதலும் சேர்த்துச் செலுத்தி ஸொத்தை மீட்டுக் கொள்வதாக எழுதிக்கொடுத்திருந்தால் “100-க்கு இரண்டு வட்டி” என்பதற்கு 100-க்கு மாதத்திற்கு இரண்டு ரூபாய் வட்டி ’ என்று கக்ஷிக்காரர்கள் எண்ணி ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

A HINDU WIDOW'S RESIDENCE.

ஹிந்து விதவை ஜாகை.—ஒரு ஹிந்து விதவைக்குக் கொடுக்கப்பட்ட ஜாகை அவளுக்குப் போதுமா போதாதா என்கிற பிரஸ்தாபம் அந்தந்தக் கேஸிற்குத் தகுந்தபடி தீர்மானிக்கவேண்டும். இதைக் குறித்துக் கீழ்க்கோர்ட்டார்கள் என்ன முடிவு செய்திருக்கிறார்களோ அதில் ஹைக்கோர்ட்டார் இரண்டாவது அப்பீலில் பிரவேசிக்க மாட்டார்கள் என்று பம்பாய் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

CUTTING THE CROP.

மாதுலை அறுத்தல்.—ஒருவன் வயலில் நெல் சாகுபடியாயிருந்தது. அவன் சிலபேர்களிடத்தில் அந்த வயலைப்பார்த்துக்கொண்டு வரும்படிக்கும், அறுக்கும் தருணத்தில் தனக்குச் சொல்லி யனுப்பினால் தான் வந்து அறுவடை செய்வதாகவும் ஒப்புவித்திருந்தான். பார்த்து வந்தவர்கள் சொல்லாமல் அறுப்பறுத்து விட்டார்கள். இப்படிச் செய்தது திருட்டு என்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

ALIENATION BY WIDOW.

விதவை தன் ஸொத்தை பராதீனம் செய்தல்.—ஒரு விதவை ஸொத்தையெல்லாம் வேறொருவருக்கு ஸ்வாதீனம் செய்துவிட்டாள். ஸொத்தெல்லாம் தங்களுக்குச் சேரவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்த மூன்றுபேர்கள் ஸொத்தை எழுதிக்கொடுத்த கிரய சாஸனத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். 4-வது மனிதனாகிய வாதி கிரயசாஸன காலத்தில் எங்கேயோ போயிருந்தான். மூன்று பேர்களும் சாக்ஷிகளாக கையெழுத்துப்போட்டு கிரய சாஸனத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் வாதியும் அதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. மேலும் அவர்கள் சம்மதம் கொடுத்ததற்காக கொஞ்சம் ரூபாய் வாங்கிக்கொண்ட ஒரு விஷயத்தினாலேயே கிரயத்தை ரத்துசெய்ய முடியாது — மதராஸ் லா டைம்ஸ், 260 பக்கம்.

LIMITATION.

லிமிடேஷன்.—1882-ம் வருஷத்தில் ஒரு சேர்ந்த இந்துகுடும்பத் தலைவனால் பிதுரார்ஜிதமான குடும்ப ஸொத்து முதலில் ஒருவனிடம் பெந்தகம் வைக்கப்பட்டது. அதே ஸொத்து 1893-ம் வருஷத்தில் வேறொருவனிடம் இரண்டாம் பெந்தகம் வைக்கப்பட்டது. இரண்டாம் பெந்தகம் வைத்துக்கொண்டவன் முதல் பெந்தகக்காரனுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்து பெந்தகத்தை மீட்டு தான் வைத்துக்கொண்டு, இரண்டு பெந்தகங்களுக்கும் தனக்குச் சேரவேண்டிய தொகைக்கு வியாஜ்யம் கொண்டுவந்து 1895-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஒரு டிக்ரி பெற்றான். இந்த டிக்ரியை நிறைவேற்றி மேற்படி பெந்தகச் ஸொத்துக்களை ஏலத்திற்குக் கொண்டுவந்தான். ஏல விற்பனையும் கோர்ட்டாரால் 1907-ம் வருஷம் அக்டோபர் மாதம் 25 தேதி காயப்படுத்தப்பட்டது. இந்த வியாஜ்யத்தில் வாதி, பிரதிவாதியின் புத்திரர்களையும் பௌத்திரர்களையும் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கவில்லை. ஆகவே புத்திரர்களும் பௌத்திரர்களும் மேற்படி ஸொத்திலிருக்கும் தங்களுடைய பாகத்தை பெந்தகம் பெற்றவர் வாங்கியிருக்கும் டிக்ரி கட்டுப்படுத்த மாட்டாதென்று சொல்லி தங்களுடைய பாகத்தை வாங்கிக்கொள்ள வியாஜ்யம் கொண்டு வந்து ஒரு டிக்ரி பெற்றார்கள் இதன் பிறகு பெந்தகம் வைத்துக்கொண்டவன் தனக்குச் சேரவேண்டிய பெந்தகத் தொகையில் வீதப்படி புத்திரர்களிடமிருந்தும் பௌத்திரர்களிடமிருந்து. கிடைக்கவேண்டுமென்று 1907-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 6 தேதி வியாஜ்யம் கொண்டுவந்தான். இப்படி வியாஜ்யம் கொண்டு வரலாமென்றும் செல்லுபடியுள்ளதென்றும் இதற்கு லிமிட்டேஷன் ஆக்டின்படி காலாவதி தோஷம் உண்டாகவில்லை என்றும் அலகபாத் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

REGISTRATION OF DOCUMENTS.

பத்திரப் பதிவு.—சட்டப் பிரகாரம் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டிய ஒரு நிலத் தஸ்தாவேஜி ரிஜிஸ்டர் செய்யப்படாவிட்டால் அதை சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. ஆனால் ஸ்தாவர ஜங்கம ஸொத்துக்களைக்குறித்து எழுதப்பட்டிருக்கும் ஒரு பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்படாவிட்டால் இந்த தஸ்தாவேஜி ஸ்தாவர ஸொத்து சம்பந்தப்பட்ட வரையில் சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படாமற்போனபோதிலும் ஜங்கம ஸொத்து சம்பந்தப்பட்ட வரையில் சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படுமென்று பர்மா சீப் கோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிறார்கள்.

ADOPTION.

தத்து எடுத்துக் கொள்ளல்.—ஒரு பையனை தத்து எடுத்துக்கொண்டதற்கு சரியான சாக்ஷி ஏற்படாமலிருந்தது. அந்தப்பையன் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தான். அங்கேயுள்ள ரிஜிஸ்தரை பரிசோதிக்கையில், தகப்பனார் அல்லது கார்டியன் என்னும் கலத்தின் கீழ் தத்து எடுத்துக் கொண்ட தகப்பனுடைய பெயர் எழுதப்பட்டிருந்தது. இதுவுந்தவிர தகப்பனுக்கும் அவருடன் பிறந்தவர்களுக்கும் ஸொத்துக்களை பாகம் பிரித்துக் கொள்ளும் விஷயமாய் வியாஜ்யம் நடந்தபொழுது பையனுடைய பாத்தியதையைப்பற்றி ஒருவரும் கவனிக்கவேயில்லை. மேலும் வம்ஸாவளிப்பட்டியில் பையனை தத்து எடுத்துக்கொண்டிருக்கிற விஷயம் கண்டிருந்தது. ஆகையால் பையனை தத்து எடுத்துக்கொண்டதற்கு இவைகள் போதுமான சாக்ஷி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.—மதராஸ் லா. டைம்ஸ் 267 பக்கம்.

MEDICAL NOTES.

வைத்தியக் குறிப்புகள்.

QUANTITY OF WATER TO BE DRUNK.

தண்ணீர் சாப்பிடவேண்டிய அளவு—மனிதன் ஒருநாளுக்கு 2½ பைண்ட் (சுமார் ⅞ படி) ஜலங்குடிக்க வேண்டியிருக்கிறது. சுத்தமான சோடாவாட்டர் குடிக்க வயிற்றிலிருக்குங்கெட்ட ரசம் ஒழிந்து ஜீரணம் அதிகமுண்டாகிறது.

DOG TICKS.

நாய் உண்ணி.—நாய்களுக்கு உண்ணி முதலிய பூச்சிகள் பிடித்திருந்தால் கெரோஸின் எண்ணெய் தேய்த்து 15 நிமிஷம் விட்டுவைத்து சோப்புத் தேய்த்துக் குளிப்பாட்டிவைக்கப் பாபபைப்புத் கொடுப்பதோடு பூச்சியும் தொலையும்.

SYMPTOMS OF CHICKEN POX.

சின்னம்மையின் அறிகுறிகள்.—இதற்கு வருவதற்கு முன் ஒரு அறிகுறியும் கிடையாது. காய்ச்சலடியாமலே 30 நாழிகைக்குள் தடிப்புகள் உடம்பில் முதல் முதல் அதிகமாய்க் காணப்பட்டு, பெரிய அம்மையைப்போல் ஒரே தடவையில் கிளம்பாமல் விட்டு விட்டு அடிக்கடி தோன்றும். தடிப்புகள் 5-ம் நாளில் பெரிய அம்மையைப் போல் நீர்க் கோத்துக் கொள்ளாமல் கொஞ்சம் நாழிகைக்குள் நீர் கோத்துக்கொண்டு நடுவில் பள்ளமில்லாமலிருக்கும். இது 6 அல்லது 10 நாட்களுக்கு மேல் இருக்காது. அதற்குள் வியாதி சொஸ்தமாய் விடும். பெரிய அம்மையோ 21 நாளிலிருந்து 35 நாள்வரையிலிருந்து பிறகுதான் சொஸ்தமாகும்.

A MEDICINE FOR POX.

அம்மைக்கு நல்ல ஔஷதம்.—வெந்நீரும் அரிசி வேகவைத்த நீரும் (கொதிக்கும் நீரும்) கொடுத்து குணமாக்கலாமென்று ஒருவர் அனுபவத்தால் சொல்லுகிறார். வெந்நீர் கொடுத்த ஒரு மணி நேரத்திற்குப்பின் மறுபடியும் வெந்நீரும், மூன்றுவது மணிக்குக்கொதிக்கும் நீரும், மணிக்கு மணி மாற்றிக் கொடுத்து வருவது உத்தமம். சுலபமான வைத்தியம். இது தட்டுச்செலவுள்ளது அல்லாததாலும் கெடுதியைத் தரத்தக்கது அல்லாததாலும் பரிட்சிப்பது கஷ்டமல்ல.

THE LADIES' PAGE.

பெண்கள் பக்கம்.

◆

A BRAHMIN LADY ON FEMALE EDUCATION.

ஒரு பிராமண ஸ்திரீ பெண் கல்வியைப்பற்றி.—கஞ்சம் டிஸ்டிரிக்டு சோம்பேட்டை முன்சீபாகிய மிஸ்டர் பி. வெங்கடேஸ்வரராவ் பந்துலுவின் மனைவியாகிய ஸ்ரீமதி பங்காரம்மா மார்ச்சு௴ 22-ம் தேதி திருவல்லிக்கேணி ஹிந்து பெண் பாடசாலையில் பெண் கல்வியைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தாள். பெண் கல்வியில் இந்த அம்மா தமக்குள்ள சிரத்தையைக் காட்டும் பொருட்டு மேற்படி திருவல்லிக்கேணி பெண் பாடசாலைக்கு வருஷம் 12 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னாள். சோம்பேட்டையில் மூன்று வருஷத்திற்கு முன்னால் ஒரு பெண் பாட சாலை ஸ்தாபித்து அதற்குச் செல்லும் செலவில் முக்கியமான பாகத்தைத்தாமே கொடுத்துவருகிறாள்.

SWALLOWING GLASS PIECE.

கண்ணாடித்துண்டை விழுங்குதல்.—குழந்தை கண்ணாடித் துண்டை விழுங்கிவிட்டால் செய்யவேண்டிய பரிகாரமென்ன? பேதிக்குக் கொடு என்று சாதாரண ஜனங்கள் சொல்லுவார்கள். இது பிசகு, பேதிக்குக் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் கண்ணாடித் துண்டுகள் குடலில் சிக்கிக்கொண்டு காயமுண்டாக்கி ரணத்தையும் பின்பு மரணத்தையும் உண்டாக்கும். ஆதலால் பேதிக்குக் கொடுக்காமல் மலஞ்சிக்கும்படியான ரொட்டி, அரொருட் கஞ்சி, ஒட்மில் கஞ்சிமுதலியவைகளைக் கட்டியாகக் காய்ச்சிக் கொடுக்கவேண்டும். இவ்வித ஆகாரங்களால் மலம் இறுகி, கண்ணாடித் துண்டைச் சிக்கி மலம் இழுத்துக்கொண்டு வந்து விடும். மலத்தை ஒவ்வொரு நாளும் பரிசோதித்துப்பார்க்கவேண்டும்.

CANNOT CHANGE HABIT EASILY.

வழக்கம் லகுவில் விடாது.—இங்கிலாந்தில் ஒரு பாங்கியில் வேலைக்காரர்கள் காலையில் வேலைக்கு வரும்போது மணியைக்குறித்து அட்டெண்டென்ஸ் ரெஜிஸ்டரில் எழுதுவதோடு நாழிகழித்து வந்தால் அதன் காரணத்தையும் தங்கள் பெயருக்கு நேரே எழுதுவது வழக்கம். அந்த நாட்டில் பனி வெகு நேரம் வரையில் இருப்பது சகஜம். ஆகையால் முதலில் நாழிகழித்து வந்தவர் தம் பெயருக்கு நேரே பனி என்று எழுதிவிட்டுப்போய்விட்டால் பின்வந்தவர்கள் எழுதச் சோம்பலினால் "மேற்படி" என்று போடுவார்களாம். ஒருநாள் இப்படி மேற்படி என்று சுமார் 7, 8, ப் பேர் போட்டபிறகு ஒருவன் தன் பெண்டாட்டி இரட்டைப்பிள்ளைப் பெற்றாள் என்று காரணம் எழுதிப் போனானாம். அவனுக்குப் பின் வந்தவர்கள் எப்போதும்போல எண்ணிக்கொண்டு மேற்படி மேற்படி என்று எழுதிவிட்டுப்போய் விட்டார்களாம். முறைப்படி ரெஜிஸ்டரை குறித்த நேரத்தில் பாங்கியின் மானேஜர் எடுத்துப் பார்க்கும் போது ஒரே வரிசையாய் என் பெண்டாட்டி இரட்டைப் பிள்ளை பெற்றாளென்று எழுதியிருப்பதைக் கண்டு அதிசயித்து அவரவர்களைக் கூப்பிட்டு விசாரிக்கும்போது ஒருவனுக்கு மாத்திரம் அப்படி நேர்ந்ததென்று தெரிந்து சிரித்தாராம்.

COFFEE: HOW TO MAKE IT.

காப்பிவைக்கும் விதம்.—காப்பிவைக்கும் பாத்திரம் வாயகன்றதாயிருக்கவேண்டும். இதில் முன்னாடி தண்ணீரில் காப்பித்தூளைப் போடக்கூடாது. தண்ணீரை இந்தப்பாத்திரத்தில் ஊற்றி நன்றாய்க் கொதிக்கவைக்கவேண்டும். தண்ணீரைச்சுடவைக்கும் போது சூட்டினால் தண்ணீர் கடினமாகிறது. ஏற்கனவே ஒரு தரம் காய்ச்சிஆறின ஜலத்தை மறுபடி கொதிக்கவைக்கக்கூடாது. ஏனென்றால் இதை மறுபடி கொதிக்கவைத்து காப்பிப்பொடியைப்போட்டால் அதனுடைய சாரம் சரியாகத்தண்ணீரில் இறங்காது. ஆகையால் காப்பிவைப்பதற்கு வைக்கும் ஜலம் குளிர்ந்த ஜலமாகவே இருக்கவேணும். ஒரு கப் காப்பி தயார்செய்யவேண்டியதாயிருந்தால் ஒரு கப் தண்ணீரும், ஆவியாகப்போகும் தண்ணீருக்கு ஈடு செய்வதற்காகக் கூடக்கொஞ்சமும் ஊற்றிக் கொதிக்கவைக்கவேண்டும். நன்றாகக் கொதித்துவரும் போது காப்பிப்பொடியை அதில் கொட்டி அந்தப் பாத்திரத்தை அடுப்பிலிருந்து கீழே இறக்கிக்கொதி அடங்கும் வரையில் வைத்திருக்கவேண்டும். கொதிப்பு அடங்கிய பின்பு மறுபடியும் பாத்திரத்தை அடுப்பில் வைத்துக் கொதிக்க வைக்கவேண்டும். இப்படி மூன்று தடவை செய்ய வேண்டும். பிறகு பாத்திரத்தை எடுத்து அடுப்பின் பேரில் இரண்டு மூன்று தடவை தட்டினால் காப்பி வண்டலெல்லாம் பாத்திரத்தின் அடியில் தங்கும். மேலே நல்ல வாசனையுள்ள சுத்தமான டிகாக்ஷனிருக்கும். இந்த டிகாக்ஷனையே துர்க்கி தேசத்தார் வெகுவாய் சாப்பிடுகிறார்கள்.

THE BOYS' PAGE.

பையன்கள் பக்கம்.

PEPPER.

மிளகு.—மிளகுப்பயிர் மலையாளத்தில் விசேஷம். இது ஒருவகைக் கொடி. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் அடிவாரத்தில் ஏராளமாகக் கிடைக்கும். அங்கிருந்து கிழக்கே வயநாடு, குடகு முதலிய இடங்கள் வரையிலும், மரங்கள் இருக்கும். ஒவ்வொரு தோட்டத்திலும் கொஞ்சமாவது இருக்கும். ஆதியில் மலையாளத்தில் மட்டும் இருந்த போதிலும் நாளடைவில் நெடுந்தூரங்களுக்கு அனுப்பப்பட்டு, இப்போது கிழக்கே ஆஸ்திரேலியா வரையிலுமுள்ள ஒவ்வொரு தீவிலும் இதைப்பயிரிடுகிறார்கள். பூர்வம் தலைச்சேரியிலிருந்து ஏற்றுமதி செய்ததுபோக இப்போது மிளகு ஏற்றுமதிக்கு சிங்கப்பூரே விசேஷஸ்தலமாக இருக்கிறது. தலைச்சேரியைக் காட்டிலும் சிங்கப்பூரிலிருந்து எவ்வளவோ நூறு மடங்கு மிளகு ஏற்றுமதியாகிக்கொண்டு வருகிறது. இவ்வளவு பின்னடைந்திருந்தபோதிலும் இன்னமும் தலைச்சேரி மிளகுக்கு மிஞ்சி உயர்ந்த மிளகு உலகத்தில் இல்லை என்று எல்லாரும் ஒப்புக்கொள்வார்கள். மிளகுப்பயிர் விளைவதற்கு இந்தியாவின் மேல்சமுத்திரக்கரையே சிறந்த பூமிபோல் தோன்றுகிறது.

இந்துதேச சரித்திரத்திலே மிளகுப்பயிருக்கு ஒரு விசேஷ மஹத்வம் இருக்கிறது. மற்றப் பயிர்களை விட இந்தப் பயிரே இந்தியாவின் தலையில் எழுதியது என்று சொல்லலாம். ஐரோப்பிய வியாபாரிகளை முதல் முதல் இந்தியாவிற்கு இழுத்து வந்தது மிளகுப் பயிர்தான். மிளகின் விலையை குறைப்பதற்காகவே வாஸ்கோடிகாமா "கேப் ஆப்குட் ஹோப்" என்று சொல்லப்படும் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி வந்து, மலையாளக் கரையில் இறங்கினார். அவர் வந்ததன் பலனாக மேற்கு சமுத்திரக் கரையில் போர்ச்சுகல் தேசத்தார்கள் குடியேறினார்கள். பிறகு டச்சுக்காரர்கள் வந்து, ஐரோப்பா முழுவதும் அவர்களே இந்த வியாபாரத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் இஷ்டப்படி மிளகின் விலையை உயர்த்தியபடியால் லண்டன் நகரில் பணம் பெருத்த வியாபாரிகளில் சிலர் கூடி இந்தியாவோடு நேரே வியாபாரம் செய்யவேண்டுமெனத் தீர்மானித்துக் கீழ் இந்தியா கம்பெனியை ஸ்தாபித்தார்கள். ஆதலால் இந்தியாவில் இங்கிலீஷ்க்காரர்கள் குடியேறியதற்கு முதல் காரணம் மிளகுப் பயிர்தான். இந்த பூமியிலுள்ள பலவித ஜாதியார்களையும் ஒரே ஆளுகையில் கொண்டுவந்ததும் மிளகு தான்.

A CURIOUS COW.

ஒரு விநோதப்பசு.—கொஞ்ச நாளாக சென்னப் பட்டணத்தில் நடக்கும் காட்சிகளில் ஒரு விநோதப் பசுவைப் பார்க்கலாம். இதற்கு ஆறுகால், இரண்டு வால், ஒரு உடல், இரண்டுமடி, ஒரு முகம். இது இயற்கைப் பிறப்பின் அதிசயமே.

POPULATION.

ஜனத்தொகை.—இந்தியா கவர்னர் ஜெனரலின் ஆளுகைக்கும் சீனதேசத்துச் சக்கரவர்த்தியின் ஆளுகைக்கும் சேர்ந்து உட்பட்டிருக்கும் ஜனங்களின் மொத்தத்தொகை, இந்த உலகத்தின் ஜனத்தொகையில் அரைப்பங்கு இருப்பதாகத்தெரியவருகிறது.

SMOKING BY YOUNG MEN.

சிறுவர்கள் சுருட்டுக் குடித்தல்.—சிலோன் நாட்டுச் சிறுவர்கள் புகையிலைச் சுருட்டுகள் குடிக்கக் கூடாதென்பதைப்பற்றிய கவர்ன்மெண்ட் சட்டம் இந்த மாதம் 1-ந்தேதி முதல் அந்த நாட்டில் ஊர்ச்சிதத்திற்கு வந்து விட்டது. அந்த நாட்டுக் கடைக்காரர்கள் 16-வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்குப் புகையிலைச் சரக்கையே, அது இலையாயிருந்தாலுஞ் சரி, சுருட்டாயிருந்தாலுஞ்சரி, விற்கக்கூடாது. சிறுவர்களிடம் புகையிலைச் சாமான்கள் இருக்கக் கண்டால் போலீஸார் அவைகளை அவர்களிடமிருந்து உடனே பிடுங்கிக்கொண்டு விடுவார்கள்.

THE SAGACITY OF PARROTS.

கிளிகளின் சாதுர்யம்.—வைசிராய்ப் பிரபு பரோடா ஸமஸ்தானம் சென்ற காலத்தில் நாலு விதமான ஆட்டவினோதங்கள் நடந்தன. கிளிகள் செய்த ஸாகஸம் மிகவும் கொண்டாடத்தக்கது. ஒரு கிளி மோட்டார் வண்டியில் உட்கார்ந்து வண்டியை ஒட்டிற்று. இன்னொரு கிளி துப்பாக்கி பார்செய்து சுட்டது. மூன்றாவது வில்லில் அம்பை வைத்து அடித்தது. நான்காவது கிளியோ 3-சக்கிர வண்டியின் மேலேறி ஸவாரி செய்தது. துப்பாக்கியை பார் செய்து சுடும் கிளி ஒன்றை சென்னப்பட்டணம் பீபிள்ஸ் பார்க் வேடிக்கையில் அனேகம்பேர்கள் பார்த்திருக்கலாம்.

INDIAN NEWS.

இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

——(॥)——

THE MAHARAJAH OF BARODA.

பரோடா மகாராஜா.—பரோடா மகாராஜா தமது மகாராணியுடன் ஜப்பானுக்குப் போயிருக்கிறார். அவர் 8-மாஸம் போல் தூரதேசங்களில் சுற்றிவிட்டு தமது சமஸ்தானத்துக்குத் திரும்புவாரென்று தெரிகிறது.

HELPING LITERATURE.

படிப்புக்கு உதவி.—ஆனரபில் போப்பிலி மஹாராஜா அவர்கள் 'விஜ்ஞானசந்திரிக்கா மண்டலி' என்னும் தெலுங்கு சங்கத்துக்கு உபயோகமுள்ள புஸ்தகங்கள் பிரசுரஞ்செய்வதற்காக ரூ. 1000 நன்கொடை கொடுத்திருக்கிறார்.

A DONATION TO A COLLEGE.

ஒரு காலேஜுக்கு நன்கொடை.—வடக்கே அலிகர் என்னும்பட்டணத்திலுள்ள மகமதிய காலேஜுக்கு, க்வாலியர் மகாராஜா லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்.

A GIFT.

ஒரு நன்கொடை.—பிட்டாபூர் ராஜா அவர்கள் திருவல்லிக்கேணி விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரியில் எப்பொழுதும் ஸ்திரமாய் இரண்டு நோயாளிகளுக்கு வேண்டிய ஸௌகரியங்களை ஏற்பாடு செய்திருக்கிறார். அதற்காக 4000 ரூபாய் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்.

THE MAHARAJAH OF BOBBILI.

பொப்பிலி மகாராஜா.—மார்ச்சு௴ 24-ந்தேதி மத்தியானம் பொப்பிலி மஹாராஜா அவர்கள், கோட்டை கவுன்ஸிலில் மெம்பர்கள் செய்யும் வழக்கப்படி சத்தியம் செய்து கவர்னரின் நிர்வாக சபையில் மூன்றாவது மெம்பர் வேலையை சார்ஜ் பெற்றுக்கொண்டார். அந்தத்தருணத்தில் 14 குண்டுகள் (வேட்டுக்கள்) போடப்பட்டன.

THE THIRUVADUTHURAI MUTT.

திருவாடுதுறை மடம்.—திருவாடுதுறை ஆதீனத்தில் சிறந்த வித்வானாயிருந்த ஸ்ரீமீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களின் குமாரர் ஸ்ரீசிதம்பரம் பிள்ளைக்கு ஷை ஆதீன கர்த்தாவாகிய ம-ா-ா-ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் அவர்களால் மாயூரத்தில் வசிப்பதற்காக ஒரு வீடு கொடுக்கப்பட்டது. தமிழ் வித்வான்களை ஆதரிப்பதில் இந்த ஆதீனம் பேர்பெற்றதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

A DONATION TO THE HINDU HIGH SCHOOL.

ஹிந்து ஹைஸ்கூலுக்கு ஒரு நன்கொடை.—சப்ஜட்ஜியாயிருந்து இறந்துபோன வி. ஸ்வாமிநாதய்யர் ஞாபகச்சின்னமாக அவருடைய தம்பி ஹைகோர்ட்டு ஜட்ஜி, வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் திருவல்லிக்கேணியிலுள்ள ஹிந்து ஹைஸ்கூலுக்கு 1000 ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். இந்தத்தொகையின் வரும்படியைக் கொண்டு, ஷை ஸ்கூலில் படித்துத்தேறும் சில பையன்களுக்கு இனாங்கள் கொடுக்கப்படும்.

FORESTS IN INDIA.

இந்தியாவிலுள்ள காடுகள்.—இப்போது இந்தியாவில் கவர்ன்மெண்டாருடைய பார்வையிலிருக்கும் காடுகளின் விஸ்தீரணம் 2,40,000 சதுரமைல், அதாவது, தேசத்து, மொத்த விஸ்தீரணத்தில் ஐந்தில் ஒரு பாகம். இந்தக்காடுகளால் கிடைக்கும் மொத்த வரும்படி 1906-07ம் வருஷத்தில் 17,76,000 பவுன். செலவுபோக கவர்ன்மெண்டுக்கு லாபம் 8,39,000 பவுன், அதாவது, 1¼ கோடி ரூபாய்க்குமேல் கவர்ன்மெண்டுக்கு லாபம் கிடைக்கிறது.

THE PONNERI CATTLE SHOW.

பொன்னேரி மாட்டுச் சந்தை.—சென்னப்பட்டணத்துக்கு வடக்கேயுள்ள செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரியில் இந்த மாதம் 24 தேதி முதல் அடுத்த மே மாதம் 2-ந்தேதி வரையில் ஒரு மாட்டுச் சந்தை அந்தவூர்த் திருவிழாவை யொட்டிக் கூடுமாம். மாட்டுச் சந்தைக்குக் கொண்டுவரப்படும் கால்நடைகளின் தீவனத்துக்கு வேண்டிய வைக்கோல் அந்தவூர் ரெவினியூ அதிகாரியால் சேகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

THE BHUVANESHWAR TEMPLE.

பூவனேசுவரர் கோயில்.—வடக்கே ஒரிஸ்ஸா நாட்டைச் சேர்ந்த பூரி என்று சொல்லப்படுகிற ஜகந்நாதத்துக்குப்பக்கத்திலேயுள்ள பூவனேசுவரர் கோயில் தீப்பட்டு வெந்து போய் விட்டது. அந்தத் தீவிபத்தில் 8-மனிதர்களும் பல பசுமாடுகளும் இறந்துபோய் விட்டார்களாம். இன்ன விதமாய்த் தீப்பிடித்ததென்ற விவரம் தெரியவில்லை.

THE RELIGIONS OF THE WORLD.

உலகத்து மதங்கள்.—உலகத்தில் 154 கோடி 45 லக்ஷத்துப்பதினாயிரம் ஜனங்கள் இருக்கிறார்கள். இதில் 43 கோடி, 49 லக்ஷத்து நாற்பதினாயிரம் ஜனங்கள் கிருஸ்தவர்கள். 17 கோடி, 52 லக்ஷத்து, தொண்ணூறாயிரம் பேர்கள் மகமதியர்கள். ஒரு கோடி 8 லக்ஷத்து அறுபதினாயிரம் பேர்கள் ஜூமதத்தார்கள். 30 கோடி ஜனங்கள் கன்பூஷியன்ஸ், 21 கோடி 40 லக்ஷம் பேர்கள் பிராமணர்கள். 12 கோடி 10 லக்ஷம் பேர்கள் பௌத்தர்கள். மற்றப் பேர்களெல்லாம் பலவித மதத்தார்கள்.

THE HIGH PRICES ENQUIRY.

உணவுப்பொருள்களின் விலையேற்றத்தைப் பற்றிய விசாரணை.—இந்தியா நாடெங்கும் உணவுப்பொருள்களின் விலைகள் தூக்கி நிற்பதற்கு என்ன காரணமென்று விசாரித்தறிய ஸ்பெஷல் ட்யூட்டியில் வைக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் கே. எல். தத்தா ஸிம்லா போய்ச் சேர்ந்து அந்த விஷயத்தைப்பற்றி விசாரணை செய்யத் தொடங்கி விட்டார். அவர் தமது விசாரணையை நடத்தி எவ்விதமான முடிவுக்கு வருவாரோ தெரியவேண்டும்.

THE MADURA CATTLE SHOW.

மதுரைக்கால் நடைக் காட்சி.--1910௵ ஏப்பிரல்௴ 24, 25, 26தேதியாகிய தமிழ் ஸாதாரண௵ சித்திரை௴ 12, 13, 14 தேதிகளில் மதுரையில் நடக்கிற சித்திரைத் திருவிழாவை ஒட்டி ஆற்றுக்கு வடபுறம் மாட்டுத்தாவணியில் வருஷாந்திரக் கால்நடைக்காட்சி நடக்கப்போகிறது. சிலாக்கியமான கால்நடைகளைக் காட்சிக்குக்கொண்டு வருபவர்களுக்கு தங்கப்பதக்கங்கள், பணம், ஸர்ட்டிபிக்கேட் முதலியவைகள் கொடுக்கப்படும்.

THE MADRAS PROVINCIAL CONFERENCE.

சென்னை மாகாணக் கான்பரென்ஸ்.—சென்னை மாகாணக் கான்பரென்ஸ் இந்த வருஷம் ஜூன் மாஸம் கர்நூலில் நடக்கப்போகிறது. அந்தக்கான்பரென்ஸ் உபசரணைக் கமிட்டியார் மீட்டிங்குகூடி ஜில்லாகாங்கிரஸ் கமிட்டியார்கள் பெரும்பாலரின் அபிப்பிராயப்படி மிஸ்டர் பி. ஆர். சுந்தர அய்யரை கான்பரென்ஸ் ப்ரெஸிடெண்டாய் ஒரே மனதாய்த் தெரிந்தெடுத்தார்கள்.

FOREIGN NEWS.

அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

A CO-OPERATIVE BAKERY.

கோவாபரேடிவ் ரொட்டிக்கிடங்கு.—ஆஸ்திரியாவில் தலைமைப்பட்டணமாகிய வியென்னாவில் கோவாபரேடிவ் முறையில் ஒரு ரொட்டிக்கிடங்கு ஏற்பட்டு வெகு சீராக நடந்துவருகிறதாம். 50,000-முழு ரொட்டிகள் அதில் தினசரி தயாராகின்றனவாம். அதில் 70,000-பேருக்கு மேலேயே மெம்பர்களிருக்கிறார்கள். யந்திரக்கருவிகள், சரக்குகள், எல்லாம் முதல் தரமானவைகள். முக்கியமாகக் கவனிக்கவேண்டியது அந்த யந்திரசாலையில் உழைக்கும் வேலைக்காரருடைய தசை. ஸாமான்யமாய் முதலாளிகள் பணம்போட்டுக் கூட்டு வியாபாரம் அல்லது தொழில் நடத்துவதில், கூலிக்காரருக்கு லாபத்தில் ஒருகாசு கிடையாததுடன், வேலை சரியாக வாங்கிவிடுகிறார்கள். இதிலோ, கூலிக்காரரே முதலாளிகளுமாதலால், வேலை, தேகசௌக்கியம், கூலி, முதலிய எல்லா விஷயங்களும் அவர்களுடைய க்ஷேமத்தைக் கோரியே ஏற்படுகின்றன.

EXPORT OF CATTLE.

மாடுகள் ஏற்றுமதி.—சென்னப்பட்டணத்திலும் நாகப்பட்டணத்திலும் மாடுகளுக்கு நோய் வந்திருப்பதால் இந்த இடங்களிலிருந்து ஸுமாட்ரா தீவுக்கு மாடுகள் ஏற்றக்கூடாதென்று கவர்ன்மெண்டார் நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். இதை மாடுகளை ஏற்றுமதி செய்யும் வியாபாரிகள் அறியவேணும்.

PRICKLY PEAR.

நாகதாளி—தானே வளர்ந்து அதிகப்பட்டு கிரு ஷிக்கு இடையூறாகி எவ்வாறு இதை வளராமல் ஆக்குகிறதென்று கவலைப்படும்படியிருக்கும் பலகை கள்ளி அல்லது நாகதாளி என்னும் அசரச்செ க்வீன்ஸ்லாண்டில் மிக அதிகப்பட்டதினால் அந் குள்ள கவர்ன்மெண்டார் இதனால் ஏதாவது உ யோகமுளதெனக் கண்டுபிடிக்கவோ அல்லது இதை நசிப்பிக்கலாமெனச் சோதனைக்காட்டவோ செய்பவர்கட்கு 10,000 பவுன் இனாம் கொடுப்பதாக பிரசுரஞ்செய்தார்கள். இதனால் ஓர் தைலம் எடு கலாமென்றும், வேறு பதார்த்தங்கள் சேர்த்து தின்ன உபயோகிக்கலாமென்றும், கடுதாசி, சர்க்கரை முதலியவைகள் செய்யலாமென்றும் கண்டுபிடிக் லாயிற்று. இந்தச் செடி, தென்னிந்தியாவின் அநே கம் இடங்களில் உண்டு.

SEASON.

கால ஸ்திதி.

RAINFALL.

மழை.—ஏப்பிரல்மீ 1-தேதியிலிருந்து எப்பிரல்மீ 28-ம்தேதி முடியப் பெய்தமழை அளவும், இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், கீழே அங்குலத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	..	1
வால்டேர்	..	1
காக்கினாடா	..	..
மசூலிப்பட்டணம்	..	..
நெல்லூர்	..	..
மதராஸ்	..	..
கடலூர்	..	1
நாகப்பட்டணம்	..	1
பாம்பன்	3	2
கொழும்பு	6	12
திருவனந்தபுரம்	6	4
கொச்சி	7	5
கள்ளிக்கோட்டை	4	4
மங்களூர்	..	2
மெர்க்காரா	3	2
ஐதராபாத்	..	..
ரெய்ச்சூர்	..	1
பல்லாரி	..	1
கர்நூல்	..	1
கடப்பை	..	1
ஹாஸ்ஸான்	3	3
பெங்களூர்	..	1
கொடைக்கானல்	4	4
உதகமண்டலம்	1	..
கோயம்புத்தூர்	1	2
வேலூர்	1	..
சேலம்	1	2
திருச்சினாப்பள்ளி	1	2
புதுக்கோட்டை		..
மதுரை	1	2
திருநெல்வேலி	3	3

CROPS AND MARKET REPORT.

பயிர்களும் மார்க்கெட் நிலைவரமும்.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—மார்ச்சுமீ 19-தேதியிலிருந்து ஏப்ரல்மீ 16௳ வரையில் அந்நிய தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி சாமான்களின் விவரம்.—நூலும், முறுக்கு நூலும் 6,45,550 ராத்தல், காரிகத்துணிகள் 12,48,831 கஜம், சலவைத்துணிகள் 6,41,719 கஜம், இதர தினுசுத்துணிகள் 10,38,548 கஜம். இதே காலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 22,124 அந்தர் துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். மார்ச்சு மாஸம் 19-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூல் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-3 வரையில் இருந்ததாகத் தெரிய வருகிறது. ஏப்ரல் மாஸம் 27 தேதியன்று விசாரித்ததில் சென்னப்பட்டணத்தில் சீமைத்துணிகளைக் கேட்பாரில்லையாம். ஆனால் மல்லு தினுசுகள் நன்றாயும் காரிக தினுசுகள் உபாயமாயும் விற்கின்றனவாம். சீமையில் விலை இறங்கவில்லை. நூலில் வியாபாரமே இல்லை.

THE SESAMUM CROP.

எள்ளுப் பயிர்.—சென்னை ராஜதானியில் ரயத்துவாரிக் கிராமங்களில் 616,300 ஏகரில் எள்ளு சாகுபடியாயிருக்கிறதாகவும் இதிலிருந்து 50,900 டன் எள்ளு கிடைக்கலாமென்றும் மதிக்கிறார்கள். முந்திய வருஷத்தில் சாகுபடியான விஸ்தீரணம் 636,000 ஏகர், அதிலிருந்து உண்டான மாசூல் 52,700 டன். ரயத்துவாரி அல்லாத கிராமங்களில் 50,800 ஏகர் சாகுபடியாயிருக்கிறது. இதில் 4,600 டன் எள்ளுக்கிடைக்கலாம். ஒரு டன் என்பது 2,240 ராத்தல்.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற மார்ச்சு மாஸம் 19-ந்தேதிமுதல் ஏப்ரல் மாஸம் 16-ம் தேதி வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 48 அந்தரும், ஆஸ்டரியா ஹங்கேரியிலிருந்து 2,900 அந்தரும் இதரதேசங்களிலிருந்து ஒரு அந்தரும் இறக்குமதியாயின.

Supplement to "Practical Life"

"பிழைக்கும் வழி" க்கு அனுபந்தம்.

OUR NEW EMPEROR.
நமது புது சக்ரவர்த்தி.

OUR LATE EMPEROR.
காலஞ்சென்ற நமது சக்ரவர்த்தி.

G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.
ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கோ., 10, எஸ்பிளனேட், மதராஸ்.

MADRAS.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.
EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. — ஸாதாரண ஹு வைகாசிமீ —MAY 1910. — ஸஞ்சிகை 5. No. 5.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாவத்துவம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாசாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.				அந்நிய நாடு.		
வருஷம் 1க்கு	4	0	0	..	6	0	0
6 மாதத்திற்கு	2	0	0	..	3	0	0
தனிப்பிரதி	0	6	0	..	0	8	0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்படவேண்டும்.

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க மரியாதை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸமும் காகிதத்தின் ஒரேபக்கத்தில் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டில் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட், மதராஸ்.

Practical Life.

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland.				*Foreign.*		
	Rs.	A.	P.		Rs.	A.	P.
Per annum ...	4	0	0	... ...	6	0	0
" half year ...	2	0	0	... ...	3	0	0
Single copy ...	0	6	0	... ...	0	8	0

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers **Messrs. G. A. Vaidya Raman & Co., 10, Esplanade, Madras.**

EDITORIAL NOTES.

பத்திராதிபர் குறிப்புகள்.

Our late Emperor. காலஞ்சென்ற நமது சக்ரவர்த்தி.—மாக்ஷிமை தங்கிய நம்முடைய சக்ரவர்த்தியாகிய ஏழாவது எட்வர்ட் நாளது மே மாதம் 7-ம் தேதி சனிக்கிழமையன்று காலஞ்சென்றார் என்று கேட்க ரொம்பவும் விசனமாயிருக்கிறது. இவருக்கு வயது 68 ஆனபோதிலும் பட்டத்துக்குவந்து 9 வருஷந்தான் ஆயிற்று. இந்த சொல்பகாலத்திற்குள், வெகுகாலம் ஆண்டுவந்த மாக்ஷிமைதங்கிய விக்டோரியா மகாராணி அவர்களிடத்தில் ஜனங்கள் வைத்திருந்த அன்பைப்போல் அவ்வளவு அன்பு சம்பாதித்துக்கொண்டு விட்டார். இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் அவர் எல்லாப் பிரஜைகளிடத்திலும் ஏழைகளிடத்திலும் வைத்திருந்த அன்பே. இந்தியர்களுக்குள் கடவுளுக்கு அடுத்தபடி அரசன், தெய்வபக்தியும் ராஜபக்தியும் நம்முடைய தேசத்தார்களுக்கு ஸ்வபாவமாய் ஜாஸ்தி. அதன்மேல் ஜனங்களுடைய செல்வாக்கு ராஜாங்க விஷயங்களில் வரவர ஏறும்படிக்கு இந்தியர்களுக்குப் பெரிய உத்தியோகங்கள் கொடுத்ததோடு, சட்ட நிரூபண ஸபைகளைப் பெரியனவாக்கி அவைகளில் பொது ஜனப் பிரதிநிதிகளையும் அதிகப் படுத்தினதால் ஜனங்களுக்கு எட்வர்ட் சக்ரவர்த்தியினிடத்தில் அதிக ப்ரீதி விழக் காரணமாயிற்று. இந்த காரணங்களினாலும், உடம்பு அஸௌக்கியமாய் வெகுநாள் கிடக்காமல் திடீரென்று இறந்து போனதாலும், இந்திய ப்ரஜைகள் ரொம்பவும் வருத்தப் படுகிறார்கள்.

Our New Emperor.

நமது புதிய சக்ரவர்த்தி.—இங்கிலீஷ் ராஜாங்க முறைப்படி ராஜ ஸிம்மாஸனம் ஒரு நிமிஷங்கூடக் காலியாயிருக்காது. ஆகவே நமது சக்ரவர்த்தியாயிருந்த ஏழாவது எட்வர்ட் இறந்தவுடனே அவருடைய ஒரே குமாரராகிய ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தியாகிவிட்டார். இவருக்கு இப்பொழுது வயது 45. இவர் 1905-ம் வருஷத்தில் இங்கே வந்து இந்தியா முழுவதையும் சுற்றிப்பார்த்தவர். ஆகையால் இந்தியர்கள் இங்கிலீஷ் ராஜாங்கத்தில் வைத்திருக்கும் அன்பை நன்றாய் அறிந்தவர். இந்தியர்களை தயையோடு ஆளவேண்டுமென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறார். பட்டத்துக்கு வந்தவுடனே தன்னுடைய ப்ரஜைகளுக்கு அனுப்பிய செய்தியில் மாக்ஷிமை தங்கிய தன்னுடைய பாட்டி விக்டோரியா மகாராணியும் தன் தகப்பனார் எட்வர்டும் எப்படி நீதியாயும் நியாயமாயும் தயையோடும் ஆண்டு வந்தார்களோ அப்படியே தாமும் ஆள்வதாக வாக்களித்திருக்கிறார். இவர் அப்படியே வெகு காலம் ஆண்டு வீற்றிருக்க கடவுளைப் ப்ரார்த்திக்கிறோம்.

Dairy industry.

பால், நெய் வியாபாரம்.—சில மாஸங்களுக்கு முன் லக்னோ பட்டணத்தில் பால், நெய் முதலியவைகளின் விலையேற்றத்தை விசாரணை செய்வதற்காக ஒரு ஸபை கூடிற்றென்று சொன்னோம். ஐக்கிய மாகாணங்களில் இவைகள் ரொம்ப கிராக்கியாகவில்லையாம். ஆனால் பால், தயிர், நெய் இவைகளெல்லாம், வெகுவாய் கலப்படம் செய்யப்பட்டே விற்பனைக்கு வருகின்றனவாம். ஆகையால் பட்டணங்களில் விற்கப்படும் பால், நெய்யாவது கலப்பில்லாமலிருப்பதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அப்படியே கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் செய்யப்போவதாகக் கேள்வி. நம்முடைய ராஜதானியிலும் இப்படிப்பட்ட சட்டம் ஒன்று தேவை.

Petroleum.

மண் எண்ணெய்.—உலகத்தில் வருஷம் ஒன்றுக்கு 18 கோடி பாரம் மண் எண்ணெய் உற்பத்தியாகிறது. இதில் நூற்றில் 64 பங்கு, அமெரிக்கா தேசத்து ஐக்கிய நாடுகளிலும், 22 பங்கு ருஷியாவிலும், 1½ பங்கு காலீஷியாவிலும், 3 பங்கு ருமேனியாவிலும், 1¼ பங்கு மெக்ஸிகோவிலும், இப்படி பல தேசங்களில் பல அளவாகக் கிடைக்கிறது. இங்கிலீஷ் ராஜாங்கத்துக்குட்பட்ட தேசங்களில், மொத்தத்தில் 100-க்கு 5 பாகந்தான் உற்பத்தியாகிறது. அந்த ஐந்து பாகங்களில் இந்தியாவில் (பர்மாவில்) இரண்டு பாகமும், போர்னியூ தீவில் 3 பாகமும் ஆகிறது. ஆகையால், இங்கிலீஷ் ராஜாங்கத்துக்குட்பட்ட ஜனங்கள் கெரோஸின் எண்ணெய் வேண்டியிருந்தால், இதர தேசங்களின் உற்பத்தியையே எதிர்பார்க்க வேண்டியதாயிருக்கிறது.

To Get Rid of Rats.

எலிகளைத்தொலைக்க.—ஒருவன் எலிப்பொறியைவைத்து ஒரு எலியைப்பிடித்தான். பிடித்த எலியைக் கொல்லாமல் அதன் கழுத்தில் ஒரு சிறு மணியைக் கட்டிவிட்டான். அந்த எலி தன் வளைக்குள்போய் புகுந்து கொண்டது. அந்த வளைக்குள்ளிருந்த மற்ற எலிகள் மணிச் சத்தத்தைக்கேட்டு பயந்து வளையைவிட்டு ஓடிவிட்டன. ஆகவே, மணிகட்டின எலி மாத்திரம் தனியே இருக்கும்படி நேரிட்டதால் அதுவும் வீட்டைவிட்டு ஓடிவிட்டது. இப்படிக்கு வீட்டிலுள்ள எலிகளெல்லாம் தொலைந்தனவாம். இதே மாதிரியாக ஒரு எலியைப் பிடித்து அதன்மேல் கிரப்ப தாரைப் பூசிவிட்டால் அந்த எலி வளைக்குள்போய் தாரை ஈஷிவிடும். இதைப் பொறுக்கமாட்டாமல் எலிகளெல்லாம் வளையைவிட்டு ஓடிவிடும்.

Vitality of Seeds.

விதைகளின் முளைக்கும்சக்தி.—இது விஷயமாக டாக்டர் ஜெ. டூவெல் என்பவர் சில பரீக்ஷைகள் செய்துபார்த்தார். 112 தினுசு விதைகளை எடுத்து களிமண் நிலத்தில் ஆறு முதல் எட்டு அங்குலம், 18 முதல் 22 அங்குலம், 36 முதல் 42 அங்குலம், ஆக இப்படிப் பல ஆழங்களில் ஒரு வருஷத்துக்குப் புதைத்து வைத்தார். பிறகு, அவைகளை எடுத்துப் பார்த்ததில் விதைகள் எவ்வளவுக் கெவ்வளவு ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்தனவோ அவ்வளவுக்கவ்வளவு கெடாமல் இருந்தனவாம். பயிர்செய்து எடுக்கப்பட்ட விதைகள் அநேகமாய் அழுகியும் அல்லது முளைத்து பிற்பட்டு அழுகியும், போய்விட்டன. களைப்பூண்டு விதைகள்மட்டுங் கெடாமல் இருந்தன. ஆகவே களைப்பூண்டு விதைகள் நிலத்தில் எவ்வளவுக் கெவ்வளவு ஆழத்தில் இருக்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு கெடாமலிருக்குமென்று ஏற்படுகிறது. ஆகையால்தான் களைப் பூண்டுகளை அழிக்க மேலாக நிலத்தை உழுதால் அவைகள் அழிவதில்லை. அவைகளைத் தொலைக்க வேண்டுமானால் மண்ணை ஆழமாகப் புரட்டவேணும்.

Town Vegetables.

பட்டணத்துக் கறிகாய்கள்.—கிராமாந்தரங்களிலிருந்து ஜனங்கள் பெரிய பட்டணங்களுக்கு வந்தால் அவ்விடத்துக் கறிகாய்ச் செடிகளுக்கு பட்டணத்து மலம், சாக்கடைத் தண்ணீர் முதலியவைகளை எருவாகப்போட்டு வளர்ப்பதால் அவைகளில் உண்டாகும் காய்கறிகள் கால் வீக்கம் முதலிய வியாதிகளை உண்டாக்குமென்று எண்ணி கறிகாய்களை சாப்பிடவே மாட்டார்கள். இந்த விஷயத்தில் அவர்கள் கொண்டிருப்பது தப்பு அபிப்பிராயமென்று, ரெம்லிங்கர், நௌரி, என்னும் இரண்டு சாஸ்திர நிபுணர்கள் செய்திருக்கும் ஆராய்ச்சிகளினால் ஏற்படுகிறது. இவர்கள், எவ்வளவு விதமாக ஸாத்தியமோ அவ்வளவு விதமாகவும், வியாதிகளை விளைவிக்கும் பாக்டீரியாக்களை, கறிகாய்ச் செடிகளில் செலுத்தி வளர்த்தார்கள். என்ன செய்தும் செடிகளின் உள் பாகங்களில் மேலே சொல்லிய பாக்டீரியாக்களின் ப்ரஜைகள் அகப்படவேயில்லை. இதனால் வியாதியை விளைவிக்கும் பாக்டீரியாக்கள், செடிகளின் வெளிப் புறங்களில் மட்டும் இருக்கின்றனவே ஒழிய உள்புறத்தில் கிடையாதென்று ஏற்படுகிறது. ஆகையால் எப்படிப்பட்ட அசுத்தமான நிலத்தில் வளர்ந்த போதிலும், கறிகாய்களை சுத்தமான தண்ணீரில் அலம்பிவிட்டு உபயோகித்தால் ஒருவித வியாதியும் உண்டாகாது.

Sunlight and Bacteria.

சூரிய வெளிச்சமும், பாக்டீரியாவும்:—மனுஷனுக்கும், மிருகங்களுக்கும் வியாதிகள் வருவது பாக்டீரியா என்று சொல்லப்படும் நுட்பமான பூச்சிகளினால்தான் என்று “பிழைக்கும் வழி” யின்போன அர்ப்பசி மாஸத்து ஸஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம். வியாதிகளை உண்டாக்கும் பாக்டீரியாக்களை வெயிலில் போட்டால் அவைகளின் சக்தி குறைந்துபோகின்றது, அல்லது அவைகள் இறந்தே போகின்றன என்றும், சாதாரணக் காற்றில் உள்ள பாக்டீரியாக்களை அப்படிச்செய்தால் அவைகளுக்கு ஒன்றும் ஆவதில்லையென்றும் டாக்டர். ஆர். வீஸ்னர் என்ற ஜர்மனிதேசத்து ஒரு பாக்டீரியாலொஜிஸ்டு அதாவது பூச்சிலக்ஷணசாஸ்திரி, கண்டு பிடித்திருக்கிறார். இதோடுகூட வியாதியை விளைவிக்கும் பாக்டீரியாக்கள் இறந்த போதிலும் அவைகளின் பிணங்களை நிர்மூலமாக்கினாலொழிய அவைகளின் வீர்யம் குறைவதில்லையாம். சூரிய

வெளிச்சத்தின் கடுமைக்குத் தகுந்தபடியும், பகலில் நாழிகைக்குத் தகுந்தபடியும் பாக்டீரியாக்கள் சாகும். நல்ல கோடைகாலத்தில் சூரியன் தலைக்குமேல் இருந்தால் அப்பொழுது வெயிலில் அகப்பட்ட பூச்சிகள் இரண்டு மூன்று மணிகளுக்குள் இறந்துவிடும். ஆகவே படுக்கை முதலியவைகளைக் காயப் போடுவதானால் மத்தியான வெயில் படும்படியாக்கப் போடுவது நலம்.

Pure Milk.

சுத்தமான பால்:—சுத்தமான பால் தேகத்துக்கு எவ்வளவு நல்லதோ அவ்வளவு கெடுதலானது கெட்டுப்போன பால். பெட்டியில் விற்கப்படும் பாலில் வியாபாரிகள் பலவித மருந்துச் சரக்குகளைச் சேர்த்து விடுவதால் சாப்பிடுகிறவர்களுக்கு சில சமயங்களில் தீங்கும் உண்டாகிறது. இந்தக் குறையில்லாத சுத்தமானபால்கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. பாலில் சாதாரணமாக நூறில் 92 பங்கு ஜலமிருக்கிறது. இதில் 87 பங்கு ஜலத்தைப் போக்கிவிட்டால் பால் மாவாகிவிடுகிறது. இப்படிச் செய்வது சுலபம். கறந்தபால் அப்படியே, நன்றாய்க் காய்ச்சப்பட்ட 240 டிக்ரி உலோக உருளைமேல் மெதுவாய் வார்க்கப்படுகிறது. ஜலம் முழுவதும் வற்றுவதற்குள் 2½ஸெகண்டுக்குள் மாவுஎடுக்கப்பட்டுகாற்றுப் போகாத டின் (தகரடப்பி)களில் அடைக்கப்படுகிறது. இந்த உஷ்ணத்தில் பாலிலிருக்கும் நுட்பமான கிருமிகள் நாச மடைகின்றன. பாலும் யாதொரு விதமான மாறுதலையும் அடைகிறதில்லை. நூற்றுக்கு 15-பங்கு ஜலத்துக்கு கம்மியாயிருக்கும் பதார்த்தத்தில் கிருமிகள்உற்பத்தியாகா.ஆகையால்இப்படிச்செய்யப்பட்ட பால் பொடி எத்தனைகாலமானாலும் கெடுவதில்லை. இது சுத்தமான பாலைக்காட்டிலும் சிரேஷ்டமானது. ஏனென்றால் பாலில் சாதாரணமாய் கிருமிகளிருக்கின்றன. பால் பொடி சாதாரணமான பாலைவிட எட்டு மடங்கு அதிக சத்தும் சாரமுமுள்ளது.

Honey.

தேன்.—அமெரிக்காக் கண்டத்தில் வருஷம் ஒன்றுக்கு 14 லக்ஷம் பாரத்துக்கு மேல் தேன் உற்பத்தியாகிறதாம். அங்கே தேனுக்கு அளவற்ற செலவு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் தேனீக்களை வளர்ப்பதற்காக அமெரிக்கா ஐக்கிய நாடு இலாகாக்காரர்கள் வருஷம் ஒன்றுக்கு 30,000 ரூபாய் செலவிடுகிறார்கள். அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் உண்டாகும் தேனின் விலை 6 கோடி ரூபாயாகிறது. தேன் மெழுகின் விலை 60 லக்ஷம் ரூபாய் ஆகிறது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலும், ஜர்மெனி, இங்கிலாந்து, ப்ரான்ஸ், இந்த தேசங்களிலும், பட்சணங்கள் செய்வதிலும், பிஸ்கோத் செய்வதிலும், இன்னும் பலவித பலகாரங்கள் செய்வதிலும், தேன் ஏராளமாய்ச் செலவாகிறது. உலகத்தில் உண்டாகும் தேனில் பாதிக்குமேல் மிட்டாய்கள் செய்வதிலும், மருந்துகள் செய்வதிலும், செலவழிந்து போகிறது. தேனைப் போட்டு செய்யும் பிஸ்கோத்துகள் நாள் நிற்பதினால், மிட்டாய்க் கடைக்காரர்களும், பிஸ்கோத்து செய்கிறவர்களும், சர்க்கரையைவிட தேனையே, விசேஷமாய் உபயோகிக்கிறார்கள்.

Bee's Wax and its uses.

தேன்மெழுகும் அதன் உபயோகங்களும் :—தேன் மெழுகைக்கொண்டு, மாதா கோவில்களில் எரிக்கப்படும் காண்டில்கள் அதாவது மெழுகுவர்த்திகள் செய்கிறார்கள். வார்னிஷ், பாலிஷ், முதலானவைகளும் செய்கிறார்கள். யந்திரங்கள் துருப்பிடிக்க வொட்டாமலும் செய்கிறார்கள். இவைகளைத் தவிர, தேன் மெழுகானது, வண்ணான்களால் வெளுக்கப்பட்டு கஞ்சி போடப்பட்ட துணிகளுக்கு, பாலிஷ் கொடுக்கவும் உபயோக மாகிறது. வைத்தியத்தில் சில தைலங்கள் செய்வதிலும் உபயோகப்படுகிறது.

Rubber.

ரப்பர்.—ஆலமரம் போன்ற சில மரங்களிலிருந்து பால் எடுப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இப்படிக்கு சில மரங்களிலிருந்து பால் எடுக்கிறார்கள். அந்தப்பாலை இறுகச்செய்து இறுகின வஸ்துவை ரப்பர் என்று சொல்லுவார்கள்.

ரப்பர் அநேக கைத்தொழில்களில் உபயோகமாகிறது. முக்கியமாய், பூட்ஸ்கள், ஜோடுகள், செய்வதற்காகவும், மோட்டார்க் கார்களுக்கும், பைஸிகள்களுக்கும் இன்னும் மற்றவண்டிகளுக்கும் "டைர்", அதாவது, வண்டிக்கட்டுப்போல் போடுவதற்காகவும், தண்ணீர் இறங்காத மெழுகு சீலைகள் போல் சில சீலைகள் செய்வதற்காகவும், தண்ணீர்க் குழாய்கள் செய்வதற்காகவும், மின்சாரம் பாயாமல் தடுப்பதற்காகவும், யந்திரங்களை ஓட்டுவதற்கான பெல்டுகள் செய்வதற்காகவும், சுருங்கும் படியான நூல் செய்வதற்காகவும், உபயோகமாகிறது. மேலே சொல்லியவைகளைத்தவிர, சில்லறை உபயோகங்கள் எவ்வளவோ உண்டு. ரப்பரைக் கொண்டு டென்னிஸ் பந்துகள் முதலானவைகள் செய்கிறார்கள். குழாய்களைச் சேர்த்து ஓட்டுவதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். சீஸாக்களுக்கு அடைப்பாகவும், ஐரோப்பியர்கள் போட்டுக் கொள்ளும், "க்ளௌஸ்" என்று சொல்லப்படும் கைமூடிகளாகவும், வெந்நீர் வைப்பதற்காக ஏனங்களாகவும், பென்ஸில் முதலியவைகளால் எழுதினவைகளை அழிப்பதற்கான இரேஸர்களாகவும் உபயோகப் படுத்துகிறார்கள்.

இந்தியா ரப்பரை, விசேஷமாய் தனியாய் உபயோகப் படுத்துகிறதில்லை. வேண்டியத்துக்குத் தக்கபடி வேறு பொருள்களோடு சேர்த்தே உபயோகப் படுத்துகிறது வழக்கம். ஆனால் எப்பொழுதும் கந்தகம்சேரும். ஜாஸ்தி கந்தகம் சேர்ந்த ரப்பரை, "வல்கனைட்" என்று சொல்வது வழக்கம்.

இது நிற்க, திருவாங்கூர் சமஸ்தானத்தில் நம்மவர்கள் சிலர் சேர்ந்து ரப்பர்ப் பயிர் செய்யும் கம்பெனியொன்று ஸ்தாபிக்கப்போவதாகத் தெரிகிறது. அந்த சமஸ்தானத்திலும் சிலோன் என்று சொல்லப்படும் லங்கையிலும் வேறிடங்களிலும் ஐரோப்பியர் விஸ்தாரமான நிலங்களில் ரப்பர்ச் செடிகள் நட்டு ஏராளமான லாபம் பெற்று வருகிறார்கள். அவர்களுடைய தோட்டங்களில் வேலை செய்த இந்தியர் அவைகளால் கிடைக்கும் பெரும் லாபத்தை யறிந்து நம்மவர்களுக்குச் சொல்லவே நம்மவர்களும் ஆசைப்பட்டு இந்தப் பயிர் செய்ய முன் வந்திருக்கிறார்கள். இந்த ரப்பர்க் கம்பெனிக்கு முதல் 4½ லக்ஷம் ரூபாய். 15 ஆயிரம் பங்குகள் கொண்டது. ஏற்கனவே சிலர் சொற்ப நிலங்களில் ரப்பர்ப் பயிர்செய்து லாபம் சம்பாதித்து வருகிறபடியால் இந்த மூல தனம் சீக்கிரம் சேர்ந்துவிடுமென்று தோன்றுகிறது. "மலையாளம் மனோரமா" பத்திரிகைக்கு எடிடராகிய மிஸ்டர் சி. எம். மாப்பிள்ளை இதற்கு ஸெக்ரடரி.

தற்காலத்தில் ரப்பர்த் தொழிலில் பணம் போடுவதில் வெகு பேர்கள் மும்முரமாயிருக்கிறார்கள். ரப்பர்ப்பங்குகளின் விலை குறைவாயிருக்கும்பொழுது ரொம்பப் பங்குகளைவாங்கி பிறகு விலை உயர்ந்ததும் விற்று பம்பாயில் பிரபல வர்த்தகர்களான ஆர். டி. டாடாவும் ஸர் ஸஸ்ஸூன் டேவிட் முதலியவர்களும் லக்ஷக்கணக்கான லாபம் ஸமீபத்தில் அடைந்தார்கள். இங்கிலாந்திலும் பல பேர்களுக்கு "ரப்பர்ப் பயித்தியம்" பிடித்து அளவற்ற பணத்தை இந்தத் தொழிலில் போட்டு வருகிறார்கள்.

Single Planting.

ஒற்றை நாற்று நடுதல்.—"பிழைக்கும் வழி" யில் போன வருஷம் மார்ச்சுமாஸம் முதல் ஒற்றை நாற்று நடுதலைப் பற்றிப் பிரசுரமாகி வரும் வியாஸங்களைச் சுட்டிக்காட்டி நமது ராஜதானியில் சமீபத்தில் நடந்த சட்ட நிரூபண ஸபையின் மீடிங் ஒன்றில் கனம் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு கவரன்மெண்டார் ஒற்றை நாற்றாக நடுவதால் உண்டாகும் பயன் தங்களுக்கு நன்றாய்த்தெரியு மென்றும், அந்த நூதனமுறையை எந்த விதமாகப் பரவச்செய்யலாம் என்பதைப்பற்றி விவஸாய இலாகா உத்தியோகஸ்தர்களை யோசனை செய்யச் சொல்லுகிறோமென்றும் சொன்னசங்கதியை போன மார்ச்சுமாஸத்து ஸஞ்சிகையில் எழுதியிருக்கிறோம். இது விஷயமாக விவஸாய இலாகா உத்தியோகஸ்தர்கள் வெகு ஜரூராய் ஏற்பாடு செய்திருப்பதைப்பார்க்க நமக்கு ரொம்பவும் சந்தோஷமாயிருக்கிறது. ஒற்றை நாற்றால் உண்டாகும் பயனென்ன? அதை எப்படித்தயார் செய்கிறது? எப்படி நடுகிறது? என்ற விஷயங்களைக் கண்டு ஒரு சிறுபத்திரிகையை எழுதியிருக்கிறார்கள். இந்தப்பத்திரிகை விவஸாய இலாகா டிப்டிடைரக்டர் எச். ஸி. ஸாம்ஸன் துரையவர்களால் எழுதப்பட்டது. இதை இந்த ஸஞ்சிகையில் இன்னொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். இந்தப்பத்திரிகைக்கு லக்ஷம் காபி அடித்திருக்கிறார்கள். அவைகளை ரெவின்யூ உத்தியோகஸ்தர்கள் மூலமாயும், விவஸாய இலாகா உத்தியோகஸ்தர்கள் மூலமாயும் கேட்பவர்களுக்கெல்லாம் இனாமாகக்கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். தவிர, ஒற்றை நாற்று நடுவதில் நிபுணர்களான மூன்று உத்தியோகஸ்தர்களை சீர்காழி, கும்பகோணம், நாகப் பட்டணம் ஆகிய இந்தத் தாலுக்காக்களில் ஊர்ஊராய்ப் போய் நிலக்காரர்களுக்கு நேரில் பத்திரிகையைக் கொடுத்து அவர்கள் சொல்லும் ஆக்ஷேபங்களுக்கு சமாதானம் சொல்லி நெல் நாற்றை ஒன்றொன்றாக நடும்படிக்கு போதிக்கச்சொல்லியிருக்கிறார்கள். தற்காலம் இது விஷயமாகச் சேர்ந்த வேலை முழுவதும் மேலே சொல்லிய மூன்று தாலுக்காக்களில் மட்டும் நடப்பதாக தெரிகிறது. விதைவிடும் காலம் வந்து விட்டபடியால் ஒற்றை நாற்றாக நடும் முறையைக் கொஞ்சமாகவது எல்லாரும் செய்துபார்க்க வேண்டும். "பிழைக்கும் வழி" யை படிப்பவர்களுக்கு நாம் ஓயாமல் ஒற்றை நாற்றாக நடுதலைப்பற்றி எழுதுவது ஒருக்கால் வெறுப்பை உண்டாக்கலாம். ஆனால் நெல் சாகுபடியில் தற்காலம் அளவற்ற நஷ்டத்தை அடைகிறோம். தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு ஏகர் நட 120 முதல் 200 ராத்தல் வரையில் நிறையுள்ள விதை செலவாகிறது. கிருஷ்ணா ஜில்லாவிலோ ஒரு ஏகர் நட 14 ராத்தல் விதைதான் உபயோகிக்கிறார்கள். ஆனாலும் கிருஷ்ணா ஜில்லாவைப்போல் தஞ்சாவூர் ஜில்லாவில் அவ்வளவு நன்றாக விளைவதில்லை. ஆகையால் குறைந்த பக்ஷம் ஏகர் ஒன்றுக்கு 100 ராத்தல் விதை வீண் நஷ்டம் ஆகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் 10,43,930, ஏகரில் நெல் சாகுபடியாகிறது. ஆகவே ஜில்லாமொத்தத்துக்கு, 10 கோடிராத்தல் விதை வீணாகிறது. இதைக் கொண்டு தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஜனங்கள் எல்லாரும் 20 நாளைக்கு சாப்பிடலாம். வீண் நஷ்டமாகும் விதையை தற்கால விலைப்படிக்கு விற்றால் 35 லக்ஷம் ரூபாய் கிடைக்கும். ஒற்றை நாற்றாக நட்டால் விதை மிச்சத்தாலேயே 3½ ரூபாய் ஏகர் 1-க்கு லாபம் அடையலாம். இந்த லாபத்தைத் தவிர, பயிர் நன்றாய் விளைவதாலும் ஜாஸ்தி மாசூல்கிடைக்கும். ஆகையால் இது விஷயத்தில் நிலக்காரர்கள் எல்லாரும் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டு ஒற்றை நாற்றாகவே நடுவார்களென்று நம்புகிறோம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 JUN 1910
MADRAS

School-fees.

பள்ளிக்கூடச் சம்பளங்கள்.—கவரன்மெண்டார் ஸ்கூல் சம்பளங்களை உயர்த்துவதாய் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விஷயத்தை ஏற்கனவே முன்னொரு ஸஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறோம். அந்தப்படியே சம்பளங்களை உயர்த்தி ஒரு நோட்டீஸ் பிரசுரம் செய்திருக்கிறார்கள். உயர்ந்த சம்பளத்தை ஸர்க்கார் ஸ்கூல்களிலும், முனிஸிபாலிட்டி ஸ்கூல்களிலும், லோகல் போர்ட் ஸ்கூல்களிலும் நிச்சயமாய் வசூல் செய்வார்கள். ப்ரைவேட் மானேஜ்மெண்டிலிருக்கும் ஸ்கூல்களில் இப்படிச் செய்யவேண்டியது கட்டாயமில்லை. மானேஜர்களின் அபிப்பிராயப்போல் செய்யலாம். ஆனால் மானேஜர்கள் தங்கள் ஸ்கூல்களில் சம்பளத்தை மிகவும் குறைச்சல் செய்தோ அல்லது ரூலுக்கு விரோதமாய் வேறு எந்த விதத்திலாவது பையன்களைச் சம்பளம் கொடுக்கச்செய்தோ, இதர பள்ளிக்கூடங்களுடன் போட்டி போட்டு பையன்களைச் சேர்க்கும் பக்ஷத்தில் கவரன்மெண்டார் உயர்ந்த விகிதப்படி சம்பளத்தை வசூல் செய்யச்சொல்லி நிர்ப்பந்திக்கலாம்.

பள்ளிக்கூடச் சம்பளம் கொடுப்பதற்காக வருஷத்தை இரண்டு டரங்களாகச் செய்திருக்கிறார்கள். முதல் டரமானது கோடை லீவு முதல் க்ரிஸ்ட்மஸ் பண்டிகை வரையிலுமாம். இரண்டாவது டரமானது க்ரிஸ்ட்மஸ் பண்டிகையிலிருந்து கோடை லீவு வரையிலுமாம். சம்பளவசூலுக்காக முதல் டரத்தை ஐந்து தடவையாகவும் இரண்டாவது டரத்தை மூன்று தடவையாகவும் பிரித்திருக்கிறார்கள்.

ஒருபையன் ஒரு ஸ்கூலில் எவ்வளவு நாள் வாசித்தாலும்சரி, மேற்சொன்ன டரத்திற்கு உரிய சம்பளத்தை ஒரே தடவையிலோ அல்லது டரத்துக்குத்தக்கபடி ஐந்து தடவையாகவோ அல்லது மூன்று தடவையாகவோ கொடுத்துவிடவேண்டும்.

இதுவரையிலும் பி. ஏ. கிளாஸில் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்84 சம்பளமாயிருந்தது. இனிமேல் ப்ரெஸிடென்ஸி காலேஜில் வாசிக்கும் மாணாக்கர்கள் முதல் டரத்துக்கு ரூபாய் 70-ம் இரண்டாம் டரத்துக்கு ரூபாய் 42 ம் ஆக மொத்தம் ரூபா 112 கொடுக்கவேண்டும். எட்டுத்தடவையாகக் கொடுத்தால் தடவையொன்றுக்கு 15 ரூபாயாய், ரூபாய் 8 ஜாஸ்தி கொடுக்கவேண்டும். இதர காலேஜ்களில் பி. ஏ.-க்கு இரண்டு டரமாய்க் கொடுத்தால், முதல் டரத்துக்கு ரூபாய் 66-ம், இரண்டாம் டரத்துக்கு ரூபாய் 40-ம் ஆகமொத்தம் 106 ரூபாய் கொடுக்கவேண்டும். எட்டுத் தடவையாய்க் கொடுத்தால் தடவை யொன்றுக்கு 14 ரூபாயாக ரூபாய் 6 ஜாஸ்தி கொடுக்கவேண்டும். இப்போது எப். ஏ. அதாவது இண்டர்மீடியேட் கிளாஸுக்கு ரூபாய் 72 சம்பளமாயிருக்கிறது. இனிமேல் ப்ரெஸிடென்ஸி காலேஜில் வாசிக்கும் பிள்ளைகள் இரண்டு டரமாய் கொடுத்தால், முதல் டரத்திற்கு ரூபாய் 55-ம், இரண்டாம் டரத்திற்கு ரூபாய் 33-ம் ஆக மொத்தம் ரூபாய் 88 கொடுக்கவேண்டும், அல்லது எட்டுத் தடவையாய்க் கொடுப்பதாயிருந்தால் தடவை யொன்றுக்கு ரூபாய் 11-12-0 விதம் ரூபாய் 5 ஜாஸ்தி கொடுக்க வேண்டும். இதர காலேஜ்களில் வாசிக்கும் பிள்ளைகளுக்கு முதல் டரத்துக்கு ரூபாய் 52-ம், இரண்டாம் டரத்துக்கு ரூபாய் 31-ம் ஆக ரூபாய் 83, ஆகும். எட்டுத் தடவையாகக் கொடுத்தால் தடவை யொன்றுக்கு ரூபாய் 11 ஆக, ரூபாய் 5 ஜாஸ்தியாகும்.

இப்போது ஹைஸ்கூல் கிளாஸுகளில் வருஷமொன்றுக்கு ஆறாவது பாரமென்கிற மெட்ரிகுலேஷன் கிளாஸுக்கு ரூபாய் 38-ம்

இதற்குக் கீழ்ப்பட்ட 5-வது பாரத்துக்கு ரூபாய் 34-ம், அதற்குக் கீழ்ப்பட்ட 4-வது பாரத்துக்கு ரூபாய் 30-ம் சம்பளம். இனிமேல் இந்த மூன்று பாரங்களுக்கும் ஒரே ரேட்டாய் தடவை யொன்றுக்கு ரூபாய் 5-4-0 வீதம் எட்டுத்தடவையாய் ரூபாய் 42 கொடுக்கவேணும். இப்போது வருஷம் ஒன்றுக்கு மூன்றாவது பாரத்திற்கு ரூபாய் 22-ம் இரண்டாவது பாரத்திற்கு ரூபாய் 18-ம், முதல் பாரத்திற்கு ரூபாய் 14-மாக இருக்கிறது. இனிமேல் தடவை ஒன்றுக்கு ரூபாய் 2-12-0, வீதம் எட்டுத் தடவைக்கு ரூபாய் 22 ஆகும்.

இனிமேல் நாலாவது, மூன்றாவது ஸ்டான்டர்டுகளுக்கு தடவை யொன்றுக்கு ரூபாய் 1-1-0 வீதம் எட்டுத்தடவைக்கு ரூபாய் 10-ம், இரண்டாவது முதலாவது ஸ்டான்டர்டுகளுக்கு தடவை யொன்றுக்கு பத்தணா வீதம் எட்டுத் தடவைக்கு ரூபாய் 5-ம் சம்பளமாகும். தவிர, ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட் பெறுவதற்கு ஏதாவது ஒரு ஸப்ஜெக்டில் ஜாஸ்தி பயிற்சி அடைய வேண்டுமானால் குறைந்தது ரூபாய் 24 கொடுக்கவேணும். ஆனால் எவ்வளவு ஸப்ஜெக்டானாலும் ரூபாய் 48-க்குமேல் கொடுக்கவேண்டியதில்லை.

இப்போது புதிதாய் ஏற்படுத்தி யிருக்கும் சம்பளம் பீ. ஏ., எப் யே., கிளாஸ்களில் 1911-ஆம் வருஷம் ஜூலை மாதம் முதல் நடவடிக்கைக்குக் கொண்டுவரப்படும். ஆனால் பாக்கி கிளாஸ்களில் 1912-ம் வருஷம் ஜூலை மாதம்தான் நடவடிக்கைக்குவரும்.

ஆனால் 1910-ம் வருஷம் ஜூலை முதல் 1912-ம் வருஷம் ஜூலைவரையில் ஸ்கூல்களில் சம்பளங்கள் பின் வருமாறு வசூல் செய்யப்படும். அதாவது, ஆறு, ஐந்து, நாலு இந்த பாரங்களுக்கு தடவை யொன்றுக்கு ரூபாய் 4-12-0 வீதம் எட்டுத் தடவையாக ரூபாய் 38 ம், மூன்று, இரண்டு ஒன்று ஆகிய இந்த பாரங்களுக்கு தடவை யொன்றுக்கு 2-8-0 வீதம் எட்டுத் தடவையாக ரூபாய் 20-ம், நாலாவது, மூன்றாவது ஸ்டான்டர்களுக்கு தடவை யொன்றுக்கு ரூபாய் 1 வீதம் எட்டுத் தடவையாக ரூபாய் 8-ம், இரண்டாவது, முதலாவது ஸ்டான்டர்களுக்கு தடவையொன்றுக்கு அணா 8 வீதம் எட்டுத் தடவையாக ரூபாய் 5-ம் வசூல் செய்யப்படும். மேலே சொல்லிய சம்பளவிகிதங்களைத் தவிர, 'லைப்ரேரி,' 'ரீடிங் ரூம்', 'விளையாட்டு', இவைகளுக்கு வேறே ரூபாய் வாங்குவார்கள்.

இப்போது அரிச்சுவடி கிளாஸிலிருந்து பீ.ஏ.க்கு ஒருவன் சரியாய்ப் படித்து வந்தால் வருஷம் 14 ஆகிறது. இதுவரையிலும் பள்ளிக்கூடச் சம்பளம் மாத்திரம் சுமார் ரூபாய் 510 ஆகிறது. ஆனால் இனிமேல் சுமார் ரூபாய் 625 ஆகும். ஆகவே இப்போது இருக்கிற சம்பளத்தை விட நாலில் ஒன்று இனிமேல் ஜாஸ்தியாகும். பள்ளிக்கூடத்துச் சம்பளங்களோடு புஸ்தகங்கள், உடுப்புச் செலவுகள், சாப்பாட்டுச் செலவு இவைகள் யெல்லாவற்றையும் சேர்த்தால் ஆதிமுதல் அந்தம் வரையில் ஒரு பையன் படிப்புச் செலவு குறைந்த பக்ஷம் 2,000 ரூபாய் ஆகுமென்பதற்கு சந்தேகமே யில்லை. ஏற்கனவே ஸ்கூல் சம்பளங்கள் வெகு ஜாஸ்தியாய் இருக்கின்றனவென்று பெற்றோர்கள் முறையிடுகிறார்கள். கவரன்மெண்டாரோ பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களுக்குத் தகுந்த சம்பளங் கொடுத்து தகுந்த கட்டிடங்களையும் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கு வேண்டிய சாதனங்களையும் அமைப்பதற்கு தற்காலத்தில் வசூல் செய்யும் சம்பள விகிதங்கள் போதவில்லை யென்றுசொல்லி சம்பள விகிதங்களை உயர்த்தி யிருக்கிறார்கள். புது சம்பள விகிதங்களை கொடுக்கமுடியாமல் அநேகம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் படிப்பை நிறுத்தி விடுவார்களென்று தோன்றுகிறது. இப்படி நேரும் பட்சத்தில் அது தேச அபிவிருத்திக்குத் தடை ஆகும்.

SCHOOL-GARDENS AND PARENTS.

BY

T. S. SUBRAHMANIA AIYAR, M. A., L. T.,

Assistant Professor of History, Presidency College, Madras.

பள்ளிக்கூடத்தோட்டங்களும் பெற்றோர்களும்.

சில காலமாக கல்வி இலாகா அதிகாரிகளும், சிறந்த போதனா முறைகளில் பழகிய உபாத்திமார்களும், கல்வியில் சிறந்த பெற்றோர்களும், சிறுவர்களை இனிமையான போதனா முறைகளாலேயே அறிவிலும் நல்ல குணங்களிலும் தேர்ச்சியடையும்படி செய்யவேண்டுமென்று வற்புறுத்திவருகிறார்கள். இந்தக் காலத்தில் மாணாக்கர்களைப் பிரியத்துடன் நடத்தவேண்டுமேயல்லாமல் தண்டப்பிரயோகம் கூடாதென்பது விதி. முன் காலத்தில் "அடியாத மாடு படியாது" என்ற கொள்கைமேலிட்டிருந்தது. ஆகையால் சிறுவர்களைக் கைதிகள் போலவும், ஆடுமாடுகள் போலவும் நடத்தி, கோதண்டம், விலங்கு, பிரம்பு முதலிய ஸாதனங்களால் அடக்கிப் போதித்து வந்தார்கள். மனிதப்பூண்டுக்கு புஷ்பங்கள் போன்ற பாலர்கள் ஆனந்தத்தால் பிரகாசிக்கவேண்டிய வித்தியாசாலைகளில் சிறைச்சாலைகளின் கோரமான முறைகளை உபாத்தியாயர்கள் நாடி வந்தபடியால், வித்தியாசாலையைக்கண்டால் சிறைச்சாலையைக் கண்டதுபோல் மாணாக்கர்கள் நடுங்கினார்கள். ஆகையால் கல்விப்பயிற்சிக்கு அவசியமான கவனம், ஆனந்தம், உற்சாகம், ஊக்கம் முதலிய குணங்கள் அவர்களிடத்தில் காணப்படவில்லை. இப்பொழுதோ வித்தியாசாலைகளில் பாலர்கள் மிக்க அன்பாக நடத்தப்பெற்று, படம், சித்திரம், விளையாட்டு, தேகப்பயிற்சி, பாட்டு, பொருட்பாடம், அப்பியாஸபாடம், களிமண் வனைதல், முதலிய இனிய வழிகளால் கொஞ்சங்கூட கஷ்டமில்லாமல் தேர்ச்சியடைந்து வருகிறார்கள். இந்த மாதிரியான இனிய உபாயங்களில் சிறிய பள்ளிக்கூடத்தோட்டங்களில் பாலர்களை வேலைசெய்யும்படி பார்த்துவருவது ஒன்றாகும். இவைகளின் அவசியத்தைப்பற்றி சென்ற ஸஞ்சிகையில் ஒரு சிறந்த வியாஸம் வெளி வந்ததைக் கண்ணுற்றேன். இந்த வியாஸத்தில் காட்டியபடி பள்ளிக்கூடத்தோட்டங்களால் மாணாக்கர்களுக்கு அநேக பயன்கள் உண்டாயினும், இவைகளை ஏன் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஏற்படுத்தவில்லை யென்று விசாரித்தல் பொருந்தும்.

சிறந்த போதனா முறைகளுக்கு முக்கிய வைரிகள் பெற்றோர்களென்றே சொல்லலாம். கல்வியில் தேர்ந்து உபாத்திமை முறைகளைத் தெரிந்த பெற்றோர்களைப் பற்றிச்சொல்லவில்லை. பட்டணங்களில் ஸாதாரணமாய் எல்லாருக்கும் மேற்சொல்லிய போதனா முறைகள் நன்கு விளங்கும். ஆனால் கிராமவாஸிகளும் படிக்காத ஸாமான்யர்களும் போதனா முறைகளை கவனிப்பவர்களல்லர். சிறந்த முறைகளை வீண்காலப் போக்கு என்றே எண்ணுகிறார்கள். சில பெற்றோர்கள் இந்த முறைகளை இகழ்ந்துபேசுவதை நான் கேட்டிருக்கிறேன். "பாட்டு, கூத்து, தாரை, தம்பட்டம், விளையாட்டுக், கிளையாட்டு, பொருள் பாடம் இருள் பாடம் இவைகள் பலத்ததே யொழிய படிப்பு பூஜ்யமாய்விட்டது; ஈரணா கொடுத்து ஓரணாவுக்கு ஸாமான்வாங்கிவரச் சொன்னால் மிச்சம் கண்டுபிடிக்க பிள்ளையாண்டானுக்கு ஸ்லேட்டும் பென்ஸிலும் வேண்டியிருக்கிறது," என்று பரிஹஸித்துப் பேசுகிறவர்கள் அநேகர். இப்படிப்பட்டவர்களுக்கு எல்லா அநியாயங்களை விட தோட்டம் போடுகிற அநியாயந்தான் வயிற்றெரிச்சலை

உண்டாக்குகின்றது. ஸாதாரணமாய் ஜனங்கள் சிறைச்சாலைகளில் கைதிகள் மண்வெட்டிக்கொட்டுவதையும், தோட்டம் போடுவதையும் பார்த்திருக்கிறார்கள். ஆகையால் தங்களுடைய அருமைக்குழந்தைகளை கைதிகள்போல் மண்வெட்டவும் தோட்டம் போடவும் வேலையற்ற உபாத்தியாயர்கள் செய்வது நியாயமா என்று கவடற்ற கிராமவாஸிகள் கேட்டிருக்கிறார்கள். "தையல், கட்டிடம் கட்டல், பாய்பின்னுதல், சட்டிசெய்தல், சுள்ளிபொறுக்குதல், மண்வெட்டுதல், தோட்டம்போடுதல் முதலிய எல்லா அங்கங்களும் பள்ளிக் கூடங்களுக்கு வந்து விட்டன; இன்னும் ஒரு குறைதான், ஒரு செக்குத்தான் பாக்கி எண்ணெய் திரிக்க" என்று வித்தியாசாலைகளின் முறைகளில் சிறைச்சாலைகளில் தொழில்களை பார்ப்பவர்கள் அநேகர்.

ஆகையால் பள்ளிக்கூடத் தோட்டங்களின் உபயோகமும் அவசியமும் தொழில்முறைகளில் தேறிய உபாத்தியாயர்களுக்குத் தெரிந்தபோதிலும், பெற்றோர்களுக்கு அதன் பயன் புலப்படவில்லை. இந்தக் காரணம் பற்றியே கிராமப் பள்ளிக்கூடங்களில் இந்த சிறந்த பயிற்சி ஸாதனத்தை அநேகமாய் கைக்கொள்ள வில்லை. சிறந்த கல்வி ஸாதனங்களெல்லாம் விஸ்தாரமாய் பழக்கத்தில் வரவேண்டுமானால், பெற்றோர்களுக்கு அவைகளின் உபயோகமும் அவசியமும் நன்கு புலப்படவேண்டும். ஆகையால் விவேகமும் ஊக்கமுமுள்ள ஆசிரியர்கள் சிறந்த போதனா முறைகளையும் பயிற்சி ஸாதனங்களையும் தாங்கள் மட்டும் நாடுவதல்லாமல், பெற்றோர்களை அடிக்கடி பள்ளிக்கூடத்துக்கு அழைத்து அவர்களுக்கு அவைகளின் பயன்களைக்காண்பித்து, நம்பிக்கையுண்டாகும்படி செய்யவேண்டும். இவ்விதம் நம்பிக்கை பெருகப்பெருக அவர்களும் பள்ளிக்கூடங்களுக்கு உதவி செய்வார்களென்பதற்குச் சிறிதேனும் ஸந்தேகமில்லை.

பள்ளிக்கூடத்தோட்டங்கள் போன்ற பயிற்சி ஸாதனங்சள் சிறுவர்களுடைய தேர்ச்சிக்கு உபயோகமான கருவிகளென்ற நம்பிக்கை வந்தவுடன், கல்வி முறைகளைப் பற்றிய தப்பான அபிப்பிராயங்களெல்லாம் சீக்கிரம் மாறிவிடும். வீடுகளின் அமைதிக்கு வைரிகளாகிய சிறுவர்களை அடைத்துவைக்க பள்ளிக்கூடங்களை குழந்தைப்பட்டிகளாய் எண்ணாமலும், விஷமம் என்ற பிசாசை ஓட்டுவதற்கு மந்திரக்கோல் வகிக்கிற பூசாரியென்று ஆசிரியரை நினையாமலும், கவடற்ற மனதோடும் அளவற்ற ஊக்கத்தோடும் அறிவின் ஆனந்தத்தை உட்கொள்ள, மான்குட்டிகளைப் போன்ற குழந்தைகள் உலாவித்திரியும்படியான நந்தவனமேயென்று வித்தியாலயத்தை பெற்றோர்கள் அறியவேண்டும். தோட்டங்களில்லாத நந்தவனம் எந்தவனமாகும்?

மேற்றிசை நாடுகளில் தோட்டங்களில்லாத பள்ளிக்கூடங்களைக் காண்பது அரிதாம். ஒவ்வொரு நாளும் பலதடவைக் குழந்தைகளை தோட்டத்திற்கு அழைத்துப்போய் அங்கேயே அநேக விஷயங்களை அறியும்படி உபாத்தியாயர்கள் செய்து வருகிறார்களாம். மேலும் அந்தத்தோட்டங்களில் குழந்தைகள் வேலை செய்வதால் கண்களையும் கைகளையும் நன்றாய் உபயோகித்து, தேகபுஷ்டியையும் அடைகிறார்கள். நமக்குக் கண்கள் இருந்தும் அநேக ஸாமானிய விஷயங்களையும் இயற்கைப் பொருள்களையும் பார்த்துத்தெரிந்து கொள்ளாமலே நாம் ஆயுளைக்கழிக்கிறோம் என்ற அபவாதத்தை நம்மினத்தார்கள் அடைந்திருக்கிறார்கள். இதற்குக்காரணம் கடவுளால் அளிக்கப்பட்ட கை, கால், கண், காது முதலிய கருவிகளை நாம் நன்றாய் உபயோகிக்க சிறுவயதில் கற்றுக்கொள்ளாததே. மேலும் புகழுக்கும் பெருமைக்கும் காரணமாவது உழைப்பேயொழிய பிறப்பல்ல என்கிற விஷயமும் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய தத்துவங்களில் ஒன்றாகும். கச்சை சாத்திய பதுமைகள் போல் பள்ளிக்கூடங்களில் இருந்துவிட்டு ஏதோ மனப்பாடம் மாத்திரம் செய்துவிட்டு தங்களுடைய அருமைக்குழந்தைகள் வீட்டுக்கு அழகழியாமல் திரும்ப வேண்டுமென்ற எண்ணம் பெரும்பான்மையோருக்கு உண்டு. இந்த எண்ணம் பெற்றோர்களுடைய தவறு என்றே சொல்லலாம். ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஒரு தொழிற்சாலையென்றும், அதன் மாணாக்கர்கள் அவ்விடத்தில் உழைக்கும் சிறிய வேலைக்காரர்களென்றும், பெற்றோர்கள் கொள்ளவேண்டும்.

மேலே சொல்லிய பயன்களெல்லாம் சிறந்த போதனா முறைகளெல்லாவற்றிற்கும் பொதுவானவை. பள்ளிக்கூடத் தோட்டங்களால் மாணாக்கர்களுக்கு இன்னும் அநேக நன்மைகள் உண்டு. இயற்கைப் பொருள்களின் உற்பத்தி, வளர்ச்சி, மாறுபாடுகளின் ஒழுங்கு, உபயோகம் முதலியவைகள் தோட்டங்களில் வேலை செய்வதால் சிறுவர்களுக்கு நன்றாய் புலப்படுகின்றன. மேலும், செடி, கொடி முதலியவைகள் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதை கவனித்து உழைப்பதால் அவைகளிடத்தும், பொதுவாய் எல்லா இயற்கைப் பொருள்களிடத்தும், சிறுவர்களுக்கு அன்பும் ஆதரவும் ஏற்படுகின்றன. இவ்விதம் பிரியம் பலப்பட பலப்பட அவைகளின் சிருஷ்டி கர்த்தாவாயும் ஞானநிதியாயுமுள்ள ஈசனிடத்தில் பக்தியும் அன்பும் பெருகும்.

புதிய பாலபோதனா முறைகளில், சிறுவர்கள் எழுதவும், படிக்கவும் கற்றுக்கொள்வதல்லாமல், பிற்காலத்தில் கைக்கொள்ள வேண்டிய தொழில்களின் வழிகளையும் தேட வேண்டுமென்பது விதி. ஆகையால் மரவகைகள், மிருகவகைகள், விளை பொருள்கள் முதலியவற்றைப் பற்றியும், சுகாதாரம், ப்ரகிருதி சாஸ்திரம் இவற்றைப் பற்றியும் இப்போது போதிக்கிறார்கள். இவைகளெல்லாவற்றிற்கும் பள்ளிக்கூடத் தோட்டங்கள் சிறந்த ஸாதனமென்று சொல்லலாம்.

இவ்வளவு இன்றியமையாத ஸாதனத்தை கைக்கொள்ளாதது ஆசிரியர்களுடைய ஊக்கத்தையும் பெற்றோர்களுடைய விவேகத்தையும் நன்கு புலப்படுத்த வில்லை. மேலே சொல்லியபடி பெற்றோர்களை அடிக்கடி பள்ளிக்கூடங்களுக்கு அழைத்து அவர்களுக்கு சிறந்த ஸாதனங்களின் உபயோகத்தைக் காண்பித்தே அவர்களின் உதவியை ஆசிரியர்கள் அடையவேண்டும். ஜனங்களின் க்ஷேமத்திற்கும் தேர்ச்சிக்கும் பால போதமே முக்கிய காரணமென்ற எண்ணம் பெற்றோர்களுக்கு உண்டாக உண்டாக சிறந்த கல்வி ஸாதனங்களை ஏற்படுத்த அவர்கள் ஊக்கமுடையவர்களாவார்களென்பதற்குச் சிறிதேனும் ஸந்தேகமில்லை.

தி. சே. சுப்பிரமணியன்.

SINGLE PLANTING OF PADDY

BY

MR. H. C. SAMPSON.

Deputy Director of Agriculture.

நெல் ஒற்றை நாற்று நடுகை.

நன்செய் நிலங்களைவைத்து, நெல் நடுகை செய்துவரும் ஒவ்வொருவரும், நாற்றுகளை கொத்துக்கொத்தாய் நடாமல் ஒவ்வொரு முதலாய் நடும் வழக்கத்தை அனுசரிப்பது நலம்.

கிருஷ்ணாநதிப்பாசான நிலங்களில், ஒவ்வொரு முதலாய் நடுகிறதே சாதார்ணவழக்கம். இந்த ராஜதானியில் மற்ற எந்த பாகத்திலும், அவ்விடத்திலுள்ள பயிரைவிட சிலாக்கியமான பயிர் காண்பது அரிது. திருநெல்வேலி, தஞ்சாவூர் முதலாகிய இன்னும் மற்ற ஜில்லாக்களில், ஒற்றை நெல்நடுகை பரீட்சைசெய்யப்பட்டு, அனேகரால் கையாடி, இப்போது ஆயிரக்கணக்கான ஏகரா நிலங்கள் இம்மாதிரி நடப்பட்டுவருகின்றன. சம்பா, பிசானம் நெல்தினுசுகளெல்லாம் ஒற்றை நாற்றாக நட்டால் நல்லமேனி தரும். மேலும் இப்படிச்செய்ததில் அடியில் குறிப்பிடும் அனுகூலங்களுமிருக்கின்றன :—

(1) நாற்றுவிட ஜாஸ்தியான விதை வேண்டியதில்லை.

(2) நாற்றங்காலில் நாற்றைப்பிடுங்கி, முடி முடியாய்க்கட்டும் செலவும், அப்படிக்கட்டிய முடிகளை நாற்றங்காலிலிருந்து நடுமிடத்திற்குக் கொண்டுபோகும் கூலியும் பிரயாசையும் குறைவாகிறது.

(3) களையெடுத்தல் சுலபமாவதுடன், தண்ணீரும் சுலபமாய் வயலில்பாயும். இந்தக்காரணத்தைப்பற்றி "ஊறை", "நெல்சக்களத்தி," "வேப்பம்பாசி" முதலாகிய களைகளை பரவவிடாமல் சுலபமாய்த் தடுக்கமுடியும்.

(4) நாற்றங்காலில் விதையைக்குறைத்து பாவுகிறதினால் அதில் முளைக்கும் நாற்று திடமாயும் காத்திரமாயுமிருக்கிறது. சாதாரணமாய் நடுகைகாலங்களில் பெய்யும் மழைகளால் வயல்களில் தண்ணீர் கட்டினாலுங்கூட, நட்டநாற்றுகள் திடமானவைகளானதால் அழுகிக் கெட்டுப்போகாமல் தண்ணீர்ப் பெருக்கைத்தாங்கும் சக்தியுடையவைகளாயிருக்கின்றன.

(5) தண்ணீர்த் தட்டுண்டாகும் சமயங்களில்

இப்படி நட்ட பயிர் வாட்டங்கொடுக்காமல் ஜாஸ்தி நாட்களுக்குக் காய்ச்சல் தாங்குகிறது.

(6) “ ஒற்றை முதலாய் நட்ட பயிர் வேறு விதமாய் நட்டபயிர்களை விட வீரியமாயிருப்பதுடன் நோய் நொடிகளால் அவ்வளவு ஜாஸ்தியாய் பீடிக்கப்படமாட்டாது. தஞ்சாவூர் ஜில்லாவிலும் மற்ற நெல்பயிரிடும் இதர ஜில்லாக்களிலும் எவ்வளவோ நஷ்டத்தை யுண்டுபண்ணும் ‘சூரை’ நோயை ஒற்றை முதலாய் நட்ட இடங்களில் காண்பது துர்லபம்.

(7) ஒற்றை முதலாய் நட்டபயிரில் தானியங்கள் ஒரே நிதானமாய் முற்றி பதர் ஜாஸ்தியில்லாத தானியங்களாயிருப்பதால், ஜாஸ்தி கண்டுமுதல்கிடைக்கும்.

ஒற்றை முதலாய் நடும் வழக்கத்தை எல்லாரும் யாதொரு வருத்தமில்லாமல் செய்யக்கூடும். அப்படிப்பட்டவர்களுக்கு இதனடியில் குறிப்பிட்டிருக்கும் குறிப்புகள் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கும் :—

(1) விதை நல்லதாயும் சரியானபடி காயப்போட்டு பத்திரப்படுத்தியதாயுமிருந்தால் ஏழு செண்டு நாற்றங்காலில் ஏழு பட்டணம் படி விதை நாற்றுப் பாவினால் ஒரு ஏகரா நிலத்தில் நடப்போதுமான நாற்றுக் கிடைக்கும். தஞ்சாவூர் ஜில்லாவில் அனேக கிருஷிகர் ஒரு ஏகரா நிலம் நட மூன்று பட்டணம் படி சிறுமணியனாவது சிவப்புச்சம்பாவிதையாவது நாற்றுப்பாவுவதாய்ச் சொல்லுகிறார்கள்.

(2) கூடுமானால் முந்தின வருஷத்தில் ஒற்றை நாற்றாய் நட்ட பயிரிலிருந்து விதை சேகரிக்கவேண்டும். சித்திபெற இப்படிச் செய்தல் அவசியமில்லையென்றபோதிலும், ஒருதரம் ஒற்றை முதலாய்ப் பயிர்செய்துவிட்டால், அந்தப்பயிரிலிருந்து தனக்குவேண்டிய விதையை, எப்போதும் பொறுக்கி சேகரித்து வைத்துக்கொள்ளக்கூடும்.

(3) புழுதிக்காலில் பாவின நாற்று சேற்றுக்காலில் பாவிய நாற்றைவிட திடமாயிருக்கும்.

(4) நாற்றங்காலில் நாற்று ஜாஸ்தியாய் முதிர்ந்து போகுமுன் பிடுங்கிநடவேண்டும். நாற்றுப்பாவியிருக்கும் நெல் தினுசின் மொத்த வயதைக்கணக்கிட்டு, ஒருமாதம் வயதுக்கு ஒருவாரத்திற்கு மேல் நாற்றங்காலில் நாற்றை வளரவிடக் கூடாது. உதாரணமாக ஐந்து மாதத்தில் விளையும் நெல் தினுசை 35 நாள்களுக்குமேல் நாற்றங்காலில் வளரவிடக் கூடாது.

(5) ஒற்றை நாற்றுநடுகை எவ்வளவு தூரத்திற்கு ஒரு நடுகை போடவேண்டுமென்ற விஷயத்தைக்குறித்து ஒவ்வொரு கிருஷிகரும் தாமே நிதானித்துக் கொள்ளவேண்டியது என்றாலும் அடியில் குறிப்பிடும் அளவுகள் சற்றேறக்குறையப் பொருந்தும். ஏகரா ஒன்றுக்கு ஆயிரம் பட்டணம்படிக்குமேல் மாசூல் கொடுக்கும் நிலங்களில் சாணுக்கு ஒரு நடுகையும், ஏகரா ஒன்றுக்கு 750 பட்டணம் படி மாசூல் கிடைக்கும் நிலங்களில் முக்கால் சாணுக்கு ஒரு நடுகையும், ஏகரா ஒன்றுக்கு 500 பட்டணம்படிக்கு மேல்படாதமாசூல் கொடுக்கும் நிலங்களில் அரைச்சாணுக்கு ஒரு நடுகையும் போடுதல் ஒருவேளை சரியாயிருக்கும். சாதாரணமாய் ஏகரா ஒன்றுக்கு 1,500 பட்டணம்படி மாசூல் கொடுக்கும் கொழுத்த நிலங்களில், ஒரு நடுகைக்கும் மற்றொரு நடுகைக்கும், இரண்டு சாண் தூரமிருந்தால் நல்லமாசூல் கொடுக்கலாம். ஆனால் நடுகை செய்யாதவும், எப்பொழுதும் விதைப்பையே கையாடிவரும் மிக்க கேவலமான நிலங்களில் ஒற்றை நாற்று நடுதலால ஜாஸ்தி மாசூல் கிடைக்கலாமென்று சொன்ன போதிலும், அப்படி நட்டினால் கிடைக்கும் ஜாஸ்தி மாசூலைவிட ஒற்றை நாற்றாய் நெருக்கி நடச் செல்லும் செலவு ஜாஸ்தியாகவேயிருக்கும்.

ஒற்றை நாற்று முதல் முதல் நடப்படும் பொழுது, பார்வைக்கு ரொம்ப கலப்பாயும் கேவலமாயும் தோன்றும். இந்தக் காரணம் பற்றி முதல் முதல் இதைக் கையாடும் கிருஷிகர் அதைரியப்படக்கூடாது. அக்கம்பக்கத்தில் பயிரிடும் கிருஷிகர் இப்படி நட்டபயிர் கெட்டுப்போகுமென்று முன்கூட்டியே பயமுறுத்தினாலும் தைரியத்தை விடக்கூடாது. 10, 20 அல்லது 30 நாற்றுகளைவைத்து வழக்கப்படி நடும் இடத்தில் ஒரு நாற்று நட்டிருப்பதால் மிகக் கலப்பாய்த்தான் பார்வைக்குத் தோன்றும். ஆனால் இந்தப்பயிர் நாளாவிர்த்தியில் கிளைத்துப் பக்கம்வைத்து காலி இடத்தை மூடிக்கொண்டு, அக்கம்பக்கங்களில் கொத்துக் கொத்தாய் நட்ட நடுகையைவிட பார்வைக்கு மேன்மையாகவேயிருக்கும்.

எச். வி. ஸாம்ஸன்.

OUR LATE EMPEROR

BY

S. G. SUBRAMANYAN, B. A.,

Science Assistant, Findlay College, Mannargudi.

காலஞ்சென்ற நமது சக்ரவர்த்தி.

நமக்குச் சக்ரவர்த்தியாயிருந்து நாளது மாதம் 7-ஆம் தேதி காலஞ்சென்ற ஏழாவது எட்வர்ட் 1841-ம் வருஷம் நவம்பர் மாதம் 9 ஆம் தேதி விக்டோரியா மஹாராணிக்கு இரண்டாவது குழந்தையாகவும் மூத்த குமாரனாகவும் பிறந்தார். அதே வருஷத்தில் டிசம்பர் மாதம் 4-ஆம் தேதியில் அவருக்கு “ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ்” என்ற பட்டம் அளிக்கப்பட்டது. இவருடைய தகப்பன் பெயர் ஆல்பர்ட். இவருடைய பாட்டன் பெயர் எட்வர்ட். ஆகையால் இவருக்கு ஆல்பர்ட் எட்வர்ட் என்று பெயர் வைத்தார்கள். பத்து வயது வரையிலும் மஹாராணியின் மேன்பார்வைக்குட்பட்டே இவருக்குப் படிப்புக் கற்பிக்கப்பட்டது. மஹாராணி அவர்கள் தம் குழந்தைகளுக்கு படிப்பை மாத்திரம் கவனிக்கவில்லை விளையாட்டு விஷயங்களையும் நன்றாய்க் கவனித்தார்கள். அன்றியும் தம் குழந்தைகளை சாதாரண வீட்டுக் குழந்தைகளைப் பழக்குவது போலவே பழக்கினார்கள். எப்படியென்றால், இந்தக் குழந்தைகள் மானேஜ்மெண்டில் ஒரு சின்ன வீட்டையும் தோட்டத்தையும் வைத்தார்கள். அவ்விடத்தில் பெண்குழந்தைகளுக்கெல்லாம் சமையல் செய்யும் விதமும் குடித்தனக்காரியம் பார்க்கும் விதமும், ஆண் குழந்தைகளுக்கெல்லாம் வீடுகட்டும் விதமும் தோட்டம் போடும் விதமும் சொல்லிக்கொடுத்தார்கள். நம்முடைய மகாராஜா அப்போதே சித்திரம் எழுதுவதில் கெட்டிக்காரர். இவர் எழுதின ஒரு சித்திரம் ரூபாய் 800-க்கு விற்றிருக்கிறது.

இவருக்கு எல்லா சாஸ்திரப்படிப்பையும் கற்பிப்பதற்கு அநேக வித்வான்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். சக்ரவர்த்தி ரஸாயன சாஸ்திரத்திலும், பாஷைகளிலுமே விசேஷ தேர்ச்சியடைந்தார். ஆனாலும் இவருக்கு எல்லா விஷயங்களிலும் தேர்ச்சி உண்டு. சிப்பாய்கள் தான் என்ன, மந்திரிகள் தான் என்ன, கப்பலோட்டிகள் தான் என்ன, வித்வான்கள் தான் என்ன, ஆகிய அந்தந்தத் தொழிலில் வல்லவரோடு நேராகக் கலந்து பழகினதால் மிகவும் புத்திசாலி ஆனார்.

1858-ம் வருஷத்தில் எட்வர்டை தக்க சிநேகிதர்களுடன் ராணுவ வித்தை கற்பதற்கு அனுப்பினார்கள். அடுத்த வருஷம் நவம்பர் மாதம் 9-ஆம் தேதி அவர் ராணுவத்தில் கர்னல் ஆனார். அன்றையதினம் தான் மேஜரும் ஆனார். சட்டப்பிரகாரம் இவர் பட்டம் வகிப்பதற்குரியவர். அப்பொழுது அவர் தாயார் மஹாராணி விக்டோரியா ஒரு கடிதம் எழுதினார். “அப்பா, குழந்தாய், நீ இன்றையதினம் முதல் பெரிய மனுஷன் ஆகி விட்டாய், பெற்றோர்கள் கட்டுப்பாட்டினின்றும் நீங்கினாய்” என்று எழுதியிருந்த இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் எட்வர்டுக்குத் தன்னை அறியாமல் கண்ணீர் தெளும்பியதாம்.

எட்வர்டுக்குப் பிரயாணம் செய்வதில் ரொம்பப் ப்ரீதி. இவர் போகாததேசமே இல்லை என்று சொல்லலாம். 1854-ம் வருஷத்தில், ரோம், ஸ்பெயின், போர்ச்சுகல் முதலான தேசங்களுக்குப் போனார். 1860-ம் வருஷத்தில் அமெரிக்காவுக்குச் சென்றார். அடுத்த வருஷம் ஸப்டம்பரில் ஜர்மெனிக்குப் போனார். அப்பொழுதுதான் பிற்பாடு அவருக்கு மனைவியாக ஏற்பட்ட “அலக்ஸாந்திரியா”வை

முதல் முதல் பார்த்தார். அதே வருஷத்து டிஸம்பர் மாதத்தில் அவருடைய தகப்பனார் இறந்தார். அந்த துக்கம் பரிகாரமாவதற்கு ஜருஸலம் சென்றார். பிற்பாடு 1863-ம் வருஷம் இவர் "ப்ரிவிகவுன்ஸிலர்" ஆனார். உடனே லார்ட்ஸ் ஸபையில் ஒரு மெம்பர் ஆனார். ஆனதும் மற்றமெம்பர்கள் போலவே தானும் சாதாரண உடுப்பைப்போட்டுக்கொண்டு அந்த ஸபையில் உட்காருவார். அதே வருஷம் மார்ச்சு மாதம் 10 ஆம் தேதி இவருக்கும் அலெக்ஸாந்திரியாவுக்கும் விவாகம் நடந்தது. 1865-ம் வருஷம் ஜனவரியில் ப்ரின்ஸ் ஆல்பர்ட் விக்டர் என்பவர் பிறந்தார். அடுத்த வருஷம் ஒரு பிள்ளை பிறந்தது. பிற்பாடு மூன்று பெண்குழந்தைகள் பிறந்தன. விக்டோரியா மஹாராணி தன் புருஷன் இறந்து போனபடியால் அதிகமாக வெளிவருவதில்லை. ஆகையால் அநேக வைதீக லௌகீக விஷயங்களில் நம் சக்ரவர்த்தி எட்வர்டும் அவர் மனையாட்டியுமே முக்கியமாய் நிர்வாகம் செய்யவேண்டியதாய் ஏற்பட்டது. ஆகவே ஜனங்களுக்கு இவர்களிடத்தில் விசுவாசமும் நேசமும் ஜாஸ்தி உண்டாயிற்று. ப்ரிவிகௌன்ஸிலில் இவர் இருந்தவரையில் காரியங்களை நன்றாய்க் கவனித்து வந்தார். இருந்தாலும் இவர் சாதாரண ஜனங்களோடு அதிகமாய்க்கலந்து வந்ததால் இவரை 'ஷோக்கு ஆஸாமி' என்று சிலபேர்கள் சொல்வதுண்டு.

தகப்பனார் இறந்து பத்து வருஷங்களுக்கெல்லாம் இவருக்கு அபாயமான சிக்கு வந்து வயித்தியரும் கைவிட்டார்கள். ஏதோ தெய்வாதீனமாய்ப் பிழைத்தார்.

1875-ம் வருஷத்தில் எட்வர்ட் இந்தியாவுக்கு வந்தார். நம்முடைய தேசத்து ஜனங்களைப் பற்றியும், அவர்கள் நடவடிக்கைகளைப் பற்றியும் இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் நன்றாய் ஆராய்ந்து கொண்டார். அவருக்கு இங்கிருந்து கொடையாகக் கொடுக்கப்பட்டவைகளின் விலை 5 லக்ஷம் பவுன் இருக்கலாமென்கிறார்கள். பிற்பாடு 1885-ம் வருஷம் ஐர்லாந்து தேசத்தைச் சுற்றினார். 1887-ம் வருஷம் விக்டோரியாவினுடைய ஜூபிலிக்காக ஏற்பாடு செய்ததில் முக்கால்வாசி வேலை இவரே செய்தாராம். 1889-ம் வருஷம் அவருடைய மூத்த குமாரத்திக்கு விவாகம் நடந்தது. 1892 ஆம் வருஷம் அவருடைய மூத்த பிள்ளையாகிய ஆல்பர்ட்விக்டர் செத்துப்போனார்.

1893 ஆம் வருஷம் ஜூலை மாதம் இவருடைய ஒரே குமாரனாய் ஆகிவிட்ட பிரின்ஸ் ஜார்ஜ்ஜுக்கு விவாகம் நடந்தது. 1896-ம் வருஷத்தில இவருடைய குமாரத்தியை நார்வே தேசத்து ப்ரின்ஸ் சார்ல் ஸூக்கு விவாகஞ் செய்தார்கள். 1897-ம் வருஷம் நடந்த டைமண்ட் ஜூபிலியில் இவரும் இவர் மனைவியும் நிரம்ப அக்குசு எடுத்துக் கொண்டார்கள். 1898-ம் வருஷம் உலகப் பிரசித்தி பெற்ற இங்கிலாந்து மந்திரியாகிய 'கிளாட்ஸ்டன்' என்பவர் இறந்து அவருடைய பிணத்தைப் புதைப்பதற்குத் தூக்கிக்கொண்டு போன பல்லக்கில் ஒரு பக்கம் நம் சக்ரவர்த்தி தாங்கினார்.

1900-ம் வருஷம் இவர் ஒரு ஆபத்துக்குத் தப்பிப் பிழைத்தார். இவரும் இவர் மனைவியும் டேன்மார்க்குக்குப் போகும்போது இவர்களைப் பார்த்து ஒரு வாலிபன் துப்பாக்கியால் சுட்டான். நல்லவேளையாய் குண்டு லக்குத்தவறித் தப்பித்தார்கள்.

1901-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 22-ஆம் தேதி மாக்ஷிமை தங்கிய விக்டோரியா மஹாராணி மரண மடைந்தார். அன்றைய தினம் முதல் எட்வர்ட் ஆல்பர்ட் நம் சக்ரவர்த்தியானார்.

1902-ஆம் வருஷம் ஜூன் மாதம் 26-ஆம் தேதி இவருக்குப் பட்டாபிஷேகம் நடக்க நாள் பார்த்திருந்தது. 24-ஆம் தேதி சக்ரவர்த்திக்கு ஒரு பெரிய உபாதி உண்டாகி சத்திரம் செய்யும் படியாயிற்று. பிற்பாடு ஆகஸ்டு மாசம் 8-ஆம் தேதி பட்டாபிஷேகம் நடந்தது. இவர் பட்டம் பெற்று ஒன்பது வருஷமானாலும் தம்முடைய பெரிய மனதையும், புத்திசாலித்தனத்தையும், குடிகள் க்ஷேமத்தின் மேல் வைத்த கவலையையும், பலவாறாகச் சொல்லலாம். அவர் வயதானவரேயானாலும் சரீர திடமுள்ளவராக இருந்தார். அவர் தாயார் விக்டோரியா ராணியைப் போலவே செங்கோல் செலுத்தும் முறையில் வல்லவர். இவர் போகாத தேசமில்லை என்று சொன்னோம். ஆகவே ஐரோப்பிய ராஜாக்களோடு எப்பவும் சிநேகமாயிருந்தபடியால் ஒரு தேசத்துக்கும் மற்றொரு தேசத்துக்கும் சண்டையில்லாமல் பார்த்து வந்தார். ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இந்தியா தேச பரிபாலனத்தை விக்டோரியா மஹாராணியிடம் கொடுத்தது 1858-ஆம் வருஷம். 1908-ஆம் வருஷம் நவம்பர் மாஸத்தில் சரியாய் 50 வருஷம் ஆயிற்று. அப்போது இந்தியாப்ரஜைகள் ஒரு சம்வத்ஸர உற்சவம் நடத்தினார்கள். அந்த ஸமயத்தில் நம்முடைய சக்ரவர்த்தி அனுப்பிய செய்தியைப் "பிழைக்கும் வழி" யின் 1909-ம் வருஷத்து ஜனவரி மாஸத்துச் சஞ்சிகையில் எல்லோரும் படித்திருக்கலாம்.

அதில் சொன்னபடி இந்தியா அரசாக்ஷியில் ஜனங்களுக்குக் கொஞ்சம் செல்வாக்கு ஏறும்படியாக பல மாஹாணங்களிலுமுள்ள சட்ட நிரூபண சபைகளில் பொது ஜனப்பிரதிநிதிகளை ஜாஸ்திப்படுத்தியிருக்கிறார். தவிர, இந்தியா கவரன்மெண்டின் நிர்வாக சபையிலும் மாஹாண கவரன்மெண்டுகளின் நிர்வாக சபைகளிலும் இந்தியா காரியதரிசியின் சபையிலும் சில இந்தியர்களைத் தெரிந்தெடுத்து நியமித்திருக்கிறார். இவைகளெல்லாம் அவருடைய பெருந்தன்மையையும் ஜனங்களினிடத்திலுள்ள அன்பையும் நன்றாய் வெளியாக்குகின்றன. எப்போதும்போல் ராஜரீக வேலைகளைப் பார்த்து வந்தவருக்கு திடீரென்று கபம் கட்டிக்கொண்டிருப்பதாயும் அதனால் கொஞ்சம் பயமாக இருப்பதாக டாக்டர்கள் சொல்வதாயும் 'மே௴ 5௳ சீமையிலிருந்து தந்தி வந்தது. மறுநாள் போக மறுநாள் இறந்துவிட்டதாகத் தந்திவந்துவிட்டது. வயதானவரானாலும் இவ்வளவு திடீரென்று இறந்துபோய் விடுவாரென்று ஒருவராகிலும் எண்ணவில்லை.

எஸ். ஜி. சுப்பிரமணியன்.

OUR INDUSTRIAL POSITION

BY

V. A. GOPALAKRISHNA AIYAR.

நமது கைத்தொழில் திறமை.

இந்தியாவில் ஏராளமாய் விளையும்பொருள்களைப் பொதுஜனங்களுக்கு வேண்டியப் பிரகாரம் செய்து கொள்ளப் போதுமான ஊக்கமும் சிரத்தையும் நாளடைவில் வரவரக் குறைந்ததினாலே நம்மவர்களுக்கு இப்பொழுது தினந்தோறும் அத்தியாவசியமாய் வேண்டிய பல பொருள்களையும் அயல் தேசங்களிலிருந்து வாங்கவேண்டியிருக்கிறது. இதனால் நாம் அந்த வர்த்தகத்தால் உண்டாகும் லாபம், எல்லாவற்றையும் இழந்துவிடுகிறோம். காலையில் எழுந்திருந்தது முதல் மறுபடியும் இரவில் நித்திரைக்குப் போகும் வரையில் ஒருவனுக்கு வேண்டிய ஒவ்வொரு சாமானையும் பற்றிக் கவனிப்போம். நவீன நாகரீக முதிர்ச்சியின் பயனால் ஏற்பட்டிருக்கும் காப்பி முதல் முதல் வேண்டியது. இதற்குத் தண்ணீர் காய்ச்சக் கெட்டில் என்ற பாத்திரம் அயல் நாட்டிலிருந்து செய்து அனுப்பப்பட்டிருக்கிறதையே பலர் உபயோகப்படுத்திவரக் காண்கிறோம். மேலும் வெகு நேர்த்தியான பசுக்கள் பெருகும் நம்முடைய பரதநாட்டிலும் அயல்நாட்டிலிருந்து தயார் செய்து அனுப்பப்பட்டிருக்கும் கண்டென்ஸ்ட் மில்க் என்ற பால்புட்டியைப் பலர் உபயோகிக்கிறார்கள். நாட்டுச்சர்க்கரை அவ்வளவாகப் பளபளப்பும் ருசியும் உடையதல்ல என்று சீமைச் சர்க்கரையென்று மணல் மணலாய் விற்பதையும், ஸாக்கரைன் முதலிய இன்னும் நாகரீகமும் சுலபமுமான சர்க்கரை மாத்திரைகளையும் பலர் உபயோகித்து வருகிறார்கள். இதன் பிறகு உட்காரும் நாற்காலி, மேஜை, விசு

பலகை முதலியவைகள் செய்வதற்கு வேண்டிய இரும்பு ஆணிகள், கீல்கள், பூட்டு சாவி முதலியவைகள் அயல் தேசத்திலிருந்து வந்திருப்பவைகளே. இடுப்பில் கட்டும் நம்பர் மல்லும், தேகத்தில் லாங்கிலாத் ஷர்ட்டு, ட்வீட், ப்ளானல், பட்டுக் கோட்டுகள் முதலியவைகளும், இவைகளுக்கு லயனிங் துணிகள், கடைசியாகப் பொத்தான்கள், தலைக்கு மஸ்லின் தலைக்குட்டை, காலில் மேஜோடுகள் பூட்ஸ் வகைருக்களும் அயல் நாட்டிலிருந்தே வரவழைக்கப்பட்டு அவற்றின் மேனி மினுக்கிற்காக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனிடையில் ஏதாவது படிக்கத்தலைப்பட்டாலோ, புஸ்தகங்கள், நியூஸ்பேபர்களின் காகிதங்கள், அச்சு யந்திரங்கள், டைப்புகள், கடைசியாக மை முதற்கொண்டு அயல் நாட்டிலிருந்தே தருவிக்கவேண்டிவருகிறது. பிறகு போஜனத்துக்கிருந்தாலோ, முன்காலங்களில், வெள்ளி, வெங்கலத்தாலம், வெள்ளோட்டுத்தாலம் என்ற வெகு சுத்தமும் ரமணீயமுமான கலங்களையெல்லாம் விட்டு, இரும்புத் தகட்டில் மேலுங் கீழும் பூச்சு மினுக்கால் பகட்டும் எனாமல் தாலங்களும், கோப்பைகளும் தட்டுகளுமே சாதாரணப் புராதன வைதீக ஒழுக்கத்தை அனுசரித்து நடப்பதாக நடிக்கும் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் வித்தியாசமில்லாமல் எவர் வீடுகளிலும் ஏற்பட்டு விட்டன. இதன் பிறகு தாம்பூல மிடப்புகுந்தால், இவற்றை வைக்குந்தட்டுகள்கூடப் பல பூவேலைப்பாடுள்ள நிக்கல் தட்டுகளே. படுக்கையின் விமரிசையோ, உயர்ந்த ஸோபா, சீட்டிகளால் தைக்கப்பட்ட மெத்தை தலையணைகள், நேர்த்தியான நம்பர் மல் அல்லது கேம்பிரிக் கச்சை உறைகள், கொசுவலை முதலிய எல்லாம் அயல் நாட்டிலிருந்து வந்தவைகளே. வீட்டில் பெண்பிள்ளைகளின் சமையல் பாத்திரங்களில் கூட பித்தளை, வெண்கலப்பாத்திரங்கள் அதிகக் கனமாக இருக்கிறதினாலேயோ, கரியேறினால் விளக்க முடியாமலேயிருக்கும் காரணத்தைக்கொண்டோ, எனாமல் பாத்திரங்களாய் முடிந்து விட்டன. விளக்கு வரிசைகளோ, பௌவர்லைட், காஸ்லைட், எலெக்ட்ரிக்லைட், வால்சிம்னிகள், கடைசியாகத் தகர விளக்குகளாகி, இவற்றிற்கு வேண்டும், கெரோஸின், பெட்ரோலியம், வத்தி முதல் அயல் தேசத்தவைகளே. குக்கிராமங்களில் ஜனங்கள் இருட்டுக்காலங்களில் வெளியே செல்ல நேர்ந்தால் முன் காலங்களில் போல கை விளக்குகள், தீவட்டிகள், முதலியவைகளை உபயோகிக்காமல் இப்பொழுது ஷேட்டு விளக்குகள் அயல் நாட்டிலிருந்து வந்துள்ள மெழுகுவத்திகள் ஆகிய இவைகளையே பெரும்பாலும் கையாளுகிறார்கள். இன்னும் பல விவரங்களைக் கவனிக்கப் புகுந்தால் எழுதிமுடியாது, ஏடு இடங்கொள்ளாது. இப்படி நமக்கு முக்கியமாய் வேண்டிய ஒவ்வொரு சாமானும் அயல் நாட்டில் செய்யப்படுவதால், நாம் அடையும் நஷ்டத்தைச் சொல்லமுடியாது. இந்தச்சாமான்களில் ஏதாவது நம்மால் செய்ய முடியாததாயிருந்தால், அதைப் பற்றி நாம் வருத்தப்படுவதில் சிறிதும் பயனில்லை. அப்படிக்கில்லாமல் எல்லாம் எளிதிற் செய்யக்கூடியனவாயினும், நமது கவனக்குறைவு, சோம்பேறித்தனம், அறிவின்மை, ஆகிய இவைகளால் அயல் நாட்டுச்சாமான்கள் வந்தாலொழிய, நமது உணவு, உடை, படுக்கைகள், நமக்கில்லையென்னும்படி அதோகதியடைந்திருப்பது முற்றிலும் மானக்கேடான நிலைமை யென்பதை அறிவுடைய எவரும் மறுத்தல் சாத்தியமாகாது.

வி. எ. கோபாலகிருஷ்ணன்.

SELECTIONS.

விசேஷத் திரட்டு.

ROTATION OF CROPS.

BY

RAO BAHADUR J. DHARMARANGA RAJU.

பயிர் மாற்றல்.

1. பண்ணைநிலம் பயிர் மாற்றல்செய் பாங்கினைப் பகரும்;
மண்ணின்பயி ருணவுமட்டாய் மாறிச்செலவாகும்.
2. மனிதர் நாளும் உணவருந்தி வளர்வதுபோல,
தினமும் பயிர் மண்ணுணவைத் தின்று வளருமே.
3. பலபயிர்க்குப் பலபொருட்கள் பயன்படுமுணவாம்;
சிலபயிர்க்குச் சிலபொருட்கள் சிறிதும் பயன்படா.
4. கத்தரியுங் கனமிளகாய் காரப்புகையிலை,
சத்துமிகுஞ் சாம்பற்காரஞ் சதாவுண்ணுமே.
5. கம்புசோளங் கோதுமைநெல் கதிர்த்தானியங்கள்,
அம்புவியில் பிரகாசிதம் அதிகம் அருந்துமாம்.
6. காராமணி காணுங்கடலைக் காய்த்தானியங்கள்
ஏராளமாய்ச் சுண்ணும்பையே எடுத்துக்கொள்ளுமாம்.
7. இவ்வகையில் இட்டபயிர் இயற்கையாகவே
ஒவ்வொன்றுமே ஒருணவை உறுஞ்சிஉட்கொள்ளும்.
8. ஒருபயிரை ஒருநிலத்தில் ஓயாமலிட்டால்
ஒருவகையாம் உணவுமட்டும் ஓயாமற்செலவாம்.
9. நிலத்திற்பொருள் நிறைநிதான நேர்மைநீங்கிடில்
பலன்தராது பல்லாண்டினிற் பாழ்நிலமாமே.
10. புன்செய் நன்செய் பஞ்சமெனப் புகல்வதினாலே
கன்சமாக்கிக் கால்மாறிக்கை கழிப்பதினாலே.
11. பயிர் மாற்றுவதால் பண்ணைவளங் குன்றாதுபாரும்;
உயிரைப் போன்ற பயிருணவொவ் வொன்றுமிருப்பதால்.
12. மக்காச்சோளம் வாழைவரகு மஞ்சட் கரும்புமே
சிக்கெனமண் சத்தை நீக்கி சீர்கெடுக்குமே.
13. இப்பயிர்கட் கேராளமாய் எருவிடவேண்டும்
எப்போது மிதன்செலவோ எண்ணவொண்ணாதே.

14. பயிர் மாற்றில் எருவிடுதல் பாரிலே எளிதாம்;
இயற்கையிலே வளம்பெருகில் எருவிடலேனோ?
15. ஆணிவேர் மைந்தபயி ரடிமண்ணைத்தின்னும்;
பேணியுண்ணுங் கொத்துவேர்கள் பிறக்குமேல் மண்ணை.
16. கோதுமை நெல் கதிர்த்தானியம் கொத்துவேர்களால்
ஓதும்சத் துறிஞ்சிமண்ணை ஓயச் செய்திடும்.
17. காராமணி கடலைமொச்சை காய்த்தானியங்கள்
வேராழமாய் விட்டேமண்ணை விருத்திசெய்திடும்.
18. இவ்விதத்தில் ஒரு பயிரால் இழந்திடுஞ்சத்தைச்
செவ்விதாக மறுபயிரால் செய்திடக்கூடும்.
19. பயிர் மாற்றினால் பண்ணைதனில் பலபயிர் நிற்கும்
வெயில் மழையால் ஒன்று கெடில் விளையும் வேறொன்றே.
20. அவற்றிலொன்று கால்நடைகட் காகாரமாகும்
தவறில்தழை எருவிடவே தக்கதுமாம்.
21. ஒரு பயிரில் ஒருவிதநோய் ஒட்டியிருக்குமாம்
தங்கும்நோயைத் தடுத்துக்கொள்ளும் தகுபயிர் மாற்றில்.
22. சிலபயிரில் களைகள் மிகச் செறிந்து சேருமாம்;
நிலத்திற் பயிர் மாற்றிற் களை நெருங்கிச்சாகுமாம்.
23. தாருமாறாய்ப் பயிர் மாற்றல் தக்க தல்லவே;
சீரொழுங்காய்ச் சிரத்தையொடு செய்யவேண்டும்.
24. இடமுங் காலம் இரு நிலத்தின் இயல்பு மேழைகள்
தடமுந் தாங்கல் தண்ணீருக்குத் தக்க மாற்றலாம்.
25. கதிர்த்தானியங்கள் நிகழ் வருஷத்தில் கழனியிலிட்டால்
எதிர் வருஷத்தில் ஏதேனுங் காய்த் தானிய மியற்றிடலாம்.
26. அடுத்துத் தைல வித்துப் பயிர் ஆக்கிய பின்னர்
மடித்துச் சோள நாற்றுப் பயிர் மாற்றிடலாகும்.
27. பல்லாண்டாகப் பயிர் செய்தாலும் பலன் குறையாதே
எல்லோரும் யாம் இயம்பும் முறையை ஏற்றுக் கொள்ளுவீர்.

—கிருஷிகன். ஜே. தர்மரங்கராஜு.

WANTED AGENTS.
ஏஜெண்டுகள் தேவை.

"பிழைக்கும் வழி"க்கு சந்தாதாரர்கள் சேர்க்க தகுந்த ஏஜெண்டுகள் தேவை. மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் சம்பளமும் இது தவிர கமிஷனும் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.

HOW TO AVOID DEBT.
கடன்படாமலிருக்கும் வகை.

இத்தேசத்திலுள்ள ஜனங்கள் கடன் படாமலிருப்பார்களாகில் எவ்வளவோ பாக்கியசாலிகள். பின் சொல்லிய சட்டங்களை அனுசரித்தால் அதை அடையலாம். அவைகளில் முக்கியமானது உனக்குக் கிடைப்பதை மிச்சம் பிடித்துச் செலவு செய் என்பதே. அப்படி நடந்துகொள்வதற்கு அடியிற் காட்டியவை அவசியமானவை.

1. உன்வரும்படியையும் செலவையும் திட்டவட்டமாய் மதிப்பிட்டுக்கோள். வரும்படியை அதிகமாக அல்லது செலவைக்கொஞ்சமாக மதிப்பிட வேண்டாம். ஒவ்வொரு ஒழுங்குள்ள ராச்சியத்திலும்பட்ஜெட் என்னும் அரசிறைக் கணக்கு அதாவது வருஷவாரி வரவு செலவுக் கணக்குண்டு. அப்படியே ஒவ்வொரு குடும்பத்திற்கும் இருக்கவேண்டும். முக்கியமான செலவுகள் என்னவென்றால் வீட்டுக் குடிக்கூலி, வரிகள், போசனசாமான்கள், வீட்டுக்குரிய சாமான், வஸ்திரங்கள், படிப்பு, தருமம், சில்லரைச்செலவுகள், மீதமானது என்பவைகளே. ஒவ்வொரு விஷயத்தையும் சரியானபடி யோசித்து அதற்குரியதைத் திட்டமாக்கிக் கொள்ளவேண்டும்.

2. உன் செலவுக்கெல்லாம் ஒரு கணக்கு வைத்துக்கோள். சரியான கணக்கு முறைகளைத் திட்டஞ்செய்து கொள்வதில் ஒருவன் தன்னுடைய காரியம் எப்படி இருக்கிறதென்று எப்போதும் தன் கண்ணுக்குமுன் வைத்துக் கொள்வதை விட வேறொன்றும் அவனைச் சரிப்படுத்தாது என்று ஒருவர் சொல்லுகிறார். ஒவ்வொரு தினமும் நீ எவ்வளவு செலவு செய்தாயென்பதைக் குறித்துக்கொள். அநேக எளிய மனிதர்கள் தங்கள் திட்டமான வரவு செலவுக் கணக்குகளை வைத்துக் கொள்வது அவசியமல்ல என்று எண்ணுகிறார்கள். இது பெரிய தப்பிதம். அதிக எளியவர்களே தங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு காசையும் பற்றி அதிகக் கவலையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

3. நீ வாங்கும் பொருள்களுக்கெல்லாம் உடனே பணம் செலுத்திவிடு. ஒருவன் தன் பணத்தை உடனே கொடுக்கும்போது, தான் வாங்கியவைகள் தனக்கு அவசியமாவென்று கவனிக்கிறான். கடைக்காரனிடம் நீ பதிவுச் சீட்டு வைத்துக்கொள்வாயானால், நீ அவனிடத்தில் போய் அவன் கொடுக்கிறவைகளை மாத்திரம் நீ வாங்கநேரிடும். பணம் உடனே கொடுத்து வாங்கினால் எங்கே நல்ல சாமானிருக்கிறதோ, எங்கே நயமாய் விற்கிறதோ, அவ்விடத்துக்குப் போய்வாங்க நேரிவதுமன்றி கமிஷன் தள்ளியும் வாங்கலாம்.

4. அனாவசியமான செலவை நிறுத்தி விடவேண்டும். நீ ஒரு சாமானை வாங்கும்போது இது வாங்கப் பணமிருக்கிறதா என்று கவனிக்காமல், இந்தச் சாமானில்லாமல் இருந்தாலென்ன என்று கவனிக்கவேண்டும். அவசிய மில்லாதவைகளை வாங்குகிறவனுக்குத்தான் வாங்காதவைகள் அவசியமென்று தோன்றும். கலியாணச் செலவுகள் மிதமாயிருக்கவேண்டும். இதனால் உனக்கு நன்மை உண்டாவதுமன்றி, உன் தேசத்தாருக்கு நல்ல வழக்கத்தை உண்டுபண்ணுகிறவனாய் இருப்பாய். எல்லாவகைச் செலுவுகளிலும் லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதற்கும் தாசியாட்டத்திற்கும் செலவிடுவதே எல்லாவற்றிலுங் கெட்டது.

5. சேவிங்ஸ் பாங்கில் கணக்கு வைத்துக் கோள். ஜனங்கள் தங்கள் பணங்களைப் பத்திரமாய் வைத்துக்கொள்ளும்படி ப்ரிட்டிஷ் துரைத்தனத்தார் இந்தத் தேசத்தின் பற்பல பாகங்களிலும் தபால் ஆபீஸ்களில் சேவிங்ஸ்

பாங்கி வைத்து எந்த சமயத்திலும் லேசாய்க் கிடைக்கும்படியாக ஒழுங்கு செய்திருப்பதுமன்றி அப்படி வைக்கப்படும் பணத்துக்கு வட்டியும் கொடுத்து வருகிறார்கள். எவனும் 4 அணாவுக்கு மேற்பட்ட தொகையை இஷ்டமானபோது போட, அல்லது வாங்கிக்கொள்ள, தாராளமாய்ப் போகலாம். அங்கே அவனுக்குக் கொடுக்கப்படுகிற கைப்புஸ்தகத்தில் அந்தப்பணம் பதிவு செய்யப்படும். அவன் அல்லது அவனால் அதிகாரம் பெற்றவன் அந்தப்பணத்தை வாங்கிக்கொள்ளலாம். கவர்ன்மெண்டார் அப்படிக் கொடுத்து வைக்கும் பணத்தைப் பத்திரப்படுத்தி அதற்கு வட்டியும் கொடுக்கிறார்கள். ஆகையால் தந்திரமாய் ஏமாற்றிப்போட வழி வகையில்லை. கடன் வாங்குகிறவர்களைப்போல் அவ்வளவு ஜாஸ்தி வட்டி கொடுக்கிறதில்லை என்றாலும் அந்தப்பணம் அதிக பத்திரமாயும் எந்தசமயத்திலும் வாங்கிக் கொள்ளக் கூடியதுமானதால் அதிக சிலாக்கியமுண்டென்பதற்குச் சந்தேகமில்லை.

6. இல்லையென்று சொல்லக் கற்றுக்கொள். உனக்குத் திராணியற்ற சமயத்தில் ஏதாவது வாங்கும்படி மனமுண்டாகும்போது "இல்லை" என்று சொல்லு. வீண்வேடிக்கைகளில் உன்பணத்தை அழித்துப்போட ஏவப்படும்போது "இல்லை" என்றுசொல். எந்த வகையான துன்மார்க்கக்காரியத்திலும் உனக்கு ஆசையுண்டாகும்போது "இல்லை" என்றுசொல். சோம்பலினாலும், சுகபோகத்தினாலும், மூடத்தனத்தினாலும், கெட்டவழக்கத்தினாலும் நீ தள்ளிவிடப்படும்போது எரிச்சலோடு உடனே "இல்லை" என்றுசொல். துவக்கத்தில் சற்று வருத்தமாய் இருந்தாலும் அப்பால் உனக்குத் தைரியம் உண்டாகும். லோபிகளைப்போல் பணத்தைக்குவித்து வைக்காமல் பணத்தைப்பற்றி எச்சரிக்கையாயிரு. என்றாலும் அதைக்கொண்டு நன்மைசெய்யப் பிரயாசைப்படு. ஜான்வெஸ்லி என்னும் மகான் பணத்தைப்பற்றிச் சொல்லிய மூன்று விதிகளாவன :—

1. உன்னால் கூடியதை எல்லாம் சம்பாதி.
2. உன்னால் கூடியதை எல்லாம் சேர்த்துவை.
3. உன்னால் கூடியதை எல்லாம் கொடு.

ரஞ்சிதபோதினி.

THE INDIAN FRUIT INDUSTRY.

இந்தியாவில் கனி வர்க்கங்களை உண்டுபண்ணுதல்.

—:o:—

உலகத்திலுள்ள மற்றெல்லாத் தேசங்களையும் விட, இந்தியாவானது சில முக்கிய அம்சங்களில் விசேஷமான பூசாரமும் பொருத்தமான சீதோஷ்ணமும் உடையது. இந்தியாவிலுள்ள நிலப்பாங்கும், தண்ணீர் வசதியும், பருவங்களின் தன்மையும் சில முக்கியமான கனிவர்க்கங்களை உண்டுபண்ணுவதற்குப் பொருத்தமாயிருக்கின்றன. பூமியும் பணமும் உடையவர் கனி விருக்ஷங்களை வளர்த்துத் தகுதியான பலனடைந்து உலகத்தின் எல்லாப்பாகங்களுக்கும் இந்தியக்கனிகளை அனுப்பித் தக்க லாபம் பெறலாம். இந்தியக் கனிகள் மிகவும் ருசியும் ஆரோக்கியமும் உள்ளவையெனப் பலர் விரும்புகிறார்கள். ஆனால் போதுமான மட்டும் கனிகளையுண்டுபண்ணி அவைகளைப் பல இடங்களுக்கும் அனுப்பி, ஜனங்களுடைய தேவையை நிவர்த்திக்க வல்லமையும் ஊக்கமுமுடைய முதலாளிகளும் தொழிலாளிகளும் இல்லாமையால் எவ்வளவோ அருமையான கனிகள் விளையக்கூடிய இத்தேசத்தார் சீமை அத்திப்பழத்தையும் இலந்தைப்பழத்தையும் தின்று திருப்தி அடைய வேண்டியிருக்கிறது. கனிகளையுண்டு பண்ணும் தொழிலும் மிகவும் குறைந்து விட்டது. தற்போது இந்தியாவின் பலபாகங்களில் அகப்படும் கனிகளில் பெரும்பாகம் இயற்கையாக உண்டாகின்றனவேயன்றி, மனிதனுடைய முயற்சியால் உற்பத்தி செய்யப்படும் கனிகள் மிகவும் சொற்பம். புதுக்கனி மரங்களை உண்டுபண்ணும் சாஸ்திர அறிவும் நமக்கு இல்லை. சாஸ்திர அறிவு கிடைக்கக்கூடியதாயிருந்தாலும், இந்தத்துறையில் இறங்கி

ஊக்கம் செலுத்துபவர்கள் இல்லை. இது மிகவும் துக்கிக்கத்தக்கது.

சென்ற ஐந்தாறு வருஷங்களாக வடக்கே பூசா என்ற இடத்தில் கிருஷி சம்பந்தமான பலவித சோதனைப்பண்ணைகள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகளில் பற்பல பயிர்கள் உண்டுபண்ணப்பட்டுவருகின்றன. இந்தப்பண்ணைகளில் அப்போதைக்கப்போது செய்யப்படும் முயற்சிகளையும் சோதனைகளையும் பற்றி சிற்சில சிறு புத்தகங்கள் வெளியாகின்றன. இந்தப்புத்தகங்களைக் கவனித்துப் படித்தால் நம்மவர்களுக்கு விசேஷமான பலன் ஏற்படக்கூடும். பலவகைக்கனிவர்க்கங்களை உண்டுபண்ணி அநேகமாய் உலகமுழுவதும் அனுப்பித் தக்க லாபம் பெறுவதற்கு இந்தியாவே பொருத்தமான தேசம் என்பது நன்கு விளங்கும். சில காலமாக இந்தியப் பத்திரிகைகள் இவ்வுண்மையை அறிந்து ஜனங்களைத் தூண்டிவிடும் பான்மையாய் எழுதி வருகின்றன. இந்தமாதிரி எழுதுவதில் சில தப்பு அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. வாழை, மா, ஆரஞ்சு முதலிய சில கனிகளே தற்போது இந்தியாவில் உண்டாகின்றனவென்றும், இவையும் மிகவும் சொற்பமென்றும் பொதுவாய் நம்பப்படுகிறது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், மற்றும் சில குடியேற்ற நாடுகளிலும் பல முதலாளிகள் சேர்ந்து மிகவும் ஊக்கத்துடன் உழைத்து ஏராளமான கனிவர்க்கங்களை உண்டுபண்ணி வியாபாரம் செய்துவருகிறார்கள். திருஷ்டாந்தமாக வெஸ்ட் இன்டீஸ் என்ற தேசத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரண பூமிகளில் வாழை முதலிய கனிகள் உண்டுபண்ணப்படுகின்றன. இங்குள்ள தோட்டங்களுக்கு மத்தியில் பற்பல இடங்களில் ரெயில்வேக்கள் ஓடுவதால் ஓரிடத்திலுண்டாகும் கனிகள் பல இடங்களுக்கும் பரவி ஏராளமான கனிகள் எப்போதும் விலையாகிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் இத்தகைய சாதகங்கள் இல்லை. ஐரோப்பா ஆரஞ்சுகள், டாஸ்மானியா ஆப்பிள்பழங்கள், தென்னாப்பிரிக்காவில் விளையும் திராக்ஷைப்பழங்கள், பிளாரிடா, காலிபோர்னியா முதலிய பாகங்களில் விளையும் கனிகள் உலகமெங்கும் பரவியிருக்கின்றன. இந்தியக் கனிகள் இவ்வளவு தூரம் பரவவேயில்லை. இவைகளில் பலவற்றின் பேரைக்கூட அநேகர் அறியமாட்டார்கள். இதற்குக் காரணம் இந்தியர்களுக்குள் முயற்சியில்லாததே யாகும். பழவியாபாரம் செய்வது பெரிய அகௌரவமென்றும், பத்து ரூபாயானாலும் பங்கா இழுக்கும் உத்தியோகமே பெரியதென்றும் நினைக்கும் மதியீனர்கள் இருக்கும்வரையில் தேசத்தின் தொழில் முயற்சிகள் விருத்தியாகமாட்டா.

இந்தியாவில் மொத்தம் சுமார் நாற்பது லக்ஷம் ஏக்கர் நிலத்தில் பழவகைகள் உண்டாக்கப்படுகின்றன. அந்நியதேசத்துக் கனிகளிலும் சில வகைகள் இங்கே உண்டுபண்ணப்படுகின்றன. விசேஷமாக இந்தியாவிலுள்ள மலைகளிலும் குன்றுகளிலும் அந்நியதேசத்துக் கனிவகைகள் விளைகின்றன. நீலகிரி சேர்வராயமலைகளில் திவ்வியமான கனிகள் உண்டாவதற்குப் பல சாதகங்கள் இருக்கின்றன. பெங்களூருக்குச் சமீபத்தில் நேர்த்தியான திராக்ஷைப்பழங்கள் உண்டாக்கலாம். திருவாங்கூர் மலைகளில் எத்தகையக் கனியும் விளையும். தென்னிந்தியாவின் பற்பல மலைப்பாகங்களில் ஆரஞ்சுக் கனிகள் ஏராளமாய் விளைகின்றன. இந்தியாவில் விளையும் ஏராளமான மாம்பழங்கள் விலையாகாமல் அழுகிப் போகின்றன. திருஷ்டாந்தமாக, வட ஆற்

காடு ஜில்லாவிலே மாம்பழங்களைத் தரையில் புதைத்து விடுகிறார்கள். அந்தோ! என்ன பரிதாபம்! இந்தியாவின் பூசாரமும் சீதோஷ்ணமும் எத்தகைய கனிவர்க்கத்துக்கும் பொருத்தமானவை. உலகத்திலுள்ளோர் சகலருக்கும் தேவையான பழங்களை இத்தேசத்தில் உண்டாக்கலாம். அவ்விதம் இருந்தும் தற்போது உண்டாகும் பழங்களே விலையாகாமல் அழுகிப்போகின்றன என்றால் நமக்குள் யாதொரு முயற்சியுமில்லை என்பதும், நம் தேசத்துப் பழங்கள் வெளியேறிச் செல்வதில்லை என்பதும் விளங்குகின்றன அல்லவா? விஷயங்கள் இப்படி இருக்கும்போது, அந்நிய தேசத்துப் பழங்களும் பழச் சாறுகளும் இந்தியாவுக்குள் இறக்குமதியாகின்றன. கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்ததுபோல், நம் தேசத்தில் எவ்வளவோ கனிவர்க்கங்களை உண்டாக்கலாமென்றாலும் நாம் அவையொன்றும் செய்யாமல் அந்நியதேசத்துக் கனிகளை வாங்கிப் புசிக்கிறோம். மேல்நாட்டார் தங்கள் கனிகளைத் தூரதேசங்களுக்கு அழுகிப்போகாவண்ணம் அனுப்பும் உபாயங்களை நன்கு அறிந்திருக்கிறார்கள். சில கனிகளைத் தூரம் நோக்கிக் காய் பருவத்திலேயே அனுப்புகிறார்கள். சில கனிகளைக் குறையாதபடி உலர்த்தி அனுப்புகிறார்கள். நாம் இந்த உபாயங்களை இன்னும் அறியவில்லை. இந்தியா உஷ்ணமான தேசமானதால் கனிகள் சீக்கிரம் அழுகிப்போகும். இவ்விதம் அழுகிப்போகாத சில முறைகள் இப்போது தெரியவந்து பெஷாவரிலிருந்து சில கனிகள் தற்போது கல்கத்தாவுக்கு அனுப்பப்படுகின்றன. இன்னும் முயன்றால் மேல் நாடுகள் முதலிய தூர தேசங்களுக்கும் நம் கனிகளை அனுப்பக்கூடும். இது சம்பந்தமான புதிய அறிவைப்பெறவும், இது சம்பந்தமாக உழைக்கவும் நம்மவர்களுக்குள் பலர் ஏற்பட்டால் இந்தியக் கனிவியாபாரிகள் தக்க லாப மடைவார்கள். பழவியாபாரம் அகௌரவமெனக் கருதக்கூடாது. இங்கிலாந்திலே பெட்போர்ட் ட்யூக் முதலிய பிரபலஸ்தர்கள் அவ்வியாபாரத்தால் குபேர சம்பத் துடையவர்களாய் இருக்கிறார்கள். நாமேன் அவ்விதம் செய்யக்கூடாது?

சுதேசமித்திரன்.

IMPROVED AGRICULTURAL METHODS.
சீர்திருத்தமான விவசாய முறைகள்.

——(o)——

தேசம் க்ஷேமப்படுவது எல்லாருக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கும். வித்தைக் குறைவினால் நமது நாட்டில் விதம் விதமாய் நஷ்டம் அடைகிறோம். இவ்வாறு சொன்னால் முதலாவது நஷ்டம் சர்க்கார்க் கிஸ்தி என்பார்கள். கிஸ்தி கொடுப்பது தப்பாது. ராஜ்ய பரிபாலனச் செலவு குடித்தனத்திலிருந்தே அடையவேண்டும். இது ஒரு பொருட்டல்லவென்று நாம் பல தடவையும் எடுத்துக் கூறியிருக்கிறோம். மதியீனத்தினால் நஷ்டப்படுவது சர்க்கார் கிஸ்தியைவிட எத்தனை மடங்கு அதிகப்படுகிறது. கோர்ட்டுச் செலவு, கச்சேரிச் செலவுகளை அபரிமிதமாய் வளர்த்திக்கொண்டே வருகிறோம். கோர்ட்டுக்குப் போவது நமது சுய இச்சையிலிருப்பதால் இதைத்தடுக்கும் வழியைத் தேடவேண்டும். கலியாணச் செலவும், உற்சவச் செலவும், வேடிக்கைச் செலவும் நாட்டில் அதிகப்படுகின்றன. இவ்விஷயங்கள் பணக்காரரால் ஆதரிக்கப்படவேண்டுமேயொழிய ஏழைகளாலல்ல. தற்காலம் ஏழைகளும் பணக்காரர்களைப்போல நடக்க ஆரம்பிக்கிறார்கள். இது மயிலாடக் கண்ட வான்கோழி ஆடினாற்போல் முடிகிறது. காப்பி, உப்புமாவு, சோடாவாடர் முதலியன கிராமங்களிலும் அதிகப்படுகின்றன. இது வீண் செலவேயொழிய, சுகத்தில் சேருவதில்லை. இவைகளைக் குடித்தனத்தார் கைவிட்டாலே சமுசாரம் மேன்மைப்படும்.

செலவு செய்யும் வழக்கம் நம்மை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறது. பணம் சம்பாதிக்கும் வழியும் அவ்வாறு பிடித்திருந்தால் நஷ்டம் வருவதற்கு மார்க்கம் இருக்காது.

இவ்விதமாய்ச் செலவு செய்வதுடன் உற்பத்தி விஷயமான வித்தை தேசத்தில் மிகக் கொஞ்சமாகக் குடிகொண்டிருக்கிறது. வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் விவ்சாயத்திலும் நமக்கு ஞானம் குறைவுபட்டிருக்கிறதென்பதற்குச் சாக்ஷி வேண்டியதேயில்லை.

விவசாய விஷயமாய்க் கவனிப்போம். காலாகாலங்களில் மழை பெய்தால் ஏதாவது தானியங்களை விதைத்துப் பயிர் செய்து சாப்பிடுகிறோம். இது விஷயமாய்ப் படும்பாட்டுக்கோ குறைவில்லை. பலிதம் மாத்திரம் தக்கபடி கிடைக்கவில்லை. இத்தேசத்திய மண்வளம், காலவளம் குடிவளம் ஐரோப்பியருக்குத் தங்கள் தேசத்தில் இருந்தால் பொன்னாகவே யல்லவா அவர்கள் விளைவிப்பார்கள்.

நாம் அவ்வாறு செய்வதற்குச் சாஸ்திர சகாயம் அவசியம். கவரன்மெண்டார் நம் மீது கருணை புரிந்து விவசாய காலேஜ் ஒன்று ஸ்தாபித்து ஜனங்களுக்குப் போதிக்கவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். விவசாய டைரெக்டர் ஒருவரை ஏற்படுத்தி தேசக்ஷேமத்தை அவர் தெரியப்படுத்தும் படிக்கும் தேசத்தவர்களுக்கு இன்ன இன்ன விஷயங்களை விருத்தி செய்யவேண்டுமென்று போதிக்கும் படிக்கும் உத்தரவிட்டிருக்கிறார்கள். இவைகளெல்லாம் இருந்தும் ஜனங்களுக்கு ஊக்கமும், முயற்சியும் அவாவுமில்லையானால் கவரன்மெண்டார் பாடு தக்கபடி பலிக்காதல்லவா? தரித்திரத்தில் உழலும் நமக்கு இச்சகாயம் குருடனுக்குக்கோல் கொடுத்தாற்போலிருக்கிறது. அதை உபயோகப்படுத்திப் பலனடைவது நமதுகடமை.

சாஸ்திர விஷயமாய் பலவாறு நாம் பயில வேண்டுமானாலும் அவைகள் பரீக்ஷிக்கப்பட்டே நமக்குத் தெரிவிக்கவேண்டியிருப்பதால் அது விஷயமாய் நாம் காத்துக்கொண்டிருப்பது காலதாமதம் செய்யும் வேலை.

இதுவரையிலுமே பல விஷயங்கள் பல இடங்களில் பரீக்ஷிக்கப்பட்டு அனுகூலங்களை அளித்திருக்கிருக்கிற படியால் அவைகளை முதலில் கையாண்டு பரவச்செய்வது விசேஷம்.

1. மரக்கலப்பைக்குப்பதில் நாட்டு மாடு இழுத்து உழத் தக்க சிறு இரும்புக் கலப்பைகளை பட்டாதார் ஒவ்வொருவரும் உபயோகிக்கவேண்டும்.

2. மழை பெய்ததும் காலதாமதம் செய்து மண்ணை உலர்த்திவிடாதபடி மாசூலடைந்ததும் சாத்தியமாகும் பக்ஷத்தில் உழுது வெயிலில் காயவிட்டு காலத்தில் முதல் மழை வந்தவுடனே கொர்ரு குண்டகை என்னும் கருவிகளின் உதவியால் நாள் ஒன்றுக்கு 3-6 ஏகரா விதைத்து வேலை முடிப்பது முக்கியம்

3 விதைத்த பயிரில் களை முளைத்து நிலத்து ஈரம், சத்து இவைகளை உறிஞ்சிவிடாதபடி வெடி குண்டகையால் வேலை செய்வது அவசியம்.

4. பாடுபட்டு செய்நேர்த்தி செய்து விதைத்து வளர்ந்தது மழைக் குறைவினால் பாழாகாதபடி சாத்தியமான இடங்களில் ஜலாதாரங்களைத் தேடியோ, அல்லது பெய்த மழை மண்ணில் நிலைக்கும்படி ஆழ உழுது எருவடித்தோ அனுசரணையில் கொண்டுவரவேண்டும்.

5 விதைக்கும் விதைகளைத் தக்கவைகளாகப் பொறுக்குவதுடன் நல்ல வம்சமுள்ளவைகளாகச் சம்பாதிக்கப் பிரயத்தனப்படவேண்டும். அயல் நாட்டில் கிடைக்கும் சிரேஷ்டமான வித்துக்களை வரவழைப்பது அவசியம்.

6. மாசூல் காலத்தில் வேலை சீக்கிரத்தில் முடியும்படியாய் கல்லுருளையும் காற்றாடி யந்திரமும் ஒவ்வொரு பட்டாதார் வசத்திலும் இருக்கவேண்டும்,

7. எருவிஷயமாய், மாடுகளின் சாணத்தையும், படுக்கை யமைத்து மூத்திரத்தையும் சேர்ப்பதும், ஆட்டு மந்தையை, உழுத புழுதியில் மடக்குவதும், கோழி முதலிய பக்ஷிகள் வீட்டில் தரை புழுதியாகவைப்பதும், நஞ்சை புஞ்சை நிலங்களில் எருவுக்கென்று கொள், சடம்பு, தட்டைப்பயறு, மொச்சை முதலிய யாதாவதொரு பயிரை விளைவிப்பதும் அவசியம். பின்னும் சாத்தியமான இடங்களில் கொழுஞ்சி, தகரை, வேலிக்கால்களில் ஆடாதொடை, காட்டாமணக்கு, எருக்கு, ஆவாரை முதலியவைகளையும், நீர் தாரைகளில் புங்கமரத்தையும், சாலை ரஸ்தா ஓரங்களில் மண்ணுக்குத்தக்க வண்ணம், பூவரசு, சீமைவாகை முதலியவைகளையும் எருவுக்கென்று வளர்ப்பது அவசியம்.

8. தக்க மாடுகளைவைத்து நல்ல வேலை வாங்கவேண்டும். இவைகளை இக்காலத்தில் பொதுமேய்ச்சல் நிலங்களுக்கு அனுப்பலாகாது. ஏனெனில் வியாதிகள் ஒன்றுக்கொன்று ஒட்டிக்கொள்ள ஏதுவாகிறது. சிறுராசி மாடுகள் அனேகம் இருப்பதைவிட நல்ல எருது நல்ல பசு வைத்திருப்பது லாபகரமான பழக்கம். பன்றி, கோழி, எருமை குடித்தனத்தில் இருப்பது மேன்மை. ஏனெனில் அவைகள் தோட்டிகள்போலிருந்து களத்திலும் வீட்டிலும் மாட்டுத் தொழுவத்திலும், வயலிலும் சிந்திச் சிதறி சேதாரப்பட்டிக்கும் ஆகாரத்தை உண்டு குடித்தனத்துக்கு லாபத்தைக்கொடுக்கும்.

9. மாடுகள் வயிறுறத்தின்பதற்கு அடைச்சோளத்தட்டு மொச்சை முதலியவைகளை வளர்ப்பதுடன் கிராமங்களில் தீவனத்துக்கு உதவும் அகத்தி, கலியாண முருங்கை, சித்தகத்தி, சவுண்டல், சிக்கனு மரம், வாகை, சீமைவாகை முதலிய மரங்களை விருத்தி செய்வது உத்தமம்.

10. கிராமங்களில் காற்றினால் பயிருக்குக் கெடுதி வராதபடி நிலங்களுக்கு உயிர் வேலி வைப்பது அவசியம்.

11. கிராம வேலைகள் சுலபமாயும் காலத்திலும் நடக்கும்படி பொருளுதவும்படியான நிதிகளை ஸ்தாபிக்கவேண்டும். கவரன்மெண்டார் இது விஷயமாய் ஒத்தாசை செய்வதற்கு கோவாபரேடிவ் சொசைடி ரிஜிஸ்ட்ரார் ஒருவரை நியமித்திருக்கிறார்கள்.

12. கூலியாள்களுக்குப் போதுமான சம்பளம் கொடுத்து அவர்கள் அயல் நாட்டுக்குப் போகாதபடி செய்யவேண்டும். வியாபாரப் பயிர்களையும் அதிக லாபம் தரும் முறைமைகளையும் அனுசரித்தால்தான் கூலி அதிகம் கொடுக்க முடியும்.

இவ்விஷயங்களும் இன்னும் பல விஷயங்களும் கவரன்மெண்டார் உதவியைத் தேடாமலே தேசத்தவர்கள் நடத்தலாமல்லவா? விவசாய சங்கங்களும் இதற்கென்றல்லவோ ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

குடித்தனத்தார் இவ்வாறாக விஷயங்களை அனுசரிக்காததினால் வருஷத்தில் கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டமாகிறது. இதற்கு உதாரணம் ஒற்றை நாற்று நடவை யோசிக்கலாம். இவ்விராஜதானியில் சுமார் 700,00,00 ஏகராவில் நெல் விளைகிறது. ஏகராவுக்கு விதை 35 படி. செலவாகிறது. 5 படியே ஒற்றை நாற்று நடவில் அதிகப்படுகிறது. தேசமுழுவதும் இப்பழக்கத்தை அனுசரித்தால் ஏகர் ஒன்றுக்கு 30 படி நெல் லாபமல்லவா? அதாவது 3 ரூபாய். 70 லக்ஷம் ஏகராவுக்கு இவ்வாறு அனுசரித்தால் 210 லக்ஷ ரூபாய் குடிகளின் கைக்கெட்டுமல்லவா? இது நிலவரிக்கு சுமார் மூன்றிலொரு பங்கல்லவா? இஸ்தியை ஒரு பொருட்டாக மதிக்காமல் விருத்தி விஷயங்களை தேடுமெங்கும் ஸகயான நமக்கு யாதொரு குறைவுமில்லாமல் கோடானுகோடி வருஷமாய்க் காப்பாற்றிவந்த ஸ்ரீமந் நாராயணன் நம்மை முன்னுக்குக் கொண்டு வருவாரென்பதற்கு கிஞ்சித்தேனும் சந்தேகப்படவேண்டியதில்லை.—தென்னிந்தியா விவஸாயம்.

REVIEW OF THE PRESS.

பத்திரிகை ஆராய்ச்சி.

MAIZE.

மக்காச்சோளம்.

பர்மா தேசத்துக் கிருஷிகர் மக்காச்சோளத்தைச் சாகுபடி செய்து அதின் தானியத்தை ஆகாரத்துக்கு உபயோகித்து வருவதுமல்லாமல், அந்தக் கதிர்களின் தானியமணிகளை மூடிக்கொண்டிருக்கும் காகிதம்போன்ற தோகைகளை எடுத்து அவைகளைச் சுருட்டு செய்ய உபயோகிக்கிறார்கள் என்று கிருஷிகன் பத்திரிகை சொல்லுகிறது. புகையிலையையும் அதன் காம்புகளையும் நுண்மையாய் நறுக்கித் தூளாக்கி அவைகளுடன் 'ஒன்னிபின' என்னும் ஒரு மரத்தின் தூளையும் கலந்து வைத்துக்கொண்டு இந்தத் தூளை மக்காச்சோளக்கதிர் தோகைகளில் ஒன்று அல்லது இரண்டில் சுருட்டிக் கடைகளில் விற்கிறார்கள். பர்மா தேசத்தவர்கள் இந்தச் சுருட்டுகளை வெகு பிரியத்துடன் உபயோகித்து வருகிறார்கள். நிலத்துக்குச் சரியானபடி எருவிட்டுப் பயிரிட்டால் ஒரு ஏக்கர் நிலத்தில் 100 ராத்தல் முதல் 200 ராத்தல் வரையிலும் இந்தத்தோகை கிடைக்கிறது. 366 ராத்தல் நிறையுள்ள மக்காச்சோளக் கதிர்த் தோகைக்குச் சுமார் ரூபா 100 விலை கிடைக்கிறது. ஆகையால் ஒரு ஏக்கரில் பயிராகும் மக்காச்சோளக்கதிர்களிலுள்ள இந்தத் தோகையில் மட்டும் சுமார் 33 ரூபாய் முதல் 66 ரூபாய் வரையிலும் கிடைக்கக்கூடும். இந்ததேசத்தில் சுருட்டுகளுக்கு இந்தத் தோகை உபயோகப்படுவதாகத் தெரியவில்லை. சிவகாசி, திண்டுக்கல், ராஜமஹேந்திரம், காகிநாடா முதலான இடங்களிலுள்ள வியாபாரிகளில் சிலர் இதை உபயோகித்துச் சுருட்டுசெய்து விற்பார்களானால் சில வருஷங்களுக்குள்ளேயே அதன் உபயோகம் எல்லாஜனங்களும் நன்றாய் அறிந்து கொள்ள ஹேதுவாயிருக்கும். கிருஷிகருக்கும் அதிகமான லாபம் கிடைக்கும். இந்தத் தேசத்தில் அனேக வஸ்துக்களின் உபயோகம் ஜனங்களுக்குத் தெரியாமல்தான் அவைகள் வீணாக்கப்படுகின்றன. கிருஷிகர் இவ்விஷயத்தில் ஊக்கத்துடன் முயற்சி செய்வார்களென்று நம்புகிறோம்.

CATTLE MORTALITY.

கால்நடை மரணம்.

நம்முடைய சென்னைராஜதானியில் ஏறக்குறைய 1,80,000,00 கால் நடைகள் இருக்கின்றனவென்று கணக்கெடுத்திருக்கிறார்கள். 36,288 கால் நடைகள் கடந்த செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதியுடன் முடிவான மூன்று மாதங்களில் மரணமடைந்திருக்கின்றன என்று அறிகிறோம். வெக்கை, முதலான தொத்து வியாதிகளால் நேரிட்ட மரணங்கள் 32,658 என்றும், பாம்பு கடித்தும், காட்டு மிருகங்களால் கொல்லப்பட்டும், விஷமிடப்பட்டும் இறந்து போன கால் நடைகள் 3630 என்றும் தெரிகிறது. 1908-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதியோடு முடிவான மூன்று மாதங்களில்தொத்து வியாதிகளால் 58,985 கால் நடைகளும், மற்ற காரணங்களால் 3,781 கால் நடைகளும் மரணமடைந்ததாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். அதற்கு அடுத்த மூன்று மாதங்களில் கால் நடைகளின் மரணங்கள் குறைந்தும், அதற்கும் அடுத்த மூன்று மாதங்களில் இன்னும் குறைந்தும் இப்படியே வரவரக்குறைந்து கொண்டு வந்திருக்கிறது. இதனால் தொத்து வியாதிகளால் கால் நடைகளுக்கு ஏற்படும் மரணம் வரவரக் குறைந்துவருகின்றதெனத் தெரிகிறதல்லவா? மலையாளம், வடஆற்காடு, திருச்சிறாப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, தென்னாற்காடு, திருநெல்வேலி முதலான ஜில்லாக்களில் முன் வருஷத்தை விடச் சென்ற வருஷத்தில் வெக்கை, கால் நோய், வாய்நோய் முதலிய தொத்து வியாதிகளால் நேர்ந்த மரணம் மிகக்குறைவு என்று தெரிகிறது. அடைப்பான், சப்பை நோய், முதலிய தொத்து வியாதிகளால் நேரிடும் மரணம் குறையவில்லை. வெக்கை நோய் குறைந்ததற்குக் காரணம் சென்ற வருஷத்தில் கால் நடைகளுக்கு அம்மை குத்தும் வழக்கத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்ததுதான் என்று தெரிகிறது. அடைப்பான் வியாதியைத் தடுக்கக் கூடிய அம்மைப்பால் கிடைக்காததால் அந்த வியாதியால் நேரிடும் மரணம் மட்டும் குறையவில்லை. கால் நடைகளுக்கு அம்மை குத்துவதால் விளையும் நன்மையைக் கிருஷிகர்கள் நன்றாய் அறிந்திருக்கிறபடியால் தங்கள் கிராமங்களில் கால் நடைகளுக்குத் தொத்து வியாதி இருப்பதாகத் தெரிந்தால் அம்மை குத்த ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம்.

HEMORRHAGIC SCEPTICAEMIA.

மென்னை அடைப்பான்.

◆

இந்த வியாதியைப்பற்றி வைகாசி மாஸத்துக் கிருஷிகனில் ஒரு சிறு வியாஸம் காணப்படுகிறது. கால் நடைகளுக்கு மென்னை அடைப்பான் வந்தால் அவைகள் பிழைப்பது துர்லபம். அநேகமாய் ஒரு நாளைக்குள் அவைகள் இறந்து போய் விடும். வியாதி வந்து மூன்று நாள் பிழைத்திருந்தால் வியாதி குணப்படுமென்று எண்ணலாம். இந்த வியாதி வந்தால் சிகிச்சை செய்வதால் பிரயோஜனமில்லையென்பது பொதுவான அபிப்பிராயம். ஆனாலும் பின்வருமாறு செய்யவேணும். வியாதியால் கால்நடைகளுக்குத் தொண்டையில் கொஞ்சம் வீக்கமுண்டான உடனேயே அதைக்கண்டுபிடித்துவிட்டால் அப்பொழுது அவைகள் ஆகாரத்தை வருத்தமில்லாமல் விழுங்கும் சக்தியுடையனவாயிருக்கும். அப்பொழுதே அவைகளுக்குக் கறியுப்பு அல்லது பேதியுப்பு முப்பது ரூபாய் எடை, கரியபோழம் ஒரு ரூபாய் எடை, சுக்குத்தூள் ஒரு ரூபாய் எடை, பனைவெல்லம் நாலு ரூபாய் எடை, இவைகளை அரைப்படி வெந்நீரில் கலக்கி நகச்சூடாயிருக்கும்போது உள்ளே கொடுக்க வேண்டும். ஒருபடி தண்ணீரில் அரைக்கால் ஆழாக்கு பினைல் என்னும் மருந்தைக் கலக்கியும் உள்ளுக்குக்கொடுக்கலாம். இதனால் தொண்டையிலும் மற்ற இடங்களிலும் உண்டாயிருக்கும் வீக்கங்கள் சற்றுக் குறைவுபடும். சில சமயங்களில் சூட்டுக் கோல்களைப் பழுக்கக் காய்ச்சி வீக்கங்களின்மேல் இலேசாய் சூடுபோடுகிற வழக்கமுமுண்டு. சூடுகளை அழுத்திப் போடாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். படிக்காரம் கலந்த தண்ணீரைக்கொண்டு வியாதிப்பட்ட கால்நடையின்வாயை அடிக்கடி கழுவவேண்டும்.

இதல்லாமல் ஒரு மணி நேரத்திற்கு ஒருதரம் சரியானபடி பேதியுண்டாகும்படி கொஞ்சம் வெந்நீரை அபானத்தின் வழியாய் உள்ளே செலுத்துவது நலமாயிருக்கும். வடித்த கஞ்சியில் நாம்சாப்பிடும் உப்பைக்கொஞ்சம்போட்டு அவைகளுக்கு வைக்கலாம். கால்நடைகள் அதிக துர்ப்பலமடைந்திருந்தால் அரை ஆழாக்கு நாட்டுச் சாராயத்தில் இரண்டு ரூபாய் எடை சுக்குத்தூளும் ஒரு ரூபாய் எடை மிளகுத்தூளும் கலந்து அரைப்படி வடித்த கஞ்சித்தண்ணீரில் கலந்து உள்ளுக்குக்கொடுத்தால் சற்றுப்பலமுண்டாகும். இவ்விதமாகச் செய்யப்பட்ட சிகிச்சையினால் மரணத்திலிருந்து தப்பும் கால்நடைகள் மிகவும் சொற்பமே.

மென்னை அடைப்பான் தொத்துவியாதியாகையால் ஒரு பிராணிக்கு வியாதியுண்டான உடனேயே அதை மற்றப்பிராணிகளுடன் சேர்க்காமல் வேறாக்கி ஜாக்கிரதையுடன் சிகிச்சை செய்து வரவேண்டும்.

THE NAMBUDRIS.

நம்பூத்ரிகள்.

ஸ்ரீமான் ஈ. எஸ். சுப்பிரமணியப்பாட்டம் ஆளி அவர்கள், பி. ஏ., பி. எல். சென்ற சித்திரை மாஸத்து வித்யா விஹாரிணியில் 'நம்பூதிரிமார்' என்கிறவர்களைப்பற்றி ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அதில் அவர்களுடைய கலியாண வழக்கங்களை நன்றாய் விவரித்திருக்கிறார்.

“கேரள நாடாகிய மலையாள நாட்டிலுள்ள பழையபிராமணர்களுக்கு 'நம்பூதிரிமார்' என்று பெயர். இந்தப்பதம், 'ஐயர்,' 'அய்யங்கார்' என்பவைகளைப்போல், மரியாதையைக் குறிப்பிடுவது. இவர்கள் காவேரி, கிருஷ்ணா, நர்மதை இந்த தீரங்களில் 1000 வருஷங்கக்கு முன்னிருந்தார்கள் என்று சிலர் சொல்லுகிறார்களாம். இவர்களுடைய ஆசாரவழக்கங்களெல்லாம் ஸ்ரீபரசுராமர் ஏற்பாடு செய்தவைகள். இவர்கள் வசிப்பது தனித்தனித் தோட்டங்களிலேயே.

இவர்களில் பாகஞ்செய்து கொள்வது அபூர்வம். இவர்கள் குடும்பவிருத்திக்காக அவரவர் குடும்பத்தில் மூத்தமகனுக்கு மட்டும் கலியாணம் செய்து வைப்பதுவழக்கம். மற்றவர்கள் சூத்திர நாயர் ஸ்திரீகளுடன் சம்பந்தம் செய்வார்கள். நம்பூத்ரி குடும்பத்தில் மூத்த பிள்ளைக்கு மட்டும் கலியாணம் என்று ஏற்பட்டதால் எல்லா நம்பூத்ரிப் பெண்களுக்கும் புருஷர்கள் கிடைப்பதில்லை. ஆகவே, நம்பூத்ரிப் பெண்ணுக்கு கலியாணம் செய்யவேண்டுமானால் ஏராளமாய் வரதக்ஷிணை கொடுக்கவேண்டியிருக்கிறது. இதனாலும் பிள்ளைகள் கிடைக்காமையாலும் கலியாணமாகாத பெண்கள் ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு மூன்று பேர்கள் இருப்பார்கள். இவர்களுடைய கலியாணங்களில் **தாலி கட்டுவது** ஒரு விநோதமான விஷயம். மாப்பிள்ளைதான் தாலி கொண்டுவருவான். ஆனால் அந்தத் தாலியைக் கலியாணப்பெண் கழுத்தில் அந்தப் பெண்ணினுடைய தகப்பனே கட்டிவிடுவானாம். மாப்பிள்ளை கட்டுகிறதில்லையாம். கலியாணம் முதல் மூன்று நாள்களில் தம்பதிகள் உப்பில்லாமல் சாப்பிடவேண்டுமாம். நான்காவது நாள் சாயந்திரம் இவர்களிருவரும் சயன அறைக்குள் புகுவார்கள்.

STEMS AND DRIED LEAVES OF PLANTAINS.

வாழைமட்டைகளும் இலைச்சருகுகளும்.

மேமாதக் கிருஷிகனில் மேலே சொல்லிய விஷயங்களைப்பற்றி ஒரு வியாசம் இருக்கிறது. வாழைகளின் முதல் மாசூல் எடுத்தவுடன் அவைகளை வெட்டி எறிந்து விடுகிறார்கள். வெட்டப்பட்ட வாழைகளைச் சிலர் ஓரிடத்தில் குவித்துவைத்து கோடை காலத்தில் அவைகளைச்சுட்டு சாம்பல் எருவாக்குகிறார்கள். அப்படிச் செய்வதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் வெட்டப்பட்ட வாழைகள் அதிக இடத்தை அடைக்கின்றன என்பதே. மேலும் அவைகளைச்சுட்டால் கொஞ்ச சாம்பலாகும். அந்தச் சாம்பலை எருவாகப்போடலாம் என்ற எண்ணந்தான்.

இப்படிச்செய்வது மிகநஷ்டம். ஒரு வண்டிவாழை மட்டைகளையும் சருகுகளையும் எரித்தால் ஒருகூடை சாம்பல் ஆகும். ஒரு ஏக்கருக்கு 1,000 வாழை நடுவதாக வைத்துக்கொள்வோம். அந்த 1,000 வாழை மட்டைகளும் சருகுகளும் சுமார் 50 வண்டி மூலவர்க்க எருவாகும். ஆனால் எரித்துவிட்டாலோ 5 வண்டி சாம்பல் கூட அகப்படாது. “50 வண்டி மூலவர்க்க எருவிலுள்ள சத்துத்தானே இந்த ஐந்து வண்டி சாம்பலில் இருக்கிறது” என்று கிராமந்தர விவசாயிகள் சொல்வார்கள். அது சரியேயல்ல. ஏனென்றால் எரித்த சாம்பலில் வாழையிலுள்ள தாதுப்பொருள்கள் மட்டும் இருக்கும்; மூலவர்க்கப் பொருள் முழுவதும் மாயமாய் ஓடிவிடும். இந்த மூலவர்க்க எரு நிலத்திற்கு நிரம்பப்பயனை உண்டாக்கும். முதலாவது பயிர்களுக்கு ஜீவனைப்போலிருக்கும் நைட்ரஜன் காஸ் என்று சொல்லப்படும் வெடியுப்பு வாயுவை இந்த மூலப்பொருள்கள் உண்டாக்குகின்றன. “நிலத்தின் தன்மையைப் பண்பாக்கவும், வெயில் காலத்தில் தண்ணீர்த் தட்டைத் தாங்கவும், பயிர்களின் வேர்களில் இக்காற்றுப் புகவும், தண்ணீர் எளிதில் மண்ணில் இறங்கி வடியவும், உழுவதற்கு கெட்டியாயிருக்கும் நிலத்தை பசளை மண்ணாக்கவும், மணற்பாங்கு நிலத்தைக்குருமண்ணாக்கவும்” மூலப்பொருள்கள் உதவுகின்றன. ஆகையால் மூலவர்க்கப் பொருள்களை எரிக்கக் கூடாது. விதை பிடித்த களைப்பூண்டுகளை மட்டும் எரிக்கவேண்டும்.

ஆகையால் ஒவ்வொரு நிலத்திலும் 10-அடி சதுரத்தில் ஆழமான குழி வெட்டி அதில் வாழைகளை வெட்டிப்போட்டு ஒவ்வொரு அடுக்கின் மேலும் கால்வாய் வண்டலையோ அல்லது குளக்காம்பையோ கொண்டுவந்து போட்டு மூடவேண்டும். இவைகளை இப்படிச்செய்தால் 3 மாதத்தில் சாரமான எருவாகும். இந்த எருவே வாழைக்கு மிகவும் உபயோகமாகும்.

மேலும் வைக்கோலில்லாத இடங்களில் இந்த வாழைத் தட்டைகளையும் சருகுகளையும் மாட்டுக் கொட்டாய்களில் விரித்து கால்நடைகளின் சிறுநீர் வீண்போகாமல் சேகரிக்கலாம்.

WHAT IS CIVICS.

“ஸிவிக்ஸ்” என்றால் என்ன?

இதைப்பற்றி மேமாதத்து ‘நல்லாசிரியனில்’ மிஸ்டர். டீ. எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதியிருக்கிறார். “ஸிவிக்ஸ்” என்ற பதத்தை, அரசியல் என்றும், ராஜாங்கமுறை நூல்கள் என்றும், துரைத்தன விளக்கம் என்றும் பலபேர்கள் பலவிதமாகப்பொருள் படுத்தியிருக்கிறார்கள். ஸிவிக்ஸ் என்றவார்த்தை நகரவாசி என்று பொருள் கொண்ட “ஸிவிஸ்” என்றவார்த்தையிலிருந்து கற்பிக்கப்பட்டது. நகரவாஸியானாலும் கிராமவாஸியானாலும் ஒவ்வொருவனும் செய்யவேண்டிய கடமைகளும் அடையவேண்டிய பயன்களும் பல உள. இவற்றையெல்லாம் விளக்குவதே “ஸிவிக்ஸ்” ஆகும். ஆகையால் துரைத்தன முறைகளும், குடிகளின் கடமைகளும், அவர்களுடைய பாத்தியதைகளும், ராஜாங்கத்தின் அமைப்பும், குடிகளுக்கும் துரைத்தனத்திற்குமுள்ள ஸம்பந்தமும், இதனால் வெளியாகவேண்டும். இவைகளையெல்லாம் உத்தேசிக்கும்போது “ஸிவிக்ஸ்” என்பதற்கு “பிரஜாதர்ம நிதர்சனம்” என்று பொருள் சொல்வது பொருந்தும். தர்மம் என்றால் கடமை மாத்திரம் அல்ல. பாத்தியதைகளும் குறிக்கப்படுகின்றன.

IMPROVEMENT OF CATTLE.
கால் நடைகளின் அபிவிருத்தி.

கால் நடைகளைச் சரியானபடி வளர்த்து அபிவிருத்தி செய்யவேண்டுமானால் கிருஷிகர்கள் ஏராளமாய் கால்நடைகளை வைத்துக்கொள்ளக்கூடாது. கொஞ்சமாக வைத்துக்கொள்ளவேண்டும். அதிகமான கால் நடைகள் இருந்தால் அவைகளைச் சரியானபடி போஷிக்கவும், காப்பாற்றவும் முடியாது. ஆனால் நம் கிராமங்களிலுள்ள மிராசுதார்கள் அதிகமான கால் நடைகளையே வைத்திருக்கிறார்கள். இப்படி இவர்கள் வைத்திருப்பதற்கு முதற்காரணம் போதுமான சாணி கிடைக்கிறதென்பதே. இவர்கள் சாணியை எருவுக்காக உபயோகிக்காமல் விரட்டி தட்டி விறகுக்குப்பதிலாய் உபயோகிப்பது விசனகரமாயிருக்கிறது. கால் நடைகள் எவ்வளவு கேவலமான ஸ்திதியிலிருந்தபோதிலும் சரி, ஒருவனுக்கு அதிக மாடுகள் இல்லாவிட்டால் ஜனங்கள் அவனைக் கேவலமாய் நினைக்கிறார்கள். ஆகவே கௌரவத்திற்காக அநேகர் அங்கஹீனமுள்ளவும், பலஹீனமானவுமான மாடுகளை ஏராளமாய் வைத்திருக்கிறார்கள். இது சுத்த அறியாமையாகும். கால் நடைகளின் கொம்பு, தோல், இவைகளின் கிரயத்தைப்பற்றி நாம் கவனிப்பதேயில்லை. மாடுகளுக்குச் சூடு போடுவதால் மாட்டுத்தோலின் விலை குறைந்துபோகிறது. கால் நடைகள் ஏராளமாய் இருந்தால் அவைகளுக்குத் தீனி போதாது. அற்பசொல்பமாய் கிடைக்கக்கூடிய புல் பூண்டுகளை ஒரு காலத்தில் கால் நடைகள் மேய்ந்துவிட்டாலும், சுபிட்சக்குறைவான காலங்களில் தீனி அகப்படாமல் இவைகள் பட்டினி கிடக்க நேரிடுகிறது. கால் நடைகளுக்கு பட்டினி என்பது கொஞ்சமும் கூடாது. பட்டினி கிடந்தால் உரமாயும், பலமாயும், தேகசௌக்கியம் பொருந்தியும், அவைகள் வளரமாட்டா. கால் நடைகள் தரை மட்டம் வரைக்கும் புல்லை மேய்ந்துவிடுவதால் அநேக கெடுதிகள் உண்டாகின்றன.

(1) மண்ணுக்குள் மடித்து உழவு செய்யப்பட வேண்டிய மூலவஸ்து நன்றாய் வளர்கிறதில்லை (2) மேய்கால் நிலங்களில் சாதாரணமாய் விளையும் பூண்டுகளை மேல்கிளம்ப வொட்டாமல் தடுப்பதால் விறகுக்காக ஜனங்கள் உபயோகிக்கும் வஸ்துக்கள் குறைகின்றன ; ஆகவே சாணங்களைத் தட்டி விறகுக்குப் பதிலாய் உபயோகிக்க நேரிடுகிறது. (3) நிலம், புல் பூண்டு இல்லாமல் பாழாய்க் கிடப்பதால் கனமழை அடிக்கும்போது மழைத்தண்ணீர் நிலத்தின் மேற்பரப்பிலுள்ள குருமண்ணை அடித்துக்கொண்டு போய்விடுகிறது.

கால் நடைகள் அதிகம் இருப்பதால் ஏற்படும் இரண்டாவது கெடுதி என்னவென்றால் மேன்மையான கன்றுகளை உண்டாக்கி வர்க்கவிருத்தி செய்யக்கூடாமற் போவதுதான்.

மூன்றாவது கெடுதி, ஒரு கிராமத்தில் தொத்து வியாதி வந்தால் அது வெகு சீக்கிரத்தில் பரவி விடுகிறது. அப்படிப் பரவுவதால் அநேக கால் நடைகள் சேதமாகின்றன.

மற்றத்தேசத்து மாடுகளை விட ஓங்கோல் மாடு சிறந்ததென்பது எல்லாராலும் அங்கிகரிக்கப்பட்பட்ட விஷயம். ஓங்கோல் நிலங்கள் விஸ்தீரணத்திலாவது, புல் வளர்ச்சியிலாவது நம் பக்கத்து நிலங்களை விட மேன்மையுடையனவல்ல. ஓங்கோல் குடியானவர்கள் கால் நடைகளைக் கட்டிவைத்துச் சொந்த நிலங்களில் மேய்க்கிறார்கள். பொலிகாளைகளை அதிகக்கவனத்துடன் தெரிந்தெடுக்கிறார்கள். பசுக்களை மந்தை மந்தையாய்க் கேவலமான காளைகளுடன் வெளியே போகவிடமாட்டார்கள். கன்றுகள் சிறிதாயிருக்கும் முதல் அவைகளுக்கு நல்ல தீனி கொடுப்பார்கள். இப்படிப்பட்ட காரணங்களால் ஓங்கோல் மாடு சிறந்திருக்கிறது. நாமும் ஓங்கோல் விவசாயிகளுடைய முறையைப் பின்பற்றினால் கால் நடைகள் விருத்தியடைய மார்க்கமுண்டாகும். கால் நடைகளை விருத்தி செய்வதற்கு முதல் முதல் நாம் செய்யவேண்டியதென்னவென்றால், கால் நடைகளின் தொகையைக் குறைத்து அவைகளின் ஸ்திதியை விருத்தி செய்வதேயாகும்.

AGRICULTURAL NOTES.
விவஸாயக் குறிப்புகள்.

Manure for Onions.

வெங்காயத்துக்கு உரம்.—இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் வெங்காயத்துக்கு மனிதர் மலத்தை உரமாக உபயோகப்படுத்துகிறார்கள். மாட்டெருப் போடுவதாயிருந்தால்; ஒரு ஏக்கருக்கு 15 அல்லது 20 வண்டிக்குமேலாகாது. பச்சைத்தழைகளை உரமாகப் போட்டால், எலும்புத்தூளையும், சாம்பலையும் கூடச்சேர்த்துப் போடுவது திறம்.

Milking by Machinery.

யந்திரத்தால் பால் கறப்பது.—யந்திரத்தினால் மாடுகளை பால் கறக்கிறார்கள் என்று சொன்னால் நம்மவர்களில் அனேகர் நம்பமாட்டார்கள். ஆயினும், ஆஸ்த்ரேலியா, இங்கிலாந்து, ஜெர்மனி, இட்டலி முதலிய தேசங்களில் அப்படிக் கறக்கிறார்களாம். மாடுகளும் இப்படிக் கறக்கும்பொழுது துஷ்டத்தனம் செய்கிறதில்லையாம். சுமார் நூறு மாடாகிலும் இருந்தாலொழிய யந்திரத்தை வாங்குவது லாபமாயிராது. யந்திரமூலமாய் பால் கறப்பதில் பால் சுத்தமாயிருப்பதோடுகூட முலையில் வீக்கம், புண் முதலிய வியாதிகள் விசேஷமாய் வருவதில்லையாம்.

Silk Cotton Seed.

எலவம் பருத்திக்கொட்டை.—எலவம் பருத்திக் கொட்டையை சோதித்துப்பார்த்ததில் அதன் மூலப்பொருள்களுக்கும் சாதாரணப் பருத்திக்கொட்டையின் மூலப்பொருள்களுக்கும் அதிக வித்தியாஸத்தைக்காணோம். ஆனால் சாதாரணப்பருத்திக் கொட்டையை உபயோகிப்பதுபோல் எலவம் பருத்திக்கொட்டையை அரைத்து மாட்டுக்குத் தீனியாக வைப்பது வழக்கமில்லை. இது பரீக்ஷிக்கவேண்ய விஷயம்.

Raising Topes.

தோப்புகளை வளர்த்தல்.—சமீபத்தில் 'பாரஸ்டு', அதாவது, காடு விஷயமாய் இங்கிலாந்தில் நமது கவர்ன்மெண்டில் பாரஸ்டு இலாகாவில் உத்தியோகமாயிருந்த ஒருவர் பிரசங்கம் செய்தார். ஒரே ஜாதிமரம் எந்த இடத்திலும் வளராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமாம். இலை வகையரா உதிர, உதிர, அவைகளைக் கூட்டியெடுத்துப் போகக்கூடாது. மரங்கள் நன்றாய்ப் பக்குவமாகுமுன் அவைகளை வெட்டுவது பிசகு. இவைகளைத் தோப்பு வைத்துப் பயிர்செய்கிறவர்கள் கவனிக்கவேண்டும்.

Killing Weeds.

களைகளை அழித்தல்.—வயல்களில் உண்டாகும் களைகளை அழிப்பதற்கு ஆட்டைவிட்டு மேய்ப்பதே சுளுவான உபாயமென்று சீமையிலுள்ள ஒரு நிலக்காரர் சொல்லுகிறார். பயிர் அறுவடையான உடனே ஆடுகளைவிட்டு மேய்த்தால் அவைகள் துளிர்க்கும் களைகளையெல்லாம் தரையோடு கரண்டித்தின்றுவிடும். இப்படிக்குக் கொஞ்சநாள் விட்டுக் கொஞ்சநாள் மறுபடியும் ஆட்டைவிட்டு மேய்த்தால் அவைகள் துளிர்களைத்தின்றுவிடும். இப்படிக்குப் பூண்டுகளை தொலைக்கலாமாம்

Cocoanut Tree.

தென்னை மரம்.—தென்னந்தோப்பு வைத்திருக்கிறவர்கள் கவனிக்கவேண்டிய அம்ஸங்களில் முக்கியமாய் சில விஷயங்கள் உண்டு. முதலாவது, தோப்பில் ஜலம் தங்காமல் வடிகால் சௌகரியங்கள் இருக்கவேண்டியது. இரண்டாவது, பஞ்சை நிலமாக இருக்கும் பக்ஷத்தில் மரங்களைக் காய்க்கச் செய்ய நன்றாய் எருப்போடவேண்டும். மூன்றாவது, பட்டுப்போன தென்னைமரத்தை தோப்பில் விட்டு வைக்கக்கூடாது. இப்படி நிறுத்திவைத்திருந்தால் அந்த மரக்கட்டைகளில் பூச்சிகள் தங்கி தென்னை மரங்களுக்கு கெடுதியை விளைவிக்கும்.

Preserving Manure.

எருவைக்காப்பாற்றுதல்.—ஒவ்வொரு நிலக்காரனும், ஒரு எருக்குழி ஏற்படுத்தவேண்டும். அதில், கிடைக்கும் சாணம், கூளம், குப்பை, செத்தை, இலை முதலிய எல்லாவற்றையும் கொண்டுபோய்ப் போட வேண்டும். சாணமும், இலைகளும் அப்படியே விட்டிருந்தால் கொதிப்புக் கண்டுபோகுமாதலால் அவைகளை அடிக்கடி புறட்டிக்கொடுக்கவேண்டும். அவைகளைக்காய்ந்து போகவும் விடக்கூடாது. அப்படிப் போகும்போலிருந்தால் சதும்பத் தண்ணீர் தெளிக்க வேண்டும். மூத்திரம் அல்லது சாக்கடை ஜலமாவது விட்டுத் தெளிக்கவேண்டும். எருமுட்டைப் புறட்டும் போதெல்லாம் கொஞ்சம் மண்ணை மேலே தூவி மூடவேண்டும். இப்படிச் செய்வதால் எருவின் முக்கிய சத்தாகிய சிலவாயுக்கள் வெளியேறி விடாமல் எருவோடு தங்கிநிற்கும்.

INDUSTRIAL NOTES.
கைத்தொழில் குறிப்புகள்.

THE BOMBAY COTTON MILLS.

பம்பாய்ப் பருத்தி ஆலைகள்.—பம்பாய் நகரத்தில் மட்டுமுள்ள பஞ்சாலைகளில் தினந்தோறும் 400 ராத்தல் நிறையுள்ள 3,750 பருத்திக்கட்டுகள் (பேல்கள்) செலவாகின்றன. இந்த ஆலைகளில் 28 லக்ஷம் கதிர்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கதிரும் தினம் ஒன்றுக்கு அரை ராத்தல் நூல் திரிக்கும். ஆகவே பம்பாய்ப் பஞ்சாலைகளில் தினம் ஒன்றுக்கு 14 லக்ஷம் ராத்தல் நூல் அறுவடையாகிறது. இதில் நாலில் ஒன்றைத்தான் அந்த ஆலைகளில் துணியாக நெய்கிறார்கள். பாக்கி முக்கால் பங்கு நூலும் நூலாகவே விற்பனையாகிவிடுகிறது.

THE LACE INDUSTRY.

ஜரிகைக் கைத்தொழில்.—ஏப்ரல் மாஸத்து ஸஞ்சிகையில் பட்டுக் கைத்தொழிலைப்பற்றி எழுதும்பொழுது அந்தத் தொழிலில், ஜப்பான்தேசத்துப் பெண்களுக்கு ஊக்கத்தை உண்டாக்குவதற்காக முன்னொரு காலத்தில் அந்ததேசத்து அரசி ஒருத்தி தானே பட்டுப்பூச்சியை வளர்த்து வந்தாளென்று சொன்னோம். பெல்ஜியம் தேசத்தில் பெண்பிள்ளைகள் ஜரிகை நெய்வது ஒரு பலமான தொழில். அந்தத்தொழில் தற்காலத்தில் மெலின ஸ்திதியைஅடைந்து, அதைச்சார்ந்த பெண்பிள்ளைகள் கஷ்டப்படுவதால், அவர்களை உற்சாகப்படுத்த பெல்ஜியம் தேசத்து அரசி ஒரு உபாயம் செய்து வருகிறாள். ஜரிகை நெய்கிறவர்களுக்கு தொழிலை சரிவரக் கற்றுக்கொடுக்க ஒரு ஸ்கூல் ஏற்படுத்தப் போகிறாள். தவிர, தான் எவ்வளவு ஜரிகையை உபயோகிக்கலாமோ அவ்வளவு ஜரிகைத் துணிகளையும் போட்டுக்கொள்ளுகிறாள். அரசி இப்படிச் செய்தால் மற்ற பெரியபணக்கார ஸ்திரீகளும் அவள் மாதிரியே செய்வார்கள். அதனால், ஜரிகை வியாபாரம் மும்முரமாகி அதைச்செய்கிறவர்களுக்கு நல்ல பிழைப்பு உண்டாகும். நம்முடையதேசத்தில் தங்கம் வெள்ளி இவைகளால் செய்ததைத்தான் ஜரிகை என்று சொல்லுகிறோம். ஐரோப்பிய ஸ்திரீகள், உபயோகிக்கும் ஜரிகை, மெல்லிய இழைகளால், வலை வலையாய்ப் பின்னப்பட்ட ஒரு விதமான துணி.

TEAKWOOD.

தேக்குமரம்.—இங்கிலாந்தில் தேக்குமரத்தை மூன்றுவிதமாகச் சொல்லுவார்கள்—இந்தியாத் தேக்குமரம், ஸையாம் தேக்குமரம், ஜாவாதேக்குமரம். இந்தியாத்தேக்கு மரமென்பது இந்தியாவில் உற்பத்தியாவதில்லை. பர்மாவில் உற்பத்தியாகும் தேக்கு மரமே இந்தியா தேக்குமரமென்று வழங்கிவருகிறது. தற்காலம் சீமையில் இந்தியாத் தேக்குமரம் வெகு கிராக்கியாயிருப்பதாகவும், சுமார் 25 வருஷங்களுக்குமுன் இருந்ததைவிட நாலில் ஒரு பங்கு விலை தாக்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. மூன்றாம் வருஷத்தில் 61 லக்ஷம் 32 ஆயிரம் ரூபாய் பெறுமான தேக்குமரம் இந்தியாவிலிருந்து சீமைக்கு அனுப்பப்பட்டது. இதில் 59 லக்ஷம், 61 ஆயிரம் ரூபாய் பெறுமான தேக்குமரம் பர்மாவிலிருந்து அனுப்பப்பட்டது. போன வருஷம் 40 லக்ஷம் 20 ஆயிரம் ரூபாய் பெறுமான ஏற்றுமதியில் 38 லக்ஷம், 38 ஆயிரம் பெறுமான மரம் பர்மாவிலிருந்து ஏற்றுமதியாயிற்று. இப்படிக்கு போனவருஷத்திய ஏற்றுமதி அதற்கு முன் வருஷத்தைவிட குறைந்ததினால்தான் சீமையில் விலை தாக்கிற்று. மரத்தைக் கண்டபடி வெட்டிவிடாமல் பார்த்துவெட்டுவதினால் முன்போல் ஏற்றுமதி செய்வதற்கு மரம் கிடைப்பதில்லை.

THE INDIGO DYE TRADE.

நீலச்சாக்கு வியாபாரம்.--அவுரிச்செடியிலிருந்து நீலம் எடுத்து துணிகளுக்குச் சாயம் துவைப்பது தொன்றுதொட்டு நமது தேசத்தில் நடந்துகொண்டு வருகிறது. அதனாலுண்டாகும் வரும்படியைக் கண்டு தாங்களும் அதில் பங்கடைய சில தேசத்தார்கள் அவுரிப் பயிர் செய்துகொண்டு வந்தார்கள். ஆனால் இந்தியாவைப்போல் அவ்விடங்களில் அது அவ்வளவாய்ப் பலன் கொடுக்கவில்லை. நமது தேசத்தில் பல இடங்களில் அவுரிச்செடி பயிரிடப்பட்டு வந்தபோதிலும் சில இடங்களில் மாத்திரந்தான் நீலம் துவைக்கும் வேலை செய்யப்பட்டு வருகிறது. அவைகளில் விசேஷமானது புதுச்சேரிப் பட்டணம். புதுவையைச் சுற்றிலுமுள்ள நிலங்களும் ஜலமும் நீலச் சாயத்துக்குத் தகுதியானவைகளாயிருக்கிறபடியால்தான் அவ்விடங்களில் நீலச் சாலடிகள் அவ்வளவு எதேஷ்டமாயிருக்கின்றன. மேலும் நெசவு ஆலைகள் பல அந்த ஊரிலிருக்கிறபடியால் உடனைக்குடனே துணிகள் சாயமேற்றப்பட்டு அன்னிய தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. நீல வியாபாரம் நடந்துவந்த ஜாவா தீவில் அது மிகவாய்க் குறைந்து வெகு சீக்கிரத்தில் முற்றும் அற்றுப்போய்விடுமென்று பட்டேவியாவிலிருக்கும் இங்கிலீஷ் ஸ்தானாபதி மிஸ்டர் ஸ்டுவர்ட் தம் ரிப்போர்ட்டில் எழுதியிருக்கிறார். இது நமது தேசத்தாருக்கு ஓர் நல்ல செய்தி.

EDUCATIONAL NOTES.
வித்தியா விஷயக் குறிப்புகள்.

EDUCATION IN BARODA.

பரோடாவில் படிப்பு.—பரோடா சமஸ்தானத்தில் 1906 ஆம் வருஷம் வரையிலும் இருந்த பள்ளிக்கூடங்கள் 688. 1907 ஆம் வருஷத்தில் 1267 பள்ளிக் கூடங்கள் ஆகிவிட்டன. இந்த சமஸ்தானத்தில் ஆண்பிள்ளைகள் 12 வயது வரையிலும், பெண்பிள்ளைகள் 10 வயது வரையிலும் படித்தே தீரவேண்டும். தேக ஆரோக்கியத்தைப் பற்றியும், சுகவழி முறைகளைப்பற்றியும் போதிப்பதற்காக பரோடா மகாராஜா தனியாகச் சில உபந்நியாசகர்களை நியமித்திருக்கிறார். இதைத்தவிர மாணாக்கர்களை வெளி நாடுகளுக்கு அழைத்துப்போய் இயற்கைப் பாடங்களைப் போதிப்பதற்கும் தக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

PRIMARY EDUCTION.

ப்ரைமரிப்படிப்பு—ஸமீபத்தில் நடந்த இந்தியா கவர்ன்மெண்டின் சட்ட நிரூபண ஸபையின் மீட்டிங்கில் கனம் கோக்லே ப்ரைமரிப்படிப்பை கவர்ன்மெண்டார் இலவசமாகச் செய்வதோடு எல்லாப் பையன்களும் கட்டாயமாய் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேணுமென்று பேசினார். தற்காலத்தில் ஒரு தேசம் முன்னுக்கு வரவேணுமானால் அதனுடைய ஜனங்களுக்கு எழுதப் படிக்கத்தெரிய வேண்டியது அவசியம். இந்த உண்மையை அறிந்து ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலான எல்லா நாகரீக தேசத்துக் கவர்ன்மெண்டார்களும் கீழ்த்தரப் படிப்பை இலவசமாக்கி எல்லாரும் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ள வேணும் என்று கட்டாயப் படுத்தி இருக்கிறார்கள். இந்தியாவிலும் பரோடா மகாராஜா இந்த விதமாக அவருடைய ராஜ்யத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார். இப்படி இருக்க இந்தியா கவர்ன்மெண்டார் மட்டும் இது விஷயமாய் இன்னும் ஒன்றும் செய்யவில்லை. ஆகையால் கவர்ன்மெண்டார் ஏதாவது ஆரம்பித்துச் செய்யவேணும் என்று கனம் கோக்லே சொன்னார். இதற்கு தற்காலம் ஸௌகரியமில்லை என்று கவர்ன்மெண்டார் பதில் சொல்லிவிட்டார்கள். ஆனாலும் கீழ்த்தரப் படிப்பு விஷயமாகவும் சுகாதார விஷயமாகவும் இந்தியா கவர்ன்மெண்டார் சில நாள்களாக மிகுந்த யோசனைகள் செய்து வருவதாகவும், கூடிய சீக்கிரத்தில் இந்த விஷயங்களைப் பற்றி முடிவான தீர்மானத்துக்கு வந்தவுடன் திட்டமான ஏற்பாடுகள் செய்வார்களென்றும், தெரியவருகிறது. பணத்தட்டு ஒன்றால் மாத்திரமே தடை.

AN AGRICULTURAL SCHOOL.

ஒரு விவசாயப் பள்ளிக்கூடம்.—பம்பாய்க் கவர்ன்மெண்டார் புனாவில் அடுத்த ஜூன் மாதம் முதல் தேதி முதல் விவசாயிகளின் பிள்ளைகள் சேர்ந்து வாசிப்பதற்காக ஒரு விவசாயப் பள்ளிக்கூடம் ஸ்தாபித்து நடத்தப்போகிறார்களென்றும், அந்தப் பள்ளிக் கூடத்தில் சாகுபடி முறைகள் அனைத்தும் சிறுவர்களுக்குச்சொல்லி வைக்கப்படுமென்றும் தெரிய வருகிறது.

THE TINNEVELLY TECHNICAL INSTITUTE.

திருநெல்வேலி டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்.—1895-ம் வருஷம் முதல் திருநெல்வேலி ஜில்லா போர்டாரால் நிருவகிக்கப் பட்டு வந்த திருநெல்வேலி டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் போன ஏப்ரல் மாதம் 1-ந்தேதி முதல் கவர்ன்மெண்டார் வசம் வந்து விட்டது. கவர்ன்மெண்டார் மதுரையில் ஒரு டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் இருக்கும்போது திருநெல் வேலியிலும் ஒரு டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் இருக்கவேண்டியது அவசியந்தானாவென்றும் அவசியமென்று தோன்றினால் என்ன விதமாய் அதைநடத்தவேண்டுமென்றும், ரிப்போர்ட் செய்யும்படி மிஸ்டர் சாட்டர்ட்டனைக் கேட்டு விட்டிருக்கிறார்கள். நாட்டுத்தொழில்களின் அபிவிருத்தியை உத்தேசித்து கவர்ன்மெண்டார் ஜில்லாவுக்கு ஒரு டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் ஏற்படுத்தி நடத்துவது அநாவசியமான காரியமாக மாட்டாது. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் விசேஷமாய் உரித்தான சில தொழில்கள் இருந்து கொண்டேயிருக்கும். அந்தத் தொழில்களை விருத்தி செய்யும் நோக்கத்தை முன்னிட்டுஅந்தத்தொழில்களுக்கான பள்ளிக்கூடங்களை நடத்துவது பொருத்த முடையதாகவே யிருக்கும். உதாரணமாகத் திருநெல்வேலி ஜில்லாவுக்குப் பருத்தியை நூலாய்த்திரிக்கும் தொழிலும் பனைவெல்லம் செய்யும் தொழிலும் முக்கிய தொழில்களாகும். அந்தத் தொழில்களின் விருத்திக்கான வழிகளைத் தேடும் நோக்கத்தோடு அந்த ஊர் டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டை நடத்தவேண்டும். அந்த மாதிரியே மற்ற ஜில்லாக்களிலும் அந்தந்த ஜில்லாக்களுக்கு உரித்தான தொழில்களை விருத்திசெய்யும் நோக்கத்தோடு தொழில் கல்விச்சாலைகளை ஏற்படுத்தலாம்.

REVENUE NOTES.
ரெவினியூக் குறிப்புகள்.

LANDS BOUGHT IN BY GOVERNMENT.

கவர்ன்மெண்டார் வாங்கும் நிலங்கள்.—வருஷா வருஷம் ஒவ்வொரு ஜில்லாவிலும் தீர்வை செலுத்தாததற்காக கவர்ன்மெண்டார் நிலத்தை ஏலம் போடும்படி ஏற்படுகிறது. சில சமயங்களில் நிலத்தை ஒருவரும் கேழ்க்காமல் போனால் கவர்ன்மெண்டாரே தங்கள் பேரில் வாங்கிக்கொள்ளுவார்கள். நல்ல நிலங்கள் ஏலத்துக்கு வந்தால் ஸர்கார் வாங்கும்படி நேரிடாது. சுமார் 8 வருஷங்களாக ஸர்க்கார் வாங்கின நிலங்களைப் பார்க்கும்பொழுது அவைகள் நெல்லூர், கடப்பை, பல்லாரி, சேலம் ஆகிய இந்த ஜில்லாக்களிலேயே அதிகமாக இருக்கின்றன. இதனால் இந்த ஜில்லாக்களில் மட்டும் இப்படி நேர்வதற்கு ஏதோ விசேஷ காரணம் இருக்கவேண்டுமென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. இந்த 4 ஜில்லாக்களிலும் சாகுபடிக்கு லாயக்கானகாலி நிலங்கள் ஏராளமாயிருக்கின்றன. ஆகையால்தான் ஏல நிலங்களை ஜனங்கள் வாங்குவதில்லை என்று எண்ணவேண்டியிருக்கிறது.

COWLE LANDS.

கௌல்நிலங்கள்.—ரெவினியூ போர்டாருடைய 19-வது ஸ்டான்டிங் ஆர்டர் என்னும் நிலையான உத்தரவில் ஒரு கிராமத்திலுள்ள தீர்வைத் தரிசுநிலங்களிலும் புறம்போக்கு நிலங்களிலும் பொது நன்மைக்காகவும் சொந்த உபயோகத்துக்காகவும் கனி மரங்களையாவது விறகுக்கென்று உபயோகிக்கும் மரங்களையாவது வைத்து உண்டுபண்ணுவதற்காக நிலங்களை ஜாரிசெய்யலாமென்ற உத்தரவு அடங்கியிருக்கிறது. அப்படி ஜாரி பெற்று கௌல்நாமாவில் கண்ட நிபந்தனைகளின்படியே தப்பாமல் மரங்களைப் பயிரிட்டு உண்டாக்கினால் அந்தத்தோப்புக்கு 20-வருஷம்வரையில் தீர்வை யொன்றும் வசூல் செய்யப்படமாட்டாது. அதற்குப்பின் தரப்படி தீர்வை வசூல் செய்யப்படும். இப்படி மரங்கள் வைத்துண்டுபண்ணுவது போலவே காடு அடர்ந்து கிடக்கும் தரிசு அல்லது புறம்போக்கு நிலங்களையும், நாகதாளிப் புதர் அடர்ந்தவைகளையும், தண்ணீர் கட்டிய சதுப்புநிலங்களையும், கோரை முளைத்துச் சாகுபடிக்கு லாயக்கில்லாமலிருக்கும் இடங்களையும், வெட்டித் திருத்திச் சாகுபடிக்குக் கொண்டுவரவும், நிலங்களின் சத்து விர்த்திக்காக எருவாக உபயோகிக்கும் தழைகளைக்கொடுக்கக்கூடிய மரங்களையும் செடிகளையும் வைத்துண்டாக்குவதற்கும், ஐந்து வருஷம் முதல் 20-வருஷம்வரையில் தீர்வையில்லாமல் நிலம் ஜாரிசெய்யலாம் என்னும் உத்தரவு 17-வது ஸ்டாண்டிங் ஆர்டரில் இருக்கிறது. இவ்விரண்டு விதமாகவும் நிலங்களை ஜாரிபெற்று ஒவ்வொருவரும் நஞ்சை நிலங்களுக்கு வேண்டிய எரு சம்பாதித்துக் கொள்ளலாம்.

LITERARY NOTES.
புஸ்தகக் குறிப்புகள்.

MRICHCHAKATI.

மிருச்சகடிகம் (மண்வண்டி).—வெகு காலத்துக்கு முன் பிருந்த சூத்திரகன் என்னும் ஓர் அரசன் ஸம்ஸ்கிருதத்தில் இயற்றிய நாடகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும் இந்நூல்.

பத்து அங்கங்கள் அடங்கிய இந்நாடகத்தில் யாவரும் படித்து அறிந்துகொள்ளத்தக்க வசனமும், சுலோகங்களுக்கேற்ற செய்யுட்களும் கலந்து வந்துள்ளன.

வசனம், நாகபட்டணம் ஹைகோர்ட் வக்கீல் ம-௱-௱-ஸ்ரீ எஸ். ஏ. பாலகிருஷ்ணையரவர்களாலும், செய்யுட்கள், திரிசிரிபுரம் மஹாவித்வான் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கரும் திருக்கண்ணமங்கை வித்வானுமாகிய ம-௱-௱-ஸ்ரீ திரு. ஸா. இராகவாசாரியரவர்களாலும் இயற்றப்பட்டவை.

இந்நாடகத்தைப் படிப்பதால், பழையகாலத்து இராஜாங்க முறையையும், நியாயாதிபதிகள், சேனைத்தலைவர்கள், காவலாளர் முதலியவர்களுடைய குணங்களும், ஜனங்களின் இயற்கையும், உலகநடையும், பலவகையான நீதிகளும், ஒழுக்கங்களும் இவை போல்வன பிறவும் எளிதில் விளங்கும்.

இக்கதையானது படிக்கப்படிக்க மிக்க ஆனந்தத்தை விளைவிக்கும்.

நாடகத்தின் கதைச்சுருக்கத்தைப் புஸ்தகத்தின் முதலில் எழுதிச்சேர்த்திருப்பது படிப்பவர்களுக்கு மிக்க உபயோகமானது.

டெம்மி 8. பக்க அளவில் 264-பக்கங்கள் கொண்ட இப்புஸ்தகத்தின் விலை ரூபாய். 1-8-0.

BOOKS RECEIVED.
புஸ்தக வரவு.

ஸ்ரீமத் பாகவத வினாவிடை, முதல் பாகம்—ஆ. எஸ். கஸ்தூரி ரங்கய்யர் பி. ஏ., எல். டி., அவர்களால் செய்யப்பட்டது. மைலாப்பூர் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியில் கிடைக்கும். விலை ரூ. 1-0-0.

ஸ்ரீ சுப்பிரமணியர் ஸர்வரோக நிவாரணமாந்திரீகம்—சு. ராமஸ்வாமி அய்யரால் இயற்றப்பட்டது. கும்பகோணம் ஜனானுகூலன் ஆபீஸில் கிடைக்கும். விலை ரூ. 1-8-0.

LEGAL NOTES.
சட்டக் குறிப்புகள்.

AGREEMENT TO LEASE.

குத்தகைக்கு விடுவதாய் எக்ரீமெண்டு.—ஒருவன் தன்னுடைய நிலத்தைக் குத்தகைக்கு விடுவதாக ஒப்புக்கொண்டான். இப்படி ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாக ஒரு எக்ரீமெண்டு உடன்படிக்கையும் எழுதிக்கொடுத்தான். ஆனால் அந்த எக்ரீமெண்டு ரிஜிஸ்டர் ஆக வில்லை. எக்ரீமெண்டில் கண்டபடி எக்ரீமெண்டு எழுதிக்கொடுத்தவன் தன்னுடைய நிலத்தைக் குத்தகைக்குவிடத் தவறிப் போய்விட்டான். எக்ரீமெண்டு எழுதிவாங்கினவன் எழுதிக்கொடுத்தவனைக் கட்டாயப் படுத்தும்படியாக ஆக்டின்படி வியாஜ்யம் கொண்டுவந்தான். கக்ஷிக்காரர்கள் செய்துகொண்ட உடன்படிக்கை ரிஜிஸ்டர் ஆகாமற் போனபோதிலும் அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ருஜூப்படுத்த மேற்படி எக்ரீமெண்டை சாக்ஷியமாக கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளலாமென்று சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

WATER RATE.

தண்ணீர்த் தீர்வை.—1902-03ம்-வருஷத்தில் கவர்ன்மெண்டார் தண்ணீர்த் தீர்வைக்காக வசூலித்த ரூபாய் 7-14க்கு வியாஜ்யம். புன்செய் நிலத்தில் நன்செய் சாகுபடி செய்தது கவர்ன்மெண்டார் தண்ணீரைக்கொண்டா அல்லது வேறு தண்ணீரைக்கொண்டா? வாதியின் கட்சி—ஸர்க்காரின் தண்ணீர் வந்தாலுங் கூட ஏற்கெனவே நிலத்தில் மழைத்தண்ணீர் இருந்தது, ஸர்க்கார் தண்ணீர் தனக்குத் தேவையில்லாதபோது பெருகிவந்தபடியால் புன்செய் சாகுபடிக்குக் கெடுதியாகயிருந்தது, அதனால் நன்செய் சாகுபடி செய்யும்படியான நிர்ப்பந்தம் நேர்ந்தது, ஆதலால் தீர்வை வசூல் செய்யக்கூடாது. முன்ஸீப் கோர்ட்டில் வாதிபக்ஷம் தீர்ப்பாகிவிட்டது. ஆனால் ஹைகோர்ட்டில், கவர்ன்மெண்ட் தண்ணீரினுடைய உதவியையுங் கொண்டு பலன் அடைந்தபடியால் தீர்வை செலுத்த வேண்டியதென்று தீர்மானம் செய்யப்பட்டது.

A TRADING JOINT HINDU FAMILY.

வியாபாரஞ் செய்யும் அவிபக்த ஹிந்து குடும்பம்.—அவிபக்த ஹிந்து குடும்பத்தார், வர்த்தகம் செய்கிறவர்களாயிருந்தால், அப்பேர்ப்பட்ட குடும்ப வியாபாரத்துக்கும், வேறு மனிதர்கள் செய்யும் கூட்டு வியாாரத்துக்கும் பேதம் உண்டு. ஹிந்து ஜாயிண்டு குடும்ப வியாபார ஸம்பந்தமான வழக்குகளை ஹிந்து லாப் பிரகாரம் தீர்மானிக்கவேண்டுமென்று பம்பாய் ஹைகோர்ட்டார் 5-வது வாலியூம் 38-வது பக்கத்தில் தீர்ப்பு செய்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட வழக்குகளை காண்ட்ராக்ட்டு ஆக்டை அனுசரித்து, தீர்ப்புசெய்ய சாத்தியப்படாது. சில விஷயங்களில் மாத்திரம் காண்டிராட்க்டு ஆக்ட்டுப்பிரகாரமும், மற்ற விஷயங்களில் ஹிந்து லாப் பிரகாரமும், தீர்ப்புச் சொல்லவேண்டியதாயிருக்கும்.

ஜாயிண்டு குடும்பத்தில் ஒருவன் இறந்து போனால் ஜாயிண்டு குடும்ப வியாபாரத்தை நிறுத்தவேண்டிய அவசியமில்லை. ஆனால் வேறு மனுஷாள் நடத்தும் கூட்டுவியாபாரத்தில் ஒரு பாகஸ்தன் இறந்து போனால், அந்த வியாபாரத்தை காண்டிராட்க்டு ஆக்டின்படி நிறுத்திவிட வேண்டியது விதியாயிருக்கிறது. ஜாயிண்டு ஹிந்து குடும்பத்தார் நடத்தும் கூட்டு வியாபாரத்திலிருந்து ஒரு பாகஸ்தன் சம்பந்தத்தை நிவர்த்தித்துக்கொண்டால், அது வரையில் வியாபாரத்தில் உண்டான லாப நஷ்டத்தை நிர்த்தாரணம் செய்யவேண்டியதென்று கேட்க அந்தப் பாகஸ்தனுக்குப் பாத்தியதை கிடையாதென்று பம்பாய் ஹைகோர்ட்டார் 23-வது வாலியூம் 144-வது பக்கத்தில் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். வேறு மனுஷாள் கலந்து செய்யும் கூட்டு வியாபாரத்தில் ஒருவன் நீங்கினால் லாப நஷ்டங்கள் இன்னவென்று தீர்மானம் செய்யச் சொல்லிக் கேட்கிறதற்கு அவனுக்கு பாத்தியம் உண்டு.

ஜாயிண்டு குடும்பத்தார் செய்யும் கூட்டு வியாபாரத்துக்காக, கடன் வாங்க வேண்டியதாயிருந்தால், குடும்ப மானேஜர் குடும்ப ஆஸ்தியைக் கொதுவை வைக்கலாம் என்று கல்கத்தா ஹைகோர்ட்டார், 5-வது வாலியூம்792-வது பக்கத்தில் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். ஆனால் அப்போது நடத்திக்கொண்டிருக்கும் வியாபாரத்தில் நிமித்தம் இல்லாமல், நூதனமாய் மற்றொருமாதிரி வியாபாரத்தை நடத்த குடும்ப மானேஜர் குடும்ப ஆஸ்தியைக் கொதுவை வைக்கக்கூடாது.

SCIENTIFIC NOTES.

சாஸ்திரீயக் குறிப்புகள்.

LAND BREEZE AND SEA BREEZE.

நிலக்காற்று கடற்காற்று.—காலைப்பொழுதிலும் பகற்காலங்களிலும் நிலத்திலிருந்து கடலை நோக்கி யடிக்கும் காற்றுக்கு நிலக்காற்று என்று பெயர். சாயங்காலவேளையிலும் இராக்காலத்திலும் கடலிலிருந்து நிலத்தை நோக்கியடிக்கும் காற்றுக்கு கடற்காற்று என்று பெயர். இவைகள் ஒவ்வொரு நாளும் மாறிமாறி யடித்துக்கொண்டே வரும். மேற்குறித்த காலங்களில் மாத்திரம் தான் அடிக்கின்றன. இவைகளுண்டாகும் விதம் பின் வருமாறு :—

பகற்காலத்தில் சூரியோஷ்ணம் அதிகமாயிருக்கும் பொழுது கல், மண் முதலிய வஸ்துக்களும் நீர் முதலிய திரவ பதார்த்தங்களும் வெயிலை கிரகிக்கின்றன. அவைகளில் கல், மண், மணல் அதிகமாய், தண்ணீரை விட உஷ்ணத்தை கிரகித்துக்கொண்டு கொஞ்ச நேரத்திற்குள் மிகவும் சூடு பொருந்தியவையாய் விடுகின்றன. ஆனால் தண்ணீருக்கு அவ்வளவு அதிகச்சூட்டை தன்னிடம் கிரகித்துக்கொள்ளும் சக்தி கிடையாது. இது எப்படியென்றால் ஒரு சிறு பாத்திரத்தில் தண்ணீரை விட்டு வைத்து அதன் அருகில் ஒரு கல்லையும் வைத்தால் கொஞ்சநேரமான பிறகு கல் அதிகச்சூடாயிருப்பதையும் தண்ணீர் கதகதவென்றிருப்பதையும் நாம் காணலாம். இதைப்போலவேதான் பூமி அதிக உஷ்ணமாகிவிடுகிறது. ஆனால் கடலிலுள்ள தண்ணீரோ அவ்வளவு உஷ்ணத்தை யடையாமல் கொஞ்சம் கதகதவென்று மாத்திரமிருக்கும். பகற்காலத்தில் சூரிய உஷ்ணத்தினால் பூமி உஷ்ணமாகவே அதன் மேற்புறத்திலுள்ள வாயுவும் அதிக உஷ்ணத்தை யடைந்து ஆகாயத்தை நோக்கிக்கிளம்புகிறது. ஏனெனில் உஷ்ணவாயு சாதாரண வாயுவைப் பார்க்கிலும் இலேசானது. ஆதலால்தான் உயரச் செல்லுகின்றது.

இவ்விதமாக நிலத்திலிருந்த வாயு உயரச் செல்லச்செல்ல அந்த காலியிடத்தை நிரப்ப கடலிலிருந்து குளிர்ந்த வாயு நிலத்தை நோக்கியடிக்கும். அதற்குத்தான் கடற்காற்று என்று பெயர். இந்தக் காற்று சுத்த வாயுவாதலால் மனிதர்களுக்கும் மற்றுமுள்ள பிராணிகள் செடி கொடிகளுக்கும் இன்றியமையாதது.

கடற்காற்று சாயங்காலத்தில்தான் அடிக்குமென்பதை இதனால் அறிகிறோம். சூரியன் அஸ்தமித்தவுடன் வெப்பம் தணிய, உஷ்ணத்தை எவ்வளவு சீக்கிரமாக கிரகித்தனவோ அவ்வளவு சீக்கிரமாக பூமியும் கற்களும் வெளியே விடுகின்றன. கடற்காற்றானது அடித்துக்கொண்டே வர எவ்விடத்திலும் வாயு சரி சமமாகப் பரவிவிடுகின்றது. ஆதலால் பொழுது விடியும் தருவாயில் கடற்காற்று நின்று விடுகின்றது. பகற்பொழுதில் உஷ்ணமடைந்த கடல் ஜலமானது ராக்காலத்தில் கொஞ்சங்கொஞ்சமாக உஷ்ணத்தை வெளிவிடுகின்றது. ராக்காலத்தில் கடல் ஜலமானது குளிர்ச்சியடைகிறது. ஆனால் பூமியும் கல்லுகளும் எவ்வளவு சீக்கிரத்தில் குளிர்ச்சி அடைகின்றனவோ அவ்வளவு சீக்கிரத்தில் கடல் ஜலம் குளிர்ச்சி அடைவதில்லை. ஆகவே பூமியும் கல்லுகளும் நன்றாய் குளிர்ந்தபிறகு கூட, கடல் ஜலமானது சூடாயிருந்து கொஞ்சங் கொஞ்சமாக உஷ்ணத்தை வெளிவிடுகிறது. அதனால் கடலின் மேல் பரப்பிலுள்ள உஷ்ண வாயு மேலே செல்லுகின்றது. அந்த வாயு மேலே செல்லச்செல்ல அவ்விடத்திலுள்ள வாயுவை சமமாக்கவேண்டியது அவசியமல்லவா? அதற்குக்காற்று பூமியிலிருந்து சமுத்திரம் நோக்கியடிக்கின்றது. இதற்குத்தான் நிலக்காற்று என்றுபெயர். இந்தக்காற்றானது காலைவேளைகளிலும் பகற்காலத்திலும்தான் அடிக்கும். இந்த நிலக்காற்றானது பூமியிலிருந்து அடிப்பதாலும் அசுத்த பதார்த்தங்களின் மேல் அடித்து வருவதாலும் உடம்புக்கு யாதொரு நன்மையையும் செய்யாது. ஆனால் தீங்கையே விளைவிக்கும்.

WEIGHT OF MAN.

மனிதனுடைய நிறை.—ஒரு மனிதனுடைய சரியான நிறை எலும்புக்கூடு 25 ராத்தலும், சதை 68 ராத்தலும், தோல் $10\frac{1}{2}$ ராத்தலும், கொழுப்பு 28 ராத்தலும், மூளை 3 ராத்தலும், மார்பிலடங்கிய அவயவங்கள் $3\frac{1}{2}$ ராத்தலும், வயிற்றிலடங்கிய அவயவங்கள் 11 ராத்தலும், ரத்தம் 7 ராத்தலும், ஆக மொத்தம் 156 ராத்தல் இருக்கும். இப்படியிருக்கிற மனுஷனுடைய ஹிருதயமானது நிமிஷம் ஒன்றுக்கு 75 தடவை அடிக்கவேண்டும். அவன் நிமிஷம் ஒன்றுக்கு 15 தடவை ஸ்வாசிக்கவேண்டும். இவனுக்கு 800 கன அடி அளவுள்ள காற்றோட்டமான இடம் வேண்டும். ஒரு நாளைக்கு வியர்வையாக $1\frac{1}{8}$ ராத்தல் நிறையுள்ள ஜலம் வெளிப்படும். ஒரு நாளைக்கு மொத்தத்தில் 6 ராத்தல் ஜலமும் 2 ராத்தலுக்கு இதர வஸ்துக்களும் வெளிப்படும்.

MEDICAL NOTES.

வைத்தியக் குறிப்புகள்.

SUGAR AND ALCOHOL.

சர்க்கரையும் சாராயமும்.—சோர்ந்திருக்கும் காலத்தில் சர்க்கரைப் பண்டங்களைத் தின்றால் சீக்கிரத்தில் ஆயாஸம் நீங்கிவிடும். இதை அறிந்துதான் ஜர்மனி தேசத்தில் சர்க்கரைப் பண்டங்களை வெகு தூரத்திற்கு நடந்துபோக வேண்டிய சைனியங்களுக்கு தின்னக்கொடுக்கிறார்கள். தவிர, சர்க்கரைப் பண்டங்கள், எவ்வளவுக் கெவ்வளவு ஜாஸ்தியாகச் சாப்பிடப்படுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு சாராயம் குடிப்பது குறைவாகிறது. இந்த உண்மையை அறிந்து அமெரிக்கா ஐக்கியநாடுகளின் கவர்ன்மெண்டார் பிலிப்பைன் தீவிலுள்ள சைனியங்களுக்கு ஏராளமாக சர்க்கரை மிட்டாய்களை வாங்கி அனுப்புகிறார்களாம். எந்த தேசத்தில் சர்க்கரை ஜாஸ்தி செலவாகிறதோ அந்த தேசத்தில் குடி குறைந்திருப்பது சகஜமாயிருக்கிறது.

RICE.

அரிசி.—ரங்கூன் அரிசியைச் சாப்பிடுவதால் பெரிபெரி என்னும் வியாதி வருகிறதென்று போன புரட்டாசி மாஸத்துப் பிழைக்கும் வழியில் சொல்லியிருக்கிறோம். இந்த வியாதி உண்டாவதற்கு முக்கிய காரணம் நாம் சாப்பிடும் அரிசியில் ப்ரகாசித ஸத்து என்று சொல்லப்பட்ட பாஸ்பரஸ் குறைந்திருப்பதுதான் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். எந்தக் காரணத்தினால் இவைகளிலடங்கிய பாஸ்பரஸ் குறைவுபடுகிறதென்னும் விஷயத்தை ஆராய்ச்சி செய்ததில், அரிசியை வெள்ளையாக்குவதற்காகக் “குத்தி” “தீட்டி” “மினுக்கு”வதுதான் என்று வெளியாகிறது. அரிசித் ‘தவிடு’ ‘குத்துமி’ யென்னும் வஸ்துக்களில், அரிசியைப் பார்க்கிலும் அதிக ஸாரமுள்ள உணவுப்பொருள்கள் அடங்கியிருப்பதாக ரஸாயன சாஸ்திர நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகையால் அரிசிச் சாதம் “தும்பைப்பூப்போல்” வெண்மையாயிருக்க வேண்டுமென்று திரும்பத் திரும்பத் தீட்டி மினுக்குவதால் அதிக ஸத்துள்ள தவிடு போக்கப்படுகிறதென்றும், அதனால் தேகபோஷணைக்கு அவசியமான பல பொருள்கள் குறைவுப்படுகின்றனவென்றும், ஆகையால் அரிசியைத் தீட்டிமினுக்காமல் அதின் இயற்கை ஸ்திதியிலேயே சமைத்துச் சாப்பிடுவது நலமென்றும் வெளியிட்டிருக்கிறார்கள்.

EYE TROUBLES.

கண்வியாதிகள்.—ஒரு நிருபர் எழுதுகிறார் :—

விளாம்பிசினைப் பனிநீரில் உரைத்துக் கண்வலி விட கண்சிவப்பு நீங்கி கண்குளிரும்.

சன்ன லவங்கப்பட்டையை முலைப்பாலில் உரைத்துக் கண்ணில் போட ஒளி அதிகரிக்கும். துடிப்பு மாறும்; நடுக்கல் நீங்கும்.

ஷாத்ஞம் என்னும் கல்லை முலைப்பாலில் உரைத்துக் கண்ணில் இட கண்நோய், கண் எரிவு முதலிய சகல நேத்திர ரோகங்களும் தீரும்.

CONSUMPTION.

க்ஷயரோகம்.—“க்ஷயரோகமானது ஆரம்பத்தில் மகா நுட்பமான சில பூச்சிகள் தேகத்தில் புகுந்து இரத்தத்திற் கலந்து விடுவதால் உண்டாகிறது. இந்தப் பூச்சிகள் ஒருஊசி முனையில் நூற்றுக்கணக்காய் ஜீவிக்கக் கூடியனவாய் அவ்வளவு நுட்பமானவைகள். அவைகளுக்கு இங்கிலீஷில் மைக்ரோப்ஸ் என்று பெயர். அவைகளை ஒரு பூதக் கண்ணாடியால்தான் பார்க்கலாம். அவைகள் நம் உடம்பில் இரண்டுவிதமாய் வருகின்றன. (1) ஏற்கனவே க்ஷயரோகத்தால் வருந்தும் ஒருவன் எச்சில் துப்பி அது உலர்ந்து அதிலிருந்து வரகூடும். (2) வியாதியுள்ள பசுக்களின் பாலைக்குடிப்பதாலும் வரக்கூடும். பசுக்களுக்கும் இந்த வியாதி வருவதுண்டு. இப்படிப்பட்ட பசுக்கள் இருமலும் ஜுரமும் உள்ளனவாயிருக்கும். அவைகளின் பாலை நாம் செவ்வையாய்க் காய்ச்சாமல் குடிக்கக்கூடாது. எப்போதுமே பாலை நன்றாய்க் காய்ச்சி உபயோகப்படுத்துவதுதான் நலம். அப்படிச்செய்தால் வியாதி விளைவிக்கும் பூச்சிகள் நம் உடம்பில் செல்லமாட்டா. நல்ல சரீரமுள்ள ஒருவனுக்குள் வியாதியற்ற நல்ல பூச்சிகள் இருந்து அவைகளால் வியாதிப் பூச்சிகள் அடிபட்டுப் போகின்றன. ஆகையால் நல்ல உணவும் நல்லகாற்றும் அவசியம். பாலைக் காய்ச்சுவதிலும் குடி தண்ணீரைக் காய்ச்சுவதிலும் கொஞ்சம் சுடவைத்தால் மட்டும் போதாது. வேலைக்காரர்களும் ஸ்திரீகளும் இப்படியே செய்து விடுகிறார்கள். இரண்டு மூன்று தடவையாவது கொதித்துப் பொங்கும்படி காய்ச்சவேண்டும். கொதித்த பாலும் நீரும் சிறிது குளிர்ந்தாலும் பாதகமில்லை. ஆனால் குளிர்ந்த சிறிதுநேரத்துக்குள் உபயோகப்படுத்தவேண்டும். நமது வாழ்க்கையில் எவ்வளவோ அற்பமான விதிகள் அவசியமாக ஏற்பட்டிருக்க அவைகளை நாம் கவனிக்காமலே பிணிகளால் வருந்துகிறோம்.

THE LADIES' PAGE.

பெண்கள் பக்கம்.

Boiled Rice.

வடித்த சாதம்.—அரிசி கொதித்து சாதம் வடிப்பதற்கு முன் துளி நெய்யை வார்த்தால் சாதம் குழைந்துபோவதில்லை. மகம்மதியர் இந்தப்பழக்கத்தை அனுசரிக்கிறார்கள்.

To Preserve Limes.

எலுமிச்சம் பழங்களை வதங்காமல் வைக்க.—ஒரு பெட்டியில் ஆற்றுமணலை நிரம்பக் கொட்டி அதற்குள் எலுமிச்சம் பழங்களைப் புதைத்து, மணல் காயாமல் ஈரப்படுத்திக் கொண்டே யிருந்தால் எலுமிச்சம் பழங்கள் வதங்காமல் இருக்கும்.

The Hindu Marriage Reform League.

ஹிந்து விவாகத் திருத்த லீக்.—கல்கட்டாவில் **ஹிந்து விவாகத்திருத்த** லீக் என்று ஒரு சங்கம் ஏற்பாடாயிருக்கிறது. சிறுவர்கள் சிறுமிகளுடைய கலியாண வயதை உயர்த்துவதும் கலியாணச் செலவுகளைச் சுருக்குவதும், கலியாண மாகும் பெண்களுக்குக் கொடுக்கப்படும் கன்யா ஸுல்கத்தைச் சுருக்குவதுமே அந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

A Woman's Bank.

ஸ்திரீகள் பாங்கி.—லண்டனில் நியூப்ரிட்ஜ் தெருவில் போன மார்ச்சு மாஸம் 14-ம் தேதி யன்று ஸ்திரீகளுக்கென்றே ஒரு பாங்கி ஏற்படுத்தப்பட்டது. இந்த பாங்கியை ஸ்திரீகளே மானேஜ்மெண்ட் பண்ணிவருவார்கள். மற்ற சாதாரண பாங்கிகளைப்போலவே, வியாபாரம் நடந்துவரும். இந்தப்புது பாங்கிக்கு மிஸ். மே. பேட்மன் என்னும் ஒரு ஸ்திரீ மானேஜர்.

Srimati Kalyani Ammal.

ஸ்ரீமதிகல்யாணி அம்மாள்.—"சாரதா மலையம்மா" என்கிற பத்திரிகையின் ஆசிரியரும் மிஸ்டர் கிருஷ்ணமீனன் என்கிற மலையாளம் வித்வானின் பத்னியுமாகிய ஸ்ரீமதி கல்யாணி அம்மாள் கிரேட் பிரிட்டன் ராயல் ஏஷியாடிக்ஸொஸைட்டி மெம்பர்களுள் ஒருவராகத்தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறாள். இந்த அம்மாள் பெண்கல்வி விஷயமாய் அதிகமாய் முயன்று பாடுபட்டவள்.

Compulsory Shaving.

பலாத்காரமாய் மொட்டையடித்தல்.—கஞ்சம் ஜில்லாவிலுள்ள தெக்கலி என்னும் இடத்தில் லக்ஷ்மிநரஸம்மா என்று ஒரு பெண் 6-வருஷத்துக்கு முன் விதந்துவாய்ப் போய்விட்டாள். 1908-ம் ௵ டிஸம்பர்மாஸம் அவள் ராஜ மஹேந்திரியிலுள்ள விதவை ஸங்கத்தைப் போய்சேர்ந்து கொண்டாள். அவளுடைய தாய் தந்தையர்கள் அவளை ஒரு பிள்ளை ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளும்படி சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்படிச் செய்யாததனால் அவர்கள், அவள்பேரில் எதையோ திருடிக்கொண்டு போனதாக வழக்குச் செய்தார்கள். அதன்பேரில் அவள் விசாரணைக்காக தெக்கலிக்குக் கொண்டுவரப்பட்டாள். அவள் உண்மையாய் ஒன்றையும் திருடவில்லை. ஆதலால், விடுதலை செய்யப்பட்டு தன் தகப்பன் வீட்டிலேயே தங்க வேண்டியதாயிற்று. அவள் மறுபடியும் ராஜ மஹேந்திரிக்குப் போகாமலிருக்கும் பொருட்டு அவளுடைய தாய் தந்தையர்கள் அவளை ஒரு அறையில் கூட்டிக்கொண்டு போய். பலாத்காரமாய் அவளுடைய தலை மயிரை யெல்லாம் கத்திரித்து விட்டார்கள். இப்படிச்செய்யவே அவள் பெருங் கூக்குரலிட்டாள். அப்பொழுது தெருவழியாய்ப் போய்க்கொண்டிருந்த கர்ணன் திடுக்கிட்டு என்ன என்று பார்க்க வீட்டிற்குள் சென்றான். சங்கதியை அறிந்து அவன் உடனே மாஜிஸ்ட்ரேட்டிடம் பிரியாது செய்தான். பிற்பாடு அவ்விதவையின் தந்தை தாய் இருவரும் விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் ஹிந்து சாஸ்திரப் பிரகாரம் தாங்கள் செய்ததாகச் சொல்லி, மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அதன் பேரில் மாஜிஸ்ட்ரேட் தாய்க்கு 10-ரூபாயும், தந்தைக்கு 20 ரூபாயும் அபராதம் விதித்தார்.

Baking by Electricity.

மின்சார சக்தியால் ரொட்டிசுடுதல்.—ஸ்விட்ஸர்லாந்தில் கொன்ஸ்பட்டணத்தில் ஒரு ரொட்டிக் கடைக்காரன் மின்சார சக்தியால் ரொட்டிசுட்டு விற்பனைசெய்கிறான். அவனுடைய அடுப்பின் நீளம் 8 அடி; அகலம் 4 அடி. இதில் தனித்தனி 2 பவுன் நிறை ரொட்டிகள் 50 ஏககாலத்தில்வேகும். இவைகள் வேகப் பிடிக்கும்நேரம் 1½-மணி. பன்னிரண்டு மணிநேரத்தில் 400 ரொட்டிகள்சுட்டு விற்பனைசெய்கிறான்.

THE BOYS' PAGE.

பையன்கள் பக்கம்.

Areca Nut Trees.

பாக்கு மரங்கள்.—சாதாரணமாய் பாக்கு மரங்கள் பன்னிரண்டு அடியாவது வளர்ந்த பிறகு தான் காய்க்கும்.

Tobacco.

புகையிலை.—இந்தியா முழுவதிலும் 10 லக்ஷம் ஏகருக்கு மேலேயே புகையிலை சாகுபடியாகிறது. இதில் விளையும் மாசூலின் மதிப்பு 7½ கோடி ரூபாயாகும்.

The Blindman's Clock.

குருடர் கடிகாரம்.—குருடர் மணிபார்த்துக்கொள்ளும்படியாக நூதனவகையாய் ஒரு கடிகாரஞ்செய்யப்பட்டிருக்கிறது. கடிகார முகப்பைக் கையால் தடவி மணிக்கணக் கறிந்துகொள்ளலாம்.

Horse Shoes.

குதிரை லாடங்கள்.—ஜப்பானியர் தங்கள் குதிரைகளுக்கு வைக்கோலினால் லாடந் தைக்கிறார்கள் ஐஸ்லாண்ட் குடியானவன் ஆட்டுக்கொம்பினால் லாடம் போடுகிறான். ஆக்ஸஸ் நதியோரத்தில் மான் கொம்பினால் லாடம் போடுகிறார்கள். ஸௌடானில் ஒட்டகத்தோலினால் மேசோடுபோல் செய்து குதிரைகளுக்குப் பூட்டிவிடுகிறார்கள்.

The Sheep King.

ஆட்டுக்கார ராஜன்.—ருஷயாவில் கஸ்தவ் ஜோவனொவிச் என்று பெயர்கொண்ட ஒரு பிரபு இருக்கிறார். அவருக்கு 17 லட்சத்து 50 ஆயிரம் ஆடுகளுண்டு. அவைகளைப் பாதுகாக்க 35,000 நாய்கள் வைத்திருக்கிறார். இந்த ஆடுகள் மேய அநேக நூறு சதுர மைல் நிலம்வேண்டுமாம். 50 ஆடுகளுக்கு ஒரு நாய்வீதம் காவல்பண்ணும். இவரை ருஷிய ஆட்டுக்கார ராஜனென்பார்கள். உலகத்திலே இவ்வளவு ஆடுகளையுடைய பிரபு ஒருவருமில்லை.

Our Emperor George as Carpenter.

ஜியார்ஜ் அரசரும் தச்சுவேலையும்.—நமது ஜியார்ஜ் அரசர் தச்சுவேலை செய்வதில் மகா சமர்த்தர். உளிவேலைசெய்வதிலும், இழைப்புளிவேலை செய்வதிலும் இவருடைய சாமர்த்தியம் மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறதாம். சிறுவயதில் இவரும் இவரின் காலஞ்சென்ற சகோதரார்கிய ட்யூக் ஆப் கிளாரன்ஸும் விளையாடிக் கொண்டிருந்தபோது, ஜியார்ஜ் அரசர் ஒரு அறையின் கதவை உடைத்துவிட்டு உடனே உடைந்தது தெரியாமல் இழைத்து இணைத்து விட்டாரென்றும், அப்படி அவர் செய்தது வெகு நாள் தெரியாமல் ஏற்கெனவே உள்ள கதவுபோல் இருந்ததென்றும், இன்றும் ஜனங்கள் ஒரு ஆச்சரியமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

Refusing a Loan.

கடன் கொடுக்கமாட்டேன் என்பது.—

ராமன்.—கட்டிலின்மேல் குப்புறப்படுத்துக் கொண்டிருந்த சோமனைப்பார்த்து "ஏண்டா சோமா, தூங்கிக்கொண்டிருக்கிறாயோ? இன்னும் ஊர் அடங்கவில்லையே, இப்போதே தூக்கம் என்ன?" என்று எழுப்பினான்.

சோமன்—இல்லைடா சும்மாப்படுத்துக்கொண்டு ஏதோ ஆலோசித்துக்கொண்டிருக்கிறேன்.

ராமன்—அப்படியானால் உன்னை ஒரு உதவி கேட்க வந்தேன். எனக்கு அவசரமாய் அஞ்சு ரூபாய் வேண்டியதாய் இருக்கிறது. அஞ்சாறு நாளில் அகத்தியம் உனக்குக் கொடுத்துவிடுகிறேன்.

"**சோமன்**—ஐயோ, தூங்குறேண்டா போடா என்று சொல்லிக் குறட்டைவிடதொடங்கினான்.

கடன் கேட்டால் கொடுக்க இஷ்டமில்லாதவர்கள் சொல்லும் ஸால் ஜாப்பு எத்தனையோவிதம்.

An opening for young men.

சிறுவர்கள் பிழைக்கும்வழி—சென்னப்பட்டணம் வேப்பேரியில் சென்ற சில வருஷங்களாய் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவரும் கால்நடை வைத்தியக் காலேஜ் மாணாக்கர்களுக்கு பரிசுகள் சமீபத்தில் கொடுக்கப்பட்டன. அந்தப்பரிசுகளைக் கொடுத்த ஆனரெபில் மிஸ்டர்காவில் ஸ்டுவேர்ட் ஸ்டுவேர்ட் சென்னைக் கால்நடைவைத்திய இலாகாவில் இந்தியச் சிறுவர்களுக்குத் தக்க உத்தியோகங்கள் எல்வளவோ இருக்கின்றன என்றும், மற்ற இலாகாக்களில் உத்தியோகம்பெற அடித்துக்கொள்ளும் இந்தியச் சிறுவர்கள் அந்த இலாகாவைச் சேர்தல் நலமென்றும், சொன்னார். மெட்ரிகுலேஷன் வரையில் படித்து மேலே ஏறக் கூடாதவர்களுக்கு இந்த இலாகா நல்லது. தகுந்தசம்பளம் உண்டு.

INDIAN NEWS.
இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

THE COIMBATORE AGRICULTURAL COLLEGE

கோயம்புத்தூர் விவஸாய காலேஜ்.—கும்பகோணத்தில் வக்கீலாகிய, கனம் ராவ் பகதூர் என். கிருஷ்ணஸாமி அய்யங்கார் அவர்களை கோயம்புத்தூர் விவஸாய காலேஜைப் போய் பார்த்துவரும்படி கௌரவ விஸிடராக கவர்ன்மெண்டார் நியமித்திருக்கிறார்கள். இப்படிக்கு அவர் இரண்டு வருஷம் செய்யலாம்.

THE MAHARAJA OF MYSORE.

மைசூர் மகாராஜா.—இவர் ஏப்ரல் மாஸம் 28-ம் தேதி காலடிக்குப்போய் ஜகத்குரு ஸ்ரீங்கேரி ஸ்வாமி அவர்களை தரிசித்தார். 108 பவுன் போட்டு பாதபூஜையையும் செய்தார். இதோடு விலையுயர்ந்த சால்வைகளும் கொடுத்தார். மகாராஜா அவர்கள் ரொம்பவும் பக்தி சிரத்தையாயிருப்பதைப்பற்றி ஸ்வாமிகள் ரொம்ப கொண்டாடினார்.

TIRUPPUR CATTLE SHOW.

திருப்பூர் கால்நடைக் காக்ஷி.—நாளது மே௴ 25, 26, 27, இந்தத் தேதிகளில் கோயம்புத்தூர் ஜில்லா திருப்பூரில், ஒரு கால்நடைக்காக்ஷி நடந்தது. சென்னைராஜதானியில் வளர்க்கப்பட்ட கால்நடைகள் மட்டும் இந்தக்காட்சியில் சேர்க்கப்பட்டு திறமையான கால் நடைகளுக்கு இனாம் கொடுக்கப்பட்டன. இந்தக்காட்சியில் விவஸாயிகளுக்கு உபயோகமான ஆயுதங்களும் இன்னும் மற்ற சாமான்களும் வைத்துக் காண்பிக்கப்பட்டன.

THE MADURA CATTLE SHOW.

மதுரைக் கால்நடைக்காட்சி.—போன ஏப்ரல் மாஸம், 24, 25, 26, இந்ததேதிகளில் மதுரை விவஸாயசங்கத்தார் நிர்வாகம்செய்து, மதுரையில் ஒரு கால் நடைக்காக்ஷி நடத்தினார்கள். இதில் சுமார் 20,000 மாடுகள் வந்திருந்தன. அநேக ஆலம்பாடி, காங்கேயம் ஜோடிகள் நன்றாயிருந்தன. இந்தக் காட்சியில், சிலபேர்கள், விவஸாய விஷயமாக உபந்நியாஸங்களும் செய்தார்கள். முதல்திறமான மாட்டுக்காரர்களுக்கு வெகுமதிகள் கொடுக்கப்பட்டன.

THE CENSUS.

ஜனகணிதம்.—வருகிற ஸென்ஸஸ் 1911 வருஷம் மார்ச்சு மாதம் 10-தேதி இரவில் எடுக்கப்படும். அது பௌர்ணமிக்கு முந்திய தினமாயிருக்கும்படி பொறுக்கப்பட்டிருக்கிறபடியால் அன்று நடு ராத்திரிவரையில் நல்ல நிலாவெளிச்சம் இருக்கும். நிலவு இருப்பது ஸென்ஸஸ் எடுப்போருக்குச் சௌகரியமா யிருக்கும். அன்று தினம் தேர் திருவிழாக்கள் இல்லாத நாளாயும் அந்தந்த ஊர் ஜனங்கள் அந்தந்த ஊர்களிலேயே இருக்கக்கூடிய காலமாயும் பார்த்து குறிக்கப் பட்டிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

CURRENCY NOTES.

கரென்ஸி நோட்டுகள்.—இந்தியா கவர்ன்மெண்டாரின் பத்து ரூபாய் கரென்ஸி நோட்டுகளும் ஐம்பது ரூபாய் கரென்ஸி நோட்டுகளும் 1910-ம்௵த்து 2-வது ஆக்டின்படி ஐந்து ரூபாய் நோட்டுகளைப்போலவே எங்கும் செலாவணியாகத் தக்கவைகளாகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையினால், இந்த மூன்றுவிதமான பெயர் மதிப்புள்ள நோட்டுகளும் ப்ரிடிஷ் இந்தியா முழுவதிலும் சட்டப்படி கொடுக்கத் தக்கவையாகும்; மேலும் அவைகளை ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் நோட்டுகள் வெளிவிடும் எந்த ஆபீசிலும் ரொக்கமாக மாற்றலாம்.

எங்கும் செலாவணியாகத்தக்க ஐந்து ரூபாய் நோட்டு மாதிரியாகவே உருமாற்றப்பட்ட பத்து ரூபாய் நோட்டுகளும் ஐம்பது ரூபாய் நோட்களும் சீக்கிரத்தில் வெளிவிடப்படும்; ஆனால், இப்போதைய நோட்டுகளின்மேல், இதற்கு விரோதமாய் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, மேற்படி ஆக்டின் நிபந்தனைகள் உடனே அமுலுக்குவரும். இந்த நிபந்தனைகள் இந்தப் பெயர் மதிப்புள்ளவைகளாய் முன்னமே கைமாறிக்கொண்டிருக்கும் நோட்டுகளுக்கும் பிரயோகப்படும்.

இந்த ஆக்டினால் செய்யப்பட்ட மற்றொரு மாறுதல் என்னவென்றால்,—இப்போது கல்கத்தாவுக்கும் பம்பாய்க்கும் உள் ஸர்க்கிள்களாயிருக்கும் கான்பூரும் லாஹூரும் கராச்சியும் நோட்டுகள் வெளிவிடும் பிரத்தியேக ஸர்க்கிள்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்ட பெயர் மதிப்புள்ளவைகளாய் இந்த மூன்று கரென்ஸி ஆபீஸுகளிலிருந்தும் வெளிவிடப்பட்ட நோட்டுகள் இதுவரையில் தலைமையான ஸர்க்கிளிலுங்கூட, அதாவது, கான்பூர் நோட்டுகள் விஷயத்திலும் லாஹூர் நோட்டுகள் விஷயத்திலும் கல்கத்தாவிலும், கராச்சி நோட்டுகள் விஷயத்தில் பம்பாயிலும், ரொக்கமாக மாற்றத்தக்கவைகளாயிருந்தன; இனிமேல் அவைகள் அப்படி மாற்றத்தக்கவைகளாகா; இதுவே மேலேகண்ட மாறுதலின் பயனாகும். ஆயினும் மேலேகண்ட ஆக்ட் ஜாரியானதற்குமுன் வெளிவிடப்பட்ட நோட்டுகளின் விஷயத்தில் இந்த சௌகரியம் இன்னமும் இருந்துகொண்டிருக்கிறது.

எங்கும் செலவணியாகத்தக்க நோட்டுகளின் வியாபகத்தை இப்போது அதிகரித்திருக்கிறபடியால், ரெயில்வேக்களிலும், தபாலாபீஸுகளிலும், கவர்ன்மெண்டாருக்குச் சேரவேண்டிய தொகைகளுக்குப் பர்த்தியாக அன்னிய தேசத்து சர்க்கிள் நோட்டுகளைப் பெற்றுக்கொள்வதை இனிமேல் நிறுத்திவிட தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்ட பெயர் மதிப்புள்ள நோட்டுகள் அவைகள் எந்த வெளியிடும் சர்க்கிள்களைச் சேர்ந்தவையே அந்த சர்க்கிள்களுக்கு வெளியேயுள்ள ரெயில்வே ஸ்டேஷன்களிலும் தபாலாபீஸு அல்லது இதர கவர்ன்மெண்ட் ஆபீஸுகளிலும் இனிமேல் பெற்றுக்கொள்ளப்படமாட்டா.

PLAGUE

ப்ளேக்.—திண்டுக்கல்லில் ப்ளேக் வந்திருக்கிறது. அதற்காக சென்னை சுகாதாரக்கமிஷனரும் மதுரை கலெக்டரும் அந்த நோய் பரவாமலிருப்பதற்குள்ள வழிகளைத் தேட முயன்றுவருகிறார்கள். மதுரை ஸ்டேஷன், சோதனை ஸ்டேஷனாகப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இதுவரையில் ப்ளேக் வியாதியால் இறந்து போனவர்களின் தொகை பின் வருமாறு.

1900	73,576
1901	2,36,433
1902	4,52,865
1903	6.84,445
1904	9,38,010
1905	9,40,821
1906	3,00,355
1907	11,66,223
1908	1,13,888
1909	1,41,695
1910—ஜனவரி—மார்ச்சு	1,94,511

FOREIGN NEWS.
அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்

TANNING INDUSTRY IN KABUL.

காபூலில் தோல்பதனிடும் தொழில்.—ஆப்கானிஸ்டான் தேசத்து அரசராகிய அமீர் அந்த தேசத்துத் தலைப்பட்டணமாகிய காபூலில் தோல்பதனிடும் தொழிலை ஏற்படுத்தப்போகிறாராம். அதற்காக ஐரோப்பாவில் இந்தத் தொழிலைக் கற்றுவந்த ஒரு பஞ்சாப் துருக்கரை நியமித்திருக்கிறார்.

INDIAN PRODUCTS.

இந்திய விளைபொருள்கள்.—கோயம்புத்தூர் விவஸாயக் கலாசாலைத் தலைவராயிருந்து சீமைக்குப் போயிருக்கும் மிஸ்டர் ஷெப்பர்சன் துரையவர்கள் பீட்டர்ஸ்பரோ சந்தையில் ஒருவகையான சிவப்புச் சோளமும் கடலையும் விலைக்கு விற்கப்பட்டு வருவதாயும், அதைப்பற்றி விசாரித்ததில் இந்தியாவிலுள்ள கராச்சி துறைமுகத்திலிருந்து இங்கிலாந்துக்கு இந்தத் தானியங்கள் ஏற்றுமதியானதாக வெளியானதாயும், ரூ. 1-க்கு 7 பட்டணம் படி வீதம் வியாபாரிகள் விற்பதாயும் எழுதியிருக்கிறார். அங்குள்ள கிருஷிகர் இந்தத்தானியங்களை வாங்கிக் கால்நடைகளுக்கு ஆகாரமாக உபயோகிக்கிறார்களாம். இனி இந்த தேசத்திலிருந்து சோளமும் கடலையுங் கூட அயல்தேசங்களுக்கு ஏற்றுமதியாய்விடும்போலிருக்கிறது. அப்போது நமது தேசத்து ஜனங்கள் பாடு என்ன ஆகுமோ தெரியாது. விவசாய அபிவிர்த்தி ஒன்றுதான் இவைகளுக்கெல்லாம் நிவர்த்தி.

GIFT TO THE LIVERPOOL UNIVERSITY.

லீவர்பூல் ஸர்வகலாசாலைக்கு நன்கொடை.—துணிகளைத் தோய்ப்பதற்காக உபயோகப்பட்டுவரும், "ஸன்லைட்" ஸோப்பு எல்லாருக்கும் தெரிந்திருக்கும். அந்த ஸோப்பை "லீவர்ப்ரதர்ஸ்" என்னும் ஒரு கம்பெனியார் இங்கிலாந்தில் செய்கிறார்கள். இந்தக் கம்பெனிக்கு டப்ளியூ. எச். லீவர் என்பவர் முக்கியஸ்தர். இந்தக் கம்பெனியைப்பற்றி ஒருவரே நடத்திவரும் சில பத்திரிகைகள் அவதூறாய்ப் பேசின. ஆகையால் லீவர்ப்ரதர்ஸக் கம்பெனியார் அந்தப் பத்திரிகைகளின் மேல் மானநஷ்டப்பிரியாது பண்ணினார்கள். இந்தப்பிரியாதில், அந்தக் கம்பெனியார் ஜெயித்து, அவர்களுக்கு சுமார் 14 லக்ஷம் ரூபாய் போல், பிரதிவாதிப் பத்திரிகைகள் கொடுக்கும்படி ஏற்பட்டது. இப்படிக் கிடைத்த தொகையை அந்தக்கம்பெனியார் தாங்களே வைத்துக் கொள்ளாமல் "லிவர்பூல்" ஸர்வகலாசாலைக்கும் இன்னும் சில பள்ளிக்கூடங்களுக்கும் நன்கொடையாகக் கொடுத்துவிட்டார்கள்.

SEASON.

கால ஸ்திதி.

RAINFALL.

மழை.—ஏப்ரல் மீ 1-தேதியிலிருந்து மேமீ 27-ம்தேதி வரையில் பெய்தமழை அளவும், இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், கீழே அங்குலத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	2	3
வால்டேர்	..	3
காக்கினாடா	..	1
மசூலிப்பட்டணம்	1	2
நெல்லூர்	..	..
மதராஸ்	..	1
கூடலூர்	..	1
நாகப்பட்டணம்	..	2
பாம்பன்	3	3
கொழும்பு	9	22
திருவநந்தபுரம்	10	11
கொச்சி	15	14
கள்ளிக்கோட்டை	9	10
மங்களூர்	1	6
மெர்க்காரா	7	7
ஐதராபாத்	1	1
ரெய்ச்சூர்	1	1
பல்லாரி	3	2
கர்நூல்	1	2
கடப்பை	1	2
ஹாஸ்ஸான்	9	7
பெங்களூர்	1	5
கொடைக்கானல்	10	9
உதகமண்டலம்	8	..
கோயம்புத்தூர்	1	4
வேலூர்	2	..
சேலம்	4	6
திருச்சினாப்பள்ளி	5	5
புதுக்கோட்டை	2	..
மதுரை	4	5
திருநெல்வேலி	2	5

CROPS AND MARKET REPORT.

பயிர்களும் மார்க்கெட் நிலவரமும்.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—ஏப்ரல்மீ 16-தேதியிலிருந்து மேமீ 14௳ வரையில் அந்நிய தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி சாமான்களின் விவரம்.

நூலும் முறுக்கு நூலும் 538,654 ராத்தல், காரிகத்துணிகள் 18,54,177 கஜம், சலவைத்துணிகள் 11,02,003 கஜம், இதர தினுசுத்துணிகள் 13,25,889 கஜம். இதேகாலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 20,774 அந்தர் துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துகொள்ளலாம் மே மாஸம் 17-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூலின் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-3 வரையில் இருந்ததாகத் தெரிய வருகிறது. மே மாஸம் 25-ம் தேதியன்று விசாரித்ததில் சென்னப்பட்டணத்தில் சீமைத்துணிகளைக் கேட்பாரில்லையாம். ஆனால் மல்லு தினுசுளும் காரிக தினுசுகள் உபாயமாய் விற்கின்றனவாம். சீமையில் விலை முடுக்காக இருக்கிறது. நூலில் வியாபாரமே இல்லை.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற ஏப்ரல மாஸம் 16-ந்தேதிமுதல் மே மாஸம் 14-ம் தேதி வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 70 அந்தரும், ஆஸ்டிரியா ஹங்கேரியிலிருந்து 1898 அந்தரும், மோரீஸ்தீவிலிருந்து 3389 அந்தரும் ஜாவாதீவிலிருந்து 2 அந்தரும் இறக்குமதியாயின.

சுதேசமித்திரன்.—அநேக முக்கியமான விஷயங்கள் புதுமாதிரியாக நன்கு யெழுதப் பட்டிருக்கும் "பிழைக்கும் வழி" யின் இச்சஞ்சிகைபோல் மற்ற சஞ்சிகைகளும் இவ்வளவு சிறப்புடன் இனிமேலும் நடத்தப்பட்டு வருமெனக்கோருகிறோம்,

Supplement to "Practical Life"
"பிழைக்கும் வழி" க்கு அனுபந்தம்.



நெல் ஒற்றை நாற்று 200க்கு மேல் தூறு கட்டியது.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கோ., எஸ்பிளனேட், மதராஸ்.

G. A. VaidyaRaman & Co., 10, Esplanade, Madras.

(வித்யா விஹாரிணியிலிருந்து).

REGISTERED
30 JUN 1910
MADRAS.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.
EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. — ஸாதாரண௵ ஆனி௴—JUNE 1910. — ஸஞ்சிகை 6. No. 6.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், பிரஜாலக்ஷணம், வித்தியா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்நிய நாடு.
வருஷம் 1க்கு	.. 4 0 0	..	6 0 0
6 மாதத்திற்கு	.. 2 0 0	..	3 0 0
தனிப்பிரதி	.. 0 6 0	..	0 8 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணமும் எங்களுக்கு நேரில் அனுப்பப்படவேண்டும்.

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க மரியாதை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸமும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒரு பாதியைவிட்டு மறுபாதியில் மட்டில் எழுதப்பட வேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
10, எஸ்பிளனேட், மதராஸ்.

Practical Life.

A popular Tamil monthly magazine of general information and instruction devoted mainly to agriculture, trade, industry, citizenship, and popular scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		Foreign. Rs. A. P.
Per annum ...	4 0 0	...	... 6 0 0
" half year ...	2 0 0	...	... 3 0 0
Single copy ...	0 6 0	...	... 0 8 0

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 10, Esplanade, Madras.

EDITORIAL NOTES.
பத்திராதிபர் குறிப்புகள்.

Monthly Exhibitions.

மாஸந்தோறும் பொருட்காக்ஷிகள்.—ஒவ்வொரு மாஸமும் கடைசி சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை தினம் லாஹூரில் ஒரு பொருட்காக்ஷி நடக்கும். அதில் பஞ்சாப், லாஹூர் முதலிய இடங்களில் தொழில்களை விருத்தி செய்வதற்காக பல பொருள்களைச் சேர்த்தும் அவைகளைச் செய்யும் வழிகளைக் காட்டியும் வருவார்கள். நமது தேசத்துக் கைத்தொழில்களைச் செய்வதற்கு அனுகூலமான யந்திரங்களையும் பிறதேசங்களிலிருந்து வரவழைத்து அவைகளை வேலை செய்தும் காண்பிப்பார்கள்.

Agricultural Demonstration Trains.

விவஸாய நிரூபண ரெயில்கள்.—விவஸாயிகளின் தொழிலைப்பற்றிய விஷயங்களை அமெரிக்காவில் போதிப்பதற்காக ஒரு நூதன ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதாவது, ரெயிலில் போய் அங்கங்கே பிரஸங்கங்கள் செய்வதுதான். சில ரெயில் வண்டிகளில் ஜனங்களுக்கு, ப்ரத்யக்ஷமாகக் காண்பிக்கிறதற்காக விளைபொருள்கள், ஆயுதங்கள் முதலானவைகளைப்போடுகிறார்கள். இவைகளோடு அநேக ஜனங்கள் உட்காரும்படியான ஒரு பெரியவண்டியும் இருக்கிறது. இவைகளையெல்லாம் கொண்டுபோய் அங்கங்கே ரயில்வே ஸ்டேஷன்களில் நிறுத்திக் கொண்டு வேண்டுமானால் ஜனங்களை அந்தப் பெரியவண்டியில் உட்காரவைத்து பிரஸங்கம் செய்கிறார்கள்.

ATeachers' Fund.

உபாத்தியாயர்களுக்கான ஒரு நிதி.—உலகத்தில் கோடீஸ்வரரான, மிஸ்டர் ஆன்ட்ரு கார்னகீ என்பவர் அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் 10 முக்கிய பட்டணங்களில் வேலையாயிருக்கும் உபாத்தியாயர்களின் உபயோகத்திற்காக 90 லக்ஷம் ரூபாய் நன் கொடை கொடுத்திருக்கிறார். இதனால் வரும் வரும்படியைக்கொண்டு சில உபாத்தியாயர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் அந்நிய தேசங்களுக்குப்போய் போதனா முறைகளைக் கற்று வரும்படி செய்வார்கள். இதைத் தவிர உபாத்தியாயர்களுக்குப் பிரயோஜனமுள்ள வழிகளிலும் மேலே செல்விய வரும்படியை உபயோகிப்பார்கள்.

Cotton.

பருத்தி—உலகத்தில், அமெரிக்கா கண்டத்தைச் சேர்ந்த ஐக்கிய நாடுகள், ஈஜிப்ட், இந்தியா, ஆகிய இந்த மூன்று தேசங்களில் மட்டுமே விசேஷமாகப் பருத்தி உற்பத்தியாகிறது. உலகத்தில் விளையும் பாதிப் பஞ்சுக்கு மேல் இங்கிலாந்தில் செலவாகி விடுகிறது. மஸ்லீன் முதலான உயர்ந்த துணிகள் ஈஜிப்ட் தேசத்து பருத்தியிலிருந்து உண்டாகின்றன. கேம்ப்ரிக், லாங்க்லாத் முதலியவைகள் அமெரிக்கா தேசத்துப் பருத்தியால் செய்யப்படுகின்றன. மட்ட இனுசுத் துணிகளெல்லாம் இந்தியா தேசத்துப் பருத்தியைக்கொண்டு செய்யப்படுகின்றன.

Cattle Diseases.

மாட்டு வியாதிகள்.—எங்கேயாவது வெகுவாய் மாடுகளுக்கு நோய்காணும் பட்சத்தில் அந்தந்த கிராமாதிகாரிகளும் தாலூகா அதிகாரிகளும்அந்தந்த ஜில்லாவிலிருக்கும்ஸர்க்கார் மாட்டு வைத்தியருக்கு காலதாமதமில்லாமல் எழுதி அவர்களை வரவழைத்துச் சிகிச்சை செய்யச் சொல்லவேண்டும். ஜில்லாவில் மாட்டு வைத்தியர் இல்லாதபக்ஷத்தில் அந்தந்த தாசில்தார், மாட்டு வைத்திய இலாகாத்தலைவருக்கு கடித மூலமாயோ, அல்லது அவஸரமாயிருந்தால், தந்தி மூலமாயோ, தெரிவித்தால் அவர் ஒரு வைத்தியரை அனுப்புவார். ஆகையால் மாடு வைத்திருப்பவர்கள் தங்கள் மாடுகளுக்குக் கோமாரி முதலானவியாதிகள் காணும் பட்சத்தில் அந்தந்த கிராம அதிகாரிகளைக் கொண்டுமேலே எழுதச்சொல்லி மாட்டு வைத்தியர்களை வரவழைத்து மாடுகளைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

Ploughing by Steam Engine.

நீராவி எஞ்சினால் உழுதல்.—அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் நாம் மாடுகளைக்கொண்டு உழுவது போல நீராவி எஞ்சின்களைக்கொண்டு நிலங்களை உழவு செய்கிறார்கள். மாடு, குதிரையாயிருந்தால் அவைகளை இளைப்பாற விட்டு, நிறுத்தி நிறுத்தி வேலை செய்யவேண்டும். எஞ்சின்களை அப்படி நிறுத்தி நிறுத்தி வேலை செய்யாமல் ஓயாமல் இராப்பகல் முழுவதும் வேலை செய்கிறார்கள். எஞ்சின் ஓட்டுகிறவர்களை மட்டும் வேண்டியபடி மாற்றிக் கொள்ளுவார்கள். எஞ்சின்களைக் கொண்டு உழுவதால் 10 நிமிஷத்தில் ஒரு ஏக்கர் உழவாகி விடுகிறது. நிலக்காரர்கள் தனித்தனியே எஞ்சினை வாங்கிவைக்க முடியாது. ஆகையால் சில பேர்கள் எஞ்சின்களை வாங்கி அவைகளைக்கொண்டு வேண்டியவர்களுக்கு உழவு செய்து கொடுத்து அதற்காக ஏக்கருக்கு இவ்வளவென்று கூலியாக வாங்கிக்கொள்ளுகிறார்கள். சாதாரணமாய் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 10-8-0 சார்ஜ் ஆகும். இப்படிக்கு உழவு காலங்களில் தினம் ஒன்றுக்கு 270 ரூபாய் வீதம் எஞ்சின் வைத்திருப்பவர்கள் சம்பாதிக்கிறார்கள்.

Carolina Paddy.

கரோலினா நெல்.—அமெரிக்காவில் கரோலினா என்பதாக ஒரு ஜில்லா இருக்கிறது. இதில் நெல் அதிகமாக விளைகிறது. இந்த நெல் அங்கே சாகுபடி யாவதற்கு மூலத்தை விசாரித்தால் வெகு ஆச்சரியமா யிருக்கிறது. வெகுகாலத்திற்கு முன் லண்டனுக்குப் போக வேண்டிய ஒரு இங்கிலீஷ்க் கப்பல் புயலில் அகப்பட்டு அமெரிக்கா கரையில் போய்த் தங்கிற்று. தங்கின இடத்தில் வுட்வர்ட் என்று ஒருவர் அந்தக்கப்பல் தலைவனுக்கு ஒத்தாசை செய்தார். அதற்காக அந்தக் கப்பல் தலைவன் வுட்வர்ட்டுக்கு ஒரு மூட்டை விதையை இனாமாகக் கொடுத்தார். இந்த மூட்டை விதையை வுட்வர்ட், கரோலினாவுக்குக் கொண்டுபோய் அங்கே தெளித்தார். அது நன்றாய் விளைந்தது. அங்கே உள்ளவர்கள் எல்லாரும் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள். ஆனால் மாகூலை என்ன செய்கிறதென்று தெரியாமல் அதை அறுக்காமலே விட்டு விட்டார்கள். ஆகவே பயிர் வருஷா வருஷம் நூறு வருஷத்திற்கு அழிந்து முளைத்துக் கரோலினா ஜில்லா முழுமையும் தானாகவே பரவிற்று. பிற்பாடுதான் விளையும் நெல்லெல்லாம் பொன் என்று அமெரிக்கர்கள் கண்டறிந்து கொண்டார்கள்.

இதே விதமாக அமெரிக்காவில் பருத்தியைக் கடைந்து அதில் விழும் கொட்டையை என்ன செய்கிறதென்று தெறியாமல் வெகு காலத்துக்கு நெருப்புப் போட்டுப் பொசுக்கி வந்தார்கள். இப்பொழுது சிலகாலமாக அதிலிருந்து எண்ணெய் எடுத்து அதில் வெகு மும்மரமான வியாபாரம் நடந்துவருகிறது. உலகத்தில் எந்தப்பதார்த்தமும் வீண் என்று சொல்லக்கூடாது.

The New Viceroy.

புது வைஸிராய்.—வருகிற நவம்பர் மாஸத்தோடு தற்காலம் நம்முடைய ராஜப்ரதிநிதியாக இருக்கும் மின்டோப் பிரபுவுக்கு அந்த வேலையில் ஐந்து வருஷம் முடிந்து விடுகிறது. ஐந்து வருஷங்களுக்கு மேல் ஸாதாரணமாய் இந்தியா ராஜப்ரதிநிதிகள் வேலையில்இருக்கிற வழக்கமில்லை. ஆகையால் மின்டோப் பிரபு, நவம்பர் மாஸத்தில் வேலையை விட்டுவிடுவார். அவருக்கு பதிலாக வைஸிராயாக ஸர்சார்ல்ஸ் ஹார்டிஞ்சை நம்முடைய சக்ரவர்த்தி நியமித்திருக்கிறார். இவருடைய பாட்டனாரும் இந்தியாவில் வைஸிராயாக இருந்தார். ஆகையால் இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கிற வைஸிராய் இந்தியாவுக்குப் புதிதல்ல. இவருடைய முன்னோர்கள் இந்தியாவில் இருந்து பேரும் புகழும் பெற்றவர்கள். ஸர்சார்ல்ஸ் ஹார்டிஞ்சு அவருடைய பிதாவுக்கு இரண்டாவது புத்திரர். இவர் 1858-ம் வருஷத்தில் பிறந்தார். 1880-ம் வருஷத்தில் மந்திரி வேலையில் அமர்ந்தார். இவர் பல தேசங்களில் பல வேலைகள் பார்த்து, பார்த்த வேலைகளிலெல்லாம் சாமர்த்தியசாலியென்ற பெயர் பெற்றவர். பர்ஷியாவில்கூட இவர் லிகேஷன் செக்ரட்டெரி வேலை பார்த்தார். அந்தச்சமயத்தில்தான் இவருக்கு மகமதியருடைய மதக்கோட்பாடுகளைப்பற்றியும் கிரந்தங்களைப்பற்றியும் நன்றாகத் தெரியவந்தது. இவர் மகமதியருக்கு அனுகூலமாயிருப்பாரென்றும் சொல்லப்படுகிறது. ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் நடந்த காலத்தில் இவர் ருஷியாவில் இங்கிலீஷ் மந்திரியாக இருந்து வெகு திறமையாகக் காரியாதிகளைப் பார்த்து வந்தார். காலஞ்சென்ற நமது சக்ரவர்த்தியோடு இவர் பல இடங்களுக்குப் பயணஞ் சென்று அவருடைய கொள்கைகளுடன் நன்

றாய்ப்பழகினவர். இவர் வைஸிராயாக இருக்குங்காலத்தில் இந்தியாவுக்கு க்ஷேமமும் விர்த்தியும் உண்டாகுமென்று நம்புகிறோம்.

Agricultural Associations.

விவஸாய சங்கங்கள்.—சமீபத்தில் நடந்த கும்பகோணம் விவஸாய சங்கத்தின் மீட்டிங் ஒன்றில் தென் டிவிஷன் விவஸாய டிப்டி டைரெக்டராகிய எச். ஸி. ஸாம்ஸன் துரை அவர்கள் விவஸாய சங்கங்களைப்பற்றி ஒரு உபந்யாஸம் செய்தார். விவசாய சங்கத்தார் ஏதேனும் ஒரு புதுமுறை அனுஷ்டிக்கும்படி யாருக்காகிலும் சொன்னால் அந்த முறையை அந்தச் சங்கத்தார் தாங்களே பரீக்ஷித்துப் பார்த்து அது நல்ல முறைதான் என்று அறிந்திருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால்தான் புதுமுறையிலுள்ள நல இளப்பங்கள் தெரியும். ஆட்சேபணைசொல்லுகிறவர்களுக்கு சமாதானமும் சொல்லமுடியும்.

இரண்டாவது, விவஸாய சங்கங்கள் மெம்பர்களுக்கு வேண்டிய எரு முதலியவைகளை சரஸமான விலைக்கு வரவழைத்துக் கொடுக்கலாம். ஒவ்வொரு மெம்பரும் தனித் தனியே சில்லரை சில்லரையாய் வாங்கினால் விலை ஜாஸ்தி கொடுக்க வேண்டியிருக்கும். அப்படிக்கில்லாமல் எரு வேண்டிய மெம்பர்கள் எல்லாரும் ஒவ்வொருவருக்கும் இவ்வளவு வேண்டிய தென்று சங்கத்துக் காரியதரிசிக்குத் தெரியப்படுத்திவிட்டால் அவர் எழுதி மொத்தமாய் எருவை வரவழைத்து மெம்பர்களுக்குப் பகிர்ந்துக் கொடுத்து விடுவார். மொத்தமாய் வாங்குவதில்ரொம்பலாபம் உண்டு. உதாரணமாக தென்னாற்காடு ஜில்லாவில் சென்ற வருஷத்தில் பாரம் ஒன்றுக்கு 16-ரூபாய் வீதம் கொடுத்து ஜனங்கள் முத்துக்கொட்டைப் பிண்ணாக்கு வாங்கி கரும்புக்கு எருவாகப் போட்டார்கள். இதே பிண்ணாக்கை ஒரு ஐரோப்பிய வர்த்தகர் ஜாஸ்தியாய்வாங்கினபடியால் பாரம் ஒன்றுக்கு ரூபாய் 12 வீதந்தான் கொடுத்தார். தவிர, பிண்ணாக்கோடு மண்ணையும் கல்லையும் கலந்து விற்றுவிடுவார்கள். மொத்தமாய் வாங்கும் பிண்ணாக்கை சோதித்துப் பார்த்துவாங்கலாம். சங்கத்தின் மெம்பர்களில் பலபேர்கள் நெல் ஒற்றை நாற்று நடுகிறார்கள். இதற்கு, ஒற்றை நாற்றாய் நட்டு அதிலிருந்து எடுத்த விதை சிரேஷ்டமானது. அப்படிப்பட்ட விதை வேண்டியவர்கள் சங்கத்துக்கு முன்னமேயே தெரிவித்தால் சங்கத்தார் சுலபமான விலைக்கு நல்ல விதையைத் தருவித்துக் கொடுப்பார்கள். இதே மாதிரியாக உரத்துக்கு வேண்டிய பசுந்தாள் பயிர்களைச்சாகுபடி செய்வதற்கு வேண்டிய நல்ல விதைகளை வரவழைக்கலாம். கலப்பைகள் முதலானவைகளையும் சேகரித்துக் கொடுக்கக் கூடும். இப்படியாக விவஸாய சங்கங்களால் பலவித நன்மைகள் உண்டென்று ஸாம்ஸன் துரை எடுத்துக் காட்டினார்.

Sun-flower.

சூரிய காந்திப்பூ.—ருஷியா, ஜர்மனி, இட்டலி, ப்ரான்ஸ், சீனா, டார்ட்டரி, ஐக்கியநாடுகள், இவைகளில் இதை ஏராளமாய்ப் பயிர் செய்கிறார்கள்.

இது பிரதிவருஷமும் சாகுபடியாக வேண்டிய பயிர். இதன் புஷ்பம் பெரிதாயும், தட்டையாயும், வட்டமாயுமிருக்கும்.

இதன் விதைமுக்கியமானது. இதை பச்சையாகவும், அவித்தும் தின்னலாம். இதில் ஒருவகை எண்ணெயும் வடிக்கலாம். இதன் பிண்ணாக்கு கால் நடைகளுக்கு சிரேஷ்டமான உணவாகும். குதிரைகளுக்கும் சமயோஜித மருந்து.

இதன் இலைகளும் தண்டும் உணவுக்கு இசைந்தவைகள். சேர்த்தியாய்ப் பக்குவப்படுத்தினால் அவைகள் அதிக புஷ்டிகரமானவைகள். இதன் தண்டிலிருந்து நார் எடுக்கலாம். இதைக் காகிதம் செய்கிறதற்கு உபயோகிக்கிறார்கள். ஆனால் இந்த நார் பல ஹீனமாயும் அறுந்து போகக்கூடியதாயு மிருப்பதால் கயிறு திரிக்கவும், நெய்யவும் உபயோகப்படாது. இதை எரித்தால் சாம்பலில் போட்டாஷ் என்னும் உப்பை அதிகமாய்க்காணலாம்.

சூரிய காந்தி விதைகளில் சில வெள்ளை நிறமாயும், சில கறுப்பாயும், சில கோடுகள் உள்ளனவாயு மிருக்கும். வெள்ளை விதையில் ஜாஸ்தியாக எண்ணெய் உண்டு. கறுப்புவிதை ருசியாய் தின்ன சிலாக்கியமா யிருக்கும். கோடு வாய்ந்தது தின்னவும், எண்ணெய் எடுக்கவும் உபயோக முள்ளது.

சூரியகாந்தி விதையைப் பக்ஷிகள் தின்று நன்றாய் வளர்கின்றன இதைத்தின்பதினால் பக்ஷிகள் கொழுமையாய்இருப்பதோடு, அதிகமான முட்டை இடுகின்றன.

சூரிய காந்தி எண்ணெய் தித்திப்பாயும் ருசியாயு மிருப்பதால் அதைப் பொரியலிலும் மற்றவித சமையலிலும் உபயோகப்படுத்திவருகிறார்கள். இதை ருஷியாவில் ஒலிவ் எண்ணெயோடாவது அல்லது தனிமையாகவாவது வீட்டில் எல்லாக் காரியங்களுக்கும் உபயோகிக்கிறார்கள். அதை சோப்பு செய்யவும், வார்னிஷ்போடவும், விளக்கெரிக்கவும், உபயோகிக்கலாம். மற்ற எண்ணெய்களைப்பார்க்கிலும் இது சோப்பு செய்வதற்கு சிலாக்கியமானது.

சூரியகாந்திச் செடியையும் இலையையும் எருவாக உபயோகிக்காலாம்.

சூரியகாந்திப் பூவில் தேனும், மெழுகும் ஜாஸ்தியாக இருக்கிறது. இதில் ஒரு வகை சாயப்பொருளு மிருக்கிறது.

Hostels for Students.

பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு ஹோஸ்டல்கள்.—பம்பாயில் வர்த்தகரான லக்மிதாஸ் பாய்மூஜி ராவ்ஜி சட்டியா என்பவர் தன்னுடைய சகோதரர் லால்ஜி என்பவரின் ஞாபகச் சின்னமாக டஜ்பால் ஸ்கூலுக்கு லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். இந்தப் பணத்தின் வரும்படியைக் கொண்டு ஏற்கனவே சாப்பிடும் பிள்ளைகளைவிட ஜாஸ்தி ஸ்கூல் பிள்ளைகளுக்கு இனாமாக சாப்பாடு போடுவார்கள்.

இதேமாதிரியாக சென்னப்பட்டணம் க்ரிஸ்டியன் காலேஜில், வெகுநாளாய் உபாத்தியாயராயிருந்து இறந்துபோன, ரங்கய்ய செட்டியார் குமாரர்களாகிய எஸ். ராமனுஜம் செட்டியாரும், எஸ். ராஜமன்னார் செட்டியாரும், தங்கள் தகப்பனார் அந்த காலேஜில் இருந்ததற்கு ஞாபகச் சின்னமாக 25,000 ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பணத்தில் பெரும் பாகம், வைசியப் பிள்ளைகள் சாப்பிடுவதற்காக ஒரு ஹோஸ்டல் ஏற்படுத்துவதில் செலவழிக்கப்படும். பாக்கித் தொகையின் வரும்படியைக்கொண்டு, வருஷா வருஷம் அந்தக் காலேஜில் படித்துத் தேறும் சில கெட்டிக்காரப் பிள்ளைகளுக்கு பரிசுகள் கொடுப்பார்களாம்.

காலேஜ் முதலிய உயர்தரப்படிப்புக்கு எல்லா இடங்களிலும் ஸௌகரியம் இல்லாததால் பல இடங்களில் ஹைஸ்கூல்களில் படித்துத் தேறிய பிள்ளைகள் ராஜதானியில் சில பெரிய பட்டணங்களில் மட்டும் உள்ள காலேஜ்களில் வந்து சேர்ந்து படிக்கும்படி நேரிடுகிறது. இந்த பெரிய பட்டணங்களில் அந்தந்தப் பையன்களின் தாய் தகப்பன்மார்கள் கூடவந்திருந்து அவரவர்கள் குழந்தைகளின் உடம்புக்குத் தகுந்தபடி போஷிப்பு செய்வது

கூடாத காரியம். ஏனென்றால் அபாரமாகச் செலவாவதோடு தகப்பன் தன் தொழிலைச் செய்யவோ அல்லது நிலத்தைப் பயிரிடவோ முடியாமல் போய்விடும் இவை போன்ற காரணங்களினால் வாசிக்கும் பிள்ளைகளை பட்டணங்களில் ஹோட்டல்களில் சாப்பிடும்படி விட்டுவிடுகிறார்கள். ஹோட்டல்களில் சாப்பிட்டுவருகிற பிள்ளைகள் படும் கஷ்டம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. சில ஹோட்டல்களில் 100 அல்லது 150 பிள்ளைகள் சாப்பிடுகிறார்கள். நெல்லும் கல்லும் கலந்த அரிசிச் சாதமும், வேகாத கறியும், எச்சில்மேல் இலையும் போட்டே பையன்கள் சாப்பிடுகிறார்கள், ஏன் நல்ல அரிசியை சமைப்பதில்லை என்றால் தினம் வேளையொன்றுக்கு 150 பேருக்கு ஸமாராதனை செய்கிற ஹோட்டல்காரனுக்கு அரிசியிலுள்ள நெல்லையும் கல்லையும் குத்தித்தூற்ற ஸாத்தியமாகுமா? கறியைஏன் நன்றாய் வேகவைக்கிறதில்லையென்றால் அப்படிச்செய்தால் ஒவ்வொரு பையனும் ஒரு வீசை தின்பானும். அது ஹோட்டல்காரனுக்குக் கட்டாது. ஏன் எச்சில் மேல் இலைபோட்டுச் சாப்பிடவேணுமென்றால், 100, அல்லது 150 பேர்கள் வெவ்வேறு இடத்தில் உட்கார்ந்து சாப்பிடுவதாயிருந்தால் எவ்வளவு இடம் வேணும்? அதற்குப் பட்டணங்களில் எவ்வளவு வாடகை கொடுக்கவேணும்? அதுவும் ஹோட்டல்காரனுக்குக் கட்டாது. இவைகளெல்லாம் விகடமாக எழுதுகிறவைகளல்ல. சென்னப்பட்டணத்தில் ஒருதடவை இரண்டு நாள் இரண்டு ஹோட்டல்களில் சாப்பிடும்படி நேர்ந்தபடியால் இந்த வைபோகங்களெல்லாம் தெரியவந்தன. தற்காலம் படிக்கும் பிள்ளைகளுக்கு வேண்டிய ஸௌகரியங்களில் நல்ல சாப்பாடு போடும் இடம் முக்கியமானது. இப்படிப்பட்ட இடங்களை லாப நஷ்டங்களை உத்தேசித்து நடத்தக்கூடாது. ஆகையால் இந்த விஷயத்தில் தனவான்கள் உதவி தேவை.

THE EMPEROR'S MESSAGE.

சக்ரவர்த்தியின் செய்தி.

மாட்சிமைதங்கிய நமது சக்ரவர்த்தியாகிய ஐந்தாவது ஜார்ஜ் இந்துதேசத்து மன்னர்களுக்கும் பிரஜைகளுக்கும் அடியிற்கண்ட நிருபத்தைக் களிகூர்ந்து அனுப்பியிருக்கிறார்:—

' இந்துதேசத்து மன்னர்களுக்கும் பிரஜைகளுக்கும் தெரிவிப்பது யாதெனில்,—என்னுடைய அருமையான அன்புக்கு இடனாகிய என் தந்தையார், யாவரும் துயரடையும்படி எவரும் எதிர்பாராத வண்ணம் தேகவியோகமடைந்ததனால், பெருமை வாய்ந்ததும் புராதனமுமான வம்சத்தின் வார்ஸாக எனக்குக் கிடைத்திருக்கும் சிம்மாசனத்தில் அரசனாகவும் சக்ரவர்த்தியாகவும் நான் ஏறலானேன். என் இந்திய ராஜ்யங்களிலுள்ள மன்னர்களுக்கும் ஆளும் அதிபதிகளுக்கும் மற்றெல்லாக் குடிஜனங்களுக்கும் நான் வாழ்த்து கூறுகிறேன். இந்தியாவிலுள்ள வெவ்வேறான சகல ஜாதியார்களும் வகுப்பார்களும் மதஸ்தர்களும் ஏகாதிபத்ய மகுடத்தினிடத்தில் தங்களுக்குள்ள ராஜ பக்தியையும், அம்மகுடத்தைத் தரிப்பவர்களிடத்தில் தங்களுக்கு நேரேயுள்ள விசுவாசத்தையும் உருக்கமாகவும் தாராளமாகவும் இச்சமயத்தில் வெளிப்படுத்தியிருப்பதற்கு நான் அவர்களுக்கு மனப் பூர்வமாக நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

" பக்தியுடன் ஞாபகத்தில்வைத்துப் போற்றுதற்குரிய விக்டோரியா மகாராணியாரவர்கள் 1858-ம்௵த்தில் இந்திய ராஜாங்கத்தை நேரே ஏற்றுக்கொண்ட காலையில், அவருடைய இந்தியக் குடிகளுக்கும் சார்பு மன்னர்களுக்கும் ராஜ பத்திரிகை அனுப்பினர்; ஷை சக்ரவர்த்தினியாருடைய மாட்சிமைதங்கிய புத்திரரும், கௌரவத்துக்கும் அன்புக்குமுரிய பெயருடன் விளங்கியவருமான என் தந்தையாரும் மிக்க பிரசித்தி பெற்ற அதே சம்பவத்தைக்குறித்து ஐம்பது வருஷத்துக்குப்பின் உங்களுக்கு ராஜ பத்திரிகை அனுப்பி அந்த சம்பவத்தைக்கொண்டாடினார். இந்த பத்திரிகைகள் ஸார்வபௌம ஆதிபத்தியத்தின் பெருமையும் கருணையும் வாய்ந்த குணவிசேஷத்துக்கு அறிகுறியான சாஸனங்களாகும்; இனி என் வாழ்நாள் முழுவதும் நான் அதற்கு அனுசரணையாகவே உண்மையாக நடந்துகொள்வேன்.

" காலஞ்சென்ற மாட்சிமைதங்கிய மகாராஜா அவர்களின் திருவுள்ளத்தின்படியும் அவர்கள் தாமாகவே காட்டிய நிதரிசனத்தைப் பின்பற்றியும், நான் என் பட்ட மகிஷி சகிதமாக ஐந்து வருஷங்களுக்கு முன்னே இந்தியாவை வந்து பார்த்தேன். நாங்கள் விரிவான அந்தப் பிரதேச முழுவதிலும் சரித்திர பூர்வகமாகத் தெரிந்திருக்கும் பெரிய ராஜ்யங்களையும், எங்களுடைய நாகரிகத்தைவிட புராதனமாயிருக்கும் நாகரிகத்தைக் காட்டும் ஞாபகச் சின்னங்களையும், புராதன ஆசாரங்களையும், வாழ்க்கை வழிகளையும், சுதேச அதிபதிகளையும், பிரஜைகளையும், நகரங்களையும், பட்டணங்களையும், கிராமங்களையும் நேரில் தெரிந்துகொண்டோம். ஆச்சரியகரமான அந்தப் பிரயாணத்தினால் எங்கள் மனதில் கூர்மையாய்ப் பதிந்துள்ள எண்ணங்களும் அன்புக்குரிய சம்பந்தங்களும் எங்கள் மனதினின்றும் ஒருபோதும் நீங்கவும் மாட்டா, மங்கிப்போகவும் மாட்டா.

" இனி நான் செய்யவேண்டியதாயிருக்கும் உயர்வும் பிரயாசமுமான காரியங்களில் நீங்கள் கடமையையுணர்ந்து, தீவிரமாய் ஒத்துழைப்பீர்களென்று நான் உறுதியாய் நம்புகிறேன்; மேலும் இந்தியாவின் க்ஷேமத்தில் நீங்கள் மனப்பூர்வமாய் அனுதாபங்காட்டச் சிறிதும் தாமதமில்லாமல் முன்வருவீர்களென்றும் நம்பியிருக்கிறேன். இதுவே எக்காலத்திலும் என் அரசாட்சிக்கு உற்சாகத்தைத் தருவதாகும்."

COMPANY LEGISLATION

BY

THE EDITOR.

கம்பெனிச் சட்டம்.

பல பேர்கள் சேர்ந்து பங்காக முதல் போட்டு வியாபாரமோ கைத்தொழிலோ நடத்துவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்படிப்பட்டக் கூட்டத்திற்குக் கம்பெனி என்று பெயர். இப்படிப்பட்ட கம்பெனியைச் சேர்ந்த வேலைகளையெல்லாம் எல்லாப்பங்காளிகளும் கூடி நடத்துவது அசாத்தியம். ஆதலால், சில பங்காளிகளை மட்டும் தெரிந்தெடுத்து கம்பெனி காரியங்களை நடத்துவது வழக்கம். இவர்களுக்கு 'டைரெக்டர்கள்' என்று பெயர். ஒரு கம்பெனி, லாபம் சம்பாதிப்பதும் நஷ்டப்படுவதும் சாதாரணமாய் டைரெக்டர்கள் எடுத்துக்கொள்ளும் சிரத்தையைப் பொறுத்தது. பல கம்பெனிகளில் ஒருவர் டைரெக்டராக இருக்கும்பக்ஷத்தில், ஒரே கம்பெனிக்கு டைரெக்டராக இருந்தால் அந்தக் கம்பெனி விஷயங்களில் எவ்வளவு ஸாவகாசமும் சிரத்தையும் செலுத்தலாமோ அதைப்போலவே பல கம்பெனிகளில் ஒருவரே டைரெக்டராக இருந்தால் அந்தக் கம்பெனிகள் ஒவ்வொன்றிலும் செலுத்த முடியாது. ஆதலால், ஒருவர் பல கம்பெனிகளுக்கு டைரெக்டராக இருப்பது கம்பெனிகளுக்கு நல்லதல்ல. இதை உத்தேசித்து ஜப்பானிலுள்ள ஒரு பிரபலமான பாரிஸ்டராகிய மத்ஸுதாரு என்பவர் கம்பெனி டைரெக்டர்களைப் பற்றி ஒரு பில் அதாவது மசோதா கொண்டுவந்திருக்கிறார். இந்த பில் பாஸாகி சட்டமாகும் பக்ஷத்தில் ஒருவர் 3 கம்பெனிகளுக்கு மேல் டைரெக்டராகவாவது கணக்கு

[illegible] பரிசோதனை செய்யும் ஆடிட்டர்களாகவாவது இருக்க முடியாது. கம்பெனியின் ரிபோர்ட்டில் கையெழுத்துப்போடும் ஒவ்வொருவரும் டைரெக்டர்களுக்கு என்ன பொறுப்பு உண்டோ அதற்குட்படுவார்கள்.

சில கம்பெனிகளில் ஒருவரையே டைரெக்டராக நியமித்தாவது, அல்லது பல டைரெக்டர்களிருந்தால் அவர்களில் ஒருவரைக் கொண்டாவது கம்பெனி விஷயங்களை நடப்பிவிப்பதுண்டு. இப்படி நியமிக்கப்பட்டவருக்கு மானேஜிங் டைரெக்டரென்று பெயர்.

மேல் சொல்லிய புது பில்லின் பிரகாரம் ஒருவர் ஒரு கம்பெனிக்குமேல் மானேஜிங் டைரெக்டராக இருக்க முடியாது. டைரெக்டர்களும், ஆடிட்டர்களும் வேறு டைரெக்டர்கள் ஆடிடர்கள் இவர்களை நியமிக்க 'வோட்' செய்யவும் கூடாது. டைரெக்டர்களும், ஆடிடர்களும் கம்பெனியின் பங்குகளை ஏராளமாக லாபமடிப்பதற்காக வாங்கவும் விற்கவும் கூடாது. ஒரு கம்பெனியிலிருந்து கெட்ட நடவடிக்கைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட டைரெக்டராவது, ஆடிடர்களாவது வேறு கம்பெனிகளில் அப்படிப்பட்ட உத்தியோகங்களை வகிக்க முடியாதாம்.

நம்முடைய தேசத்து கைத்தொழில்களும் வியாபாரமும் முன்னேறவேண்டுமானால் நம்மவர்கள் பலபேர்களாகச் சேர்ந்து பங்குகள் போட்டுக் கம்பெனிகளை உண்டாக்கவேணும் என்று சொல்வது ஸகஜமாயிருக்கிறது. இது விஷயமாய் 1898-ம் வருஷம் முதல் 1909-ம் வருஷம் வரையில் உள்ள 12 வருஷங்களில் இங்கிலாந்தில் எவ்வளவு ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகள் இருந்தன, அவைகளில் வசூலான மூலதிரவியம் எவ்வளவு, என்னும் விஷயங்கள் கவனிக்கத்தக்கன. அவைவருமாறு :—

		கம்பெனிகளின் சங்கியை	வசூலான மூல திரவியம் பவுன்.
ஏப்பிரல்மீ	1898	25,267	1,383,593,162
,,	1899	27,969	1,512,098,098
,,	1900	29,730	1,622,641,416
,,	1901	31,429	1,725.940,512
,,	1902	33,259	1,805,141,165
,,	1903	35,965	1,849,455,005
,,	1904	37,287	1.899,648,675
,,	1905	39,616	1,954,337,185
,,	1906	40,995	2,003,392,001
,,	1907	43,038	2,061,010,586
,,	1908	45.304	2,123,492,957
,,	1909	46,474	2,163,132,789

அதாவது தொடர்ச்சியாய் வருஷா வருஷம் கம்பெனிகளும் அவைகளின் வசூலான முதலும் ஏறிக்கொண்டே வந்திருக்கின்றன. நம்முடைய தேசத்தில் எப்படி இருந்திருக்கிறது பார்ப்போம்

		கம்பெனியின் சங்கியை.	வசூலான மூலதிரவியம் பவுன்.
ஏப்பிரல்மீ	1899	1417	23,213,516
,,	1900	1340	23,105,998
,,	1901	1366	24,183,775
,,	1902	1405	24.932,131
,,	1903	1440	25.384,713
,,	1904	1488	25,824,448
,,	1905	1550	26,848.259
,,	1906	1728	27,890,155
,,	1907	1922	29,512,583
,,	1908	2061	33,875.929

இங்கிலாந்தில் 12 வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட தற்காலத்தில் இந்தக் கம்பெனிகளும் மூலதிரவியமும் ஏறக்குறைய இரண்டுபங்கு இருக்கின்றன. ஆனால் இந்தியாவிலோ ஒன்றரைப் பங்குதான் ஆகி இருக்கிறது. ஆகையினாலே நாம் இந்தியாவில் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகள் ஏற்படுத்த எடுத்துக்கொள்ளும் சிரத்தையைக்காட்டிலும் இரட்டிப்பு சிரத்தை அதிகமாக இங்கிலாந்தில் எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

OFFICE OF THE ... OF BOOKS, REGISTERED ... 1910 MADRAS.

SUN HEMP.

BY

C. NARAYANA AIYAR, D. A.

Agricultural Inspector.

சணல்.

பசுந்தாள் எரு என்று சொன்ன மாத்திரத்தில் அது இன்னதென்று எல்லாருக்கும் எளிதில் தெரியும். அதாவது, பசுந்தழைகளை எருவாக உபயோகப்படும்படி பூமியில் சேர்த்து உழுது விடுவதுதான். இப்படித் தழைகளை பூமியில் சேர்ப்பதின் நோக்கம் என்னவென்றால் பூமியில் குறைவாயிருக்கும் இந்திரிய வஸ்துவை அதிகரிக்கத்தான். இந்திரிய வஸ்துக்களில் முக்கியமாய் நைட்ரஜன் என்று சொல்லப்பட்ட உப்புவாயு பயிருக்கு உதவுகிறது.

நான் தஞ்சாவூர் ஜில்லாவில் கிராமந்தோறும் சுற்றிப்பார்த்தபோது எனக்குச்சில விஷயங்கள் தென்பட்டன. ஷை ஜில்லாவில் அநேக பாகங்களில் சாதாரணமாய்க் கிடைக்கும் மாசூல் மற்ற ஜில்லாக்களில் கிடைப்பதைவிட குறைவாயிருப்பதையும், தழை எந்தெந்த இடங்களில் உபயோகப்பட்டு வந்ததோ அவ்விடங்களிலெல்லாம் நஞ்சைகள் நல்ல மாசூலைக் கொடுத்து வருவதையும், அதே நஞ்சைகளுக்குத் தழைபோடத் தவறினால் கண்டுமுதல் குறைகிறதையும் கண்டேன். இவைகளிலிருந்து சாதாரணமாய் தஞ்சை ஜில்லா நிலங்களில் மேலே சொன்ன நைட்ரஜன் குறைவாயிருப்பதாகவும், அந்த நைட்ரஜனைக் கொடுக்கக்கூடிய எருவை பூமிக்குக் கொடுக்கும் பக்ஷத்தில் நல்லமாசூலை அடையலாமெனவும் ஏற்படுகிறது.

தொழு எருவை (கால்நடைகளின் மூத்திரத்தையும் சாணத்தையும்) சரியான விதமாய்ச் சேகரிக்கும்பக்ஷத்தில் அதே போதுமான நைட்ரஜனைக் கொடுத்துவிடும். தற்காலத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் அனுஷ்டானத்திலிருக்கிற வழக்கப்படி சேர்க்கப்படும் தொழு எரு கேவலமானதாகவும், தேவையான அளவுக்கு ரொம்பவும் குறைவாகவும் இருக்கிறது.

தவிர, காடுகள் இல்லாத காரணத்தை உத்தேசித்து மாட்டுச்சாணத்தின் பெரும்பாகத்தை அடுப்பெரிக்க உபயோகப்படுத்த அவசியமாயிருக்கிறது. அதே காரணத்தை உத்தேசித்தே தழைகள் கிடைப்பதும் அரிதாகயிருக்கிறது. இது நிற்க, தழை எருச் சேர்க்கவேண்டுமானால் அதை மற்ற இடங்களிலிருந்து கொண்டுவரவேண்டும், அல்லது தழைகளை நஞ்சை புஞ்சைகளிலேயே உண்டாக்கிக்கொள்ளவேண்டும். காடுகள் இல்லாத காரணத்தை உத்தேசித்தே மற்ற இடங்களிலிருந்து தழைகள் கொண்டுவருவது அசாத்தியமாயிருக்கிறது. தவிர நஞ்சை பெருத்த நீராரம்பத்தில் தழைகளை உற்பத்தி செய்ய புஞ்சைகளும் சொல்பம். ஆகையால் தழைகளை நஞ்சையிலேயே உற்பத்தி செய்து அந்தப் பயிரை மடித்து உழுதுவிடுவதுதான் சிலாக்கியமென்றும், சொற்ப பணச்செலவில் முடியக்கூடியதென்றும் தோன்றுகிறது. அப்படிச்செய்ய சிலாக்கியமான பயிர்தினுசுகள் எவை என்று பார்க்கும்போது முக்கியமாய் லெக்யூம்ஸ் என்று சொல்லப்படும் கோதுப் பயிர் தினுசைச்சேர்ந்த கொள்ளு, காராமணி பயறு, அவரை, துவரை, கொத்தவரை, மொச்சை, கடலை, அவுரி, கொழுஞ்சி (காவாளை அல்லது காட்டவுரி) சணல், தகரை, இப்போர்க்கொத்த செடிகளே சிலாக்கியமென்று விவசாய சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்தவர்கள் சொல்லுவார்கள். ஏனென்றால் மேலே சொல்

லப்பட்ட செடிகள், மற்றச்செடி வகைகளுக்கு உதவிமல் ஆகாயத்தில் காற்று ரூபமாயிருக்கும் உப்புவாயுவை கிரகித்து தம்முடைய வேரில் சேர்த்துவைக்கின்றன. திருஷ்டாந்தமாக மேலே சொன்ன செடி வகைகளில் ஏதாவதொன்றைப் பிடுங்கிச் சோதித்துப் பார்த்தால் அவைகளின் வேரில் சிறு உருண்டைகளைக் காணலாம். இந்தக்கழலைகளை பூதக்கண்ணாடியால் சோதித்துப் பார்த்தவர்கள், அவைகளில் சிறு அணுக்கிருமிகள் இருப்பதாகவும், அவைகள் ஜீவிப்பதற்கு ஆகாசத்திலிருந்து கிரகிக்கப்பட்ட உப்புவாயு அவசியமென்றும் சொல்லுகிறார்கள். ஆகையால்தான் மேலேசொன்ன பயிர்கள் அழிக்கப்பட்டால், பின்வரும் பயிருக்கு உபயோகப்படும்படி நைட்ராஜன் என்று சொல்லப்பட்ட முக்கியமான பயிருணவு பூமியில் சுவறுகின்றது.

தஞ்சை ஜில்லா நஞ்சை நிலங்களின் அபிவிர்த்தியை உத்தேசித்து வயல்களிலேயே ஷை தழைகளை உற்பத்தி செய்யும்பொருட்டு விவசாய இலாகாவில் சென்ற டிசம்பர்௴ முதல் என்னிடத்தில் ஏராளமான கொழுஞ்சி, அவுரி, சணல் முதலிய விதைகள் வெளியூர்களிலிருந்து வரவழைக்கப்பட்டு, கேட்பவர்களுக்குக் கொள்முதலுக்கு கொடுக்கும்படிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

மேலேசொல்லப்பட்ட விதைகளில் சணலைப் பயிர் செய்வதில் எனக்கு உண்டாயிருக்கும் அனுபவத்தைச் சொல்லுகிறேன்.

சணல், சணப்பு அல்லது சடம்பு என்று சொல்லக்கூடிய செடி மேலே சொன்ன கொழுஞ்சி, அவுரிமுதலியவற்றைப்போலவே, கோதுப்பயிர் வகையைச்சேர்ந்தது. அது வட ஜில்லாக்களிலும் திருநெல்வேலி முதலிய இடங்களிலும் நாருக்காக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கிருஷ்ணா ஜில்லாவில் அதைப்பயிரிட்டு புஷ்பிக்கும் சமயத்தில் வெட்டி பசுந்தாள் எருவுக்காகவும், உலர்த்தி மாட்டுக்குத் தீவனமாகவும் உபயோகிக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லா திருத்துறைப்பூண்டி தாலூகாவில் சிலகிராமங்களிலும் இன்னும் மற்ற தாலூகாக்களில் சில கிராமங்களிலும் அது அதன் நாருக்காக சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. ஆனால் அதைப் பசுந்தாள் எருவாக உபயோகப் படுத்தலாமென்பதை அநேகர் அறிந்திருக்கமாட்டார்கள்.

இது கொழுஞ்சியையும் அவுரியையும் விட சொல்ப காலத்தில் ஜாஸ்தியான தழையைக் கொடுப்பதால் அவ்விரண்டையும்விட சிலாக்கியமானதென்று சொல்லவேண்டும். தவிர மணல்சாரியான நிலத்திலும் ஜாஸ்தியாய் வெடிப்புக்காணக்கூடிய களிமண்ணிலும் நன்றாய்ப் பயிராகிறது. அதற்கு ஜாஸ்தியான தண்ணீர் வேண்டியதில்லை.

கிருஷ்ணா ஜில்லாவில் நெற்பயிர் அறுவடையாவதற்குமுன் தஞ்சாவூர் ஜில்லாவில் பயறு தெளிப்பதுபோலவே சணல் விதையை தரை மெழுகு பதமாயிருக்கும்போது தெளித்து விடுகிறார்கள். பூமியின் ஈரத்தைக்கொண்டு பயிராகி 1, 1½ மாதத்தில் 4, 5 அடி உயரம் வளர்ந்துவிடுகிறது. புஷ்பிக்கும் சமயத்தில் அதை வெட்டி உலர்த்தி மாட்டுத்தீவனமாக செய்து வைத்துக்கொள்ளுகிறார்கள். பூமியில் விடப்பட்ட தாள்கள் மறுசாகுபடிக்கு உரமாகின்றன. அதேமாதிரி தஞ்சாவூர் ஜில்லாவிலும் விதைக்கலாம். 1½ மாதத்தில் பயிரை வெட்டும்போது தகுதியான கோடை மழை பெய்தால் வெட்டப்பட்ட தாள்கள் மறுபடியும் தழைந்துவரும். அதை பின் சாகுபடிக்குப் பசுந்தாள் எருவாக உபயோகப்படுத்தலாம்.

நெல் அறுவடையானபிறகு நஞ்சையில் ஈரமிருந்தால் நிலத்தை 1 அல்லது 2 சால் உழுதுபோட்டுவைத்து தகுந்த சமயத்தில் கோடைமழை பெய்யுமானால் ஷை சணலைத் தெளித்துவிடலாம். சுமார் 1½ முதல் 2 மாதத்தில் 5 முதல் 7 அடி வரையில் வளரும். நிலத்தைச் சேறு செய்யும்போது அதை வெட்டி உரமாக்கலாம். மேலே சொன்னபடி உழவுசெய்ய பூமியில் ஈரமில்லாமல் போனால், முதல் மழை பெய்யும் வரையில் காத்திருந்து உழவு செய்து மறுமழையில் விதைக்கலாம். நெல் அறுப்பான 2 மாதத்திற்குள் சணல் தெளிபடுமானால், அது சுமார் 2 மாதம் வளர்ந்து அடுத்த சாகுபடியில் குறுவை நாற்றங்கால் வயல்களுக்கும், சம்பா நாற்றங்காலுக்கும், வெட்டி உரமாக்குவதற்கு பக்குவமான ஸ்திதியிலிருக்கும்.

அவ்விதம் விதைக்க சௌகர்யப்படாத பட்சத்தில் வயல்களைக் கோடை உழவுசெய்து வைத்திருந்து காவேரியில் ஜலம் வந்தவுடன், புழுதியில் விதையைத்தெளித்து, மறுசால் அடித்து ஷை புழுதி நனைவதற்கு எவ்வளவு ஜலம் வேண்டுமோ அவ்வளவு ஜலத்தை சீராகக்கட்டி உஞ்சிப்போகும்படி செய்ய வேண்டும். ஜலம் ஜாஸ்தியாகப் பாய்ச்சப்பட்டால் அதிக ஜலத்தை வடியவிடவேண்டும். கோடையில் புழுதிசெய்யப்பட்ட வயலில் இப்படி ஜலத்தைக்கட்டுவதில் பூமியில் உண்டாயிருக்கும் வெக்கார் போய்விடுமென்றும், அப்படி நனைக்கப்பட்ட வயல் நடவுக்கு முன் காய்ந்துபோகுமாயின் பயிர் பிடிப்பதில்லை என்றும் சொல்லுவார்கள். சணல் சாகுபடி செய்யும்போது அப்பேர்ப்பட்ட பீதி ஒன்றும் வேண்டியதில்லை. ஏனென்றால் அப்படி நனைக்கப்பட்ட வயல்களில் கோதுப்பயிர் ஒன்று சாகுபடியாயிருப்பதாலும், பக்கத்து நாற்றங்காலைப்போலவே இதையும் காய்ந்துபோகாதபடி பதமாய் வைத்திருக்கக்கூடுமாகையாலும் ஷை வயல்களினுடைய வளப்பத்திற்கு குறைவு ஒன்றும் ஏற்படாது. இப்படிக்கிடைக்கும் தழையை சம்பா வயல்களுக்கு உரம் செய்யலாம். காவேரியில் ஜலம் வந்து குறுவை நாற்றங்காலில் விதை தெளித்து ஷை நாற்றானது வளர்ந்து, வயல்கள் செய்நேர்த்தி செய்யப்பட்டு, சம்பா நாற்றங்காலில் விதைவிட்டு, சம்பா, வயல்கள் நடவாக, சுமார் 2 மாத காலதாமதம் இருக்கும். குறுவை நாற்றங்காலில் விதை தெளிக்கும்போதே, உழப்பட்ட வயலில் சணலைத்தெளிக்க, ஊடே ஏற்பட்டிருக்கும் 2 மாத சாவகாசத்திற்குள் சுமார் 4 முதல் 6 அடி வரையில் வளர்ந்து ஏக்கர் 1க்கு 6 முதல் 10 வண்டித்தழை கொடுக்கும். ஒரு ஏக்கர் விதைக்க 12 பட்டணம்படி போதுமானதாயிருக்கிறது.

சணல் விதைப்பதற்கு நல்ல புழுதியும் ஜாஸ்தியான ஈரமும் அவசியமில்லை. விதைப்பதற்கு முன் ஒருசால் அடித்து பிறகு மறுசால் அடித்தால் போதுமானது. அப்படிச் செய்ய முடியாவிட்டால் உழப்படாத தரிசில் விதையைத்தெளித்து ஒருசால் அடிக்க, விதைகள் முளைத்துவிடும்.

சணல் விதை எடுக்க ஷை பயிரை புஞ்சையில் சாகுபடி செய்வதே திறமென்றும் நஞ்சையில் சாகுபடி செய்யப்பட்ட பயிரிலிருந்து எடுக்கப்படும் விதை தண்ணீர்த்தட்டைத் தாங்காதென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

தழை எருவுக்காக சணல் சாகுபடி விர்த்தியாகவேண்டுமென்ற நோக்கத்துடன், சென்னை விவசாய இலாகாவில் ஷை விதையை கிருஷ்ணா ஜில்லா முதலிய இடங்களிலிருந்து வரவழைத்து மிராசுதார்களுக்கு சப்ளை செய்யும்படி என்னிடத்தில் ஸ்டாக் செய்துவைத்திருக்கப்பட்டிருக்கிறது. அதன் விலை பட்டணம்படி 3 அணா. வேண்டியவர்கள் தஞ்சாவூர் ஜில்லா (விஜயபுரம்) திருவாரூரில் எனது விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வி. நாராயண அய்யர்,

CANVASSING.

BY

A CANVASSER.

கிராக்கி தேடுதல்.

உலகத்தில் ஏகதேசம், ஒரு மனிதனோ, அல்லது பல மனிதர்கள் சேர்ந்தோ, வர்த்தகங்கள் செய்யவோ, பாங்கிகள் நடத்தவோ, தொழில் சாலைகள் ஸ்தாபனம் பண்ணவோ, அல்லது இன்ஷ்யூரன்ஸ் முதலான கம்பெனிகள் ஏற்படுத்தவோ, ஆரம்பம் செய்வார்களேயானால், அந்தந்தத் தொழில்களை பிரபலமாய் நடத்திவர பத்திரிகைகள் மூலமாய் பிரசுரித்து விஸ்தார விளம்பரங்கள் செய்து வருகிறார்கள். ஆனாலும், அது போதாமல் ஏஜெண்டுகளை நியமனம்செய்து அந்தந்தத் தொழிலைப்பற்றி உலகத்தாரிடம்போய்ப் பேசி அவர்களுடைய உதவியைத் தேட அனுப்பி வருகிறார்கள். அவர்களைத்தான் கான்வஸர்கள், அதாவது, கிராக்கி தேடுகிறவர்கள், என்று சொல்வது வழக்கம். அப்படி நியமனம்செய்யப்படும் கான்வஸர்கள் எல்லாரும் கான்வஸர்கள் ஆகமாட்டார்கள். கான்வஸிங் தொழிலும் ஒரு வித்தையே யாகும்.

பொதுவாய் எந்த விஷயத்தைப் பற்றி ஒருவனை கான்வஸராக நியமனம் செய்கிறோமோ அந்த விஷயத்தில் அவன் ஸகல நுட்பமான விஷயங்களையும் ஸாங்கோபாங்கமாய் பகுத்தறிந்து ஜனங்களுக்கு வ்யக்தமாய் எடுத்துச் சொல்லக்கூடிய சக்தியுள்ளவனாயிருக்கவேண்டும். எந்த வேலை செய்யும்படி அவனை நியமனம் செய்கிறோமோ அந்த வேலை முற்றுப்பெறவேண்டியதற்கு வேண்டிய, ஜன வசீகரத்திற்கு ஆதாரமான கௌரவ ஆடம்பரங்கள் அவனுக்குப்பொருந்தி இருக்கவேண்டும். ஜனங்களிடத்தில் மரியாதை கொடுத்து மரியாதை வாங்கத் தெரியவேண்டும். அவனுடைய நிறம் குறி ஆடை முதலியவைகள் பார்ப்போர் மரியாதைக்கு உரித்தானவைகளாக இருக்கவேண்டும். இவ்வாறு குணாதிசயங்கள்பொருந்தியவன் ஒரு வேலைக்காக உலகத்தாரைப் பார்க்கப்போவனேயானால், வேலையின் ஸித்திக்கு பல இடையூறுகள் வருமென்று தோன்றினாலும், தன்னுடைய குணாதிசயங்களினால் வெல்லலாம் என்ற மனோதைரியம் பொருந்தியவனாகவும் இருக்கவேண்டும். தொழில் ஸ்தாபனம் செய்யும் புத்திமான்கள் மேலே கண்ட குணங்கள் அமைந்தவர்களைப் பார்த்து அவரவர்கள் தொழில் அபிவிருத்தி அடைய கான்வஸர்களாய் நியமனம் செய்வது உசிதமான காரியம். ஆனால் இப்படியான குணங்கள் அமைந்த புத்திமான்கள் அகப்படுவது சுலபமான காரியமல்ல. அப்படி அகப்படுவார்களேயானால் அவர்கள் எடுத்த காரியம் முற்றுப்பெறும் என்பதில் சந்தேகமில்லை. உலகத்தில் உள்ள கனதனவான்கள் பற்பல சிந்தைகள் பொருந்தியவர்களாக இருப்பார்கள். சிலர் பணம் படைத்தவர்களாக மாத்திரம் இருப்பார்கள். சிலர் படிப்பில் சிறந்தவர்களாயும் பணமும் உள்ளவர்களாயும் இருப்பார்கள். அவர்கள் உலகத்தில் ஏற்படும் பலதொழில்களின் குணாகுணங்கள் தெரிந்தவர்களாயும் தெரியாதவர்களாயும் இருக்கலாம். தெரிந்தவர்களிடத்தில் கான்வஸர் தான் கைக்கொண்ட வேலையை கணக்காலுள்ளபடி விவகரித்துச் சொல்லி அவர்கள் மனஸை வசப்படுத்துவது சுலபமான காரியமென்று தொழில் முறைதெரியாத வெளியோர்கள் நினைக்கலாம். ஆனால் அப்படியல்ல. நமது தேசமாகிய இந்தியாவைப் பொறுத்த அளவில் படித்தவர்களை விட படியாதவர்களிடம் இப்படியான தொழில் முயற்சிகள் சுலபமாய் பிரஸ்தாபித்த மாத்திரத்தில் நடந்து வருகிறதைப் பார்க்கிறோம். படித்தவர்கள் சுலபமாய் ஈடுபடுகிறதில்லை. யுக்திவாதங்கள் பல செய்வது வழக்கம். புத்தியுள்ள கான்வஸர்கள் படித்தவர்கள் மனக்கோணல் போம்வழி யெல்லாம் விட்டு பல நியாயங்கள் சொல்லி அவர்களைத் தன்வழிப் படுத்துவார்கள். சிலர் படித்தவர்களா யிருந்தாலும், படியாதவர்களாயிருந்தாலும், ஸ்துதியில் பிரியரா யிருப்பார்கள். சிலர் மகா கோபிகளாக "வேறுவேலையில்லையோ உமக்கு" என்று நிந்தனையாக வார்த்தைகள் பேசுவார்கள். அப்படியான வார்த்தைகளுக்கு எள்ளளவும் கோபம் கொள்ளாமல் உபகதைகள்பேசி அவர்கள் மனதைச் சந்தோஷப்படுத்தி காரியத்தை சாதிக்க வேண்டிவரும்.

சிலர் ராமன் ஏற்படுத்தினான், அதனால் இந்தக் கம்பெனியில் சேர மனமில்லை என்று சொல்வார்கள். அவர்களையும் மனச்சலிப்படையாமல் லாபமான பொதுக்காரியங்களில் ராமன் சம்பந்தமிருந்தாலென்ன, கிருஷ்ணன் சம்பந்தமிருந்தாலென்ன, விஷயந்தானே முக்கியம் என்று லோகாபிராமங்கள் பேசி அவர்கள் மனம் மகிழச்செய்து காரிய ஸித்தி பெற வேண்டிவரும். இன்னும் சிலர், அவர் சொன்னால் கேட்பார்கள், இவர் சொன்னால் கேட்பார்கள் என்ற விவரம் தெரிந்து, அவரவர்களைப்பிடித்து அவர்களுக்கு விஷய விசேஷத்தை போதிக்கும்படிசெய்து காரிய ஸித்தி பெற வேண்டும்.

அப்படியாகக் காரியத்தை ஸித்திக்க கான்வாஸர் பல பிரமுகர்களை அறிந்த மதிப்புடையவனாகவும் இருக்கவேண்டும். சிலர் ஐயா "கொள்ளைக்குப் போனாலும் கூட்டாகாது" என்பார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு அப்படியான பழமொழி பொய்மொழி யென்று சித்தாந்தம் செய்ய அந்நிய நாட்டார்கள் தொழில் முறையில் மாத்திரமல்ல, அரசாங்க முறையிலுங்கூட கூட்டுறவால்தான் மகா மேருபோன்ற காரியங்களையும் சாதித்துக் காட்டி யிருக்கிறார்கள் என்று வற்புறுத்தி போதிக்கக்கூடிய சக்தியும் கான்வஸருக்கு வேண்டும். கான்வஸர் தான் கொண்ட காரிய உத்தேசமாய் ஒருவரைப் பார்க்கப் போகும் போது, தான் நல்லுடை உடுத்து, அச்சிட்ட டிக்கட்டை நீட்டி, தான் வந்தகாரியத்தை எச்சரிக்கை செய்யவேண்டும். வீட்டு எஜமான் அவர்வரவை எதிர்கொண்டழைத்த பின்பு எஜமான் முகக்குறி அறிந்து பல உல்லாஸ உலக வர்த்தமானங்களைக் கலந்து பேசி, கூடவே தான் வந்த காரியத்தையும் தெரிவிக்கவேண்டும். கான்வஸர் உடுப்பையும் பேச்சையும் கண்டு மோகிப்பாருண்டு. சிலர், பெரும் டம்பாசாரி, வார்த்தையாடி ஏமாற்றலாமென்று வந்தான், என்று விகண்டகமாகச் சொல்லுவார்கள். கான்வஸர் தன் கௌரவத்தை எவ்விதத்திலும் குறைவு படுத்திக்கொள்ளாமல் அவரவர் மனப்பான்மைக்குத் தக்கவாறெல்லாம் உணர்வாக நடந்து கொள்ளவேண்டும். சிலருக்கு ஜோதிஷத்தில் பைத்தியமுண்டு. சிலருக்கு உலக வர்த்தமானங்களில் பைத்தியமுண்டு. சிலருக்கு வேதாந்த விஷயத்தில் பைத்தியமுண்டு. சிலருக்கு விஷயங்களை கணக்கு வழக்குடன் ஆராய்ச்சி செய்வதில் த்ருப்தி உண்டு. இப்படியாக பற்பல பின்ன புத்திகள் கொண்ட ஜனங்களிடம் காரிய ஸித்தி பெற வேண்டுமானால், தன் மன நோக்கத்திற்கு விரோதமான அபிபிராயங்களானாலும் அவர்களோடு தர்க்கிக்காமல் அவர்கள் நோக்கம் போல் சமயோசித புத்தியோடு வாதித்து காரியத்தை சாதிக்கக்கூடிய புத்தியோடு கான்வஸர் இருக்கவேண்டும். நம் இந்தியாவில் கான்வஸிங் ஒரு அபூர்வ வித்தைதான் என்று அதைப் பெருமைப்படுத்தி தக்கசம்பளம் ஏற்படுத்தி கௌரவமாய் நடத்திவரவேணுமென்ற கவலை கொண்டவர்களைக்காணோம். கான்வஸர்களை, தெருவில் "துணியோ துணி" யென்று விற்றுவரும் ஷாகார்களைப்போல் சிலர் நடத்திவருகிறார்கள்.

அவர்களிடத்தில் கௌரவமான வேலையை ஒப்புவித்திருக்கிறோம், அவர்கள் அந்த வேலை

யை கௌரவமாயும் த்ருப்திகரமாயும் செய்து முடித்து வரவேணுமென்று எண்ணி அதற்கு வேண்டிய சௌகரியங்களைச்செய்து கொடுப்பது மில்லை.

கான்வஸிங் வேலையை எந்த மனுஷ்யாளிடத்தில் செய்யப் போகிறோமோ அந்த மனுஷ்யாள் அதன் அருமை பெருமைகளை அறிந்தவர்களாக மாத்திரம் இருப்பார்களேயானால் அந்தத் தொழிலுக்கு மதிப்பும் கௌரவமும் ஏற்படவே செய்யும். எங்கே கான்வஸர் சென்று தான் வந்த காரியத்தைத் தெரிவித்ததும் ஏன் ஐயா, உங்களுக்கு இதில் கமிஷனோ சம்பளமோ, இதில் உங்களுக்கு ஏற்படும் சிரத்தை யென்ன, யென்று தாறுமாறான கேள்விகளை கேட்கும் குணமுடையவர்கள் பொருந்திய தேசமானால் அங்கே கான்வஸிங்குக்கு எப்படி மதிப்பு உண்டாகும்? ஆனால் இவ்விடத்தில் ஒன்று சொல்வது பொருத்தமாகும். கால் படிப்பு அரைப்படிப்பு பெற்ற வேலை யற்றவர்கள் இன்ஷ்யூரன்ஸ், வர்த்தகம் முதலான கம்பெனியாரின் கான்வஸர்களாகக் கிளம்பி விட்டார்கள். அந்நிய நாடுகளில் ஒவ்வொருதொழில் முறைகளையும் சாங்கமாய்கற்றறிய பற்பல சாலைகள் ஏற்பட்டு அந்தந்தத் தொழில்களை அப்பியஸிக்கப் புகுந்து சில காலம் கற்றபின் அந்தத் தொழில்களில் நிபுணர்களென்று நற்சாக்ஷிப் பத்திரம் பெற்று வெளிக் கிளம்புவார்கள். இந்தியாவிலோ அப்படியான தொழில் முறைகள் கற்றுக்கொடுக்கும் சாலைகளுமில்லை. நிபுணர்களான தொழிலாளிகளு மில்லை. தொழில் முறைகளை அப்பியஸியாமல் ஏகதேசம் புத்திசாலிகளாய் வெளிக் கிளம்புவார்களேயானால் அதை அவர்கள் ஜன்மாந்திர பாக்கியமாகக் கொள்ள வேண்டிவருகிறது. ஆகவே கான்வஸிங்குக்கு வேண்டிய விஷயங்களைப் பகுத்தறியும்படியானபடிப்பு பொதுவாய் கௌரவம், மட்டு மரியாதை, சாந்தம், முன் பின் கால யோசனைகள், சமயோசிதம், லோக வர்த்தமானங்கள், மனுஷ்யாள் தாரதம்யம், வாசாலகத்வம், சுத்தம், ஸௌமுகம் முதலான சிரேஷ்ட குணங்கள் அமைந்திருக்குமானால், கான்வஸிங்கும் ஒரு வித்தையாகுமென்று சொல்லவேண்டியது அவசியமாகும்.

FLESH FOOD

BY

DURAIRANGA NAICKER.

மாம்ஸ ஆகாரம்.

இந்த தேசத்திலுள்ள அநேகர் மாம்ஸபோஜனம் மனிதனுக்கேற்ற தல்லவென்கிறார்கள், ஆனால் பலவகையான ஜீவஜெந்துக்களின் பல், வயிறு, குடல் முதலிய வற்றை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் மாம்ஸங்களையே பக்ஷித்துவருகிற புலி முதலிய ஜெந்துக்களுக்கும், புல் பூண்டை மாத்திரம் தின்னும் ஆடு மாடு முதலிய ஜெந்துக்களுக்கும், மேலே கண்ட யந்திரங்களில் வெகு வித்தியாசம் உண்டென்று தெளிவாய்க் காணலாம். ஆனால் மனிதனுடைய வயிறு, குடல், பல்லுகளோ, புலியினுடையவைகளுக்கும் ஆட்டினுடையவைகளுக்கும் நடுத்தரமாயிருக்கின்றன. இதனால் மனுஷன் மாம்ஸ போஜனத்தையும், மரக்கறி போஜனத்தையும் கலந்து சாப்பிடவேண்டுமென்பது சிருஷ்டிகரின் நிர்ணயமென்று நாம் தெளிவாய்அறியலாம். மேலும் நமது ஜனங்களில் அநேகர் தாங்கள் மாம்ஸ போஜனத்தை மாத்திரம் முற்றிலும் விலக்கிவிட்டு மரக்கறி போஜனத்தை சாப்பிடுகிறவர்களென்று சொல்லிக் கொள்ளுகிறார்களே, இது எதார்த்தமா? பால், தயிர், நெய், முதலானவைகள் மாம்ஸபோஜனத்தைச் சேர்ந்தவைகளே யன்றி மரக்கறி போஜனத்தோடு சம்பந்தப்பட்டவையல்லவே. ஆனால், பொதுவாக, இந்தத் தேசத்திலுள்ள ஜனங்களைப்போல் சொற்பமாய் மாம்ஸ போஜனம் செய்கிற ஜனங்கள் உலகத்திலுள்ள வேறொரு தேசத்திலும் இல்லை என்பது நிச்சயமான சங்கதி.

பொதுவாய் நமது தேசத்தில் அகப்படுகிற மாம்ஸங்கள் முதல்தரமானவைகளல்ல. அவைகள் ஸாரத்தில் மிகவும் குறையுள்ளவைகளாயிருக்கின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால் நமது தேசத்து ஜனங்களுக்கு போஜனத்திற்கு உதவத்தக்க ஆடு முதலிய ஜெந்துக்களைச் சரியானபடி வளர்த்துப் பரிபாலனம் செய்கிறவகை தெரியவில்லை. தண்ணீர் கிடைப்பதற்கு அரிதான கோடைகாலத்தில் ஆடு, மாடு முதலான ஜெந்துக்களுக்குத் தகுந்த ஆகார முண்டாயிருக்கத் தக்கதாக முன்னதாகவே ஏற்ற பிரயத்தனங்களைச் செய்யாமல் கவலையற்று இருப்பதினால் மேய்ச்சல் குறைவு நேரிடும்பொழுது அந்த ஜெந்துக்கள் மிகவும் மெலிந்து போகின்றன தவிர பலவகைதொத்து வியாதிகளுண்டாகி அவைகள் ஆயிரக்கணக்காக மடிந்தும் போகின்றன. மேலும் அவைகளுக்கு நல்ல ஆகாரம் அகப்படாத நிமித்தம் அவைகளுக்கு அசுத்தமான பொருள்களைத்தின்னும் வழக்கம் உண்டாகின்றது.

கொஞ்சம்பிரயாசைப்பட்டு நல்ல புல் முதலான இரைகளைப் போட்டு அவைகளைக் கவலையோடு வளர்த்தால் மிகவும் நேர்த்தியான மாம்ஸம் உண்டாகிறதுந்தவிர பிரயாசைப்பட்டு வளர்த்தவர்களுக்குத் தகுந்த வருமானமும் கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. மேலும் ஆடு மாடு முதலிய ஸாதுவான ஜெந்துக்களைத் தொகையில் விருத்தி பண்ணுகிற விஷயத்தில் நமது தேசத்தார் கற்றறிய வேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. ஒரேகிடையிலுள்ள ஆடுகள் கிடாய்கள் மூலமாயே கிடையைப் பெருகும்படி செய்து வந்தால் அதினால் உண்டாகிற நூதன ஜெந்துக்களெல்லாம் சிறுத்துத் தாழ்ந்த தரமுள்ளவைகளாய்ப் போய்விடும். அப்படிக்கில்லாமல் கொஞ்ச காலத்திற்குஒருதரம் தூரமான இடங்களிலுள்ள நல்ல ஜாதியும், பருமனுமான கிடாய்களைக் கொண்டுவந்து அவைகளின் மூலமாய்க் கிடையை விருத்தி பண்ணினால் அதினால்உண்டாகும் ஜெந்துக்கள் பாரித் தரமானவைகளாகும். கிடைக்குச் சொந்தக்காரன் இந்த விஷயத்தில் படுகிற பிரயாஸத்திற்கும் செய்கிற செலவிற்கும் எத்தனையோ மடங்கு லாபத்தைப் பெறுவானென்பதற்குச் சந்தேகமில்லை.

மாம்ஸங்களைச் சமைப்பதில் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள்:—ஆட்டிறைச்சி முதலியவற்றை வேவிப்பதில் அதிகமான சூட்டைப் பிரயோகித்தால் அவைகள் கடினமாகி லேசில் ஜீரணிக்கப்படக் கூடாதவைகளாய்ப் போம். ஆகையால் அதிகச்சூட்டைப் பிரயோகிப்பதைப் பார்க்கிலும் கொஞ்சச் சூட்டை அதிக நேரம் பிரயோகித்தால் நலமாயிருக்கும். இறைச்சிப் பக்குவத்தில் கொஞ்சமாகிலும் ஜலத்தைச்சேர்க்காமல் இறைச்சியை வேவிப்பதினால் அதிலுள்ளநீரெல்லாம் போய்விட பிரயோஜன முள்ள சாரங்களெல்லாம் வெளியே போய்விடாமல் அதிலே தங்கியிருப்பதினால், அதிக ருசியுள்ளதாயிருக்கிறது. தவிர சதைப் புஷ்டியையும் தேக பலத்தையும் உண்டாக்குவதில் அது மிகவும் சத்துள்ள போஜனமா யிருக்கிறது. இந்த முறைகளை ஐரோப்பியர்கள் கவனித்து வருவதினால்தான் அவர்கள் இரத்த புஷ்டியுள்ளவர்களாயும் திடகாத்திரர்களாயுமிருக்கிறார்கள்.

புதுச்சேரி துரைரங்கநாயக்கர்.

PAPER AND ITS USES.

BY

S. KALYANARAMAN.

காகிதமும் அதன் உபயோகங்களும்.

முன் காலத்தில் காகிதம் என்பதே கிடையாது. அப்பொழுது கல்லிலும் மரத்திலும் எழுத்துக்களைச் செதுக்கி வந்தார்கள். பிறகு பனை ஓலைகளில் எழுதிவந்தார்கள். ஏழாவது நூற்றாண்டில் ஸாமர்க்கண்டு நகரத்தார் அராபியர்களின் உதவியால் காகிதம் செய்ய ஆரம்பித்தார்கள். அது இவர்களிடமிருந்து ஈஜிப்ட் ஸிஸிலி முதலிய இடங்களுக்குப் பரவிற்று. காகிதத் தொழில் 1558—ம் வருஷம் முதல் வரவர விருத்தியடைந்து இப்பொழுது ஒவ்வொரு வருஷமும், ஒவ்வொரு நாட்டிலும் செலவாகும் காகிதத்திற்கு எல்லை இல்லை.

காகிதங்கள் அநேகவகைப் படும். அவைகளின் உபயோகத்தை எண்ணி மூன்று வகையாகப்பிரிக்கலாம். எழுதும் காகிதம், அச்சுக்காகிதம், உரைக்காகிதம் என்று மூன்று வகை.

எழுதும் காகிதம் முதலில் பபீரஸ் என்கிற

செடியின் சத்திலிருந்து செய்யப்பட்டபடியால் பேபர் என்று பெயர் வழங்கலாயிற்று. பிறகு கந்தையிலிருந்தும், புல்லிலிருந்தும் காகிதம் செய்யலானார்கள்.

அச்சுக்காகிதம், சணல் நார், பழையகம்பளி, வைக்கோல், மூங்கிலின் உட்பாகம் இவைகளினால் செய்யப்படுகிறது. உரைக்காகிதம் விசேஷமாக வைக்கோல், பழையகயிறு, மரங்களின் உட்பாகம் இவைகளால் செய்யப்படுகிறது. சீனதேசத்தில் பட்டிலிருந்து வெகு நேர்த்தியான காகிதம் செய்கிறார்கள். அமெரிக்கா தேசத்தில் ஒரு காட்டின் மரங்களை வெட்டிக் காகிதம் செய்து அச்சடிக்கிறார்கள் என்பதை நினைத்தால் அதிசயமாயிருக்கிறது.

காகிதம், எழுத உபயோகமாகிறதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். வெள்ளைக்காகிதத்தில் கறுப்பு மையினால் எழுதியிருப்பதை வாசிப்பது ரொம்ப லகுவாயிருக்கிறது. நம்முன்னோர்கள் ஓலையில் எழுத்தாணியால் எழுதியிருக்கும் விஷயங்களை வாசிப்பதென்றால் கண்ணுக்கு சிரமமாயிருக்கிறது.

புஸ்தகங்கள் அச்சிடப் பட்டிருக்கின்றன. பாங்கி, கடை, முதலானவைகளுக்கு உபயோகமாகும் கணக்குப்புஸ்தகங்கள் ரூல் போட்டு வரவு செலவு கலங்களுடன் நேர்த்தியாய்த் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. பழைய காலத்து ஓலைக்கணக்குச் சுவடிகளையும், தற்காலத்து லெட்ஜர் அதாவது பேரேடுகளையும் ஒப்பிட்டுப்பார்த்தால் மடுவும் மேருவும்போலிருக்கும்.

ஸர்க்கார் கரன்ஸி நோட்டுகள், பாங்கி உண்டியல்கள், செக்குகள் காகிதத்தினாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. தபால்கார்டுகள் லேபில்கள், பத்திரங்கள் இவைகளையெல்லாம் காகித மில்லாத காலத்தில் இருந்தவர்கள் சொப்பனத்தில் கூட நினைத்திருக்க மாட்டார்கள்.

வெள்ளிப்பாத்திரம், நகைகள், சுற்றிவைப்பதற்கென்று மெல்லிதாகவும், வெண்மையானதுமான பேபர் இருக்கிறது.

ஜப்பான் தேசத்தாரைப்போல் காகிதங்களை உபயோகப்படுத்துகிறவர்கள் இல்லை. ஜப்பானில் சற்றேறக்குறைய இருநூறு விதமான காகிதங்கள் செய்யப்படுகின்றன. ஒவ்வொன்றும் தனித்தனி உபயோகத்திற்கு ஆகிறது. அந்த தேசத்தார் பிடித்துக்கொள்ளும் குடைகள் வார்னிஸ் தடவின ஒருவித கெட்டி காகிதத்தாலானவை. நாம் துணிக் கைக்குட்டைகளை உபயோகிக்கிறோம். அவர்கள் மிக மெல்லிதான காகிதக்கைக் குட்டையை உபயோகிக்கிறார்கள். ஒவ்வொரு ஜப்பானியரும் வெளியே போகும்பொழுது ஒரு டஜன் கைக்குட்டைகளை சட்டைப்பையில் கொண்டு போவார்கள். ஒரு முறை முகத்தை அல்லது கையைத் துடைத்து அதை எறிந்துவிடுவார்கள். காகித விசிறி, காகிதச்சட்டை, காகித லாந்தர்கள் இல்லாத வீடு ஜப்பானில் இல்லை. காகிதப்பாத்திரங்களில் சமையல் செய்கிறார்கள். அவர்கள் போடும் மிதியடியும் காகிதங்களினாலேயே செய்யப்பட்டது.

சுவர்களை அலங்கரிக்க சீமான்கள் வால் பேபரை ஏராளமாய் வாங்குகிறார்கள்.

பொட்டோக்கிறாப் பேபரென்று படமெடுப்பதற்காக பளபளப்பான காகிதத்தின் பேரில் சில திராவகங்களைத் தடவித் தயார் செய்கிறார்கள். காகிதத்தால் இன்ஜின்களுக்குபெல்ட்செய்யலாமென்பது சில இஞ்சினீர்களுடைய அபிப்ராயம். பழைய காகிதங்களிலிருந்து ரெயில்வே டிக்கிட்டு செய்கிறார்கள். பழைய காகிதங்களைத் தண்ணீரில் ஊறவைத்து வெந்தயம் சேர்த்தரைத்து கூடை, தட்டு முதலியவைகள் செய்யலாம். இப்படிச்செய்த கூடை லேசாயும், உறுதியாயும் இருக்கும். இங்கிலீஷ்காரர் வீடுகளில் பழைய காகிதங்களை உபயோகப்படுத்த ‘டிட் பிட்ஸ்’ பத்திரிகையின் பத்திராதிபர் ஒரு வழி சொல்லுகிறார். அதாவது, காகிதங்களைத் துண்டுதுண்டாய்க் கிழித்து தண்ணீரில் இரண்டு நிமிஷம் ஊறவைத்து ஒரு பந்து போல் பிடித்துக்கொள்ளவேண்டும். கணப்பு நெருப்பில் ஒரு பந்தை வைத்து அதன்பேரில் நிலக்கரிப் பொடியைத் தூவிவைத்து விட. இதைச்சாதாரணமாக நம்முடைய தேசத்துப் பெண் பிள்ளைகள் “மூட்டம்” போடுகிறதென்று சொல்லுவார்கள். இவர்கள் காகித உருண்டைக்குப் பதிலாக சாணி உருண்டை போடுகிறார்கள்.

எஸ். கலியாணராமன்.

SELECTIONS.

விசேஷத் திரட்டு.

COLLECTION OF CATTLE MANURE.

BY

RAO BAHADUR J. DHARAMARANGA RAJU GARU.

தொழு எருச் சேர்க்கும் விதம்.

1. தொழு எருச் சேர்த்திடத் தோழரே யாரீர்
வழுவிலா ஓர்முறை வகையுடன் கேளீர்.

2. இருபது நீளம் ஈரா றகலம்
சரிமூன் றடியினிற் குழியது தோண்டும்.

3. சுற்றிலு மூன்றடிச் சுவர்தனை வளர்த்து
மற்றதின் மேற்சில மரத்தூண் நிறுத்தி,

4. சட்டமுங் கூட்டிச் சார்ட்டன் வைத்து
விட்டமு மல்லுடன் இட்டமா யேற்றி,

5. வெயிலதும் மழைஜலம் ஒழுகிடா விதமாய்
செயலுடன் கூரையைச் செவ்வனே வேய்ந்து,

6. சண்டுடன் செத்தை சருகொடு கூளம்
கொண்டுவந் தந்தக் குழியினிற் பரப்பும்,

7. ஓர்புற மாக ஒடுக்கமாம் அழியில்
சீர்பெற வைக்கோல் சிதறு தமையும்.

8. கால்நடை களையதில் கலக்கவே நிறுத்தி
பால்பசு மேயப் பாங்குடன் விட்டு,

9. உழவு முதற்பல உறுதொழி லதனில்
கழிவா கும்பகற் காலந் தவிர,

10. எக்கா லத்திலும் இத்தொழு வதனில்
அக்கால் நடைகளை அடைத்துநீர் வையும்.

11. காலையோ மதியமோ மாலையோ ஒழிவாம்
வேளையில் மாட்டை வெளியே விட்டு,

12. நீரினிற் கழுவி நிலமத் தொழுவில்
சீருடன் செத்தை சிதறியே யடையம்.

13. சாணமுஞ் சிறுநீர் சண்டுடன் கலக்கும்
காணலு மரிதாம் கடுகவம் போகா.

14. மாதமூன் றாகும் மாண்குழி நிறைய
சேதமொன் றின்றிச் சேர்ந்திடு மெருவே,

15. பசுத்தொழு வதனில் பகல்காய் வெயிலால்
விசும்பினில் வீசும் வெம்பிய நாற்றம்.
16. குதிரையின் நீரும் கூறிய வெயிலில்
சிதறுமந் நாற்றம் சீரம் மோனியா.
17. எனுமொரு வாயு எய்துதற் கரிதாம்
அனலினுங் கனலினும் புனலினும் அழியும்.
18. பயிர்வகைக் கப்பொருள் உயிரெனப் படுமே
இயல்பினில் சிறுநீர் எருவினு முளதே
19. ஆதலி னிவ் வாவியின் காப்பு
சாதன மாகும் சகலரு மறிவீர்.
20. இப்பொழு தோநீர் எருச்சேர்க் கும்வகை
தப்பா கும்நீர் தயைசெய் துணர்வீர்.
21. சிறுவீட் டயற்புறம் சிறுகுழி வெட்டி
நிறைந்திடச் சாணம் நிதமதிற் கொட்டி,
22. வெயிலினுங் காற்றினும் வெதும்பியே கெட்டிடும்
புயலினும் மழையினும் பொங்கியே கரையும்.
23. ஊற்றெடுத் தொருபுறம் உரச்சத் தோடும்
நாற்றமும் பன்னோய் நண்ணுமே திண்ணம்.
24. இப்படிச் சேர்க்கும் எருவகை யதனில்
செப்பிய தொழுவெருச் சேர்பதின் மடங்கே.
25. சத்துள எருவாம் சாதன மெளிது
பித்தரே யாரிதில் பின்னிடை பவரே.
26. கால்நடைக் கீனம் கடுகள வில்லை
பால்பசு வுக்கும் பல்லாண் டாக.
27. ஒருஜதை எருதினில் ஓராண் டதனில்
வருமெரு நாற்பது வண்டியு மாமே.
28. எளிதினி லாகும் இம்முறை யதனைத்
தெளிவுடன் நீரும் தெரிந்துகைக் கொள்ளும்.

ஜே. தர்மரங்கராஜு.

WANTED AGENTS
ஏஜெண்டுகள் தேவை!

"பிழைக்கும் வழி" க்கு சந்தாதாரர்கள் சேர்க்க தகுந்த ஏஜெண்டுகள் தேவை. மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் சம்பளமும், இது தவிர கமிஷனும் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 10, எஸ்பிளனேட், மதராஸ்.

THE ACACIA TREE.

வேலமரம்.

வேலமரம் சாதாரணமாய் எங்கும் பார்க்கக் கூடியது. வெள்வேலம், கருவேலம் என்று இதில் இரண்டு ஜாதி உண்டு. வெள்வேலமரம் மேட்டு நிலங்களில் விளைந்திருக்கும். இது சாதாரணமல்ல கருவேலமரம் எங்குமுண்டு. இது மணல் நிலங்களிலும் கரிசல் நிலங்களிலும் மேட்டுப்பாகங்களிலும் ஏரி உள்வாய்ப் பள்ளங்களிலும் வளர்வதுண்டு. சாதாரணமாய் மரம் வளரத் தகுதியில்லாத கரிசலில் கருவேலம் மாத்திரம் வளர்ந்திருக்கும். இது குடித்தனத்துக்குப் பலவிதமாய் உபயோகப்படுவதால் இதை விவசாயிகள் கைவிடுவதில்லை. மண் கண்டம் நிறைந்த இடங்களில் புளியமரம் போல காத்திரமாய் வளர்வதுண்டு. 60 அடி உயரமும் 15 அடி சுற்றளவுமுள்ள மரங்களைச் சிலர் கண்டிருக்கலாம். இதற்குக் கிளைகள் ஒழுங்காயில்லாமல் தாறுமாறாய் இருக்கும். காட்டு இலாகாவின் கடுமையான உத்தரவுகளினால் குடித்தனக்காரர்களில் சிலர் தங்களுக்கு வேண்டிய வேலமரத்தைத் தாங்களே முளைப்பித்துக் கொள்ளுகிறார்கள். இது களர் நிலத்திலும் நீர்ப் பிடிப்புக் குளங்களிலும் சீக்கிரம் வளரும். இச்செடி வளர்க்க வேண்டுமானால் விதையால் விருத்தி செய்ய வேண்டும். இளம் செடியிலேயே வேர் அதிக ஆழம்போகிறபடியால் இதை நாற்றுவிட்டு நடுவது யுக்தமல்ல. இதன் விதை கெட்டியாயிருக்கும். ஜூலை மாதத்தில், வெள்ளாடுகளுக்கு இக்காய்களைத் தீனியாக்கி, விழும் புழுக்கைகளில் முளைக்கும் செடி தப்பிப்போவதில்லையென்று இச்செடி வளர்க்கவேண்டியவர்கள் ஆட்டுமந்தை மடக்குவதுண்டு. 10 அடி தூரம் ஒன்று விட்டு இம்மரத்தை 10 வயதில் வெட்டினால் மறுபடியும் துளிர்த்து வளரும். அப்போது ஒரு ஏகராவுக்கு அரை டன் பட்டைகிடைக்கும். இப்பட்டை தோல் பதம்செய்வதற்கு உபயோகப்படுகிறது. இதில் நூற்றுக்குச் சுமார் 19 பாகம் துவர்ப்பு இருக்கிறது. இவ்வாறு வெட்டிய மரங்கள் அநேகமாய் ஒழுங்காயிருக்கும் இவைகளில் நாரும் கிடைக்கும். இளம்பட்டையில் கிடைக்கும் நார் காகிதம் செய்யவும் முதிர்ந்த பட்டை நார் கயிறு திரிக்கவும் தகுதியாயிருக்கும். கட்டை அடுப்பெரிக்கப் பக்குவப் பட்டிருக்கிறது. கருவேலங் கட்டையை எரித்து எடுக்கும் அடுப்புக்கரி நீராவியந்திரங்களுக்கு மேன்மை பட்டிருக்கிறது.

இம்மரத்துக்கு முள் அதிகமானபடியால் வேலிகளிலும் வளர்க்கலாம். அடிக்கடி வெட்டிக்கொண்டு வந்தால் வேலி நன்றாயிருக்கும். உலர்ந்த முள் கிளைகள் இவ்வேலிக்கு உதவுவதுண்டு. இதன் இலை வெள்ளாட்டுக்குச் சிரேஷ்டமான தீவனம். இதன் காய்கள் ஆடு மாடுகளுக்கு உணவாக உதவுகின்றன. இளம் காய்களில் நூற்றுக்கு 60 பாகம் துவர்ப்பு இருப்பதால் தோல் பதத்திற்குப் பக்குவப் பட்டிருக்கிறது. பழுப்புக் காயில் சீழ்போல் பால் ஏறி இருக்கும். இச்சமயத்தில் எருமைகளுக்குத் தீவனமாகப் போட்டால் பால் தடிப்பாயும் தயிர் கட்டியாயுமிருக்கும். இத்தயிர் வெகு சீக்கிரத்தில் புளிப்பேறுகிறது. தீவனத்தை உத்தேசித்து காய்களுக்காகவே சில இடங்களில் இம்மரங்கள் பாதுகாக்கப்படுகின்றன. வேலம் தோப்புகளை இவ்விடங்களில் வருஷாவருஷம் குத்தகைக்கு விடுவதுண்டு. இம்மரம் வருஷாவருஷம் காய்ப்பதில்லையென்று கிளைகளை வெட்டிக்குறைப்பதுண்டு. இரண்டாவது வருஷத்திய கிளைகளே புஷ்பி

க்கு மிளையால் முதல் வருஷக்கிளைகளை விட்டு விட்டு, காய்த்த கிளைகளை வெட்டுவதுண்டு. கிளை கபாத் செய்வதுபோல் இடையர் சாமர்த்தியமாய்க் கிளைகளைக் களைவதுண்டு. காய்க்காத மரம் 80 அடி தூரத்திலிருக்க வேண்டும். அதாவது ஒரு ஏகருக்கு 50 மரம்.

பழுத்த காயிலுள்ள பால் சாந்துப்பொட்டு செய்வதற்கு மேன்மைப்பட்டிருக்கிறது. மாடு ஓட்டும் சிறுவர்கள் மிருதுவாயிருக்கும் பழத்தைக் கத்தியின்பேரில் தேய்க்க கறுப்புச் சாந்து உண்டாகும். அதைச்சேர்த்து நெற்றியில் வைத்துக் கொள்ளுவார்கள். இதில் பிசினிருக்கிறது. ஆனதுபற்றி இது பளபளப்பாயிருக்கிறது. வீட்டு உபயோகத்துக்கு வேண்டியவர்கள் இப்பாலை இரும்புக்கிண்ணம் அல்லது காண்டியில் சேர்த்து வெயிலில் வைக்கவேண்டும் அல்லது மற்ற பாத்திரங்களில் சேர்த்தால் துருப் பிடித்த இரும்புத் துண்டைச் சேர்ப்பது அவசியம். சுலபமாய்ச் செய்யவேண்டுமானால் அன்னபேதித் தூளைச் சேர்த்துக் கலக்க கறுப்புச் சாந்து உண்டாகிறது.

இளம் காய் அல்லது பட்டையைத் தூள் செய்து கஷாயம் இறக்கி அன்னபேதியைச் சேர்த்தால் எழுதும் மையாகிறது. இதில் அவுரி நீலமும் சேர்ப்பதுண்டு. பட்டைச் சாராயம் செய்வதற்கும் இது உதவுகிறது.

இதன் மரம் மிக உறுதியானது. ஜலத்தில் பதம் பண்ணின பிறகு மரம் உளுப்பு இல்லை. வெள்ளை இளம்மரத்தைப் புழு அரிக்கும்போது வைரமரத்தையும் கெடுப்பதாக அனேகர் தெரிவிக்கிறார்கள். கரும்பாலை, வண்டிக்குடம், ஆரைக்கால், வட்டை, பாறு முதலியவைகளுக்கும் ரெயில்வேக் கம்பிக்கு அடியில் போடுவதற்கும் இது மிகப் பிரயோசனப்படுகிறது. இதில் செய்யும் கலப்பை தேயாமலும் உடையாமலும் இருக்கும். வேல மரம் ஊற்றுக்கண்கள் சமீபம் இருக்கும் பக்ஷத்தில் ஊற்றுஜலம் உலர்ந்து விடுகிறதென்று அனந்தப்பூர் ஜில்லா குடித்தனக்காரர்கள் தெரிவிக்கிறார்கள். வேர் அதிக ஆழம் போவதினாலே இருக்கலாம். ஏரி உள்வாயில் அதிக மரம் வளர்ந்திருக்கும். இந்துப்பூர் தாலுகாவில் உதிர்ந்து மட்கிய இலை ஜலத்தைத் துவர்ப்பாக்கிப் பயிரைப் பிடிக்க வைப்பதில்லையென்கிறார்கள். துவர்ப்பு ஜலம் நெல் விதை முளைப்பதற்குத் தகாதென்று இவர்களால் தெரியவருகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் கருவேலமரம் நெல்லுக்கு உரம்கொடுத்தாற்போல உதவுகிறதென்கிறார்கள். இவ்விடத்தில் எரு போதுமான வரையில் சேர்ப்பதில்லையாதலால் வேலமரத்துவர்ப்பு பயிருக்குக் கெடுதி செய்யவில்லை. இயற்கையாகவே அதிக எருவிடும் அனந்தப்பூர் ஜில்லாவில் அபிப்பிராயம் பேதப்படுகிறது. இதன் பிசினிக்கு அதிக விலையுண்டு. ஆங்கிலேயர் இதைப் பலவிதமாய் உபயோகித்துப் பணம் சம்பாதிக்கிறார்கள். இதில் வாழை, மா, பலவித வேலம், மறுமாங்காய், வேம்பு, விளாம், முந்திரி பொந்தம் புளிமுதலிய மரங்களின் பிசினியைக் கலந்து வியாபாரம் செய்வதுண்டு. இப்பிசினியைத் தரம்வாரியாய்ப் பிரிவு செய்வார்கள். வெண்மையாயிருப்பது முதல் தரம்; கறுத்திருப்பது இரண்டாம் தரம்; தூள் மூன்றாம் தரம்; வெண்மையாயிருப்பது காகிதப் பைகளுக்கு உதவும். வேலம் பிசினி சாப்பிடுவதற்கு உபயோகப்படுகிறது. ஆதோனி மிட்டாய்க் கடைகளில் வேலம் பிசினியை நெய்யில் வறுத்துச் சர்க்கரையில் புரட்டி விற்பார்கள். ஐரோப்பிய மிட்டாய்களில் ஜுஜுப் என்று இருப்பது பிசினியே. குழந்தைகளுக்கு இது நல்ல தென்று உபயோகப்படுகிறது. நோயாளிகளில் சிலர் வேலம் பிசினியை வாயில் சப்பிக்கொண்டிருப்பார்கள். பிசினியின் உபயோகம் தேகத்தில் சர்க்கரையின் உபயோகம் போல் உதவுகிறது. 1740-ம் வருஷத்தில் அபிஸீனியா வர்த்தகர் பிரயாணம் செய்தபோது வழியிலேயே இரண்டு மாதத்துக்கு வேண்டிய அரிசி, பருப்பு செலவாய் விட்டது. வழியோ ஒன்றும் கிடைக்காத மணல்காடு. வியாபாரத்துக்கென்று கொண்டு போகப்பட்ட வேலம்பிசினி அவர்களிடத்திலிருந்தது. இதைத்தின்று பிரயாணம் செய்து ஒருவரும் நஷ்டமாகாமல் ஊர் சேர்ந்தார்கள். ஆகவே இப்பிசினி பஞ்சகாலத்தில் ஜனங்களைக் காப்பாற்ற சக்தியுள்ளது.

இது வைத்தியத்தில் பலவிதமாய் உதவுகிறது. சீதம், வயிற்றுக்கடுப்பு இந்நோய்களுக்கு பிசினியை ஜலத்தில் கரைத்து உள்ளுக்குக் கொடுப்பதுண்டு பட்டை, பிஞ்சுக்காய், இவைகளைப் பொடியாக்கிப் பல் பொடி செய்வதுண்டு. சிலர் இவைகளை கறுக்க சுட்டுவைத்துக்கொள்வார்கள். மிளகு, கற்பூரம், ஏலக்காய், லவங்கப்பட்டை, சீமைச்சுண்ணாம்பு முதலியவைகளையும் சேர்ப்பதுண்டு. ரஸம் கலந்த மருந்து சாப்பிட்டு வாயில் ஒழுகும் நீருக்கும், ரத்தம் பெருகும் ஈறுள்ளவர்களுக்கும் இப்பல்பொடி விசேஷம். பட்டைக் கஷாயம் சீதபேதிக்கும் வயிற்றுக்கடுப்புக்கும் உதவுகிறது. இளம் காய்த்தூளும் அபினியும் இந்நோய்களுக்கு உதவும் இளந்துளிரும் மொக்கும் தயிருடன் இவ்வாறே உதவுகிறது.

நெய்யில் வறுத்த பிசினி நரம்புக்கு வலுவேற்றுகிறதாம். கண்ணோய் உபாதையுள்ளவர்கள் இளம்கொழுந்தைப் பாலில் சேர்த்துப் போல்டீஸ் கட்டுவதுண்டு.

ஸ்திரீ புருஷாளுக்கு மர்ம இடத்தில் காணும் புண் முதலியவைகளை இக்கஷாயத்தால் கழுவதுண்டு. போல்டீஸ் போடுவதற்கும் இது உபயோகப்படுகிறது

வேலம்பட்டை 4 பலம், மாம்பட்டை 4 பலம், ஜலம் இருபது அவுன்ஸ், இவைகளை அரைமணி நேரம் காய்ச்சி வாய் கொப்புளிக்க உமிழ் நீர் குறையும். தொண்டைப் புண்ணுக்கு வேலம் பட்டை ஆலம்பட்டைக் கஷாயம் கொப்பளிக்கவேண்டும்.

தென்னிந்தியா விவஸாயம்.

WEALTH AND WEALTHY PERSONS.

செல்வமும் செல்வவான்களும்.

அமெரிக்காவிலுள்ள பலகோடீசுவரர்களில் மிஸ்டர் ஜே. டி. ராக்பெல்லர் பிரபலமானவர். மிஸ்டர் கார்னீஜியின் அளவற்ற செல்வத்தைப் பற்றியும், அவர் தர்மங்களைப்பற்றியும், பல முறை மித்திரனில் பேசியிருக்கின்றோம். அவரைவிட ராக்பெல்லர் செல்வவான். இவர் சமீபத்தில் தம்சொந்தத்தில் பெரும்பாகத்தை, அதாவது 150 கோடி ரூபாயை, மனித ஜாதியின் நன்மையின்பொருட்டுச் செலவிட எடுத்துவைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த மலைபோன்ற செல்வத்தைக் காலதேச வர்த்தமானங்களையறிந்து செலவு செய்யும்படி அவர் ட்ரஸ்டிகள் நியமித்திருக்கிறார். மிஸ்டர் ராக்பெல்லருக்கு இப்போது 70 வயது. இதுவரையில் அமெரிக்காவிலுள்ள வித்தியாஸ்தாபனங்களுக்கு அநேக கோடிக்கணக்காகக் கொடுத்திருக்கிறார். தம் செல்வம் அமெரிக்கா ஜனங்களுக்கு மட்டுமேயன்றி, உலகத்து ஜனங்கள் அனைவருக்குமே பிரயோசனப்படும்படி அவர் இந்த ஆச்சரிய தர்மத்தை ஸ்தாபித்திருக்கிறார்.

மனித ஜாதியின் துக்கங்களுக்கு அறியாமையே முக்கிய காரணமென்று அறிந்து, கல்வி அபிவிருத்திக்காகத் தமது சொத்துக்கள் உபயோகமாக வேண்டுமென்னும் உத்தேசத்துடன் ஏற்படுத்தியிருக்கிறார். துன்ப நிவர்த்திக்கும், பொதுவாய் மானிட வர்க்கத்தின் க்ஷேமத்துக் கவசியமான நானாவித முயற்சிகளிலும் தம் செல்வம் உபயோகப்பட வேண்டுமென்பது இவர் கருத்து. இவரது ஜன்ம தேசமாகிய அமெரிக்காவில் அச்சொத்தின் பெரும்பாகம் உபயோகப்படுமென்று நாம் நம்பக் கூடுமானால், அந்நிய தேசங்களை

ஒதுக்க வேண்டுமென்பது இவர் எண்ணமல்ல. உலகமுழுமையும் இவருடைய தர்ம சிந்தைக்குப் பாத்திரமென்று நம்பினவராய்த் தாம் எடுத்து வைத்திருக்கும் பலகோடி திரவியத்துடன் தம்மைப்போன்ற தனவான்கள் உலகத்தில் எங்கிருந்தாலும் அவர்களையும் தம்முடன் சேர்த்துத் தர்மம் செய்து, உலகத்தை வறுமை, துக்கம், அறியாமை, முதலிய குறைகளினின்றும் மீட்க முன் வந்திருக்கிறார். இவரைப்போல அளவற்ற செல்வம் படைத்தவர்களும் தர்ம சிந்தையுள்ளவர்களும் மற்றத் தேசங்களில் எவர் உளரோ நாமறியோம். பொருளிருந்தாலும் தர்ம சிந்தை யிருந்தாலன்றி அது உலகத்துக்குப் பயன் படாது. பொதுவாய்ச் செல்வம் குவிப்பவர்கள் பொருளாசையால் தூண்டப்பட்டுத் தம் சொந்தச் சுகங்களை நோக்கி குவிக்கிறார்களே யன்றி, ஜீவகாருண்ய முள்ளவர்களாய், வருந்தும் ஜீவன்களின் வருத்த நிவர்த்தியை நோக்கிப் பொருளீட்டுவ தில்லை. உலகத்தில் செல்வவான்களுக்குத் தன்னல மறுப்பும் ஜீவகாருண்யமும் பொதுவாய் இருக்குமானால் மனித ஜாதியின் துக்கங்கள் எவ்வளவோ தூரம் குறைந்து போகும்.

செல்வவான்கள் செல்வம் படைப்பது ஏழைகளின் உதவியாலென்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். செல்வம் வரும் வழியெதுவென்றால் ஏழைகள் சரீரத்தை வருத்தி உழைத்தாலன்றி அது வரமாட்டாது. விவசாயம், கைத்தொழில், சுரங்கத்தொழில், எதுவானாலும் உடம்பையுழைத்துக் கூலிபெறும் கூலியாட்கள் சகாயமில்லாமல் அத்தொழில் பயன் பெறாது. மிஸ்டர் ராக்பெல்லர் சுரங்கங்களில் எண்ணெய் எடுத்து ஏராளமாய் வியாபாரம் செய்து பொருள் சம்பாதித்தவர். சுரங்கங்களில் ஆயிரக் கணக்கான அடி ஆழம் பள்ளத்திலிறங்கிப் பல ஆபத்துக்களுக்கு உட்பட்டு, எண்ணெயை அள்ளி மேலேகொண்டு வந்தாலன்றி அவருக்குப் பொருள் எப்படிச் சேர்ந்திருக்கும்? கைத்தொழில் நடத்தும் முதலாளிகளுக்கும் அவர்களுடைய தொழிற்சாலைகளில் ஆயிரக் கணக்கான கூலியாட்கள் வேலை செய்யாவிட்டால் பொருள் சேர்ந்துவிடுமா? அவ்வாறே மகா ராஜாக்களும் ஜமீன்தார்களும் நெற்றி வியர்வை நிலத்திற்சொரிய உழைக்கும் ஏழைகள் கொடுப்பதும் இவர்கள் பெறுவதுமாகவே பூபதிகளென விளங்குகிறார்கள். எவ்விதச் செல்வத்திற்கும் உழைப்பே மூல காரணமென்று நம் நேயர்களுக்கு நாம் புதிதாய்ச் சொல்லவேண்டியதில்லை. இப்படி யிருந்தும் செல்வவான்கள் தங்கள் செல்வம் ஆகாசத்தினின்று வந்துவிட்டதாகக்கருதித் தங்கள் சுகத்தையே நாடி ஏழைகளிடத்தில் தயவும் அன்பும் அற்றவர்களாய்ப் பெருமைப்படுகிறார்கள். செல்வத்தை நாடிப் பாடுபடுவதில் பிசகில்லை. ஆனால் அது ஜீவகாருண்யத்தினின்றும் விலகி யிருக்குமானால் அப்போதுதான் அது பெரும் பிசகாகும். மிஸ்டர் ராக்பெல்லர் அநேக கோடி திரவியத்தைக் குவித்தவராயினும், அவர் வீண் டம்பங்களிற் பிரியமற்றவரென அறிகிறோம். தமக்குக் கடவுள் மலையான செல்வத்தை ஜீவராசிகளின் சுகத்தைப் பேணவும் துக்கத்தை அகற்றவுமே அருளினரென்று நம்பி 150 கோடி செல்வத்தைத் தருமத்துக்கு எடுத்து வைத்துவிட்டாரானால் அவர் பெருந்தன்மைக்கு வேறு அளவு என்ன? ஜாதிஜனமென்றும், மதமென்றும் தேசமென்றும், அந்தஸ்தென்றும், பாமர ஜனங்களுக்குப் பிரியமான வீண் வேற்றுமைகளைக் கருதாமல் மனித வர்க்க முழுவதும் தம் செல்வத்தின் நன்மைக்குரியதென்று அவர் நினைத்திருப்பதுபோல உலகத்துத் தனவான்கள் அனைவரும் நினையாதது மனித சுபாவம் இன்னும் அதற்கு இயற்கையான முதிர்ச்சி அடையவில்லையென்பதை விளக்குகின்றது.

நம்முன்னோர் லௌகிக செல்வங்களை வெறுப்பதே விவேகிகளுக்குத் தகுமென்று கற்பித்தார்கள். தற்காலத்தில் மேனாடுகளிலுள்ள ராக்பெல்லரைப்போன்ற பெரியோர் பொருளைவெறுப்பது சரியல்ல. அதை நாடிச் சேர்த்துப் பொருளின்மையால் வருந்துவோர் எங்குளராயினும், எம்மதத்தினராயினும் எவ்வருணத்தினராயினும் அவர்களுக்கு உதவுவதே சரியென்று கற்பிக்கிறார்கள். பொருளின்மையே துக்கங்களுக்குக் காரணமென்பதும், அந்த துக்கங்களைப் பொருளைக்கொண்டு நீக்க வேண்டுமென்பதும் ராக்பெல்லரின் அபிப்பிராயம். இவ்வபிப்பிராயம் சரியல்லவென்று சொல்ல நமக்குத் துணிவு வரவில்லை. அளவற்ற நானாவிதப் பொருள்களை அமைத்து கடவுள் ஜெகத்தை சிருஷ்டித்திருக்கிறார். அவற்றை விவேகிகள் வெறுத்துப் பிரயோசனமற்றவைகளாகச்செய்வது கடவுளின் எண்ணமென்றுஎப்படிச் சொல்லலாம்? இதையறிந்தே நம்பெரியோர் துறவறம் நாடாது இல்லறத்தில் வாழ்வோர் பொருள் தேடவேண்டுமென்றும், தேடிய பொருள்களை ஜீவகோடிகளின் துக்க நிவர்த்திக்காக உதவ வேண்டுமென்றும் விதித்திருக்கிறார்கள்.

ஆற்றுவாராற்றல் பசியாற்றல், அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

இவ்வாறு இல்லறத்தைப் புகழ்ந்து எழுதிய தெய்வப் புலமைத் திருவள்ளுவர் பசிமாற்றல் வருணாசிரம பேதங்களைத் தழுவினதாக வேண்டுமென்று கருதினவரல்லர்.

இக்காலத்துத் தர்மவான்கள் நம் பெரியோர் நியமித்த விதிகளின் கருத்தையறியாதவர்களாய் இப்பேதங்களையே பாராட்டித் தருமம் செய்கிறார்கள். முழுவதும்அர்த்தபராள்என்று சொல்லப்படும் மேனாட்டாரைச் சேர்ந்த மிஸ்டர் ராக்பெல்லர் நம்சநாதன தர்ம விதிகளுக்கிசைய மனித வர்க்கம் முழுமையுமே தமது கைங்கரியத்துக்கு உரியது எனத் துணிந்தது இந்தியராகிய நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடியது. மேனாட்டாரைப் பார்த்து மோட்டார்க்கார்களையும் குதிரைப்பந்தயங்களையும் உல்லாசக் கச்சேரிகளையும் விரும்பிப் பொருளழிக்கும் நம்மவர் மிஸ்டர் ராக்பெல்லரைப் பார்த்து, செல்வம் ஆத்ம சுகத்துக்கல்ல, இதர ஜீவஹிம்சை நிவாரணத்துக்காக என்று கற்கக்கூடாதோ?

சுதேசமித்திரன்.

CHOLAM.

சோளம்.

ஆற்றுப் படுகை நிலம், அல்லது கருப்புமண் தரை, பொறுக்குமண்கலந்த செவ்வல்தரை பயிர்களுக்கு ஏற்றது. இப்படிப்பட்ட நல்ல நிலத்தை சமமாக்கி ஒரு ஏக்கருக்கு சுமார் 20 வண்டிக்குக் குறையாமல் அடை. எருவாவது, மாட்டின் சாணமும் சாம்பலும் கலந்த எருவாவது போட்டு, குறைந்தபக்ஷம் 5 உழவாவது உழுது புழுதியாக்கி, 2 வாரத்துக்குப்பின் சாதாரணமாய்க் கிடைமறிக்கிறதுபோல் கிடைமறித்து, உடனே ஒரு உழவு உழுது முன்போல் இரண்டாந்தரமும் கிடை கட்டி, உடனே 2-ம் உழவும் உழுது, அதில் தண்ணீர் பாய்வதற்கு ஏற்றதாக வாய்க்கால்கள் பிடித்து, பாத்திகளில் 2 அடிக்கு ஒரு சிறுவாய்க்காலாக 3 அங்குல ஆழத்தில் இழுத்து, அதில் $1\frac{1}{2}$ அடிக்கு ஒவ்வொரு குழியும், $\frac{1}{2}$ அடி ஆழம் இருக்கும்படி ஓரே கொத்தினால் சிறு குழிகள் வெட்டி, அதில் ஒரு கைகொண்ட கிடைக்கக்கூடிய நல்ல உரம் போட்டு மண் நிரவி குழிக்கு ஒவ்வொன்றாக விதைகளை ஊன்றி ஈரம் காயாமல் தூக்குத் தண்ணீர் விட்டுவரவேண்டும். அதிக ஈரம் கூடாது.

விதைகள் முளைத்து (சுமார் 20 நாளைக்குப்பின்) ஒருசாண் உயரமானவுடன் பயிர்களைச் சுற்றி மெதுவாக கொத்தி பின் தண்ணீர் பாய்ச்சிவரவேண்டும். இச்சமயத்தில் பயிர் வெளுத்திருக்குமானால் ஒருதண்ணீர் காயப்போட்டு தண்ணீர் விடவேண்டும். சுமார் முளைத்த 40 நாளுக்குள் 3 அடி உயரமாகும் போது தோகைகள் ஒடியாமல் எங்கும் கொத்தி சோளத்தைச்சுற்றி ஒரு அடிமண் வரப்புப்போல் அணைத்து தண்ணீர் விடவேண்டும்,

பயிரின் அடிப்பாகத்திலுள்ள 3, 4 கணுக்களிலிருந்து புதுவேர் உண்டாகி அணைத்த மண்ணில் வேர் ஊன்றுமாதலால் இந்தச்சமயத்திலும் ஒவ்வொரு பயிரின் தூரிலும் கொஞ்சம் உரம் வைப்பது நல்லது. இதற்குப்பின் ஈரம் காயாமல் தண்ணீர் விட்டுவரவேண்டும். 2, 3 நாளைக்கு தண்ணீர்கட்டி நிற்கும்படி விடக்கூடாது. களைகள் அதிகமாய் முளைக்கக்கூடிய நிலத்திற்கு மண் அணைக்கும் முன்னேயாவது அணைத்தபின்னாவது கூட ஒரு களை கொத்துவது நல்லது.

இரண்டுக்கு மேற்பட்ட கதிர்களில் திடமாயுள்ள இரண்டைத்தவிர மற்றவைகளை எடுத்துவிட்டால் மீதியானவை நன்றாய்ப் பெருத்து மணிபிடிக்கும். பால் பிடிக்கும் காலத்தில் கிளிகளாவது, நரிகளாவது, நாயாவது சேதப்படுத்தாமல் காத்துவரவேண்டும். நரிகளுள்ள இடத்தில் சோளக்கொல்லைக்குச் சமீபத்தில் முளை அடித்து நாயைக்கட்டினால் நரிகள் வராது. (நாய்களை அவிழ்த்துவிட்டால் தட்டைகளை மடக்கிக் கதிர்களைத்தின்று சேதப்படுத்திவிடும்.)

மார்கழி௴ முதல் தை௴ வரையிலும்
சித்திரை௴ முதல் வைகாசி௴ வரையிலும்
ஆடி௴ முதல் ஆவணி௴ வரையிலும்

விதைகள் போட ஏற்றகாலம் தைப்பட்டமும் ஆடிப்பட்டமும் நல்லபட்டம் சித்திரைப்பட்டம் காற்றில் அகப்படுமாதலால் சற்று ஒதுக்கும் கலந்த அகத்தி நிழலுமுள்ள இடங்களில் போட்டு வாடாமல் தண்ணீர் விட்டுவரவேண்டும். ஆடிப்பட்டம் பால் பிடிக்கும் காலத்தில் மழையில் அகப்படாதபடி பிந்தாமல் முந்திக்கொள்ளவேண்டும்.

இதில் 65 நாளைக்குள் விளையும் சர்க்கரைச் சோளத்திற்கு 15-ம் நாளில் களைகொத்தி 30-ம் நாளில் மண் அணைக்கவேண்டும். களைகொத்தல், மண் அணைப்பு முதலியவை இதற்குச் சற்று முன்னதாகவே செய்யவேண்டும். மண் அணைக்கும் காலத்திலும் விசேஷித்த உரங்கள் கொடுப்பது நல்லது.

1. தங்கவர்ணச் சோளம்.—இது அமெரிக்காவில் கோல்டன் ப்யூடி என்றும், ஆஸ்டிரேலியாவில் கோல்டன் ரிங்மேய்ஸ் என்றும் அழைக்கப்படுகிறது இது சாதாரண முத்துச் சோளத்தையும் கதிர்களையும் பார்க்கிலும் 3 மடங்கு பெரிது இது 90 நாளில் விளையும்

2 பொன்வர்ணச் சோளம்.—தங்கவர்ணச் சோளமும் நாட்டு முத்துச் சோளமும் சேர்த்து உண்டாக்கப்பட்ட சோளம் இது தங்கவர்ணச் சோளக்கதிர்களைப் பார்க்கிலும் சற்று நீளமும், நாட்டு முத்துச் சோளக்கதிர்களைப் போல அதிக மணிகளுமுள்ளது. விளையும் மணி நெருக்கமும் நாட்டுச்சோளத்திற்கு ஒத்திருக்கும். நிறமும் கதிர் பருமனும் தங்கவர்ணச் சோளத்தை ஒத்திருக்கும். நாட்டுச் சோளத்தைப் பார்க்கிலும் 2 மடங்கு பெரிது. 75 நாளைக்குள் விளையும்.

3. பெரிய சிவப்புச்சோளம்:—இது தங்கவர்ணச் சோளமும் நாட்டுச் சிவப்புச் சோளமும் சேர்த்து உண்டாக்கப்பட்ட சோளம். நாட்டுக் கதிர்களைப்பார்க்கிலும் 2 மடங்கு பெரிதாய் இருக்கும். தங்கவர்ணச் சோளம் பொன்வர்ணச் சோளங்களைப்பார்க்கிலும் சற்று தித்திப்பாய் இருக்கும். 75 நாளைக்குள் விளையும்.

4. சர்க்கரைச் சோளம்:—கதிர்கள் முற்றித் தட்டைகள் காய்ந்து போன போதிலும் மணிகள் பாலாகவும், மிருதுவாகவும், எல்லாச் சோளத்தைப்பார்க்கிலும் தித்திப்பாகவும் இருக்கும். 65 நாளைக்குள் விளையும்.

5. பால் வெள்ளைச்சோளம்:—இது பயிர், கதிர், மணி, விளையும் நாள் முதலியவைகளில் தங்கவர்ணச் சோளத்தை ஒத்திருந்தாலும் நிறத்தில் பாலை ஒத்த வெண்மையாகவும் தித்திப்பாகவும் இருக்கும். 90 நாளில் விளையும்.

6. நாட்டு முத்துச்சோளம்:—இந்தச் சோளத்தில் வெள்ளை மஞ்சள் சிவப்பு விதைகள் இருக்கின்றன. 75 நாளில் விளையும்.

விவசாயி.

REVIEW OF THE PRESS.

பத்திரிகை ஆராய்ச்சி

◆

SCHOOL GARDENS.

பள்ளிக்கூடத் தோட்டங்கள்.

◆

இது விஷயமாய் ஜூன் மாஸத்து "வித்யா விஹாரிணி"யிலும் "தென்னிந்திய விவஸாயத்திலும்" இரண்டு வியாஸங்களிருக்கின்றன. வித்யா விஹாரிணி வியாஸத்தின் ஸாராம்சத்தை இந்த ஸஞ்சிகையில் இன்னொருபக்கத்தில் வித்யா விஷயக்குறிப்புகளின் கீழ்க்காணலாம். "பிழைக்கும் வழியில்" மகா-ா-ா-ஸ்ரீ டி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் சில முறைகளைத்தெரிவித்து முதலில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளின் தகப்பன்மார்களுக்குப் போதிக்க வேண்டுமென்று எழுதியிருப்பது நம் சந்தாதாரர்களின் ஞாபகத்தில் இருக்கலாம். அவர் சொல்லுவது சாத்தியமாகக் கூடிய விஷயமல்லவென்று ஜூன்மாதத்து "தென்னிந்திய விவஸாயம்" கூறி வேறு சில முறைகளைத்தெரிவிக்கிறது. பள்ளிக்கூடத்துக்கு ஏற்படுத்தும் தோட்டங்கள் கைத்தொழிலுக்கே ஆதாரமாயிருக்கக்கூடாதென்றும், கைத்தொழிலுக்காக வேறு பள்ளிக்கூடங்கள் இருப்பது அவசியமென்றும், "தென்னிந்திய விவஸாயம்" சொல்லுகிறது. பிள்ளைகளின் பெற்றோர்கள், மண்வெட்டல், கூலி வேலைசெய்தல், பாய்பின்னல்முதலியவேலைகளை இழிவாக நினைத்து அவைகளைக்கற்றுக்கொள்ளும்படித் தங்கள் பிள்ளைகளை விடமாட்டார்கள். பள்ளிக்கூடத்தில் படிக்கும் எல்லாப்பிள்ளைகளுமே கூலிகளாகப் பிற்காலத்தில் ஆகமாட்டார்கள். எல்லாருமே உயர்ந்த பதவிக்கும் வரமாட்டார்கள். ஆதலால் தான் பாலிய வயதில் புத்தியை மங்கலாக்கும் குருட்டுப் பாடங்களைக் கற்பிக்காமல் விஷயங்களைக் கண்ணால் பார்வையிட்டும், கையால் தொட்டும், அனுபவசித்தமாய் அமெரிக்கா முதலியதேசங்களில் பிரபஞ்சவிசாரப்பாடங்கள் கற்பிக்கிறார்கள். பிள்ளைகள் பார்த்திராத திமிங்கலம், நீர்யானை, புலி, சிங்கம் முதலியவைகளைப்பற்றி அவர்களுக்குப் பாடம் சொல்லுதல் அவர்களுடைய புத்தியைக் கெடுக்கும். ப்ரத்தியட்சத்தில் பார்க்கும் பசு, குதிரை, பூனை, முதலிய மிருகங்களைப்பற்றியும், அவரை, துவரை, நெல், முதலிய தானியங்களைப்பற்றியும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால் அவர்கள்புத்தி வளரும். இப்படிச்செய்வதால் பிள்ளைகளுக்கு விஷயங்களைக் கவனிக்கும் சக்தி தானாகவே உண்டாகிறது. அவைகளில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறியும் திறமையும் உண்டாகிறது.

இது விஷயமாய் டிப்டி கலெக்டர் ராவ்பகதூர் தர்மாங்க ராஜூ திருவள்ளூரில் சுமார் ¼ ஏகரா குத்தகைக்கு எடுத்து பாங்கு நெல், ராகி, புகையிலை, பருத்தி, சோளம், கொள், சணல், கரும்பு முதலிய பயிர்களை சால்சாலாய்ப்போட்டு இந்த வெயில் காலத்தில் கஷ்டப்பட்டு ஜலம் பாய்ச்சிப் பிள்ளைகளுக்குப் பாடம் கற்பித்து வருகிறார்.

கவரன்மெண்டார் இப்படிப்பட்ட தோட்டத்தை ஸ்தாபிக்கப் போதுமான பணச்செலவு செய்யவேண்டும். விவஸாய டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் இந்தத் தோட்டத்துக்கு கரும்பு விதை இனாமாகக் கொடுக்கமாட்டோமென்று சொல்லிவிட்டார்களாம். அப்படிச் செய்யாமல் கவரன்மெண்டார் விவஸாயப்பண்ணைகள், மியூஸியம், முதலானவைகளை ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் உபயோகமாகும்படி செய்யவேண்டும். பள்ளிக்கூடத்தோட்டங்களில் ஜீவராசிகளும், செடி கொடிகளும் பல்கிப் பெருகுவதின் விஷயமாய்ப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கவேண்டும். தவிர, பிள்ளைகள் விளையாட்டுக்கும், தேகப்பயிற்சிக்கும் தோட்டவேலைகள் இருக்கவேண்டும். பள்ளிக்கூடத் தோட்டமென்றால் பிரபஞ்ச விசாரணை செய்யுமிடமாயிருக்கவேண்டும். இவைகளுக்குப் பணம் பிடித்தாலும் காரியசித்தி பெறவேண்டுமானால் பணத்தைப் பார்க்கக்கூடாது. இப்படிப்பாடம் கற்பித்தால் அரைகுறையில் படிப்பை விட்டவர்கள் கூலி வேலை செய்ய உதவுவார்கள். நன்றாய்ப் படித்துத் தேறியவர்கள் சாஸ்திர ஆராய்ச்சிசெய்ய உதவுவார்கள். ஆதலால் இருதிறத்தாருக்கும் பயன் உண்டாகும். தேசம் சாஸ்திரத்திலும் கைத்தொழிலிலும் விருத்தியடைந்து க்ஷேமப்படும்.

ANTHRAX.

அடைப்பான்.

“அடைப்பான்” என்னும் வியாதியைப்பற்றி ஜுன் மாதத்துக் “கிருஷிகனில்” ஒரு வியாஸம் காணப்படுகிறது. இந்த வியாதிக்குத் திருட்டு நோவு, தெரியன், பிச்சநோவு எனப் பல பெயர்கள் உண்டு. இந்த வியாதியினாலேயே அநேக கால் நடைகள் நம் தேசத்தில் மரணமடைகின்றன. மாடுகளுக்கும், செம்மறியாடு, வெள்ளாடுகளுக்குமே இந்த வியாதி விசேஷமாய் உண்டாகிறது. நாய்களுக்கும் பன்றிகளுக்கும் இந்தவியாதி எளிதில் வருவதில்லை. சில பட்சிகளுக்கும் இந்தநோய் உண்டாவதாகச் சில வைத்திய சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். மனிதர்களுக்குக் கூட இந்த வியாதி கால்நடைகளிலிருந்து தாக்குவதுண்டாம். உஷ்ணமும், குளிர்ச்சியும் அதிகமாக உள்ள தேசங்களில் இந்தவியாதி உண்டாகிறதென்று தெரிவதால் இது உண்டாவது சீதோஷ்ணத்தைப் பொறுத்ததாயில்லை. மேட்டு பூமியில் அதிகமாக இந்தவியாதி வருவதில்லையென்றும், பள்ளத்தாக்குகளிலும் சதுப்பு நிலங்களிலுமே இது அதிகமாக உண்டாகிறதென்றும், இந்த நிலங்களில் தண்ணீர் வடியும்படியான ஏற்பாடு செய்தால் மறுபடி இந்தவியாதி அதிகமாக உண்டாவதில்லை என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மற்றத் தொத்து வியாதிகளைப் போலவே இந்த வியாதியின் விஷம் ஜந்துக்களின் இரத்தத்தில் சம்பந்தப்படுவதால் உண்டாகிறது. இந்தவியாதி திடீரென்று ஒரு ஜந்துவுக்கு உண்டான உடனேயே அது இறந்துபோகும். வியாதி தோன்றிய 12-மணி நேரத்துக்குள்ளே கால் நடைகள் இறந்து போகக் கூடிய அவ்வளவு அபாயகரமான நோய். சிற்சில சமயங்களில் இரண்டுநாள் வரையிலிருந்து பின்பு மரணம் சம்பவிப்பதுமுண்டு. இந்த அடைப்பான் வியாதி உள்ளடைப்பான், வெளியடைப்பான் என்று இரண்டு வகைப்படும். வெளியே ஒரு குறியும் தோன்றாமல் சரீரத்துக்குள்ளேயே விஷமுண்டாக்கி மரணம் நேரிடச்செய்யும் அடைப்பானுக்கு உள்ளடைப்பான் என்று பெயர். வியாதி உண்டானதும் கால் நடைகளின் தேகத்தில் ஏதாவது ஒரு பாகத்தில் வீக்கமுண்டாகும். இதற்கு வெளியடைப்பான் என்று பெயர்.

இரவில் நன்றாய்த் தீனிதின்று கொண்டிருந்த மாடு காலையில் இறந்து கிடக்கும். அப்படி இறந்து போனதற்குக் காரணம் நமது கிருஷிகருக்குத் தெரிகிறதில்லை. ஏனென்றால் நம்மவர்கள் எந்தவிஷயத்தையும் கூர்மையாய் கவனிக்கும் வழக்கமில்லை. தெய்வகதியாலோ அல்லது விஷம்தீண்டப்பட்டோ இறந்துபோயிற்றென்று எண்ணிச் சும்மா இருந்து விடுகிறார்கள். ஊன்றிக் கவனித்தால் உள்ளடைப்பான் உண்டானதற்குரிய குறிகளையும் அறிந்து கொள்ளலாம். இந்தவியாதி உண்டானவுடனே மாடு சற்று நேரமாவது அமைதியுடனிராது. படுப்பதும் எழுந்திருப்பதுமாக இருக்கும். கட்டிக்கிடக்கும் இடத்தைவிட்டு அப்புறம்போக முயலும். கண்கள் சிவந்து மிரண்ட பார்வையுடையனவாயிருக்கும். தேகத்தைத் தொட்டுப்பார்த்தால் சூடாகக் காய்ச்சலுண்டானது போலிருக்கும். நாடி துடித்து விரைவாகச் செல்லும். முகம் வாடிக் கவலையுற்றிருக்கும். தேகத்தில் வலிப்பும் இழுப்பும் லேசாய்த் தெரியும். மூக்கிலிருந்து நீர் வடிவதுடன் அதில் இரத்தங்கலந்து இருக்கும். வயிற்றுவலி இருப்பது போலவும் காணப்படும். வயிறு உப்பி அவஸ்தை உண்டாகி மாடு முக்கிக்கொண்டிருக்கும். இரத்தம் கலந்த சாணி போடும். மூத்திரம் கறுப்பாயிருக்கும். வியாதிப்பட்ட பிராணி துடித்துக்கொண்டு கிடந்து பின் எழுந்து தடுமாறிக்கீழே விழுந்து மரணமடையும். சில சமயங்களில் வெறியுள்ள மிருகம் போல் காணப்பட்டு மயக்கமடைந்து கீழே விழுந்து மடியும்.

THE MADRAS GLASS WORKS, LTD.

மதராஸ் கண்ணாடித் தொழிற் சாலை.

இந்த தொழிற் சாலையில் நடக்கும் வேலைகளைப் பற்றி ஜுன் மாஸத்து விவேக போதினியில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

இப்பொழுது இந்தச்சாலையில் பிரதானமாக ஸோடா ஸீஸா (பெரிது, சிறிது), ஓடு, வாய் அகன்ற ஜாடி, ஸீஸா, கண்ணாடிகள் இவைகளைச் செய்கிறார்கள். இவைகளுக்குள் பெரிய ஸோடா ஸீஸா 144-க்கு ரூ. 13½ விலை, வெளியூர் விலையோ ரூ. 18. சிறியதன் விலை. ரூ 11¼. வெளி விலை ரூ 15. ஓடு மங்கலாக்கியது ஒன்றுக்கு ரூ. 1—12—0 வும், மங்கலாக்காததற்கு ரூ. 1—8—0 வும் விலை. வெளிவிலையோ முறையே ரூ. 4—4—0, ரூ. 3—12—0-ம் ஆம். மற்றையவைகளும் இவைபோலவே மிகுந்த தாழ்ந்த விலைக்குக் கிடைக்கும்.

இங்கு 2 அல்லது 1½-நிமிஷத்தில் செய்யப்படும் ஸோடா ஸீஸா ஸுமார் 450-பவுன் அழுத்தத்தை உடையாமல் தாங்குகின்றது. வெளி தேசத்து ஸீஸாக்கள் ஸுமார் 225-பவுன் அழுத்தம் தான் தாங்கும்.

MILK SUPPLY.

பால் சப்ளை.

மிஸ்டர் ஏ. ஜி. ரத்தனம் என்பவர் மே மாதத்து “சக்ரவர்த்தினி” யில் இந்த விஷயமாக ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார்.

பாலின் சுத்தாசுத்தத்தினாலும், குணாகுணங்களினாலும் அதைச்சாப்பிடுகிறவர்களுடைய தேகஸ்திதி மாறுபாடு அடைகிறது. பால் முக்கியமான உணவுப்பொருளாதலால் க்ரேட் ப்ரிட்டனில் மாத்திரம் ஒரு வருஷத்துக்கு 120,000,000 பவுன் பால் செலவாவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அசுத்தமான பாலைக் குடிப்பதினால் தொத்து வியாதிகள் உண்டாகின்றன. இதை ஜனங்களுக்கு அறிவிக்கவும், சுத்தமான பால் சப்ளை செய்யும்படியான ஏற்பாடு செய்யவும் முனிஸிபாலிட்டியார் முயலவேண்டும். இந்த விஷயமாகப் பொது லைப்ரரிகள், புஸ்தகங்கள் ஏற்படுத்தியும், உபந்நியாசங்கள் செய்தும், ஜனங்களுக்கு உண்மையை அறிவிக்கவேண்டும்.

இந்தியாவில் பால் அசுத்தப்படுவதற்குக் காரணம் அசுத்தமான இடங்களில் மாடுகள் படுப்பதால் அவைகளின் மடிகளிலும், முலைக்காம்புகளிலும், சப்பைகளிலும் சாணி ஒட்டிக்காய்ந்து உலர்ந்துபோயிருக்கிறது. பால் கறப்பவர்கள் மாட்டின் மடியை அலம்புகிறதில்லை. பால்காரன் பால் கறந்தவுடன் தன் கையில் ஒட்டியிருக்கும் பாலை மாடுகளின் சப்பையில் துடைக்கிறான். அதனால் மாட்டின் ரோமம் உதிர்ந்து பாலில் விழுகிறது. விரல்களை மிருதுவாக்கிக்கொள்ளும் பொருட்டு பால்காரர்கள் விரல்களில் எச்சில் துப்பிக்கொள்ளுகிறார்கள். சிலர் எண்ணெய்ப் பாத்திரத்தில் அடிக்கடி விரல்களைத் துவைத்துக்கொண்டு பால் கறக்கிறார்கள். வேறு சிலர் தொடையில் எண்ணெயைத் தடவிக்கொண்டு அப்போதப்போது தொட்டுக்கொள்ளுகிறார்கள். எச்சிலைத்தொட்டுக்கொண்டு பால் கறப்பதால் அந்த எச்சில் பாலில் கலக்கிறது. அந்தப் பாலைக்குடிக்கிறவர்களுக்குப் பால்காரனுக்குள்ள வியாதி தொத்தும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. எண்ணெய் கலந்தபாலைச் சாப்பிடுவதால் நேரிடும் தீங்குகளோ பல. வைசூரி போட்டிருக்கும் மாட்டைக் கறந்துவிட்டு வேறொரு மாட்டையும் கையைக் கழுவாமல் கறக்கிறான். மாட்டின் வைசூரியால் உண்டாகும் கெடுதியை பால்காரர்கள் கவனிக்கிறதில்லை. இதனால் மாட்டின் வியாதி இவனுக்குத் தொத்தி இவனிடமிருந்து இவன் கறக்கும் மாட்டுக்கும் போகிறது. வைசூரி போட்டின மாட்டின் பாலைச் சாப்பிடுவதனால் தொண்டைக்கட்டும், தொண்டை வலியும் புண்ணும் உண்டாகின்றன. பால் கறக்கிறவனுக்கு ஏதாவது வியாதியிருந்தால் அவன் கறந்த பாலைச் சாப்பிடுகிறவர்களுக்கும் அந்தவியாதி தொடர ஹேதுவாகிறது.

இனி, பால் சப்ளைசெய்யும் விதத்தைக் கவனிப்போம். பாலில் தண்ணீர் கலப்பது ஒரு கொடிய வழக்கம். அதிலும் இந்தியாவில் தண்ணீர் சுத்தமாயிராது. சுத்தமாயில்லாவிட்டாலும் வடிக்கட்டி உபயோகிப்பதுமில்லை. மதராஸிலோ கண் முன்னேயே குழாய் ஜலத்தைப் பிடித்து ஊற்றுகிறார்கள். குழாய்த் தண்ணீரிலோ மஷ்டுக்களும் அசுத்தங்களும் அதிகம். சில இடங்களில் காய்ச்சாத பாலில் வெண்ணெய் எடுத்து விடுகிறார்கள். அந்தப்பாலை நாம் சாப்பிடுவதால் என்ன பிரயோஜனம்? சுத்தமானபால் கிடைப்பதற்கு சில நிபந்தனைகளும் பரிசோதனைகளும் அவசியம் இருக்கவேண்டும். அவைகளாவன:—

(1) தனியான மாட்டுக்கொட்டாய்களில் மாடுகளைக் கட்டவேண்டும் (2) அந்தக் கொட்டாய்களைத் தினமும் சுத்தப்படுத்தவேண்டும். (3) மாடுகளைத் தினம் நன்றாய்த் தேய்த்துக் குளிப்பாட்டவேண்டும் (4) மாட்டு வைத்தியர்களைக்கொண்டு எல்லாப் பசுக்களையும் சோதிக்கவேண்டும். (5) பால்காரர்கள் வியாதியற்றவர்களா யிருக்கவேண்டும். (6) பசுக்களுக்கு சுத்தமான ஆகாரம் கொடுக்கவேண்டும், (7) பால் கறக்கும்பொழுது பால்காரர்கள் கைகளைச் சுத்தமாய்க் கழுவிக்கொள்ளவேண்டும். (8) மாட்டுக் கொட்டாய்களில் பால் துளிகள் சிந்தி யிருக்கக் கூடாது. (9) மாட்டுக்கொட்டாய்களை முனிஸிபல் அதிகாரிகள் பரிசோதிக்கவேண்டும். (10) பால் கறக்கிற இடம் சுத்தமாயிருக்கவேண்டும். அங்கேயும் அதைச் சுற்றியும் காய்கறிகள் விற்கக்கூடாது. (11) அசுத்தமான பால் சப்ளை செய்கிறவர்களைப்பற்றி அதிகாரிகளிடம் ரிப்போர்ட் செய்யவேண்டும். அதிகாரிகள் விசாரித்து அப்படிச் செய்கிறவர்களுக்கு தண்டனை விதிக்கவேண்டும்.

SUNLIGHT AND SOIL FERTILIZATION.

சூரிய அனலும் நிலம் பண்படுத்தலும்.

இது விஷயமாக மே மாதத்து "கமத்தொழில் விளக்க" த்தில் ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது. நச்சுமருந்துகளினாலும் நெருப்பினால் சுடுவதாலும் நிலத்தைக் கொழுமையாக்கக்கூடிய நூதன முறை கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. நிலத்துக்கிடும் பசளையில் "நைட்ரஜன்" என்னும் வஸ்து அதிகமாயிருக்கவேண்டும். ஏனென்றால் நிலத்துக்குள்ளிருக்கும் 'பாக்டீரியா' என்னும் பூச்சிகள் இந்த வஸ்துவை லகுவில் நைட்ரேட் உப்புகளாக மாற்றி பயிர்களுக்கு உணவாக்குகின்றன. இந்தச்சிறுபூச்சிகளை 'அமீபி,' 'இன்பியூஸோரியா', முதலிய பெரிய ஜந்துக்கள் தின்று அழித்துவிடுகின்றன. இந்தப்பெரிய ஜந்துக்களை நிலத்தைச் சுடுவதால் அழித்து விடலாம். பெரியபூச்சிகளோடு, சாதகமானசிறிய பூச்சிகளும் அழிந்துபோமென்பது வாஸ்தவமானாலும், அப்படி அழிந்தது போக பாக்கி யிருக்கும்சிறுபூச்சிகள் பெருகி நிலத்தைக் கொழுமையுள்ளதாக்கி நன்றாக விளையும்படிச் செய்யும். நவீனமாக இப்போது சாஸ்திரிகள் கண்டு பிடித்த இந்த முறையை நம் இந்தியர்கள் நெடுங்காலமாக அனுஷ்டித்து வருகிறார்கள். இதற்கு உதாரணம் கோடை உழவு என்று உழுது நிலத்தைச் சூரிய உஷ்ணத்தில் காயும்படி விட்டு வருவதே போதுமானது. ஆனாலும் அப்படிக் காயவைப்பதற்குக் காரணத்தை மட்டும் நம் முன்னோர் விளக்கவில்லை. இப்போது காரணம் தெரிந்திருப்பதால் நிலத்தை நன்றாய்க் காயவைத்துப் பயிரிடும் வழக்கத்தை அதிகமாய் நாம் அனுஷ்டிக்கலாம். வெயிலில் காய்ந்த நிலத்தில் பயிரிடுவதால் விளைச்சல் அதிகமாகும். 'கார்பன் டைஸல்பைட்' என்னும் கந்தகக் கரியுப்பு முதலிய நச்சு மருந்துகள் அல்லது நெருப்பு, எப்படி நிலத்திலுள்ள பெரிய ஜந்துக்களை அழித்து சிறியவைகள் பெருகி நிலத்தைப் பண்படுத்துகின்றனவோ அப்படியே சூரிய வெளிச்சமும் செய்கிறது. சூரிய உஷ்ணம் படாத நிலங்களுக்கு கார்பாலிக் ஆஸிட், பர்மாங்கனேட் ஆப் போட்டாஷ் போன்ற நச்சு மருந்துகளைத் தெளிப்பதாலும், நெருப்பினால் சுடுவதாலும் கொழுமையுண்டாகும். சூரிய வெப்பம் பாக்டீரியாக்களை அழிக்கிறதென்பதற்குப் பாய், தலையணை முதலியவைகளை நாம் வெயிலில் காயப் போடுவதே போதுமான பிரமாணம். ஆதலால் கோடைகாலத்தில் நிலத்தைத்தரிசாய்ப்போட்டுவந்தவர்கள் இனிமேலாவது தவறாமல் கோடை உழவு உழுவார்களென்று நம்புகிறோம். முக்கியமாய் நெல் வயல்கள் இப்படி பண்படுத்தப் படவேண்டும். அப்படி உழுவதற்கு ஸாதாரணமாய் உபயோகிக்கும் மரக்கலப்பை உதவாது. அது நிலத்தை ஆழ உழுவதில்லை. இரும்புக்கலப்பைகொண்டே உழவேண்டும்.

TO TRANSPLANT A TREE.

மரத்தைக் கிளப்பி வேறிடத்தில் வைத்தல்.

ஒரு இடத்தில் வளர்ந்திருக்கும் மரத்தை, இன்னொரு இடத்தில் பெயர்த்து எடுத்து வைப்பது அனுபவ முள்ளவர்க்குக்கூடக் கொஞ்சம் பிரயாசையானது. மரங்களை மழைகாலத்தில் பெயர்த்துவைப்பதுதான் வழக்கமாயிருக்கிறது. மரங்கள் இளமையாயிருந்தால் வேர்கள் அறுந்து போகாமல் மண்ணோடு எடுத்து வேறொரு இடத்தில் சுளுவாய் வைத்துவிடலாம். பெரியமரங்களை வேறிடத்திற்குக் கொண்டுபோக வேண்டுமானால் முதலில் வேர்களை வெட்டிக்கொஞ்ச மாஸங்களுக்குவிடவேண்டும். வேர்களை பல வடிவமான கத்தியால் வெட்டலாம். கொஞ்ச வேர்களை மாத்திரம் வெட்டவேண்டுமானால் ஒரு பாறையால் சுற்றிவர வெட்டலாம். மரத்தை நட உத்தேசிக்கும் இடம் சமீபத்திலிருக்கும் பக்ஷத்தில் மரத்தை மண்ணோடு பெயர்த்துக்கொண்டுபோய் நாட்டினால் அது வாடாமல் வளரும். தூரமான இடங்களுக்குக் கொண்டு போகவேண்டுமானால் வேர்கள் வாடாமல் அவைகளின்மேல் களிமண்ணை அப்ப வேண்டும். நசுங்கிப்போயிருக்கும் வேர்களிருந்தால் அவைகளை கூர்மையான கத்தியால் வெட்டி விட வேண்டும். வேர்களையெல்லாம் கீழ் நோக்கியே வெட்டவேண்டும். மரத்தை எடுத்துவைக்கும் குழி பெரிதாயும் விசாலமாயும் இருக்கவேண்டும். முன் மரம் நிலத்தின் கீழ் இருந்த ஆழத்தை விட இரண்டு அங்குலம் ஆழம் ஜாஸ்தியாயிருக்கவேண்டும். சில மரங்களைப் பெயர்த்து வைத்தால் அவைகள் ஒருக்காலும் பிழைக்கமாட்டா. அப்படியாவது அவைகளின் சுபாவம். பெயர்த்து வேறு இடத்தில் வைக்க வேண்டுமானால் மரம் வளர்ந்து இரண்டு வருஷமாவதற்குள்ளேயே வைத்துவிடவேண்டும்.

AGRICULTURAL NOTES.

விவஸாயக் குறிப்புகள்.

Raising Cocoanut Seedlings.

தென்னம்பிள்ளை சாற்றுதல்.—மடகாஸ்கர் என்னும் தீவு விவசாய அதிகாரிகள் தேங்காய் முளையை எப்படிவைத்தால் விருத்தியாகுமென்று பல வகையாகச் சோதித்துப் பார்த்ததில், தேங்காய்களைக் குறுக்காகப் புதைப்பதாலும், தேங்காயின் கீழ்ப்பாகத்தை நிலத்தில்வைத்துச் சாய்வாகப் புதைப்பதாலும் முளைகள் நன்றாய்க் கிளம்புமென்றும், தேங்காய்களைத் தலைகீழாகவும், செங்குத்தாகவும் புதைப்பதால் நன்றாய் முளை கிளம்புவதில்லையென்றும் தெரியவருகிறதாம். பின்னால் சொல்லியபடி செய்யாமல் முன் சொன்னபடி செய்யும்படி இவர்கள் சொல்லுகிறார்கள்.

Cocoanut Trees

தென்னை மரம்.—தென்னந் தோப்பு வைத்திருக்கிறவர்கள் கவனிக்கவேண்டிய அம்சங்களில் முக்கியமாய் சில விஷயங்கள் உண்டு. முதலாவது தோப்பில் ஜலம் தங்காமல் வடிகால் சௌகரியங்கள் இருக்கவேண்டியது. இரண்டாவது, பஞ்சை நிலமாயிருக்கும் பக்ஷத்தில் மரங்களைக் காய்க்கச் செய்ய நன்றாய் எருப்போடவேண்டும். மூன்றாவது, பட்டுப்போன தென்னை மரத்தை தோப்பில் விட்டு வைக்கக்கூடாது. இப்படி நிறுத்தி வைத்திருந்தால் அந்த மரக்கட்டைகளில் பலவித பூச்சிகள் தங்கி தென்னை மரங்களுக்குக் கெடுதியை விளைவிக்கும்.

Irrigation Methods.

தண்ணீர் இறைக்கும் விதங்கள்.—தண்ணீர் மூன்று அடி உயரத்திற்குள் இறைப்பதானால் ஏணியும், இறை கூடையும், சுமார் ஐந்து அடி உயரத்திற்குள் இறைப்பதானால் கோதாவரி ஜில்லாவில் உபயோகிக்கும் **காரம்** என்னும் ஒரே ஆள் ஏற்றமும், ஐந்தடிக்கு மேல் 20 அடி வரையில் ஏற்றமும், 20 முதல் 30 அடி வரையில் சாதாரணக் கபிலையும் சுற்றுக்கபிலையும், 30 அடிக்கு மேற்படுவதானால் பல்லாரி ஜில்லாவைப் போல் ஆழத்திற்குத் தக்கபடி 2 அல்லது 3 ஜதை மாடுகள் கட்டிய மாட்டுக் கபிலையும், விசேஷமான தண்ணீர் ஊற்றிருக்கும் பக்ஷத்தில் 20 ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணம் பாய்ச்சவேண்டுமானால் எண்ணெய் யந்திரமுந்தான் சாதாரண தண்ணீர் இறைக்கும் கருவிகள்.

Single Planting.

ஒற்றை நடவு.—இது விஷயமாய் "வித்யாவிஹாரிணி பத்திராதிபர் எழுதுகிறார்.:—"இதற்கு ஒராக்ஷேபமட்டும் நாம் கேட்டிருக்கிறோம். நெல் இந்த முறைப்படி நல்ல விளைச்சல் ஆனாலும், புல் அவ்வளவாகக் கால் நடைகளுக்கு ருசிப்பதில்லை என்கிறார்கள். ஆனால் நெல்லை நோக்கிப் புல்லையும் கவனிப்பதன்றி, நேர் விரோதமன்று. ஆதலால் இதை எல்லோரும் பரீக்ஷிக்கவேண்டியதுதான். கோயம்பத்தூர் அக்ரிகாலேஜில் இவ்விதமாகப் பயிரிட்டதில், நீரோடும் வாய்க்காலில் நட்ட நாற்றொன்று இருநூறு தூறுக்குமேல் விட்டு வளர்ந்துவந்ததில் அதைப் போடகிராப் பிடித்தார்கள். அதை யிங்கு ஒரு சுமாராகக் காணலாம். அம்மாதிரியே ஒவ்வொரு பயிரும் தூறு கட்டினால் ஒவ்வொரு பூமியிலும் விளைச்சல் இருபது பங்கு ஆகிவிடும். ஆனால் அது பேராசை. மொத்தத்தில் நெல் மணி நன்றாக ஊறுவதற்கு இதனால் இடமுண்டாவதும், வைக்கோல் தடித்துக் கால்நடைகளுக்குக்கொஞ்சம் மட்டத்தரமான தீனியாவதும் வாஸ்தவம்."

A Plantain Tree.

ஒரு வாழை மரம்.—சிங்கப்பூர், பீச்ரோட் கல்லாலைக்குச் சமீபத்தில் ஒரு வாழைமரம் சுமார் எட்டு அடி உயரமிருப்பதாகவும், அதிலிருந்து விட்ட தாரானது பூமிக்குக் கீழ் பள்ளந் தோண்டி விடப்பட்டிருப்பதாகவும், இன்னும் பூ உதிரவில்லையென்றும், இந்த அதிசயத்தை தினமும் ஏராளமான ஜனங்கள் வந்து பார்த்துப்போவதாகவும் அறிகிறோம். இது மோரீஸ்வாழை யென்று சொல்லும் குள்ள வாழையாயிருக்கவேண்டும். இது நட்ட இடத்தில் முன்னால் பெரிய பள்ளம் தோண்டப்பட்டிருக்கவேண்டும். அதில் இந்த ஜாதி வாழைக்கு வேண்டிய சமைந்த பயிருணவு ஏராளமாய் இருந்திருக்கும். இத்துடன் அதற்கு வேண்டிய அளவு தண்ணீரும் விடப்பட்டிருக்கும். ஆகையால் அது சாதாரணமாய் 4½ அடி உயரம் வளருவதற்குப் பதில் 8 அடி உயரம் வளர்ந்திருக்கும். போஷிப்புக் கேற்றபடி குலையும் வளமாய் போட்டிருக்குமென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

INDUSTRIAL NOTES.
கைத்தொழில் குறிப்புகள்.

PLANTAIN FIBRE ROPE.

வாழை நார்க் கயிறு.—வாழை நார்க்கயிறு சணல் கயிற்றைப்போல அவ்வளவு உறுதியல்ல ; ஆனாலும் அது பார்வைக்குப் பளபளப்பாய்ப் பட்டுப்போல் இருப்பதாலும், மலிவானதாலும், அதற்கு வேண்டிய கிராக்கி இருக்கிறதென்று மிஸ்டர். ஜே. என். பானர்ஜி என்கிற அனுபோகமுள்ள இந்திய எஞ்சினியர் ஒருவர் எழுதுகிறார். ஒருவாழைமட்டை நல்லதாய்ப் பருமனாயிருந்தால் ஏறக்குறைய 1½ முதல் 2 ராத்தல் வரையில் நிறையுள்ள நார் எடுக்கலாம். ஒரு நாளைக்கு ஒருவன் 8 மட்டையிலிருந்து நார் எடுக்கக்கூடும். ஒரு டன் அதாவது சுமார் 4½ பாரம் நார் எடுக்கச் சகல செலவும் சேர்த்து 55 ரூபாய்க்குமேல் செல்லாது. ஒரு டன் நிறையுள்ள நார் இங்கிலாந்தில் 375-ரூபாய் முதல் 525-ரூபாய் வரையில் விலைக்கு விற்கப்படுகிறது. ஒரு டன் நார்செய்து விற்பவனுக்கு 285-ரூபாயிலிருந்து 435-ரூபாய் வரையில் லாபம் கிடைக்கும். ஒரு ஏக்கரா நிலம் வாழை வைத்துப் பயிரிட்டால் ஒரு டன் நார்கிடைக்கும். செங்கற்பட்டு ஜில்லாவில் மேல்ரோஸ் புரத்திலும் தஞ்சாவூர் ஜில்லாவில் சில இடங்களிலும் இந்தத் தொழில் செய்யப்பட்டு வருவதாக மிஸ்டர் பானர்ஜி சொல்லுகிறார். மிஸ்டர் பானர்ஜி இந்த நார் எடுப்பதற்காக ஒரு யந்திரம் தயார் செய்திருக்கிறாராம். இவருடைய மேல் விலாசம்.—லேட் எஞ்சினியர், லாங்லி பிலிப்ஸ், பைபர் பாக்டரி, மாதுபூர்.

THE KURNOOL INDUSTRIAL CONFERENCE.

கர்நூல் தொழில் ஆலோசனை ஸபை.—நாளது மாஸம் 8-ம் தேதியன்று கர்நூலில் மாகாணத் தொழிலாலோசனை ஸபை கூடிற்று. அதில் மாஜி டிப்டி கலெக்டர் கே. ஸூப்பராயுடு அவர்கள் வந்த பிரதிநிதிகளை உபசரித்தழைத்து ஒரு சிறந்த பிரஸங்கம் செய்தார். ராவ் பகதூர் எம். ஆதிநாராயணய்யா அவர்கள் அக்கிராஸனம் வகித்து அவரும் ஒரு உபந்யாஸம் செய்தார். இந்த ஸபையில் ஆறு தீர்மானங்கள் செய்யப்பட்டன. முதல் தீர்மானத்தில் எட்வர்ட் சக்ரவர்த்தியின் மரணத்துக்காக துக்கம் பாராட்டியதுமன்றி கான்பரென்ஸின் அனுதாபத்தையும் ராஜ குடும்பத்தாருக்குத் தெரிவித்தார்கள். இரண்டாவது தீர்மானத்தில் 1908-ம் வருஷம் உதகமண்டலத்தில் கவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்ட தொழில் ஆலோசனை ஸபையில் தொழிற்படிப்பு, நெசவுத்தொழில், பட்டுத்தொழில், சாயத்தொழில், தோல்வேலை, கன்னார வேலை, இவைகளைப் பற்றியும் வேறு தொழில்களைப் பற்றியும் செய்யப்பட்ட சிபார்சுகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டுமென்று பர்ஹாம்பூர் தொழில் ஆலோசனை ஸபையில் வற்புறுத்தினது போல வற்புறுத்தினார்கள். வரவர எண்ணெய் யந்திரங்களும் புது மாதிரியான விவசாயக்கருவிகளும் உபயோகத்துக்கு வந்து கொண்டிருக்கிறபடியால் வம்ச பரம்பரையாய்க் கொல்லுவேலை, தச்சுவேலை செய்து கொண்டுவரும் குடும்பங்களைச் சேர்ந்த கிராமாந்தரத் தச்சர்களையும், கொல்லர்களையும், ராஜதானி தலைமைப்பட்டணத்திலும், ஜில்லாத் தலைமைப் பட்டணங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளில் வேலை செய்து பழகும்படி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி கவர்ன்மெண்டாரைக்கேட்டுக்கொள்ள வேண்டுமென்று மூன்றாம் தீர்மானம் செய்யப்பட்டது. இந்த மாகாணத்தின் தென் ஜில்லாக்களுக்கு ஒரு பள்ளிக்கூடமும் வட ஜில்லாக்களுக்கு ஒரு பள்ளிக்கூடமுமாக ஸிவில் அண்ட் மெக்கானிகல் இஞ்சினீரிங்கு கற்றுக்கொடுக்கும் இரண்டு பள்ளிக்கூடங்கள் கவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பது நாலாவது தீர்மானம். தென்னாட்டு ஜமீன்தார்களும், பாரி மிராசுதார்களும், தனவந்தர்களும் இந்தியத் தொழில்களின் அபிவிருத்தியில் அக்கறை காட்டாமல் ஒதுங்கி நிற்பது விசனிக்கத் தக்கதாயிருக்கிற தென்றும், இனி மேலாவது அவர்கள் புதுமாதிரி விவசாயமுறைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்றும், அவர்கள் தங்களுக்குச் சொந்தமான பூஸ்திதிகளில் சுரங்கப்பொருள்கள் ஏதேனும் அகப்படுமாவென்று பார்க்கவேண்டுமென்றும், தாங்கள் சொந்தத்தில் ஏதேனும் தொழில்கள் செய்ய முயற்சிக்கவேண்டுமென்றும், ஐந்தாவது தீர்மானம் செய்யப்பட்டது. ஜனங்கள் நாட்டுத் தொழில்களை உற்சாகப்படுத்த நாட்டுத்தொழிலாளிகளால் செய்யப்பட்ட ஸாமான்களையே சிறிது அதிக விலை கொடுத்தாவது வாங்கும்படித் தூண்டப்பட வேண்டுமென்பது ஆறும் தீர்மானம்.

EDUCATIONAL NOTES.
வித்யா விஷயக் குறிப்புகள்.

INDUSTRIAL SCHOLARSHIPS.

தொழில் ஸ்காலர்ஷிப்புகள்.—நம்முடைய மாகாணத்தொழில் விசாரணைத் தலைவருடைய சிபார்சின்மேல் சென்னை கவர்ன்மெண்டார் தொழிற் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் சிறுவர்களுக்கு மொத்தத்தில் ரூபாய் 566க்கு எட்டுகிற 99 ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்க இசைந்திருக்கிறார்கள். அந்த ஸ்காலர்ஷிப்புகளைப்பெற்று வாசிப்பவர்கள் நடந்துகொள்ள வேண்டிய மாதிரியைப்பற்றிய விதிகளையும் கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருக்கிறார்கள். ஆனால் உதகமண்டலம் தொழில் ஆலோசனைச் ஸபையில் செய்யப்பட்ட தீர்மானத்தை அனுசரித்து தொழிலாளி வம்சத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்குத்தான் அந்த ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

JUVENILE OFFENDERS AND AGRICULTURE.

சிறு குற்றவாளிகளும் விவஸாயமும்.—தென்னிந்தியாவுக்கு செங்கற்பட்டில் ஒரு ஜெயில் பள்ளிக்கூடம் ஏற்பட்டிருப்பதுபோல மற்ற மாகாணங்களுக்கும் அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பஞ்சாப் மாகாணத்துக்கு டில்லியில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்பட்டிருக்கிறது. அதில் வாசிக்கும் தண்டனைப்பட்ட சிறுவர்களுக்கு விவஸாயத் தொழில் பரிச்சியமிருப்பது நலமாகுமென்று எண்ணி அந்தவூரில் ஒரு விவஸாயப்பண்ணை ஏற்படுத்தப் போகிறார்களென்று தெரிகிறது. ஜெயில் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படும் சிறுவர்கள் சிறைவாசம் நீங்கிய பின்பு மானமாயும் மரியாதையாயும் ஜீவனம் செய்வது சாத்தியமாகும்படி அவர்களுக்கு வேறு தொழில்கள் கற்றுக் கொடுப்பதோடு விவஸாயத் தொழிலிலும் அவர்களுக்குத் தேர்ச்சி உண்டாகும்படிச் செய்வது மெச்சத்தக்கதே.

THE LATE MR. A. S. VAIDYANATHA AIYER, M. A.

காலஞ்சென்ற ஏ எஸ். வைத்தியநாதய்யர்.—படிப்பு இலாகாவில் ஸ்கூல்களுக்கு இன்ஸ்பெக்டராயிருந்த ஏ. எஸ். வைத்தியநாதய்யருக்குப் பிளைவைபுறப்பட்டு அதனால் இறந்து போய் விட்டாரென்று கேட்க ரொம்பவும் விசனமாயிருக்கிறது.

THE FINDLAY COLLEGE GARDEN.

பின்ட்லேகாலேஜ் தோட்டம்.—தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடியிலிருக்கும் பிண்ட்லே காலேஜை யொட்டி ஒரு தோட்டம் ஏற்பட்டிருக்கிறது. இதைப் பற்றி ஜூன்மாஸத்து "வித்யா விஹாரிணியில்" ஒரு வியாஸம் காணப்படுகிறது. 15 அடி சதுரமாக நிலத்தைப் பிரித்து உபாத்தியாயர்கள் எடுத்துக்கொண்டவைகள் போக பாக்கித் துண்டுகளை பிரைமரிப் பையன்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். விவஸாயத்துக்கு வேண்டிய மண் வெட்டி, வாளி, தண்ணீர்ப்பாய்ச்சத் தகரச்சட்டி முதலியவைகள் வாங்கிவைத்திருக்கிறார்கள். பையன்கள் தங்கள் நிலத்தைக் கொத்தித் தண்ணீர் பாய்ச்சி விதை போடுவதற்குத் தயாராக்கின தருணத்தில், அவர்களுக்கு விதைகள் வரவழைத்துக் கொடுக்கப்பட்டன.

தோட்டத்தில் ஆடு மாடுகள் வராமலும், பையன்கள் லீவ் காலத்தில் ஊர்களுக்குப் போகிறபடியால், தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சும்படிக்கும், காய்கறிகளையும் ஒருவரும் திருடிக்கொண்டு போகாமல் காக்கும்படிக்கும் 4 ரூபாய் சம்பளத்தில் ஒரு காவல்காரன் இருக்கிறான். பையன்களும் உபாத்தியாயர்களும் வீட்டிலும் தெருவிலுமுள்ள ஆடுமாடு எரு முதலியவைகளைச் சேர்த்து அவரவர் நிலத்தில் போட்டு உரப்படுத்தினார்கள்.

இப்படியாக கத்திரி, சீமைத் தக்காளி, சோளம், அவரை, புடல், மிளகாய், மஞ்சள், வெங்காயம், வெள்ளரி, வெண்டை, வாழை முதலியவைகள் போடப்பட்டு மிகவும் செழிப்பாக வளர்ந்திருக்கின்றன. விளையும் பதார்த்தங்கள் யார் நிலத்திலிருந்தாலும் பறித்து ஏலத்தில் விடப்படுகிறது. இப்படி இது வரையில் 7, 8, ரூபாய் சேர்ந்ததின்பேரில் செழுமையாக நிலத்தை வைத்துக்கொண்டதற்காக இரண்டு பையன்களுக்கு விவசாயத்திலுள்ள பூச்சிகளைப் பற்றி எழுதிய 2-ரூபாய் விலையுள்ள புஸ்தகங்கள் பரிசு அளிக்கப்பட்டன.

தவிர, பிரைமரிப் பையன்களுக்கு விவசாயம் சொல்லிக் கொடுப்பதாக நிலத்தைத் துண்டுகளாகப் போட்டு ஒவ்வொரு பையனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கென்று சிறு நோட்டுப் புஸ்தகங்கள் இனாமாகக் கொடுக்கப்பட்டு, அவர்கள் உபாத்தியாயர்கள், நிலங்களை விதைத்துப் பையன்களைக் கவனிக்கும்படி செய்து, தினந்தோறும அவரவர்கள் நிலத்தில் தண்ணீர் பாய்வதையும் விதைகள் முளைத்திருப்பதையும் பற்றி எழுதும்படி செய்யப்படுகிறது. இப்படி ஒரு அரை வருஷ காலமாக நடந்து வருகிறபடியால், பையன்களுக்கு விவசாயத்திலுள்ள விஷயங்கள் பல தெரிந்திருக்கின்றன.

REVENUE NOTES.
ரெவினியூக் குறிப்புகள்.

SUPPLY TO JAMABANDI OFFICERS.

ஜமாபந்தி ஆபீஸர்களுக்கு ஸப்ளை.—மேல் உத்தியோகஸ்தர்கள் கிராமாந்தரங்களுக்குப் போகும்போது அவருடைய பெயரைச் சொல்லிக்கொண்டு ஆகாரப்பொருள்கள் விஷயத்தில் சில்லரை உத்தியோகஸ்தர்கள் கிராம ஜனங்களை வருத்துவது உண்டல்லவா? இதைத்தடுக்க மலையாளத்து கலெக்டர் மிஸ்டர் ஆர். பி. உட் ஒரு சாதுர்யமான உத்தரவு செய்திருக்கிறார். எந்த கிராம உத்தியோகஸ்தனாவது ஜமாபந்தி முதலிய காலங்களில் கிராமங்களுக்கு வரும் மேல் உத்தியோகஸ்தர்களின் பெயர்களைச்சொல்லி அவர்களை உபசரிக்கவென்று பணம் வசூல்செய்தால் அவன் கடுமையாக நடத்தப்படுவான் என்பதாக இந்த உத்தரவில் சொல்லப்படுகிறது. என்ன உத்தரவு பிறந்தாலென்ன? மேல் அதிகாரிகள் ஸவாரிபோகும்பொழுது ஸப்ளை வாங்குகிறதில்லையென்று நடந்து கொண்டாலொழிய ஸப்ளை செய்வது நிற்காது.

VACCINATION REGISTER.

அம்மை வைப்பதற்குரிய ரிஜிஸ்தர்.—மதராஸ் கவர்ன்மெண்டாரவர்கள் 1909 ௵ மார்ச்சு௴ 3௳ (ரெவினியூ) உத்திரவு ந. 599 ல் இதனடியில் வருமாறு உத்தரவு செய்திருக்கிறார்கள்.

ரயில்வே எல்லைகளுக்கு வெளியே சில பாகங்களும் ஷை எல்லைகளுக்கு உள்ளாக சில பாகங்களும் உள்ள கிராமங்கள் சம்மந்தமாக, வெளி பாகங்களின் ஜனன ரிஜிஸ்தரை எழுதிவரும் கிராமாதிகாரி அல்லது ஜனன மரணம் பதியும் ரிஜிஸ்ட்ரார் தாமே ரயில்வே எல்லைகளுக்குள் உள்ள பாகங்கள் உள்பட பூரா கிராமத்திற்கும் அம்மை உபாதியினின்றும் நிவர்த்திக்கப்படாத குழந்தைகளைப்பற்றிய ரிஜிஸ்தரையும் எழுதிவரவேண்டியது; இதற்காக, அதாவது, மேலே சொல்லிய அம்மை வைக்கப்படவேண்டிய குழந்தைகளின் ரிஜிஸ்தரில் 2 முதல் 8 வரையிலுள்ள கலங்களில் விவரங்கள் எழுதி பூர்த்தி செய்ய வேண்டியதற்காக, வேண்டிய தகவல்களை ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர்கள், அல்லது கிராம பெரிய தனக்காரர் ஷை ரிஜிஸ்ட்ராருக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டியது.

2. ஸ்டேஷன்மாஸ்டர்கள் எழுதிவரும் ஜனன மரண ரிஜிஸ்தர்கள்.

(1) டிப்டி தாசில்தார் அந்தஸ்துள்ள அல்லது அதற்கு மேற்பட்ட அந்தஸ்துள்ள ரிவினியூ உத்தியோகஸ்தர்களாலும்

(2) முனிசிபாலிடி சேர்மென், யூனியன் பஞ்சாயத்து சேர்மென்களாலும், பரிசீலனை செய்யக் கூடியதாக இருக்கவேண்டும்.

LITERARY NOTES.
புஸ்தகக் குறிப்புகள்.

COMPENDIUM OF ENGLISH MEDICAL SCIENCE.

இங்கிலீஷ் வைத்திய சங்கிரகம்.—இந்தப் புஸ்தகம் காலஞ்சென்ற மைசூர் அரண்மனை ஸர்ஜன் மஞ். ஜகனாதம் நாயடு அவர்களால் இயற்றப்பட்டது. இதில் அனாட்டமி என்று சொல்லப்படும் சாரீரம், தேகதர்ம சாஸ்திரம், ஔஷதங்களின் குணாகுணங்கள், அவைகளைக்கொண்டு வைத்தியம் செய்தல், பிரஸவ வைத்தியம், சுகபரிபாலனம் ஆகிய இவைகளும் இன்னும் பல விஷயங்களும் அடங்கி இருக்கின்றன. சரீர அமைப்பை அறியாமல் கிராமாந்தரங்களில் வைத்தியம் செய்பவர்களுக்கு இந்தப் புஸ்தகம் ரொம்பவும் பிரயோசனமாயிருக்கும். குடும்ப ஸ்திரீகளும், வீட்டிற்குப் பெரியோர்களும், வைத்தியம் கற்றுக்கொள்ளும் மாணாக்கர்களும் இந்தப் புஸ்தகத்தைப் படிப்பது நலமாகும். இந்தப் புஸ்தக கர்த்தா இங்லீஷ் முதலிய அந்நிய பாஷைப் பதங்களுக்கு பிரதி பதங்களைத் தமிழில் மனம்போனபடி கற்பனை செய்யாமல் அந்தந்த அந்நிய பாஷைப் பதத்தையே தமிழ் எழுத்தில் எழுதி உபயோகித்து அவைகளுக்குப் பதிலாக ஸாதாரணமாய் ஏதாவது பிரதி பதங்கள் வழங்கிவரும் பக்ஷத்தில் அப்படிப்பட்ட பிரதிபதங்களையும் எடுத்துக்காட்டியிருக்கிறார். அந்நிய பாஷை புஸ்தகங்களைத் தமிழில் எழுதுவதற்கு இதுதான் தற்காலம் சரியானவழி. இந்தநூலை சரியானவழியில் எல்லாரும் அறியும்படியாய் சுலபமான நடையில் எழுதினதைப் பற்றிநாம் ரொம்பவும் சந்தோஷப்படுகிறோம். இந்தப் புஸ்தகத்தின் விலை ரூ. 3—8—0. மதராஸ் தங்கசாலைப் போஸ்டைச் சேர்ந்த பாளையப்பன் தெருவு 12-நம்பர் வீட்டில் ஜகன்னாதம் அண்ட் ஸன்ஸ் அவர்களிடத்தில் கிடைக்கும்.

BOOKS RECEIVED.
புஸ்தக வரவு.

தென்னையும் நெல்லும்.—விலை ரூபா 1.

எருக்களின் பிரயோஜனம்.—விலை அணா 12.

இந்த இரண்டு புஸ்தகங்களும் ஜுனாகாட் ஸமஸ்தானத்தில் விவஸாய டைரெக்டராகிய ஜான் கென்னி அவர்களால் இங்கிலீஷில் எழுதப்பட்டன. சென்னபட்டணம் மவுண்ட் ரோட் ஹிக்கின்பாதம் கம்பெனியில் கிடைக்கும்.

நரசிம்ஹ சதகம்.—மூலம் உரை.—வேலூர் கன்னைய நாயுடு அவர்களால் உரை எழுதப்பட்டு, சென்னபட்டணம் எஸ்ப்ளனேட் 8-188, வி. ஜனார்த்தனம் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பட்டது. விலை அணா 2.

மயூரகிரிக் கோவை.—மன்னார்குடி பிண்ட்லே காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய சர்க்கரை இராமசாமிப்புலவர் அரும் பதவுரை இயற்றியது. விலை அணா 12.

LEGAL NOTES.
சட்டக் குறிப்புகள்.

TRADE NAME.

வியாபாரப் பெயர்.—கம்பெனி வியாபாரம் செய்கிறவர்கள், கம்பெனிக்கு, அவர்களுக்கு இஷ்டமான பெயரை வைத்துக்கொள்ளலாம். பாகஸ்தர்களில் ஒருவன்பெயரிலேயே கம்பெனிபெயர் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. ஆனால் ஒரு கம்பெனிப் பெயரை மற்றவர்கள் ஒருவரும் வைத்துக்கொள்ளக் கூடாது. வேறு இஷ்டமான பெயரை வைத்துக் கொள்ளலாம்.

SUIT ON A PROMISSORY NOTE.

பிராமிஸரி நோட்டின்மேல் வியாஜ்யம்.—பிராமிஸரி நோட்டு எவனுக்கு மேடோவர் செய்யப்பட்டதோ அவன் தன்னுடைய சொந்தப் பெயரால் வியாஜ்யம் கொண்டு வரவேண்டுமானால் அந்த மேடோவர் காலமான அல்லது உறுதியான மேடோவராக இருக்கவேண்டுமே ஒழிய நிபந்தனைக்குட்பட்ட மேடோவராக இருக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

BOUNDARIES OF LAND.

நிலத்தின் நான்கு எல்லைகள்.—ஒரு நிலத்தைப் பற்றி தகவல் ஏற்பட்டால், அதன் விஸ்தீரணம் எப்படியிருந்தாலும் நான்கு எல்லைகள்மட்டும் சரியாயும் கச்சிதமாயும் ஏற்பட்டிருக்கும் பக்ஷத்தில் நான்கு எல்லைப்படிக்கே போகவேண்டும். நான்கு எல்லைகள் சரியாய் இல்லாத பக்ஷத்தில் விஸ்தீரணத்தின்படி போகவேண்டும்.

7. மதராஸ். லா. டை. 390 பக்கம்.

LIMITATION.

காலாவதி.—கடன் வாங்கினவனும் கொடுத்தவனும் இரண்டுபெயர்களும் கணக்குத் தீர்த்துக் கொண்டு கடைசியாகக் கணக்குப்படி தொகைகொடுக்க வேண்டியவன் அந்தக் கணக்கில் கையெழுத்துப் போட்டிருந்தால் கையெழுத்துப் போட்ட தேதி முதல் 3 வருஷம் வரையில் பணம் கொடுக்க வேண்டியவனைத் தொடர்ந்து பணத்தை வசூலிக்கலாம்.

7. மதராஸ். லா. டை. 372 பக்கம்.

REGISTRATION.

ரிஜிஸ்தர்செய்தல்.—ஒருவனுக்கு 50 ரூபாய்க்கு ஒரு குதுவைப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டிருந்தது. இந்தப்பத்திரம் ரிஜிஸ்தர் ஆகவில்லை. பிற்பாடு வட்டியும் முதலுமாக 176 ரூபாய் ஆனதும் வேறொருவனுக்கு மேடோவர் செய்யப்பட்டது. இந்த மேடோவரை ரிஜிஸ்தர் செய்தாலொழிய அது செல்லாதென்று ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

மதராஸ். லா. டை. 379 பக்கம்.

REPAIR OF IRRIGATION CHANNEL.

பாசன வாய்க்காலை மராமத்துப் பார்ப்பது—கவர்ன்மெண்டாராவது அல்லது வேறு யாராவது பாசன வாய்க்கால்களை ரிபேர் செய்து வைக்கக் கடமைப்பட்டிருந்து அப்படி வைக்காமல் அதனால் ஒருவனுக்கு நஷ்டம் நேரிடும் பக்ஷத்தில் அதற்காக அவர்களைத் தொடர முடியாது.

மதராஸ். லா. டை. 397 பக்கம்.

RELEASE BY A CREDITOR.

கடனைத் தள்ளிக்கொடுத்தல்.—கடன் கொடுத்த ஒருவன் எந்தக்கடனென்று சொல்லாமல் கடன் வாங்கினவனை திருப்பிக்கொடுக்க வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டால், குறிப்பிட்ட கடன்தான் தள்ளிக் கொடுக்கப்பட்டதென்று வேண்டுமானால் பின்னால் ருஜுப்படுத்திக்கொள்ளலாம்.

7. மதராஸ். லா. டை. 392 பக்கம்.

PERMANENT LEASE OF TEMPLE PROPERTY.

கோவில் ஸொத்துக்களின் சாஸ்வதக் குத்தகை.—தகுந்த காரணங்கள் இருந்தாலொழிய கோவில் ஸொத்துக்களை தர்ம கர்த்தாக்கள் சாஸ்வதக் குத்தகைக்கு விட பாத்தியமில்லை. ஆகவே கோவில் நிலங்களிலுள்ள குடிகளுக்கு சாஸ்வத குடிபாத்தியம் கிடையாது.

7. மதராஸ். லா. டை. 386 பக்கம்.

LOAN TO HINDU FAMILY.

ஹிந்துக் குடும்பத்துக்கு கடன் கொடுத்தல்.—ஒரு ஹிந்துக் குடும்பத்துக்கு கடன் கொடுக்கிறவன் அந்தக்கடன் தகுந்த முகாந்தரத்துக்குத்தான் வாங்கப்படுகிறதென்று தீர விசாரித்து கொடுத்திருக்கும் பக்ஷத்தில் ஏற்பட்ட கடனில் ஒரு பாகம் கிரமமாய் செலவு செய்யப்படாமலிருந்தாலுங்கூட அந்தக் கடன் முழுவதையும் வசூல் செய்துவிடலாம்.

7. மதராஸ். லா. டை. 384 பக்கம்.

SCIENTIFIC NOTES.
சாஸ்திரியக் குறிப்புகள்.

SMOKING.

சுருட்டுப் பிடித்தல்.—ஒருவன் ஒருதரம் சுருட்டியிலிருந்து புகையை உறிஞ்சி வெளியில் விட்டால் ஆறாயிரங்கோடி ஆவிகள் ஆகாயத்தில் பரவுகின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

THE HEART-BEAT.

ஹிருதயம் அடித்தல்.—மாம்ஸங்களைச் சாப்பிடுகிறவர்களுக்கு ஒரு நிமிஷத்துக்கு 75 தரம் ஹிருதயம் அடிக்குமாம். மாம்ஸமே சாப்பிடாமல் காய்கறி வர்க்கங்களைச் சாப்பிடுகிறவர்களுக்கு ஒரு நிமிஷத்துக்கு 58 தரம்தான் அடிக்குமாம்.

THE SHEEP AND ITS TEETH.

ஆடும் அதன் பல்லுகளும்.—பிறந்த ஒரு மாதத்தில் ஆட்டுக்கு வாய் நிறைய பல் முளைக்கிறது. மேல் பல் கிடையாது. இரண்டு வருஷத்திற்குமேல், பல் விழுந்து இரண்டு பெரும்பல் முளைக்கும். பின்பு ஒவ்வொரு வருஷத்திலும் இரண்டு பல்லாக முளைத்து ஐந்து வருஷத்தில் வாய் கூடும்.

THUNDER AND SMOKE.

இடியும் புகையும்.—இடியும் மின்னலும் அதிகமாயிருக்கும்போது ப்ரான்ஸ் தேசத்துக் குடியானவர்கள் இடிவிழாதபடி தடுக்க தீயைக்கொளுத்திப் புகை எழுப்புகிறார்கள். இது மூடத்தனமாய்ச் செய்யப்படுகிறதென்று பலர் எண்ணினாலும் புகைக்கு மின்சாரப் பாய்ச்சலை அப்புறப்படுத்தும் சக்தியுண்டாதலால் அப்படிச் செய்கிறார்களென்று தெரியவருகிறது.

THE SUN.

சூரியன்.—பூமியின் சுற்றளவு சுமார் இருபத்துநாலாயிரத்துத் தொளாயிரம் மைல் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். பூமியிலிருந்து சூரியன் சுமார் ஒன்பது கோடியே இருபது லக்ஷம் மைல் தூரத்தில் இருக்கிறது. அவ்வளவு தூரத்தில் இருப்பதால்தான் கண்ணுக்குச் சிறிய உருவமாகக் காணப்படுகிறது. இயற்கையில் அதன் வடிவம் பூமியைவிட மிகப்பெரியது. சூரியன் பூமியைப்போல பதினான்கு லக்ஷங்கொண்ட அவ்வளவு பெரிய கிரகம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

THUNDER.

இடிமுழக்கம்.-உலகத்திலுள்ள எந்த தேசத்தைப் பார்க்கிலும் ஜாவா தீவிலேயே இடிமுழக்கம் அதிகம். வருஷத்தில் அந்தத் தீவில் 97 நாளும், சுமாத்திராவில் 86 நாளும், இந்தியாவில் 56 நாளும், போர்னியோவில் 54 நாளும், மேல் ஆப்பிரிக்காவில் 52 நாளும், தென்னமெரிக்காவைச் சேர்ந்த ரையோடிஜெனிரோவில் 51 நாளும், இத்தலியில் 38 நாளும், ப்ரான்ஸ், ருஷியா தேசங்களில் 16 நாளும், ப்ரித்தானியா, ஸ்விட்ஸர்லெந்து தேசங்களில் 7 நாளும், நார்வே தேசத்தில் 4 நாளும், கெய்ரோவில் 3 நாளும், இடிமுழக்கமுண்டாகின்றதென்று ஒருவர் கணக்கிட்டிருக்கிறார்.

HEAT.

உஷ்ணம்.-வெந்நீர் அண்டாவை விளக்காததேன்?
குடைக்கு வெள்ளை போர்த்துவதேன்?

கறுப்பு காயும், கறுப்பு காயும் என்று—கருமை நிறம் உஷ்ணத்தை அதிக சீக்கிரத்தில் இழுத்துக்கொள்ளும். புது அண்டா ஒன்றிலும் பழய கரியேறிய அண்டா ஒன்றிலும் தண்ணீர் ஊற்றி இரண்டையும் ஒரே அளவாகக் காய்ச்சினால் கரியேறிய பாத்திரத்திலுள்ள நீரே சீக்கிரத்தில் அதிகச் சூடு பெற்றதாயிருக்கும். இதைத் திருஷ்டாந்தமாய் எவரும் பார்க்கலாம். ஒரே அளவாய்க் காய்ச்சுவதாவது இரண்டு அடுப்பிலும் ஒரே அளவான அனல் உண்டாக்கும்படி செய்யலாம். கறுப்புக்கு இந்தக் குணம் இருப்பது கண்டுதான் சுத்தமாயிருப்பதில் பேர்போன நாம் முன்னோர்கள் காலம் முதல் வெந்நீரண்டாவின் வெளிப்பக்கத்தைத் தேய்த்துக் கழுவி விடாமல் நாளுக்கு நாள் அதன் கரியை அதிகரித்து வருகிறோம். அண்டாவின் கறுப்பு தண்ணீரைச் சீக்கிரம் சூடப்பண்ணுகிறதால் அதை விளக்குவதில்லை.

சாதாரணமாய்க் குடைத்துணி கறுப்பே, ஆனால் கறுப்போ உஷ்ணத்தை சீக்கிரத்தில் இழுக்கிறது. நாம் குடை பிடிப்பது வெயிலுக்காக. வெள்ளைநிறமான பதார்த்தங்களுக்கு வெயிலைக் கொஞ்சம் கூட இழுக்கும் சக்தி இல்லை; தவிரவும் வெயிலைச் சிதற அடிக்கும் சக்தி உண்டு. ஆகவே வெள்ளைத்துணி குடைக்குமேல் போட்டால்தான் சூரிய வெப்பம் நம் தலைக்குத் தாக்காது. குடைத்துணி ஏன் கறுப்பாயிருக்க வேண்டுமென்றால் அடிக்கடி உபயோகப்படுகிறபடியால் அழுக்குப்பட்டாலும் தெரியாதென்கிற தேயாம். குடைக்குப்போடும் வெள்ளை உறைகளை அடிக்கடி கழற்றி அழுக்கை மாற்றி விடலாம்.

MEDICAL NOTES.
வைத்தியக் குறிப்புகள்.

THE LIQUOR HABIT.

குடி.—பழங்களை, அவைகளிலும் முக்கியமாய்க் கிச்சிலிப்பழங்களையும், சீமை இலந்தைப்பழங்களையும் சாப்பிட்டுக்கொண்டுவந்தால் சாராயம் முதலியவைகளைக் குடிக்க உண்டாகும் ஆசை நீங்கி குடிக்கும் வழக்கமே நீங்கிவிடுமாம்.

GINGELLY OIL AND PLAGUE.

நல்லெண்ணெயும் ப்ளேக்கும்.—நல்லெண்ணெய் உபயோகிப்பதால் பல நன்மைகள் உண்டென்பதை நாம் அறிவோம். இந்த எண்ணெய்க்குப் ப்ளேக் வியாதியை வரவொட்டாமல் தடுக்கும் குணம் உண்டாம். பம்பாய் நகரத்தில் ப்ளேக் அதிகமாக நடமாடின காலத்தில்கூட நல்லெண்ணெய் விற்று வந்த வாணியத்தெருவில் அந்தநோய் வரவில்லையாம். நல்லெண்ணெய்க்கு ப்ளேக் வியாதியைத்தடுக்கும் குணம் இயற்கையாக இருக்கிறதென்று தெரிகிறபடியால், ப்ளேக் நடமாட்டமுள்ள இடங்களில் அந்த எண்ணெயை அதிகமாக உபயோகப்படுத்துவது நலமென்று ஒரு பிரபலமான டாக்டர் சொல்லுகிறார்.

GOAT'S MILK.

ஆட்டுப்பால்.—பசுக்களில் அநேகம் சுவாசாசய சம்பந்தமான வியாதிகளுக்கு உள்ளாவதால், பசுவின் பாலைச் சாப்பிடும் குழந்தைகளுக்கும் க்ஷயம் முதலிய வியாதிகள் உண்டாவதற்கு ஹேதுவுண்டென்றும், ஆடுகளுக்கு ஸாதாரணமாக சுவாசாசயத்தை ஒட்டிய நோய்கள் வருகிறதில்லையாதலால், ஆட்டுப்பால் ஆகாரமே மேலானதென்றும், தற்கால சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தார் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஜர்மனிதேசத்தில் ஆகாரத்திற்காக ஆடுமாடுகளை அடிக்கிற இடத்தில் ஒரு வருஷத்தில் கொல்லப்பட்ட பசுக்களில் 100க்கு 40ல் க்ஷயரோகங் கண்டிருந்ததென்றும், ஒரு வருஷத்தில் கொல்லப்பட்ட 1500 ஆடுகளில் 9க்குமட்டும் அந்நோய் தொத்தியிருந்ததாகவும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆதலால் குழந்தைகளுக்கு மாட்டுப்பாலைவிட ஆட்டுப்பாலே சிலாக்கியமான ஆகாரமென்று சொல்லலாம்.

மேலும், மனுஷ்யதேக சம்ரக்ஷணைக்கு ஆட்டுப்பாலே சிறந்தது. ஏனெனில் அது மகா சுத்தமானது. அதிக போஷிப்பைக் கொடுக்கக்கூடியது. எளிதில் ஜீரணிக்கத்தக்கது. ஏறக்குறைய தாய்ப்பாலுக்குச் சமானமானது. ஆதலால் சிசுக்களுக்கு இது விசேஷித்த ஆகாரமாகும். ஆட்டுப் பாலிலுள்ள கொழுப்பு தசைகள் மகா நுண்ணியவைகளானதால் அதில் எளிதில் பாலேடு திரளுகிறதில்லை. அதிகநேரம் கெட்டுப்போகாமலு மிருக்கும். ஆட்டுப்பால் எளிதில் ஜீரணமாவதற்கும் காரணமிதுவே.

ப்ரான்ஸ் ஸ்விட்ஸர்லாந்து முதலிய தேசங்களில் அநேக நோய்களுக்கு ஆட்டுப்பாலை ஔஷதமாக உபயோகிப்பதுடன் குழந்தைகள், வியாதியஸ்தர் முதலியவர்களுக்குக் கொடுக்கும் ஆகாரங்களை ஆட்டுப்பாலிலேயே சமைத்துக்கொடுக்கிறார்கள். சுவாசாசய நோய்களுக்கும் அஜீரணத்திற்கும் ஆட்டுப்பாலை அப்பட்டமாக சாப்பிட்டால் சுகமுண்டு. க்யூபா நாட்டில் ஆட்டின் கால்களை ஒரு நாற்காலியுடன் சேர்த்துக்கட்டிவிட்டு குழந்தைகளை ஆட்டு மடியிலேயே பால் குடித்துவரும்படி செய்வார்கள்.

பால்கொடுக்கும் ஆடுகளை சத்தும் புஷ்டியைக் கொடுக்கத்தக்கதுமான கடலை முதலிய ஆகாரத்தால் வளர்த்தால் அவைகளின் பாலில் கவுச்சு நாற்றமில்லாதிருப்பதுடன் போஷிப்பையுங் கொடுக்கும். மலைப்பிரதேசங்களில் வேளாண்மைக்கு உதவாத நிலமே ஆடுகள் ஓடி ஆடித்திரிந்து ஆகாரம் புசித்து வளர்வதற்கு உசிதமான மேய்ச்சல் ஸ்தலமாகும். நன்றாய்ப் போஷிப்புக்கொடுத்த ஆட்டில் ஒரு நாளைக்கு மூன்றுதடவை பால்கறக்கலாம். ஒரு மாட்டுக்குப் போடும் தீனியால் எட்டு ஆடுகளை வளர்க்கலாம். மாடுகளைப்போல் ஆடுகள் அடிக்கடி நோய் கொள்வது மில்லை.

THE USE OF ALOES.

கத்தாழையின் உபயோகம்.— ஜுரமடிக்கிறவர்களுக்குத் தலையில் பனிக்கட்டி வைப்பது இங்கிலீஷ் வைத்தியமுறை. தலையைக் குளிரச்செய்து ஜுரத்தை சாந்தப் படுத்துவதற்கே இப்படிச் செய்யப்படுகிறது. பனிக்கட்டி கிடைக்காத ஸமயங்களில் கத்தாழையை உபயோகித்தால் அது பனிக்கட்டிபோல ஜுரத்தை சாந்தப்படுத்துகிறதாம்.

PAGE FOR GIRLS.

பெண்களுக்கான பக்கம்.

SWALLOWING CHUNAM.

சுண்ணாம்பைத்தின்று விடுதல்.-குழந்தைகள் சுண்ணாம்பை விழுங்கிவிட்டால் உடனே வாயை சுத்தி செய்து அலகில் ஒதுங்கியிருக்கும் சுண்ணாம்பை எடுத்துவிட்டு ஒரு கரண்டியளவு நாட்டுக்காடியையாவது அல்லது சீமைக்காடியையாவது அல்லது எலுமிச்சம்பழ ரஸத்தையாவது கொடுக்கலாம். இல்லாவிட்டால் கறிமஞ்சளை அரைத்தும் கொடுக்கலாம். வாய் சிவந்திருந்தால் அடிக்கடி நல்லெண்ணெயை அல்லது கறிமஞ்சளை அரைத்துப் பூசவேண்டும்.

CHEAP TOOTH POWDER.

மலிவான பல்பொடி.—பல்லைப்பற்றிய வியாதிகளுக்காக பலர் பலவிதமான பொடிகளைத் தருவித்து வீண் நஷ்டமடைகிறார்கள். அவர்கள் அடியில்கண்ட சரக்குகளை வாங்கி இடித்துப் பொடி செய்து பல்லைத் துலக்கிவந்தால் பல்லைப் பற்றிய எவ்வித வியாதிகளும் நீங்கலாம்.

சீமைச் சுண்ணாம்பு (சாக்கட்டி)	4 பலம்.
படிக்காரம்	1½ பலம்.
கிராம்பு—லவங்கம் ..	1 பலம்.
லவங்கப்பட்டை	1 பலம்.
வால்மிளகு	1 பலம்.

THE GREATNESS OF A MOTHER.

தாயின் மாட்சிமை.—உலகம் முழுவதையும் தூக்கித் தராசின் ஒரு தட்டிலே வைத்து, மறு தட்டிலே என் தாயாரை வைத்துத் தூக்கிப்பார்த்தால் என் தாயார் தட்டுத்தான் தாழ்ந்து விலையேறும்.--லாங்டேல் பிரபு.

BOILED RICE.

புழுங்கல் அரிசி.—ஊறவைத்த ஜலத்தில் திரும்பவும் நெல்லை ஊறவைத்துக்கொண்டே வந்தால் அரிசி வேண் மட்டும் காணும். ஆனால் மேனி அவ்வளவாய் ஏற்படாது. உடனுக்குடன் புது ஜலத்தில் ஊறவைத்துப் புழுக்கினால் அரிசிக்கு மேனிமட்டும் ஏற்படுகிறது.

WHO WORKS FOR MEN?

எனக்கு உழைப்பவன் யார்?—எளிய கிழவி ஒருத்தி பகலெல்லாம் பாடுபட்டு உழைத்து ஒரு நாள் சாயங்காலம் தன் குடிசை வாயிலில் உட்கார்ந்திருக்கும்பொழுது "நான் இப்படி வியர்க்க வியர்க்க யாருக்கு வருந்தி உழைக்க, எனக்கு உழைப்பவர் எவரும் இல்லாதிருப்பது என்ன அநியாயம்" என்று பெருமூச்சுவிட்டுச் சொன்னாள். அப்போது அருகாமையில் போய்க்கொண்டிருந்த புத்திமான் ஒருவன் அவள் சொன்னதைக் கேட்டு, பின்வருமாறு பதில் சொன்னான் :—"பாட்டி, பாட்டி, உனக்கு உழைப்பவர் ஒருவரும் இல்லையென்று சொல்லுகிறாய்? அது முழுதும் தப்பு. 'நீ இப்பொழுது சாதம் சமைக்கப்போகிறாய் அல்லவா? நிலங்களில் நெல்விதைத்து, விளைந்த பின்பு அறுத்து, நெல்லைச் சுமைசுமையாகக் கட்டி எடுத்துக்கொண்டுபோய் போர்போட்டு அடித்துத் தூற்றிக் கடைக்கு விற்கக் கொண்டுபோனவர்கள் யார்? மிளகாய், மிளகு, சீரகம், கடுகு, கொத்தமல்லி, முதலிய சரக்குகளை விளைவித்தவர்கள் யார்? விளைந்த உப்பை ஊர் ஊராய்க் கொண்டுவந்து சேர்த்தவர் யார்? நீ காய்கறி அரியும் கத்தி ஒருவரும் செய்யாமல் தானே உண்டானதா? பூமிக்குள் விளைந்த இரும்பை வெட்டியெடுத்தவர்கள் எவர்? பின்பு அதை உலையிலிட்டுக் காய்ச்சி அடித்துக் கத்தி செய்தவர்கள் யார்? சாதம் சமைக்கும் மட்பாண்டம் வனைந்தவள் நீதானா? நீ உடுத்தியிருக்கும் துணி யார் நெய்தது? "வெகு தூரம் போக வேண்டாம், நீயிருக்கும் குடிசை யார் கட்டியது? "இந்தச் சிறிய குடிசைக்குள் நீ வைத்திருக்கிற போஜன பதார்த்தம், துணி மணி, சாமான் தட்டு முட்டு இவைகளை உனக்காக அலுப்பற்று மனப்பூர்வமாய் வருந்தி உழைத்து உற்பத்தி செய்த தொழிலாளிகள் எல்லோரையும் பேர் பேராக எடுத்துச் சொன்னால் எவ்வளவோ நாட்கள் செல்லும். ஆகையால் உனக்கு உழைப்பவர் எவரும் இல்லையே யென்று, யோசிக்காமல் ஒருபொழுதும்சொல்லாதே என்று சொல்லிப் போயினான்.

A GIRLS SCHOOL IN LAHORE.

லாஹூரில் ஒரு பெண்கள் பள்ளிக்கூடம்.—வங்காளத்தில் பெரிய ஜமீந்தாராகிய பர்துவான் மாகாராஜா அவர்கள் பஞ்சாப் ஹிந்துசபையாரைக் கொண்டு தன்னுடைய மாகாராணி பேரைவைத்து ஒரு பெண்கள் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். பள்ளிக்கூடச் செலவுக்காக மாஸம் 1க்கு 350 ரூபாய் மேனிக்குக் கொடுத்து வருகிறார்.

THE BOYS' PAGE.

பையன்கள் பக்கம்.

SPENDING MONEY.

பணத்தைச் செலவழித்தல்.—விருதாவானவனின் கொள்கை-பொன்னைச் சம்பாதித்து அதைவிருதாவில் விநியோகி.

தயாளுவின் கொள்கை-பொன்னைச் சம்பாதித்து அதை பங்கிட்டுக்கொடு.

பிசினாரியின் கொள்கை-பொன்னைச் சம்பாதித்து அதைப் புதைத்து வை.

ஊதாரியின் கொள்கை-பொன்னைச் சப்பாதித்து அதை வீண் செலவு செய்.

தாகரியின் கொள்கை-பொன்னைச் சம்பாதித்து அதை வட்டிக்கு விடு.

மூடனின் கொள்கை-பொன்னைச் சம்பாதித்து அதை முடிவு படுத்தி விடு.

வெறியனின் கொள்கை-பொன்னைச் சம்பாதித்து அதை மதுபானக்கடையில் எண்ணி விடு.

சூதாடியின் கொள்கை-பொன்னைச் சம்பாதித்து அதைத் தோற்று விடு.

அறிவாளியின் கொள்கை-பொன்னைச் சம்பாதித்து அதை நன்மையில் பிரயோகப்படுத்து.

SHEEP AND THEIR USE.

ஆடுகளும் அவைகளின் பிரயோஜனமும்.—இதன் புழுக்கை வயல்களுக்கு நல்ல எருவாகிறது. தோல் அநேக விதமான வேலைகளுக்கு உதவுகிறது. தோலைக்கொண்டு தபால்காரன் பெட்டி முதலியவைகள் தைப்பார்கள். மாமிசத்தை பக்குவம்செய்து பலர் சாப்பிடுவார்கள்.

கொழுப்பினால் ஸோப்பு மெழுகுவர்த்தி முதலியவைகள் செய்வார்கள். மயிரினால் கம்பளங்கள் நெய்வார்கள். பால் வியாதிஸ்தர்களுக்கும் குழந்தைகளுக்கும் மிகவும் நல்லது.

குறும்பாடு பல்லாரி, கோயம்பத்தூர், மைசூர் முதலிய இடங்களில் அதிகம். ஆகையால் அந்த இடங்களில் ஆட்டு மயிரால் ஒருவித முரட்டுக் கம்பளி செய்யப்படுகிறது.

வட இந்தியாவில் காஸ்மீரம் முதலிய நாடுகளில் சிறந்த கம்பளங்கள், சால்வைகள் நெய்யப்படுகின்றன. ஆட்டு மயிரால் நமது நாட்டில் முரட்டுக் கம்பளியும் அதே ஆட்டில் காஸ்மீரம் முதலிய நாட்டில் உயர்ந்த திணுசும் உண்டாக்கப்படுகிறதற்குக் காரணம் யாதெனில்—வாசம் செய்யுமவர்களின் சீதோஷ்ண ஸ்திதியும் அருமையாகக் காப்பாற்றும் விதமும் கைத்தொழிலின் முயற்சியுமேயாம்.

THE LARGEST CITY IN THE WORLD.

உலகிற் பெரிய பட்டணம்.—லண்டன் நகரமே உலகிற் பெரியது. அதின் விஸ்தீரணம் 7485 ஏகரா. சற்றேறக்குறைய 4 நிமிஷத்திற்கு ஒரு குழந்தை பிறக்கிறது. 8 நிமிஷத்திற்கு ஒரு குழந்தை மாண்டு போகிறது. இந்தப்பட்டணத்தில் ஜனத்தொகை சுற்றுப்பக்கங்களைச் சேர்த்து 77,95,789. இதுவே உலகிற் பணக்காரப் பட்டணம். ஆனால் 33 பேரில் ஒருவன் பாபர். ஒவ்வொருநாளும் 4,34,685 ஆடு, மாடுகள் கொல்லப்படுவதுடன், 4,19,031 பவுண்டு மாட்டு இறைச்சியும், 8,08,29,330 காலன் பாலும் தேவை. தொழிற்சாலைகள் 28,265. ஜனங்களைச் சந்தோஷப்படுத்துவதற்கு 350 நாடகங்களுக் சங்கீத ஹால்களும் இருக்கின்றன. ஒவ்வொரு வருஷமும் சுமார் 73,71,00,000 கடிதங்களையும், 2,82,60,000 தந்திகளையும் ஒவ்வொரு தபால்காரனும் ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

AN ELECTRIC PEN.

அபூர்வமான மின்சாரசக்திப் பேனா.—லண்டனில் வசிக்கும் ஒரு பார்ஸி கனவான் மின்சார சக்தியுள்ள ஒருபேனா செய்திருக்கிறார். இதை மையில் தோய்த்து எழுதவேண்டியதில்லை. வெற்றுப்பேனாவினால் எழுதினால் சிறு தழல் பொறிகள் அதிலிருந்து புறப்பட்டுக் காகிதத்தில் கண்ணுக்குத் தெரியாத கருமையான பொத்தல்களை யுண்டாக்கி விடுகின்றன. பார்வைக்கு மைகொண்டு எழுதினதுபோலவே யிருக்கிறதாம். எழுதினதை அழித்து மோசம் செய்யமுடியாது.

TO KEEP PENCIL WRITING UNIMPAIRED.

பென்ஸிலில் எழுத்துகள் அழியாமலிருக்க.—கறுப்புக் காகித பென்ஸலினால் எழுதப்பட்ட பேபரில் அந்த எழுத்துகள் அழிந்து மறையாமலிருக்கும்படி காப்பாற்ற வேண்டுமானால், முட்டைக் கருவைக் கொண்டு மெலினமாக அந்த எழுத்துக்களின் மேல் ஒரு பூச்சப்பூச வேண்டும்.

INDIAN NEWS.

இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

A Glass Factory in Bombay.

பம்பாயில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை.—இச் சென்னையில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருவதும் அதில் புட்டிகள் முதலான பலவகைப்பட்ட கண்ணாடிச் சாமான்கள் செய்யப்பட்டு வருவதும் நேயர்களுக்குத் தெரியும், பம்பாயில் ஒரு பெரிய கண்ணாடித் தொழிற்சாலை ஏற்படப்போகிறதென்று தெரியவருகிறது. ஜப்பான் போய் கண்ணாடி செய்யும் தொழில் கற்றுத்திரும்பி வந்த ஹிந்துக்கள் சிலர் சேர்ந்து ஒரு லிமிடெட் கம்பெனி ஏற்படுத்தி ஒரு லட்சம் ரூபாய் மூலதனம் வைத்து அதை நடத்தப்போகிறார்களென்று தெரிகிறது.

The Ground-nut in the United Provinces.

ஐக்கிய மாகாணங்களில் மணிலாக்கொட்டை.— ஐக்கிய மாகாணங்களில் மணிலாக்கொட்டை சாகுபடி, வியாபார விருத்திக்கு முக்கிய ஹேதுவாகுமென்று சொல்லப்படுகிறது. ஜாலான் ஜில்லாவிலும் அதற்கடுத்த ஜில்லாக்களிலும் ஜமீந்தார்களாலும் குடியானவர்களாலும் இது பயிரிடப்பட்டுவருகிறது. பூக்கும்பொழுது ஒரு தண்ணீர்ப் பாய்ச்சக்கூடிய இடங்களில் அந்த ஊர் மண்ணுக்கு பயிர் நன்றாய் வளருகிறதாகச் சொல்லப்படுகிறது.

The Breeding of Plough Bullocks.

உழவு எருதுகள் வளர்த்தல்.—பஞ்சாப் மாகாணத்தைச்சேர்ந்த சில ஜில்லாக்களில் வியாபாரத்துக்காக நல்ல உழவு எருதுகளை வளர்த்துவருகிறார்கள். அவைகள் நல்ல ஜாதி எருதுகளாயிருப்பதினால் வளர்ப்பவர்களுக்கு அதிக லாபம் கிடைத்துக்கொண்டுவருவதும்தவிர ஒரு நல்ல தொழிலாகவும் ஏற்பட்டுவிட்டதென்று தெரியவருகிறது. இதுவுமல்லாமல் பால், தயிர் முதலியவைகள் கிராக்கியாயிருப்பதினால் பெரிய பட்டணங்களுக்கு சமீபத்திலிருக்கும் கிராமத்தார்கள் நல்ல பசு மாடுகளையும் வைத்து வளர்த்து வருகிறார்களாம்.

The Madras Provincial Conference.

சென்னை மாகாணக் கான்பரென்ஸ்.—இந்த வருஷத்து சென்னை மாகாணக் கான்பரென்ஸ் கர்நூலில் நாளது மாஸத்தில் நடந்தது. அதில் தென்னாப்பிரிகா இந்தியர்களின் நிலைமையைச் செம்மைப் படுத்தவேண்டுமென்றும், தேவஸ்தான நிதிகளைப்பற்றிய விதிகளை மாற்றவேண்டுமென்றும், சென்னை சட்டசபை எலெக்ஷன் விதிகளை மாற்றவேண்டுமென்றும், பள்ளிக்கூடச் சம்பள விகிதங்களை ஜாஸ்திப்படுத்தக் கூடாதென்றும், திராவிய சகாயச் சட்ட விதிகளை மாற்றவேண்டுமென்றும், உயர் பதவி சர்க்கார் உத்தியோகங்களில் இந்தியர்களை அதிகமாய் நியமிக்கவேண்டுமென்றும், அச்சுச்சட்ட விதிகளை மாற்றவேண்டுமென்றும், ராஜத்வேஷக் கூட்டச் சட்ட விதிகளை சென்னை மாகாணத்தில் அமுலுக்குக்கொண்டு வரவேண்டியதில்லையென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன. இவைகளைத்தவிர, அதிகாரப் பிரிவினைக் கமிஷனின் சிப்பார்சுகள் சிலவற்றைக் கண்டித்தும் சிலவற்றை ஆதரித்தும் சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. நீர்ப்பாய்ச்சல் வசதிச்சட்ட மசோதா விதிகள் பல அம்சங்களில் திருப்திகரமாயிருக்கவில்லை. ஆதலால் அந்த மசோதாவைப்பற்றி ஆலோசனைசெய்து கவர்ன்மெண்டுக்கு ரிபோர்ட் செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இருப்புப்பாதைகளில் முதல்வகுப்பு இரண்டாவது வகுப்புகளுக்கு சார்ஜ் அதிகமாயிருப்பதால் இண்டர்மீடியேட் வகுப்பொன்று ஏற்பாடாக வேண்டுமென்றும், ரிப்ரெஷ்மெண்ட், வெயிடிங் ரூம் விஷயங்களில் ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் சௌகரியங்கள் இந்தியர்களுக்கும் ஏற்படவேண்டுமென்றும், ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

A Lecture.

ஒரு உபந்யாஸம்.—மைசூர் ரெங்காச்சார்லு ஹாலில் திவான்பகதூர் ரெகுநாத ராவ், கடற் பிரயாணம் செய்வதற்கும் விதவா விவாகம் செய்வதற்கும் சாஸ்திரம் இடம் கொடுக்கிற தென்பதைப்பற்றி ஒரு சிறந்த உபந்நியாசம் செய்தார். ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

The Agricultural College, Cawnpore.

கான்பூர் விவசாய காலேஜ்.—கான்பூர் விவசாய காலேஜுக்குச்சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பார்த்துவர மாகாண கவர்ன்மெண்டார், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அல்லாத பெரிய மனுஷர்களும் சேர்ந்த ஒரு சபை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

Cows in Calcutta.

கல்கத்தாவில் பசுமாடுகள்.—கல்கத்தாவில் பசுமாடுகள் மறுத்துப்போனால் அவைகளை மாட்டுக்காரர்கள் அடிமாடாக விற்றுவிடுகிறார்கள் போல் தோன்றுகிறது. இப்போது அந்தப்பட்டணத்து முனிசிபாலிடியார் அந்த மாடுகள் அடிபடாமல் மறுபடியும் கன்று போடும் வரையில் அவைகளை மேய்த்துக் காப்பாற்றுவதற்காக ஒரு மேய்ச்சல் ஸ்தலம் ஏற்படுத்த போகிறார்களென்று தெரிகிறது.

Camel Breeding in the Punjab.

பஞ்சாபில் ஒட்டகம் வளர்த்தல்.—பஞ்சாப் மாகாணத்தில் ஒட்டகங்களை விர்த்தியாக்குகிறதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. வனாந்தரக் கப்பல்களென்று சொல்லப்படும் அந்த மிருகங்கள் ஆகாரம், ஜலம் அகப்படாத பாதைகளில் பலநாளளவாக ஒன்றும் தின்னாமலும் குடியாமலும் பிரயாணம் பண்ணக்கூடியவைகளானபடியால், பஞ்சாபிலிருந்து ஆப்கானிஸ்தான், பர்ஷியா முதலான தேசங்களுக்கு மலைநாடுகளின் வழியாய் யாத்திரை செய்பவர்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கின்றன. ஜனங்கள் அந்த மிருகங்களை வைத்து வளர்க்க அவர்களைத் தூண்டுவதற்காகச் சமீபத்தில் பஞ்சாபில் நடைபெற்ற விவசாயக் காட்சிசாலையில் தனி வெகுமானங்கள் ஒட்டகங்களுக்காகக் கொடுக்கப்பட்டன. ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஷை வெகுமானங்களைத் தரத் தங்களுக்குள் ஓர் தொகையை வசூலித்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டாரும் அதற்கு அனுகூலஞ்செய்வதாக வாக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

Ceylon Tobacco.

லங்கைப் புகையிலை.—திருவாங்கூர் சமஸ்தானத்தார் சிலோன் புகையிலைக்கு அதிக வரி விதித்ததால் சிலோன் புகையிலைத் தொழில் க்ஷீணித்துப்போக ஏதுவாயிருக்கிறதென்று சிலோன் கவர்ன்மெண்டார் கலோனியல் ஆபீஸுக்குப் பலமான ரிப்போர்ட்டு செய்திருக்கிறார்கள். பழைய தீர்வை வாங்கிக் கொண்டு திருவாங்கூரில் சிலோன் புகையிலையை இறக்குமதி செய்துகொள்ளும்படி இப்போது இந்தியா மந்திரியிடமிருந்து உத்தரவு வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

FOREIGN NEWS.

அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

——:o:——

Improved Agriculture.

திறமையான விவஸாயம்.—சைதாப்பேட்டை விவஸாயக் கல்விச்சாலைத் தலைவராயிருந்து சீமைக்குப் போயிருக்கும் மிஸ்தர் கீஸ் துரையவர்கள் தற்காலத்தில் இங்கிலாந்துக்கடுத்த ஜெர்சித் தீவில் குடியிருப்பதாகவும் அங்கே ஒரு ஏக்கர் நிலத்திலிட்ட உருளைக்கிழங்குப் பயிரில் சுமார் 1850-ரூபாய் கிடைத்ததாகவும், அதன்பின் அதே நிலத்தில் தக்காளி பயிரிட்டு அந்தப் பயிரிலும் தக்கலாபம் கிடைத்ததாகவும் எழுதியிருக்கிறார்கள். இவ்விதமாக ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு வருஷத்தில் சுமார் 2000-ரூபாய் கிடைக்கிறதென்று தெரியவருகிறது.

The Heir to the British Throne.

ப்ரிட்டிஷ் இளவரசர்.—ஜார்ஜ மகாராஜாவின் மூத்த குமாரனை ட்யூக் ஆப் கானர்வாலுக்கு வழக்கப்படி இளவரசுப்பட்டம் சூட்டிப் ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் என்று பேர்கொடுத்திருக்கிறார்கள். ப்ரிட்டிஷ் அரசரின் மூத்த குமாரனுக்கு இந்த மாதிரிப் பட்டம் கொடுப்பது வெகுகாலத்து வழக்கம். இளவரசருக்கு இப்போது வயது 16.

Indian Coolies and Malay States.

இந்திய கூலிகளும், மலாய் நாடுகளும்.—ஒப்பந்தத்தின்மேல் மலாய் நாடுகளின் தோட்டக்கால்களுக்குக் கப்பல் ஏற்றப்படும் இந்திய கூலிகளில் அதிகமான மரணம் நேரிடுகிறபடியால இனிமேல் கூலிகளை இந்தியாவிலிருந்து அனுப்புகிறதில்லையென்று இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

Indian Cotton.

இந்தியப் பருத்தி.—நமது தேசத்திலிருந்து இந்த வருஷந்தான் முதல் முதலாக பருத்தி அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாயிருக்கிறது. இது வரையில் இந்தியப் பருத்தி கட்டை இழையுள்ளதென்று அமெரிக்கர் வாங்கவில்லை. இந்த வருஷம் ஏற்றுமதியாயிருக்கும் பருத்தி அவர்களுக்குத்ருப்திகரமாயிருந்தால் நமது நாட்டுப் பருத்திக்கு அடுத்த வருஷமுதல் கிராக்கி அதிகமாயிருக்கும்.

SEASON.

கால ஸ்திதி.

RAINFALL.

மழை.—ஏப்ரல்மீ 1-தேதியிலிருந்து ஜூலைமீ முதல் தேதி வரையில் பெய்தமழை அளவும், இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், கீழே அங்குலக் கணக்காகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	14	9
வால்டேர்	7	7
காக்கினாடா	7	5
மசூலிப்பட்டணம்	8	7
நெல்லூர்	1	2
மதராஸ்	2	4
கூடலூர்	2	3
நாகப்பட்டணம்	1	4
பாம்பன்	3	3
கொழும்பு	18	32
திருவனந்தபுரம்	20	27
கொச்சி	46	47
கள்ளிக்கோட்டை	42	49
மங்களூர்	46	46
மெர்க்காரா	34	37
ஐதராபாத்	7	6
ரெய்ச்சூர்	3	5
பல்லாரி	3	5
கர்நூல்	5	5
கடப்பை	2	6
ஹாஸ்ஸான்	12	13
பெங்களூர்	4	9
கொடைக்கானல்	19	14
உதகமண்டலம்	14	..
கோயம்புத்தூர்	2	6
வேலூர்	8	..
சேலம்	5	10
திருச்சினாப்பள்ளி	6	7
புதுக்கோட்டை	4	..
மதுரை	6	6
திருநெல்வேலி	2	6

CROPS AND MARKET REPORT.

பயிர்களும் மார்க்கெட் நிலவரமும்.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—மேமீ 14-தேதியிலிருந்து ஜூன்மீ 18௳ வரையில் அந்ய தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி சாமான்களின் விவரம்.

நூலும் முறுக்கு நூலும் 530,177 ராத்தல், காரிகத்துணிகள் 35,32,974 கஜம். சலவைத்துணிகள் 15,89,414 கஜம். இதர நிறுசத்துணிகள் 34,36,170 கஜம். இதேகாலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 23,486 அந்தர் துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். ஜூன் மாஸம் 21-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூலின் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-3 வரையில் இருந்ததாகத் தெரிய வருகிறது.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற மே மாஸம் 14-ந்தேதிமுதல் ஜூன் மாஸம் 18-ம் தேதி வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 87 அந்தரும், ஆஸ்டிரியா ஹங்கேரியிலிருந்து 1000 அந்தரும், மோரீஸ் தீவிலிருந்து 2243 அந்தரும் இதர தேசங்களிலிருந்து 608 அந்தரும் இறக்குமதியாயின.

THE HIGH PRICES ENQUIRY.

விலையைப்பற்றிய விசாரணை.—சென்ற சில வருஷங்களாக உணவுப் பொருள்கள் எல்லாம் கிராக்கியாகவே விற்று வருவதற்குக் காரணம் இன்னதென்று விசாரணைசெய்து அறிய ஸ்பெஷல் ட்யூட்டியில் வைக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் கே. எல். தத்தா வெகுதீவிரமாய் வேலைசெய்து வருவதாகத் தெரிகிறது.

Supplement to the "Practical Life"

"பிழைக்கும் வழி" க்கு அநுபந்தம்.

ROCK CUT CARVINGS AT THE SEVEN PAGODAS.

மகாபலிபுரத்தில் ஒரு கற்பாறையிலுள்ள சித்திரங்கள்.

Supplement to the "Practical Life"

"பிழைக்கும் வழி" க்கு அனுபந்தம்.



ROCK CUT TEMPLE AT THE SEVEN PAGODAS.

மகாபலிபுரம் மலையில் குடைந்த கோவில்.

OFFICE OF THE REGISTRAR
10 DEC 1910
MADRAS

OFFICE OF THE REGISTRAR
10 DEC 1910
MADRAS

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ.
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.
EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. — ஸாதாரணஹு ஆடிமீ —JULY 1910. — ஸஞ்சிகை 7. No. 7.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship, and popular scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.	Foreign. Rs. A. P.
Per annum ...	4 0 0	6 0 0
Single copy ...	0 6 0	0 8 0
Sample copy ...	0 2 0	0 3 0

RATES OF ADVERTISEMENT.

1 Page	5 0 0	per month.
½ do	2 8 0	do
¼ do	1 4 0	do
Less than ¼ page ...	0 8 0	per *inch* per month.

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors.—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry, and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4 Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜாலக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான, படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.	அந்நிய நாடு.
வருஷம் 1க்கு ..	4 0 0	6 0 0
தனிப்பிரதி ..	0 6 0	0 8 0
மாதிரி காபி ..	0 2 0	0 3 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு	5 0 0
½ பக்கதிற்கு	,, ,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,, ,,	1 4 0
¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு		0 8 0

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக கிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

பிழைக்கும் வழி.
PRACTICAL LIFE.

புஸ்தகம் 2.
Vol. 2.
ஸாதாரண௵ ஆடி௴—JULY 1910.
ஸஞ்சிகை 7.
No. 7.

பொருளடக்கம்.

பத்திராதிபர் குறிப்புகள் பக்கம்

பிழைக்கும் வழி—புட்டிப் பால்—மாணாக்கர்களுக்கு ஒரு ஹோஸ்டல்—மகாபலிபுரம் 227–228

விசேஷ வியாஸங்கள்

இந்தியாவின் விளைபொருள்கள் .. 229
அடுப்பு ஊதுதல் —எம். ஸி. எஸ். அநந்தபத்மநாப ராவ், எம். ஏ. எல். டி 231
தேங்காயின் விலை யேற்றம் —பி. எல். தேவிஸிங் .. 233
வாடன் சம்பாவைக்கொண்டு ஒரு பரீக்ஷை —பு. து. ரத்தினம் பிள்ளை .. 235
மராமத்து இலாகா பரிபாலனம் —ஜே. வி. சுப்பிரமணிய அய்யர், பீ. ஏ. மானேஜர், ஸர்க்கிள் ஆபீஸ், மராமத்து இலாகா, பல்லாரி .. 236
பறையர்களும் மிராசுதார்களும் —எஸ். கோதண்டராமன் .. 240
ஜலமும் அதன் உபயோகமும் —நாகை. ஸி. கோபாலகிருஷ்ணன் .. 241
ஒரு ஆச்சரிய மோதிரம் .. 244

விசேஷத் திரட்டு

பூவரசமரம்—விவசாயச் சங்கங்கள்—புகையிலைப் பயிர்— கம்போடியாப் பருத்தி—தொழிலாலோசனை ஸபையும் தமிழ்ப்பாஷையும்—ஜப்பானிலும் இந்தியாவிலும் விவசாயம் .. 249–256

பத்திரிகை ஆராய்ச்சி

சங்கு, கிளிஞ்சல், சிப்பி, பலகறை—செட்டு—கினிப் புல்—விதை பொருக்கல் விதை காப்பாற்றுதல்—மாட்டுத் தீனியில் உப்பின் உபயோகம்—காய்கறிகளும் பழங்களும்—அம்மை வைத்தல்—இலுப்பைப் பூவின் உபயோகங்கள்—ஒரு நிறமில்லாத மசி 257–260
சிறுவர் பகுதி .. 261—262
ஸ்திரீகள் பகுதி .. 263—264

பகுதிக் குறிப்புகள்

விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—புஸ்தகக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக்குறிப்புகள்—மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள். 265–273
மாஸ வர்த்தமானம் .. 274—280

CONTENTS.

PAGE

Editorial Notes

PRACTICAL LIFE CONDENSED MILK A HOSTEL FOR STUDENTS MAHABALIPURAM ... 227 228

Special Articles

THE AGRICULTURAL PRODUCTS OF INDIA ... 229
BLOWING THE HEARTH M. C. S. Ananthapadmanaba Rao, M. A., L. T., *Assistant Professor of Science, Presidency College, Madras* ... 231
RISE IN THE PRICE OF COCOANUTS B. L. Davey Singh ... 233
AN EXPERIMENT WITH VADAN SAMBA P. D. Ratnam Pillai ... 235
THE ADMINISTRATION OF THE P. W. D. J. V. Subrahmanya Aiyar, B. A., *Manager, Circle Office, P. W. D., Bellary* ... 236
PARIAHS AND MIRASDARS—S. Kothandaraman... 240
WATER AND ITS USE—Nagai-C. Gopalakrishnan. 241
THE WONDERFUL RING ... 244

Selections

Portia Tree ... 249
Agricultural Associations ... 251
Tobacco Cultivation ... 252
Combodia Cotton ... 253
The Industrial Conference & the Tamil Language. 254
Agriculture in India and Japan ... 255

Review of the Press

Shells and Oysters ... 257
Economy ... 257
Guinea Grass ... 257
Gathering Seeds and Preserving Them ... 258
The Use of Salt in Cattle Food ... 258
Vegetables and Fruits ... 259
Vaccination ... 259
The Uses of the Iluppai Flower ... 260
A Colorless Ink ... 260
The Boys' Section ... 261
The Ladies' Section ... 263

Departmental Notes

Agricultural Notes ... 265
Industrial Notes ... 267
Educational Notes ... 268
Literary Notes ... 269
Legal Notes ... 269
Scientific Notes ... 271
Medical Notes ... 272
Personal Notes ... 273
News of the Month ... 274--28

EDITORIAL NOTES.

பத்திராதிபர் குறிப்புகள்.

Practical Life.

பிழைக்கும் வழி.—இதுவரையில் இருந்ததைப் பார்க்கிலும் இந்த ஸஞ்சிகை கிட்டத்தட்ட இரண்டு மடங்கு பருத்து, சில புதிய பகுதிகளோடு வெளிவந்திருப்பதை நம்முடைய நேயர்கள் காணலாம். இனிமேல் ஒவ்வொரு மாஸத்து ஸஞ்சிகையும் இப்படியே இருக்கும். சந்தா என்னமோ இப்பொழுது உள்ள ரூபாய் 4 தான். "பிழைக்கும் வழி" போன்ற பத்திரிகை தமிழ்ப் பாஷையில் இல்லை. இதர மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகைகளையும் "பிழைக்கும் வழி" யையும் ஒப்பிட்டுப் பார்த்தால், "பிழைக்கும் வழி" யிலேயே அதிகப் பொருள் அடங்கியிருப்பது விளங்கும். அதனால் "பிழைக்கும் வழி" யே எல்லாப் பத்திரிகைகளைவிட மலிவானது. பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்கள், குறிப்புகள், படங்கள் இவைகளைப்பற்றி நாமே சொல்லிக்கொள்வது அழகல்ல. அது பத்திரிகையைப் படிக்கிறவர்கள் சொல்லவேண்டிய விஷயம். பத்திரிகை உபயோகமுள்ளதென்று நினைக்கும் "பிழைக்கும் வழி" நேயர்கள் ஒவ்வொருவரும் அவரவர்களால் கூடிய மட்டும் பத்திரிகையை சந்தாதாரர்கள் அல்லாதவர்களுக்குக் காண்பித்து இரண்டு சந்தாதாரர்களைச்சேர்த்துக் கொடுக்கவேணும். தவிர பத்திரிகையில் வெளியாகும் விளம்பரங்கள் விஷயமாக அந்தந்தக் கம்பெனிக்கு எழுதும்பொழுது விளம்பரத்தைப் "பிழைக்கும் வழி" யில் பார்த்ததாகக் குறிப்பிட்டு எழுதவேணும். ஒருவித பணச்செலவுமில்லாத இந்த இரண்டுவிதமாக வாக்கு ஸகாயம் செய்தால் அவைகள் எமக்கு நேயர்கள் செய்யும் பெரிய உபகாரங்களாகும்.

Condensed Milk.

புட்டிப் பால்.—பால் புட்டிகளில் வரும் பாலெல்லாம் சுத்தமான பசுவின் பாலென்று சொல்லமுடியாது. கொஞ்ச காலமாக இதைக் கலப்படம் செய்வதாகத் தெரிகிறது. சீனதேசத்தில் ஸோஜா என்னும் ஒருவித அவரை உண்டு. இந்த அவரையை ஜலத்தில் நனைத்துப் பிழிந்து கொதிக்க வைத்தால் அந்தக் கொதித்த தண்ணீர் பால்போல் ஆகிறதாம் ஆனால் பார்வைக்குமட்டும் பால்போல் இருக்குமே ஒழிய பாலின் குணமே கிடையாது. இதோடு கொஞ்சம் சர்க்கரையையும் இன்னொரு வஸ்துவையும் போட்டு மறுபடியும் புட்டிப்பால் போல் இருக்கும்படியாகக் காய்ச்சுகிறார்கள். இப்படிக் காய்ச்சினால் கொஞ்சம் மஞ்சள் வர்ணமாகி வாய்க்கும் நன்றாய் இருக்கிறதாம். இந்தப் பாலுக்கும் பசுவின் பாலுக்கும் வித்தியாஸம் தெரியாது. ஆகவே புட்டிப்பாலோடு மேற் சொன்ன ஸோஜா அவரைப் பாலைக் கலந்து விட்டால் வாங்குகிறவர்கள் கண்டு பிடிக்கவே முடியாது.

A Hostel for Students.

மாணாக்கர்களுக்கு ஒரு ஹோஸ்டல்.—போன மாஸத்து ஸஞ்சிகையில் சென்னப்பட்டணத்தில் ஹோட்டல்களில் சாப்பிட்டுக்கொண்டு வாசித்துவரும் பிள்ளைகள் சாப்பாடு விஷயத்தில் படுங்கஷ்டத்தைப் பற்றிச் சொல்லி, லாப நஷ்டத்தைப் பார்க்காமல் தனவான்கள் முதல் போட்டு, மேற்படி பிள்ளைகள் சரிவரச் சாப்பிட ஸௌகர்யங்கள் ஏற்படுத்த வேணுமென்று சொன்னோம். இப்படியே, இந்த மாஸம் முதல் மைலாப்பூரில் ஒரு ஹோஸ்டல் (சாப்பாட்டிடம்) ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். 60 ரூபாய் வாடகை கொடுத்து ஒரு பெரியவீடு வாங்கியிருக்கிறார்கள். இதில் 20 பிள்ளைகள் சாப்பிடக் கூடியதோடு, தங்குவதற்கும் இடம் இருக்கிறது. மொத்தச் செலவை, மாதா மாதம் சாப்பிடுகிறவர்களிடத்தில் வீதித்து வசூல் செய்வார்கள். பையன் ஒருவனும் கையில் பணம் வைத்துக்கொள்ளக்கூடாது. எல்லாப் பணத்தையும் அந்த ஹோஸ்டல் ஸூபரின்டெண்டெண்டினிடத்தில் கொடுத்துவிடவேணும். அவர் வேண்டியபோது பையன்களுக்குப் பணத்தைக்கொடுத்து அவர்களுடைய பெற்றோர்களுக்குக் கணக்கை அனுப்பி விடுவார். ஹிந்துமத விஷயமாய் ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தா பாடம் சொல்லுவாராம். தற்காலத்தில் 8 பிள்ளைகள் சேர்ந்திருக்கிறார்களாம்.

Mahabalipuram.

மாகாபலிபுரம்.—சென்னப்பட்டணத்துக்குத் தெற்கே 33 மைல் தூரத்தில் இருக்கும் மகாபலிபுரமென்னும் ஸ்தலத்தைப்பற்றி அநேகர் கேள்விப்பட்டிருக்கலாம். இதில் முக்கிய விசேஷம் என்னவென்றால் இங்கே ஏழு இடிந்த கோவில்கள் இருக்கின்றன. மகாபலி என்னும் ஒரு ராஜா தபஸ்செய்து உலகம் முழுவதையும் ஆள வரம் பெற்றதாகவும் அவன் பேரால் இந்தப்பட்டணம் ஏற்பட்டதாகவும், ஜனங்கள் சொல்லுவார்கள். ஆனால் இங்கேயுள்ள கல்லுகளின்மேல் வெட்டியிருக்கும் சிலாசாஸனம் முதலியவைகளைக் கொண்டு ஆராய்ந்து பார்த்ததில் இந்த ஊர் பல்லவ ராஜ்யத்தின் முக்கிய பட்டணங்களில் ஒன்றென்றும், அந்த ராஜ்யத்துக்கு அரசனாயிருந்த மகாமல்ல நரஸிம்மவர்மா என்னும் ஒருவர் ஏழு கோவில்களில் முதலாவதைக் கட்டினாரென்றும், ஆகவே இந்த ஊர் அவர் பேர்பெற்று மகாமல்லபுரம் என்று வழங்கி மகாபலிபுரமென்று மருவி இருக்கிறதென்றும் வெளியாயிருக்கிறது. இந்த அரசன் கி. பி. ஏழாவது நூற்றாண்டின் முதலில் ஆண்டதாகத் தெரிகிறது. அநேகமாய் இதே மாதிரியாக இங்கேயுள்ள எல்லாக்கோவில்களும் பல்லவ ராஜாக்களாலேயே செதுக்கப்பட்டனவென்றும், இந்தராஜாக்களுக்குகாஞ்சீபுரம் பிரதானபட்டணமாக இருந்ததென்றும், அப்பொழுது மகாபலிபுரம் இந்த ராஜ்யத்துக்குத் துறைமுகமாக இருந்ததென்றும், தெரிய வருகிறது.

இந்த ஊரில் ஒரே கற்பாறையிலிருந்து ஒன்பது தனித்தனிக் கோவில்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர, இந்த ஊரிலும் இதற்கு அடுத்த இரண்டு மைல் தூரத்திலுள்ள சர்லவங்குப்பத்திலும் கற்பாறைகளில் 13 குகைகள் வெட்டப்பட்டிருக்கின்றன. சமுத்திர ஓரத்தில் கட்டப்பட்ட ஒரு கோவிலும் இருக்கிறது. ஏழு கோவில்களில் சிலவற்றை இந்தச் சஞ்சிகையில் படம் பிடித்துக் காட்டியிருக்கிறோம். இவைகளில் நாலுக்கு தர்மராஜா, பீஷ்மர், அர்ஜுனர், திரௌபதி, கோவில்களென்று சொல்லுவது வழக்கம். இன்னொரு படத்தில் இரண்டு யானைகளையும் சில சித்திரங்களையும் பார்க்கலாம். இவைகளெல்லாம் முன்பக்கத்தில் ஒரு கற்பாறையில் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒருயானை 17 அடி நீளமும் 14 அடி அகலமும், இன்னொருயானை 14 அடி நீளமும் 11அடி அகலமும், இருக்கிறதென்றால் அவைகள் எவ்வளவு பெரியவையாயிருக்க வேண்டுமென்று நாம் ஊகித்துக் கொள்ளலாம். இப்பொழுது இருக்கிற ஸ்திதியைப் பார்த்தால் இந்தக் கோவில்கள் ஏற்பட்டபிறகு சமுத்திரம் புரண்டு அடித்து மண்ணைக் கொண்டு வந்து தள்ளி மூடியிருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. இப்படியே ஆனதாகவும் அதனால் மைலாப்பூர் முதல் மகாபலிபுரம் வரையிலுள்ள அநேக பழைய பட்டணங்கள் நாசமாய் விட்டதாகவும் ஜனங்கள் சொல்லுகிறார்கள். இனி இப்படிச் சமுத்திரம் அடித்துத் தீங்கு நேரிடாமல் இந்தக் கோவில் முதலியவைகளைப் பாதுகாக்க நம்முடைய மதராஸ் கவர்ன்மெண்டார் வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். மகாபலிபுரத்துக்கு சென்னப்பட்டணத்திலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் வழியாய்ப் படகில் போகலாம். அல்லது செங்கற்பட்டிலிருந்து 18 மயில் ஜட்காவில் போகவேண்டும். ராத்திரியே திரும்பிவந்து விடுவதானால் 4அல்லது 5 ரூ. வண்டிச்சத்தம் கொடுக்கவேண்டியிருக்கும். ராத்திரி தங்கினால் இன்னும் ஒரு அரை ரூபாய் சேர்த்துக்கொடுக்க வேண்டும். மகாபலிபுரத்தில் இரண்டு சத்திரங்களும் ஒரு முஸ்ஸாபுரி பங்களாவும் இருக்கின்றன.

THE AGRICULTURAL PRODUCTS OF INDIA

இந்தியாவின் விளைபொருள்கள்.

குறிப்பு—*இந்தக்குறி ஏராளமாய் பயிரிடப்படும் இடத்தைக் காட்டுகிறது.

ளை பொருள்கள்.	பயிராகும் இடங்கள்.	பயிராவதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள்.
ல்.	வங்காளம்*—சர்மா, ப்ரஹ்மபுத்ரா நதிகளின் பள்ளத்தாக்குகள், மஹாநதியின் டெல்டா, அதாவது நீராரம்பம். பர்மா—ஐராவதி நதியின் பள்ளத்தாக்குகள், அந்நதியின் டெல்டா. சென்னை ராஜதானி—கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணையாறு, பாலாறு, காவேரி முதலிய நதிகளின் டெல்டாக்கள், மேற்கு மலையாளம். ஐக்ய மாகாணங்கள்.	வெயிலும், ஜலமும் ஸமர்த்தியாய்த் தேவை.
ாளம், கம்பு, கேழ்வரகு,முதலியவைகள்.	அரிசி, கோதுமை பயிராகக்கூடிய இடங்களில் இவைகள் அதிகமாய்ப் பயிராவதில்லை. ஏறக்குறைய இந்தியா முழுவதும் பயிரிடப்படுகின்றன. முக்கியமாய் டெக்கான் பீடபூமி. *	மழை அதிகமாய்த் தேவையில்லை. சொற்ப ஜலம் போதும்.
காதுமை.	பஞ்சாப், ஐக்ய மாகாணங்கள், மத்ய மாகாணங்களில் சில இடங்கள், நீலகிரி ஜில்லா, பர்மாவிலுள்ள ஷான் மாகாணங்கள்.	வெயிலும் மழையும் அதிகமாய்க்கூடாது. பனி இருந்தாலும் பாதகமில்லை.
ாற்கோதுமை.	ஐக்யமாகாணங்கள், வங்காளத்தின் மேட்டுப் பாங்கான நிலங்கள்.	கோதுமை தாங்கும் வெயிலைவிட, இதற்குக் கொஞ்சமாய்த்தானிருக்கவேண்டும்.
ாய், கறிபதார்த்தங்கள்.	கிணற்றிலிருந்து ஜலம் அகப்படக்கூடிய இடங்கள்.	கிணற்று ஜலம், மழை ஜலம் தேவை.
ரோப்பிய பழவகைகள்.	நீலகிரி, பெங்களூர், காஸ்மீரம்*.	சீதளமான பூமி தேவை.
ரும்பு.	ஐக்யமாகாணங்கள், வங்காளம், பஞ்சாப், சென்னை ராஜதானி.	நல்ல நிலமும், ஜலஸமர்த்தியுந் தேவை. நெல் உற்பத்தியாகும் பூமியில்நன்றாய்ப் பயிராகும்.
ாசனைத்திரவியங்கள்.	மிளகாய், மஞ்சள் எங்கும் பயிரிடப்படுகின்றன. லவங்கம், மிளகு முதலியவைகள் மலையாளம், திருவாங்கூர், கொச்சி முதலிய மேற்குக் கரை ஜில்லாக்கள்.	மிதமான வெயிலுங் குளிர்ச்சியும் அதிக மழையுந் தேவை.
தயிலை.	ஆஸ்ஸாம்*, இமயமலைச் சாரலில் இருக்கும்.	அடிக்கடி மழை பெய்தல்வேண்டும். மலை ப்ரதேசங்களாயிருத்தல் அவசியம்.

இந்தியாவின் விளைபொருள்கள்.

விளை பொருள்கள்.	பயிராகும் இடங்கள்.	பயிராவதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள்.
	டார்ஜிலிங்க், பஞ்சாப்பிலிருக்கும் கங்க்ரா ஜில்லா, ஐக்யமாகாணங்களிலிருக்கும் டெராடூன் ஜில்லா, சென்னையிலிருக்கும் நீலகிரி, பழனி மலைகள், இலங்கைத் தீவு.	
காப்பிக்கொட்டை	மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கிழக்குப் பாரிசங்கள், குடகு, மைசூர், திருவாங்கூர், கொச்சி, நீலகிரி, சேலம், வைநாடு.	சமுத்திர ஜலமட்டத்திற்குமேல் 2000 அடி முதல் 5000 அடி உயரத்துக்குள் இருக்கும் மலைச்சாரல், மிதமான சீதோஷ்ணம், 70 அங்குலம் முதல் 90 அங்குலம் வரையில் மழை.
எண்ணெய்விதைப் பயிர்கள்.	ஏறக்குறைய இந்தியா முழுவதும்.	
பருத்தி.	பம்பாய் ராஜதானி—குஜராட், கத்தியவார் மைதானங்கள். சென்னை ராஜதானி—கிருஷ்ணா, கடப்பை, கர்நூல், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், பேரார், ஐக்ய மாகாணங்கள்.	கரிசல் நிலம் மிகவுஞ் சிறந்த பூமி. வெயிலும், அப்போதைக்கப்போது கொஞ்சம் மழையும் தேவை.
சணல்.	கங்கை, ப்ரஹ்ம புத்ரா நதிகளின் பள்ளத்தாக்குகளும், டெல்டாக்களும், ஆஸ்ஸாம், சென்னை ராஜதானி.	நல்ல ஈரந்தேவை. நல்ல ஸாரமுள்ள பூமியாயும், பிரதிவருஷமும் புதிய எரு இடப்படும் பூமியாயுமிருத்தல் அவசியம்.
அவுரி.	பீஹார் *, ஐக்ய மாகாணங்கள், சென்னை, பஞ்சாப்.	
அபினி.	பீஹார், ஐக்ய மாகாணங்களில் பாட்னா, காசி, காஜிப்பூர் இவைகளைச் சுற்றியிருக்கும் ஊர்கள், மத்ய மாகாணங்கள், ராஜபுட்டானா, பரோடா.	
புகையிலை.	வங்காளம், ஐக்யமாகாணங்கள், சென்னை ராஜதானி—விசேஷமாய் கிருஷ்ணா, கோதாவரித் தீவுகள், பர்மா.	விசேஷமாய் ஜலம் வேண்டும்.

BLOWING THE HEARTH.

BY
M. C. S. ANANTAPADMANABHA RAO, M. A., L. T.
Assistant Professor of Science, Presidency College, Madras.

அடுப்பு ஊதுதல்

——:o:——

ஒரு விளக்கை ஏற்றிவைத்து அது எரிந்துகொண்டிருக்கும்பொழுது, அந்த விளக்கை ஒரு பாத்திரத்தில் வைத்து அந்தப் பாத்திரத்தின் வாயை மூடி விட்டால், கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்த விளக்கு அணைந்துபோகிறது. இதேமாதிரியாக விளக்குக்குப் பதிலாக நன்றாய் ஜொலிக்கும் கணலைப்போட்டு மூடினால் அந்தக்கணலும் ஒளி மழுங்கிக்கரியாகிவிடும். இவைகளால், வஸ்துக்கள் எரிவதற்கு சுத்தவாயு அத்தியாவசியம் என்றும், வஸ்துக்கள் எரியும்போது வாயு தன் குணம் மாறி கெட்டுப்போகிறதென்றும், எரிவதற்கு சுத்த வாயு சதா வந்துகொண்டேயிருக்கவேண்டுமென்றும் தெரிந்துகொள்ளுகிறோம்.

ஆகாயத்தில் இரண்டுவித வாயுக்கள் கலந்திருக்கின்றன. ஒன்று பிராணவாயு என்று சொல்லப்படும் ஆக்ஸிஜன். இது தான் பிராணிகள் சுவாசிப்பதற்கும் விளக்கு முதலானவை எரிவதற்கும் முக்கிய ஹேது. மற்றொன்று உப்புவாயு என்று சொல்லப்படும் நைட்ரஜன். இது அதிக மந்த குணமுடையது. இதில் வஸ்துக்கள் எரியா. இந்த நைட்ரஜன் ஆக்ஸிஜனுடன் கலந்திருப்பதால் காற்றில் வஸ்துக்கள் அதிசீக்கிரத்தில் எரிந்து பஸ்மமாகாமல் மெதுவாய் எரிகின்றன. பிராணவாயுவை தனியாய்ச் சேகரித்து அதில் ஒரு கட்டையை எரியச்செய்தால், அந்தக் கட்டை அதிகப் பிரகாசத்துடன் சீக்கிரம் எரிந்து போகும். இப்படி எரியுமானால் அதனால் உண்டாகும் உஷ்ணம், ஒரே சமயத்தில் அதிகமாய் வெளிப்பட்டு, நமக்கு உபயோகப்படாமல் எல்லாம் வெளியே பரவி விடும். பல இடங்களிலிருந்து வெவ்வேறு காலங்களில் ஆகாயத்து வாயுவைச் சேகரித்துப் பரீக்ஷித்துப் பார்த்ததில், ஆகாயத்தில் சற்றேறக்குறைய ஐந்தில் ஒரு பங்கு ஆக்ஸிஜனாகவும் நாலு பங்கு நைட்ரஜனாகவும் இருக்கிறதென்று ரஸாயன சாஸ்திரிகள் நிர்ணயித்திருக்கிறார்கள். இந்தக் கலப்பின் தாமாஷா எப்போதும் ஒரே பரிமாணமுள்ளதாக இருக்கிறது.

கட்டை முதலான மரப்பொருள்களில் கரிப்பொருள் என்று சொல்லப்படும் கார்பன் இருக்கிறதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். விளக்குக்கு ஸாதாரணமாய் உபயோகிக்கும் எண்ணெய், மெழுகு, நெய் முதலான தைல பதார்த்தங்களிலும் கார்பன் உண்டு. தைலங்கள் எரியும்போது கறுப்பாகிய புகை வெளிக் கிளம்புகிறதை நாம் அடிக்கடி காண்கிறோமல்லவா? அந்தப் புகையிலிருந்து நாம் சில காலங்களில் கறுத்த மை சேகரிக்கிறோமல்லவா? எண்ணெய் எரியும்போதும் கட்டை எரியும்போதும் அவைகளிலுள்ள கார்பன் ஆகாயத்திலுள்ள ஆக்ஸிஜனோடு வேண்டிய அளவினதாய்ச் சேர்ந்து குணம் மாறி கரியமிலவாயு என்னும் கார்பானிக் ஆஸிட் காஸாக மாறுபாடாகிவிடுகிறது. விளக்கில் படும் காற்றுக் குறைவாலாவது அல்லது எரியும் பாகங்களுக்கு ஆக்ஸிஜன் கிட்டாமையாலாவது கரிப் பொருள், அதாவது கார்பன், சில வேளைகளில் தன் சுய ரூபத்துடன் கறுப்புப் புகையாக வெளியேறுகிறதுண்டு.

ஜீவராசிகள் சுவாசிக்கும் போதும் மேலே சொல்லிய வேறுபாடு சதா உண்டாகிக் கொண்டே இருக்கிறது. நம்முடம்பிலுள்ள

கார்பன் நாம் உட்கொள்ளும் சுத்த வாயுவிலுள்ள ஆக்ஸிஜனுடன் சேர்ந்து கரியமில வாயுவாக, அதாவது கார்பானிக் ஆஸிட்காஸாக, மாறுவதால், நாம் வெளிவிடும் காற்றில் கொஞ்சம் கரியமிலவாயு கலந்தே இருக்கும். வெளியே விடும் சுவாசத்தில் ஆக்ஸிஜனே இல்லையென்றும், அதெல்லாம் கெட்டு கார்பானிக் ஆஸிட் காஸாய் வெளிப்படுகிறதென்றும் அனேகர் எண்ணுவதுண்டு. அது பிசகு.

நாம் உட்கொள்ளும் வாயுவில் நூற்றில் 21 பங்கு ஆக்ஸிஜன் இருக்கிறது. அதில் 4-பங்கு நம் சுவாசப் பையில் கரியமில வாயுவாக மாறுகிறது. ஆகவே நாம் வெளிவிடும் காற்றில் 100-ல் 17 பங்கு பிராணவாயு இருக்கிறது. நாம் வெளிவிடும் காற்று எரியும் நெருப்பின் மேல் பட்டால் எரிவதற்கு உதவியான ஆக்ஸிஜன் அதிகமாய்க் குறையாமல் இருத்தலால், அந்த நெருப்பு எரிந்துகொண்டேயிருக்கும்.

தங்கம் வெள்ளி முதலிய உலோகங்களை உருக்கி வார்த்துத் தட்டி ஆபரணங்கள் செய்யும் தட்டான் தன் சிறு அடுப்பில் குழாயின் வழியாய் ஊதுவதை பார்த்திருக்கிறீர்களல்லவா? நாம் ஒரு எரிகிற அடுப்பின்முன் விசிறியினால் விசிறினாலும் அந்த அடுப்பின் தணலில் ஒரு ஊது குழாயின் வழியாய் ஊதினாலும், காற்று அதிவேகமாய் உட்செல்லுவதால், ஒவ்வொரு நிமிஷமும் ஊதுவதற்கு முன் இருந்ததைவிட அதிகமான பிராணவாயு எரியும் விறகின்மேல் பட்டு அதைச் சீக்கிரம் எரியச்செய்யும். விசிறியின் வேகத்திற்குத் தக்கபடி நெருப்பின் தீக்ஷணியமும் வேறுபடும். விறகு வேகமாய்ப்பற்றி எரிந்தால் அதனால் உண்டாகும் சூடும் அதிகமாய் வெளிப்பட்டு அடுப்பின்மேல்வைத்த பாத்திரங்களின் மேல் தாக்கி அவைகளிலுள்ள வஸ்துக்களை சீக்கிரம் சூடாக்கிப் பக்குவம் செய்யும்.

கலாய்க்காரன் என்னும் பாத்திரங்களுக்கு ஈயம், தகரம், முதலான முலாம் பூசுகிறவன் உபயோகிக்கும் குழியடுப்பைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? அந்த அடுப்பிலுள்ள கரித்துண்டுகளுக்குப் பக்கத்திலிருந்துதானே, காற்று தானாக வரமுடியும். அந்தக்காற்று கொஞ்சமாக மேல்படுவதால் அதிக உஷ்ணம் உண்டாகாதல்லவா? காற்றை அதிகரிப்பதற்காகவே துருத்தி என்னும் ஒரு தோல்பையை அவன் உபயோகப்படுத்துகிறான். அந்தப்பை நிறைய காற்றைப்பிடித்து அதை அமிழ்த்த அதிலுள்ள காற்று குழாயின் வழியாய் எரியும் தணலின் வழிசென்று ஈயம் முதலிய பூச்சு உலோகக் கலப்புகளை உருக்கக்கூடிய சூட்டைத் தருகின்றது. இரும்புத் தண்டவாளங்களை சிவக்கக்காய்ச்சுவதற்காக உபயோகிக்கும் கொல்லுலையிலும், இம்மாதிரியானகாற்று ஊதும் உபாயங்களையே உபயோகிக்கிறார்கள்.

அடுப்பை ஊதும்போது குழந்தைகள் அனேக ஸமயங்களில் அஜாக்கிரதையாய் நேராக வாயால் ஊதுவது உண்டு. ஊதும்போது அடுப்பிலுள்ள கரித்துண்டுகள் வெடிக்க, பொறிபரந்து கண்மேல் படும். இதனால் அபாயம் உண்டாகும். மேலும், முகத்தை அடுப்பின் பக்கத்தில் கொண்டுபோவதால், கரி ஸாதாரணமாய் கார்பானிக் ஆஸிட் காஸாக மாறுவதற்கு வேண்டிய அளவு இல்லாதகொஞ்சம் குறைந்த அளவான பிராணவாயுவுடன் சேருவதால் கார்பன் மானாக்ஸைட் காஸ் என்னும் ஒரு விதவிஷக்காற்று உண்டாகும். அது ஊதுகிறவன்மேல் பட்டு அதை அவன் சுவாசிக்கநேரிடும்.

ஒருவிதமான நீல நிறத்துடன் எரியும் ஜுவாலையையுடைய அடுப்பில் இந்த விஷக்காற்று அவசியம் இருக்கும். இந்தக்காற்றை மிகக்குறைவாக சுவாசித்தாலும், தலைவலியும், மயக்கமும், கிறுகிறுப்பும் உண்டாகும். இதை அதிகமாக சுவாசித்தால் ஸ்மரணை கெட்டு பிராணாபாயமும், உண்டாகும். இந்தக்கொடிய விஷக்காற்று பிராணவாயுவுடன் கலந்து எரிந்தபிறகு இக்கெடுதிகள் உண்டாகா. இந்த விஷக்காற்று மேலே அடிக்காமல் தடுக்கவும், நெருப்புப் பொறிகளால் தீங்கு விளையாமல் இருக்கவும், சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் அடுப்பூதும்போது ஊது குழாய்களை உபயோகிக்கும்படி. கற்பிக்கவேண்டியது அவசியம்.

எம். வி எஸ். அனந்தபத்மநாப ராவ்.

RISE IN THE PRICE OF COCOANUTS.

BY

B. L. DAVEY SINGH.

தேங்காயின் விலையேற்றம்.

சுமார் இருபது வருஷங்களுக்குமுன் ஒரு தேங்காயின் விலை கிராமாந்தரங்களில் ஒரு பைஸா (தம்பிடி) முதல் இரண்டு பைஸா வாகவும், பட்டணங்களில் மூன்று அல்லது நாலு பைஸாவாகவும் இருந்தது. தவிர, தேங்காய்கள் ஏராளமாயும் விலைக்கு அகப்பட்டன. இப்போதோ கிராமாந்தரங்களிலேயே ஒரு தேங்காய் மூன்று பைஸா முதல் ஆறு பைஸா வரையிலும் விற்கிறது. பட்டணங்களிலோ ஆறு பைஸா முதல் ஒரு அணா அளவும் இருக்கிறது. இதற்குக்காரணமென்ன? இருபது வருஷங்களுக்கு முன்னிருந்ததைக் காட்டிலும் இப்போது விளைவு குறைந்து விட்டதா, அல்லது தேங்காய்கள் ஊர்களில் செலவாகிறதற்குத் தக்கபடி விளையவில்லையா யென்பதை விசாரித்துப் பார்த்தால், தேங்காய்களின் விளைவு இருபது வருஷங்களுக்கு முன்னிருந்ததைப் பார்க்கிலும் சுமார் இரட்டிப்பாகவே இருக்கிறதென்னலாம். அப்படியானால் விளையும் தேங்காய்கள் எங்கே? தேங்காய் எண்ணெயானது சவுக்காரம், ஸோப்பு, மெழுகுவர்த்தி இவைகள் செய்வதற்கு சீமையில் ரொம்ப உபயோகப்படுகிறது. இப்போது மெழுகுவர்த்தி இல்லாத வீடு கிடையாது; ஸோப்பு, சவுக்காரம் உபயோகிக்காத மனிதனுங்கிடையாது. கேவலம் கிராமாந்தரங்களிலும் இவைகள் ஜாஸ்தியாய் விட்டன. இருபது அல்லது முப்பது வருஷங்களுக்கு முன்னே ஸோப்பும் தெரியாது; சவுக்காரமும் தெரியாது. மெழுகுவர்த்தியைத் தகுந்த குடித்தனக்காரர்கள் மட்டுமே உபயோகித்து வந்தார்கள். இப்பொழுது முழுதும் மாறிவிட்டது. நம்முடைய தேசங்களில் விளையும் தேங்காய்களை யெல்லாம் சீமைக்குக் கொண்டுபோய் மேல் சொன்னபடி உபயோகிப்பதுடன் பிண்ணாக்கை எருவாக உபயோகப் படுத்தியும் விடுகிறார்கள். இப்படியாக சீமைக்கு அனுப்பப் படுவதினாலும், அங்கே எண்ணெயைத் தகுந்தபடியாய் உபயோகித்து வருவதினாலும் தேங்காய் விலை மிகவும் உயர்ந்து விட்டது.

தென்னை மரங்கள் விசேஷமாய் எவ்விடங்களில் பயிராகின்றனவென்று பார்ப்போம். கிழக்குச் சமுத்திரக் கரைகளிலும், மேற்குச் சமுத்திரக் கரைகளிலும், இன்னும் இவை போன்ற மணல் பாங்கான இடங்களிலும் விசேஷமாயுண்டாகின்றன. மேலும், வண்டல் விசேஷமாய்ப் படிதலால் “படுகை” என்று சொல்லப்படும் இடங்களில் இவைகள் ரொம்பவும் நன்றாய்ப் பலன் தருவதைப் பார்க்கலாம். இப்பேர்ப்பட்ட இடங்களில் தென்னை மரங்களுக்கு ஜலம் பாய்ச்ச வேண்டியதில்லை. ஏனென்றால் மழை பொழிகிறபோது தரையிலிருக்கும் ஜலம் தாராளமாய்க் கீழ் நோக்கிச் சென்று மரங்களின் வேர்களுக்கு உணவாகின்றது. ஆனால் சில ஊர்களில் நாம் தென்னை மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதைப் பார்க்கிறோம். கவனித்துப் பார்த்தால் அவ்விடங்களில் பூமி கெட்டியாயிருப்பதை அறியலாம். எந்தப் பூமி கெட்டியா யிருக்கிறதோ அந்தப் பூமியில் தண்ணீர் லகுவில் சுவறாது. அதினால்தான் தென்னை மரத்தைச் சுற்றிலும் இரண்டு மூன்று சதுர அடி பள்ளம் வெட்டித் தண்ணீரைத் தங்கச் செய்கிறார்கள். அப்படித் தங்கும் தண்ணீர் கொஞ்சங் கொஞ்சமாய்த் தரைக்குள் புகுந்து, தரையை இளகச்செய்து, கீழேபோய் வேர்களின் பக்கம் போகிறது, இன்னும் அநேகமாய் எல்லா ஊர்களிலும்,

கொல்லைப் பக்கங்களில் தென்னை மரங்கள் நன்றாய்ப் பயிராவதைப் பார்க்கிறோம். அவைகளின் செழுமைக்குக் காரணம் அவைகள் பயிராகும் பூமியானது சாக்கடை நீரைப் பூராவாக உட்கொள்வதாலும், சாக்கடை நீர் மிகவும் உபயோகமான எருவாதலாலுமேயாம்.

சாக்கடை ஜலம் நல்ல எருவென்ற படியாலும், அதினாலேயே கொல்லைப் பக்கங்களில் தென்னை செழித்து வளருகிறது என்றதாலும், தென்னை மரத்திற்கும் எருவேண்டுமென்பது தெளிவாகிறது. வண்டல் படிந்த படுகைகளில், வண்டல்களே நல்ல எருவாகின்றன; அப்படிப்பட்ட நிலங்களுக்கு எரு வேண்டியதேயில்லை. கொஞ்சம் எருப்போட்டால் அதிக விசேஷந்தான். பாக்கி நிலங்களில் எருப்போட வேண்டியது அவசியம். வருஷத்திற்கு ஒரு முறையாகிலும் தென்னை மரத்தைச்சுற்றி நான்கு அடி சதுரத்துக்கு ஒரு அடி ஆழம் வெட்டி எருவைப் போடவேண்டும். தென்னை மரத்தின் வேர்கள் அதிக ஆழம் போவதில்லை. ஆகவே அதிக ஆழம் வெட்டவேண்டிய அவசியமில்லை.

தென்னை மரம் வருஷத்துக்கு இரண்டுதரம் காய் காய்க்கும். ஒரு தென்னை மரம் சராசரி வருஷத்திற்கு 100 தேங்காய் காய்க்கும். இதைத் தவிர மட்டை, பன்னாடை, பாளை முதலியவைகள் வருஷந்தோறும் அகப்படும். இவைகளெல்லா வற்றையும் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு தென்னை மரத்திலிருந்து குறைந்தது ரூ. 5-வரையில் கிடைக்கக் கூடியதாயிருக்கிறது. பிண்ணாக்கு நல்ல எருவென்று சொன்னோம். இந்த நூறு தேங்காயை ஆட்டினால் குறைந்தது ஐந்து வீசை எண்ணெயும் இரண்டு வீசை பிண்ணாக்கும் கிடைக்கும். இந்த இரண்டு வீசை பிண்ணாக்கையும் மரத்திற்குப் போட்டால் அதுவே அந்த மரத்திற்கு நல்ல தக்க போதுமான எருவாகும். ஆகையால் தேங்காய்களை அப்படியே விற்காமல் எண்ணெயாய்ச்செய்து பிறதேசங்களுக்கு அனுப்பினால் நம்முடைய தேச அபிவிருத்திக்கும், லாப விஷயத்திற்கும் மிக்க நன்மையாயிருக்கும்.

ஆகையால் ஒருவனுக்கு ஆயிரம் தென்னை மரங்கள் இருந்தால் அவனுக்குக் குறைந்தது ரூ. 5,000 கிடைப்பதில் சந்தேகமேயில்லை. ஒவ்வொருவரும் கூடுமானவரையில் தங்களுக்கு இருக்கும் புஞ்சை நிலங்களில் தென்னை மரங்களை வைத்துப் பயிராக்க வேண்டும். தென்னை மரங்களுக்கு மனிதர்களைப்போலவே நூறு வயது என்று சொல்லலாம். இவைகளே பூலோக கற்பக விருக்ஷங்களாம். ஒரு மனிதனுக்கு நூறு தென்னை மரங்களிருந்தால் அவைகளே பெரிய ஆஸ்தியாம்.

இந்தக் கருத்தை நோக்கியே “ தளராவளர் தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால் ” என்று தெய்வப் புலமை வாய்ந்த ஔவையாரும் கூறியிருக்கிறார்.

கிராமாந்தரங்களில் இருக்கும் குடித்தனக்காரர்களுக்கு முக்கியமாய் வேண்டிய மரங்கள் மூன்று வகை. அவைகளாவன:-நாலு தென்னை, பத்து வாழை, ஒரு மூங்கில் கொத்து. இவைகள் இல்லாத குடித்தனம் என்ன குடித்தனம்?

மேலும் தென்னை மரங்களைக் கள்ளுக் குத்தகைக்கு விடுவது, எல்லா மதத்திலும் சொல்லியிருக்கிறபடி பாபகரமான விஷயமாயிருப்பதுமல்லாமல், காய் காய்க்கும் திறமையை அடியோடு நாசம் செய்து விடுகிறது. இதைச் சில ஜனங்கள் அறிந்தும் இருக்கிறார்கள். இருந்தாலும் முதலெடுப்பில் ஜாஸ்தி ரூபாய் வருகிறதே என்கிற ஆசையால் மரங்களை நாளாவட்டத்தில் கெடுத்துவிடுகிறார்கள். இப்பேர்ப்பட்ட குத்தகைக்கு விடாமல் ஜனங்கள் தேங்காயாகவே விற்பனைசெய்து வருவார்களாகில் மொத்தத்தில் லாபத்தை அடைவார்களே தவிர ஒருக்காலும் நஷ்டத்தை அடையமாட்டார்கள்.

இப்போது கோயம்புத்தூர் ஜில்லாவில் தென்னை மரங்களை விசேஷமாய்ப் பயிராக்கி வருகிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவின் பூமியின் ஸாரமானது அப்படி ஒன்றும் முதல்தரமானதல்ல என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. பூமி அவ்வளவு முதல்தரமானதாய் இல்லாமற்போனாலும் ஜனங்கள் தங்களுடைய செய்காலினாலும் உழைப்பினாலும் அதை ரொம்பவும் செழிப்புள்ளதாகச் செய்கிறார்கள். எப்படியென்றால் தென்னை மரங்களைச்சுற்றி வருஷத்திற்கு இரண்டுமுறை வெட்டுகிறார்கள். வருஷத்துக்கு ஒரு தடவையானாலும் எருவும் போடுகிறார்கள். இந்த எரு விஷயத்தில் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளுகிறார்கள். விசேஷமாய் பொருக்கு மண் அல்லது குளத்து மண்ணை எருவாகப் போடுகிறார்கள். குளத்து மண் எருவாவதுந் தவிர ஜலத்தைத் தக்கபடி தங்கச்செய்து மரத்தின் வேர்களில் எப்போதும் தண்ணீர் கசிந்துக் கொண்டிருக்கும்படி செய்கிறதாம். வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது இரு முறையோ ஜலம் கட்டுகிறார்களாம். தென்னம்பிள்ளை வைத்து மூன்று வருஷங்களுக்கெல்லாம் பலன் உண்டாகிவிடுகிறதாம். இப்படிச் செய்வதினால் இயற்கையில் தஞ்சாவூர் ஜில்லாவைப் போன்ற செழிப்புள்ள நிலங்களைக் காட்டிலும் அவர்கள் நிலங்கள் செழிப்பாயிருக்கின்றன. இப்படிச்செய்கிற ஜனங்களைப் பார்த்தும் கேட்டுமிருந்தும் தென்னை மரத்தின் உபயோகங்களை ஜனங்கள் இன்னும் முழுவதும் அறியவில்லையே!

பி. எல். தேவிலிங்க.

AN EXPERIMENT WITH VADAN SAMBA.

BY

P. D. RATNAM PILLAI.

வாடன் சம்பாவைக்கொண்டு ஒரு பரீக்ஷை.

ஒற்றை நாற்று நடுகையைக் குறித்து பல வியாஸங்கள் நம் அருமைப் “ பிழைக்கும் வழி ” யில் வெளிவந்திருக்கின்றன. இதைக் குறித்து எத்தனை வியாஸங்கள் வந்தாலும் அவை நம்முடைய நாட்டுக்குப் போதியன அல்ல. ஆகையால் நம் அனுபோகத்தில் கண்டதையும் கேட்டதையும் எழுதுகிறோம்.

இது சாகுபடி செய்த இடம் :—தஞ்சாவூர் ஜில்லா சீர்காழி தாலூகா திருமுல்லை வாசல் வட்டம் கச்சவெளி கிராமம். இது மிஸ்டர் கே. சுல்தான் கனிமரைக்காயரால் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது.

விஸ்தீரணம் :—ஒரு ஏக்கர்.

பூமி :--உவர்மண் சம்பந்தமானது. கோடை காலத்தில் உப்பு நன்றாய்ப் பூக்கும். இது சாகுபடிக்கு அவ்வளவு உரித்தான நிலமென்று எவரும் சொல்லமாட்டார்கள்.

உழவு :—சாதாரணமாய் உழுவதைப் பார்க்கிலும் நாலு சால் கூட உழப்பட்டது. நிலம் சாதாரணமாய் ஒத்தடி செய்கிறதைப் பார்க்கிலும் சற்று கவனமாய்ச் செப்பனிடப்பட்டது.

எரு :—சாதாரணமாய்ப் போடுவதைப்போலவே போடப்பட்டது. அதிக எருப் போடவில்லை.

நடவு :—விதைவிட்டு 25 நாளைக்குமேல் நாற்று பிடுங்கப்பட்டது. பிடிப்பிடியாய் நட்டுப் பழக்கப்பட்ட பறைச்சிக்கு ஒவ்வொன்றாய் நடுவதென்றால் அதிகக்கஷ்டம். நடவும் வெகு தாமதமாய் நடந்தது. ஒரு அடி நீளமுள்ள ஒரு குச்சிவெட்டி ஒவ்வொரு பறைச்சிக்கும் கொடுக்கப்பட்டது. ஏனென்றால் அவர்களுக்கு இப்படி நட்டுப் பழக்கமில்லை. இந்த ஒரு ஏக்

கர் நிலம்நட சுமார் 6 பறைச்சிபோதும். ஆனால் இது நட்டு முடிய 18 பறைச்சி பிடித்தது. இப்படி இரண்டு மூன்று வருஷம் நட்டுப் பழக்கப்பட்டு விட்டால் இவ்வளவு கஷ்டமும் தொந்தரவும் இரா.

தண்ணீர்ப்பாய்ச்சுதல் :—வெயில் கடுமையாக இருந்து ஜலமில்லாமல் காய்கிற நாளில் கொஞ்சம் சிரமப்பட்டு இதற்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. இது காய்ந்தால், பிடிப்பிடியாய் நடுவதைப் போலக் கெட்டுப்போகாது என்று நம்முடைய அனுபோகத்தில் தெரிகிறது.

மாசூல் :—இந்த ஒரு ஏக்கர் நிலத்தில் நாற்பது கலம் (கலம் 1-க்கு பட்டணம் படி 24.) கண்டு முதலாயிற்று. இதே நிலத்தில் சென்ற வருஷம் பிடிப்பிடியாய் நட்டதில் மூன்று கலம் கூடக் கண்டுமுதலாக வில்லை. இந்த நிலத்திற்குப் பக்கத்திலுள்ள நிலங்களில் பிடிப்பிடியாய் சாகுபடி செய்ததில் இதைப் போல விளைவுகாண வில்லை.

குறிப்பு :—உவர்மண் சம்பந்தமான நிலத்தில் ஒற்றை நாற்றுப் பயன்படாதென்று இருந்தோம். இப்போது மேற்கண்ட விஷயங்களைக் கொண்டு எந்த தினுஸு நெல்லையும் எப்படிப் பட்ட நிலத்திலும் சாகுபடி செய்யலாமென்று தோன்றுகிறது. ஆகையால் ஒவ்வொரு கிராமத்திலும் குடித்தனக்காரர்கள் தங்கள் தங்களுக்குள்ள நிலங்களில் தினுஸுக்குக் கொஞ்சம் சாகுபடி செய்தால் இதன் விளைவின் மிகுதியையறிந்து பின்பு அவர்கள் இந்த வழக்கத்தைப் பின்பற்றுவார்கள்.

சீர்காழி தாலூகாவில் ஸ்ரீமான். சிதம்பரநாத முதலியார் அவர்கள், ஸ்ரீமான் திருநாராயணப் பிள்ளையவர்கள் முதலியவர்கள் இது விஷயத்தில் முயற்சித்துத் தங்கள் தங்கள் கிராமத்தில் குறைந்தது ஒரு ஏக்கர் சாகுபடி செய்யவேண்டுமென்று கண்டிப்பாய்க் கிராமச் சிப்பந்திகளுக்கு உத்தரவு செய்தால் இந்த வழக்கம் தஞ்சாவூர் ஜில்லாவில் வெகு சீக்கிரத்தில் பரவும். ஏனெனில் இவர்களுக்கு பல இடங்களில் நில மிருக்கிறது. இன்னும் விஷயங்கள் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் ஷெ மரைக்காயருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

பு. து. ரத்தினம்.

THE ADMINISTRATION OF THE P. W. D.

BY

J. V. SUBRAHMANYA AIYAR, B.A.,

MANAGER, CIRCLE OFFICE, P. W. D., BELLARY.

மராமத்து இலாகா பரிபாலனம்

கவர்ன்மெண்டார் நாட்டின் நன்மையை உத்தேசித்து நடத்திவரும் நானாவிதமான நல்ல காரியங்களில் முதன்மையானவை மராமத்து வேலைகளே. ராணுவம், போலீஸ், கச்சேரிகள் முதலான பல துறைகளில் ஆகும் பணச் செலவைப்போலல்லாமல், மராமத்து வேலைகளில் போடும் பணம், துரைத்தனங்கள் மாறினாலும், நிலைத்துநின்று என்றென்றைக்கும் தேசத்தின் நன்மையை அபிவிருத்தி செய்வதாகும். அவைகளே கவர்ன்மெண்டார் நாட்டுக்கு நிறுத்திவைக்கும் ஆஸ்திகள். ஒருவன் எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் அதனாலேயே அவன் பணக்காரனாவதில்லை. தான் மீத்துவைக்கும் அளவே பணக்காரனாவான். அதுபோலவே ஒரு கவர்ன்மெண்டும் அதன் வரி வருமானத்தினாலேயே ஓங்கி உயர்ந்ததென்று பெயர் பெறுவதில்லை. அந்த வரியை ஜனங்களுக்கு உபகாரமாய் நன்றாய் ஆராய்ந்தறிந்து நிச்சயிக்கப்பட்ட நல்ல காரியங்களில் செலவிட்டு நன்மை செய்வதனாலேயே பெரும்புகழ் பெறும்.

இந்தியாவில் தற்காலம் இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் மராமத்து வேலைகளுக்காக ஏற்படுத்தியிருக்கும் பிரிவுகள் நான்கு. அவையாவன :—(1) கட்டிடங்களும் ரஸ்தாக்களும் (2) பாசனம் (3) இருப்புப்பாதை (4) தந்தி மார்க்கங்கள்.

இவைகளில் முதலாவது வகுப்பின் கீழ் அடங்கிய விஷயங்களாவன.—கவர்ன்மெண்டு அலுவல்களைப் பல இலாகாக்களிலும் செய்து வரும் உத்தியோகஸ்தர்கள் தங்கியிருந்து நிர்வகித்து வருவதற்காக ஆபீஸ்களும், கோர்ட்டுகளும், ஆயத்துறைகளும், தபால் தந்திச் சாவடிகளும், ஸ்கூல்களும், காவல்கிடங்குகளும், போலீஸ் டாணாக்களும், ஆஸ்பத்திரிகளும், வழிப்போக்கர் தங்கும் சத்திரங்களும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்குக் குடியிருக்கத்தகுந்த வஸதிகளும், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஆயாஸமில்லாமல் வண்டியேறியும் நடந்தும் போக அநுகூலமான பாதைகளும், அந்தப் பாதைகளில் நிழல் தரும் மரங்கள் அமைப்பும், குறுக்கிடும் ஆறுகளைத் தாண்டிப்போகப் பாலங்களும், இன்னும் இவைகளைப்போன்ற மற்றவைகளுமே. ஆனால் இந்தப் பிரிவில் மேலே சொன்னவைகளேயல்லாமல் ஜன சமூகத்தின் ஆரோக்கிய அபிவிருத்தியை உத்தேசித்து பெரிய பட்டணங்களில் அமைக்கப்படும் தண்ணீர்க் குழாய் வேலைகளும், அந்தப் பட்டணங்களில் சேரும் அசுத்தங்களை அப்போதைக்கப்போதே அடித்துக்கொண்டுபோகும் வடிகால்களும், நடைபெற்று வருவதை நகரவாசிகள் அறிந்திருக்கலாம்.

அவ்வளவு நன்றாய் எல்லாருக்கும் தெரிந்திராத இன்னும் ஒருவகை வேலையும் இந்தப் பிரிவில் அடங்கியிருக்கிறது. அதாவது நீராவிக்கப்பல்கள் வந்து தங்கும் துறைமுகங்களும், அந்தத் துறைமுகங்களில் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்குத் தகுந்த அநுகூலங்கள் ஏற்படுத்துவதும் அந்த நீராவிக்கப்பல்கள் திக்குத்திசை தெரியாத நெடுங்கடலில் வரும்போது வழி காட்டவும், நீரில் முழுகியிருக்கும் பாறைகள் முதலிய அபாயங்களை விலகிச்செல்ல எச்சரிக்கை செய்யவும், துறைமுகங்கள் சமீபித்தன என்று குறிப்பிக்கவும், "லயிட்ஹவுஸ்" என்று சொல்லப்படும் விளக்கு ஸ்தம்பங்கள் அமைப்பதும் தான்.

மேலே சொல்லிய வேலைகளெல்லாம் நாட்டின் நன்மைக்கு முக்கியமானவைகளே. ஆனாலும் இவையெல்லாவற்றிற்கும் மேம்பட்டதும் இன்றியமையாததும் பாசன வேலையே. "நீரின்றமையாதுலகு" என்றார் திருக்குறளுடையாரும். அப்படி உலகத்தின் நிலைபேற்றிற்கு இன்றியமையாத நீர், மலையிலும் காட்டிலும் மழையாய்ச் சொரிந்து, காட்டாறுகளில் பெருகி, கடலில்கலந்து செல்லவிடுதலானது பெரும் வருமானமுள்ள ஒருவன் தன் பணத்தையெல்லாம் மனம் போனபடி வீணாக்கிவிட்டு மனையிலுள்ள மக்களையும் பெண்டிரையும்பசித்துக்கிடக்கச் செய்வதோடு தானும் பாடுபட்டு இறந்துபோவதை ஒக்கும். சரியானபடி தகுந்த வழியில் செலவு செய்யாமல் சேர்த்துவைக்கும் பணக்குவியலைத் தீயார் கொள்வதுபோல, சரியான விதத்தில் வடிகால் முதலிய வஸதிகள் இல்லாமல் சேகரித்துவைக்கும் நீர் நிலைகள் உடைபட்டு யாருக்கும் சேதத்தை விளைவிக்கும். ஆகையால்பாசன வேலைகள் மிகவும் முதன்மையாய் இருப்பதோடு அமைத்து முடிக்க மிகவும் கஷ்ட சாத்தியமுமானவைகள். கவர்ன்மெண்டார் நியமித்துவரும் இஞ்சினீர் உத்தியோகஸ்தர்களில் பாசன வேலை அமைக்கும் திறமையில் கைதேர்ந்தவர்களுக்கே பெருமையும் புகழும் அதிகம்.

இந்தியாவில் இப்போதுள்ள பாசன வேலைகளில் பல அநாதிகாலமாய் நம் தேசத்துப் பூர்வ ஹிந்து மஹமதிய அரசர்களால் அமைக்கப்பட்டவைகள். அவைகளை இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் புதுப்பித்தும் சீர்திருத்தியும் பாதுகாத்தும் வருகிறார்கள். மேலும் பூர்வீக அரசர்களுடைய புத்திக்கும் அனுகூலங்களுக்

கும் படிந்துவராத அநேகநூதனமான பாசன வஸதிகளை அமைத்தும் வருகிறார்கள். இப்படி நூதனமான வேலைகள் அமைக்கும் முன்பு செய்யவேண்டிய யோசனைகளையும், பிரயத்தனங்களையும், சோதனைகளையும், காலச் செலவையும், பணச் செலவையும் கணக்கிட்டால் கவலைக்கிடமாகும். முக்கியமாய் ஒரு பெரும் பாசனவேலை தொடங்குவதற்கு முன்பு அந்த வேலையைச்செய்து முடிப்பதற்கு வேண்டிய கைமுதல் எவ்வளவு பிடிக்கும்? அந்தக்கைமுதலைக் கடன்வாங்கிச் செலவிட்டால் அதற்கு கவர்ன்மெண்டார் கொடுக்க வேண்டிவரும் வருஷாந்தர வட்டி என்ன? அந்தப்பாசன வேலைகளைச் சரியான பங்குபாடாகப் பழுதில்லாமல் பாதுகாக்கச் செல்லும் செலவென்ன? அதற்கு வேண்டிய சிப்பந்திகளின் கூலி என்ன? இவைகளுக்கெல்லாம் கட்டி வரும்படியாக வருமானம் வருமா? என்று இப்படிக்கெல்லாம் ஆராய்ந்துப் பார்ப்பார்கள். தகுந்த வரும்படி வருமென்று தோன்றும் பக்ஷத்தில், கவர்ன்மெண்டார் இதர வருமானத்தைத் தொடாமலும் வேறு விதமாய் அவர்கள் கையைக் கடிக்காமலும் செய்து முடிக்கக் கூடுமாகில் இந்த வகையான பாசன வேலைகளை தங்குதடையில்லாமல் ஆரம்பித்து துரிதமாய் முடிப்பார்கள். இவைகளைக் கவர்ன்மெண்டு கணக்குகளில் "ப்ரொடக்டிவ் வொர்க்ஸ்" அதாவது "ஆதாயமுள்ள வேலைகள்" என்று குறிக்கிறார்கள்.

சில பிராந்தியங்களில் இப்படி ஆதாயமுள்ள வேலைகள்செய்து முடிக்க சாத்தியப்படுவதில்லை. நிலத்தின் இயற்கையமைப்பினால் சிற்சில இடங்களில் அணைக்கட்டுகளும் வாய்க்கால்களும் ஏரிக்கரைகளும் அதிகப் பணம் பிடிப்பது முண்டு. அல்லது பாசனத்தின் கீழுள்ள நன்செய் நிலங்கள் வளப்பமாயிராத காரணத்தால் அந்த நிலங்களிலிருந்து வரும் தீர்வை குறைவாயிருத்தலு முண்டு. இந்த மாதிரி சரியான ஆதாயம் எடுக்கக் கூடாத வேலைகளைத்தொடங்குவதற்கு கவர்ன்மெண்டார் தயங்குவார்களே யல்லாமல் துரிதப்படுவதில்லை. ஆனால் தொடங்காமல் இருப்பது மில்லை. இப்படிப்பட்ட வேலைகளைச் செய்து முடித்த பிறகு அந்தப்பிரதேசத்தில் விளையும் விளைவினால் அங்கேயுள்ள ஜனங்கள், தானியக்குறைவினால் கஷ்டப்படாமலும், பிற இடங்களிலிருந்து தானியத்தைத் தருவித்து ஜீவிக்கவேண்டிய அவசியமில்லாமலும், இருக்க சாத்தியப்படுமானால், கை முதலுக்குத் தகுந்த வட்டி மாத்திரம் எடுத்துவந்தால் போதுமென்றும், அந்த வேலைகளின் பராமரிப்பில் செலவாகும் பணம் அங்கேயுள்ள வேலையாட்களுக்குக் கூலிகொடுப்பதில் பயன்பட்டு வயிறாரக் கஞ்சி கிடைக்கச் செய்யுமானால் அதுவே போதுமென்றும், தீர்மானித்து கவர்ன்மெண்டார் அந்த வேலைகளையும் தொடங்கிச்செய்து முடிப்பார்கள். இந்தவகை வேலைகளுக்கு "ப்ரொட்டெக்டிவ் வொர்க்ஸ்" அதாவது "ரக்ஷண்ய வேலைகள்" என்று பெயர்.

மேலே குறித்த இரண்டுவகை வேலைகளில் சென்னை ராஜதானியில் கணக்கிட்டுப் பார்த்தால் முதல் வகுப்பே மிகவும் பொருந்தது. கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, பெரியாறு முதலிய நதிகளின்கீழ் உள்ளபாசனங்கள் எல்லாம் "ஆதாயமுள்ள" வேலைகளே. கஞ்சம் ஜில்லாவில் முடிவுபெற்ற ரிஷிகுலியா பாசன வேலையும், கர்நூல் ஜில்லாவில் இப்போது தொடங்கியிருக்கும் வெங்கடாபுரம் பாசன வேலையும் இரண்டாம் தரத்தில் சேர்ந்தவைகள்.

மேலே சொல்லிய இரண்டு விதமான வேலைகளில் முதல் வகைக்கு வேண்டிய கைமுதல் இந்தியா கவர்ன்மெண்டார் சிறிதுசிறிதாய்வாங்கும் பெரிய கடன்களைக்கொண்டு கொடுக்கிறார்கள். இந்த வேலைகளைச் சரியான நிலைமையில் பாதுகாக்கச் செல்லும் செலவு வருஷவாரியில் இந்தியா கவர்ன்மெண்டாருக்குக் கூடும் அரசிறைவருமானத்திலிருந்து ஆகிறது. இரண்டாவதாகிய "ரக்ஷணிய" வேலைகளுக்கோ, வருஷவாரியில் இந்தியா கவரன்மெண்டார் "பஞ்ச நிவாரணநிதி" என்று சேர்த்து வைக்கும் பணமே கைமுதலாகிறது.

ஆதாயமான வேலைகளுக்கு காலக்கிரமத்தில் செலவாகும் பணத்துக்கு "கைமுதல் கணக்கு" என்றும், "வருமானக் கணக்கு" என்றும் இரண்டுவிதமான கணக்குகள் வைத்தே தீர வேண்டும். ரக்ஷண்ய வேலைகளுக்கு இரண்டுகணக்குகள் இருப்பதும் உண்டு, இல்லாததும் உண்டு.

இந்த வேலைகளெல்லாம் இந்தியா கவர்ன்மெண்டார் அப்பனையில்லாமலும் பண உதவி இல்லாமலும் செய்து முடிக்கக்கூடியவையல்ல.

இவைகளல்லாமல் மாகாண கவரன்மெண்டார் தங்களுடைய வருஷவாரி அரசிறை வருமானத்திலிருந்து செய்து முடிக்கும் சிறு பாசன வேலைகள்பலவுள. பாசனவேலைகளல்லாமல் படகுகள் ஓடும் கால்வாய்களும் உண்டு. இப்படிப்பட்ட சில்லரை வேலைகளில் மூன்றுதரங்கள் உண்டு.

(1) கைமுதல் 50,000 ரூபாய்க்குமேல் செலவு பிடித்தவைகள்.

(2) 50,000 ரூபாய்க்கு உள்பட்டு, மராமத்து இலாகா மேல் பார்வையில் இருப்பவைகள்.

(3) ஜில்லா ரெவென்யூ அதிகாரிகள் மேல் பார்வையில் இருப்பவைகள்.

இந்தியா கவர்ன்மெண்டார் கடன்வாங்கும் தொகையிலிருந்து செலவழித்து நிறைவேற்றும் பெரிய "ஆதாயகரமான வேலை"களுக்குள்ள நிபந்தனைகளெல்லாம் முதல் வகுப்புக்கும் பிரயோகிக்கப்படும். இரண்டாம் வகுப்பு வேலைகள் எல்லாம் குறைந்தது 200 ஏகரா நன்செய் ஆயக்கட்டு உள்ளவைகளாயிருத்தல் வேண்டும். மற்ற சிறிய பாய்ச்சலாதாரங்களை எல்லாம் ரெவென்யூ தரப்பில் பாதுகாத்து வருகிறார்கள்.

மேலே சொல்லிய பல தரமான வேலைகளைச் செய்து முடிக்கவும், அவைகளுக்குச் சம்பந்தமான கணக்குகளைப்பதியவும் சோதிக்கவும், ஒவ்வொருமாகாணத்திலும் 'எக்ஸிக்யூடிவ்' அதாவது வெளி வேலைச் சிப்பந்தியென்றும், "அக்கௌண்ட்" அதாவது கணக்குச் சிப்பந்தியென்றும், இரண்டு பிரிவான சிப்பந்திகள் இருக்கின்றன. முதல் பிரிவின் தலைவன் "சீப் இஞ்சினீர்" என்பவர். அவர் பொதுவாக மராமத்து இலாகாவுக்கே தலைவர். இவருக்குப் பாசன வேலைகளைப் பரிபாலிப்பதில் உதவி செய்ய "சீப் இஞ்சினீர் பார் இறிகேஷன்" என்று சொல்லப்படும் உதவி உத்தியோகஸ்தர் ஒருவர் உண்டு. இவர்கள் இரண்டு பேர்களும் மாகாண கவர்ன்மெண்டுக்கு மராமத்து இலாகாவில் காரியதரிசிகளும் ஆவார்கள். இந்த ராஜதானியிலுள்ள 23 ஜில்லாக்களையும் மராமத்து இலாகாவில் 6 வட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி ஜில்லாக்கள் முதல் வட்டம்; கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், இரண்டாவது வட்டம்; பல்லாரி, அனந்தபுரம், கடப்பை, கர்நூல் மூன்றாவது வட்டம்; தென் கன்னடம், மலையாளம், கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், வட ஆற்காடு நான்காவது வட்டம்; சென்னை நகர், செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர் ஜந்

தாவது வட்டம்; திருச்சினாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆறாவது வட்டம். ஒவ்வொரு வட்டத்துக்கும் ஒரு சூபரிண்டெண்டிங் இஞ்சினீர் ஏற்படுத்தப் பட்டிருக்கிறார். ஒவ்வொரு சூபரிண்டெண்டிங் இஞ்சினீருக்குக் கீழே, 3 முதல் 7 அல்லது 8 "எக்ஸிக்யூடிவ்" அதாவது நிர்வாக இஞ்சினீர்கள் உண்டு. அநேகமாய் ஜில்லாவுக்கு ஒருவர் உண்டு. பாசன வேலைகள் அதிகமாகிய கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களுக்குமட்டும் தனித்தனியே நாலு பேர்களும் தஞ்சாவூருக்கு இரண்டுபேர்களும் எக்ஸிக்யூடிவ் இஞ்சினீர்கள் உண்டு. இவர்களுக்கு அடுத்தபடி 3, 4, தாலூகாக்களுக்கு ஒரு ஸப்டிவிஷன் ஆபீஸரும், தாலூகாவுக்கு ஒரு ஓவர்ஸியரும் உண்டு. மேலும் மாகாணம் எங்கும் நடந்துவரும் வேலைகளுக்கு வேண்டிய இருப்பு விட்டம், சட்டம், வர்ணங்கள், தைலங்கள் முதலிய சாமான்களையும், வகைவகையான ஆயுதங்களையும், யந்திரங்களையும், சேகரித்து வைத்திருந்து குறித்த காலத்தில் அனுப்ப ஒரு பண்டகசாலையும், கொல், தச்சு, வேலைகள் செய்தனுப்ப ஒரு யந்திரசாலையும் சென்னப்பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி யந்திரசாலைகள் பெஜவாடாவில் ஒன்றும் இராஜமஹேந்திரத்தில் ஒன்றும்உண்டு. கணக்கு சிப்பந்திகளில் ஒவ்வொரு எக்ஸிக்யூடிவ்இஞ்சினீருக்கும்ஒருஅக்கௌண்டண்டும், அதாவது, கணக்கனும், மாகாணத்துக்கெல்லாம் சேர்ந்து ஒரு "எக்ஸாமினர்" அதாவது பரிசோதகரும் உண்டு.

வேலைகளைச் செய்வதற்குமுன் ஏற்படுத்தும் எஸ்டிமேட்டுகளை, அதாவது மதிப்புகளை, அங்கீகரித்து சாங்க்ஷன் செய்வதில், சூபரிண்டெண்டிங் இஞ்சினீர்கள் 2500 ரூபாய் வரையில் சாங்க்ஷன் செய்யலாம். மாகாண கவர்ன்மெண்டார் இரண்டு லக்ஷம் ரூபாய் வரையில் "இம்பீரியல்" வேலைகளுக்கும், பத்து லக்ஷம் வரையில் "ப்ரொவின்ஷியல்" வேலைகளுக்கும், சாங்க்ஷன் செய்யலாம். இந்தியா கவர்ன்மெண்டார் பத்து லக்ஷம் ரூபாய் வரையில் எல்லா வேலைகளுக்கும் சாங்க்ஷன் செய்யலாம். அதற்கு மேற்பட்டுப் பிடிக்குமென்ற மதிப்புள்ள வேலைகளை எல்லாம் இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரியினுடைய அங்கீகாரமும், சம்மதமும் பெற்றே செய்யவேண்டும்.

பாக்கியுள்ள இருப்புப்பாதை, தந்தி மார்க்கங்கள் இவைகளைப்பற்றி இப்பொழுது விவரிக்க இடமில்லை.

ஜே. வி. சுப்பிரமணியன்.

PARIAHS AND MIRASDARS

BY

S. KOTHANDARAMAN.

பறையர்களும் மிராசுதார்களும்.

இந்தத்தலைப் பெயரிட்டு போன சித்திரை மாசத்திய "பிழைக்கும் வழி" யில் ஒரு வியாசம் வெளிவந்திருப்பதை நேயர்கள் படித்திருக்கலாம்.

செங்கற்பட்டு ஜில்லா மிராசுதார்களின் பேரில் மிஸ்டர். வி. எச். மனோஹன் என்கிற பாதிரி எழுதியிருப்பது உண்மையல்லவென்று உறுதியாய்ச் சொல்லுகிறோம். எப்படியென்றால், செங்கற்பட்டு ஜில்லாவில் ஸர்கார் பாக்கிக்காக ஏலம் போடப்பட்டு ஏலத்தில் ஒருவரும் கேட்காமல் ஸர்க்கார், தாக்கலாகி விடும் நிலங்களை, தற்காஸ்தின் மேல் பஞ்சமர்களுக்கே கொடுப்பதென்றும், மற்றவர்களுக்குக் கொடுப்பதில்லை என்றும், ஒரு உத்தரவு பிறந்து இன்னமும் அமுலிலிருந்து வருகிறது. காஞ்சீபுரம் தாலூகா 323 நெம்பர், வரதராஜபுரம் கிராமத்திலும், திருவள்ளூர் தாலூகா ஈக்காடு கிராமத்திலும், இப்படிப்பட்ட நிலங்கள் அடிக்கடி பறையர்களுக்கே கொடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் பிரதி வருஷமும் ஸர்க்காருக்கு நூற்றுக்கணக்கான ரூபாய் கிராம 14 நம்பர் பி. கணக்கில் வஜா செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலங்களை மிராசுதார்களுக்குக் கொடுப்பதாயிருந்தால் அடிக்கடி ஏலத்துக்கும் வரமாட்டா, மாப்பும் செய்ய நேரிடாது. எனக்குத் தெரிந்தவரையில் வரதராஜபுரம் கிராமத்தில் ஒரு பறையனுக்கு, ஹிந்துமதப் பெயராய் 2, 3, ம், கிறிஸ்துமதப்பெயராய் 2, 3-ம் இருக்கிறது. இவர்கள் கிஸ்தி காலத்துக்கு முன்னிட்டு ஷை நிலத்தில் ஏதாவது பயிருட்டுமாகூலை அறுவடை செய்துகொண்டு பட்டணம் முதலிய இடங்களுக்குப் பிழைப்பதற்காகப் போய்விடுகிறார்கள். அவர்களுக்குஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் இல்லாமையால் இவ்வித கஷ்டங்கள் உண்டாகின்றன. அவர்களும் வறுமையால் பீடிக்கப்பட்டவர்களாகையால் கிராமத்திலிருந்து நிலத்தை நன்றாய்ப் பயிர்செய்து அனுபவிக்க முடியாதவர்களாயிருக்கிறார்கள்.

சாகுபடி நிலங்களே இப்படி இருக்கும்போது புறம்போக்கு நிலங்களையும் பறையர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் எப்படி அதை நிர்வகிக்க முடியும்? இதனாலேயே புறம்போக்கு நிலத்தை ஒருவன் பயிர்செய்யக் கேட்டால் அந்த நிலத்தை, முதலாவது, மிராசுதாரர்களுக்கே கொடுக்கவேண்டும், அவர்கள் வேண்டாமென்றால் மட்டும் மற்றவர்களுக்குக் கொடுக்கலாம் என்று ஸர்க்கார் ஒழுங்கு வெகு காலமாய் அனுசரணையிலிருந்து வந்தது. மேலும் மிராசுதார்களுக்கு ஸ்வதந்தரத் தீர்வை என்று தற்காஸ்து நிலக்காரர்கள் ரூபாய்க்கு இரண்டணா வீதம் கொடுத்து வந்தார்கள். இந்த கவர்ன்மெண்டு ஒழுங்கின் நோக்கம் என்னவென்றால், மிராசுதார்கள் தங்களுக்கு உண்டாயிருக்கும் பலவித ஸாதகங்களை கைக்கொண்டு பலிதமற்றுக் கிடக்கும் புறம்போக்குகளை சாகுபடி நிலங்களாய் மாற்றுவார்களென்பதும், அதனால் கவர்ன்மெண்டுக்கும் நிலத்தீர்வையில் அதிகமான வரும்படி உற்பத்தியாகு மென்பதுமே. இதைத் தெரிந்து கொள்ளாமல் மிஸ்டர் மானோஹன் பறையர்களுக்குப் பரிந்து பேசுவதுபோல மிராசுதார்களின்மேல் குறை சொல்லுவது கொஞ்சமும் சரியல்ல.

எஸ். கோதண்டராமன்.

WATER AND ITS USE.

BY

NAGAI—C. GOPALAKRISHNAN.

ஜலமும் அதன் உபயோகமும்.

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின்றமையா தொழுக்கு—திருக்குறள்.

மனிதர்கள் உயிரோடிருப்பதற்கு மிகவும் அவசியமானது காற்று. காற்றிற்கு இரண்டாவதாக மனிதவாழ்க்கைக்கு அவசியமானது ஜலம். ஆகாரம் இல்லாமல் ஒருவன் நாலைந்து தினம் உயிரோடிருக்கக்கூடும். ஜலமில்லாமல் இரண்டொரு நாள்கூட ஜீவித்திருக்க முடியாது. ஆகவே, ஜலத்தின் உபயோகம் இப்படிப்பட்டதென்பதும், அது மனிதர்களுக்கு எவ்வளவு அவசியமென்பதும், விளங்குகிறதல்லவா? அப்படியிருந்தும் நமது தேசத்தார் ஜலத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் முறைகளை அறியாமல் அநேக வியாதிகளுக்குத் தங்களை ஆளாக்கிக்கொள்ளுகிறார்கள். ஜலம் எந்தெந்த விதமாகக் கெட்டுப்போகிறது? அதைக் கெட்டுப்போகாமல் காக்கும் விதமென்ன? கெட்டுப்போன ஜலத்தைச் சுத்தமாக்குவதெப்படி? என்று ஒவ்வொருவரும் விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.

ஜலம் எப்படிக் கிடைக்கிறது?

கிணறுகள், ஆறுகள், குளங்கள் முதலியவைகளிலிருந்து நாம் குடிப்பதற்கு ஜலம் எடுத்துக் கொள்ளுகிறோம். ஆனால் இவைகளில் எல்லாம் ஜலம் கிடைப்பதற்கு மூல காரணம் மழைநீரே யாகும். பூமியிலும் சமுத்திரத்திலுமுள்ள நீர், சூரிய உஷ்ணத்தினால் நீராவியாக மாறுகிறது. நீராவியானது காற்றைவிட லேசானதால் அது மேலேபோய் வாயு மண்டலத்தில் மேகமாக மாறுகிறது. இந்த மேகம் பல திசைகளிலும் பரவும்போது

குளிர்ந்தகாற்று மேலேபட்டு மழையாக வருஷிக்கிறது. விசேஷமாய் மலையடி வாரங்களில் பெய்யும் மழை ஜலமே ஆற்றில் வருகிறது. இப்படி மழை பெய்வதினாலேயே நமக்கு ஆற்றிலும், குளத்திலும், கிணற்றிலும் ஜலம் கிடைக்கிறது.

மழை ஜலம் செல்லும் இடம்.

மழை ஜலமானது வானத்திலிருந்து விழும்பொழுது மிகவும் சுத்தமாகவே இருக்கும். ஆனால் அது வாயுமண்டலத்தின் வழியாய் இறங்கும்போது காற்றில் கண்ணுக்குப் புலப்படாமல் மிதந்து கொண்டிருக்கும் தூசு, தும்பு, முதலிய அசுத்தங்களோடு கலப்பதால் பூமியில் விழும்பொழுது கொஞ்சம் அசுத்தப்பட்டுத்தான் இருக்கும். இப்படி பூமியில் விழுந்த மழை ஜலம் மூன்று வகையாகச் செல்லுகிறது. (1) பூமிக்குள் சுவறி பூமிநீர் அல்லது ஊற்றுநீர் என்று பெயர் பெற்று கிணறுகள், ஊற்றுகள், சுனைகள் முதலியவைகளுக்கு ஆதாரமாகின்றது. (2) மழை ஜலம் பூமியின் வாட்டத்தை அனுசரித்து ஓடி நதிகள், குளங்கள், ஏரிகள், குட்டைகள், முதலியவற்றில் சேர்கின்றது. (3) சூரிய உஷ்ணத்தினால் ஆவியாக மாறி வாயுமண்டலத்தில் சேர்ந்து அதை ஈரமாக வைக்கிறது.

ஊற்று ஜலம்.

பூமியின் சில பாகம், ஜலம் உள்ளே இறங்கக்கூடாத கற்பாறையாக இருக்கும். வேறு சில பாகம் சிறிய துவாரங்களுள்ள கப்பிகள் நிறைந்ததாக இருக்கும். மற்றுஞ் சில பாகம் மணல் தரையாக இருக்கும். பாறை நிலத்தில்விழுகிற மழை நீர், பூமிக்குள் இறங்காமல் பூமியின் வாட்டத்துக்குத் தகுந்தாப் போல் ஓடி, கடலிலோ அல்லது ஆற்றிலோ கலந்துவிடும். சிறு துவாரமுள்ள மணல் தரையில் விழுகிற மழை ஜலத்தின் ஒரு பாகம் பூமிக்குள் சுவறி இறங்கிவிடும். இப்படி பூமிக்குள் இறங்கின ஜலத்திற்குத்தான் ஊற்றுநீர் என்று பெயர். பூமியின் கீழ் எவ்வளவு ஆழம் வரையில் சிறு துவாரங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு தூரம் மழை ஜலம் இறங்கும். இப்படி இறங்கின ஜலம் பூமிக்குள் நாலாபக்கத்திலும் பரவும். பரவின ஜலம் பூமிக்குள் இருக்கும் சிறு துவாரங்களின் வழியாய் நிலத்தின் வாட்டத்தை அனுசரித்து ஓடிக் கடைசியில் கிணறுகள், ஏரிகள் முதலியவைகளின் ஜலத்தோடு கலக்கும். பூமியின் மேல்பாகத்தில் ஆறுகள் எப்படி ஓடிக்கொண்டிருக்கின்றனவோ அப்படியே பூமியின் கீழ்ப்பாகத்தில் ஊற்றுநீர் ஓடிக்கொண்டிருக்கிறது. ஊற்றுஜலம் ஓடுவது நமது கண்ணுக்குப் புலப்படாததினால் ஊற்று ஜலம் ஓடுகிறதில்லை என்று நினைக்கக்கூடாது. கிணற்று ஜலத்தை இறைக்க இறைக்க ஜலம் வந்து கொண்டிருக்கிறதே. இதற்குக் காரணமென்ன? கிணற்றைச் சுற்றி சிறிது தூரம் வரையில் உள்ள ஜலம் நாம் இறைக்க இறைக்க வருகிறது. இன்னும் அதிகமாக இறைத்தால் இன்னும் கொஞ்சம் எட்டி இருக்கும் ஊற்றுஜலம் ஓடி வந்து கிணற்றில் விழுகிறது. ஆகவே, நாம் இறைக்கும்போதெல்லாம் ஜலம் வந்துகொண்டே யிருக்கும். ஊற்று ஜலம் ஓடுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும். மழை அதிகம் பெய்தால் ஊற்று நீர் அதிகமாக இருக்கும். கோடைகாலத்தில் வரவு இல்லாமல் ஜலத்துக்குச் செலவு மட்டும் இருப்பதால் ஊற்று ஜலம் கோடைகாலத்தில் வற்றிப்போவதும் உண்டு.

குழாய் ஜலம்.

நம் தேசத்தில் குடிப்பதற்கு ஜலம் கிணறுகள், குளங்கள், ஆறுகள் முதலியவைகளிலிருந்து எடுப்பது வழக்கம். ஆனாலும் சென்னப்பட்டணம், திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர், முதலிய பெரிய பட்டணங்களில் முனிஸிபாலிட்டியார் குழாய்கள் அமைத்து அவைகளின் மூலமாய் வீடுகளுக்குக் குடி தண்ணீர் கொண்டு வருகிறார்கள். குழாய்களின் வழியாய் ஜலம் ஸப்ளை செய்வதற்காக ஒரு இடத்தில் ஜலத்தைத் தேக்கிவைத்து, சுத்திகரிப்பது வழக்கம். ஆறு, குளம், முதலியவைகளிலிருந்து ஜனங்கள் தண்ணீர் கொண்டுவந்தால் அதைச் சுத்தி செய்யவேண்டிய அவசியம் ஏற்படும். ஆறு, குளம், முதலியவைகளில் வியாதியஸ்தர்களுடைய கை கால்கள், வஸ்திரங்கள், அழுக்குப் பாத்திரங்கள் முதலியவைகள் படுவதால் அந்த ஜலத்தை உபயோகிப்பவர்களுக்குப் பல வியாதிகள் உண்டாகக்கூடும். குடிப்பதற்கு உபயோகப்படும் நீரைச் சுத்தமாக வைக்கவேண்டியது அவசியம். ஆதலால் முனிஸிபாலிட்டியார் ஜலத்தை சுத்தம் செய்தே குழாய்களில் விடவேண்டும். ஜனங்களுடைய கை கால் முதலியவைகள் குழாய் ஜலத்தில் பட ஹேதுவில்லை. ஆதலால் குழாய் ஜலம் மற்ற ஜலத்தைவிடச் சிலாக்கியமானது. ஆனாலும் அதையும் காய்ச்சி சுத்தம்செய்து உபயோகிப்பதே நலம். ஸௌகரியமுள்ள ஊர்களில் குழாய்வழியாய் ஜலம்கொண்டு வருவதே சிலாக்கியமானது.

ஜலம் அசுத்தப்படும் விதம்.

கிணற்றின் வாயை மூடாமல் திறந்து வைத்திருப்பதினாலே காற்றிலுள்ள தூசி, ரோக க்ருமிகள், சருகு, மண், பறவைகளின் எச்சம், முதலியவைகள் கிணற்றுக்குள் விழுகின்றன. அசுத்தமான பாத்திரங்களையும், கயிற்றையும் உபயோகிப்பதினாலும் கிணற்று நீர் கெட்டுப் போகிறது. கிணற்றுக்குச் சமீபத்திலுள்ள தூசி, குப்பை, மலம், முதலியவைகள் மழை பெய்யும்போது அடிபட்டுக் கிணற்றில் விழுவதினாலும், கிணற்று ஜலம் அசுத்தப்படுகிறது. கிணற்றுக்குச் சமீபத்தில் ஸ்நானம் செய்வதினால் விழும் அழுக்கு ஜலம், வஸ்திரம் தோய்ப்பதினால் உண்டாகும் அழுக்கு ஜலம், பூமியில் ஊறிக் கிணற்றில் இறங்கிக் கிணற்று ஜலத்தைக் கெடுத்து விடும். இதே மாதிரி அநேக விதமான அழுக்குகளும், குப்பைகளும், சருகுகளும் மழை நீரில் அடித்துக் கொண்டு வந்து ஆற்றில் விழுவதினால் ஆற்று ஜலம் கெட்டுப்போய் விடுகிறது. பெரிய மரம் மட்டைகளும், ஆடு மாடுகளுங்கூட சில சமயங்களில் ஆற்றிலே மிதந்து அதிலேயே கிடந்து அழுகிப்போவதுண்டு. ஆற்றில் ஜலம் இல்லாதபோது ஜனங்கள் அதைக் கக்கூஸாகவும், ஜலம் இருக்கும்போது சௌசம்செய்வதற்கும் உபயோகிப்பதினாலும் ஆற்று ஜலம் கெட்டுப்போகிறது. இன்னும் ஜலம் கெடுவதற்குப் பல காரணங்கள் உள.

ஜலத்திலுள்ள அழுக்குகள்.

ஜலத்திலுள்ள அழுக்குகள் (1) கரைந்திருப்பவைகள் (2) மிதப்பவைகள், என்றுஇரண்டு வகைப்படும். ஒரு பாத்திரத்தில் தண்ணீரைவிட்டு அதில் உப்பைப் போட்டுக் கலக்கினால் அது தண்ணீரில் கரைந்து விடுகிறது. அது நமது கண்ணுக்குத் தெரியாது. அதைப் போலவே அநேக அழுக்குகள் நீரில் கரைந்திருக்கக்கூடும். நதிகளில் வெள்ளம் வரும்போது ஜலம் மிகவும் கலங்கி இருக்கும். இதற்குக் காரணம் மண், தூசு, முதலிய அசுத்தங்கள் ஜலத்தில் மிதப்பதேயாகும். அநேக விதமான உப்புகள், மூத்திரம், மலத்தின் அநேக பாகங்கள், கரி சம்பந்தமான அழுக்குகள் தண்ணீரில் கரைந்திருக்கக்கூடும். மணல், தெருவில் கிளம்பும் புழுதிகள், ஜல ஜந்துக்கள், நீர்ச்செடிகள், அழுகின வஸ்துக்கள், வியாதி க்ருமிகள், மயிர், தோலின் அணுக்கள், பூச்சிகள், சிறு முட்டைகள், இவைகள் தண்ணீரில் மிதக்கும் அழுக்குகள். தண்ணீரிலுள்ள பலவகை அழுக்குகளில் உயிருள்ள ஜீவ அழுக்குகள் அதாவது வியாதி க்ருமிகள், பூச்சிமுட்டைகள் இவைகள் மிகவும்

அபாயகரமானவை. தண்ணீரை வடிகட்டுவதினாலும், காய்ச்சுவதினாலும் இவைகளை நீக்கலாம்.

தண்ணீரைச் சுத்தமாய் வைக்கும் விதம்.

கிணற்று ஜலம் கெடாமல் இருக்கவேண்டுமானால் பூமி மட்டம் முதற்கொண்டு ஜலம் கண்டவரையில் கிணற்றைக் கல்லினாலும் சுண்ணாம்பினாலும் கட்டி உட்புறத்தில் ஸிமெண்ட் பூசவேண்டும். கிணற்றுக்குச் சமீபத்திலிருக்கும் கெட்ட ஜலம் கிணற்றுக்குள் இறங்காதபடி பூமியில் கிணற்றைச் சுற்றி ஆறடி தூரம் தளவரிசை போட்டு வாட்டமாக விடவேண்டும். கிணற்றின் வாயை மூடி அந்த மூடியின் நடுவில் ஒரு குழாயைக் கிணற்றுக்குள் செலுத்தி அந்தக் குழாயின் மூலமாய் நீரை வெளியில் "பம்ப்" செய்து கொண்டு வருதல் நலம். அது முடியாவிட்டால் ராட்டினம் போட்டு ஜலத்தை எடுத்துக்கொள்வது நலம். கிணற்றின் பக்கத்தில் ஸ்நானம் செய்யவாவது வேஷ்டி துவைக்கவாவது கூடாது. கிணற்றைச் சுற்றிக் குறைந்தது 150 கெஜ தூரம் ஒரு விதமான அழுக்கும் இருக்கக் கூடாது. உபயோகித்துக்கொண்டு வரும் கிணற்று ஜலம் அசுத்தமாகி விட்டால் "பொட்டாஸியம் பெர்மாங்கனேட்" என்னும் உப்பை ஜலத்தில் கரைத்துக் கிணற்றில் ஊற்றவேண்டும். ஆற்று நீர் ஓடிக்கொண்டிருப்பதினால் அது இயற்கையாகவே கொஞ்சம் சுத்தப்படுகிறது. ஜலத்திலிருக்கும் மீன்களினாலும், ஒருவிதச் செடிகளினாலும், காற்றினாலும் ஆற்றிலுள்ள அழுக்குகள் நீங்கி ஜலம் சுத்தப்படுகிறது. எந்த ஜலமாயிருந்தபோதிலும் அதை நன்றாய்க் கொதிக்கவைத்து வடிகட்டி ஆறவைத்துப் பானம் செய்வதே நலம். படிக்காரம், தேற்றாங்கொட்டை முதலியவைகளைச் சேர்ப்பதினால் ஜலத்தில் மிதக்கும் அழுக்குகளை நீக்கிச் சுத்தப்படுத்தலாம். வடிகட்டி நீக்க முடியாத அழுக்குகளை "டிஸ்டில்" செய்தாவது, தக்க மருந்துகளைக் கலந்தாவது, சுத்தி செய்யவேண்டும். எந்தக்காலத்திலும் ஜலத்தைக் காய்ச்சி "பில்ட்டர்" செய்து அதாவது வடிகட்டிக் குடிப்பதே நலமாகும்.

நாகை—வி. கோபாலகிருஷ்ணன்.

THE WONDERFUL RING.

ஒரு ஆச்சரிய மோதிரம்

ஒரு காலத்தில் ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். ராஜா இறந்துபோனவுடன் அவனுடைய ஸகல சொத்துக்களும் இரண்டு பிள்ளைகளுக்கும் வந்தன. இளைய பிள்ளை சொத்துக்களை அழிக்கத்தலைப்பட்டான். ஆகவே தமயன் தம்பியைக் கூப்பிட்டு "இங்கேவா அப்பா, இருக்கிறதை இரண்டுபேர்களும் பாகம் பண்ணிக்கொண்டு விடுவோம். அப்புறம் நீ உன் சொத்தை எப்படி வேணுமோ அப்படிச் செலவழித்துக்கொள்" என்று சொன்னான். அப்படியே அண்ணன் தம்பி, இரண்டுபேர்களுக்கும் பாகமாயிற்று. தம்பி ஒரு நொடியில் சொத்துக்களையெல்லாம் அழித்து விட்டான். கையில் ஒன்றும் இல்லாமையால் தன் பெண்ஜாதியை "உன்னிடத்தில் இருக்கிறதைக் கொடு" என்று கேட்டான். அதற்கு அவள் "என்னிடத்தில் வேறொன்றுமில்லையே, இந்த ஒரு நகைதான் இருக்கிறது. அதை வேணுமானால் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு, அந்த நகையைக் கையில் கொடுத்துவிட்டாள். அந்த நகையை வாங்கி நாலு பவுனுக்கு விற்று பணத்தை முடிந்துகொண்டு ராஜகுமாரன் பிழைப்புத்தேட வெளியே புறப்பட்டுப் போனான். போகிற வழியில் ஒருவன் ஒரு பூனையை வைத்துக்கொண்டிருந்தான். அவனை "அந்தப்பூனையை விலைக்குக் கொடுப்பாயா" என்று கேட்க, பூனையின் சொந்தக்காரன் "ஒரு பவுன் கொடுத்தால் கொடுப்பேன்" என்று சொன்னான். ராஜகுமாரன் சரிதானென்று ஒப்புக்கொண்டு ஒரு பவுனைக் கொடுத்து அந்தப் பூனையைவாங்கிக்கொண்டான். இன்னும் கொஞ்ச தூரம் போகவே, நாய் வைத்திருந்த ஒருவனுக்கு ஒரு பவுன் கொடுத்து அந்த நாயையும் வாங்கிக் கொண்டான். இன்னும் கொஞ்ச தூரம் போகவே, ஒருவனிடத்தில் ஒரு கிளி இருந்தது. அதற்கு ஒரு பவுன் கொடுத்து அந்தக் கிளியையும் வாங்கிக்கொண்டான். இன்னும் கொஞ்ச தூரம் போகவே, ஒரு பாம்பாட்டியைக் கண்டான். அவனுக்கும் ஒரு பவுனைக் கொடுத்து அவனிடத்திலிருந்து ஒரு ஸர்ப்பத்தை வாங்கிக்கொண்டான். ஆகவே, கையிலிருந்த நாலு பவுனும் போய், அவனுக்கு ஒரு பூனையும், ஒரு நாயும், ஒரு கிளியும், ஒரு பாம்பும், கிடைத்தன. இவைகளை எல்லாம் வைத்துக்கொண்டே பிழைத்துவிடலாம் என்று எண்ணி ராஜகுமாரன் தைரியமாகவே போனான். என்ன தைரியமிருந்தும், ராஜகுமாரனுக்கு கஷ்டப்பட்டு வழக்கமில்லையானதால் அவன் ஒரு தடவை சோர்ந்து உட்கார்ந்தான். அப்பொழுது, அவனிடத்திலிருந்த ஸர்ப்பம், அவனைப் பார்த்து "ராஜகுமாரரே ஏன் வருத்தப்படுகிறீர்கள்? என்னை, பாம்பாட்டியினிடத்திலிருந்து மீட்டீர்களே, அதற்காக, என் தகப்பனார் உங்களுக்கு ஏதாவது உபகாரம் செய்வார். நீங்கள், பயப்படாமல் அவரிடத்தில் வருகிறதாயிருந்தால் நான் அழைத்துக்கொண்டு போகிறேன்" என்று சொல்லிற்று. அதற்கு, ராஜகுமாரன், "எனக்குப் பயமென்ன?" என்று சொல்லவே இரண்டு பேரும், புறப்பட்டார்கள். ராஜகுமாரனுடைய பாம்பு, தன் தகப்பனாரிடத்திற்கு போனதும், ராஜகுமாரனை வாசலில் நிறுத்திவைத்துவிட்டு தான் உள்ளே போய் தன் தகப்பனாருக்கு நடந்தசங்கதியைச் சொல்லவே, அந்தத் தகப்பன் பாம்பு, "ராஜகுமாரனை அழைத்துவா, அவருக்கு எது வேணுமோ அதைக்கொடுக்கிறேன்" என்று சொல்லிற்று. உடனே சின்னப்பாம்பு வெளியில் வந்து தன் தகப்பனார் கூப்பிடுகிறாரென்று சொல்லி, ராஜகுமாரன் காதில் ரகஸியமாக, "என்தகப்பனார் உங்களுக்கு எது வேணுமோ அதைக்கொடுக்கத் தயாராயிருக்கிறார். அவரிடத்தில் ஒரு சின்ன மோதிரம் இருக்கிறது; அதைத் தங்கள் பேரைச்சொல்லிக்கொண்டு நான் வைத்துக்கொண்டிருக்கிறேன். அதை எனக்குக் கொடுங்கள்" என்று, கேட்கச் சொல்லிற்று. இதைக்கேட்டு ராஜகுமாரன் சோற்றுக்குத் தாளம் போடுகிறவனுக்கு, மோதிரம் வந்து என்ன ஆகும் என்று யோசித்தான். ஆனாலும், ஸர்ப்பம் கேட்டுக் கொண்டபடியே செய்வதாகத் தீர்மானித்தான். உள்ளே பெரிய பாம்பினிடத்தில் போனதும், அது ராஜகுமாரனைப் பார்த்து "உங்களுக்கு என்ன வேணுமோ அதைக்கேளுங்கள்" என்று சொல்லிற்று. அதற்கு ராஜகுமாரன் ஒன்றும் வேண்டியதில்லை என்று மரியாதையாய்ச் சொல்லிவிட்டான். அப்பொழுது பெரிய பாம்பு, ராஜகுமாரனைப் பார்த்து "பரவாயில்லை ஸங்கோசப்படாமல் வேண்டியதைக் கேளுங்கள்" என்று சொல்லிற்று. அதற்கும் ஒன்றும் வேண்டியதில்லை என்று ராஜகுமாரன் சொன்னான். மறுபடியும், மூன்றாவது தடவை, பெரிய பாம்பு, தன் பிள்ளையை விடுவித்ததற்காக "எதை வேணுமோ அதைக்கேளுங்கள்" என்று சொல்லிற்று.

அதற்கு ராஜகுமாரன், பெரிய பாம்பைப் பார்த்து, "நீங்கள் என்னை ஏதாவது கேட்கவேணுமென்று கட்டாயப்படுத்துவதினால் உங்கள் விரலில் போட்டுக்கொண்டிருக்கிற மோதிரத்தைக் கொடுங்கள். நான் அதை எடுத்துக்கொள்ளுகிறேன்" என்று சொன்னான். இதைக் கேட்டதும், பெரியபாம்புக்கு ரொம்ப கோபம் உண்டாயிற்று. "அந்த மோதிரம், என்னுடைய பிராணனுக்குச் சமானம் எதைவேணுமோ கேள் அதைக் கொடுக்கிறேன், என்று நான் சொல்லிவிட்டதால் மாத்திரம், நீ இப்பொழுது தப்பினாய். அப்படிச்சொல்லி இராவிட்டால் என்னுடைய மோதிரத்தை நீ கேட்டதற்கு உன்னை பஸ்மீகரம் செய்திருப்பேன். ஆனால், வாக்குக்கொடுத்துவிட்டேன். இந்தா எடுத்துக்கொண்டுபோ" என்று மோதிரத்தைக் கொடுத்துவிட்டது. ராஜகுமாரன் மோதிரத்தைத் எடுத்துக்கொண்டு, தன்னுடைய பாம்பையும் அழைத்துக்கொண்டு தன் இருப்பிடத்திற்கு புறப்பட்டு வந்தான். வரும்பொழுது. "என்னப் பைத்தியக் காரியம்பண்ணி மோதிரத்தைக் கேட்டேன். அதனால் பெரிய பாம்புக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது, இந்த மோதிரம் என்னத்தை வாரிக் கொட்டிவிடப் போகிறது. கேட்டதுதான் கேட்டேன், ஒரு சாக்கு தங்கம் வேணுமென்று கேட்டிருக்கக் கூடாதா" என்று சொன்னான். கூட இருந்த பாம்பு இதைக் கேட்டு, "ராஜகுமாரரே உங்களுக்குத் தெரியாது. அந்த மோதிரம் ஒரு அற்புதமான வஸ்து. அதை நீங்கள் ஒரு காரியம் மட்டும் பண்ணவேணும். பூமியில் நாலுமூலைப் படங்காய்செய்து, அதன்மேல் பூஜைமடம் கட்டுவதுபோல் ஒரு மேடை

கட்டி, "அந்த மேடையின் மத்தியில் இந்த மோதிரத்தை வைத்து, அதன்மேல், மோரை மட்டும் தெளித்துக்கொண்டு வந்தால், உங்களுக்கு எந்த ஸமயத்தில் என்ன வேணுமோ அது கைகூடும்," என்று சொல்லிற்று. இதைக் கேட்டதும், ராஜகுமாரன், வெகு சந்தோஷப்பட்டு, போகிறவழியில் ரொம்பவும் பசியாயிருந்ததால், தன்னுடைய பாம்பு சொன்னது எவ்வளவு தூரம் சரியென்று பார்க்கலாமென்று யோசித்தான். உடனே, பாம்பு சொன்னபடி, ஒரு மேடையைக் கட்டி, அதன்மேல் மோதிரத்தை வைத்து, மோரைத் தெளித்து, "இப்பொழுது சாப்பாட்டுக்கு திவ்யமான, மிட்டாய்கள் வேணும்" என்று பிரார்த்தித்தான். உடனே ஒரு தட்டு திவ்யமான மிட்டாய் அந்த மேடையில் வந்தது. இதை ராஜகுமாரன் சாப்பிட்டு விட்டு, சமீபத்திலுள்ள ஒரு பட்டணத்திற்கு புறப்பட்டான். பட்டணத்துக்கு போனதும், அந்தப் பட்டணத்து ராஜா, எவனாவது நடு ஸமுத்திரத்தில் ஒரே ராத்திரியில் தங்கப்படிகளோடு, ஒரு தங்க அரண்மனை கட்டுவானேயானால், அவனுக்கு தன் ராஜ்யத்தில் பாதியையும், தன் பெண்ணையும், கொடுத்து விடுவதாகவும், அப்படி ஒப்புக்கொண்டு செய்யாதவனை, சிரசாக்கினை செய்துவிடுவதாகவும், தண்டோராப் போட்டிருப்பதாய்க் கேள்விப்பட்டான். கேள்விப்பட்டதும், ராஜாவிடத்தில் நேரில்போய் அவர் தண்டோரா போட்டபடி செய்வதாகச் சொன்னான். இந்த ராஜ குமாரனுடைய தைரியத்தைப் பார்த்து, "அடே, பையா! ஜாக்கிரதை, உன்னைப்போல் எத்தனையோ ராஜகுமாரர்கள் செய்வதாக ஒப்புக்கொண்டு முடியாமல் போனதால் அவர்கள் தலைகளையெல்லாம் வாங்கி இதோ தோரணம் கட்டி வைத்திருக்கிறேன் பார்" என்று பல தலைகளைக் காண்பித்தார். அதற்கு ராஜ குமாரன், "பரவாயில்லை, நான்செய்து விடுவேன்" என்று சொன்னான்.

அப்படியானால் இன்று ராத்திரியே கட்டிவிடு என்று ராஜா ஆக்கியாபித்து, சில காவற்காரர்களையும் கூப்பிட்டு, ராஜகுமாரன் சொன்னபடி செய்யாமல் ஓடிப் போகாமல் இருக்கும்படி, பார்த்துவர, சொன்னார் அஸ்தமனமானதும், ராஜ குமாரன், நன்றாய் சாப்பிட்டுவிட்டு தூக்கம்போட ஆரம்பித்தான். இதைப் பார்த்த காவற்காரர்கள், "என்ன! இந்தப் பையன் இவ்வளவு பைத்தியகாரனாய் இருக்கிறானே? நாளைக்குக் காலமே ராஜா இவன் உயிரை வாங்கி விடுவாரே" என்று ஒருவருக்கொருவர் ரகஸியமாக பேசிக்கொண்டார்கள். இருந்தாலும், ராஜகுமாரன், விடியற்காலையில் எழுந்திருந்து ஒரு மேடைசெய்து அதன் மத்தியில் தன்னுடைய மோதிரத்தை வைத்து, அதன் மேல் கொஞ்சம் மோரைத் தெளித்து "நடு சமுத்திரத்தில், தங்கப் படிகளோடு, ஒரு தங்க அரண்மனை எனக்குவேண்டும்," என்று பிரார்த்தித்தான். அப்படியே ஒரு அரண்மனை தோன்றிற்று. இதைப்பார்த்த உடனே காவற்காரர்கள், ஓட்டமாய் ஓடி, ராஜாவிடத்தில் தெரியப்படுத்தினார்கள். உடனே, ராஜா தன்னுடைய மந்திரி முதலானவர்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டுவந்து அரண்மனையைப் பார்த்து "இதுவும் ஒரு ஆச்சரியமே!" என்று திகைத்து நின்றார். உடனே ராஜா, தன் ராஜ்யத்தில் பாதியையும், தன் பெண்ணையும் கொடுத்துவிடுவதாகச் சொல்ல ராஜகுமாரன், "உங்களுடைய பாதி ராஜ்யமும் வேண்டாம், பெண்ணும் வேண்டாம், நான் கட்டின அரண்மனையை எனக்குக் கொடுங்கள்" என்று கேட்டான். அப்படியே அரசன் கொடுத்து, தன் பெண்ணையும் அனுப்பினான். பெண்ணின் அழகைப்பார்த்து ராஜ குமாரன் முன்பு வேண்டாமென்று சொன்னபோதிலும், பிறகு கல்லியாணம் பண்ணிக்கொண்டு, சுகமாக வாழ்ந்து வந்தான்.

எப்போதும், ராஜகுமாரன் வேட்டைக்குப் போகிறபோது தன்னோடு நாயை மட்டும் அழைத்துக்கொண்டுபோய், பூனையையும் கிளியையும், தன் பெண்ஜாதி விளையாடுவதற்காக விட்டுவிட்டுப் போவான். ஒரு நாள் வேட்டையாடிவிட்டுத் திரும்பி வந்ததும், தன் பெண்ஜாதி முகம் வாடியிருப்பதைக் கண்டு என்ன சமாசாரம் என்று விசாரித்தான். அப்பொழுது அவள் "உங்களிடத்திலிருக்கிற மோதிர சக்தியினாலே இந்தத்தங்க அரண்மனையைக் கட்டினது போல் என் உடம்பைத் தங்க மயமாக ஆக்கிவிட வேணும்" என்று சொன்னாள். சரி என்று சொல்லி ராஜகுமாரன் ஒரு மேடை போட்டு, மோதிரத்தை அதன் மத்தியில் வைத்து, அதன்மேல் மோரைத்தெளித்து "என் பெண்ஜாதி தங்கமயமாக ஆகிவிட வேணும்" என்று பிரார்த்தித்தான். உடனே அவள் அப்படியே ஆகிவிட்டாள்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அவள் தலைவாரிக்கொண்டபொழுது, சீப்பில் இரண்டு தங்கமயிர்கள் ஒட்டிக்கொண்டிருந்தன. அவைகளைப் பார்த்து "இங்கே யாராவது ஏழைகளிருந்தால் இந்தத் தங்க மயிர்களைக்கொடுக்கலாமே! அவர்களுக்குப் பிரயோஜனப்படுமே. ஒருவருமில்லையே" என்று, துக்கப்பட்டு, ஒரு யுக்திபண்ணினாள். ஒரு இலையை எடுத்துத் தொன்னையாகத் தைத்து, அந்தத் தொன்னைக்குள் இரண்டு தங்கமயிரையும் வைத்து அந்தத் தொன்னை, யார் கையிலாவது அகப்பட்டு, அவர்களுக்குப் பிரயோஜனப்படட்டும் என்று எண்ணி அதைச் சமுத்திரத்தில் மிதக்கவிட்டு விட்டாள்.

இந்தத் தொன்னை மிதந்துகொண்டேபோய், சோமன் தோய்த்துகொண்டிருந்த ஒரு வண்ணான் கையில் அகப்பட்டது. அந்த வண்ணான் ஏதாவது இனாம் வாங்கலாமென்று எண்ணி, தன் ராஜாவிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்தான். அந்த ராஜா அந்த இரண்டு மயிரையும், தன்பிள்ளைக்குக் காண்பித்தான். அவைகளைப் பார்த்த ராஜகுமாரன், இந்த மயிரையுடைய பெண்ணை தான் கல்யாணம் பண்ணிக்கொண்டாலொழிய ஸ்நானபானம் பண்ணுகிறதில்லையென்று ஒரு பிடியாய்ப் பிடிவாதம் பண்ணினான். தன்னுடைய பிள்ளை இப்படி துக்கப்படுவதைப் பார்த்து, இந்த தங்கமயிருள்ள பெண்ணை எப்படியாவது கொண்டுவந்து சேர்க்கவேணுமென்று சொல்லி தன் ராஜ்யத்தில் கெட்டிக்காரியாய் உள்ள ஒரு பெண்பிள்ளையை அவளுக்கு ஏது வேணுமானாலும் கொடுப்பதாகச் சொல்லி, அனுப்பினான். இவள் ஒரு தங்கப் படகு ஒன்று செய்து, அதில் பட்டுக்கயிறுகள் கட்டித் தொங்கும் ஒரு பட்டுத் தொட்டிலையும் போட்டுக்கொண்டு எந்தப் பக்கத்திலிருந்து தொன்னை மிதந்து வந்ததோ அந்தப் பக்கமாய், படகைத் தள்ளிக்கொண்டு போகும்படி செய்தாள். அந்தப் படகுக்காரர்கள் நாலுபேர்கள். அவர்களுக்கு தன் விரல்களைக் கீழேதொங்க விட்டுக்கொண்டிருந்தால், படகைத்தள்ளிக்கொண்டேபோகும்படிக்கும், விரல்களைத் தூக்கிக்கொண்டிருந்தால் படகை நிறுத்தும்படிக்கும் சொல்லி யிருந்தாள். இப்படியாகப் படகை தள்ளிக்கொண்டே போகும்போது தங்க அரண்மனையைப்பார்த்து தங்க மயிருள்ள பெண் இங்கேதான் இருக்கவேணுமென்று ஊகித்துப் படகை நிறுத்தி அரண்மனைக்குள் புகுந்தாள். அங்கே தங்கமயமான பெண் சிம்மாஸனத்தில் உட்கார்ந்திருப்பதை பார்த்து, பின்புறமாய்போய், தட்டிக்கொடுத்து "அம்மா, என்னை உனக்குத் தெரியவில்லையா என்ன? நான் உன் அத்தை" என்று சொன்னாள். இதைக் கேட்ட பெண், "எனக்கு அத்தையையும் தெரியாது ஒருவரையும் தெரியாது" என்று சொல்லி கொஞ்சம் ஒதுங்கிக் கொண்டாள். இதைப் பார்த்த அத்தை "ஆம் ஆம் உனக்கு எப்படித்தெரியும், நீ பிறந்த வீட்டை விட்டுவந்து எத்தனையோவருஷம் ஆகிவிட்டது" என்று இப்படிக்கெல்லாம் கதை பேசி தனக்கு அத்தைதானென்று அந்த ராஜகுமாரத்தியை நம்பச்செய்ததின் பேரில் அவள் அத்தையைக் கொஞ்சநாள் தன்னோடு இருக்கும்படி சொன்னாள்.

இப்படி யிருந்துகொண்டு வருகையில், அத்தை தன் மருமகளைப்பார்த்து "இங்கே ஏன் தனியாக இருக்கிறாய், வேலைக்காரர்கள் ஒருவரும் இல்லையே" என்று பேசிக்கொண்டு வருகையில், தனக்கு ஒருவித கஷ்டமில்லையென்றும், தன் புருஷனிடத்தில் ஒரு அபூர்வ மோதிரம் இருப்பதாகவும், அதைக்கொண்டு தங்களுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்குமென்றும் மருமகள் சொன்னாள். இதைக் கேட்ட அத்தை "என்னடியம்மா! இப்படியும் இருப்பாளோ! உன் புருஷன் வேட்டையாடப் போய் அவருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் உன் கதி என்ன ஆகும்" என்று இப்படிக்கெல்லாம் சொல்லவே, அந்த ராஜகுமாரத்தி ரொம்ப பயந்து தன் புருஷன் ராத்திரி திரும்பி வந்ததும், "நீங்கள் வேட்டையாடப் போகும்பொழுது, மோதிரத்தை என்னிடத்தில் கொடுத்துவிட்டுப் போங்கள். வேட்டையாடப் போகிறவிடத்தில் உங்களுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் நான் என்ன செய்கிறது" என்று சொன்னாள். மறுநாள் காலமே

முதல் ராஜகுமாரன் தான் வேட்டைக்குப் போகும்பொழுதெல்லாம் தன் பெண்ஜாதியினிடத்தில் அந்த மோதிரத்தைக் கொடுத்துவிட்டுப் போவான். மோதிரம் ராஜகுமாரத்தியின் கையில்வந்ததென்று அறிந்து கொண்டதும் அத்தை ஒரு நாள் "நான் ஏறிவந்தேனே அந்தப் படகைப் பார்ப்போம் வா" என்று மருமகளைக் கூட்டிக்கொண்டுபோய் "கொஞ்ச தூரம் படகில்போய் திரும்பி வருவோம்" என்று சொன்னாள்.

ஏமாந்த மருமகள் சரியென்று சொல்லவே அத்தை தன் விரல்களை கீழே தொங்கப்போட்டாள். அதைப் பார்த்து படகுக்காரர்கள், வெகு வேகமாய் படகைத் தள்ளிக்கொண்டே போய் விட்டார்கள். ராஜ குமாரத்தி மறுபடியும் தன்னுடைய தங்க அரண்மனைக்கு திருப்பிக்கொண்டு போகும்படி என்னசொல்லியும் கேட்காமல், ராஜபட்டணத்திற்கு படகைக் கொண்டுபோய்ச்சேர்த்து, ராஜ குமாரன் எந்தப் பெண் வேணுமென்று சொன்னானோ அந்தப் பெண் வந்து விட்டதாகச் சொன்னாள். எல்லாரும் சந்தோஷப்பட்டு, அந்த ராஜகுமாரனைக் கலியாணம் பண்ணிக் கொள்ளும்படி, தங்க ராஜகுமாரத்திக்குச் சொன்னார்கள். அவள் "மாட்டவே மாட்டேன் என்று சொல்லி இன்னும் ஆறு மாஸத்தில் என் புருஷன் வராவிட்டால் பார்ப்போம்" என்று சொல்லிவிட்டாள். ராஜகுமாரன், ஆறுமாஸத்தில் எவன் வந்து விடப்போகிறான்; அப்படி வந்தாலும், அவனைச் சுலபமாய்கொன்றுவிடலாமென்றும் ஆறுமாத காலம் ஒரு நொடிபோல் போய்விடுமென்றும் இருந்தான்.

இப்படியிருக்க, வேட்டையாடப் போன ராஜ குமாரன் வீட்டுக்குத் திரும்பி வந்ததும் தன் பெண்ஜாதியில்லாமல் கிளி மட்டும் இருந்தது. அந்தக் கிளி "எஜமானனே! அத்தை வந்திருந்தாளே, அவள் உங்கள் ஸம்ஸாரத்தை ஒரு தங்கப்படகில் வைத்துக்கொண்டுபோய் விட்டாள்" என்று சொல்லிற்று. இதைக் கேட்ட ராஜகுமாரன் கீழே விழுந்து புரண்டு அழுதான். இதைப் பார்த்த கிளி, "நீங்கள் அழாதேயுங்கள், அம்மாள் எங்கே போயிருக்கிறாளென்று பார்த்து சமாசாரம் கொண்டுவருகிறேன்" என்று சொல்லிவிட்டு, புறப்பட்டு ஊர் ஊராய்த் தேடி, தன் எஜமானியிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து அவள் கிட்டப்போய் உட்கார்ந்து, "பயப்படாதேயுங்கள் நான் வந்து விட்டேன்" என்று சொல்லி அவளிடத்தில் உள்ள அபூர்வ மோதிரத்தைக் கேட்டது. இப்படிக்கேட்கவே, அந்த ராஜகுமாரத்தி இன்னும் அழுது, "நான் என்ன செய்வேன் அந்தக்கிழவி ராப்பகல் முழுவதும் அந்த மோதிரத்தை வாயிலேயே அடக்கிவைத்துக் கொண்டிருக்கிறாள். அதை எப்படி எடுக்கிறது" என்று சொன்னாள். அந்தக்கிளியோடு எப்படியோ பூனையும் வந்து சேர்ந்துவிட்டது. என்ன செய்கிறதென்று கிளி பூனையைக் கேட்டதின்பேரில், பூனை ரொம்ப சுலபமாய் செய்துவிடலாமென்று சொல்லிற்று. "எஜமானிக்கு சாப்பாடு வரும்பொழுது, எல்லாவற்றையும் சாப்பிட்டுவிடாமல் கொஞ்சம் மீற்று அதோ இருக்கிற எலிவளைக்கு முன்னால் இறைத்து வைக்கவேண்டும். இது செய்தால் போதும், பாக்கி வேலையை நீயும் நானும் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லிற்று. அப்படியே அந்த ராஜகுமாரத்தி செய்துவிட்டு, தூங்கப்போய் விட்டாள். அவளுக்குப் பக்கத்தில் கிழவியும் படுத்து குறட்டை விட்டுத் தூங்கினாள். எல்லாரும் நன்றாய்த் தூங்கும்பொழுது வளையிலிருந்த எலிகள், இறைத்திருந்த சாதத்தை தின்னவந்தன. அப்பொழுது நீண்ட வாலுள்ள ஒரு பெரிய எலியின்மேல் பூனை பாய்ந்து அதைப்பிடித்து வாயைத் திறந்துகொண்டு கொறட்டை விட்டுத் தூங்கின கிழவியின் மூக்கில் எலிவாலைத் திணித்தது. கிழவி விழித்துக்கொண்டு, பெரிதாய் ஒரு தும்மல் தும்மினாள். அப்பொழுது வாயிலிருந்து மோதிரம் கீழேவிழவே, கிட்ட இருந்த கிளி அதை ஒரு நொடியில் தன் மூக்கால் கொத்திக்கொண்டுபோய் எஜமானனிடத்தில் கொடுத்துவிட்டது. எஜமானன் மோதிரம் வந்ததும் மேடையில் வைத்து, அதன் மேல் மோர் தெளித்து, "என் பெண்ஜாதி என்னிடத்தில் வரவேணும்" என்று பிரார்த்தித்தான். அப்படியே அவள் வந்துவிட்டாள். பிறகு, புருஷனும் பெண்ஜாதியும் ஸௌக்கியமாக இருந்தார்கள்.

◆

SELECTIONS.

விசேஷத் திரட்டு.

PORTIA TREE.

BY

J. DHARAMARANGA RAJU.

பூவரசமரம்.

சந்தம்.

(பந்துபார்-பந்துபார் என்னும் மெட்டு)

1. பூவிதோ! பூவிதோ! பூவரசம் பூவிதோ!
தாவிவான் தறித்துவந்த தளிர்நிறைந்த கிளையிதோ.

2 பாருமிவ் விளஞ்செடியில் பகருமத்யத் தண்டுமே
நேர்நோக்கி யேவளர்ந்து நிலையடைவ தடிமரம்.

3. இந்தமத்யத் தண்டுமீ திருக்குமங்கம் கிளைகளே
விந்தையைக் கிலைகள்கீழு மேலும்வரிசை யில்லையே.

4. இவ்விலைகள் தண்டினோ டிசைந்திருக்குஞ் சந்திலும்
அவ்விதான உச்சியும் அரும்பிடுங் குருத்துமே.

5. நுனிக்குருத்து நீண்டபோது நோக்கிற் செடிகள் உயரமாம்
நுனிக்கணுக் குருத்துகள் தழைத்தபோது கிளைகளாம்.

6. பூவரசின் ஓர்கணுப் பொருந்துவ தொரேயிலை
தாவராத் திரண்டிலைக் கணுக்கள் மற்றுஞ் சகஜமே.

7. கணுச்சந்து களிலிருந்து பூவுங்காயுங் கனியுண்டாம்
அணுப்போல வேயிருந் தவைகள் பெரிய தாகுமே.

8 நீண்டிருக்கும் காம்பின்மீது நிற்பதிந்த இலையுமே
ஆண்டுதோறுங் கோடையி லவைபழுத்து திர்ந்திடும்.

9. இலைகள்பச்சை நிறமுடைத் திருப்பதும் அவற்றுளே
வலையின்கண்கள் போனரம்பு வரிபடர்ந் திருப்பதும்.

10. வடிவிலிரத் தாசயம் வரைந்த தாயிருப்பதும்
அடியில்வர்ணப் பேதமும்பின் ஆச்சரியந் தருவதே.

11. பாருமிம் மலர்களைப் பறித்துவந்த காம்புடன்
வாருமிங்கு சேர்ந்திவை வரிசையாக நோக்குவீர்

12. எண்ணிலைந்து பூவிதழ் இசைந்திருக்கு மியல்பிதோ
கிண்ணியென்னப் புறவிதழ்கள் கீழமைந்த அழகிதோ

13. பொன்னிறத்தைப் பூவிதழ் புனைந்திருக்கும் பொலிவிதோ
சென்னிறத்த புள்ளிமற்றும் சேர்ந்த நற்சிறப்பிதோ

14. கல்லிழைத்த கம்மல்போலக் காணுங்கண்கள் காக்ஷிபார்
மெல்லிதான தண்டுமொன்று மேலிருக்கும் மேன்மைபார்.

15. ஊசிபோன்ற கீலமென்ப துள்ளமைத்த ரகசியம்
கேசரக்கு ழாயுமத்தைக் கிட்டிநிற்ப ததிசயம்.

16. தண்டுசுற்றி யெண்ணிறந்த தந்திபோன்ற நூலின்மேல்
வண்டுமொய்க்கு மஞ்சள்மக ரந்தமூடும் பைகளே.

17. புறவிதழைக் கிள்ளிடில் பொலியும்பூவிற் பிஞ்சுமே
நிறமிருந்த நல்விதைகள் நின்றுதோன்று மறையுளே

18. புற விதழ்கள் தம்மைப் புஷ்பகோசமென்னப் புகலுவார்
சிறந்ததா மரைதனில் தனித்தனித் தெரிந்திடும்.

19. கோசமேயிப் புஷ்பமூடிக் கொண்டதை முன்காப்பது
வாசனைநி றையிதழ்கள் வண்டினத்தைச் சேர்ப்பது

20. செந்நிறத் துடன்மலர்கள் சேர்ந்திலங்கு பொன்னிறம்
பன்னிறத்த வண்ணப்பூச்சி பக்ஷியும் அழைத்திடும்.

21. கேசரக் குழாயினுட் புகுந்துகீண்டு மகரந்தம்
வாசமோடு பாசமாகி வன்கருத் தரித்திடும்.

22. இம்மரங் கள்காய்ப்பதும் இனிப்புடன் கனிப்பதும்
செம்மையான அண்டகோசம் சேர்கருத் தரித்தலால்.

கிருஷிகன்.

ஜே. தர்மரங்கராஜு.

WANTED AGENTS.

ஏஜெண்டுகள் தேவை.

"பிழைக்கும் வழி" க்கு சந்தாதாரர்கள் சேர்க்க ஏஜெண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி, 3, 4., சுங்குராம செட்டித்தெரு,
ஜார்ஜ் டௌன் மதராஸ்.

AGRICULTURAL ASSOCIATIONS.

விவசாயச் சங்கங்கள்.

உலகத்தில் மற்ற ஜனங்கள் தங்கள் நன்மைக்கும் பெருமைக்கும் செய்துவரும் ப்ரமாதமான முயற்சிகளைப் பார்க்கும்போது, இந்திய ஜனங்களும் முன்னுக்கு வருவார்களோ என்று ப்ரமிக்க வேண்டியதாயிருக்கிறது. இது விஷயமாய் பாபட்லாவிலுள்ள தாம்ஸென் என்னும் பாதிரியார் இந்தியாவில் சிலகாலமாய் ஸ்தாபிக்கப்பட்டு வரும் விவசாயச் சங்கங்களையும் அமெரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விவசாயச் சங்கங்களையும் ஒப்பிட்டு, அது விஷயத்தில் இரண்டு தேசங்களுக்குமுள்ள தாரதம்யம் யானைக்கும் பூனைக்கும் உள்ள தாரதம்யம் போலிருக்கிறதென்று எழுதியிருக்கிறார். அமெரிக்காவில் விவசாயிகள் இந்தச்சங்கங்களால் பணக்காரர்களாகி, ரெயில்களிலும் கால்வாய்களிலும் மற்றப்பெருந்தொழில்களிலும்பணம்போட்டு ராஜாங்க நிர்வாகத்தில் செல்வாக்குள்ளவர்களாகிவிட்டார்கள். ராஜாங்கத்தை நடத்துவோர் விவசாயிகள் என்ன சொல்லுகிறார்களென்று கேட்டு அறிந்து நடத்துகிறார்கள். இந்தியாவிலும் விவசாயிகள் ஏன் இப்படிச் செல்வாக்குள்ளவர்களாகக் கூடாதென்று இந்தப் பாதிரிகேட்கிறார். இப்போது இங்கு ஸ்தாபிக்கப்பட்டுவரும் விவசாயச் சங்கங்கள் வக்கீல்களாலும் உத்தியோகஸ்தர்களாலும் நடத்தப்பட்டு வருகின்றனவேயன்றி, விவசாயிகள் சேர்ந்து அவைகளை நடத்துவதில்லை. விவசாயிகள் சேர்ந்து நடத்தினால் மட்டும் இந்தச் சங்கங்கள் நன்மை செய்வனவாகும். இவர்களால் நடத்தப்படும் சங்கங்கள் தேசத்தில் போதுமானபடி ஸ்தாபிக்கப்படுமானால் எவ்வளவோ விதமாய் நன்மை யுண்டாகும். அமெரிக்கா, கானடா, ஆஸ்ட்ரேலியா, ஜர்மெனி, ஆகிய இந்த தேசங்களில் பால் நெய் முதலியவைகளைச்செய்து விவசாயிகள் ஏராளமான சம்பாத்தியம் பெறுவது இந்த சங்கங்களாலேயே சாத்தியமாகின்றது. இந்தத் தேசங்களில் விவசாயிகள் படித்தவர்களாய்த் தங்களுக்கு வேண்டியவைகளை எழுத்து மூலமாயறிந்து சிந்திக்க வல்லவர்களாயிருக்கிறார்கள். ஆதியில் பட்டணவாசிகளே செல்வவான்களாயும் கிராமவாசிகள் அவர்களை அண்டி ஜீவிக்கவேண்டியவர்களாயு மிருந்தார்கள். இப்போது கிராமவாசிகளைப்பார்த்துப் பட்டணவாசிகள் பொறாமைப் படும்படியான நிலைமைக்கு அவர்கள் வந்து விட்டார்கள். அமெரிக்காவில் ராஜஸ்தலமாகிய வாஷிங்டனில் ப்ரெஸிடெண்டுள்பட எல்லா உத்தியோகஸ்தர்களும் விவசாயிகளின் அபிப்பிராயத்தை எதிர் பார்த்திருக்கிறார்களேயன்றி, பட்டணங்களில் மேடையேறி ப்ரஸங்கங்கள் செய்வோரைக் கவனிப்பதில்லை. இந்தியாவில் உத்தியோகஸ்தர்கள் விவசாயிகளை இப்படி மதிக்கிறார்களா? படிப்பற்ற மூடர்களான விவசாயிகள் தங்கள் நன்மையையும் வல்லமையையும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். சங்கங்கள் ஸ்தாபித்துக்கொண்டு கூட்டுத் தொழில்கள் செய்து பணம் சேர்ப்பார்களானால், அப்போது விவசாயிகளைப் பட்டணவாசிகளும் உத்தியோகஸ்தர்களும் மதிப்பார்கள். கிராமாந்தரங்களில் மாடுகளை வைத்து வளர்த்துப் பால் தயிர் நெய் முதலியவைகள் விசேஷமாய் உண்டாக்கப்படுமானால், பட்டணவாசிகளுக்கு எவ்வளவு சுகம் உண்டாகும்? இந்தச் சங்கங்களால் விவசாயிகளுக்கு உண்டாகக்கூடிய நன்மைகள் எவ்வளவோ உண்டு. அறிவும் ஊக்கமும் உண்டானால் எல்லாம் கைகூடும்.

சுதேசமித்திரன்.

TOBACCO CULTIVATION.

புகையிலைப் பயிர்.

—:o:—

பூமி அல்லது மண்.—புகையிலை அதிகமான லாபத்தைக்கொடுக்கக்கூடியபயிரென்றுஎல்லாரும் அறிந்திருக்கலாம். மணற்பாங்கான பூமியும், இந்திரிய வஸ்து நிறைந்த செவ்வல் பூமிகளும், நீர் நன்றாய் வடியக்கூடிய பூமிகளும் மேற்படி பயிரிடுவதற்கு லாயக்கானவைகள்.

காலம்.— மழைகாலமான ஐப்பசி முதல் மார்கழி வரையில் நாற்று வளர்ப்பதற்குத் தகுந்த காலம்.

நாற்றங்கால்.—12 அடி நீளமும் 3 அடி அகலமுமுள்ள ஒரு துண்டு நாற்றங்காலில் ஒரு அவுன்ஸ் அல்லது 2½ ரூ. எடை விதை தெளித்து உண்டான நாற்று ஒரு ஏகரா பூமியில் நடுவதற்குப் போதுமானது. விதை தெளிப்பதற்கு முன் நாற்றங்காலை ஆழமாய் மண்வெட்டியைக்கொண்டு வெட்டி, மண்ணை நன்றாய்ப் பொடித்து, உதிர்த்து, அத்துடன் நன்றாய் மக்கிப்போன சாணி எருவும் சாம்பலும் கலக்கவேண்டும். விதை சமமாக நாற்றங்காலில் விழும்பொருட்டு சாம்பலாவது மணலாவது கலந்து தெளிக்கவேண்டும். பிறகு நாற்றங்காலை 2 அங்குல கனத்திற்கு வைக்கோலால் மூடி அதன்மேல் தண்ணீர் விட்டு வந்தால் நலம். மண் உறிஞ்சும் மட்டும் தண்ணீர் கட்டவேணடும். நாற்றங்காலில் நீர்த் தேக்கம் செய்யக்கூடாது. நீர் சிறுசிறு துளிகளாக விழப்பட்ட பாத்திரங்களினால் இறைத்தாலும் நலம்.

நாற்று வயது.—35 நாள் முதல் 42 நாள் வயதுள்ள நாற்றுகள், நடுவதற்குத் தகுந்தவைகள்.

பண்.—புகையிலை நாற்று நடவேண்டிய பூமியை நன்றாய் 7 அல்லது 8 உழவுக்குக் குறையாமல் உழுது சாணி எருவும், சாம்பல் எருவும் இட்டுக் கலக்கவேண்டும். நடவு பூமியை பாத்திகளாகப்பிரித்து ஜலம் கட்டி மேட்டு வரிசைகளில் நாற்றுக்களை (சாயங்காலத்தில்) நடவேண்டும். நாற்றுக்கு நாற்று ஒரே வரிசையில் 1½ அடியும், தனித்தனி வரிசையில் 2 அல்லது 3 அடி விட்டும் நடவேண்டும்

ஜலம்.—மண்ணின் தன்மைபோல் வாரத்திற்கு 3 அல்லது 2 ஜலம் கட்டவேண்டும். அனேகமாய் 3 கொத்துக் கொடுப்பது வழக்கம். முதல்கொத்து 20-ம் நாள் கொடுக்கலாம்.

பூத்தல்.—நட்டு இரண்டாமாதக் கடைசிக்குள் புஷ்பிக்க ஆரம்பிக்கும்.

தலைகிள்ளுதல்.—பூவுடன் உச்சிக்கிளையை முதலில் முறித்தெறியவேண்டும். வாரத்திற்கொருதரமாவது பக்கக்கிளைகளைக் கொய்துகொண்டேயிருக்கவேண்டும். ஒரு செடிக்கு 7 முதல் 12 தழை வரையில் நிறுத்தலாம். கிளைகள் கொய்யப்படாவிட்டால் புகையிலை பெரிதாகாததோடு சரக்கும் மட்டமாகும். நட்டு மூன்று மாதக் கடைசியில் பழுத்த இலைகளைப் பறிக்கவேண்டும்.

அறுவடைசெய்ய அடையாளங்கள்.—இலை பிசுபிசுப்பாய் இருப்பதோடு, பசுத்த மஞ்சள் நிறமான பிறகு மஞ்சள் நிறமான பொட்டுகள் இலையின்மேல் தோன்றும்.

அறுவடைசெய்து சரக்குச் செய்வது.—மேல் கண்ட அடையாளங்கள் கண்டவுடன், பயிரை நில மட்டத்துக்கு சாயந்திரம் (3-மணிக்கு மேல்) வெட்டி அந்தந்த இடங்களிலேயே அன்றிரவு முழுவதும் கிடக்கவிடவேண்டும். மறு நாள் காலையில் இலையோடுகூடிய கட்டைகளை சிறுசிறுகுவியல்களாகச்சேர்த்துவைத்துமேற்படி குவியல்களை வைக்கோலினால் மூடவேண்டும். புகையிலைக்கட்டையின் அடியை எப்பொழுதும் வெளிப்புறமாகவே அடுக்கவேண்டும். இப்படி அடுக்கிய குவியல்களை மூன்றாம் நாள் சாயந்திரம் பிரித்து, நிலமட்டத்துக்கு 5 அடிக்குமேல் கட்டிய ஒரு நீளக் கோலின் மேலாவது கயிற்றின் மேலாவது தொங்கவிட்டு, தினம் காலமே ஒன்றைவிட்டு ஒன்றை கொஞ்சம் கொஞ்சமாய்த் தள்ளி ஒரே நிறம் வரும் வரையில் ஆறுதல் செய்ய வேண்டும். நன்றாய் காற்றோட்டத்தில் இப்படி 15 அல்லது 20 நாள் இருக்கவேண்டும். சரக்கின் நிறம் நன்றாய் ஆனவுடன் இலைகளை தண்டுகளிலிருந்து பிரித்து பின்பு குட்டு குட்டாகச் சேர்க்கவேண்டும். இப்படி இரண்டு மூன்று நாளைக்கொருதரம் சரக்கு குணமாகிற வரையில் மேற்படி குட்டுகளைப்பிரித்து மறுபடி சேர்த்துக்கொண்டிருக்கவேண்டும். பிறகு சரக்கின் நிறம் வந்தவுடன் விற்பனைக்காவது, உபயோகத்துக்காவது தழைகளை பிடிப் பிடியாக கட்டி பாதுகாத்து வைக்கவேண்டும்.

புதுக்கோட்டை வியவசாய
அபிவிர்த்தி சபையின் பத்திரிகை.

CAMBODIA COTTON.

கம்போடியாப் பருத்தி.

◆

திருநெல்வேலி ஜில்லாவில் முன் தோட்டக்கால் நிலங்களில் பயிரிட்டுவந்த புகையிலை, கேழ்வரகு, மிளகாய் முதலிய இறைவைப் பயிர்கள் பயிர் செய்த இடங்களிலெல்லாம் 'கம்போடியாப் பருத்தி' என்று சொல்லப்பட்ட பருத்திப் பயிரை இப்பொழுது வழக்கமாய்க் கையாடி சாகுபடி செய்கிறார்கள். இதன் காரணம் அந்தப்பயிரை சாகுபடி செய்தவர்களுக்கு நன்றாய்த்தெரியும். நில இயல்புக்குத் தக்கபடி நிலத்தின் மண்படை ஆழமாயிருந்தாலும், இல்லாமற்போனாலும், இந்தப் பயிர் சாகுபடி செய்வதில் பிடிக்கும் செலவெல்லாம் மாதம் ஒன்று அல்லது இரண்டு தண்ணீர் இறைப்பதைத் தவிர, மற்ற சாதாரணப்பருத்தி சாகுப்டிக்கு எவ்வளவு செலவு பிடிக்குமோ அவ்வளவுதான் பிடிக்கும்.

சரியானபடி எருவிட்டுப் பருவப்படுத்திய நல்ல தோட்டக்கால் நிலங்களைப்போலொத்த நிலங்களில் இந்தப் பருத்தியை விளைவிக்கும் கிருஷிகருக்கு ஏகரா ஒன்றுக்குச் சாதாரணமாய் 1,000 முதல் 1,250 ராத்தல் நிறை வரையில் மாகூல் கிடைக்கிறதாம். சில இடங்களில் ஏகரா ஒன்றுக்கு 2,000 ராத்தல் நிறை மாகூல் கிடைத்திருப்பதாயும் தெரியவருகிறது. 250 ராத்தல் நிறைகொண்ட சாதாரணப் பருத்திப் பொதி ஒன்றுக்குக் கிடைக்கும் விலையைவிட இந்தத் தினுசுப் பருத்திக்கு ஒரு பொதிமேல் ரூ. 5 ஜாஸ்தி விலை கிடைக்கிறது. இப்படி ஜாஸ்திவிலை கிடைப்பதின் காரணம் என்னவென்றால் இந்தப் பருத்தியிலிருந்து ஜாஸ்தி பஞ்சு கிடைப்பதுதான். சாதாரணப் பருத்தியில் 2,000 ராத்தல் நிறையை அறைத்தால் 500 ராத்தல் பஞ்சு கிடைக்கும். ஆனால் இந்தப் பருத்தியிலிருந்து 500 ராத்தல் நிறை பஞ்சு கிடைக்க 1,500 ராத்தல் பருத்தி அறைத்தால்போதும். மேலும் திருநெல்வேலி ஜில்லாவிலிருக்கும் தூலாபீஸ் வியாபாரிகள் இந்தப் பருத்திக்கு பாரம் ஒன்றுக்கு சாதாரணப் பருத்தி விலையைவிட ரூபாய் ஐந்து ஜாஸ்தி கொடுக்கிறார்கள்.

இந்தப் பயிரைச் சாகுபடி செய்யும் முறை மிக எளிது. எருப்போட்ட நீர்வடிவுள்ள தோட்டக்கால் நிலங்களில் நல்ல பலிதம் கிடைக்கும். இதை விதைக்கும் நிலத்தை நன்றாய் உழுது பண்படுத்தி, பருத்தி விதைக்கும் பட்டத்தில் விதையை கை விதைப்பாய் வீசி, கட்டைக் கலப்பையால் லேசாய் ஒரு சால் உழுது விதயை மறைக்கவேண்டும். ஒரு

ஏகரா நிலத்தில் விதைக்கப் பத்து ராத்தல் விதை போதுமானது. விதை விதைத்த பிற்பாடு தண்ணீர் இறைவைக்குவேண்டிய பிரகாரம் பாத்திகளும் கால்களும் கட்டவேண்டும். பயிர் முளைத்து மேல்வந்து செடிகளில் இரண்டு இலைகள் உருவியிருக்கும்போது கைக்களை வெட்டி நிலத்தின்மேற்பரப்பை கிளறிக்கொடுக்கவேண்டும், செடிகள் ஒருசாண் உயரமிருக்கும்போது ஒரு செடிக்கும் மற்றொரு செடிக்கும் இரண்டடி தூரமிருக்கும்படி செடிகளைக் கலைத்துவிடவேண்டும். நிலத்தில் தக்கபடி எருவிட்டிருந்தால் செடிகளுக்கு மத்தியில் 2½ முதல் 3 அடி இடம் விட்டு கலைப்பிக்கலாம். இப்படிச் செடிகளைக் கலைப்பிக்காவிட்டால் செடிகள் அடர்ந்து நெருங்கி, அதன் கிளைகள் சிறுத்து, கோலுருவி, சன்னமாகி அவைகளில் பிடிக்கும் பருத்த காய்களின் பளுவைத்தாங்கமுடியாது. செடிகள் வளர்ந்து நிலத்தை அடைத்து மூடிக்கொள்ளுமுன் இரண்டாந்தரம் ஒரு களை வெட்டவேண்டும். இதற்குப்பின் செடிகளின் நிழல் நிலத்தை மூடிக்கொள்ளுமானதால், களைப் பூண்டுகள் வளரவொட்டாதபடி அடக்கிக்கொள்ளும். இந்தப் பயிருக்கு தண்ணீர் அவசியமாக வேண்டிய பொழுதுமாத்திரம் இறைத்தால் போதுமானது. செடிகளில் பிடித்திருக்கும் காய்கள் வெடிக்க ஆரம்பித்த பிற்பாடும், முதல் வெடிப்புப் பருத்தி எடுத்தாகும்வரையில் தண்ணீர் பாய்ச்சக்கூடாது. அப்பால் காய்கள் காய்த்து ஓய்ந்துபோன செடிகள் மறுபடியும் துளிர்ந்து பூத்துக் காய் கட்டும்பொருட்டு ஜலம் இறைக்கவேண்டும். இந்தப் பருத்தியைச் செடிகளிலிருந்து எடுப்பது மிகவும் எளிது. ஏனென்றால் காய்கள் பெரிதாயும் சுளைகள் நன்றாய் வெடித்துமிருக்கும். பருத்தி எடுப்பதில் அனுபோகமுள்ள ஒரு ஆள் நாள் ஒன்றுக்கு 100 முதல் 125 ராத்தல் பருத்தி வரையில் சாதாரணமாய் எடுக்கக்கூடும்.

தானியப்பயிர்களை நிச்சயமாய்ப் பயிரேற்றி பலனடையப் போதுமான தண்ணீர் வசதியில்லாத கிணற்றிறவை நிலங்களைவைத்து சாகுபடிசெய்யும் ஒவ்வொரு கிருஷிகரும் இந்தப் பயிரைச் சாகுபடிசெய்வது ரொம்ப நலம்.

THE INDUSTRIAL CONFERENCE AND THE TAMIL LANGUAGE.

தொழிலாலோசனை ஸபையும் தமிழ்ப் பாஷையும்.

போன மாஸத்தில் கர்நூலில் மாகாண தொழிலாலோசனை ஸபை கூடிற்று. அதில் நடந்த ப்ரஸங்கங்கள் முதலிய நடவடிக்கைகளெல்லாம் இங்கிலீஷிலேயே நடந்தன. இப்படிப்பட்ட ஸபைகளில் நடக்கும் நடவடிக்கைகளையெல்லாம் ஸ்வ பாஷைகளிலேயே நடத்தவேண்டுமென்று சுதேசமித்திரன் பத்திராதிபர் எழுதுகிறார்.

“ராவ் பகதூர் கே. சுப்பராயடு பந்துலு உபசரணைக் கமிட்டி சேர்மனாய் வந்திருந்த கனவான்களை வரவேற்று, கர்நூல் ஜில்லாவிலுள்ள முக்கியமான தொழில்களையெடுத்துச் சொல்லி, ஒரு திறமையான ப்ரசங்கம் செய்தார் சபைக்குத் தலைவராயிருந்த ராவ் பகதூர் எம். ஆதிநாராயணய்யாவும் ஒரு திறமையான ப்ரசங்கம் செய்தார். இந்த ப்ரசங்கங்கள் இரண்டும் ஆங்கில பாஷையிலேயே செய்யப்பட்டனவாகையால், ஆங்கில மறிந்த சிலர் மட்டும் இவைகளை வாசிப்பார்கள். தொழிலாலோசனைச் சபைகள் பிரதி வருஷமும் பல விடங்களில் நடக்கின்றன. அப்போது திறமையான ப்ரசங்கங்கள் செய்யப்படுவதுமன்றித் தொழில்களைப்பற்றிப் புஸ்தகங்கள் வாசித்தவர்களும் அனுபோகமுள்ளவர்களும் தங்கள் அபிப்பிராயங்களை எழுதி வாசிக்கிறார்கள். இவைகளும் ஆங்கில பாஷையிலேயே இருப்பதால் ஆங்கிலங்கற்ற சிலருக்குத்தான் உபயோகப்படுகின்றன தொழில்கள் செய்யும் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு இம்மாதிரிச் சபைகள் நடக்கின்றனவென்றாவது கற்றறிந்தவர்கள் அருமையான அபிப்பிராயங்களைச் சொல்லுவதாவது தெரியவே தெரியாது.

இந்தக் காரணத்தினால் தொழில்களைப் பற்றின ஆலோசனைச் சபைகள் முற்றிலும் பயன்படாமல் போகின்றன. இந்தச் சபைகளின் பயனாப் எங்கேயாவது புதுத்தொழில் செய்யப்பட்டதாகவாவது, அல்லது குற்றுயிராயிருந்த பழைய தொழில் புதிதாய் உயிர்பெற்றதாகவாவது நாம் அறியோம். ஆனாலும் மேற்குறித்த பிரசங்கங்களாலும் பத்திரிகைகளாலும் பிரயோசனமே இல்லையென்று நாம் சொல்லவில்லை. ஒரு விஷயத்தில் அவைகள் நல்ல பிரயோசனத்தைத் தருகின்றன. என்னவெனில் படித்தவகுப்பார் நமது பொருளாதார நிலைமையைப் பற்றி நினைக்கும்படி அவைகள் செய்கின்றன. நம் தேசம் தற்காலம் இருக்கும் நிலைமையில் ராஜாங்க விஷயங்களில் எப்படிப்படித்த வகுப்பார் முன்னின்று புது வழிகளைக் காட்ட முயலுகிறார்களோ அப்படியே தேசத்தில் பொருளாக்கும் விஷயமாயும் படித்த வகுப்பாரே முன்னின்று முயலவேண்டியிருக்கிறது. தேசத்தின் முன்னேற்றம் தற்காலத்தில் அதில் நாம் வைக்கும் அபிமானத்தினாலேயே நிறைவேற வேண்டியிருக்கிறது. சாமானியமாய் மற்ற தேசங்களில் பொருள் சம்பாத்தியத்தில் மனிதருக்கு இயற்கையாயுள்ள ஆசையினால் தொழில், வியாபாரம் முதலியவைகள் பெருகுகின்றன. தேசாபிமானம் இவைகளில் சம்பந்தப் படுவதே இல்லையென்று சொல்ல முடியாதாயினும், பொருள் சம்பாத்தியத்துக்கு முக்கியமான உற்சாகம் பொருளாசையினாலே உண்டாகிறது. ஆனால் இந்தியாவில் முற்றிலும் பொருளாசையையே பொருள் சம்பாத்தியத்துக்கு உற்சாகமாகக் கொண்டவர்கள் பழைய காலத்துத் தொழிலாளிகளும் வியாபாரிகளுமாயிருப்பதால், அவர்களால் புதிய வழிகளில் நம் தேசம் முன்னேற்றம் பெறாது. இந்தப் புதிய வழிகளை அவர்கள் அறியவே மாட்டார்கள். ஆகையால் நம் தேசத்தில் எந்த பாகமானாலும் அங்கு புதுத் தொழில்கள் ஸ்தாபிக்கப்படும்போது, வக்கீல் முதலான படித்தவர்களே முக்கியமாய் முன்னின்று அவைகளை ஸ்தாபிக்கிறார்கள். இதை ஆங்கிலேயர் சில சமயங்களில் கேலி செய்வதுண்டாயினும், உண்மை அப்படித்தானிருக்கின்றது. ஆகையால் படித்த வகுப்பார் பழைய காலம்போல் சர்க்கார் உத்தியோகங்களிலும் மற்ற படித்த தொழில்களிலும் சிந்தை வைக்காமல் தொழில்களில் சிந்தைவைத்தல் நலம்.

AGRICULTURE IN INDIA AND JAPAN.

ஜப்பானிலும் இந்தியாவிலும் விவசாயம்.

நமது ராஜதானியில் வெகு காலம் கலெக்டராயிருந்து பிறகு ரெவினியூபோர்டு மெம்பருமாகிப் பென்ஷன் பெற்று இப்போது இங்கேயே வசித்துவரும் ஸர் ப்ரெடரிக் நிக்கல்ஸன் சில தினங்களுக்கு முன்னால் கொடைக்கானலில் தென்னிந்தியா விவசாயத்தைப் பற்றி ஒரு அருமையான ப்ரசங்கம் செய்தார். அந்த ப்ரசங்கத்தில் ஜப்பானில் விவசாயம் செய்யப்படுவதற்கும் இந்தியாவில் விவசாயம் செய்யப்படுவதற்கும் உள்ள வித்தியாசங்களை எடுத்துக்காட்டி, இந்திய விவசாயத்திற் செய்யப்படவேண்டிய சில திருத்தங்களைச் சொன்னார். முக்கிய வித்தியாசம் என்னவென்றால் ஜப்பானில் எருவில்லாமற் பயிரில்லை. நம் தேசத்திலோ எருவிடுகிற விஷயத்தில் போதுமான கவலையில்லாமற் பயிர் செய்யப்படுகின்றது. ஜப்பானியர் பூமியை ஆழ உழுது மண் வெட்டியால் அடிக்கடி வெட்டிப் புரட்டுவார்கள்.

நம்மவர்களோ ஒரு மொட்டைக் கலப்பையால் பூமியின் மேற்புறத்தைக் கீறுவதைத் தவிர, ஆழ உழுவதுமில்லை; வெட்டிப் புரட்டுவதுமில்லை. புன்செய் நிலங்கள் விசேஷமாய் இப்படியே பயிர் செய்யப்படுகின்றன. இப்படிப் பயிர் செய்யப்படுவதனால் மழை ஜலம் பூமியின் அடிப்புறத்தில் ஊறித் தங்காமல் மேற்புறத்திலே இருந்து சூரிய வெப்பத்தினால் உலர்ந்து போகின்றது. இப்படி உலர்ந்து போகவிட்டுவிட்டு, இந்திய விவசாயிகள் மழை இல்லை, மழை இல்லை, என்று கண்ணீர் விடுகிறார்கள். பூமியை ஆழ வெட்டிப் புரட்டினால் மழை கொஞ்சம் பெய்தாலும் பூமியில் ஊறித் தங்கிப் பயிருக்குப் பசை கொடுக்கும்.

இன்னுமொரு வித்தியாசம் ஸர் ப்ரெடரிக் நிக்கல்ஸன் சொன்னார். ஜப்பானில் ஊசி குத்துகிற நிலமாவது வீண் போடப் படுகிறதில்லை. சுத்த பொட்டல் நிலமானாலும், அதற்குச் சளைக்காமல் உரம் இட்டுப் பலப்படுத்திப் பயிர்கள் செய்கிறார்கள். உரம் பயிராகின்றதேயன்றி பூமி பயிராவதில்லை. உரத்துக்குப் பூமி ஆதாரமே யன்றி வேறல்ல, என்று ஜப்பானியர் எண்ணுகிறார்கள். நம்மவர் இப்படி எண்ணாதவர்களாய், பொட்டல் நிலமாயிருந்தால் அதன் கிட்டப்போவதுமில்லை. நம் தேசத்தில் தரிசு நிலங்கள் மைல் கணக்கான விஸ்தீரணமுள்ளனவாகக் கிடக்கின்றன. மரங்கள் நட்டு லாபம் பெறும் எண்ணம் நம்மவர்களுக்கில்லை. புன்செய் நிலங்களில் ஐந்திலொரு பாகம் தரிசாய்க் கிடப்பதாக ஸர் ப்ரெடரிக் நிக்கல்ஸன் சொன்னார். இந்தத் தரிசு நிலங்களில் பயிர் செய்யக்கூடிய மரவகைகள் எத்தனையோ இருக்கின்றன. ஒரு புளிய மரம் வைக்கப்பட்டுப் பலன் கொடுக்குமானால் அநேக ஏகரா பூமிக்குள்ள வாயிதாவை அதுவே கொடுத்துவிடும். சேலம் ஜில்லாவிலுள்ள ஒரு ரஸ்தாவில் 17 மைல் தூரம் இருபக்கமும் புளிய மரம் வைக்கப்பட்டு, அதனுடைய பலனைக்கொண்டு அந்த ரஸ்தாவுக்குப் பிடிக்கும் செலவு செய்யப்படுவதுமன்றிச் சிறிது மிகுதியாயும் கிடைக்கின்றதாம். உண்மை என்னவெனில் நமது ஜனங்கள் ஏழைகளானதால் உடனே பலன் கொடுக்கும் பயிர்களை விரும்புகிறார்களே யன்றிச் சில காலத்துக்குப் பிறகு பலன் கொடுக்கும் பயிர்களை விரும்புகிறதில்லை.

ஸர் ப்ரெடரிக் நிக்கல்ஸன் விவசாயிகளுக்குள் ஐக்கியம் அவசிய மென்பதைப்பற்றித் தமது ப்ரசங்கத்தின் முடிவில் வற்புறுத்திப் பேசினார். ஐக்கிய நாணயச் சங்கங்களால் உண்டாகி வரும் நன்மையை எடுத்துக் காட்டினார். ஜப்பான் தேசத்தில் இம்மாதிரி சங்கங்கள் தேசமெங்கும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஜில்லாச் சங்கங்கள் 46 ம், தாலூகாச் சங்கங்கள் 579 ம், 13,000 கிராமங்களில் 12,000 கிராமச் சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன வென்றால், ஜப்பானிய விவசாயிகளுக்குள் ஐக்கிய புத்தி எவ்வளவு ஊன்றி யிருக்க வேண்டும்! சென்னை ராஜதானியிலும் இவ்வளவு சங்கங்கள் இருப்பதற்கு என்ன தடை? ஐக்கிய புத்தியை ஊட்டும் பொருட்டு அநேக பத்திரிகைகள் பிரசுரம் செய்து, ப்ரசங்கிகளை அமர்த்தி மற்ற உபாயங்களையும் அனுஷ்டிக்க வேண்டுமென்று ஸர் நிக்கல்ஸன் சொன்னார். பிள்ளைகளுக்குச் செடிகள் மரங்கள் வைத்துப் பயிர் செய்வதில் விருப்பம் உண்டாகும்படி ஸ்கூல்களில் அவர்களுக்குப் போதிக்கவேண்டும் என்றார். எந்த விவசாயி தன் நிலத்தை முதல்தரமாய்ப் பயிர் செய்கின்றானோ அவனுக்கு வெகுமதி கொடுக்கவேண்டும் என்றார். அங்கங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விவசாய சங்கங்களுக்கு இப்படி யெல்லாம் செய்வது முக்கிய அலுவலா யிருக்கவேண்டும் என்று சொல்லித் தமது ப்ரசங்கத்தை முடித்தார்.

சுதேசமித்திரன்.

10 DEC 1910 MADRAS

REVIEW OF THE PRESS.

பத்திரிகை ஆராய்ச்சி.

SHELLS AND OYSTERS.

சங்கு, கிளிஞ்சில், சிப்பி, பலகறை.

இவ்விஷயமாக, ஜூலைமாத "விவேகபோதினி" யில் ஒரு வியாசம் காணப்படுகிறது.

சங்கு, கிளிஞ்சல், சிப்பி, பலகறை முதலியவைகள் கடலில் உற்பத்தியாகின்ற பலவிதமான பூச்சிகளின் கூண்டுகளே ஒழிய வேறல்ல. சிப்பி, சங்கு, நத்தை முதலான பூச்சிகள் பல உயிருள்ளவைகளாகவே அலையோடு கரையில் அடித்துக்கொண்டு வரும். மறுபடி அலையோடுகூடவே திரும்பிப்போய் விடும். இந்தப் பூச்சிகள் இறந்து அழிந்துபோனால் இவைகளின் மேலோடுகளாகிய சிப்பி முதலியவைகள் மாத்திரம் தனியே கரையில் வந்து ஒதுங்கும். மகாராஜாக்கள் தரித்துக்கொள்ளும் விலையுயர்ந்த முத்துக்கள் ஒருவகை கடற்பூச்சியின் வயிற்றிலேதான் உண்டாகின்றன. சோழி, சங்கு, பலகறை முதலானவைகளால் இந்த தேசத்திலும் மற்றதேசங்களிலும் எளியவர்கள் பலவிதமான ஆபரணங்கள் செய்து அணிந்துகொள்ளுகிறார்கள். மாடு குதிரை முதலியவைகளுக்கும் அவைகளால் அலங்காரம் செய்கிறார்கள். மிகவும் விசித்திரமாயிருக்கிற சிலவற்றை, விநோதப் பொருட்காட்சி சாலையில் வைத்து எல்லாரும் கண்டு வியக்கும்படி செய்கிறார்கள். பூர்வகாலத்தில் பலகறையை நாணயமாக உபயோகப் படுத்தியதாகவுந் தெரிகிறது.

ECONOMY.

சேட்டு.

இதைப்பற்றி "சக்ரவர்த்தினி" என்னும் பத்திரிகையில் ஒரு சிறிய வியாஸம் இருக்கிறது.

வரவுக்குத் தகுந்த செலவு செய்வது செட்டு. அதற்கு சத்தியம், நீதி, ஒழுங்கு, மரியாதை, பொறுமை, தன்னடக்கம், பிறநேசம், நல்லறிவு சுறுசுறுப்பு, விடாமுயற்சி என்னும் பத்துகுணங்களும் இருக்கவேண்டியது அவசியம். செட்டால் அநேக நன்மைகள் உண்டாகும். அது மனிதனின் தரித்திரத்தை நீக்கும்; நீக்காவிட்டாலும் தரித்திரத்தின் கொடுமையைத் தணிக்கும். வேலைசெய்ய முடியாத தள்ளாத காலத்தில் மீதிவைத்த பணம் உதவி செய்யும். மனதுக்கு சமாதானத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். வீணாசை, கோபம், அகங்காரம் முதலிய கெட்ட குணங்களை அகற்றி பந்து ஜனங்களுடைய சிநேகத்தையும் அபிமானத்தையும் விருத்தி செய்யும். உலகத்தில் புகழையும் கீர்த்தியையும் உண்டாக்கும். செட்டாய்ச் செலவு செய்யும் குணம் புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரீகளுக்கே அதிகமாய் இருக்கவேண்டும். ஏனென்றால் இல்லறம் நடத்துவதில் புருஷர்களை விட ஸ்திரீகளுக்கே பொறுப்பு அதிகம்.

GUINEA GRASS.

கினிப் புல்.

இதைப்பற்றி "தென்னிந்தியா விவஸாயம்" என்னும் பத்திரிகையில் ஒரு சிறு வியாஸ மிருக்கிறது. இந்தப் புல் அயல் நாட்டிலிருந்து வந்து நம்முடைய தேசத்தில் பொருந்திப் போயிற்று. ஜலாதாரமுள்ளவர்கள் இந்தப் புல்லை வாய்க்கால், வரப்பு, வேலி முதலிய இடங்களில் பயிர்செய்து மாட்டுக்குத் தீவனமாய்ப்போடலாம். இதைக் கேழ்வரகு நடுவதுபோல 2½ அடி சதுரத்துக்கு ஒரு செடியாக நடுவது உத்தமம். ஜலம் பாய்ச்சினால் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை அறுக்கலாம். ஜலமில்லாமல் போய்விட்டால் செத்துப் போகாமல் சருகு மாதிரி இருக்கும். "1875-ம் வருஷம் ஸெப்டம்பர் மாஸம் ஸைதாப்பேட்டையில் நட்டபுல், 1877ம் வருஷம் மே மாஸத்தில் வரண்டு காய்ந்து தீய்ந்து போயிற்று. மறு மாஸம் பெய்த மழையில் ஒவ்வொரு முதலும் தவறாமல் துளிர்த்து, ஜூலை மாஸத்தில் இரண்டு ஏக்ராவில் 5566 ராத்தல் புல் கிடைத்தது. மறு இரண்டு மாதத்தில் 12000 ராத்தல் புல் கிடைத்தது." ஒரு வருஷத்திற்கு 6 தடவை அறுக்கலாம். 3 வருஷம் ஒரே இடத்தில் தழைத்துவரும். வருஷா வருஷம் எருப் போடுவது நலம். மாடுகளுக்கு முதலில் கழிச்சல் உண்டாகலாம். ஆனால் நாளாக நாளாக ஒத்துப் போய்விடும். இந்தப் புல்லைத் தின்னால் மாடு ஜாஸ்தி பால் கறக்கும். ஆடுகளுக்கு நல்ல தீவனம். வெயில் காலத்து மேய்ச்சலுக்கு இதுபோல வேறொன்றும் கிடையாது.

GATHERING SEEDS AND PRESERVING THEM.

விதை பொறுக்கல் விதை காப்பாற்றுதல்.

இந்த விஷயமாக ஜூன் மாதத்துக் "கமத்தொழில் விளக்கம்" இல் ஒரு வியாஸம் காணப்படுகிறது. ஒவ்வொரு வகைதானியத்திலும் முதிர்ந்து, பருத்து, நோவற்று இருக்கும் தானியங்களை அறுவடை காலத்தில் விதைக்கென்று பொறுக்கி எடுத்து வைக்க வேண்டும். முற்றாத விதைகளையும் ஒன்றாய்க் கலந்து விடக்கூடாது. ஏனென்றால் பயிர் ஒரே காலத்தில் மாசூலுக்கு வருவதில்லை. சில கதிர்களில் தானியம் முற்றி அறுவடையாகுங் காலத்தில் சில தானியங்கள் முற்றாமலிருக்கும். இதனால் குடியானவனுக்குக் கஷ்டமும் நஷ்டமும் நேரிடும். விதைகளைப் பூச்சி தின்றுவிடாமல் பிரதி அமாவாசிகளிலும் உலர வைக்கவேண்டும். சோளம், பயறு, மொச்சை தட்டை, எள் முதலிய விதைகளைப் பூச்சிகள் கெடுத்துவிடுகின்றன. விதைகளைக்கோணிச் சாக்கில் வைத்திருந்தால் பூச்சிகளால் கெட்டுப்போவதில்லை. "பானைகளில் சுண்ணாம்பு நீறை உள்ளே பூசி வெய்யிலில் நன்றாய்ப் பானையைக் காயவைத்து விதையைப்போட்டு சாம்பற் பொடியை ஒன்றரை அங்குலகனம்மேலே தூவி, பிறகு சாம்பல் கொஞ்சம் தூவி, சுண்ணாம்பு நீர் ஓர் தான்ய கனம்மேலே தூவி, பிறகு சாம்பல் கொஞ்சம் தூவி, வைக்கோலால் தெளித்து சாணி பூசி விட்டால் பூச்சிகளால் விதைகள் கெடுதலாக இடமிராது." நெல் விதையை வைக்கோல் புரியில்கோட்டைகட்டி வைக்கலாம். மக்காச்சோளத்தைக்கொஞ்சம் தாரு (மரங்களுக்குப் பூசும் கறுப்பு நிறமான கீலு) பூசிக் காப்பாற்றினால் பூச்சி அண்டாது. தவிர விதைத்தபின் காக்கைகள் விதைகளைப் பொறுக்கித் தின்று விடா. "காப்பர் ஸல்பேட்" என்று சொல்லப்படும் மயில் துத்தத்தை மண்பாண்டத்தில்போட்டுக் கரைத்துவிதைப்பதற்குமுன் சோள விதையை 10 நிமிஷம் ஊறவைத்துக் கழுவி விதைத்தால் பயிர் அதிக நோவுக்கு உள்ளாகாது. சோளவிதை விதைப்பதற்குப் போதுமான ஈரம் நிலத்தில் இல்லாவிட்டால் முதல் நாள் ராத்திரி விதையை சாணிப்பாலில் ஊறப்போட்டு மறுநாள் விதைக்கலாம். மொச்சை துவரை முதலிய விதைகளை செம்மண்கரைத்த ஜலத்தில் நனைத்து எடுத்து உலர்த்தி வைத்தால் அவைகள் கெட்டுப்போக மாட்டா. பருத்திக் கொட்டையை சாணத்தில் தேய்த்து உலரவைத்துக் காப்பாற்றலாம். கொஞ்சம் மயில் துத்தத்தை சோள விதையுடன் கலந்து விதையைக் காப்பாற்றலாம். அதிகமாய்ச் சேர்த்தால் விதை முளைக்கும் சக்திகுறையும். ஆதலால் இதை ஜாக்கிரதையுடன் உபயோகிக்கவேண்டும்.

THE USE OF SALT IN CATTLE FOOD.

மாட்டுத் தீனியில் உப்பின் உபயோகம்.

எல்லா ஜீவராசிகளின் சரீரத்திலும் உப்பு ஒரு முக்கியமான அம்சம். ஆகையால் மனிதன் உப்பைச் சேர்த்துக்கொண்டு சாப்பிடுவது போல ஆடுமாடுகளுக்கும் உப்பைச் சேர்த்தே தீனி வைப்பது நலம். இது விஷயமாய் ஜூலை மாஸத்துக் "கிருஷிகனில்" ஒரு சிறிய வியாஸம் இருக்கிறது. அநேகம்பேர்கள் ஒருமாடு, இன்னொரு மாட்டையோ அல்லது தன் கன்றையோ, நக்குவதைப் பார்த்திருக்கலாம். சில மாடுகள், வேறு மாடுகள், கன்றுக்குட்டிகள் முதலானவைகளின் மூத்திரத்தைக் குடிப்பதையும் பார்த்திருக்கலாம். இந்தக் குறிகளால் மாடுகளுக்கு உப்பு வேணுமென்று ஏற்படுகிறது. மாடுகளுக்குத் தீனிவைக்கும்போது கொஞ்சம் உப்பையும் யோட்டு வைப்பது அனேக வீடுகளில் வழக்கமாயிருக்கிறது. தீனியோடு உப்பைச் சேர்த்துக் கொடுப்பதினால், தீனி ருசியாகி மாடுகள் அதை நன்றாய்த் தின்னும். தவிர உப்பு மாட்டின் ரத்தத்தை சுத்திசெய்யும். மலம் ஜலம் தினமும் நன்றாய்க் கழிபடும். அதனால் மாடுகளுக்கு வியாதி விசேஷமாய்த் தாக்காது. பசு மாட்டிற்கு தீனியோடு உப்பைக் கலந்து போட்டால் பால் விருத்தியாகிறதாம். மாடுகளின் வயிற்றிலுள்ள பூச்சிகள் அடிபட்டுப் போம். இன்னும் ஒரு முக்கியமான விஷயமும் இருக்கிறது. "அனேக மலட்டுமாடுகளுக்கு உப்பைத் ஜீவனத்தில் சேர்த்துக் கொடுத்ததினாலும் பாசைப் புல் போஷணை செய்ததினாலும் மலடு நீங்கி கர்ப்பந்தாங்கி கன்று போட்டிருக்கின்றன." உப்பைச் சேர்த்து வந்தால் ஆடுகளுக்கு "ஊழ்த்தை நோய்" என்னும் வியாதி வாராது. சாதாரணமாய் மாடுகளுக்கு ஒரு ரூபாய் எடை முதல் இரண்டு ரூபாய் எடை வரையில் உப்பைக் கலந்து கொடுக்கலாம்.

VEGETABLES AND FRUITS.

காய்கறிகளும் பழங்களும்.

டாக்டர் பி. வி. குப்புசாமி என்பவர் ஜூன்மாத "சக்ரவர்த்தினி" யில் இந்த விஷயமாக ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார்.

காய்கறிகளும் பழங்களும் நான்கு வகைப்படும். அவையாவன ; (1) சர்க்கரை சம்பந்தமுள்ளவைகள் (2) பசுமைநிற முள்ளவைகள். (3) அதிக ஜல சம்பந்த முள்ளவைகள். (4) தொடுசுவையுள்ளவைகள். (அதிக புளிப்பும் உறப்புமாயிருந்து நாக்கில் ஜல மூறும்படிச் செய்யும் சுவைக்குத்தொடுசுவை என்று பேர்). உருளைக்கிழங்கு, முள்ளங்கி, ஈர வெங்காயம், சர்க்கரைவள்ளி முதலானவைகள். சர்க்கரை சம்பந்த முள்ளவைகள். இவைகளும் வாழைப்பழம், கரும்பு முதலியவைகளும் சிலாக்கியமான ஆகாரம். கத்தரிக்காய், வெண்டைக்காய், அவரைக்காய், கொத்தவரங்காய், முதலியவைகள் பசுமைநிறமுள்ளவை. இவைகள் தேகத்திற்குப் பலத்தைக்கொடுக்கும். வெண்டைக்காயில் நிபாக்கினி என்று சொல்லப்படும் "பாஸ்பாஸ்" அதிகமாக இருப்பதால் அதை அதிகமாகச் சாப்பிடலாம். வெள்ளரிக்காய், பூசுணிக்காய், கொம்மட்டி, பலாக்காய், மாங்காய், பலாப்பழம், மாம்பழம், கொடிமுந்திரிப்பழம் முதலியவைகள் அதிக ஜல சம்பந்தமுடையன. புளியங்காய், புளியம்பழம், எலுமிச்சங்காய், மஞ்சள், பச்சைக்கொத்து மல்லி, கருவேப்பிலை, மிளகு, ஓமம், மிளகாய் முதலியவைகள் தொடு சுவையுள்ளவைகள். பாதி பழுத்த காய்களையும், அதிகம் பழுத்த பழங்களையும் உட்கொள்ளக்கூடாது. அஜீரணமும், வயிற்றுப் போக்கும் உண்டாகும். நீரழிவு உபத்திரவத்தால் கஷ்டப்படுகிறவர்கள் காய்கறிகளையும், பழங்களையுந் தள்ளிவிடவேண்டுமாம். மலச்சிக்குகளால் கஷ்டப்படுகிறவர்கள் ஏராளமாக காய்கறிகளையும், பழங்களையும் கீரைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். வெகு நாளாய் காய் கறிகளை உபயோகித்து வந்தவர்கள் திடீரென்று அவைகளின் உபயோகத்தை நிறுத்தக்கூடாது. அப்படிச் செய்தால் ரத்தம் அசுத்தப்பட்டு சொரி, கரப்பான், முதலான வியாதிகள் உண்டாகும்.

VACCINATION.

அம்மை வைத்தல்.

சென்னப்பட்டணம் முதலிய பெரியப்பட்டணங்களில் குழந்தை பிறந்த ஆறு மாஸத்துக்குள் அம்மை குத்திவிட வேணுமென்றும் அப்படிக் குத்தாவிட்டால்பெற்றோர்கள் தண்டனைக் குள்ளாவார்களென்றும் முனிஸிபாலிட்டியார் கட்டாயப் படுத்துவது பட்டண வாஸிகள் எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். கிராமாந்தரங்களிலும் கிராம முனிசீபைக்கொண்டு சிபார்சு செய்யச்சொல்லி அம்மை போட்டாதவர்களுக்கு அம்மை வைக்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்து வருகிறார்கள். அம்மை குத்துவது என்பது என்ன? அதை யார் கண்டுபிடித்தது? அதனால் என்ன பிரயோசனம்? என்னும் இந்த விஷயங்களைப்பற்றி ஜூன் மாஸத்து "நல்லாசிரியனில்" வி. கே. நாராயணஸாமி அய்யர் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார்.

18 வது நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் க்ளஸ்டர்ஷயர் மாகாணத்தில் பசுக்களுக்கு வைசூரி கண்டிருந்த சமயத்தில் பசுவின் மடியில் எழும்பியிருந்த முத்துகள் பால் கறக்கும்பொழுது உடைந்து பால் கறப்பவர்களுடைய விரல்களில் பட்டு முத்துகள் எழும்பி வந்ததினால், அவர்கள் தங்களுக்கு வைசூரியாகிய பெரிய அம்மை வருகிறதில்லை என்று உறுதியாகச் சொல்லி வந்தார்கள். அந்தக் காலத்தில் எட்வர்ட் ஜென்னர் என்று ஒரு வைத்திய பண்டிதர் இருந்தார். பால் கறப்பவர்கள் சொல்லிய விஷயம் ஷை பண்டிதர் காதில் படவே, பெரியம்மை போட்டியவர்களின்மேல் வைசூரி நீரைப் பிரயோகம் செய்து பரீட்சித்து, அவர்களுக்கு வைசூரி நோய் வாராதிருக்கக்கண்டார். உடனே, அவர் பசுவின் வைசூரி நீரை மனிதர்மேல் செலுத்தி, எழும்பும் முத்துக்களின் நீரை மற்ற மனிதர்கள்மேல் செலுத்துவதனால் முத்துகள் உண்டாகுமென்றும், அப்படி உண்டான பின் அவர்களுக்கு வைசூரி வாராதென்றும் வெளிப்படுத்தினர். இந்த வைசூரிநீர் பசுவினது இரத்தத்தில் வேறுபட்டு வைசூரியை முறிக்கும் சக்தியை உடையதாகிறது.

காலஜீ கிராமத்தில், டாக்டர் ஜென்னர் பசு வைசூரிப் பிரயோக விஷயமாய் அனுஷ்டித்த முறை பல மாறுபாடுகளை அடைந்தது. இப்போது பசு வைசூரி நீரைக் கன்றுக்குட்டிகளின் மடிகளின் மேல் பிரயோகித்து, கன்றுக்குட்டிகளின் மடிகளிலிருந்து உண்டாகும் வைசூரி நீருடன் க்ளிஸரைன் லானோலைன் முதலிய சரக்குகளைச் சேர்த்து, அது சீக்கிரத்தில் வீர்யமற்றுப் போகாமலிருக்கும்படி சிறிய ஈயக் குழாய்களில் அடைத்து, மாகாணங்களின் பல பாகங்களுக்கும் அனுப்பி அம்மை குத்துவதை ஜனங்களுள் பரவச் செய்கிறார்கள்.

இதுவரையில் ஒருதடவை அம்மை வைத்த பிறகு ஏழு வருஷம் வரையில் அதன் வீர்யம் தேகத்தில் இருக்குமென்று எண்ணி வந்தார்கள். இப்போது சில ஸமயங்களில் அம்மை வைத்தும் இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகு பெரியம்மை வார்க்கிறதென்று கண்டு, இரண்டாம் தடவையும் அம்மை வைப்பது நலமென்று சொல்லுகிறார்கள்.

பசு வைசூரிப்பிரயோகமான பிறகு ஒருவனுக்குப் பெரியம்மை வார்த்தாலும் அது வேகமற்று மிகவும் அற்பமாயிருக்கும். சில மணிகள் கண்டாலும் பிராணனுக்கு அபாயம் நேரிடுவது மிகவும் அபூர்வம்.

பெரியம்மை என்னும் இந்தக்கொடிய ஒட்டுவாரட்டி வியாதியை நிவர்த்தி செய்ய மேற்கூறிய படி தகுதியான சாதகங்களிருந்தும், ஜனங்கள் அறிவின்மையால் இவ்வியாதியை மாரியாத்தாள் என்று நம்பி, வேண்டிய பூஜை, பலி முதலிய காரியங்களில் அதிக பணம் செலவுசெய்து, தங்கள் கோரிக்கை நிறைவேறாமல் ;அநேகர் இறந்துபோகிறார்கள்.

இப்போது ஐரோப்பா தேசங்களில் கட்டாயப்படுத்தி துரைத்தனத்தார் அம்மை குத்துவதால் குடிகளுக்கு அம்மையால் நேரிடும் மரணம் வருஷந்தோறும் குறைந்து வருகிறது. நமது தேசத்தார் ஐரோப்பியர்களினின்றும் நடை, உடை, பாவனை, ஆசாரம், மதம் முதலியவற்றில் வேறுபட்டிருப்பதால் இங்கே கிராமாந்தரங்களில் பலாத்காரம் செய்யாமல் பெரிய பட்டணங்களில் மட்டும் கட்டாயப்படுத்தி வருகிறார்கள்.

குழந்தைகளுக்கு, பிறந்த ஆறாம்வாரம் முதல் ஆறு மாதத்திற்குள்ளாக பல்மாந்தம் காணாமுன், அம்மை வைப்பது உத்தமம். ஆனால் சொரி, சிரங்கு முதலிய பிணிகள் கொண்டிருக்குங் காலத்தில் வைக்கக் கூடாது.

THE USES OF THE ILUPPAI FLOWER.
இலுப்பைப் பூவின் உபயோகங்கள்.

இவ்விஷயமாகப் "பிரபஞ்ச தாரகை" என்னும் தமிழ்ப் பத்திரிகையில் ஒரு நிருபர் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார்.

"ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை" என்று ஒரு பழமொழி வழங்குகிறது. இதன் கருத்து என்னவென்றால் இலுப்பைப் பூவைச் சேகரித்து அதன் ரசத்தை எடுத்துக் காய்ச்சினால் கெட்டிப்பட்டு சர்க்கரையாகி விடும்; அதை உபயோகப் படுத்திக் கொள்ளலா மென்பதே. இந்தச் சர்க்கரையைச் சுத்தப்படுத்தி வெள்ளைச் சர்க்கரையாகவும், கற்கண்டாகவும் செய்துகொள்ளலாம். இந்தக் கற்கண்டு, மருந்துகளுக்கு உபயோகப்படும் சீனாக் கற்கண்டுக்குச் சமானமானதென்று சிலர் நினைக்கிறார்கள். இந்தப் பூவின் இரண்டாவது உபயோகம் இதிலிருந்து ஒரு வகை சாராயம் காய்ச்சலாம். இந்தச் சாராயம் மேல் நாட்டிலிருந்து வரும் பிராந்திகளுக்குச் சமானமானதென்றும், முன்னொரு சமயம் கவர்ன்மெண்டாரே இலுப்பைப்பூ ரசத்தால் சாராயங் காய்ச்சினார்களென்றும், பெருங் குடிகாரர்கள் கூட இந்தச் சாராயத்தை மெச்சிக் கொண்டார்களென்றும், சிலர் சொல்லுகிறார்கள். மூன்றாவதாக இலுப்பைப் பூவில் எண்ணெய் ஸத்து இருக்கிறதென்றும், அதிற் சில கலப்புகள் சேர்ந்தால் தேங்காய் எண்ணெயைப்போல் விளக்கெரிக்கவும் பலகாரஞ் செய்யவும் உபயோகிக்கலாம், என்றும் சிலர் சொல்லுகிறார்கள். இந்த அம்சங்களையெல்லாம் சோதித்துப் பார்த்து நிர்த்தாரணிக்கவேண்டும். இப்படிச் செய்து பார்ப்பதில் அதிக செலவு நேரிடாது. இந்த மாதிரித் தொழில் ஏழைகளுக்குப் பிழைப்பை உண்டாக்கும்.

A COLORLESS INK.
ஒரு நிறமில்லாத மசி.

ஆரஞ்சுப் பழ ரஸத்தில் பேனாவைத் தோய்த்து வெள்ளைக்காகிதத்தின் மேல் எழுதவேண்டும். எழுத்துக்கள் உலர்ந்தவுடன்பார்த்தால் ஒன்றும் எழுதாத வெறுங்காகிதம் போலவே காணப்படும். ஆனால் ஒரு விளக்கேற்றி சூடுபடும்படியாய் காகிதத்தை மேலே பிடித்தால், எழுத்துக்கள் கறுப்பாய் சாதாரண மசியால் எழுதினதுபோல் காணப்படும். ரகஸியமாகக் கடிதம் எழுதவேண்டுமானால் இந்தமாதிரி செய்வதில் யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை.

THE BOYS' SECTION.
சிறுவர் பகுதி.

False Limbs for Animals.

மிருகங்களுக்குப் பொய் அவயவங்கள்.—பல இடங்களில் தங்கள் அவயவங்களை இழந்துவிட்ட மிருகங்களுக்குப் பொய் அவயவங்களைச்செய்து அமைக்கும் வழக்கம் இப்போது பிரபலப்பட்டுவருகிறது. ப்ரெஸீல் தேசத்தில் ஒரு பிரபு காலையிழந்துவிட்ட தமது அருமையான நாய்க்கு மரக்கால்செய்து பூட்டியிருக்கிறார். காலஞ்சென்ற கர்னல் நார்த் என்பவர் தம்முடைய வேட்டை நாய்க்கு ஒரு பொய்க்கால் அமைத்தார். லார்ட் டென்மண் என்பவர் தமது எருதுக்கு ஒரு மரக்கால்போட்டிருக்கிறார்.

Noted Snuffers.

பேர்பெற்ற பொடி போடுகிறவர்கள்.—உலகத்திலே பொடி போடுவதில் பேர்பற்ற தேசம் சீனா. போர்ச்சுகல் தேசத்தாரிடத்திலிருந்து சீனாவிலுள்ள பிரபுக்கள் உயர்ந்தவகையான நசியம் தருவிக்கிறார்கள். ஒரு பவுன் எடையுள்ள பொடி 600 அல்லது 700 ரூபாய் கொடுத்து வாங்குவார்கள். இதை வைத்துப் பாதுகாக்க 3,000 ரூபாய் வரையில் செலவிட்டு உயர்ந்த கல்ஜாடிகள் செய்வார்கள். கல்ஜாடியில் அடைத்துவைத்துப் பாதுகாக்கப்படுகிற நசியம் வருஷந்தோறும் விலை அதிகப்படுமாம். ஒரு விசேஷித்த சமயத்தில் ஒரு பவுன் நிறையுள்ள மூக்குப் பொடி 30,00,000 ரூபாய்க்கு விலைபோனதாகச் சொல்லப்படுகிறது.

Marry when You Earn.

வரும்படி ஏற்படுத்திக்கொண்டு மணம் செய்.—விவாகம் செய்துகொண்டு கூடுமான வரையில் சுகஜீவனம் செய்வதற்கு எவ்வளவு வரும்படி இருந்தால் ஒருவனுக்குக் கட்டிவரும் என்பது ஒரு பெரிய கேள்வி. இது விஷயமாய் அமெரிக்காவிலுள்ள ஒரு பாதிரி மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார். அவர் பார்த்து ஒரு ஸ்திரீ புருஷனுக்கு இவ்வளவு வரும்படி வேண்டுமென்று சொன்னால் அந்த வரும்படியை அடைவதற்கு அவன் மார்க்கம் செய்து கொண்ட பின்பே விவாகஞ்செய்து கொள்ளவேண்டுமாம். அவ்வளவு வரும்படி தனக்கு வருகிறதென்பதை அவன் காட்டாத வரையில் அவனுக்கு விவாகஞ்செய்ய இந்தப் பாதிரியார் இசைகிறதில்லை. தரித்திர தசையில் விவாகம் செய்துகொண்டால் அந்த விவாகம் சீக்கிரத்தில் ரத்துசெய்ய நேரிடுகிறதென்றும், விவாகங்களை ரத்துசெய்து தமக்கு அலுத்துப்போய் விட்டதென்றும் இந்தப் பாதிரியார் மிகவும் பரிதாபப் படுகிறார்.

A mean Fellow.

ஒரு அற்பப் பயல்.—அமெரிக்காவில் ஹானிபல் என்னும் நகரத்தில் ஒரு குடியானவன் தன்னுடைய மாப்பிள்ளைக்கு ஒரு பசுமாட்டில் பாதியை விற்றானாம். முன் பாகத்தை மட்டும் விற்றதாகச்சொல்லி, கறந்த பாலை முழுவதும் தானே எடுத்துக்கொண்டு வந்தானாம். இது போதாமல், மாப்பிள்ளையைக் கொண்டே மாட்டிற்கு தீனி முழுவதையும் போடச் சொல்லி, தினம் இரண்டு தடவை தண்ணீரும் காட்டும்படி செய்தானாம். கடைசியாய் ஒருநாள் கிழவனை மாடு முட்டினதால் அதற்காக மாப்பிள்ளை தனக்கு 150 ரூபாய் நஷ்டம் கட்டிக்கொடுக்கவேணுமென்று வியாஜ்யமும் போட்டானாம். உலகத்தில் இவனைவிட வேறு அற்பன் உண்டோ? ஒருக்கால் மாப்பிள்ளை செய்துகொண்ட வியாபாரத்தின் அசட்டுத்தனத்தை அவனுக்கு நன்றாய்க் காண்பிக்கும் படிக்கு மேலே சொல்லியபடி யெல்லாம் மாமனார் செய்தான் போலும்!

Gift of Coffin.

சவப்பெட்டி வெகுமானம்.—சீனா தேசத்தில் தாய் தந்தையர்களுக்கு ஐம்பத்தைந்தாவது பிராயம் நடக்கையில் அவர்களுடைய பக்ஷமுள்ள குமாரர்களும் குமாரத்திகளும் ஒன்றுகூடி இரண்டு சவப்பெட்டிகள் வாங்கி, தலைக்கொன்று காணிக்கை கொடுப்பார்களாம். அந்தப்பெட்டிகளைக் கொடுக்கையில் இன்னும் பல வருஷங்களுக்கு அவர்கள் ஜீவனுடன் இருக்கும்படியாகத் தங்களுக்கிருக்கும் ஆசையையும் வெளியிடுவார்கள். சாவு வருகையில், அந்தப்பெட்டிகள் என்ன கருத்துக்காகக் கொடுக்கப்பட்டனவோ, அதற்காக அவைகள் உபயோகிக்கப்படும். சீனா தேசத்தில் பல வீடுகளில் சவப்பெட்டிகளைக் காணலாம். அவைகள் எவர்களுக்காகக் குறிக்கப்பட்டனவோ,

அவர்கள் இறந்தபின் மாத்திரம் அவர்கள் ப்ரேதங்களை அவைகளில் வைக்கவேண்டிய தானபடியால், அதற்குமுன் அவைகள் உப்புப் பெட்டிகளாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

The Teacher and the Student.

உபாத்தியாயரும் மாணாக்கரும்.—ஒரு பள்ளிக்கூடத்தில் பையன்களைப் பரீக்ஷைசெய்ய வந்த இன்ஸ்பெக்டரானவர் முதல் மூன்று மாணவர்களைப்பார்த்து உங்களுடைய உபாத்தியாயரின் குணம் எப்படியிருக்கிறதென்று கேட்க, முதல்பையன் கல்லும் கறடுமாய் இருக்கிறதென்றான்.

இரண்டாவது பையன், முள்ளும் முறடுமாயிருக்கிறதென்றான்.

மூன்றாவது பையன், வேரும் விறகுமாயிருக்கிறதென்றான்.

இதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் மூன்று பையன்களைப்பார்த்து, இதன் தாத்பரியம் என்ன, விளங்கச் சொல்லுங்கள் என,

முதல்வன், கல்லும் கறடுமென்பது கற்கண்டு கட்டி என்றும், அதைப்போல் இனிப்பாய் போதிக்கிறார் என்றான்.

இரண்டாவது பையன் :—முள்ளும் முறடும் என்பது பலாப்பழத்தைச் சொல்வதென்றும். பலாப்பழம் எப்படி மேலுக்கு முள்ளும் முறடுமாயிருந்து உள்ளே தித்திப்பானசுளையை உடைத்தாயிருக்கிறதோ அப்படி உபாத்தியாயர் பார்வைக்கு கோபமுள்ளவர் போலிருந்தாலும் நல்ல குணத்தையுடையவர் என்றான்.

மூன்றாவது பையன். வேரும் விறகுமென்பது கரும்பைச் சொல்வதென்றும், கரும்பு எப்படி ருசிகரமாயுள்ளதோ அப்படி எங்கள் உபாத்தியாயர் இனிமையாய் போதிக்கக் கூடியவர் என்றான்.

மாணாக்கர்களே! இப்பையன்களின் புத்தியைக் கவனித்தீர்களா ?

A Curious Insect.

ஒரு ஆச்சரியப் பூச்சி.—சிலந்திப் பூச்சியை எங்கும் காணலாம். இந்தப்பூச்சி அதன் எச்சிலாலேயே நூல் நூர்த்து வலை பின்னி அதில் வசிக்கும். இது நம்மூர் எங்கும் சாமான்யமாய்க் காணும் பக்ஷி யென்று மட்டும் நம்மவர்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்களே யல்லாமல் இதைப்போன்ற வேறு பூச்சிகளும் இருக்கின்றன என்பதை அவர்கள் அனேகமாய்த் தெரிந்து கொண்டிருக்கமாட்டார்கள். இப்போது மானிடச் சிலந்தியென்னும் ஒருவகைப் பூச்சி வந்திருக்கிறது. மைசூர் ப்ரிகேட் ரோட் 6-ம் நெ. வீட்டில் இந்தப் பூச்சி வைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பலர் ஆச்சரியத்துடன் பார்த்து வருகிறார்கள். கழுத்துக்குமேல் மனுஷ்யனுக்கு என்னென்ன உறுப்புகள் இருக்கின்றனவோ அவையனைத்தும் இந்தச் சிலந்திக்கு இருக்கின்றனவாம். இதன் சொந்தக்காரர் இந்நூதனமான பூச்சிக்கு அபாரமான விலை கொடுத்து அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிலுள்ள காலி போர்னியாவிலிருந்து கொண்டு வந்தாராம்.

A Pun.

ஒரு சாதுர்ய வார்த்தை.—சுமார் 30 வருஷங்களுக்கு முன் ஸ்ரீமத்-மாம்பழக் கவிச்சிங்கநாவலரவர்கள் ஒரு முறை மதுரை ஜில்லா ராமநாதபுரத்தில் பொன்னுசாமித் தேவர்களிடம் சென்று சிலநாள் தங்கியிருந்தார். தேவர் அவர்களும் நாவலர் அவர்களும் அத்தியந்த ஸ்நேகிதர்கள். ஒருநாள் தேவர் அவர்கள் கவிராயரைத் தம் அரண்மனையில் எண்ணெய் தேய்த்துக்கொள்ளும்படிச் சொல்லித் தம் அரண்மனையில் வழக்கமாக எண்ணெய் தேய்க்கும் மல்லக செட்டிக்கு உத்தரவு செய்தார்கள். மல்லக செட்டி, கவிராயருக்கு எண்ணெய் தேய்க்கச் சென்று கவிராயரிடம், தெரிவித்துத் தேய்க்க ஆரம்பிக்கும் சமயத்தில், மேற்படி மல்லக செட்டியைக் கவிராயர் பார்த்து, "நீ எனக்கு எண்ணெய் தேய்க்க உன்னுடைய இரண்டு கைகள்பற்றாது, உன்னுடைய எஜமானராகிய தேவர் அவர்களிடம் சொல்லிவிட்டுவா" என்று அனுப்பினார். உடனே மேற்படி மல்லக செட்டி போய் "மகாராஜாவே கவிராயருக்கு எண்ணெய் தேய்க்கப்போனபோது, அவர் இரண்டு கை பற்றாது என்று சொல்லுகிறார்" என்று விண்ணப்பித்தான். மகாராஜாவானவர் சாமார்த்தியமுள்ள வித்வானாகையால், அதிக சந்தோஷப்பட்டு அந்த மல்லக செட்டியைப் பார்த்து "பலகை" எடுத்துக்கொண்டு போய் கவிராயருக்குக் கொடுக்கும்படி ஆஞ்ஞாபித்தார். (பலகை என்பது பலகைக்கும் பல கைகளுக்கும் பொருந்துவது கவனிக்கத் தக்கது.)

THE LADIES' SECTION.

ஸ்திரீகள் பகுதி.

The Submerged Half.

அமிழ்ந்து கிடக்கும் பாதி.—அல்லது இந்தியப் பெண்களின் நிலைமை.

"நைன்டீத் ஸென்ச்சுரி" என்னும் லண்டன் பத்திரிகையில் ஸெயின்ட் நிஹால்சிங் என்னும் தேசாபிமானி பெண் கல்வியின் அவசியத்தைப்பற்றி எழுதியிருக்கிறார்.

"அமிழ்ந்து கிடக்கும் பாதி" என்றால் அஞ்ஞானத்தில் மூழ்கி தேச கைங்கரியத்துக்கு உதவாமல் கிடக்கும் இந்திய ஜனத்தொகையில் பாதியான ஸ்திரீகள் என்று அர்த்தம். சில நூற்றாண்டுகளுக்குமுன் இதர தேசத்தவர்கள் படைஎடுத்து வந்ததன்மேல் இந்தியாவில் அமைதி இல்லாமல் போயிற்று. அந்த ஸமயத்தில் பெண்களுடைய பந்தோபஸ்துக்கும், கற்புக்கும் பங்கம்வாராதபடி. அவர்களைச் சிறுவயதிலேயே விவாகம் செய்துகொடுத்து வீட்டுக்குள்ளேயே அடைத்து வைத்தார்கள். ஸமயோசிதமாய் செய்யப்பட்ட இந்த ஏற்பாடு தேசத்தின் துர் அதிர்ஷ்டத்தால் இன்று வரையிலும் சமுகத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. குழப்ப காலத்தில் பெண்களுக்கு ஆண் பிள்ளைகளின் துணை அவசியமாய் விடவே ஆண்கள், பெண்களைத் தங்களைவிடத் தாழ்ந்தவர்களென்று நினைக்க ஆரம்பித்தார்கள். பெண்களை அலட்சியமாய் நடத்திவந்ததுமன்றி பெண் குழந்தைகள் பிறந்தால் அவைகளைக் கொன்றும் வந்தார்கள். புருஷனோடு உடன்கட்டை ஏறுவதில் புண்ணியமுண்டு என்று ஸ்திரீகள் போதிக்கப்பட்டார்கள். ஆனால் இந்த வழக்கம் கவர்ன்மெண்டாரால் நிறுத்தப்பட்டு விட்டது. ஆனாலும் நிரந்தர வைதவ்யம் என்னும் வழக்கம் இப்போதும் உள்ள தாய் பாலிய விவாகத்தோடு சேர்ந்து இந்திய சமுகத்தின் கழுத்தைக் கட்டிக் கீழே தள்ளுகிறது.

இப்போது நாலுவயதுக்குள் விவாகமான குழந்தைகள் 200,000க்கு அதிகமும், ஐந்து முதல் ஒன்பது வரையில் விவாகமான குழந்தைகள் 2,000,000க்கு அதிகமும், பதினான்கு வயதுக்குள் விவாகமான குழந்தைகள் 3,000,000க்கு அதிகமும் இருக்கின்றன. இப்படிச் சிசுக்கள் மனைவிமார்களாகவும், தாய்மார்களாகவும், ஆகிவிடும்போது கல்வி பெறுவதெப்படி? கல்வியைத் தங்கள் குழந்தைகளுக்குப் புகட்டுவதெப்படி? 1901-ம் வருஷம் 2½ கோடி விதவைகள் இருந்தார்கள் என்று சொல்லும்போது யாருடைய மனந்தான் பகீரென்னாது!

1901-ம் வருஷத்து ஸென்ஸஸ் கணக்குப்படி இந்தியாவில் வைதவ்யமடைந்த பெண்களின் தொகை 258,91,936. இதில் 197,38,468 பேர் ஹிந்துக்கள்.

5	வயதுக்குட்பட்டவர்கள்.		19,487
10	”	”	95,798
15	”	”	275,862
20	”	”	522,867
25	”	”	938,725
30	”	”	1,432,608
35	”	”	2,267,361
40	”	”	2,068,491
45	”	”	3,770,495
50	”	”	2,264,038
		மொத்தம்.	13,655,732.

ஐம்பது வயதுக்குமேற்பட்ட விதவைகளின்தொகை மேலே கண்ட ஜாப்தாவில் சேர்க்கப்படவில்லை. இந்த ஜாப்தாவில் சீக்கியர், ஜெயினர், கிறிஸ்தவர், பௌத்தர், பார்ஸியர், மகமதியர் முதலிய பலவகை ஜாதியாருள் இருக்கும் விதவைகளில் தொகை சேர்ந்திருந்தும் அவர்களின் மொத்தத் தொகை ஹிந்து விதவைகளின் மொத்தத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு கூட ஆகவில்லை. இதனால் ஹிந்து மாதர்களின் தாழ்ந்த நிலைமைக்கு ஹிந்துக்களே பெரிதும் உத்தரவாதிகள் என்று ஏற்படுகிறதல்லவா?

பெண்களுக்குக் கல்வியிருந்தால் சமூகத் திருத்தம் எளிதாயும் விரிவாயும் கைகூடுமென்றும், ஆனால் பெண்களின் அறியாமையே ஆண்களின் ஊக்கமின்மைக்குக் காரணம் என்பது ஒப்புக்கொள்ளக் கூடியதல்லவென்றும் நிஹால்சிங் அபிப்பிராயப்படுகிறார். பெண்களுக்குக் கல்வி கற்பித்து அவர்களைப் பண்படுத்த ஊக்கத்தோடு சிலராவது முன் வரவேண்டுமென்றும், முன் வந்தாலும் முயற்சி கைகூடாதெனச் சொல்லுவது கேவலம் சோம்பேறிகள் சொல்லும் சாக்காகுமென்றும்சொல்லி, அதற்குதாரணமாக மிஸ்ஸஸ் லட்சுமிபாய் ரானடே தம் நாயகரான காலஞ்சென்ற ஜஸ்டிஸ் ரானடேயுடன் தாம் நடத்திய இல்வாழ்க்கையைப் பற்றி எழுதியிருக்கும் நூலை எடுத்துக்காட்டி அதைப் படித்துப்பார்க்க வேண்டுமென்கிறார். கடைசியாக இந்தியர்கள் தங்கள் சுயகாரியமே பெரிதென்றும், தங்கள் சுகமே பெரிதென்றும் நினைக்கிற வரையில், பெண்களின் தாழ்மைக்குப் பெண்களே காரணமென்று சொல்லுவது உண்மையாகாது என்று முடிக்கிறார்.

BROKEN CHINA.

உடைந்த பீங்கான்.—கோப்பை சாமான்கள் உடைந்து விட்டால் முட்டையின் வெள்ளைக்கருவில் நயமான சுண்ணாம்பு நீற்றைக் கலந்து பூச பிடிப்பு உண்டாகும். மண் பாண்டங்களுக்கும் இவ்வாறு செய்யலாம்.

OUR EMPRESS AND THE VAIKASI MONTH.

நம்முடைய ராஜாத்தியும் வைகாசியும்.—நம்முடைய புதிய அரசிக்கும் வைகாசி மாதத்துக்கும் ஒரு பொருத்தம் தொடர்ந்து வருகிறது. இந்த ராஜாத்தி பிறந்த மாசம் வைகாசி, விவாகம் செய்துகொண்ட மாசம்வைகாசி, ராஜாத்தியான மாசம் வைகாசி.

AN ORPHANAGE FOR MUHAMMADAN GIRLS.

மகமதியப் பெண்களுக்கு ஒரு ஆச்சிரமம்.—பம்பாயில், தாய் தந்தைகளை யிழந்து நாதனற்றுத் திரியும் மகமதியப் பெண்களை ஆதரிப்பதற்காக ஒரு ஆச்சிரமம் ஏற்படுத்தவேண்டுமென்னும் நோக்கத்தோடு பம்பாய்ப் போலீஸ் கமிஷனர் மகமதியர்களை உதவி செய்யும்படி கேட்டார். இந்த ஆச்சிரமம் ஏற்படுத்த லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் வேண்டுமாம். கமிஷனர் ஏற்கெனவே அறுபதாயிரம் ரூபாய் வரையில் வசூல் செய்துவிட்டார். இதைத் தவிர ஒரு கனவான் மாதம் ஒன்றுக்கு முன்னூறு ரூபாய் வீதம் கொடுத்துக்கொண்டே வருவதாக வாக்களித்திருக்கிறாராம். பன்னிரண்டு பெண்களை வைத்து ஆதரிப்பதற்கு மாதமொன்றுக்கு 450 ரூபாய் மதிப்புப் போடப்பட்டிருக்கிறது. மேலே சேரும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு மாதத்துக்குப் பத்து ரூபாய் பிடிக்குமாம்.

SEVEN CHILDREN.

ஏழு குழந்தைகள்.—ஷிப்ஸாகர் ஜில்லாவைச்சேர்ந்த கயான் கயான் என்னுமிடத்தில் சென்ற வைகாசி மாதம் ஒரு பெண் பூர்ண கர்ப்பவதியாயிருந்து பிரஸவித்தாள். அவளுடைய பிரஸவத்திற்கு முந்தி அவளிருந்த நிலைமையைப்பார்த்து அவளுக்கு இரட்டைக்குழந்தை பிறக்குமென்று பலர் சொன்னார்கள். ஆனால் பிரஸவமான காலத்தில் பார்த்தால் ஒன்றன்பின் ஒன்றாய் ஏழு குழந்தைகள் பிறந்தன. எல்லாக் குழந்தைகளும் முழுவதும் அங்க சின்னங்களோடிருந்தன. ஆனால் ஒன்றாவது பிழைத்திருக்கவில்லை. கடைசியாய் அந்தக் குழந்தைகளைப் பெற்றவளும் இறந்து போய்விட்டாள். மானிடப் பிரஸவத்தில் இரண்டு குழந்தைகள் பிறப்பது உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறோம். இம்மாதிரி ஏழு குழந்தைகள் பிறந்தது கலிகால விந்தையே போலும்!

A LADY SANSKRIT SCHOLAR.

ஸம்ஸ்கிருதம் கற்ற ஒரு ஹிந்துப்பெண்.—கீழ் வங்காளத்திலுள்ள சிட்டகாங் பட்டணத்தில் ஒரு ஸம்ஸ்கிருத பாடசாலையில் பண்டித குஞ்சபிஹாரி தர்க்கரத்ன என்பவரால் கற்பிக்கப்பட்ட ஸ்ரீமதி வஸந்தி என்ற ஒரு பெண் வேதாந்த சாஸ்திரத்தில் இண்டர் மீடியேட் பரீக்ஷை தேறினாளென்று வங்காளப் பத்திரிகைகள் வெகு சந்தோஷப்பட்டு எழுதுகின்றன. தற்காலம் நமது பெண்கள் யூனிவர்ஸிடி பரீக்ஷைகள் தேறுவது சகஜமாயிருந்தாலும் சமஸ்கிருதத்தில் இந்தக் கஷ்டமான சாஸ்திரத்தைக் கற்றுத் தேறுவது சாதாரணமல்ல.

EMPRESS MARY.

மேரி மகாராணி.—நமது சக்ரவர்த்தியின் மனைவி மகாராணி மேரிக்கு மே மாதம் 23-ந் தேதியில் 43-வது வயது முடிந்தது. காலஞ்சென்ற எட்வர்ட் சக்ரவர்த்தியின் மனைவியும் மேரிக்கு மாமியாருமாகிய அலெக்ஸாண்ட்ரா டென்மார்க்கு தேசத்து அரசனின் பெண். அலெக்ஸாண்டிராவைப் போல் மேரி அன்னிய தேசத்துப் பெண்ணல்ல. ஆகையால் ப்ரிட்டிஷ் ஜனங்கள் இவரிடத்தில் விசேஷப் பிரியம் வைத்திருக்கிறார்கள். மேரி அரசி ப்ரிட்டிஷ் ராஜ குடும்பத்துக்கு நெருங்கிய பந்துவாகிய ட்யூக் ஆப் டெக் என்பவரின் மகள். எட்வர்ட் அரசனின் மூத்த குமாரராகிய ஆல்பர்ட் விக்டரை இவர் கலியாணம் செய்வதாய் நிச்சயித்திருந்தது. அந்த குமாரரின் அகால மரணத்தால் நிறைவேறாது அது போயிற்று. பிறகு அவர் தம்பியாய் இப்போது ஸிம்மாஸனமேறியிருக்கும் ஜார்ஜ் அரசர் (1893 ஜுலை) மேரி அரசியை விவாகம் செய்துகொண்டார். ஆல்பர்ட் விக்டரின் மரணத்தால், எட்வர்ட் அரசர் குடும்பத்திற்கு மேரி அரசியார் சம்பந்தம் கிடைக்காது போய்விடுமென்று ப்ரிட்டிஷ் ஜனங்கள் அஞ்சி வருந்தும் போது, அவர் தம்பியை மணந்து அந்த வருத்தத்தை நீக்கியதால், இந்த அரசியார் மேல் ப்ரிட்டிஷ் ஜனங்களுக்கு அபிமானம் அதிகம்.

DEPARTMENTAL NOTES.

பகுதிக் குறிப்புகள்.

◆

AGRICULTURAL NOTES.

விவஸாயக் குறிப்புகள்.

SMALL INDUSTRIES FOR AGRICULTURISTS.

விவஸாயிகள் செய்யக்கூடிய சிறு தொழில்கள்.—கிராம வாஸிகள் விவஸாயத்தையே நம்பியிருக்கிற வரையில் சுகமாய் ஜீவிக்க முடியாது. கர்நூலில் ராவ் பகதூர் ஆதிநாராயணய்யா பேசினபோது, இதையே சொன்னார். பட்டுப்பூச்சி வளர்த்தல், தேனீ வளர்த்தல், கோழி முதலியவைகளை வளர்த்தல், கனிவிருக்ஷங்கள் பயிரிடல், நூற்றல், கயிறு திரித்தல், அழகான கூடை முதலியவைகள் செய்தல், நேர்த்தியான மட்பாண்டங்கள் செய்தல், இவைகளும் வேறு பலவும் கிராமவாஸிகள் செய்யக்கூடிய தொழில்களென்று சொன்னார். பாய் பின்னுதல், கறிகாய் பயிரிடல், மாடுகள் வளர்த்து தயிர், பால், நெய் விற்றல், ஆகிய இவைகள் போன்ற தொழில்களும் செய்யலாம். நமது வறுமைக்குத் தொழில்கள் அகப்படாமை காரணமல்ல. முயற்சியின்மையே முக்கிய காரணமென்று மிஸ்டர் ஆதிநாராயணய்யா சொன்னதை யார் மறுப்பார்கள்.?

SEEDS FOR TRIAL.

பரீக்ஷைக்காக விதைகள்.—விவசாய டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தருக்கு விதை வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொள்ளும் போது அத்துடன் அந்த விதையை உபயோகப்படுத்த உத்தேசிக்கும் நிலத்தின் தன்மை இன்னதென்றும், நீர்ப்பாய்ச்சல் ஆதாரம் எப்படிப்பட்டதென்றும், தெரிவிக்கவேண்டும். இந்த டிபார்ட்டுமெண்டாரால் புகழ்ந்து பேசப்பட்ட பயிர் வகைகளை எல்லாவகையான நிலங்களிலும் எல்லாக்காலங்களிலும் பயிரிட முடியாது. பயிரிட உத்தேசிக்கும் நிலம், காலம், முதலியவைகளைப்பற்றிய விவரங்கள் தெரிந்தால் அவைகளுக்கேற்றதான யோசனை சொல்லவும் அல்லது வேறுவகையான விதை விதைப்பது நலம் என்று தெரிவிக்கவும் கூடும். அதனால் விவஸாயிகளுடைய பயிர் கெட்டழிந்துபோகாமலும் அவர்களுக்கு மனவருத்த முண்டாகாமலுமிருக்கும்.

EXPORT OF RICE.

அரிசி ஏற்றுமதி.—இது வரையில் ஐரோப்பாவுக்கு இந்தியாவிலிருந்துதான் அரிசி ஏற்றுமதியாகி வந்தது. இப்போது அமெரிக்கர்கள் சாஸ்திர முறைப்படி நெல் விளைவித்து ஐரோப்பாவிற்கு விற்பனைக்கு அனுப்புகிறார்கள். இன்னும் சில வருஷங்களில் அமெரிக்கர் விசேஷமாய் அரிசியை விளைவித்து அனுப்புவதால் நமது அரிசி ஏற்றுமதி வியாபாரம் நின்றுவிடும்போலிருக்கிறது.

VARIETIES OF PLANTAINS.

வாழை தினுஸுகள்.—அடியில்கண்ட வாழை தினுஸு ஜாப்தாவை தென்னிந்தியா விவஸாயத்திலிருந்து பதிப்பிக்கிறோம்.

கோதாவரி.
1 வாமனகேளி.
2 கர்பூர சக்கரகேளி.
3 அம்ருதபாணி.
4 ஜகந்நாத கேளி.
5 ஸ்போடா.
6 பொந்த.
7 சக்ரகேளி.
8 எர்ர சக்ரகேளி.
9 பூடிதபொந்த.
10 பதீசா.
11 கொம்பாடி.
12 பொந்த பதீசா.
13 கினி.
14 நல்ல சக்கர கேளி.

தமிழ் நாடு.
1 பேய் மொந்தன்.
2 பேயன்.
3 கரூர் மொந்தன்.
4 பூவாழை.
5 செவ்வாழை.
6 ரஸ்தாளி.
7 பங்காளா.
8 மலை வாழை.
9 ராஜா ரஸ்தாளி.
10 பூவன சுண்டன்.
11 கட்டள பூதன்.
12 தேன் வாழை.
13 நமரை வாழை.
14 மடல் வாழை.
15 பச்சை நாடன்.
16 குழி வாழை.
17 லாடம் (உதிரன்).
18 மணிலா.
19 ஆனைக்கொம்பன்.
20 ராஜா வாழை.
21 தொரை வாழை.
22 கிண்டி வாழை.
23 வயல் வாழை.
24 கரி வாழை.

மலையாளம்.
25 நேந்திரம்.

GROUND-NUT CROP.

மணிலாக்கொட்டைப் பயிர்.—மானாவாரியில்மணிலாக்கொட்டையைத் தனிப்பயிராய்ச் சாகுபடி செய்யும்போது, அதில் "சுருள் பூச்சி" யின் அழிவு அதிகமாயிருக்கும். ஆனால் அதை ஏதாவது ஒரு கதிர் தானியத்துடன் கலப்புப் பயிராய்ச் சாகுபடி செய்தால் அந்தப்பூச்சியின் அழிவு அவ்வளவு அதிகமாயிருப்பதில்லை. கம்பு முதலான கதிர்தானியப் பயிர் வளர்ந்து ஊன்றின பின் அதன் ஊடே மணிலாக்கொட்டை சாகுபடி செய்வது நலம்.

THE AGRICULTURAL CALENDAR.

விவஸாயக் காலெண்டர்.—சென்னை கவர்ன்மெண்டார் ரெவினியூ போர்டாரை விவஸாயக் காலெண்டரை வருஷந்தோறும் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, இந்த மூன்று பாஷைகளிலும் அச்சிட்டுப் பிரசுரிப்பதோடு மலையாளம், கன்னடம், உரியா, இந்த மூன்று பாஷைகளிலும் வருஷந்தோறும் அச்சிட்டுப் பிரசுரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள்.

PADDY IRRIGATION.

நெல்லுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல்.—சிவகிரியில் 24½ அங்குலம் ஜலம் பாய்ச்ச 2187 ராத்தல் நெல் ஏகராவுக்கு கிடைத்தது.

30½	,,	2302	,,
45	,,	2521	,,
50	,,	2420	,,
53½	,,	2506	,,
63	,,	2450	,,

நாற்று நட்ட முதல்வாரத்தில் 4 நாளில் இரண்டு அங்குலம் ஜலமும், 2-வது 3-வது வாரத்தில் அதே மாதிரியாகவும், 4-வது வாரத்தில் 1 அங்குலம் ஜலம், 4 நாளிலும், 5, 6, 7-வது வாரங்களில் மண்ணை ஈரம் பிடிக்க நனைத்தும், 8 முதல் 3 வாரம் வரையில் 4 நாளில் ஒரு அங்குல ஜலமும் பாய்ச்ச 16, 17-வது வாரங்களில் தண்ணீர் வடிய விடப்பட்டது.

DESTROYING PRICKLY PEAR.

சப்பாத்திக்கள்ளியை அழித்தல்.—சப்பாத்திக் கள்ளியைப்பற்றி கேப் ஆப் குட்ஹோப் விவஸாய டிபார்ட்மெண்டார் பின்கண்டவாறு தெரிவிக்கிறார்கள்.

“அரை ராத்தல் சுண்ணாம்பு, அரை ராத்தல் கந்தகப்பொடி இவ்விரண்டையும் அரை மணி நேரம் ஒன்றே அரைக்கால் காலன் ஜலத்தில் அரைக்கால் காலனாகச் சுண்டக்காய்ச்சி, அரை ராத்தல் உப்பு அரை ராத்தல் ஆர்ஸனேட் ஆப்ஸோடா இவ்விரண்டையும் ஒருகாலன் கொதிக்கும் ஜலத்தில் கரைத்து, இவ்விரண்டையும் கலந்து, 2-3 அங்குலம் அடித்தண்டில் காயம் செய்து அந்தப்பிளவில் ஷை மருந்தைக் கொஞ்சம் ஊற்றினால் செடியில் விஷம் ஏறி அது பட்டுப்போம்.”

RAGI.

கேழ்வரகு.—காலத்தில் சாகுபடி செய்யும் இறைவைக்கேழ்வரகை பாத்திகளில் நடுவதைப் பார்க்கிலும் கால்கள் பிடித்து அவைகளுக்கு ஊடேயிருக்கும் மேடுகளில் (பார்களில்) நடுவதால், அதிக மாசூலையும் திரட்சியான தானியத்தையும் விளைவிக்கலாமென்பது பலதரம் பரீக்ஷைசெய்து கண்டறிந்த விஷயம். தண்ணீர் பாய்வதற்காகச் செய்யப்பட்ட பாத்திகளுக்குள்ளே நடப்பட்ட கேழ்வரகுப் பயிரைவிட, அந்தப் பாத்தியைச் சுற்றியுள்ள சிறு வரப்பின்மேல் நடப்பட்ட பயிரானது எவ்வளவு திடமாயுண்டாயிருக்கிறதென்று ஒவ்வொருவரும் தாங்களே கண்டுகொள்ளலாம். திருச்சினாப்பள்ளி ஜில்லாவில், குழித்தலை தாலூகாவின் தென்பாகத்திலுள்ள தோட்டக்கால் நிலங்களில் இப்படி மேடுகளில் கேழ்வரகு நடுதல் சாதாரணமான வழக்கமாக இருக்கிறது.

HICKORY KING.

ஹிக்கரி கிங்—“ஹிக்கரி கிங்” என்பது ஒரு தினுஸு மக்காச்சோளம். அதை விவஸாய இலாகாதார்கள் அயல் தேசத்திலிருந்து நூதனமாய் இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த நாட்டிலுள்ள தினுஸுகளைவிட அதிக ருசிகரமாக இருப்பதுடன் அதின் கதிர்கள் மிகப்பெரிதாயுமிருக்கின்றன. மக்காச்சோளம் சாகுபடியாகும் ஜில்லாக்களிலுள்ள கிருஷிகர் இந்தத்தினுஸைப் பரீக்ஷிக்கவிரும்பினால், திருச்சினாப்பள்ளியிலுள்ள தென்பாகம் விவஸாய டிப்டி டைரெக்டரவர்களுக்கு எழுதிக்கொண்டால் கொஞ்சம் விதை அனுப்புவார். அப்படித்தருவித்துப்பரீக்ஷிக்கிறவர்கள் நாட்டு மக்காச்சோள தினுஸுகளுக்குப் பக்கத்தில் அதைச் சாகுபடி செய்யக்கூடாது. ஏனென்றால், அவைகள் வெகுசீக்கிரத்தில் கலந்து தரம் கெட்டுப்போகும்.

BRAZILIAN FLOUR CORN.

ப்ரெஸீலியன் ப்ளோர் கார்ன்.—என்பது நூதனமாய் வரவழைக்கப்பட்ட இன்னொரு தினுஸு மக்காச்சோளம். “ஹிக்கரிங்” என்னும் தினுஸைப்போல இதன் கதிர்களும் தானியமும் அவ்வளவு பெரிதாயிரா. ஆனால் இந்த நாட்டிலுள்ள தினுஸுகளைவிட இதன் கதிர்கள் மிகப்பெரிதாயும், இதன் தானியம் மிகவும் இனிப்பாயும் நல்ல மணமுள்ளதாயும் இருக்கின்றன. மேலே சொன்னதுபோல இத்தினுஸின் விதையையும்பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் செய்துகொள்ளும் ஒவ்வொருவருக்கும் இந்த இரண்டில் ஒரு தினுஸு விதைதான் கொடுக்கப்படும்.

INDUSTRIAL NOTES.

கைத்தொழில் குறிப்புகள்.

SHEEP'S WOOL.

ஆட்டுரோமம்.—நமது இராஜதானியில் நெல்லூர், ஆலம்பாடி, மைசூர், புலிக்குளம், முதலிய மாட்டு வர்க்கங்களிருப்பதுபோல, ஆடுகளிலும் நெல்லூர் ஆடு, மைசூர் ஆடு, கோயம்புத்தூர் ஆடு என்று அநேக ஆட்டு வர்க்கங்கள் இருக்கின்றன. சில வர்க்கங்கள் நல்ல போஷிப்பினால் கம்பளித் துணிகள் நெய்ய ரோமங்களைக் கொடுக்கும். போஷிப்பில்லாத ஆடுகள் வெறும் மயிரைத்தான் கொடுக்கும். ரோமத்துக்கும் மயிருக்கும் என்ன வித்தியாசமென்றால், ரோமத்தில் இரண்டு இழைகளைத் திரித்து நெய்யும்படிச் சேர்க்கலாம். மயிரில் அப்படிச் செய்யமுடியாது. இரண்டு மயிர்கள் ஒன்றுடனொன்று சேரா. நல்ல நெல்லூர் ஜாதி ஆடு சுமார் 80 பவுண்டு (ராத்தல்) நிறை இருக்கும்; ஆனால் அவைகள் ரோமங்களைக் கொடுப்பதாகத் தெரியவில்லை. மைசூர், கோயம்புத்தூர் ஆடுகள் ரோமங்களைக் கொடுக்கின்றன. ஒரு ஆடு சுமார் 3 பவுண்டு ரோமம் கொடுக்கும். நல்ல ஆடு ஒரு வருஷத்தில் 4 பவுண்டுக்கு மேல் ரோமம் கொடுக்கிறதில்லை. ரோமத்தின் இழை நீளம் சுமார் 3, அல்லது 4 அங்குல மிருக்கும். நல்ல ரோமமாயிருந்தால் பவுண்டு ஒன்று சுமார் 4 அணா விலையிருக்கும். ரோமம் எல்லாம் மேய்ச்சலையும் சீதோஷ்ணத்தையும், பூமியையும் பொறுத்ததாயிருக்கிறது.

கிராமங்களில் சோம்பேறிகளாய் வீண்காலம் போக்கும் நம்மவர்கள் இந்தக் கைத்தொழிலை ஏன் விருத்தி பண்ணக்கூடாது? ரூபாய் 500 முதலைக்கொண்டு நூறு ஆட்டுக்குக் குறையாமல் வாங்கி விருத்தி பண்ணினால் 100 ஆடு 200,300 ஆடாகப் பெருகாதா? கடைகள் வைத்துச் சம்பாதிக்கலாம். மாமிசங்களுக்காகப் போஷித்து விற்றுச் சம்பாதிக்கலாம். ரோமம் எடுத்துக் கம்பளித்துணிகள்நெய்து சம்பாதிக்கலாம். தேசத்தின் பொருளாதாரத்தை விருத்திசெய்ய கிராம வாசிகள் செய்யக்கூடிய சில்லரைத்தொழில்கள் எவ்வளவோ இருக்கின்றன.

WHY OUR INDUSTRIES FAIL?

நம்முடைய தொழில்கள் க்ஷீணமடையக் காரணமென்ன?—நமது இந்தியநாட்டில் உண்டாகும் தொழில்களுக்கும் கணக்கில்லை; அவைகள் நீடித்திராமல் க்ஷீணித்துப் போவதற்கும் கணக்கில்லையென்பது எல்லாருக்கும் ஸ்பஷ்டமாய் விளங்கும். இப்படி க்ஷீணித்துப்போவதற்குக் காரணம் என்ன என்று யோசித்தால், ஒருகாரணமாயில்லை. பல காரணங்கள் ஏற்படுகின்றன. அவையாவன :—

1. தொழிலாளிகள் ஆரம்பத்திலேயே தன்னைத் தானே புகழ்ந்து ஜனவெறுப்பைத் தேடிக்கொள்வது.
2. ஏகதேசத்தில் முதல் போட சக்தியில்லாமல் போவது.
3. கூட்டுத்தொழிலில் ஒற்றுமையில்லாமல் அபிப்பிராய பேதம் அதிகரிப்பதும், கூட்டாளிகள் எத்தனை பெயரோ, அத்தனை பெயரும், அந்தத் தொழிலில் அதிகாரஞ் செலுத்த ஆசைப்படுவது.
4. சக்திக்கு மீறிக் கடன் வாங்குவது.
5. வரவுக்கு மிஞ்சின செலவு செய்வது.
6. விலையில் அதிகச் செட்டு வைப்பது.
7. ஏஜண்டுகள் பொறுப்பாளிகளாயில்லாமல் போவது.
8. ஏஜண்டுகளுக்கு ரொம்ப அதிகாரத்தை மட்டும் கொடுத்து குறைந்த சம்பளம் கொடுப்பது.
9. ஜனநோக்கம் அறியாமல் வேலை செய்வது.
10. சிப்பந்திகளை பயமுறுத்தி கடினவேலை வாங்கி அதற்குத்தக்க கூலி கொடுக்காமல் போவது.
11. அதிக லாபத்தைக் கருதி கடன் கொடுப்பது.
12. இதரத்தொழிலாளிகளின் சிநேகமில்லாமல் இருப்பது.
13. சொல்லுறுதி இல்லாமல் போவது.
14. தொழிலை அதிகப் பிரசித்திக்குக் கொண்டு வாராமல் போவதும், பிரசித்தமாகுமுன் லாபத்திற்கு அவசரப் படுவதும்.

ஆகிய இத்தனை காரணங்களும் தொழில் க்ஷீண மடைவதற்குப் பொருந்துமென்று சொல்ல வேண்டியதா யிருக்கிறது. அன்றியும், கேவலம் கூலி வேலைக்காரர்களுங்கூட அவர்கள், பின்னால் உழைத்து அடைய எதிர்பார்க்கும் வருமானத்தை நம்பி, முன்னாலேயே கடன் வாங்கிச் செலவழித்துப் போட்டு, கடன் தொந்தரவினாலும், கடன் கொடுத்தவர்களுக்கு ஜவாப் செய்யும் தொல்லையினாலும் மனம் அலுத்து தங்கள் தொழிலை விருப்பத்துடன் கவனிப்பதற்கில்லாமல், எவ்வளவு கெட்டிக் காரரானாலும் கௌரவக்குறைவை அடைகிறார்கள். அப்படிக் கௌரவக் குறைவு அடைவதிலிருந்து அவர்களுடைய தொழிலுக்கும் குறைவு நேரிடுகிறது.

இந்தக் காரணங்களை அறியாத சிலர் தொழில் நல்ல தொழிலல்லவென்று வெறுக்கிறார்கள். நாம் நடத்தும்முறை நல்லதில்லையெனச் சொல்லவேண்டுமே தவிர தொழில் பேரில் குறை சொல்லுவது தப்பு. எந்தத்தொழிலானாலும் அதை முறைப்படி நடத்துவோமானால் ஒரு காலமும் எந்தத்தொழிலும் க்ஷீண தசை யடையாது. அந்த முறையைத் தெரிந்துகொள்ளாமல் நடத்தப்புகும் தொழில் எதுவானாலும் க்ஷீண தசையை யடையாமல் போகாதென்பது எவரும் மறக்கக் கூடாததாகும். ஆதலால் எவரும், தொழில் ஆரம்பிக்கும் முன்னமேயே தொழில் முறையைத் தெரிந்துதான் ஆரம்பிக்கவேண்டும். அவைகளைத் தெரியாமல் ஆரம்பிப்பதால் தொழில் க்ஷீண தசையை யடையக் காரணமாகிறது.

EDUCATIONAL NOTES.
வித்யா விஷயக் குறிப்புகள்.

AN EDUCATIONAL EXHIBITION AT KUMBAKONAM.

கும்பகோணத்தில் படிப்பு விஷயமாக ஒரு பொருட்காட்சி.—மேற்கண்ட பொருட்காட்சி கும்பகோணம் ரேஞ்சு சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ கே. எஸ். வைத்தினாதய்யர் பி. ஏ. எல். டி. அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு பொருட்காட்சியும் கான்பரென்ஸும் 1910௵ ஜூலை௴ 9,10௳களில் முறையே யானையடி ஸ்கூலிலும் டவுன் ஹைஸ்கூல் ஹாலிலும் மிகச் சிறப்பாக நடந்தேறின. ஆருவது ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ வி. ஆர். வெங்கிட்டராமய்யர் பி. ஏ. எல். டி. அவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். இந்த ரேஞ்சு உபாத்தியாயர்கள் சுமார் 350 பேர்களும் இதர ரேஞ்சு உபாத்தியாயர்கள் சுமார் 5,060 பேர்களும் ஸூபர்வைசர்கள் 5, 6 பேர்களும் இரண்டு ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்களும் தஞ்சை ஜில்லா அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்கள் மகா-ள-ள-ஸ்ரீ டி. கிருஷ்ணராவ் அவர்களும் இன்னும் உள்ளூரிலுள்ள பல கனவான்களும் வந்திருந்தார்கள். சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்களுடைய போதனையின்பேரில் எல்லா உபாத்தியாயர்களும் பூகோள சம்பந்தமான பூகோள உருண்டை, ரிலீப் படங்கள், சூரிய மண்டலம் முதலிய உபகரணங்கள், காகிதஅட்டை வேலைகள், ட்ராயிங், களிமண் வேலைகளுள்பட சுமார் 4000 காட்சிகள் வரையில் வெகு சிரமப்பட்டுத் தயாரித்துக் கொண்டு வந்தார்கள்.

மேற்கண்டவைகளெல்லாம் வெகு திருப்திகரமாய் நடந்ததைப்பற்றியும் சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ கே. எஸ். வைத்தினாதய்யர் அவர்களுடையவும், ஸூபர்வைஸர்கள் மகா-ள-ள-ஸ்ரீ ர. என். ராமச்சந்திரய்யர் அவர்களுடையவும், தாராசரம் போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டரும் உபாத்தியாய சங்கம் அஸிஸ்டெண்டு ஸெக்ரெடரியுமாகிய ம-ள-ள-ஸ்ரீ டி. வி. ராஜகோபாலய்யங்கார் முதலிய பல மெம்பர்களுடையவும் ஒரு மாத விடாமுயற்சியின்பேரில் இந்தப் பெரிய கூட்டமும் பொருட்காட்சியும் வெகு சிறப்பாக நடந்தேறியதைப்பற்றியும் பிரஸிடெண்டவர்கள் பிள்ளைகளுக்கு தெளிவாக விளங்கும்படி பிரசிங்கித்தார்கள்.

A HINT TO TEACHERS.

உபாத்தியாயர்களுக்கான குறிப்பு.—பிள்ளைகள் எல்லாரும் சுத்தமாய் இருக்கவேண்டும் என்பதை உபாத்தியாயர் முக்கியமாய்கவனிக்கவேண்டும். காலையில் வந்தவுடனே பிள்ளைகளைவரிசையாக நிறுத்திப் பார்த்தால், அசுத்தமாய் இருக்கும் பிள்ளைகளை விரைவாய் கண்டுபிடிக்கலாம். அவர்களை விரைவாய் அப்புறப்படுத்தினால் அவர்களுக்கு அவமானம் உண்டாகி மறுபடியும் அசுத்தமாய் வரமாட்டார்கள். அசுத்தமாய் வருகிறவர்களை முகம் கால்களைக் கழுவும்படி வெளியே அனுப்பவேண்டும். அதற்காக ஒரு பானைத் தண்ணீரும், ஒரு முரட்டுத் துணியும் பள்ளிக்கூடத்தில் வைத்திருப்பது நலம். உபாத்தியாயர் இந்த விஷயங்களைக் கண்காணித்து வருவாரானால் சிலநாட்களில் அசுத்தம் என்பது பாடசாலையில் இல்லாமல் நீங்கிவிடும். அந்த வழக்கத்தினால் வீட்டிலும் அசுத்தம் உண்டாகாது. பிறகு பிள்ளைகள் ஆயுள்வரையில் சுத்தமானவர்களாயிருப்பார்கள்.

THE CENTRAL HINDU COLLEGE, BENARES.

காசி ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ்.—மிஸஸ் அன்னிபெஸண்ட் அம்மாளால் காசியில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வரும் ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜில் சம்பளம் பெறாமல் போதகாசிரியர்களாய் வேலை செய்கிறவர்கள் 18-பேர் இருக்கிறார்கள். அவர்களில் 15 பேர் இந்தியர்கள். 3-பேர் ஐரோப்பியர்கள். அந்த ஐரோப்பியர்களில் மிஸ்டர் இ. ஏ. வுட்ஹவுஸ் ஒருவர். அவர் இந்தமாதம் 15-ந் தேதி அந்தக் காலேஜில் ஆங்கில போதகாசிரியராய் வேலை பார்க்க அமர்ந்தார். அவர் புனா டெக்கான் காலேஜில் போதகாசிரியராயிருந்தவர்.

RAJAMUNDRY L. T. CLASS.

ராஜமகேந்திரபுரம் காலேஜ் எல். டி. வகுப்பு.—ராஜமகேந்திரபுரம் காலேஜில் எல். டி. பரீட்சைக்கு உபாத்தியாயர்கள் கற்பிக்கப் படுகிறார்களென்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அந்தக் காலேஜில் அந்த வகுப்பை எடுத்துவிட வேண்டுமென்று கவர்ன்மெண்டார் யோசித்துக் கொண்டிருப்பதையறிந்து அந்த ஊர் வாசிகள் ஆனரபில் மிஸ்டர் என். சுப்பராவின் தலைமையின் கீழ் மீட்டிங் கூடி அந்த வகுப்பை யெடுத்துவிடக் கூடாதென்று தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தை ஆனரபில் மிஸ்டர் சுப்பராவ் மூலமாய்க் கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றும் நிச்சயித்தார்கள்.

LITERARY NOTES.
புஸ்தகக் குறிப்புகள்.

LESSONS FROM ZOOLOGY PART I.

ஜீவவர்க்க போதினி.—முதல் பாகம். இந்தப் புஸ்தகம் சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி காலேஜில் உபாத்தியாயராயிருக்கும் வி. ஆர். துரைஸாமி சாஸ்திரியார் எம். ஏ., எல். டி. அவர்களால் எழுதப்பட்டது. இதில் மீன்கள், தவளைகள், பாம்பு, பல்லி போன்ற ஊர்வன, பறவைகள், ஆகிய இவைகளைப்பற்றி மாத்திரம், சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப்புஸ்தகம் ட்ரெயினிங் ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கு மிகவும் உபயோகமாயிருப்பதோடு, குழந்தைகள், பெரியவர்கள் எல்லாரும் படிக்கத்தக்கது. இந்தப் புஸ்தகம் அந்தந்த ஜந்துக்களை எதிரில் வைத்துக்கொண்டு தெரியாதவர்களுக்குத் தெரிந்தவர்கள் நேரில் சொல்லிக்கொடுப்பதுபோல் பேசுந்தமிழிலேயே எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தைப் படித்தால் நாம் தினந்தோறும் பார்க்கும் மீன், பாம்பு, பல்லி, பறவைகள் இவைகளைப்பற்றி நமக்குத் தெரியாத விஷயங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று வெளிப்படும். இந்தப் புஸ்தகத்தில் முக்கியமாய் பாம்புகளைப்பற்றி எழுதியிருக்கும் அத்தியாயங்களை எல்லாரும் படித்து அறிந்து கொள்வது நலமாகும். இதில் சொல்லப்பட்ட பிராணிகளைப் பற்றிய பல படங்களும் அடங்கி இருக்கின்றன. விலை அணா 10. சென்னபட்டணம் தம்பு செட்டித் தெருவு கணேஷ் கம்பெனியில் கிடைக்கும்.

BOOKS RECEIVED.
புஸ்தக வரவு.

SCIENTIFIC MANURING.

சாஸ்திரமுறைப்படி உரமிடுதல்.—இது சென்னப் பட்டணம் பாரி கம்பெனியாரிடத்தில் இனாமாகக் கிடைக்கும்.

HOW TO DO BOTANY.

தாவரநூலைக் கற்கும் விதம்.—மதராஸில் ஸ்கூல் ஸப்அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராயிருக்கும் என். ஸ்வாமினாதய்யர் பீ. ஏ. இயற்றியது. விலை அணா 4.

KAMBAN AND CHOLAN.

கம்பனும் சோழனும்.—சென்னபட்டணம் வேப்பேரி எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் கா. நமச்சிவாய முதலியார் எழுதியது. மேலே குறித்த இரண்டு புஸ்தகங்களும் சென்னபட்டணம் ஜார்ஜ் டவுன், சின்னத்தம்பி வீதி 25 நெ. வி. குமாரஸ்வாமி நாயுடு அண்டு ஸன்ஸில் கிடைக்கும்.

LEGAL NOTES.
சட்டக் குறிப்புகள்.

SELF ACQUISITION.

ஸ்வயார்ஜ்ஜிதம்.—ஹிந்து லாப் பிரகாரம் பாகமாகாத ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் வைத்துக்கொண்டிருக்கும் ஸொத்துக்களெல்லாம், குடும்பத்தைச்சேர்ந்த சொத்துக்கள் என்பது அனுமானம். ஆகையால் ஏதாவது ஒரு நபர் தன்னிடத்திலிருக்கும் ஸொத்து குடும்பத்துக்குச் சம்பந்தமில்லை, சுயமாய் சம்பாதித்தது என்று சொல்லும் பக்ஷத்தில் அந்த நபர் அந்த வாதத்தை சந்தேகமில்லாமல் ருஜுப்படுத்த வேண்டும்.—7. மதராஸ். லா. டை. 382 பக்கம்.

GUARDIAN.

கார்டியன்.—ஹிந்து லாப் பிரகாரம் மைனர் பிள்ளைகளுக்காக தாயார் கார்டியனாக இருந்து ஸொத்தை பந்தகம் வைப்பதாயிருந்தால் அப்படிப் பந்தகம் வைத்தது மைனர்களை கட்டுப் படுத்தக்கூடிய காரணங்களுக்காகத்தான் என்று பந்தகம் வாங்கினவன், விவாதம் வந்தால் ருஜுப்படுத்தவேணும். காலாவதியாய்ப்போன கடனை ஒப்புக்கொண்டு. மைனர் ஸொத்தைக் கட்டுப்படுத்த கார்டியனுக்கு பாத்தியமில்லை.—7. மதராஸ். லா. டை. 383 பக்கம்.

MONEY TO BE PAID TO THIRD PARTIES.

சாட்டுதல் போட்டபணம்.—ஒருவன் தன்நிலத்தை விற்கும்போது அதற்காக வரவேண்டிய ரூபாயை மூன்றாவது மனிதனுக்குக் கொடுக்கும்படி சாட்டுதல் போட்டு விக்ரயம் செய்தான். நிலத்தை வாங்கினவன் பத்திரத்தின்படி பணத்தை மூன்றாவது மனிதனுக்குக்கொடுக்கவில்லை. இந்தக்காரணத்தைக் கொண்டு சாஸனம் செய்தவன் சாஸன நிலத்தைத் தொடர்ந்து பணத்தை வசூல்செய்ய பாத்தியம்கிடையாது. சாஸனம் வாங்கின நபரைமட்டும் தொடர்ந்து நஷ்டம் வாங்கலாம்.—7. மதராஸ். லா. டை. 376 பக்கம்.

SALE OF LAND.

நில விற்பனை—ஒருவன் 20ரூபாய்க்கு ஒரு நிலத்தை விற்றுப் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்யாமலிருந்தபோதிலும் நிலத்தை வாங்கினவனுடைய ஸ்வா

தினத்தில் விட்டுவிட்டான். இது விஷயமாக விவஹாரம் ஏற்பட்டு மதராஸ் ஹைகோர்ட்டில் கேஸ் அப்பீலுக்கு வந்தது. 100 ரூபாய்க்குக் குறைந்த நிலத்தை ஒருவன் விற்று, அதைவாங்கினவன் வசம் விட்டு விட்டானேயானால், அந்தக்கிரயசாஸனம் செலாமணி ஆகக் கூடியதுதானென்று ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.—7. மதராஸ் லா. டை. 372 பக்கம்.

DARKHAST.

தர்க்காஸ்து.—ஒரு ஊரில தீர்வைப் படாத காலி நிலத்தை சில பேர்கள் தர்க்காஸ்து எடுத்தார்கள். அந்தக்கிராமத்தில் வேறு சிலர் தர்க்காஸ்து வாங்கினவர்களிடத்திலிருந்து நிலத்தைப் பிடுங்கிக்கொண்டு அந்த நிலம் தங்களுடைய மாட்டு மேய்ச்சல் ஸ்தலம் என்று வாதாடினார்கள். தர்க்காஸ்த்து வாங்கினவர்கள் தங்களுக்கு நிலம் கிடைக்கவேணுமென்று வியாஜ்யம் போட்டார்கள். நிலத்தைப் பிடுங்கிக்கொண்டவர்கள் தங்களுக்கு மாடு மேய்க்கும் பாத்தியம் இருப்பதால் கவரன்மெண்டாருக்கு அந்த நிலத்தை தர்க்காஸ்த்து கொடுக்க பாத்திய மில்லை யென்று வாதாடினார்கள். மாடு மேய்க்கும் பாத்தியம் இருந்த போதிலும் நிலத்தில் கவரன்மெண்டாருக்குள்ள பாத்தியம் போய்விடாதென்றும், ஆகையால் நிலத்தை தர்க்காஸ்து வாங்கினவரிடத்தில் விட்டுவிட வேணுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.—7. மதராஸ். லா. டை. 380 பக்கம்.

LIMITATION.

காலாவதி.—பாகமாகாத ஹிந்துக்குடும்பத்துக்கு மானேஜராக இருப்பவன் குடும்பத்துக்குச் சேரவேண்டிய பணம் முதலியவைகளை வசூல் செய்து மைனர் பாகஸ்தர்கள் இருந்தபோதிலும் எல்லாருக்குமாகச்சேர்த்து ரசீது கொடுக்க அதிகாரமுண்டு. ஆகவே அப்படிப்பட்ட மானேஜர் தான் மேஜர் ஆகி 3 வருஷத்துக்குள் குடும்பத்துக்கு வரவேண்டிய கடனை வசூல் செய்யாவிட்டால் அந்தக் கடன் காலாவதியாய்ப் போனதுதான்.—8. மதராஸ். லா. டை. பக்கம் 71.

YAWNING IN COURT.

கோர்ட்டில் கொட்டாவி விடுதல்—ஒரு ஊரில் முன்ஸீப் கோர்ட்டு வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த ஒருவன் கொட்டாவி விட்டது கேட்டு, உள்ளிருந்த முன்ஸீப் அவனைத் தருவித்துக்கோர்ட்டாரை அவமதித்ததற்காக விசாரணை செய்ததன் மேல் அவன் நமஸ்காரம் செய்து தப்பித்துக்கொண்டானும். முன்னொருகாலத்தில் பம்பாய் ஹைகோர்ட்டில் வெகு சாமர்த்தியமாக வாதஞ்செய்த வக்கீலொருவர், தன் கக்ஷிக்கு விரோதமாகத் தீர்ப்பு சொல்லக்கேட்டு, "ஒரு கூட்டம் கழுதைகளுடன் போராடவேண்டியிருக்கிறது," என்று சொல்லி உட்கார்ந்தாராம். உடனே, ஜட்ஜி, அவரைக் கூப்பிட்டு, "ஓய், நீர் இப்பொழுது சொல்லியது கோர்ட்டாருக்குக் கேட்கிறது:" என, வக்கீல், "பிரபு, என்மனதில் நினைப்பதற்குக்கூடத் தாங்கள் உத்தரவளிக்க வேண்டுமோ"? என்று கேட்டார். "இல்லை," என்று ஜட்ஜி சொல்ல, "நானிப்பொழுதென்ன செய்தேன் ?, சற்று பலமாக நினைத்தேன், அதை மன்னிக்க வேண்டுமென்றுசொல்ல, அந்த ஜட்ஜியும் சிரித்து, "இனி நீர் பிறர்காதில் கேட்கும்படியாக நினைக்காதீர்," என்றாராம். இது ஹைகோர்ட்டுத் தீர்ப்பாதலால், இஷ்டர்கள் இதைக் கொட்டாவி விட்டவனுக்கும், அவன்போன்ற இதரருக்கும் சொல்லி, இனிக் கோர்ட்டார் காதில் விழும்படியொன்றுஞ் செய்யாமலிருப்பதுதான் சட்டமுறையென்று அறிவிக்க செய்யவேண்டும்.

AUTHORITY TO SELL A HOUSE.

வீட்டை விந்க அனுமதி.—ஒரு வீட்டுச் சொந்தக்காரன் அதை விற்கும்படி இன்னொருவனிடத்தில் சொன்னால் அந்த அனுமதியைக்கொண்டு பின் சொன்னவன் வீட்டை விற்றுவிடக்கூடாது. விலை முதலியவைகளைப்பற்றிச் சொந்தக்காரனுக்குத் தெரியப்படுத்தி அதற்குப் பிறகுதான் விற்பனைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். தவிர, வீட்டை விற்றுவிடு என்று சொன்னதினால், விக்ரயத் தொகையை, விற்பதற்கு ஏற்பாடு செய்கிறவன் வாங்கி விடக்கூடாது.—8. மதராஸ் ல. டை. 7 வது பக்கம்.

VAKILS.

வக்கீல்கள்.—வக்கீல்களா யிருக்கிறவர்கள் தங்கள் தொழிலைச் சேராத வேறு எந்த வழியிலாவது மோசடியான காரியங்கள் செய்திருக்கும் பக்ஷத்தில் அவர்களைக்கோர்ட்டார் வக்கீல் தொழிலிலிருந்து நீக்கிவிடுவது நியாயமாகும்.—8. மதராஸ். லா. டை. பக்கம் 23.

SCIENTIFIC NOTES.

சாஸ்திரீயக் குறிப்புகள்

—o—

HOT WATER AND PLANTS.

வெந்நீரும் செடிகளும்.—அநேகமாய் எல்லாமரங்களும் செடிகளும் வருஷம் முழுவதும் புஷ்பித்துக் காய்க்காமல் அவையவைகளுக்குரிய காலாகாலங்களிலேதான் புஷ்பித்துக் காய்க்கும். அகாலங்களில் நாம் என்ன பாடுபட்டபோதிலும் அவைகள் புஷ்பித்துக் காய்க்கமாட்டா. இருந்தாலும் காய்த்து, ஓய்ந்திருக்கும் காலத்தைக் குறுக்கி மின்ஸாரத்தைப் பாய்ச்சி மரங்களை சீக்கிரம் காய்க்கும்படி செய்யலாம். சீக்கிரம் காய்க்கும்படி செய்வதற்கு இன்னொரு வழியும் உண்டாம். ஒரு பெரிய தொட்டியில் வெந்நீரைக்கொட்டவேண்டும். செடி அல்லது மரத்தின் வேர்கள் வெந்நீரில் படாமல் மேல் கிளைகளை வளைத்து வெந்நீர்த் தொட்டியில் அமிழ்த்தி மரத்தினுடையவும், செடியினுடையவும் இயல்புக்குத் தக்கபடி கொஞ்சநேரம் அமிழ்த்திவைக்கவேண்டுமாம். ஒரு பொழுதும் 12 மணிக்கு மேல் இப்படி அமிழ்த்திவைக்கக்கூடாது. வெந்நீரின் சூடு ஸெண்டிக்ரேட் தர்மாமிட்டர் என்னும் சூட்டளவுக்கருவியில் 30 முதல் 35 டிக்கிரி தான் இருக்கவேண்டும். அது தான் சரியான உஷ்ணம்.

SIGNS OF STORMS.

புயல் குறிகள்.—ஒரு சிம்னியின் வழியாய் மேலே எழும்பிப் போகும் புகை வெளியே வந்ததும் நேரே மேலே போகாமல் சில ஸமயங்களில் சிம்னியின் பக்கங்களில் கீழ்ப் புறமாய்ப்போகும். இப்படியாகும் பொழுது புயல் வருமென்று ஊகிக்கவேண்டும். ஸாதாரணமாய் ஒரு மனுஷ்யனுக்கு ஆறு முதலிய சுத்தஜலங்களில்நீந்துவதைவிட ஸமுத்திர ஜலத்தில் நீந்துவது சுலபமாயிருக்கும். இதற்குக் காரணம் என்னவென்றால், ஆற்று ஜலத்தைவிட ஸமுத்திர ஜலமானது அதிக பளுவாயிருக்கும். ஆகவே, ஒரு குறிப்பிட்ட அளவு ஆற்று ஜலம் தாங்கும் பளுவை விட அதிகமான பளுவை அதே அளவு ஸமுத்திர ஜலம் தாங்கும். அதனாலேதான் ஒரு மனுஷ்யனுக்கு ஆற்று ஜலத்தைவிட ஸமுத்திர ஜலத்தில் நீந்துவது, அதாவது மிதப்பது, சுலபமாயிருக்கிறது. இதுபோல சாதாரணமாய் காற்றைவிட புகை லேசானது. அதனால்தான், புகை ஆகாயத்தில் மேலே செல்லுகிறது. இப்படிக் கல்லாமல் புகை கீழே வந்தால் காற்று வழக்கம்போல் கனமாயில்லாமல் லேசாயிருக்கிறதென்று ஏற்படுகிறது. புயல் வருவதற்கு முன்னால் ஆகாய மண்டலக்காற்று லேசாயிருக்கும். இதனால்தான் சாதாரணமாய் மேலே போகவேண்டிய புகை அந்தக்காலங்களில் கீழே இறங்கும். இதைப்பார்த்து புயல் வருவதை அறிந்து கொள்ளலாம்.

ELECTRIC FANS AND BACTERIA.

மின்ஸார விசிறிகளும், பாக்டீரியாவும்.—சென்னபட்டணம் போன்ற பெரிய நகரங்களில் மின்ஸார சக்தியால் எரியும் விளக்குகளும், சுற்றும் விசிறிகளும், பெரிய ஆபீஸ்களிலும் வீடுகளிலும் ஹோட்டல்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மின்ஸார விசிறிகள் சுற்றுவதின் தாத்பரியம் என்னவென்றால் அந்த விசிறிகள் சுற்றுவதால் அடைப்பான இடம் காற்றோட்டமாயும் குளிர்ச்சியாயும் இருக்கும் என்பதே. காற்றோட்டம் அதிகமானாலும், அத்துடன் அளவற்ற பாக்டீரியா, அதாவது வெகு நுட்பமான க்ருமிகள், உள்ளேவந்து அடைந்து விடுகின்றனவாம். இந்த விஷயமாக ஏ. ஸார்ட்டரி, ஏ. பிலேஷியர் என்னும் இரண்டு, பிரான்ஸ் தேசத்து சாஸ்திரிகள் பல சோதனைகள்செய்து ஆராய்ந்து பார்த்தார்கள். 400 க்யூபிக் மீடர் அதாவது சுமார் 440 கனகெஜ [கனகெஜம் என்பது ஒரு கெஜ நீளம், ஒரு கெஜ அகலம் ஒரு கெஜ கனம் உள்ளது] அளவுள்ள ஒரு ஹோட்டலில் விசிறியைச் சுற்றிப் பார்த்தார்கள். விசிறியைச் சுற்றுவதற்கு முன்னால் ஒரு கனகெஜ இடத்தில், 12,500 பாக்டீரியா இருந்தன. ஒரு மணிநேரம் சுற்றின பிறகு, அதே இடத்தில் 23.000 பாக்டீரியா இருந்தன. இரண்டு மணிநேரம் சுற்றினபிறகு 45,000, பாக்டீரியா இருந்தனவாம். 650 கனகெஜ இடமுள்ள இன்னொரு ஹோட்டலில் சோதித்துப் பார்த்ததில் விசிறி சுற்றுவதற்கு முன்னால் ஒரு கனகெஜ இடத்தில் 12,000, பாக்டீரியா இருக்க, ஒரு மணிநேரம் சுற்றினபிறகு 39,000, பாக்டீரியாவாக ஆய்விட்டன. ஒவ்வொரு சோதனையிலும், ஒரு இடத்தில் விசிறியைச் சுற்றுவதற்கு முன்னால் எவ்வளவு பாக்டீரியா இருந்ததோ அதைவிடச் சுற்றின பிறகு இரண்டு மடங்கும், 4 மடங்குமாய் ஆகிவிட்டதாம். ஹோட்டல் முதலிய இடங்களில் அசுத்தம் ஜாஸ்தியாயிருக்குமானதால் அங்கே அடையும் பாக்டீரியாக்களெல்லாம் வியாதியை விளைவிக்கும் பூச்சிகளாகவே இருக்கவேண்டும். ஆகவே அசுத்தமான இடங்களில் மின்ஸார விசிறியைப் போடுவது அநுசிதம்போல் தோன்றுகிறது. இதுபோலவே அசுத்தமான இடங்களில் கைவிசிறியைக் கொண்டு விசிறிக்கொள்வதும் சுகாதாரத்துக்கு அநுகூலமல்லவென்று நினைக்க வேண்டியிருக்கிறது.

MEDICAL NOTES.

வைத்தியக் குறிப்புகள்.

GARLIC.

வெள்ளைப்பூண்டு.—வெள்ளைப்பூண்டு இந்தத் தேசத்தில் எங்கும் உண்டு. இதன் ரஸத்தைத் தேகத்தில் தடவினால் சரீரம் கொப்பளித்துவிடும். இதனுடைய குணம் கடுகினுடைய குணத்தைப்போலிருக்கும். இதற்கு ஜீரணம் செய்யக்கூடிய சக்தி இருப்பதால் இதைக் குழம்பில் சேர்ப்பார்கள். வெள்ளைப்பூண்டை அதிகமாக உபயோகித்தால் தலைவலி, வயிறு உப்புதல், தாகமெடுத்தல், தேகம் சூடாகுதல், பேதியுடன் ரத்தங்காணல் இவை நேரிடும். காது மந்தப்பட்டால் வெள்ளைப்பூண்டு ரஸத்தில் துவைத்த பஞ்சை நாள் ஒன்றுக்கு 4, 5, 6-தடவை காதுக்குள் வைத்தால் குணப்படும். இதன் எண்ணெயைக் கீல்வாயு, வாயுப் பிடிப்பு முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம். தேகத்தில் வலிவு குறைந்தால் பூண்டு சேர்க்கலாம்.

THE PROPERTIES OF BETEL LEAVES.

வெற்றிலையின் குணங்கள்.—வெற்றிலைக்கு அடியில் கண்ட வியாதிகளை ஒழிப்பதில் அதிக சக்தி உண்டு:—

1. ஜீரண சக்தியை விருத்தி செய்வதில் இதற்கு நிகர் வேறொன்றுமில்லை.

2. வயிற்றுக் கடுப்பு, மலபந்தம், மலத்துடன் ரத்தச்சீழ் வடிதல், இவைகளுக்கு ஏழு வெற்றிலையுடன் ஒரு நாட்டுப் பாக்கைச்சேர்த்து ஒரு நாளைக்கு ஐந்து தரம்போட்டுக் கொண்டால் அந்த வியாதிகள் இரண்டே நாளில் சௌக்கியமாகிவிடும்.

3. பார்வைக் குறைவு, ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி, உள்ளவர்கள் வெற்றிலையைத் தினம் உபயோகிக்கவேண்டும்.

4. தேள் கொட்டினதற்கும் கடித்ததற்கும் வசம்புத்தூளை வெற்றிலைச்சாற்றுடன் சேர்த்து அரைத்து முப்பது நிமிஷத்திற்கு ஒருதரம் பூசினால் வலியிராது.

5. தெரியாமல் மண்ணெண்ணெயைக் குடித்தவர்கள், வீசம்படி வெற்றிலைச் சாற்றை பசுமோருடன் கலந்து சாப்பிட்டால் மிகவும் நல்லது. பத்து நிமிஷத்தில் குணமாகும்.

6. நீடித்த ஆயுளை விரும்புகிறவர்கள் வெற்றிலையை ஒரு நாளும் கைவிடார்கள்.

எப்பொழுதும் ரஸத்தை உள்விழுங்கிச் சக்கையை உமிழ்ந்து விடவேண்டும்.

OPHTHALMIA.

கண்வலி.—எலுமிச்சம்பழ ரஸத்தில் படிக்காரத்தைச்சுட்டு பொடிபண்ணிப் போட்டுக் கலக்கிக் கண்வலிக்கு உபயோகித்தல் நல்ல மருந்தாகும்.

COTTON SEED FLOUR.

பருத்திக்கொட்டை மாவு.—கோதுமை மாவை விடப் பருத்திக்கொட்டை மாவு உடம்புக்குப் புஷ்டி தரக் கூடியதென்று மிஸ்டர் அலிஸன் என்பவர் பரிசோதித்துப் பத்திரிகைகளுக்கு எழுதியிக்கிறார். இறைச்சியைப்போல பருத்திக்கொட்டை மாவு மஸ்துள்ளதாய் இருப்பதோடு, உடம்புக்கொத்ததாயும் கோதுமை மாவைவிட எளிதில் ஜீரணமாகக் கூடியதாயும் இருக்கிறதாம். அமெரிக்காவில் டல்லாஸ் டிஸ்டிரிக்டில் ஜனங்கள் அநேகமாய் கோதுமையை விட்டு விட்டுப் பருத்திக்கொட்டை மாவை உபயோகிக்கிறார்களாம். இந்த மாவை உண்டுபண்ணும் பொருட்டு மிஸ்டர் அலிஸன் ஒரு பாக்டரி அதாவது தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறாராம். இந்த மாவு தயார் செய்வதற்குக் கோதுமை தயார் செய்வதில் பாதிச் செலவே ஆகுமென்று சொல்லுகிறார்.

KEROSINE OIL AND PLAGUE.

கெரோஸின் எண்ணெயும் பிளேக்கும்.—பிளேக் நோய்பரவியிருக்கிறகாலத்தில் மண்ணெண்ணெயை வீடுகளில் தெளிப்பதினால் அந்த நோய் பரவாதபடி தடுக்கலாமென்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இந்த நோயால் அனேகர் மாண்டபோது, மண்ணெண்ணெய் உற்பத்தியான பாக்கூ என்கிற ஜில்லாவில் இது பிரவேசிக்கவில்லையாம். ஆகையால்தான் மண்ணெண்ணெய்க்குப் பிளேக் நோயைத் தடுக்கும் சக்தி உண்டென்று சொல்லுவது.

FLATULENT DISPEPSIA.

வாயுப் பொருமலான அஜீரணத்துக்கு.—கொஞ்சம் சர்க்கரையிலாவது ஒரு ரொட்டித் துண்டத்திலாவது மூன்று சொட்டு கஜபதி எண்ணெயை விட்டுத் தின்றால் வாயுப் பொருமலினால் உண்டான அஜீரணம் நிவர்த்தியாகும். இந்த எண்ணெய் வாய்க்கு ரம்மியமாகவுமிருக்கும்.

PERSONAL NOTES.

மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

CORONATION OF OUR EMPEROR.

நமது சக்ரவர்த்தியின் பட்டாபிஷேகம்.—அடுத்த வருஷம் ஜூன் மாஸத்தில் நமது சக்ரவர்த்தியின் பட்டாபிஷேகம் நடக்கும். எந்தத்தேதி என்று இன்னும் ஏற்படவில்லை.

THE ETTAYAPURAM ZEMINDAR.

எட்டியாபுரம் ஜமீன்தார்.—காலஞ்சென்ற நமது எட்வர்ட் அரசரின் ஆட்சிக்கறிகுறியாக எட்டியாபுரம் இராஜா அவர்கள் தமது ஹைஸ்கூலில் நாளது ஜூலை௴ 1௳ முதல் ஏழைப்பிள்ளைகள் சம்பளமில்லாமல் படிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்.

THE MAHARAJAH OF TRAVANCORE.

திருவாங்கூர் மகாராஜா.—திருவாங்கூர் மகாராஜா ஆடிமாதம் 8-ந்தேதியன்று கன்னியாகுமாரிக்குப் புறப்பட்டுப்போகிறார். அவர் அங்கே இரண்டு வாரகாலம் தாமதிப்பார். மகாராஜாவும் அவருடைய பரிவாரமும் கன்னியாகுமாரிக்கு மோட்டார் வண்டிகளில் போவார்களாம்.

MILITARY TITLES TO NATIVE RULERS.

தேசமன்னர்களுக்கு ராணுவப் பட்டங்கள்.—ஜார்ஜ் சக்ரவர்த்தியின் பிறந்த நாளன்று 3 தேசமன்னர்களுக்கு ராணுவப் பட்டங்கள் கொடுக்கப்பட்டன. ஹைதராபாத் நிஜாமுக்கு ஒரு "லெப்டினண்ட் ஜெனரல்" பட்டமும், மைஸூர் மகாராஜாவுக்குக் ‘கர்னல்" பட்டமும், ஏற்கனவே "மேஜர்." பட்டம் பெற்றிருந்த சிர்மூர் ராஜாவுக்கு "லெப்டினன்ட் கர்னல்" பட்டமும் கிடைத்தன.

THE KAISER AND HORSE RACING.

கெயிஸரும் குதிரைப் பந்தயமும்.—ஜெர்மனி தேசத்து அரசரைக் கெயிஸர் என்று சொல்வது வழக்கம். இப்பொழுது ஜெர்மனியை ஆண்டுவரும் கெயிஸர் இது வரையில் குதிரைப் பந்தயங்களில் தலையிட்டுக் கொண்டதில்லை. இப்பொழுது குதிரைப் பந்தய விஷயங்களில் முதன்மையாயுள்ள ஒரு சங்கத்துக்கு பரிபாலகராய்விட்டாராம்.

THE MAHARAJA OF BARODA.

பரோடா மகாராஜா.—பரோடா மகாராஜா பரோடாவை விட்டுப் புறப்பட்டுச் சுற்றுப்பிரயாணமாய்ப் போயிருக்கிறாரென்று நாம் முன்னமேயே சொல்லியிருக்கிறோம். அவர் இப்போது லண்டன் போய்ச் சேர்ந்திருக்கிறாரென்றும், லண்டனில் அவர் இந்தியா மந்திரி லார்ட் மார்லியையும் நம்முடைய சக்ரவர்த்தியையும் போய்ப்பார்த்துப் பேசிக்கொண்டிருந்தாரென்றும் தெரிகிறது.

MR. DABHOVAKAR.

மிஸ்டர் தபோவகர்.—பம்பாயிலுள்ள தபோவகர் என்னும் ஒரு செல்வவான் தன்னுடைய தாயாரின் ஞாபகசின்னமாக சரஸ்வத் மாணாக்கர்களின் படிப்பு உதவிக்காக லக்ஷம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார்கள்.

SIR CHARLES HARDINGE.

ஸர் சார்லஸ் ஹார்டிஞ்சு.—புதிய ராஜ ப்ரதிநிதி ஸர் சார்லஸ் ஹார்டிஞ்சு அடுத்த நவம்பர்மாதம் 3௳ இந்தியாவுக்கு புறப்படுகிறாரென்றும், 15ம்௳ ஏடன் வந்து சேருகிறாரென்றும், பம்பாய்க்கு அந்த மாதம் 18-ம்௳ வந்து சேருகிறாரென்றும், அந்த ஊரில் ஒரு நாள் தாமதித்து விட்டு 19-ம்௳யன்று புறப்பட்டுக் கல்கத்தாவுக்கு அந்த மாதம் 21-ம்௳ வந்து சேர்ந்து மறுநாள் ராஜ ப்ரதிநிதி ஸ்தானத்தை ஒப்புக்கொண்டு விடுவாரென்றும் தெரியவருகிறது.

THE KING'S CIVIL LIST.

ராஜ குடும்பச்செலவு.—காலஞ்சென்ற எட்வர்ட், சக்ரவர்த்தியாயிருந்தபொழுது அவருடைய குடும்பச்செலவுக்காக, வருஷம் ஒன்றுக்கு 6,21,000, பவுன் பார்லிமெண்டார் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது ஜார்ஜ் சக்ரவர்த்திக்கு, 6,340,00, பவுன் கொடுப்பார்கள். இதில் 70,000, பவுன் ஜார்ஜ் சக்ரவர்த்தியின் தாயாராகிய அலெக்ஸாண்ட்ராவுக்குச்சேரவேண்டியது. சக்ரவர்த்தியின் ஒவ்வொரு பிள்ளைக்கும் 10,000, பவுனும், ஒவ்வொரு பெண்ணுக்கும் 6,000, பவுனும் சேரவேண்டியது. பிள்ளைகளுக்குக் கல்யாணம் ஆகும் பக்ஷத்தில் அவர்களுக்கு 25,000, பவுன் வீதம் சேரவேணும். சக்ரவர்த்தியின் மூத்த குமாரனுக்குக் கல்யாணமானால் அவருடைய மனைவிக்கு, 10,000, பவுன் பிரத்தியேகமாய்ச் சேரவேணும்.

NEWS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

INDIAN NEWS.

இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

THE MANGO.

மாமரம்.—ஹிந்து நாட்டின் புராணங்களும், வேதங்களும் இது லங்கையிலிருந்து ஹனுமாரால் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லுகின்றன. சீதாதேவியை லங்கையிலிருந்து மீட்டுக் கொண்டுவரப்போன ஹனுமாரானவர் அங்கே ஒரு மாந்தோப்பைக் கண்டு, தன் பரிவாரங்களுடன் அதில் சென்று பழங்களையெல்லாம் தின்று, கொட்டைகளை ஸமுத்திரத்தில் எறிய, அந்த விதைகள் அலைகளால் இந்தத் தேசத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கப் பட்டனவென்று பூர்வ கிரந்தங்களால் தெரியவருகிறது. மாவிலை ஹிந்துக்களால் மிகவும் சிறந்ததென்று நன்கு மதிக்கப்படுகிறகிறது. காளிதாஸர் மன்மதபாணங்களில் மாமலர் ஒன்றாகத் தாம் எழுதிய காவியங்களில் மிகவும் வர்ணித்துப் பாடி இருக்கிறார்.

THE EDWARD MEMORIAL.

எட்வர்டின் ஞாபகச் சின்னம்.—காலம் சென்ற எட்வர்ட் சக்ரவர்த்திக்கு ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இந்தியாவில் அங்கங்கே பல கமிட்டிகள் ஏற்பாடாகி பணம் வசூலாகிவருகிறது. சென்னை ராஜதானி கமிட்டியார் க்ஷயரோகிகளுக்கு ஒரு ஆஸ்பத்திரி கட்டுவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். மாகாண ஞாபகக் குறிகளைத் தவிர, இந்தியா முழுவதுக்குமாகச் சேர்ந்து டில்லி நகரத்தில் சக்ரவர்த்தியின் கற்சிலை ஒன்றும் ஏற்பாடாகி யிருக்கிறது. இதற்கு 5 லக்ஷம் ரூபாய் பிடிக்கும்.

A SEA VOYAGE.

ஒரு கடல் யாத்திரை.—சேட் என்றும், பாட்டியா என்றும், பானியா என்றும் பலவாறாக அழைக்கப்படும் வைசிய வகுப்பைச்சார்ந்த ஒரு வகுப்பார் பம்பாய் மாகாணத்தில் செட்டும் சீரும் செல்வாக்குமாய் பிரபல வர்த்தகங்களில் தலையிட்டுக்கொண்டு நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். இவர்கள் ஆசார விஷயங்களில் அதிக அபிமான முள்ளவர்கள் போல் காண்கிறது. ஆகவே தங்கள் ஆசார அனுஷ்டானங்களுக்குத் தாழ்வு ஏற்படாதபடி பிரத்தியேகமாக ஒரு ஸ்டீமர் தயாரித்துக்கொண்டு அதில் 400 பேர் வரையில் பிரயாணமாகி அடுத்த வருஷம் நடக்கப்போகிற நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியின் பட்டாபிஷேகத்திற்காகப்போய் வருகிறதென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

WHITE ELEPHANT.

வெள்ளை யானை.—பர்மா கவர்ன்மெண்டார் அந்த நாட்டு பௌத்த மதஸ்தர்களுக்கு ஸின்பியாயின் என்ற இடத்தில் பிடிக்கப்பட்ட வெள்ளை யானையை இனாமாய்க் கொடுத்தார்கள். அந்த யானைக் குட்டியை இந்த மாதம் 23-ந் தேதியன்று சாயங்காலம் ரங்கூன் ரெயில்வே ஸ்டேஷனில் கொண்டு வந்து இறக்கினார்கள். அப்போது அது கோயிலுக்கு விட்ட யானைக்குட்டியானபடியால் அது வந்து இறங்குவதைப் பார்ப்பதற்கு ரங்கூன் ஜனங்கள் ஆயிரக்கணக்காய் ரெயில்வே ஸ்டேஷனில் வந்து கூடியிருந்தார்கள். அந்த யானைக்குட்டியை 4 சகடைகள் போட்ட ஒரு படிச்சட்டத்தில் வைத்து ரங்கூன் தெருக்களின் வழியாய் ஷ்விதேகன் கோயிலுக்கு இழுத்துக்கொண்டு போனார்கள். பெஷாவரில் கண்டெடுக்கப்பட்ட கௌதம புத்திரன் ஹஸ்திச்சாம்பல் இந்தியாவிலிருந்து எவ்வளவு ஆடம்பரத்துடன் ரங்கூனுக்கு எடுத்துக்கொண்டு போகப்பட்டதோ அவ்வளவு ஆடம்பரத்துடன் அந்த யானைக் குட்டியும் ஷ்விதேகன் ஆலயத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டது.

IMPORT DUTY ON CIGARETTES.

ஸிகரெட்டுகளுக்கு இறக்குமதி வரி.—இந்த நாட்டில் வந்து இறக்குமதியாகும் ஸிகரெட்டுகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் இறக்குமதி வரி 1910-ம் வருஷத்து இந்திய வரி விகிதத்திருத்தச் சட்டத்தின்படி, அந்த ஸிகரெட்டுகள் சுற்றப்பட்டு வரும் காகிதத்தின் நிறையையும் சேர்த்துத்தான் விதிக்கப்படுமென்று கடற்சுங்க அதிகாரிகள் வங்காள நாட்டில் விதித்ததாய்த் தெரிகிறது. இங்கிலாந்தில் ஸிகரெட்டுகள் அடக்கஞ் செய்யப்பட்டுவரும் காகிதம் நீங்கலாகத்தான் ஸிகரெட்டுகள் நிறைபோடப்பட்டு வரி விதிக்கப்படுவது வழக்கம். அதுபற்றி ஸிகரெட்டுகளுக்கு இறக்குமதி வரி விதிக்கப்படும் முறை வங்காள வியாபாரச் சபையாரின் தகவலுக்கு வந்தது. அவர்கள் வங்காளத்து ரெவினியூ போர்டுக்கு இந்த நாட்டில் இறக்குமதியாகும் ஸிகரெட்டுகளுக்கு அவைகள் அடக்கம் செய்யப்பட்டு வருகிற காகிதங்களின் நிறையைத் தள்ளித்தான் இறக்குமதி வரி விதிக்க வேணுமென்பதாக உத்தரவாக வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள்.

SELLING YOUNG GIRLS.

சிறு பெண்களை விலைக்கு விற்பது.—புனாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் குழந்தைகள் சம்ரக்ஷண சங்கம் சமீபத்தில் கூடினபோது அதனுடைய ஸெக்ரெடெரியாகிய டாக்டர் மான், சிறு பெண்களை விலைக்கு விற்கும் வழக்கம் சாதாரணமாயிருக்கிறதென்று சொல்லி அதற்கு ஒரு திருஷ்டாந்தமும் சொன்னார். 14 வயதுள்ள ஒரு பெண்ணை, அவளுடைய தகப்பன் ஒரு பட்டாணி மகமதியனுக்குக் கொடுக்கவேண்டியிருந்த கடனுக்காக, 8 ரூபாய்க்கு விற்பதாக முடிவு செய்திருந்தானென்றும்: இந்தப்பெண்ணைப் பார்த்த மகமதியன் அவளைத் தனக்குக் கொடுத்தால் கடனைக் கேட்பதில்லை என்று சொன்னானென்றும், நல்ல வேளையாய் ஸமயத்தில் இந்த ஸமாசாரம் மேற்படி சங்கத்தாருக்கு எட்டி முடிவு செய்திருந்தபடி நடவாமல் தடுக்கப்பட்டதென்றும் டாக்டர் மான் சொன்னார். இந்தமாதிரி எங்கேயாவது நடந்தால் தெரிந்த ஜனங்கள் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவித்தால் இதைத் தடுத்துவிடலாம். அல்லது புனா சங்கத்தைப்போல் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் அதற்கு அறிவித்தாலும் போதும். கீழ் ஜாதிகளிலேயே இந்த வழக்கம் விசேஷமாயிருப்பதால் இதைக் கண்டுபிடிப்பதும் தடுப்பதும் கஷ்டம்.

LORD MINTO'S CHILDREN'S FETE.

லார்ட் மிண்டோவும் குழந்தைகளுக்கு விருந்தும்.—நமது ராஜப்ரதிநிதியாகிய லார்ட் மிண்டோ தாம் ஸிம்லாவை விட்டு புறப்படுவதற்கு முன்னே ஸிம்லா பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் சிறுவர்களையும் சிறுமிகளையும் தம்முடைய மாளிகைக்கு வரவழைத்து அவர்களுக்கு சிற்றுண்டிகள் முதலியவைகள் கொடுத்து அவர்களிடம் விடை பெற்றுக்கொள்வதாய்த் தீர்மானித்திருக்கிறார். அவர் ஆகஸ்டு மாஸம் 15-ந்தேதி கான்வெண்ட் ஸ்கூல் சிறுவர்களையும் சிறுமிகளையும் ஒரு தோட்டக் கச்சேரிக்கு அழைத்து உபசரிக்கப் போகிறார். மற்றப் பள்ளிக்கூடச்சிறுவர் சிறுமிகளையும் அதே மாதிரி உபசரிப்பார். பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் குழந்தைகளைத் தோட்டக் கச்சேரிகளுக்கு வரவழைத்து அவர்களை த்ருப்தி செய்ய வேண்டுமென்று லார்ட் மிண்டோவுக்குத் தோற்றியது மிகவும் சிலாகிக்கத்தக்கது. பள்ளிக்கூடச்சிறுவர்கள் தங்களுக்கு ராஜப்ரதிநிதியால் செய்யப்படும் விருந்தை வெகு நாளைக்கு ஞாபகத்தில் வைத்து அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். தவிரவும் அந்தப்பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமிகளின் பெற்றோர்களும் ராஜப்ரதிநிதி தங்கள் குழந்தைகளிடம் அருமை பாராட்டியதை மறவாமல் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்.

THE ALLAHABAD EXHIBITION.

அலகாபாத்துப் பொருட் காட்சி.—வரும் அலகாபாத்துப் பொருட் காட்சியில் எத்தனையோ வகையான பொருள்கள் வைக்கப்படப் போகின்றன. அவைகளோடு இந்தியாவின் சித்திரக்கலைப்பொருள்களும் வைக்கப்படுமென்றும், அந்தப்பொருள்களைச் சேகரித்து வரிசைப்படுத்திக் காட்சியில் வைக்கும் பொறுப்பை நமது சிலோன்சகோதரர்டாக்டர் குமாரசாமி ஏற்றுக் கொண்டிருக்கிறாரென்றும், தெரியவருகிறது. டாக்டர் குமாரசாமி சிலோன் வாஸியானாலும், தமிழ் சமூகத்தில் ஒருவராய் இந்தியாவில் அளவற்ற அபிமானம் வைத்திருப்பவர். நம்முன்னோர் நாகரிகமாகிய ஆரிய நாகரிகத்தைப் புகழ்ந்தும் தற்கால நாகரிகத்தில் பல குற்றங்கள் கண்டும் இவர் அடிக்கடி பேசியும் எழுதியும் வருகிறார். இவர் சித்திரக்கலா நிபுணர். அதாவது, சிற்பம், வர்ணச்சித்திரம், கீதம், முதலிய சித்திரக் கலைகளை ஐரோப்பிய நாடுகளில் நன்றாய்க் கற்றவர். இந்தியாவின் பூர்வீக சித்திரக் கலைகளை அபிமான புத்தியோடு சோதித்துத் தற்காலம் இந்தியர் ஐரோப்பியரைப் பார்த்து இந்தக் கலைகளைக் கற்று வருவது இந்தியாவுக்குப் பெருமையல்லவென்று இவர் அபிப்பிராயப்படுகிறவர். நமது சித்திரக்கலைப் பயிற்சி பூர்விகக் கலைகளை

அனுசரித்ததாயிருக்க வேண்டுமென்று போதித்து வருகிறார். அலகாபாத்துப் பொருட் காட்சியை நடத்துவோர் டாக்டர் குமாரசாமியை இந்த உத்தமமான வேலையில் அமர்த்தினது எல்லாருக்குந்திருப்தியைக் கொடுக்கும்.

EXPORT OF MUNGOOSE.

கீரிப்பிள்ளை ஏற்றுமதி.—ஜப்பானைச் சேர்ந்த ஊர்க்குத்தீவுகளில் கொடிய விஷமுள்ள பாம்புகளும், எலிகளும் நிறைந்திருப்பதால், ஏராளமான ஜனங்கள் அடிக்கடி மாண்டுபோகிறார்கள் என்று அறிந்து ஜப்பான் கவரன்மெண்டார் ஒரு யுக்தி செய்தார்கள். அதாவது இந்தியாவிலிருந்து 29 கீரிப்பிள்ளைகளைக் கொண்டு வரும்படி செய்து, அவைகளில் ஒரு கீரிப்பிள்ளையை விஷப்பாம்பு சுற்றிக்கொண்டிருந்த ஒரு அறையில் விட்டார்கள். இந்தக் கீரிப்பிள்ளை உள்ளே நுழைந்த மாத்திரத்திலே, பாம்பின் வாசனையைக் கண்டுபிடித்து, அதின்மேல் தாக்க எத்தனித்தது. அப்போது அந்தப்பாம்பு கீரிப்பிள்ளையின் மூக்கில் ஒரு அடி போட்டதாம்; என்றாலும் கீரிப்பிள்ளை அதைச் சட்டைசெய்யாமல் அங்கே திரிந்துக்கொண்டிருந்த இரண்டு எலிகளைக் கடித்துச்சின்னபின்னமாக்கிவிட்டு மறுபடியும் அந்தப் பாம்பை எதிர்த்து தலையைப்பிடித்து ஒரேகடி கடித்துக் கொன்று விட்டதாம். பாம்பு கடித்ததினால் பலமான காயமடைந்த அந்தக்கீரிப்பிள்ளைக்கு எவ்வித கஷ்டமும் நேரவில்லையாம். ஆகையால், இந்தக்கொடிய பாம்புகளைத் தொலைப்பதற்கு இதுதான் சரியான முறையென்றுகண்டு மிகுந்த 28 கீரிப்பிள்ளைகளையும் அந்த ஊரிலுள்ள வீடுகளில் விட்டிருக்கிறார்களாம். இதன் பிரயோஜனத்தையறிந்து கொண்டதின் பேரில் இன்னும் அதிகமான கீரிப்பிள்ளைகளை இந்தியாவிலிருந்துகொண்டுவரத் தீர்மானித் திருக்கிறார்களாம்.

BERI-BERI AND BURMA RICE.

பர்மா அரிசியும் பெரி-பெரி வியாதியும்.—பர்மா நாட்டு அரிசி இந்தியாவுக்கும் வேறு சில இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதுபோல பஸிபிக் சமுத்திரத்தில் இங்கிலீஷ்காரருக்குச் சொந்தமாயுள்ள ஹாங்காங்க் தீவுக்கும் அனுப்பப்படுகிறது. அந்தக் கவர்ன்மெண்டார் பர்மா நாட்டிலிருந்து தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அரிசி வெகு பளபளப்பா யிருக்கும்படி நன்றாய்த் தீட்டப் பட்டிருக்கிறபடியால் அது பெரி-பெரி நோய் பரவுவதற்கு அனுகூலமாயிருப்பதாய்த் தெரிய வருகிறதென்றும், அதுபற்றி பர்மா அரிசியின் வரவையே தடுத்து விடுவதைப்பற்றி யோசிக்கும்படியா யிருக்குமென்றும் பர்மா கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்தினார்கள். அந்த மாகாண கவர்ன்மெண்டார் ரங்கூன் வியாபாரச்சபையாருக்கு அந்தஸமாசாரத்தைத் தெரிவித்து அரிசி குத்தும் யந்திரத் தொழிற்சாலைக் காரர்களை மீட்டிங் கூட்டி மழுக்கல் அரிசியாய் ஏற்றுமதி செய்யக்கூடாதா என்ற பாகத்தைக் கவனிக்கும்படியாய் தூண்ட முடியுமாவென்று கேட்டுவிட்டிருந்தார்கள். பர்மா வியாபாரச் சபையார் கடைசியாய்க் கூடிய மீட்டிங்கில் தங்கள் சபை சப்கமிட்டியார் பளபளப்பான அரிசிக்கு மாதிரியையும் மழுக்கல் அரிசிக்கு மாதிரியையும் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பி ஹாங்காங் கவர்ன்மெண்டார் பளபளப்பு அரிசிக்கு ஆட்சேபம் சொன்னால் மழுக்கல் அரிசி அந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதாய்த் தீர்மானித்து கவர்ன்மெண்டுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

THE VIDYA DHARMA PARIPALANA SABHA.

வித்யா தர்ம பரிபாலன ஸபை.—போன மேமீ 8௳-யில் மதுரையில் "வித்யாதர்ம பரிபாலன ஸபை" என்று பெயருள்ள ஒரு ஸபை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதன் முக்கியமான கருத்துக்களாவன :—

1. ஏழைப்பையன்களுக்கு கல்வி கற்பிக்கிற விஷயத்தில் உதவி செய்தல்,
2. மதுரையில் உள்ள பள்ளிக்கூடங்களில், சமய முறைகளைக் கற்பிக்கும்படியாக உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுத்தல் முதலிய உதவி செய்தல்,
3. மதுரையில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு திரவிய ஸகாயம் தேடல்,
4. ஏழைகளுக்கு அன்னமிடல்,
5. இன்னும் ஸபையாரால் தீர்மானிக்கப்படும் நன்மையான காரியங்களைச் செய்தல்.

இந்த ஸபைக்கு மகா-௱-௱-ஸ்ரீ சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள் ப்ரெஸிடெண்டு ப. நாராயண அய்யர் அவர்கள் வைஸ்ப்ரெஸிடெண்டு. காலேஜ் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள் ஸெக்ரடெரி. ஏ. ரெங்கசாமி அய்யர் ட்ரெஷரர்.

ஸபைக்கு வருவாய் (1) பிடி அரிசிக்கலயம் போட்டு வசூலித்தல் (2) சுபகாரியங்கள் நடக்கும் போதும், உத்ஸவாதிகள் நடக்கும் போதும், அவரவர்களால் இயன்ற மட்டில் திரவிய ஸகாயங்கள் செய்தல், (3) வியாபாரிகள் முதலியவர்கள் உண்டியல் பெட்டி வைத்து தினம் தினம் லாபத்தின் மேல், தர்மத்திற்கு சொற்பமாவது உபகரித்தல் (4) விவஸாய அறுப்புக்காலங்களில், களத்தில் தான்ய மூலமாக வசூலித்தல், (5) ஸபையில் அங்கத்தினராகச்சேருகிறவர்கள், மாஸம் ஒன்றுக்கு 2-அணாவுக்குக் குறையாமல் சந்தாக்கொடுத்தல் (6) பெரியதனவான்களிடத்தில் பணம் வசூலித்தல் முதலியவையாம்.

A RUNNING TRAIN THEFT.

ஓடும் ரயில்வண்டியில் திருட்டு.—கீழ் இந்தியா இருப்புப்பாதையில் ஜமால்பூர் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் ரெயில்வே உத்தியோகஸ்தன் ஒருவன் பெண்பிள்ளை போல் வேஷம் போட்டுக்கொண்டு, ஒரு பெண் பிள்ளை தன் குழந்தைகளோடு உட்கார்ந்திருந்த வண்டியில் புகுந்து குழந்தைகள் எல்லாம் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து அந்த ஸ்திரீயின் கழுத்தைப் பிடித்து நெறிக்கப் பார்த்தான். அந்த ஸ்திரீ அவனைத் திமிரப் பார்த்துப் போட்ட சப்தத்தில் குழந்தைகள் விழித்துக்கொண்டு கூச்சலிட்டன. உடனே அவன் அந்தக் குழந்தைகளைத் தூக்கி வண்டி ஓடிக்கொண்டே யிருக்கும்போது வெளியே எறிந்தான். அந்த ஸ்திரீயை கத்தி கொண்டு குத்தி வீழ்த்தினான். அவளுடைய நகைகளை யெல்லாம் திருடிக்கொண்டு அடுத்த ஸ்டேஷனில் பின்பக்கமாய் இறங்கினான். அதற்கு முன் அம்மாதிரி நடந்த திருட்டுகளைக் கண்டுபிடிப்பதற்காகவே அந்த வண்டியில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த ட்ராபிக்சூபரின்டெண்டெண்ட் அவன் இறங்கினதைக் கண்டு அவர் இரண்டு ரெயில்வே போர்ட்டர்களை விட்டு அவனைப் பிடிக்கச்சொன்னார். அவர்கள் அவனை ஒருமைல் தூரம் துரத்திக்கொண்டு போய்ப் பிடித்தார்கள். ஆனால் அந்தத் திருடன் அவர்கள் இருவரில் ஒருவனைக் குத்திவிட்டுத்தான் அகப்பட்டுக்கொண்டான். அந்த ஸ்திரீயும் அவள் குழந்தைகளும் ரெயில்வே போர்ட்டரும் சாகும் தருவாயிலிருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் ரெயில்வே போலீஸ் சூபரிண்டெண்டெண்ட் விசாரணைசெய்யப் புறப்பட்டுப் போயிருக்கிறார்.

THE DHARMA RAKSHANA SABHA.

தர்ம ரக்ஷண ஸபை.—தர்ம ரக்ஷண ஸபை என்று ஒரு ஸபை சென்னையில் மைலாப்பூரில் 1907-௵ பிப்ரவரி-மீ 7௳ முதல் சில கனவான்கள் ஸ்தாபித்திருக்கிறார்கள். அது மேற்படி௵ மார்ச்சுமீ 5௳ இந்திய கவர்ன்மெண்டு 1860-௵த்திய 21-ம் சட்டவிதி முறைப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றிருக்கிறது. அந்த ஸபையின் முக்கியமான நோக்கங்களாவன :—

(1) ஹிந்துமத ஸம்பந்தமான தேவஸ்தானங்கள், கட்டளைகள், மடங்கள், சத்திரங்கள் மற்றுமுள்ள ஹிந்து ஸம்பந்தமானவும் அல்லது பொதுவாய் தர்மத்துக்குரித்தான இதர ஆதினங்களுடையவும் ஸொத்துக்களைப் பாதுகாத்தல், அவைகளை அபிவிருத்தி செய்தல்.

(2) மேற்கண்ட தர்மங்களுக்கு ஏற்பட்டுள்ள ஸொத்துக்களையும், திரவியங்களையும் அந்தந்த தர்மங்களின் பிரயோஜனத்திற்காக வினியோகித்து வரும்படி செய்வித்தல்.

(3) அந்தந்த தர்மங்களின் நோக்கங்களுக்கு விரோதயில்லாமல் வேறு ஹிந்துமத ஸம்பந்தமான இதர தர்மகாரியங்களுக்கு முன்குறித்த தர்மங்களுக்கு ஏற்பட்ட பணங்களை உபயோகமாகும்படி செய்வித்தல்.

(4) ஹிந்துமதம், தத்வசாஸ்திரம், தர்மசாஸ்திரம், ஆகம சாஸ்திரம் முதலானவைகளை அபிவிருத்தி செய்தல்.

(5) ஹிந்துமதப் பொதுவான தர்மங்களையும் அவைகள் ஸம்பந்தமான ஆலயங்களையும், மேற்பார்த்தல்.

(6) மேற்கண்ட தர்மங்களையும், ஆலயங்களையும், அவைகளின் கருத்துக்களையும் கொண்டு செலுத்த ஏற்பட்டுள்ள சட்டங்களில் அனுகூலமானவும் அவசியமானவுமான மாறுதல்களை உண்டுபண்ணுவித்துக்கொள்ளுதல்.

(7) மேலும், மேற்கண்ட கருத்துக்கள் நேர்மையாய் நடைபெறும்படியாய் அவசியமான மற்றக் காரியங்களைச் செய்வித்தல் முதலியனவுமாம்.

பொது ஸபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் வருஷம் தோறும் ரூ. 3 சந்தா முன்பணமாகக் கொடுத்துவரவேண்டும். அல்லது ஒரே மொத்தமாக ரூ. 50 கொடுத்துவிடலாம்.

RAILWAY TO TRIVANDRUM.

திருவனந்தபுரத்திற்கு ரெயில்வே.—இப்பொழுது தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியார் கொல்லம் வரையிலும் போக்கு வரத்து செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் திருவாங்கூர் மகாராஜா அவர்கள் கொல்லத்திலிருந்து திருவனந்தபுரம் வரையிலும் ரெயில் போடுவதற்காக தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாரிடம் கலந்துகொண்டு இப்பொழுது லயன் ஸர்வே நடக்கிறது.

FOREIGN NEWS.

அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

ROADS IN TURKEY.

துருக்கியில் சாலைகள்.—துருக்கி அரசாக்ஷியார் 5,000, மைல் சாலை ரஸ்தாக்கள் போடும்படி, ப்ரான்ஸ் தேசத்து எஞ்சினியர்களுக்கு கண்ட்ராக்ட்டு விட்டிருக்கிறார்கள்.

GERMAN LABOURERS.

ஜெர்மனி தேசத்துக் கூலியாட்கள்.—ஜெர்மனி தேசத்துக் கூலியாட்கள் எவரும் ரொம்ப தரித்திரத்தால் கஷ்டப்படுகிற ஸ்திதியில் இல்லையாம். அவர்களுக்கு சீக்கு வந்தாலும், அவர்களைப் பார்த்துவர சரியான ஏற்பாடுகள் இருக்கின்றனவாம். இவைகளெல்லாம் அந்த தேசத்து சட்டங்களால் உண்டான அனுகூலங்கள்

CATTLE DISEASE IN ENGLAND.

இங்கிலாந்தில் கால்நடைகளுக்கு நோய்.—இங்கிலாந்தில் யார்க்ஷயரில் ஒரு பண்ணையில் கால்நடைகளுக்கு, கால் கசப்பு, வாய்க் கசப்பு கண்டிருப்பது பற்றி மிகுந்த கவலை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அந்த ஜில்லா முழுதும் பக்கத்து சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. அதோடு சீக்குக்கண்ட 123 கால்நடைகளையும் கொன்றுவிட்டார்கள்.

A CHARITY BOX.

ஒரு தர்மப்பெட்டி.—லிவர்பூல் பட்டணத்திலிருக்கிற சிறு குழந்தைகளுக்கான தரும ஆஸ்பத்திரியில் ஒரு தருமப்பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. தருமசிந்தையுள்ளவர்கள் அதில் பணம் போடும்போதெல்லாம் "உனக்கு வந்தனம்" என்கிற வார்த்தையை அந்தப்பெட்டி காண்பிக்கிறதாம். மின்சார விளக்கின் சூத்திரத்தினாலே இப்படிச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று தெரியவருகிறது.

ADULTERATION LAW.

கலப்படம் செய்வதைப்பற்றிய ஒரு சட்டம்.—அமெரிக்காவில் கடைச் சரக்குகளில் மோசம் அதிகமாக இருப்பதால் அதைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் உண்டாயிருக்கிறது. ஒவ்வொரு சரக்கிலும் அதன் ரஸாயன பாகங்களும் விவஸாய டிபார்ட்மெண்டு ஸர்டிபிகேட்டும் இருக்கும். இன்ஸ்பெக்டர், நோடீஸ் இல்லாமலே எந்தக் கடையிலும் புகுந்து விற்கும் பண்டங்கள் ஸர்டிபிகேட்டுக்கு ஒத்திருக்கின்றனவாவென்று பார்க்க கொஞ்சம் சரக்கைஎடுத்து ரஸாயன சாஸ்திரிக்கு அனுப்பலாம். தவறியிருக்கும்பக்ஷத்தில் தண்டனைக்கு உட்படுத்துவார்கள்.

AN AERONAUT'S FALL.

ஒரு ஆகாயக்கப்பல் பிரயாணி விழுந்தது.—ஐரோப்பாவில் ஸ்விட்ஸர்லண்டு தேசத்தில் மார்ஷி என்ற ஒரு ஆகாயக்கப்பல் பிரயாணி ஆகாயத்தில், 1,500 அடி போனதும் அவனுடைய புகைக்கூண்டு உடைந்து, ஜினீவா என்னும் ஏரியில் விழுந்தான். ஆகாயத்தில் போனபொழுது ஒரு மிதப்பையும் (தெப்பத்தையும்) கையில் கொண்டுபோயிருந்தபடியால் அதைக்கொண்டு ஏரியில் விழுந்தபோதிலும் மிதந்துகொண்டிருந்தானாம். விழுந்ததும் தண்ணியிலிருந்து அவனை கரையேற்றினார்கள். அவனுக்கு ஒருவித காயமும் இல்லை.

A NEW LAMP.

ஒரு புது விளக்கு.—சில வருஷங்களாய் மண்ணெண்ணெய் உபயோகிக்கும் விளக்குகளில் மிகுந்த பிரகாசங்கொடுக்கும் அனேகம் தினுஸான விளக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுக் கட்டிடங்களிலும், ஊர்கோலங்களிலும் விசேஷ தினங்களிலும் உபயோகப்பட்டுவருகின்றன. அவைகளில் முக்கியமானவைகள் வாஷிங்டன் கிட்ஸன் என்ற விளக்குகள். ஆனால் இவைகளுக்கு பைஸிக்கிளின் ரோதைகளில் சுற்றியுள்ள ரப்பர் டயருக்குக் காற்றுக் கொடுப்பது போலக் கொடுக்கவேண்டியது. இந்தக் கஷ்டமெல்லாம் இல்லாத ஒரு நூதனமான விளக்கு இப்போது ஸ்வீடன் தேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எண்ணெயைக் காஸ் ஆக்குகிறதற்குக் கிஞ்சித்துத் திராவகத்தை விட்டு நெருப்பைக் காட்டவேண்டியதுதான். உடனே அது எரிந்து கீழிருக்கும் மண்ணெண்ணெயை ஆவி ரூபமாக்கிவிடுகிறது. அதன் பிறகு சிறுகச் சிறுக எண்ணெயெல்லாம் அப்படியே ஆகி எரிந்துகொண்டுவருகிறது. டாங்க் (அதாவது எண்ணெய் தங்கும் இடம்) நிறைய எண்ணெய் ஊற்றினால் 16 மணிநேரம் எரியும். மணியொன்றுக்கு அரை அணாத்தான் செலவாகிறது. இந்த அதிசயமான விளக்குக்கு "ஆட்டோலக்ஸ்" அதாவது சுயஜோதி என்று பேர்.

A BIG FRUIT GARDEN.

ஒரு பெரிய பழத்தோட்டம்.—பல பிரமாண்டமான காரியங்களுக்கு அமெரிக்கா இருப்பிடமாயிருப்பதுபோல, மிகப் பெரிய பழத்தோட்டமும் அந்த கண்டத்தில்தானிருக்கிறது. மிஸ்ஸூரி மகாணத்தில் மாரஷ்பீல்ட் என்ற ஊருக்கு அருகாமையில் வைனூன்ஸ் என்ற ஒரு தோட்டமிருக்கிறது. அதில் 89,000 சீமை இலந்தை மரங்களும், 40,000 பீச்சு மரங்களும், 10,000 பேரி மரங்களும்கனிதரும்பிராயமுள்ளவைகளாய் இருக்கின்றன. இவைகளைத் தவிர பருவமடையாத சிறு செடிகள் லக்ஷக்கணக்காயிருக்கின்றன. 1240 ஏக்கரா கொண்ட அந்தத் தோட்டத்தில் மரமொன்று 10 ரூபாய்க்குமேல் மதிக்கப்படுகிறது. ஆகையால் அந்தத் தோட்டத்தை விக்கிரயம்செய்கிறதாயிருந்தால் 15 லக்ஷத்துக்குக் குறையாமல் விற்கலாம். அந்தத் தோட்டம் இருக்கிற கிராமத்தில்தானே கனிதரும் மரங்கள் 10 லக்ஷத்துக்குமேல் இருக்கின்றனவென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. சேகரிக்கப்படும் கனிகள் ரெயில் மார்க்கமாய் மற்ற பட்டணங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

JOCKEY'S PAY.

பந்தயக்குதிரை விடுகிறவனுடைய சம்பளம்.—குதிரைமேல் ஏறிச் சவாரி பண்ணுகிறவர்களெல்லாம் பந்தயக்குதிரை விடக்கூடியவர்களல்ல. அதற்கு விசேஷ அனுபோகமும், சாமர்த்தியமும், சமயோசிதமும் வேண்டும். பந்தயக்குதிரைகள் விடுகிறவர்களுக்கு இங்கிலீஷ் பாஷையில் "ஜாக்கி" என்று பேர். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பந்தயக் குதிரை வைத்திருக்கிற சீமான்களிடத்தில் இந்த ஜாக்கிகள் சம்பளத்துக்கிருக்கிறார்கள். ஏதாவது வேறொருவர் குதிரையை விடுவதாயிருந்தால் அதற்காக ஜாக்கிகளுக்குத் தனித்தொகை யொன்றும் கொடுக்கிறதுண்டு. ஆகையால் இந்த ஜாக்கிகளில் சிலர் பணக்காரர்களாயும் இருக்கிறார்கள். மாயர் என்ற பிரசித்தியடைந்த ஓர் ஜாக்கிக்கு டெர்பி பந்தயத்தில் லெம்பெர்க் என்ற பந்தயக் குதிரையை விட 3,000 பவுன் கொடுக்க வந்தார்கள். அவன் அதை வேண்டாமென்று சொல்லிப்போட்டு கெலித்தால் 5,000 பவுன் கொடுக்கவேணும் என்று வேறொரு குதிரையை ஒப்புக்கொண்டானாம்.

MEDICAL STUDENTS IN LONDON.

லண்டனில் வைத்தியம் படிக்கும் பையன்கள்.—வைத்தியத்துக்கு படிக்கும் பையன்கள் ஆஸ்பத்திரிகளில்போய் சீக்காளிகளைப்பார்த்து வைத்திய விஷயங்களை அறிந்துகொள்வது வழக்கம். அநேக ஹிந்துமாணாக்கர்கள் தற்காலம் லண்டனுக்குப்போய் வைத்தியப் படிப்பு படித்து வருகிறார்கள். இவர்களெல்லாம் அங்கேயுள்ள ஆஸ்பத்திரிகளில் வேலை கற்றுக்கொள்வதற்குப் போவதால் ஆஸ்பத்திரிகளில் ரொம்ப தொந்தரவாயிருக்கிறதாம். ஆகையால் ஒரு ஆஸ்பத்திரியில் இந்திய மாணாக்கர்கள் ஜாஸ்தியாய் வாராமல் சில நிபந்தனைகள் ஏற்படுத்தப் போகிறார்களாம்.

A MAGNIFICIENT DIAMOND.

ஒரு திவ்யமான வைரக்கல்.—இங்கிலீஷ் அரசாட்சிக்கு உள்பட்டு தென் ஆப்பிரிக்காவிலுள்ள சுய அரசாட்சி மாகாணங்களெல்லாம், தென் ஆப்பிரிக்கா யூனியன் என்று ஒன்றாகச் சமீபத்தில் சேர்ந்தன. இப்படிச் சேர்ந்த சமயத்தின் ஞாபக சின்னமாக தென் ஆப்பிரிக்கா கமிஷனர், இங்கிலாந்துக்கு நேரேபோய் சக்ரவர்த்தினியைப்பார்த்து ஒரு திவ்யமான வைரக்கல் சக்ரவர்த்தினிக்கு கொடுத்தாராம்.

HEAD NORTHWARD.

வடக்கே தலை.—ஜப்பானியர்கள் ஒரு போதும் வடக்குத் திசையில் தலைவைத்துத் தூங்குவதில்லையாம். ஏனென்றால், ஜப்பானில் இறந்து போகிறவர்களின் தலைப் பக்கத்தை வடபுறமாகவைத்தே புதைப்பது வழக்கமாம். ஆதலால் வடக்கு நோக்கித் தலை வைத்துப் படுத்தால் அச்சான்யம். வெளியூரிலிருந்து வருகிற விருந்தாளிகளுக்கு இந்த வழக்கத்தைத் தெரிவிக்கவும், வடக்குத் திசையை எளிதில் அறிந்துகொள்ளவும் சாதகமாக ஜப்பானில் உள்ள ஒவ்வொரு பெரிய வீடுகளிலும் ஹோட்டல்களிலும் "காம்பஸ்" என்னும் திசையறியும் கருவி வைக்கப்பட்டிருக்கிறதாம். இந்தக் கருவி வீட்டின் மேற்கூரையில் வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஹிந்துக்கள் வடக்குத் திசையில் தலை வைத்துப் படுக்கக்கூடாதென்னும் கொள்கையுடையவர்கள் என்பது "உத்தமம் கிழக்கு, ஓங்குயிர் வளருந் தெற்கு, மத்திமம் மேற்கு, மரணமாம் வடக்குத் திக்கே" என்னும் வாக்கியத்தால் புலப்படுகிறது. இது விஷயத்தில் ஜப்பானியரும் இந்தியரும் ஒரேவிதமான கொள்கையை உடையவர்களாயிருப்பது கவனிக்கத் தக்கது.

SEASON.

கால ஸ்திதி.

RAINFALL.

மழை.—ஏப்ரல்மீ 1-தேதியிலிருந்து ஆகஸ்டுமீ முதல் தேதி வரையில் பெய்தமழை அளவும், இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், கீழே அங்குலக் கணக்காகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	22	16
வால்டேர்	18	11
காக்கிநாடா	14	11
மசூலிப்பட்டணம்	16	12
நெல்லூர்	7	5
மதராஸ்	10	8
கூடலூர்	5	6
நாகப்பட்டணம்	9	5
பாம்பன்	5	3
கொழும்பு	21	36
திருவநந்தபுரம்	32	33
கொச்சி	69	67
கள்ளிக்கோட்டை	57	76
மங்களூர்	67	80
மெர்க்காரா	59	75
ஐதராபாத்	10	13
ரெய்ச்சூர்	6	10
பல்லாரி	8	6
கர்நூல்	7	10
கடப்பை	11	9
ஹாஸ்ஸான்	17	17
பெங்களூர்	14	12
கொடைக்கானல்	30	18
உதகமண்டலம்	26	..
கோயம்புத்தூர்	4	7
வேலூர்	24	..
சேலம்	19	13
திருச்சிறப்பள்ளி	11	8
புதுக்கோட்டை	8	..
மதுரை	12	8
திருநெல்வேலி	7.	5

CROPS AND MARKET REPORT.

பயிர்களும் மார்க்கெட் நிலவரமும்.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—ஜூன்மீ 18-தேதியிலிருந்து ஜூலைமீ 23௳ வரையில் அந்நிய தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி சாமான்களின் விவரம்.

நூலும் முறுக்கு நூலும் 487,314 ராத்தல், காரிகத்துணிகள் 5,522,955 கஜம். சலவைத்துணிகள் 2,251,744 கஜம். இதர நிறுசுத்துணிகள் 3,406,916 கஜம். இதேகாலத்தில் சென்னபட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 23,236 அந்தர் துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். ஜூலை மாஸம் 26-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூலின் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-3 வரையில் இருந்ததாகத் தெரிய வருகிறது.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற ஜூன் மாஸம் 18-ந்தேதிமுதல் ஜூலை மாஸம் 23-ம் தேதி வரையில் சென்னபட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 74 அந்தரும், ஆஸ்டிரியா ஹங்கெரியிலிருந்து 500 அந்தரும், மோரீஸ் தீவிலிருந்து 52 அந்தரும், ஜாவா தீவிலிருந்து 5,039 அந்தரும் இதர தேசங்களிலிருந்து 372 அந்தரும் இறக்குமதியாயின.

WANTED AGENTS.

ஏஜெண்டுகள் தேவை.

"பிழைக்கும் வழி" க்கு ஸந்தாதாரர்கள் சேர்க்க ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் ஏஜெண்டுகள் தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 DEC 1910
MADRAS



AMRIT MAHAL BULL. 1ST PRIZE, MYSORE CATTLE SHOW, 1909.

அம்ருத மஹால் எருது.

Supplement to "The Practical Life" "பிழைக்கும் வழி" க்கு அநுபந்தம்.

OFFICE OF THE REGISTRAR OF
REGISTERED
10 DEC 1910
MADRAS.



FERGUSSON COLLEG BUILDINGS, POONA.

பூனா பெர்க்யூஸன் காலேஜ் கட்டடம்.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ.,
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. | ஸாதாரண௵ ஆவணி௴ — AUGUST 1910. | ஸஞ்சிகை 8. No. 8.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.	*Foreign.* Rs. A. P.
Per annum ...	4 0 0	... 6 0 0
Single copy ...	0 6 0	... 0 8 0
Sample copy ...	0 2 0	... 0 3 0

RATES OF ADVERTISEMENT.

1 Page ...	5 0 0	per month.
½ do ...	2 8 0	do
¼ do ...	1 4 0	do
Less than ¼ page ...	0 8 0	per *inch* per month.

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors. The Editor solicits contributions on subjects *relating* specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No Money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, **Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4 Sunkurama Chetty Street, Georgetown, Madras.**

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜாலக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான, படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.	அந்நிய நாடு.
வருஷம் 1க்கு ..	4 0 0	.. 6 0 0
தனிப்பிரதி ..	0 6 0	.. 0 8 0
மாதிரி காபி ..	0 2 0	.. 0 3 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு	5 0 0
½ பக்கத்திற்கு	,, ,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,, ,,	1 4 0
¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு		0 8 0

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக க்ருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

பிழைக்கும் வழி.
PRACTICAL LIFE.

புஸ்தகம் 2 }
Vol. 2.
ஸாதாரண௵ ஆவணி௴—AUGUST 1910.
{ ஸஞ்சிகை 8.
No. 8.

பொருளடக்கம்.

பத்திராதிபர் குறிப்புகள் — பக்கம்
கம்போடியாப் பருத்திக்கொட்டை—அமெரிக்காவின் ஏற்றுமதி வியாபாரம்—காந்தம்—ஒரு வெள்ளி ஜூபிலி—கந்தை பொறுக்குதல் 283–285
விசேஷ வியாஸங்கள்
அடுப்பு ஜ்வாலையும் விளக்குகளும் —எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ். 286
விதைகளை விருத்தி செய்தல் —எஸ். வைத்திலிங்கம் பிள்ளை .. 289
தொழிலாளிகளுக்கு ஒரு அறிக்கை —டி. கே. ராமபத்ர சர்மா .. 292
நெல் வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல் —பி. எல். தேவிஸிங் 293
ஆகாரமும் தேக ஸௌக்கியமும் —சொ. முத்துகோபாலன் .. 295
இந்தியச் சிறுவர்களின் படிப்பு —நா. சொ. சங்கரமூர்த்தி 298
இந்தியாவின் ரெவினியூ 301
ஒரு ராணி ஜெயித்த விதம் எஸ். பஞ்சாபகேச சர்மா, பி. ஏ. .. 303
விசேஷத் திரட்டு
பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல்—கொழுஞ்சி—புளியமரம்—பெரு வெக்கை நோய்—விவஸாயிகளால் ஆளப்படும் ஒரு தேசம்—டென்மார்க் 305–312
பத்திரிகை ஆராய்ச்சி
பொருட்காட்சிகளும் அவைகளின் பிரயோஜனங்களும்—கிருஷிகருக்கு ஒரு யோசனை—ஒட்டகமயிர்க்கம்பளம்—கால் நடைகளின் வியாதிகளைப்பற்றிய குறிப்புகள் .. 313–315
சிறுவர் பகுதி 316–317
ஸ்திரீகள் பகுதி 318–320
பகுதிக் குறிப்புகள்
விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—புஸ்தகக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—பெரியமனிதர்களைப்பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும். 321–330
மாஸ வர்த்தமானம் 331–336

CONTENTS.

PAGE
Editorial Notes
CAMBODIA COTTON SEED-AMERICAN EXPORT TRADE-THE MAGNET-A SILVER JUBILEE-RAG COLLECTING 283-285
Special Articles
DOMESTIC FIRES AND LAMPS
M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T., *Assistant Professor of Physics, Presidency College, Madras* 286
IMPROVEMENT OF SEEDS
S. Vythilingam Pillai 289
A WARNING TO ARTIZANS
T. K. Ramabhadra Sarma 292
IRRIGATING PADDY FIELDS B. L. Davey Singh. 293
FOOD AND HEALTH C. Muthugopalan ... 295
EDUCATION OF INDIAN CHILDREN
N. C. Sankaramoorthi 298
INDIAN REVENUES 301
HOW A QUEEN WON
S. PANCHAPAGESA SARMA, B. A., ... 303
Selections
Watering Plants 305
Wild Indigo 306
The Tamarind Tree 307
Rinderpost 309
A Country Governed by Peasants - Denmark ... 310
Review of the Press
Exhibitions and Their Uses 313
A Suggestion to Ryots 313
Carpets Made of Camels' Hairs 314
Note on Cattle Diseases 315
The Boys' Section 316-317
The Ladies' Section 318-320
Departmental Notes
Agricultural Notes 321
Industrial Notes 323
Educational Notes 324
Litorary Notes 325
Legal Notes 326
Scientific Notes 327
Medical Notes 328
PESONAL NOTES 329
FUN AND ANECDOTE 330
News of the Month 331-336

EDITORIAL NOTES.
பத்திராதிபர் குறிப்புகள்.

Cambodia Cotton Seed.

கம்போடியாப் பருத்திக்கொட்டை.—இதைப் பற்றி போனமாஸத்துப் "பிழைக்கும் வழி" யில் 253 ம் பக்கத்தில் ஒரு வியாஸம் பிரசுரம் செய்தோம். இந்த விதை வேணும் என்று சிலர் எழுதியிருக்கிறார்கள். விவஸாய இலாகாவிலுள்ள விதை முழுமையும் ஆகிவிட்டதாம் ஆகையால் இந்த வருஷத்துக்கு விதை கிடைக்காது. அடுத்த வருஷத்தில் மே மாஸம் முதல் கிடைக்கும். வேண்டியவர்கள் வருகிற ஏப்ரல் மாஸத்துக்குள் திருச்சிணாப்பள்ளி தென் டிவிஷன் விவஸாய டிப்டி டைரெக்டருக்கு எழுதிக் கொண்டால் அவர் வேண்டிய விதையை சேகரஞ்செய்து கொடுப்பார்.

American Export Trade.

அமெரிக்காவின் ஏற்றுமதி வியாபாரம்.—அமெரிக்காவின் வியாபாரத்தை விருத்திசெய்வதற்காக உலகத்தில் பற்பல இடங்களில் "கான்ஸல்ஸ்" என்பதாக சில உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும் ஜில்லாவிலோ, தேசத்திலோ, அமெரிக்கா ஸாமான்களை எப்படி விற்றால் நல்ல லாபம் கிடைக்கும்? என்னென்ன ஸாமான்கள் செலவாகும்? சரக்குகளின் மாதிரியும் விலையும் எப்படி இருக்கவேண்டும்? அவைகளை ப்ரஸித்தி செய்யும் வழிகள் என்ன? அவைகளை வாங்கி வியாபாரம் பண்ணக்கூடிய வர்த்தகர்களின் விலாஸங்களென்ன? அவர்களை எவ்வளவுக்கு நம்பலாம்? என்று இவைகள் போன்ற விஷயங்களை ஆராய்ந்தறிந்து அமெரிக்கா வியாபாரிகளுக்குத் தெரியப்படுத்துவதே இந்த கான்ஸல்களின் முக்கிய வேலை. இவர்களில் ஜாஸ்தி அனுபோகமுள்ள சிலரை அமெரிக்கா கவரன்மெண்டார் ஸமீபத்தில் ஒரு தடவை நேரே வரவழைத்து அமெரிக்கா வியாபாரிகளைக் கண்டு, அவர்களோடு நேரே பேசி, அவர்களுக்கு வேண்டிய ஸமாசாரங்களைச் சொல்லும்படி ஏற்பாடு செய்தார்களாம்.

The Magnet.

காந்தம்.—அமெரிக்காவில் மிஸ்ஸிஸிப்பி என்பதாக, கப்பல் போக்குவரத்துக்கு வேண்டிய ஆழமுள்ள ஒரு பெரிய ஆறு இருக்கிறது; கொஞ்ச காலத்துக்கு முன்னால், ஆணிகள் அடங்கிய அநேக பீப்பாய்கள் கொண்டுபோன ஒரு கப்பல் அதில் மூழ்கிப் போய்விட்டது. அவ்விடத்தில் ஜலம் 70 அடி ஆழம். இந்த ஆழத்தில் மூழ்கிக்கிடக்கும் ஆணிப் பீப்பாய்களை எடுப்பதற்கு ஒரு உபாயம் செய்தார்கள். 3½ அடி குறுக்களவுள்ளதும், 3000 ராத்தல் கனம் உள்ளதுமான ஒரு பெரிய காந்தத்தைச் செய்தார்கள். இந்தக் காந்தத்தை ஒரு 'டெரிக்' அதாவது ஸாமான்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்குமான ஒரு யந்திரத்தோடு கீழே புணைத்து ஜலத்திற்குள் தொங்கவிட்டு எடுத்தால் ஒவ்வொரு தடவையும் 5, 6 பீப்பாய்களை உடையாமல் தூக்கிக்கொண்டு வந்து விடுகிறதாம்.

இந்த மாதிரி அநேகமாய் எல்லாப் பீப்பாய்களையும் எடுத்து விடலாமென்று சொல்லுகிறார்கள். இதுவரையில், கப்பல் ஸாமான்கள் மூழ்கிப் போய்விட்டால் அவைகளை ஒரு மண்வாரி யந்திரத்தால் எடுப்பது வழக்கம். இப்படி எடுப்பதில் பீப்பாய்கள் உடைந்துப் போவதுண்டு. அதனால் அவைகளிலுள்ள ஸாமான்களை முழுவதும் எடுக்க முடியாமல் போகும். காந்தத்தைக்கொண்டு எடுப்பதில், ஸாமான் ஒன்றும் கீழே தங்கிப் போகாமல் எடுத்து விடுவதோடு வேலையும் சீக்கிரத்தில் முடிந்து விடுகிறது. இது வரையில் பெரிய இரும்புப் பட்டறைகளில் சிதறிக் கிடக்கும் இரும்புத் துண்டுத் துணுக்குகளை பொறுக்குவதற்காக காந்தத்தை உபயோகிப்பதுண்டு. காந்தத்தின் உதவியால் கனமான இரும்பு ஸாமான்களை முதல் முதல் ஸமுத்திரத்திலிருந்து தூக்கி எடுத்தது மேலே சொல்லிய மிஸ்ஸிஸிப்பி ஆற்றில்தான். இங்கே வேலை முடிந்ததும், இந்தக் காந்தத்தைக் கொண்டு போய் அதே ஆற்றில் வேறு சில இடங்களில் மூழ்கிக் கிடக்கும் இரும்பு ஸாமான்களை எடுக்கப் போகிறார்களாம்.

A Silver Jubilee.

ஒரு வெள்ளி ஜுபிலி.—நம்மவர்களுக்குள் ஒருவருக்கு அறுபதுவயஸானால் சஷ்டி அப்த பூர்த்தி என்று கொண்டாடுவதுபோல் ஐரோப்பியர்களுக்குள் கலியாணம் செய்துகொண்ட அல்லது அரசனாயிருந்தால் பட்டத்துக்கு வந்த இருபத்தைந்தாவது, ஐம்பதாவது, அறுபதாவது, இந்த வருஷங்களைக் கொண்டாடுவது வழக்கம். இருபத்தைந்தாவது வருஷக்கொண்டாட்டத்துக்கு 'ஸில்வர் ஜுபிலி' என்றும், ஐம்பதாவது வருஷக் கொண்டாட்டத்துக்கு 'கோல்டன் ஜுபிலி' என்றும், அறுபதாவது வருஷக் கொண்டாட்டத்துக்கு 'டையமண்ட் ஜுபிலி' என்றும் சொல்லுவார்கள். விக்டோரியா மகாராணி 60 வருஷத்துக்கு மேல் அரசாண்டு வந்ததால் அவருக்கு சில வருஷங்களுக்குமுன் கோல்டன் ஜுபிலி என்றும், 'டையமண்ட் ஜுபிலி' என்றும் இந்தியாவில் ஜனங்கள் கொண்டாடினது அநேகருக்கு ஞாபகமிருக்கும். இதுபோலவே, திருவாங்கூர் மகாராஜா அவர்கள் பட்டத்துக்கு வந்து நாளது ஆகஸ்டு மாஸம் 19-ம் தேதியோடு இருபத்தைந்து வருஷமானதால் அந்த ராஜ்யமெங்கும் ஸில்வர் ஜுபிலி வெகு விமர்சையாய் நடந்ததாகத் தெரிகிறது. அன்று தினம் திருவனந்தபுரத்திலுள்ள பாரிக் கட்டிடங்கள் எல்லாம் வெகு நன்றாய் அலங்கரிக்கப் பட்டிருந்தன. அந்தப் பட்டணத்தின் நாலாபக்கங்களிலும் 12,000 ஏழை ஜனங்களுக்குக் குறையாமல் சாப்பாடு போட்டு உபசரிக்கப் பட்டார்கள். பள்ளிக்கூடச் சிறுவர்கள் 6,000 பேருக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன. அன்று இரவு திருவனந்தபுரம் பட்டணம் எங்கும் தீபாலங்காரம் செய்யப்பட்டிருந்த காட்சியை சொல்லிமுடியாது. வாணவேடிக்கையும் நடந்தது.

Rag Collecting.

கந்தை பொருக்குதல்.—உலகத்தில் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு ஏற்றுமதியாகும் காகிதத்தையும், காகிதத்தால் செய்யப்பட்ட ஸாமான்களையும் பார்த்தால் அவைகளின் மொத்த விலை சுமார் 40½ கோடி ரூபாயாகிறது. இவ்வளவு பெருந் தொகையாயிருந்தபோதிலும் அவ்வளவு சரக்குகளும் முக்கியமாய் 10 அல்லது 12 தேசங்களிலிருந்தே ஏற்றுமதியாகின்றன. அந்த தேசங்களின் பெயரும் அவைகளிலிருந்து ஏற்றுமதியாகும் சரக்குகளின் பெறுமானமும் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

	ரூபாய்.
ஜெர்மனி	10 கோடி 80 லக்ஷம்
ஹாலண்ட்	6 கோடி 75 லக்ஷம்
ஆஸ்டிரியா ஹங்கரி	4 கோடி
இங்கிலாந்து	3 கோடி 50 லக்ஷம்
பெல்ஜியம்	2 கோடி 40 லக்ஷம்
அமெரிக்கா ஐக்கிய நாடு	2 கோடி 40 லக்ஷம்
ஸ்வீடன்	2 கோடி 20 லக்ஷம்
ப்ரான்ஸ்	1 கோடி 80 லக்ஷம்
பின்லண்ட்	1 கோடி 75 லக்ஷம்
இடலி	1 கோடி 35 லக்ஷம்
நார்வே	1 கோடி 35 லக்ஷம்
சைனா	80 லக்ஷம்
ஜப்பான்	80 லக்ஷம்

இந்தியாவில் காகிதம் செய்வதற்கு சில ஆலைகள் இருந்தபோதிலும் இதரதேசங்களிலிருந்து காகிதங்களும் காகிதஅட்டைகளும் ஏராளமாக இறக்குமதியாகின்றன. அவைகளின் விவரம்.

அச்சிடும் காகிதம்

	ரூபா.
1904—1905	21,68,105
1905—1906	21,32,459
1906—1907	28,33,632
1907—1908	36,26.984
1908—1909	30,96,000

எழுதும் காகிதமும் கவர்களும்.

	ரூபா.
1904—1905	18.94,838
1905—1906	19,15,114
1906—1907	22,66,714
1907—1908	28,09,522
1908—1909	23,83,354

இதர காகிதங்கள்.

1904—1905	20,95,475
1905—1906	26,49,757
1906—1907	25,75,366
1907—1908	31,42,264
1908—1909	33,39,036

காகித அட்டைகள்.

1904—1905	2,78,870
1905—1906	3,51,648
1906—1907	3,35,393
1907—1908	3,45,492
1908—1909	4,45,006

காகிதம், அட்டைகள், இவைகளின் மொத்தம்.

	ரூபா.
1904—1905	64,37,288
1905—1906	70,48,978
1906—1907	80,11,105
1907—1908	99,24,263
1908—1909	92,63,396

இந்தியாவில் காகிதத்தொழில் தலையெடுக்காததற்கு அநேக காரணங்கள் உண்டு. அவைகளில் முக்கியமானது, காகிதம் செய்வதற்கு வேண்டிய முக்கியப்பொருள் ஸரியாய்க் கிடைக்காததே. அநேகமாய் எல்லா நாருள்ள வஸ்துக்களைக்கொண்டும் காகிதம் செய்யலாம். ஆனால் முக்கியமாய், கந்தைத் துணி, பழைய கோணி, மரங்களை இடித்துச் செய்த மசியல், கரும்புச்சக்கை, மூங்கில், பலவிதப்புல்கள், இவைகளிலிருந்தே, வெகுவாய்க் காகிதம் செய்யப்படுகிறது. காகிதம் செய்வதற்கு எந்த நார் தினுசை உபயோகப்படுத்துகிறோமோ அதற்குத் தக்கபடி இருக்கும் காகிதத்தின் உறுதியும் நிறமும்.

ஆகையால் ஒரு தினுசுக் காகிதம் வேண்டுமானால் குறிப்பிட்ட நார்தினுசையே அந்தக் காகிதம் செய்வதற்கு உபயோகிக்கவேண்டும். இப்படிக்கு எந்ததினுசு நார் வகைகள் வேண்டுமானாலும் வேண்டிய அளவில் ஐரோப்பாவில் கிடைக்கும். காகிதம் செய்வதற்கு வேண்டிய கந்தைத்துணிகள் முதலானவைகளை சேகரிப்பதற்கென்றே சில தொழிலாளிகள் ஏற்பட்டிருக்கிறார்கள். இவர்கள் கந்தைகளையெல்லாம் சேகரித்து அதிலுள்ள பலவிதக் கந்தைகளை தனித் தனியாகப் பிரித்து, காகிதம் செய்கிறவர்கள் யார் யாருக்கு எந்தெந்த தினுசுகள் வேண்டுமோ அந்தந்த தினுசுகளைக் கொண்டு போய் விற்பார்கள். இந்தியாவிலோ இப்படிக் கிடையாது. காகிதம் செய்யும் ஆலைகளுக்கு எந்தத்தினுசு கந்தைகள் வேண்டுமோ அவைகள் கிடைப்பதில்லை. அந்த ஆலை அதிகாரிகள் கண்ட கந்தைகளையெல்லாம் வாங்கிக்கொண்டு பிறகு தாங்களே அவைகளைப் பிரித்துக் கொள்ளவேண்டும். கிடைக்கும் கந்தைகளும் ஸர்வபழையதாயும், அழுக்காயும், உபயோகமற்றனவாயும் இருக்கின்றன. 100 பாரம் கந்தைவாங்கினால் 40 பாரம் ஒரு உபயோகமில்லாமலே தள்ளிவிடவேண்டியதாக ஏற்படுகிறது. பாக்கி உள்ள 60 பாரக் கந்தையைத் தட்டிக் கொட்டி எடுத்தால் 52 பாரம் தேறுகிறது. இதை வெள்ளாவியில் வைத்து வெளுத்து எடுத்தால் 32 பாரம் தேறுகிறது. ஆகையால் முதலில் நேர்ந்த கந்தையில் கிட்டத்தட்ட படிக்குப் பாதிதான் உபயோகமாகிறது. இவ்வளவு நஷ்டம் ஐரோப்பாவில் ஏற்படுகிறதில்லை. இதில் பாதிதான் ஏற்படுமாம். ஆகையால் நம்முடைய தேசத்தில் காகிதம் செய்யும் தொழில் முன்னுக்கு வரவேண்டுமானால் கந்தைபொறுக்குந்தொழில் வகையாக ஏற்பட வேண்டும். இது ஏழைகளுக்குத் தகுதியான "பிழைக்கும் வழி".

DOMESTIC FIRES AND LAMPS

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU, M. A., L. T.,
Assistant Professor of Physics, Presidency College, Madras.

அடுப்பு ஜ்வாலையும் விளக்குகளும்.

[All Right Reserved.]

விளக்கு ஊத அணைவதேன்,
அடுப்பு ஊத எரிவதேன்?

இந்தப் பத்திரிகையின் ஆடி.மாஸத்து ஸஞ்சிகையில், 'அடுப்பு ஊதுதல்' என்னும் வியாஸத்தைப் படித்த நம் வாலிப நண்பர்களில் அநேகருக்கு, அந்த வியாஸத்தைப்படித்து முடிக்கும்போது, சில ஸந்தேகங்கள் மனதில் ஜெனித்திருக்கலாம். அவைகளில் ஒன்று. "அடுப்பை விசிறியால் வீசினால் விறகு நன்றாய்த் தீப்பற்றி எரியும் என்று சொல்லுகிறார். அதன் காரணம் ஆக்ஸிஜன் வாயு அதிகமாக சீக்கிரத்தில் உட்செல்லுவது என்று சொல்லுகிறார். விளக்கு எரிவதும் ஆக்ஸிஜன் வாயுவின் உதவியாலே என்று சொல்லுகிறார். ஆதலால் காற்றடிப்பதால் ஆக்ஸிஜன் வாயு அதிகமாக மேல்படுவதால், விளக்கின் ஜ்வாலையும் அதிகமாய்ப் பிரகாசிக்கவேண்டியதல்லவா? அப்படியில்லாமல், புகையில்லாமல் பிரகாசமாய் எரிகிற விளக்கில் சில காலங்களில் காற்றடிக்கும்போது புகை உண்டாகி ஒளி மழுங்குகிறதே! வேறு சில ஸமயங்களில் காற்று வேகமாய் அடித்தால் அது அணைந்தும் போகிறதே! ஆதலால் முன்னே சொன்னகாரணம் நம் அநுபவத்துடன் ஒவ்வாமல் இருக்கிறதே. இந்தக்காரணம் உண்மையானதா?" இது உண்மையானால், காரணம் ஒன்றாயிருக்க பலன் வித்தியாஸம் உண்டாவதேன்?

ஜ்வாலை இன்னது என்பதையும் ஜ்வாலையில் இன்னின்ன வேறுபாடுகள் உண்டாகின்றன என்பதையும் சற்று கவனித்தால் முன் சொன்ன அஸத்தியத் தோற்றம் ஸத்தியமென்றே விளங்கும். எண்ணெயாகிய த்ருவ பதார்த்தம் ஜ்வாலையின் சூட்டால் ஆவியாக உருமாறுகிறது. அந்தவாயு ஆக்ஸிஜனுடன் கலந்து எரிகிறது. எரியும்போது உஷ்ணமும் வெளிச்சமும் உண்டாகின்றன. இப்படி எரிகிற விளக்கின்பாகமே ஜ்வாலை எனப்படும். இப்படி எரிகிற காற்றின் பாகம் அதிக சூடு கொண்டதென்பது குழந்தைகளுக்கும் தெரிந்த விஷயமே. இந்த பாகத்திலுள்ள சூட்டை எவ்வாறேனும் தணித்தால், எண்ணெய்வாயு எரியச் சக்தியற்றதாகி ஆகாயத்தில் புகையாகச் செல்லும். எரியாமல் வெளிச்செல்லும் எண்ணெய் ஆவியால் எண்ணெயின் வாசனையும் அப்போது வெளிவீசும். மேலே சொன்ன வாக்கியங்களின் உண்மையைப் பரிசோதிக்க ஒரு ஸுலபமான பரீக்ஷை செய்யலாம். மெழுகுவர்த்தி விளக்கையாவது விளக்கெண்ணெய் தீபத்தையாவது முன்வைத்துக் கொள்ளுங்கள். கம்பியால் பின்னப்பட்ட ஒரு வலைத்துண்டை ஜ்வாலையின் மேல் மட்டமாகப் பிடியுங்கள். (இந்த வலைத்துண்டை பழைய கிழிந்த ரவை சல்லடைகளிலிருந்து எடுத்துக்கொள்ளலாம்). ஜ்வாலையை கவனித்தால், கீழ்பாதி எரிந்து கொண்டிருக்க, வலைக்குமேல் இருக்கவேண்டிய ஜ்வாலைபாகம் அணைந்துபோய் வெள்ளைப்புகை கிளம்புகிறது. ஜ்வாலையின் சூட்டைக் கம்பிகள் கிரஹித்துக் கொள்கிறபடியால் எண்ணெய் ஆவி எரிவதற்கு வேண்டிய சூடில்லாமல் எரிய சக்தியற்றதாகிறது. கரண்டி தாம்பாளம் முதலான உலோக சாமான்களைப் புகையில்லாமல் எரிகிற விளக்கின் ஜ்வாலையில் படும்படி பிடித்தால், தன் சூடு குறைவதாலும் வேண்டிய சுத்த காற்று தாராளமாய் வராததாலும், எரியும் எண்ணெயாவி அரைகுறையாய் எரிந்து கரிய மை மேல்வைத்த பாத்திரங்களில் ஒட்டிக்கொள்ளுகிறது. இந்தவிதமாக மை சேர்க்கிறதுண்டு.

வெளிப்புறத்திலுள்ள காற்று, ஜ்வாலையைவிடக் குளிர்ந்ததாகையால், எண்ணெயாவியுடன் கலக்கும்போது அதன் சூட்டைத் தணித்துவிடும். ஆனால் ஜ்வாலையில் உண்டாகும் உஷ்ணம் அதிகமாயிருந்தால் இந்தக் குறைவால் அதிக நஷ்டமில்லை. கொழுந்தும் அணைந்துபோவதில்லை. எப்பேர்ப்பட்ட காற்று அடித்தாலும், குளிர்ந்த மழைக்காற்றடித்தாலுங்கூட, அதிகப்பரப்புள்ள பந்தம், அடுப்பு, காளவாய் முதலான நெருப்புகள் தங்கள் உஷ்ணம் கொஞ்சம் குறைந்தபோதிலும், ஆக்ஸிஜன் அவைகளின்மேல் அதிகமாய்ப் படுவதால் மேன்மேலும் நன்றாய் எரியும். ஆனால் விளக்கின் ஜ்வாலையோ, சிறியதாகையாலும் அதில் உண்டாகும் வெப்பமும் குறைந்த அளவினதே ஆகையாலும், அதின்மேல் வேகமாய் காற்றுப்பட்டால் அதன் உஷ்ணம் அதிகமாய்த் தணிந்து, எண்ணெய் ஆவி எரியச் சக்தியற்றதாகி ஜ்வாலை அணைய, வெள்ளை நிறமாகிய எண்ணெய் ஆவி வெளிப்படுகிறது.

காற்று, விளக்கு அணைந்துபோகக் கூடிய வேகத்துடன் அடிக்காமல், அதற்குக் குறைவான வேகத்துடன் திடீரென்று இடைஇடையே அடிக்கும்போது, விளக்கிலிருந்து கரிய புகை கிளம்ப பிரகாசமும் குறையும். ஜ்வாலையை எட்டும் குளிர்ந்த காற்று கொஞ்ச அளவினதாதலால், சுடரின் வெளிப்புறத்திலுள்ள அணுக்கள் தங்கள் உஷ்ணத்தையிழந்து குளிர்ந்து போகின்றன. வெளிப்பட்ட உஷ்ணம் ஜ்வாலையை எட்டும் காற்றை சூடாக்குகின்றது. சுடரின் மற்ற பாகங்கள் குளிர்ந்து போவதில்லை குளிர்ந்த பாகம் அரை குறையாய் எரிந்து கார்பஞ்கிய புகையை வெளிப்படுத்துகிறது.

விளக்கு காற்றால் அணைந்துபோகாமல் எரியும்படிசெய்ய உபாயம் உண்டோ? ஜ்வாலைக்கு வருவதற்கு முன் காற்று சூடாகி வந்தால் அந்தக் காற்று எவ்வளவு வேகமாய்ப் பட்டாலும் விளக்கு அணையாது என்று முன்னே விவரித்தவைகளிலிருந்து நாம் ஊகிக்கலாம். இதற்காக கண்ணாடியால் செய்த சிம்னி என்னும் புகைப்போக்கிக் குழாய்களையும், பித்தளை முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட, வர்த்தியையும் சிம்னியையும் பிடித்துக்கொண்டிருக்கும் பாகமாகிய, "காய்" என்கிறதையும், விளக்குகளில் உபயோகிக்கிறோம். உலோகங்கள் சூட்டைக் கிரஹித்து அதைப் பரவச் செய்வதால், காய், ஜ்வாலையின் சூட்டைக் கிரஹித்து, தன்னிடம் முழுவதும் பரவச் செய்து, தன்னைசூடாகவே வைத்துக்கொண்டிருக்கும். சிம்னியின் மேற்பக்கமாய் ஜ்வாலையால் சூடாக்கப்பட்ட காற்று வெளிச்செல்லுகிறதென்று எல்லாருக்கும் தெரியும். சிம்னியின் கீழ்பாகத்திலிருந்து காயின் வழியாகத்தான் காற்று உட்செல்லவேண்டியிருக்கிறது. இந்த வழி காயிலுள்ள உஷ்ணத்தால் சூடாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே காயின் வழியாய் உட்செல்லும் காற்று சூடாகியே ஜ்வாலையைப் போய் எட்டுகிறது. ஆதலால் ஜ்வாலையின் உஷ்ணம் தணிவதில்லை. விளக்கும் அணைவதில்லை. சிம்னி உபயோகிக்கும்

விளக்குகளிலும் அதிக விசையுடன் காற்று வீசும் காலத்தில், உட்செல்லும் காற்று அதிகமாக ஒரேகாலத்தில் செல்லாமல் மெதுவாய்ப்போகும்படி அதன் வேகத்தைத் தடுக்க, காற்று செல்லக்கூடிய துவாரங்களைச் சுற்றிலும் மெல்லிய துணிப்பைகளைக் கட்டிவைப்பது உண்டு.

சிம்னியை உபயோகிப்பதால் கீழிருந்து மேல் நோக்கிப்பரவும் காற்று சூடாகி விளக்கு எரிய உதவுகிறது. சிம்னியின் வழியாய் மேல் நோக்கிச்சென்று வெளியே பரவும் கார்பானிக் ஆஸிட்காஸ் என்னும் கரியமிலவாயுவுடன் கலந்தகாற்று தடைப்பட்டால், உட்புகும் காற்றும் அதற்குத்தக்கபடி தடைபடும் அல்லவா? தடைப்பட்டால் ஜ்வாலையைச் சுற்றியுள்ள ஆக்ஸிஜன் எரிவதினால் ஆகிவிட்டபடியால் வேண்டிய அளவு அந்த ஆக்ஸிஜன் இல்லாமல் தீபம் அணைந்துபோகுமல்லவா? நாம் ஒரு சிம்னி விளக்கை அரைகளின் மூலை ஓரங்களில் வைத்திருந்தால் காற்றடிக்கும்போது இந்தக்காற்று இந்த மூலைகளில் சுழன்றுகொண்டு சிம்னியின் மேல்புறமாய் கீழ் நோக்கி அடிக்கும். அப்போது விளக்கு புகையும், அணைந்தும்போகும். இதைத் தடுப்பதற்காக சிம்னியின்மேல்நுனியைச் சுற்றிலும் சிறு துவாரங்களையுடைய ஒரு தகட்டுக் குல்லாயை உபயோகிப்பதுண்டு. ரீடிங் ரூம் முதலான காற்றோட்டமுள்ள அநேகர்கூடும் ஸபைகளில் பங்காவின் காற்றினால் விளக்கு அணையாமல் இருக்கும்பொருட்டு இந்தமாதிரியான குல்லாயுள்ள "பங்கா—ப்ரூப்" அதாவது பங்காக்காற்றைத் தாங்கக்கூடியது என்று அர்த்தமுள்ள பேருடைய விளக்குகளை உபயோகிக்கிறார்கள்.



PUNKA PROOF LAMP.

பங்கா ப்ரூப் விளக்கு.

(Block by courtesy of Messrs Oakes & Co., Ltd.)

விளக்கை அணைக்கவேண்டியிருக்கும்போது சிலர் கையை விளக்கின் சிம்னிக்குமேல் கொஞ்சம் பக்கமாயும் சாய்வாயும் பிடித்துக்கொண்டு, வாயால் கையின்மேல் திடீரென்று ஊதினால் அந்தக்காற்று சிம்னியின்மேல் பட்டு வெளிச்செல்லும் காற்றை தடைசெய்ய, அதனால் காய்வழியாய் கீழேயிருந்து வரும் சுத்தகாற்று தடைப்பட்டு, அதனால் வேண்டிய ஆக்ஸிஜன் கிடைக்காமல் விளக்கு அணைந்துபோவதை நீங்கள் பார்த்திருக்கலாம்.

எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ்.

IMPROVEMENT OF SEEDS.

BY

S. VYTHILINGAM PILLAI.

விதைகளை விருத்தி செய்தல்.

விவசாய சம்பந்தமான விஷயங்களில் நேர்த்தியான விதைகளை விருத்தி செய்வது ஒரு முக்கியமான விஷயம். ஆனாலும், நமது விவசாயிகளுக்கு இந்த விஷயம் புதிதாகவும் மலைப்பாகவும் தோன்றுகிறது. இப்படித் தோன்றுவதற்குக் காரணம் அந்த விஷயத்தில் புத்தியைத் தக்கபடி செலுத்தாததே. கொஞ்சம் ஆழ்ந்து பார்ப்போமானால், விதை விஷயம் அதி முக்கியமென்பது விளங்கும். பெற்றோர்களைப்போல பிள்ளையும் என்பது யாவரும் அறிந்ததே. தாய் தந்தைகள் நோயற்றவர்களாயும் தேக திடமுள்ளவர்களாயும் இருந்தால் அவர்களுக்கு உற்பத்தியாகும் குழந்தைகளும் ஸாதாரணமாய் மேற்கண்ட லக்ஷணங்களோடு கூடினவர்களாயிருப்பார்கள். தாய் தந்தைகள் நோயினால் பீடிக்கப்பட்டவர்களாயும் குரூபிகளாயுமிருந்தால் குழந்தைகளும் ஸாதாரணமாய் அப்படியேதான் இருக்கும். சில வம்சங்களில் பிரஜா விர்த்தி ஒவ்வொரு தலை முறையிலும் மேல்மேலும் பெருகுவதைப்பார்க்கிறோம். சில வம்சங்களில் ஒரு குழந்தைக்கே தலைமுறைதோறும் தாளம் போடுவதையும் பார்க்கிறோம். இந்த விதி மனிதர்களுக்குள் எப்படியோ அப்படியேதான் செடிகளுள்ளும். ஆகையினாலே நல்ல விதைகளை விருத்திசெய்வது அவசியமாகிறது. இன்னும் பார்ப்போமானால், பசுக்கிடைகளுக்கு நல்ல பலமும் அழகும் கூடிய ஒரு பஞ்ச லக்ஷணப் பொலி காளையைத் தெரிந்தெடுத்துப் போடுவதால் அதன் கன்றுகளும் அழகிலும் வேலையிலும் சிறந்து நிற்கும். விலையிலும் ஏறிநிற்கும். அப்படி இல்லாமல் ஊர்களிலிருக்கும் பசுவுக்கு ஸாதாரண உழவு மாடுகள் விழுவதால் அதன் கன்றுகள் ஏங்கி மங்கிப்போகின்றன.

விதை விஷயத்தில் நம்மைப்போலவே ஐரோப்பியரும் முன்காலத்தில் இருந்தார்கள். பின்பு மிஸ்டர் ஹாலெட் என்ற துரை விதை விருத்தி செய்யாமலிருக்கும் கெடுதியை அறிந்து மனந்தாளாதவராய் பொது நன்மைக்காக மிகவும் கஷ்டப்பட்டு விதையை விருத்தி பண்ணும் விஷயத்தில் பின்வருமாறு ஆரம்பித்தார். கோதுமை விளைந்தவயல் ஒன்றில் தான் போய் நின்றுகொண்டு திடீரென்று தானாகக் கதிரொன்றைக் கொய்தார். இந்தக் கதிர் பருமனிலாவது, விதைகளின் எண்ணிக்கையிலாவது வேறு எந்த விஷயங்களிலாவது மற்றவைகளைவிடச் சிறந்ததல்ல. இவர் உற்றுப்பார்த்ததெல்லாம் யாதெனில், கதிர் பூச்சி புழுக்களால் பீடிக்கப் படாமலிருக்கிறதா என்பதுதான். இவர் கொய்த கதிரின் நீளம் $4\frac{3}{4}$ அங்குலம். இதிலிருந்த மணி அல்லது விதை 47. இந்தவிதைகளை இவர் மிகவும் ஜாக்கிரதையாய் எடுத்து ஸாதாரணமாய் பண்படுத்திய பூமியில் ஒவ்வொரு விதைக்கும் நாலு பக்கமும் ஒரு அடிவிட்டு வரிசையாக நட்டார். விதைகள் கிரமமாய் முளைத்துவந்தன. பின்பு அறுவடைகாலத்தில் மேலே சொல்லிய நாற்பத்தேழு கோதுமைச் செடிகளின் ஒவ்வொரு செடியுடைய வளர்ச்சியையும், உயரத்தையும், மணிகளின் காத்திரத்தையும், இன்னும் மற்ற விஷயங்களையும், தாரதம்மியப்படுத்திப் பார்த்தார். இவைகளில் தன்மனதுக்கு எவைகள் திருப்திகரமாயிருந்தனவோ அவைகளைமட்டும் தெரிந்தெடுத்தார். தெரிந்தெடுத்த விதைகளை மறுவருஷத்திலும் முன் செய்த விதமே பூமி

யைப்பண்படுத்தி செய்தார். இந்த விதமாகவே இவர் சில வருஷங்கள் செய்து வந்தார். ஆனால் இந்த வருஷங்களிலெல்லாம் இவர் கவனித்துவந்த விஷயம் ஒன்றுண்டு. அதாவது அறுவடை காலத்தில் எந்தச் செடி ஜாஸ்தியாகத் தூர் கிளைத்து வந்தது என்பதை உற்றுநோக்கி வந்ததுதான். இந்த விதம் செய்துவந்ததில் முதல் வருஷத்தில் ஒரு செடியில் பத்துக்கதிர்கள் பிடித்திருந்தன. இதே விதையைப் போட்டதில் இரண்டாவது வருஷத்தில் இருபத்திரண்டு கதிர்கள் பிடித்திருந்தன. மூன்றாவது வருஷத்தில் முப்பத்தொன்பது கதிர்கள் பிடித்திருந்தன. நான்காவது வருஷத்தில் ஐம்பத்திரண்டு கதிர்கள் பிடித்திருந்தன. அந்த வருஷம் இந்த உயர்தரக் கதிர்களிலிருந்து மிகவும் சிலாக்கியமான ஒரு கதிரைத் தெரிந்தெடுத்து அதை அளந்து பார்த்ததில் அது 8¾ அங்குலமிருந்தது. பின்பு அதிலுள்ள மணிகளை எண்ணிப்பார்த்ததில் 123 மணிகளிருந்தன. இதைச் சற்று நேயர்கள் கவனிப்பார்களாக. முன்பு இவர் பரிசோதனை ஆரம்பிக்கிற காலத்தில் கதிரின் நீளம் 4¾ அங்குலமாயும், மணியின் எண்ணிக்கை 47 ஆகவும் இருந்தது. நாலு வருஷத்திற்குள் கதிரின் நீளம் 8¾ அங்குலமும் மணியின் எண்ணிக்கை 123ம் ஆகிவிட்டது. இதற்குக் காரணம் என்ன? விதைகளிலெல்லாம் நல்ல விதைகளைத் தெரிந்தெடுத்து, அப்படித் தெரிந்தெடுத்த நல்ல விதைகளில் மிகவும் நல்ல விதைகளைத் தெரிந்தெடுத்து, அப்படித்தெரிந்தெடுத்த மிகவும் நல்ல விதைகளில் அதிக சிலாக்கியமான விதைகளை ஹாலெட் துரை தெரிந்தெடுத்ததே. ஹாலெட் இதில் தான் அடைந்த முதிர்ந்த அனுபோகத்தைக்கொண்டு பின்வருமாறு தெரிவிக்கிறார்:—

பொதுவாக தானியவகைப்பயிர்களில் நன்றாய் முதிர்ந்துவளர்ந்த ஒவ்வொரு செடியிலும் மிகுதியாகப்பலிக்கத்தக்க விதை ஒவ்வொன்று இருக்குமென்றும், இவ்வித உயர்தர விதை உயர்தரக்கதிரில்தான் உற்பவிக்கிறதென்றும், இந்த உயர்தர வித்து தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிற உயர்தர சக்தியைத் தன்பின் சந்ததிச் செடிகளுக்குக் கொடுக்கக்கூடுமென்றும், இவ்விதம் நாம் விதைகளைப் பொறுக்கித் தெரிந்தெடுப்பதால் இவைகளின் உயர்தர குணம் அதிகப்படுகிறதென்றும், இவ்வித குணம் பிரதமத்தில் மிகுதி என்றும், வரவர பிந்திய வருஷங்களில் குறைவுபட்டு வருகிறதென்றும், நமக்கு வேண்டியதெல்லாம் உயர்தர வித்துத்தானே என்றும், அதை நாம் ஜாக்கிறதையாய் விதைகளைத் தெரிந்தெடுப்பதில் அடையக்கூடுமென்றும், ஆனால், விடாமுயற்சியும், ஊக்கமும், கவலையும், பரோபகாரசிந்தனையும், நல்லெண்ணமும் மிகுதியும் வேண்டுமென்றும் தெரிவிக்கிறார். இந்தத் துரையின் பெயர் 50-60 வருஷங்களுக்குமுன் பக்கத்தவர்களுக்குக்கூடத் தெரியாது. இப்பொழுதோ அவர் பெயர் தெரியாதவர்கள் மிகச்சிலரே.

விதையை இரண்டு அம்சங்களில் விருத்தி செய்யவேண்டும். முதலாவது விதையினுடைய வெளித்தோற்றம், அதாவது காத்திரம், வடிவு, நிறம் முதலியவற்றை விருத்தி செய்வது. இரண்டாவது, பலத்தின் ஸத்துக்கள், அம்சங்கள் அதாவது சர்க்கரை, எண்ணெய் போஷிக்கத்தக்க அம்சம் முதலியவற்றை விருத்திசெய்வது. விதையின் வெளித்தோற்றமாகிய காத்திரம், வடிவு, நிறம், கதிர்களில் மணி நெருக்கிப்பிடித்திருத்தல், ஸாதாரணமாயுள்ளதைப் பார்க்கிலும் நிறையில் ஜாஸ்தியிருத்தல் முதலியவைகளால் நல்ல பலனை அடையலாமென்பது யாவருக்கும்

ஸாதாரணமாய்த் தெரியும். அதைப்பற்றிய விவரம் முன்னே கூறியிருப்பதால் அதை விட்டு இரண்டாவதைப்பார்ப்போம். ஜெர்மனி, ஆஸ்திரியா முதலிய தேசங்களில் பீட் என்னும் ஒருவகைக் கிழங்கிலிருந்து சர்க்கரை செய்து நமது நாட்டில் ஏராளமாய் இறக்குமதி செய்கிறார்கள் என்கிற விஷயம் பலருக்கும் தெரியும். நூறு எடை பீட்டுக்கு 5 எடை சர்க்கரைதான் ஆதியில் கிடைத்தது. பின்பு அதிருசியுள்ள விதைக்கிழங்குகளைப் பொறுக்கி ஜெர்மனியார் சாகுபடி செய்ய ஆரம்பித்தார்கள். அப்படிச் செய்து வந்ததினால் அதிகச் சர்க்கரை கிடைக்கலாயிற்று. ஜெர்மனியர்களைப்பார்த்த அமெரிக்கர்களும் முதல்தரமான மிகவும் ருசியுள்ள விதைகளைப் பொறுக்கி சாகுபடி செய்துவந்ததினால் இப்பொழுது 100 எடைக்கிழங்குக்கு 24 எடை சர்க்கரை கிடைக்கிறது. அவர்கள் முயற்சி இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது. ஏற்கெனவே 1 ஏகர் நிலத்தில் 2 டன் சர்க்கரை கிடைக்க இப்பொழுது அதே நிலத்தில் 10 டன் சர்க்கரை கிடைக்கிறது. 2 டன் சர்க்கரை கிடைத்த காலத்தில் சாகுபடிக்கு என்ன செலவாயிற்றோ அதைவிட 10 டன் சர்க்கரை கிடைக்கிற இந்தக் காலத்தில் சொற்பம் கூடவே தவிர வேறில்லை. ஆகையால் ஏற்கனவே கிடைத்துக்கொண்டிருந்த வரும்படியைவிட இப்பொழுது பத்து மடங்கு அதிகமாயிற்று. அவர்கள் பெட்டியிலுள்ள பவுன் செலவாகாமல் அவர்களுடைய புத்தியும் விடாமுயற்சியும் மட்டும் ஏராளமாகச் செலவாயிற்று.

மேலே சொன்ன வழிகளைவிட விதைகளை விருத்திசெய்ய இன்னும் ஒரு வழியுண்டு. அதாவது ஒரு இடத்து விதையை மற்றொரு இடத்துக்கு மாற்றுவதே. க்வீன்ஸ்லெண்டு நாட்டில் விவஸாய சங்கத்தார் மூலமாக ப்ரிட்டிஷ் கயானா என்னும் நாட்டிலிருந்து ஒரு ஜாதிக்கரும்பைப் பெற்று சாகுபடி செய்ய ஏகர் 1க்கு 2 டன் கரும்பு ஜாஸ்தி கிடைத்தது. அது முதல் அந்த நாடுகளில் “விதை மாற்றல் கம்பெனி” கள் ஏற்பட்டு நல்ல வேலை செய்துவருகின்றன. நமது பக்கங்களிலும் இந்த விஷயம் சிற்சில இடங்களில் நடந்து வருகிறதாகத் தெரிகிறது. தஞ்சாவூர் ஜில்லா ஐயம்பேட்டைப் பக்கத்தில் ஏராளமாகக் கருணைக்கிழங்கு சாகுபடியாகிவருகிறது. அவைகள் பருமனிலும் ருசியிலும் மிகச் சிறந்தவை. அப்படியிருந்தும் ஷை ஊரார் விதைக்காக ஒரு கிழங்குகூட வைத்துக்கொள்ளுகிறார்களில்லை. புதுக்கோட்டைப் பக்கத்து விதைகளையே வாங்குகிறார்கள். எமது அனுபவத்திலும் தஞ்சாவூர் ஜில்லா, மன்னார்குடி தாலூகா, தோட்டச்சேரி என்ற எமது கிராமமொன்றில் தஞ்சாவூர் பக்கத்திலுள்ள கருணைக் கிழங்கு விதையைக்கொண்டுவந்து சாகுபடி செய்ததில் நினைத்திராத அளவு மாசூல் கிடைத்தது. மறுவருஷத்தில் அதே நிலத்தில் விளைந்த கிழங்கை விதையாக வைக்க விளைவு முழு மோசமாயிற்று. எம்மிடம் வாங்கிப் போனவர்கள் சாகுபடி செய்ததில் அவர்களுக்கு நல்ல மாசூல் கிடைத்தது. “ஆற்று மண்ணுக்கு வேற்றுமண் உரம்” என்னும் பழமொழி விதை விஷயத்திலும் கவனிக்கத்தக்கதாகும். மேற்கண்ட விஷயங்களை கவனித்தால் நல்ல விதைகளை விருத்தி செய்தல் அவசியமென்பது யாவரும் ஒத்துக்கொள்ளக் கூடியதே.

எஸ். வைத்திலிங்கம் பிள்ளை.

A WARNING TO ARTIZANS.

BY

T. K. RAMABHADRA SARMA.

தொழிலாளிகளுக்கு ஒரு அறிக்கை.

———:o:———

வேலை செய்வோர்களுடைய யோக்கியதைக் குறைவினால் விளையும் தீங்கை விவரித்துச் சொல்லப்புகுந்தால் அது மிகப் பெரிதாகும். வேலை செய்கிறவன் ஒருவனானாலும் அவனை மேய்க்க மற்றொருவன் வேண்டியிருக்கிறது. வேலைக்காரர்களுடைய புத்திக் குறைவினால் உண்டாகும் நஷ்டத்துடன், அவர்கள் தெரிந்து உண்டாக்கும் நஷ்டத்தையும் சேர்க்கவேண்டும். இதனால் தொழிலாளிகளை அமைத்து வேலையிட பயப்படுகிறவர்கள் பலர். நம்முடைய தேசத்திலிருந்து இங்கிலாந்துக்கு நீலச்சரக்கு விசேஷமாக ஏற்றுமதி ஆகிறது. அதில் நம்முடைய தேசத்தார் செய்கிற பிசகுகளினால், அதன்விலை குறைவதன்றியும், வேறு தேசங்களிலிருந்து போகிற சரக்குகளில் இருக்கிற மோகம்போல் அவ்வளவுமோகம் நம்முடைய சரக்கின்மேல் சீமையிலில்லை. புகையிலையைச் சரிவரப்பதப்படுத்தத் தெரியாமையாலும், அதில் நடக்கும் சூதினாலும், அந்த வியாபாரமும் சீர்கேடடைந்து வருகிறது. மேலும், வேலையைக் கெடுத்துக் காலஹரணம் செய்தால், வேலை அதிகரித்து தங்களுக்கு ஜீவனமார்க்கம்பெருகுமென்ற எண்ணத்தினால் நம்முடைய தொழிலாளிகள் சரிவர வேலையைச் செய்வதில்லை. அதனால் பணம் போனாலும் போகட்டுமென்று மோசம் செய்யாத ஐரோப்பியரிடம் நம்மில் பலர் பண்டங்களை வாங்கிக்கொள்ளுகிறார்கள். அனேக இடங்களில் நேர்த்தியான ஆபரணங்களைச் செய்யுந்திறமை நம்முடைய தொழிலாளிகளிடத்திலிருந்தும், ஒன்றுக்குப் பதின்மடங்கு கூலி கொடுக்கச் சம்மதித்து, ஆங்கிலேயருடைய கடைகளில் நம்மில் பலர் வியாபாரம் செய்கிறார்கள். அந்தக் கடைகளில் வேலைசெய்கிறவர்கள் நம்முடையதேசத்தாரே. ஆயினும், அவர்கள் பிசகு யாதொன்றும் செய்யாதபடி மேல் பார்வை தகுந்தபடி இருப்பது கொண்டு, நாம் நம்ப இடமுண்டாகிறது. நம்முடைய கம்மாளன் இரண்டு ரூபாய் கூலிக்குச்செய்யும் வேலைக்கு, ஆங்கிலேயர் கடைகளில் முப்பது, அல்லது நாற்பது ரூபாய் கூலி கொடுத்து நாம் வாங்கும் சாமான்கள் பலவாகும். கடிகாரம் செப்பனிட வேலைக்காரனொருவன் ஸ்வல்ப கூலிக்குச் செய்ய உடன்படுவானாயினும், அவனிடத்தில் அதைக் கொடாது, அவன் கேழ்க்கும் கூலிக்கு இருபது மடங்கு கூலி கேழ்க்கும் ஆங்கிலேயரிடத்தில் நாம் நம்பி அதைக்கொடுப்பதற்குக் காரணம் வேலை சரிவர நடக்குமென்ற நம்பிக்கையே ஆகும். இவ்விதமாகவே சேலை வியாபாரத்தில் சாயம், பட்டு முதலிய விஷயங்களில் மோசம் செய்வதே நம்முடைய தொழிலாளிகளுக்கு உடன்பிறந்த குணமாகையால், மோசமில்லாதவனென்று பெயரெடுத்தவனுடைய மனதுக்கிசைந்த விலையைத் தடையின்றி நாம் கொடுத்துச் சேலைகளை வாங்கிக் கொள்ளுகிறோம். இங்கிலாந்தில் இந்தத் தொழிலையுஞ்செய்ய ஆரம்பிப்பார்களானால் இப்பொழுது சில ஜில்லாக்களில் சேலைகளை நெய்து ஜீவனம்செய்யும் பல குடும்பங்களும் அந்தத் தொழில்களை இழந்து பயிரிட்டாவது பிச்சை வாங்கியாவது காலங்கழிக்கவேண்டி வரும். நாள் கணக்காகக் கூலி கொடுக்கும் இடத்தில் வேலையை உழப்புகிற தொழிலாளியும், செய்து முடிக்கும் வேலையின் தராதரப்படி கூலி கொடுக்கப்படுமென்ற இடத்தில் வேலையைக் கெடுக்கிறவனும், பார்வைக்குப் பகட்டாக மாத்திரமுள்ள சாமான்களைச் செய்து விற்கமுயலும்முதலாளியும், சாமான்களுடன் பலவகையாயுள்ள குப்பைகளைக் கலந்துவிற்க முயலும் வியாபாரியும், தேசத்தின் செல்வத்தைக் குறைக்கும் பாபிகளாவார்கள். சில இடங்களில் தொழிலாளிகளொன்று சேர்ந்து, பிசகுகள் நடக்காதபடி கட்டுப்பாடு செய்துகொண்டு, அந்தக் கட்டுப்பாட்டைச் சரிவர அனுஷ்டித்து வருவார்களானால், அவர்களுக்கு அதனால் தொழில் சரிவர நடப்பதுமல்லாமல் தேசத்தின் செல்வமும் பெருகும். ஆயினும், சில இடங்களில் செல்வ விருத்திக்குரிய புதிய ஏற்பாடுகள் நடக்கவொட்டாதபடி தொழிலாளிகள் தங்களுக்குள் கட்டுப்பாடுசெய்து கொள்வது வழக்கம். கையாலேயே நடத்திவந்த வேலையை யந்திரங்களுடைய உதவியைக்கொண்டு நடத்தினால் வேலை குறையுமென்ற எண்ணத்தினால், யந்திரங்களைக்கொண்டு வேலை நடத்துவதில்லை என்று இங்கிலாந்தில் முற்காலத்தில் கட்டுப்பாடு செய்ததுண்டு. அப்படியே நம்முடைய நாட்டிலும் கம்மாளர், பிற ஜாதியார் தங்கள் வேலையைச் செய்வதினால் தங்களுக்கு நஷ்டமுண்டாகிறதென்று, அவர்களை உதவியாக்கிக் கொள்ளுகிறவர்களை ஜாதியிலிருந்து விலக்கவேண்டுமென்று கட்டுப்பாடு செய்துகொள்வதுண்டு. இந்தக் காலத்தில் பிற தேசங்களில் உபயோகிக்கப்படும் யந்திரங்களையும் பலவித சூக்ஷ்மங்களையும் அறிய முயலாமல், இவ்விதக்கட்டுச்செய்வதினால் லாபம் கிடைக்காது. இவ்விதக் கட்டுப்பாட்டை கும்பகோணத்திலுள்ள கம்மாளர் செய்துகொண்டு அதன்படி நடந்துவர அவர்கள் சாமான்கள் விலையுயர்ந்து இவ்விதக் கட்டுப்பாடில்லாத மைஸூர், புனா, முதலிய இடங்களிலிருந்து வரப்பட்ட பாத்திரங்கள் கும்பகோணத்திலேயே குறைந்த கிரயத்துக்கு விற்கப்பட்டிருக்கின்றன. காலக்கிரமத்தில சீமையிலிருந்து யந்திரங்களின் உதவியினால் அமைந்த பாத்திரங்கள் இங்குவர, அவர்கள் முற்றிலும் தொழிலை இழக்கவேண்டிவரும். இப்பொழுதே தாங்கள் ஒன்று சேர்ந்து, தங்களில் ஒருவனை மேல்நாட்டுக்கு அனுப்பியாவது, அவ்விடத்திலுள்ள ஒரு தொழிலாளியை இங்கு வருவித்தாவது, செவ்வையாக எளிதில் வேலையை நடத்தும் வழியை அறிந்து, தொழிலைச் செய்தாலொழிய, கம்மாளருக்கும் நெசவுக் காரர்களுடைய கதி, சீக்கிரத்தில் சம்பவிக்கும் ராஜாங்கத்தார் இது விஷயத்தில் உதவிசெய்வது அவசியம்.

டி. கே. ராமபத்ர சர்மா.

IRRIGATING PADDY FIELDS.

BY

R. L. DAVEY SINGH.

நெல் வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல்

நெல் விதை விதைத்து நாற்று ஆனபிறகு பிடுங்கி வயல்களில் நட்டுவிட்டால் வேலை முடிந்துவிட்டது என்று ஜனங்கள் நினைத்து சும்மா இருக்கிறார்கள். ஆனால் அப்படி இருப்பது சரியாகாது. விதைவிட்டு நாற்று நன்றாய்ப் பயிராகும் வரையில் எவ்வளவு ஜாக்கிரதை வேண்டுமோ அவ்வளவு ஜாக்கிரதையே நாற்று நடவான பிறகும் வேண்டும். முதலாவது, வயல் உழுவதைப்பற்றித் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டும். வயல்களில் எருப்போட்ட பிறகும் தண்ணீர் கட்டி உழுதுபோட்ட பிற்பாடும் ஜலத்தைக் கொஞ்சமேனும் வடிய விடக்கூடாது. உழுத வயலையும் காயவிடக்கூடாது. ஜலத்தை உடனே வடியவிட்டால் எருக்களினுடைய ஸத்துக்கள் பூமியில் நன்றாய்க்கலக்காமல் வடியும் ஜலத்தோடே ஓடிவிடும். இந்தமாதிரியாக சுமார் ஒரு மாதம்வரையிலும் செய்யவேண்டும். ஒரு மாதத்திற்குப் பிற்பாடு ஜலத்தை வடிய விடலாம். அப்போது பாதகமில்லை. வயல்களை எல்லாம் முதலெடுப்பில் உழுத பிறகு முப்பது நாள் கழித்து நடுவது நல்லது. அப்படிக்கில்லாமல் உழுது பத்துப் பதினைந்து நாளைக்கெல்லாம் நடவேண்டியிருந்தால் வயலை நட்டுவிட்டு உழுதது முதல் ஒரு மாஸம் வரையில் தண்ணீரை வடியவிடக் கூடாது. ஆனால் தண்ணீர் ஜாஸ்தியாய்ப்போய் விட்டால் என்ன செய்கிறது, நாற்று அழுகிவிடுமே என்று ஜனங்கள் கேட்கலாம். அதற்கு பதில் என்ன சொல்லலாமென்றால் அப்படி ஜாஸ்தியாகத் தண்ணீர்

கட்டுவது தப்பாகும்; கொஞ்சம் கொஞ்சமாய் தண்ணீர் பாய்ச்சவேண்டும். பாய்ச்சின தண்ணீர் பூமிக்குள் சென்ற பிறகு மறுபடியும் தண்ணீர் பாய்ச்சவேண்டும். வயலுக்கு முதல் முதல் தண்ணீர் கட்டின முப்பதாம் நாளுக்கு மேல் வயலை வடியவிடலாம்.

வயல்களை உழுதபிற்பாடு எடுத்துக்கொள்ள வேண்டிய ஜாக்கிரதையைப் பற்றிக் கொஞ்சம் சொன்னோம். வயலும் உழுதாய் விட்டது; உழுதும் ஒருமாதம் ஆய்விட்டது; அதுவரையில் நீரை கொஞ்சமும் வடிய விடவில்லை; பிற்பாடு நடவும் ஆய்விட்டது என்று வைத்துக்கொள்வோம் பிற்பாடு என்னசெய்கிறது?

நாற்று நடவாய்ப் பயிர் வேர் ஊன்றிவிட்டதா இல்லையா என்று அறியவேண்டியது அவசியம். அநேகமாய் எல்லா ஜனங்களும் நட்ட பயிர் பச்சை கொண்டால் வேரூன்றிவிட்டது என்று தெரிந்து கொள்ளலாம் என்பார்கள். ஆனால், இது அவ்வளவு முதல்தரமான அறிகுறி ஆகமாட்டாது. நாற்று நடும்போதே சில பயிர்கள் பச்சைகண்டிருக்கலாம். ஆகவே வேர் ஊன்றியிருக்கும் முன்னமேயே இருந்த பச்சை நிறம் அப்பொழுதும் தோன்றும். இந்தமாதிரியான விஷயங்களில் 'பயிர்ப்பச்சை பரீக்ஷை' பலிக்காது. எது நல்ல பரீக்ஷை என்றால் நட்டபயிர்களெல்லாம் தலை தூக்கி விட்டனவா என்று பார்ப்பதே ஸரியான பரீக்ஷை ஆகும். பயிர், செம்பட்டையாயிருந்தாலும் ஸரி, பச்சையாயிருந்தாலும் ஸரி நடவு ஆன கொஞ்ச நாளைக்குப் பிறகு தலை தூக்கினால் அதுவே வேரூன்றினதற்கு ஸரியான குறியாம். பயிர்கள் வேரூன்றி விட்டன என்று தெரிந்ததும் ஜலம் ஸரிவரப் பாய்ச்சுவதில் தகுந்த ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டும். ஜலம் பாய்ச்சுவதில் என்னஜாக்கிரதை எடுத்துக்கொள்ளுகிறது என்று சிலர் சொல்லலாம். இருந்தாலும் அது யோஜிக்கத்தக்கதுதான். ஜனங்கள் எல்லாரும் 'வடி வாய்க்கால்' என்று கேட்டிருக்கலாம். வயல்களில் பாய்ந்து பின்வடிந்து விழுந்தோடும் வழிக்கு வடிவாய்க்கால் என்றுசொல்லலாம். வடிவாய்க்கால்களே இல்லாமல் போனால் என்ன ஆகிவிடும் என்று சிலர் கேட்கலாம். இதைத் தெளிவாக்குவதற்கு ஒரு உதாரணம் சொல்லுவோம். அநேகமாய் எல்லாரும் குளங்களும் நதிகளும் உள்ள ஊர்களைப் பார்த்திருக்கலாம். சூரிய வெப்பமானது காலமே முதல் ஸாயந்திரம் வரையிலும் எல்லாவஸ்துக்களின்மேலும் படுகிறது. நதிகள், வாய்க்கால்கள், குளங்கள், ஏரிகள் இவைகளிலுள்ள ஜலம் சூரிய வெப்பத்தால், வெப்பத்தை அடைகிறது. இது எல்லாருக்கும் ஸகஜமாய்த் தெரிந்த விஷயம் தான். ஆனால் குளத்து நீர் ஜாஸ்தி சுடுகிறதா அல்லது வாய்க்கால் நீர் ஜாஸ்தி சுடுகிறதா என்று பார்த்தால், குளத்து நீர் ஜாஸ்தி வெப்பமுள்ளதாயிருக்கக் காண்கிறோம். ஒரே சூரியன்தானே குளத்து நீர் மேலும் வாய்க்கால் நீர் மேலும் படுகிறது; அப்படியிருக்க இப்படி ஏன் வித்தியாஸம் ஏற்படுகிறது என்று கேட்கலாம். சற்று யோஜித்துப் பார்த்தால் காரணம் நன்றாய் வெளிப்படும். ஆற்றுநீர், வாய்க்கால் நீர் இவைகளுக்கெல்லாம் ஓட்டம் உண்டு. குளத்து நீர், ஏரி நீர் ஆகிய இவைகளுக்கெல்லாம் ஓட்டமில்லை; இவைகளை நீர்நிலை என்று சொல்லலாம்; அல்லது தேக்கமுள்ள நீர் என்றும் சொல்லலாம். ஆகவே "நிலை நீர்" என்றும் "ஓடு நீர்" என்றும் ஜலத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இந்த இரண்டினில் எது சீக்கிரம் கொதிப்படைகிறது? நிலைநீர் அல்லவா? ஏன்? இந்த நீர் எல்லாம் ஓடாமல் தங்கியிருப்பதால் தான்.

ஜலமே வடிய விடாத வயல் மேல் சொன்ன குளத்து நீருக்குச் சமானமாகும் ஜலம் வடியவிடும் வயல்கள் ஆற்று நீருக்குச் சமானமாகும். ஆகவே வடியவிடாத வயல்களிலுள்ள ஜலம் வடியவிட்டிருக்கும் வயல்களிலுள்ள ஜலத்தைக்காட்டிலும் சீக்கிரம் கொதிப்பு அடைந்து விடும். ஜலத்திலுள்ள கொதிப்பு பூமிக்குள் செல்லும்; பூமியிலுள்ள கொதிப்பு பயிர்களின் வேர்களைத்தாக்கும். ஆகவே பயிர்களின் வேர்கள் சீக்கிரத்தில் கொதிப்பு அடைந்துவிடும். ஆனால் ஜலம் ஓட்டமுகமாகவே இருந்தால் அவ்வளவு கொதிப்படையாது. இப்போது திருநெல்வேலி ஜில்லாவில் நெல்விளைச்சல் ஜாஸ்தியாயிருப்பதை எல்லாரும் அறிந்திருக்கலாம். அங்கே பயிர்களும் அதிக உயரம் ஓங்கி வளருகிறதில்லையாம். பயிர்களெல்லாம் குட்டையாகவே இருக்கின்றனவாம். ஏன் ஜாஸ்தி விளைகிறதென்றால் பாயும் நீர் எப்போதும் ஸரிவர வடிந்து வருவதினாலேயேதான் என்று சொல்லுகிறார்கள். எந்த வருஷத்திலானாலும் பயிர் உயர்ந்து வளர்ந்தால் அந்த வருஷத்தில் பயிர் வெள்ளாமை குறைந்துவிடும் என்று சொல்லுகிறார்களாம். அப்படிச் சொல்லுவதும் ஸரிதானாம். வயல்களிலுள்ள ஜலத்தைத் தகுந்தபடி வடியவிடுவது எவ்வளவு அவசியமான காரியமென்று இதனால் ஏற்படுகிறதென்பதை வற்புறுத்திச் சொல்லவும் வேண்டுமோ! வடக்கே கிருஷ்ணா கோதாவரி ஜில்லாக்களில் வயல்களில் தண்ணீர் பாய்ச்சுவதற்கு நூறு ஏகராவுக்கு சுமார் நான்கு நீராணிக்கக் காரர்கள் இருக்கிறார்களாம். தெற்கே அதே அளவு நிலத்திற்கு ஒரு நீராணிக்கக்காரன்கூட பார்ப்பது அருமையாயிருக்கிறது. இந்தமாதிரியாக வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டே வரவேண்டும் நட்டது முதல் ஒரு மாஸத்திற்கெல்லாம் களை பிடுங்கவேண்டும். களை பிடுங்கும்போது எந்தெந்த இடத்தில் பயிர் வளம் குறைந்திருக்கிறதென்று அறிந்து அந்தந்த இடத்தில் கொஞ்சம் பிண்ணாக்கு எருப்போடவேண்டும். களை பிடுங்கி எருப்போட்ட ஒரு வாரம் வரையில் தண்ணீரை வடியவிடக்கூடாது. பிற்பாடு முன்போலவே ஸரிவரத்தண்ணீரைப் பாய்ச்சி வரவேண்டும் பயிர்களெல்லாம் தொண்டைக் கதிராவதற்குக் கொஞ்சநாள் முன்னால் இரண்டாம் தடவை களை பிடுங்கவேண்டும். அப்போதும் கொஞ்சம் பிண்ணாக்கு எருப்போடவேண்டும். அதுமுதல் தண்ணீர் பாய்ச்சலை மட்டுக் கட்டவேண்டும். பிற்பாடு பயிர்கள் எல்லாம் ஓத்தடிக் கதிரானபிறகு தண்ணீரை அடியோடே நிறுத்திவிட வேண்டும்.

பி. எல். தேவிஸிங்க்.

FOOD AND HEALTH.

BY

C. MUTHUGOPALAN.

ஆகாரமும் தேக ஸௌக்கியமும்.

மனிதர்களாகிய நாமெல்லாரும் நோயில்லாமல் ஸுகமாய் வாழ்வதற்கு நாம் சாப்பிடுகிற ஆகாரம், குடிக்கிற தண்ணீர், சுவாஸிக்கிற காற்று, உடுக்கிற வஸ்திரம் ஆகிய இந்த நான்கு விஷயங்களிலும் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டியது நம்முடைய கடமையாக இருக்கிறது.

மேலே சொன்ன இந்த நான்கு விஷயங்களிலும் அளவையே ஜனங்கள் இதற்கு முன்னே முக்கியமாகக் கவனித்து வந்தார்கள். ஆனால் நாகரிக முதிர்ச்சியடைந்த இந்தக் காலத்தில் அளவைவிடக் குணத்திலே அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது. அதாவது இதற்கு முன்பு ஆகாரத்தின் குணம் எப்படி இருக்கவேண்டும் என்பதைக் கவனிக்காமல் அதிகமாகச் சாப்பிட்டால் தேகபலமும் புஷ்டியும் உண்டாகும் என்று ஜனங்கள் நினைத்து வந்தார்கள். இப்போது அந்த மாதிரி அபிப்பிராயம் இல்லை. ஆகாரத்தைக் கொஞ்சமாகச் சாப்பிட்டபோதிலும் பாதகமில்லை; சத்துள்ளதும், தகுந்த போஷிப்பைத் தரத்தக்கதுமான ஆகாரத்தைத் தெரிந்து சாப்பிடவேண்டும் என்கிற கொள்கை இந்தக் காலத்தில் உண்டாயிருக்கிறது. இப்படி ஆகாரத்தின் அளவைவிட ஆகாரத்தின் குணத்தில் நம்மவர்கள் விசேஷ கவனஞ் செலுத்தி வருவது சந்தோஷிக்கத்தக்கது தான். ஆனாலும் அவர்கள் ஆகாரத்தின் குணத்தைப்பற்றி முற்றும் அறிய முயற்சி செய்யாமல் அரைகுறையான அறிவோடு திருப்தி அடைந்து விடுவதுதான் மிகவும் விசனிக்கத் தக்கதாயிருக்கிறது.

சாதாரணவிஷயந்தான் நம்மால் கவனிக்கப்படுகிறதில்லை.

உலகத்தில் உள்ள ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் தங்களுடைய ஜீவியத்தையும் அதிகாரத்தையும் ஸ்தாபித்துக்கொள்ள தங்கள் தங்களால் இயன்ற முயற்சியைச் செய்து வருகிறார்கள். இந்த முயற்சியில் மற்ற தேசங்களுக்குப் பின்

வாங்கக்கூடாது என்னும் விருப்பத்தை உடைய எந்த தேசமும் சாப்பிடும் ஆகாரம், குடிக்கும் தண்ணீர், சுவாசிக்கும் காற்று, தரித்துக்கொள்ளும் வஸ்திரம், இந்த நான்கு விஷயங்களையும் கவனிக்காமல் அலக்ஷியமாய் இருக்கமுடியாது. அப்படி அலக்ஷியம் செய்தால் அந்த தேசம் முன்னுக்கு வருவதற்கு முடியாது. ஆகாரவிஷயமாய் எப்படிப்பட்ட அபிப்பிராயம் வெளிவந்தபோதிலும் அவைகளை நாம் மிகவும் கவனிக்கவேண்டும். ஏனென்றால், ஆகார விஷயம் அவ்வளவு முக்கியமான விஷயமாயிருக்கிறது. ஆனால் நம்முடைய ஜீவியதசைக்கு முக்கியமான விஷயமாக எது இருக்கிறதோ அதையே நாம் அலக்ஷியம் செய்து வருகிறோம். எந்த விஷயம் ஸர்வஸாதாரணமான விஷயம் என்று நாம் நினைக்கிறோமோ அந்த விஷயமே நம்முடைய கவனத்தைத் தப்பிப்போகிறது.

ஆகாரமும் ஆதிகாலத்து மனிதனும்.

ஆகார விஷயத்தில் ஐரோப்பியர் சொற்பகாலமாக மிகுந்த கவனம் செலுத்தி வருகிறார்கள். ஆதிகாலத்து மனிதர்கள் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு தேசத்துக்கு தேசம் திரிந்துகொண்டிருந்த அந்தக் காலத்திலே இலைகளையும், காய் கனிகளையும், கிழங்குகளையும், மிருகங்களின் மாமிசங்களையும், பச்சையாகத்தின்று ஜீவித்தார்கள். அந்தக்காலத்தில் ஆகாரத்தை சமையல்செய்து சாப்பிடவேண்டும் என்று நினைக்கும்படியான அவ்வளவு தூரம் அவர்களுடைய அறிவு முதிர்ந்து இருக்கவில்லை. ஆடு மாடுகள் மேய்த்துக் காலங் கழிக்கும் நிலைமையைவிட்டு விவசாயிகளாகப் பின்பு ஆனார்கள். அப்படி ஆன காலத்திலேதான் ஆகாரத்தை சமையல் செய்து சாப்பிடவேண்டியது அவசியம் என்பதை மனிதர்கள் அறிந்தார்கள். அதுமுதல் அநேகவிதமாக ஆகாரங்களை சமையல்செய்து பக்குவப்படுத்தி சாப்பிட்டு வரும் வழக்கம் ஏற்பட்டது.

சமையல்செய்து சாப்பிடுவானேன்?

ஆகாரத்தைப் பச்சையாக சாப்பிடுவதைவிடச் சமையல்செய்து சாப்பிடுவதில் அநேக நன்மைகள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமான நன்மை என்னவென்றால், சமைத்த ஆகாரம் பச்சை ஆகாரத்தைவிட அதிக ருசியாயும், சீக்கிரத்தில் சுலுவாக ஜீரணமாகக் கூடியதாயும் இருக்கும். ஆனால் பழவகைகளை சமையல்செய்து சாப்பிடவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், பழங்கள் ஸரியாக முதிர்ந்து பழுத்தவுடன் ஜீரணத்துக்கு வேண்டிய ஸத்துகள் அவைகளில் இயற்கையாகவே உண்டாகி விடுகின்றன. தவிர மனதைக் கவரும் ஸுகமான வாஸனையும், ருசியும் அவைகளில் உண்டாகி விடுகின்றன. ஆனால் காய்கறி பதார்த்தங்களை ருசியாயும், ஜீரணிக்கத் தக்கதாயும் செய்யவேண்டுமானால் அவைகளை வேகவைத்து சமையல் செய்யவேண்டும். மிருகங்களின் மாமிசத்தையோ கட்டாயம் சமையல் செய்தே தீரவேண்டும். ஏன் மாமிசங்களை சமையல் செய்தே சாப்பிடவேண்டுமென்பதற்கு முக்கியமான காரணங்கள் பின்வருமாறு:—(1) பச்சை மாமிசத்தில் கெடுதலை விளைவிக்கத்தக்க சிறு பூச்சிகளும் விஷ க்ருமிகளும் இருக்கக்கூடும். அவைகளை அழிப்பதற்காக மாமிசங்களை வேகவைக்கவேண்டும்.

(2) மாமிசத்தைப் பச்சையாய் வைத்திருந்தால் அழுகிக் கெட்டுப்போகும். அப்படி அழுகிக் கெட்டுப்போகாமல் இருப்பதற்காக மாமிசத்தை சமையல் செய்யவேண்டும்.

(3) மாமிசத்துக்கு சீக்கிரத்தில் ஜீரணமாகக்கூடிய தன்மை இயற்கையில் கிடையாது. ஆதலால் அதை எளிதில் ஜீரணமாகும்படிச் செய்வதற்கு அதை சமையல் செய்யவேண்டும். மேலும் பச்சைமாமிசம் அவ்வளவு ருசியாயிராது. ஆதலால் ருசிப்படுத்த மாமிசத்தை சமையல் செய்யவேண்டியது அவசியமாகிறது.

மாமிசத்தைக் கொதிக்கவைப்பதால் அதனுடைய நிறை நூற்றுக்கு இருபது அல்லது முப்பது வரையில் குறைந்து விடுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகாரத்தைச் சமைத்துப் பக்குவப்படுத்துவதில் இரண்டு விதமுண்டு. நெருப்பில் போட்டு சுட்டுப் பக்குவப்படுத்துவது ஒரு விதம். ரோஸ்டு செய்து அதாவது எண்ணெய்ச் சட்டியில் போட்டு வறுத்துப் பக்குவப் படுத்துவது மற்றொரு விதம். இந்தக் காலத்தில் ஒவ்வொரு தேசத்தாரும் எந்த விதமான ஆகாரத்தை உட்கொள்ளுகிறார்கள், எந்த விதமாக சமைத்துப் பாகம் செய்கிறார்கள், என்பதைப்பற்றி

சாஸ்திர நிபுணர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஜன சமுகத்தின் நாகரிக விருத்தியை அறிந்து கொள்ளுவதற்குச் சமையல் செய்யும் விதங்கள் நல்ல அறிகுறிகளாகும்.

சமையல்செய்யும் தொழில்.

தற்காலத்தில் சமையல் செய்வதும் ஒருவித தொழிற் கல்வியைப்போலவே இருக்கிறது. நன்றாகச் சமைக்கத்தெரிந்த பரிசாரகர்கள் உலகத்தில் எங்கே பார்த்தாலும் வேண்டியதாய் இருக்கிறார்கள். சமையல் வேலையில் தேர்ச்சி பெற்றிருக்கும் ஒருவனுக்கு பிழைக்க வழி இருக்கிறது. அவன் அந்தத் தொழிலைக் கொண்டே அதிகமாக சம்பாதித்துப் பெரிய பணக்காரனாகலாம். உலகத்தில் ஸ்திரிகளே அநேகமாய் சமையல் செய்கிறார்கள். ஏனென்றால், அந்தத்தொழிலில் அவர்களுக்கு இயற்கையாகவே அறிவு இருக்கிறது. ஆனால் புருஷர்களோ தீராமல் போனால் பிழைப்புக்காக சமையல் செய்கிறார்கள். முன்காலத்தில் இந்தியாவில் சமையல்தொழில் ஒரு முக்கியமான படிப்பாய் இருந்ததென்றும், ராஜாக்கள் கூட அந்தப்படிப்பைக் கற்றுவந்தார்கள் என்றும் நாம் பழைய புராணங்களால் அறிகிறோம். இப்போதுகூட சமையல் நன்றாய் இருந்தால் "இதென்ன! சமையல் நளபாகமாயிருக்கிறதே?" என்று சிலர் சொல்லுவதை எல்லாரும் கேட்டிருக்கலாம். நளசக்ரவர்த்தியும், பஞ்சபாண்டவர்களில் பீமனும், சமையல் தொழிலில் மிகவும் தேறி இருந்தார்களென்று நளவெண்பா, பாரதம் முதலிய நூல்களைக்கொண்டு நாம் அறிகிறோம். மேல் நாட்டிலும், அதாவது ஐரோப்பா, அமெரிக்கா, முதலிய கண்டங்களிலும் சமையல் செய்வது ஒருவகைத்தொழில் கல்விதான்.

மேல்நாட்டு சமையலும் கீழ்நாட்டு சமையலும்.

ஐரோப்பா தேசத்தில் செய்யப்படும் சமையலுக்கும் கீழ்நாடாகிய நம்முடைய இந்தியா தேசத்தில் செய்யப்படும் சமையலுக்கும் ஒரு முக்கியமான வித்தியாஸம் உண்டு. ஐரோப்பியர்கள் ஆகாரத்தின் ருசியைப்பற்றி அதிகமாகக் கவனிக்கிறதில்லை; ஆகாரம் சீக்கிரமாயும், சுலபமாயும் ஜீரணமாகும் விஷயத்தைப்பற்றியே அதிகமாக கவனித்து அதற்குத் தகுந்ததுபோல் சமையல் செய்வார்கள். நம்மவர்களோ ஜீரணவிஷயமாய் அவ்வளவாய் கவனிக்காமல் வாய்க்கு ருசியாக இருக்கும்படியாகமட்டும் பார்த்து அந்த விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள். இதனால் இந்தியாவில் செய்யப்படும் சமையல் கொஞ்சமும் ஜீரணமாவதில்லை யென்றாவது, ஐரோப்பாவில் செய்யப்படும் சமையல் கொஞ்சமும் ருசியுள்ளதாக இருப்பதில்லை என்றாவது நேயர்கள் நினைக்கக்கூடாது. மொத்தக்கருத்து என்னவென்றால் ஐரோப்பியர்களைவிட, அதிலும் முக்கியமாய் ஆங்கிலேயர்களைவிட, இந்தியர்கள் ஆகாரத்தின் ருசியையும் நல்ல வாசனையையும் அதிகமாக கவனித்து சமையல் செய்கிறார்கள் என்பதுதான்.

ஆகார விஷயத்தில் செட்டு உதவாது.

ஆகார விஷயத்தில் போதுமான பணம் தகுந்த வழியில் செலவழிக்க அநேகருக்கு இஷ்டமிருக்கிறதில்லை. நல்ல செல்வாக்கும் ஆஸ்தியும் உடையவர்கள்கூட ஆகார விஷயத்தில் சிறிது பணம் அதிகமாகச் செலவு செய்யப் பின்வாங்குகிறார்கள். இந்தக் கெட்ட வழக்கம் நம்முடைய சென்னை ராஜதானியில் அதிகம். ஒரு குடும்பத்தில் உள்ள தலைவன் சம்பாதிக்கும் பணம் அந்தக் குடும்பத்துச் சாப்பாட்டுச் செலவுக்கே போதுமானதாயிருப்பதில்லை. அப்படிப்பட்ட குடும்பத்திலுள்ள ஸ்திரீகள் என்ன செய்கிறார்கள் என்றால், வாயையும் வயிற்றையும் ஒடுக்கிக் கால் வயிற்றுக்கும் அரை வயிற்றுக்கும் சாப்பிட்டு அந்த சொற்ப சம்பாத்தியத்திலேயே மிச்சம் பிடித்து அநாவசியமான நகைகளையும், விலையுயர்ந்த புடைவைகளையும் வாங்கி அணிந்து கொள்ளுகிறார்கள். நம் நாட்டு ஸ்திரீகளுக்குப் பிடித்திருக்கும் நகைப் பயித்தியம் அவர்களைப் பட்டினி கிடந்தாவது நகை வாங்கச் சொல்லுகிறதென்றால் நாம் வேறு என்ன சொல்லுகிறது? ஆகாரத்தின் அவசியத்தையும் அதன் மகிமையையும் அறிந்திருந்தால் இவர்கள் இப்படிச் செய்வார்களா? நம் நாட்டு ஸ்திரீகள் இப்படியிருப்பதற்கு அவர்களுக்குப் போதுமான சாஸ்திர ஞானமும், கல்வி அறிவும் இல்லாமையேயாகும். சிறு பெண்களுக்கும், பால்யஸ்திரீகளுக்கும், ஜனாசார சீர்திருத்தக் கல்வி கொடுப்பதாலும், அடிக்கடி மீட்டிங்குவைத்து குடித்தன முறையைப்பற்றி

ப்ரஸங்கங்கள் செய்வதாலும், சுகாதாரமுறையை அறிந்த ஸ்திரீகளை அடிக்கடி ஒவ்வொரு வீட்டுக்கும் அனுப்பி வீட்டிலுள்ள ஸ்திரீகளுக்கு சாஸ்திர ஞானம் உண்டாகும்படிச் செய்வதாலும் இந்தக்கெடுதியை ஒருவாறு நீக்கலாம். இந்தியாவில் ஸ்திரீகளுக்கு சுகாதாரத்தைப் பற்றிய சாஸ்திர ஞானம் கொஞ்சமும் இல்லை ஸரியான போஷிப்பையும் ரத்த விருத்தியையும் கொடுக்காமல் வெறும் பசியை மட்டும் தணிக்கும் ஆகாரத்தைச் சாப்பிடுவதில் கொஞ்சமும் நன்மை விளையாது; அநேக கெடுதிகள் உண்டாகும். இப்படிப்பட்ட ஆகாரங்களுள் காப்பி, டீ, முதலியவைகளும் சேர்ந்தவைகளாகும் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

தற்காலத்தில் காணப்படும் அபாயங்கள்.

மேல்நாட்டில் ஸ்திரீகள் பகலெல்லாம் பாக்டரிகளிலும் அதாவது தொழிற்சாலைகளிலும், ஆபீஸ்களிலும் வேலை செய்யப்போய் விடுவதால் அவர்கள் சமையல் வேலையை கவனிக்க முடிகிறதில்லை. நம்முடைய தேசத்தில் பள்ளர்கள், பறையர்கள்போன்ற சில ஜாதிகளில் உள்ள ஸ்திரிகளே கூலிவேலைக்குப் போகிறார்கள். மற்றஸ்திரிகள் கூலிவேலை செய்ய வெளியேபோகும் வழக்கம் இல்லையானாலும் இவர்கள் வீட்டுக்குள்ளிருந்தும் சமையல் வேலையைக் கவனிக்காமல் வீண்பொழுது போக்குகிறார்கள். இப்படியிருப்பது அபாயகரமானதே. பெரிய இடங்களில் உள்ள ஸ்திரீகளும், அரைகுறையாகப் படித்த ஸ்திரீகளும் சமையல் செய்வதை மிகவும் ஸங்கடவேலை என்று நினைத்து அதை அலக்ஷியம்செய்து பரிசாரகர்களைக்கொண்டு சமையல்செய்து வருகிறார்கள். இப்படி இவர்கள் நினைப்பதற்கு இவர்களுடைய அறியாமை ஒரு காரணமானாலும், மேல்நாட்டு நாகரிகத்தின் பழக்கமே முக்கிய காரணம். பெரிய வீடுகளிலுள்ள பெண்கள் எத்தனை பேருக்கு நன்றாய்ச் சமைக்கத் தெரியும்? நம் இந்தியாவில் சமையல் விஷயத்தில் ஸ்திரீகளை ஸரியான வழியில் பழக்கவேண்டுவது அவசியமாக இருக்கிறது. "ஆகாரத்தின் அளவை" விட "ஆகாரத்தின் குணத்தை" அதிகமாக கவனிக்கும்படி நம்மவர்களைச் செய்யவேண்டியதும் அவசியம்.

சொ. முத்துகோபாலன்.

EDUCATION OF INDIAN CHILDREN

BY

N. C. SANKARAMOORTHI.

◆

இந்தியச் சிறுவர்களின் படிப்பு.

மனித சமூகத்தைப் பற்றிய ஸகல விஷயங்களையும் அறிந்துகொள்ளக் கூடியவன்தான் மனிதன். இந்த அபிப்பிராயத்தை நாம் எல்லாரும் அங்கீகரிக்கிறோம். ஆனால் மனிதனைப் பற்றியும், மனித சமூகத்தைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளில் சில மிகவும் முக்கியமானவைகளாய் இருக்கின்றன. அப்படியிருந்தும் அவைகள் நம்மால் கவனிக்கப்படாமலும் நம்முடைய கவனத்துக்கு அகப்படாமலும் போகின்றன. இதற்குக் காரணம் போதுமான அளவு அவைகள் வற்புறுத்தப்படாமையே.

உதாரணமாக சிறுவர்களை எடுத்துக்கொள்ளுவோம். நாம் அவர்களுடைய சரீர இயற்கையைப்பற்றி அறிந்திருக்கிறோமா? அறிந்திருந்தால் அல்லவா ஸுகமான புருஷர்களாயும் ஸ்திரீகளாயும் பிற்காலத்தில் ஆகும்படி அவர்களை நாம் வளர்க்கக்கூடும். குழந்தைகளின் சரீரம் எப்படி வளர்ந்துவருகிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? அறிந்திருந்தால் அல்லவா அவர்களுடைய பால்ய புத்தியும் முதிராத சரீரமும் எவ்வளவு தூரம் வேலை செய்யக்கூடியன என்பதை அறிந்து அவைகளுக்குத் தக்கபடி அவர்களிடம் வேலைவாங்கலாம். சிறுவர்களுடைய மனப்போக்கு எப்படிப்பட்டதென்பதை அறிந்து கொள்ள நாம் முயற்சி செய்கிறோமா? முயற்சி செய்து அறிந்துகொண்டால் அல்லவா அவர்களுடைய மனப்போக்கை ஸரியான வழியில் செலுத்தி அவர்களுடைய குணங்களையும் நடவடிக்கைகளையும் நல்ல வழியில் திருப்பலாம். சிறுவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியவைகள் எவையென்றும், களைப்பையும் வெறுப்பையும் கொடுக்கக் கூடியவைகள் எவையென்றும் நாம் அறிந்திருக்கிறோமா? அறிந்திருந்தால் அல்லவா அவர்களுடைய முயற்சியில் அவர்களுக்கு ஒரு விதமான களைப்பும் உண்டாகாமல் சந்துஷ்டியுடன் எந்த விஷயத்திலும் கவனம்செலுத்தும்படி அவர்களைச் செய்யலாம். குழந்தைகளுடைய விருப்பத்துக்குத் தகுந்தபடி அவர்களுக்கு விளையாட்டு ஸாமான்களைவாங்கிக்கொடுக்கவேண்டுமென்று நமக்குப் பட்டிருக்கிறதா? குழந்தைகளுக்கு எந்தெந்த ஸமயத்தில் எப்படிப்பட்ட ஆகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்பதை நாம் கவனித்திருக்கிறோமா? சிறுவர்கள் எப்போதும் சுத்தமானகாற்றோட்டமும் நல்லவெளிச்சமும் உள்ள அறைகளில் படிக்கவேண்டும் என்பதைப்பற்றி நாம் கவனித்திருக்கிறோமா? குழந்தைகள் போட்டுக் கொள்ளும் சட்டைகள் போதுமான காற்று அவர்கள் சரீரத்தில் நுழையும்படியாயும், அவர்களுடைய கைகால் முதலிய அவயவங்களை அவர்கள் தாராளமாய் ஆட்டி அசைக்கக் கூடியதாயும் தொளதொளப்பாய் இருக்கவேண்டும் என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? இப்படிப்பட்ட கேள்விகளுக்குப் பதில் பெரும்பாலும் "இல்லை" என்றே வரும். இந்த விஷயங்களைப் பற்றி புருஷர்களும் ஸ்திரீகளும் தாங்களே கவலை எடுத்துக் கொள்ளாதபோது அவர்கள் குழந்தைகளைப் பற்றி எப்படிக் கவனமெடுக்கப் போகிறார்கள் என்று சிலர் சொல்லவரலாம். அதுவும் உண்மைதான்.

அநேக மனிதர்கள், சிறு வயதில் தங்களுடைய பெற்றோர்கள் தங்களை ஸரியான வழியில் வளர்க்கவில்லை என்று வருத்தப்பட்டு அவர்கள் மேல் குறைசொல்லுவதை அநேகர் பார்த்திருக்கலாம். அப்படி அவர்கள் குறை சொல்லுவதினால் நாம் அறிந்துகொள்ளுகிற நீதி என்ன? நாம் நம்முடைய குழந்தைகள் பிற்காலத்தில் நம்முடைய பேரில் அப்படிக் குறை கூறாதிருக்கும்படி அவர்களுக்கு ஸரியான கல்வி கொடுக்கவேண்டும் என்னும் நீதிதான். படித்த மனிதன் செய்யவேண்டிய கடமையென்னவென்றால்; தன்னுடைய அநுபவத்தினாலும் கல்வி அறிவினாலும், எந்த விதமான முயற்சி தான் குழந்தையாயிருந்தபோது தன் பெற்றோர்களால் செய்யப்பட்டிருந்தால் குழந்தைப்பருவத்தில் தனக்கிருந்த குறைகள் நிவர்த்திக்கப்பட்டிருக்குமென்று அறிகிறானோ, அந்தவிதமான முயற்சியை அவன் தன் குழந்தைகள் விஷயத்தில் செய்யவேண்டும். அப்படிச்செய்யாமல் இருந்துவிட்டானேயானால் அவன் தகப்பனுடைய கடமையை நிறைவேற்றினவனாக ஆகமாட்டான்.

இந்தியாவில் படித்தவகுப்பாரின் தொகை மிகவும் கொஞ்சம் என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். இந்தியாவில் படிப்பு எவ்வளவு தூரம் அபிவிருத்தியாகி இருக்கிறதென்பதைப் படித்த வகுப்பாரின் எண்ணிக்கையைக்கொண்டு அறிந்து கொள்ளுதல் சாத்தியமாகாதவிஷயம். இருந்தபோதிலும் காலத்தோடு ஒத்து, அதாவது காலம் எவ்வளவுக்கு எவ்வளவு விருத்தியடைந்து வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு, மற்ற எல்லா தேசங்களைப் போலவும், இந்தியாவும் படிப்பில் விருத்தியடைந்து வருகிறது என்பது மட்டும் நிச்சயம். மற்ற நாகரிகமுள்ள தேசங்களில் பொதுவாகப் பெற்றோர்களிடமிருந்து நாம் எவ்வளவு நன்மையை அவர்களுடைய குழந்தைகள் விஷயத்தில் எதிர்பார்க்கிறோமோ அதைவிட அதிகமாக இந்தியாதேசத்திலுள்ள பெற்றோர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாதென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஜனங்கள் தங்களுடைய சொந்தவேலைகளையும், ஜாதிய, ராஜ்ய விவகாரங்களையும் பெரிதாக எண்ணி அவைகளிலேயே மூழ்கி இரவும் பகலும் முயற்சிசெய்து வருவதால் முக்கியமான விஷயத்தை முழுவதும் மறந்துவிடுகிறார்கள். அந்தவிஷயம் என்னவென்றால்; மேலான தேசாபிமானிகளாக பிற்காலத்தில் வருவதற்குக் குழந்தைகளை ஸரியானவழியில் பழக்கி அவர்களுக்குத் தகுந்தமுறையில் கல்வி கற்றுக்கொடுத்து வளர்க்கவேண்டியது அவசியம் என்பதும், உயர்ந்தகுணம் என்று பழைய காலம் முதல் வழங்கிவருகிற சற்குணம் குழந்தைகளுக்கு உண்டாவது அவர்களைப் பழக்கும் விதத்தில் இருக்கிறதென்பதுந்தான். இந்த அருமையான விஷயத்தை யார் மறந்தபோதிலும் உபாத்தியாயர்கள் மறக்கக்கூடாது.

ஸாதாரணமான ஒரு கப்பலைச் செலுத்தவேண்டுமானால் அதைச்செலுத்த யோக்கியதையுடைய மாலுமி யாரென்று பார்த்து அவன்வசம் நாம் கப்பலை ஒப்புவிக்கிறோம். குதிரை வண்டியை ஓட்டுவதற்கும் அல்லவா குதிரையை ஸரியானபடி பழக்கி நன்றாய் ஓட்டக்கூடிய ஒரு வண்டிக்காரனைத் தேடுகிறோம்.

இப்படிப்பட்ட ஸாமானிய விஷயங்களுக்கெல்லாம் தகுதியும், யோக்கியதையும் உடையவர்கள் வேண்டுமென்று நினைக்கும் நாம் சிறுவர்களைப்பழக்குவதற்கு யாராயிருந்தபோதிலும் பாதகமில்லை என்று நினைப்பது எவ்வளவு அறியாமை? நம்முடைய குழந்தைகளின் மனதையும், குணத்தையும், கொள்கையையும் ஸரியான வழியில் திருப்பிப் பழக்குவதற்குத் தகுதியுடையவர்களே சிறுவர்களைப் பற்றிக் கவலையெடுக்க யோக்கியமுடையவர்கள். ஆதலால் அப்படிப்பட்டவர்களுடைய பார்வையில் நம்முடைய குழந்தைகளைவிடவேண்டும். அப்படிவிட்டால் கல்வி அதிக அபிவிருத்தியடைய ஹேது உண்டு என்றும், கல்வியால் அடையவேண்டிய முழுப்பலனையும் சிறுவர்கள் பெறுவார்கள் என்றும் நம்ப இடமுண்டு. இந்த விஷயத்தில் உபாத்தியாயர்களே முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

சிறுவர்களுடைய நல்ல நடத்தைக்கும் கெட்ட நடத்தைக்கும் உத்தரவாதிகளாயிருக்கும் உபாத்தியாயர்களே! உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிறந்த ஸமயத்தை உணர்ந்து அதை ஸரியானவழியில் உபயோகித்து மேன்மைப் படுத்துங்கள்! உங்களுடைய சிறந்த தொழிலைப்பற்றி புதிதான அபிப்பிராயங்களும், யோசனைகளும் எங்கெங்கே கிடைக்கின்றன என்று பார்த்து அவைகளைத் தெரிந்து அனுஷ்டியுங்கள்! உங்களுடைய தொழிலைச் செய்து வெற்றியடைந்த அறிவாளர்களிடம் உங்கள் தொழிலைப் பற்றி விவாதம் செய்து அவர்கள் அனுஷ்டித்த முறையை அறிந்து அவர்களைப் பின்பற்றிச்செல்லுங்கள்! புஸ்தகசாலைகளில் அடிக்கடி படித்தும், பெரியவர்களைக் கேட்டும் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கும் முறையையும், அவர்களுடைய மன இயற்கையையும் ஆத்ம இயற்கையையும் அறிந்துகொள்ளும் விதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்! நீங்கள் எந்த விஷயத்தைப் பிள்ளைகளுக்கு போதிக்கவேண்டுமோ அந்த விஷயத்தைப்பற்றி தனியாகப் புஸ்தகங்களை சேகரித்து உங்கள் வீட்டிலே வைத்துப் படியுங்கள்! பிள்ளைகளுக்குத்தகுந்த புஸ்தகங்கள் என்று பெரியோர்கள் எந்தப் புஸ்தகங்களை ஏற்படுத்தியிருக்கிறார்களோ அந்தப் புஸ்தகங்களை முதலில் நீங்கள் வாங்கிப் படியுங்கள்! அப்படிப் படித்து முக்கியமான விஷயங்களைப் பென்ஸலால் குறித்து வைத்துக்கொண்டு நீங்கள் நன்றாய் அறிந்த பின்பு பிள்ளைகளுக்குப் போதியுங்கள்! ஐரோப்பாதேசத்தார் எழுதியுள்ள புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருப்பதெல்லாம் வேதவாக்கு என்று உடனே முடிவு செய்து விடாதீர்கள்! அவைகளைப்படித்த பின்பு அந்த விஷயங்கள் பொருத்தமுடையனவா, பொருத்தமில்லாதனவா என்று உங்களுடைய மனோபாவத்தாலும் ஆழ்ந்த சிந்தனையாலும் அறிந்து, முடிவு செய்யுங்கள்! இந்தியச் சிறுவர்களுக்கு எந்த விஷயம் பொருத்தமாயிருக்கும் என்று உங்களுக்குப் படுகிறதோ அதை மட்டும் சிறுவர்களுக்குப் போதியுங்கள்! இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் நல்ல முறை என்றுபடும் கல்வி இந்தியாவுக்கு நல்ல முறையாக இருக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. உங்களுடைய தொழிலும் முயற்சியும் ஸாதாரணமானதென்று நினையாதீர்கள்! மனித சமுகமே உங்களைப் பொறுத்திருக்கிறது! சிறுவர்களுடைய மனப்பயிற்சியை மட்டும் கவனியாமல் அவர்களுடைய தேகப்பயிற்சியிலும் நீங்கள் கவனம் செலுத்தவேண்டும்! இங்கிலாந்திலுள்ள "எடுகேஷனல் போர்டார்" ஸமீபத்தில் கல்வி ஸம்பந்தமாய் சில நிபந்தனைகள் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் மாணாக்கன் கீழ்ப்படிதல், சொன்னதைச் செய்தல், மீறிநடவாதிருத்தல் இவைகளை முக்கிய விதிகளாகக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். மாணாக்கனுடைய ஞாபக சக்தியைப்பலப்படுத்துவதோடு சரீரத்தையும் பலப்படுத்த வேண்டிய விதமாய்க் கல்வி இருக்கவேண்டும் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். தன்னடக்கம், தன்முயற்சி, கூட்டுறவு, ஒத்துழைத்தல் முதலானவைகள் கல்வியால் மாணாக்கர்களுக்கு உண்டாகவேண்டும். அப்போதுதான் பிற்காலத்தில் அவர்கள் ஜனோபகாரிகளாயும், தேசாபிமானிகளாயும் வருவார்கள். இவைகளை உபாத்தியாயர்கள் கவனிக்கவேண்டும். முக்கியமாக பிள்ளைகள் மனதில் ஒரு விஷயத்தை உண்டாக்கவேண்டும். அது என்னவென்றால்; அதுவே அன்பு!

நா. சொ. சங்கரமூர்த்தி.

16118 603

INDIAN REVENUES.
இந்தியாவின் ரெவினியூ.

இந்தியாவின் ரெவினியூ, அதாவது ஸர்க்காருக்கு வருஷவாரி கிடைக்கும் வரும்படி மூன்று வகைப்படும். முதலாவது இனம் நிலத்தீர்வை. இதைத்தான் கிஸ்தியென்று நாம் சொல்லுகிறோம், இது கவர்ன்மெண்டார் குடிகளிடமிருந்து ஸகல நிலங்களும் தங்களுக்குச் சொந்தம் என்ற சுதந்தரம் கொண்டாடி ராஜாவுக்குக் கிடைக்கவேண்டிய பங்காக வசூல்செய்வது. இந்த நிலத்தீர்வை எல்லா மாகார்ணங்களிலும் ஒரேமாதிரி முறையை அனுஸரித்து வசூல் செய்யப்படுவதில்லை. வங்காளம், மத்திய மாகாணங்கள், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப் இந்த மாகாணங்களில் நிலத்தீர்வை ஜமீன்தாரி முறையை அனுஸரித்து வசூல் செய்யப்படுகிறது. நம்முடைய சென்னை மாகாணத்தில் நிலத்தீர்வையை பிரதிவிவசாயியிடமிருந்தும் வசூல் செய்வது போல வசூல் செய்யாமல் கவர்ன்மெண்டார் ஜமீன்தார் என்று சொல்லப்படுகிற பெரிய நிலச்சுவான்தாரிடமிருந்து மொத்தமாய்நிலத்தீர்வையை வசூல் செய்துகொண்டு வரும் முறைக்கு, ஜமீன்தாரி முறையென்று பெயர். மேலே நாம் குறிப்பிட்ட மாகாணங்கள் நீங்கலாக மற்ற மாகாணங்களில் நிலத்தீர்வை ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் வசூல் செய்யப்படுகிறது. அப்படி வசூல் செய்யும் முறைக்கு கிரப்பு அல்லது ரயத்வாரி முறையென்றுபேர். ஜமீன்தாரி முறைப்படிச்செலுத்தப்படும் நிலத்தீர்வை என்றைக்கும் மாறாமல் சாசுவதமாய் ஏற்பட்டுள்ளது. ரயத்வாரி முறையை அனுஸ்ரித்து வசூல் செய்யப்படும் நிலத்தீர்வை 30 வருஷத்துக்கு ஒரு முறை புது திட்டம்போட்டு மாற்றப்படுகிறது. அப்படி மாற்றப்படுவதில் அது அநேகமாய் அதிகமாக்கப்படுகிறதே ஒழியக் குறைக்கப்படுகிறதில்லை.

ஸர்க்கார் வரும்படிக்கு ஆதாரமான இரண்டாவது இனம் கவர்ன்மெண்டார் பொதுஜனங்களின் நன்மைக்காகச் செய்து வைத்திருக்கும் தந்தி, தபால், இருப்புப்பாதை, நீர்ப்பாய்ச்சல் போன்ற வசதிகள்—இந்த வகைகளிலிருந்து ஸர்க்காருக்குக் கிடைக்கும் வரும்படி. இந்த இலாகாக்களின் செலவுக்குத் தாராளமாய்க் கண்டு மிச்சமும் ஆகின்றது. இந்த இனத்தில் நல்ல வரும்படி கிடைத்து வருவது, கவர்ன்மெண்டார் அதிக வரிகள் போடாமலிருக்க ஹேதுவாகிறது.

இந்த நாட்டின் ரெவினியூவுக்கு ஆதாரமாகும் மூன்றாவது இனம் வரிகளே. இந்த வரிகள் உப்பு வரி என்றும், கலால் வரி என்றும், கடற் சுங்கமென்றும், ஸ்டாம்பு அதாவது, முத்திரைக் காகித வரி என்றும், ரெஜிஸ்ட்ரேஷன் அதாவது, பத்திரப் பதிவுக் கட்டணமென்றும், வருமான வரி என்றும் பல வகைப்படும். பொதுவாய் ஸர்க்காருக்குக் கிடைக்கும் வரும்படிகளையெல்லாம் நாம் வரிகளென்று சொல்வதுண்டானாலும் உப்பு, கலால், கடற் சுங்கம், முத்திரைக் காகிதங்கள், பத்திரப் பதிவுபோன்ற வகைகளுக்குச் செலுத்தப்படும் கட்டணங்களே வரிகளாகும். இந்த வரியினங்களைப்பற்றி நாம் சிறிது விசேஷமாய்ச் சொல்லவேண்டியதுண்டு.

உப்புவரி.—உப்பு உணவுப் பொருளாகையால் இந்த ஒரு வரிதான் ஸகலமான ஜனங்களாலும் செலுத்தப்படுகிறது. உப்பு உணவுப் பொருளாயிருப்பதை உத்தேசித்து கவர்ன்மெண்டார் உப்பு வரியை எவ்வளவு குறைத்து வாங்கலாமோ அவ்வளவு குறைத்து வாங்குகிறார்கள். லார்ட் கர்ஸன்

JL
3m 211, N09PL
N09.2

ராஜப்பிரதிநிதியாயிருந்த காலத்தில் ஒரு மணங்குக்கு ரூ. 2½ ஆக இருந்த உப்பு வரி முதலில் மணங்குக்கு (80 ராத்தல்) ரூ. 2 ஆக்கப்பட்டது. அப்புறம் ரூ. 1½ ஆகக் குறைக்கப்பட்டது.

கலால்வரிகள்.—இந்த வரிகள் முக்கியமாய் சாராய வகைகளின் மேலும், இந்தியாவில் பயிர் செய்யப்படும் லாகிரி வஸ்துக்களாகிய பங்கி, அபின் இவை இரண்டின்மேலும் வசூல் செய்யப்படுகிறது. இந்த வரிகள் அந்தச் சரக்குகளைச் செய்யும் தொழிலாளிகளிடமிருந்து அவர்கள் செய்யும் சரக்கின் அளவுக்குத்தக்கபடி வசூல் செய்யப்படுவதுமன்றி அந்தச் சரக்குகளை வைத்து விற்போருக்குக் கொடுக்கப்படும் லைசென்ஸுக்காக கட்டணமாகவும் வசூல் செய்யப்படுகிறது. கலால் வரிகள் முன்னைவிட இப்போது அதிகமாகவே வசூலாகின்றன. அதற்கு அவைகள் திருட்டுத்தனமாய் செய்யப்பட்டு விற்கப்படாமல் கவர்ன்மெண்டார் பார்த்து வருவதும், அந்தச் சரக்குகளை முன்னைவிட இப்போது ஜனங்கள் அதிகமாய்ச் சாப்பிடுவதுமே காரணங்களாகும்.

கடற் சுங்க வரிகள்.—இவைகள் அந்நிய தேசங்களிலிருந்து அனுப்பப்பட்டு இந்தியாவில் இறக்குமதியாகும் சாமான்களின்மேல் அந்தச் சாமான்களின் விலைமதிப்பில் 100 க்கு 5 வீதம் வசூல் செய்யப்படுகின்றன. ஆனால் சாராயம், அபின், இவைகள் போன்ற பொறுக்கி எடுத்த சில சாமான்களின்மேல் முன் சொன்ன வீதத்தைவிட அதிகமாயும் வரி வசூல் செய்யப்படுகிறது. இப்படி இறக்குமதி வரி போடுவதற்குக் கவர்ன்மெண்டாருக்குக் கிடைக்கும் வரும்படி அவர்களுடைய செலவுகளுக்குப் போதாததே காரணம். இந்த வருஷம் இந்தியா கவர்ன்மெண்டார் அந்நிய நாடுகளிலிருந்து ஏற்றுமதியாய் இங்கே வந்து இறக்குமதியாகும் சில சாராய வகைகளுக்கும் புகையிலைச் சரக்குகளுக்கும், கட்டி வெள்ளிக்கும், மண்ணெண்ணெய்க்கும் இது வரையில் விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி வரியை உயர்த்தினார்கள். இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் சரக்குகளுக்கு 40 வருஷங்களுக்கு முன்னே ஏற்றுமதி வரிகள் விதிக்கப்பட்டன. இப்போது அவைகள் விதிக்கப்படுவதில்லை. அரிசிக்குமட்டும் ஒரு மணங்குக்கு 3-அணா வீதம் ஏற்றுமதி வரி விதிக்கப்படுகிறது.

வருமானவரி.—இது ஜனங்கள் உத்தியோகஞ்செய்தோ தொழில்கள் செய்தோ சம்பாதிக்கும் சம்பாத்தியத்தின்மேல் விதிக்கப்படுகிறது. இந்த வரி வருஷத்தில் ரூ. 1000-க்கு மேற்பட்ட வரும்படியின் மேல்தான் வசூல் செய்யப்படும். மாதச்சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களிடம் இந்த வரியை அவர்களுக்கு யாதொரு தொல்லையுமில்லாமல் வசூல் செய்துவிடலாம். மற்றப்படி தொழில்கள் செய்து சம்பாதிக்கிறவர்களிடம் அவர்களுக்கு மனஸ்தாபமில்லாமல் வசூல்செய்ய முடியாது. ஸர்க்கார் அதிகாரிகள் அவர்களுக்கு மனஸ்தாபமில்லாமல் வசூல் செய்வதுங்கிடையாது. ஏனென்றால் அந்தத் தொழிலாளிகள் தங்களுக்குக் கிடைக்கும் வரும்படி சொற்பமென்று கணக்குக் கொடுப்பார்கள். ஸர்க்கார் ரெவின்யூ அதிகாரிகள் அவர்களுக்குக் கிடைக்கும் வரும்படி அதிகமாயிருக்கவேண்டுமென்றே மதிப்புப்போட்டு தாங்கள் போடும் மதிப்பின்மேல் வரி வசூல்செய்வார்கள்.

முத்திரைக் காகித வரியும் பத்திரப் பதிவுக் கட்டணமும்.—இவை இரண்டும் ஸர்க்கார், ஜனங்களுக்குச் செய்யும் சாதகத்துக்காக செலுத்தப்படும் கட்டணங்களாகும்.

HOW A QUEEN WON.

ஒரு ராணி ஜெயித்த விதம்

ஆதிகாலத்தில் இந்தியாவைப் பற்பல ஹிந்து அரசர்கள் ஆண்டு வந்தார்கள். இவர்கள் பராக்ரமத்தில் மிகுந்த பலசாலிகளாக இருந்தார்கள். 12-ம் நூற்றாண்டின் மத்தியில் மத்திய ஆசியா, ஆப்கானிஸ்தான் முதலான இடங்களிலிருந்து துருக்கர்கள் திரள் திரளாக இந்தியாவில் நுழைந்து ஹிந்து அரசர்களை ஒருவர் பின் ஒருவராகத் தோற்கடித்து டில்லியில் சக்ரவர்த்திகளாகி அரசாளத் தொடங்கினார்கள். ஆனாலும் 13, 14-ம் நூற்றாண்டுகள் முழுவதும் அவர்களுக்கும் ஹிந்து அரசர்கள் பலருக்கும் இடைவிடாது சண்டை நடந்து வந்தது. ஹிந்துக்களுக்கு வேண்டிய ஒற்றுமையில்லாததினால் அவர்கள் பலரையும் தனித்தனியாகத் தோற்கடிப்பது துருக்கர்களுக்கு எளிதாயிற்று.

இது நிற்க, மத்ய இந்தியாவில் கனூர் என்ற ஊரில் ஒரு சிற்றரசன் ஆண்டுவந்தான். அவன் பேரில் பட்டாணிய சேனைத்தலைவன் ஒருவன் படையெடுத்து வந்தான். அப்பொழுது அரசன் அதிக வீரத்தோடு சண்டை போட்டு யுத்தத்தில் மார்பில் காயம்பட்டு இறந்தான்.

இந்த ஸமாசாரம் கனூருக்கு எட்டியதும் அவன் மனைவியாகிய ராணி, புருஷன் இறந்ததைப்பற்றி துக்கம்பாராட்டாமலும், அழாமலும், பாக்கியிருந்த சில வீரர்களை ஒன்று சேர்த்துக்கொண்டு அவர்களுக்குத் தானே தலைமைபூண்டு ஆவேசத்தோடு போர்க்களத்தில் சண்டை போடப்போனாள். இவள் இப்படி வீரர்களுக்கு நடுவே சண்டைபோடுவதால் எல்லாருக்கும் உற்சாகமுண்டாகி மகமதியரில் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றார்கள். இருந்தாலும் வரவர ராணியின் பக்கத்தில் நின்று சண்டைசெய்த அநேகம் பேர்கள் பட்டுப்போனார்கள். மகமதியருக்கோ டில்லியிலிருந்து காப்புச் சேனை வந்துகொண்டேயிருந்தது. உடனே ராணி எதிர்த்துச் சண்டைபோடுவது அஸாத்தியம் என்று அறிந்து தன் ஜனங்களைக் காப்பாற்றுவதற்கு ஒரு உபாயத்தைத் தேடும்பொருட்டு பின்வாங்கி நர்மதை ஆற்றோரத்தில் உள்ள தன்னுடைய ஒரு கோட்டைக்குள் சில வீரருடன் ஓடி ஒளித்துக் கொண்டாள். இவளை மகமதியர் பின் தொடர்ந்து கோட்டைக்குட் புகுந்து, ராணியின் வீரர்களைக் கொன்றார்கள். இதைப்பார்த்து தன் பாக்கி வீரர்களை மீட்கும் பொருட்டு "எல்லாரும் சரணாகதி காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லும்படி மகமதிய ஸேனாதிபதிக்கு தூதன் ஒருவனை அனுப்பினாள்.

மகமதிய ஸேனாதிபதிக்கு ராணியின் ராஜ்யத்தின்மேல் ஆசை விட்டு அவளை உயிரோடு பிடித்து கலியாணஞ்செய்துகொள்ள வேணும் என்ற எண்ணம் வந்துவிட்டது. இதற்காக அவன் தூதனிடம் ராணி தன்னைக் கலியாணஞ்செய்து கொள்ளச் சம்மதித்தால் தான் அவள் ஊர் ஜனங்களைக் கத்திக்கிரையாக்காமல் காப்பாற்றுவதாகவும், இல்லாவிட்டால் ஒருவினாடிக்குள் ஊரை நாசஞ்செய்வதாகவும் ஸமாசாரம் அனுப்பினான்.

ராணி இதைக்கேட்டு இவனை தந்திரத்தினால் வெல்லவேண்டுமென்று யோசித்துத் தான் அப்படியே அவனைக் கலியாணம் செய்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும், ஆனால் அந்தக்கலியாணத்திற்கு இரண்டுநாள் கொடுக்கவேண்டுமென்றும், கலியாணம் அந்தக்கோட்டையில் மாடியின்மேல் நடக்கவேண்டுமென்றும் சொல்லியனுப்பினாள்.

ராணியின் அழகைக்கண்டு மயங்கிய அந்த ஸேனாதிபதி அவள் சொன்னபடி யெல்லாம்

கேட்தலாயினான். உடனே மகமதிய வீரர்கள் தங்கள் ஆயுதங்களையெல்லாம் எறிந்துவிட்டு ராணியின் விருந்தினராகி தலைகால் தெரியாதபடி திரிய ஆரம்பித்தார்கள்.

கலியாணதினம் வந்தது. அன்று காலையில் ராணிதன் புருஷனுக்கென்று ஒரு புதிய விலையுயர்ந்த ஆடை தயார்செய்து ஒரு வெகுமதியாக அனுப்பினாள். இதைக் கண்டதும் அவனுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. இரண்டு தினத்திற்கு முன்னமே யுத்த ஆரவாரம் நிறைந்த இடங்களிலெல்லாம் இப்பொழுது பேரிகை முதலான கலியாண வாத்தியங்கள் கோஷித்தன. மகமதியர் எல்லாரும் குடிவெறியில் ஆயுதங்களைக்கண்ட இடத்தில் எறிந்திருந்த சமயம்பார்த்து ராணிதன்மனிதர்களைக்கொண்டு அவைகளை அப்புறப்படுத்தினாள். குறித்த நேரத்தில் ஸேனாதிபதி மணக்கோலம் பூண்டு, புதிய ஆடை தரித்து கோட்டையின் மாடியின்மேல் வந்தான். அப்பொழுது ராணியும் ஆடை ஆபரணங்கள் தரித்து அவனையெதிர்கொண்டழைத்தாள். அவனைச்சுற்றிப் பலநாற்காலிகள் போட்டிருந்தாள். ஒவ்வொன்றிலும் ஒரு மெத்தை போடப்பட்டிருந்தது. அதன்ஒவ்வொன்றின் மேலும் ஒவ்வொரு அடிமை கையில் தீபம் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். ராணியை கண்ட ஸேனாதிபதி "ஆஹா நாம் இத்தனை நாளாக எதிர்பார்த்திருந்த ஆனந்தத்தை இன்றே அனுபவிக்கப் போகிறோம். இவள் அழகைப்பார்த்தால் அதற்கு ஏற்றவன் நான் அல்ல. இருந்தாலும் எனக்குக்கிடைத்தது என்னுடைய பாக்கியமே" என்று எண்ணிக்கொண்டான். எல்லாரும் அவரவர்கள் இடத்தில் உட்கார்ந்தார்கள். உடனே ராணி, பொழுதுபோக்குவதற்காக ஏதாவது பேசவிரும்பி "ஐயா, நான் ரஜபுத்ர ஸ்திரீ. என்னை ஒரு பொருட்டாக மதித்து என்மேல் கிருபை கூர்ந்தது என்னுடைய பூர்வ ஜென்ம பலனே; இன்றே எனது எண்ணம் நிறைவேறப்போகிறது" என்று சொன்னாள்.

இதற்குள் ஸேனாதிபதிக்கு உடம்பு எரிச்சல் ஆரம்பித்து விட்டது. ராணி விசிறி, போட்டு விசிறச்சொன்னாள். என்னசெய்தும் பொறுக்கமாட்டாமல் ஸேனாதிபதி சட்டையைக் கிழித்து எறிய ஆரம்பித்தான். இதைப் பார்த்த உடனே ராணி! "அடா! பாபி என் புருஷனைக் கொன்றதுமல்லாமல் என் கற்பையும் அழிக்க நினைத்த நீ படவேண்டிய பாட்டை அடைகிறாய். உன்மேல் போட்டிருக்கும் ஆடை நல்ல விஷத்தில் தோய்த்தெடுத்தது. நீ இனி பிழைக்கமாட்டாய், பேதாய்! ரஜபுத்ர ஸ்திரீ தன்னுடைய உயிரைப் பார்க்கிலும் கற்பையே மேலாகக் கருதுவாள் என்பதை மறந்தாயே!" என்று சொல்லிக்கொண்டே சுவர்ப்பக்கஞ் சென்றாள். இவளுடைய அழகையும்,இவளுடைய குயில்போன்ற இனியகுரலையும் கேட்ட மகமதியர்கள் பிரமித்துப்போய் ஒன்றுந்தோன்றாமல் நின்றார்கள். திடீரென்று ராணி ஒரு பலகணியைத்திறந்து ஆற்றில் குதித்தாள். அங்கே படகுகள் தயாராக இருந்தன. உடனே ஒரு பெரிய இடிபோன்ற முழக்கம் கேட்டது. மகமதியர் உட்கார்ந்திருந்த மெத்தை ஒவ்வொன்றும் துப்பாக்கி மருந்து நிறைந்த பை. அவைகளின் பக்கத்தில் விளக்குப்பிடித்திருந்த ஒவ்வொரு தாதியும் உடனே ஒரே சமயத்தில் தீவைத்துக் கொளுத்திவிடவே, கோட்டை முழுவதும் புகைநிறைந்து தலைகளும், கைகளும், கால்களும் ஆகாசத்திற் கிளம்பின. ராணியின் தாதிகளோ தங்கள் உயிர் போனாலும் சரி ராணியின் உயிரைக் காப்பாற்றி ஊருக்கு க்ஷேமம் வந்தால் போதும் என்று ஒரே தீர்மானங்கொண்டவர்களானதால் அவர்களும் இறந்தார்கள். இதற்குள் குடிவெறியால் வெளியே நின்ற மகமதிய வீரர்களுக்கு ராணி செய்தமோசம் தெரியவந்தது. ஆனால் ஆயுதங்கள் ஒன்றும் இல்லாதபடி ராணி தந்திரமாகச் செய்தபடியால் ராணி ஒளித்து வைத்திருந்த வீரர்கள் மகமதியர்களை எதிர்த்துக் கொன்றுவிட்டார்கள். இவ்விதமாக ஒரு ரஜபுத்ர ஸ்திரீயின் வீரத்தால் கனூர் காப்பாற்றப்பட்டது.

எஸ். பஞ்சாபகேச சர்மா.

SELECTIONS.

விஷேசத் திரட்டு.

—o—

WATERING PLANTS.

பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுதல்.

செடிகளுக்கு அவைகளின் வேர்ப்பக்கத்தில் தண்ணீர் இருக்கவேண்டியது அவசியம். அநேகமாய் மழையில்லாத வரண்ட இடங்களில் தானாய் முளைத்து வளரும் காட்டுச் செடிகளுக்குங்கூடத் தண்ணீர் அவசியம். தண்ணீர் இருக்கும் இடத்தைத்தேடி பூமிக்குள் ஆழமாய்த் தங்கள் வேர்களைச் செலுத்தக்கூடிய சக்தி அவைகளுக்கிருப்பதால்தான் அவைகள் ஜீவிக்க முடிகிறது. தண்ணீர் அகப்படாத இடங்களில் செடிகளின் வளர்ச்சி குறைவாகவும் தாமதமாகவும் இருக்கும். மேலும் கொஞ்சகாலத்துக்குப் போதுமானபடி தண்ணீர் பாய்ச்சிப் பின் தண்ணீர் பாய்ச்சாமல் நிறுத்திவிட்டால் அவைகள் வாடி உருவம் குலைந்துபோகின்றன. உடனே அவைகளின் குறை தீர்த்தாலன்றி அவைகள் மடிந்துபோகும் அபாயத்துக்குள்ளாகின்றன. சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்குத் தண்ணீர்த் தட்டுண்டானால் காலத்துக்கு முன்னேயே அவைகள் பூத்துக் காய்த்துவிடும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பயிரின் விளைவு வெகுவாய்க் குறைந்துபோவதுமன்றி தானியம் மணி பிடிக்காமல் பிரயோஜனமற்ற பதராயிருக்கும்.

செடிகளுக்குத் தண்ணீர் அநேக விதங்களில் உபயோகப்படுகிறது. முதலாவது அது செடிகளுக்கு அவசியமான ஆகாரம். ஜீவஜெந்துக்கள் தண்ணீர் குடிக்கவேண்டியது அவசியமென்று உங்களுக்குத் தெரியுமே. அவைகளைவிட செடிகளுக்குத் தண்ணீர் அதிக அவசியம். செடிகளில் அதிகபாகம் தண்ணீராகவே இருக்கிறது. அவைகளுக்குப் போதுமான அளவுக்குத் தண்ணீர் பாய்ச்சாமல்போனால் அவைகளின் தண்டுகள் ஸத்தில்லாமல் கடினமடைந்து மரத்துப்போகும். செடிகள் தங்கள் ஆகாரத்தை ஜல ரூபமாகவே அருந்தக்கூடும். பூமியிலிருந்து வேர்களுக்குள் புகும் தண்ணீரில் எப்பொழுதும் தாதுப்பொருள்கள் கரைந்திருக்கின்றன. அவைகளே செடிகளின் வளர்ச்சிக்கு அவசியமான ஆகாரம். மேலும் இந்த ஆகாரம் அதிக நீருடன் கலந்ததாய் இருக்கவேண்டும். அதாவது, கொஞ்சமான தாதுப்பொருள்கள் அதிகமான தண்ணீரில் கரைந்திருக்கவேண்டும். இவ்விதமாக ஏராளமான தண்ணீர் இடைவிடாமல் அவைகளின் தண்டுகளின் வழியாய் இலைகளுக்குப் போய் அங்கிருந்து ஆவியாய் வெளியாகிறது. கடைசியாக செடிகளின் உருவம் குலையாமல் இருப்பதற்குத் தண்ணீர் அவசியம். அவைகளுக்கு அதிகமான தண்ணீர் விடாவிட்டால் அவைகளின் இலைகளும் கிளைகளும் தளர்ந்து தொங்கிக்கொண்டிருக்கும். அவைகள் தங்கள் இலைகளின்மேல் சூரிய ஒளி படும்விதமாய்ப் பரப்பிக்கொண்டிருக்க வேண்டியதற்கு அவைகளின் உள்ளே தண்ணீர் நிறைந்து வளையாமல் விறைப்பாயிருக்க வேண்டியது அவசியம். செடிகளின் கிளைகள் விரிந்து படர்ந்திருக்கவேண்டியதுமன்றி, அவற்றிலுள்ள புஷ்பங்கள் நன்றாய் மலர்ந்திருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அவைகளின் காய்பிடித்தும் பழுத்தும் விளைவு உண்டாகும். இல்லையானால் அந்தப் பயிர் பலனற்றதாகும்.

ஆனால் நீர்ப்பாய்ச்சலுக்கு ஏற்பட்ட பிரதிகூலங்களும் உண்டு. மேக மண்டலத்திலிருந்து அமைதியுடன் நிஸப்தமாய் இறங்கும் மழை

க்குப் பாய்ச்சல் தண்ணீர் நிகராகமாட்டாது. முதலாவது, ஜீவஜந்துக்களைப்போலவே செடிகளுக்கும் அடிக்கடி குளித்தல் (உடம்பு கழுவுதல்) அவசியம். இல்லையானால் செடிகளின் இலைகள்மேல் தூசு படிந்து அவைகளுக்கு மூச்சு முட்டிப் போவதுமன்றி, பூச்சி புழுக்கள் பலுகிப்பெருகி செடிகளுக்குப் பிராணபாயத்தை விளைவிக்கும். மழை பெய்து அது செடிகளைச் சரியாய்க் கழுவிவிட்டால் பூச்சி புழுக்கள் அதிகமாய் விர்த்தியடைய மார்க்கம் இருக்காது. இரண்டாவது, நீர்பாய்ச்சும்போது நிதானமில்லாமல் அதிகத்தண்ணீர் பாய்ச்சுவதினால் எப்பொழுதும் கெடுதி உண்டாகக்கூடியதாகவேயிருக்கிறது. நெற்பயிரானாலுங்கூட, ஒரு பயிரின் விளைவுக்கு வாஸ்தவத்தில் எவ்வளவு குறைந்த தண்ணீர் போதுமானதென்று இந்து தேசத்துக் கிருஷிகர் அறிந்து கொள்ளவில்லை. இப்போது தான் அவர்கள் ஒரு பயிருக்கு எவ்வளவு அதிகமான தண்ணீர் பாய்ச்சினால் பாதகம் இருக்காதென்று கண்டுகொள்ளப் பிரயாசப்படுவதாகத் தோற்றுகிறது. பயிர்கள் அழுகி அழிந்து போகாமல் அவைகளுக்கு எவ்வளவு அதிகமான தண்ணீர் பாய்ச்சலாம் என்பதை அவர்கள் கவனிப்பதைப் பார்த்தால் ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. இந்து தேசத்துக் கிருஷிகர் நீர்ப்பாய்ச்சுதல் வெகு நல்லதென்றும் பயிர்கள் சரியானபடி விளைவடைய அது அவசியமானதென்றும் கண்டுகொண்டதால், எவ்வளவுக்கு அதிகமான தண்ணீரை உபயோகிக்கிறார்களோ அவ்வளவுக்கு அதிகமான விளைவு கிடைக்கும் என்னும் தீர்மானம் கொண்டிருக்கிறார்கள்போலும். ஆனால் இந்த அபிப்பிராயம் சரியானதல்ல. போதுமான அளவுக்கு அதிகமான தண்ணீர் பாய்ச்சினால் மண்ணிலிருந்து காற்றுவெளியே போக்கப்படுகிறது. நிலத்தில் அதனால் நீர்பிடிப்பு உண்டாகிறது. இதனால் எண்ணிறந்த நோய்கள் பயிர்களுக்கு உண்டாகின்றன. இந்த நோய்கள் முக்கியமாக காளான் போன்றவைகள். உதாரணமாக சென்னை ராஜதானியில் பயிராகும் கரும்புப் பயிரில் உண்டாகும் நோய்களில் அனேகம் அதிகமான பாய்ச்சல் தண்ணீரினால் உண்டாகின்றன. நிலத்துக்கு நீர்பாய்ச்சுவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது அதிலிருந்து நீர் வடியச்செய்தல். நீர்பாய்ச்சுவதுடன் சரியான நீர்வடிவும்கூடவே இருக்கவேண்டும். நீர்வடிந்து போகக்கூடாத பள்ளத்தாக்கு நிலங்களுக்கு அதி ஜாக்கிரதையுடன் நீர்பாய்ச்சவேண்டும்

கடைசியாக நீர்பாய்ச்சுதலால் உண்டாகும் கெடுதிகளில் மிகவும் முக்கியமானது எதுவெனில் நிலங்கள் அதனால் உவர் (களர்) நிலமாவதுதான். நிலங்களில் அனேக வருஷங்களுக்கு நீர்பாய்ச்சிக்கொண்டிருந்தால் அதில் சில சமயங்களில் கெடுதியுண்டாக்கும் அனேக வித உப்புகள் நிறைந்து அவைகளைப் பயிரிடுவதற்கு உபயோகமில்லாமல் செய்துவிடுகின்றன. நீர்வடிவு சரியாய் நடத்திவந்தால் நிலங்கள் களராவதைத் தடுக்கலாம். ஆனால் இதை அசட்டை செய்வார்களானால் நிலத்தை மறுபடி சீர்திருத்துவதற்கு வெகுகாலம் செல்லும்.

தோட்டக்கால் சாகுபடியில் கிணற்று இறவை உடையவர்களும் நன்செய் சாகுபடி செய்யும் கிருஷிகரும் இந்தவிஷயங்களை சிந்திக்க வேண்டும்.

சி. எ. பார்பர்,
கவரன்மெண்ட் பாடனிஸ்ட்.

WILD INDIGO.
கொழுஞ்சி.

இதை தஞ்சாவூர் ஜில்லாவில் காவாளைப் பூண்டு என்றும் காட்டு அவுரி என்றும் சொல்லுவார்கள். இது சிலாக்கியமான தழை கொடுக்கக்கூடியதென்பது குடியானவர்களுக்கு ஏற்கனவே தெரியும். கொழுஞ்சி சாதாரணமாய், தஞ்சை ஜில்லாவில் மற்றப் பூண்டுகளைப்போல் ஏராளமாய் திடல்களிலும் ஆற்றங்கரைகளிலும் வளர்ந்திருக்கும். முக்கியமாய் சமுத்திரத்தை ஒட்டின பாகத்திலும், திருத்துறைப்பூண்டி தாலூகாவில் சில இடங்களிலும், திருவாரூர், குழிக்கரை முதலிய இடங்களில் வெட்டாற்றங் கரையோரங்களிலும், முத்துப்பேட்டை பட்டுக்கோட்டையிலும், சீர்காழி தாலூகாவிலும், ஏராளமாய் வளர்ந்திருக்கிறது.

அது சிலாக்கியமான தழை என்று அறிந்து இப்படி ஏராளமாய் வளர்ந்திருக்கும் திடல் தரிசுகளுக்குச் சமீபத்திலிருக்கும் நஞ்சை நிலங்களுக்கு ௸ தழையை வெட்டி, கட்டுக் கட்டுக்களாகக் கட்டி எடுத்துக்கொண்டுபோய் உரம் செய்வார்கள்.

ஆனால் மேற்படி பயிரை நஞ்சையிலேயே விதைத்து பலனடையலாமென்பது தஞ்சை ஜில்லாவில் அநேகர் அறிந்திருக்கமாட்டார்கள். தரிசுகளில் தானாய் வருஷாவருஷம் முளைத்து வரும் பயிரிலிருந்து விதை எடுக்கும் பக்குவமும் தஞ்சை ஜில்லாவில் தெரியாது.

நஞ்சையில் கொழுஞ்சி சாகுபடி செய்து தீர்மானமாய் காரியசித்தி யடைந்த திருநெல்வேலி ஜில்லா சிவகிரி ஜமீன் பண்ணையில் ௸ விதையைச் சேகரித்து வெளியூர்களுக்கு அனுப்புகிறார்கள். கொழுஞ்சிச் செடியில் காய்கள் முற்றி நெற்றானவுடன் வெடித்து விதை கொட்டுண்டு போகும். கோடையில் மற்றப்படி வேலையில்லாத சமயத்தில் கூலிகள் செடிகள் இருக்குமிடத்தைக்கூட்டிப் பெருக்கி, இந்த விதையைச்சேர்த்து பிறகு அதைச் சலித்துப் புடைத்து மாசு மறு இல்லாமல் 1 படி நெல்லுக்கு 1 படி விதை வீதம் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். அதேமாதிரி தஞ்சை ஜில்லாவிலும் விதை சேர்க்க முயற்சி செய்யலாம்.

ஒரு ஏக்கர் தெளிக்க 4 பட்டணம் படி விதை போதுமானது.

நல்ல வடிகால் அமைந்த மணல் சாரியான அல்லது வெடிப்புக்கொள்ளாத இரு மண்பாடான நஞ்சைகளில் கொழுஞ்சி நன்றாய்ப் பயிராகிறது. பள்ளமான களிப்பு நிலத்தில் பயிராகிறது அசாத்தியமாயிருக்கிறது.

நஞ்சைகளில் கொழுஞ்சி விதையை வயல் பயறு தெளிப்பதுபோலவே நெல் அறுவடையாவதற்கு சுமார் 10, 15 நாளைக்கு முன் அதாவது தரை மெழுகு பதமாயிருக்கும்போது பயிரிலேயே விதையைத் தெளித்துவிட்டால் நெல் அறுப்பு முடியு முன் விதை முளைத்து நெல் அறுக்கும் சமயத்தில் தாளுக்குள்ளேயே இருக்கும். பிறகு பூமியிலிருக்கும் ஈரத்தைக் கொண்டே பயிராகிவிடும். கொழுஞ்சி விதை பளுவும் உறுதியுமானபடியால் முளைப்பதற்கு தகுந்த ஈரம் வேண்டும். வெடிப்புக் காணக்கூடிய களிமண் பூமியில் ௸ விதையை பயறுடன் கலந்து தெளிப்பது உசிதமாகும். ஏனெனில் பயறு சீக்கிரமாகப் பயிராகும் குணமுடையதால் பூமியில் பரவி ஈரத்தைக் காத்துக்கொண்டு ஜாஸ்தியாக வெடிப்புக்காணவிடுவதில்லை. பயறுடன் கலந்து தெளிக்கும்போது ௸ பயிருக்கு காவல் ஏற்படுமாகையால், கொழுஞ்சிச் செடிகளை இளம் பயிராயிருக்கும்போது ஆடுமாடு மேய்ந்துவிட இடமில்லை. கீழே சொல்லப்பட்ட 2 குணங்களால் கொழுஞ்சி மற்றப் பயிர்களைக்காட்டிலும் சிலாக்கியமானதென்று சொல்லவேண்டும்.

1. முதலில் ஒரு வருஷம் பயிர் கிளம்பி புஷ்பித்துக்காய்த்து அந்தப்பயிரிலிருந்து கோடையில் விதையானது வெடித்து கீழேவிழுமானால் அந்த வயலானது சேர் செய்யப்பட்டு நடவு நட்டு பயிர் ஏறியிருந்தாலுங்கூட கோடையில் விழுந்த விதையானது சேற்றிலேயே கிடந்து, நடப்பட்ட நெல் அறுவடையான பிறகு வயல் காய்ந்தவுடன் அந்தவிதைகள் மற்ற புல் பூண்டுகளைப்போலவே முளைத்துப் பயிராய்விடுகிறது. ஆகையால் ஒரு வருஷத்தில் தெளித்து அது செவ்வையாய்ப் பயிராய் விடுமானால் மறுபடியும் அதை விதைக்க வேண்டிய அவசியம் நேரிடுவதில்லை. அந்த வயல்களுக்கு வேறு உரம் செய்யவேண்டியதுமில்லை.

2. இந்தப் பயிரை ஆடு மாடுகள் மேய்ந்துவிடுவதில்லை.

தஞ்சை ஜில்லாவில் களிமண் பாங்கான நஞ்சையில் ௸ விதையை நெல் அறுவடையான பின்பு வயலை உழுது தெளித்ததில் சரியானபடி முளைக்கவில்லை.

THE TAMARIND TREE.
புளியமரம்.

லங்கை இந்தியா இவைகளில் உள்ள பயன் தரும் மரங்களில் புளியமரம் ஒன்று. வெப்பமான பிரதேசங்களிலுள்ள மரங்களில் புளியமரத்தைப்பார்க்கிலும் பயன்படுவனவேறில்லை. புளி நடுவதற்கு மாரிகாலமே தகுந்தது. புளியங் கொட்டைகளை நல்ல ஈரமுள்ள இடத்தில் முளைக்கப் போடவேண்டும்; முளைத்து இரண்டு மூன்று வருஷங்களில் அவைகள் பெரிய

கன்றுகளாய்விடும். அவை சில வருஷங்களில் பெரிய மரங்களாகி நெடுநாளைக்கு அழியாமல் நிற்கும். புளியமரம் எழுபத்தைந்து எண்பது அடி உயரம் வளரும். அதன் கிளைகள் நான்கு புறத்திலும் விரிந்து படர்ந்து மிக அழகாகத் தோன்றும். இங்குள்ள ஒவ்வொருவருக்கும் புளி ஓர் இன்றியமையாத உணவுப்பொருளென்று விவரித்துக் காண்பிக்க வேண்டியதில்லை.

புளியினிடத்தில் மனிதர்களுடைய உடம்பிற்கு சுகஞ் செய்வதாகிய மருந்தின் குணங்கள் பலவுள. புளியங்காயைத் தின்பது பித்தத்தைப் போக்குவதோடு வாத நோய்க்கு மருந்துமாகும் புளியம் பழத்தின் புளியை உடம்பிலுண்டாகும் கட்டிகளுக்குப் பூசினால் அவைகள் விரைவில் பழுத்து உடைந்து போகும். புளியிலிருந்து டார்ட்டாரிக் ஆஸிட் முதலிய பொருள்கள் செய்யப்படும். புளியம் பழத்தின் ஓடுகளைச் சுட்டு அவைகளின் சாம்பலிலிருந்து மருந்திற்குரிய ஒருவகை உப்புச் செய்யப்படுகிறது. புளியம் இலையைத் துவைத்து உடம்பில் நோவுள்ள இடங்களுக்குப் பூச நோவுதணியும். அதன் சாம்பலிலிருந்து செய்யப்படும் உப்பு சில நோய்களுக்கு நல்ல மருந்தாகும்.

புளியம் இலையை வெந்நீரிலிட்டு நன்றாய் அவித்து நீலநிறமுள்ள துணிகளின்மேல் போட்டால் அந்தத்துணிகள் செந்நிறமாய் விடும். தக்ஷிணநாட்டுத் தட்டார் புளியைக் கொண்டு ஒருவகைப் புளிப்புச்செய்து வெள்ளிப் பாத்திரங்களை அழகுபெற மினுக்குவார்கள்.

புளியங்கொட்டையை ஒரு பயனுமில்லாததென்று பலர் எறிந்துவிடுகிறார்கள். அது பயன்படும் விதத்தை அவர்கள் அறியார்கள். பஞ்சகாலத்தில் ஏழை ஜனங்கள் புளியங்கொட்டையைத் தின்பார்கள். அவர்கள் அதை முதலில் அரைமணிநேரம் நீரில் ஊறவைத்துப் பின்பு அவித்துச் சாப்பிடுவார்கள். சிலர் புளியங்கொட்டையை முதலில் வறுத்துப் பின்னர் அவிப்பார்கள். புளியங்கொட்டையை அவித்து அதன்மேல் தோலை உரித்துவிட்டால், உள்ளிருக்கும் பருப்பு தின்ன நல்ல ருசி உள்ளதாயிருக்கும். புளியம் பருப்பைச் சிலர் வெயிலில் காயவைத்து அல்லது வறுத்துப்பின்பு மாவாக அரைப்பார்கள். இந்தமாவிலிருந்து ரொட்டியும் பலகாரமும் செய்யலாம்.

புளியங்கொட்டையைத் தின்றதனால் சில இடங்களில் நோயுண்டானதாகச் சொல்லப்படுகிறது. புளியங்கொட்டையைத் தின்றோர் சிலருக்கு மலம்போகாமல் வயிற்றுவலி உண்டானதுமுண்டு. இவற்றிற்குக் காரணம் புளியங்கொட்டையை மேல்தோலை நீக்காது தின்றதேயாம். புளியங்கொட்டையின் உள்ளிருக்கும் வெண்ணிறமுள்ள பருப்புத் தேக வளர்ச்சிக் கேற்றதென்று பரீட்சித்துத் தெளிவாய் அறியப்பட்டிருக்கின்றது. ஆயுள்வேதமுடையார் புளியங்கொட்டையைப் பொடி செய்து வாதநோய்க்கு மருந்தாகப் பாவிப்பார்கள். ஓயிட் என்னும் இங்கிலீஷ் வைத்தியர் புளியங்கொட்டை மாவைக்களிபோல் கிண்டி கட்டிகளுக்கு வைத்துக் கட்டலாமென்று சொல்லுவார்.

புளியங்கொட்டையை இடித்து அவித்து ஒருவகைக்கஞ்சி காய்ச்சுவார்கள். அந்தக் கஞ்சியைப் பெரும்பாலும் பட்டு நெய்வோர்கள் பட்டு நூலுக்கிடுவார்கள். புத்தகம் பைண்டு செய்வோரும் குதிரை ஜேணம் முதலியவை தைப்போருங்கூட அந்தக் கஞ்சியை உபயோகிப்பார்கள். புளியங்கொட்டைப் பசை உடைந்த மரத்துண்டுகளைப் பொருத்த உபயோகமாகும். ஐம்பதுவருஷத்துக்குமுன் எழுதிய ஒரு விவஸாய நூலில் புளியங்கொட்டையிலிருந்து ஓர் எண்ணெய் எடுத்ததாகச் சொல்லியிருக்கிறது. எண்ணெய் எடுத்தற்குச் செய்யும் முயற்சிக்குத்தக்க அளவு எண்ணெய் புளியங்கொட்டையில் இல்லாமையால் இந்தத் தொழில் கைவிடப்பட்டது போலும். எவ்விடத்திலாவது புளியம் எண்ணெய் செய்து விற்பதாய் இப்போதும் கேள்வியில்லை.

ஆயினும் புளியங்கொட்டையைக் கொண்டு ஒருவர் ஒரு விருத்தி எளிதில் செய்துகொள்ளலாம். அறியாமையால் நாம் நமது காலடியில் கிடக்கும் பொருளை வீணாய் எறிந்துவிடுகிறோம் புளியங்கொட்டையைக் கிராமங்களில் எளிதாகச் சேகரிக்கலாம்; அதைப் பின்பு எந்திரத்திலிட்டு மாவாக அரைக்கலாம். புளியங்கொட்டையைக் கொண்டு ஒரு விருத்தி செய்து கொள்வதற்குக் கொஞ்சமுதல் போதும்.—கமத் தொழில் விளக்கம்.

RINDERPEST.

பெரு வெக்கை நோய்.

கால் நடைகளுக்குக் காணும் இந்த நோய் பெருவெக்கை, அலரி, வயிற்றெடுப்பு, காற்று நோய், பெருநோய் அல்லது கால்நடை பிளேக் என்ற பல பெயர்களால் வழங்கி வருகிறது. இந்த வியாதியை வரவொட்டாமல் தடுக்கும் முறைகளைச் செய்வதுதான் மேற்படி வியாதியின் கருவை அழிக்கத் தகுந்த உபாயம்.

வியாதிகண்ட மாட்டின் அடையாளங்கள்.— இந்த வியாதி மாடுகளுக்குக்கண்டால், மாடு முதலில் நீர் நீராகக்கழியும்; பிறகு ரத்தமும் சீயும் கலப்புடன் கழியும்; பசியற்றுப்போம்; நடுக்கம் காணும்; கண்களில் பீளை கட்டும்; அதிக கொட்டாவியும் வியர்வையும் உண்டாகும்; மலம் அதிக துர்நாற்றமாயிருக்கும்; மூக்கிலும், வாயிலும், கண்களிலும் உள்ள மெல்லிய தோல் வீங்கி நீர் வடியும்; பொக்கு, பொக்கென்று அதிக கஷ்டத்துடன் இருமும், தோல் நெளிக்கப் பெற்று மார் ஒட்டி நடுங்கிக் கொண்டு முதுகை வளைத்து நிற்கும்; அசை போடாது; மிதமிஞ்சின அசதி உண்டாகிக் கீழேவிழும் மாதிரியாயிருக்கும்.

இது ஒரு மாட்டிலிருந்து இன்னொரு மாட்டுக்கும், பசு மாட்டிலிருந்து எருமை முதலிய கால் நடைகளுக்கும் பரவும். ஏதாவது வியாதி கண்டமாடு, அல்லது வியாதி கண்டிருக்கும் மாட்டின் தோல் மூலமாகவோ இது பரவுகிறது. ஆகையால் சந்தையில் தோல் வாங்குகிறவர்கள் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். மேற்படி வியாதிகண்ட மாட்டின் தோலை ஏமாந்து விலைக்கு வாங்கித் தங்கள் தங்கள் மாடுகளுக்கும் மேற்படி வியாதி தொத்தாதிருக்கும்படி அதிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

சில உபாயமான எளிதில் கிடைக்கக்கூடிய ஔஷதங்களும் பாதுகாப்பு உபாயங்களும் கீழே சொல்லுகிறோம் :—

நோய்கண்ட மாடுகளை உடனே பிரித்து ஊருக்கு $\frac{1}{2}$ மைல் தூரத்துக்கப்பாலுள்ள ஒரு தோட்டச்சாலையில் கட்டி பராமரித்து வரவேண்டும். எப்பொழுதும் வியாதியுள்ள மாட்டை பாக்கி மந்தை மாடுகளுடன் சேர்க்கவேகூடாது. (1) மாடுகளை, சௌக்கியமாயிருக்கின்றவை, (2) வியாதிச் சின்னங்கள் கொஞ்சம்கண்டு சந்தேகமாயிருப்பவை, (3) வியாதிவந்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பவை, என்று 3 வகுப்புகளாகப் பிரித்து, ஒவ்வொரு வகுப்பு மாடுகளையும் தனித்தனியே தூரங்களில் வைத்துப் பாதுகாத்து வரவேண்டும். வியாதியினால் இறந்தமாட்டை சக்கிலியர்களுக்குக் கொடுக்காமல் ஒரு கெஜ ஆழம் குழி வெட்டி மேற்படி மாட்டின் தோலைச் சின்னாபின்னமாய்க் கீறி மேற்படி குழியில்போட்டு அதன்மேல் 5 அல்லது 6 கூடை சுண்ணாம்பைப் (தாளித்த சுண்ணாம்பு) பரப்பி மண்ணினால் மூடிவிடவேண்டும். சுண்ணாம்பு கூடக்கிடைக்காத இடத்தில், சாம்பலோ, உவர்பூத்த மண்ணோ, கிடைத்ததைக் குழியில்போட்டு மண்ணால் மூடவேண்டும். இல்லாவிட்டால் சக்கிலியர் இந்த மாட்டைக் குழியிலிருந்து எடுத்துத் தோலையுரித்துக்கொண்டு மற்றவைகளை அங்கங்கே எறிந்துவிடுவார்கள். இதனால் மேற்படி வியாதி அதிகமாய்ப்பரவ ஹேதுவாகும். வீட்டு மாட்டுக் கொட்டடியில் இந்த வியாதியினால் மாடு இறந்தால் மேற்படி இடத்திலுள்ள ஒரு அங்குலம் மண்ணைச் சுரண்டியெடுத்து, மேற்படி இடத்தில வைக்கோல் அல்லது வரகு கூளத்தைக் கொஞ்சம் தரையில் பரப்பி எரித்து நெருப்பின் மீது கெந்தகமோ அல்லது தாரையோ கொஞ்சம் பிர

யோசித்து மேற்படி புகையைப் பரவச்செய்ய வேண்டியது. இது செய்யாமல் ஒருபோதும் மாடு இறந்த கொட்டகையில் மறுபடி மாட்டைக் கட்டவேகூடாது. வியாதிகண்டு இறந்த மாட்டிற்குச் சம்பந்தப்பட்ட வைக்கோல் வகையறாக்களைச் சுட்டெரித்து விடவேண்டும்.

சில ஔஷதங்கள்—மாடு புகைந்து நின்று மேல்கூறிய அடையாளங்கள் தோற்றியவுடன் 1½-ஆழாக்கு கொட்டைமுத்து எண்ணெயில் ¾ ரூபாய் எடை கஞ்சாவைக்கலந்து உடனே பேதிக்குக் கொடுக்கவேண்டும். பேதிக்குக் கொடுப்பது முதலில் நல்லதே யொழிய, சில மூடஜனங்கள் எண்ணுகிற மாதிரி ஒருபோதும் கெடுதலல்ல. பேதியானாலும் 5 ரூ. எடை லவண உப்பும் 2½ ரூ. எடை பொட்லுப்பும், ¾-ரூபாய் எடை கஞ்சாவும் கலந்து உருண்டை செய்து இப்படி 3 நாளைக்குக் கொடுக்கத் தீரும். வியாதிகண்ட மாடுகளுக்கு வைக்கோல் போடாமல், உப்புப்போட்ட கஞ்சியே 3-நாளைக்கு வார்த்துக்கொண்டு வரவேண்டும்.

இத்தோடு பனங்கள்ளை வாய்க்குள் வார்க்கலாம். அத்திப்பட்டை, வெங்காயம், வால்மிளகு, இவைகளை சீரகத்துடன் சேர்த்து இடித்துக் காடியோடு கலக்கிக்கொடுக்கலாம். சாஸ்திரீகமான அவுஷதங்கள் விவசாய போதகர் மூலமாயாவது, வெடிரினரி இன்ஸ்பெக்டர் மூலமாயாவது குடிகள் தெரிந்து பெற்றுக்கொண்டு, பாதுகாப்புக்கு வேண்டிய ஏற்பாடு தவறாமல் செய்துவரவேண்டும்.

கால் நடைகளுக்குக் காணும் வியாதிகளைப் பற்றி அந்தந்த கிராமாதி காரிகள், ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள், விவசாய ஆபீசுக்கு அப்போதைக்கப்போது ரிபோர்ட்டின் மூலமாய்த் தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

கணபதி சாஸ்திரி,

A COUNTRY GOVERNED BY PEASANTS —DENMARK.

விவஸாயிகளால் ஆளப்படும் ஒரு தேசம்—டென்மார்க்

ஐரோப்பாவில் டென்மார்க் என்ற ஒரு சிறு தேசம் இருக்கின்றது. அதனுடைய விஸ்தீரணம் 15,300-சதுரமைல். அதில் வஸிக்கும் ஜனங்கள் 25 லக்ஷத்துக்கு மேலில்லை; அதாவது நமது திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள ஜனத்தொகைக்கும் குறைவு. அத்தேசத்தில் விவஸாயத்தைத் தவிர வேறு தொழில்களில்லை. இங்கிலாந்து, ஜெர்மனிபோன்ற தேசங்களில் பெரிய பட்டணங்களில் கோடிக்கணக்கான பெரும் முதல்கள் வைத்துக் கைத்தொழில்கள் செய்யப்படுவது போல் செய்யப்படுவதில்லை. ராஜாங்கத்துக்குத் தலைவரான அரசனொருவனிருந்தாலும் அது பார்லிமெண்டு மூலமாய் ஜனங்களாலேயே நடத்தப்படுகின்றது; ஜனநாயகமென்பதை அங்குதான் பார்க்கலாம். பொதுவாய், விவஸாயம் முக்கியத்தொழிலாயிருக்கும் தேசங்களில் ஜனங்கள் ஏழைகளாயிருப்பார்களென்று சொல்லப்பட்டாலும் டென்மார்க் ஜனங்கள் ஏழைகளல்ல. விவஸாயம்செய்துகிடைக்கும் வரும்படியல்லாமல் ஜனங்கள் தங்களிருப்பிடத்திலேயேயிருந்து செய்யக்கூடிய பல சில்லரைத்தொழில்கள் செய்து கிடைக்கக்கூடிய வரும்படிகளும் பெற்று திருப்தியாயும் ஸுகமாயும் ஜீவித்திருக்கிறார்கள்: உலகத்தில் முக்கிய வல்லரசுகள் என்று பெயர்பெற்று பெரும் படைகளாலும், குவிந்த செல்வங்களாலும் தூரமான அந்நிய தேசங்களோடு செய்யப்படும் வியாபாரங்களாலும், மனிதவர்க்கத்தின் கதியையே மாற்றிவரும் மற்றத் தேசங்களைவிட இந்த டென்மார்க்கே குறையின்றிச் சந்தோஷமாய் வாழும் தேசமென்று சொல்லுகிறார்கள்.

இதற்கு மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன. டென்மார்க் தேசத்து விவஸாயிகள் தாங்களே நிலத்துக்குச் சொந்தக்காரர்கள். பெரிய மிராசுதாரர்களும் ஜமீன்தாரர்களும் சொந்தக்காரர்களாகிய அவர்களின் கீழ் கூலிக்கோ அல்லது குடிவாரம் பெற்றோ ஜீவிக்கிறவர்களல்ல. அங்கு விவஸாயம் செய்யப்படும் பூமியின் விஸ்தீரணம் 10 லக்ஷம் ஏக்ரா; இந்த 10 லக்ஷம் ஏக்ரா, விவஸாயிகளில் தலைக்கு 40 ஏக்ரா கொண்ட பண்ணைகளாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஒவ்வொரு குடும்பத்துக்கும் சொந்தமான நிலம் 40 ஏக்ராவுக்கு மேலில்லை. இந்த நிலத்திலிருந்து எவ்வளவு வரும்படி பெறக் கூடுமோ அவ்வளவு வரும்படியைத் தங்கள் சாமர்த்தியத்தால் பெற்று மாடுகள் ஏதேஷ்டமாய் வளர்த்து வெண்ணெய் செய்து அந்நியத் தேசங்களுக்கு விற்றும் அப்படியே கோழி முதலியவைகளின் முட்டைகளை விற்றும், மாடு பன்றி முதலிய மிருகங்களின் மாம்சங்களை விற்றும் ஏராளமான லாபம் பெற்று ஜீவிக்கிறார்கள். இது டென்மார்க் தேசத்தின் வளப்பத்துக்கு முதல் காரணம்.

இரண்டாவது காரணம் ஜனங்களுக்குள் இருக்கும் ஒற்றுமை. விவஸாயம் செய்வதும் விளைபொருள்களைச் செய்வதும் அவைகளை விற்பதும்—எல்லாம் கூட்டு முயற்சியிலேயே செய்யப்படுகின்றன. சுமார் 1850 ஐக்கிய நாணயச் சங்கங்கள், நிலம் வாங்க விரும்பும் விவஸாயிகளுக்குக்கடன் கொடுத்து உதவுகின்றன. கவர்ன்மெண்டும் தங்கள் பொக்கிஷத்திலிருந்து கடன் கொடுக்கிறார்கள். எவனேனும் நிலம் வாங்க விரும்புவானானால் அந்த நிலத்தினுடைய விலையில் 10-ல் 1-பாகம் அவன் கையிலிருந்தால் போதும். பாக்கி 9-பாகம் கவர்ன்மெண்டு பொக்கிஷத்திலிருந்தே கொடுக்கப்படுகிறது. அதற்கு 100-க்கு 4-விகிதம் விவசாயி வருஷாவருஷம் கொடுக்கவேண்டும். இந்த 4-ல் வட்டிக்கு 3 ம் முதலுக்கு 1-ம் ஆக உளவடையும். இப்படி வாங்கப்படும் நிலம் 12 ஏக்ராவுக்கும் 300-பவுனுக்கும் அதிகப்படக்கூடாது. மேற்கண்ட ஐக்கிய நாணயச் சங்கங்களாலும் கவர்ன்மெண்டின் உதவியினாலும் ஜனங்கள் விவஸாயத்தைக் கைவிட்டுப் பட்டணங்களில் வந்து குவியாமலிருக்கிறார்கள். மேல் நாடுகளில் எதுவும் இந்த விஷயத்தில் டென்மார்க்கைப் போலில்லை. பட்டணங்களில் ஏராளமான ஜனங்கள் குவிந்து அநேக தீங்குகள் விளைவதுபோல் டென்மார்க்கில் விளைவதில்லை. விவஸாயிகளே ராஜாங்கத்தை நடத்துவதால் விவஸாயத்துக்கு வேண்டிய சகல ஸௌகரியங்களும் கவர்ன்மெண்டால் செய்யப்படுகின்றன. விவஸாயிகள் உழைப்பதும் பட்டணவாசிகள் சுகிப்பதுமாய் இந்தியாவில் இருப்பதுபோல் கூட டென்மார்க்கில் இல்லை. அவர்கள் செய்யும் தொழிலால் கிடைக்கும் லாபமனைத்தையும் அவர்களே அடைகிறார்கள்.

உதாரணமாக, அவர்கள் செய்யும் வெண்ணெயையும், சேகரிக்கும் முட்டைகளையும் நடுவிலிருக்கும் வர்த்தகர்கள் வாங்கி லாபத்தைக்கொண்டு போவதாயில்லை. விவஸாயிகளே எல்லா லாபத்தையும் அடைகிறார்கள். சுமார் 25 வருஷத்துக்கு முன்னால் அவர்களுக்கு வெண்ணெய் செய்தல் முதலிய தொழில்கள் தெரியாமலிருந்தன. அயர்லாந்து தேசத்தில் இவைகள் செய்யப்படுகின்றன என்று அறிந்து அத்தேசத்துக்கு டென்மார்க் தேசத்தார் சிலர் போய் அவைகளைக் கற்றுக் கொண்டுவந்து, அதுமுதல் அயர்லாந்து தேசத்

தாரைவிட அதிகமாயும் திறமையாயும் அவைகளைச் செய்து வருகிறார்கள். தற்காலம் அத்தேசத்தில் 1087 சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வெண்ணெய் செய்து வருகின்றன. இந்தச் சங்கங்களில் 1,58,000 விவஸாயிகள் மெம்பர்கள்; சங்கங்களில்லாமல் தனியாய் வெண்ணெய் செய்கிறவர்கள் வேறு 200 பேர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் சேர்ந்து இங்கிலாந்துக்கு அனுப்பும் வெண்ணெய் பிரதிவாரமும் 2,00,000 பவுன் அல்லது 30,00,000 ரூபாய் மதிப்புள்ளது.

இவ்வாறே முட்டைகள் சேகரிப்பதற்கும் அங்கங்கே சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்களுக்கு மேலாகப் பெரிய சங்கமொன்றிருந்து அந்தச் சங்கம் சிறிய சங்கங்கள் அனுப்பும் முட்டைகளை அந்நிய தேசங்களுக்கு அனுப்புகின்றன. அந்தந்த வீடுகளில் சேகரிக்கப்படும் முட்டைகள் வெகு ஜாக்கிரதையாக காப்பாற்றப்பட்டு அங்கங்குள்ள சிறிய சங்கங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து பெரிய சங்கத்துக்கு அனுப்பப்படும். இந்தப் பெரிய சங்கத்தில் 57,000 மெம்பர்கள் இருக்கிறார்கள். எந்தச்சங்கத்திலும் விவஸாயங்களைத் தவிர வேறு மெம்பர்களில்லை. டென்மார்க் தேசத்து முட்டைகள் என்றால் லண்டன் பட்டணத்தில் என்ன விலையானாலும் கொடுத்து வாங்கப்படுமாம். இப்படி ஏற்றப்படும் முட்டைகளின் மதிப்பு வாரம் ஒன்றுக்குச் சுமார் 1,320,000 பவுன் அல்லது 2-கோடி ரூபாய் எனச்சொல்லப்படுகிறது. இந்தச் சங்கங்களுக்குப் பணம் வேண்டுமானால் ஸேவிங்ஸ் பாங்குகளிலிருந்து கடன் வாங்கப்படுகிறது. இந்த ஸேவிங்ஸ் பாங்குகள் 536-ல் போடப்பட்டிருக்கும் பணம் மொத்தம் 41,7,00,000 பவுன். இந்தப் பணம் 1,352,000 பேர்களால் போடப்பட்டிருக்கிறது. அதாவது தலைக்கு 31-பவுன் விகிதமாகிறது. விவஸாயிகள் தங்களுக்கு மிகும் பணத்தை இந்தப் பாங்கிகளிலேயே போடுகிறார்கள். கடன் வேண்டுமானால் இவைகளிலேயே வாங்குகிறார்கள்.

இந்த அதிசயமான ஜனங்களுடைய ஐக்கிய சக்தி இத்துடன் நிற்கவில்லை. விவஸாயத்துக்கு வேண்டிய கருவிகளையும் மாடு முதலிய மிருகங்களையும் வெளி தேசங்களிலிருந்து மொத்தமாய் வாங்கிச் சில்லரையாய் விற்கச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இதில் தரகர்களாவது சில்லரை வியாபாரிகளாவது லாபத்தைக் கொண்டு போகிறதில்லை. கொண்ட விலைக்கே விவஸாயிகளுக்கு விற்கப்படுகின்றன. இப்படி வாங்கப்பட்ட சாமான்களின் மதிப்பு 1907-ம் வருஷத்தில் 25 லக்ஷம் பவுன் கொண்டது.

இவ்வளவும் செய்யும் ஜனங்கள் 25 லக்ஷத்துக்கு மேலில்லை. இவர்களே விவஸாயம் செய்து இவர்களே ராஜாங்கத்தை நடத்துகிறவர்கள். லக்ஷபதிகளாயும் கோடீஸ்வரராயுமிருந்து விவஸாயிகளைச் சிறுமைபடுத்துவோரில்லை. செல்வத்தை உண்டாக்குவோரும் செல்வத்தை அனுபவிப்போரும் விவஸாயிகளே. இவர்களுக்குச் செல்வத்தில் பேராசையுமில்லை. அயலார் சொத்தை அடிபிடியாய்ப்பிடுங்கி கட்டிக்கொண்டு பெரிய மிராசுதார்களாக வேண்டுமென்ற ஆசையில்லை. ஜமீன்தாரர்களும் இவர்களில் இல்லை. மிதமான சொத்துள்ளவர்களாய்த் தங்கள் சொத்தைக் காத்து விருத்தி செய்வதில் சகல சக்திகளையும் பிரயோகித்து மிதமான சுகங்களில் திருப்திகொண்டு குறையின்றி வாழ்கிறார்கள். ராஜாங்கமும் ஜனங்களும் ஒன்று என்பதை இந்த டென்மார்க்கிலேயே காணலாம்.

சுதேச மித்திரன்.

REVIEW OF THE PRESS.

பத்திரிகை ஆராய்ச்சி.

EXHIBITIONS AND THEIR USES.

பொருட்காட்சிகளும் அவைகளின் பிரயோஜனங்களும்.

பொருட்காட்சிகளால் அநேக நன்மைகள் உண்டாகின்றன என்பதை ஜனங்கள் அறிந்து இப்போது அவர்கள் ஒவ்வொரு தேசத்திலும் பொருட்காட்சி நடத்தி வருகிறார்கள். பொருட்காட்சிகளின் பிரயோஜனங்களைப்பற்றி ஆகஸ்டுமாஸம் ‘விவேகபோதினி’ யில் டி. நடேசய்யரால் ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

ப்ரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய அந்நிய நாடுகள் கைத்தொழில், கிருஷித்தொழில் முதலியவைகளில் விருத்தியடைந்து மிதமிஞ்சின சாமர்த்திய முடையவைகளென்று பெயர் வாங்கிவிட்டன.

வாசனை சாமான்கள் செய்வதிலும, நவீன உடைகள் செய்வதிலும்,சித்திரவேலைகளிலும், கண்களைக் கவரத்தக்க சில்லரைச் சாமான்கள் செய்வதிலும், ப்ரான்ஸ் தேசத்தாரைப்போல எவர்களுமே செய்ய முடியாதென ப்ரெஞ்சுக்காரர்கள் பெயர் வாங்கிவிட்டார்கள்.

தையல்வேலைகளையும், எழுத்துவேலைகளையும் சீக்கிரத்தில்செய்து முடிப்பதற்காக யந்திரங்கள் உற்பத்தி செய்வதிலும், யந்திர ஸகாயத்தால் புள்ளி போட்ட துணிகளைச் செய்வதிலும், கிருஷித்தொழிலை நவீன முறையால் நடத்துவதிலும், நோய்களுக்கு நல்லமருந்துகள் தயார்செய்வதிலும் தங்களுக்கு நிகர் ஒருவரும் இல்லை என்று அமெரிக்கர்கள் பெயர் வாங்கிவிட்டார்கள்.

ஜெர்மனியர்களோ வெடிகுண்டுகள், பீரங்கிகள் முதலிய யுத்தசாமான்கள் செய்வதிலும், வேடிக்கையான தட்டுமுட்டுச் சாமான்கள் செய்வதிலும், உடுப்புகளுக்கு வேண்டிய செக்குகள் செய்வதிலும், தங்களுக்குச் சமானம் எவர்களும் இல்லை என்று சொல்லும்படிப் புகழ்வாங்கி விட்டார்கள்.

ஆங்கிலேயர்களோ பலதினுசு கச்சைத் துணிகள், மல்கள், மஸ்லின்கள், உரோமங்களால் செய்யப்படும் ட்வீட்கள் முதலானவைகள் செய்வதிலும், படங்கள் எழுதுவதிலும், ரணவைத்தியர்களுக்கு வேண்டிய ஆயுதங்கள் செய்வதிலும், நெசவு யந்திரங்கள்போன்ற பலவகை யந்திரங்கள்செய்வதிலும், மருந்துகள் செய்வதிலும், போர்க்கப்பல்கள் செய்வதிலும் தங்களுக்கு ஸமானமாக உலகத்தில் எவருமே இல்லை என்று பெயர் வாங்கிவிட்டார்கள்.

இப்படி இவர்கள் புத்தி, யுக்தி, சாமர்த்தியங்களால் செய்த சாமான்களை பிரபல ஸ்தலங்களில் காட்சி சாலைகள் ஏற்படுத்தி அவைகளில் கொண்டு போய் வைத்து பலருடைய புகழையும் நல்லமதிப்பையும் பெற்று தங்கள் தொழிலை ப்ரஸித்தப் படுத்துகிறார்கள். இப்படி காட்சி சாலைகளில் வைத்து பொருள்களை ப்ரஸித்தப் படுத்துவதால் ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக் கொண்டு வரவர விருத்தியாகி வருகிறார்கள். ஆகவே பொருட்காட்சிகளால் சாமான்கள் ப்ரஸித்தி யடைவதோடு வரவர தொழிலாளிகளுடைய அறிவும், சாமர்த்தியமும் விருத்தியாகிறது. இப்படிப்பட்ட பொருட்காட்சிகள் மற்ற தேசங்களில் நடைபெறுவதுபோல இந்தியாவிலும் நடைபெற ஆரம்பித்திருப்பது சிலாகிக்கத்தக்கது.

A SUGGESTION TO RYOTS.

கிருஷிகருக்கு ஒரு யோசனை.

இந்த விஷயமாக ஆவணிமாஸ “கிருஷிகன்” பத்திரிகையில் ஒரு வியாஸம் காணப்படுகிறது. வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த குடியாத்தம் தாலூகாவிலுள்ள ராமாலா, கிருஷ்ணபுரம், மோடிக்குப்பம் முதலிய சில கிராமங்களில் புஞ்சை நிலங்களில் கிணற்று இறவை சாகுபடி செய்யப்படுகிறது. இந்தப் பிரதேசங்கள் அவ்வளவு நிலவளமுள்ளவையல்ல. அப்படியிருந்தும் இங்கேயுள்ள கிருஷிகர் கால்நடைகளின் ஆகாரத்துக்காக “முத்துபால சோள” நாற்றுசாகுபடி செய்துவருகிறார்கள். சுமார் கால்காணி நிலத்தில் நாற்றுச்சோளம் விதைத்துப் பயிரிட்டு நீர்பாய்ச்சி அந்தப்பயிர் கதிர்வாங்கின பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் அறுத்துக் கால்

நடைகளுக்குப் போட்டுவருகிறார்கள். கால் நடைகள் தினந்தோறும் பச்சைச் சோள நாற்றைத்தின்று புஷ்டியடைந்து வேலையைத் திறமையுடன் செய்கின்றன. கால்காணியில் கிடைக்கும் பச்சைச்சோள நாற்றைக்கொண்டு 3-ஜதை கால்நடைகளைக் காப்பாற்றலாமாம். இப்படி இவர்கள் செய்ய ஒரு காரணமிருக்கிறது. அதாவது ஆழமான கிணறுகளில் கவலைத்தண்ணீர் இறைப்பது மிகவும் பிரயாசையான காரியம். இதனால் மாடுகள் பலமிழந்து மூன்று நான்கு வருஷங்களுக் குள்ளாக எலும்பும் தோலுமாய்ப் போகின்றன. அப்படிப் போகாமல் இருக்கவே இவர்கள் சோளக்கதிரை மாட்டுக்குத் தீனியாகப் போடுகிறார்கள். இந்தப் பிரயோஜனமான நல்ல முறையை மற்றக் கிருஷிகர்கள் அனுஷ்டிக்காமலிருப்பது விசனிக்கத்தக்கது. இந்தச் சோள நாற்றுப்பயிர் செய்யும் கிருஷிகர்கள் கவனிக்கவேண்டிய சிலவிஷயங்களுண்டு. அவையாவன:—(1) சமதளமான பாத்திகளில் விதைப்பதை விட சால்மேடுகளில் விதைப்பது நலம். (2) ஒரு தரம் தாள் வெட்டின உடன் சால் சாலாய்ப் பயிர் உழவு செய்து பயிர் மூடுகளில் கொஞ்சம் எருவைத்தூவி தண்ணீர் பாய்ச்சினால் மறுபடியும் செழிப்பான பயிர், விதைக்காமலே உண்டாகும் (3) ஒரு வருஷத்தில் இவ்வாறு ஆறுமுறை சோளநாற்று வெட்டலாம் (4) ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 10 அல்லது 12 டன் நிறையுள்ள தாள் கிடைக்கும். (5) ஜதை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 80 ராத்தல் நிறையுள்ள தாள் போதுமானது. (6) ஒரு டன் தாள் ஒரு மாதத்துக்கு வரும் (7) இவ்விதமாய் ஒரு ஏக்கரிலுண்டாகும் சோள நாற்று ஒரு ஜதை மாடுகளுக்கு சுமார் ஒருவருஷத்துக்கு வரும் (8) நெல் வைக்கோல் முதலிய தீவனங்களோடு சோளத்தாளைக் கலந்து உபயோகிப்பதாயிருந்தால் மூன்று அல்லது நாலு ஜதை மாடுகளுக்கு சுமார் ஒரு வருஷத்துக்கு வரும். (9) முத்துபால சோளத்தைவிடப் பெரிய மஞ்சள் சோளத்தை விதைத்தால் மேன்மையாயிருக்கும். பெரிய மஞ்சள் சோளத்தைத் தின்றால் மெலிந்த மாடுகளும் சீக்கிரத்தில் புஷ்டியடையும் (10) கோயம்புத்தூருக்கருகில் இறவைக் கம்புப்பயிரின் ஒருமூலையில் சோள நாற்றை விதைக்கிறார்கள். அப்படிச் செய்யாமல் தனியாய் விதைப்பது மிகவும் நல்லது.

CARPETS MADE OF CAMELS' HAIRS.
ஒட்டகமயிர்க் கம்பளம்.

இந்த விஷயமாக ஆவணிமாஸத்து "தென்னிந்தியாவிவஸாய"த்தில் ஒரு சிறிய வியாசம் காணப்படுகிறது.

டாக்டர் ஜெ. கோ. என்பவர் ஒட்டக மயிர்க் கம்பளிக்குத் தேகத்தை உறுதிப்படுத்தும் குணமுண்டு என்று சொல்லுகிறாராம். வாத சரீரமுடையவர்கள் படுக்கைக்கும் போர்வைக்கும் ஒட்டகமயிர்க் கம்பளத்தை உபயோகித்தால் நீர் வெளிப்பட்டு தேகம் வாடுகிறது. பசிபொறுத்தல், தாகம் பொறுத்தல் முதலிய ஒட்டகத்துக்கு இருக்கும் குணங்கள் அதன் மயிர்க் கம்பளங்களை உபயோகிக்கிறவர்களுக்கும் உண்டாகின்றன என்றுதோன்றுவதாக இவர் அபிப்பிராயப்படுகிறார். மற்ற மிருகங்களுக்கு இருக்கும் நாற்றத்தைப்போல் ஒட்டக மயிரில் இல்லாமல் புனுகு வாசனை இருக்கிறது. இந்த வாசனை ரொம்ப நன்றாயிருக்கிறபடியால் நோயைக் குறைக்கிறதென்று அரேபியா, பெர்ஷியா, முதலிய நாடுகளில் ஒட்டகமயிரை உபயோகிக்கிறார்கள். தூக்கம் வாராதவர்களுக்கு அபினி கொடுத்து தூங்க வைப்பதுபோல இந்தக்கம்பளம் உதவுகிறது. முழங்கால் பிடிப்பு, நரம்புத்தளர்ச்சி, பல்வலி, தலைவலி, காதுவலி முதலியவைகளுக்கு இந்த மயிரை சிறு ரஜாய் மெத்தைபோல் செய்து அந்தந்த பாகங்களில் வைத்துக்கட்ட சௌக்கியமுண்டாகும். ஆட்டுமயிரில் நாற்றம் சேர்வதுபோல் ஒட்டகமயிரில் சேர்வதில்லை. ஆகவே ஒட்டகமயிர் அதிக நாள் கெட்ட நாற்றம் அடையாமலிருக்கும். இந்தக் கம்பளப் படுக்கை வெயில்காலத்தில் குளிர்ச்சியாகவும், குளிர்காலத்தில் சூடாகவும் இருக்கும். அரேபியர் ஆங்கிலேயருடைய கம்பளி உடைகளைப்பார்த்து இகழ்ச்சி செய்கிறார்கள் என்று இவர் சொல்லுகிறார். ஆங்கிலேயருக்குப் பலம் அதிகமிருந்தாலும் அது நீடித்து உதவாதென்றும், "ஒட்டக மயிரை உபயோகிக்கும் நாங்கள் ஒட்டகத்தைப்போல நீடித்த பலமுடையவர்கள்" என்றும் அரேபியர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்களாம்.

NOTE ON CATTLE DISEASES.
கால் நடைகளின் வியாதிகளைப்பற்றிய குறிப்புகள்.

—:o:—

இந்த விஷயமாக ஆவணி மாஸ "தென்னிந்தியா விவஸாயத்தில்" கால் நடை வைத்திய இலாகாவில் இன்ஸ்பெக்டரான மில்ஸ் அவர்களால் எழுதப்பட்ட புஸ்தகத்தின் மொழிபெயர்ப்புப்போன்ற ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

கால் நடைகளுக்கு வியாதி வாராமல் தடுப்பதற்கு நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இரண்டு உண்டு. முதலாவது மிருகங்கள் ஸரியான ஆகாரம், நல்ல தண்ணீர், நல்ல ஒதுக்கிடம், சுத்தமான காற்று இவைகளைப்பெறும் விஷயத்தில் நாம் கவனம் செலுத்தவேண்டும். இரண்டாவது, ஒரு மிருகம் மற்றொரு மிருகத்தினிடமிருந்து வியாதியைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். இவை நிறைவேற அனுஸரிக்கவேண்டிய விதிகள் பின் வருமாறு:—

(1) **ஆகாரம்:**—கால் நடைகளின் ஆகாரம் போதுமான அளவாகவும், நல்லதாகவும், வருத்த மில்லாமல் கிடைக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இயற்கை அறிவினால் எந்த ஆகாரம் சிறந்ததென்று கால் நடைகள் ஸாதாரணமாய்த்தெரிந்துகொள்ளும். ஆனாலும் புல் பூண்டுகள் காய்ந்து ஆகாரத்துக்குத் தட்டுண்டாகும்போது பசியின் கொடுமையால் மரப்பட்டை, முட்செடி, விஷப்பூண்டுகள், முதலியவைகளை மிருகங்கள் தின்னும்படி நேரிடுகிறது. இதனால் அஜீரணம் போன்ற நோய்கள் பிராணிகளுக்கு உண்டாகின்றன. மழை காலத்தில் ஆற்றங்கரை, குளக்கரை முதலிய இடங்களில் உண்டாகும் முரடான பூண்டுகள் கால் நடைகளுக்கு வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், கழிச்சல், முதலியவைகளை உண்டாக்கும். ஆதலால் மாடுகளுக்குக் கோடை காலத்தில் ஆகாரத்தைப் போதுமான அளவும், மழை காலத்தில் அளவுக்கு மிஞ்சாமலும் கொடுத்து வரவேண்டும். பஞ்சகாலத்தில் நேரிடுங் குறைவை நிரப்ப தீனி செழிப்பாய்க் கிடைக்குங்காலத்தில் சேகரித்து வைப்பதே நல்ல முறை.

(2) **ஒதுக்கிடம்:**—கோடைகாலத்தில் கால் நடைகள் தங்கள் ஆகாரத்தைத் தேடுவதில் படும் கஷ்டத்தாலும், செலவழிக்கும் காலத்தாலும், அசைபோட நேரமிருக்கிறதில்லை. தவிர, அவைகள் நெடுநேரம் வெயிலில் நிற்கின்றன. இதனால் அவைகளுக்கு வியாதி வருகிறது. மரத்தின் நிழலிலாவது, அல்லது வேறு ஒதுக்கிடத்திலாவது வெயிலில் கஷ்டப்படாமல் மாடுகள் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் அசைபோடவோ, அல்லது தூங்கவோ அவைகளால் முடியும். பிராணிகளைக் குளிர்ந்த காற்றிலும், பலத்த மழையிலும் அகப்படாமல் இருக்கும்படி நாம் ஒதுக்கிடம் அமைத்துக் காப்பாற்றவேண்டும். பாலுக்காகவும், மாமிசத்துக்காகவும், வேறு வேலைகளுக்காகவும் வளர்க்கப்படும் மிருகங்களுக்கு ஒதுக்கிடம் அவசியமாய் வேண்டும். ஆதலால் கால் நடைகள் வசிப்பதற்கு சாய்ப்புகளாவது கொட்டகைகளாவது போடவேண்டும். இதற்குச் செலவு கொஞ்சம் பிடிக்குமானாலும், கால் நடைகளின் விருத்தியானது அந்தச் செலவுக்கு நல்ல ஈடாகும்.

(3) **தண்ணீர்:**—குடிப்பதற்கு வேண்டிய அளவு தண்ணீர்கொடுக்காமலிருப்பதே அஜீரணத்துக்கு மிகவும் ஸாதாரணமான காரணமாகிறது. மழை காலத்தில் விளைந்து தண்ணீர் அதிகமாக இருக்கிற புல்லை மாடுகள் தின்றால் வயிற்றுப் பொருமல் உண்டாகும். உப்பு கசிந்திருக்கிற உவர் நீரினால் வயிற்று வலி உண்டாகிறது. சுண்ணாம்பு கலந்த நீரை அதாவது சக்கான் தண்ணீரை சாப்பிடுவதினால் சுண்ணாம்பு பிரிந்து குடலில் கல்லடைப்பு உண்டாகிறது. மழைகாலத்தில் அசுத்தங்கள் குளற்று ஜலத்தில் சேருவதால் கால் நடைகளுக்கு கிணற்று ஜலத்தை வைப்பதே நலம்.

(4) **காற்றோட்டம்:**—பிராணிகள் சுவாசிக்கிற காற்று சுத்தமாய் இருக்கவேண்டும். இதற்குக் கால் நடைகள் இருக்கும் கொட்டகைகளில் காற்றோட்டம் உண்டாகும்படி ஜன்னல் இருக்க வேண்டும். கால் நடைகளில் தொழுவிலுள்ள சுக ஹீனத்துக்கு மிகச் சாதாரணமான காரணம் தளத்தில் ஸகல விதமான அழுக்குகளும் திரண்டிருப்பதுதான். இதனால் கால் நடைகளுக்குத் தொத்து வியாதி உண்டாகிறது.

தொத்து வியாதி மூன்று வகையாகப் பரவுகின்றது. முதலாவது வியாதியுள்ள ஒரு பிராணி வியாதியில்லாத மற்றொரு பிராணியின் மேல் படுவதால் உண்டாகிறது. நரிகள் போன்ற காட்டுமிருகங்களும், பிணம் தின்னும் கழுகுகளும், பருந்துகளும், பெருச்சாளிகளும், ஈக்களும் வியாதியிருக்கிற வஸ்துக்களைப் பரவச்செய்யலாம். இரண்டாவது காற்றினால் வியாதி பரவுகிறது. நோய்கொண்ட கால் நடைகள் இருக்கும் இடத்துக்கு ஸமீபத்தில் நோயில்லாத கால் நடைகளை வைத்திருக்கக்கூடாது. ஸுகமாக இருக்கும் பிராணிகளை வியாதியுள்ள பிராணிகளிருக்குமிடத்திலிருந்து 500 கெஜ தூரத்தில் வைத்திருக்கவேண்டும். மூன்றாவது 'இன்னாகுலேஷன்' என்னும் அம்மை குத்துதல் போன்ற வழியாய் வியாதி பரவுகிறது. இப்படி உண்டாவதில் அடைப்பான், 'க்ளாண்டர்ஸ்' என்னும் குதிரைச்சயம், நாய்வெறி, ஆகிய மூன்றும் முக்கியமானவை. ஜாக்கிரதையினாலும், மேற்பார்வையினாலும் இப்படிப்பட்ட வியாதிகளைத் தடுக்கலாம்.

MADRAS

THE BOYS' SECTION.

சிறுவர் பகுதி.

YIELD OF COCOANUTS.

தென்னையின் காய்ப்பு.—ஸாதாரணமாய் ஒரு தென்னைமரம் வருஷத்துக்கு 100 காய் காய்க்க வேணும். ஆனால் 200 காய்கள் காய்க்கும் மரங்களும் உண்டு.

THE GOVERNMENT OF FRANCE.

ப்ரான்ஸ் தேசத்து ஆட்சி.—வெகுகாலம் ப்ரான்ஸ் தேசத்தில் அரசனொருவன் இருந்து இப்போது சுமார் 50 வருஷகாலமாக அது குடியரசாய் ஆளப்பட்டு வருகிறது. அதாவது அந்ததேசத்து ஆட்சியை நடத்துகிறவர் ஜனப்பிரதிநிதிகளாலேயே தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு உத்தியோகஸ்தர். அவருக்கு ராஜாவுக்குள்ள ஸகல உதவியும் அதிகாரமும் இருந்தபோதிலும், அவர் ஜனப்பிரதிநிதிகளால் சில வருஷங்களுக்கொருமுறை நியமிக்கப்படுவாரே அல்லாமல், அந்தப் பதவியைத் தலைமுறை தத்துவமாய்ப் பெறக்கூடியவரல்ல.

THE PALMYRA TREE.

பனைமரம்.—பன்னிரண்டு வருஷத்திற்குமேல் முப்பது வருஷத்திற்குள் காய்க்கும். அதுமுதல் பதனிகட்ட ஆரம்பிப்பார்கள். சுண்ணாம்பு தடவின கலயத்தில் இறக்குவதற்குப் 'பதனி' என்றும், அது தடவாமல் வெறுங்கலயத்தில் இறக்குவதற்கு 'கள்' என்றும் பெயர் வழங்கிவருகிறது. ஒரு மரத்திற்கு ஐந்து, ஆறு கலயங்கள்போட்டு பதனி இறக்குவார்கள். நல்ல மரத்தில் பட்டணம் படி 4-வரைக்கும் பதனி கிடைக்கும். இந்தப் பதனியில் சர்க்கரை அதிகம்.

WISE SAYINGS.

அரும் வாக்கு.—ஒவ்வொரு சிறுமீனும் திமிங்கலமாகவேண்டுமென்று கோருகிறது.

ஐசுவரியத்தைச் சம்பாதிப்பது பெருத்த காரியமே ஆனாலும் அதைக் காப்பாற்றுவதே மிகவும் பெருத்தகாரியம்.

அவஸரம் அழிவையுண்டாக்குகிறது. அழிவு வறுமையை உண்டாக்குகிறது. வறுமை நல்ல மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் சச்சரவை உண்டாக்குகிறது.

ஒருமுறை விரோதப்பட்டுப் பிறகு ஸமாதானமான ஸ்நேகிதன் இரட்டைச் சத்துரு.

அஸாத்தியம் என்னும் வார்த்தை முயற்சியுடையவனுடைய அகராதியில் இராது.

குருட்டுக்கண்ணைவிட ஒருகண் மேலானது.

உல்லாஸமான வழித்தோழன் வண்டிக்கு ஸமானம்.

THE WORLD THINKS IN VARIOUS WAYS.

உலகம் பலவிதம்.—குழாய் ஜலம் இல்லாத சேலம் முதலிய இடங்களில் ஐயோ ஜலம் கிடைக்கவில்லையே என்று அங்கலாய்க்கிறார்கள். குழாய் ஜலம் வருகிற இடங்களிலோ குழாய் ஜலத்தை நம்பிக் குளங்களைப் பாழாக்கிக் கொண்டோமே என்று புலம்புகிறார்கள். ஒரு தாய்க்குப் பிறந்த இரண்டு பெண்களில் ஒருத்தி குயவனுக்கும் ஒருத்தி குடியானவனுக்கும் வாழ்க்கைப்பட்டார்களாம். சில காலஞ்சென்று தாய் தன்னுடைய முதல் மகளைக் கண்டபோது க்ஷேமமா என்று கேட்க, இப்போது பெய்கிறமழை நின்றால் சட்டிப் பானைகள் காய்ந்து பொங்கல் பண்டிகைக்குத் தயாராகிவிடும். அப்போது க்ஷேமமும் லாபமும் பிறக்குமென்றாளாம். இரண்டாவது மகள் இப்போது பெய்கிறமழை இன்னும் சில நாள் விடாது பெய்தால் பயிர்விளைச்சலுக்கு ரொம்பவும் ஸாதகமாயிருக்கும் என்றாள். இரண்டையும் கேட்ட தாயார் ஒரே வயிற்றில் பிறந்த இருவரில் ஒருத்தி வெயிலையும் ஒருத்தி மழையையும் கோருகிறவர்களாயிருந்தால் தான் எதை நாடுவதென்று திகைத்தாளாம்.

A BURLY BOY.

ஒரு பீமசேனன்.—லண்டன் நகரத்தில் ஜான் தாமஸ் என்னும் ஒரு சிறு பையன் இருக்கிறான். அவனுக்கு ஆறு வயது. இவன் வயதுக்கு மேற்பட்ட பருமனுள்ளவன். இவனைப் பார்த்த ஒரு டாக்டர் தமது அபிப்பிராயத்தை எழுதுகிறார். "இவன் சிறியவனாயிருந்தாலும் ஒரு புருஷனைத் தூக்கிக் கொண்டு சுலபமாக நடப்பான். இவனைப் பள்ளிக்கூடத்துக்குப் போவென்றால் தன் கால்கள் நோகின்றன என்றான். இது நிஜமல்ல, சரீரம் பருமனாயிருப்பதால் வெகுதூரம் நடக்க முடியாது. புத்தியின் சக்தி, வயலதைத் தோற்கடிக்கிறது. இவன் பகலெல்லாம் நித்திரை செய்வான். இவனுக்கு அழகிய உடுப்புகளை உடுத்தி பல ஜனங்கள் ஸஞ்சரிக்கும் இடத்துக்கு அழைத்துப்போய் பெற்றோர்கள் பொருள் சம்பாதிக்கிறார்கள். இவனைச் சிறுபிள்ளைகளுடன் விளையாட விடுவதில்லை. பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினால் மற்ற பையன்கள் பாடத்தைவிட்டு இவனைப்பார்ப்பதில் இச்சைகொள்வார்கள். இவனுக்கு ஸ்கூல் பெஞ்சு போதாது. இவனை வண்டியில் ஏற்றினால் இடம் போதாது."

PHYSICAL EDUCATION.

தேகப்பயிற்சி.—இதைப்பற்றி சீமையில் உள்ள வைத்திய ஸபையார் சில அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். தேகப்பயிற்சி இருந்தால்தான் ஒருவனுடைய படிப்பு பூர்ணமாயிற்று என்று சொல்லலாம். பள்ளிக்கூடங்களில் நடக்கும் பந்தய ஓட்டங்களுக்கும் ஸாதாரணமாய் நடக்கும் பந்தய ஓட்டங்களுக்கும் வித்தியாஸம் உண்டு. இந்தவிதமான பந்தயங்களில் பையன்களுடைய தேகவலிமை, வயதுக்கிரமம் முதலியவைகளை ஒத்து ஏற்பாடு செய்யவேணும். அப்படிச்செய்தால் இப்போது நடந்துவரும் அபாயங்கள் நிவர்த்தியாகும். மேலும் பையன்கள் சாப்பிட்டு கொஞ்சநேரங்கூட இளைப்பாறாமல் தேகப்பயிற்சி செய்வதால் உடம்பிற்கு மிகுந்த கெடுதி உண்டாகும். ஒவ்வொரு பையனும் பள்ளிக்கூடத்தில் சேரும்போது அவனுடைய தேகத்தைப்பற்றி மெடிகல் பரீக்ஷை செய்யவேண்டுமென்றும், இரண்டொரு வருஷங்களுக்கு ஒரு தடவையாகிலும் பையன்களுடைய தேக ஸ்திதியைப் பரீக்ஷிக்கவேண்டியது பள்ளிக்கூடங்களின் முக்கிய வேலைகளில் ஒன்றாகும் என்றும் சொல்லுகிறார்கள்.

THE MONKEY'S TAIL.

குரங்கின் வால்.—குரங்குகள் சிலவேளை பின்கால்களில் நின்றுகொண்டு தலையை நீட்டி தன்னைச் சுற்றி எம்பி பார்க்கும். அப்பொழுது கீழே விழாமல் சரியாய் நிற்க தன் வாலைத் தரையில் ஊன்றி அண்டைக்கொடுக்கும். ஆனால் குரங்கானது உயரத்திலிருக்கும் மரக்கிளைகளில் நடக்கும்பொழுது அதைக் கவனித்தால் தன்வாலை உயரத்தில் தூக்கிக்கொண்டு இருபக்கங்களிலும் அசைத்துக் கொண்டேசெல்லும். ஏன்? கயிறு கட்டி அதின்பேரில் நடக்கும் வித்தையாடிகளை நீங்கள் பார்த்திருக்கலாம். நடக்கும்பொழுது கீழே விழாமலிருப்பதற்கு அவர்கள் கையில் ஒரு நீண்ட கம்பையாவது தடியையாவது வைத்துக்கொண்டு, அவர் வலதுபக்கம் சாயும் பொழுது தடியை இடது பக்கம் நீட்டிக்கொண்டு சுளுவாக நடப்பார்கள். அது போலவே குரங்குகளும் கீழேவிழாமல் நடப்பதற்கு தங்கள் நீண்ட வாலை வேண்டும் பக்கத்தில் சாய்த்துக் கொண்டே போகின்றன. அமெரிக்கா தேசத்திலிருக்கும் குரங்குகளுக்கு வாலானது நாலுமார் நீளமிருக்கும். இந்த வாலை உச்சத்தில் ஒரு கிளையில் பச்சை ஒணானைப்போல் சுற்றிக்கொண்டு கை கால்களை விட்டுவிட்டு வெகு தூரம் கீழே தொங்கி ஊஞ்சலாடும். ஆனால் நமது தேசத்துக் குரங்குகள் அப்படிச் செய்யா.

AN INDIAN FOREMAN.

ஒரு இந்தியப் போர்மன்.—மிஸ்டர் பி. பி. ஸாயினி என்ற ஒரு ஹிந்து கனவான் லன்காஷயரில் பெரி என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஒரு பஞ்சாலையில் போர்மன் அதாவது மேஸ்திரியாகயிருந்து வருவதாகத் தெரியவருகிறது. மிஸ்டர் ஸாயினி பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவர். லாகூர் தயானந்த ஆங்கிலோ வைதிக காலேஜில் படித்து 1905-ம் வருஷத்தில் பட்டம் பெற்றவர். அவர் படித்த மற்றவர்களைப்போல் உத்தியோகத்தையோ அல்லது வக்கீல் முதலிய தொழில்களையோ நாடாமல் கைத்தொழில் செய்து பெயர் வாங்கவேண்டுமென்ற விருப்பத்துடன் இங்கிலாந்துக்குப் பயிற்சிபெறப் போனார். அங்கே அவருடைய ஊக்கத்தாலும் புத்தியாலும் பல தொழில் கல்விச் சாலைகளில் பயிற்சி பெற்று ஸர்டிபிகேட்டுகள் பெற்றார். மான்செஸ்டரிலுள்ள விக்டோரியா யூனிவர்ஸிடியிலும் லண்டன் இன்ஸ்டிட்யூட்டிலும் நெசவுத் தொழில் நிபுணரென்று ஸர்டிபிகேட்டுகள் பெற்றார். பிறகு மேற்சொன்ன பேரி என்ற இடத்திலுள்ள பஞ்சாலையில் பருத்தித் தொழிலில் அனுபோகசாலி என்று ஒரு யோக்கியதாபத்திரம் பெற்றார். இப்போது அந்தப் பஞ்சாலையிலேயே அவர் ஒரு போர்மனாயிருக்க, அந்த ஆலை முதலாளிகளும் வேலைக்காரர்களும் அவரைப் பிரியமாய் நடத்திவருகிறார்களாம். இப்படி மிஸ்டர் ஸாயினி மான்செஸ்டரிலேயே பருத்தித் தொழில் பயின்று பேர் வாங்கியிருப்பது நம் தேசத்துக்கு நன்மையையும் கீர்த்தியையும் உண்டாக்கும்.

THE LADIES' SECTION.

ஸ்திரீகள் பகுதி.

Japanese Women.

ஜப்பானிய ஸ்திரீகளும் அவர்களுடைய தேசாபிமானமும்.—ஆடி மாஸத்து "வித்யா விஹாரிணி" யில் ஸ்ரீமதி மங்களாம்பிகாபாய் "ஜப்பானிய ஸ்திரீகள்:—சில குறிப்புகள்" என்பதாக ஒரு வியாஸமும், எ. வி. சேயனம் என்பவர் "ஜப்பானிய ஸ்திரீகளின் தேசாபிமானம்" என்பதைப் பற்றி ஒரு வியாஸமும் எழுதியிருக்கிறார்கள்.

ஜப்பானிய ஸ்திரீகளைப் பார்த்தவர்களுக்கு அவர்களிடம் அன்பும் மரியாதையும் தானாகவே உண்டாகின்றன. அப்படி உண்டாவதற்கு அந்த ஸ்திரீகளுடைய அழகு ஒரு காரணமாயிருந்தாலும், ரூபத்தைவிட அவர்களுக்கு இருக்கும் நற்குணமே முக்கிய காரணம். ஜப்பானிய ஸ்திரீகள் "அடக்கம்" என்பதையே முக்கிய தருமமாகக் கொண்டவர்கள். சிறு பெண்ணாக இருக்கும்போது தகப்பனுக்கும், கலியாணமானபின்பு புருஷனுக்கும், விதவையானால் புத்திரருக்கும், ஜப்பானிய ஸ்திரீகள் அடங்கி நடக்க வேண்டும். இவர்கள் பெற்றோர்களின் இஷ்டப்படிக் கலியாணம் செய்துகொண்டோ அல்லது "பொட்டுக்கட்டிக் கொண்டோ" காலங் கழிக்கிறார்கள். இவர்கள் எழுதவும், படிக்கவும், வீணை முதலிய வாத்தியங்கள் வாசிக்கவும், கூத்தாடவும், கற்றுக்கொள்ளும் வழக்கம் உண்டு. குலஸ்திரீக்கு கலியாணமாகி அவள் புருஷன் வீட்டுக்கு வந்தால் புருஷன் வீடே தான் அவளுக்கு கதி. வீட்டைவிட்டு நகர முடியாது. ஜப்பானியருக்குள் கலியாணம் என்பது கிரயவிக்ரயம் போன்ற ஒரு வியாபாரமல்ல. விவாகமானதற்கு ரிஜிஸ்தராபீஸில் பதிவாவதுதான் சாட்சி. புருஷன் மட்டும் வேறு கலியாணம் செய்துகொள்ளலாம்; ஸ்திரீகள் செய்துகொள்ளக் கூடாதென்று இந்தியாவில் இருக்கும் நியாயத்தைப்போல் ஜப்பானில் இல்லை. பெண்ஜாதியும் தகுந்த நியாயங்காட்டி வேண்டுமானால் வேறொரு புருஷனை விவாகஞ் செய்துகொள்ளலாம். "பல பெண்ஜாதிகள்" ஜப்பானியருள் கிடையாது. சட்டப்படியும் ஒரே பத்தினிதான் பாரியை என்று சித்தாந்தம்.

"உடுப்பு" விஷயமாய் ஜப்பானிய ஸ்திரீகளுக்குள் இப்போது வெகு தூரம் விசாரணை நடந்துவருகிறது. எப்போதும்போலவே உடம்புக்கு உபத்திரவமில்லாமல் பாவாடை, ரவிக்கை, தாவணி முதலியவைகளைத் தரித்துக்கொள்வதே போதுமா, அல்லது, ஐரோப்பிய ஸ்திரீகளைப்போலத் திமிங்கில எலும்பு முதலியவைகளை வைத்து இறுக்கிக்கட்டி தேகத்தைக் கெடுத்துக் கொள்வதோடு செலவையும் அதிகரிக்கச் செய்வதா, என்பதைப்பற்றி இப்போது யோசித்துவருகிறார்கள். ஜப்பான் மகாராணி மேல் நாட்டாரைப் போலவே உடை தரித்திருக்கிறார். தன்னைப் பார்க்க வரும் ஸ்திரீகளும் அப்படி உடுத்திக்கொண்டு வரவேண்டுமென்று உத்தரவும் செய்திருக்கிறார். புருஷர்களும் தங்களுடைய ஸ்திரீகள் மேனாட்டாரைப்போல பழகவேண்டு மென்று விரும்புகிறார்கள். ஆனால் ஜப்பானிய ஸ்திரீகள் மட்டும் தங்களுடைய பழைய முறைப்படி உடுத்திக் கொள்வதே தேகத்துக்கு ஸௌக்கிய மென்றும் செலவு கொஞ்சம் பிடிக்குமென்றும் நினைத்து வருகிறார்கள். நம்முடைய ஸ்திரீகளைப்போல ஜப்பானிய ஸ்திரீகள் காது, மூக்கு முதலியவைகளைத் துளைத்துக் கண்டதையெல்லாம் தொங்க விட்டுக்கொண்டு உபத்திரவப்படுவதில்லை. ஜப்பான் தேசத்தில் பெற்றோர்கள் தங்கள் பெண்களை விற்று ஜீவிக்கும் வழக்கம் அதிகம் உண்டு. அப்படி விற்கப்படும் பெண்கள் கோஷாக்களாய் இருப்பார்கள். பெற்றோர் பெண்ணுக்கு 14 அல்லது 15 வயதாகும்போது சுமார் 150 அல்லது 200 ரூபாய்க்கு ஒருவரிடம் கொடுத்து விடுவார்கள். பெண்ணை வாங்கினவன் அவளுக்குக் கூத்து, பாட்டு முதலியவைகளைக் கற்றுக் கொடுத்து நல்ல ஆபரணம் வஸ்திரம் முதலியவைகளால் அவளை அலங்கரித்து ஆதரித்து வருவான். இந்தப் பெண்கள் பாட்டுக் கச்சேரி, ஆட்டக் கச்சேரி முதலியவைகளுக்குப் போய் ஆடியும் பாடியும் பொருள் சம்பாதிப்பார்கள். வரும்படியில் முக்கால் பங்கு பெண்களை வாங்கி வளர்த்தவர்கள் எடுத்துக் கொள்ளுவார்கள். நல்ல அழகும், வித்தையும் உள்ள பெண்களுக்குவரும்படியும் கியாதியும் அதிகம். தனிகர்கள் இவர்கள்மேல் ஆசைப்பட்டு ஏராளமான பொருள் கொடுத்து விவாகம் செய்துகொள்வதுமுண்டு. ஆனால் கோஷா ஸ்திரீகளுக்குக் குலஸ்திரீ தருமம் பிடிக்கிறதில்லை.

The Late Miss Florence Nightingale.

காலஞ் சென்ற மிஸ் ப்ளாரோன்ஸ் நைடிங்கேல்.—மிஸ் ப்ளாரென்ஸ் நைடிங்கேல் என்னும் புகழ் பெற்ற ஆங்கிலேய புண்ணியவதி இறந்து போய் விட்டார் என்பதைக் கேட்க ரொம்பவும் விசனமாயிருக்கிறது. தற்காலத்தில் ஆஸ்பத்திரிகளிலும் போர்க்களத்தில் காயம்பட்டுக் கிடக்கும் நோயாளிகளுக்கும் தாதிகள் மருந்துகொடுத்து நோயாளிகளைப் பார்த்து வரும் வழக்கம் நைடிங்கேல் அம்மாவால் முதல் முதல் ஏற்பட்டது. இதனால் இந்த அம்மாவிடத்தில் உலகத்தில் ஸகல ஜனங்களுக்கும் அபார ப்ரீதி. இந்த புண்ணியவதியினுடைய சரித்திரத்தை இன்னொரு தடவையில் விவரமாக எழுதுவோம்.

Poultry.

கோழிகள்.—கோழியைக் கொன்று ரத்தத்தை வெளிவிட்டால் மாமிஸம் ருசி குறைகிறதாம். ஆகவே ஜர்மனி தேசத்தில் தூக்குப்போடுவதுபோல் கோழியின் தலையை கழுத்தெலும்பிலிருந்து பின் கண்டவாறு கழலவிடுகிறார்கள். இடது கையில் கால் வால் இறகு முனை இவைகளை உறுதியாய்ப் பிடித்து வலதுகைபெருவிரல் ஆள்காட்டிவிரல்கழுத்திற்கு ஒருபுறமும் மற்றவிரல்கள் இன்னொரு பக்கமுமாகப் பிரித்துப்பிடித்து முழங்கால்கள் இரண்டையும்சேர்த்து இடதுகையை இடதுதொடையிலும் வலது கையின் தலையை வலது தொடையிலும் வைத்து தலை முன்னுக்கு சுருக்காய் மடக்க எலும்பு பிரிந்துவிடுகிறது. 5 வினாடியில் பிராணன் போகிறது. இம்மாதிரி செய்வதில் பிராணி அவஸ்தைப் படுவதில்லையென்று டாக்டர்கள் தெரிவிக்கிறார்கள். கழுத்து மயிரை உடனே பிடுங்க சுலபமாய் கழலும். சூடாறின பிறகு வருவது சொல்லப் பிரயாசை.—தென்னிந்தியா விவஸாயம்.

Ladies and Card Playing.

பெண்களும் சீட்டாட்டமும்.—அமெரிக்கா தேசம் பலவிஷயங்களில் உலகத்து மற்றபாகங்களைவிட முற்பட்டிருப்பது போலச் சீட்டாட்டத்திலும் முற்பட்டிருக்கிறது. அதிலும் அமெரிக்க ஸ்திரீகளுக்கு இதில் பெரும் பைத்தியம் உண்டு போலும். லூயிஸியானா என்ற பிரதேசத்தில் ஸ்திரீகள் சீட்டாட்டத்திலே எப்போதும் மூழ்கியவர்களாய்த் தங்கள் குடும்பக் கடமைகளையும் குழந்தைகள் வளர்த்தலையும் கவனிக்காமலிருப்பதால் ஜனசமூகத்துக்குப் பெருந்தீங்குண்டாகிறதென்று வருந்தி, இந்த துர்வழக்கத்தைத் தடுக்கும்பொருட்டு ஜனசபையில் ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்களாம். இந்தக் கால நாகரிகத்தின் பெருமையே பெருமை!

A Lady Barrister.

ஒரு லேடி பாரிஸ்டர்.—பாரிஸ் நகரத்திலுள்ள மிலி இஸ்நார்ட் என்ற ஒரு ஸ்திரீ பிரதிவாதி தரப்புக்காக, ஒரு கேஸில் ஆஜராகி மிகவும் திறமையாய் வாதித்தாளாம். இதுதான் முதல் தடவையாக ஒரு ஸ்திரீ கோர்ட் முன் வக்கீலாய் ஆஜராகி வாதிக்க இடங்கொடுக்கப்பட்ட சந்தர்ப்பம்.

A Costly Pearl.

விலையுயர்ந்த முத்து.—பம்பாய் வர்த்தகர்களிடம் ஒரு அழகிய நல்முத்து பரீக்ஷைக்காக வந்திருக்கிறதாம். 34-காரெட் நிறையுள்ளதும் முக்கால் அங்குலம் பருமனுமான இந்த முத்து ஜோதிமயமாய்த் தோன்றுகிறதாம். இதைவிடச் சிறந்த முத்து உலகத்தில் கிடையாதென்று சொல்லுகிறார்கள்.

A Widow Remarriage.

ஒரு விதவா விவாகம்.—ஆனரபில் என். ஸுப்பராவ் பந்துலுவின் ஸகோதரரின் குமாரி ஸ்ரீமதி ஜனகம்மாளுக்கும் உதகமண்டலம் ஸெண்ட்ஜோஸப் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் மிஸ்டர் சிவசுப்பிரமணிய அய்யருக்கும் ஸமீபத்தில் பெங்களூருக்கடுத்த அப்ஸூரில், விதவா விவாகம் நடந்தது. மாப்பிள்ளைக்கு வயது 29 பெண்ணுக்கு வயது-23.

The Late Mrs. Veeraisalingam.

வீரேசலிங்கம் பந்துலுவின் மனைவி.—தென்னிந்தியாவில் பெரிய ஆசாரத் திருத்தக்காரராகிய ராவ் பகதூர் வீரேசலிங்கம் பந்துலுவின் மனைவி ராஜமகேந்திரத்தில் ரத்தாசய நோயால்திடீரென்று இறந்துபோய் விட்டார். அந்தம்மாள் பந்துலு அவர்களின் ஆசாரத்திருத்த நோக்கங்களை நிறைவேற்றுவதில் அவருக்கு மிகுந்த பின்பல மாயிருந்து வந்தார்.

BETEL LEAVES.

வெற்றிலை.—வெற்றிலை இந்தியாவில் எல்லா இடங்களிலும் உண்டாகக்கூடியது. இது பயிர் வெற்றிலை முதுகால் வெற்றிலை என்று இருவகைப்படும். முதுகால் வெற்றிலைதான் மிகவும் சிலாக்கியமானது. இதுதான் நாவிற்குச் சுவையைத்தரும். இது சிறியதாயும் மெல்லியதாயும் இருக்கும். பயிர் வெற்றிலைக்கு யாதொரு குணமும் இல்லை. வெற்றிலை வெறும் இலை என்னும் பெயர் முதுகால் வெற்றிலைக்கேதகும்.

A HINDU MARRIAGE.

ஒரு ஹிந்து விவாகம்.—இங்கிலாந்தில் லன்காஸ்டர் என்னும் பட்டணத்தில் ஆரிய ஸமாஜத்தைக் சேர்ந்த ஒரு ஹிந்துவானவர் ஒரு இங்கிலீஷ்ப் பெண்ணை சென்ற ஏப்பிரல்மீ 27உயில் விவாகம் செய்துகொண்டார். பஞ்சாபியாகிய லாலா லஜ்பத்ராய் என்பவர் விவாகக்கிரியைகளை வேத மந்திரத்துடனும், அக்கிவளர்த்து ஹோமத்துடனும், புரோஹிதராக இருந்து நடப்பித்தார்.

AN YOUNG GIRL MARRIED TO AN OLD MAN.

ஒரு குமரி கிழவனுக்கு வாழ்க்கைப் பட்டாள்.—வடக்கே டிபேரா ஜில்லாவிலிள்ள ஒரு ஊரில் பன்னிரண்டு வயதுள்ள ஒரு சிறு பெண்ணை அந்தக் குழந்தையின் பெற்றோர்கள் ஏறக்குறைய 90-வயதுள்ள ஒரு கிழவனுக்கு விவாகம் செய்துவிட்டார்கள். இந்தக்கிழவனுக்கு அநேக பெண் பிள்ளைகளும், பேரன் பேத்திகளும் கொள்ளுப் பேரன்களும் எள்ளுப் பேரன்களும் இருக்கிறார்களாம். இந்தக் கிழவனையும் பெண்ணைக்கொடுத்த பெற்றோர்களையும் ஒரு பெண்ணை அனியாயமாய்க் கெடுத்த குற்றத்திற்காக அந்த ஊரார்கள் ஜாதி பிரஷ்டம் செய்துவிட்டார்கள்.

SOFTENING FLESH.

மாமிஸத்தை மிருதுவாக்குதல்.—கொழுத்த மாமிஸமானாலும் பப்பளிக்காயின் பாலைத்தடவினாலும் அல்லது இலையில் சுற்றி கொஞ்ச நேரம் வைத்தாலும் மிருதுப்படும். இது சுலபமானவழி. பழையகாலத்தில் மாம்ஸத்தை மிருதுப்படுத்த கோரமான செய்கைகளைச் செய்துவந்ததாகத் தெரிகிறது. பன்றி மாமிஸம் மிருதுவாகவேண்டுமென்று அதைச் சவுக்காலடித்தேகொல்லுவதுண்டு. இட்டலி தேசத்து ரோம் பட்டணத்தில் மாட்டை மாமிஸத்துக் கென்று கொல்லுவதற்கு முன் அதை ஊரைச் சுற்றிலும் துரத்தி அடித்து இளைக்கச்செய்வார்கள். அப்போது மாம்ஸம் மிருதுப்படும். வேட்டையில் கிடைத்த முயல் அலண்டு ஓடியிருந்தால் அதன் மாமிஸம் மிருதுபட்டிருக்கும்.

A LADIES CLUB.

ஸ்திரீகளின் க்ளப்.—வட இந்தியாவிலுள்ள, ஐக்கியமாகாணத்தைச் சேர்ந்த, முஸ்பர்நகர் ஜில்லாக் கலெக்டரின் மனைவியாரின் தேசபக்தி மிகவும் மெச்சத்தக்கது. இந்த அம்மாள், சமீபத்தில், அந்த ஊரிலே, நேர்த்தியான ஒரு பெண் கலாசாலையை ஸ்தாபித்து, அதன் அபிவிருத்திக்காகப் பெரிய முயற்சி யெடுத்து வருகிறார். ஸ்திரிகள் சிறிது நேரமாவது, தினந்தோறும், உற்சாகமாய்க் காலங்கழிப்பதற்காக, ஒரு க்ளப் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார். அங்கே ஸ்திரீகளெல்லாம், ஒன்றுகூடி மாலைவேளைகளிலும், சாவகாசமான காலங்களிலும், ஒருவருக்கொருவர் அவர்களின் சீர்திருத்தத்திற்கு வேண்டிய, முக்கிய விஷயங்களைப் பேசிக் காலங்கழிக்கிறார்கள்.

DANCING GIRLS.

தாஸிகள்.—நாதனற்ற குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காகப் பம்பாய் மாகாணத்தில் அனேக சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்று பூனாவிலிருக்கிறது. இந்தப் பூனாசங்கம் சமீபத்தில் கூடினபோது கவர்னர் ஸர். ஜார்ஜ் கிளார்க் பேசினார். பெண்குழந்தைகளைக் கோவில்களில் பொட்டுக் கட்டிவிட்டு வேசித்தொழிலில் பிரவேசிக்கச் செய்யும் வழக்கத்தை கடுமையாய்க் கண்டித்துப்பேசினார். எங்கெங்கே இந்த வழக்கம் கவர்ன்மெண்டின் காதுக்கெட்டுகிறதோ அங்கே அது சட்டமெட்டுகிறமட்டில் கடுமையாய்த் தண்டிக்கப்படுமென்று சொன்னார். இந்த வழக்கம் தென்னிந்தியாவில் விசேஷமாயிருக்கிறது.

DEPARTMENTAL NOTES.

பகுதிக் குறிப்புகள்.

AGRICULTURAL NOTES.

விவஸாயக் குறிப்புகள்.

CUCUMBER.

வெள்ளரிக்காய்.—வெள்ளரிக்காய்க் கொடிகளை நிலத்தில்பரவவிடாமல் பந்தலில் ஏத்தினால் காய்கள் கெடாமல் பருமனாகுமென்றும், பூவிடும் ஸமயமே இதற்கு அறிகுறியென்றும் தெரிகிறது.

EARLY YIELDS.

சீக்கிரம் காய்ப்பு.—கிண்டி ரங்கராஜா அவர்கள் தோட்டத்தில் செவ்வாழை ஒருவருஷத்தில் காய்த்துப் பழுத்ததாகத் தெரிகிறது.

மாஞ்செடி ஒன்று கொட்டையிலிருந்து வளர்ந்து 3 வருஷத்தில் காய்த்திருக்கிறதாம்.

GREEN MANURING FOR COCOANUTS.

தென்னைமரத்துக்கு பசுந்தாள் எரு.—தென்னை மரங்களுக்கு எருப்போட்டால் அவைகள் நன்றாய்க் காய்க்கும். தென்னந்தோப்புகளில் இடவெளிகளில் அவரை தினுஸுப்பயிர்களை சாகுபடிசெய்து அவைகளை உழுது நிலத்தில் மடித்துவிட்டால் மரங்கள் சீக்கிரமாய் வளரும்.

CASSAVA CULTIVATION.

மரவெள்ளி சாகுபடி.—1906-ம் வருஷத்தில் யாழ்ப்பாணத்தில் மரவள்ளிக்கிழங்கு 885 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டதென்றும், இந்த வருஷத்தில் அது 1000 ஏக்கரில் செய்யப்பட்டிருக்கின்றதென்றும், அதுவே தற்காலம் யாழ்ப்பாணத்து ஏழை ஜனங்களுக்கு அதிக ஆதரவான போஜனமாயிருக்கின்றதென்றும் தெரிகிறது.

THE ALLAHABAD EXHIBITION.

ஐக்கிய மாகாணப் பொருட்காட்சி.—அடுத்த டிஸம்பர் மாஸம் அலகாபாத்தில் கூடும் ஐக்கியமாகாணப் பொருட்காட்சி ஸம்பந்தமாய் ஒரு விவஸாயக் கான்பரென்ஸ் நடக்கும். அப்பொழுது விவஸாயத் தொழிலைப்பற்றி இங்கிலீஷிலும் தேச பாஷைகளிலும் பிரஸங்கங்கள் செய்யப்படும். விவஸாயக் கான்பரென்ஸ் ஜனவரி மாதம் 11-ந்தேதி முதல் 18-ந்தேதி வரையில் நடக்கும்.

SMALL ONIONS.

ஈருள்ளி வெங்காயம்.—சிறு வெங்காயம், (ஈருள்ளி) சாகுபடி செய்யப்படும் இடங்களிலெல்லாம் சிறு சிறு விதைப்பூடுகளை நட்டுப் பயிர் செய்கிறார்கள். என்றாலும், சில சில இடங்களில் இந்தப் பயிரில் விதை சேகரித்தும் விதைக்கிறார்கள். இப்படி விதைக்கும் முறையில் மாசூல் அதிகமாயும், பூடுகள் பெரிதாயும் உண்டாகின்றன. ஆனால் அதில் மாசூல் எடுக்க அதிக நாட்கள் செல்லும்.

GREEN MANURING IN GROUND-NUT CULTIVATION.

கடலைச் சாகுபடியில் பச்சைத்தழை எரு விடல்.—மணிலாக்கொட்டைப் பயிர் வளரும்போது பூமியிலுள்ள நைட்ரஜனையும், ஒரு விதமான தாதுப் பொருளையும் கிரகிக்கிறது. ஆகவே, நாம் செடியை மாசூலுக்காகப் பிடுங்கும்போது நைட்ரஜனும் தாதுப் பொருளும் செடியால் கிரகிக்கப்பட்டபடி நீங்கிவிடுகிறது. இதனால், பூமி ஸன்னம் ஸன்னமாய் சளைத்துப்போகிறது. இதைத்தடுக்க, செடிகளின் கடலையை எடுத்தபின்பு மேற்படி நிலத்திலேயே அந்தச்செடிகளைப்போட்டு உழுவது நல்ல எருவாகும்.

CATTLE SHOWS.

கால்நடைக் காட்சிகள்.—தென்னிந்தியாவில் சில வருஷங்களாய் அங்கங்கே கால்நடைக் காட்சிகள் நடந்து வருகின்றன. அந்த மாதிரி காக்ஷிகள் நடப்பது நல்ல கால்நடைகளின் வளர்ப்புக்கு ஒரு தூண்டுதலாயிருக்கிறதென்பது பொது ஜனங்களின் அபிப்பிராயம். அப்படியிருக்க, கால்நடை வைத்திய இலாகா சூபரின்டெண்டெண்ட் கால்நடைக் காட்சிகளால் யாதொரு பிரயோஜனமுமில்லை என்றும், ப்யூஸாவில் கால்நடைக் காக்ஷிகள் நடத்துவதை நிறுத்திப் போடுவதைப் பற்றி யோசிக்கப்பட்டதென்றும், காலக்கிரமத்தில் கால்நடைக் காக்ஷிகள் நடத்தலாம் நடத்தக் கூடாதென்பதைப் பற்றிய ஆட்சேப ஸமாதானங்கள் தெரியவருமென்றும் அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார். ஆனால் சென்னை ரெவினியூ போர்டாரும் கவர்ன்மெண்டாரும் அவருடைய அபிப்பிராயத்தை அங்கீகரிக்கவில்லை.

A Remedy for Sorghum Poisoning.

சோளப்பயிர் விஷத்தால் பீடிக்கப்பட்ட கால்நடைகளுக்கு ஒரு கைகண்ட மருந்து.—சிற்றாளுக என்பது ஒருவகைச் செடி. இது, சமதரைகளிலும் வரப்புகளிலும் கொடியோடிப் படர்ந்திருக்கும்; வெளுப்பாய் புஷ்பிக்கும்; வட்டவடிவமாக இலையிருக்கும். கொடி, இலை, காய்கள் பச்சை நிறமாயிருக்கும். கோடை காலத்திலும் கிடைக்கக்கூடியது. சோளப்பயிரில் மேய்ந்த கால்நடைகள் மயக்கங்கொண்டு மேயாமல் நிற்பதைக் கண்டவுடனே இந்தச் செடியின் தழையையும், நாம் ஸாதாரணமாய் சாப்பாட்டில் உபயோகிக்கும் கடலுப்பையும் சேர்த்து நசுக்கிக் கசக்கி ஒரு துணியில் பொட்டணமாய்ப் பிடித்துக்கொண்டு கொஞ்சம் தண்ணீரை அதில் சேர்த்துகொண்டு விஷத்தால் பீடிக்கப்பட்ட கால் நடையின் மூக்கிலும் கண்களிலும் பிழிந்தால் உடனே அல்லது சில நிமிஷங்களுக்குள் ஸௌக்கியமாகி ஸாதாரணமாய் மேய ஆரம்பித்துவிடும். அஜாக்கிரதையினால் மயக்கம் அதிகரித்து வயிறுப்பி கீழே விழுந்துவிட்டால் மேற்கூறிய மருந்துச் சாற்றை மூக்கிலும் கண்களிலும் பிழிவதுடன் காதுகளிலும் பிழிந்து கொஞ்சம் உட்கொள்ளும்படி வாயிலும் ஊற்றி விட்டால் உடனே குணமாகிவிடும்.

Forest Grass.

காட்டுப்புல்.—சில மாஸங்களுக்கு முன்னால் கர்னூல், பல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, வட ஆற்காடு, தென்கன்னடம் ஆகிய ஜில்லாக்களில் ரிஸர்வெட் பாரஸ்டிலிருந்து குடிகள் வரியில்லாமல் புல் கொண்டுபோகலாமென்று செய்திருந்த உத்தரவு மற்ற ஜில்லாக்களிலும் அனுஷ்டிக்கலாமா என்று ரெவினியூ போர்டார் விசாரணைசெய்தார்கள். மேற்படி ஜில்லாக்களில் குடிகளுக்குச் செய்திருந்த இந்த நன்மையால் எவ்விதத்தொந்தரவும் நேரவில்லை. ஆகையால், அந்த நன்மை மற்ற ஜில்லாக் குடிகளுக்கும் கிடைக்கும்படிச் செய்யலாமென்று அபிப்பிராயப்பட்டுக் கவர்ன்மெண்டுக்கு ரிபோர்ட்டு செய்ததின்மேல், கவர்ன்மெண்டார் அப்படியே உத்தரவு செய்துவிட்டார்கள். பெர்மிட்டுகள் (சீட்டுகள்) பெற்றுக்கொண்டுதான் புல் கொண்டு போகலாமென்று இருந்த வழக்கம் இனிமேல் நிறுத்தப்பட்டுப்போகும். பெர்மிட்டுகள் கொடுக்கும் அதிகாரம் கீழ் உத்தியோகஸ்தர்களிடம் இருந்தபடியால் இவர்கள் குடிகளைப் பலவிதமாய் ஹிம்ஸைப்படுத்த இடமிருந்தது. ஜனங்களுக்கு தினப்படிக்கும் விவஸாயகாலத்திலும் அவசியமான பொருள்களைக் காட்டிலிருந்து எளிதாய்க் கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்று ரெவினியூ போர்டாரும் கவர்ன்மெண்டாரும் இந்த உத்தரவு செய்திருக்கிறார்கள். இவர்களுடைய நல்லெண்ணத்தைக் கீழ் உத்தியோகஸ்தர்கள் கெடுத்துவிடாமலிருக்கவேண்டும்.

Cotton Growing in India.

இந்தியாவில் பருத்தி விளைவித்தல்.—‘ இண்டர்நாஷனல்-காட்டன் பெடரேஷன் ” என்னும் பல தேசத்துப் பஞ்சு வர்த்தகர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் மிஸ்டர் எம்மோ என்பவரைத் தங்கள் தலைவராகக் கொண்டு, போன மாஸத்தில் லார்ட் மார்லியைப் போய்ப் பார்த்து அவரிடம் ஒரு மனு செய்துகொண்டார்கள். பருத்தியை இந்தியாவில் அதிகமாகப் பயிராக்கும்படிச் செய்வதிலும், முதல் தரமான உயர்ந்த பருத்தியைப் பயிரிடச் செய்வதிலும் லார்டு மார்லி ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

இந்தப் பிரதிநிதிகள் செய்துகொண்ட மனு விஷயத்தில் லார்ட் மார்லி பூரண அனுதாபங் காட்டி, இந்திய விவஸாய இலாகாவுக்கு இந்த விஷயமாய்த் தாம் சொல்லுவதாக லார்ட் மார்லி சொன்னார். இந்த இலாகாக்காரர்கள் இந்த விஷயமாய் ஏதாவது கொஞ்சம் உதவி செய்யக் கூடுமென்று தாம் நம்புவதாயும், ஆனாலும் சிலர் எதிர்பார்க்கிறபடி அவ்வளவு உதவி கவர்ன்மெண்டார் செய்வது கஷ்டசாத்தியமென்றும் லார்ட் மார்லி சொன்னார். இந்தியாவில் உள்ள மற்றப் பயிர்களுக்கு நஷ்டமுண்டாகும்படி பருத்தியை மட்டும் விருத்தி செய்வதில் இந்தியா கவர்ன்மெண்டார் விருப்பம் கொள்ளமாட்டார்கள் என்று சொன்னார். உதாரணமாக கோதுமைப் பயிரை எடுத்துச் சொன்னார். அப்படிச் செய்தல் இந்தியாவிலுள்ள மற்ற விவஸாயிகளுக்குச் சம்மதமாயிராதென்றும், அவர்களைப் பருத்திப் பயிர் செய்யும்படிக் கட்டாயப்படுத்துவது கவர்ன்மெண்டாருக்கு நியாயமாகாதென்றும் லார்ட் மார்லி சொன்னார். கடைசியில் கடந்த பத்து வருஷத்துக்குள் இந்தியாவில் பருத்தி விளைவு எவ்வளவோ விருத்தியாயிருக்கிறதென்பதையும் லார்ட் மார்லி எடுத்துக்காட்டினார்.

INDUSTRIAL NOTES.

கைத்தொழில் குறிப்புகள்.

Sheep Breeding in Coimbatore.

கோயமுத்தூரில் ஆடு வளர்க்கும் தொழில்.—கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள இடையர்கள் சிலர் கம்பளி செய்வதில் உபயோகப்படக்கூடிய ரோமத்தைக்கொடுக்கும் ஆடுகளை விசேஷமாய் வளர்க்கிறார்கள். அவர்கள் வளர்க்கும் ஆடு ஒன்றிலிருந்து 1½ பவுன் நிறையுள்ள ரோமம் கிடைக்குமென்றும், 6-ஆடுகளின் ரோமத்தைக்கொண்டு 1-கம்பளி செய்யக் கூடுமென்றும் கணக்கிடப்படுகிறது. ஆனால் அந்த ஜில்லாவிலுள்ள இடையர்களில் பெரும்பாலார் அந்தத்தொழிலை மேற்கொண்டு செய்வதாய்க் காணவில்லை. அந்தத்தொழிலை அவர்கள் மேற்கொண்டு மட்டும் செய்வதாயிருந்தால் நல்ல லாபம் எடுக்கலாம்.

Boot Blacking.

பூட்ஸ் மை.—பாரிஜாத புஷ்பச்செடி என்று சொல்லும் பவழமல்லிகைச் செடியின் வெள்ளைக்கிளைகளிலிருந்து பூட்ஸ்களுக்குப் போடும் வாசனையோடு கூடிய கறுப்பு செய்யப்படுவதாகத் தெரிகிறது.

Whale Bone.

திமிங்கிலத்தின் எலும்பு.—திமிங்கிலத்தின் தாடை எலும்பு நன்றாய் வளையத்தக்கது. அதை மெல்லிய ஏடுகளாக ரம்பத்தினால் அறுத்துக் கழுத்துப் பட்டையின் உட்புறத்திற் கொடுப்பார்கள். குடைக் கம்பிகளாகவும் உபயோகிப்பார்கள்.

Pig Rearing.

பன்றிவளர்த்தல்.—பன்றிகள் 15, 20 வயது உயிரோடிருக்கும். 9, 10, 11 மாஸத்தில் குட்டி போட ஆரம்பிக்கும். ஒரு ஜோடு பன்றியினால் தடவைக்கு 9 வீதம் கணக்கிட்டாலும் 10 வருஷகாலத்தில் 90 லக்ஷம் பன்றிகளின் ஸம்ஸாரமேற்படும். இது வீண்வார்த்தையல்ல. ஒரேபன்றிக்கு இரண்டு வருஷத்தில் 4616 குட்டிகளின் சந்ததியுண்டாயிற்றென்று கேள்விப்படுகிறோம். கோடீசுவராக கருதுவோருக்கு பன்றிவியாபாரம் செய்தால் விசேஷமாகும். ஆயிரம் ஏக்கர் நிலம் ஸம்பாதித்து 100 பன்றிகளோடு ஆரம்பித்தால் 5 வருஷத்தில் 4, 5 லக்ஷம் ரூபாய் ஸம்பாதிக்கலாம். கேட்பதற்கு பரிஹாஸமாயிருக்கலாம். ஐரோப்பியர்களில் அனேகர் மாம்ஸத்திற்கென்றே பன்றிகளை வளர்த்து ஏராளமாக பணம் ஸம்பாதிக்கிறார்கள்.

A Silk Rearing Farm.

பட்டுப்பூச்சி வளர்க்கும் சாலை.—பெங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் டாட்டாப் பட்டுப்பூச்சி வளர்க்கும் சாலை மிகவும் திருப்திகரமாயிருந்துக்கொண்டிருக்கிறதென்று அறிந்த திருவாங்கூர் ராஜாங்கத்தார் தங்களுடைய ராஜ்யத்திலும் ஒரு சாலை ஸ்தாபிக்கவேண்டுமென்று தீர்மானம்செய்து திருவனந்தபுரத்தில் ஒரு வளர்புச்சாலை ஏற்படுத்தும்பொருட்டாக ரூபா 1990 ஸாங்ஷன் செய்திருக்கிறார்கள். திருப்திகரமாயிருந்தால் இன்னும் அதிகமான பணச்செலவுசெய்து பெரியசாலையாக பண்ணுவார்களென்று தெரிகிறது.

The Mat Industry.

பாய் செய்யும் தொழில்.—கொச்சி சமஸ்தானத்தில் சித்தூர் என்ற இடத்தில் நல்ல கோரைப் பாய்கள் செய்யப்படுகின்றன. அவைகளைச் செய்கிறவர்கள் தாழ்ந்த ஜாதியான குறவர்களாயிருக்கிறபடியால் அவர்களுக்குள் ஊக்கமாவது கட்டுப்பாடாவது இல்லாமல் அந்தத் தொழில் அற்பமான நிலைமையில் இருக்கிறது. அந்தத் தொழிலைச் சிறிது முதல் போட்டு ஊக்கமும் அறிவும் உள்ளவர்கள் நடத்தினால் தக்க லாபந் தருமென்று நம்பி அவ்விடத்து முதலாளி முத்துவேதன் செட்டியார் என்பவர் ஆயிரம் ரூபாய் மூலதனம் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கிறாராம். அந்த ஊரில் கோரை செலவில்லாமல் வேண்டிய மட்டும் கிடைக்கிறது. எவ்வளவு பாய்கள் செய்தாலும் கஷ்டமில்லாமல் விலையாகி விடுகின்றன. சில மாப்பிள்ளைமார்கள் அவ்விடத்துப் பாய்களை லண்டன், பாரிஸ் முதலான ஐரோப்பிய பட்டணங்களுக்கு அனுப்பி நல்லலாபம் பெறுகிறார்கள். கோரைப்பாய்கள் தென்னிந்தியாவில் பல இடங்களில் செய்யப்படுகின்றன. பாலக்காடு, பத்தமடை, அய்யம்பேட்டை முதலான இடங்களில் முதல்தரமான பாய்கள் செய்யப்பட்டு ஜனங்களுக்கு உபயோகப்படுகின்றன. ஆனால் இவைகளை இப்போது செய்கிறவர்கள் ஏழைகளாயிருப்பதுமன்றி அறிவாவது ஊக்கமாவது இல்லாதிருப்பதால் அந்தத்தொழில் எவ்வளவுதூரம் செழிக்குமோ அவ்வளவுதூரம் செழிக்கவில்லை. இது இளப்பமான தொழிலென்று நம்முடைய முதலாளிகள் இதை அலக்ஷியம் செய்கிறார்கள்போலும்.

EDUCATIONAL NOTES.

வித்யா விஷயக் குறிப்புகள்.

A SCHOLARSHIP.

ஒரு ஸ்காலர்ஷிப்.—ஆனரெபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயர் ஹிந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும் ஒற்றுமையை உண்டாக்கி அதைப் பலப்படுத்த ஒரு புதிய வழி கண்டு பிடித்திருக்கிறார். வடக்கே ஐக்கிய மாகாணத்திலுள்ள அலிகர் மகமதிய காலேஜில் சேர்ந்து அந்த காலேஜ் ஹோஸ்டலிலேயே மகமதியப் பிள்ளைகளோடு சாப்பிட்டுக் கொண்டு வாசிக்கும் ஹிந்துச்சிறுவன் ஒருவனுக்குத் தாம் மாதம் ரூபாய் 10-ஸ்காலர்ஷிப்பு கொடுக்கச் சித்தமாயிருப்பதாய்ச் சொல்லியிருக்கிறார்.

PRIMARY EDUCATION.

பிரைமரிப் படிப்பு.—கஞ்சம் ஜில்லா பர்ஹாம்பூர் முனிசிபாலிடியார் முனிசிபாலிடியின் நிருவாகத்தின் கீழுள்ள அந்தவூர் பிரைமெரிப் பள்ளிக்கூடங்களில், சம்பளமில்லாமல் படிப்புச் சொல்லி வைக்கப்படுவதற்குப் பிடிக்கும் செலவைத் தாங்கள் பொறுத்துக்கொள்ளச் சித்தமாயிருப்பதாயும், அம்மாதிரி தாங்கள் செய்யக் கவர்ன்மெண்டின் அனுமதி வேண்டுமென்றும் சென்னைக் கவர்ன்மெண்டாருக்கு எழுதிக் கொண்டிருப்பதாய்த் தெரிகிறது.

COMMERCIAL EDUCATION.

வியாபாரக் கல்வி.—வியாபாரக் கல்வியாவது என்னவென்றால், எந்தெந்த விஷயங்களில் ஞானமிருந்தால் வியாபாரம் விசாலித்து நல்ல லாபம் தரக்கூடியதாகுமோ அந்த ஞானத்தைப்படிப்பினால் பெறுதல். எந்தச் சரக்குகள் எங்கெங்கே வியாபாரமாகின்றன; அவைகள் விலை யேறுவதும் இறங்குவதும் என்ன காரணங்களினால்; என்னென்ன தேசங்களில் என்னென்ன பொருள்கள் விளையக் கூடியன; அந்தந்தத் தேசங்களிலுள்ள ஜனங்களுக்கு என்னவேண்டும், என்னவேண்டாம்; இவை போன்ற விஷயங்களோடு, கணக்கு வைத்தல், கடிதம் வரைதல், முதலியவற்றையும் கற்பதுதான் வியாபாரக் கல்வி என்று சொல்லுவது.

EDUCATION IN INDIA AND JAPAN.

இந்தியாவிலும் ஜப்பானிலும் படிப்பு.—இந்த உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலும் ஜப்பான் தேசமே வித்தியாப்பியாஸ விஷயத்தில் முதன்மை பெற்றிருக்கிறது. ஜப்பானிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு பள்ளிக்கூடங்களுக்குக் குறையாமல் இருக்கின்றன. 1902-ஆம் வருஷத்திய தேச விருத்தாந்தப்படி 100-பையன்களில் 96-பையன்களுக்கும், 100-பெண்களில் 88-பெண்களுக்கும் எழுதப்படிக்கத் தெரியும். ஆனால் இந்தியாவிலோ, 10-பையன்களில் ஒருபையனுக்கும், 144-பெண்களில் ஒரு பெண்ணுக்குந்தான் எழுதப்படிக்கத் தெரிகிறது. இந்தியாவில் ஐந்து கிராமங்களில் நாலில் பள்ளிக்கூடமே யில்லை. ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் கல்வி விஷயத்தில் எவ்வளவு வித்தியாஸம்!

FEMALE EDUCATION IN TRAVANCORE.

திருவாங்கூரில் பெண்கல்வி.—15 - வருஷங்களுக்குமுன் திருவநந்தபுரத்தில் ஸர்க்கார்ப் பெண் பள்ளிக்கூடம் என்று ஒன்று ஏற்பட்டிருந்தது. அப்போது அதில் 150 பெண்கள் படித்துவந்தார்கள். அந்தப்பள்ளிக்கூடம் பிறகு விருத்தியாகி மகாராஜா காலேஜ் என்றும், ஹைஸ்கூல் என்றும் இருபாகமாகி இப்போது 468-பெண் மாணாக்கர்களை யுடையதாயிருக்கிறதென்று தெரிகிறது. இதில் பெண்கள் உபாத்தினிகளாகத் தயார்செய்யும் வகுப்பும் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படி தயாரானவர்கள் 143 பேர் இருக்கிறார்கள். பெண்கல்வி விஷயத்தில் திருவாங்கூரும் கொச்சியும் சென்னையைக் காட்டிலும் முற்பட்டிருக்கிறதென்று தோன்றுகிறது. இப்போது திருவாங்கூர் பெண் பாடசாலைகளில் 53,000 பெண்கள் படிக்கிறார்கள். திருவாங்கூரில் படிக்கும் மாணாக்கர்களின் மொத்தத்தொகையில் பெண்கள் 100-க்கு 15-வீதம் ஆகிறார்கள். கொச்சியில் மொத்தம் படிக்கும் பிள்ளைகளுக்குள் நூற்றுக்கு 25-வீதம் பெண்களிருக்கிறார்கள். சென்னை ராஜதானியிலோ நூற்றுக்கு 6-வீதமே பெண் மாணாக்கர்கள் இருக்கிறார்கள்.

LITERARY NOTES.

புஸ்தகக் குறிப்புகள்.

GANIKA GNANI SAMVADAM.

கணிகா ஞானி ஸம்வாதம்.—நாகப்பட்டணம் நாஷனல் ஹைஸ்கூல் ஸம்ஸ்க்ருத பண்டிதராகிய எஸ். ஏ. சக்ரபாணி அய்யரால் இயற்றப்பட்டது. விலை அணா 2.

இது ஒரு சிறு புஸ்தகம். படிப்பவர் யாவரும் எளிதில் உணர்ந்துகொள்ளும் விதமாய், இனியதமிழில், சிற்றின்பத் தாழ்வையும், பேரின்ப உயர்வையும் விளக்கி வேதாந்த ஸாராம்சங்கள் நிரம்பி நிற்குமாறு எழுதப் பட்டிருக்கிறது. கணிகைக்கும் ஞானிக்கும் நடந்த ஸம்பாஷணை மூலமாய்த் தத்துவார்த்தங்களை நன்றாய் விளக்குவதால் வேதாந்தப் பயிற்சிசெய்வோர்க்கு இது ஒரு சிறந்த கருவியாகும்.

HINDU SHASTRABHIMANI.

இந்து சாஸ்திராபிமானி.—விலை அணா 5½.

ARYAJANA BHODHINI.

ஆரியஜன போதினி.—விலை அணா 10.

இந்த இரண்டு புஸ்தகங்களும் திருநெல்வேலி ஜில்லா கல்லடைக்குறிச்சி வி. முத்துகிருஷ்ணய்யரால் இயற்றப்பட்டன.

LONGMANS' TAMIL READING BOOKS.

லாங்க்மன்ஸ் தமிழ் வாசக புஸ்தகங்கள்.—முதல்வகுப்பு அணா 2, இரண்டாவது வகுப்பு அணா 2½, மூன்றாம்வகுப்பு அணா 3, நான்காம்வகுப்பு அணா 4.

இந்த நாலு புஸ்தகங்களும் டப்ள்யு துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களாலும் சென்னப்பட்டணம் பச்சையப்பன் காலேஜ் உபாத்தியாயராகிய டி. செல்வகேசவராய முதலியார் அவர்களாலும் இயற்றப்பட்டிருக்கின்றன. எலிமெண்டரி, ஸெகண்டரி பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளுக்குத் தக்கபடி சங்கிலிக்கொத்தாய் ஸந்தி சேர்த்து எழுதாமல் சுலபமானநடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப் புஸ்தகங்களில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் அந்நிய பாஷைச் சொற்களை அவைகளின் உச்சரிப்புப்படி தமிழ் எழுத்துக்களில் எழுதியிருக்கிறார்கள். இது ரொம்பவும் ஸரியானவழி.

YUDDHALOLAN.

யுத்தலோலன்.—ஒரு தமிழ் நாடகம். ஷேக்ஸ்பியர் மகாகவி இங்கிலீஷில் இயற்றிய 'ஒதெல்லோ என்னும் நாடகத்தை அனுஸரித்து ப. வி. துரைஸ்வாமி ஐயங்கார் இயற்றியது. விலை அணா 8. சென்னப்பட்டணம் சைனா பஜார்ரோட் நெ. 101 வீட்டில் பி. எஸ். ராஜகோபால ஐயங்காரிடத்தில் கிடைக்கும்.

LONGMANS INDIAN PRACTICAL ARITHMETICS.

லாங்க்மன்ஸ் ப்ராக்டிகல் அரித்மெடிக்.—பாலர் முதல் பாகம், விலை அணா 2, உபாத்யாயர்முதல் புஸ்தகம், விலை அணா 8. இந்த இரண்டு புஸ்தகங்களும் விசாகப்பட்டணம் காலேஜ் ப்ரின்ஸிபாலாகிய பி. டி. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் அவர்களால் இயற்றப்பட்டன.

GEOGRAPHY OF THE MADRAS PRICIDENCY.

பூகோளசாஸ்திரம், சென்னை ராஜதானி.—விலை அணா 4½.

SCHOOL HISTORY OF INDIA.

இந்திய சரித்ரம்.—விலை அணா 12.

STORIES FROM INDIAN HISTORY.

இந்திய சரித்திரக்கதைகள்.—விலை அணா 5.

மேலே குறித்த மூன்று புஸ்தகங்களும் லாங்க்மன்ஸ் கம்பெனியாருக்காக சென்னப்பட்டணம் பச்சையப்பன் காலேஜ் உபாத்தியாயராகிய கே. ஏ. வீராராகவாசாரியார் அவர்களால் இங்கிலீஷில் எழுதப்பட்டு தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. இந்தியசரித்திரக்கதைகளை பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்காக எழுதினபோதிலும் பொது ஜனங்களும் படிக்கத் தக்கனவாகவே இருக்கின்றன.

LONGMANS' TAMIL COPY BOOKS.

லாங்க்மன்ஸ் தமிழ் காப்பி புஸ்தகங்கள்.—நாலு நம்முடைய பார்வைக்கு வந்திருக்கின்றன.

INDIAN PENAL CODE IN TAMIL.

தமிழ் இந்தியன் பினல் கோட்.—சென்னப்பட்டணம் மைலாப்பூர் பி. எஸ். ரங்கசாமிராவ் அவர்களால் பிரசுரிக்கப்பட்டது. விலை ரூ. 2-8.

LEGAL NOTES.

சட்டக் குறிப்புகள்.

A CURIOUS DEFAMATION CASE.

விநோதமான மானநஷ்ட வியாஜ்யம்.—வேளாளர்களுக்குள் புருஷர் கலியாணம் செய்துகொள்ளும் வரையில் முகக்ஷவரம் செய்துகொள்ளக்கூடாது என்னும் ஒரு நிபந்தனை இருக்கிறது. இந்த நிபந்தனை மிகவும் கடுமையானது. இதைமீறி யாராவது நடந்தால் அவர்களை ஜாதிப்பிரஷ்டம் செய்துவிடுவார்கள். கோயமுத்தூர் டிப்டி மாஜிஸ்ட்ரேட்டு முன்னால் குமாரஸாமி என்னும் ஒரு வேளாளன் ஒரு மானநஷ்ட வியாஜ்யம் கொண்டுவந்தான். இவனுடைய புத்திரனும், சகோதரிமகனும், கலியாணமாவதற்குமுன் முகக்ஷவரம் செய்துகொண்டார்களாம். இதற்காக வேளாளர்கள் இவனை ஜாதியிலிருந்து நீக்கிவைப்பதுடன் வண்ணானையும் அம்பட்டனையும் இவனுக்கு வேலை செய்யக்கூடாதென்று தடுத்திருக்கிறார்கள். ரூபாய் இருபது அபராதம் கொடுத்தாலல்லாமல் இவனை ஜாதிப்பிரஷ்டம் செய்துவைக்கத் தான் நேரிடுமென்று வேறு இரண்டு வேளாளர்கள் சொன்னார்களாம். இவைகளைக் குறித்து இவன் மானநஷ்ட வியாஜ்யம் கொண்டுவந்தான். "வாதியும், வாதிமகனும், வாதிமருமகனும் ஜாதிக்கட்டுப்பாட்டைத் தவறி நடந்திருக்கிறார்கள் என்பது பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறது. கலியாணமாகிற வரையிலும் ஒரு வாலிபன் முகக்ஷவரம் செய்துகொள்ளக்கூடாது என்னும் நிபந்தனை மிகவும் கடினமான நிபந்தனைதான். ஆனாலும் இந்த நிபந்தனையை வேளாள ஸ்திரீகளும், புருஷர்களும் சந்தோஷத்துடன் ஏற்று அனுஸரித்து வருகிறார்கள். ஆகவே வாதியை வேளாளர்கள் ஜாதியிலிருந்து நீக்கி வைத்தது குற்றமாகாதென்று எனக்குப் படுகிறது. ஆதலால் வாதியாகிய குமாரஸாமி கொண்டுவந்த மானநஷ்ட வியாஜ்யத்தை நான் தள்ளுபடி செய்துவிட்டேன்." என்று மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் மார்ஷல் சொல்லிக் கேஸைத் தள்ளிவிட்டார்.

WATER CESS.

தண்ணீர்த் தீர்வை.—தண்ணீர்த் தீர்வை விஷயமாய் திவான் பகதூர் ஆர். ரகுநாதராயர் அவர்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் ஒரு வியாஜ்யம் நடந்து ராயரவர்கள் பக்கமாகத் தீர்ப்பாகியிருக்கிறது. ஆற்றோரத்துப் படுகையில் ராயரவர்கள் வாழை சாகுபடி செய்ததற்காக கவர்ன்மெண்டார் தண்ணீர்த்தீர்வை விதித்தார்கள். ஸர்க்கார்த் தண்ணீர் தன் நிலத்திற்குப் பாயவில்லை என்று ராயரவர்கள் ஆக்ஷேபம் செய்தும் ரெவென்யூ உத்தியோகஸ்தர் ஒப்புக்கொள்ளாமையால் ராயரவர்கள் வரியை ஆக்ஷேபத்துடன் செலுத்திவிட்டு, பணம் வாப்ஸாக வேணுமென்று வியாஜ்யம் செய்தார்.

முதலாவது, வியாஜ்ய நிலத்துக்கு ஸர்க்கார்த் தண்ணீர் உபயோகப்படவில்லை என்று வாதியாகிய ராயரவர்கள்தான் ருஜுப்படுத்த வேண்டுமென்று கவர்ன்மெண்டு தரப்பில் வாதாடினார்கள். ஆனால் இதை ஜட்ஜி ஒப்புக்கொள்ளவில்லை. தண்ணீர்த் தீர்வை விதிக்கும் விஷயமாக ஏற்பட்ட ரூல்படி, ஸர்க்கார்த் தண்ணீர் உதவியால்தான் மாஸூல் கிடைத்தது, அல்லது அந்தத்தண்ணீர் இல்லாவிட்டால் மாஸூல் அழிந்துபோயிருக்கும், அல்லது தரிசாயிருந்திருக்கும், என்று நினைக்க இடமிருந்தால் மாத்திரம் தண்ணீர்த்தீர்வை விதிக்கலாம். இப்படி நினைக்க இடமில்லாவிட்டால் தீர்வை விதிக்கக்கூடாது. ஆகையால் தீர்வை விதித்தது நியாயமென்று ஸர்க்காரே முதலில் ருஜுப்படுத்தவேணும் என்று ஜட்ஜி தீர்மானித்தார்.

ஸர்க்கார் ஸ்டேட்மெண்டின்படி தாவா நிலத்துக்கு ஸர்க்கார்த்தண்ணீர் மூன்று விதமாகப் பாய்ந்ததாகச் சொல்லப்பட்டது. அவைகளாவன.—(1) காவேரி புரண்டுவந்த வெள்ளம் (2) காவேரியின் ஊற்று ஜலம் (3) காவேரி ஜலம் கிடங்குகளில் பாய்ந்து கிடங்குகளின் ஊற்று ஜலம். தீர்வை வசூல் செய்த வருஷத்தில் (1315 பஸலி) காவேரியில் வெள்ளமில்லையென்றும், வெள்ளமில்லாததால் ஜலம் கிடங்குகளில் பாயவில்லையென்றும் ஜட்ஜி தீர்மானம் செய்தார். காவேரி ஜலம் ஊறிப்பாய்ந்தது என்பதற்கு தாவா நிலம் உயர்ந்த மட்டத்திலிருக்கிறது. தவிர, காவேரிக்கும் அதற்கும் 250 அல்லது 300 அடி தூரம் உண்டு. இப்படியிருப்பதால் ஊற்றத்தால் பாசனம் என்று சொல்ல முடியாது. எல்லா விஷயங்களையும் யோசித்துப் பார்க்கும்பொழுது ஸர்க்கார்த் தண்ணீர் பாய்ந்தது என்று சொல்ல இடமில்லையென்று சொல்லி, ராயரவர்களிடத்திலிருந்து வசூல்செய்த தீர்வை ரூபாய் 12-10-7-ம், அவருக்கு உண்டான ஸகல கோர்ட்டு செலவுகளையும் ஸர்க்கார் கொடுக்க வேணுமென்று டிஸ்டிரிக்ட் ஜட்ஜி தீர்மானித்தார்.

SCIENTIFIC NOTES.

சாஸ்திரீயக் குறிப்புகள்.

MATCH MAKING MACHINERY.

நெருப்புக்குச்சி யந்திரம்—இந்த யந்திரத்தால் ஒரு மரத்துண்டு பிறர் உதவியில்லாமல் தினத்துக்குக் கோடிக் குச்சிகளாக்கப்பட்டு, தலைகள் திராவகத்தில் தோய்ந்து பெட்டியில் வைக்கத் தயாராகிறனவாம்.

A WONDERFUL MAGNET.

அதிசயமான காந்தக்கல்.—எடின்பரோ பலபொருட்காட்சி சாலையில் 3-க்ரெயின் நிறையுள்ள ஒரு சிறிய காந்தக்கல் இருக்கிறது. அது தன் நிறைக்கு 445 பங்கு அதிகப்பட்ட நிறையைக் கவர்ச்சியால் தூக்குகிறதாம்.

EARTHQUAKE.

பூகம்பம்.—பிரதிவருஷமும் உலகத்தில் 30,000 பூகம்பங்கள் உண்டாகின்றனவென்று ஒரு சாஸ்திரி சொல்லுகிறார். இவைகளில் 100 அதிர்ச்சிகள்தான் கவனிக்கத்தக்கனவாம்.

STRENGTH OF MAN.

மானிட சக்தி.—பதினேழு வயது வாலிபன் 280 ராத்தல் பாரம் தூக்குவானும்; 20 வயதிலே 320 ராத்தல் தூக்கமுடியும்; 30, 31-ம் வயதிலே 356 மட்டும் தூக்குவான். இதன்பிறகு அவன் சக்தி குறையத்தொடங்கும். நாற்பது வயதிலே 8 ராத்தல் குறையும். 50 வயதிலே 330 ராத்தல்மாத்திரம் தூக்கமுடியும். இனி இப்படியே குறைந்துவரும்.

SUBSTITUTE FOR KEROSENE OIL.

கெரோஸின் எண்ணெய்க்குப் பதில்.—அமெரிக்கா தசத்தில் ஒரு பரீக்ஷகன் கெரோஸின் எண்ணெய்க் ப்பதிலாக சுளுவான ஒரு பதார்த்தத்தைக் கண்டு டித்திருக்கிறான். இதைச் செய்வதற்கு டின் 1-க்கு ரு அணா விலையாகிறது. இதைச் செய்யும்விதம் ல மூலிகைகளால் ஒருவிதமான உப்பை உற்பத்தி சய்து அந்த உப்பை ஜலத்தில் கரைத்தால் அவ்வ வு ஜலமும் எண்ணெயைப்போல எரியக்கூடிய த்துள்ளதாகிறதாம். கெரோஸின் எண்ணெயை ட மூன்று மடங்கு வெளிச்சத்தை இந்த உப்பு லம் கொடுக்கிறதாம்.

THE LIVER AND LUNGS.

ஈரல்கள்.—நமது தேகத்தின் அவயவங்களில் லிவர் என்று சொல்லப்படும் பித்தாசயம் அல்லது கல்லீரல் என்பதையும், லங்க்ஸ் என்று சொல்லப்படும் சுவாசாசயம் அல்லது நுரையீரல் என்பதையும் அதிக ஸௌக்கியமாய் வைத்திருப்பது அவசியம்.

கல்லீரல்.—இந்த அவயவத்தில் கெடுதி உண்டாகுமாயின், உணவை அளவில் வைக்கவேண்டும். காப்பி, புகையிலை, மதுபானம் இவைகளை நீக்கவேண்டும். பிரதிதினம் காலையில் உடம்பின் அந்த பாகத்தைத்தேய்த்து சூடாக்கலாம். காலை போஜனத்திற்கு முன் ஒரு கிளாஸ் தண்ணீரில் ஒரு சிட்டிக்கை ஸாதாரண உப்புக் கலந்து சாப்பிடுவது அதிக நலம்.

நுரையீரல்.—இந்த உறுப்பு ஸுகமாயிருக்கிறதா என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால் முதலில் வாயை மூடிக்கொண்டு இந்த சுவாசப் பை நன்றாய் நிறைந்து மார்பு சரியாய் விம்மும்படியாகச் சுவாசத்தை நாசியின் வழியாய் உள்ளே இழுத்துக்கொண்டு, மறுபடி சுவாசத்தை உள்ளே இழுக்காமல் உரத்த சத்தமாய் நிறுத்தி, நிறுத்தி குறைந்தது 20 முதல் 35 ஸெக்கண்ட், அதாவது, விநாடி வரையில் ஒன்று இரண்டு மூன்று என்று எண்ண வேண்டும். இவ்விதம் செய்யக்கூடுமாயின் இவ்வுறுப்பு வியாதியற்றிருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம். இந்த நுரையீரல் எவ்வளவு வலிவாய் இருக்கிறதோ அவ்வளவும் தேகத்திற்கு அளவற்ற ஸுகத்தைத் தரும். ஆதலால் இதை அதிகமாய் வலிவு செய்துகொள்ள வேண்டுமானால், நேரே நின்று, பின்புறமாய்த் தலையைச் சாய்த்து, சுவாசத்தை மெல்லென உள்ளுக்கு இழுக்கவேண்டும். முதலில் இந்த உறுப்பின் மேற்புறம் அகலும்படியாக அதாவது மார்பு புறம் எழும்பும்படியாகச்செய்து 7 அல்லது 8 விநாடி மூச்சை அடக்கி மறுபடி மெதுவாக விடவேண்டும். இரண்டாவது, மூச்சை முன்போல் மெல்லென உள்ளுக்கிழுத்து இந்த ஆசயத்தின் அடிப்புறம் அதாவது நம் வயிற்றின் மேற்புறம் விம்மும்படி செய்து முன்போல் சற்று நேரம் அடக்கி மெல்லென விடவேண்டும். இப்படி பிரதிதினம் 15 நிமிஷம் செய்யவும். இந்த அவயவம் வலிவற்று இருக்கிறதென்று அறிந்தால் மேற்சொல்லியவாறு முதலில் ஒரு நிமிஷம் அதாவது 15 அல்லது 16 தடவை செய்து நிறுத்திவிடலாம். அதன்மேல் சிறுகச்சிறுக அதிகப்படுத்திக்கொள்ளலாம். ஒவ்வொருவரும் தமது தேக ஸௌக்கியத்திற்குத் தகுந்தபடி அதிகநேரம் அல்லது குறைந்தநேரம் அப்பியாஸஞ் செய்யவேண்டும். சிலநாள் செய்துவிட்டு விடுவதால் பிரயோஜனமில்லை,

MEDICAL NOTES.

வைத்தியக் குறிப்புகள்

Onion.

ஈருள்ளி.—செய்கூன் ரா. சாமிராஜா எழுதுகிறார்:—தற்சமயம் இவ்விடத்தில் பிளேக் கண்ட ஒருவருக்கு ஈருள்ளியாகிய ஈர வெங்காயத்தை துவைத்து, தனிச்சாறெடுத்துச் சுமார் ஒருமணிக்கு ஒருதரம் அரைக்கால் படி வீதம் உள்ளே கொடுத்தும், அதன் சக்கையை பிளேக் கண்ட கட்டியின்மேல் கட்டியும் வந்ததில், இரண்டே நாளில் ஸௌக்கியமாகிவிட்டதால் இந்த வெங்காயத்தின் குணத்தை வைத்தியர்களும் இன்னும் பொது ஜனங்களும் கவனிக்கத்தக்கது.

Chewing Betel Leaves.

வெற்றிலை போட்டுக்கொள்ளும் விதம்.—இதைப் பற்றிச் சிறுவர்கள் கூட அறிவார்கள். ஆயினும் ஒவ்வொன்றிலும் சில முக்கியமான விஷயங்கள் உண்டு. வெற்றிலையை ஜலம்போகத் துடைத்துப் போட்டுக்கொள்ளவேண்டும். வெற்றிலையுடன் சேரும் பாக்கைத் தட்டிப் போட்டுக் கொள்ளவேண்டும். ஏனென்றால் இதில் சில புழுக்கள் இருந்தாலும் இருக்கலாம். இந்தப் புழுக்கள் தேகத்திற்குள் சேர்ந்தால் நம் உயிருக்கே உலைவைத்துவிடும். ஆதலால் கொஞ்சம் ஞாபகமிருக்க வேண்டும். மேலும் பாக்கானது நாட்டுப் பாக்கா யிருக்கவேண்டும். இது உருண்டையாயும் நீளமாயும் உள் குழைந்ததாயும் வாயில்போட்டால் அதிக துவர்ப்பாயும் இருக்கும். மற்றப்பாக்குகளை உபயோகிப்பதில் பிரயோஜனமில்லை. சுண்ணம்பு மிகவும் சுத்தமாயும் வெண்மையாயும் தொட்டால் மிருதுவாயும் இருக்கவேண்டும். கல்லுகள் சேர்ந்திருக்கக் கூடாது. சிறு கல்லுகள் தேகத்தில் சேர்ந்தால் உள்ளே புண்கள் உண்டானாலும் உண்டாகும். பாக்கு வெற்றிலை போட்டுக் கொள்ளுவதில் இவைகள்தான் முக்கியமான விஷயங்கள்.

Air for Breathing.

சுவாசத்துக்கு காற்று.—ஒருவன் ஒருமூச்சு வாங்கிவிட 20 கன அங்குலப் புதுக்காற்று வேண்டியது. கன அங்குலமென்பது நீளத்திலும் அகலத்திலும் கனத்திலும் ஒரு அங்குலங்கொண்டது. ஒரு நிமிஷத்துக்கு 400 கன அங்குலக்காற்று அவசியம். பத்துமணி நேரத்து நித்திரையிலே அவன் நூற்றுமுப்பது கன அடிக்காற்றை சுவாசிக்கிறான். இந்தக் கணக்குப் பிரகாரம் பத்துச் சதுர அடி கொண்ட ஒரு அறையிலே ஒருவன் 4 மணிநேரம் மாத்திரம் கதவையும் ஜன்னல்களையும் அடைத்து நித்திரைசெய்ய முடியும். அப்புறம் அதன் காற்று அசுத்தமாய் விடுகிறது.

Chronic Stomach Ache.

நீடித்த வயிற்றுவலி.—உலையில் அரிசி களைந்து போட்டதின்மேல் ஆரம்பக்கொதியில் மூன்று ரூபா எடை கஞ்சி எடுத்துக்கொண்டு அதில் நல்ல தேன் 1½ ரூபா எடை சேர்த்து அந்தச்சூட்டோடே வெங்கலம், வெள்ளி, ஈயம் இவைகளில் எதிலாவது செய்த ஒருபாத்திரத்தில் விட்டு மூடிவைக்கவும். சுகோஷ்ணமாய் ஆறினதின்மேல் பகல் ஜாமத்துக்குள்ளாக சாப்பிட்டுவிடவும். இச்சா பத்தியம். மேற்படி முறைப்படி ஒருமண்டலம் செய்தால் வயிற்றிலிருக்கிற பூச்சிபோய்க் குணமாகும்.

Electric Energy in the Ruby.

கெம்பில் மின்சாரசக்தி.—கெம்பு, வைரம் முதலிய ரத்தினக்கற்களில் மின்சாரசக்தி இருக்கிறதென்றும் அதனால் அநேக வியாதிகள் வாராமல் தடுக்கப்படுவதோடு வந்த வியாதிகள் குணமடைகின்றனவென்றும் இப்போது சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ரத்தினங்களிடத்தும் இவ்வித சுகிர்த குணங்கள் இருக்கின்ற காரணத்தினாலேயா நமது முன்னோர்கள் அவைகளைத் தங்கம் முதலியவற்றில் பதித்துச் சிரசிலும், நெற்றியிலும், மூக்கிலும், காதிலும், கழுத்திலும், கைகளிலும் ஆபரணமாகப்பூண்டுகொண்டார்கள்.

Excessive Biliousness.

தலை யெடுக்கவொட்டாத பித்தம்.—சீரகம், கொத்தமல்லி, சதகுப்பை, இவற்றைச் சமநிறையாய் எடுத்துக்கொண்டு வெயிலில் உலர்த்திச் சூர்ணித்து அத்துடனே சீனிசர்க்கரை சமனாகக்கூட்டி காலை மாலை சாப்பிட்டு கால்சேர் குளிர்ந்த ஜலத்தையும் சாப்பிடவும்.

PERSONAL NOTES.

பெரியமனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

The Maharaja of Kashmir.

காஷ்மீர் மகாராஜா.—காஷ்மீர் மகாராஜா அவர்கள் காலஞ்சென்ற எட்வர்ட் மகாராஜாவின் ஞாபகார்த்தமாக ஜாம்மு என்னுமிடத்தில் இரண்டுலக்ஷ ரூபாய் செலவழித்து கோஷா ஸ்திரீகளுக்கு ஒரு ஆஸ்பத்திரி கட்டுவிக்கச் சம்மதித்திருக்கிறார்.

Hon'ble Mr. S. P. Sinha.

ஆனரபில் மிஸ்டர் எஸ். பி. ஸின்ஹா.—இந்தியா கவர்ன்மெண்ட் சட்டசபை மெம்பரான ஆனரபில் மிஸ்டர் எஸ். பி. ஸின்ஹா தம்முடைய வேலையை ராஜிநாமாக் கொடுத்துவிட்டு, கல்கத்தா ஹைகோர்ட்டில் அட்வொகேட்டாய் ப்ராக்டிஸ் செய்யப்போகிறார். இதற்குக் காரணம் சரியாய்த் தெரியவில்லை. இவர்தான் ராஜப்ரதிநிதியின் நிர்வாக ஸபையில் முதல் முதல் நியமிக்கப்பட்ட இந்தியர். இவருக்குப்பின்னால் யாருக்கு இந்த உத்தியோகமாகுமோ தெரியவில்லை.

The Maharaja of Bobbili.

பொப்பிலி மகாராஜா.—பொப்பிலி மகாராஜா சென்னை கவர்னரின் நிருவாக ஸபையில் மெம்பரானபிறகு சென்ற சில மாஸங்களாய் உதகமண்டலத்திலேயே வஸித்து வந்தார். அப்படி அவர் உதகமண்டலத்திலேயே சேர்ந்தாற்போல் சில மாதங்கள் வஸித்து வந்தது அவருடைய தேகத்துக்கு ஒத்துவரவில்லையாம். ஸமீபத்தில் அவர் சென்னப்பட்டணத்துக்கு வந்து சேர்ந்தார். டாக்டர்கள் இன்னும் ஒரு மாஸகாலத்துக்கு அவர் சென்னப்பட்டணத்திலேயே வஸிக்கவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அவரும் டாக்டர்கள் சொல்லியிருப்பதுபோலவே செய்துவருகிறார்.

Three Great Donors.

மூன்று தர்மிஷ்டர்கள்.—உலகத்திலே பெருந் தருமச் செயல்களைச் செய்தவர்கள் மூன்றுபேர்கள். இவர்களில் ஆண்ட்ரூ கார்னீகி முதல்வர். இவர் இதுவரையில் 4,86,00,00,000 ரூபாய் பரோபகாரச் செயல்களுக்கு தானஞ்செய்திருக்கிறார்.

ஜான் ஆர். ராக்பெல்லர் அடுத்தவர். இவர் 35,79,12,000 ரூபாய் தானஞ்செய்திருக்கிறார்.

மிஸ்ஸஸ் ரஸ்ஸல்ஸேஜ் என்னும் துரைசானியே அடுத்தவர். இவர் கொடுத்த தருமக்கொடை 5,43,85,845 ரூபாய்.

The Crown Prince of Germany.

ஜெர்மனி இளவரசர்.—ஜெர்மனி இளவரசர் இந்தியாவுக்கு வரப்போகிறார். அதைப்பற்றி ஜெர்மனி சக்ரவர்த்தியாகிய வில்லியம் என்பவருக்கும், ஜார்ஜ் சக்ரவர்த்திக்கும் கடிதப் போக்குவரவு நடந்தது. ஜெர்மனி இளவரசரை இந்தியாவில் ஒரு பட்டத்துக் குமாரனை வரவேற்பதுபோல வரவேற்கக் கூடாதென்றும், ஆனால் விஷயங்களை நேரில் கண்டு அறிந்துகொள்ளப் போகும் ஸாதாரணமான ஒருவரை வரவேற்பதுபோல வரவேற்கவேண்டுமென்றும், ஜெர்மனி சக்ரவர்த்தி விரும்பினார். ஜெர்மனி சக்ரவர்த்தி விரும்புவது போலவே இளவரசர் விஷயத்தில் நடந்துகொள்வது முற்றும் ஸாத்தியமல்லவென்றும் இருந்தபோதிலும் கெய்ஸரின் விருப்பம் கூடுமானவரையில் நிறைவேறும்படித் தாம் முயற்சி செய்வதாயும் ஜார்ஜ் சக்ரவர்த்தி பதில் அனுப்பியிருக்கிறார்.

A 125 Years Old Gentleman.

125 வயதுக் கிழவர்.—இந்தக் கலியுகத்தில் ஸாதாரணமாக ஒருவன் நூறுவருஷம் பிழைத்திருப்பது அபூர்வம். ஆனால் ஒருவித எல்லையை அனுஸரித்து 'சதமானம் பவதி' என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அதாவது ஒருவனை வாழ்த்த வேண்டுமானால் நூறு வருஷம் நீ தீர்க்காயுஸாய் இருக்கக் கடவாய் என்று சொல்வது ஸகஜம். இப்படியிருந்தும் ஹஜாரா ஜில்லாவில் பைராம்கான் என்னும் பெயர் கொண்ட மகமதிய ஜாகீர்தார் ஒருவர் ஸமீபத்தில் இறந்து போனதாகவும், அப்போது அவருக்கு 125 வயதென்றும் தெரியவருகிறது. 1831-ம் வருஷத்தில் மகாராஜா ரஞ்சித் சிங் ஆப்கானியரோடு சண்டை போட்டபோது ஆப்கானியர் பக்கத்தில் இந்த பைராம்கான் சண்டைபோட்டு குண்டுக்காயம் பெற்றவர்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்.

A NEW VEHICLE.

ஒரு புதிய ரதம்.—ப்ரான்ஸ்தேசத்து யுத்த அதிகாரிகள் நிலத்திலும் நீரிலுஞ் ஸ்வயமாகவே செல்லக்கூடிய ரதமொன்று சம்பாதித்திருக்கிறார்கள். இது நாலுபேர்களை ஏற்றிக்கொண்டு ஒரு மணிக்கு நிலத்தில் 40 மைல் வீதமும் நீரில் 12 மைல் வீதமும் செல்லுமாம்.

ALWAYS SPEAKING TRUTH.

எப்பொழுதும் நிஜம் பேசுதல்.—நியாயாதிபதி—"உனக்கு எவ்வளவு வயதாயிற்று"?

குற்றவாளி—(ஒரு ஸ்திரீ) "முப்பது".

நியாயாதிபதி—"உன்னை நான் மூன்று வருஷத்திற்குமுன் தண்டித்தபோது நீ எனக்கு வயது முப்பதென்று சொன்னாயே"?

குற்றவாளி—ஆமாம்; நான் இன்றைக்கொன்று நாளைக்கொன்று சொல்லுகிற வழக்கமில்லை.

A WEIGHTY FELLOW.

ஒரு தடியன்.—உலகத்திலுள்ள மிகவும் பாரமான மனிதர்களில் ஒருவனாகிய ஜான் ரிச்சர்ட்ஸ் என்பவன் ஸமீபத்தில் இறந்துபோனான். ஸாதாரண ஒரு மனிதன் 150 பவுண்டு பாரமுடையவனாயிருக்க வேணும். இவன் 336 பவுண்டு பாரமுடையவனாம். இவனுடைய சவப்பெட்டி 16 பேரால் சமந்து போகப்பட்டது.

A DOUBLE-HEADED SNAKE.

இரட்டைத்தலையுள்ள பாம்பு.—ஒரிஸா மாகாணத்தைச் சேர்ந்த டால்கர் ராஜ்யத்தில் ஒரு தோட்டத்தில் இரண்டு தலையுள்ள ஒரு பாம்பு பிடிக்கப்பட்டது. அதற்கு நாலு கண்களும், 2 வாய்களும், 2 நாக்குகளுமிருக்கின்றனவாம். நீளம் ஒரு அடியிருக்கிறதாம். அது பிடிக்கப்பட்டு 20 நாட்களாகியும் ஆகாரம் கிடையாதாம். என்றாலும் உயிருடன், ஸௌக்கியமாய்த்தானிருக்கிறதாம். இப்பொழுது டெல்கொ டிஸ்பென்ஸரியில் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

GAVE IT TO HIS WIFE.

பெண்ஜாதிக்குக் கொடுத்தான்.—

புருஷன்:—பிரியே! நேற்றுசெய்த வடையில் மீதியுள்ளதை எடுத்துக் கொண்டுவா?

பெண்ஜாதி:—இதோ இருக்கிறது. கணக்குப்பார்த்துக்கொள்ளுங்கள்.

புருஷன்:—(அந்தவடையில் ஒன்றை விண்டு பார்த்தான்).

பெண்ஜாதி:—ஊசியிருக்கிறதா என்ன?

புருஷன்:—இல்லை. நாலுமிருக்கிறது. ஆதலால்தான் தையலுக்குத் தக்க தன்று கொடுத்தேன். (தையல் என்பதற்குப் பெண் என்று ஒரு அர்த்தம் உண்டு.)

NICK NAMES.

பரிகாஸப் பட்டப்பேர்.—உலைவாயை மூடலாம், ஊர்வாயை ஒருபோதும் மூடமுடியாது. நம்மிடம் ஏதாவது துற்குணமிருந்தால் அந்தத் துற்குணத்தைக்கொண்டு ஜனங்கள் நமக்குப் பெயரிட்டுவிடுவார்கள். "சுடுகாட்டுச் சொக்கன்," "பழையத்துப் பஞ்சை," என்ற பெயர்கள்போன்ற பரிகாஸமான பட்டப்பெயருள்ள ஜனங்களை நாம் எத்தனையோ இடங்களில் கண்டும் கேட்டும் இருக்கிறோம். நமது பெயருக்கு இவைகள் மிகவும் இழிவானவைகள்; ஆகையால் நாம் நடப்பதில் அப்படிப்பட்ட சுட்டுப்பெயர்கள் வராதபடி நடந்துக் கொள்ள வேண்டும்.

A CROW WITH SPECTACLES ON.

கண்ணாடி தரித்த காகம்.—லண்டன் மிருகக்காட்சித் தோட்டத்தில் நன்றாய்க் கண்தெரியாமல் கஷ்டப்பட்ட ஒரு காக்கைக்கு வைத்திய முறையாய்க் கண்தோல் கீறி எடுக்கப்பட்டதுடன் ஒரு மூக்குக் கண்ணாடியும் போடப்பட்டது. இப்போது காகம் கண்ணாடி தரித்தவண்ணமிருக்கிறது.

A 50 YEARS OLDMAN.

ஐம்பது வயது புருஷன்.—50 பிராயமுள்ள ஒருவன் 6,000 தினம் தூங்கி 6,500 தினம் வேலை செய்து, 800 தினம் நடந்து, 4,000 தினம் காலக்ஷேபம் செய்து, 1,500 தினம் சாப்பிட்டு, 50 தினம் நோய்ப் பட்டிருக்கிறானாம். அவன் சாப்பிட்டது 37,000 பவுண்டு கொண்ட ஆகாரம், பானம் பண்ணினது 7,000 காலன் ஜலம் முதலியவை.

NEWS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

◆

INDIAN NEWS.

இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

◆

THE MADURANTAKAM MISSION SCHOOL.

மதுராந்தகம் பாதிரிப் பள்ளிக்கூடம்.—மதுராந்தகம் வெஸ்லியன் மிஷன் ஸெக்கெண்டரி பாடசாலை கட்டுவதற்காக கவர்ன்மெண்டார் ரூ 2000-க்ராண்டு கொடுத்திருக்கிறார்கள்.

THE MAHABARATA FUND.

மகாபாரதபண்டு.—ஆனரபில் பொப்பிலி மகாராஜா அவர்கள் ஆக்ஸ்போர்டு ப்ரொபெஸர் மேக்டானல்டு ஏற்படுத்திய மகாபாரத பண்டுக்கு ரூ. 1000 நன்கொடை செய்திருக்கிறார்.

MESSRS STANES & CO.

ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி.—கோயமுத்தூர், கள்ளிக்கோட்டை, குன்னூர் முதலான இடங்களிலிருக்கும் ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி ஜூலை ௴ 1-வ முதல் "லிமிடெட்" கம்பெனியாக்கப்பட்டிருக்கிறது.

THE MADRAS BANK AND THE INDIAN BANK.

மதராஸ் பாங்கியும் இந்தியன் பாங்கியும்.—சென்ற ஜூன் மாஸத்தோடு முடிவான அரை வருஷத்திற்கு, இந்தியன் பாங்கியில் 100க்கு ரூ. 5½ வீதமும் மதராஸ் பாங்கியில் ரூ. 10 வீதமும் டிவிடெண்ட் அதாவது பங்குக்கு வட்டி கிடைத்திருக்கிறது.

A GIRLS' SCHOOL.

ஒரு பெண் பள்ளிக்கூடம்—பாட்டியாலா மகாராஜா, பிரோஸ்பூரில், சீக்கியப் பெண்களுக்காக ஒரு பாடசாலை கட்டுவதற்கு 10-ஆயிர ரூபாய் கொடுத்திருக்கிறார். பிரதி வருஷமும் ரூ. 600-க்ராண்டு இனிக் கொடுத்தும் வருவார்.

HEAVY RAIN.

அதிக மழை.—ஹிமயமலைச்சாரலிலுள்ள சிரப்பூஞ்சியில் எப்போதுமே அதிக மழை பெய்வதுண்டு. அந்த ஊரில் மூன்று நாளில் 5 அடி மழை பெய்திருக்கிறதாய்த் தெரிகிறது. அவ்வளவு மழை ஒரு பொழுதும் பெய்ததில்லையாம்.

THE FISHERY INDUSTRY IN THE PUNJAB.

பஞ்சாபில் மீன் பிடிக்கும் தொழில்.—பஞ்சாப் கவர்ன்மெண்டார் மீன் பிடிக்கும் தொழிலை எப்படி விருத்தி செய்யலாமென்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலை அமெரிக்காவுக்குப்போய் கற்றுவரும்படி அந்த கவர்ன்மெண்டார் ஒரு அஸிஸ்டண்ட் கமிஷனரை அனுப்பப் போகிறார்கள்.

A SCHOLARSHIP.

ஒரு ஸ்காலர்ஷிப்பு.—கீழ் வங்காளம் அஸ்ஸாம் கவர்ன்மெண்டார் இங்கிலாந்துக்குப்போய் பட்டு நெய்யவும், சாயம்போடவும் கற்க விரும்பும் ஸிராம்பூர் மாணாக்க னொருவனுக்கு வருஷத்துக்கு 150 பவுனாக இரண்டு வருஷம் கொடுக்க வாக்களித்திருக்கிறார்கள்.

THE SINGAMPATTI ZAMINDAR.

சிங்கம்பட்டி ஜமீந்தார்.—சிங்கம்பட்டி ஜமீந்தார், எட்வர்டு அரசரின் ஞாபகச்சின்னத்திற்காக ௹ 500 அளித்திருக்கிறார். தவிர, தனது ஜமீனில் ஒரு ப்ரைமெரி பாடசாலையும் ஒரு சிறிய வைத்திய சாலையும் ஏற்படுத்தப்போகிறார் என்றும் அறிகிறோம்.

DATE OF SANKARA'S BIRTH.

ஸ்ரீ சங்கராசாரியார் பிறந்த நாள்.—கொச்சி ராஜ்யத்தில் ஜோஸ்யரான வித்வான் சி. வி. பிச்சுவையர் ஸ்ரீ சங்கராசாரியார் பிறந்த காலத்தைத் திட்டமாய்க் குறித்திருக்கிறார். கலியில் செல்லாநின்ற 3007 அல்லது கி. பி. 805-ல் மேஷ மாதம் 18-ந் தேதி திங்கட்கிழமை நாழிகை 17-25 அல்லது மணி 12-58-ல், காலடி என்னுமிடத்தில் ஜனனமானாரென்று நிச்சயித்திருக்கிறார்.

WHEAT IN THE PUNJAB.

பஞ்சாப்பில் கோதுமை.—அமெரிக்காவில் கோதுமை மாசூல் திருப்திகரமாயில்லையென்று தெரிந்து போய் விட்டபடியால் பஞ்சாப் மாகாணத்துக் கோதுமையின் விலை ஏறத்தலைப்பட்டு விட்டது. கோதுமை வியாபாரிகள் பின்னாலே அதற்கு நல்ல கிராக்கி ஏற்படக்கூடுமென்று அதை ஏராளமாய் வாங்கிக் கட்டிவைக்கிறார்களாம்.

MUNICIPAL ELECTIONS.

முனிஸிபாலிடி எலெக்ஷன்கள்.—அதிகாரப் பிரிவினை கமிட்டியாரின் சிபார்சை அனுஸரித்து, ஸர்க்காரத்தில், 17 முனிஸிபாலிடிகளில் ஜனங்களே முனிஸிபல் கமிஷனர்களை நியமிக்கும்படி ஏற்பாடாகியிருக்கிறது.

THE SALEM URBAN BANK.

சேலம் ஜில்லா அர்ப்பன் பாங்கி.—இந்த ராஜதானியில் இவ்வகைப் பாங்கிகளுக்கெல்லாம் ஆதியாகிய இந்தப்பாங்கிக்கு சென்ற ஜூன் 30ம் தேதியோடு முடிவாகிற அரைவருஷத்திற்கு ஸகலசெலவும் போக ரூபா. 2,882-1-0 லாபம் கிடைத்திருக்கிறது. உருப்படியான தொகையைக் கையிருப்பு பண்டில் சேர்த்த பிறகு டைரக்டேர்கள், பங்கொன்றுக்கு வருஷத்திற்கு 100-க்கு 9 வீதம் டிவிடெண்டு கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள்.

DATE CULTIVATION IN THE PUNJAB.

பஞ்சாபில் பேரீச்சை பயிரிடுதல்.—பெர்ஷியன் வளைகுடாவிலிருக்கும் பஸ்ஸோரா என்னுமிடத்தில் பேரீச்சைப் பயிரை அபிவிருத்திசெய்யப் பஞ்சாப் கவர்ன்மெண்டார் முயன்று வருகிறார்கள். பேரீச்சை பயிரிடுவதில் தகுந்த திறமையுள்ள ஒருவர் இந்தக் கவர்ன்மெண்டாருக்கு வேண்டியிருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட ஒருவரைப்பார்த்து வேலையில் அமர்த்திக்கொள்ளக் கவர்ன்மெண்டார் முயன்றுவருகிறார்கள்.

A SUIT FOR DAMAGES.

நஷ்டத்துக்கு வியாஜ்யம்.—என்னூரில் 1909—௵ ஜூன் ௴ 19-௳ யன்று நடந்த ரெயில்வே அபாயத்தில் இறந்துபோன கே. ஆர். சுப்பராய அய்யரின் மரண நஷ்டத்துக்காக, அவருடைய தகப்பனார் கடத்தூர் மிஸ்டர் வெங்கட்டரமண அய்யரும், மனைவி சுப்புலக்ஷ்மி அம்மாளும் மதராஸ் அண்டு தென்மராட்டா ரெயில்வே கம்பெனியார் பேரில் 10 ஆயிரம் ரூபாய்க்கு ஹைகோர்ட்டில் தாவா செய்திருக்கிறார்கள்.

BARBERS.

நாவிதர்கள்.—திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ள சில அம்பட்டர்கள் ஒன்றுசேர்ந்து தாங்களிருக்கும், தாழ்ந்த நிலைமையிலிருந்து, உயர்வடைய எண்ணி முயற்சிசெய்து வருவதாய்த் தெரிகிறது. க்ஷவரம் செய்கிற தொழில்தவிர வேறு ஒன்றுமில்லையென்று, எப்பொழுதும் அந்தத்தொழிலையே நம்பியிருப்பது சரியல்லவென்று, அத்துடன், கல்வி கேள்வி, முதலியவைகளையும் கவனித்துச் சீர்திருத்திக்கொள்ளக் கருதி ஒரு கூட்டங் கூடியிருக்கிறார்களாம். இதற்குச் சில ஆசாரச்சீர்திருத்த மெம்பர்கள் ஒத்தாசை செய்வதாயும் கேள்வி.

SILK WORM REARING.

பட்டுப்பூச்சி வளர்த்தல்.—லங்கையில் பேராதனையிலே அரசாட்சியாரின் பரீட்சைத்தோட்டத்தை அடுத்துப் பட்டுப்பூச்சி வளர்க்குந் தோட்டம் ஒன்று அமைக்கப் பட்டிருக்கின்றது. இந்தத் தோட்டத்திலே பட்டுப்பூச்சிகளுக்குப் பிரியமான உணவாகிய முசுக்கட்டைச்செடி வளர்க்கப்படுகிறது. இந்தச் செடி, அங்கே அதிகம் செழித்தோங்குவதால் நிச்சயமாகவே பட்டுப்பூச்சிகள் அங்கே விருத்தியாகுமென்று கிருஷிச்சங்கத்தார் நம்பியிருக்கிறார்கள்.

OLD COINS.

பழைய நாணயங்கள்.—பாகல்பூர் சமஸ்தானத்துக் கஜானாவில் பழையகாலத்துப் பொன் வெள்ளி நாணயங்கள் ஏராளமாய்க் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சோதித்தபோது ஷாஜா முதலிய துரானிய அரசர்களால் அடிக்கப்பட்டவைகளென்றுக் காணப்பட்டன. 6000 மொகலாய மோகராக்களும், ரூபாய்களும் இருக்கின்றன. ஷெர்ஷா சூரிகாலத்தில் அடிக்கப்பட்ட மோகரா ஒன்றிருக்கிறது. அக்பர், ஷாஜிஹான், ஷா ஆலம் இவர்கள் காலத்து நாணயங்களும் இருக்கின்றன. 34 வெவ்வேறு தங்கசாலைகளில் அடிக்கப்பட்ட பணங்களிருக்கின்றன.

THE PUNJAB INDIAN CHAMBER OF COMMERCE.

பஞ்சாப் மாகாணத்தில் இந்தியர்களது வியாபார ஸபை.—இந்த நாட்டில் வந்து வியாபாரம் செய்யும் ஐரோப்பியர்கள் சென்னை, பம்பாய், கல்கத்தா, காராச்சி போன்ற இடங்களில் வியாபார ஸபைகள் ஸ்தாபித்துக்கொண்டு தங்கள் வியாபார நோக்கங்கள் நிறைவேறுவதற்குள்ள வழிகளையும், மேல்நாட்டு வியாபாரம் பரவிப் பலப்படுவதற்குள்ள வழிகளையும் தேடுவதில் கண்ணும் கருத்துமாயிருந்து வருகிறார்கள். அவர்கள் நடத்திவரும் நடவடிக்கைகளைப்பார்த்தாவது நம்மவர்களுக்கு வியாபார ஊக்கம் பிறக்கவேண்டுமல்லவா? சிலவருஷங்கள் வரைக்கும் அந்தமாதிரி ஊக்கம் பிறவாமலிருந்ததென்றே சொல்லவேண்டும். ஆங்கிலேயர்களுடைய வியாபார கம்பெனிகளில் துபாஷ்களாகவும் தரகரிகளாகவும் குமாஸ்தாக்களாகவும் இருந்து நம்மவர்கள் காலங்கழித்துவந்தார்களே யொழிய வேறில்லை. சென்ற சில வருஷங்களாகத்தான் நம்மவர்களுக்கு வியாபார ஊக்கம் பிறந்திருக்கிறது. நாட்டுத் தொழில்களை விருத்தி செய்யவேண்டுமென்ற யோசனையும் உண்டாயிருக்கிறது. அதன் பலனாக நம்மவர்கள் நாட்டுத் தொழில்களை விருத்தி செய்ய முயன்று வருவதோடுகூட நாட்டு வியாபாரத்தை விருத்தி செய்யும் நோக்கத்தோடு இந்திய வியாபார ஸபைகளையும் ஸ்தாபித்து வருகிறார்கள். பம்பாய், வியாபாரம் பெருத்த நாடாகையால் அங்கே பம்பாய்த் தேச வியாபாரிகளின் சங்கம் ஒன்று ஏற்கெனவே இருந்து வருகிறது. சென்னையிலும் தென்னிந்தியா வியாபார சங்கம் என்று ஒரு சங்கம் சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது. இப்போது பஞ்சாப் மாகாணத்தின் தலை நகராகிய லாகூரில் இந்திய வியாபார சபையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மிஸ்டர் லாலா ஹரிகிஷன் லால் அக்ராஸனாதிபதி.

A SIKH CONFERENCE.

சீக்கிய ஜாதியாரின் கான்பரென்ஸ்.—பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த, ஜலாண்டர் ஜில்லா, புடி என்ற கிராமத்தில், சீக்கிய ஜாட் என்னும் ஜாதியார் தங்களிலுள்ள கெட்டவழக்கங்களை நிறுத்திச் சீர்திருத்திக்கொள்ளும் பொருட்டு, சுமார் 8000 பேர் சேர்ந்த ஒரு கூட்டம் கூடினார்கள். அப்பொழுது அடியிற்கண்ட தீர்மானங்களைச் செய்துகொண்டார்கள். அவையாவன :—

(1) தங்கள் ஜாதியாரின் அபிவிருத்திக்காக முயற்சிக்கும்படி ஒரு பஞ்சாயத்தார் நியமிக்கவேண்டியது.

(2) பியாஸ்நதிக் கரையிலுள்ள ஜாட் ஜாதியார் அவர்களின் பெண்களை, நமக்கு விவாகஞ்செய்து கொடுக்கும்வரையில், அவர்களோடு எவ்விதமான சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது. இந்த நிபந்தனையை மீறியவர்கள் 1000 ரூபாய் அபராதம் கொடுக்கவேண்டும். இல்லாதவரையில் அவர்களை ஜாதியிலிருந்து விலக்கப்படும்.

(3) விவாக காலங்களில், மதுபானம் செய்யக் கூடாது. செய்ததாகக் கண்டால், 25 ரூபாய் அபராதம் கொடுக்கவேண்டும்.

(4) பெண்ணுக்காக, பரிசமாவது, நிச்சயதாம்பூல காலத்தில் நகை நாணயமாவது, ஆபரணமாவது, கொடுக்கக்கூடாது.

(5) ஒரு கல்யாண வீட்டில், 70 பேருக்கு மேற்பட்ட கூட்டமிருக்கக்கூடாது. ஸ்ரீதனம் 101 ரூபாய்க்கு மேற்போகக்கூடாது. தவறினால் 25 ரூபாய் அபராதம்.

(6) விவாக காலங்களில், தாசிகளென்றும், சதுரென்றும் கூடாது. வாணவேடிக்கைக்காக 10 ரூயாய்க்குமேல் செலவு செய்யக்கூடாது. இதைத் தவறினால் 125 ரூபாய் அபராதம்.

(7) விவாக காலங்களில், அநாகரீகமான பாடல்கள் கூடாது.

(8) விவாகஞ்செய்யுங் காலங்களைச் சற்று நீடித்துக் குறிக்கவேண்டும்.

(9) ஒரு சப்கமிட்டியார் நியமித்து, பிறப்பு, சாவு முதலிய காலங்களில் செலவழிக்கவேண்டிய தொகையைக் குறிப்பிட்டுக் கொள்ளவேண்டும்.

ROAD SIDE TREES.

ரோட்டுகளில் வைக்கப்படும் மரங்கள்.—மலையாளம் ஜில்லா போர்டுக்கு சாலைகளில் வைக்கப்பட்டிருக்கும் மரங்களால் கிடைத்த வரும்படி போன வருஷத்தில் 7000 ரூபாய் என்று கவர்ன்மெண்டு ரிப்போர்ட்டால் தெரிகிறது. மலையாளம் ஜில்லா பெரிய ஜில்லா வாகையால் இன்னும் அதிகமாகவே வரும்படி கிடைத்திருக்கக்கூடும். ஆனால் டிஸ்டிரிக்ட் போர்டுகள் இந்த விஷயத்தைக் கவனிப்பதில்லை. அநேக ஜில்லாக்களில் சாலைகள் இருபக்கங்களிலும் மரங்களேயிராமல் ஆடுமாடுகள் தங்கக்கூட நிழலில்லாமலிருக்றது. சில இடங்களில் வைக்கப்படும் மரங்கள் நிழலைமட்டும் தருவனவாயும் பலன் கொடுக்கக்கூடாதனவாயும் இருக்கின்றன. ரெயில்பாதைகள் அதிகப்பட்ட பிறகு பழைய ரஸ்தாக்கள் அசட்டை செய்யப்பட்டிருக்கின்றன. மரங்கள் அடர்ந்து வளர்வதால் மனிதருக்கும், மிருகங்களுக்கும் அநேக வழிகளில் நன்மையுண்டாகக் கூடியாதாயிருப்பதால் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

FOREIGN NEWS.

அந்நிய நாட்டு ஸமாசாரங்கள்.

Beet Sugar Factory.

பீட் சர்க்கரை பாக்டரி.—பீட்ரூட் என்னும் ஒரு கைக் கிழங்கிலிருந்து சர்க்கரை செய்வதற்காக ங்கிலாந்திலுள்ள கிட்டர் மின்ஸ்டர் என்னுமிடத் ல் 80,000 பவுன் முதல் வைத்து ஒரு பாக்டரி தாபித்துவருகிறார்கள். இதற்காக பதினைன்கு ஏக் ர் விஸ்தீரணமுள்ள நிலம் வாங்கப்பட்டிருக்கிறது.

ale of Human Hair.

தலை மயிர் விற்பனை.—விமோஜன் என்னும் பட் ணத்தில் மனிதர்களின் தலைமயிர் விற்கப்படுகிறது. திரீகள் மார்க்கெட்டுக்குப்போய், தங்கள் தலைமயிர் ளை விற்றுவிடுவதாய்ச் சொல்லுகிறார்கள். உடனே லர் ஓடிவந்து அவைகளுக்கு விலைபேசி கிரயம் காடுத்து கத்தரித்துக் கொண்டுபோகிறார்கள். ரைமயிருக்கு விலையதிகமாம்.

Large Cotton Store.

ஒரு பெரிய பஞ்சு ஸ்டோர்.—பூலோகத்திலுள்ள ல்லா தேசங்களிலும் ஒரு வருஷத்தில் செலவாகக் கூடிய பஞ்சைக்கட்டி வைக்கக்கூடிய பெரிய கட்டி ங்கள் கட்டி ஒரு வருஷத்திற்கு வேண்டிய பஞ்சை கட்டி வைப்பதாக அமெரிக்கா தேசத்தில் உத்தே சித்திருக்கிறார்கள். இப்படிச் செய்வதால் திடீ ரென்று பஞ்சின் விலையேற்றமும் இறக்கமும் ஆகா தென்பதுகருத்து.

Drink Licences in England.

இங்கிலாந்தில் சாராய லைசென்ஸ்.—1909-ம் வருஷத்து லைசென்ஸ் கணக்கைப் பார்த்ததில் லைசென்ஸ் பெற்ற சாராயக்கடைகளின் தொகை ரவாக்குறைந்து வருவதாகத் தெரிகிறது. ஆனால் ள்ளப்புகளின் தொகை அதிகரித்துக்கொண்டே வரு கிறது. இங்கிலாந்தில் 100-க்கு 10-ம், ஸ்காட்லந் தில் 100-க்கு 19-ம், அயர்லாந்தில் 100-க்கு 8-ம் டி குறைந்திருக்கிறதாகத் தெரிகிறது.

Expenditure on Education and the Army.

படிப்பிலும் சேனையிலும் ஆகும் செலவு.—ஐரோப்பிய தேசங்களில் படிப்பிலும் ராணுவசேனை யிலும் செலவாகும் தொகையின் அளவு பின் வருமாறு.

ப்ரான்ஸ் தேசத்தில் படிப்பில் ஒரு பங்கு, ராணுவத்தில் ஐந்து பங்கு. ஜெர்மனியில் படிப்பில் ஒரு பங்கு, ராணுவத்தில் மூன்று பங்கு. ஆஸ்டிரியாவிலும் ருஷ்யாவிலும் படிப்பில் இரண்டு பங்கு, ராணுவத்தில் ஒன்பதுபங்கு. இட்டலியில் படிப்பில் ஒரு பங்கு, ராணுவத்தில் ஒன்பது பங்கு. பெல்ஜியத்தில் படிப்பில் நாலு பங்கு, ராணுவத்தில் எட்டுப்பங்கு. ஸ்விட்ஜர்லாந்தில் மட்டும் படிப்பில் ஒரு பங்குக்கு அதில் பாதிதான் ராணுவத்தில் செலவாகிறது.

A Cow with a big Udder.

ஒரு பெருமடிப் பசு.—ஆஸ்ட்ரேலியாவில் ஒரு ஊரில் ஒரு பசு இருக்கிறதாம். பார்வை, நீளம், அகலம் முதலியவற்றில் அது மற்றப் பசுக்களைப் போலதான் இருக்கிறது. ஆனால் மடியோ ஒரு பெரும் பானையவ்வளவு பெரியதாய் நன்றாய்த் தழைந்து பூமியில் விழுந்து புறளுகிறது. இதன் ஆச்சரியம் என்ன வென்றாலோ இந்தப் பசு இவ்வளவு பெரிய மடியுள்ளதாயிருந்தும் பாலே கறக்கிறதில்லையாம். அப்படி கொஞ்சம் கறந்தாலும் அந்தப் பால் ரொம்ப நாற்றமெடுத்து சீக்கிரம் திரிந்து விடுகிறது.

Japan's Foreign Trade.

ஜப்பானின் அன்னிய வர்த்தகம்.—ஜப்பானிய ராஜாங்கத்தார் அந்ததேசத்து அன்னிய வாத்தகத்தை விருத்திசெய்யும்பொருட்டு வெகு ஊக்கத்துடன் பலமுயற்சிகள் செய்து வருகிறார்கள். அன்னிய தேசங்களிலிருந்து தங்கள் தேசத்துக்கு வந்து இறங்கும் ஸாமான்களுக்கு ஏற்கெனவே விதிக்கப்பட்டிருக்கும் வரிவிகிதங்களை மாற்றி, ஜப்பான் தேசத்தில் என்னென்ன ஸாமான்கள் செய்யப்படுகின்றனவோ, அல்லது என்னென்ன ஸாமான்கள் செய்யக்கூடுமோ, அவைகளுக்குப்போட்டியாய் அன்னிய தேசங்களிலிருந்து வரும் ஸாமான்களுக்கு வரியை அதிகப்படுத்தவும் ஜப்பானில் செய்யமுடியாத ஸாமான்கள் எவையோ, அவைகள் ஜப்பானியருக்கு அவசியமாயிருக்கும்பக்ஷத்தில்அன்னியதேசங்களிலிருந்து வரும்போது, வரியைக் குறைக்கவும் ஜப்பானியர் யோசித்திருக்கிறார்கள். இதற்காக 1911-ம் வருஷம் முதல் அன்னிய ராஜாங்கங்களோடு உடன் படிக்கைகள் மூலமாய் புதிய ஏற்பாடுகள் செய்துகொள்ள ஆலோசித்திருக்கிறார்கள். இப்படிச் செய்தால் ப்ரிட்டிஷ் வர்த்தகர்களுக்கு நஷ்டம் நேரிடுமென்று அந்த வர்த்தகர்கள் அச்சமுற்றிருக்கிறார்கள். இதைத்தவிர ,தங்கள் தேசத்து அன்னிய வியாபாரம் பலப்படவேண்டுமென்று வர்த்தகர்களுக்குப் பண உதவி செய்வதுமன்றி, கப்பல் சொந்தக்காரர்களுக்குங்கூட அவர்களுக்கு கூலி விகிதங்களால் நஷ்டம் நேரிடாதபடி பொருளுதவி செய்து வருகிறார்கள். இப்படி யெல்லாம் செய்வதால் தற்காலம் கவர்ன்மெண்டுக்கும் ஜனங்களுக்கும் செலவு அதிகமானாலும் பிற்காலத்தில் தொழில்களும் வியாபாரமும் பலப்பட்டு சுகமடையலாம் என்பது கருத்து.

Population of Germany.

ஜெர்மனியின் ஜனத்தொகை.—ஜெர்மனிதேசத்து ஜனத்தொகையை விருத்திபண்ணி யதிகரிக்க ஒரு சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்களாம். எந்த குடும்பத்திலாகிலும் ஏழையாயிருந்தாலும், பணக்காரர்களா யிருந்தாலும், எட்டுக்குழந்தைகளைப் பெற்றால் அந்த எட்டாவது பிள்ளைக்கு ஜெர்மனி சக்ரவர்த்தியே நேராகவந்து நாமகரணம் செய்வதாகவும், அவருடைய பெயரிடுவதாகவும், வாக்களித்திருக்கிறார். ஏழைக்குடும்பத்தில் அப்படி எட்டாம் பிள்ளையைப்பெற்ற தாயாருக்கு உதவிக்காக ராஜாங்கத்திலிருந்து 3 பவுன் கொடுக்கும்படி சட்டமாம். இதன் குணம் என்னவென்றால், ஒவ்வொரு குடும்பத்திலும் சக்ரவர்த்தி பேரை வைக்கவேணுமென்ற ஆவலுடன் சிரத்தையாக இருப்பார்கள் என்பதாம். ஐரோப்பாவிலுள்ள மற்றெல்லா நாடுகளிலும் ஜெர்மனி தேசத்தில் வருஷாவருஷம் ஜனத்தொகை ஜாஸ்தி. அது குறையாதபடிக்கு முன் ஜாக்கிரதையாக இந்த சட்டம். இதனால் பஞ்சம் முதலானது இல்லாத ஜெர்மனி தேசத்துச் செல்வச் சிறப்பு விளங்குகின்றது.

Destruction of Birds.

பக்ஷிகளின் நாசம்.—ஐரோப்பிய ஸ்திரீகளின் அலங்காரத்திற்காக அழகான சிறகும்,தோலுமுள்ள பக்ஷிகள் உலகத்தில் எந்த இடத்தில் இருந்தாலும் கொல்லப்படுகின்றன. இந்தியாவிலும் அப்படியே கொல்லப்படுகின்றன. இப்போது இந்த விஷயமாய் ப்ரிட்டிஷ் காமன்ஸ் ஸபையில் மிஸ்டர் ஹால்டேன் என்பவர் ஒரு மஸோதா கொண்டுவந்திருக்கிறார். பக்ஷிகளின் சிறகுகளையும் தோல்களையும் விற்பது இந்த மசோதாவால் குற்றமாகக் கருதப்படுகிறது. அதாவது அவைகளை விற்பவர்கள் சட்டப்படி தண்டனைக்குட்படுவார்கள்.

A Big fire in Brussels Exhibition.

ப்ரஸெல்ஸ் பொருட்காக்ஷியில் தீ.—ஐரோப்பாவில் பெல்ஜியம் தேசத்து முக்கிய பட்டணமாகிய ப்ரஸ்ஸெல்ஸில் ஒருபெரிய பொருட்காட்சி நடந்து வருகிறது. அதில் தீப்பிடித்து அநேகபுஸ்தகங்களும் படங்களும், தட்டு முட்டுச் ஸாமான்களும் அழிந்து போயின. பொருட்காட்சி மிக உன்னதமாக இருந்ததென்றும், வாண விளையாட்டைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்களென்றும், அப்போது திடீரென்று தீப்பிடித்து நிமிஷத்துக்குள் பொருட்காட்சிக்கு இங்கிலீஷ்க்காரர்களும் பெல்ஜியம் தேசத்தார்களும் அனுப்பியிருந்த ஸாமான்கள் அடியோடு நெருப்புக்கு இரையாயினவென்றும் ஒரு ப்ரிடிஷ் உத்தியோகஸ்தர் தெரிவிக்கிறார். சுமார் நாற்பது லட்சம் பவுன் வரையில் பெறுமானமுள்ள ஸாமான்கள் அழிந்துபோயின என்று உத்தேசமாய் ஒருவர் மதிப்பிடுகிறார்.

The German Government Stables.

ஜர்மனி ராஜ்ய லாயம்.—ஜெர்மனியில் ஸாக்னென் என்ற இடத்தில் கெய்ஸர் ஒரு லாயம் ஏற்படுத்தியிருக்கிறார். இதில் ராஜவம்சத்தார்களுக்கும் யுத்தஞ்செய்யும் சைன்யக்காரர்களுக்கும் குதிரைகள் வளர்த்துத் தயார்செய்கிறார்கள். லாயத்தின் விஸ்தீரணம் 10855 ஏக்கர். இதில் ஒருபாகம் லாயம், மற்றொருபாகம் மேய்ச்சல் நிலம். குதிரை குட்டிபோட்டதும் ஒரு வருஷகாலம் குட்டியை தாய்க் குதிரையோடு விட்டுவைக்கிறார்கள். பிறகு அதை மந்தையில் சுயேச்சையாய்த் திரியும்படி விட்டுவிடுகிறார்கள். இரவில் கொட்டிலில் கட்டும்பொழுது பில்லும் கொள்ளும் வைக்கிறார்கள். ஜர்மனி சைன்யத்தையும் அதின் குதிரைகளையும் பற்றி நாம் சொல்லவேண்டுவதில்லை. மிக உயரமாயும், கொண்டை பெருத்ததாயும் மிகப்பளுவுள்ள ஸாமான்களை யிழுக்கவும் தூக்கவும் சாமர்த்திய முள்ளதாயுமுள்ள ஜர்மனிக் குதிரை இந்த லாயத்தில் நாம் மேலே சொன்னபடி வளர்க்கப்படுகிறது.

SEASON.

கால ஸ்திதி.

RAINFALL.

மழை.—ஏப்ரல்௴ 1-தேதியிலிருந்து, ஸெப்டம்பர்௴ முதல் தேதி வரையில் பெய்தமழை அளவும், இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், கீழே அங்குலக் கணக்காகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	32	25
வால்டேர்	28	17
காக்கினாடா	18	17
மசூலிப்பட்டணம்	24	19
நெல்லூர்	8	9
மதராஸ்	15	13
கூடலூர்	13	12
நாகப்பட்டணம்	16	9
பாம்பன்	9	4
கொழும்பு	22	40
திருவநந்தபுரம்	37	37
கொச்சி	82	81
கள்ளிக்கோட்டை	75	93
மங்களூர்	94	103
மெர்க்காரா	90	103
ஐதராபாத்	16	21
ரெய்ச்சூர்	11	17
பல்லாரி	13	9
கர்நூல்	13	16
கடப்பை	27	16
ஹாஸ்ஸான்	24	21
பெங்களூர்	26	18
கொடைக்கானல்	40	25
உதகமண்டலம்	33	. .
கோயம்புத்தூர்	7	8
வேலூர்	37	. .
சேலம்	24	21
திருச்சினாப்பள்ளி	19	12
புதுக்கோட்டை	21	. .
மதுரை	22	12
திருநெல்வேலி	9	6

CROPS AND MARKET REPORT.

பயிர்களும் மார்க்கெட் நிலவரமும்.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—ஜூலை௴ 23-தேதியிலிருந்து ஆகஸ்டு௴ 27௳ வரையில் அந்நிய தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி ஸாமான்களின் விவரம்.

நூலும் முறுக்கு நூலும் 5,35,291 ராத்தல், காரிகத்துணிகள் 51,49,349 கஜம். சலவைத்துணிகள் 16,19,182 கஜம். இதர தினுசுத்துணிகள் 36,63,719 கஜம். இதேகாலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 23,861 அந்தர் துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். ஆகஸ்டு மாஸம் 30-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூலின் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-3 வரையில் இருந்ததாகத் தெரிய வருகிறது.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற ஜூலை மாஸம் 23-ந்தேதிமுதல் ஆகஸ்டு மாஸம் 27-ம் தேதி வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 17 அந்தரும், ஜாவா தீவிலிருந்து 34,319 அந்தரும் இறக்குமதியாயின.

WANTED AGENTS.

ஏஜெண்டுகள் தேவை.

"பிழைக்கும் வழி" க்கு ஸந்தாதாரர்கள் சேர்க்க ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் ஏஜெண்டுகள் தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித்தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

THE LATE MAHADEV GOVIND RANADE.

காலஞ்சென்ற மகாதேவ கோவிந்த ரானடே.

Supplement to "The Practical Life" "பிழைக்கும் வழி" க்கு அனுபந்தம்.

DADABHAI NAOROJI.

தாதாபாய் நவரோஜி.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ.,
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. | ஸாதாரண௵ புரட்டாசி௴—SEPTEMBER 1910. | ஸஞ்சிகை 9. No. 9.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.	*Foreign.* Rs. A. P.
Per annum	1 0 0	6 0 0
Single copy	0 6 0	0 8 0
Sample copy	0 2 0	0 3 0

RATES OF ADVERTISEMENT.

1 Page	5 0 0	per month.
½ do	2 8 0	do
¼ do	1 4 0	do
Less than ¼ page	0 8 0	per *inch* per month.

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors. The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popalar, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4 Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜாலக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.	அந்நிய நாடு.
வருஷம் 1க்கு	4 0 0	6 0 0
தனிப்பிரதி	0 6 0	0 8 0
மாதிரி காபி	0 2 0	0 3 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு	5 0 0
½ பக்கத்திற்கு	,, ,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,, ,,	1 4 0
¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு		0 8 0

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக ரூபாய்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

பிழைக்கும் வழி.

PRACTICAL LIFE.

புஸ்தகம் 2 Vol. 2. } ஸாதாரணஹு புரட்டாசிமீ—SEPTEMBER 1910. { ஸஞ்சிகை 9. No. 9.

பொருளடக்கம்.

பத்திராதிபர் குறிப்புகள் பக்கம்.

பயிர் பச்சைகளை அரிக்கும் பூச்சி—பெரிய புட்டிகளில் உள்ளவைகளைக் கொட்டுதல்—புளியஞ் சருகுகள் 339

விசேஷ வியாஸங்கள்

சென்னை ராஜதானியில் சர்க்கரை செய்தல். 340
சால்தீர்த்தம் ஜில்லென்று இருப்பானேன்? —எம். ஸி. எஸ். அநந்தபத்மநாப ராவ், எம். ஏ., எல். டி. 341
விதையின் சத்து அல்லது அம்சத்தை விருத்தி செய்தல் —ஸி. கு. நாராயணசாமி முதலியார் .. 345
வாழைமரம் —டி. ஸி. வி. ரமணய்யர் 347
புளியஞ் சருகுகளும் உரமாகின்றன —எஸ். பத்மா 349
லங்கணம் பரம ஔஷதம் —டி. கே. நடேச பத்தர் 350
ரிவினியூ இன்ஸ்பெக்டர் 353
சுமந்திரன் 358

விசேஷத் திரட்டு

"பிழைக்கும் வழி: உழைக்கும் வழி"—இந்தியாவில் பயிரிடும் பருத்தி தினுசுகள்—கம்பளிப்பூச்சிகள்—டப்பிப் பழங்கள் செய்தல் 361–368

பத்திரிகை ஆராய்ச்சி

கறையான்—செல்வ சாஸ்திரம்—பயறு சாகுபடி—கோஆபரேடிவ் பாங்கிகளில் பணம் போட்டு வைத்தல்—பெற்றோர்களுடையவும் மக்களுடையவும் கடமை—மண்ணெண்ணெய் டின்கள் 369–372
சிறுவர் பகுதி 373–374
ஸ்திரீகள் பகுதி 375–376

பகுதிக் குறிப்புகள்

விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—புஸ்தகக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—மனிஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் 377–387
மாஸ வர்த்தமானம் 388–392

CONTENTS.

PAGE.

Editorial Notes

INSECT PESTS-EMPTYING LARGE BOTTLES-DRIED TAMARIND LEAVES 339

Special Articles

THE SUGAR INDUSTRY IN MADRAS 340
WHY WATER IN THE MUD POT IS COOL? M. C. S. Ananthapadmanabha Rau, M.A., L.T., *Assistant Professor of Physics, Presidency College, Madras* 341
IMPROVEMENT OF SEEDS C. K. Narayanasamy Mudaliar 345
THE PLANTAIN TREE T. C. V. Ramana Aiyar 347
TAMARIND LEAVES AS MANURE S. Padmah, *Lakshmi Vilas, Paruthipattu* ... 349
FASTING AS A MEDICINE T. K. Natesa Pather 350
THE REVENUE INSPECTOR 353
SUMANTHIRAN 358

Selections

THE GOSPEL OF "STRENUOUS LIFE" OR, CO-ORDINATION OF CAPITAL AND LABOUR "WORK TO LIVE AND LIVE TO WORK." ... 361
VARIETIES OF COTTON GROWN IN INDIA ... 364
HAIRY CATERPILLARS 365
TINNED FRUITS 367

Review of the Press

White Ants 369
The Science of Wealth 370
Cultivation of Peas 371
Investments in Co-Operative Banks 371
The Duties of Parents and Children 372
Kerosene Oil Tins 372
The Boys' Section 373-374
The Ladies' Section 375-376

Departmental Notes

Agricultural Notes 377
Industrial Notes 379
Educational Notes 380
Literary Notes 381
Legal Notes 382
Scientific Notes 383
Medical Notes 384
Personal Notes 385
Fun and Anecdote 386
Curiosities 387
News of the Month 388-392

EDITORIAL NOTES.

பத்திராதிபர் குறிப்புகள்.

Insect Pests.

பயிர் பச்சைகளை அரிக்கும் பூச்சி.—இந்தியாவில் செழுமையாய் வளர்ந்துவரும் பயிர்பச்சைகளை பலவகைப்பட்ட பூச்சிகள் அரித்துவிடுவதை யாவரும் அறிவார்கள். அப்படிப்பட்ட பூச்சிகளை அழிக்க ஆஸ்ட்ரேலியா வாஸிகள் ஒரு உபாயம் கண்டு பிடித்திருக்கிறார்கள். அது என்னவென்றால் உருளைக்கிழங்குச் செடிகளின் தண்டுகளையும், இலைகளையும் நன்றாய் வேகவைத்து ஜலத்தை எடுத்து பூச்சி அரித்த பயிர்களின்மேலும், செடிகளின் மேலும் தெளித்துவிடுவதேயாகும். ஆஸ்ட்ரேலியாவில் கோதுமைப் பயிர்களையும், மற்ற பயிர்களையும் அரிக்கும் பூச்சிகளை சாகடிக்க இந்த உபாயத்தையே விவஸாயிகள் செய்வதாகத்தெரிகிறது. அந்த ஜலத்தைத் தெளித்த மாத்திரத்தில் அந்தப் பூச்சிகள் செத்துப் போகின்றனவாம். உருளைக்கிழங்கின் இலைகளையும், செடிகளையும் வேகவைத்து எடுத்த ஜலத்தை தெளிப்பதனால் பயிர்களை அழிக்கும் பூச்சிகள் செத்துப்போவது உண்மையாயிருக்கலாம். இந்திய விவஸாயிகள் உருளைக்கிழங்கு ஜலத்துக்கு எங்கே போவார்கள்? உருளைக் கிழங்குச் செடிகள் கள்ளியைப்போலவும், கற்றாழையைப் போலவும், சப்பாத்தை (நாகதாளியை)ப்போலவும், மலைகளிலும், காடுகளிலும் தானாகவே முளைத்துச்செழிக்கும் பயிராயிருந்தால் அல்லவா இந்திய விவஸாயிகள் அவைகளை வெட்டிக்கொண்டுவந்து அவைகளின் தண்டுகளையும் இலைகளையும் வேகவைத்துச் சாறெடுத்து அந்தச்சாற்றை பூச்சிகள் விழுந்த பயிர்களில் தெளிக்கக்கூடும். ஒன்று செய்யலாம். நீலகிரி, பெங்களூர் இந்த இடங்களில் உருளைக்கிழங்கு பயிராகிறது. பயிர் செய்கிறவர்கள் கஷாயம் இறக்கி புட்டிகளில் போட்டு விற்பனைக்கு அனுப்பினால் விவஸாயிகள் வேண்டிய அளவில் வாங்கிக்கொள்ளுவார்கள்.

Emptying Large Bottles.

பெரிய புட்டிகளில் உள்ளவைகளைக் கொட்டுதல்.—கெரோஸின் எண்ணெய், ஜலம், பால் முதலியவைகளுள்ள பூராவாய் நிறைந்த புட்டிகளைக் காலி செய்வதற்காக அநேகம் பேர்கள் புட்டியை கெட்டியாய் செங்குத்தாய்த் தலை கீழே பிடிப்பார்கள். இப்படி கெட்டியாய் செங்குத்தாய் தலைகீழே பிடிப்பதின் தாத்பரியம் என்னவென்றால், புட்டியிலுள்ள எண்ணெயோ, ஜலமோ வெகு சீக்கிரத்தில் வடிந்துவிடும் என்பதுதான். ஆனால் இது பிசகான அபிப்பிராயம். சீக்கிரத்தில் வடிக்கட்ட வேண்டுமானால் புட்டியை அதன் அடியில் தலைகீழாய்ப் பிடிப்பதோடு அடிப்புறத்தைக் கொஞ்சம் சுழற்றிக்கொண்டே இருக்கவேணும். இப்படிச் சுழற்றினால் புட்டிக்குள் ஒருசிறு நீர்ச்சுழல்போல் உண்டாகி, அதன் வழியாய் காற்றுப்புகுந்து அடிப்பக்கம்போய்ப் புட்டிக்குள் உள்ளதை சீக்கிரத்தில் வடியச்செய்யும்.

Dried Tamarind Leaves.

புளியஞ் சருகுகள்.—செங்கல்பட்டு ஜில்லா பருத்திப்பட்டு கிராமத்தில் ஒருவர் புளியஞ் சருகுகளை எருவாக வயலில்போட்டு அதில் ஸ்வர்ணவாரி நெல் சாகுபடி செய்ததாயும், அதனால் நல்ல மாசூல் கிடைத்ததாயும், எஸ். பத்மா என்னும் நிருபர் ஒருவர் நமக்கு எழுதிய வியாஸத்தை இந்த ஸஞ்சிகையில் 349-ம் பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். இந்த சங்கதி விவஸாயிகளுக்கு மிகவும் நூதனமாகத்தோன்றும். இதுவரையில் புளியஞ்சருகை எருவாக உபயோகப்படுத்தலாமென்று நாம் கேட்டதில்லை. அதற்கு ஆதாரம் தெரிந்தவரையில் புஸ்தகம் எதிலும் காணவும் இல்லை. புளியமரத்தின் அண்டையில் ஸாதாரணமாய் ஒரு பயிரும் வளராது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். நம்முடைய நிருபர் எழுதியதை நாம் அங்கீகரிப்பதற்கு முன்னால் தீர விசாரித்துச்செய்யவேணும். நம்முடைய பத்திரிகையை வாசிப்பவர்களில் யாருக்காவது இது விஷயத்தில் அநுபோகமுண்டானால் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

THE SUGAR INDUSTRY IN MADRAS.
சென்னை ராஜதானியில் சர்க்கரை செய்தல்.

1904—1905-ம் வருஷம் முதல் சென்னை ராஜதானியில் இறக்குமதியான சர்க்கரையின் அளவும் அதன் விலையும் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன

	அந்தர்.	ரூ.
1904—1905	1,19,128	7,83,981
1905—1906	47,798	3,51,492
1906—1907	1,50,109	10,71,588
1907—1908	50,797	5,16,674
1908—1909.	1,38,378	13,15,231

மேலே சொல்லிய வருஷங்களில் கரும்பு சாகுபடியான நிலத்தின் விஸ்தீரணம்.

பின்வருமாறு.	ஏகர்.
1904—1905	58,450
1905—1906	68,738
1906—1907	58,586
1907—1908	83,865
1908—1909	90,195

நம்முடைய ராஜதானியில் வருஷா வருஷம் சுமார் 380 லக்ஷம் ஏகர் சாகுபடியாகிறது. இதில் கிட்டத்தட்ட 87,000 ஏகரில்தான் கரும்பு பயிரிடப்படுகிறது.

கரும்பு சாகுபடி செய்வதை சப்பை என்று சொல்லக்கூடாது. திறமான சாகுபடி என்றே சொல்லவேணும். ஒரு ஏகர் மோர்சுக் கரும்பு சாகுபடி செய்தால் ஸாதாரணமாய் 13½ முதல் 16 பாரம் வரையில் வெல்லம் செய்யலாம். தகுந்த இடங்களில் ஒரு ஏகர் கரும்பிலிருந்து 16 முதல் 20 பாரம் வரையில் கூட வெல்லம் அகப்படும்.

ஜாவா, மோர்சு முதலிய தீவுகளிலிருந்தும் இன்னும் அயல் தேசங்களிலிருந்தும் வருஷம் ஒன்றுக்கு சுமார் 10 கோடி ரூபாய் பெறுமான சர்க்கரை இந்தியாவுக்கு வருகிறது. நாம் கரும்பிலிருந்து வெல்லம் செய்யாமல் ஏன் சர்க்கரையைச்செய்துவிற்கக் கூடாது? இதர தேசத்தார்கள் ஆதாயமில்லாமலா இங்கே சர்க்கரையை அனுப்புகிறார்கள். அந்த லாபத்தை நாம் அடையக்கூடாதா என்று கேட்கலாம். அவர்கள் செய்கிறபடி நாமும் செய்தால் அவர்களுக்குக் கிடைக்கிற லாபம் நமக்கும் கிடைக்கும். அவர்கள் சர்க்கரை செய்வதற்காக அளவற்ற முதல் போட்டு, விலை உயர்ந்த யந்திரங்களையும், பெரிய சம்பளம் கொடுத்து சர்க்கரை செய்வதில் நிபுணர்களையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். தவிர, சர்க்கரை செய்தது போக பாக்கி கழிவடையாகும் சக்கையை, காயிதம் செய்வதற்கும், சர்க்கரைப்பாகை சாராயம் இறக்குவதற்கும், விற்று லாபம் சம்பாதிக்கிறார்கள். இவைகளெல்லாவற்றையும் விட இன்னொரு முக்கியமான விஷயம் அவர்களிடத்திலிருக்கிறது. கரும்பை வெட்டி காயவிடாமல் உடனே சார் எடுத்தால்தான் சர்க்கரை காணும். வெட்டின பிறகு ஆட்டுகிறதற்கு எவ்வளவுக் கெவ்வளவு நாழியாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சர்க்கரை கம்மிப்படும்.

இப்படி ஆகாமலிருக்கும்பொருட்டு கரும்பாலையைச்சுற்றிலும் முப்பது நாற்பது மைல் சதுரத்துக்குள் கரும்பைப்பயிர் செய்கிறார்கள். ஆலை இருக்கும் இடத்துக்கும், கரும்பு சாகுபடியாகும் கடைசி இடத்துக்கும், ட்ராமோ, அல்லது சிறு ரெயில் பாதையோ, போட்டிருக்கிறார்கள். ஆலையிலிருந்து அடிக்கடி பயிரைப்போய்ப் பார்ப்பதற்கும் வெட்டின கரும்பை சார் வற்றாமல் உடனே ஆலைக்குக்கொண்டு வரவும் இந்த வண்டிகள் உபயோகமாகின்றன. இப்படி ஏராளமாய்க் கரும்பு சாகுபடிசெய்ய ஆலையைச்சுற்றியுள்ள நிலங்களெல்லாம் கம்பெனிக்கே சொந்தமாயிருக்கவேண்டும், அல்லது, சுற்றுவட்டத்து நிலக்காரர்கள் தாங்கள் பயிரிடும் கரும்பையெல்லாம் அந்த ஆலைக்கே கொடுப்பதாக ஒப்பந்தம் செய்தவர்களாயிருக்கவேணும். ஆகையால் மேலே சொல்லிய விஷயங்களால் என்ன ஏற்படுகிறதென்றால் நாம் சர்க்கரை செய்து இதர தேசத்து சர்க்கரையோடு போட்டி போட்டு அவைகளைத்துரத்தி நம்முடைய தேசத்தில் சர்க்கரை வியாபாரத்தைக்கைப்பற்றவேணுமானால் அவர்கள் செய்கிறபடி நாமும் செய்யவேணும். அவர்களைப்போல் ஏராளமாய் முதல் போடவேண்டும். விலை உயர்ந்த யந்திரங்களை வாங்கவேண்டும். பெரிய சம்பளங்கொடுத்து நிபுணர்களைக் கொண்டு வேலை செய்யச்சொல்லவேண்டும். இப்படிப்பட்ட ஏற்பாட்டோடு சர்க்கரை ஆலை வைத்தால் அது ஆனைக்குத் தீனி போடுவது போல அதில் என்னோரும் வேலை செய்வதற்கு வேண்டிய கரும்பைச்சேகரிக்கவேணும். இதற்கு அங்கேயும் இங்கேயுமுள்ள கரும்பை வாங்கினால் ஸாத்தியப்படாது. ஆகையால் ஆலை ஏற்படும் இடத்தைச்சுற்றியே அதற்கு வேண்டிய கரும்பெல்லாம் சாகுபடியாகவேணும். இப்படிக் கெல்லாம் செய்தால்தான் சர்க்கரை செய்யும் தொழில் இந்தியாவில் முன்னோங்கக் கூடும். இதற்கு வேண்டிய பணமும் தைரியமும் யாரிடத்திலிருக்கிறது? இவைகள் இல்லாமையினாலேதான் அவனவன் பயிரிடும் சொற்பக்கரும்பை ஆலையில் ஆட்டி வெல்லமாகச் செய்து விடுகிறான். இப்படிச்செய்வதற்கு 150 அல்லது 200 ரூபாயிருந்தால் போதும். பண்ணும் வெல்லத்தை ஜனங்கள் வாங்க சித்தமாயிருக்கிறார்கள். அதனால் லாபம் கிடைக்கிறது. அது போட்ட முதலுக்கும் பட்ட சிரமத்துக்கும் போதுமென்றே நம்மவர்கள் கரும்பிலிருந்து வெல்லம் செய்து விடுகிறார்கள்.

பிழைதிருத்தம்

ரிவினியூ இன்ஸ்பெக்டர் என்று தலைப்பெயருள்ள வியாஸத்தில் 'வராகன்' என்ற வார்த்தை வருகிற இடங்களிலெல்லாம் 'வாரகம்' என்று திருத்திக்கொள்ளவும்.

WHY WATER IN THE MUD POT IS COOL?

BY

M. C. S. ANANTAPADMANABHA RAO, M.A., L. T.,
Assistant Professor of Physics, Presidency College, Madras.

சால்தீர்த்தம் ஜில்லென்று இருப்பானேன்?

சித்திரை, வைகாசி மாஸங்களில் வெயில் கடுமையாக அடிக்கும்போதும், ஆனி ஆடி மாஸங்களில் கடுங்கோடைக் காற்று வீசும் போதும், நமக்கு உண்டாகும் தாகத்தையும் நாவரட்சியையும் தணிப்பதற்கு குளிர்ந்த ஜலம் வேண்டுமென்று நாம் அபேக்ஷிக்கிறோம். இந்த கடுங்கோடை மாஸங்களில் நம்முடைய வீடுகளில், குடிப்பதற்கு என்று திட்டப்படுத்தி வைத்திருக்கும் கிணறுகளிலுள்ள ஜலத்தையாவது, ஓடைகளிலும் ஆறுகளிலும் தோண்டி தினம் தினம் இறைத்துவிட்ட ஊற்றுகளிலுள்ள ஜலத்தையாவது, அழுக்கில்லாத இடங்களில் மொண்டு எடுத்த தெளிவான ஆற்று ஜலத்தையர்வது, சுத்தமான துணியில் வடிகட்டி மிதக்கும் உதிர்ந்த இலை முதலிய தூசுகளைப்போக்கி, முன்னமே இதற்கென்று ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் புதுப்பானைகளில் ஊற்றி வைக்கிறோம். இந்தத்தண்ணீர் ஊற்றின 2, 3 நாழிகை நேரத்தில் குளிர்ந்து போகின்றது. சிலர் ஜலத்தை கொதிக்கவைத்து ஆறின பின்பு பானையில் ஊற்றுவதுண்டு. இப்படி கொதிக்கவைப்பதால் ஜலத்தில் கரைந்திருக்கும் சுண்ணாம்பு முதலிய தேகஸௌக்கியத்திற்கு விகாதமான வஸ்துக்கள் பொடியாகி பின் தங்கி விடுகின்றன. வெந்நீர் அண்டாக்களில் வெண்ணிரமாய் கரைகட்டியிருப்பது இந்தச் சுண்ணாம்பினாலேயே. சுக்கான் பூமியில் வெட்டின கிணறுகளிலிருந்து எடுத்த ஜலத்தில் சுண்ணாம்பு அதிகமாகக் கரைந்தி

ருக்கும். ஆதலால், அந்த ஜலத்தை கொதிக்கக் காய்ச்சியே உபயோகிக்கவேண்டும். கொதிக்கவைத்த ஜலத்திலிருந்து அதில் கரைந்திருந்த சுத்த காற்று வெளியேறுவதால் அது குளிர்ந்தபோது ருசியாய் இருப்பதில்லை. இப்படி ஆயத்தம் செய்து வைத்திருக்கும் ஜலத்திற்குத்தான் பானை ஜலம் என்னும் விசேஷப்பெயர் வழங்குகிறது. 'சால் தீர்த்தம்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதும் இதுவே. வெயிற்காலங்களில் பிரயாணிகள் மண்ணினால் செய்யப்பட்ட கூஜாவில் ஜலம் எடுத்துச் செல்லுவதும், முக்கியமாய் ஜலம் குளிர்ந்திருக்கும் பொருட்டேயாம். கோடை காலத்தில் செம்பு, பித்தளை முதலிய உலோகங்களால் செய்த பாத்திரங்களில் வைத்த ஜலம் சுற்றிலுமுள்ள வஸ்துக்களைப்போல சூடாக இருக்க, 'மட்கூஜா முதலான மட்பாண்டங்களில் இருக்கும் ஜலம் குளிர்ந்திருப்பானேன்?'

ஒரு வாயகன்ற தாம்பாளம் போன்ற பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றிவைத்திருந்து, 2, 3 தினத்திற்குப்பின் அதை கவனித்தால், அதில் ஜலம் அதிகக் குறைவாயிருக்கக்காணலாம். வெயிலும் உஷ்ணக்காற்றும் ஜாஸ்தியாக இருந்தால் ஜலம் முழுவதும் வற்றியும் போயிருக்கலாம். கீழே தரையில் ஜலத்தைத் தெளித்தால், கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தரை உலர்ந்து போகிறதல்லவா? தெளித்த இடம் இதுதான் என்று கண்டுபிடிக்கமுடியாதபடி தண்ணீர் எல்லாம் மறைந்துபோகிறது. இதனால் ஜலம் எப்போதும் நீராவியாக மாறிக்கொண்டேயிருக்கிறதென்பது நமக்குத் தெளிவாய்த் தெரிகிறது. உஷ்ணம் அதிகரித்தால் இந்த வேறுபாடு துரிதமாய் நடக்கிறதென்பதும் தெரிகிறது. வெயிற்காலத்தில் ஈரவேஷ்டிகள் சீக்கிரமாக உலர்ந்துபோவதும், பச்சை காய்கறித்துண்டங்கள் சுண்டி வற்றல் ஆவதும், குளம் குட்டைகளில் ஜலம்வற்றி தரை வரண்டுபோவதும், நமக்கு நன்றாய்த் தெரிந்த விஷயமே! வற்றின ஜலம் எங்கேபோகிறது? ஸ்பன்ஜ் என்று சொல்லப்பட்ட கடற்பஞ்சில் உள்ள சிறு சிறு துவாரங்களில் ஜலம் நிரம்புவது போலவும், ரொட்டித் துண்டுகளிலுள்ள சந்துகளில் காபிக்கஷாயம் புகுந்து கொள்வதுபோலவும், ப்ளாட்டிங் பேபர் என்று சொல்லப்படும் மையொத்தும் காகிதத்தில் மைபரவும்போது இடைவெளிகளில் மை புகுந்து கொள்வதுபோலவும், இந்த நீராவி அணுக்கள் ஆகாயத்தின் அணுக்களின் இடை இடையே பரவி நிற்கின்றன.

ஜலத்தை ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சினால், ஜலம் கொதித்து நீராவியாக மாறுகிறது. நீராவியென்பது கண்ணுக்குத் தென்படாத காற்று உருவமுள்ள ஜலம். ஆனால் இந்த நீராவியின்மேல் குளிர்ந்த காற்றுப்பட்டாலும், அல்லது இந்த நீராவி குளிர்ந்த இடங்களுக்கு அடித்துக் கொண்டு போகப்பட்டாலும், அது சிறு சிறு ஜலத்துளிகளாக மாறுகிறது. இந்தத்துளிகளின்மேல் வெளிச்சம்பட்டால் அவை வெண்ணிறமான புகைபோல் காணப்படுகின்றன. ஜலம் பாத்திரத்தில் கொதித்துக் கொண்டிருக்கும்போது, அடுப்பில் விறகு எரிவதால் உண்டாகும் உஷ்ணத்தையெல்லாம் ஜலம் கிரஹித்துக் கொண்டேயிருக்க, அந்த ஜலத்தின், டெம்பரேசர் அதாவது சீதோஷ்ண நிலைமை அதிகமாவதில்லை. தெர்மாமிட்டர் என்று சொல்லப்பட்ட உஷ்ணத்தின் தீக்ஷண்யத்தை அளக்க உபயோகமாகிய உஷ்ணமானி என்னும் பாதரஸம் அடங்கிய கண்ணாடிக் குழாயை ஜலத்தில்

வைத்திருந்தால், அந்த கருவியில் காணப்படும் டிக்ரியின் அளவு ஒரே நிலைமையிலிருக்கக்காணலாம். தெர்மாமிட்டர் கிடைக்காதவர்கள் பின்வரும் பரீக்ஷையை செய்துபார்க்கலாம். ஒரு பாத்திரத்தில் ஈயத் துண்டுகளைப் போட்டுக் காய்ச்சினால், ஈயம் உருகும்படியான நிலையை சீக்கிரம் அடைகிறது. இந்தப் பாத்திரத்தில் கொஞ்சம் ஜலத்தையும் ஊற்றிக் காய்ச்சினால், ஜலம் கொஞ்சமேனும் இருக்கும் வரையில் கிரஹிக்கப்பட்ட உஷ்ணத்தால் பாத்திரத்தின் உஷ்ணநிலை அதிகரிக்காமல், ஈயத்துண்டுகள் கரைவதில்லை. தீயை அடுப்பைவிட்டு வெளியே இழுக்க, ஜலக்கொதிப்பும் அடங்கி நீராவி வெளிப்படுவதும் நின்றுவிடுகிறது. ஆதலால் ஜலத்தில்படும் உஷ்ணமெல்லாம் அதை நீராவியாக மாற்றுவதற்கு உபயோகப் பட்டுக்கொண்டே இருக்கிறதென்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

ஜலத்தைப்போலவே, மற்ற திரவபதார்த்தங்களும் ஆவியாகமாறும்போது உஷ்ணத்தை கிரஹித்துக் கொள்ளுகின்றனவென்று விஷய விசாரணை பண்டிதர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒரு கன அங்குலம் அதாவது ஒரு அங்குல நீளம், ஒரு அங்குல அகலம், ஒரு அங்குல உயரம் அளவுள்ள கொதிக்கிற ஜலத்தை நீராவியாக மாற்றுவதற்கு வேண்டிய சூட்டினாலேயே சுமார் எட்டு கன அங்குல ஜலத்தை சாதாரண உஷ்ண நிலைமையிலிருந்து கொதிக்கும்படியான நிலைமைக்குக் கொண்டுவரலாமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். கொதிக்கும்போதல்லாமல் மற்றெந்த விதத்திலாயினும் ஜலம் நீராவியானால், அதற்குத் தகுந்த உஷ்ணம் அப்போதும் கிரஹிக்கப்படவேண்டுமென்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள். சூடான காற்றிலிருந்தாவது சூரிய வெப்பத்திலிருந்தாவது வேண்டிய உஷ்ணம் கிரஹிக்கப்பட்டபோது ஜலம் ஆவியாக மாறுகிறது. வெளிப்புறத்திலிருந்து உஷ்ணம் அணுகாமலிருக்க, ஜலம் ஸ்வரூபம் மாறினால், எந்த இடத்திலிருந்து ஜலம் ஆவியாகிறதோ அவ்விடத்திலிருந்தே வேண்டிய சூடு இழுக்கப்படவேண்டும். ஆதலால் ஜலம் இருந்த பாத்திரமும் சூடு தணியவேண்டும்; இதற்கு திருஷ்டாந்தம். நாம் உடம்பின் மேல் பனிநீர் தெளித்துக் கொண்டபோதாவது, தேகப் பிரயாசையாலாவது, புழுக்கத்தலாவது, உடம்பு அதிகமாய் வேர்த்தபோதாவது, சந்தனக்குழம்பை பூசிக்கொண்டிருக்கும்போதாவது, விசிறியால் விசிறிக்கொண்டால் உடம்புஜில்லிடுகிறதல்லவா? விசிறியால் விசிறினால் காற்று அடித்து நம்மேல் உள்ள ஜலம் ஆவியாய் மாறுவதால், நம்முடம்பிலிருந்து அதற்குவேண்டிய உஷ்ணம் வெளிப்படுகிறது. உடம்பின்மேலுள்ள ஜலம் வரண்டவுடன் இந்த ஜில்லென்னும் உணர்ச்சி கிடையாது. விசிறியை ஜலத்தில் நனைத்து விசிறிக்கொள்ளும்போது உண்டாகும் குளிர்ச்சிக்கு இதுவே காரணம். வெயிற் காலங்களில் நம்முடைய வீடுகளின் ஜன்னல்களிலும், கதவு நிலைகளிலும் இலாமிச்சை வேர்த்தட்டிகளைக் கட்டி, அவைகளில் அடிக்கடி ஜலத்தைத் தெளித்து வைக்கிறோம். அந்தத் தட்டியில் 'ஜலம் ஆவியாக மாறுவதால் உஷ்ணம் தணிந்திருக்கும்.' அதன் வழியாய் வந்து நம்மேல் படும் காற்றும் ஜில் என்று இருப்பதின் விவரம் இப்போது நன்கு விளங்குகிறதல்லவா?

புதுப்பானைகளில் ஜலம் ஊற்றிவைத்தால் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் நாலாபக்கமும் ஜலம் கசிகிறதைப்பார்க்கலாம். சில பாத்திரங்களில் ஜலம் அதிகமாக முதல் முதலில் கசிவதைக்கண்டு பானை ஓட்டையென்று சந்தேகிக்கவும் நேரிடலாம், அந்த கசிவு மிகவும்

மெதுவாகவே ஸாதாரணமாக உண்டாகும். பாத்திரம் பழகப் பழக கசிவும் மெதுவாக வரும். பானையின் மேற்பரப்பை கவனித்தால் அனேக சிறு துவாரங்கள் தென்படும். இந்த துவாரங்கள் உட்புறமிருந்து வெளிப்புறத்துக்கு ஊசி முதலியவற்றால் செய்யப்பட்ட நேரான துவாரங்களை போன்றவையல்ல. ஒரு உடைந்த பானைத் துண்டின் ஓரத்தை கவனித்துப்பார்த்தால், இந்த துவாரங்கள் மிக நுட்பமானவை யென்றும், இவை கோணல் மாணலாக நாலாதிக்குகளிலும் பரவி இருக்கின்றனவென்றும் தெரியவரும். இந்த துவாரங்களின் வழியாய் ஜலம் வெளியே வர வர, கசிந்த ஜலம் நீராவியாக மாறுகிறது. அதற்கு வேண்டிய உஷ்ணம் பானை ஜலத்திலிருந்தே கிரஹிக்கப்படுவதால், பானை குளிர்ச்சியடைகிறது. இந்தப் பானையை காற்றோட்டமான இடத்தில் வைத்தால், ஜலம் விரைவாய் ஆவியாக மாறுதலால், உஷ்ணமும் அதிகமாகக் குறையும், பானையும் ஜலமும் அதிக சூடு தணிகின்றன. ஆதலால் சுற்றிலுள்ள வஸ்துக்கள் சூடாக இருந்தாலும் ஜலம் நிரப்பிவைத்த பானைஜில்லென்றே இருக்கும். சூடான இடங்களிலிருந்து குளிர்ந்த இடங்களுக்கு உஷ்ணம் சென்று கொண்டேயிருப்பதால், ஒவ்வொரு நிமிஷத்திலும் நீராவியாக மாறுவதற்காக கிரஹிக்கப்பட்ட சூடும் வெளிப்புறத்துக் காற்றிலிருந்து பானைக்குக் கிடைக்கும் உஷ்ணமும் ஒரே அளவினதாக வரும் வரையில் பானை குளிர்ந்துகொண்டே போகும். பிறகு அந்நிலையிலேயே நின்றுவிடும்.

இப்படி ஜலம் ஆவியாகும்போது உஷ்ணம் குறைவதால், ஜலம் ஒரே காலத்தில் ஏராளமாக மாறுமானால் உஷ்ணம் அதிகமாக கிரகிக்கப்படுமே; ஜலமுள்ள பாத்திரத்திற்கு வெளிப்புறத்திலிருந்து எவ்விதத்தாலும் உஷ்ணம் அணுகாதபடி ஏற்பாடுசெய்தால், உஷ்ணம் அதிகம் குறையக்குறைய ஜலம் குளிர்ந்து பனிக்கட்டியாக உரைந்தும் போகலாமே என்பீர்கள்; இது உண்மைதான். குளிர்ந்த தேசங்களில், ஜலம் வைத்த பாத்திரங்களை தக்கைத் துண்டுகளின்மேல் வைத்து, ஜலம் நீராவியாக சீக்கிரம் மாறவும், மாறின நீராவி உடனே வெளிச்செல்லவும், காற்றுவாங்கி யந்திரத்தால் ஏற்பாடுசெய்து, ஜலத்தை உரைபனியாக மாற்றி எளிதில் காட்டலாம். வெப்பம் அதிகமாயுள்ள நிரக்ஷரேகையையடுத்த இந்தியா முதலான தேசங்களில் இந்த மாதிரி காட்டமுடியாது. வேறுவிதமாய்க் காட்டலாம். ஆனால் அதை இங்கே விவரிக்க இடமில்லை.

பானைகளை முற்கூறியபடி ஜலம் வைத்துக்கொள்வதற்காக உபயோகிக்கும்போது சில விஷயங்களை நம் தேகஸௌகரியத்தின் பொருட்டு நாம் நன்றாய் கவனிக்கவேண்டும். ஜலத்தை சேகரிக்கவேண்டிய இடத்தைப்பற்றியும், அதை எவ்வாறு சுத்திசெய்யவேண்டுமென்பதைப்பற்றியும், முதலிலேயே சொன்னோம். பானைகளில் சிறு துவாரங்களின் வழியாய் ஜலம் செல்லும்போது அதிலுள்ள அழுக்குகள் அந்தவழி சென்று, அந்தத்துவாரங்களில் தங்கி அவற்றை அடைத்துக்கொள்ளும். ஆதலால் பழையதானால் பானையை மாற்றுவது நல்லது. மேலும், பானையின் துவாரத்தில்பட்ட அழுக்குகள் அழுகி நாற்றம் அடித்து நமக்கு வியாதியையும் உண்டாக்கும். ஆதலால் இரண்டு பானைகளை உபயோகித்துக்கொண்டு, நாள் விட்டு நாள் இந்தப் பானைகளை ஒவ்வொன்றாய் நன்றாய் தேய்த்துக்கழுவி, வெயிலில் காயவைத்து காற்றோட்டமாய் வைக்கவேண்டும். அப்போது இந்த அழுக்குகள் காற்றினாலும் சூரியகிரணங்களாலும் பரிசுத்தமாகும்.

சில ஸமயங்களில் புதுப்பானைகளை உபயோகிப்பதற்கு பதிலாய், பித்தளை அல்லது வெண்கலப்பாத்திரங்களில் ஜலம் நிரப்பி அந்தப் பாத்திரங்களின்மேல் ஈரத் துணியைப் போட்டுச்சுற்றி அந்தத்துணியின்மேல் ஜலத்தை அடிக்கடி தெளித்துவைத்துக் கொண்டிருப்பதும் உண்டு. துணி ஈரமாகவே இருக்கும் வரையில் ஜலம் குளிர்ச்சியாகவே இருக்கும்.

எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ்.

IMPROVEMENT OF SEEDS.

BY

C. K. NARAYANASAMY MUDALIAR.

விதையின் சத்து அல்லது அம் சத்தை விருத்தி செய்தல்.

இந்த விஷயத்தில் ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் விசேஷமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பா கண்டத்தில் ஜெர்மனி, ஆஸ்திரியா முதலிய நாடுகளில் பீட் என்னும் ஒருவகைக் கிழங்கிலிருந்து சர்க்கரைசெய்து அந்தச் சர்க்கரையை நமது இந்தியா நாட்டில் ஏராளமாய் இறக்குமதி செய்கிறார்கள் என்கிற விஷயம் பலருக்கும் தெரியுமே. நூறு எடை பீட் இருக்குமானால் ஐந்து எடை சர்க்கரை தான் ஆதியில் கிடைத்துக் கொண்டிருந்தது. அதிக ருசியுள்ள விதைக் கிழங்குகளைப் பொறுக்கி ஜெர்மனியர் சாகுபடிசெய்ய ஆரம்பித்தார்கள். அப்படியே வருஷந்தோறும் முதல்தரமான விதைகளாய்ப் பொறுக்கி சாகுபடிசெய்து வந்ததினால் இப்பொழுது சிலஇடங்களில் 100 எடைக் கிழங்குக்கு 24 எடை சர்க்கரை கிடைக்கிறது. அவர்கள் முயற்சியால் இன்னும் விர்த்தி செய்வார்கள்போல் காணப்படுகிறது. ஏற்கனவே ஒரு ஏகர் நிலத்தில் 2 டன் சர்க்கரை கிடைக்குமானால் இப்பொழுது அதே நிலத்தில் சுமார் 10 டன் சர்க்கரை கிடைக்கிறது. 2 டன் சர்க்கரை கிடைத்த காலத்தில் சாகுபடிச்செலவு என்னஆயிற்றோ அதைவிட 10 டன் சர்க்கரை கிடைக்கிற இந்தக்காலத்தில் சொற்பம் கூடவே தவிர வேறில்லை. ஆகையால் ஏற்கனவே கிடைத்துக்கொண்டிருந்த நிலவரும்படியைவிட இப்பொழுது கிடைக்கும் நிலவரும்படி 8 மடங்கு 10 மடங்காயிருக்கிறது.

ஆஸ்திரேலியாவிலுள்ள க்வீன்ஸ் லாண்டு நாட்டில் ஒரு விவஸாய சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்தார் தென் அமெரிக்காவிலுள்ள ப்ரிட்டிஷ் கெயானா என்னும் நாட்டிலிருந்து, பி. 208 என்னும் ஜாதிக் கரும்பைத் தருவித்து மெம்பர்களிடம்கொடுத்து சாகுபடிசெய்ய ஏற்பாடு செய்தார்கள். மெம்பர் ஒருவர் வளமாய் சாகுபடி செய்ததில் ஒரு ஏகர் நிலத்திலிருந்து 69 டன் 6 அந்தர் நிறையுள்ள கரும்பு கிடைத்ததாயும், அதிலிருந்து 14 டன் நிறைக்கு அதிகமான சர்க்கரை கிடைத்ததாயும் ரிபோர்ட்டு செய்திருக்கிறார். ஏற்கனவே க்வீன்ஸ் லாண்டு நாட்டில் கரும்பு சாகுபடியாய் வந்தது. ஏகர் ஒன்றுக்கு சராசரி 13 டன் கரும்பு தான் கிடைத்துக்கொண்டிருந்தது. இப்பொழுது சர்க்கரை ஏகர் 1-க்கு 14 டன் கிடைத்திருக்கிறது. இது என்ன ஆச்சரியம்! விதை பொறுக்குவதனால் விளைவை மிகவும் அதிகப் படுத்தலாம் என்பதற்கு இதுவும் ஒரு திருஷ்டாந்தம்.

க்வீன்ஸ் லாண்டு நாட்டார் வேறொரு கண்டத்திலிருந்து நல்ல விதைவரவழைத்துவிர்த்தி செய்கையில், நமது ஜில்லாவிலுள்ளவர்கள் அடுத்த ஜில்லாவிலிருந்து நல்ல விதை வரவழைத்து விதைப்பதற்குப் பெருமூச்சு விடுகிறார்கள். தீராச் சோம்பலினால் உண்டான சந்தேகங்களை விட்டு மற்ற நாகரிகமுள்ள நாட்டார் போல நமது ஜில்லா விவஸாயிகளும் தங்களுக்குள்ள நுட்பமான புத்தியையும், யுக்தியையும் விவஸாயத்தில் செலுத்தி ஊக்கத்துடன் பாடுபடுவார்களானால் அவர்களைவிட மேலான நிலைமையில் இவர்கள் இருப்பார்கள் என்பதில் என்ன சந்தேகமிருக்கிறது. பூர்வ காவியங்களைப் பார்ப்பதினால் சோழ நாட்டில் கரும்பு சாகுபடி விஸ்தாரமாகப்பயிராகி வந்ததாகத் தெரிகிறது. அணைகளில் கரும்பை

நஞ்சைப் பயிராகவே வியவகரிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள மிராசுதாரர்கள் கரும்பு சாகுபடி இந்த ஜில்லாவிற்குப் புதிது போல நினைக்கிறார்கள். சர்க்கரையை அதிகமாக உற்பத்திசெய்து வெளிநாடுகளுக்கு அனுப்ப ஸௌகரியமில்லாதிருந்த காலத்தில் சோழ நாட்டில் கரும்பு சாகுபடி குறைந்திருக்கவேண்டும். குறைந்ததற்கு வேறு காரணங்களும் இருக்கலாம். இந்தியாவில் வருஷம் 1-க்கு 6 கோடி ரூபாய் விலையுள்ள சர்க்கரை இறக்குமதி ஆய்க்கொண்டும், பல இடங்களுக்கு நாம் உற்பத்திசெய்யும் சர்க்கரையை அனுப்ப ஸௌகரியமிருந்துகொண்டும் இருக்கும் இந்தக்காலத்தில் கரும்பு சாகுபடியை ஆதரிக்கவேண்டியது அவசியம். நல்ல ஜாதிக் கரும்புகளில் நல்ல விதையாய்ப் பொறுக்கி வருஷந்தோறும் விருத்தி செய்துகொண்டு வருவார்களானால் இப்பொழுது கரும்பு சாகுபடியில் கிடைப்பதைவிட விசேஷ லாபத்தை அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. க்வீன்ஸ் லாண்டு நாட்டில் ஜேம்ஸ் மிக்கல் என்னும் ஒருவர் கரும்பு வகைகளில் ஜாதிப்புணர்ச்சி ஏற்படுத்தி விசேஷ பலனைக்கொடுக்கக் கூடிய கரும்பை உற்பத்தி செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அதினுடைய விருத்தாந்தம் இனித்தெரியவேண்டும்.

விதையிலுள்ள அம்சத்தை விருத்திசெய்வதற்கு வேறொரு திருஷ்டாந்தமும் இவ்விடத்தில் சொல்லுவோம். வட அமெரிக்காவிலுள்ள ஐக்கியமாகாணங்களில் மக்காச் சோளம் விசேஷமாய் சாகுபடி செய்யப்படுகிறது. உலகம் முழுவதிலும் உண்டாகும் மக்காச் சோளத்தில் முக்கால்வாசி ஷை மாகாணங்களில் உண்டாகின்றது. அவைகளில் இல்லிநாய் என்ற ஒரு மாகாணத்தில் உள்ள சோதனைப்பண்ணை சூப்பிரண்டெண்டு, டாக்டர் காட்கின்ஸ் என்று ஒருவர் இருக்கிறார். பீட்டுக் கிழங்கில் சர்க்கரை விர்த்தி செய்வதைப் பார்த்த அவருக்கு மக்காச் சோளத்தில் உள்ள அம்சங்களையும் ஏன் அப்படி விருத்தி செய்யக்கூடாதென்று தோன்றிற்று. மக்காச் சோளத்தில் முக்கியமாய் 3 அம்சங்கள் இருக்கின்றன. அவை மாவு, எண்ணெய், புஷ்டியைத் தரத்தக்க சத்து. டாக்டர் காட்கின்ஸ் 1896௵த்தில் சோளத்தில் பரீக்ஷை செய்ய ஆரம்பித்தார். சோளத்திலுள்ள ஷை மூன்று அம்சங்களும், ஒரு கதிரிலுள்ள சோளத்தில் ஏற்றத் தாழ்ச்சியாயிருக்கும். ஆனால், ஒரே கதிரிலுள்ள சோளங்களின் அம்சங்கள் தங்களுடைய அளவையில் அதிகமாய் மாறுபடுவதில்லை. ஆகையால் ஒரு கதிரை எடுத்து சில சோளங்களைப் பரீக்ஷை செய்து பார்த்தால் அதிலுள்ள அம்சங்களின் அளவைதான் அந்தக்கதிரிலுள்ள மற்ற சோளங்களிலும் இருக்குமென்று நாம் வைத்துக்கொள்ளலாம். மக்காச்சோளத்தில் எண்ணெயிருக்கிறதென்பது நமது நாட்டாருக்குத் தெரியாது. அமெரிக்கர்கள் சோளத்திலிருந்து எண்ணெய் இறக்கி அதைப்பல காரியங்களுக்கு ஏராளமாய் உபயோகப்படுத்துகிறார்கள். டாக்டர் காட்கின்ஸ் என்பவர் எண்ணெய் ஜாஸ்தியுள்ள விதைகளைப்பொறுக்கி அவைகளை ஒரு பக்கத்திலும், எண்ணெய் கம்மியாயுள்ள விதைகளைப் பொறுக்கி அவைகளை ஒரு பக்கத்திலும் சாகுபடி செய்தார். முதல் சொன்ன சோளத்திற்கு ஏ. என்றும், பின்சொன்ன சோளத்திற்கு பி. என்றும் பேர்வைப்போம். மறுஸாலில் ஏ-யில் அதிக எண்ணெயுள்ள விதைகளைப் பொறுக்கி அவைகளை வேறாயும், பி-யில், அதிகக்குறைந்த எண்ணெய் உள்ள விதைகளைப் பொறுக்கி அவைகளை வேறாயும் சாகுபடி செய்தார். இப்படியே 1903௵ வரையில் வருஷம்தோறும் விதைகளைப் பொறுக்கி மேற்கண்டபடி தனித்தனியே சாகுபடி செய்துவந்தார். 1903௵த்தில் பரீக்ஷைசெய்து பார்த்ததில், ஏ. சோளத்திற்கு 100-க்கு சுமார் $7\frac{3}{4}$ அளவு எண்ணெயும் பி-யில் 100 க்கு $2\frac{1}{8}$ அளவு எண்ணெயும் இருந்ததாம். இப்படியே புஷ்டியைத் தரத்தக்க சத்து அதிகமாக உள்ள விதைகளை ஒரு பக்கத்திலும், அதிக குறைவாக உள்ள விதைகளை ஓரு பக்கத்திலும் தனித்தனியே சாகுபடி செய்தார். மறு வருஷத்தில் முதல் வகையிலிருந்து அதிக சத்துள்ள விதைகளை எடுத்துப்பிரத்தியேகமாயும், இரண்டாவது வகையிலிருந்து குறைந்த சத்துள்ள விதைகளை எடுத்துப் பிரத்தியேகமாயும் சாகுபடி செய்தார். இப்படியே வருஷந்தோறும் செய்து வந்தார். 1904௵த்தில் பரீக்ஷை பார்த்ததில் முதல் வகைச்சோளத்தில் 100-க்கு $17\frac{1}{3}$ பங்கு புஷ்டி தரத்தக்க சத்து இருந்தது. இரண்டாவது வகையில் $6\frac{1}{3}$-க்குத் தான்புஷ்டி தரத்தக்க சத்து இருந்தது. புஷ்டி தரத்தக்க சத்துள்ள சோளத்தை மனிதர்களுக்கும், மாட்டுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். ஏற்கனவேஉள்ள சோளம் 100 படி போதுமானதாயிருந்தால் இப்பொழுது விருத்திசெய்த சோளம் 60 படி போதுமானதாயிருக்கும். ஆகையால் அதற்கு விலையைக் கூட கொடுத்துத் தான் வாங்குவார்கள். ஏற்கனவே உள்ளசோளத்தில் எவ்வளவு எண்ணெய் கிடைக்குமோ அதைவிடக் கொஞ்சம் குறைய இரண்டு மடங்கு எண்ணெய் இப்பொழுது விருத்தி செய்திருக்கிற சோளத்தில் கிடைக்கும். சோளத்தில் எண்ணெயும், புஷ்டி தரத்தக்க சத்தும் எவ்வளவு குறைகிறதோ அவ்வளவிற்கு மாவு ஜாஸ்தியாகும். சோள மாவு பல காரியங்களுக்கு உபயோகப் படுவதினாலே மாவு வேண்டியவர்கள் எண்ணெயும் புஷ்டி தரத்தக்க அம்சமும் குறைவாயிருக்கும் சோளத்தைச் சாகுபடி செய்கிறார்கள். நமது நாட்டார்களுக்கு இந்த விஷயம் முற்றிலும் புதிது. மேல் நாட்டார் போல இவர்களும் இந்த ஸங்கதிகளில் கவனத்தைச் செலுத்துவார்களானால், பயிர்களைஎவ்வளவோ விருத்தி செய்துவிடலாம்.

அந்நிய தேசங்களிலிருந்துகொண்டுபோன நெல்லை, ஐக்கிய மாகாணங்களிலுள்ள கரோலினா மாகாணத்தார் அதிக விருத்தி செய்திருக்கிறார்கள். நமது நாட்டிலுள்ள அரிசி மாவிலிருக்கும் அன்ன சத்தைவிட கரோலினா அரிசியிலிருக்கும் அன்ன சத்து அதிக ஜாஸ்தி. அதனால் இங்கிலாந்தில் நமது அரிசி, ஒரு அந்தர் ரூபாய் 10-8-0-க்கு விற்றால் கரோலினா அரிசி ரூபாய் 17-4-0 விற்கிறது.

சி. கு. நாராயணசாமி முதலியார்.

THE PLANTAIN TREE.

BY

T. C. V. RAMANA AIYAR.

வாழைமரம்.

“வாழை வாழவைத்தாலும் வைக்கும், தாழவைத்தாலும் வைக்கும்” என்பது பூர்வீகமான பழமொழியே யல்லாமல் தற்கால நாகரிகத்தை அனுசரித்ததல்ல. இதனால் வாழையானது எவ்வளவு செவ்வையாகக் காப்பாற்றப்பட்டாலும் பலன் கொடுப்பது ஸந்தேகமாகவே எண்ணப்பட்டதென்று தோற்றுகிறது. இதைப்போலவே, “எலிக்குப் பயந்து வீட்டைச் சுடுவாருமுண்டோ?” என்பது ஒரு பழமொழி. தற்காலத்தில், ஒரு வீட்டில் எலிகள் விழுந்து இறப்பதைக் கண்டவுடன், நமக்கு எச்சரிக்கை செய்ததாக நினைத்து அந்த வீட்டிலுள்ள தட்டு முட்டு ஸாமான்களை எறிந்துவிட்டு, உடனே வேறு வீட்டுக்குப் போவது முன் ஜாக்கிரதை யுள்ளவர் காரியமல்லவா? அந்த எலிக்கு பயந்து ஓடிப் போகாமலிருப்பவர்களுக்கு பிளேக் என்ற வியாதி வந்து வருந்துகிறார்களல்லவா? ஆகவே பழமொழியையும் ஸமயத்திற்குத் தக்கபடி மாற்ற வேண்டியதே. “வீட்டிற்கு எலியைப்போல் எச்சரிக்கை செய்வதொன்றுமில்லை” என்று மாற்றுவதில் பிழையிராதென்றே நம்பலாம். அதுபோலவே, “வாழை வாழவைக்கும், தாழவைப்பது தாழையே” என்று மாற்றிக்கொள்ள வேண்டியதே நியாயமாக இருக்கும்.

எப்படி யென்றால், நாம் போன டிஸம்பர் மாஸத்து ஸஞ்சிகையில சொன்ன இனுசுகளில் செவ்வாழை, ரஸ்தாளி, மொந்தன், யானைக்கொம்பன், நேந்திரன் முதலிய வாழைக் கன்றுகளை கிடைக்கக்கூடிய இடங்களிலிருந்து வரவழைத்து பயிர் செய்தால் நல்ல லாபம்

கிடைக்கக் கூடுமென்பதில் ஸந்தேகமில்லை. இந்த சாகுபடி செய்வதில் வீணாகிற பொருள் யாதொன்றுமில்லை. காய்கள் பலவித பக்குவம் செய்து போஜன காலத்தில் உபயோகிக்கவும், பழம் இனிய ஆரோக்கியமான தின்பண்டமாகவும், இலையும் மட்டையும் சருகும் உண்கலமாகவும், உலர்ந்த மட்டை, பொடி மட்டையாகவும், புஷ்பங்கள் தொடுக்க நாராகவும், பூவும் தண்டும் சமையலுக்கும் உபயோகப்படுகின்றன. முதிர்ந்த காய்களை இங்கிலாண்டு முதலிய தூரதேசங்களுக்கு கப்பல் மார்க்கமாய்க் கொண்டுபோய் விற்று நல்ல லாபம் சம்பாதிக்கலாம். தென் ஜில்லாக்களில் கிடைக்கிற மாதிரி வாழைப் பழங்கள் வடதேசங்களில் கிடைப்பது அரிது. கப்பல் அல்லது ரயில் மார்க்கமாய் கல்கத்தா, பம்பாய், டில்லி, ஆக்ரா, அலாகபாத்து, காசி, அயோத்தி முதலிய பெரும் நகரங்களுக்குக் கொண்டுபோய் விற்றால் விசேஷ லாபம் கிடைக்கும். மேலே சொன்ன பட்டணங்களின் கடைத் தெருவுகளில் விற்கப்படுகிற முக்கியமான பழம், கொய்யாவும், இலந்தையுமே. பழக்கடைகளில் இந்த இரண்டு கனிகளைத் தவிர வாங்கக்கூடியவைகள், திராக்ஷை, பேரீச்சம்பழம், அத்திப் பழவற்றல், கொப்பரைத் தேங்காய், முந்திரிப்பருப்பு, பாதாமி, வால்நட் முதலியவைகளே. தென் ஜில்லாக்களில் காலணாவிற்கு வாங்கக்கூடிய பழங்களுக்கு அவ்விடத்திய ஜனங்கள் இரண்டணா கொடுப்பதாயிருந்தாலும் ஸகாய மென்றே நினைப்பார்களென்பதில் தடையில்லை. சென்னை நகரத்திலேயே நல்ல செவ்வாழைப் பழங்கள் கொண்டுவந்து காலணாவிற்கு ஒன்று வீதம் விற்பதாயிருந்தாலும் தினத்திற்கு லக்ஷக் கணக்காய் விற்கலாமே.

இந்த சாகுபடிக்கு ஆற்று வண்டல் மண் படிகிற ஒவ்வொரு இடமும் தகுந்தது. இதன் வளர்ச்சிக்குத் தகுந்த எருவோ, கால் நடைகளின் எருவுடன் கலந்து போடத்தக்கதும், சாஸ்திரோக்தமாய் தயார் செய்யப்பட்டதுமான எருவுகளை சென்னை பாரி அண்டு கம்பெனியார் வேண்டிய அளவு விலைக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள். மழையை எதிர்பாராமல் கிணற்றுத்தண்ணீர் இறைத்து பயிர் செய்யலாம். இந்த சாகுபடியில் நேரும் சந்தேகங்களையும், வியாதி முதலியவைகளையும் தீர்ப்பதில் யோசனை சொல்ல திருச்சினாப்பள்ளியிலும் பல்லாரியிலும் விவசாய டிப்டி டயரக்டர்கள் என்ற உத்தியோகஸ்தர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வித ஸௌகரியங்கள் தற்காலத்தில் ஏற்பட்டிருக்க விவஸாயிகள் பூர்வகாலத்திய பழமொழியை நம்பி, சோம்பித் தேங்கித் தயங்குவது அவர்களுடைய குற்றமேயாகும்.

இந்த ஸாகுபடி செய்வதில் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் சிலவற்றை அடியில் சொல்லி இந்த வியாஸத்தை முடிக்கிறோம்.

1. வாழை நடுகிற குழிகளை இரண்டடி ஆழத்திற்கும், இரண்டடி சதுரத்திற்கும் குறையாமல் தோண்டி குறைந்தது 30 நாள் ஆற விடவேண்டும்.

2. ஒவ்வொரு குழிக்கும் தொழு எருவாவது ஆட்டெருவாவது போடவேண்டியதுடன் சாம்பலும் போடவேண்டியது.

3. பழங்களுக்கு விடப்பட்ட வாழைகளில் இலைகளை யறுக்கக்கூடாது.

4. காய்கள் முதிரத் தொடங்கியவுடன் குலையின் அடிப்புறத்தில் தொங்குகிற பூவை முறித்துவிட வேண்டியது.

5. வாழையிலுள்ள உலர்ந்த இலை, மட்டை முதலியவைகளை அடிக்கடி அறுத்துவிட வேண்டியது.

6. தாய் வாழையில் குலை வெளிப்பட்டு முதிர்கிறவரையில், இடைக்கன்று ஒன்றுக்கு அதிகமாக வளரும்படி விடக்கூடாது.

டி. வி. வி. ரமணய்யர்.

TAMARIND LEAVES AS MANURE.

BY

S. PADMAH, LAKSHMI VILAS, PARUTHIPATTU.

புளியஞ் சருகுகளும் உரமாகின்றன.

பசுந்தாள்கள் மட்டும் உரமாவதல்லாமல் காய்ந்து உதிர்ந்துபோகும் சருகுகளும் கழனிகளுக்கு உரமாகின்றன. அதாவது வேப்பிலை, பூவரசு, மா, நெல்லி, புளி முதலிய சருகுகளும் போடலாம். அதற்கு உதாரணமாக அநுபவத்தில் வந்த விஷயம் ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள்.

பூந்தமல்லிக்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் என் சிநேகிதரில் ஒருவர் 20 காணி நிலஸ்திதியுள்ளவராயிருந்தபோதிலும் அவருடைய குடும்ப அஸந்தர்ப்பத்தினாலும், கஷ்டத்தினாலும் சோம்பலினாலும் தன் நிலங்களைப்பார்க்க இஷ்டமில்லாமலிருந்தார். கொஞ்ச காலமாய் "பிழைக்கும் வழி" வாசித்தும்சொல்லுகிறவர்கள் பேச்சைக்கேட்டும் இதர பயிரிடுவோர்களைப் பார்த்தும் தேர்ச்சியடைந்து விவசாய காலெண்டர், "பிழைக்கும் வழி" முதலியவற்றை கவனித்து பயிரிடுகிறார். இப்படி யிருக்க, தன் புறக்கடையில் இருக்கிற புளிய மரத்தழைகளைச் சேர்த்து ¼ காணி நிலத்தை சேடையாக்கி, சேர்த்து வைத்த 3 வண்டி புளியந்தழைச் சருகுகளைச் சேர்த்து வண்டியில் அடித்து கழனியில் போட்டு 7 சால் அடித்தார். 8 படி கொண்ட நாற்றை ஸதாரணமாய் நடுவதைப்போல்பிடிப்பிடியாய் நட்டார். ஒற்றை அலகு விஷயத்தை கவனிக்கவேயில்லை. ஏனென்றால் அவர் அநுபோகமற்றவர். ஆகையாலும் ஆள்களுக்கு நம்பிக்கையில்லாமல் அவர்கள் பயப்படுத்தி விட்டதாலும் ஒவ்வொன்றாக பரீக்ஷிக்க வேண்டுமென்ற எண்ண முள்ளவராகையாலும் அப்படி நட சம்மதியில்லை. அவர் கூலியாளை எல்லா நிலங்களோடும் இதையும் தண்ணீர் பாய்ச்சச் சொன்னார். 70 நாள் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. ஆள்களும் இதை ஒரு கணக்காக எண்ணாமல் பாய்ச்சினார்கள். ஆகையால் இவருக்குசெலவழிந்தது 7 சாலுக்குரூ 1-12-0, 3 வண்டி எருவுக்கு வண்டிக்கூலி ரூ 0-6-0, 8 படிவிதை சுவர்ணவாரி ரூ 0-8-0, ஆக மொத்தம் ரூ 2-10-0 ஆயிற்று. சித்திரை மாதத்தில் நடப்பட்டது 75 ம் நாள் அறுவடையாயிற்று. கண்டு முதல் 72 பட்டணம் மரக்காலாயிற்று. முன் போகத்தில் அதே நிலம் 36 மரக்கால் தான் ஆயிற்று. சம பங்காக இரட்டிப்பு ஆனது மிகவும் ஆச்சரியமல்லவா? ஸாதாரணமாய் ¼, ½ கர்ணிபோல் சுவல்பமாய் வைத்திருக்கிற குடியானவர்கள் பிண்ணாக்குக்கும் முட்டைக்கும் வீணாக பணத்தைச் செலவழித்து வாங்கிப் போடுவதைக் காட்டிலும் தன் சிறு குழந்தைகளைக்கொண்டு சருகுகளை கூடை கூடையாய்ச் சேர்த்துக்கொண்டு லாபமடையலாமல்லவா? எனக்குத் தெரிந்த வரையில் இந்தத் தழைகளைச் சேர்த்து எரித்தும், சாம்பல் சாணி முதலியவைகளோடு கலந்து போட்டுக்கொண்டும் அடுப்பு எரிக்கவும் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவரைப்பார்த்த இந்த கிராமவாசிகள் போட்டி போட்டுக்கொண்டு தழைகள்சேர்க்க ஆரம்பிக்கிறார்கள். ஆகையால் அநுபோகத்தினால் அல்லாமல் லாபம் தெரியாது. "பிழைக்கும் வழி" வாங்கி வாசித்துவரும் கனவான்கள் தயவுசெய்து வாசிக்கும்போது சில குடியானவர்களுக்கும் பயிரிடாமல் குத்தகை, வாரம், அடைமானம் வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டு சாப்பிடுகிறவர்களுக்கும் மத்தியில் வாசித்துக் காட்டியும் பெரிய மிராசுதாரர்களைத் தாண்டி அநுபோகத்துக்கு கொண்டு வரும் பொருட்டும் செய்வார்களென்று

தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். பத்திராதிபர் இடத்திலிருந்து கமிஷன் வாங்கிச் சேர்ப்பதைக் காட்டிலும் பொதுஜன நன்மையாக சந்தாதாரர்கள் சேர்க்க முயல்வது நம் இந்தியா விருத்திக்கும் நலப்பொருந்திய "பிழைக்கும் வழி"க்கும் ஞானத்தைக் கொடுக்கக்கூடிய இடங்களைக் காட்டுவதாகும். இன்னும் ஸர்க்காரில் நில விருத்திக்காகக் கொடுக்கும் கடனுக்காக அப்ளிகேஷன் வாங்கிக்கொள்ளும் ரெவினியூ உத்தியோகஸ்தர்கள் தன் நலத்தைப் பேணாமல் பொதுஜன நன்மையை நினைத்து அந்த பாரங்களை தாமதிக்காமல் மேலே அனுப்பி கடன் வாங்கிக்கொடுத்தால் ஏழை ஜனங்கள் பிழைப்பது மல்லாமல், ஸரியான ஸமயங்களில் நிலத்தை சீர்திருத்த ஏற்றதாயும், சிபார்சு செய்த பேர் நல்லவர் என்று நல்ல பெயர் காரணமாகும். எப்படியாவது நம் இந்தியாவை விருத்திக்குக்கொண்டுவரவேண்டுமென்ற எண்ண முள்ளவர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள், மிராசுதாரர்களை "பிழைக்கும் வழி"க்கு ஸந்தாதாரர்களாகச் சேர்ப்பதே முதல் வழியாகும். எல்லாரும் இவ்விஷயத்தில் பெரிய மனது பண்ணவேண்டுமென்று கோருகின்றேன்

எஸ். பத்மா.

FASTING AS A MEDICINE.

BY

T. K. NATESA PATHER.

லங்கணம் பரம ஔஷதம்.

"லங்கணம் பரம ஔஷதம்" என்கிற பழமொழி நெடுநாளாக நம்முடைய இந்துக்களால் வழங்கப்பட்டு வருகிறது என்பதை யாரும் அறிந்திருக்கலாம். ஆனாலும், இந்தப் பழமொழியின் உண்மையைப்பற்றி அறிந்து கொள்ள ஒருவரும் போதுமான கவனம் செலுத்தி இருக்க மாட்டார்கள். சற்று ஆராய்ந்து பார்ப்போமானால் இந்தப் பழமொழியில் அடங்கி இருக்கும் உண்மை நன்றாய் விளங்கும்.

மனிதர்களுக்கு சுகமான தேக ஸௌக்கியமும் சரீர பலமும் இருக்கவேண்டியது அவசியம். ஆனால் அப்படி இல்லாமல் அநேகர் வியாதியினால் பீடிக்கப்பட்டு வருந்துகிறார்கள். இதற்கு பல காரணங்கள் இருப்பினும் மிதமிஞ்சிய ஆகாரமும் ஓர் காரணமாகும். ஆதலால் கூடியவரையில் மனிதர்கள் தங்கள் ஆகார விஷயத்தில் ஜாக்கிரதை யுள்ளவர்களாகவே இருக்கவேண்டும். வியாதியினால் வருந்துகிறவர்கள் மருந்துக்கென்றும் வைத்தியனுக்கென்றும் பெரும் தொகையான பணத்தைச் செலவு செய்கிறார்கள். அப்படிச் செய்தும் நோய் நீங்குவதென்னமோ துர்லபந்தான். இயற்கையிலேயே வருத்த மில்லாமல் நோய் தீர்த்துக்கொள்ளும் முறை இருக்க, அந்த முறையை அறியாமலும், அறிந்தாலும் செய்யத் துணியாமலும், எவ்வளவு பேர் வருந்துகிறார்கள். வியாதியைக் குணப்படுத்த ஒருவனுக்கு உபவாசம் இருப்பதைவிடச் சிறந்த மருந்து கிடையாது.

இந்த உண்மையை ஐரோப்பாவிலுள்ள வைத்திய சாஸ்திரிகள் இப்போது அறிந்து வியாதியஸ்தர்களை உபவாசம் இருக்கும்படிப் போதித்து வருகிறார்கள். மிஸ்டர் அப்டன் ஸின்க்லர் என்பவர் தேக அஸௌக்கியத்தினால் சுமார் 10 வருஷ காலம் மிகவும் கஷ்டப்பட்டதாகவும் கடைசியில் உபவாசம் இருந்து தம்முடைய வியாதியை நீக்கிக்கொண்டதாகவும் எழுதுகிறார். இவருக்கு வியாதி நீங்கியதோடு பூரணமான தேகஸுகமும் சரீரபலமும் உண்டாயினவாம். உபவாஸம் ஒருவனுடைய வியாதியை நீக்கி அவனுக்கு

ஸுகத்தைக் கொடுப்பதற்குக் காரணம் என்ன என்பதை கீழே குறிப்பிடுகிறோம்.

மனிதர்கள், அதிலும் பெரும்பாலும், இந்தியர்கள், அளவுக்கு மிஞ்சியே சாப்பிடுகிற வழக்க முள்ளவர்களாய் இருக்கிறார்கள். காய்கறி பதார்த்தங்கள் சாப்பிடுகிறவர்களாயிருந்தபோதிலும் ஸரியே, மாமிச பக்ஷணிகளாயிருந்தபோதிலும் ஸரியே, அவர்கள் சாப்பிடுவதென்னமோ, மூச்சுவிட முடியாமல் தான். இதனால் என்ன ஆகிறதென்றால் இரைப்பையிலுள்ள கருவிகள் ஸரியானபடி வேலை செய்யாமற் போகின்றன. நாம் சாப்பிடுகிற ஆகாரம் மேற்படி கருவிகளால் பக்குவப்படுத்தப் படாவிட்டால் நாளடைவில் அது விஷப்பட்டு நம்முடைய ரத்தத்தில் கலக்கிறது. எப்பொழுது சரீரத்தில் ரத்தம் அசுத்தப்படுகிறதோ அப்பொழுதே நோய்வந்துவிடுகிறது. மருந்துகளினால் நோயை நீக்கிக் கொள்ளலாமென்பது வாஸ்தவமேயாயினும், சரீரத்திற்குள்ளிருக்கும் கருவிகள் வேலை செய்யாமலிருக்கும்போது என்னதான்மருந்து சாப்பிட்டாலும் குணமுண்டாகுமா? உண்டாகாது. ஆதலால் ஜீரணக் கருவிகளை ஸரியானபடி வேலைசெய்யும்படி நாம் செய்யவேண்டும். இதற்கு பட்டினி கிடப்பதைவிட சிறந்த மார்க்கம் வேறொன்றுமில்லை. ஒருவன் உபவாஸமிருக்க ஆரம்பித்தால் முதலில் அவன் பசியினால் மிகவும் வருந்தி களைப்படைவான். இருந்தபோதிலும், அதைப் பாராட்டாமல் உபவாஸ மிருந்து வந்தால் பசியைத் தாங்கக்கூடிய வல்லமைதானாகவே உண்டாகிறது. வயிற்றில் ஆகாரம் ஒன்று மில்லாமல் போகவே சரீரத்திற்குள்ளிருக்கும் கருவிகள் தங்கள் தங்கள் வேலையை இயற்கையாகவே செய்ய ஆரம்பிக்கின்றன. அதனால் சரீரத்திலுள்ள அசுத்தங்களெல்லாம் வெளிப்படும். அப்படிப்பட்ட ஸமயத்தில் எனிமா என்னும் கருவியைக்கொண்டு மலத்தை வெளிப்படுத்த வேண்டும். தவிர தினமும் சுத்தமான குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம்செய்து வரவேண்டும். அதோடுகூட அதிகமான தண்ணீரையும் குடித்து வரவேண்டும். இப்படிச்செய்து வருங் காலத்தில் நாக்கில் வெள்ளை படர்ந்தும் வியர்வை அதிகரித்தும் மூச்சு பெரு மூச்சாயும் வரும். உள்ளேயிருக்கும் அசுத்தங்களெல்லாம் பூராவாக வெளிப்படுகிறவரையில் தான் இந்த மாதிரி எல்லாம் இருக்கும். அசுத்தங்களெல்லாம் வெளிப்பட்டு விட்டால் பசியுண்டாகும்; நாக்கு சுத்தமாகிவிடும்; வியர்வை நின்றுவிடும்.

இப்படி பட்டினி கிடப்பதால் மனிதனுடைய நிறை நாள் ஒன்றுக்கு சற்று ஏறக்குறைய ஒரு பவுண்டு அதாவது ஒரு ராத்தல் குறையும். இப்படிக் குறைவதற்குக் காரணம் தேகத்தில் அதிகப்பட்டிருக்கும் கொழுப்பு முதலில் வெளிப்படுவதும், பிறகு அதிகமாக இருக்கும் சதை குன்றுவதுந்தான். லங்கண மிருப்பதின் பலன் இவையிரண்டுங் குறைவதுதான் என்று நினைக்கக்கூடாது. ஒருவனுடைய சரீரம் நன்றாய் இளைத்து ஒடுங்குகிறவரையில் பட்டினி இருக்க வேண்டியது அவசியம். அப்படி இருந்தால்தான் லங்கணத்தின் பலன் நன்றாய் சித்திக்கும். ஸாதாரணமாய் நாற்பது, அல்லது ஐம்பது தினத்திற்கு லங்கண மிருந்தால் போதுமானது. இப்படி இருந்துவிட்டு பழயபடி மிதமான ஆகாரம் சாப்பிட்டுவந்தால் சரீரம் நோயின்றி சுகமான நிலைக்கு வந்துவிடும். நியாயமாக சரீரத்திற்கு இருக்கவேண்டிய நிறையும் வெகு சீக்கிரத்தில் உண்டாகிவிடும். அதிக ஸ்தூலமாயிருந்து, லங்கணங் கிடந்தவர்களின் சரீரம் மறுபடியும் ஸ்தூலமடையாது. எலும்பு புறப்பட்டு மெலிந்து போயிருந்தவர்கள் லங்கணங் கிடந்தால் அவர்களுடைய சரீரம் மறுபடி சரியான புஷ்டியையும் பலத்தையும் அடையும். முன்னிருந்ததுபோல் தோலும் நரம்புமாய் இருக்கமாட்டார்கள். லங்கணங் கிடந்த முதல்நாள் பசி யதிகமாகத் தோன்றும். மறுநாள் அவ்வளவாய்த் தோன்றாது. இவ்விதமாக மூன்று, நான்கு தினங்கள் சென்றால் பசி என்பது கொஞ்சமேனும் இராது. லங்கண மிருக்க ஆரம்பித்தது முதல் இரண்டொரு நாளில் தேகம் அசதியாயும் பல ஹீன

முள்ளதாயும் தோன்றும். அப்படிப்பட்ட ஸமயத்தில் இளவெயில் மேலே படும்படியாக வெளியே உலாவவேண்டும். இப்படியாக ஐந்து அல்லது ஆறு நாள் சென்ற பின்பு போதுமான பலமும் தைரியமும் தோன்றும். மனம் மிகுந்த உற்சாகத்துடனிருக்கும். சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது எழுதினதையும் படித்ததையும்விட அதிகமாக ஒருவன் லங்கணம் கிடக்கும்போது எழுதவும் படிக்கவும் கூடும். மிஸ்டர் அப்டன் ஸின்க்லர் முதல் நான்கு நாளில் பதினைந்து பவுண்டு நிறை பட்டினி கிடந்ததால் தம்முடைய சரீரத்தில் குறைந்து விட்டதென்றும், ஆனால் பட்டினி கிடந்தபோது சுகமான நித்திரை யுண்டாயிற்றென்றும், பகல் நேரத்தில் தம்முடைய சரீரம் பலஹீனமாக இருப்பதுபோல் தோன்றுமென்றும், ஆனால் அப்படித் தோன்றுகிற ஸமயத்தில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தால் அந்தக் களைப்பு தோன்றாதென்றும் சொல்லுகிறார்.

லங்கண மிருந்துவிட்டு மறுபடியும் ஆகாரம் எடுக்க ஆரம்பிக்கும்போது கடினமான ஆகாரத்தை உட்கொள்ளக்கூடாது. முதல் நாளில் ஒரு டஜன் ஆரஞ்சுப் பழம் சாப்பிடலாம். மறுநாள் இன்னும் இரண்டொன்று அதிகமாகச் சாப்பிடலாம். இப்படியாக இரண்டு மூன்று நாள் சாப்பிட்டான பின்பு பசும்பாலை கொஞ்சங் கொஞ்சமாய் சேர்த்து வரவேண்டும். இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற் கொருதரம் ஆழாக்குப் பால் வீதம் சாப்பிட்டு வரலாம். மிஸ்டர் ஸின்க்லருக்கு இருபத்து நான்கு நாளில், 32 பவுண்டு நிறை, மேற்கண்ட வீதம் சாப்பிட்டு வந்ததால், உண்டாகிவிட்டதென்று அவர் எழுதுகிறார். அவருக்கு 15 பவுண்டுதான் உபவாசத்தினால் குறைந்தது. இப்போதோ 32 பவுண்டு உண்டாகிவிட்டது. இதனால் ஏற்கனவே குறைந்த 15 பவுண்டுபோக 17 பவுண்டு நிறை அதிகமாயிற்றென்பது தெரியவில்லையா? ஆதலால் கொடிய வியாதிகளினாலும், வயிற்றுக் கோளாறுகளினாலும் துன்பப்படுகிறவர்கள் லங்கண மிருந்து அந்தத் துன்பத்தை நீக்கிக் கொள்ளுதல் நலமென்று மிஸ்டர் ஸின்க்லர் வற்புறுத்தி எழுதுகிறார். நம்முடைய சொந்த அனுபவத்திலும் அஜீரணத்தாலாவது, ஜுரத்தினாலாவது வருந்தும்போது, ஒரு வேளை அல்லது இரண்டு வேளை பட்டினி கிடந்தால் சரீரம் குணப்பட்டு விடுவதைப் பார்த்திருக்கிறோம்

நாற்பது ஐம்பது நாள் அன்ன ஆகாரம் இல்லாமல் பட்டினியா யிருக்கமுடியுமோ என்று சிலர் சந்தேகிக்கலாம். மகமதியர்கள் ஒவ்வொரு வருஷத்திலும் ஒரு மாதம் நோன்பு அனுசரிக்கிறார்கள். அந்த ஒரு மாதகாலமும் அவர்கள் ஒருவேளை போஜனந்தான் செய்கிறார்கள். இந்தக் கஷ்டமான விரதத்தை யனுஷ்டிப்பதால் மகமதியர்களுக்கு தன் மறுப்பும் சுகதேகமும் நல்ல பலமும் உண்டாக ஹேதுவாகிறதென்று இந்த விரதத்தைச் சிலாகித்து ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துர் ரஹிம், சென்ற மார்ச்சு மாஸம் 31-ம் தேதி சென்னையில் நடந்த கான்வகேஷனில் பேசினது பலருடைய ஞாபகத்தில் இருக்கலாம். நம்முடைய இந்துக்களும் கார்த்திகை விரதமென்றும், அமாவாசை விரதமென்றும், கந்தர் சஷ்டி விரதமென்றும் பல விரதங்களை ஏற்படுத்திக்கொண்டு உபவாசமிருக்கிறார்கள். இவர்களிப்படி இருப்பதற்கு பல காரணங்களிருப்பினும் இந்த உபவாசங்களால் இவர்களுடைய சரீர நிலைமை ஒழுங்கடைகிறதென்பதில் சந்தேகமில்லை. சாந்திராயண விரதம் எவ்வளவு கடுமையான விரதமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அப்படிப்பட்ட விரதத்தை ஒரு மாஸம் விடாமல் அனுஷ்டிக்கும்போது நாற்பது அல்லது ஐம்பது தினம் லங்கண மிருப்பதும் ஒருவாறு சாத்தியமே. மிஸ்டர் ஸின்க்லர் சொல்லுகிறபடி சேர்ந்தாப்போல் பல தினங்களுக்கு உபவாச மிருப்பது கஷ்டசாத்தியமென்று நம்மவர்கள் நினைக்கலாம் ஆனாலும் பழக்கமே முக்கியகாரணம். அப்படி யனுஷ்டிக்க முடியாவிட்டாலும் தேக அஸௌக்கியமா யிருக்கும்போதும் நிலைமாறி இருக்கும்போதும் கண்ணை மூடிக்கொண்டு அற்ப விஷயத்திற்கெல்லாம் வைத்தியருக்குப் பணம் கொட்டிக் கொடுப்பதைவிட உபவாசமிருந்து தேக ஸௌக்கியத்தை யுண்டுபண்ணிக்கொள்ளுதல் நலம். ஏனெனில் உபவாசமிருப்பது இயற்கை முறையை யொட்டிய மருந்தாகும்.

டி. கே. நடேச பத்தர்,

THE REVENUE INSPECTOR.

ரிவினியூ இன்ஸ்பெக்டர்.

ரிவினியூ இலாகா உத்தியோகஸ்தர்களில் ரிவினியூ இன்ஸ்பெக்டர் முக்கியமானவர். இவர் கிராமக் கணக்கப்பிள்ளைகளுக்கு மேலானவரும் தாசில்தாருக்குக் கீழ்ப்பட்டவருமாவர்.

ரிவினியூ போர்டார் அவர்களின் நிலையான உத்தரவு 142 நெம்பர் 4-வது பாராப்படிக்குக் கிராமங்களில் ரிவினியூ இன்ஸ்பெக்டர் செய்யவேண்டிய முக்கியமான கடமைகள் என்னவென்றால் :—

I. பயிர்களையும் எல்லைக் கல்லுகளையும் பரிசோதித்தல்.

II. அஜிமாஷ் செய்தல்.

III. கணக்குகள் பரிசோதனை செய்தல்.

மேலே சொல்லியவைகள்தான் முக்கியமான கடமைகளாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும், நமக்குத் தெரிந்த வரையில் ஒரு ரிவினியூ இன்ஸ்பெக்டர் கிராமத்தில் செய்யவேண்டியவேலைகள் எவ்வளவோ இருக்கின்றன.

ஒரு ரிவினியூ இன்ஸ்பெக்டர் தான் வருவதாக கிராமத்திற்கு முந்தி சொல்லி அனுப்புவது அவருக்கு சவுகரியம். அவர் காலையில் அஜிமாஷ் செய்யப் புறப்படும்போது மணியகாரர் அல்லது முன்ஸீப், கணக்கப்பிள்ளை, வெட்டி, தலையாரிகளுடன் புறப்படவேண்டியது. முதல் முதலில் ஏரியோ அல்லது இதர ஜலாதாரத்துக்கோ நேராகப்போய் அதின் ஜல ஸப்ளையைப் பற்றியும் அதின் கரைகலுங்கல் முதலானவைகளின் வலுவைப் பற்றியும் அதின் கரையிலிருக்கப்பட்ட நாகதாளியை எடுப்பதின் மூலமாயாவது அல்லது அதின் கால்கள் முதலானவைகளில் மண் எடுத்து தூரஸ்து செய்வதினாலாவது இன்னம் இதர விதங்களினாலாவது ஷை ஜலாதாரங்களுக்கு குடிமராமத்து வேலை கிரமமாய் செய்யப்பட்டதா என்பதையும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது. கிராம முன்ஸீப்பால் வைக்கப்பட்ட குடிமராமத்து ரிஜிஸ்தரை அந்த ஜாகாவிலேயே தணிக்கை செய்து ரிவினியூ இன்ஸ்பெக்டர் தன் கையினாலேயே ஷரா அதில் தாக்கல் செய்யவேண்டும். ஏரியிலிருக்கப்பட்ட மீன்களை ஏரியில் ஜலம் குறைந்தஉடனே ஸரியான காலத்திலும் கவர்ன்மெண்டுக்கு நஷ்டமில்லாமலும் ஏலம் போட்டு பாசிவரிப்பணத்தை உடனே இருஸால் செய்யவேண்டியது. ஜலாதாரங்களுக்கு எவ்வித ரிப்பேர் ஆகவேண்டியிருந்தாலும் அதை உடனே மேலான அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டியது.

பிறகு அடங்கலை கையில் எடுத்துக்கொண்டு வயல் வயலாய் மிதித்து பார்த்துக்கொண்டு போக வேண்டியது. அப்பொழுதே எல்லைக்கல்லுகள் ஸரிவர இருக்கின்றனவா என்பதையும் கவனிக்கவேண்டியது. முக்கியமாய் கவனிக்கவேண்டிய ஸ்தலங்களாவன :—

1. உத்தரவில்லாமல் அனுபவிக்கப்பட்ட புரம்போக்கு அல்லது தீர்வை விதித்த தரிசு நிலங்கள்; முக்கியமாக முந்தியவருஷத்தில் அனுபவிக்கப்பட்டதும் நாளது வருஷத்தில் காலி செய்யப்பட்டதுமானவைகளை ரொம்பவும் கவனிக்கவேண்டியது. ஏனென்றால் கணக்கப்பிள்ளைகள் ஸாதாரணமாய் தனக்குவேண்டாதவர்களை இப்பேர்க் கொத்த சில்லரை ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக ரிப்போர்ட்டு செய்து தண்டத்தீர்வை விதித்து வைப்பது வழக்கம்.

2. ராஜிநாமா கொடுக்கப்பட்ட நிலங்கள்.

3. ரிவினியூ ஏலத்தில் ஸர்க்கார் தாங்களே வாங்கின நிலங்கள்.

4. இறவை நன்செய் நிலங்கள். இவைகளுக்கு ஜலம் ஓடிப்பாய்ந்ததா இறைத்துப் பாய்ந்ததா என்பதை கவனிக்கவேண்டும்.

5. நன்செய்ப் பயிர் சாகுபடி செய்யப்பட்ட புன்செய் நிலங்கள். இவைகளுக்கு ஸர்க்கார் ஜலம் உபயோகப்பட்டதா என்பதை கவனிக்கவேண்டும்.

6. முழுவதிலும் ஸொந்தக் கிணறினால் இறைத்துப் பாய்ச்சப்பட்டதும் அந்தக் காரணத்தினால் தீர்வை தள்ளுபடி செய்யும்படியாய் கேட்டுக்கொள்ளப்பட்ட நிலங்கள்.

7. பஞ்சர் அல்லது தரிசு, சாவி, தீர்வை கம்மி, பிந்தி அடமானம் செய்யப்பட்ட நிலங்கள்.

8. ஒரு போக நிலங்களில் இரு போகம் சாகுபடி செய்யப்பட்டவைகள். முக்கியமாய் அப்படி முந்திய பஸலியில் மடிப்பு சாகுபடி செய்து இந்த வருஷத்தில் மடிப்புக்கு வராத நிலங்கள். முந்திய வருஷத்தில் ஸர்க்கார் ஜலம் உபயோகப் படுத்தினதற்காக தீர்வை ஜாஸ்தி கட்டப்பட்டதும் நாளது வருஷத்தில் அப்படி சார்ஜ் செய்யப்படாததுமான புஞ்சை நிலங்கள்.

இவைகளெல்லாம் மாசூல் பரிசோதனையின் கீழ் வருகின்றன.

எல்லைக் கல்லுகள் காணாமல் போயிருந்தாலும் அல்லது ஸ்தானத்தை விட்டுப் பேர்ந்திருந்தாலும் அப்பேர்ப்பட்ட கல்லுகளை ஸரியான இடத்தில் நடவேண்டியதற்காக லாண்டு ரிகார்ட்டு இன்ஸ்பெக்டர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது.

அஜிமாஷாவது, எந்தெந்த ஏற்பாடுகளின் பேரில் தோப்புகள் வைக்கும்படியாய் கௌல் கொடுக்கப்பட்டதோ அந்தந்த ஏற்பாடுகள் படிக்கு தோப்புகள் பரிபாலனம் செய்யப்படுகின்றனவா என்பதும், கவர்ன்மெண்டு தோப்புகள், பில் முக்தாத் தோப்புகள், பட்டாக் கொடுக்கப்பட்ட பல விருக்ஷங்கள், இதர பட்டாகொடுக்கப்படாத பல விருக்ஷங்கள் இவைகளின் பரிசோதனையும், கடைசியாய் சொன்னபடி கொடுக்கப்படாத பல விருக்ஷங்களின் பலத்தை காலாகாலத்தில் பகிரங்கமான ஏலம் போட்டு ஏலத்தொகையை இருசால் செய்வதும்.

இவைகளெல்லாம் அடங்கலைக்கையில் வைத்துக்கொண்டு அந்தந்த இனங்கள் ஸரிவர தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதைத்தணிக்கைசெய்து அடங்களில் ஷரா கலத்தில் இனிஷியல் செய்யவேண்டியது.

ஸப்டிவிஷன் கணக்குகளும் ஸ்கெச்சுகளும் தயார்செய்வதுடன் நிலங்களைக் கோரிய படி ஸப்டிவிஷன் செய்வதும், வராகன் அதாவது கடன் கொடுக்கும் விஷயமாய் நிலங்களை பரிசோதிப்பதும், ஸர்க்கார் வராகன் வாங்கிக் கட்டப்பட்ட கிணறுகளை பிரதிமாஸம் பரிசோதிப்பதும், மரந்தலை விலைகட்டி வெட்டிக் கொள்ள உத்தரவு கேட்கும் மரங்களை மதிப்புப் போடுவதும், ரிவினியூ இன்ஸ்பெக்டர்களின் கடமை

ரிவினியூ இன்ஸ்பெக்டர்கள் கிராமத்தை சுற்றி வந்து ஊரில் நடந்த ஜனன மரணங்களை விசாரித்து கிராமமுன்ஸீப்புகளால் வைக்கப்பட்டிருக்கிற ஜனன மரண ரிஜிஸ்தர்களை தணிக்கைசெய்து ஏதாவது கேஸுகள் விட்டுவிடப்பட்டதா என்பதைத் தேடவேண்டும். கிராமத்தில் முகாம் செய்திருக்கும் போது பட்டாமாறுதல் செய்யவரும் மனுக்களை இருகக்ஷிக்காரர்களையும் வைத்துக் கொண்டு அங்கேயே உத்தரவு போடலாம். கிராமத்தில் பவுண்டு இருந்தால் அது ஸரியான நிலைமையில் இருக்கிறதா என்பதையும் பவுண்டு கணக்குகளைத்தணிக்கை செய்யவும் வேண்டும்.

கிராமத்தில் பவுண்டில் கால் நடைகளை அடைத்தவருக்குக் கொடுத்த ரசீதுகளையும், அவைகளை விடுதலைசெய்த போது அபராதத் தீனிச்செலவுக்காககொடுக்கப்பட்ட ரசீதுகளையும் வரவழைத்து தணிக்கை செய்ய வேண்டும். ரிவினியூ இன்ஸ்பெக்டர்கள் உலர்ந்து போனதும் காற்றில் விழுந்து போனதுமான மரங்களை 1 ரூபாய்க்குமேல் மதிப்புள்ளவைகளாய் இருந்தால் ஏலம் போட்டு விடலாம். தாலூகாவிலிருந்து உத்தரவின் பேரில் பிரசித்தப்படுத்தப்பட்ட தேதியில் ரிவினியூ பாக்கிக்காக நிலங்களை ஏலம் போடலாம். கிராமத்தின் ஸுகாதார நிலைமையையும், அது சுத்தமாய் இருக்கிறதா என்பதையும், மனிதர்களிலும் கால்நடைகளிலும் ஏதாவது நோய் விசேஷமாய் இருக்கிறதா என்பதையும் குடிப்பதற்கு லாயக்கான ஜலம் ஸுலபமாய் கிடைக்கிறதா என்பதையும், அதை விருத்திசெய்வது அவசியமாய் இருந்தால் இருக்கப்பட்ட கிணறு தடாகங்களை விஸ்தரிக்கலாமா அல்லது ஆழப்படுத்தலாமா என்பதையும், அல்லது புதிதாய் வெட்டவேண்டுமோ என்கிற யோசனைகளையும் கவனிக்கவேண்டியது. கிராமத்தில் மழைக் கணக்கு ஸரியாக வைக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் பயிர் நிலைமையையும் முக்கியமாய் கவனிக்க வேண்டியது.

சில ஜலாதாரங்கள் ஹிஸ்ஸா ஏரிகளாக டுக்கப்பட்டிருக்கலாம். அதாவது, இரண்டுக்கு மேல்பட்ட கிராமங்களுக்குப் பாயும். சில ஜமீன் சுரோத்திரியம் தரவாரி கிராமங்களுக்குப் பாயும். அப்பேர்ப்பட்ட கேஸுகளில் ஜமீன் சுரோத்திரிய கிராமங்கள் எவ்வளவு தண்ணீர்கொண்டுபோகலாமோ, அதற்குமேல் கொண்டுபோகாமலும் அவைகளுக்கு ஹக்கில்லாத கால்களிலிருந்து தண்ணீர் கொண்டுபோகாமலும் பார்த்துக் கொள்ள வேண்டியது.

கிராமத்தில் புறம்போக்கு மரங்கள் திருட்டுப்போன கேஸுகளிலும், ஜாமீன் கொடுக்கிறவர்களுடைய ஐவேஜியைப் பற்றியும், வார்ஸு ஸர்ட்டிபிகேட்டு கேட்ட கேஸுகளில் சொத்து மதிப்பிடுவதும், பாப்பர் வியாஜ்யங்களில் வாதியின் ஸ்திதியைப்பற்றி விசாரித்து ரிப்போர்ட்டு செய்யவும், வேண்டும். தற்காஸ்த்து, இன்கம் டாக்ஸ்வரி, தண்ணீர் சச்சரவு, இன்னும் ஸ்தல பரிசோதனை பண்ணவும் மேல் அதிகாரிகள் ரிவினியூ இன்ஸ்பெக்டர்களுக்கு விசாரணைக்கு அனுப்பிய ஸமாசாரங்களை தீர்க்கமாய் விசாரித்து ரிப்போர்ட்டு செய்யவும் வேண்டும். கிராமத்தில் கணக்கப்பிள்ளைகளின் ரிஜிஸ்தர்களையும் முன்ஸீப்புகள் வைத்திருக்கும் ஸிவில், கிரிமினல் ரிஜிஸ்தர்களையும் பரிசோதிக்கவும் வேண்டும்.

வருஷத்தில் கிஸ்தி மாஸம் 4-களிலும் ஸாதாரணமாய் வசூலைப்பற்றி கவனிக்கவும் வேண்டும். கிஸ்தியானது அந்தந்த மாஸத்தில் 10-தேதிக்குள் கொடுக்கப்பட வேண்டியதால் 10-தேதிக்குமேல் உடனே தன் பிர்க்காவில் ஸௌகரியமான இரண்டு மூன்று முகாமில் கிராம முன்ஸீப்புகளைக்கூட்டி டிமாண்டு கொடுக்கலாம். அதுவரையில் செய்யப்பட்ட வசூல்களையும் கவனிக்கவேண்டியது.

வசூலையும் வசூல் கணக்குகளையும் தணிக்கை செய்வதில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய அம்சங்கள்.

1. அவசியமான கேஸுகளில் டிமாண்டுகள் காலதாமசமன்றியில் கேட்டு பெற்றுக் கொள்ளப்பட்டதா ?

2. அவைகளிலெல்லாம் ஸரிவர உடனே நடவடிக்கை நடத்தப்பட்டதா ?

3. கிராம உத்தியோகஸ்தர்களாலேயே கிஸ்தி சேரவேண்டியது ஏதாவது உண்டா ?

4. தண்டல் அவர்ஜா, வட்டிகணக்கு இவைகள் அந்த தேதிவரையில் பூர்த்தியாக எழுதப்பட்டிருக்கின்றனவா ?

5. குடிகளுக்குக் கொடுத்த ரசீதானது கிராம முன்வலீப் கைதண்டலோடு ஒத்திருக்கிறதா ? இதை கிராமத்திலேயே செய்யவேணும்.

6. சென்ற பஸலி வசூலாகாத பாக்கி எவ்வளவென்பதும், நாளது பஸலி பாக்கி எவ்வளவென்பதும் முக்கியமாய் கவனிக்க வேணும்.

கிராம உத்தியோகஸ்தர்களின் பேரில் ஏதாவது புகாரா உண்டா என்பதை கிராமத்தில் விசாரித்து அதைப்பற்றி கிரமமான நடவடிக்கை நடத்தவேணும். ஒவ்வொருகிராமத்திலும் தச்சன், கருமான், வண்ணான், நாவிதன், முதலிய தொழில் இனாம்தார்கள் அவரவர்களுக்குண்டானவேலையை ஸரிவர செய்கிறார்களாவென்றும், கிராமத்தில் இனாமாக விடப்பட்ட தேவாதாயம் அல்லது தர்மங்கள் ஸரிவா பரிபாலனம் செய்யப்படுகின்றனவா என்பதையும், இனாம் நிலங்களில் எவ்வளவாவது வேறொருவர் அனுபோகத்தில் தற்காலத்திற்காகவாவது அல்லது சாசுவதமாகவாவது விடப்பட்டிருக்கிறதா என்பதையும் கவனிக்க வேண்டும். கிராமத்திலேயே 5 வருஷத்திற்கொருதடவை எடுக்கப்பட்ட கால் நடை ஸென்ஸஸ் ரிஜிஸ்தரையும், 10 வருஷத்திற்கொருதடவை எடுப்பதான ஸென்ஸஸ் வேலைகளையும், அந்த காலத்தில் இருக்கப்பட்ட ரிவினியூ இன்ஸ்பெக்டர்கள் முக்கியமாய் சிரமத்தைப் பாராட்டாமல் கவனிக்க வேண்டும். மேற்சொல்லிய வேலைகளெல்லாம் கிராமத்திலேயே செய்யவேண்டியவைகள்.

பிரதி மாஸமும் 25 தேதிக்கு முன் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு கிராம கணக்கப்பிள்ளைகள் அவரவர்கள் கிராமத்திய சாகுபடி அருவடை கணக்குகளை அனுப்புகிறார்கள். அவைகளை ரிவினியூ இன்ஸ்பெக்டர் ஒன்று சேர்த்துப் பதிந்து தாலூக்காவுக்கு அடுத்த முதல் தேதியில் அனுப்பவேண்டியது. இது விஷயமாயும் இன்னும் அனேக விசாரணை தகவல்களிலுள்ள எழுத்து வேலைக்காக கணக்கப்பிள்ளைகளில் தேர்ந்தவனை ஒருவனை சுமார் 10 ரூபாய் சம்பளம் கொடுத்து வைத்தால் ரொம்பவும் நன்றாய் இருக்கும். ஆனால் இந்த விஷயத்தை கவனிக்கிறவர்கள் ஒருவருமில்லை.

கிராம சாகுபடி கணக்குகளுடன் 20 நெம்பர் கணக்காகிய கால ஸ்திதி கணக்கு அனுப்பப்படுகிறது. அதில் கிராமத்தில் மாஸம் முழுவதிலும் பெய்த மழையையும், ஜலாதாரங்களில் இருக்கப்பட்ட தண்ணீர் இருப்பையும், பொதுவாக கால ஸ்திதி நிலைமையையும், பயிரின் நிலைமையையும், மனிதர்கள் காலநடைகளின் தேக ஸ்திதியையும், மாஸத்தில் எத்தனை நபர்களுக்கு அம்மை குத்தினதென்பதையும் இன்னும் இதர முக்கியமான சமாசாரங்களையும் கிராம உத்தியோகஸ்தர்கள் தாக்கல் செய்கிறார்கள். ரிவினியூ இன்ஸ்பெக்டர் சாகுபடி, கால ஸ்திதி, கணக்குகளில் இனிஷியல் செய்வதுடன் அந்தக் கணக்குகள் ஸரியாய் எழுதப்பட்டிருக்கின்றனவா என்பதையும், பயிர்களின் நிலைமையையும் அவைகளின் நோக்கம் இன்னும் இதர அவசியமானதும் கிரமமானதுமான ஷராக்களை தாக்கல் செய்யவேண்டியது. மேலும் முக்கியமாக மழைபெய்தவுடன் சாகுபடியாகியிருக்கிறதா என்பதை கவனிக்க வேண்டும்.

ரிவினியூ இன்ஸ்பெக்டர் பிரதி மாஸம் தன்னுடைய கஸ்பா கிராமம் தவிர தன் பிர்க்காவில் வெவ்வேறு இடங்களில் இருக்கப்பட்ட

இரண்டு அல்லது மூன்று கிராமங்களுக்குப் போய்ப் பார்க்கவேண்டியது. 3 மாஸத்துக்கு ஒருதடவை தன் பிர்க்காவில் இருக்கப்பட்ட ஒவ்வொரு கிராமத்துக்கும் போகவேண்டியது. இது விஷயமாய் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு ஒரு மாட்டுவண்டியாவது குதிரையாவது வைத்துக்கொள்ள வேண்டியது ரொம்பவும் அவசியம். கவர்ன்மெண்டார் கேட்கிறவர்களுக்கு வண்டிமாடு முதலியவைகள் வாங்குகிறதற்கு 3 மாஸ சம்பளத்திற்கு மேற் படாமல் அட்வான்ஸ் கொடுத்து 12 மாஸத்தில் வசூலித்துக் கொள்ளுகிறார்கள்.

போர்டார் நிலையான உத்தரவு 208—209 படிக்கு உத்தியோகஸ்தர்கள் ஸர்க்யூட்டு போகும்போது அவர்களுக்கு வேண்டிய வண்டிகளும் ஸப்ளைகளும் செய்யவேண்டியது மணியகாரர்களுடைய கடமையாக எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் முகாம் செய்யும்போது இந்த வேலையானது ஸாதாரணமாய் ரிவினியூ இன்ஸ்பெக்டர்களுக்கு ஏற்படுகிறது. அதில் எவ்வித பிசகு ஏற்பட்டாலும் ரிவினியூ இன்ஸ்பெக்டர்கள் தான் தகவலுக்கு வருவார்கள். ரிவினியூ இன்ஸ்பெக்டர்களின் வேலையை முக்கியமாய் நிர்ணயிப்பது வருஷத்தில் ஒரு தடவை அதாவது ஜமாபந்தி சமயம். ஜமாபந்தி என்னவென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அப்பொழுதுதான் ஒவ்வொரு கிராமத்தின் மொத்த பேரீஜு ஏற்படுகிறது.

ஒவ்வொரு ரிவினியூ இன்ஸ்பெக்டரும் மாஸத்தில் 2 தடவை (அதாவது 1உ முதல் 15உ வரையிலும் 16உ முதல் மாஸக்கடைசி வரையிலும்) தன்னுடைய தினசரிவேலைக் கணக்கு தயாரித்து உடனே அனுப்பவேண்டியது. அது அந்தந்த தினம் முடிந்தவுடன் அதில் பிரதிதினம் வேலையை தாக்கல்செய்ய வேணும். வாரத்துக்கொருதடவை பிரதிசனிக்கிழமை காலையில் தாலூகாவில் சேரும்படியாக காலஸ்திதி கணக்கு அனுப்பவேண்டியது. தாலூகாவிலிருந்து பிரதி திங்கட்கிழமை இந்த ரிபோர்ட்டு கலெக்டரிடம் போகிறது. அவர் செவ்வாய்கிழமை காலையில் சேரும்படியாக போர்டுக்கு அனுப்புகிறார். போர்டார் அன்று சாயந்திரம் போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட்டுக்கும், ஒரு தந்தி இந்தியா கவர்ன்மெண்டுக்கும் அனுப்புகிறார்கள்.

மாஸவாரியில் அனுப்பவேண்டிய கணக்குகள் :—

1. ஜநந மரண பரிசோதனை.
2. வராக மனுவு பைசல்.
3. வராகக்கிணறு பரிசோதனை.

இந்த ஸம்பந்தத்தில் ரிவினியூ இன்ஸ்பெக்டர்களின் வருமானத்தைப்பற்றி சொல்லவேண்டியிருக்கிறது. ரிவினியூ இன்ஸ்பெக்டர்களில் ஸாதாரணமாய் இரண்டு க்ரேடு; அதாவது மாஸம் 35 ரூபாய் சம்பளமும், 40 ரூபாய் சம்பளமுமாகும். 25 ரூபாய்க்குக் குறைந்த காயமான சம்பளமுள்ளவர்களை ரிவினியூ இன்ஸ்பெக்டராக போடக்கூடாதென்று உத்தரவாய் இருக்கிறது. ஒரு ரிவினியூ இன்ஸ்பெக்டர் காயமாய் வேலையாகுமுன் ஒருவர் மெட்ரிகுலேஷன், ரிவினியூ லோயர், அகவுன்டு லோயர், ஸர்வே ட்ரெயினிங் இவைகள் ஆகவேணும். ஒரு ரிவினியூ இன்ஸ்பெக்டர் பிரதி மாஸம் 25 நாளுக்குக் குறையாமல் ஸர்க்யூட்டில் இருக்கவேண்டும். அவருக்கு நாள் 1-க்கு 8 அணா படி கிடைக்கும். ஆனால் அவர் 1 நாள்படிவாங்க 24 மணிநேரத்துக்குமேல் கஸ்பா கிராமத்தை விட்டு வெளியில் இருக்கவேண்டும். இதர

உத்தியோகஸ்தர்களைப் போல கஸ்பாவிலிருந்து 5 மயிலுக்கு வெளியே போனால்தான் கிடைக்குமென்பது இல்லை. எத்தனை நாள் சேர்ந்து வெளியில் இருந்தாலும் 10 நாளைக்கு மேல்கிடைக்காதென்பதும் இலலை. பழைய நாள் ரிவினியூ இன்ஸ்பெக்டர்கள் ஒரு விதம், இந்த நாள் ரிவினியூ இன்ஸ்பெக்டர்கள்வேறு விதம். டிப்டிகலெக்டர்கள், ஸப்கலெக்டர்கள், டிஸ்ட்ரிக்ட்டு கலெக்டர்கள் இவர்கள் இப்பொழுது ரிவினியூ இன்ஸ்பெக்டர்களை ஸதாஸர்வகாலம் ஜாக்கிரதையாய் பார்த்துக் கொண்டுவருகிறபடியால் பழைய நாளைய விவகாரங்கள் அனேகமாய் போய்விட்டது. மேலும் குடிகளும் இப்போது முன்னையைக் காட்டிலும் தேர்ந்தவர்களாய் ஆய்விட்டார்கள். நமக்கு தெரிந்தவரையில் ரிவினியூ இன்ஸ்பெக்டர்களின் கடமையை எடுத்து சொல்லி இருக்கிறோம். இந்த வேலையில் எவனொருவன் குறைந்தது 1 வருஷமாவது இருந்து ரொம்ப திறமைபட்டவனாக ஆகிறானோ அவன் மேலுக்கு மேல் பிரமோஷனுக்கு லாயக்காக ஆவான். போர்ட் ஆபீஸில்கூட ரிவினியூ இன்ஸ்பெக்டராய் 1 வருஷம் இருந்த பி. ஏக்களுக்கு கௌரவம் அதிகமாக வைக்கிறார்கள். ரிவினியூ இன்ஸ்பெக்டர் வேலையானது டிப்டி தாசில்தார், ஸப்மாஜிஸ்ட்ரேட்டு வேலைக்கு அடுத்ததென்று போர்டார் நிலையான உத்தரவின் நெம்பர் 141, 2 வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது.

—o—

திருநெல்வேலி ஜில்லா இறும் வெள்ளாக்கால் கிராமத்து வே. ப. திருமலையப்ப முதலியார் எழுதுகிறார்:—“தமிழ்ப் பத்திரிகையில் பரோபகாரம் பூண்டெழுதும் பத்திரிகை “பிழைக்கும் வழி” மாதிரி வேறு பத்திரிகை யில்லை.”

SUMANTHIRAN.

சுமந்திரன்.

இந்தக் கதையானது, சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு பாண்டிய தேசத்திலே நடைபெற்றது. அந்தக்காலத்தில், மதுரையை ஆட்சிசெய்து வந்த வங்கிய சேகர பாண்டியன் என்னும் அரசன் மிகவும் சிற்றின்பப் பிரியனாய்த்தனது ஐம்பத்துநான்காம் வயதில், தனக்குக்கீழ்ப்பட்ட ஒரு சிற்றரசனின் மகளாகிய பத்மாவதி என்னும் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டான். பத்மாவதிக்கு வயது பதினேழு. அவளுடைய அழகை வருணிப்பது மிகவும் கஷ்டம். அவளுடைய நெற்றியை மறுநீங்கிய மூன்றாம் பிறைச் சந்திரனென்றும், கண்களைக் கயல்மீன்களென்றும், காதுகளை வள்ளைகளென்றும், கன்னங்களைக் கண்ணாடிகளென்றும் அந்தக்காலத்துக் கவிஞர்கள் பலவாறு புகழ்ந்து வருணித்திருக்கிறார்கள். அவளுடைய மூக்கு குமிழம்பூவாகும், உதடுகள் செவ்வாம்பலாகும், பற்கள் முல்லையரும்புகளாகும், பற்களிடையே கனிந்துவரும் இனியசொற்கள் கரும்பேயாகும். பத்மாவதி அதிக சுந்தரம் பொருந்தியவளென்றாலும், உடலழகைப்போல் அவளிடம் மன அழகில்லை. வயதில் சிறியவளாயிருந்தபோதிலும், புத்தியிலும் யோசனையிலும் தந்திரத்திலும் மிகவும் தேர்ந்தவளாயிருந்தாள். இப்படிப்பட்ட குணவிசேஷங்கள் வாய்ந்த பத்மாவதி வங்கிய சேகரனைத் தன் கண்களால் மயக்கிச் சொற்களால் வசப்படுத்தி ஸகலமும் தன்னிஷ்டம்போலவே நடத்தி வந்தாளென்பதில் ஆச்சரியமில்லை. அரசன் தன்மனைவியின் சொல்படி கேட்பவனென்றும், சுயபுத்தியிழந்தவனென்றும், தேசமெங்கும் வதந்தி பரவிற்று. ஆனால் அரசன் தன்மனைவியின் சொற்கேட்டு அதுவரையில் யாதொரு தீச்செயலும் செய்யவில்லை. ஆதலால், கருணாகரர் முதலிய மந்திரிமார்கள் அரசனிடம் எதிர்த்துக் கண்டித்து வார்த்தையாடாமல் மௌனமாகவே யிருந்தார்கள்.

வங்கியசேகரன் வாலிபப்பருவத்தில் மிகவும் அழகுடையவனாயிருந்தாலும், தற்காலம் வயதாகிவிட்டபடியால் தேகம் தளர்ந்து, நரைத்துப் பல்லுகள் இல்லாமல் விகாரமாகவே யிருந்தான். இப்படிப்பட்ட புருஷனை, இளமையும், தந்திரமும் வாய்ந்த பத்மாவதி கொஞ்சமும் விரும்பாமல், (விரும்பாதபோதிலும் தன்னுடைய வெறுப்பை வெளிப்படையாய்க் காட்டாமல்), மிகவும் சாமர்த்தியமாய் இல்லறம் நடத்திவந்தாள். தன்னைப்போல் இளமையும் அழகும் கொண்ட கணவனை மணந்திருந்தால், பத்மாவதி மிகவும் பதிவிரதையாகவே யிருந்திருக்கலாம். அரசன்மேல் பத்மாவதிக்கு எவ்வளவு வெறுப்புண்டாயிற்றோ அவ்வளவு விருப்பு சுமந்திரன்மேல் அரசிக்கு ஏற்பட்டது. சுமந்திரன் முதல் மந்திரியின் புத்திரன். சுமார் பதினெட்டு வயதுடையவன். புருஷர்களுக்குரிய லக்ஷணங்களெல்லாம் அமைந்தவன். நிரம்பிய கல்வியும் கேள்வியுமுடையவன். மந்திரியின் புத்திரனென்பது அவனுடைய நற்குணங்களாலேயே விளங்கும். சுமந்திரன் மேல் ஆசை கொண்ட அரசி, அரசன் வேட்டைக்குப் போன ஒருநாள் அந்திப்பொழுதில், அவனைத்தன் அந்தப்புறத்துக்கு வரவழைத்தாள். அரசியின் கட்டளையைப் பெற்ற மந்திரி குமாரன், தன்னை வரவழைத்த காரணம் என்ன என்று தெரியாமல், ஏதோ ராஜகாரியமாக இருத்தல் வேண்டுமென்று எண்ணி சீக்கிரமாகப்போனான். சுமந்திரனைக்கண்டதும் பத்மாவதியின் மனமெல்லாம் இளகிற்று. தன்னுடைய நிலைமையையெடுத்துச்சொல்லி தன் எண்ணங்களையெல்லாம் அரசி வெளியிட்டாள். மகா உத்தமனாகிய சுமந்திரன் அரசியின் கெட்டவார்த்தைகளைக் கேட்டதும் பிரமித்துத் திகைத்து, இன்னது செய்கிறதென்று அறியாதவனாய் அந்தப்புறத்திலிருந்து ஓட்டமாய் ஓடிவிட்டான் சுமந்திரன். உடனே அரசி திடுக்கிட்டு இனி என்னவருமோ, ஒருவேளை சுமந்திரன் அரசனிடம் உண்மையைச் சொல்லிவிடுவானோ என்று பயந்தாள். சிறந்த கல்வியும் சீரிய குணமும் படைத்த சுமந்திரன் அவ்விதம் செய்யமாட்டான் என்று மனதை தைரியப் படுத்திக்கொண்டாள். சுமந்திரனோ அரசியின் தீய எண்ணங்களை நினைத்து மனம் புழுங்கி, இனிமேல் மதுரையிலிருப்பதே தன்க்குப் பெரிய ஆபத்தாய் முடியுமென்று எண்ணி தன் பெற்றோர்களிடமும் யாதொன்றும் சொல்லாமல், அன்றிரவே பொதியமலைச்சாரல் போய்ச் சேர்ந்தான். அங்கே வேடர்கள் தலைவனாகிய வாசவனிடம் தங்கி வேட்டைத் தொழிலை மேற்கொண்டு சிலகாலந் தள்ளி வந்தான். வாசவன் சுமந்திரனை மந்திரி குமாரனென்று தெரிந்தபோதிலும் யாதொன்றும் விசாரிக்கவில்லை. சுமந்திரனும் யாதொன்றும் சொல்லவுமில்லை.

மந்திரி குமாரன் போய்விடவே மதுரையெங்கும் பெரிய கூச்சலுண்டாயிற்று. சுமந்திரனின் பெற்றோர்களும், வங்கிய சேகரனும், மற்றையோர்களும் ரொம்பவும் துக்கித்து, அவன் திடீரென்று மறைந்ததற்குக் காரணமின்னதென்று அறியாதவர்களாய்ப் பலதிசைகளிலும் தேடிப் பிரயோஜனமில்லாமல் கவலையுடன் வாழ்ந்துவந்தார்கள். மந்திரி குமாரன் மறைந்தானென்ற செய்தி தேசமெங்கும் பரவவே, அதை அந்தக் காலத்தில் தஞ்சையை

ஆண்டுவந்த அசகாய சோழனும் கேள்விப்பட்டான். சோழன் மனதில் சந்தேக முண்டாயிற்று. சோழனோ பத்மாவதியிடம் அதிக ஆசை கொண்டவன். அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று எவ்வளவு முயன்றும் நினைத்த காரியம் கைகூடாதவனாய் எப்போது சமயம் வருமென்று காத்திருந்தான். பத்மாவதி பாண்டியனைக் கலியாணம் பண்ணிக்கொண்டபின்பு அவள்மேல் சோழனுக்குக் கோபமுண்டாயிற்று. எவ்விதம் தன்னுடைய ஆசையையும் கோபத்தையும் தணிக்கலாமென்று சிந்தித்த சோழனுக்கு இது நல்ல சமயமாயிற்று. பல திசைகளிலும் சுமந்திரனைத் தேடினான். கடைசியில் வாசவனிடத்தில் சுமந்திரன் தங்கியிருப்பதாய்க் கேள்விப்பட்டு அங்கே போய் ஸகலத்தையும் தந்திரமாய் விசாரித்து உண்மையை அறிந்தான். உடனே, சுமந்திரன் எழுதியது போல் அரசிக்கு ஒரு கடிதம் எழுதினான். தான்செய்தது தவறென்றும், தன்னைத் தனியே ஓரிடத்தில் சந்திக்கவேண்டுமென்றும், அதன் பின்னால் இருவரும் தேசப்பிரஷ்டர்களாய்ச் சுகமே வாழலாமென்றும் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தது. இந்தக்கடிதத்தைப் பெற்ற அரசி மிகமகிழ்ந்து அன்று தினமே சுமந்திரனைச் சந்திக்கலாமென்று மனமிளகி கடிதத்தில் குறிக்கப்பட்ட இடம் வந்து சேர்ந்தாள். அங்கே அசகாயன் காத்திருந்தான். சோழன் செய்த சதியோசனையும் மோசமும் பத்மாவதிக்குத் தெரியவந்தன, என்னசெய்வாள். இருந்தாலும், பத்மாவதி மிகுந்த ஊக்கமுடையவளாதலால், சோழனை ஏமாற்றித் தப்பித்தன் அரண்மனை சேர்ந்து பாண்டியனுக்கு ஸகலமும் தெரிவித்துக்கோ என்று அலறி வீழ்ந்தாள்.

பாண்டியன் மனதில் கோபம் பொங்கிற்று. தன் மனைவி ஏன் தனியாய்ப்போனாள் என்பதை விசாரிக்க மறந்தான். சோழன்மேல் சண்டைக்குப் புறப்பட்டான். பாண்டியனுடைய சேனைகள் பலதிசைகளிலிருந்தும் வந்துதிரண்டன. சுமந்திரனும் வாசவனும் யுத்தச் செய்தியைக் கேள்விப்பட்டு தம் வேடுவப்படைகளுடன் வந்து சேர்ந்தார்கள். பலநாள் மறைந்திருந்த சுமந்திரன் வந்ததும் மன்னனும் மந்திரியும் ஸந்தோஷப்பட்டார்கள். இந்தச் செய்தியையறிந்த அரசி இனிமேல் ஸகலமும் வெளியாய் விடுமென்று பயந்து, சந்நியாசி வேஷம்போட்டுக்கொண்டு அரண்மனையிலிருந்து தப்பியோடினாள். சோழனுக்கும் பாண்டியனுக்கும் தஞ்சைக்குச் சமீபத்தில் பெரிய யுத்தம் நடந்தது. சுமந்திரன் யுத்தத்தில் மிகவும் பராக்கிரமத்துடன் எதிர்த்து சண்டை போட்டு அசகாயனைப் பிடித்துக்கட்டிப் பாண்டியன் முன்னால் கொணர்ந்து நிறுத்தினான். யுத்தம் முடிந்த பின்பு பாண்டியன் உண்மையையறிந்து பத்மாவதியின் தீக்குணங்களுக்கு ரொம்ப வெட்கி, சுமந்திரன் தன் அரண்மனையிலிருந்து நீங்கியோடியதே உத்தமமெனச் சிந்தித்தான். சிலதினங்களான பின்பு, தோல்வியுற்ற அரசனாகிய சோழன் தன்னைப் பிடித்துக்கட்டிய சுமந்திரனின் சௌரியத்தைப் பெரிதும் வியந்து, அவனுக்குத் தன்மகள் இன்பவல்லியைக் கலியாணம் பண்ணிக்கொடுப்பதாய்ச் சொன்னான். சுமந்திரனுக்கும் இன்பவல்லிக்கும் மதுரையிலே விவாகம் மிகச் சிறப்பாய் நடந்தது. சந்நியாசி கோலம் கொண்ட பத்மாவதி தன்னுடைய தீக்குணங்களையெல்லாம் நோக்கித் துக்கித்து, தன்னாலேயே தீமைகள் விளைந்தனவென்று பரிதபித்து கலியாணத்துக்கு வந்து தம்பதிகளை ஆசீர்வதித்து விட்டுப்போய் விட்டாள்.

கற்பனை.—வயதானவர் வாலிபப்பெண்களைக் கலியாணம் செய்து கொள்வதால் பெரிய தீமையும் அவக்கியாதியும் நேரிடுகின்றன.

SELECTIONS.

விசேஷத் திரட்டு.

THE GOSPEL OF "STRENUOUS LIFE" OR, CO-ORDINATION OF CAPITAL AND LABOUR.

"WORK TO LIVE AND LIVE TO WORK."

"பிழைக்கும் வழி: உழைக்கும் வழி."

I

"பிழைக்கும்வழி உழைக்கப்பழகுவ" தென்றா ருண்மையே!
உழைக்கும் வழியை உரைத்திடக் கேண்மினோ:
உழைப்பெனப் படுவது இழுக்கறப் பிழைத்தலாம்;
பிழைப்பும் உழைப்பும் பிழைபடாச் செல்வம்:
உழைப்பவன் பிழைப்பன், பிழைப்பவன் உழைப்பன்;
உளவறிந் துழைப்பான் உண்மையிற் றலைவன்;
பிழையறப் பிழைப்பவன் பெரியோ னவன்;
உழைப்புக்கும் பிழைப்புக்கும் ஒற்றுமை வேண்டும்;
உழைப்பொடு பிழைப்புமே யொன்றா தாகில்
நுழைவழி கண்டு நுழைந்திடும் வறுமை,
பிழையறப் பிழைக்கும் வழியுமே தேயும்,
ஏழைகள் வருந்தக் கோழைப் படுமறம்;
கோழைப் பட்டுக் குன்றும் அறமாயின்
வழுமைப் பட்டு அழிந்திடும் ஆக்கம்;
அழிந்திட ஆக்கம் குறைந்திடும் ஊக்கம்;
எப்படி யென்பது இயம்பக் கேண்மின் :—

II

"உழைப்பவ னுழைத்தும் பிழைப்பில னாகில்
பிழைப்பவ ரெல்லாம் பிழைபடு செல்வராம்;
பிழைப்பே உழைப்பும் உழைப்பே பிழைப்புமாய்
ஏழைக் கிரங்கு மீசன் படைத்தான்;
பிழைபட அவன் விதியெலாம் பிழைபடும்;
ஏழைகள் எளிமையில் வருந்தியே நலிவர்;
கோழை மனத்தர் குவித்திடுவர் தனம்;
பாழை யுழுது பண்படுத்த வாற்றா தார்
ஏழைக ளெழுதிட ஏய்த்துப் பிழைப்பர்;

ஊழைப் பெரிதாய் உகந்துமே கூறி
கூழைக் குடித்துப் பாழை யுழுவென்பர்;
உழு துழுதுழைத்தவன் கூலியைப் பிடித்துப்
பொழுது போனதும் பழுது பாராட்டுவர்:
பழுதுகள் சொல்லி யுழுதவன்கூலியை ஒட்டப்பிடிப்பார்;
உழுதவன் அழுதுயிர் ஓட்டிப் போகப்
பழுது சொன்னவன் பணத்திற் பெருப்பன்."

III

"பணம் பணமென்று பணவாசைப் பட்டு
பிணமது போலும் பணத்தைச் சுமப்பர்;
பணத்தைச் சுமப்பார் குணத்தைமறப்பார், பின்
மாசுணம்போ லுண்டு மயங்கிக் கிடப்பார்;
காசுபணம் வேண்டிக் கர்மத்தை மறப்பார் *
தாசிவேசி யோடு நேசித் திருப்பர்;
ஊசிமுனை மேல்நிற்கும் உள்ளறி வதனை
வேசிய ருறவால் நேசியா தொழிவர்;
காசிராமேச் வரமென்று பேசியே திரிவார்
நாசிமேல் நாட்டம்வைத்து வாசியை யறியார்;
கூசிடாது பணத்தைக் குவித்துமே வைத்து
புசிக்கும்வகை யறியாது புலாலை வளர்ப்பார்;
நேசித்துப் பானத்தை வானத்தை யொறுப்பார்
பூசித்து நேசித்த புண்யத்தை மறப்பார்;
ரேசித்துப் பூரித்து வாசிவசம் செய்யார்
வாசித்து வழக்குரைத்து வகைமோசம் போவார்."

IV

"வகைமோசம் தாம்போவார் பகைமோசம் செய்வார்;
நகைமோசம் † செய்தவர் சுவர்மோசம் செய்வார்;
வகைவகையாப் பேசியவர் வார்த்தைகளை வளர்ப்பார்;
சிகைசிகையா ‡ வேதத்தைச் சீச்சீயென் றொறுப்பார்
பகையென்றும் உறவென்றும் பாராது பேசியவர்
நகையென்றும் நட்டென்றும் பணத்தையே சேர்ப்பார்;
வகைவகையா அவர்செய்யும் மோசத்தைச் சொல்லில்
பகைபகையாச் சொன்னோரைப் பகைத்துமே காய்வார்;
ஆகையினாலே அனைத்தையுஞ்சொல்லாது இனத்தையே கோரி
ஊகையினாலேயிதை உணர்ந்திடு மென்றுரைப்பேன்."

---

* கர்மம் வளரும் தர்ம விதியை மறப்பார்.
† பொய்ச்சிரிப்புக்காட்டி.
‡ குடுமிவைத்தவர் = குடித்தனக்காரர் ஒவ்வொருவரும்.

V

"ஏழைகள் பிழைக்கும் வழியெது வென்சில்,
கோழைகள் தாமாகிக் குழையாது பிழையாது
ஏழைக் கிரங்கும் ஈசனே துணையென்று
ஊழைக்கண் டஞ்சாது ஊழ்வினையை வளர்க்காது
நாழிகை தோறும் நமனுண் டென்றஞ்சாது" *
ஊழூழி காலமா யுள்ளதொரு ஆத்மன்
† ஆழி கையேந்தியே ஏழைதம் முள்ளத்தில்
நாழிகை தோறும் ஆள்கிறா னென்றெண்ணி
கோழை மனத்துடைக் குணக்கே டரைவிட்டு
‡ ஏழை பங்காளன் இனத்தோடே சேர்ந்து
"உழைப்பே னுழைப்பேனு னுய்யவே யுழைப்பேன்"
"இழைப்பே னிழைப்பேன்வல் விதியையு மிழைப்பேன்"
என்றுறங் கொண்டு உள்ளத்தே யுணர்ந்து
கன்றுதன் தாய்பால் குதித்தோடுமா போல்
"ஊருக் குழைத்துநா னுதாரி யாவேனென்"
றுரையும் தஞ்மென் றஞ்சி யடையாது
பேரையும் ஊரையும் பெரிதாக வெண்ணாது
சாரையும் பாம்பும் சேர்ந்துறையுந் தன்மைபோல்
தானுந் தன்னீசனுஞ் சேர்ந்துழைக்க வல்லீரேல்
ஏழையும் பிழைக்கலாம் ஏழுலகும் ஆளலாம்
இதுசத்தியம் சத்தியம், சத்தியமிது சத்தியம்."

அப்படி ஆளப்பெற்று "அணைந்தோர் தன்மை"யை எம்பெருமான் திருமூலர் சொல்லக்கேளும்:—

"ஆரா லுமென்னையமட்ட வொண்ணா தினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி யங்கே திரிவ தல்லாதினி
யார் பாலுஞ் சாராவறி வறிந்தேனே."

"ஒன்று கண்டீருலகுக் கொரு தெய்வமும்
ஒன்று கண்டீருலகுக் குயி ராவதும்
நன்று கண்டீரினி நமசி வாயப்பழந்
தின்று கண்டோற்கிது தித்தித்த வாறே."

ஓம் திருமூலன் திருவடிகளே சரணம்.

"விவேகசிந்தாமணி."

---

* தேஹோஹம் என்கிற பாவனையினாலேயே சாவுக்கஞ்சும் பயமுண்டாகிறது.
† சக்ரதரனாய்
‡ சத்துக்களுடைய சாதுசங்கம் பாராட்டி.
§ "தான் முன்னஞ்செய்த விதி வழிதானல்லால், வான் முன்னஞ்செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை" என்பது திருமந்திரம்.

VARIETIES OF COTTON GROWN IN INDIA.

இந்தியாவில் பயிரிடும் பருத்தி தினுசுகள்.

பருத்தி பயிரிடும் விஷயத்தில் நிபுணரான ப்ரொபெஸர் காமி என்னும் துரையானவர் இந்தியா முழுவதும் சுற்றிப் பருத்தி தினுசுகளை ஆராய்ச்சி செய்திருக்கிறார். தற்காலம் இந்தியாவில் பயிராகும் பல தினுசுகளில் பம்பாய் ராஜதானியில் நவஸாரி என்னுமிடத்தில் பயிராகும் தினுசு முதல்தரமானதென்றும், சூரத்துப் பருத்தி அதற்கடுத்த தரமுள்ளதென்றும், ப்ரோச்சுப் பருத்தி மூன்றாவதென்றும் எழுதியிருக்கிறார். இந்தத்தினுசுகளின் இழை நீளமும் நேர்த்தியும் வெகு சிலாக்கியமுமானது. இந்தத்தினுசுப் பஞ்சுக்குத்தான் ஐரோப்பிய நாடுகளில் அதிகமான விலை கொடுக்கப்படுகிறது.

பஞ்சாப், சிந்து, ராஜபுட்டானா, மத்திய இந்தியா, இந்த நாடுகளில் ஒருவகையான பருத்தி பயிரிடப்படுகிறதாம். இழை நீளத்திலும் நேர்த்தியிலும் அது மிகவும் தாழ்வாயிருக்கிறதென்று கண்டு பிடிக்கப்பட்டது. என்றாலும் அது மிகவும் வெண்மை நிறமுடையதாயிருப்பதால், கம்பளி ரோமத்துடன் கலந்துகொள்ள உபயோகப்படுகிறதென்றும் அந்தக்காரணத்தைக் கொண்டு அதற்கு அதிகவிலை கிடைப்பதாகவும் தெரியவருகிறது. பஞ்சாப் தேசத்தில் அயல் தேசங்களின் பருத்தி தினுசுகளைப் பயிரிட்டுப் பரீக்ஷித்ததில் ஈஜிப்ட்தேசப் பருத்தியைப் பற்றித் திட்டமாய் ஒன்றும் சொல்லக்கூடவில்லையென்றும் "ஜியார்ஜியன் அப்லண்ட்" பருத்திமட்டும் பிரயோஜனமுள்ளதாயிருக்குமென்றும் எழுதியிருக்கிறார். சிந்து நாட்டில் அமெரிக்கா தேசப் பருத்தி வகைகள் பயிரிட்டு நிலை நிறுத்தலாமென்னும் நம்பிக்கையிருப்பதாகச் சொல்லுகிறார்.

கராச்சியில் சாக்கடைத்தண்ணீர் பாயும் ஒரு பண்ணையில் சில பருத்தி வகைகளைப் பயிரிட்டதில் அவைகள் கெட்டுப்போயினவென்று தெரிகிறது.

நடியாட் ஸர்க்கார்ப் பண்ணையில் போர்போன் பருத்தி பயிரிட்டதில் அதிக லாபம் கிடைத்திருக்கிறதாகத் தெரியவருகிறது. தற்காலத்தில் அயல் நாட்டிலிருந்து கொண்டுவந்திருக்கும் மரமாக வளரும் பருத்தி தினுசுகளில் "போர்போன்" பருத்திதான் இந்தியாவில் அதிகமாய்ப் பயிரிட லாயக்கானது என்பது காமி துரையவர்களுடைய அபிப்பிராயம்.

பல்லாரி ஸர்க்கார்ப் பண்ணையில் பம்பாய் ராஜதானியிலுள்ள பருத்தி தினுசுகளைப் பயிரிட்டுப் பரீக்ஷை செய்ததில் மூன்று தினுசுகள் அங்கே நன்றாய் உண்டானதாகத் தெரியவருகிறது. ப்ரோச்சு தினுசு மட்டும் வரவர மந்தகதியடைந்து வருவதாகச் சொல்லுகிறார். சென்னை ராஜதானியிலுண்டாகும் பருத்தி கொஞ்சம் மஞ்சள் நிறமாயிருக்கிறது. துய்ய வெள்ளையாயிருப்பதில்லை. பம்பாய் வியாபாரிகள் துய்ய வெள்ளை நிறமுள்ள பஞ்சையே வாங்கப் பிரியப்படுகிறார்கள். சென்னை ராஜதானியின் தென்ஜில்லாக்களில் உப்பம் பருத்தியைவிடக் கருங்கண்ணிப் பருத்தி சிலாக்கியமானதென்று தீர்மானித்து அந்த தினுசை விர்த்திபண்ண முயன்று வருகிறார்கள். பருத்தி விதைப்பதில், கைவிதைப்புச் செய்வதைவிட, விதைக்கலப்பையில் விதைப்பதின் உபயோகம் அதிகமென்று இப்போதுதான் தென் பாகங்களில் தெரிந்துகொண்டு, விதைக்கலப்பைகளை உபயோகிக்க முயன்று வருகிறார்கள். இவ்வருஷத்தில் சென்னை ராஜதானியில் "போர்போன்" தினுசுப் பருத்தியை சாகுபடி செய்யவேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றனவாம்.

கிருஷகன்.

HAIRY CATERPILLARS.

கம்பளிப்பூச்சிகள்.

தமிழ் ஜில்லாக்களில் "கம்பளிப்பூச்சி" என்று சொல்லுகிற மயிருள்ள புழுக்கள் பயிரைச்சேதப்படுத்தும் ஜெந்துக்களென்று தென்னிந்தியாவிலுள்ள எல்லாருக்கும் தெரியும். மழைகாலத்தில் திடீரென்று உண்டாய் வெள்ளாமைகளுக்கு அதிக கெடுதி செய்கின்றன. அவைகள் சோளம், கம்பு, நிலக்கடலை, பயறு வகைகள், இவைகளைத்தான் விசேஷமாய் அழித்துவிடுகின்றன.

இந்தக்கம்பளிப்பூச்சிகள் பயிர்களைத் தின்றபின் மண்ணுக்குள் நுழைந்துகொண்டு பேரீச்சங்கொட்டையைப்போல் உருமாறி மறுவருஷம் மழைகாலம் வரும்வரையில் அந்தப்படியே (மண்ணுக்குள்) கிடக்கும். மழைகாலம் ஆரம்பித்து தரை போதுமானபடி நனைந்ததும் இந்தப்பூச்சிகள் மேல் நோக்கித் துளைத்துக்கொண்டு தரைமட்டத்துக்கு வந்து, பொட்டுப்பொட்டாயிருக்கும் சிறகுகளுடனும் மஞ்சள் அல்லது சிவப்பு வரிகளுள்ள உடம்போடும் கூடிய வெள்ளைப்பூச்சிகளாக வெளிக்கிளம்புகின்றன. இந்தப்பூச்சிகள் சாதாரணமாய் கொள்ளை கொள்ளையாய் ஒரே தடவையில் ஒரு மிக்கக் கிளம்புகின்றன. அப்போது கிராமாந்தரங்களில் விளக்கைச்சுற்றிலும் இவைகள் கூட்டமாய் திரண்டுகொண்டிருப்பதைப் பார்க்கலாம். பெட்டைப் பூச்சிகள், இலைகளில் அநேக முட்டைகளிடுகின்றன. கம்பு, சோளம், நிலக்கடலை இவைகளின் இலைகளின் கீழ்ப்பக்கத்தில் திரள்திரளாய் முட்டைகளிருக்கக்காணலாம். இந்த முட்டைகள் பொரிந்து பின் கம்பளிப்பூச்சிகளாகும்.

இதற்குப், பரிகாரமான உபாயங்கள்.—இந்தப் பூச்சிகள் முட்டையிடுவதால் தான் திடீரென்று புழுக்கள் உற்பத்தியாகின்றன. ஒரு பூச்சி 500 முதல் 1,200 முட்டைகள் வரையிலும் இடும். ஆகையால் ஒரு பூச்சியைக்கொன்றால் பின்னிட்டு 500 முதல் 1,200 புழுக்கள் வரையிலும் கொன்றதுபோலாகும். நல்ல மழைபெய்து தரை தக்கபடி நனைந்ததும் கூடுகளிலிருந்து நூற்றுக்கணக்காய்ப் பூச்சிகள் புறப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு விளக்கண்டை வந்து சேர அதிக ஆவல் இந்தப் புழுக்களின் தொந்திரவுள்ள இடங்களில் ஸமயம்பார்த்து விளக்குப் பொறிகளை வைத்தால் இந்தப் பூச்சிகளை ஒருமிக்கத் தொலைத்துவிடலாம்.

விளக்குப்பொறி என்பது விளக்கண்டை வரும்பூச்சிகளைத் தானேகொல்லும் ஒரு சூத்திரம். இந்த சூத்திரம் பூச்சிகளை இழுக்கிறதற்கு விளக்கொன்றும், அதன்கீழ், வந்த பூச்சிகளைக்கொல்ல மண்ணெண்ணெய் கலந்த தண்ணீருள்ள தட்டம் ஒன்றும் சேர்ந்து அமைந்துள்ளது. ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கு உள்ளே வைக்கக்கூடிய நான்கு மூலை கண்ணாடி லாந்தரை வைத்துக்கொண்டு விளக்குப்பொறி செய்துவிடலாம். இதன் விலை சொற்பம். இது எல்லா ஊர்களிலும் சுமார் 6 அணாவுக்கு வாங்கலாம். தேங்காய் எண்ணெய் பாதி, மண்ணெண்ணெய் பாதியாகக் கலந்து உபயோகிக்கவேண்டும். தனி மண்ணெண்ணெயை விட இந்தக்கலப்பு பிரகாசமாய் எரியும். புகையும் பிடியாது. பூச்சிகளைப்பிடிப்பதற்கான மண்ணெண்ணெய் கலந்த தண்ணீரின் விஸ்தீரணம் அதிகமாய் இருக்கும்படி தட்டம் அகன்று இருக்கவேண்டியது அவசியம். 2½-முதல் 3-அங்குலம் ஆழமும் இரண்டடி சதுரமும் உள்ள ஒரு தகரத்தட்டம் இதற்கு ஏற்றதென்று அநுபோகத்தில் தெரிந்திருக்கிறது. 6 அல்லது 8 அணாவுக்கு

எந்த தகரக்கடைக்காரனும் செய்துகொடுப்பான். இதில்லாவிட்டால் ஏற்றச்சால்போல் அகன்றவாயுள்ள எந்தப்பாத்திரமும் இதற்கு உதவும்.

தனியாக ஒரு மூங்கில் கால் நட்டு அதிலிருந்து தட்டத்திற்குமேலே லாந்தரை தொங்கவிடவேண்டியது. ஆழமில்லாத பாத்திரமாயிருந்தால் அதன் நடுவில் ஒரு கல்வைத்து அந்தக்கல்லின்மேல் லாந்தரை வைத்துவிடலாம். எந்தப் பயிரைக்காக்க இந்த ஏற்பாடு செய்கிறோமோ அந்தப்பயிர் மட்டத்திற்குமேல் இந்த கருவி முழுவதும் உயர்ந்து இருக்கவேண்டும். தூரத்திலிருந்து பார்த்தால் விளக்குத் தெரியும்படி. ஒரு மண்குவியலின்மேல் வைக்கலாம்.

விளக்குப்பொறி சோதனைகள்.—இந்த உபாயம் பலிக்கிறதா என்பதை சோதித்தறியும் பொருட்டு 1909 வருஷம் ஜுலை ஆகஸ்டு மாதங்களில் மஞ்சக்குப்பம் ஜில்லாவிலிருக்கிற பன்னிக்குப்பம் கிராமத்து நிலங்களில் 15 விளக்குப் பொறிகள் வைக்கப்பட்டன. முதலில் ஒரு சிறு கூட்டம் முந்தியநாள் பெய்த 1 அங்குல மழைக்கப்புறம் ஜுலைமீ 23௳ இரவிலும், பிறகு அதிலும் மிகப்பெரிய கும்பல் ஆகஸ்டுமீ 8௳ பெய்த 1½ அங்குல மழைக்கப்புறம் 10௳ சாயந்தரமும் ஆக இரண்டு வெவ்வேறு கும்பலாக அந்த வருஷம் இந்தப் பூச்சிகள் புறப்பட்டன. முதற் கூட்டமோ கொஞ்சம் 400 பூச்சிகள்தான் 4 ராத்திரியில் பிடிபட்டன. இரண்டாவது கும்பலில் நாலு இரவில் 7,400 பூச்சிகள் பட்டிறந்தன. அதில் 3,800 முதல் நாள் இரவிலேயே பிடிபட்டன. இந்த 7,400 பூச்சிகளில் குறைந்தபட்சம் அரைவாசி பெட்டைகளாயிருக்கவேண்டும். ஒரு பெட்டை 500 முதல் 1,200 முட்டைகள் வரையிடுகிறதென்பதை யோசித்துப்பார்க்கும்போது இந்தப்பொறி எவ்வளவு சிறந்ததென்பதைத் தெளிவாய் நாம் காண்கிறோம். இந்த உபாயத்தால் தப்புவிக்கப்பட்ட நிலங்களுக்கருகில் ஒரு பூச்சிகூட காணாததினாலே பன்னிக்குப்பங்கிராமத்துக் குடியானவர்கள் இது ஒரு கைகண்ட முறை என்று செவ்வையாய் அறிந்து கொண்டார்கள்.

முடிவு.—இந்தத் தந்திரத்தினால் பூரண நன்மையடையவேண்டுமானால் ஒரு கிராமத்திலிருக்கும் இரண்டொரு குடியானவர்கள்மட்டும் தங்கள் நிலங்களில் விளக்குப்பொறிகளை வைத்தால் போதாது. அப்படிச்செய்வதினால் அந்தப் புலங்களிலும் அவைகளுக்கடுத்த புலங்களிலும் உள்ள பூச்சிகள் தப்பாமல் பிடிபட்டு இறக்கும் என்றாலும், இந்த விளக்குப் பொறிகளுக்கு எட்டாத தூரத்திலுள்ள மற்றப் புலங்களில் இடப்பட்டிருக்கும் முட்டைகள் பொரித்த புழுக்கள் கடைசியில் இங்கும்வந்துசேர்ந்துவிடும். ஆகையால் ஒரு இடத்திலுள்ள எல்லா குடிகளும் ஏகோபித்து கொல்லைகளெங்கும் விளக்குப்பொறிகளை கட்டாயம் நடவேண்டும். இப்படி எல்லாரும் ஒருமித்துச் செய்வதால் இந்த உபாதையை வரவொட்டாமல் தடுக்க முடியும் என்று நம்பலாம். ஒன்று சேராமல் போனாலோ இந்தப் பொறிகளெல்லாம் கேலிக்குத்தான் இடமாகும். கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் முதல் மழைபெய்து நின்ற உடனே விளக்கு ஏற்றிவிடவேண்டும். முதல் நாள் இரவு பிடிபடும் பூச்சிகளின் தொகை பின்னிட்டுப்பிடிபடும் பூச்சிகளெல்லாவற்றையும் விட அதிகமாயிருக்கும். ஆணும் பெண்ணும் சேர்ந்தபின்னிட்டு விளக்கண்டை பூச்சிகள் ஆவலோடு விசேஷமாய் வருகிறதில்லை. இந்த உபாயம் கைகூடவேண்டுமானால் மழை நின்றவுடனே சற்றும் தாமதம் செய்யாமல் விளக்குப் பொறிகளை வைத்துவிடவேண்டியது அவசியம்.

விளக்குப் பொறிவைத்தல்.—செலவு சுருக்கமான விஷயம், அதற்கு வேண்டிய கைமுதல் ஒரு ரூபாய்க்கு மேலில்லை. லாந்தர் 6 அணா. தகரத்தட்டம் உபயோகிப்பதானால் அது ஒரு 6 அல்லது 8 அணா. மூங்கில் கால் சட்டம் வகைராவுக்கு ஒன்று அல்லது இரண்டணாவுக்குமேல் செல்லாது. பத்திரமாய் வைத்துக்கொண்டால் பல வருஷமிருக்கும். ஒரு ராத்திரிக்கு ஒரு விளக்குக்கு 6 அல்லது 8 பைஸா எண்ணெய் செல்லும். மொத்தத்தில் இரண்டுவாரத்துக்குமேல் விளக்குவைக்கவேண்டியிராது. ஆனதினாலே எண்ணெய்ச் செலவு சுமார் 8 அணா பிடிக்கும். இந்தக் கம்பளிப்பூச்சிகளால் விளைகிற நஷ்டத்தைப் பார்த்தாலோ அரைவாசி முக்கால்வாசி பயிரைச் சேதப்படுத்தி நிலத்தின் நயத்திற்கும் பயிரின் வளர்ச்சிக்கும் தக்கபடி ஏகர் ஒன்றுக்கு 20 ரூபாய் முதல் 50 ரூபாய் வரையில் நஷ்டம் உண்டாகிறது.

TINNED FRUITS.

டப்பிப் பழங்கள் செய்தல்.

பீஹார் மாகாணத்திலுள்ள முஸபர்பூர் பட்டணத்தில் பஸந்திசரன் ஸின்ஹா என்கிற ஒரு பெரிய மனுஷர் டப்பிப் பழங்கள் செய்வதற்கு ஒரு தொழிற்சாலை ஸ்தாபித்திருக்கிறாரென்று கேட்டு சந்தோஷப்படுகிறோம். மிஸ்டர் ஸின்ஹா உயர்ந்த ஆங்கிலப் படிப்புப் பெற்று ஸயன்ஸில், எம். ஏ. பட்டம் வாங்கி அந்த ஊரில் வக்கீல் உத்தியோகம் செய்து வருகிறார். சில வக்கீல்களைப்போல அவர் பொருள் சேகரிப்பதிலும் டிஸ்டிரிக்ட் உத்தியோகஸ்தர்களின் பிரியத்தைச் சம்பாதிப்பதிலும் முழுக்கவலையும் செலுத்தாதவராய், சுதேசிய முயற்சிகளை ஆதரிப்பதில் எப்போதும் கருத்துக்கொண்டிருக்கிறார். அவருடைய நற்குணங்களால் ஊர் ஜனங்கள் அவரை மதித்து வருகிறார்கள். முஸபர்பூரை அடுத்த இடங்களில் மாம்பழமும், லிச்சி என்ற ஒரு விதப் பழமும், அதிகமாய்க் கிடைக்கிறபடியால், அவைகளை டப்பிகளில் அடைத்துக் கெட்டுப்போகாமலிருக்கவேண்டிய உபாயங்கள் செய்து, அந்நிய இடங்களில் விற்கலாமென்று ஒரு தொழிற்சாலை ஸ்தாபித்திருக்கிறார். இவருடன் மிஸ்டர் எ. பி. ஸர்கார் என்ற நிபுணரும் சேர்ந்திருக்கிறார். மிஸ்டர் ஸர்கார் அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பட்டணத்துக்குப்போய் அங்குள்ள ஒரு யூனிவர்ஸிடியில் இந்த வித்தையைக் கற்றுக்கொண்டு வந்திருக்கிறார். பழங்கள் பழுக்கிற காலத்தில் அவைகளை நானாவிடங்களிலிருந்து தருவித்துச் சேர்த்து, அவைகள் கிடைக்காத காலத்திலும் ஜனங்களுக்குக் கிடைக்கும்படிச் செய்வது மற்றத் தேசங்களில் ஸாதாரணமான தொழிலாயிருக்கின்றது. ஐரோப்பிய நாடுகளில் உண்டாகும் பழங்கள் டப்பிகளில் அடைக்கப்பட்டு இத்தேசத்துக்கு அனுப்பப்பட அவைகளை நாம் உபயோகப்படுத்தி வருகிறோம். டப்பிப் பால் என்பது நம் தேசத்தில் ஸர்வ ஸாதாரணமாயிருக்கின்றது. இந்த முஸபர்பூர் தொழிற்சாலையிற் செய்யப்பட்ட டப்பிப் பழங்கள் பீகாரில் நடந்த ஒரு தொழிற் காட்சியில் காட்டப்பட்டபோது, அவைகளை ஐரோப்பியர் ஸிலாகித்துப்பேசி, சொற்பகாலத்தில் அவைகள் உலகமெல்லாம் பரவிவிடுமென்று சொன்னார்களாம். நம் தேசத்தில் பழங்களைத் தேனுடனும் சர்க்கரையுடனும் கலந்து டப்பிகளில் அடைத்து விற்பது வழக்கமாயிருந்தபோதிலும், அப்படி விற்கப்படும் பழங்கள்

அவைகளுக்கு இயற்கையாயுள்ள ருசியை இழந்து சொற்பகாலத்தில் கெட்டுப்போகின்றன. சாஸ்திரோபாயங்களை அனுஷ்டித்து, டப்பிகளில் அடைக்கப்படும் பழங்களை இயல்பான ருசி கெட்டுப்போகாமலும், சில காலத்துக்குப் பிறகு அழுகிப் போகாமலும் இருக்கும்படி செய்யலாம். உதாரணமாக, டப்பிப் பால் டப்பியை உடைக்காமல் எத்தனை வருஷம் வைத்திருந்தாலும் கெட்டுப்போவதில்லை. அப்படியே பழங்களும் டப்பிகளில் அடைபட்டபடி எத்தனைகாலம் இருந்தாலும் கெட்டுப்போவதில்லை.

மிஸ்டர் ஸர்கார் இந்த வித்தையை அமெரிக்காவில் வெகு சிரமப்பட்டுக் கற்றுக்கொண்டு வந்திருக்கிறார். டப்பிகள் கையினாற் செய்வது கஷ்டமாகையால், அதற்காக அமெரிக்காவிலிருந்து யந்திரங்கள் தருவித்திருக்கிறார். மிஸ்டர் ஷின்ஹாவும் மிஸ்டர் ஸர்காரும் நடத்திவரும் இந்தத் தொழிற்சாலையில் உயர்ந்த வகுப்புப் பிள்ளைகள் வேலைசெய்து வருகிறார்களாம். ஸாமானியக் கூலி வேலை செய்வோர்களைவிட இவர்கள் அக்கறையும் புத்தியும் காட்டி வேலை செய்கிறார்களென்று சொல்லப்படுகிறது. உயர்ந்த வகுப்புப் பிள்ளைகள் கூலிக்காரர்களைப்போல் வேலைசெய்ய இஷ்டப்பட்டு இந்தத் தொழிற்சாலையில் வேலைசெய்வது, வட இந்தியாவில் தொழிலூக்கம் எவ்வளவு தூரம் பரவிவருகிறதென்பதைக் காட்டுகின்றது. கையினால் வேலை செய்தல் இளப்பமென்று நினைப்பது நம்மவர்களுக்குள் ஸகஜம். ஒரு குரிச்சியை நகற்ற வேண்டுமானாலும், வேலைக்காரனைக் கூப்பிடுஞ் சிறுவர்கள் இருக்கிறார்கள். குனிந்து நிமிர்ந்து உடம்பு வியர்க்கவும் கைகளில் அழுக்குப்படவும் வேலை செய்தல் அந்தஸ்துக் குறைவென்று நினைக்கும் மூடபுத்தி ஸாமானிய வகுப்பாருக்குள்ளும் இருக்கின்றது. நமக்குச் சக்ரவர்த்தியாய் மகிமையுடன் வீற்றிருந்த எட்வர்டு மன்னர் கப்பலில் மற்ற வேலைக்காரர்கள்போல் வேலை செய்தவரென்று நம்மவர்கள் அறிவது உபயோகமாகும். வேலை செய்வது இளப்பமல்ல. சோம்பலைவிட இளப்பமானது வேறொன்றுமில்லை.

இந்தத் தொழிற்சாலையிற் செய்யப்படும் டப்பிகள் அந்நிய நாடுகளிலிருந்து வரும் டப்பிகளைப்போலவே இருக்கின்றனவாம். டப்பிகளில் காற்றுப்புகாமல் இருக்கும்படி செய்வதுதான் முக்கியம். அப்படி இருக்கின்றதாவென்று சோதிக்க யந்திரங்கள் இருக்கின்றனவாம். பழங்கள் தோலுரித்துக்கொட்டையெடுத்து அழுகினவைகளையும் காயப்பட்டவைகளையும் நீக்கி டப்பிகளில் அடைக்கப்படுகின்றன. டப்பிகளில் அடைத்த பிறகு மூடிகளைப் பற்றவைத்து மூடி அவைகள் காற்றுப்புகா வண்ணம் இருக்கின்றனவா வென்று சோதித்து, இன்னும் எவ்வளவோ பாடுபட்டுக் கடைசியில் விற்பனைக்குத் தயாராகின்றன. டப்பிகளை வாங்கினவர்கள் அவைகளை உடைக்காதிருக்கிற வரையில் உள்ளிருக்கும் பழங்கள் சிறிதும் கெடாமலிருப்பதுதான் பெரும் நோக்கம். இந்தத் தொழிற்சாலையில் நல்ல கூலிகள் கொடுக்கப்படுகிறபடியால், வேலைக்காரர்கள் கிடைப்பதில் கஷ்டமில்லை. தக்கபடி மேல்விசாரணை செய்யப்படுமானால், இவர்கள் அமெரிக்கா தேசத்தாரைப்போலவே திறமையாய் வேலை செய்கிறவர்களாவார்களென்று மிஸ்டர் ஸர்கார் சொல்லுகிறார். இந்தக் கம்பெனியை நடத்துவோர் வேறு சில தொழில்களையும் நடத்த வேண்டுமென்று எண்ணியிருக்கிறார்கள்.

சுதேசமித்திரன்.

REVIEW OF THE PRESS.

பத்திரிகை ஆராய்ச்சி.

WHITE ANTS.

கறையான்.

◆

புரட்டாசி மாஸத்து “தென்னிந்தியா விவஸாய”த்தில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

கறையான் என்பது வெண்மையான சிறு பூச்சி. இது மணல் கலந்த இடங்களில் ஸாதாரணமாயிருக்கும். புதர்களில் கறையான் புத்து சிறு குன்றுபோல் வளர்ந்திருக்கும். கறையானால் உண்டாகும் கெடுதி விசேஷம். புஸ்தகம், மரம், பலகை முதலியவற்றை நாசப்படுத்துவது கறையான் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஒரு புத்தை ஜாக்கிரதையாய் வெட்டிப்பார்த்தால் அதில் அநேக குழிகள் இருக்கும். ஒவ்வொரு குழியிலும் பஞ்சு போன்ற மிருதுவான உருண்டை ஒன்று இருக்கும். இது புரை புரையாய் இருக்கும். கறையான் இதில் உலாவித்திரியும். வெட்டினபுத்தில் வெவ்வேறு உருவமான கறையான்கள் உண்டு. புத்தை வெட்டும்போது இவை சிலுத்துச்சிலுத்து சப்தம் செய்யும். புத்தின் மத்தியில் 3-அங்குலம் நீளமான ஒரு வெண்மைப்புழு இருக்கும். அதற்கு ராஜாத்திக் கறையான் என்று சொல்லுகிறது. இந்தக் கறையானைச் சாப்பிடுவதால் இடுப்பு பலம் அதிகரிக்கிறதாம். மழைபெய்து மண்குளிர்ந்த பிறகு இறகு உண்டாகி வெளியேபறக்கும். இதைப்பிடித்து வறுத்துச் சிலர் சாப்பிடுகிறார்களாம். ஒவ்வொரு புத்தும் ஒரு ராஜ்யத்தைப்போல் இருக்கும். இந்தப் புத்தில் ராஜாத்திக்கறையானே ஆளும் அதிகாரி. சிப்பாய்க் கறையான்களும், வேலை செய்யும் கறையான்களுமுண்டு. தலைபெருத்திருப்பவை ராணுவத்தில் சேர்ந்தவை; சிறுத்திருப்பவை வேலை செய்பவை. சிறிய பூச்சிகளே வெகுதூரம் திரிந்து உணவுதேடிக் கொண்டுவரும். அந்த உணவில் சேர்த்தியானவைகளை ராஜாத்திக் கறையானுக்குக் கொடுக்கும். வேலைக்காரக்கறையான்கள் ஆகாரந்தேடும்போது விரோதிகள் வந்து எதிர்க்காதபடிக்குக் காவலாகச் சிப்பாய்க்கறையான்கள் கூடச்செல்லும். சத்துருக்கள் எதிர்ப்பட்டால் சிப்பாய்க்கறையான்கள் சண்டைக்கு ஆரம்பிக்கும். சண்டையில் அநேகம்மடிவதும் உண்டு. ஆடிமாஸம் முதல் புரட்டாசிமாஸம் வரையில் இவைகள் பறந்து திரியும். சோளம்,காட்டு அவரை, ஈச்சங்கொட்டை, கறிவேப்பிலை இவைகளை வறுத்து மாவாக்கிப் புத்தின் வாயில் கொட்டுவார்கள். ராத்திரியில் ஒரு விளக்கைப் புத்து வாயண்டைவைக்க புத்திலுள்ள ஈசல் வெளிவரும். வந்தபின் அவைகள் அங்கு வைக்கப்பட்டிருக்கும் பானையில் விழுந்துவிடும். அவற்றை உடனே வறுத்து விற்பார்கள். இதைப் பொரி அரிசி, எள், பச்சைப்பயறு, மிளகாய்ப்பொடி முதலியவற்றுடன் கலந்து அநேகர் சாப்பிடுவார்கள். இது மிக ருசியாயிருக்கும். தைலம் நிறைந்திருக்கும். பறவைகள், தேள், பாம்பு முதலிய ஜெந்துக்கள் இவற்றைத் தின்னும். கறையான் நிமிஷத்துக்கு 60 முட்டையிடும். ஒரு நாளைக்கு 80,000 முட்டையாகும். இவ்விதமாய் விருத்தியாகும் கறையான் அநேக வீட்டு வஸ்துக்களை அழிப்பதுமல்லாமல் வயல்களில் கரும்பு, சோளம், மா, பலா, முதலியவைகளையும் அழித்து விடுகின்றன. அவ்விடங்களிலுள்ள புத்துகளை வெட்டி ராஜாத்திக் கறையானைக் கொல்லவேண்டும். கார்பன்-டை-சலபைட் என்னும் திராவகத்தை ஒரு புத்து தவிர மற்ற எல்லாப் புத்துகளிலும் ஊற்றி புத்துக்களின் வாயை அடைத்துச் சம்பளியால் மூடி தூரத்தில் நின்று நெருப்பு வைத்தால் புத்து வெடிக்கும். நிலம் குளிரத் தண்ணீர் கட்டினாலும் கறையான் குறையும். சில மரங்கள் பார்வைக்கு நன்றாய் இருந்தாலும் உள்ளுக்குள்ளேயே நாசம் அடைகின்றன. ஆமணக்கு, புங்கை, இலுப்பை, இவைகளின் பிண்ணாக்கு கறையானைத் தொலைக்கிறதென்று சிலர் தெரிவிக்கிறார்கள். கறையான் வாயில் ஒருவித திராவகம் உற்பத்தியாகிறது அது பட்டவஸ்து மிருதுப்படுகிறது. புத்து மண் எருவுக்குச் சமானமாகும்.

சுதேசமித்திரன்.—அநேக முக்கியமான விஷயங்கள் புதுமாதிரியாக நன்றா யெழுதப் பட்டிருக்கும் “பிழைக்கும் வழி”யின் இச்சஞ்சிகைபோல் மற்ற சஞ்சிகைகளும் இவ்வளவு சிறப்புடன் இனிமேலும் நடத்தப்பட்டு வருமெனக்கோருகிறோம்

THE SCIENCE OF WEALTH.

செல்வ சாஸ்திரம்.

இந்த விஷயமாக செப்டம்பர்மாஸத்து "விவேக போதினியில்" ஒரு வியாஸம் காணப்படுகிறது.

நம்முடைய இந்தியா தேசத்தில் எல்லா சாஸ்திரங்களிலும் பாண்டித்யம் பெற்றவர்கள் இருந்தாலும், செல்வசாஸ்திரத்தில் பாண்டித்யம் பெற்றவர்கள் ஒருவருமில்லை. இதற்குக் காரணம் அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப்படும் நான்குவித புருஷார்த்தங்களில் நம்முன்னோர்கள் அறம், வீடு என்னும் இரண்டைமட்டும் கவனித்துப் பொருளை அலட்சியம் செய்து வந்தார்கள். "மேல் நாட்டார் பணப் பயித்தியம் பிடித்தவர், கீழ் நாட்டார் மதப்பயித்தியம் பிடித்தவர்" என்கிற வசனமே இதற்குப் போதுமான சாட்சியாகும். ஆனால் இந்தக்காலத்தில் பொருளை அலட்சியம் செய்யக்கூடாது என்பது ஜப்பான் சரித்திரத்தைப் படித்தால் தெரியும். ஆங்கிலேயரும் மற்ற ஐரோப்பியர்களும் செல்வ சாஸ்திரத்தைக் கரைகண்டிருப்பதால் அவர்களிடமிருந்தே இதன் நுட்பத்தை நாம் அறியவேண்டும். செல்வத்தைத் தேடுவது, தேடினதைப்பங்கிடுவது, பங்கிட்டதை அனுபவிப்பது ஆகிய இவைகளைப்பற்றி விஸ்தாரமாய்க் கூறும் நூலுக்கே செல்வசாஸ்திரம் என்று பெயர். ஆகவே செல்வமென்றால் பணம் மாத்திரமல்ல; மனிதர்களுக்குத் தேவையுள்ளவைகளெல்லாம் செல்வமே. செல்வத்தைப் பின் வருமாறுபிரிக்கலாம்.

I. வஸ்துவைச் சேர்ந்தவைகள்:—

(1) இனாமாய் எல்லாருக்கும் தெய்வம் கொடுத்தது.

(2) பாடு பட்டு அடையவேண்டியவைகள்.

II. வஸ்து அல்லாதவைகள்:—

(1) வெளியிலுள்ள குணங்கள்.

(2) உள்ளேயுள்ள குணங்கள்.

ஒருவன் மற்றொருவனைப்பார்க்கிலும், பலசாலியாயிருந்தால் அவன் நன்றாய் வேலைசெய்யக்கூடும். ஆதலால் பலசாலியாய் இருப்பது ஒருவகைச் செல்வம். ஒருவன் ஸங்கீதத்தில் கெட்டிக்காரனாயிருந்தால் ஸங்கீதமாகிய செல்வம் அவனிடத்தில் குடிகொண்டிருக்கிறது என்று ஊகிக்கவேண்டும். ஆகவே மனிதர்களுக்குப் பணம் சம்பாதிக்கக் காரணமாயிருக்கும் வஸ்துக்கள், குணங்கள் எல்லாம் செல்வம் என்றே கொள்ளவேண்டும். ஸாதாரணமாய் உலக காரியங்களில் ஸ்வபாவ புத்தியையுடைய மனிதர்கள் செய்யக்கூடிய விஷயங்களைப்பற்றி இந்தச் சாஸ்திரம் போதிக்கிறது. அதாவது ஒருவன் எந்த மாதிரி பொருளை அடைகிறான் என்றும், அடைந்த பொருளை எம்மாதிரி உபயோகிக்கிறான் என்றும் இந்தச் சாஸ்திரம் சொல்லுகிறது. எவ்விதமான வேலையாயிருந்தபோதிலும் எல்லாவற்றிற்கும் உபகாரமாய்ப் பணந்தான் மூலகாரணமாய் இருக்கிறது. உலகப்பற்றை ஒழித்து பரோபகார விஷயத்திலும், புண்ணியம் தேடுவதிலும் கவனம் செலுத்திவரும் சிலரைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் இந்த சாஸ்திரம் அவசியமானதே.

உட்பிரிவுகள்.

(1) **செல்வ சம்பாத்தியம்:**—இந்தப் பிரிவில் செல்வத்தைக் கொடுக்கக்கூடிய நிலங்களையும், பாடுபடவேண்டிய உழைப்பையும், இந்த உழைப்புக்கு ஸாதனமாயிருந்து அதிகப் பணத்தைக்கொடுக்கக்கூடியமூலதனத்தையும், எம்மாதிரி நிலம், உழைப்பு, மூலதனம் இம்மூன்றுஞ் சேர்ந்து அதிக செல்வத்தைக் கொடுக்கிறதென்பதையும்பற்றி விவரித்துக் கூறப்படும்.

(2) **செல்வத்தைப் பங்கிடுதல்:**—ஒரு தேசத்தில் பணம் எம்மாதிரி பங்கிடப்படுகிறது? எவருக்குப் பங்கிடப்படுகிறது? என்பதைப் பற்றியும், இந்த உலகத்திலுள்ள எல்லா தேசங்களையும் ஒன்று சேர்த்துக்கவனித்து உலகத்திலுள்ள ஸொத்து எம்மாதிரி எவரெவர்களுக்கு பங்கிடப்படுகிறது என்பதைப்பற்றியும் இந்தப் பிரிவு கூறும். அதாவது லேவாதேவி, நாணயம், வெளி வியாபாரம், ஸர்க்கார் வரி இவைகளைப்பற்றிச் சொல்லப்படும்.

(3) **செல்வத்தின் பயன்:**—உலகத்திலுள்ளவர்கள் எம்மாதிரி செல்வத்தை உபயோகிக்கிறார்கள் என்று கூறும் பிரிவு. இந்தப் பிரிவில் அம்மாதிரி உபயோகிப்பதால் வரும் பலன்களைப்பற்றிக் கூறப்படும். நூல்கள், இயற்கை நூல் என்றும் மானிட நூல் என்றும் இரண்டு வகைப்படும். அதில் செல்வ சாஸ்திரம் மானிட நூலில் சேரும். ராஜ்ஜிய பரிபாலனம், வியாபாரம் முதலியவைகளை சரியாய்ச் செய்ய இந்த சாஸ்திரஞானம் அவசியமாகும்.

CULTIVATION OF PEAS.

பயறு சாகுபடி.

இந்த விஷயமாய் செப்டம்பர் மாஸத்துக் "கிருஷிக" னில் ஒரு சிறு வியாஸம் இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லா சிங்கம்பட்டிக்கு அருகிலுள்ள கிராமங்களில் "மிதி பயறு" என்னும் ஒருவகையான கல் பயறு நன்செய் நிலங்களில் மாசி மாஸம் அறுவடையானபின் ஈரமிருந்தால் உழுதும், ஈரமில்லாவிட்டால் அறுவடைக்கு முன்னும் விதைக்கிறார்கள். அறுவடைசெய்யும் ஆட்கள் மிதிப்பதால் விதைகள் அழுந்தி தண்ணீர் பாயாமலே பனியின் உதவியால் வளர்ந்து சித்திரை மாஸத்தில் நெற்று எடுக்கக்கூடியதாய் விளைவாகும். அப்போது நெற்றுகளை எடுத்துக்கொண்டு கால் நடைகளை வயலில் மறித்து தழையை மேயச்செய்வார்கள். அப்போது பயற்றந் தழைகள் சற்றுக்காய்ந்திருக்குமாதலால் கால் நடைகள் மிக ஆவலுடன் தின்னும். இந்த தழைகள் மறுபடியும் துளிர்க்கும். அப்போது நிலத்தில் தண்ணீர் பாய்ச்சி இந்தப் பசுந்தாளை மடித்து உழுது சேற்றில் மிதித்துப் பரம்படித்து நெல்நாற்று நடுகை செய்வார்கள். இந்த எரு நெல்பயிருக்கு மிகவும் கொழுத்த எருவாகும்.

இப்போது நிலத்தில் பசுந்தாள் எருவாக உபயோகப் படுத்துவதற்காக ஒரு பயறு வகையை நிலத்தில் பயிராக்கி வளர்ந்தபின் அதை நிலத்தில் மடித்து உழுதுவிடச் சொன்னால் கிருஷிகர் பயப்படுவார்கள், வீண் செலவு என்று நினைப்பார்கள். அதற்கு பதிலாக மேலே சொல்லியபடி செய்தால் எருவின் பயனை அடையலாம். (2) விதைத்து உண்டாகிய பயறின் பலனை அனுபவித்தபின் அது பயிராகி பசுந்தாளாக உபயோகப்படுகிறது. (3) கால் நடைகளுக்கு மேய்ச்சல் கிடைக்கிறது. (4) நிலத்தில் களைகள் வளராமல் பசுந்தாள் பயிர் நிலத்தை மூடிக்கொள்ளுகிறது. (5) பயறு வகைகளின் வேர்களில் சிறு சிறு மணிகள் உண்டாகி ஆயிரக் கணக்கான அணுக்கிருமிகள் ஜனித்து நைட்ரஜன் என்னும் வெடியுப்பு வாயு சத்து அதிகமாய் உண்டாகிறது. அந்த வாயு அடுத்த நெல்பயிருக்கு மேன்மையான எருவாகும். இந்த விதை வேண்டியவர்கள் சிங்கம்பட்டி ஜமீன்தாரவர்களான ம-ா-ா-ஸ்ரீ டி. எஸ். சிவசுப்பிரமணிய தீர்த்தபதி அவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

INVESTMENTS IN CO-OPERATIVE BANKS.

கோஆபரேடிவ் பாங்கிகளில் பணம் போட்டுவைத்தல்.

"மதிராஸ் புல்லடின் ஆப் கோ-ஆபரேஷன்" என்னும் பத்திரிகையின் மார்ச்சு மாஸ ஸஞ்சிகையில் இந்த விஷயமாய் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.

பாங்கிகள், மரணபண்டு கம்பெனிகள் முதலியவைகளில் பணம் போட்டால் மோசமில்லையென்னும் நம்பிக்கை பட்டணவாசிகளுக்கு இருந்தபோதிலும், கிராமவாசிகளைப்பற்றிக் கவனித்தால் அப்பொழுது இதிலுள்ள கஷ்டம் தெரிகிறது. "மொந்தப் பணம்" அநேகமாய்க் கிராமங்களில்தான் சிறு தொகைகளோ, பெருந்தொகைகளோ கட்டி வீணாகத் தூங்குகிறது. இதை வெளிவரச் செய்து லேவாதேவிக்கு உபயோகப்படுத்துவதெப்படி யென்பதுதான் விவேகிகள் கவனிக்கத்தகுந்த விஷயம். உதாரணமாக கல்கத்தாவிலிருந்து சணல் விளையும் கிராமப் பிரதேசங்களுக்கு லட்சம் லட்சமாக ரூபாய்கள் போய்க்கொண்டேயிருக்கின்றன. இப்படிப் போகிற தொகையில் திரும்ப கல்கத்தாவுக்குத் திரும்பி வருவது மிகவும் கொஞ்சமென்றே மதிக்கப்படுகிறது. இதனால் கிராமவாசிகளிடம் பணம் முடங்கிவிடுகிறதென்று தெரிகிறது. பலதுளி பெருவெள்ளமாதலால் இப்படி முடங்கும் சிறு தொகைகளை மொத்தமாய்ச் சேர்த்துப்பார்த்தால் பெருந்தொகையாகிவிடும். இம்மாதிரி பணத்தை தொழிலில் உபயோகிக்க முக்கிய ஸாதனமாய் கோ-ஆபரேடிவ் பாங்கிகள் உதவுகின்றன. ஆதலால் இந்த மாதிரி பாங்கிகளுக்கு பெரிய மிராசுதார்களும், சாவுகார்களும் திரவிய சகாயம்செய்து உபகரிக்கவேண்டும். இந்தியாவில் எந்தக் காரியத்துக்கும் ஸர்க்கார் உதவியை எதிர்பார்க்கவேண்டியதாயிருக்கிறது. ஆனால் இந்த மாதிரி பாங்கிகளுக்கு ஸர்க்கார் உதவி கூடியமட்டில் இல்லாமலே பார்க்கவேண்டும். ஏனெனில், குடித்தனக்காரருக்கும் மற்றுமுள்ள சாமானிய ஜனங்களுக்கும் நியாயமாய் ஆகவேண்டிய காரியங்களுக்கு கிரமவட்டி விகிதத்துடன் பணம் உதவவும், இப்படிச்செய்து கிராமவாசிகள் சாவுகார்கள் கையில் அகப்பட்டு விழிக்காமல் பார்த்துக்கொள்ளவும் ஜமீன்தாரிடத்திலும் சாவுகாரிடத்திலும் கட்டித் தூங்கும் பணம் நடமாடி நல்ல பிரயோஜனத்தைக் கொடுக்கவும் ஸர்க்கார் உதவியை எதிர்பாராமல் இருக்கவேண்டியிருக்கிறது. இது விஷயமாய் எட்வர்டு பேக்கர் போன்றவர்கள் உழைத்து வருவது சிலாகிக்கத்தக்கது. இந்த கோ-ஆபரேடிவ் பாங்கிகள் விருத்தியாக பரஸ்பர சகாயம் அவசியம். இது விருத்தியானால் எல்லா செல்வமும் செழிக்கும்.

THE DUTIES OF PARENTS AND CHILDREN.

பெற்றோர்களுடையவும் மக்களுடையவும் கடமை.

இந்த விஷயமாக ஆகஸ்டுமாஸப் "பூரணசந்திரோதய"த்தில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

புத்திரனை நல்ல் வழிப்படுத்தி சிஷ்டனாகச்செய்ய வேண்டியது பிதாவின் முக்கிய கடமை. பிதா புத்திரனுக்குத் தானே ஆசாரியனாக இருந்து கல்வி கற்றுக்கொடுக்கவேண்டும். 16-வயது வரையில் புத்திரன் பிதாவின் சொல்லை மீறாமல் "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்ற பழமொழியை அனுஷ்டிக்கவேண்டும். 16-வயதுக்குமேல் புத்திரனைப் பிதா சிநேகிதனைப்போல் பாராட்டவேண்டும். முன் அதிகாரத்துடன் புத்திரனை நடத்திய பிதா இப்போது நயமாகவும் ஹிதமாகவும் பேசி நடத்தி வரவேண்டும். ஆனால் இப்போது நம்முடைய தேசத்தில் மக்களைப் பெறுதலும், அவர்களுக்கு எப்படியாவது விவாகம் முடிப்பித்தலுந்தான் கடமை என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள். அப்படி நினைப்பது மகா பிசகு. மகனுக்குக் கல்வி, நல்லொழுக்கம் முதலியவைகளைக் கற்றுக்கொடுக்காத வரையில் பிதா தன் உத்தரவாதத்தைச் செலுத்தினவனாக மாட்டான். பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடச் சம்பளங்கள் கொடுத்து விட்டால் தங்கள் கடன் தீர்ந்ததென்று வேறு சிலர் நினைக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் கொஞ்ச நேரமே கழிக்கிறார்கள். உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள சம்பந்தம் இந்தக்காலத்தில் சொற்பமாக இருக்கிறது. ஆதலால் பிள்ளைகளைப்பற்றிப் பெற்றோர்களே தகுந்த கவலை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்னுமொரு முக்கியமான விஷயத்தைப் பிதாக்கள் கவனிக்கவேண்டும். அதாவது, புத்திரருக்குப் பாலியத்திலேயே விவாகம் செய்வதைத் தவிர்க்கவேண்டும். பாலியத்தில் விவாகம் செய்தால் இளவயதில் ருதுசாந்தி முகூர்த்தம் ஏற்படும். ஸ்திரீ புருஷர்களின் சரீரங்கள் சரியானபடி வளர்ச்சியடையாமல், சையோக மேற்பட்டால், அதனால் உண்டாகும் குழந்தைகள் வீரியமில்லாதவைகளாயும், நல்ல மூளையில்லாதவைகளாயும் ஏற்படும். அதனால் பலஹீன ஸந்ததி உண்டாகும். தேசத்தின் க்ஷேமம் குறையும். நம் தேசத்தின் தென்னாட்டு ஜனங்களையும் ஐரோப்பியர்களையும் தேகபலம், மனோபலம், புத்திநுட்பம், ஊக்கம் முதலியவைகளில் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் நம் தேசத்தாரின் ஸ்திதி கீழானபடியிலிருக்கிறது. ப்ரம்மசாரி விரதத்தைப் பூராவாகக் கொள்ளவேண்டும். அப்படி நடந்தால்தான் மூளை பலப்படும். படிக்குங் காலத்தில் விவாகம் ஆகிவிட்டால் தேகம் தளரும், மூளை பலங்குறையும், படிப்பு குன்றும். இனி மக்களைப்பற்றிப் பார்ப்போம். பெற்றோர் வணக்கம், பெரியோர் வணக்கம், உபாத்தியாயர் வணக்கம், இந்த்குணங்கள் உள்ளவர்களாய் பிள்ளைகள் இருக்கவேண்டும். பிள்ளைகள் கெட்டவர்களுடைய கூட்டத்தைத் தவிர்க்கவேண்டும். அவர்களுடைய சம்பாஷணையை விலக்கவேண்டும். தவிர, நல்லோர்களை நாடவேண்டும். ராஜபக்தியை விருத்திசெய்யவேண்டும். இப்படியெல்லாம் பிள்ளைகள் நடந்துகொள்ளுவார்களேயானால் தேசத்தின் குழப்பங்கள் அற்றுப்போம். சாந்தமும் சமாதானமும் உண்டாகும். தேசம் மேன்மை பெறும்.

KEROSENE OIL TINS.

மண்ணெண்ணெய் டின்கள்.

அமெரிக்காவிலிருந்து பிறதேசங்களுக்கு ஏற்றுமதியாக்கப்படும் மண்ணெண்ணெய் வருஷத்தில் 13,00,000 காலன் ஆகிறது. ஆக ஒருகாலன் கொண்ட 13 லக்ஷம் டின்கள் அங்கிருந்து வருஷாவருஷம் புறப்படுகின்றன. டின்களிலிருந்து எண்ணெயை எடுத்துக்கொண்ட பின்பு அவைகளைப் பலவித காரியங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இந்தியாவிலும், மலாய் நாடுகளிலும், சீனா தேசத்திலும் இன்னும் மற்ற இடங்களிலும் வெற்று டின்கள் இல்லாத வீடு கிடைப்பது அரிது. ஆயிரக்கணக்கான டின்கள் தண்ணீர் தொட்டிகளாக உபயோகிக்கப்படுகின்றன. நமது தேசத்தில் செய்யப்படும் குவளைகள், சிறு சிறு மண்ணெண்ணெய் காய் விளக்குகள், கைப்பெட்டிகள், எண்ணெய் சேந்தும் கருவிகள், டப்பாக்கள், காண்டகங்கள் முதலான பல ஏனங்களெல்லாம் இப்போது மண்ணெண்ணெய் டின்களிள் தான் செய்யப்படுகின்றன. அநேக இடங்களில் சல்லடைகளும், முறங்களும் குப்பைவாறி ஏனங்களும் அவைகளால் தான் செய்யப்படுகின்றன. தண்ணீர் காய்ச்சவும், குதிரைமாடுகளுக்குக் கொள் வேகவைக்கவும் சோறு சமைக்கவும், இந்த டின்களையே சில இடங்களில் உபயோகிக்கிறார்கள். விசேஷமாய் வீடுகளில் ஸாமக்கிரியைகளைக் கறையான்கள் அரிக்காதபடிக் காப்பாற்றுகிறதற்கு இந்த டின்களைவிட மேலானவைகளும், சரசமானவைகளுமான ஏனங்கள் இல்லையென்பது உறுதி.

10 1910 MADRAS

THE BOYS' SECTION.

சிறுவர் பகுதி.

PALMYRA FIBRE.

பனைநார்.—மட்டையிலிருந்து நார் எடுக்கப்படுகிறது. சிலர் அரிவாள்கொண்டு கிழித்து எடுக்கிறார்கள். சிலர் ஊறவைத்தும் எடுக்கிறார்கள். நார் எடுப்பதற்கு இளமரத்தின் மட்டையே பிரயோஜனமுள்ளது. 10-பவுண்டு நார் ஒரு ரூபாய். இந்த நாரைக்கொண்டு ப்ருஷ் செய்யலாம்.

DENY RESPECTFULLY.

மரியாதையுடன் மறுத்துரை.—ஜனங்கள் பிரசங்கம் செய்யும்பொழுது அவர்கள் சொல்லுவது ஏதாவது உனக்குத் தெரியாததாயிருந்தால் அப்பொழுது அதை மிகவும் வணக்கத்துடனே கை கால் முதலியவைகளை ஒடுக்கிக்கொண்டு மிருதுவான தொனியில் வெகு நயமாய் நீ மறுதலிக்கவேண்டும். அப்படி மறுதலிப்பதிலும் கண்டிப்பென்பது கொஞ்சமேனும் இல்லாமல் ஒருக்கால் இப்படி இருக்கலாமோ என்னவோ நிச்சயமாய்த் தோன்றவில்லை, ஆனால் சந்தேகமாயிருக்கிறது, ஏதோ இப்படியும் தோன்றுகிறது என்று தாழ்ந்த பேச்சாய்ச் சொல்லவேண்டும். அப்படிச் சொல்வதிலும் நாம் வாதிப்பது பிரசங்கிப்பவனுக்குக் கொஞ்சமேனும் வருத்த முண்டாகாதபடிக்கு ஏதாவதொரு சிரிப்புண்டாக்கும் சங்கதியாய்ச் சொல்லி முடிக்கவேண்டும்.

HINTS ON USING BOOKS.

புஸ்தகங்களை உபயோகிக்கும் முறைமை.—செப்டம்பர் மாஸ "நல்லாசிரியனில்" வி. சேஷாசலம் என்பவர் இந்த விஷயத்தைப்பற்றி ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். அதில் புஸ்தகங்களை உபயோகிப்பதில் கவனிக்கவேண்டிய சில முறைகளைத் தெரிவிக்கிறார்.

(1) கைகள் சுத்தமாயிருந்தாலல்லது புஸ்தகத்தைத் தொடக் கூடாது.

(2) நெருப்புக் கருகில் புஸ்தகத்தைப் பிடிக்கக் கூடாது.

(3) வெறுந் தரையில் புஸ்தகத்தை வைக்கக் கூடாது.

(4) பெரு விரலால் புஸ்தகத்தைத் திருப்பக் கூடாது.

(5) திறந்து வைக்கப்பட்ட புஸ்தகத்தின் பேரில் சாயவாவது, படுக்கவாவது கூடாது.

(6) புஸ்தகத்தின் ஏடுகளின் மூலையை மடிக்கக் கூடாது.

(7) புஸ்தகங்கள் அடையாளக் காகிதங்களைக் கொண்டிருக்கவேண்டும்.

(8) புஸ்தகத்தைத் திறந்தபடி தரையில் வைக்கக் கூடாது.

(9) புஸ்தகத்தின் பக்கங்களை மேல் பக்கமாய் சுட்டு விரலால் திருப்பவேண்டும்.

(10) புஸ்தகத்தை அடுக்கிலிருந்து எடுக்கும்போது அதன் முகப்பைப்பிடித்து இழுக்கக்கூடாது. அதன் முதுகின் புறமாய் இழுத்துக்கொள்ளவும்.

(11) திறந்த புஸ்தகத்தின் ஏடுகளின் மேல் வேறு புஸ்தகத்தையாவது சாமான்களையாவது வைக்கக் கூடாது.

(12) புஸ்தகத்தின் இடையில் பென்ஸிலை நுழைத்தாவது பருமனான அட்டையை வைத்தாவது மூடக்கூடாது.

(13) எப்போதும் பெரிய புஸ்தகங்களை திறக்கும்போது நடுவில் திறக்கவேண்டும். முதலாவதாக முன் அல்லது பின் அட்டையைத் திறக்கவேண்டாம்.

(14) புஸ்தகத்தை எடுத்துத்திறக்கும்போது முதுகின் பாகத்தை அதிகமாய் அழுத்திப் பிடியாமல் ஏடுகளை இலகுவாய்த் திருப்பவும்.

MANY A DROP MAKES AN OCEAN.

பலதுளி பெருவெள்ளம்.—ஜூன்மாஸ "சக்ரவர்த்தினி." யில் சஜாம்பிகை என்னும் ஒரு பெண் மேற்குறித்த விஷயமாய் ஒரு சிறு கதை எழுதியிருக்கிறார். அந்தக்கதை "ஒன்றொன்றாய் நூறே ஒழிய ஒருமிக்க நூறு அல்ல" என்னும் உண்மையை விளக்குகிறது.

நல்லூர் என்ற ஒரு ஊரில் நாராயணன் என்று ஒரு பையனிருந்தானாம். அவன் வீட்டுக்கு எதிரில் ஒரு ப்ரம்மாண்டமான கட்டிடவேலை நடந்துக்கொண்டிருந்தது. அந்தக் கட்டிடத்தின் அமைப்பையும், அதில் வேலைசெய்யும் கொத்து வேலைக்காரர்கள்

செங்கல்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்குவதையும், அதன்மேல் சுண்ணாம்பு பூசுவதையும் அவன் நாள்தோறும் கவனித்து வந்தான். அதைப் பார்த்த நாராயணனுடைய தகப்பன் அவனையழைத்து "அப்பா! நாராயணா! நீ கொத்து வேலைக்காரர்களைப்பற்றி மிகவும் கவனித்து வருகிறாய்போலிருக்கிறது. என்ன எண்ணங்கொண்டு கவனித்து வருகிறாய்? அந்தத்தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்கிற பிரியம் உனக்குண்டா" என்றார்.

நாராயணன்—"அப்பா, நான் அந்தத்தொழிலைக் கற்றுக்கொள்ளப் பிரியப்படவில்லை. ஒரு செங்கல் எவ்வளவு சிறிய வஸ்து. அதை ஒன்றின்மேலொன்றாக அடுக்கி இவ்வளவு பெரிய வீடு கட்டப்படுகிறதே என்பதைப்பற்றி என் மனதில் மிகுந்த ஆச்சரியமுண்டாகிறது. அதைப்பற்றித்தான் கவனித்து வருகிறேன்."

தந்தை—மிகவும் உண்மை இதை ஒருபொழுதும் மறவாதே. எந்தப் பெரியவேலையும் இப்படித்தான்.

ஒரு மனிதன் உலகத்தைச்சுற்றி நடந்துபோனால் அதுவும் ஒவ்வொரு அடியாக வைத்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது. பல துளி சேர்ந்தே பெருவெள்ளமாகிறது. இதனால் நீ அறிந்துகொள்ள வேண்டியதென்னவென்றால் எந்த அற்ப விஷயத்தையும் அலக்ஷியஞ் செய்யலாகாதென்பதே. இதுவுமல்லாமல் ஒரு பெரிய வேலையைப்பார்த்து மனதில் அதைரியம் கொள்ளக்கூடாதென்பதையும் அறிந்துகொள். எந்தப் பெரிய வேலையானாலும் அநேக பாகங்களாகப் பிரித்துவிட்டால் லகுவாய் முடிக்கக்கூடும். நீ ஒரு மலையின்மேல் தாவிக் குதித்துவிட முடியாது. சிறிது சிறிதாக ஏறித்தான் போகவேண்டும். ஆகையால் ஒரு பெரிய காரியத்தைச் செய்ய முயல்வதில் பயப்படாதே. ஒரு பெரிய கட்டிடமானது ஒரு செங்கல்லின்மேல் மற்றொரு செங்கல்லை வைத்துத்தான் உண்டாயிருக்கிறதென்பதை உன் ஞாபகத்தில் வைத்துக்கொள். இதை மறவாதே என்று சொன்னாராம்.

TWO PROVERBS.

இரண்டு பழமொழிகள்.—"உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கிற்று" என்று சந்தேகமறச் சோதித்துப் பார்த்து நிச்சயித்த விஷயத்திற்கு உபமானிப்பது வழக்கம். வடமொழியில் கரதல ஆமலகம் என்று கூறுவதுண்டு. (ஆமலகம்=நெல்லிக்கனி).

மற்ற கனிவகைகள் எல்லாமிருக்க நெல்லிக்கனியைக் கூறுவானேன் என்றால், இந்த நெல்லிக்காய் உள்ளும் புறமும் ஒற்றுமை உள்ளது என்பது நிச்சயம்.

அதாவது, அந்தக் காயின்மேல் எத்தனை கோடுகள் இருக்கின்றனவோ அத்தனை கீற்றாகிய சுளைகள். மேலே 5 கோடுகள் 5 சுளைகள், உள்ளே 5 பட்டைகள் தீர்ந்த கொட்டை, 5 வரம்புகள், 5 விதைகள். இதற்குச் சந்தேகமே இல்லை. அனுபவத்தில் பார்த்தது. சந்தேகமுண்டானாலும் அதிக தூரம் போக வேண்டியதில்லை. உள்ளங்கையிலிருக்கும் நெல்லிக்கனியாயிருப்பதால் உடனே பார்த்துக்கொள்ளலாம். அதிலும் காயாய் இருந்தாலும் பார்ப்பது கடினம். நெல்லிக்கனியாக இருப்பதால் உடனே உதிர்த்து எண்ணியும் கண்ணினால் உருவைக்கண்டும் தெரிந்து கொள்ளலாம் என்பது கருத்து. அன்றியும் உள்ளங்கையில் நெல்லிக்கனியை வைத்தால், அக்கனியின் எப்புறமும் நன்கு தோன்றுமென்பதுமாம்.

"நீலம் பிடிபடப் பேசுகிறான்" என்பது ஒரு விஷயத்தை நேரில் பாராது செவிமாறலில் அறிந்து அதோடு பொய் கலந்துரைப்பதற்கு உமானிப்பது வழக்கம்.

அதன் விவரமாவது:—ஒரு நோயாளி கொஞ்சம் மங்கல் நிறமாக வாந்தி செய்ததைக் கண்ட ஒருவன் மற்றவனுக்குச் சொல்லும்பொழுது "வீரப்பன் வாந்தி செய்தான் நீல நிறமாக இருந்தது" என்றும், அதைக்கேட்டு அவன் மூன்றாவது மனிதனுக்குச் சொல்லும்பொழுது "ஒரே நீல நிறமாக இருந்தது" என்றும், அவன் நாலாவது மனிதனுக்குச் சொல்லும்பொழுது (அந்த நீல நிறம் கேட்போர் மனதில் பிடிபட) "அது காக்கைபோல் நீல நிறமாக இருந்தது" என்றும், அவன் ஐந்தாவது மனிதனுக்குச் சொல்லும்பொழுது "வீரப்பன் வாந்தி எடுத்தான் அதில் காக்கை வந்து விழுந்தது நான் கண்டேன்" என்றும் சொல்வதுண்டு.

இவ்வாறு அந்த நீல நிறம் மனதில் பிடிபடச் சொல்லும் வன்மையோடு ஒவ்வொருவனும் கொஞ்சம் பொய் கலந்து வற்புறுத்திக் கூறுவதால் நிறமானது காக்கையாகவே மாறிவிடுகிறது.

இது பற்றி 'நீலம் பிடிபடப் பேசுகிறான்' என்னும் பழமொழி வழங்குகிறது.

எஸ். முத்துகுமாரசாமி பிள்ளை.

THE LADIES' SECTION.

ஸ்திரீகள் பகுதி.

POLICE WOMEN.

போலீஸ் வீரிகள்.—அமெரிக்காவில் ஸ்திரீகளைப் போலீஸ் படையிற் சேர்க்க யத்தனஞ்செய்து வருகிறார்கள். இவர்கள் ஸ்திரீகளைப் பாதுகாக்கப் பிரத்தியேகமாய் வைக்கப்படுவார்களாம்

A LADY LAWYER.

ஒரு பெண் வக்கீல்.—ஸ்காட்லாந்து தேசத்தின் பிரதம பட்டணமாகிய எடின்பர்க் நகரத்தின் ஹைகோர்ட்டில் ஒரு வாலீப மாது வக்கீலாக இருந்துவருகிறாள். இவள் எம். ஏ. பட்டம் பெற்று சட்டப் பரீக்ஷையில் மிகப் பிரக்யாதியோடு தேறினவள். இவள் தகப்பனும் பெரிய வக்கீலாம்.

GINGER CHUTNEY.

இஞ்சித் துவையல்.—இஞ்சி, உள்ளிப் பூண்டு, தேங்காய், வருத்த கடலைப்பருப்பு, கசகசா, கொத்துமல்லி விதை ஆகிய இவைகளை நிதானமாய் எடுத்துக்கொண்டு மைய அரைத்து, ஒரு ஏனத்தில் போட்டு, அதில் உப்பைத்தூவி, பச்சைமிளகாய், வெங்காயம், இவைகளையும் அரைத்துப்போட்டு, தயிர் வடிகட்டி அதில் விட்டு, எலுமிச்சம்பழம் சேர்த்து, எல்லாவற்றையும் செவ்வையாய்ப் பிசைந்து, பக்குவப்படுத்திக்கொள்ளவும். இந்தத் துவையல் இனிப்பாயிருக்கும், வாயுவைக் கண்டிக்கும், அரோசகத்தை நீக்கும்.

WOMEN WHO SAVED THEIR HONOR.

கற்பைக் காப்பாற்றிக் கொண்ட ஸ்திரீகள்.—வடக்கே டக்காவிலே உள்ள நாராயண கஞ்சி என்னும் ஊரில் இரண்டு பிராமணகுல ஸ்திரீகளிருக்கிறார்கள். இவர்களுடைய பெயர் சரளாதேவி, சபோலதேவி என்பதாம். ஒரு நாள் நடு ராத்திரியில் ஒரு துன்மார்க்கன் இவர்களுடைய கற்பையழிக்கும் எண்ணங்கொண்டு வீட்டிற்குள் பிரவேசித்தான். இவர்கள் இரண்டுபேர்களும் சேர்ந்து அவனைக் கொன்றுவிட்டார்கள். இவர்களைப்பிடித்து நாராயண கஞ்சி டிப்டி மாஜிஸ்ட்ரேட்டு விசாரித்து ஸெஷனுக்குச் கமிட் செய்தார். கற்பைக் காப்பதற்காக கொலை செய்ததால் அவர்கள் குற்றவாளிகளாக மாட்டார்களென்று ஸெஷன் ஜட்ஜி விடுதலை செய்துவிட்டார்.

THE WOMAN WITH THE LONGEST TUFT,

அதிக நீண்ட கூந்தலை உடையவள்.—அமெரிக்காவில் மெக்ஸிக்கோ தேசத்திலுள்ள மெர்ஸெதெஸ் லோப்பஸ் என்ற பெண்தான் உலகத்தில் அதிக நீண்ட கூந்தலையுடையவள். அவள் ஐந்தடி உயரமுள்ளவள். அவள் நின்றுகொண்டிருக்கையில் அவள் தலைமயிர் தரையில் 4 அடி 8 அங்குலம் படர்ந்திருக்குமாம். மேலும் அவளுடைய மயிர் எவ்வளவு அடர்த்தியாயிருக்கிறதென்றால் அவள் தன் தேகம் முழுவதையும் தன் மயிரால் மறைத்துக்கொள்ளலாம். அவள் மயிர் வெகு துரிதமாயும்அடர்த்தியாயும் வளர்ந்துகொண்டுவருகிறபடியால் மாஸா மாஸம் அவள் அதில் கொஞ்சம் வெட்டி மயிர் வியாபாரிகளுக்கு விற்றுவருகிறாள். அவள் புருஷன் ஏழ்மையான ஒரு ஆட்டிடையன்.

A DANGEROUS CHILD BIRTH.

ஒரு அபாயமான பிரசவம்.—புதுச்சேரிக்கடுத்த வில்வநல்லூரில் மணியக்காரன் அலுவல் பார்க்கும் ஒருவனுடைய பெண்சாதி பிரசவ வேதனைப்பட்டு, சிசு வெளிப்படுகிறதற்கு மகா கஷ்டமாயிருந்தபடியால் அந்த ஊரிலுள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டாள். குழந்தையின் தலையில் ஜலம் கொண்டு வழக்கத்துக்குமேல் பருத்திருந்ததை யறியாத மருத்துவச்சி, கால் புறப்பட்டபோது அதைப் பிடித்துச் சிசுவை வெளிப்படுத்தப் பிரயத்தனஞ் செய்தாள். கழுத்து அறுந்துபோய்ச் சிரசு உள்ளே தங்கிவிட்டது. அப்போர்ப்பட்ட அபாயகரமான ஸ்திதியில் அந்தப்பெண்பிள்ளையைப் புதுச்சேரி பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தார்கள். தெய்வ கடாக்ஷத்தாலும், டாக்டர்மார்கள் சாமர்த்தியத்தாலும் உதரத்தில் தங்கியிருந்த பிண்டத்தின் துண்டு வெளிப்படுத்தப்பட்டு இப்போது தாயார் குணமடைந்து கொண்டுவருகிறாளாம்.

CARE OF CHILDREN BY MOTHERS.

குழந்தைகளைப்பற்றி தாய்மார்கள் எடுத்துக் கொள்ளவேண்டிய கவலை.—குழந்தைகளை எப்படிப் பாதுகாக்கிறதென்று அநேக தாய்மார்களுக்குத் தெரிகிறதில்லை. குழந்தைகள் பேச ஆரம்பிக்கும்போதே கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக்கொடுக்கிறார்கள். குழந்தைகளும் அந்த வார்த்தைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு வயது வந்த பின்பும் அந்த வார்த்தைகளை உபயோகிக்கின்றன. சில தாய்மார்கள் குழந்தைகளை அடிக்கிறார்கள். இப்படிச் செய்யவேகூடாது. நல்ல வார்த்தைகளாலும் நயத்தாலும், பயத்தாலுமே குழந்தைகளைச் சீர்திருத்தவேண்டும். குழந்தைகளுக்கு, பால் மறக்கிற வரையிலும் தாய்மார்கள் பத்தியமாக இருந்து வரவேண்டும். அப்படி இல்லாமல் கண்டதைத் தின்றுவந்தால் குழந்தைகள் தேகஸௌக்கியத்தை இழந்து பல வியாதிகளுக்கு உள்ளாகும். மண் சாம்பல்

முதலியவைகளைத் தின்னும்படி குழந்தைகளைவிடக் கூடாது. ஜலத்தில் விளையாடும்படி குழந்தைகளை விடக்கூடாது புஷ்பங்கள், பந்துகள், விளையாட்டு பொம்மைகள் இவைகளைக் கொடுத்து விளையாடச் சொல்லவேண்டும். இப்படிச் செய்வதால் குழந்தைகளுக்குச் சுறுசுறுப்பும் விசால புத்தியுமுண்டாகும். குழந்தைகளுக்கு ஈசுவர பக்தி யுண்டாகும்படி அவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பூஜை முதலியவைகளைச் செய்யவேண்டும்.

Patriotism of Japanese Women.

ஜப்பான் தேசத்து ஸ்திரீகளின் தேசாபிமானம்.—ஜப்பானிய ஸ்திரீகளுடைய தேசாபிமானம் அதிசயப் படத்தக்கது. பெண்கள் படிக்கவேண்டியது அவசியம் என்னும் கொள்கை ஜப்பானிய ஸ்திரீகளிடத்தில் அதிகம். புருஷர்களுக்கு ஆறுதலும் சந்தோஷமும் கொடுக்க ஸ்திரீகள் அறிவுடையவர்களாய் இருக்கவேண்டும். புருஷர்கள் நல்ல வழிகளில் நடந்து கியாதியும் சிறப்பும்பெற முயல்வதற்கு ஏற்படுகிற பலகாரணங்களுள் பெண்களிடத்தில் அவர்களுக்கு இருக்கும் அபிமானமும் ஒரு காரணம். ஜப்பானிய ஸ்திரீகள் சண்டைக்குச் செல்லும் புருஷர்களை உற்சாகப் படுத்தி தேசாபிமானத்துடன் சண்டை செய்யவேண்டுமென்று தைரியம் சொல்லுகிறார்கள். டோனா என்னும் ஒரு பெண் யுத்தத்துக்கு சென்ற தன் தமயனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அந்தக்கடிதத்தில் குடும்பத்தைப்பற்றி அவன் கவலைப்பட வேண்டாமென்றும், தான் பார்த்துக் கொள்ள முடியும் என்றும், மனம் தளராமலும் தைரியத்தை விடாமலும் சண்டைசெய்து ஜெயமடைய வேண்டு மென்று தான் விரும்புவதாயும், சண்டையில் ஜெயித்து ஜப்பான் சக்ரவர்த்திக்கும் ஜப்பான் தேசத்துக்கும் புகழ்வரும்படியாகச் செய்யவேண்டுமென்றும் அந்தப் பெண் எழுதியிருந்தாள்.

Suicides in Southern India.

தென்னிந்தியாவில் தற்கொலை.—தென்னிந்தியாவின் மரணக் கணக்கு ஜாப்தாவைப் பார்த்ததில், தற்கொலை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருவதாகத் தெரியவருகிறது.

1897-ம் வருஷம் முதல் 1906-ம் வருஷம் வரையில் உண்டான தற்கொலைகளின் கணக்கு பின் வருமாறு:—

வருஷம்	தற்கொலை	வருஷம்	தற்கொலை
1897	1791	1903	2187
1898	1901	1904	2203
1899	1937	1905	2169
1901	2006	1906	2202

மேலே குறிப்பிட்ட வருஷங்களில் நடந்த தற்கொலைகளுக்கும், கொலைகளுக்கும் உள்ள தாரதம்மியத்தைப் பற்றிக் கவனித்தால் ஸாதாரணமாகக் கொலைகளைக் காட்டிலும் தற்கொலைகள் நாலு மடங்கு அதிகமாகவே யிருந்துகொண்டு வருகின்றன. மேலும் தற்கொலை செய்துகொள்பவர்களில் பெரும்பான்மையோர் ஹிந்துக்களென்றே தெரியவருகிறது. இந்த ஹிந்துக்களிலும், பெரும்பாலும், ஸ்திரீகளே இப்படி உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள்.

ஹிந்து ஸ்திரீகளின் பரிதபிக்கத்தக்க நிலைமையே இதற்குக் காரணமென்றும், பாலிய விவாகமும், சிறு பெண்களை வயோதிகர்களுக்குக் கலியாணம் செய்வித்து அவர்கள் சுகத்தைக் கெடுத்து விடுவதுமே முக்கியகாரணங்களாகச் சொல்லலாம்.

The Dying First Wife.

சாகும் மூத்தாள்.—ஸ்காட்லண்டு தேசத்தில் பில் பிரௌன் என்ற குடியானவனொருவன் அடங்காப் பிடாரியாயிருந்த தன் பெண்சாதியுடன் அடிக்கடி சண்டை சச்சரவு போட்டுக்கொண்டிருந்தான். சில காலஞ்சென்று அவன் பெண்சாதி ரொம்ப வியாதியாய் விழுந்தாள். தனக்கு மரணம் அகத்தியம் வருமென்று உணர்ந்த அந்தப் பொல்லாதவள் புருஷனைப் பார்த்து: "நான் செத்துப்போன பின்பு நீ யெவளையாகிலும் கட்டிக்கொள்ளப்போகிறாய்; பத்திரம். நீ அப்படிசெய்தால் நான் என் கல்லறையிலிருந்து மண்ணைப் பரித்துக்கொண்டு வெளியே வந்து உன்னை உபாதிப்பேன். ஆகையால் ஜாக்கிரதை!" என்று பயமுறுத்தி, பிறகு இரண்டு மூன்று தினத்தில் இறந்துபோய் விட்டாள். குடியானவன் ஆறுமாதகாலமாய்த் தனியே வாஸம் பண்ணிக் கொண்டிருந்து, பிறகு, ஒரு பெண்ணை மறுவிவாகஞ் செய்துகொள்ளப் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தான். இதைக் கேள்விப்பட்ட இவன் பழைய மைத்துனர்களில் ஒருவன் இவனிடம் வந்து "நீ மறு கலியாணம் முடித்துக்கொள்ளப்போகிறது வாஸ்தவந்தானா" என்று கேட்டான். அதற்குக் குடியானவன் ஆம் என்றான். மைத்துனன் "ஆ என் தங்கை சொல்லிவிட்டுச் செத்த காரியத்தை மறந்துவிட்டாயோ?" என்று கேட்டான். அப்போது குடியானவன் "இல்லை அதற்காகத்தான் என் பெண்சாதியை மல்லாக்கக் கிடத்தாமல் குப்புறப்போட்டு அடக்கம் பண்ணியிருக்கிறேன். ஆகையால் அவள் எவ்வளவுக்கு மண்ணைப் பரிக்கிறாளோ, அவ்வளவுக்கும் பாதாளத்தில் போவாளேயொழிய மேலே வரப்போகிறதில்லை" யென்று திடாரிக்கமாய்ச் சொன்னான். தங்கள் மரணத்துக்குப்பின் தங்கள் புருஷர்கள் எவ்விதம் நடந்துகொள்ளுவார்களோ என்ற ஏக்கத்துடன் அனேக பெண்கள் இறக்கிறதை நாம் கண்டும் கேட்டு மிருக்கிறோம். அது மனுஷ்ய ஸ்வபாவம்.

DEPARTMENTAL NOTES.

பகுதிக் குறிப்புகள்.

AGRICULTURAL NOTES.

விவஸாயக் குறிப்புகள்.

Sugar-cane Cultivaton in Madras.

சென்னை மாகாணத்தில் கரும்பு சாகுபடி.—ஆகஸ்ட் மாஸக் கடைசிவரையில் சென்னை மாகாணத்தில் 40,000 ஏகர் கரும்பு சாகுபடியாயிருப்பதாயும் பயிர் நன்றாய்ப்பிடித்து வருவதாயும் தெரிகிறது. போன வருஷம் கரும்பு சாகுபடியான நில விஸ்தீரணத்தை விட இந்த வருஷம் சாகுபடியாயிருக்கும் நில விஸ்தீரணம் 100-க்கு 11 அதிகமாயிருக்கிறது.

Wild Indigo Seeds.

கொழுஞ்சி விதை.—பசுந்தாள் எருவுக்காகப் பயிர் செய்யும் கொழுஞ்சி விதை வேண்டியவர்கள் திருநெல்வேலி ஜில்லா சிவகிரிபண்ணை மானேஜராகிய மிஸ்டர் ஏ. ராமராவ் அவர்களுக்கு எழுதினால் பட்டணம் படி 50-அடங்கிய மூட்டை ஒன்று ரூ 4-8-0 வீதம் சாத்தூர் ரெயில்வே ஸ்டேஷனில் கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடு செய்வாரென்று தெரியவருகிறது. வருஷத்தில் சுமார் 6 மாஸகாலம் தரிசுகிடக்கும் நிலங்களிலெல்லாம் பசுந்தாள் எரு பயிரிட உத்தேசித்திருக்கிறவர்கள் ஷை விதை வாங்க இது நல்லதருணம்.

Sale of Wet-Lands in Tanjore.

தஞ்சாவூரில் நன்செய் நிலங்கள் ஏலம்போனது.—தஞ்சாவூர் ,,ஜில்லா சீர்காழித்தாலூகாவில் 3 ஏகர் 38 ஸெண்டு நன்செய் நிலம் ரூ 16-14-0 ஸர்க்கார் கிஸ்தி பாக்கிக்காக ஏலம் போடப்பட்டதில், ஒருவரும் வாங்குவாரில்லாமல் கவர்ன்மெண்டாரே ஒரு அணாவுக்கு வாங்கிக்கொண்டார்களாம். இந்த விஷயம் செப்டம்பர்மாஸம் முதல்தேதி ஜில்லா கெஜட்டில் பிரசுரமாயிருக்கிறது. இப்படி நேரிட்டதற்குக் காரணமென்ன? ஸர்க்கார் கிஸ்தி விகிதம் பளுவாயிருக்கிறதென்று ஜனங்கள் வாங்க வில்லையா? அல்லது அந்த நிலம் பயிருக்கு உபயோகமற்றதென்று வாங்கவில்லையா? காரணம் இன்னதென்று கவர்ன்மெண்டார் ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டுமென்று திவான் பகதூர் ரகுநாதராவ் அவர்கள் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்.

Indigo in the Madras Presidency.

சென்னை ராஜதானியில் அவுரி.—சென்ற ஆகஸ்ட் மாஸம் 31-ந்தேதி வரையில் சென்னை ராஜதானியில் அவுரி பயிராயிருக்கும் நிலத்தின் விஸ்தீரணம் 30,000 ஏகரென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. போன வருஷம் அவுரி பயிர்செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீரணத்தை விட இந்த வருஷம் 100 க்கு 30 கம்மியென்று தெரிகிறது. தென் ஆற்காடு, குண்டூர், செங்கற்பட்டு இந்த மூன்று ஜில்லாக்களிலும் அவுரிப்பயிர் சாகுபடி கம்மியென்று நன்றாய்த் தெரிகிறதாம். அதற்கு தக்க பருவத்தில் மழை பெய்யாதது ஒரு காரணம், இரண்டாவது ரஸாயனமுறைப்படி செய்யுப்படும். செயற்கைச் சாயப்பொருள் கிடைப்பது எளிதாய்ப்போய்விட்டபடியால் இயற்கைப் பொருளாகிய அவுரியிலிருந்து எடுக்கப்படும் சாயப்பொருளுக்குக் கிராக்கியில்லாமற் போய்விட்டது.

A New Variety of Sugar-cane.

ஒரு புது தினுசுக் கரும்பு.—திருநெல்வேலி ஜில்லா திருநெல்வேலி தாலூகா சத்திரம் புதுக்குளத்தில் பண்ணையார் ம-ா-ா-ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளையவர்களுக்கு விவஸாய டிபார்ட்டுமெண்டார் 'தங்கக்கொடி' என்று பெயர் விளங்கிய பி. 208 என்று சொல்லப்பட்ட ஒரு நூதன தினுசுக்கரும்பு கொஞ்சம் பரிக்ஷார்த்தமாய்ப் பயிர்செய்ய அனுப்பினார்கள். அவைகளை ஷை பிள்ளையவர்கள் பயிர்செய்ததில் கரும்புகள் நல்ல ஸ்திதியிலிருக்கின்றனவாம். இந்த நூதன தினுசுக்கரும்பு நூதனமாய் பார்படோஸ் தீவிலிருந்து கோதாவரி ஜில்லா ஸாமல்கோட்டு விவஸாயப் பண்ணையில் சென்ற சில வருஷங்களாய் பயிரிடப்பட்டு அங்கங்கே விவஸாய டிபார்ட்டுமெண்டாரால் பரவச்செய்யப்படுகிறது. இந்தத் தினுசில் சர்க்கரை சத்து ஜாஸ்தியாயிருப்பதாயும், கரும்புகள் நோய் நொடிகளால் சுலபமாய் பீடிக்கப்படுவதில்லையென்றும், இதிலிருந்து செய்யப்படும் சர்க்கரைக்கு ஸாதாரணக் கரும்பிலிருந்து செய்யும் சர்க்கரையை விட பாரம் ஒன்றுக்கு குறைந்தது ரூ 5 ஜாஸ்தி கிடைத்திருப்பதாயும் தெரியவருகிறது.

SINGLE PLANTING.

ஒற்றை அலகு நடுதல்.—இது விஷயமாய் அ. சேதுராமய்யர் எழுதுகிறார்.—1896-ல் சைதாப்பேட்டை கவர்ன்மெண்டு பண்ணையில், ஒருநாள் காலையில் பையன்கள் எல்லாரும் உபாத்தியாயருடன் வயல்களைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வரும்போது, மானேஜர் கட்டிடத்துக்கு அடுத்தாப்போலுள்ள ஒரு நெல்வயலில் நடவு நடந்துகொண்டிருந்தது. அப்போது உபாத்தியாயர் இந்த வயலுக்கு சீமைக் கலப்பையே உழவுக்கு உபயோகப்படுத்தப்பட்டது, அலகுகளை 6,7 ஆக வைத்து நட்டு வருகிறார்கள், பாருங்கள் என்றார். கோதாவரி ஜில்லாவிலிருந்து வந்து படித்துக்கொண்டிருந்த ஜி. சுப்பராயடு என்கிற புத்திசாலிப் பையன் இப்படி 6,7 அலகு வைத்து நடவே வேண்டாம். ஒரு அலகை வைத்து நட்டால் போதும் என்றான். அப்போது அந்தப் பையனை எல்லாரும் பரிகாசம் செய்தார்கள். உடனே அலகுகளை எடுத்து சொற்ப விஸ்தீரணத்தில் தானே ஒவ்வொரு அலகாக நட்டுக் கொஞ்ச நாளைக்கெல்லாம் இரண்டு பயிர்களினுடைய தார தம்மியத்தைக் காட்டி எல்லாரையும் ப்ரமிக்கும்படி அடித்தான். பிற்பாடு இது பாரத்திலேயே பாரம் பெயிலிப்பால் அனுஷ்டிக்கப்பட்டது. மிஸ்டர் வி. கே. ஸுப்பராவ் இந்த ஒரு அலகு நடவு வெகு கண்டிப்பாய் கிருஷ்ணா ஜில்லாவில் நடத்தப்படுகிறதென்று சென்னை விவஸாய கமிட்டி 3-வது குறிப்பில் எழுதியிருக்கிறார். பிறகு சிதம்பரம் தாலூகா ஆபரணம் பிள்ளையால் இது அனுஷ்டித்து வரப்படுகிறதென்று மிஸ்டர் செல்வரெங்கராஜு எடுத்துக் காட்டினார். பிறகு விவஸாய டிபார்ட்மெண்டார் விவஸாய பஞ்சாங்கத்தில் இரண்டு வருஷமாக இந்த ஒரு அலகு நடவு விசேஷத்தைப்பற்றித் தெரியப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இவைகள் எல்லாவற்றையும் அப்போதைக்கப்போது தன் விவஸாய ஸங்கப் பத்திரிகையில் திவான்பகதூர் ரகுநாதராவ் அவர்கள் தெரியப்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார். சுதேசமித்திரனிலும், "பிழைக்கும் வழி" யிலும் அநேக வியாஸங்கள் தோன்றி வரவே, இப்போது ஜனங்களை கண் விழிக்கும்படிச் செய்துவிட்டது.

GREEN MANURE IN WET-LANDS.

நஞ்சையில் பசுந்தாள் உரம்.—கம்பத்தம் அ. வே. சு. ராமஸாமி ரெட்டியார் எழுதுவதாவது :—

"ஐயா, தங்களுடைய பத்திரிகையை நான் வாசித்து வருவதில் விவஸாய விஷயமாய் அநேக ஸங்கதிகள் தெரிந்துகொண்டேன். அதற்காக நான் தங்களுக்கு வந்தனம் அளிக்கிறேன்.

நஞ்சை நிலத்தில் பசுந்தாள் உரத்துக்காக நான் என் பூமியில் சாகுபடி செய்திருக்கும் பயிர்களைக் குறித்து சுருக்கமாய் எழுதும் இந்த ஸங்கதியை தங்கள் பத்திரிகையின் மூலமாய் விவஸாயிகளுக்குத் தெரிவித்து அவர்களது க்ஷேமலாபத்தை விருத்தி செய்வீர்களென்று நம்புகிறேன்.

எனது நஞ்சை பூமிக்கு ஏகர் ஒன்றுக்கு 18 ரூ விலையுள்ள முத்துக் கொட்டை பிண்ணாக்கு போடுவது வழக்கம்.

இந்த வருஷம் நெல்லிக்குப்பத்துக்கடுத்த பாலூர் ஸர்க்கார்ப்பண்ணை மானேஜர் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் அவர்களுடைய சொல்படி ஸுமார் 20 ஏகர் பூமியில் சணலும் நரிக்காருமணியுமாகக்கலந்து ஆடி௴ 7௳ விதைத்தேன். ஷை௴ 5-6௳யில் பெய்த மழை ஈரத்தில் ஒரு சால் ஒட்டிய பின் விதை தெளித்து மறு சால் ஒட்டினேன்.

விதைக் கிரயம் உழவு கூலி உள்பட ஏகர் ஒன்றுக்கு ரூ 3-12-0 (மூன்றே முக்கால் ரூபாய்) முடிந்தது. இப்பொழுது இந்த இரண்டு மாஸ காலத்தில் சணல் ஸுமார் 6 அடியும், நரிக்காருமணி பூமியை மூடிக்கொண்டுமிருக்கிறது.

ஒரு ஏகராவிலிருக்கும் தழையை வேறு இடத்துக்கும் கொண்டு போகக் கூடியதாக அவ்வளவு தழை மண்டியிருக்கிறது. இதை 10 நாளில் உழுவதாக உத்தேசித்திருக்கிறேன். வேண்டுபவர்கள் வந்து பார்த்துக் கொள்ளலாம். சொற்ப செலவில் பூமியை இம்மாதிரி வளப்படுத்தக்கூடும் என்கிற விவரம் நான் தெரிந்து கொண்டதை என்னைப் போலிருக்கும் விவஸாயிகளுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பூமியில் தழையை மடக்கி உழுது நெல் நாற்று ஒற்றை அலகு நடுவதாய் உத்தேசித்திருக்கிறேன். அதினால் அடையும் லாபத்தையும் பின்னிட்டு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இம்மாதிரி அதிக லாபகரமான விஷயங்களையும் விவஸாய விருத்திக்குரிய சங்கதிகளையும் எனக்கும் என்போலொத்த நிலச்சுவான்களுக்கும் மிகவும் சிரத்தையுடன் எடுத்துக் காட்டி விவரித்துச் சொல்லும் பாலூர் விவஸாய ஸர்க்கார்ப் பண்ணை மானேஜர் மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் அவர்களுக்கு வந்தனம் அளிக்கிறேன்."

INDUSTRIAL NOTES.

கைத்தொழில் குறிப்புகள்.

SUGAR-CANE REFUSE.

கரும்புச்சக்கை.—சர்க்கரைத் தொழிற்சாலைகளில் ஒரு டன் சர்க்கரை எடுக்கப்படுமானால் ஒரு டன் கரும்புச் சக்கை விழும். அந்தச் சக்கையை நம்மவர்கள் ஒன்று குப்பையிலே கொண்டுபோய்க் கொட்டி விடுகிறார்கள். இல்லாவிட்டால் அடுப்பெரித்து விடுகிறார்கள். மேற்கு இந்தியத் தீவுகளிலோ கரும்புச் சக்கையைக் காகிதத்துக்கு வேண்டிய கூழாக்கி காகிதம் செய்து விடுகிறார்கள். இல்லாவிட்டால் ஐரோப்பாகண்டத்துக்கு ஏற்றுமதி செய்து விடுகிறார்கள். அங்கே அது நல்ல விலைக்கு விற்றுப் போய் விடுகிறது. முதல்தரமான சக்கை ஒரு டன்னுக்கு 15 பவுன் வீதம் விலையாய் விடுகிறது. மட்டத்தரமான சக்கை ஒரு டன்னுக்கு 5-பவுன் வீதம் விலையாய் விடுகிறது. போனவருஷம் இந்தியாவில் 20 லட்சம் டன் சர்க்கரை செய்யப்பட்டது. இந்த 20 லட்சம் டன் சர்க்கரைக்கும் 20 லட்சம் டன் சக்கை விழுந்திருக்கவேண்டும். அந்த சக்கையைக் கூழாக்கினால் 16 லட்சம் டன் நிறையுள்ள கூழாகவேண்டுமென்றும், அந்தக் கூழுக்கும், மட்டத்தரமான கூழுக்கும் ஐரோப்பாகண்டத்தில் போடப்படும் விலையையே போட்டாலும், 80 லட்சம் பவுன், அதாவது 1,200 லக்ஷம் ரூபாய் ஆக வேண்டுமென்றும் மதிப்பிடப்படுகிறது. இந்தியாவிலே சர்க்கரைத் தொழிற்சாலைகளில் கரும்புச் சக்கையெல்லாம் குப்பையோடுசேர்ந்துபோய்விட அந்தச்சக்கையினத்தில் மட்டும் நம்மவர்கள் வருஷந்தோறும் 1,200 லக்ஷம் ரூபாயை இழந்துகொண்டு வருவது என்ன பரிதாபம் பாருங்கள். அப்படி அவர்கள் இழந்துக்கொண்டிருக்க வேண்டியதேயில்லை. அந்தச் சக்கையையெல்லாம் கூழாக்கிக் காகிதங்கள் செய்து விடலாம். நம்மவர்களுக்கு அதைக் கூழாக்கவும் தெரியாது, காகிதஞ் செய்யவும் தெரியாது என்று வைத்துக் கொள்வோம். அதை அவர்கள் குப்பையில் கொண்டுபோய்க் கொட்டி விடாமலும் அடுப்பெரித்து விடாமலும் விற்றுப் பணஞ் செய்து விடலாமல்லவா?

SNAKE SKIN.

பாம்புத்தோல்.—இதுவரையில் பாம்புத் தோல்களின் உபயோகம் அனேகம் பேருக்குத் தெரியாது. பாம்புத்தோலைப் பதனிட்டு ஐரோப்பிய ஸ்திரீகள் இடுப்பில் போட்டுக்கொள்ளும் பெல்ட்டுகளாக உபயோகப் படுத்திவந்தார்கள். இப்பொழுது அதைப் பதப்படுத்தி சட்டையாக உபயோகப்படுத்தலாமென்றும், அந்தமாதிரி செய்து, வருகிற மாரி காலத்திற்குள் வெளிபடுத்தக்கூடுமென்றும், அதைக் கண்டுபிடித்தவரான மிஸ்டர் காரெட்டு என்பவர் பத்திரிகா நிருபரொருவருக்குத் தெரிவித்தாராம். இது அல்லாமல் பாம்புத்தோலிலிருக்கும் விசேஷமென்னவென்றால் அது சுருங்குவதுமில்லை, விரிவதுமில்லை. அன்றியும் தேகத்தைக் கட்டுப்படுத்தக் கூடுமென்றும் சொல்லுகிறார். இந்தத்தோல் சட்டையாவதல்லாமல் தண்ணீருக்குப் பயப்படாதாகையால் பூட்ஸுகளுக்கு உபயோகிக்கக் கூடுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்.

அப்படியானால் நம்முடைய தேசத்தில் இந்தப் பாம்பினங்கள் அதிகமாகையால் அவைகளைச் செய்து நாம் லாபமடையலாம். ஒவ்வொரு வஸ்துவையும் ஆராய்ச்சி செய்து பார்த்து நாமும் மேல்நாட்டாரைப்போல் புத்தியை உபயோகப்படுத்துவோமானால், முன்னேற்றத்துக்கு வழியுண்டு.

THE WASHERMAN IS GONE.

வண்ணானுக்கு வந்து விட்டது ஆபத்து.—இப்போது எந்த வீட்டிலும் ஏகாலி முறைப்பாடுதான் முக்கியமாயிருக்கிறது. வஸ்திரங்களை யிழந்துவிடுகிறதும் இரவல் கொடுக்கிறதும் அல்லது டாறு டாறாய்க் கிழித்துபோடுகிறதும் வண்ணார்களுடைய ஸாதாரணத் தொழிலாயிருக்கிறது. இதன்னியில் மாஸம் ஒருமுறை வெள்ளை கொண்டுவருகிறதே வெகு அரிதாயிருக்கிறது. கூடிய ஜலுதியில் வண்ணார்களுக்கு வேலை அத்துப்போகும்போல் தோன்றுகிறது. ஏனென்றால் இப்போது மின்சாரத்தைக் கொண்டு வஸ்திர சுத்திசெய்யத் துவக்கியிருக்கிறார்கள். ஆஸ்ட்ரியா தேசத்தில் ஸ்ஜெஜெடின் என்ற பட்டணத்தில் ஜோஸெப் 'நாஜி யென்ற ஒருவன் அழுக்கு வஸ்திரங்களை ஒரு க்ஷணத்தில் வெள்ளையாக்கக்கூடிய ஒரு மின்சார யந்திரம் கண்டுபிடித்திருக்கிறான். இனிமேல் சவர்காரமாவது, உவர் மண்ணாவது அவசியமில்லை. எந்தக் கறையையும் கொழுப்பையும் மின்சாரம் ஒடின உடனே எடுத்துப் போடுகிறது. இந்த மிஷினைக்கொண்டு ஒருவருடைய உதவியுமில்லாமல் 200 முதல் 300 பீஸ் வரையில் ஒரே தடவையில் வெள்ளையாக்கிப் போடலாம்.

EDUCATIONAL NOTES.

வித்யா விஷயக் குறிப்புகள்.

THE MADRAS SANSKRIT COLLEGE.

மதராஸ் ஸம்ஸ்கிருத காலேஜ்.—இந்த காலேஜ் நம்முடைய ஹைகோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராகிய கனம் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டு நடந்துவருகிறது. இதில் ஸம்ஸ்கிருத சாஸ்திரங்களின் படிப்புடன், இங்கிலீஷ் பாஷையின் படிப்பும் நடந்து வருகிறது. (1) வேத பாஷ்யம், (2) வேதாந்தம், (3) சாங்கியம், (4) யோகம் முதலிய தர்சநங்களைக் கற்பிக்கவேண்டுமென்ற கருத்துடன் இந்த பாடசாலை ஏற்படுத்தப் பட்டதாகத் தெரியவருகிறது. பிரகிருதத்தில், வேத பாஷ்யமும், வேதாந்தத்தில் அத்வைதபாகமும் கற்பிக்கப்படுகின்றன. மற்ற தர்சநங்களைக் கற்பிக்கும் வகுப்புகள் இனி ஏற்படவேண்டும். வேதாந்த வகுப்பின் அத்வைத பாகத்தை விருத்திசெய்ய வேண்டுமென்று, காலம்சென்ற முன்ஸீப் ஸ்வாமிநாத சாஸ்திரிகளின் ட்ரஸ்டிகளால் இந்த பாடசாலைக்கு நன்கொடை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸர்க்கார் இந்த பாடசாலைக்கு வருஷத்துக்கு ரூ 1,000 கொடுத்து வருகிறார்கள். கட்டிடம் கட்டுவதற்குச் சகாயம் செய்கிறதாகவும், வாக்களித்திருக்கிறார்கள். இந்த பாடசாலைக்கு மூலதிரவியம் ரூ 69,000 இருக்கிறதாகத் தெரியவருகிறது. உத்தேசங்களான எல்லா சாஸ்திரங்களும், தர்சநங்களும் கற்பிக்கப்படவேண்டுமானால், இந்தத்திரவியம்போல, இன்னும் நாலு ஐந்து பங்கு திரவியம் சேரவேண்டும்.

A RAJAKUMAR COLLEGE.

ஒரு ராஜகுமார் காலேஜ்.—சென்னப்பட்டணத்தில் ஒரு ராஜகுமார் காலேஜ் ஸ்தாபிக்கவேண்டுமென்று பொப்பிலி மகாராஜா பிரேரணை செய்து அதற்கு அவர் ஒரு லக்ஷம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார். இந்தக் காலேஜை ஸ்தாபித்து நடத்துவதற்குரிய விவரங்களையும் அதற்குப் பிடிக்கும் செலவு இனங்களையும் கண்டு சென்னைக் கவர்ன்மெண்டார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதில் அவர்கள் பொப்பிலி மகாராஜா அந்த காலேஜுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்க ஒப்புக்கொண்டிருப்பது போல தாங்கள் ஒரு லட்சம் ரூபாய் கொடுக்க ஸித்தமாயிருப்பதாயும், ஆனால் இந்த மாகாணத்து ஜமீன்தார்களிடமும் நிலச்சுவான்தார்களிடமும் 6½ லட்சம் ரூபாய் வசூல் செய்யப்படவேண்டுமென்றும், ஆரம்பத்தில் 5 வருஷ காலத்துக்கு நடை முதல் செலவுகளுக்காக வருஷத்தில் ரூ 15,000 கொடுக்க ஸித்தமாயிருப்பதாயும் சொல்லியிருக்கிறார்கள். ராஜகுமார் காலேஜாவது சென்னை ராஜதானியிலும் அதைச் சேர்ந்த சமஸ்தானங்களிலுமுள்ள ஜமீன்தார் முதலான உயர்குலத்துப் பிள்ளைகள் கல்வி கற்கக் கூடிய ஸ்தாபனம். இந்த ஸ்தாபனத்தில் மற்ற வகுப்புப் பிள்ளைகள் சேர்க்கப்படமாட்டார்களென்பது தானாய் விளங்குகின்றது. சாமான்யமான கவர்ன்மெண்டு காலேஜ்களிலும் மற்ற சொந்த காலேஜ்களிலும் மத்திய வகுப்புப் பிள்ளைகளே விசேஷமாய்ப் படிப்பதால் ராஜா என்றும், மகாராஜா என்றும் அழைக்கப்படும் ஜமீன்தார்களின் பிள்ளைகள் அவைகளில் படிக்கக்கூடாதென்பது கருத்து.

FREE PRIMARY EDUCATION.

இலவச ப்ரைமரிப் படிப்பு.—ப்ரைமரிப் படிப்பை சம்பளமில்லாத இலவசப் படிப்பாக்குவதைப் பற்றி மாகாண கவர்ன்மெண்டுகள் தெரிவித்த அபிப்பிராயங்களை இந்தியா கவர்ன்மெண்டார் ஒன்று சேர்த்து ஒரு புத்தகமாய் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த விஷயத்தைப் பற்றி சென்னை கவர்ன்மெண்டார் என்ன அபிப்பிராயம் தெரிவித்தார்களென்று தெரிந்துகொள்ள நேயர்கள் விரும்பக்கூடும். சென்னைக் கவர்ன்மெண்டார் பின்வருமாறு அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள்.

"கல்வி அபிவிருத்திக்கு மட்டும் அதிகமாய்ச் செலவு செய்ய முடியாது. மற்ற செலவினங்களுக்குப் பணம் எடுத்துவைப்பதை அனுஸரித்துத்தான் கல்வி அபிவிருத்திக்கும் பணம் எடுத்து வைக்கமுடியும். இப்போது கவர்ன்மெண்டார் மற்ற ஆலோசனைகளோடு மாதிரி ஸெகண்டரி ஸ்கூல்கள் 3 லட்சம் ரூபாய் ஸர்க்கார்ச் செலவில் ஸ்தாபிக்க யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாகாண அரசிறை ஸௌகரியங்கள் இடங்கொடுக்கிற மட்டில் சம்பளமில்லாத ப்ரைமரிப் படிப்புக்காகப் பிடிக்கும் செலவுக்கு ஏற்பாடுசெய்ய மாகாண கவர்ன்மெண்டார் ஸித்தமாயிருப்பார்கள். பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு ஸ்லேட்பலகை முதலியன வாங்கிக் கொடுக்கவேண்டுமென்ற பிரேரணையை அவர்கள் ஆதரிக்கவில்லை. ஏனென்றால் அந்த இனத்தில் 7 லக்ஷம் ரூபாய் முதலில் செலவாய் விடுவதோடு வருஷந்தோறும் 3 லக்ஷம் ரூபாய் செலவுக்கு அது இடமுண்டாக்கி விடும். ப்ரைமரிப்படிப்பை இலவசப்படிப்பாக்கி விடும் பிரேரணையை நிறைவேற்றுவது இந்தியா கவர்ன்மெண்டார் செய்யக் கூடிய திரவியசகாயத்தை மிகுதியும் பொறுத்திருக்கும்."

LITERARY NOTES.

புஸ்தகக் குறிப்புகள்.

THE INDIAN PENAL CODE IN TAMIL.

தமிழ் இந்தியன் பீனல் கோட்.—இந்தியாவில் வழங்கிவரும் சட்டங்களை விவரித்து சொல்லுவதான புஸ்தகங்கள் இங்கிலீஷ்பாஷை கற்றறியாத ஜனங்களுக்குத் தெரியும்படியாய் தமிழில் எழுதப்பட்டவைகள் அதிகமில்லை. ஆகையால் சட்டங்கள் தெரியாமல் அனேக ஜனங்கள் செய்யும் நடவடிக்கைகள் பல வேளைகளில் வீண்விவகாரங்களுக்கும் அனாவசியமான கஷ்ட நஷ்டங்களுக்கும் இடமாயிருக்கின்றன. ஆனது பற்றி இங்கிலீஷ் பாஷைகற்றறியாத ஹிந்து ஜனங்கள் யாவருக்கும் மிக்க உபயோகமாயிருக்குமென்றெண்ணி இந்த பீனல் கோடு தமிழில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இங்கிலீஷில் எழுதப்பட்டிருக்கிற கிருமினல் சட்ட புஸ்தகங்கள் உதவியைக் கொண்டும் இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஹைகோர்ட்டுகளினுடைய தீர்மானங்களடங்கிய லா ரிபோர்ட்டுகளினுடைய உதவியைக்கொண்டும் இந்தப் புஸ்தகம் ஸாதாரண ஜனங்களுக்குப் புரியும்படியாய் எளிதான தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. அந்தந்த ஸந்தர்ப்பங்களில் ஹைகோர்ட்டு தீர்மானங்களும் கூடுமானவரையில் ஸங்கதிகளுக்கு ஆதாரமாக குறிக்கப்பட்டிருக்கின்றன. சென்னப்பட்டணம், மைலாப்பூர் பி. எஸ். ரங்கஸாமி ராவ் அவர்களால் பிரசுரிக்கப்பட்டது. விலை ரூ 2-8-0. சென்னப்பட்டணம் ஜி. ஏ. நடேசன் கம்பெனியில் கிடைக்கும்.

NUMBER 18.

பதினெட்டு.—ஸ்ரீ வியாச பகவானால் இயற்றப் பட்ட புராணங்கள் 18. ஸ்ரீ மகாபாரதம் 18 பர்வம். மகாபாரத யுத்தத்தில் பாண்டவ கௌரவ சைன்யங்களின் சங்கியை 18 அக்ரோணி. மகாபாரத யுத்தம் ஸ்ரீ பகவத்கீதை 18 அத்தியாயங்கள். பதினெட்டில் என்ன விசேஷம்?

BOOKS RECEIVED.

புஸ்தக வரவு.

MY MASTER.

என்னுடைய குருநாதர். விலை அணா 4.

KARMAYOGA FIRST PART.

கர்ம யோகம் முதல்பாகம்.—விலை அணா 2.

இந்த இரண்டு புஸ்தகங்களும் ஸ்வாமி விவேகானந்தர் இங்கிலீஷில் செய்த உபந்யாஸங்களின் மொழிபெயர்ப்புகள். மொழிபெயர்த்தவர் ஆர். நாராயணஸாமி அய்யர். புஸ்தகங்கள் வேண்டியவர்கள் சென்னப்பட்டணம் தம்பு செட்டித்தெரு 241 வீட்டில் இவருக்கு எழுதிக்கொள்ளவேணும்.

MINAKSHISUNDARAM PILLAI'S POEMS.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் பிரபந்தத்திரட்டு.—சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய மகா மகோபாத்தியாய வெ. சாமிநாதையரால் பதிப்பிக்கப்பெற்றது. விலை ரூ 2-8-0.

MAKING BAD CHILDREN GOOD.

கெட்ட குழந்தைகளை நல்லவர்களாக்குதல்.—ஸெயின்ட் நிஹால் ஸிங் அவர்களால் இங்கிலீஷில் எழுதப்பட்டது. சென்னப்பட்டணம் கணேஷ் கம்பெனியாரால் பதிப்பிக்கப் பெற்றது. விலை ரூ 1-0-0.

THE SECRET OF SUCCESS.

அனுகூல மர்மம் அல்லது வெற்றி பெறுவதற்குற்ற ரகஸ்யம்.—இந்தப் புஸ்தகத்தில் ஸ்ரீ ராமதீர்த்தஸ்வாமிகள் அமெரிக்கா ஜப்பான் இந்த இடங்களில் இங்கிலீஷில் செய்த உபந்யாஸங்கள். பி. வரதராஜுலுவால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. புஸ்தகம் சென்னை கணேஷ் கம்பெனியாரால் பதிப்பிக்கப்பெற்றது. விலை அணா 6.

ஆரிலொருபங்கு—ஒரு சிறியகதை விலை அணா 3.

கனவு.—ஒரு செய்யுள் நூல். விலை அணா 4.

இந்த இரண்டு புஸ்தகங்களும் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணிய பாரதி அவர்களால் எழுதப்பட்டன. புதுச்சேரியில் அவருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

PRACTICAL LIFE.

பிழைக்கும் வழி.—அரிய விஷயங்களைச் சொற்பச் செலவில் ஜனங்களுக்கு அறிவிப்பதில் இதை விட நயமான பத்திரிகை எதுவும் கிடையாது. இது ஒவ்வொரு தமிழருடைய கையிலும் இருக்க வேண்டுவது அவசியம். சுதேசமித்திரன்.

LEGAL NOTES.
சட்டக் குறிப்புகள்.

GIFT.

தானம்.—ஹிந்து லாப் பிரகாரம் ஒரு அவிபக்த குடும்பத்தில் ஒரு பாகஸ்தர் மாத்திரம் வேறு பாகஸ்தர் அனுமதியன்னியில் குடும்ப ஸொத்திலிருந்து எதையாவது தானம் செய்யும் பக்ஷத்தில் அந்த தானம் செல்லாது.—8 மதராஸ் லா டை. 200 பக்கம்.

STATUTORY POWERS.

சட்டப்படி அதிகாரம்.—இந்த ராஜதானி தண்ணீர்த் தீர்வை ஆக்ட்டுப்பிரகாரம் பாசனத்துக்காக ஸர்க்கார்த்தண்ணீரை உபயோகப் படுத்தும்பக்ஷத்தில் அதற்கு என்னென்ன விதமாக எவ்வெவ்வளவு தீர்வை விதிக்கலாமென்று கவர்ன்மெண்டார் ரூல் செய்ய வேண்டியது. இப்படிக் கவர்ன்மெண்டார் செய்யாமல் கலெக்டர்களை செய்யச் சொல்லி கவர்ன்மெண்டார் விடும்பக்ஷத்தில் அது பிசகாகும். அதாவது கவர்ன்மெண்டாரே மேலே சொல்லியபடி ரூல்களைச் செய்ய வேண்டும்.—8 மதராஸ் லா. டை. 171 பக்கம்.

PARTITION.

பாகம்.—ஒரு குடும்பத்தில் பந்தகம் வைத்திருக்கும் ஸொத்து புரிசலாக வேண்டியிருந்தால் பாகஸ்தர்களில் ஒருவர் பந்தகப்பணம் முழுமையையும் கொடுத்து பந்தகத்தை மீட்டு, அந்த ஸொத்தில் தன் பாகத்தைப்பிரித்துக்கொண்டு மற்ற பாகஸ்தர்கள் செலுத்தவேண்டிய அவர்களுடைய வீத பந்தகத் தொகைக்காக அவர்கள் பாகங்களின்மேல் பாத்தியம் கொண்டாடலாம்.—8 மதராஸ் லா. டை. 186 பக்கம்.

SISTER'S MARRIAGE.

ஸகோதரி கலியாணம்.—ஹிந்து அவிபக்தகுடும்பங்களில் ஸகோதரர்கள் ஸகோதரிகளுடைய நியாயமான கலியாணச்செலவுகளை ஒத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் ஒரு மைனருக்கு அவனுடைய ஸகோதரி கலியாணத்துக்காக ஒருவன் கடன் கொடுக்கும் பக்ஷத்தில் அந்தக் கடனை மைனர் ஸொத்திலிருந்து வசூல் செய்துவிடலாம்.

WATER RATE.

தண்ணீர்த்தீர்வை.—பாசனத்துக்காக ஸர்க்கார்த் தண்ணீரை உபயோகிக்கிறவன் நேரில் ஸர்க்காருக்கு நிலவரிசெலுத்தாமல் ஒரு ஜமீன்தாருடைய குடியாயிருந்தாலும் தண்ணீர்த்தீர்வை கொடுத்தே தீரவேண்டும்.—8 மதராஸ் லா. டை. 186 பக்கம்.

SALE OF LAND.

நில சாஸனம்.—ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தில் மானேஜராயிருந்த ஒருவர் தனக்காகவும் தன்னுடைய ஸகோதரருடைய மைனர் பிள்ளைகளுக்காகவும் குடும்ப ஸொத்தை சாஸனம் செய்தார் இந்த சாஸனம் ஏற்கனவேயுள்ள சில பந்தகக்கடன்களைத் தீர்ப்பதற்கும் ஸர்க்காருக்குச் செலுத்தவேண்டிய கிஸ்திக்காகவும் செய்யப்பட்டது. சாஸனம் வாங்கினவர் ஏற்கனவே உள்ள கடன் கொடுத்தவரின் பெண்சாதி. இந்த சாஸனத்தை ரத்து செய்யவேணுமென்று மைனர்கள் வியாஜ்யம் பண்ணினார்கள். இந்த வியாஜ்யத்தில் என்ன தீர்மானமாயிற்றென்றால், முன்னே ஏற்பட்ட பந்தகக் கடன் மைனர்களைக் கட்டுப்படுத்தக்கூடியதென்றும், நிலத்தின் ஐவேஜியைக்கொண்டு ஸர்க்கார்க் கிஸ்தியைக் கொடுக்கமுடியவில்லை என்றும், இந்த விஷயங்களை சாஸனம் வாங்கினவள் ருஜூப்படுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.—121 பம்பாய் லா. ரிபோர்ட்டு, 373 பக்கம்.

MAINTENANCE TO A WIFE.

பெண்சாதிக்கு ஜீவனாம்சம்.—ஒருவன் பல பெண்பிள்ளைகளை வீட்டில் வைத்துக்கொண்டு அவர்கள் பேச்சைக்கேட்டுக்கொண்டு தன்னுடைய ஸொந்த பெண்சாதியை திட்டி, வைது, அடித்து, வெட்டிவிடுவேன், குத்திவிடுவேன் என்று சொல்லிக்கொண்டே வந்தான். கடைசியாக பெண்சாதியை வீட்டைவிட்டுத் துரத்தியே விட்டான். பெண்சாதியை சேர்த்துக்கொள், அல்லது அவளுக்கு ஜீவனாம்சமாவது கொடு, என்று சிலர் பலதடவை கேட்டும் அவன் ஒன்றும் செய்யமாட்டேன் என்று சொல்லிவிட்டதோடு, தன் பெண்சாதி அவிசாரி என்றும் அகாரணமாயச் சொன்னான். ஆகவே இவன் பேரில் பெண்சாதி ஜீவனாம்சத்துக்கு வியாஜ்யம் போட்டாள். மேலே சொல்லிய விஷயங்களைக்கொண்டு புருஷன் பெண்சாதிக்கு ஜீவனாம்சம் கொடுக்க வேண்டுமென்று கோர்ட்டார் தீர்மானித்தார்கள். ஹிந்து லாப் பிரகாரம் பெண்சாதி ஜீவனாம்சம் கேட்டால் புருஷன் அடித்தான் திட்டினான் என்று ருஜூப்படுத்த வேண்டியதில்லை. அவன் தன்னைத் தள்ளிவிட்டான் என்று ருஜூப்படுத்தினால்போதும்.—14 கல்கத்தா வீக்லி நோட்ஸ், 659 பக்கம்.

SCIENTIFIC NOTES.
சாஸ்திரீயக் குறிப்புகள்.

THE FORCE OF THE WIND.

காற்றின் வேகம்.—மிதமான காற்று மணிக்கு 7 மைலும், புயல்காற்று 36 மைலும், கடும்புயல் காற்று 80 மைலும் ஒடி அடிக்குமாம்.

STRENGTH OF MAN.

மானிடசக்தி.—பதினேழுவயது வாலிபன் 280 ராத்தல் பாரம் தூக்குவானாம்; 20 வயதிலே 320 ராத்தல் தூக்கமுடியும்; 30, 31-ம் வயதிலே 356 ராத்தல் மட்டும் தூக்குவான். இதன் பிறகு அவன் சக்தி குறையத் தொடங்கும். நாற்பது வயதிலே 8 ராத்தல் குறையும். 50 வயதிலே 330 ராத்தல் மாத்திரம் தூக்கமுடியும். இனி இப்படியே குறைந்து வரும்.

TELEGRAPHING BETWEEN INDIA AND CHINA.

இந்திய சீனத்தந்தி.—இந்தியாவுக்கும் சீனாவுக்கும் ஒருதரம் தந்தி ஸமாசாரம் போய்வர 7 நிமிஷம் செல்லும். இந்தப்பாதை 25,000 மைல்.

THE EARTH AND ITS CRUST.

பூமியும் அதன் மேற்பரப்பும்.—இந்த விஷயமாக ஆவணிமாஸ "விவேகபோதினி" யில் ஒரு வியாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

பூமியின் வடிவம் உருண்டை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனாலும் பூமி சரியான உருண்டை வடிவாய் இல்லை. கோளவடிவாய் அதாவது முட்டைவடிவாய் வடக்கிலும் தெற்கிலும் தட்டையாய் இருக்கிறது. ஆதியில் பூமி வாயுவால் ஆகிய உருண்டையாக இருந்தது. ஆகாயத்தின் குளிர்ச்சியால் வரவரக்குளிர்ந்து பிறகு திரவகோளமாயிற்று. தண்ணீர் போன்ற பதார்த்தங்களுக்கு திரவபதார்த்தம் என்றுபெயர். அதன் பிறகு திடதிரவகோளமாயிற்று. அதாவது பூமியின் உட்பாகம் திரவரூபமாகவும் மேற்பாகம் திடமானகனரூபமாகவும் ஆயிற்று. பூமியின் மேலே போகப்போக குளிர்ச்சியாயும், கீழே போகப்போக உஷ்ணமாயும் இருப்பதை யாரும் அறிந்திருக்கலாம். மனிதர்கள் வெயில் காலத்தில் மலைகளுக்குப்போவது குளிர்ச்சிக்காகவே. பெரிய சுரங்கம், குகை, முதலியவைகளில் இறங்கிப் பார்த்தால் உஷ்ணமாயிருப்பது தெரியும். தேர்மாமீடர் என்று சொல்லப்பட்ட சீதோஷ்ணம் அறியும் கருவியைவைத்துப் பார்த்தால் பூமியின் மேல்பரப்பிலிருந்து கீழேபோகப்போக ஒவ்வொரு 45 அடி ஆழத்துக்கும் ஒரு டிகிரி உஷ்ணம் அதிகமாகிவருவது தெரியவரும். சில சமயங்களில் 60 அடி வரைக்கும் ஒரு டிகிரி அதிகப்படுவது முண்டு. எப்படியிருந்த போதிலும் கீழே போகப்போக உஷ்ணம் அதிகம் என்பது மட்டும் உண்மை. ஆகவே அதிகமான ஆழத்தில் அசாத்திய உஷ்ணமாயிருத்தல் வேண்டும். அந்த உஷ்ணம இந்தப்பூமியில் உள்ள எல்லா வஸ்துக்களையும் உருக்கக் கூடியதாயிருக்கும். ஆகவே பூமி உட்பாகம் திரவரூபமான குழம்புபோல் இருக்க வேண்டும். இந்தத்திரவபதார்த்தம் பூமியின் மேற்பரப்பிலுள்ள பதார்த்தங்களின் பாரத்தால் அமிழ்த்தப்படுகிறது. இதனால் என்ன நேரிடும் என்று பார்ப்போம். பூமிக்குள் இருக்கும் வஸ்துக்கள் அளவில்லாத அதிக உஷ்ணமாயிருப்பினும் பெரிய பாரத்தின் கீழ் இருப்பதால் திரவ பதார்த்தமாகமாட்டா. திட பதார்த்தமாகவாவது திரவ பதார்த்தமாகவாவது இருக்கும். பாரமில்லாமல் உஷ்ணம் மட்டும் அதிகமாயிருந்தால் அந்த உஷ்ணத்தால் எல்லா வஸ்துக்களும் ஆவியாக மாறிவிடும். ஜியாலஜிஸ்ட் என்று சொல்லப்படும் பூகற்ப சாஸ்திரிகளின் அபிப்பிராயம் என்னவென்றால் பூமியின் உட்பாகம் தண்ணீர் போலவும் இல்லை; கடினமாயும் இல்லை; ஆனால் இரண்டுக்கும் நடுத்தரமாய் குழம்பாக இருக்கிறது என்பதே. பூமியின்மேல் பக்கத்திலிருந்து சுமார் 25 முதல் 50 மைல் தூரத்துக்குள்ள பரப்பே பூமியின் மேற்பரப்பு என்று சொல்லப்படும். இந்தப் பரப்பை நிலபாகம், நீர்பாகம், வாயுபாகம் என்று மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். நீர்பாகமாவது, பூமியைச் சூழ்ந்திருக்கும் சமுத்திரங்கள், ஏரிகள், ஆறுகள், முதலிய நீர்ப்பரப்பேயாம். நம்மை எப்பக்கமும் சூழ்ந்திருக்கும் காற்றும், ஆகாயமுமே வாயுபாகம் என்று சொல்லப்படும். நமக்குத் தெரிந்திருக்கும் மலைகள், நிலங்கள், கற்கள் போன்றவை நிலபாகமெனப்படும். இந்த மூன்றிலும் நிலபாகமே முக்கியமானது. ஏனெனில் நீர்ப்பாகம், வாயுபாகம் இவைகள் தங்குவதற்குப் பாத்திரமாக அமைந்திருப்பது நிலபாகமே. நீர்ப்பாகம் என்று சொல்லப்படும் ஆறு, ஏரி, இவைகளில் நிலபாகமாகிய சிறு மணல் கலந்திருக்கிறது. வாயு பாகத்தில் நீர் மேகமாக சஞ்சரிக்கிறது. ஆகையால் இந்த மூன்று பாகங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்த முடையவைகளாயிருக்கின்றன.

MEDICAL NOTES.
வைத்தியக் குறிப்புகள்.

SCORPION STING.

தேள் கொட்டல்.—தேள் கொட்டுக்கு மருந்து தெரியாதவர்கள் உலகத்தில் யாருமில்லை. மந்திரத்தினால் விஷம் இறங்குவதுமுண்டு. தேள் கொட்டின உடனே விஷம் மேலுக்கேறாமல் கொட்டுவாய்க்குமேல் கயிற்றால் கட்டிவிட்டு, அடியில் கண்ட சிலமருந்துகளில் ஒன்றை உபயோகிக்கலாம். (1) நாயுருவிப்பூண்டின் சமூலத்தைக்கசக்கித் தேய்க்கலாம். (2) சுண்ணாம்பு, ஒட்டடை இவைகளை அரைத்துப்பூசலாம். (3) சுண்ணாம்பையும், உப்பையும் சமனாய்ச்சேர்த்து அரைத்துப்பூசி அனலில் காட்டலாம். (4) வெங்காயத்தைக் கொட்டின இடத்தில் ½-மணி நேரம் தேய்க்கலாம். (5) பெருங்காயம் பூசலாம்.

THE USE OF KEROSENE OIL.

கெரோஸினின் உபயோகம்.—நம் வீடுகளில் ஸாதாரண தகரவிளக்குகள்எரியவிடுவதற்கு கெரோஸின் என்கிற மண்ணெண்ணெயை நாம் உபயோகப்படுத்துகிறோம். வைத்தியானுஸாரமாய்ப் பார்த்தால் எண்ணெயினால் அதிக பிரயோஜனம் இருப்பதாய்த் தெரிகிறது. மூட்டுப்பூச்சி, சிற்றெறும்பு முதலான சிறு பூச்சிகளான ஊர்வனவற்றால் நமக்கு யாதொரு தொந்தரவும் ஏற்படாதிருக்க வேண்டுமானால் இந்த எண்ணெயை நாலுபுறத்திலும் தெளித்து விட்டால் போதும். அல்லது எறும்புப் புத்துகள் இருக்கும் இடங்களில் இரண்டொரு சொட்டுவிட்டால் போதும். அதன் காரத்தைத் தாங்கமாட்டாமல் அந்தச்சிறுபூச்சிகள் மாண்டுவிடும். இதல்லாமல் ப்ளேக் என்ற மகாமாரி வியாதியைத் தடுக்கும் ஆகர்ஷணாசக்தியும் கெரோஸின் எண்ணெய்க்குண்டாம்.

GUINEA WORM.

நரம்புச் சிலந்தி.—சென்னை ராஜதானியில் சில சில இடங்களில் ஜனங்கள் நரம்புச் சிலந்தியென்னும் நோயால் வருந்துவது யாருக்கும் தெரிந்த விஷயம். அந்த நோய் அசுத்தமான தண்ணீரை சாப்பிடுவதினாலேயே உண்டாகிறது. நரம்புச் சிலந்தி வியாதியால் அவஸ்தைப்படும் ஒரு மனிதன் ஒரு குளத்திலாவது அல்லது ஒரு நடைவாவியிலாவது கால் கைகளைக் கழுவினாலும் சரியே உடம்பு குளித்தாலும் சரியே ஜலம் அசுத்தப்பட்டுப்போகிறது. நரம்புச் சிலந்தி வியாதியை உண்டாக்கக்கூடிய சிறு புழுக்கள் ஜலத்தோடு கலந்து போகின்றன. அந்தப் புழுக்கள் நிறைந்த ஜலத்தை சாப்பிடும் ஜனங்களுக்கு அந்த வியாதி உண்டாகிறது. தவிரவும் ஸாதாரணமாய் நாகதாளியென்று சொல்லப்படுகிற சப்பாத்துக் காடுகளில் பெய்த மழை ஜலம் பாய்ந்த குளத்து நீரை உட்கொள்ளுவதினாலும் அந்த வியாதி உண்டாவதாய்த் தெரிகிறது. ஆனால் அநேகமாய் இறங்கி ஏறுவதற்கு படிகள் கட்டி விடப்பட்டிருக்கும் இறைவையற்ற கிணற்று ஜலத்தை ஜனங்கள் குடிப்பதினாலேயே அந்த நோய் மிகுதியும் உண்டாகிறதென்று சொல்லலாம். அந்த வியாதிக்கு சிலர் ஒருவித பச்சிலையை வாட்டி வைத்துக் கட்டுகிறார்கள். வேறு சிலர் மாவைக் கிளறி வைத்துக் கட்டுகிறார்கள். ஸமீபத்தில் பம்பாய் விவஸாய இலாகாவில் "நரம்புச் சிலந்தியின் உற்பத்தி, அதைத் தடுக்க உபாயம்" என்று தலைப் பெயரிட்ட ஒரு துண்டுப் பத்திரிகை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் நரம்புச் சிலந்தி புழுக்கள் உயிரோடிருக்கும் ஜலத்தை குடிப்பதினாலேயே அந்த வியாதி உண்டாகிறதென்றும், அந்த நோயால் வருந்துகிறவர்கள் கால் கை கழுவி உடம்பு குளித்த ஜலத்தோடு நூற்றுக்கணக்கான சிறு புழுக்கள் சேர்ந்து போகின்றனவென்றும், அதனால் குடி தண்ணீர் அசுத்தப்பட்டுப் போகிறதென்றும், அந்த அசுத்த ஜலத்தை குடிப்பவர்கள் எல்லாருக்கும் அந்தநோய் கண்டு விடுகிறதென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வியாதி வராமல் காப்பதற்கு சில உபாயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. குடி தண்ணீரெடுக்கும் கிணறுகளெல்லாம் சேந்து கிணறுகளாயிருக்க வேண்டுமென்றும், ஏறி இறங்க படிகட்டி விட்ட நடைக்கிணறுகளாயிருக்கக்கூடாதென்றும், சொல்லப் பட்டிருக்கிறது. பம்பாய் விவஸாய இலாகா அதிகாரிகள் ஜனங்கள் நடைக்கிணறுகளின் ஜலத்தைக் குடிக்கவே கூடாதென்றும், இறைவைக் கிணறுகளின் ஜலத்தைத் தான் குடிக்கவேண்டுமென்றும், கூடுமானால் படிகட்டி விட்டிருக்கும் நடைக்கிணறுகளை ஜனங்கள் அவைகளிலிறங்காதபடி அடைத்துவிடவேண்டுமென்றும், நடைக்கிணறுகளின் ஜலத்தையாவது குளங்களின் ஜலத்தையாவது குடிக்கவேண்டியிருந்தால் அவைகளிலிருந்து எடுக்கப்படும் ஜலத்தை காய்ச்சிக் குடித்தலே மேலாகுமென்றும், சொல்லியிருக்கிறார்கள். ஒரு கிணற்று ஜலம் அசுத்தமாயிருக்கிறதென்று தெரிந்தால் அதை சுத்தப்படுத்த அந்தக்கிணற்றில் கொஞ்சம் பெர்மாங்கனேட் ஆப்பொட்டாஷ் போடு என்று சொல்லியிருக்கிறார்கள். பம்பாய் விவஸாய இலாகா அதிகாரிகள்சொல்லியிருப்பதுபோல்அசுத்த ஜலத்தைக் காய்ச்சியே குடிக்கவேண்டுமென்று நம்மவர்களுக்கு தெரியுமானாலும் அவர்கள் சோம்பேறித்தனத்தினாலேயே ஜலத்தைக்காய்ச்சி குடிப்பதில்லை.

PERSONAL NOTES.
மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

MAHADEV GOVIND RANADE.

மகாதேவ கோவிந்த ரானடே.—பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜிகளில் ஒருவராயிருந்து உத்தம தேசாபிமானி என்று பேர்வாங்கின மகாதேவ கோவிந்த ரானடே காலஞ்சென்று பத்து வருஷமாயிற்று. அவர் செய்த பெரிய உத்தியோகத்தினால் அவருக்குக் கீர்த்தி வரவில்லை. அவருடைய உத்தமகுணங்களும், விசாலமான கல்வியும், நிதான புத்தியும், தேசோபகார சிந்தையும், அவரைக் கீர்த்திவானாக்கின. இந்தியர், ஐரோப்பியர் எல்லாராலும் மதிப்புப் பெறும்படிச் செய்தன. அவர் பிராமணகுலத்தில் பிறந்தவரானாலும் ஜாதிமத வேற்றுமையில்லாமல் படித்த இந்தியர் ஸகலருக்கும் பெருமையாயும் சலுகையாயும் விளங்கினார். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தராயிருந்தபடியால் காங்கிரெஸ் மகாஸபையில் நேராகச் சேரக்கூடாதவராயிருந்தார். இருந்தாலும், அந்த ஸபைத்தலைவர்கள் செய்த எந்த யோசனையும் அவருடைய புத்திமதியைக் கேட்காமல் செய்யப்பட்டதில்லை. பிரதி வருஷமும் காங்கிரெஸ் கூடுமிடத்திற்கு அவர் வருவார். மெம்பர்கள் தங்கியிருக்கும் இடத்திற்குப்போய் அவர்களை அடிக்கடி கண்டு பேசுவார். பெரியோர், சிறியோர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், என்ற பேதமில்லாமல் எல்லாரையும் சமமாகப் பாவிப்பார். யார் என்ன யோசனை கேட்டாலும், பொறுமையுடன் சொல்லுவார். காங்கிரெஸில் செய்யப்பட்ட தீர்மானங்கள் எவையும் அவரை முன்னதாகக் கேட்காமல் செய்யப்பட்டனவல்ல. காங்கிரெஸ் மகாஸபையோடு கூட ஆசாரத்திருத்த ஸபையை ஸ்தாபித்தவர்களில் அவர் ஒருவர். ஆசாரத்திருத்த ஸபை கூடும்போதெல்லாம் நமது ஆசாரங்களிலுள்ள முக்கியமான சில ஊழல்களை எடுத்துக்காட்டியும் என்ன திருத்தங்கள் அவசியமோ அவைகளைச் சொல்லியும் பிரசங்கம் செய்வார். அவருடைய பிரசங்கங்கள் எப்போதும் ஆழ்ந்த யோசனையும் விசாலித்த அறிவும் கொண்டனவாயும் ஒருவருக்கும் மனவருத்தத்தை உண்டாக்காதனவாயும் இருக்கும். மிஸ்டர் ரானடே பிரசங்கம் செய்யப்போகிறாரென்றால் படித்தவர்கள் வெகு ஆவலுடன் கேட்க ஓடுவார்கள். இந்தியா முழுமையும் படித்த வகுப்பார் அவரைத் தங்கள் தலைவராக அங்கீகரித்திருந்தார்கள். எந்த பாகத்திலும் எந்த மூலை முடுக்குகளிலிருந்தும் கடிதங்கள் அவருக்கு வந்து கொண்டே இருக்கும். வந்த கடிதங்களுக்குத் தளராமல் தம் கையினாலேயே பதில் எழுதுவார். எங்கு என்ன யோசனை நடந்தாலும், அது ராஜீய விஷயமோ, தொழில் விஷயமோ, கல்வி விஷயமோ, ஆசாரத்திருத்த விஷயமோ, அதை நடத்துகிறவர்கள் அவருடைய அபிப்பிராயத்தை முன்னதாகக் கேட்டே முடிப்பார்கள். அவருக்கு கர்வம் என்பதே கிடையாது. பரம ஏழையானாலும் எவ்வளவு தாழ்ந்த நிலைமையில் உள்ளவனானாலும், அவனுடன் பேசும்படி நேரிட்டால் அளவற்ற அன்பும் பொறுமையும் காட்டிப் பேசுவார்.

A MEMORIAL TO LORD MINTO.

லார்ட் மிண்டோ ஞாபகச்சின்னம்.—லார்ட் மிண்டோ இந்திய ராஜப்பிரதிநிதி ஸ்தானத்தை வகித்ததற்கு ஒரு ஞாபகமிருக்க வேண்டியது அவசியமென்று எண்ணி சில இந்திய ஜனத்தலைவர்கள் சேர்ந்து லார்ட் மிண்டோவுக்கு ஒரு ஞாபகச்சின்னம் எழுப்ப வேண்டுமென்று ஒரு விண்ணப்பம் தயார்செய்து வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே லார்ட் மிண்டோவின் காலத்தில் பல அடக்குமுறைச் சட்டங்கள் செய்யப்பட்டபோதிலும் அவர் காலத்தில் பல சீர்திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும், அப்படிப் பலவிதமான திருத்தங்களைச் செய்து ஜனங்களை ஸமரஸப்படுத்திக் கொண்டுபோக அவர் மிகுதியாய்ப் பாடுபட்டதை உத்தேசித்து அவருடைய ஆட்சி காலத்தின் ஞாபகம் என்றென்றைக்கு இருக்கும்படி அலகாபாத் நகரத்தில் ஒரு சிங்காரத்தோட்டம் அமைக்கவேண்டுமென்றும், அதற்கு மிண்டோ பார்க் என்று பெயரிடவேண்டுமென்றும், அதில் 55 அடி உயரத்தில் ஒரு ஸ்தம்பம் எழுப்பவேண்டுமென்றும், அதற்கு "ப்ராக்ளமேஷன் பில்லர்" என்று பெயரிட வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

MR. DADHABHAI NAOROJI.

மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி.—தற்கால இந்திய ப்ரமுகர்களில் முதல்வராகிய தாதாபாய் நௌரோஜிக்கு நாளது ஸெப்டம்பர் மாஸம் 3-ம் தேதியோடு 85 வயதாயிற்று.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்.

LOST HIS HEAD.

தலை தெரியாமல் ஆடினான்.—ஐரோப்பாவில் ராட்டர்டாம் என்னும் பட்டணத்தில் வசிக்கும் ஒரு கருமான் தனக்கு லாட்டரிச் சீட்டில் 8,000 பவுன் விழுந்து விட்டதென்று அளவற்ற சந்தோஷம் கொண்டு கையிலிருந்த சுருட்டோடு கூட லாட்டரிச்சீட்டையும் பற்றவைத்துவிட்டான். இப்போது தனக்குத்தான் விழுந்ததென்று சொல்ல யாதொரு அத்தாக்ஷியுமில்லாமல் தவிக்கிறான். என்ன பரிதாபம் பாருங்கள்.

DID AS HE WAS TOLD.

சொன்னபடி செய்தான்.—

கோபாலன் :—ஒரு கையில் உமியும், ஒரு கையில் ஒடும் வைத்துக்கொண்டு இது என்னடா வெங்குட்டு என்று உமியைக்கையில் கொட்டினான்.

வெங்குட்டு :—இந்தக்கையில் உமி, என்றான்.

கோபாலன் :—இந்தக் கையில் இருக்கிறது என்ன என்று ஒட்டைக் காண்பித்தான்.

வெங்குட்டு :—ஒடு என்றான்.

பிறகு கோபாலன் வெங்குட்டுவின் கையில் உமிழ்ந்து விட்டு ஒடினான்.

WIDOW MARRIAGE.

விதவா விவாகம்.—அடியில்கண்ட விகட வார்த்தை விதவா விவாகத்தைப் பரிஹஸிப்பதற்காக ஏற்பட்டதுபோலும்.—"நான் ஒருவிதவையைக் கலியாணஞ் செய்தேன். அவளுக்கு முந்தின புருஷனால் பெரிய பெண்ணான ஒரு புத்திரி இருந்தாள் அந்தப் பெண்ணை என்னுடைப தகப்பனார் விவாகம் பண்ணினார். என்னுடைய கலியாணத்தில் இந்தப் பெண் எனக்குக் குமாரத்தியும், என் தகப்பனாருடைய கலியாணத்தில் எனக்குச் சிறிய தாயுமானாள். அப்படியே என் தகப்பனார் எனக்கு மருமகனானார். சொற்ப காலத்துக்குப் பிறகு எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இவன் என் தகப்பனாருடைய மனைவியின் சகோதரனாகையால் அவருக்கு மைத்துனனும், என் சிறிய தாயாருடைய சகோதரனாகையால் எனக்கு மாமனுமானான். பின்பு என் தகப்பனாருக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இவன் என் தகப்பனாருடைய மகனாகையால் என் சகோதரனும், என் மனைவியின் மகளுடைய குமாரனாகையால் என் பேரப் பிள்ளையுமானான். என்னுடைய மனைவி என் சிறிய தாயாருடைய தாயாகையால் என் பாட்டியானாள். இப்படி நான் ஒரு வகையில் அவளுக்குப் புருஷனும், இன்னொரு வகையில் அவளுடைய பேரப் பிள்ளையுமானேன். ஒருவனுடைய பாட்டியின் புருஷன் அவனுக்குப் பாட்டனாகையால் என் பாட்டியின் புருஷனாகிய நான் எனக்குப் பாட்டனானேன்."

"கொழுக்கட்டைக்குத் தலையுமில்லை
குறவனுக்கு முறையுமில்லை."

SERVED WELL.

நன்றாய்க் கொடுத்தான்—வேலையற்று கொட்டகையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒரு சிறு பரியாரிப்பையனைப் பார்த்து ஒருவன் "நீ எப்பொழுதாவது குரங்கை க்ஷவரம் செய்திருக்கிறாயா?" என்று கேட்டான். அதற்குப் பையன் சற்று ஆலோசித்துவிட்டு மிகவும் சாந்தமாய் "நான் இதுவரையில் குரங்கை க்ஷவரம் பண்ணிப் பார்த்ததில்லை, நீங்கள் உட்கார்ந்தால் நான் சிரமப்பட்டுப் பார்க்கிறேன்" என்றான். அதற்கவன் வெட்கித்தலை குனிந்துபோனான். ஆகையால் நாம் ஒருவரையும் "வேலையத்த அம்பட்டன் பூனையைப் பிடித்து க்ஷவரம் செய்தானாம்" என்று சொல்லக்கூடாது.

A SMART BOY.

ஒரு புத்திசாலிப் பையன்.—ஒரு கனவான் வீட்டுத் திண்ணையில் அனேக இஷ்டர்கள் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். வீட்டுக்காரருடைய மகன், ஐந்து வயதுக் குழந்தையும் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்தான். ஏதோ பேச்சுமேல் பேச்சாகவரும் போது ஒரு கனவான், இந்தக் குழந்தையின் சாதுரியத்தை மெச்சினார். மற்றொருவர் அதற்கு உத்தரமாக, "நான் அனேகம் குழந்தைகளைப் பார்த்திருக்கிறேன். அனேகமாய் சிறுவயதில் புத்திசாலிகளாகவும், உற்பாதப் பேச்சுகள் பேசியும் இருப்பவர்களெல்லாம், வயதாக ஆகக் குரங்குகளாகவும், எருமைகளாவும் ஆகிவிடுகிறார்கள்," என்றார். இது வரையில் சும்மாவிருந்த அந்தக் குழந்தை இதைக் கேட்டதும், "ஐயா, ஆனால் தாங்கள் குழந்தைப் பருவத்தில் வெகு உற்பாதமாயிருந்தீர்களோ?" என்று மட்டும் கேட்டான். அங்கே இருந்தவர்களில் ஒருவரொழிய மற்றெல்லாரும் வெடித்த சிரிப்பாகச் சிரித்தார்கள்.

CURIOSITIES.

விநோதங்கள்.

A MAN WHO SCALES OFF.

ஒரு தோல் உரியும் மனிதன்.—ஸர்ப்பங்கள், நண்டுகள் முதலான ஜீவஜெந்துக்களுக்கு மாஸாமாஸம் தோலுரிந்து வேறு தோல் உண்டாகிறதென்று நாமறிவோம். இலைகளுள்ள மரங்களெல்லாம் வருஷத்தில் ஒருமுறை தங்கள் இலைகள் உதிர வேறு புது இலைகள் துளிர்க்கப் பெறுகின்றன. சில மரங்களில் வருஷத்தில் இரண்டுமுறை புது இலைகள் உண்டாகின்றன. ஆனால் மனுஷன் வருஷா வருஷம் தன் பழைய தோலை யிழந்து புதுத்தோலையடைகிறானென்று இது வரையில் எவரும் கேள்விப்பட்டதில்லை. இப்போது அமெரிக்காவின் ஐக்கியநாடுகளில் இண்டியனாப்பொலீஸ் என்ற பட்டணத்தில் ஒருவன் தன் குழந்தைப் பருவமுதற்கொண்டு ஒவ்வொரு வருஷமும் தவறாமல் பாம்பைப்போல் தோலுரியப்பெற்று அதற்குப் பதிலாய்ப் புதுத்தோல் அடைந்துகொண்டு வருகிறான். அத்துடன் அவன் கால் விரல்களிலும், கைவிரல்களிலுமுள்ள நகங்களும் கழன்றுபோய் வேறு நகங்கள் வளருகின்றன. அவனுக்குத் தோலுரியும்போதும், நகங்கள் கழலும்போதும் யாதொரு உபத்திரவமுமில்லையாம். ஆனால் அந்தக்காலத்தில் லேசாய் ஜுரம்மாத்திரம் அடிக்கிறதாம். பழைய தோல் போய்ப் புதிதாய் உண்டான தோல் தடித்து உறுதிப்பட மூன்றுவாரம் பிடிக்கிறதாம். டாக்டர்கள் இந்த அதிசயமான மனிதனைப் பலதடவையும் பரிசோதனை பண்ணிப்பார்த்தார்கள். ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை. பாம்பாய்ப்பிறக்கவேண்டியவன் பிசகி மனுஷனாய் உதித்தானாக்கும்.

CHILDREN IN SOMALILAND.

ஸோமாலிலாண்டில் குழந்தைகள்.—ஆபிரிக்காவில் ஸோமாலிலாண்டு என்ற நாட்டில் பிள்ளைகளும் சரக்குகளைப்போல பாவிக்கப்பட்டு விலைக்கு வாங்கவும் விற்கவும்படுகிறார்கள். அந்த தேசத்தில் ஒருவனுக்கு எத்தனை பிள்ளைகளிருக்கிறார்களோ அத்தனைக்கும் அவன் ஆஸ்திக்காரனாக மதிக்கப்படுகிறான். மற்ற நாகரிகமற்ற தேசங்களைப் போல ஸோமாலிலாண்டில் சிசு ஹத்திகிடையாது. ஒருவனுக்கு எத்தனை பெண்சாதிகளாகிலும் இருக்கலாம். ஆயினும் ஸாதாரணமாய் நாலு பெண்சாதிகள்தான் ஒவ்வொருவனும் கட்டிக்கொண்டிருப்பான். விருத்தாப்பியர்கள் பலருக்கு அந்த தேசத்தில் திரளான பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளுமுண்டு. பெர்பொரா என்ற கிராமத்துத் தலைவனுக்கு 23 குமாரர்களும், 29 குமாரத்திகளும், 390 பேரப் பிள்ளைகளும் இருக்கிறார்கள். ஓர் தகப்பன் தன் குமாரத்திகளை விற்று ஒட்டகங்கள் வாங்குகிறான். பிள்ளைகள் அதிகமாயுள்ளவர்கள் அவர்களில் சிலரை விற்று காணியாட்சி, தோட்டம், துறவு முதலியவைகள் வாங்கி, ஐசுவரியர் ஆகிறார்கள். அந்த தேசத்திவ் பிள்ளைகள் பிறக்கும் ஸந்தர்ப்பத்துக்கு ஏற்றபேர்களை அவர்களுக்கு இடுகிறார்கள். காலைநேரத்தில் பிறந்த குழந்தைக்கு 'உவாபெரி' யென்றும், மழைபெய்யும்போது பிறந்த பிள்ளைக்கு 'ரோப்லே' யென்றும் பெயர் கொடுக்கிறது வழக்கமாம்.

OFFERING OF TUFTS.

தலைமயிர் காணிக்கை.—ஆசியாக்கண்டத்தின் அனேக தேசங்களில் ஜனங்கள் ப்ரார்த்தனைக்காகத் தங்கள் தலைமயிரை வெகுகாலம் வரையில் சிரைத்துக்கொள்ளாமல் வைத்துக்கொண்டிருந்து தாங்கள் ப்ரார்த்தனை செய்துகொண்ட கோயில்களில் போய் முடியையிறக்குகிறார்கள். நமது இந்தியா தேசத்தில் இந்து மதஸ்தருக்குள் இது ஸாதாரணமாய் வழங்கிவருகிறது. கிறிஸ்துவர்களுக்குள்ளும் மிக அரிதாய்க் காணலாம். ஜப்பான் தேசத்துக் கோயில்களில் வடக்கயிறுகள்போன்ற மொத்தமான கயிறுகள் அனேகம் சுருணை சுருணையாய்த் தொங்கிக்கொண்டிருக்கிறதைக் காணலாம். அவைகள் அந்தக் கோயில்களுக்கு ப்ரார்த்தனைக்காக வந்து முடியிறக்கிக்கொண்ட கணக்கற்ற ஸ்திரீகளுடையவும், சிறுமிகளுடையவும் தலைமயிரால் திரிக்கப்பட்டவைகளாம். கோயில் கட்டிட வேலைகளுக்கு அந்தமயிர்க் கயிறுகளின் உதவிகொண்டுதான் கல், சுண்ணாம்பு, உத்தரம் முதலான ஸாமான்களைச் சேர்த்து உயர ஏற்றுவார்கள். கட்டிட வேலை முடிந்தபின் அந்தக் கயிறுகளைச் சுத்தஞ்செய்து கோயில்களில் தொங்கவிடுவார்கள். ஜனங்கள் அவைகளை அர்ச்சிக்கப்பட்ட பண்டங்களைப்போல் பூசிப்பார்கள்.

NEWS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

INDIAN NEWS.

இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

Death Penalty.

மரண தண்டனை.—16-வயதுக்குட்பட்ட சிறுவருக்கு மரணதண்டனை விதிக்கக்கூடாதென்று, லங்கை சட்ட நிரூபண சபைக்கு ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

Platform Tickets.

ப்ளாட்பாரம் டிக்கேட்டுகள்.—தென்னிந்தியா வியாபாரச் சங்கத்தார், ப்ளாட்பாரம் டிக்கெட்டுக்கு ஏற்படுத்தியிருக்கும் இரண்டணா சார்ஜ் அதிகமென்றும், ஆதலால் அதைக் குறைக்கவேண்டுமென்றும், தென்னிந்திய ரெயில்வே கம்பெனியாருக்கு எழுதிக்கேட்டிருந்தார்கள். கூடிய சீக்கிரத்தில் ஒரு அணா ஆக்கப்படுமென்று அந்தக்கம்பெனியார் பதில் எழுதியிருப்பதாய்த் தெரிகிறது.

Railway Projects.

ரெயில் போடயோசனை—தென்னிந்தியாவில் திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கும்; விருதுபட்டியிலிருந்து ராமநாதபுரம், புதுக்கோட்டை, திருச்சி, பன்ருட்டிக்கும்; அரந்தாங்கியிலிருந்து தேவகோட்டை, தொண்டி இந்த ஊர்களுக்கும்; வேதாரண்யத்திலிருந்து கும்பகோணத்துக்கும்; சேலத்திலிருந்து பாங்கிப்பேட்டைக்கும்; விருத்தாஜலத்திலிருந்து கூடலூருக்கும்; அம்மய்ய நாயக்கனூரிலிருந்து கருவாமத்துக்கும்; திண்டுக்கல்லிலிருந்து போதனூர், உலவ கோட்டுக்கும்; பழனியிலிருந்து சத்தியமங்கலத்துக்கும்; அங்கிருந்து மேட்டுப்பாளையத்துக்கும்; ஈரோட்டிலிருந்து மைசூர் பட்டணம் வழியாய் மங்களூருக்கும்; மைசூரிலிருந்து கன்னனூருக்கும் ரயில் மார்க்கம் உண்டாக்க எண்ணியிருக்கிறார்கள்.

A Platform Ticket Case.

ஒரு ப்ளாட்பாரம் டிக்கெட் கேஸ்:—சில மாதங்களுக்கு முன்னே டில்லி வக்கீல் லாலா மதிஸாகர் அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுப்போகும் தம் சினேகிதர் ஒருவரைப் பார்ப்பதற்காக ரெயில்வே ஸ்டேஷன் ப்ளாட்பாரத்துக்குள்ளே போகப் பார்க்கையில் அவரை ஒரு டிக்கெட் கலெக்டர், உம்மிடம் ப்ளாட்பாரம் டிக்கெட் இல்லையாகையால் நீர் உள்ளே போகக்கூடாதென்று தடுத்தார். அவர் என்ன சொல்லியும் அந்த டிக்கெட் கலெக்டர் கேட்கவில்லை. அதன்மேல் நீங்கள் யாதொரு நியாயமுமில்லாமல் என்னை ப்ளாட்பாரம் டிக்கெட் வாங்கக் கட்டாயப்படுத்துகிறீர்களென்று சொல்லிக்கொண்டே ஒரு ப்ளாட்பாரம் டிக்கெட் வாங்கி அதை டிக்கெட் கலெக்டரிடம் காட்டி உள்ளே போனார். அந்த வக்கீல் உடனே டில்லி ஸ்மால் காஸ் கோர்ட்டில் ரெயில்வே அதிகாரிகளிடமிருந்து தமக்கு 6 தம்பிடி நஷ்ட ஈடு கிடைக்கவேண்டுமென்று வியாஜ்யம் செய்தார். அந்தக் கேஸை டில்லி ஸ்மால்காஸ் கோர்ட் ரெஜிஸ்ட்ரார் விசாரணை செய்து வாதிக்கு ரெயில்வே அதிகாரிகள் செலவுத் தொகையோடு 6 தம்பிடி நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியது தான் என்று திர்ப்புச் செய்திருக்கிறார்.

Date Cultivation in the Punjab.

பஞ்சாப் மாகாணத்தில் பேரீச்சுசாகுபடி.—பஞ்சாப் விவஸாய இலாகாக்காரர்களின் ஆதரவின் கீழ் அந்த மாகாணத்தைச் சேர்ந்த முஸபர்கர் என்ற ஊரில் பேரீச்சஞ் செடிகள் நட்டுப் பரீட்சை பார்க்கப்படுகிறது. அதற்காக 500 செடிகள் பர்ஸியன் குடா பக்கத்திலிருந்து தருவித்திருக்கிறார்கள். பேரீச்சஞ் செடிகளை வைத்து வளர்ப்பத்தில் வெகு நிபுணரான ஒரு அரபியும் தருவிக்கப்பட்டிருக்கிறார். அந்தச் செடிகள் பஞ்சாப் மாகாணத்து ஸ்தாவர சாஸ்திர நிபுணரின் மேற் பார்வையின் கீழேயே நடப்பட்டிருக்கின்றன. முஸபர்கர் ஜில்லா போர்ட் தோட்டத்தில் 250 செடிகளை நட்டிருக்கிறார்களாம். முல்டான் ஸெண்ட்ரல் ஜெயில் தோட்டத்தில் 250 செடிகளை நட்டிருக்கிறார்களாம். பஞ்சாப் மாகாணத்து ஸ்தாவரசாஸ்திர நிபுணருக்கு ஈஜிப்டில் பேரீச்ச மரங்கள் வைத்து வளர்த்து அனுபோகமுண்டாம். அவர் முஸபர்கரின் பூஸாரம் பேரீச்ச மரங்கள் வைத்து வளர்ப்பதற்கு மிகவும் ஏற்றதாயிருப்பதாய்ச் சொல்லுகிறாராம். பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னரும் இந்தப் பேரீச்சஞ் செடி நட்டு வளர்த்துப் பார்க்கும் பரீட்சையில் அக்கறை காட்டி வருகிறாராம்.

Charge Against the Nanguneri Jheer.

நாங்கூனேரி ஜீயரின்மேல் சார்ஜ்.—திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நாங்கூனேரி ஒரு பெரிய வைஷ்ணவ ஸ்தலம். அந்தவூர் கோயிலின் நிருவாகத்தை வகிக்கும் மடாதிபதிக்கு ஜீயர் ஸ்வாமிகள் என்று பேர். அந்தக் கோயில் ஜீயரைப் பொதுவாய் ஸ்ரீ வானமாமலை ஜீயர் என்று சொல்லுவதே வழக்கம். இப்போதுள்ள ஜீயர் தாம் வாங்கி வைத்துக்கொண்டிருந்த துப்பாக்கிகளை லைஸென்ஸ் காலம் கழிந்ததும் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் வைத்து விடாத குற்றத்துக்காகச் சார்ஜ் செய்யப்பட்டிருந்தார். ஜீயர் ஸ்வாமிக்காகத் திருநெல்வேலி வக்கீல் மிஸ்டர் கே. ஆர். குருசாமி அய்யர் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் முன் ஆஜராகி சட்டப்படி தமது துப்பாக்கிகளை லைஸென்ஸ் வாயிதா கழிந்ததும் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் வைத்துவிடத் தவறிப்போனதற்காக ஜீயர் ஸ்வாமி வருத்தப்படுகிறாரென்றும், அவர் தம்மை மன்னிக்கும்படியாய்க் கேட்டுக் கொள்ளுகிறாரென்றும் விண்ணப்பஞ் செய்துகொண்டார். டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டிரேட் ஜீயர் ஸ்வாமி செய்தது பிசகுதானென்றும், அவர் சட்ட விரோதமாய் நடந்து விட்டாரென்றும், ஆனால் ஜீயர் ஸ்வாமி மிகப் பரிசுத்தவானான ஒரு மடாதிபதியாயிருப்பதையும் அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருப்பதையும் யோசித்துத் தாம் அவர்மேல் நடத்தப்படும் ப்ராஸிக்யூஷன் ரத்தாகும்படி உத்தரவு செய்வதாய்ச் சொன்னார். போனவருஷம் ஜீயர் ஸ்வாமி வைத்திருந்த துப்பாக்கிகளுக்காகப் பெற்ற லைஸென்ஸ் தம்முடைய பார்வைக் கனுப்பப்படவேண்டுமென்றும், அதைப் பார்த்துக்கொண்டு அந்த லைஸென்ஸை லௌகிகப் பொறுப்புகளை வகிக்கக்கூடிய அந்த மடாதிபதியின் ஏஜெண்டொருவருக்கு மறுபடியும் கொடுப்பதைபற்றித் தாம் கவனிப்பதாகவும் சொன்னார். அதுவரையில் அந்தத் துப்பாக்கிகள் ஜீயரிடமேயிருக்கலாமென்றும் உத்தரவு செய்தார்.

The Ranade Institute.

ரானடே ஸ்தாபனம்.—காலஞ்சென்ற மகாதேவ கோவிந்த ரானடேயின் அருமையான குணங்களைப்பற்றி இந்த ஸஞ்சிகையில் இன்னொரு பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவர் இறந்தவுடன் அவருடைய சிஷ்யரான மிஸ்டர் கோகலேயும் வேறு சிலரும் சேர்ந்து, அவருக்குத்தக்க ஞாபகச்சின்னம் ஒன்று புனாவில் ஸ்தாபிப்பதற்காக பணம் சேர்க்க ஆரம்பித்தார்கள். புனாக்காரர்களும் தக்ஷிணவாசிகளுமே 80,000 ரூபாய் கொடுத்தார்கள். மற்ற இடங்களிலிருந்து கிடைத்த பணத்தையும் சேர்த்து மொத்தம் லக்ஷத்து இருபதாயிரம் ரூபாய் ஆயிருக்கிறது. அதைச் சிலர் ட்ரஸ்டிகளாகச் சேர்ந்து வசப்படுத்திக்கொண்டார்கள். இந்தத் தொகையைக்கொண்டு புனாவில் ஒரு தொழில் ஆராய்ச்சிச் சாலை ஸ்தாபிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டு அது ஸமீபத்தில் ஸர் ஜார்ஜ் க்ளார்க் அவர்களால் திறக்கப்பட்டது. தக்க கட்டிடம் கட்டவும், ஆராய்ச்சிக்கு அவசியமான கருவிகள் முதலிய சாதனங்களை அமைக்கவும், ஆராய்ச்சியை மேல் விசாரணை செய்வோருக்கு மிதமான வேதனங்கள் கொடுக்கவும், இந்தத் தொகை போதவே போதாது. ஆயினும், கிடைத்த தொகையைக்கொண்டு இந்த காரியத்தை ஆரம்பிப்பதாக ட்ரஸ்டிகள் துணிந்திருக்கிறார்கள். நம் தேசத்தில் ஏற்கனவே நடந்து வரும் அநேக சில்லரைத்தொழில்கள் சாஸ்திர ஆராய்ச்சியினால் கிடைக்கும் அறிவில்லாமல் பின்னடைந்து இருப்பதை யறிந்து, அப்படி ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஸிமிட்டி, எண்ணெய், ஸோப்பு, மெழுகுவர்த்தி, தீக்குச்சி, சர்க்கரை, எலும்பு ஸாமான்கள்—இந்தத் தொழில்கள் சம்பந்தமாய் ஸௌகரியப்படி ஒன்று அல்லது சிலவற்றைப்பற்றி சாஸ்திர ஆராய்ச்சி செய்து அந்தத் தொழில்களை எளிதாயும் லாபகரமாயும் செய்யக்கூடிய வழிகள் தெரிந்து கொள்ளப்படும். இந்த ஆராய்ச்சிச் சாலையில் தேர்ச்சி பெற்ற சிறுவர் அந்தப் பயிற்சியைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக, இந்தியாவில் மற்ற இடங்களுக்கோ, அந்நிய தேசங்களுக்கோ அனுப்பப்படுவார்கள். இன்னும் பல யோசனைகளும் ட்ரஸ்டிகள் மனதில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த விஷயத்தில் ஆதிமுதல் அக்கறை பாராட்டி வந்த மிராஜ் என்ற ஒரு சிறு மிட்டாவின் தலைவர் முப்பதாயிரம் ரூபாய் தனியாய் எடுத்துவைத்து, அதன் வட்டியைக்கொண்டு ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறாராம்.

FOREIGN NEWS.

அன்னிய நாட்டு ஸமாசாரங்கள்.

A NEW PAPER FOR THE BLIND.

குருடருக்கு ஒரு புதிய பத்திரிகை.—லண்டன் நகரத்தில் பிரசுரமாகும் பேர்போன "டெயிலி மெயில்" என்னும் லிபரல் பத்திரிகை குருடர் ஸ்ப்ரிசத்தினால் வாசிக்கும் பொருட்டு அவர்களுக்காக ஒரு விசேஷ வாராந்தரப் பத்திரிகை பிரசுரம் செய்து வருகிறது. ப்ரித்தானியாவில் 40,000-ம் குருடர்களிருக்கிறார்கள். இவர்களது நன்மையைக் கருதி வெளியாகும் பத்திரிகையின் வருஷசந்தா 6 ஷில்லிங் 6 பென்சாம். அதாவது கிட்டதட்ட 5 ரூபாய்.

ROADS MADE OF WOOD.

மரத்தினால் ரஸ்தா.—ஐரோப்பிய நாடுகளில் முக்கிய பட்டணங்களில் ரஸ்தாக்கள் மண், கப்பி முதலியவைகளால் போடப்படாமல் கனமான மரத்துண்டுகளை நெருக்கமாய்ப் பதித்து கெட்டிக்கப்படுகின்றன. இப்படிச் செய்வதால் ரஸ்தாக்கள் மேடுபள்ளமில்லாமல் சமனாக இருப்பதுடன் செப்பனிடுவதற்கும் செலவு குறைவாயிருப்பதோடு ஸௌகரியமாகவும் இருப்பதாக நிபுணர்கள் சொல்லுகிறார்கள். கல்கத்தாவில் சில காலத்துக்கு முன்னால் ஒரு பெரிய ரஸ்தாவில் இப்படிச் செய்ததில் அது நல்ல நிலைமையிலிருக்கிறதாம். நம்முடைய பிரதான பட்டணங்களில் இதைச் சிறுகச் சிறுக அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்து பார்க்கலாம். செலவுக்குறைவும் ஸௌகரியமுமே நமக்கு முக்கியம்.

GOLD IN REFUSE.

குப்பை கூளங்களிலும் பொன்.—அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்களின் தலை நகரமாகிய நியூயார்க் பட்டணத்தில் போனவருஷம் தெருக் குப்பையால் 46,800 பவுன் வருமானம் வந்தது. அதில் பழைய புட்டிகளால் 3,200 பவுனும், கொழுப்பு முதலியவைகளால் 5,000 பவுனும் கிடைத்தது. இதுவுமல்லாமல் செத்தை மட்டை முதலியவைகளைச் சுட்டெரித்து எடுக்கப்பட்ட சாம்பல், ரோட்டுகளுக்கும், கட்டிடங்களுக்கும் கூட்டப்படும் காங்கிரீட் என்ற சுண்ணாம்புச் சேர்மானத்துடன் சேர்க்கப்பட்டு அதுவும் விலை பெற்றுப்போயிற்று. நியூயார்க்கில் ஈரமான பண்டங்களை காய்ந்த குப்பையுடன் கலக்கக்கூடாது. குப்பை வண்டிகள் இரண்டு வகைப்படும். ஒன்று, புட்டி, ஓடு, சாம்பல் முதலான அழுகிப்போகாத வஸ்துகளை ஏற்றிக்கொண்டுபோகும். மற்றொன்று எறிந்து விடப்பட்ட மீன், மரக்கறி முதலான பதார்த்தங்களை சேகரித்துக்கொண்டு போகும்.

RISE IN PRICES.

விலை வாசிகளின் ஏற்றம்.—அமெரிக்காவைச் சேர்ந்த ஐக்கிய மாகாணங்களில் இந்தியாவில் போலவே கொஞ்சகாலமாய் விலைவாசிகள் ஏறிப்போயிருக்கிறபடியால், அதன் காரணங்களை விசாரித்து ரிபோர்ட்டு செய்யும்படி ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அந்தக்கமிட்டி அப்படியே விசாரணை செய்து ரிபோர்ட்டு செய்ததில் 10 காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை என்னவென்றால் :—1. பூமியில் விளையும் பொருள்களுக்கு கிராக்கி அதிகமாயிருப்பது, 2. ஜனங்கள் அதிகமாய் சுகத்தைத் தேடுவது, 3. உணவு உண்டாக்கும் தொழில்களை விட்டு உணவு செலவாகும் தொழில்களைச் செய்தல், 4. பூமியின் வளப்பம் குறைந்துபோயிருப்பது, 5. அதிகமான முதல்களைக் கொண்டு தொழில்களை நடத்தல், 6. அதிகமான பொன் விளைதல், 7. பெரிய வியாபாரிகள் சிறிய வியாபாரிகளைச் சேர்த்துக்கொண்டு விலைகளை உயர்த்தல். இவைகளில் சில நம் தேசத்திலும் இருப்பதை நேயர்கள் குறிப்பிடக் கூடும். உலகமுழுமையுமே விலைவாசிகள் உயர்ந்துபோயிருக்கின்றன. நமது தேசத்தில் இதுவரையில் இவைகள் குறைவாயிருந்தபடியால் இப்போது திடீரென்று ஏறிவிடவே ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். என்ன பரிகாரங்கள் இதற்கு ஸாத்தியமோ அல்லது பரிகாரமேயில்லையோ இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் நடத்தும் விசாரணையால் வெளிப்படக் கூடும். கவர்ன்மென்டால் செய்யக்கூடியது எதுவுமில்லை யென்று ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஜனங்கள் ஊக்கத்துடன் தங்கள் வரும்படிகளை அதிகப்படுத்திக் கொள்வதுதான் காலாந்தரத்தில் ஸாத்தியமான பரிகாரமாய் முடியும்.

COMMERCIAL PROGRESS OF JAPAN.

ஜப்பானின் வியாபார விருத்தி.—அன்னிய தேசங்களில் ஜப்பானிய வர்த்தகம் முற்படுவதற்காக அங்கங்கே தனியான உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டி ஜப்பானிய கவர்ன்மெண்டார் ஒழுங்குகள் பிரசுரம் செய்திருக்கிறார்கள். தற்காலம் இம்மாதிரி நாலு உத்தியோகஸ்தர்கள்தான் நியமிப்பதாக உத்தேசம். இவர்களுடைய கடமை என்னவென்றால், தாங்கள் வசிக்கும் அன்னிய தேசங்களில் ஜப்பானிய வர்த்தகத்தை எப்படி அதிகமாக்கலாமென்று அறிந்து ஜப்பானிலுள்ள தொழிலாளிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் அவசியமானவைகளை இவர்கள் அறிவிப்பார்கள். ஜப்பானிய ஸாமான்கள் எவை அன்னிய தேசங்களில் விலையாகக்கூடியன என்றும், எந்த ஸமயத்தில் அவைகள் எப்படி விற்கின்றன என்றும், எப்படி அவைகளைச் செய்தால் அன்னியருக்கு அவைகள் விருப்பமாயிருக்குமென்றும், இவைகளையும் மற்ற விவரங்களையும் அறிந்து ரிபோர்ட்டு செய்வார்கள். ஜப்பானிய அன்னிய மந்திரிக்கு உட்பட்டு இவர்கள் வேலைசெய்வார்கள். ஜப்பானியச் சிறுவர்கள் அங்கங்கே வியாபாரக் கல்வி கற்பதற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த உத்தியோகஸ்தர்களுக்குக் கூடிய உதவியைச் செய்வார்கள். தற்காலம் நூறு ஜப்பானியச் சிறுவர்கள் இந்த வியாபாரக் கல்வியைக் கற்றுவருகிறார்கள். இங்கிலாந்தில் மட்டும் 19 சிறுவர்கள் கற்கிறார்கள். அன்னிய தேசங்களில் வசிக்கும் இந்த உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி ஜப்பானுக்குத் திரும்பிவந்து அங்கேயுள்ள தொழிலாளிகளையும் வர்த்தகர்களையும் கண்டு யோசனை செய்வார்கள். அன்னிய தேசங்களிலுள்ள மார்க்கெட்டுகளின் நிலைமையைப்பற்றி அவர்களுக்குச் சொல்லி, அவர்கள் செய்யும் அல்லது விற்கும் ஸாமான்களில் என்ன குறைகள் உண்டோ, அவைகளைச் சொல்லி, ஜப்பானிய ஸாமான்கள் அன்னியருக்கு விருப்பமுள்ளனவாகும்படி செய்வார்கள்.

REWARD FOR REARING CATS.

பூனைவளர்ப்பதற்கு வெகுமதி.—ஜப்பான் தேசத்திலே ப்ளேக் வியாதியால் மிகுந்த நஷ்டமுண்டாயிற்று. அது இப்போது அந்த தேசத்திலே மிகக் குறைந்த அளவில் வந்துவிட்டது. ஆயினும் அது திரும்பவும் அதிகரிக்காதபடி அந்ததேச அரசாட்சியார் ரொம்ப கவனமாயிருக்கிறார்கள். அவர்கள் முன் எச்சரிப்பாய்ச் செய்துவரும் காரியங்களில் எலிகளை நிர்மூலஞ்செய்யப்பார்ப்பதே விசேஷ முயற்சியாகக் காணப்படுகிறது. எலிகளே ப்ளேக் வியாதி வித்துக்களை தேசத்திலே அதிகமாய்ப் பரப்புகின்றன என்பது வைத்திய சாஸ்திரிகளின் தீர்மானம். ஆகையினாலே எலிகளை தேசத்திலிருந்து தொலைத்துவிட அரசாட்சியார் ஏற்பட்டிருக்கிறார்கள். அதற்காக தேசத்திலே பூனைகளை யதிகமாக வளர்ப்பது புத்தியென்று அவர்கள் கண்டிருக்கிறார்கள். இந்த நோக்கத்துடன் அவர்கள் முதலில் ராஜதானியாகிய யொக்கோஹாமாவிலுள்ள பூனைகளைக் கணக்கிட்டார்கள். திடகாத்திரமுள்ள 7,000 பூனைகள் மாத்திரம் அந்த நகரத்தில் இருப்பதாக ஏற்பட்டது. அதில் மூன்றிலொன்று மாத்திரமே கடுவன்களென்றும் வெளியாயிற்று. அந்த நகரிலுள்ள குடித்தொகைக்கு இது போதாதென்று ஏற்பட்டது. பூனைகள் குட்டிபோடும்போது அந்தக் குட்டிகளை ஜனங்கள் பெரும்பாலும் கொன்றுபோடுவதே இந்தக்குறைவுக்குக் காரணமென்று அரசாட்சியார் கண்டார்கள். ஆகையால் ஜனங்கள் பூனைக் குட்டிகளைக் கொல்லாமல் வளர்ப்பதற்குத் தூண்டுதலாய், ஒரு குறித்த பிராயம் மட்டும் பூனைக் குட்டிகளை வளர்த்துக் காண்பிப்பவர்களுக்கு, ஒவ்வொன்றுக்கு முக்கால் ரூபாய் வீதம் வெகுமதி கொடுப்பதாக விளம்பரஞ் செய்திருக்கிறார்கள். அதன்பின் ஒரு குட்டியுங் கொல்லப்படவில்லை. எல்லாரும் அவைகளைக் காப்பாற்றி வளர்த்து, அரசாட்சியாருக்குக்காட்டி வெகுமதிபெற்று வந்தார்கள். வெகுமதிக்கு அனேகர் பிறருடைய பூனைக்குட்டிகளைக் களவாடிக்கொண்டுபோய்க் காட்டவுந் தலைப்பட்டார்கள். இதனால் குடிஜனங்களுள் சண்டை சல்லியங்களும் அரசாட்சியாருக்குப்பெருந் தொல்லைகளும் உண்டாயின. இதைக்கண்டபோது அரசாட்சியார் பிறக்கும்குட்டிகள் யாவற்றையும் உடனுக்குடனே போலீஸ் ஸ்டேஷனில் பதிவுசெய்து கொள்ளவேண்டுமென்று சட்டமேற்படுத்தினார்கள். அந்தக்குட்டிகளை குறித்த பிராயம் வரும்போது காட்டி வெகுமதிபெறவேண்டியது. எலி பிடிக்கத்தக்க பிராயமே வெகுமதிக்குப் பதிவுசெய்யுங்காலமாம். இந்த உபாயத்தால் யொக்கோஹாமாவில் இப்போது பூனைகள் எட்டு ஒன்பது மடங்காய்ப் பெருகிவிட்டனவாம். இதுவரையில் பூனைகளுக்காக 1,300 ரூபாய் வரையில் அரசாட்சியார் வெகுமதிகள் கொடுத்திருக்கிறார்கள்.

SEASON.

கால ஸ்திதி.

Rainfall.

மழை.—ஏப்ரல்௴ 1-தேதியிலிருந்து, அக்டோபர்௴ முதல் தேதி வரையில் பெய்தமழை அளவும் இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், கீழே அங்குலக் கணக்காகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	45	32
வால்டேர்	36	25
காகிநாடா	26	22
மசூலிப்பட்டணம்	31	25
நெல்லூர்	11	13
மதராஸ்	19	18
கடலூர்	21	18
நாகப்பட்டணம்	18	13
பாம்பன்	9	5
கொழும்பு	25	45
திருவானந்தபுரம்	44	41
கொச்சி	89	91
கள்ளிக்கோட்டை	84	99
மங்களூர்	105	113
மெர்க்காரா	108	113
ஐதராபாத்	22	27
ரெய்ச்சூர்	19	25
பல்லாரி	18	13
கர்நூல்	23	23
கடப்பை	37	22
ஹாஸ்ஸான்	29	25
பெங்களூர்	30	25
கொடைக்கானல்	44	32
உதகமண்டலம்	37	..
கோயம்புத்தூர்	8	9
வேலூர்	43	..
சேலம்	25	28
திருச்சிராப்பள்ளி	21	16
புதுக்கோட்டை	28	..
மதுரை	24	17
திருநெல்வேலி	9	7

MARKET REPORT.

மார்க்கெட் நிலைவரம்.

◆

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—ஆகஸ்டு௴ 27-தேதியிலிருந்து ஸெப்டெம்பர்௴ 24௳ வரையில் அந்நிய தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி ஸாமான்களின் விவரம்.

நூலும் முறுக்கு நூலும் 3,46,068 ராத்தல், காரிகத்துணிகள் 50,45,811 கஜம். சலவைத்துணிகள் 21,14,491 கஜம். இதர நிறுசுத்துணிகள் 32,51,697 கஜம். இதேகாலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 29,378 அந்தர் துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். ஸெப்டெம்பர் மாஸம் 27-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூலின் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-3 வரையில் இருந்ததாகத் தெரிய வருகிறது.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற ஆகஸ்டு மாஸம் 27-ந்தேதிமுதல் ஸெப்டெம்பர் மாஸம் 24-ம் தேதி வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 37 அந்தரும், இதர தேசங்களிலிருந்து 3 அந்தரும் இறக்குமதியாயின.

WANTED AGENTS.

ஏஜெண்டுகள் தேவை.

“பிழைக்கும் வழி” க்கு ஸந்தாதாரர்கள் சேர்க்க ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் ஏஜெண்டுகள் தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித்தெருவு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

Supplement to the "Practical Life"   "[illegible] வாழ்வு" க்கு அனுபந்தம்.

THE LATE MISS FLORENCE NIGHTINGALE.

[illegible]

([illegible])

LORD HARDINGE.

லார்ட் ஹார்டிஞ்ச்.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ.,
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. | ஸாதாரண௵ அற்பசி௴—OCTOBER 1910. | ஸஞ்சிகை 10. No. 10.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		*Foreign.* Rs. A. P.
Per annum ...	4 0 0	...	... 6 0 0
Single copy ...	0 6 0	...	... 0 8 0
Sample copy ...	0 2 0	...	... 0 3 0

RATES OF ADVERTISEMENT.

1 Page ...	5 0 0	per month.
½ do ...	2 8 0	do
¼ do ...	1 4 0	do
Less than ¼ page ...	0 8 0	per *inch* per month.

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors.—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4 Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜாலக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்நிய நாடு.
வருஷம் 1க்கு ..	4 0 0	..	6 0 0
தனிப்பிரதி ..	0 6 0	..	0 8 0
மாதிரி காபி ..	0 2 0	..	0 3 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு		5 0 0
½ பக்கத்திற்கு	,,	,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,,	,,	1 4 0
¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு	அங்குலம் ஒன்றுக்கு		0 8 0

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

பிழைக்கும் வழி.
PRACTICAL LIFE.

புஸ்தகம் 2 } Vol. 2. ஸாதாரண௵ அற்பசி௴—OCTOBER 1910 { ஸஞ்சிகை 10. No. 10.

பொருளடக்கம்.

பத்திராதிபர் குறிப்புகள் பக்கம்.

பசுந்தாள் உரத்துக்கான விதைகள்—ஜலதோஷம் வராமல் செய்தல் .. 395

விசேஷ வியாஸங்கள்

தராசு
—எம். ஸி. எஸ். அநந்தபத்மநாப ராவ், எம். ஏ., எல். டி. 396
குழந்தைகளை கவனிக்கச் செய்தல்
—ஸி. ஆர். ஸ்ரீனிவாஸ ரங்காச்சாரி, பி. ஏ., எல். டி. 399
பசுந்தாள் உரம்
—பி. எல். தேவிஸிங்க் 401
முதலில்லா வியாபாரம்
—பத்திராதிபர் 403
மாடுகளைக் காப்பாற்றுதல்
—எ. ராமநாதன் 404
பாங்கிகளோடு பத்து வரவு செய்தல்
—டி. நடேச அய்யர் 406
சர்க்கரையும் தித்திப்புப் பண்டங்களும் .. 409
குழைக்கிணறுகள்
—எஸ். எம். ராமஸ்வாமி 410
காலஞ்சென்ற மிஸ் ப்ளாரென்ஸ் நைடிங்கேல்
—எஸ். பஞ்சாபகேச சர்மா, பி. ஏ. .. 412

விசேஷத் திரட்டு

நூதன கரும்பு வகைகள்—சீமை அத்தி—இலுப்பை மரம்—காசாவர்க்கத்தார்கள்—மாட்டு மூத்திரத்தை எருவாய் உபயோகிக்கும் விதம் 417–424

பத்திரிகை ஆராய்ச்சி

சுருட்டுப் பிடிப்பவர்களுக்கு போதனை—குழந்தைகளுடன் நாம் பழகும் முறை—முத்தமிடலின் வரலாறு—வியாதிப்பட்ட பிராணிகளின் போஷணை—கம்பளி ஆடு. 425–428
சிறுவர் பகுதி 429–430
ஸ்திரீகள் பகுதி 431–432

பகுதிக் குறிப்புகள்

விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—புஸ்தகக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—மனிஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் 433–443
மாஸ வர்த்தமானம் 444–448

CONTENTS.

PAGE.

Editorial Notes

GREEN MANURE SEEDS-THE PREVENTION OF COLD 395

Special Articles

THE BALANCE
M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T., *Assistant Professor of Physics, Presidency College, Madras* 396
CONCENTRATING THE CHILD'S ATTENTION.
C. R. Srinivasa Rangachary, B.A., L.T. ... 399
GREEN MANURE
B. L. Davey Singh 401
BUSINESS WITHOUT CAPITAL
The Editor 403
THE CARE OF CATTLE
A. Ramanathan 404
BANKING
D. Natesa Aiyar 406
SUGAR AND SWEETS 409
ARTESIAN WELLS
S. M. Ramaswami 410
THE LATE MISS FLORENCE NIGHTINGALE
S. Panchapagesa Sarma, B.A. 412

Selections

NEW VARIETIES OF SUGARCANE 417
FIGS 418
THE ILUPPAI TREE 419
KASAVARGAMDARS 421
CONSERVATION OF CATTLE URINE 423

Review of the Press

Advice to Smokers 425
Conduct Towards Children 425
History of Kissing 426
Nursing of Sick Animals 427
Wool Bearing Sheep 427
The Boys' Section 429-430
The Ladies' Section 431-432

Departmental Notes

Agricultural Notes 433
Industrial Notes 435
Educational Notes 436
Literary Notes 437
Legal Notes 438
Scientific Notes 439
Medical Notes 440
Personal Notes 441
Fun and Anecdote 442
Curiosities 443
News of the Month 444-448

EDITORIAL NOTES.
பத்திராதிபர் குறிப்புகள்.

◆

Green Manure Seeds.

பசுந்தாள் உரத்துக்கான விதைகள்.—தஞ்சாவூர் ஜில்லாவில் நன்செய் நிலங்களில் பசுந்தாள் உரத்துக்காக பயிர் செய்வதற்கு வேண்டிய நந்தியால் அவுரி, கொழுஞ்சி, சணல் ஆகிய இந்த விதைகளை விவஸாய இலாகாக்காரர்கள் சேகரித்து அடியில் கண்ட இடங்களில் வைத்திருக்கிறார்கள். கொழுஞ்சி விதை பட்டணம் படி ஒன்று இரண்டு அணா வீதமும், சணல் விதை படி மூன்று அணா வீதமும், அவுரி விதை படி நாலணா வீதமும் கொள்முதலுக்கே கொடுப்பார்கள். இந்தப் பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்யும் விதமும் ஒரு துண்டுப் பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பத்திரிகை ஒன்றையும் இனாமாக அனுப்புவார்கள். வேண்டியவர்கள் நேரிலேயோ, வி. பி. தபால் மூலமாயோ மேற்படி விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எழுதிக்கொள்ள வேண்டியவர்களின் விலாஸம்:—

1. தஞ்சாவூரில் விவஸாய சங்க ஸெக்ரடெரி, ஓ. எஸ். ராமசந்திரஐயர்.
2. கும்பகோணத்தில் விவஸாய சங்க ஸெக்ரடெரி, வி. ஆர். லக்ஷ்மிவராகவ ஐயங்கார்.
3. மாயவரத்தில் விவஸாய சங்க ஸெக்ரடெரி, எம். எஸ். நடேசய்யர்.
4. சீயாழியில் அந்த ஊர் கிராம முன்ஸீப்
5. நன்னிலத்தில் (சன்ன நல்லூர்) சன்ன நல்லூர்க் கர்ணம்.
6. திருவாலூரில் (விஜய புரத்தில்) ஸ்பெஷல் ட்யூட்டி விவஸாய மானேஜர்.
7. கொரடாச்சேரியில், அந்த ஊர்க் கர்ணம்.
8. நீடாமங்கலத்தில், அந்த ஊர் கிராம முன்ஸீப்.

The Prevention of Cold.

ஜலதோஷம் வராமல் செய்தல்.—இந்த மழை காலத்தில்தான் அநேகம் பேர்களுக்கு ஜலதோஷம் பிடிக்கிறது. இப்படிப் பிடிக்காமலிருக்க என்ன செய்கிறதென்று கேட்டால் வெளியே போகாமலிருப்பதுதான் என்று சில பேர்கள் சொல்லுவார்கள். வெளியில் போகாமல் எத்தனை நாழிதான் வீட்டுக்குள் ஒருவன் உட்கார்ந்திருக்க முடியும்? இப்படி உட்கார்ந்திருந்தால் எழுந்து வெளியே போகும்போது அநேகமாய் ஜலதோஷம் பிடித்துவிடும். உள்ளேயே உட்கார்ந்து நாடகத்தைப் பார்த்துவிட்டு, பாட்டுக் கச்சேரியைக் கேட்டுவிட்டு, வெளியே வருகிறவர்களுக்கே அநேகமாய் ஜலதோஷம் பிடிக்கிறது. ஜலதோஷம் பிடிப்பதற்கு முக்கிய காரணம், ஒரு இடத்திலிருந்து சீதோஷ்ணம் அதிக வித்தியாஸமுள்ள வேறொரு இடத்துக்கு மாறுவதே. பலபேர் கூடிய நாடக சாலைகளிலும் பாட்டுக் கச்சேரி ஹால்களிலும் உஷ்ணம் அதிகமாயிருக்கும். வெளியிலோ உள்ளை விடக் குளிர்ச்சியாயிருக்கும். ஆகவே உஷ்ணமான இடங்களை விட்டு திடீரென்று வெளியே வரும்பொழுது தேகம் குளிர்ந்த நிலைமைக்கு ஸரிப்படுத்திக்கொள்ள அவகாசமில்லாததால் ஜலதோஷம் உண்டாகிறது. இதை அடியில் கண்ட உபாயத்தால் ஸுலபமாய்த் தடுத்துவிடலாம். நம்முடைய தேகத்தின் தோல்களில் வேர்வை முதலிய கழிவுகளை வெளிப்படுத்த சிறு த்வாரங்கள் இருக்கின்றன. இந்த த்வாரங்கள் நாம் மூச்சுவிட்டுக்கொண்டிருக்கும் வரையில் திறந்திருக்கும். மூச்சை பந்தனம் செய்துவிட்டால் அவைகள் உடனே மூடிப்போம். இதன் உண்மையை அறிய வேண்டுமானால் ஒரு சிறு பரீக்ஷை செய்து பார்க்கலாம். ஒரு தேனீயை நாம் சுவாஸம்

விட்டுக்கொண்டிருக்கும்பொழுது கையில் எடுத்தால் அது நம்மைக் கொட்டிவிடும். சுவாஸத்தை பந்தனம் செய்துகொண்டு தேனீயைக் கையில் எடுத்தால் அது நம்மைக் கொட்டமுடியாது. இதற்குக் காரணம் என்னவென்றால் நாம் சுவாஸம் விட்டுக்கொண்டிருக்கும்பொழுது நம்முடைய உள்ளங்கையிலுள்ள த்வாரங்கள் திறந்திருக்கின்றன. ஆகையால் அந்த த்வாரத்தில் ஸுலபமாய் தேனீ ஊசிபோன்ற முனையைச் செலுத்தி கொட்டிவிடுகிறது. சுவாஸம் பந்தனமாயிருக்கும்போது உள்ளங்கைத் தோலிலுள்ள த்வாரங்கள் மூடியிருக்கும். அப்படி மூடிக்கொண்டிருக்கும் தோலைக்குத்த தேனீக்கு பலமில்லை. ஆகையால் அதற்குக் கொட்ட முடிகிறதில்லை. நம்முடைய தேகத்து மேல் தோலிலுள்ள த்வாரங்கள் சுவாஸம் விட்டுக்கொண்டிருந்தால் திறந்திருக்கும் என்பதையும், சுவாஸத்தை பந்தனம் செய்தால் அவைகள் மூடிக்கொள்ளும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நலம். ஏனென்றால் அந்த த்வாரங்கள் திறந்திருக்கும்பொழுது தான் அவைகளின்மேல் குளிர்ச்சி பட்டால் உடனே ஜலதோஷம் பிடிக்கிறது. ஆகவே கொஞ்சம் உஷ்ணமாயுள்ள நாடக சாலை முதலிய இடங்களைவிட்டு வெளியில் வரும்பொழுது மேலே சொல்லிய த்வாரங்கள் திறந்திருக்காமல் கொஞ்சம் சுவாஸத்தை பந்தனம் செய்தால் அவைகள் மூடிக்கொள்ளும். அவைகளின்மேல் குளிர்ந்த காற்றுப்பட்டால் ஒன்றும் செய்யாது. கொஞ்சம் சுவாஸ பந்தனம் செய்வதால் உள்ளே இருக்கும்போது ஏற்பட்ட உஷ்ணத்தை வெளியிலுள்ள குளிர்ச்சிக்கு ஸரிப்படுத்திக்கொள்ள தேகத்துக்கு அவகாசம் ஏற்படும். அதனால் திடீரென்று தேகத்தின்மேல் குளிர்ச்சி படுவதால் உண்டாகும் தீங்கு ஏற்படாது. மேலே சொல்லிய படி 4 அல்லது 5 தடவை சுவாஸ பந்தனம் செய்துவிடுவது மிகவும் நல்லது.

THE BALANCE.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU, M. A., L. T.
Assistant Professor of Physics, Presidency College, Madras.

தராசு.

[All Rights Reserved.]

நாம் காய்கறிகளையும், பலசரக்கு ஸாமான்களையும், வீசைக்கணக்கிலும், பெப்பர்மிண்ட் முதலானவைகளை பவுண்டுக் கணக்கிலும், தங்கம் முதலிய விலையுயர்ந்த ஸாமான்களை தோலா எடையிலும், குன்றுமணிக்கணக்கிலும், வாங்குகிறோம். இம்மாதிரி கணக்கிடுவதற்கு ஸாதாரணமாய் உபயோகிக்கப்படும் உதவிக் கருவிகள் தராசு படிக்கல்லும், தட்டும் துலாக்கோலுமே. தராசு, துலாக்கோல் இவைகளை எப்படி உபயோகிக்கவேண்டுமென்பதையும், இவற்றில் என்ன விதமாய் நாம் ஏமாந்து போகலாம் என்பதையும், சூதை எப்படிக் கண்டுகொள்ளலாம் என்பதையும், கண்டு கொண்டதும் எப்படி ஸரியான எடையை கண்டுபிடிக்கலாம் என்பதையும், இங்கே விவரிக்க முயலுவோம்.

நேரானதும் ஒரே சீரானதும் உறுதியானதுமான 2 அடி நீளமுள்ள மரச்சட்டம் ஒன்றை எடுத்து, அதில் அங்குல அங்குல தூரத்தில் கோடுகளை வரைந்து, நடு மையத்திலுள்ள கோட்டிலிருந்து ஆரம்பித்து, இரண்டு பக்கமும் எண்ணிக்கொண்டே கோடுகளின் எண்ணை சட்டத்தின் மேல் குறிப்பிடுங்கள். ஸுமார் 20 கால் அணா நாணயங்களையும் சேர்த்துவைத்துக் கொள்ளுங்கள். முப்பட்டை தீர்த்த ஒரு மரக்கட்டைத் துண்டை மேஜையின் மேல் வைத்து அதன் மேல் சட்டத்தின் மையக்கோடு தங்கும்படியாக வைத்தால் அந்தச்சட்டம் திகர்தமாக

நிற்கிறதல்லவா? இப்படி அமைத்த சட்டத்தின் மேல் வலது புறத்தில் 6-வது கோட்டில், 4 நாணயங்களை வையுங்கள். இடது புறத்து 6-வது கோட்டில் 4 நாணயங்களை வைத்தால் தானே சட்டம் சமமட்டமாய் நிற்க காண்கிறோம். அந்த இடதுபக்கத்து 6-வது கோட்டிற்கு அப்பால் நாணயங்கள் வைக்கப்பட்டால் அந்தப் பக்கம் தாழ்கிறதல்லவா? அந்தக்கோட்டிற்கு உட்புறம் தங்கிவிட்டால் வலது நுனி தாழ்ந்து போகிறதல்லவா? 6-வது கோட்டிற்கு பதிலாக மற்ற எந்தக்கோட்டில் வைத்தாலும் அதே தூரத்தில் எதிர்த்த பக்கத்தில் அவ்வளவு நாணயங்களும் வைக்கப்பட்டால் அல்லாமல் சட்டத்தராசு மட்டமாய் நிற்காது என்பதைப் பரீக்ஷித்துத் தெரிந்துகொள்ளலாம். தூரங்களை வித்தியாசப் படுத்துவதற்கு பதிலாக, ஒரே இலக்கமுள்ள கோடுகளில் 4 நாணயங்களுக்கு பதிலாக ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு நாணயங்களை வைத்தாலும், சட்டம் ஸமநிலை மாறுவதில்லை. இந்தப் பரீக்ஷைகளால், நாம் தெரிந்து கொள்வதென்ன? ஒரே அளவான அல்லது எடையுள்ள இரண்டு ஸாமான்களை ஸரியான தூரத்தில் வைத்தாலும், தொங்கவிட்டாலும், சட்டம் ஸ்மமாகவேயிருக்கும். இந்த யுக்திதான் தட்டுத் தராசுகளில் உபயோகிக்கப் பட்டிருக்கிறது.

ஸாதாரணமாய் இங்கே வழங்கும் இரண்டு தட்டு தராசுகளில், தட்டுகள் தொங்கும் கட்டையில் நடு மையத்தில் ஒரு த்வாரமும், ஸமமான தூரத்தில் ஒவ்வொரு நுனியிலும் ஒரு த்வாரமும் உண்டு. இந்த த்வாரங்களில் முறையே, தராசைத் தூக்க ஒரு கெட்டியான கயிறும், தட்டுகளைத் தாங்கக் கயிறுகளும் கோர்க்கப்பட்டிருக்கின்றன. தராசுக் கட்டை மையத்திலிருந்து இருபக்கமும் ஒரே வடிவமுள்ளது. ஸாமான்கள் ஒன்றும் இல்லாதபோது வெறும் தராசை நடுக்கயிற்றால் தூக்கினால் தராசுக் கட்டை ஸமமட்டமாக நிற்க வேண்டும். தட்டுகள் ஸம தூரத்தில் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை கண்டுபிடிப்பது மிகவும் எளிது. ஒரே நிறையுள்ள இரண்டு படிக்கல்லுகளை முறையே இரண்டு தட்டுகளிலும் வைத்துத் தராசை தூக்கினால், தராசு திகர்தமாக நிற்கவேண்டும்.

உலோகங்களால் செய்த தராசுக் கோல்களின் மையத்தில் ஒரு முப்பட்டை தீர்த்த அச்சும், மையத்திலிருந்து கட்டைக்குச் செங்குத்தாய் ஒரு முள்ளும் வைத்திருப்பதுண்டு. இந்தத் தராசுகளில் கோல் மட்டமாயிருக்குமானால், முள் செங்குத்தாய், தலை கீழாய் நோக்கியிருக்கும் பிடியிலுள்ள ஒரு முள்ளுக்கு நேராய் நிற்கும். இப்படி ஸரியாக எடை போடுவதற்கு, "முனையாக எடை போடுதல்" என்று சொல்லுகிறோம். அதிக விலையுள்ள ஸாமான்களை நிறுப்பதற்கு அதற்குத் தக்க ஸூக்ஷ்மத்தையுடைய முள் தராசுகளை உபயோகிக்கிறோம். தராசு பளுவுள்ளதானால் அதற்குத் தகுந்த பளுவின் வித்தியாசத்தையே தராசு முள் நமக்குத் தெரியப்படுத்துமாதலால், வராகனெடைக் கணக்கில் வாங்கும் ஸாமான்களுக்கு, தகடுகளாலும், கம்பிகளாலும் செய்து, தகடுகள் தொங்கும் இடமும், தகட்டைத் தாங்கப்பட்ட இடமும் வழவழப்பாய் செய்யப்பட்டுள்ள தராசுகளை உபயோகிக்கிறோம். காற்றுகளின் எடை தாரதத்தையும், அவைகளின் மிகச் சிறிய பாகங்களாகிய பரமாணுக்களின் எடை தாமாஷாவையும் கண்டு பிடிக்க ரஸாயன சாஸ்திரிகள் உபயோகிக்கும் தராசு எவ்வளவு நுட்பமானதாயிருக்க வேண்டும்! இவர்கள் உபயோகிக்கும்

தராசுகள் ஒரு தோலா எடையில் லக்ஷத்தில் ஒரு பங்கை தெளிவாக எடுத்துக்காட்டும்.

மேலே சொல்லிய பரீக்ஷையில் செய்தபடி இரண்டு ஸமமான எண்ணிக்கையுள்ள நாணயங்களை மையத்திலிருந்து ஒரே தூரத்தில் வைப்பதற்கு பதிலாக, ஒரு பக்கத்தில் 4-ம், மற்றொரு பக்கத்தில் 2-ம் வைத்து சட்டத்தை ஸமமான நிலைக்குக்கொண்டு வரலாமா? வரலாம். ஆனால் இப்போது இந்த எடைகள் நிற்கும் இடத்தைக் கவனித்தால், பளுவான எடை பக்கக் கோட்டில் இருக்க, லேசான எடை மையத்திலிருந்து அதிக தூரத்தில் இருக்கிறது. இம்மாதிரியான பரீக்ஷைகளைச் செய்து பார்க்கையில், இரண்டு வஸ்துக்கள் சட்டத்தின் நடுமையத்திலிருந்து வெவ்வேறு தூரத்தில் இருந்து தராசு ஸமமாக இருந்தால், அந்த இரண்டு ஸமான்களும் எடையில் வேறுபட்டனவென்றே தெரிந்து கொள்ளுகிறோம்.

நமக்குக் கிடைக்கவேண்டிய ஸாமானின் எடையும், படிக்கல்லின் எடையும், ஒன்றாயிருக்க வேண்டுமானால், இரண்டு தராசுத் தட்டுகள் ஒரே எடையுள்ளனவாகவும், அவைகள் கட்டையிலிருந்து தொங்கும் இடங்கள் அதன் மையத்திலிருந்து ஒரே தூரத்தில் உள்ளனவாகவும் இருக்கவேண்டுமல்லவா? கட்டை ஸமமாயிருப்பதினாலேயே தராசு ஸரியானதென்று நிச்சயிக்க முடியாது. ஸாமான்கள் ஒன்றும் இல்லாமல், தராசைத் தூக்கும்போது அதன்கட்டை மட்டமாயிருந்தால், நாம் ஸாதாரணமாய் தராசு ஸரியானதுதான் என்று எண்ணிமோசம் போகலாம். இந்த மோசத்தைக் கண்டுபிடிக்க இரண்டு உபாயங்கள் உள; ஒன்று, ஒரே எடையுள்ளனவென்று நமக்குத்தெரிந்த அல்லது முத்திரை போட்ட இரண்டு எடைகளை தட்டுக்கொன்றாகப் போட்டு நிறுத்தால், தராசுக் கட்டை மட்டமானால் தராசு ஸரியானதே. இரண்டாவது, ஒரு தட்டில் ஸாமானையும் மற்றத் தட்டில் எடைக் கல்லையும் போட்டு ஸரிக்கட்டி, அவைகளைத் தட்டிலிருந்து தட்டிற்கு மாற்ற, முள் நேராக முன்போலவே நிற்குமானால் தராசு குற்றமுள்ளதல்ல.

மேலே சொல்லியபடி பரிசோதித்ததில் தப்பிதமுள்ளதென்று கண்டுகொண்ட தராசில் ஸரியான எடை கண்டுபிடிக்க உபாயம் உண்டோ? ஒரு தட்டில் நமக்கு வேண்டிய அளவு எடையுள்ள படிக்கல்லுகளைப் போட்டு, மற்றத்தட்டில் ஆணி, கல் முதலானவைகளைப் போட்டு தடைக்கட்டி, படிக்கல்லுகளை எடுத்து விட்டு அந்தத் தட்டில் நாம் கொள்ள வேண்டிய ஸாமான்களை வைத்து முளைக்கு நிறுக்க, நமக்கு வேண்டிய அளவு ஸரியாகக் கிடைக்கும். இதற்கு எடைக்குண்டுகள் ஸரியானவையாக இருக்கவேண்டும். படி முதலிய அளக்கும் கருவிகளுக்கு முத்திரை போட்டிருப்பது போல், எடைக்கல்லுகளுக்கும் கச்சேரிகளில் முத்திரை போடுகிறார்கள். இந்தக்குண்டுகள் அதிகமாய் உபயோகிக்கபடுவதினாலே தேய்ந்து போவதால் ஒவ்வொரு வருஷமும் முத்திரை போடவேண்டும். வாங்குகிறவர்கள் இந்த முத்திரைகளை கவனிக்க வேண்டும். ஜனங்கள் ஏமாறாமல் இருப்பதற்காக, முத்திரையிட்ட எடைகளையே விற்கிறவர்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், தப்பிதமான அல்லது புது முத்திரையில்லாத எடைகளை உபயோகித்தால் அவர்கள் தண்டனைக்குள்ளாவார்களென்றும் ஸர்க்காரார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இரண்டு தட்டுகளையுடைய தராசுகளைப் பற்றி இதுவரையில் விவரித்தோம். ஒரே தட்டுள்ள தராசுகளும் உள. அவைகளில் ஒரு விதத்தை ஸாதாரணமாய் ரெயில்வே ஸ்டேஷன்களில் காணலாம். ஒரு பெரிய தகட்டின் மேலே நம்முடைய ஸாமான்களை வைக்க, பார்ஸல் க்ளார்க் ஒரு தராசுக் கோலின்மேல் ஒரே குண்டை முன்னும் பின்னும் தள்ளி கோல்மட்டமானபோது, குண்டு தங்கிய இடத்திலுள்ள கோட்டை கவனித்து ஸாமானின் எடையைச் சொல்லுகிறான். இன்னொரு விதமான ஒரு தட்டுத் தராசு. இதைக்கயிற்றுக்கோல் என்றும், தூக்குத்தராசு என்றும் சொல்வதுண்டு. இதில் தட்டு ஒன்றும், கோல் ஒன்றும் இருக்க, படிக்கல்லாவது, குண்டாவது ஒன்றும் இல்லை. இதில் கட்டை தொங்கும் கயிற்றை, எடைக்குத் தகுந்தபடி கட்டையில் இடத்திலிருந்து இடம் மாற்றி உபயோகிக்கிறார்கள். காய்கறி விற்கிறவர்கள் உபயோகிக்கும் தராசு இம்மாதிரியானது. வரவர இவைகளுக்கு பதிலாக இரண்டுதட்டுத் தராசுகளையே இப்போது எல்லாவற்றிற்கும் உபயோகிக்கிறார்கள். கிராமாந்தரங்களில் இந்தத் தூக்குகள் இன்னும் பழக்கத்தில் இருக்கின்றன. முன்னமே விவரிக்கப்பட்டபடி, சட்டத்தையும், முப்பட்டைக் கட்டைத்துண்டையும், உபயோகிப்பதால், தூக்குகளின் மர்மத்தை சுளுவில் அறிந்துகொள்ளலாம்.

இன்னொரு விதமான ஒரு தட்டுத் தராசு பனிக்கட்டி, வெண்ணெய் முதலானவைகளை நிறுப்பதற்காக ஸாதாரணமாய் புழக்கத்திலிருக்கிறது. இதற்கு '**ஸ்பிரிங் பாலன்ஸ்**' என்று பெயர். இதில் ஒரு குழாக்குள்ள அதாவது திருகாணியிலுள்ள திருகுகளைப்போல் சுற்றப்பட்டுள்ள எஃகுக் கம்பியின், ஒரு நுனியில் தட்டு கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கம்பிச் சுருளின் நீளம் ஸாமான்களின் எடைக்குத் தக்கபடி ஏற்றத் தாழ்ச்சியடைவதால், இந்த ஏற்றத் தாழ்ச்சியைக் காண்பிக்கும் ஒரு முள்ளால் எடையைக்கண்டு அறிகிறோம். இதில் உள்ள எஃகுக் கம்பி கெடாதபடி, அதைச்சுற்றி ஒரு குழாயையும், அந்தக் குழாயின் வெளிப்புறத்தில் கம்பியின் நீட்சியைக் குறிக்கும் ஒரு முள்ளையும், அளவு கோடுகளையும் காணலாம். இந்தத் தராசை சாமான்களை பெரும்படியாக நிறுப்பதற்கு உபயோகிக்கலாம்.

எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ்.

CONCENTRATING THE CHILD'S ATTENTION.

BY

C. R. SRINIVASA RANGACHARY, B.A., L. T.,

குழந்தைகளை கவனிக்கச் செய்தல்.

1. சிறு குழந்தைகளுக்கு போதிப்பது மிகவும் சிரமமான காரியம். அநேக விஷயங்களை நன்றாய் அறிந்திருந்தால்தான் அவர்களுக்குச் சிலவற்றையாவது சொல்லமுடியும். முதலில், அவர்களின் இயற்கை ஓடியாடி வஸ்துக்களை உடைத்துப் பார்ப்பதே என்று நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு, அவர்களைத் தக்கபடி வேலைசெய்யும்படியாக ஏற்படுத்தவேண்டும். ஐந்து அல்லது ஆறு வயதுள்ளவர்களையும், பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதானவர்களையும் சேர்த்து வைத்தால் ஒத்துவராது. கூடிய வரையில் குழந்தைகள் ஒரே வயதுள்ளவர்களாயிருப்பது நலம்.

2. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அதிகப்பணத்தை செலவு செய்வது போல் இங்கே முடியாது; என்பதினாலேயே ஒன்றும் செய்யமுடியாதென்காமல் கிடைத்தவைகளைக் கொண்டு ஆகக்கூடியவைகளைப் பார்க்கவேண்டும்.

3. வயல்கள், தோப்புகள் முதலியவைகள் கிராமங்களிலுள்ளன. அவைகளைப் பற்றியும், அவைகளிலுள்ள பொருள்களைப் பற்றியும், சொல்லிக்கொடுக்கவேண்டிய இடங்கள், கிராமங்களாயிருந்தால் நலம். பட்டணங்களானால் கிராமங்களிலிருந்து வஸ்துக்களைக் கொண்டு வரவேண்டும். பலவித இலைகள் இருந்தால், அவைகளைக்காட்டி வெவ்வேறு வர்ணங்கள் முதலியவைகளைச் சொல்லச்செய்து, நடு நரம்பின் இருபுறத்திலும் இலைகளின் பாதிகள் ஒரே விதமாயிருக்கின்றன என்பதைத் தெரியச் செய்யலாம்.

4. கணக்கில் கூட்டல் கழித்தல் இவைகளை, இலைகள், பூக்கள், கற்கள் முதலியவைகளை வைத்துக்காட்டலாம். எளிதில் கிடைக்கிற பொருள்களைக்கொண்டு முன்பின் நடக்கிற விஷயங்களை யோசிக்கும்படி செய்யலாம். பேனாக்கத்தியென்று வழங்குவது முன்காலத்தில் இறகுகளைச்சீவ உபயோகப்பட்டபடியால் அந்தப் பெயருடையதாயிற்றென்று ஒன்றைச் சீவிக் காண்பிக்கலாம். கூர்மையுடையதாய் இருப்பதால் அதற்கும் மற்றக் கத்திகளுக்கும் பேதமுள்ளது என்று மற்ற விதங்களைக்காட்டித் தெரிந்துகொள்ளச் செய்யலாம்.

5. களிமண், மூங்கில்குச்சி, சிறுபலகை முதலியவைகளால் அநேக விதமான வஸ்துக்களை அவர்களையே செய்யச்சொன்னால், அவர்களுடைய கை, கால், கண் முதலியவைகள் காரியத்தில் கவனமாயிருக்கும். அப்போது நினைத்தபடி விளையாடுவதுபோய், குறித்த காரியத்தில் கவனிப்பு உண்டாகும்

6. சரித்திரபாடம் சொல்லும்போது சிலா ரூபங்கள், படங்கள் இவைகளை வைத்துக் கொள்ளவேண்டும். பூகோள பாடம்சொல்லுவதானால் அவர்களிருக்கிற இடத்துக்கு ஸமீபத்திலுள்ள கோயில்கள், ஆறுகள், குளங்கள் முதலியவைகளைக் காண்பித்து அவர்களாகவே அறிந்துகொள்ள முடியாத விஷயங்களைச் சிறுகச் சிறுக விளங்கச்செய்யலாம்.

7. வேறு தேச பாஷையைக் கற்றுக் கொடுப்பதில்தான் அதிககஷ்டங்கள் உள்ளன. ஸ்வய பாஷையை எப்படிக் கற்றுக்கொள்ளுகிறோம்? பெற்றோர்களாலும் சுற்றத்தார்களாலும் பேசப்படுவதைக் கேட்கிறோம். பொருள்களைக் கண்டபின் அவைகளின் பெயர்களை அறிந்துகொள்ளுகிறோம். அந்த விதமாய் அந்ய பாஷையில் முடியாவிட்டாலும், கூடியவரையில் அதில் பேசுவதைக் கேட்கச் செய்யவேண்டும். வஸ்துக்களைப் பார்க்கும்போது அவைகளின் பெயர்களை அந்ய பாஷையில் சொல்லலாம். ஓடுவது, விளையாடுவது முதலிய காரியங்களிலிருக்கும்போது அவைகளை இங்கிலீஷில் தெரிவித்தால் இரண்டு மூன்று பதங்களைக்கொண்டு பேசும்படி செய்யலாம். இதற்குப் புஸ்தகத்தில் எழுத்தைக் காண்பித்து, எழுத்துக்கூட்டத் தெரிவித்து, வாக்கியங்களை வாசிக்க போதிக்கிறவரையில் காலதாமஸம் செய்யவேண்டியதில்லை.

8. ஏதாவது ஒன்றைப் பார்க்கும்போது நடக்கிற காரியத்தைச் சொல்லுவதோடு காரியத்துக்குக் காரணம் இன்னதென்று தெரியும்படியும்சொல்லலாம்; குழந்தைகளையும் சொல்லச் செய்யலாம். விசிறியால் வீசி அடுப்பு எரிகிறதையும், கரிமான் உலையில் துருத்தி ஊதுவதினால் நெருப்பு காந்தி அதிகமாவதையும்கொண்டு, காற்று அடித்தால் நெருப்பு அதிகமாகிறது என்று ஊகிக்கச் செய்யலாம்.

9. சம்பாஷணை செய்து அதனால் கதைகளையும், பொருள்களின்குணங்களையும் தெரிவிக்க வேண்டுமென்றால் முன்பே அச்சிட்டப்பட்டிருக்கிற புஸ்தகங்களிலுள்ளதை மனப்பாடமாய் உருப்போடச் செய்கிறார்கள். அப்படிச் செய்யாமல் கேள்விக்குத் தக்கபடி வேண்டியதை மாத்திரம் சொல்லவும், தங்களுக்குள் பேசும்போது சொல்லுவதை யுக்தியாய்ப் பேசவும் செய்துவைக்கலாம்.

10. இவ்விதமாய் எழுதுவதும் பேசுவதும் எளிது, அநுபோகத்துக்கு வராது, என்று சொல்லிவிடாமல் முயற்சி செய்து பார்க்க வேண்டும். இப்படிச் செய்தால் சிறு பிள்ளைகள் பாடங்களைக் கவனிப்பார்கள்.

ஸ்ரீனிவாஸ ரங்காச்சாரி.

GREEN MANURE.

BY

B. L. DAVEY SINGH.

பசுந்தாள் உரம்.

பசுந்தாள் உரமென்றால் பசுமையான தழைகளை எருவாக உபயோகப்படும்படி பூமியில் போட்டு உழுதுவிடுவதேயாம். இப்போது வயல்களில் ஸாதாரணமாய் ஜனங்கள் காட்டாமணக்கு, பூவரசு, ஆடாதோடை, முதலிய தழைகளை நன்செய் வயல்களுக்கு எருவாகப் போடுகிறார்கள். தங்களுக்குச் சுலபமாய்க் கிடைக்கக்கூடிய இப்பேர்ப்பட்ட தழைகளைக்கூட சிலர் சிரத்தை எடுத்துக்கொண்டு சேர்ப்பதேயில்லை. உதாரணமாக வரப்புகளிலுள்ள தழைகளையோ, அல்லது புறம்போக்குகளிலுள்ள தழைகளையோ, அல்லது அவரவர்கள் வீட்டு வேலிகளில் இருக்கிற தழைகளையோ எத்தனை ஜனங்கள் உபயோகிக்கிறார்கள்? அப்படி உபயோகிக்கும் ஜனங்கள் நூற்றில் ஒருவரிருக்கலாம். அப்பேர்ப்பட்டவர்களுக்கும் கூட அகப்படுகிற தழை எந்த மூலை? சமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்ததுபோல் ஆகிறது.

மேற்சொன்னவகைத் தழைகளை நன்செய் வயல்களுக்கு எருவுக்காக என்று ஒருவரும் பயிர் செய்வதில்லை. இருந்தாலும் அவைகளின் தழைகள் உபயோகப்பட்டு வருகின்றன என்பது யாவருக்குந்தெரிந்த விஷயம். ஆனால் நன்செய் வ்யல்களுக்கு எருப் போடுவதற்கென்றே இப்போது சில காலமாக சில இடங்களில் சில பயிர்களை வளர்த்து வருகிறார்கள். அவைகளில் முக்கியமானவை :—சணல், அவுரி, காவாளை யென்று சொல்லப்படும் கொழுஞ்சி. தழை எருவைப் பயிர் செய்ய வேண்டுமானால் புன்செய்களிலோ, அல்லது நன்செய்களிலோ பயிர் செய்யலாம்.

இந்த இரண்டு வித நிலங்க[illegible] பயிர் செய்வதில் எது சுலபமாயும், லாப[illegible]யும் முடியத் தக்கதென்று பார்ப்போம். த[illegible] வில் புன்செய் நிலங்கள் ஏராளமா[illegible]யாது. ஏதோ இருக்கிற புன்செய்களில் பயிர் செய்தாலுங்கூட வயல்களுக்குக்கொண்டு சேர்ப்பதற்குள் சுமைகூலி ரொம்ப ஆகிவிடும். செலவுக்கும் வரவுக்கும் சரிக்கட்டிவிடும். ஆனால் நன்செயிலேயே பயிர் செய்தால் செலவு ஒன்றுமில்லை. வரவு தானிருக்கிறது. ஆகையால் நன்செயிலேயே பயிர் செய்து அந்தப் பயிரை மடித்து உழுதுவிடுவதே விவஸாயிகளுக்கு ஸௌகரியமானது என்று ஏற்படுகின்றது. இது சுலபமென்று ஜனங்களுக்குத் தெரிந்திருந்தபோதிலும் எந்தப் பயிரை நன்செயிலேயே தழை எருவுக்காக வளர்க்கக்கூடும் என்று ஜனங்கள் யோசிக்கலாம்.

முதல் முதலில் சணல் பயிரை கவனிப்போம் :—

சணல்.

பயிர்வகை.—இதுகோதுப் பயிர் வகையைச் சேர்ந்தது. இந்த வகையைச் சேர்ந்ததுதான் கொள்ளு, துவரை, பயறு, மொச்சை, அவுரி, கொழுஞ்சி.

பயிர்செய்யும் ஊர்கள்.—விசேஷமாய் வடக்கே கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களிலும், தெற்கே திருநெல்வேலி ஜில்லாவிலும் பயிராகி வருகிறது.

பயிராகக்கூடிய இடம்.—மணல் அதிகமான இடத்திலும், நிலம் வெடிப்புக் காணக்கூடிய களிமண் பாங்கான இடங்களிலும் நன்றாய் வளருகிறது.

ஜலம் எப்படி இருக்கவேண்டும்.—இதற்கு அதிகமான தண்ணீர் வேண்டியதேயில்லை. அப்படி அதிகமான தண்ணீரிருந்தால் சணல் கட்டாயம் அழுகிவிடும்.

நன்செயில் பயிர்செய்யும் விதம்—நன்செயில் பயிர் செய்வதற்கு மூன்று ஸமயங்களிருக்கின்றன. முதலாவது, கோடைமாதங்களில், முதல் மழை பெய்யும் வரையில் காத்திருந்து, பிற்பாடு புழுதியாக வயலை உழுது சணல் விதையைத் தெளிக்கலாம். அந்த ஒரு மழையே போதுமானது. வேறு ஜலம் வேண்டியதேயில்லை. போதுமான தழைகள் உண்டாகிவிடும். இரண்டாவது, அப்படிச்செய்ய முடியாவிட்டால் நதிகளிலும், ஏரிகளிலும் ஜலம் வரும் வரைக்கும் காத்திருந்து, ஜலம் வந்ததும் சொல்ப ஜலத்தைவிட்டு, அந்த ஜலம் எல்லா நிலத்திலும் உஞ்சிப்போன பிறகு புழுதி உழவாக உழவேண்டும். உழுத பிற்பாடு விதை தெளிக்கவேண்டும். பிற்பாடு கொஞ்சம்கூட ஜலம் உள்ளே செல்லாமலிருக்கும்படி வயல் வரப்புகளைக் கெட்டிப்படுத்த வேண்டும். மூன்றாவது, நெல் பயிர் அறுவடையாவதற்கு இருபது முப்பது நாளைக்கு முன் பயறு தெளிப்பது போலவே சணல் விதையையும் தெளித்து விடலாம். அந்த ஈரத்தைக் கொண்டே முளைத்து இரண்டு மாதங்களில் நல்ல தழைகளுடன் பயிராகி விடுகிறது.

எருவாக உபயோகப் படுத்தும் விதம்.—மேலே சொன்ன மூன்று விதங்களில், முதல் இரண்டு விதங்களில் சொல்லியிருக்கிறபடி பயிர் செய்தால் ஒரு லாபமிருக்கிறது. என்னவென்றால் இந்தத் தழைகளைப் பச்சையாக இருக்கும்போதே நிலங்களுக்கு எருவாகப் போட்டு மிதித்துவிடலாம். மூன்றாவது விதத்தில் செய்தால் சில பக்குவங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும். சணலை முன்னாலே அறுத்து விடவேண்டும். முற்றின பிற்பாடு அறுத்தால் நாருக்குத்தான் உபயோகப்படும். அறுத்து இரண்டு மூன்று நாள் வெயிலில் காயப்போடவேண்டும். காயப்போட்டு வெயில் வேளையில் கட்டக்கூடாது. இலைகளெல்லாம் உதிர்ந்து விடும். பனிப்பதத்தில் கட்டவேண்டும். ஒரு அடி உயரம் வைக்கோலைப் போட்டு, அதற்கு மேல் கொஞ்சம் இந்தப் பச்சைத் தழையைப் போட்டு, அதற்குமேல் ஒரு அடி வைக்கோலைப் போடவேண்டும். இந்தமாதிரி மாற்றி மாற்றிப் போட்டுக் கடைசியில் மழையிலும், வெயிலிலும் அடிபடாமலிருக்கும்படி வைக்கோலை தலைகூட்டவேண்டும்.

வயல்களில் சேர்க்கும் விதம்.—வயல்களில் நான்கு அல்லது ஐந்து அடி ஆழம் எருவை கீழேபோடுவதில் பிரயோஜனமில்லை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே சணல் தழையையும் அதிக ஆழத்தில் செலுத்தக்கூடாது. ஸாதாரணமாய் ஆள் இறங்கினால் முழங்கால் சேருள்ள இடங்களில் சணல் பயிரை ஆள்களை மிதித்து விடவேண்டும். ஆனால் கொஞ்சம் கெட்டியான மண்ணுள்ள இடங்களில் மாடுகளைவிட்டு மிதிக்கவேண்டும்.

வயல்களில் நடவேண்டிய சமயம்—சணல் பயிரை போட்டு மிதித்து மூன்று நாளைக்கு பிற்பாடுதான் நடவேண்டும்.

சணலின் வளமை.—ஸாதாரண நிலங்களில் இரண்டுமாத காலத்திற்குள் 5 முதல் 7 அடி உயரம் வளரும். ஏக்கரா ஒன்றுக்கு 6 வண்டி நிறைந்த தழை எரு கிடைக்கக்கூடும்

எருவைத்தவிர மற்ற உபயோகம்.—சணல் எருவாக உபயோகப்படுவது மல்லாமல் மாட்டுக்குத் தீவனமாகவும் உபயோகப்படும். நாம் வைக்கோல் போர் போடுவது போலவே வடக்கே கிருஷ்ணா ஜில்லாவில் மாடுகளுக்காக சணல் போர்போட்டு வைக்கிறார்கள். இது மாடுகளுக்கு நல்ல கொழுத்த தீனி. மொச்சை, காராமணி, கொள்ளு விசேஷமாய் செலவழியாது. ஆகவே மாட்டுத் தீனி விஷயத்திலும் லாபமாகிறது. இதனால் ஆடுமாடுகள் அழிக்காமல் சணலுக்கு காவல் வேண்டுமென்று சொல்லாமலே அறிந்துகொள்ளலாம்

பி. எல். தேவிலிங்க்.

BUSINESS WITHOUT CAPITAL.

BY

THE EDITOR.

முதலில்லா வியாபாரம்.

போன வருஷத்து ஆடிமாஸத்து ஸஞ்சிகையில் "வியாபாரத்துக்கு முதல்" என்னும் தலைப்பெயருள்ள வியாஸத்தில் "நாணயத்தின் பேரில் பிறர் மூலமாய் முதல் சம்பாதிக்கலாமென்றாவது, வியாபாரத்தைத் துவக்கி விட்டால் அநேகர் உதவிசெய்வார்களென்றாவது, எவரும் முதலில்லாமல் வியாபாரத்தை, ஆரம்பிப்பது முற்றிலும் பிசகு" என்றும், ஆனால் சிலர் கடன் வாங்கியே வியாபாரம் செய்து பொருள் சம்பாதிக்கவில்லையா என்று கேட்டால், அப்படி சிலர் சம்பாதித்திருந்தாலும் அதுபோலவே எல்லாரும் செய்து விடலாமென்பது சந்தேகம் என்றும் சொன்னோம். இதற்கு பிரத்தியக்ஷப் பிரமாணமாக தூத்துக்குடி "ஸ்வதேசி புகைக்கப்பல் கம்பெனி" யார் வெளியிட்டிருக்கும் 1909௵ மார்ச்சு௴ 31௳ வரையிலடங்கிய வரவு செலவுக்கணக்கைப்பார்த்தால், முதலில்லாத வியாபாரத்தின் கஷ்டம் நன்றாய் வெளியாகிறது.

மூன்று வருஷத்துக்கு முன் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் போக்கு வரவு ப்ரிட்டிஷ் இந்தியா புகைக் கப்பல்கள் வழியாகவே நடந்துவந்தது. 1907-௵த்தில் நம்முடைய தேசாபிமானிகளில் அநேகர் பங்குகள் போட்டு "ஸ்வதேசி புகைக்கப்பல் கம்பெனி" என்பதாக ஒரு கம்பெனி ஏற்படுத்தினார்கள். இந்தக் கம்பெனியில் எடுக்கப்பட்ட பங்குகளுக்கெல்லாம் பணம் வசூலாவதற்கு முன்னமேயே கடன் பத்திரம் எழுதிக்கொடுத்து கப்பல்களை வாங்கி வியாபாரத்தைத் துவக்கிவிட்டார்கள். துவக்கவே ப்ரிட்டிஷ் இந்தியா புகைக்கப்பல் கம்பெனிக்கும், ஸ்வதேசிப் புகைக்கப்பல் கம்பெனிக்கும் போட்டி உண்டாகி இருவரும் கப்பல் சார்ஜைக் குறைத்து வியாபாரம் செய்து வந்தார்கள். ஆகவே இரண்டு கம்பெனியாருக்கும் நஷ்டந்தான். ப்ரிட்டிஷ் இந்தியா புகைக்கப்பல் கம்பெனி வெகு நாளா யேற்பட்டதாயும், உலகப் பிரசித்த முள்ளதாயும், பணம் கொழுத்ததாயும் இருப்பதால் அந்தக் கம்பெனியாருக்கு வியாபாரத்தை நடத்திவர ஒருவித ஸங்கடமும் இல்லை.

1909-௵ மார்ச்சு௴ 31௳ வரையில் ஸ்வதேசி கம்பெனிக்கு ஸுமார் ஏழரையே யரைக்கால் லக்ஷம் ரூபாய் பங்குகளுக்காக வசூலாயிருந்தும், இந்தப் பணம் வேண்டிய பொழுது வசூலாகாததால் அப்போதைக் கப்போது கடனை வாங்கிக் காரியத்தை நடத்தி, பின்பு வசூலான பங்குப்பணத்தைக்கொண்டு உளவடைத்துக்கொண்டு வந்தார்கள். இப்படி எவ்வளவுதான் கடன் வாங்கி எத்தனை காரியத்தை நடத்தலாம்? கொஞ்ச நாளைக்குப் பிறகு ஸ்வதேசி கம்பெனிக்கு கடன் கொடுப்பாரில்லை. கம்பெனி ஆரம்பித்தது முதல் ரூ. 4,60,000 நஷ்டமாயிற்று. கையில் பணமில்லாமையினாலேயே கப்பல்கள் ஓடுவதும் நின்று விட்டது. இரண்டு லக்ஷம் ரூபாய் அகப்படும் பக்ஷத்தில் கப்பல்களை மறுபடியும் ஓட்டி நல்ல லாபம் சம்பாதிக்கலாமென்று மேல் சொன்ன ரிபோர்ட்டில் அந்தக் கம்பெனி டைரெக்டர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்தப் பணம் கிடைக்காத பக்ஷத்தில் கம்பெனியை வந்த நஷ்டத்தோடு கலைத்து விடவேண்டும் என்றும், அப்படிக் கலைக்கும்படி நேரிட்டால் இந்தக் கம்பெனி விஷயமாய் ஏற்பட்ட அனுபவத்தில் அவர்களுக்கு ஒரு நல்ல புத்தி வந்திருக்கிற தென்றும், அதை

எல்லாரும் அறியவேண்டுமென்றும், எழுதியிருக்கிறார்கள். அதாவது, "இந்தக் காலத்தில் ஒருவன் கடன் கொடுக்கிறானென்று நம்பாதே. வாங்குகிற ஸாமானுக்கு முதலில் கொஞ்சம் பணத்தைக்கொடுத்துவிட்டு பாக்கிப்பணத்தை பின்னால் கொடுக்கலாமென்று எண்ணாதே. நீ கொடுக்கவேண்டிய கெடுவில் உன் சொந்தப் பணம் கையில் இல்லாமலிருந்தால் உனக்கு வேண்டியபோது எப்போதும் கடன் அகப்படாது. வாங்குகிற சரக்குக்கு முழுமையும் கொடுக்க கையில் பணத்தை வைத்துக்கொண்டு வியாபாரத்தை ஆரம்பி. ஆரம்பத்தில் சிலவருஷங்களுக்குப் போட்டியிருக்கும்; அதைத் தாங்குவதற்கும், வேண்டிய கடை முதலை முதலில் கையில் வைத்துக்கொண்டு பிறகு வியாபாரத்தை ஆரம்பி."

தற்காலத்தில் நம்முடைய தேசத்தில் வியாபாரத்தையும், கைத்தொழில்களையும் விருத்தி செய்யவேண்டுமென்றும், அதற்காக பங்குகள் போட்டு கம்பெனிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், பெரிய முழக்கமாயிருக்கிறது. கம்பெனிகள் செய்யும் வியாபாரம் சிறிதாயிராது. அப்படி இருந்தால் அது லாபம் தராது. பெரிய கம்பெனிகள் ஏற்பட்டுச் செய்யும் வியாபாரமோ, தொழிலோ, போட்டியற்றவைகளாயிருந்தாலொழிய, புதிதாய் ஆரம்பிக்கும் கம்பெனிகள் பழைய கம்பெனிகளோடு ஸமாளித்து அவைகளைத் தொலைக்கும்படியான முதலும் சக்தியும் இருந்தால் மட்டும் வியாபாரம் நிலைபெறும். பருத்தி ஆலைகள், சர்க்கரை ஆலைகள் போன்றவைகளை ஸ்தாபித்தல், கப்பலோட்டுதல், மண்ணெண்ணெய் வியாபாரம் செய்தல், முதலிய பெரிய வியாபாரங்களில், பெரிய முதலாளிகள் தங்கள் பணத்தைக் கொண்டே சிறு முதலாளிகளின் கழுத்தை அறுத்து விடுகிறார்கள்.

மேலே சொல்லிய விஷயங்களெல்லாம் பெரும் வியாபாரத்தைப் பற்றினவைகளே. சில்லரை வியாபாரத்தில் வேண்டிய முதலைப் பற்றி இன்னொரு தடவை விசாரிப்போம்.

பத்திராதிபர்.

THE CARE OF CATTLE.

BY

A. RAMANATHAN.

மாடுகளைக் காப்பாற்றுதல்.

பயிரிடுகிறவர்களுடைய ஜெயம் நிலத்தை உழும் மாடுகளைப் பொறுத்தது. நம்முடைய தேசத்தில் எருதுகளையும், கிடாக்களையும் நிலங்களை உழ உபயோகப்படுத்துகிறோம் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களிலோ குதிரைகளை உபயோகிக்கிறார்கள். நாம் உபயோகிக்கும் மிருகம் எதுவாயிருந்தபோதிலும் அதை ஸரியாய் போஷிப்பது நம்முடைய கடமை. நாம் பசியாயிருக்கும்போது எப்படி வேலை செய்ய முடியாதோ அம்மாதிரியே மிருகங்களுக்கும் பசியாயிருக்கும்போது வேலை செய்ய முடியாது. நாம் பசுவுக்கு எவ்வளவு போஷாக்குக் கொடுக்கிறோமோ அதற்குத்தக்கபடி அது பால் கொடுக்கும். பசுக்களை நன்றாக போஷிப்பதின் பலன் யாதெனில், நல்ல கிடாரிகளையும், கன்றுகளையும் அவை நமக்குத் தருகிறதுதான். வாழ்நாள் முழுதும் நமக்கு ஆகாரம் தேவை. பணம் மூலமாயும், தேகசிரமத்தின் மூலமாயும், நாம் தினமும் ஆகாரத்தைப் பெறுகின்றோம். ஆகாரச்சரக்குகளில் ஒன்றாகிய பாலையும், பால் மூலமாயுண்டாகும் தயிர், வெண்ணெய், நெய் முதலியவைகளையும் பசுக்கள்தான் நமக்கு கொடுக்கின்றன. இதை நாம் ஒருபொழுதும் மறக்கக்கூடாது. தவிர, நாம் உட்கொள்ளும் அரிசி, பருப்பு, மற்ற இதர தானியங்களெல்லாம் பூமியிலிருந்துதான் உண்டாக வேண்டும். பூமி முதல் காரணமாயினும் அதை நன்றாக உழுவது துணைக்காரணமாம். பூமியை உழுவது மாடுகள் மூலமாய்த்தான். ஆகையால் மாடுகள் நம்முடைய ஆகாரத்தின் பொருட்டு எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கிறது? இதையும் நாம் மறக்கக்கூடாது.

MADRAS.

விஷயங்கள் இப்படி இருக்க, நம்மவர்களில் எத்தனை பேர்கள் இவைகளைப் போஷிக்கும் விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்கிறார்கள் பார்ப்போம். தெருவில்போனால் வயறு அப்பளம்போல் உலர்ந்திருக்கும் பசுக்களையும், மாடுகளையும் நாம் அனேகம் பார்க்கலாம். படித்தவர்கள் பசுக்களையும், மாடுகளையும் பற்றி பேசுவது அந்தஸ்துக்கு குறைவென்றும், அப்படிப் பேசாதொழிவது அந்தஸ்துக்கு ஏற்றதென்றும் தப்பெண்ணப்படுகிறார்கள். ஆங்கிலேயப் பிரபுக்கள் எல்லாரும் சவாரி செய்வதற்கும், வண்டிகள் இழுப்பதற்கும் குதிரைகளை வைத்துக்கொண்டிருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். தங்கள் உயிர்களை காப்பது போல் குதிரைகளைக் காப்பாற்றி தினமும் அவைகளுக்குப் போதுமான உணவு கொடுப்பதும் யாவருக்கும் தெரிந்த விஷயமே. அப்படிச் செய்வதால் அவர்களுக்கு என்ன கௌரவக் குறைவு உண்டாகிவிட்டது? நாம் வேலை செய்தால் எஜமானன் நமக்குச் சம்பளம் கொடுக்கிறான். நமக்கு வேலைசெய்யும் மாடுகளுக்கு நாம் வன் தக்க கூலி கொடுக்கக்கூடாது?

நிலம் உழுவதின் கஷ்டம் உழுபவனுக்கல்ல. கலப்பையைக் கழுத்தில் பிடித்து இழுத்து மண்ணை கீழும் மேலுமாகப் புரட்டும் மாடுகளுக்குதான். நிலம் உழுவோன் நூதன அபிவிருத்தி பொருந்தின கலப்பை ஒன்றை இழுத்துப் பார்க்கவும். புராதனக் கட்டைக் கலப்பை ஒன்றையும் இழுத்துப் பார்க்கவும். அப்படி இழுப்பதால் இரண்டுக்குமுள்ள ஒற்றுமை வேறுபாடுகள் நன்றாக விளங்கும். அப்பொழுது மாடுகளுக்கு எந்தக் கலப்பை பூட்டினால் சுளுவாக இழுக்குமென்று அவனுக்குத் தெரியும். கொஞ்சம் உழைப்பால் காரியத்தை அதிகப்படுத்தவேண்டும். மாடுகளுக்குக் கொஞ்சம் உழைப்புக்கொடுத்து அதன் மூலமாய் பலனை அதிகமாக அடையவேண்டும். அப்படிச் செய்வதால் மாடுகள் சீக்கிரத்தில் மெலிந்துபோக இடமுண்டாகாது.

இருவர் சேர்ந்து ஒரு காரியத்தைப் பார்த்து வந்தால் அதனால் உண்டாகும் லாபத்தை ஸரி பாதியாய் அவர்கள் பங்கிட்டுக்கொள்வது நியாயம் தானே? ஒருவன் மாத்திரம் லாபத்தில் அதிகமாக அடைந்து மற்றவன் சொல்பம் அடைவது அநியாயமல்லவா? அம்மாதிரியே பயிரிடுகிறவன் ஒருவனானாலும் லாபத்தில் ஸரிபாதிக்கு லாயக்குடையவன் மற்றொருவனிருக்கிறான். யாரெனில் நிலத்தை உழுது சீர்திருத்திய நம்மாடுகள் தான். தானியத்தில் பாதி நாம் அவைகளுக்குக் கொடுக்கவேண்டியதில்லை. வைக்கோலையாவது விற்றுவிடாமல் நிலத்தில் உண்டாகும் வைக்கோலெல்லாம் மாடுகளின் பங்கென்று நாம் எப்பொழுதும் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். நெல் குத்துவதால் உண்டாகும் தவிடெல்லாம் அதனுடைய பாகமே. எண்ணெய் ஆடுவதால் உண்டாகும் பிண்ணாக்கெல்லாம் அதனுடைய பாகமே. இவைகளில் சிறிதளவேனும் விற்கக்கூடாது.

மாடுகளையும், பசுக்களையும் காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமையென்று முன்னமே சொன்னோம். ஆயினும் எவ்வெவ் விதத்தில் அவைகளின் ஸௌக்கியத்தை நாம் தேடலாம். அடியில்கண்ட சில அம்சங்களைச் சொல்லுவோம்:—

1. அன்னத்துடன் நெய் கலந்தாலொழிய எப்படி அன்னம் இனிமையாயிராதோ அதே மாதிரி வைக்கோலுடன் புல் இருந்தால்தான் மாடுகளுக்கு ஆகாரம் இனிப்பாகும்.

2. வஸிப்பதற்கு நமக்கு வீடுகள் இருப்பது போல மாடுகளுக்கும் ஸௌக்கியமான

கொட்டாய்கள் வேண்டும். வெயிலும், மழையும் நமக்கு எப்படி ஸரிப்படாதோ அதே மாதிரி தான் மாடுகளுக்கும் உதவாது.

3. கவிச்சு நாற்றமுள்ள இடத்தில் நாம் எப்படி படுக்க முடியாதோ அம்மாதிரிதான் மாடுகளுக்கு சாணமும், மூத்திரமுமுள்ள இடம் உதவாது. ஆகையால் மாட்டுக்கொட்டாய் சுத்தமாய் இருக்கவேண்டும். தினமும் இருமுறையாவது கொட்டாயை சுத்திசெய்ய வேண்டும்.

4. தினமும் ஸ்னானம் செய்தாலொழிய நமக்கு எப்படி நன்றாயிராதோ அதேமாதிரித்தான் மாடுகளுக்கும். ஆகையால் மாடுகளை வாரம் இரண்டு முறையாவது குளிப்பாட்ட வேண்டும்.

5. தேகத்தில் புண் உண்டானால் நமக்கு எப்படிநோவு உண்டாகுமோ அம்மாதிரிதான் மாடுகளுக்கும் புண் உண்டானால் நோவு உண்டாகும். ஆகையால் மாடுகளை அதிகமாக அடிக்கக்கூடாது. தாத்து முள்ளால் மாடுகளைப் புண்பட குத்துவது குற்றமாகும்.

மாடுகளை காப்பாற்றும் வகைகள் அநேகம் இருந்தபோதிலும் சிலவற்றை மாத்திரம் இங்கே சொன்னோம். கன்றுகளைப்பற்றி சில விஷயங்கள் சொல்லி இந்த வியாஸத்தை முடிப்போம்.

'தகப்பன்போல பிள்ளை' என்பது உலக வாக்கு. ஆகையால் நாம் நல்ல மாடுகளைக் கொண்டு கன்றுகளை உண்டாக்கவேண்டும். அப்பொழுதுதான் கன்றுகள் திடமாயும், பலமாயும் இருக்கும். பல தேசங்களில் நன்றாய் போஷிக்கப்பட்ட கன்று, முதல் வருஷத்தில் தினமும் 1½ அல்லது 2 பவுண்டு (ராத்தல்) எடை அதிகரிக்கிறதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகையால் கன்றுகள் வைத்திருக்கும் எல்லாரும் தங்களுக்கு வேண்டிய மட்டில் பாலைக் கறந்துகொண்டு மிகுதி எல்லாவற்றையும் கன்றுகளுக்கு விட்டுவிடவேண்டும். பால் புஷ்டியால் கன்றுகள் நன்றாகவளர்ந்து அதிக விலைக்குப்போகும். நல்ல விலைக்குப் போனால் நமக்கு லாபம் உண்டாகவில்லையா? கன்றுகளுக்குக் கொஞ்சம் பால் கொடுத்து, வயிற்றை பூர்த்திசெய்துக்கொள்ள கன்றுகளை வெளியே விடுவது பாவமாகும்.

ஏ. ராமநாதன்.

BANKING.

BY

D. NATESA AIYAR.

பாங்கிகளோடு பத்து வரவு செய்தல்.

பாங்கியில் பணம் பத்து வரவு செய்யும் முறைகளும் அதனால் உண்டாகும் பிரயோஜனங்களும் :—

பொதுவாய் சென்னப்பட்டணம் போன்ற தலை நகரங்களிலுள்ள பெரியவர்த்தகர்களும் உத்தியோகஸ்தர்களும் பாங்கியில் பணம் வைத்து வாங்கும் வழக்கத்தை அறிந்தவர்கள். மற்றப்படியுள்ள சிறு வர்த்தகர்கள், ஸாமான்ய உத்தியோகஸ்தர்கள், ஆகிய அநேகர்களுக்கு பாங்கிப் பத்து வரவு விஷயம் தெரியாதென்றே சொல்லலாம். வெளியூர்களில் உள்ள சில வர்த்தகர்களும் உத்தியோகஸ்தர்களும் பாங்கியில் பத்து வரவு செய்தும் வருகிறார்கள். முக்கியமாய் வர்த்தகர்களுக்கு பாங்கி பத்து வரவால் விசேஷ உபயோகமுண்டு. வர்த்தகர்களல்லாத இதராளும் பாங்கிப் பத்து வரவால் லாபமடையலாம். பாங்கியில் இன்னவிதமாய்ப் பத்து வரவு செய்வதென்றே அநேகருக்குத் தெரியாது. பாங்கிகளில் பத்து வரவு செய்ய அந்தந்த பாங்கார் ரூல்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பாங்கியில் பணம் வைத்து பத்து வரவு செய்ய விரும்புகிறவர்கள் அந்த ரூல் புஸ்தகங்களை வாங்கி வாசித்துக்கொள்ளவேண்டியது. பாங்கியில் பொதுவாய் 4, 5 வகைக் கணக்குகள் வைக்கலாம் :—

1. ஸேவிங்கஸ் பாங்கிக்கணக்கு.

2. நடமுதல் கணக்கு, அதாவது, பத்தும் வரவுமாக அநுஷ்டித்து வரும் கணக்கு; அதுதான் கரண்ட் அக்கௌண்ட் என்று சொல்லும் கணக்கு.

3. அதிகப்பத்துக் கணக்கு; அதாவது ஓவர்டிராப்ட் கணக்கு.

4. குறித்தகாலத்திற்கு பாங்கியில் பணம் போடும் கணக்கு; அதாவது பிக்ஸட் டிபாஸிட் கணக்கு.

5. சிறிது காலத்திற்கு பாங்கியில் பணம் வைத்து வாங்கும் கணக்கு; அதாவது ஷார்ட் நோட்டீஸ் டிபாஸிட் கணக்கு.

மேலேகண்ட ஐந்துவகைக் கணக்குகளுக்குத் தக்கபடி பாங்கில் கணக்குவைக்க அச்சிட்ட பாரங்களிருக்கின்றன. உதாரணமாக பாங்கில் கரண்ட்கணக்கு; அதாவது நடமுதல் பத்து வரவுக் கணக்கு வைக்கவேண்டுமானால் பாங்கி ஸெக்ரெடரிக்கு கடித மூலமாய் இன்னவிதமானக் கணக்கு பாங்கில் வைப்பதாயுத்தேசித்திருக்கிறேன், அதற்கான பாங்கி விதிப்படிக்குள்ள பாரத்தைப் பூர்த்திசெய்து கடிதத்துடன் அனுப்பியிருக்கிறேன். என்பேரில் பாங்கிக் கணக்குகளில் பதிவு போட்டுக்கொண்டு பணம் வரவு வந்ததற்குள்ள பாங்கி பாஸ் புக்கு, பத்து வரவு செய்ய செக் புக்கு, முதலானவைகளை அனுப்பக் கோருகிறேன், என்று எழுதிக்கொள்ள வேண்டும். அதே விதமாக ஸேவிங்ஸ் பாங்கி கணக்கிற்கு செய்து கொள்ளவேண்டும். மற்றப்படியாயுள்ள கணக்குகளுக்கு நேரிலோ கடிதமூலமாகவோ பாங்கி ஸெக்ரெடரியுடன் ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம். பாங்கில் பணம் செலுத்த தாமே வந்தாலும் அல்லது காரியஸ்தனை பணத்துடன் அனுப்பினாலும் பாங்கார் கொடுக்கும் அச்சிட்ட ரெமிட்டன்ஸ் ஸ்லிப் பாரத்தில் அதாவது செலானில் நாணைய வாரிகள் கண்டு மொத்தம் தொகை போட்டு கையெழுத்திட்டு பாங்கிலுள்ள பணம் வாங்கும் ஷராப்பிடம் பணத்தைக் கொடுக்கவேண்டும். பாங்கி ஷராப் பண வரவுப் புத்தகத்தில் வரவு வைத்துக்கொண்டு செலானில் தான் பெற்றுக்கொண்டதற்கு இனிஷியல் செய்து பாங்கி பண நடவடிக்கைகளுக்கு அதிகாரியான காஷியரிடம் செலானை அனுப்புவார். அவர் அவருடைய இனிஷியல் செய்து பணம் கட்டினவருக்குத் தற்சமய ரசீதாக செலானின் கௌண்டர் பாயிலை, பாங்கி வௌவ்சரைக் கிழித்துக்கொண்டு புஸ்தகத்தோடு கொடுப்பார். செலானின் கௌண்டர் பாயிலில் கட்டின தொகை மொத்தம் கண்டு பாங்காபீசரின் இனிஷியல் போடப்பட்டிருக்கும். பாங்கில் பலபேர்கள் பத்து வரவு செய்வார்களானதால் உடனுக்குடனே பாஸ்புக்கில் பதிவு போட்டு பாஸ் புக்கை கணக்கு வைப்பவர்களிடம் கொடுக்க முடியாது; பணம் கட்டின தினமோ அல்லது மறுநாளிலோ பதிவுபோட்டு கணக்கு வைத்தவரின் விலாசத்திற்கு போஸ்டு மூலமாகவோ அல்லது பாங்கி பேரர்கள் அதாவது பியூன்கள் மூலமாகவோ அனுப்பிவிடுவார்கள். கரண்ட் கணக்கில் அதாவது நடமுதல் பத்து வரவுக் கணக்கில் நடவடிக்கை நடத்த ஒரு அணா ஸ்டாம்பு முத்திரைபோட்ட செக் புஸ்தகங்கள் அனுப்புவார்கள். பணம் பாங்கியிலிருந்து வாங்கவேண்டியபோது செக்கில் இன்னாருக்கு இவ்வளவு ரூபாய் கொடுக்கிறதென்று கண்டெழுதி கையெழுத்துப் போட்டனுப்பினால் பாங்கியில் பணம் கொடுப்பார்கள். இதுபோலவே ஸேவிங்கஸ் பாங்கி கணக்கிலும் பாங்கியிலிருந்து இந்தக் கணக்கில் பணம் வாங்க வேண்டுமேயானால் செக் புஸ்தகத்திற்குப் பதிலாக வித்ட்ராயல் பாரங்களடங்கிய புக்கை பாங்கார் கொடுப்பார்கள். அதில் எவ்வளவு ரூபாய் தேவையென்று கண்டு கையெழுத்துப் போட்டனுப்பினால் பணம் கொடுப்பார்கள். இந்தக்கணக்கில் பணம் போடவும் செலான் புஸ்தகமுண்டு. இந்தக் கணக்கில்

பணம் வைப்பவர்கள் ஸேவிங்கஸ் பாங்கி செலான் பாரத்தில் நாணயவாரி கண்டு மொத்தம் போடவேண்டும். ஓவர்ட்ராயல் கணக்கு, அதாவது அதிகப் பத்துக்கணக்கு, பாங்கில் ஏற்பாடு செய்துகொள்ள விரும்புகிறவர்கள் முக்கியமாய் பெரிய வர்த்தகர்களாக இருப்பார்கள். அப்படியான வர்த்தகர்கள் பாங்கின் தலை அதிகாரியான ஸெக்ரெடரிக் கெழுதி ஏற்பாடு செய்து கொள்ளலாம். மற்றபடிக்குள்ள குறித்தகால டிபாஸிட் கணக்குகளைப் பற்றியும் ஷை. அதிகாரியிடம் கடிதமூலமாகவோ அல்லது நேரில் பார்த்துப் பேசியோ ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

பாங்கியின் விதிகள் பிரகாரம் ஒவ்வொரு கணக்கு வைப்பவருக்கும் அந்தந்த 6-வது மாதாந்தரத்தில் கணக்குப்பார்த்து அவரவர்கள் பேரில் அந்தந்தக் கணக்கில் நின்ற பணத்திற்கு வட்டி கட்டி, வட்டியை அவரவர்கள் மனம் போல் பாங்கிலுள்ள அவரவர்கள் கணக்கில் சேர்த்துக்கொள்ளும்படி சொன்னால் கணக்கில் சேர்த்துக் கொள்வார்கள்; இல்லையானால் கையில் பணம் வேண்டுமென்றால் கணக்குக்குள்ள பணத்தைக் கொடுப்பார்கள். இப்படி பாங்கியிலுள்ள பற்பல கணக்குகளில் பணம் வைத்துப் பத்து வரவு செய்வதால் பெரிய வர்த்தகர்களாயுள்ளவர்களுக்கு மாத்திரம் தான் பிரயோசனமென்று சிலர் நினைக்கிறார்கள். அப்படியல்ல; பாங்கி பத்து வரவு எல்லா விதமான நிலைமையிலுள்ளவர்களுக்கும் பிரயோசனத்தைக் கொடுக்கத்தக்கது.

மாஸம் பத்து ரூபாய் சம்பளம்வாங்குகிறவர் முதல் ஆயிரக்கணக்காய் வாங்குகிறவர் வரையில் பாங்கியில் பத்துவரவு செய்வதால்பணம் மீற்கலாம். மாதச்சம்பளம் வாங்குகிறவர்கள் சம்பளத்தைவீட்டிலுள்ள தங்கள் பெட்டியில் வைத்திருந்தால் அவசியமில்லாத செலவுகள் சில நேரிடுமானால் யோசனையில்லாமல் கைப்பெட்டியிலுள்ள பணத்தை எடுத்துச் செலவுசெய்துவிடுவார்கள்; அல்லாமலும் வீட்டில் வெட்டியாய்ப்பெட்டியில் தூங்கும் பணத்திற்கு பாங்கியில் ஸ்வல்ப வட்டியானாலும் வரும். திருடர் முதலான பயத்திற்கிடமில்லாமல் பணங்கள் வைத்துக் காப்பாற்றுவதற்கென்றே பாங்கிக்காரர்கள் பலத்தகட்டிடங்கள் கட்டி, தகுந்த பந்தோபஸ்து செய்ய காவல்காரர்களை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

பணம் வைப்பவர்களின் பணத்தை பத்திரமாய்க் காப்பாற்றிக் கொடுப்பதுடன் தங்களிடம் அந்தப்பணம் நிற்கும் காலம் வரையில் ஸ்வல்ப வட்டியும் போட்டுக்கொடுக்கிறபோது எந்த ஸாமான்யர்களும் பாங்கில் பணம் போடுவது யுக்தமான காரியமென்று நினைக்கவேண்டியதல்லவா? நம்மவர்களில் பலர் மாதச்சம்பளம் எவ்வளவுள்ளவர்களானாலும் கையில் மாத்திரம் பணப் பழக்கமிருக்குமானால் அதைத்தாறுமாறாகச் செலவிட்டு மாஸம் 15ந்தேதியாகி விட்டால் தங்கள் சிநேகிதர்களிடம் கடன் கேட்கக் கிளம்புகிறார்கள். அப்படியான செலவாளிகளுக்கு பாங்கிப்பத்து வரவு செட்டாயிருக்கும்படியாகக் கற்பிக்கக் கூடிய வழியாகும். இப்படியான பாங்கிப் பழக்கத்தால் அவர்கள் எதிர்பாராத பணம் ஏராளமாகஅவர்கள் கையில் குவிந்தும் விடும்.

ஒரு குடும்பஸ்தன் யாத்திரையாக தூரதேசம்போக நினைக்கும்போது தன் குடும்பத்தின் ஆஸ்தி தனங்களாயுள்ள நகை நட்டுகள், பாண்டுப் பத்திரங்கள், முதலானவைகளை பாங்கார் வசம் எவ்வித பீதியுமின்றி தம்முடைய பெட்டியில் வைத்து பாங்காபீசர் முன் தம்முடைய ஸீல் அதாவது முத்திரைபோட்டு ஸேப்கஸ்டடிக்கு அதாவது ஜாக்கிரதையாய் வைத்துக்கொடுக்க பாங்கி விதிப்படி அதற்குள்ள கட்டணங்கட்டி வைத்துவிட்டு நிற்பயமாய்ப் போகலாம். இவையல்லாமல் பாங்கால் பொதுவாய் ஜனசமூகங்களுக்கும் முக்கியமாய் வர்த்தகர்களுக்கும் பில் டிஸ்கௌண்ட் செய்வது முதலான பலவித ஸௌகரியங்களுமுண்டு. அதை வர்த்தகர்களும், பாங்கரும் என்ற தனி தலைப்பின் கீழ் விஸ்தாரமாய் எழுத உத்தேசம். ஆகவே பாங்கிப் பத்து வரவால் வர்த்தகர்களும் மற்றுமுள்ள எல்லாத் தொழிலாளிகளும் செட்டும் கட்டுமாயிருந்து பணம் சேர்த்து நல்ல ஸ்திதிக்கு வரலாமென்போம்.

டி. நடேசய்யர்.

SUGAR AND SWEETS.

சர்க்கரையும் தித்திப்புப் பண்டங்களும்.

மூடபக்தி, மூடநம்பிக்கை முதலியவைகள் ஜீவிய தசைக்கு அழிவை உண்டு பண்ணக் கூடியவைகளாய் இருக்கின்றன. தீங்கற்ற வஸ்துக்கள் விஷயத்திலும், மனிதர்களுக்கு மிகவும் உபயோகமுள்ள வஸ்துக்கள் விஷயத்திலும், இப்படிப்பட்ட மூடபக்தியாவது, நம்பிக்கையாவது உண்டாகி விட்டால், எவ்வளவு கெடுதி ஏற்படுகிறதென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. பொதுஜன அபிப்பிராயம் கெட்ட வழியில் பிரவேசித்தால், அந்த அபிப்பிராயத்தை மறுபடியும் நீக்குவது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. பிறத்தியாராலேயே பெரும்பாலும் பழக்கப்பட்டுப் பிறருடைய அபிப்பிராயத்தையே தழுவிக்கொள்ளும் இயல்புடைய ஜனங்களை விஷயங்கள் நேரில் கவனிக்கும்படியும், யோசிக்கும்படியும் செய்வது அசாத்தியமாக இருக்கிறது. காரணமில்லாமல் ஒரு விஷயத்தை ஜனங்கள் நம்பி விட்டால், அந்த நம்பிக்கை எவ்வளவு கெடுதியை உண்டாக்கக்கூடியதா யிருந்தபோதிலும், அவர்கள் அதை விடுவதில்லை. ஸாதாரண விஷயங்களிற்கூட ஜனங்களுக்குப் பிசகான நம்பிக்கை ஏற்பட்டிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. உதாரணமாக சர்க்கரையைப் பற்றியும், தித்திப்புப் பண்டங்களைப் பற்றியும் ஜனங்கள் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று பார்ப்போம்.

குழந்தைகளுக்குத் தித்திப்பு உதவாதாம்.

விஷயங்களைக் கூறு கூறாகப் பகுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்யும் ரஸாயன சாஸ்திர நிபுணர் ஒருவர் குழந்தைகளுக்குத் தித்திப்புப் பண்டங்களைத் தின்பதற்குக் கொடுக்கக் கூடாதென்று அபிப்பிராயப்படுகிறார் "குழந்தைகளுக்குப் பசியில்லாமல் செய்துவிடுவதோடு தித்திப்புப் பண்டம் அவர்களுடைய சரீர உஷ்ணத்தையும் அதிகப்படுத்திவிடுகிறது. போஷிப்பையும், பலத்தையும் தரத்தக்க வஸ்துக்கள் மிட்டாய்களில் இல்லை. மிட்டாய்களைப் பருமனாகச் செய்வதற்காக களிமண், சுத்தஞ்செய்யப்பட்ட சுண்ணாம்பு, மரப்பிசின், முதலியவைகளைச் சேர்க்கிறார்கள். சுண்ணாம்புக் கற்கள் முதலியவைகளைப் பொடி பண்ணி சர்க்கரையில் கலக்கிறார்கள். அதனால் சர்க்கரை கெட்டுப்போகிறது. இதைச் சாப்பிட்டு வந்தால் நாளடைவில் இது ஜீரண சக்தியைத் தடைப்படுத்துகிறது," என்று அந்த ரஸாயன சாஸ்திரி எழுதுகிறார். இவர் சொல்லுவது உண்மையே. ஆனாலும் தித்திப்பு பண்டங்களே கூடாதென்று இவர் ஆக்ஷேபிப்பது தான் சரியல்லவென்று தோன்றுகிறது. மிட்டாய் வகைகளிலும் சில சுத்தமாயும், கெடுதி செய்யாதனவாயும் இருக்கின்றன. வேறு சில கெடுதிசெய்யக் கூடியவைகளா யிருக்கின்றன. ஆகவே எல்லாவற்றையும் கூடாதென்று ஆராய்ந்து பார்க்காமல் சொல்லிவிடுவது நல்லதல்ல. உதாரணமாக வீட்டில் செய்யப்படும் பலகார பக்ஷணங்கள் சுத்தமாயும் நல்ல குணமுள்ளவைகளாயு மிருக்கின்றன.

தித்திப்பின் நன்மைகள்.

மனிதனுடைய ஜீவியத்துக்கு சர்க்கரை மிகவும் அவசியமான வஸ்து என்று சொன்னால் சிலருக்குப் புதுமையாகத் தோன்றலாம். நாம் சாப்பிடுகிற ஆகாரத்தில் பெரும்பாகம் நாளாவட்டத்தில் ஒருவகைச் சர்க்கரையாக மாறி 'லிவர்' என்று சொல்லப்படும் கல்லீரலில் தங்குகிறது. கொஞ்சம் கொஞ்சமாய் இந்த வஸ்துவை நம்முடைய சரீரம் தன் வளர்ச்சிக்கு உபயோகித்துக்கொள்ளுகிறது. சர்க்கரை

கலந்திருக்கும் உணவுகளை உட்கொள்ளாமல் இருந்து விடுவோமேயானால் நம் சரீரத்தின் நிலைமை கெட்டுப்போகும். அதிகமாய் அளவுக்குமிஞ்சி சர்க்கரை சேர்ப்பது விரும்பத்தக்க தல்ல என்பதில் சந்தேகமில்லை. ஆனால் குழந்தைகள் தித்திப்பை விரும்பினால் அவைகளுடைய ருசிமாறி விட்டதென்று பெற்றோர்கள் நினைத்து, அந்தக் குழந்தைகளுக்கு சர்க்கரைத்தின்பண்டங்களைக் கொடுக்காமலிருந்து விடுகிறார்கள். அப்படியிருப்பது பிசகு. சர்க்கரை எவ்வளவுக்குஎவ்வளவு அதிகமாகச் சேருகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு கல்லீரல் நன்றாய் வேலைசெய்யக்கூடும். தித்திப்புப் பண்டங்களையும், மிட்டாய் வகைகளையும் கண்டவுடன் குழந்தைகள் அவைகளை வாங்கிக்கொடுக்கும்படி அழுவதை அநேகர் பார்த்திருக்கலாம். மிட்டாய் வகைகளைக் கண்டதும் குழந்தைகள் அதிக ஆவலாய் தின்பதற்கு எத்தனிக்கின்றன. இதனால் தித்திப்புப் பண்டங்களில் குழந்தைகளுக்கு இயற்கையாகவே விருப்பம் இருக்கிறதென்பதும், இயற்கைக்கு மாறாக நாம் ஒன்றைச் செய்தல் பிசகென்பதும் விளங்கவில்லையா ? தித்திப்புப் பண்டங்களைத்தின்றே வளருகிற குழந்தைகள் நன்றாய் வளரும். தித்திப்பு சேராமல் என்ன மேலான உணவு சேர்ந்த போதிலும் பிரயோஜனமில்லை. சரீர தத்துவ சாஸ்திர அறிவு கொஞ்சமாவது நம்முடைய ஜனங்களுக்கு இருந்தால் அவர்கள் சர்க்கரையைப்பற்றிக் கொண்டிருக்கும் கெட்ட அபிப்பிராயத்தை விட்டுவிடுவார்கள். விஷத்தைப்போல் அதைப் பாவிப்பதை விட்டு, அதைச் சாப்பிடவேண்டுமென்ற விருப்பங்கொள்ளுவார்கள். படித்த மனிதர்களும், ஸ்திரீகளும் சர்க்கரையின் உபயோகத்தை அறிந்து அதைப்பிரயோஜனப்படுத்துவதில் விருப்பங்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் சர்க்கரை சேர்ந்து தித்திப்பு நீர் உண்டாகும், எலும்பை சர்க்கரை உருக்கிவிடும், என்கிற நம்பிக்கையெல்லாம் ஜனங்கள் மனதை விட்டு நீங்கிவிடும். சரீர சுகத்திற்கும் உற்சாகத்துக்கும் சர்க்கரை ஒரு முக்கியமான வஸ்து என்னும் உண்மையை எல்லாரும் அறிந்து நன்மையடைய ஹேது உண்டாகும்.

ARTESIAN WELLS.

BY

S. M. RAMASWAMI.

குழைக்கிணறுகள்.

இந்தப் பத்திரிகையின் பெயரென்ன ?. "பிழைக்கும் வழி ;" அதாவது நமக்கெல்லாம் சுலபமாயும் தற்காலத்திற்கு ஏற்றபடி யந்திரங்களாலும் சூக்ஷ்ம புத்தியைக்கொண்டும் "பிழைக்கும் வழி"களைக் காட்டும் தோழனென்று சொல்லலாம். இந்தக்காலத்தில் பிழைப்பதற்கு அநேக வழிகளிருக்கின்றன. ஆயினும் எல்லாம் சிறந்தவைகளாகா ? படித்தவர்கள் மாத்திரம் சில விஷயங்களைக் கையாடலாமே யொழிய எல்லாரும் செய்ய முடியாது. ஏனென்றால் எல்லா ஜனங்களுக்கும் அந்த விஷயத்தின் கூர்மையும், நுணுக்கமும், அதை நடத்தும் முறையும் தெரியா. சென்ற சில வருஷங்களில் நம் இந்தியர்களில் பெரும்பான்மையோர் கைத்தொழிலில் அதிக ஊக்கமும், சிரத்தையும் எடுத்து, முதல் வைத்து, இங்கே செய்யாத சில புதிதான கைத்தொழில்களை ஏற்படுத்தி உழைத்து வருகிறார்களென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஆயினும் நாம் முன்காலத்தில் எப்படி வேளாண்மை செய்தோமோ அதைப்போலவே இந்தக் காலத்திலும் செய்கிறோமே யல்லாமல் அதில் அதிக சீர்திருத்தம் செய்ததாகக் காணப்படவில்லை. ஏனென்றால் நாம் அந்தத்தொழிலில் அதிக ஊக்கம் வைக்கவில்லை.

வேளாண்மைக்கு ஆதாரமாயுள்ளது ஜலம். ஜல ஸௌக்கியத்தைப்பற்றி இங்கே சற்று கவனிப்போம்.

ஆர்டீஷியன் கிணறு என்பதைத் தெற்கே அநேகர் குழைக் கிணறு என்பார்கள். ப்ரான்ஸில் ஆர்ட்டாயஸ் என்னும் ஜில்லாவில் பூமியின் தரைமட்டத்திலிருந்து குழைகளைக்

கீழ் நீர்மட்டத்திற்குச் செலுத்தி அவைகளின் மூலமாய் அடி ஜலத்தை நில மட்டத்திற்கு முதல் முதல் கொண்டுவந்ததனால் ஆர்டீஷியன் கிணறு என்று இங்கிலீஷிலும் வழங்கலாயிற்று. பூமியின் அடியில் நீர் மட்டம் இருக்கிறது. அந்த நீர் மட்டம் மணல், அல்லது சுண்ணாம்பு, அல்லது பாறை, இப்படிப்பட்ட வஸ்துக்களினால் மேலுங் கீழும் மூடப்பட்டிருந்தால், தரைமட்டத்திலிருந்து அந்த நீர்மட்டத்திற்குக் குழைகளைச்செலுத்தினால் ஜலம் உடனே வெளியில் குபுகுபென்று ஓடிவரும். ஏனென்றால் ஜலமானது ஒரே ஸம மட்டத்தை அடையும் தன்மையுடையதாதலால் கொஞ்சம் மேட்டிலும் கொஞ்சம் பள்ளத்திலும் இருக்கமாட்டாது. அடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கும்படியான நீரில் குழைகளைச் செலுத்தினால் நீர்மட்டத்திற்கு வரும்போது நிலமட்டத்தில் வழிந்து விடுகின்றது. முன் காலத்தில் இப்பேர்ப்பட்ட கிணறுகள் ப்ரான்ஸ் தேசத்திலும், இட்டலி தேசத்திலும் இருந்தனவென்று தெரியவருகிறது. இப்பேர்ப்பட்ட கிணறுகள் புதுச்சேரியில் அநேகமுள. இன்னும் அரக்கோணத்துக் கருகிலுள்ள தக்கோலத்தில் சிவாலயத்தில் கர்ப்பக் கிருகத்தின்பின் செய்துவைத்துள்ள ரிஷபத்தின்வாயில் வைத்திருக்கிற குழையின் வழியாய் ஜலம் எப்போதும் வந்து கொண்டேயிருக்கிறது. ஆறு, குளம், ஏரி முதலியவைகளில் ஜலம் வற்றின போதிலும், சில வருஷங்களில் மழை பெய்யாத போதிலும், ஒவ்வொரு ஊரிலும் இப்பேர்ப்பட்ட குழைக் கிணறுகள் இருந்தால் ஜலம் நிலங்களுக்குப் பாய்ந்து செழிப்படையச் செய்யும். மேலே சொல்லிய இடங்களில் இருக்கும் குழைக்கிணறுகளினால் பாய்ந்து நிலங்கள் செழிப்பாயிருப்பதை போனவர்கள் பார்த்திருக்கலாம். இவ்விதமான கிணறுகளை ஸாதாரணமாய் கடல் மட்டத்திற்கு கீழேயுள்ள இடங்களில் அதிகம் வெட்டக்கூடும். ஆனால் புதுச்சேரியிலேயே ஒரு இடத்தில் அகப்பட்ட ஜலம் மற்றொரு இடத்தில் அகப்படவில்லையாம். அங்கே ஏறக்குறைய சுமார் 100—150 அடி ஆழங்களில் அநேகமாய் ஜலம் கிடைத்து விடுகிறதாம். அப்படி 200—250 அடி ஆழம் வரைக்கும் குழைகளை உள்ளே விட்டுப்பார்த்தும் நிலமட்டத்திற்கு நீர் வராவிடில் ஜலம் கிடைக்காதது கண்டு சிலர் இந்த முயற்சியை கைவிட்டுவிட்டார்கள். ஜலம் கிடைக்கக்கூடிய இடங்களில் 90, 120, 150 அடிகளில் மணல்பாங்கும் ஜலமும் அகப்படுமாம். சில பூமிகளில் போகப் போக களிப்பு மண்ணும், சுண்ணாம்பைப் போன்றவைகளும், பாறைகளும் காண்கிறதனால் ஜலம் அகப்படாதென்றே சிலர் எண்ணுகிறார்கள். இப்படியே புதுச்சேரியிலும், கூடலூருக்கடுத்த கங்கணங்குப்பத்திலும், ப்ருஜேஸ் பேட்டையிலும் 250,—300 அடி ஆழம் வரைக்கும் ஜலம் கிடைக்காததினால் பொருள் நஷ்டமடைந்து முயற்சியைக் கைவிட்டார்கள். இவர்கள் இன்னும் அதிக ஆழம் குழைகளை விட்டுப் பார்த்தால் ஜலம் கிடைத்து லாபமடைந்திருப்பார்களென்று எண்ணுவதற்குக் காரணங்களுண்டு. ஏனென்றால் பாரிஸ் நகரத்தில் க்ரெநில் என்னும் இடத்தில் ஜியாலஜிஸ்டு என்று சொல்லப்படும் ஒரு பூகோள உறுப்பு லக்ஷண சாஸ்திரி 1,600 அடி ஆழத்தில் ஜலம் கிடைக்குமென்று சொன்னாராம். ஆனால், அவர் சொன்ன ஆழத்தில் ஜலம் கிடைக்கவில்லை. மூலட் என்பவர் 7 வருஷம் 1 மாதம் 26நாள் 1,794½ அடி ஆழம் (அதாவது சாஸ்திரி சொன்னதற்கு மேலே 194½ அடி) மிகவும் கஷ்டத்தோடும், பொருள்

கஷ்டத்தோடும், குழைகளை விட்டுப் பார்த்ததில் ஜலம் கிடைத்துவிட்டதாம். ஜலத்தினுடைய தன்மையோ மிகவும் நேர்த்தியானதாம், சுறப்பு அளவில்லாததாம். இந்தக் கிணற்று ஜலம் தரைமட்டத்திற்கு மேலே எழும்பும் தன்மையுடையதாயிருந்ததினால், 110 அடி உயரம் ஜலத்தை குழைகளின் மூலமாய் எழுப்பி, மேலே பெரிய இரும்புத் தொட்டிகளில் விழச்செய்து, அங்கிருந்து அந்த ஊரின் நாலாபக்கங்களிலும் குழைகளின் மூலமாய் ஜலத்தை திருப்பினார்களாம். அந்த ஊருக்கு வேறே ஜலவரவு இல்லாதிருந்தும் இதுவே போதுமானதாய் இருந்ததாம். ஆகையால் இங்கே குழைகளை பூமிக்குள் செலுத்தும்படியான ஆழத்தையும், அங்கே செலுத்திய ஆழத்தையும் ஒத்திட்டுப் பாருங்கள். குழைகளைவிட்டு ஜலம் தருவிப்பதல்லாமல் ஸாதாரணமாய்க் கிணறுகளும் வெட்டலாம். அப்படிச் செய்தால் ஏராளமான ஜலம் கிடைக்கும். இங்கிலாந்தில் நாட்டிங்குன்றின் அடிவாரத்தில் நார்லான்ஸ் என்னும் ஊரில் பென்ஜமின் வில்லியமி என்பவர் 4 அடி குறுக்களவுள்ள ஒரு கிணறு 236 அடி ஆழமுள்ளதாய் வெட்டினாராம். நடுவிலிருக்கும் ஊற்றுகளின் சுறப்பை கிணற்றைச்சுற்றி உட்பக்கத்தில் தகடுகளை அடித்து நிறுத்திவிட்டார். பின்பு செப்புக் குழைகளை இன்னும் 24 அடி ஆழம், அதாவது 260 அடி ஆழம் உள்ளே செலுத்தினாராம். உடனே மணல் பாங்கின் மூலமாய் ஜலம் கிளம்பி எப்போதும் பாய்ந்துகொண்டேயிருந்ததாம். இன்னும் சில இடங்களில் 400, அல்லது 500 அடி ஆழங்களில் ஜலம் கிடைத்திருக்கிறது. ஆகையால் பூமியினுடைய தன்மையையறிந்து அதற்கேற்ற மாதிரி ஆழம் வெட்ட ஜலம் கிடைக்குமென்று முற்றும் நம்புகிறோம். இந்த விஷயத்தில் அநுபோகப்பட்டவர்களையும் தகுதியான ஆயுதங்களையும் கொண்டு வேலை செய்தால் லாபமடையலாம். சில இடங்களில் 1,000, 1,500 அடி ஆழம் வரைக்கும் வெட்டியும் அதன் ஊற்று நீர் நிலமட்டத்திற்கு எழாவிட்டால் ஆயில் என்ஜின் போட்டு ஜலத்தை மேலுக்குக் கொண்டுவரவேண்டும். ராத்திரியும் பகலும் என்ஜின் இறைக்கும் இப்போது அநேக இடங்களில் 2 அல்லது 3 மணி நேரம் என்ஜின் பம்பு பண்ணினால் ஜலம் வற்றிப் போகிறது. பிறகு என்ஜின் ஜலம் சுறக்கிற வரையில் காக்கவேண்டியிருக்கிறது. குழைக் கிணறுகளின் பக்கத்தில் பெரிய கிணறு வெட்டி, தரை மட்டத்திற்கு எழச்சக்தியற்ற குழைக்கிணற்றின் ஜலத்தை அடுத்த கிணற்றுக்குப் பாய்ச்சி அதிலிருந்தும் பம்பு செய்து தண்ணீரை மேலுக்குக் கொண்டுவர ஜலம் சதா கிடைக்கும் என்ஜினை நிறுத்தவேண்டிய அவசியமில்லை.

எஸ். எம். ராமஸ்வாமி.

THE LATE MISS FLORENCE NIGHTINGALE.

BY

S. PANCHAPAGESA SARMA, B.A.

காலஞ்சென்ற மிஸ் ப்ளாரென்ஸ் நைடிங்கேல்.

மிஸ ப்ளாரென்ஸ நைடிங்கேல் என்னும் புகழ் பெற்ற ஆங்கிலேய புண்ணியவதி இறந்து போய் விட்டார் என்று போன ஆவணி மாஸத்து ஸஞ்சிகையில் சொன்னோம். தற்காலத்தில் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் நோயாளிகளுக்கும், போர்க்களத்தில் காயம்பட்டுக் கிடக்கும் நோயாளிகளுக்கும், தாதிகள் மருந்துகொடுத்துப் பணிவிடை செய்து வரும் வழக்கம் நைடிங்கேல் அம்மாளால் முதல் முதல் ஏற்பட்டது. இதனால் இந்த அம்மாளிடத்தில் உலகத்தில் ஸகல ஜனங்களுக்கும் அபார ப்ரீதி. இந்த புண்ணியவதியினுடைய சரித்திரத்தை எல்லாரும் அறிவது நன்மையையுண்டாக்குமாதலால் அதை இங்கே விவரமாக எழுதுவோம்.

ப்ளாரென்ஸ் நைடிங்கேல் 1820-ம் வருஷம் மே மாஸம், 20-ம் தேதி இட்லி தேசத்தில் ப்ளாரென்ஸ் என்ற ஊரில் பிறந்து இங்கிலாந்திற்குச் சிறு பிராயத்திலேயே கொண்டுவந்து வளர்க்கப்பட்டாள். இளம் பிராயம் முதல் கொண்டே இவளுக்கு நோயாளிகளிடத்தில் பரிதாபமும், காயம் பட்டவர்களுக்கு உதவி செய்து அவர்களுடைய ஹிம்ஸையைக் குறைக்கவேண்டுமென்ற அவாவும் நிறைந்திருந்தன.

இவளுக்கு ஐந்தாறு வயதில் தன்னோடொத்த தோழிகளுடன் விளையாடும்பொழுது ஒருத்திக்குத் தற்செயலாய்க் கையில் காயம் பட்டது. உடனே இவள் கொஞ்சமேனும் ரத்தத்தைக் கண்டு பயப்படாமலும், பின் வாங்காமலும், தன்னுடைய அழகான பட்டுக் குட்டையைக் கிழித்து அவளுடைய காயத்தைக் கட்டி வலியைப் போக்கினாள். இவ்விதமான அன்பு இவளுக்கு மனிதர்களிடம் மாத்திரமல்ல, நாய் முதலிய மிருகங்களிடத்திலும் உண்டு. ஒரு நாள் இவள் வெளியே உலாவப் போகையில் ஒரு குடியானவனுடைய நாய், காலொடிந்து கஷ்டப்படுவதைப் பார்த்து, காயத்தின்மேல் துணிகளைக்கிழித்துக் கட்டி, நெருப்பு மூட்டி ஒத்துக்கொடுத்து அந்த வாயில்லாப் பிராணியின் கஷ்டத்தைப் போக்கினாள்.

இவளுடைய தகப்பனுக்கு ஏராளமான பணம் இருந்தபடியாலும் அவருக்கு இரண்டு பெண்கள் தவிர வேறு பிள்ளைகள் இல்லாததனாலும் அவர் இவளைத் தக்கபடி படிப்பிக்க வேண்டுமென்று தன்னாலியன்ற மட்டும், முயற்சி செய்தார். காலத்தின் அருமை, எந்தக் காரியத்தையும் ஒழுங்காகச் செய்தல், மனதை ஒரு நிலைப்படுத்தல், ஆகிய இவைகளால் உண்டாகும் உபயோகத்தை மிஸ் நைடிங்கேல் இளம் பிராயத்திலேயே அறிந்தாள். புஸ்தகங்களைப் படிப்பதில் மாத்திரமன்றி, வெளியே விளையாடல், இயற்கைச் சிருஷ்டிகளையுற்று நோக்கல், இவைகளிலும் அதிக ஊக்கத்தைச் செலுத்தினாள். அன்றியும், பெண்களுக்கு அவசியமான வீட்டு வேலைகள், தையல் தொழில், முதலியவற்றிலும் நன்றாகத் தேர்ந்தவளானாள். இவளிடம் ஏழைகளும், பணக்காரர்களும் அன்பு பாராட்டும்படியான நற்குணங்கள் யாவும் குடிகொண்டிருந்தன.

கலியாணம் செய்துகொண்டுவிட்டால் நோயாளிகளுக்கு உதவிசெய்ய ஸமயம் வாய்க்காதென்று எண்ணி இவள் கலியாணம் செய்து கொள்ளவே இல்லை. தாதி தொழிலே உத்தமமானது என்று அதில் தேர்ச்சிபெற விரும்பி வைத்திய சாஸ்திரத்தில் அவசியமான ஒரு பகுதியாகிய தாதித் தொழிலுக்கு வேண்டிய புஸ்தகங்களைப் படித்தாள்.

அந்தக்காலத்தில் சிறைச்சாலைகள் இருந்த அலங்கோலத்தைக்கண்டு பரிதபித்து அவைகளைச் சீர்திருத்தும் வழியில் உழைத்த மற்றொரு மாதுசிரோன்மணியான எலிஸபத் ப்ரை என்பவளுடைய தாதி மடத்திற்குப் போய் தன்னுயுட்பெருந்தொழிலை ஊக்கத்துடன் கற்றுவந்தாள். இன்னும்தாதிகளுக்கு முக்கியமாக வேண்டிய படிப்பையும், பயிற்சியையும் ஐரோப்பாவில் பல இடங்களில் போய்க் கற்றுவந்தாள். "ஸ்திரீகளுடைய வாழ்நாளும், அவர்களுடைய தேவையும்" எப்படி

யிருக்கவேண்டுமென்பதைப்பற்றி ஒரு சிறு புஸ்தகம் எழுதித் தனது நோக்கத்தை வெளியிட்டாள்.

ப்ரான்ஸ் தேசத்திற்குச் சென்று அங்கே நோயாளிகளைப் பரிபாலிக்கும் முறையைச் சில ஸந்யாசினிகளிடமிருந்து கற்கும்பொழுது தற்செயலாய் தானே அஸௌக்கியமடைந்து படுக்கையிலிருக்க நேரவே அவர்கள் வியாதிக்காரரைக் காப்பாற்றும் முறையை நன்றாக அறிய நேர்ந்தது.

ஊருக்கு வந்ததும் ஏழைகள் பள்ளிக்கூடங்களைச் சீர்திருத்தும் முறையைக் கற்றறிந்தாள். எங்கே கெடுதல் இருக்கிறதென்று அறிகிறாளோ அங்கங்கே அவைகளை உடனே நீக்க முயலுவது இவளுடைய முதல் காரியம். திக்கற்ற ஸ்திரீகளுக்கென்று ஏற்பட்டிருக்கும் உழைப்புச்சாலைகளில் எஜமானியாகப் புகுந்து எவ்விதத்தில் அவர்களை முன்னுக்குக் கொண்டுவரலாம் என்பதையும் அறிந்தாள்.

நிற்க, 1854-ம் வருஷத்தில் க்ரிமியாவில் இங்கிலீஷ்காரருக்கும் ருஷியாக்காரருக்கும் யுத்தமுண்டாயிற்று. இங்கிலீஷ் வீரர்கள் பொதுவாய்த்தக்க ஆகாரம் இல்லாமலும், உடைகள் இல்லாமலும், பசியினாலும், க்ரிமியா தேசத்துக்குளிரினாலும், வருந்துவதோடு ஆயிரக்கணக்கான காயமடைந்த வீரர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற ஸமாசாரம் இங்கிலாந்துக்கு எட்டியது. இதைக் குறித்து உலகத்தில் பெரிய பத்திரிகையான லண்டனில் நடந்துவரும் “ டைம்ஸ்” பத்திரிகையின் அதிபர் “ க்ரிமியாவில் ஸ்குடேரி ஆஸ்பத்திரியில் போய்க் காயமடைந்த வீரர்களுக்கு முழு மனதுடனும், ஊக்கத்துடனும் உதவிசெய்யும் தாதிகள் நம் நாட்டில் ஒருவரும் இல்லையா ?” என்று கேட்டெழுதி யிருந்தார். இதற்கு உடனே நம் நைடிங்கேல் அம்மாள் தான் போகத் தயாராக இருப்பதாக வெளிப்படுத்தினாள். பயங்கரமான யுத்த களத்திற்குப் போகக் கொஞ்சமேனும் பின்வாங்காமல், தன்னுத்திரவிற்குக் கொஞ்சமேனும் ஆக்ஷேபணையின்றிக் கீழ்ப்படியத் தயாராக இருந்த சில ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்டு க்ரிமியாவுக்குப் போகத் தயாரானாள். இவர்களுக்குக் கவர்ன்மெண்டார் வேண்டிய ஸௌகரியங்களைச் செய்துகொடுத்தார்கள்.

ஸ்குடேரியிலுள்ள ஆஸ்பத்திரியில் இவளை எஜமானித் தாதியாக நியமித்திருக்கிறார்கள் என்றும், அவ்விடத்திலுள்ள வீரர்களுக்காக ஜனங்கள் பணம் உதவி செய்யவேண்டுமென்றும், “ டைம்ஸ் ” பத்திரிகையில் எழுதியது. இங்கிலீஷில் “நைடிங்கேல்” என்ற வார்த்தை இரவில் பாடும் ஒரு அழகான குருவிக்கும் பெயர். விகடப்பத்திரிகையான “ பஞ்ச் ” இந்த அம்மாளை ஒரு பக்ஷிபோல் எழுதி ஒரு காலில் ஒரு தொட்டி ஜலத்தையும், மற்றக் காலில் காயங்களுக்கான மருந்து முதலியவற்றையும் எடுத்துச்செல்வது போல் வரைந்திருந்தது. முதல் முதல் இந்த அம்மாளோடு கூடப்போனவர்கள் 36 பேர். இவர்களுக்கு “ அசுவினி கூட்டம் ” என்று பெயரிட்டார்கள். ருஷியாவுக்குப் போகும் வழியில் 1854-ம் வருஷம் அக்டோபர் மாஸம் 21-ந் தேதி போலோன் என்ற ஊருக்குப்போய்ச் சேர்ந்தார்கள். அங்கிருந்து இந்தப் பரோபகாரிகள் போகும் வழியில் ரயில்வே கூலிக்காரர்கள் கூட இவர்களுடைய ஸாமான்களைத் தூக்கி வைத்ததற்குக் கூலி வாங்கமாட்டோமென்று சொல்லிவிட்டார்களாம். ஹோட்டல்காரர்களும் இவர்களிடமிருந்து சாப்பாட்டிற்குப் பணம் வாங்கமாட்டோமென்று மறுதளித்து விட்டார்களாம்

நவம்பர் மாஸம் 4-ந்தேதி ஸ்குடேரி போய்ச்

சேர்ந்தார்கள். ஒரு பெருங் கட்டிடத்தில் தரையில் வியாதிக்காரர்கள் குவிந்து கிடப்பதையும், அவர்களுக்கு உதவிசெய்ய மனிதரில்லாமல் படுங் கஷ்டத்தையும் பார்க்க இவளுக்கு மனம் ஸகிக்கவில்லை. காயமடைந்த நோயாளிகளுக்குப் படுக்கவாவது, உட்காரவாவது கட்டில், நாற்காலிகள் கிடையாது. அந்தப் பெருங் கட்டிடம் நெடுநாளாய்க் குடியில்லாமல் பூட்டிப் போட்டிருந்தபடியால் இதில் வௌவால்களும், ஆந்தைகளும் குடிகொண்டிருந்தன. எப்பொழுதும் நோயாளிகளின் தேகம், உடை, அழுக்கில்லாமல் சுத்தமாக இருப்பதே அவர்களுக்கு வேண்டிய முதன்மையான மருந்து என்பது நைடிங்கேலின் அபிப்பிராயம். ஆனால் அதுதான் ஸ்குடேரி ஆஸ்பத்திரியில் குறைவாக இருந்தது. காயமடைந்த சிப்பாய்களுக்கு ஆகாரம் முதலியவைகள் தேவையான அளவு வந்திருந்தாலும், அதிகாரிகளுடைய சீர்கேட்டினாலும், ஊழல்களாலும், சரிவரப் பகுத்துக் கொடுக்கப்படாமல் போனதைக் கண்டு அதிகாரிகளைக் கோபித்துத் தானே அவைகளைப் பங்கிட்டுக் கொடுக்கும் வேலையை ஏற்றுக்கொண்டாள். ஆனால் பதினாயிரம் வியாதிக்காரர்கள் இருக்குமிடத்தில் 36 தாதிகள் எவ்வளவுதான் செய்ய முடியும்? ஆயினும் இந்த யுத்தத்தில் முற்பகுதியில் இருந்த அதிகாரிகளுடைய ஊழல்கள்யாவும் இந்த அம்மாளுடைய முயற்சியினாலும், நிரூபங்களினாலும் வெளிவந்தன. இந்த விஷயமாக இவள் கொடுத்த சீர்திருத்தக் குறிப்புகள் மிக்க உபயோக முள்ளனவாயிருந்தன.

நமது அம்மாள் அவ்விடம் செல்லு முன்னமே, காயமடைந்தவீரர்கள் அன்பில்லாத வைத்தியர்களால் ரணவைத்தியம் பார்க்கப்பட்டு, ஆஸ்பத்திரியில் உதவியற்றுக் கிடப்பதைப்பார்க்கிலும், யுத்தகளத்தில் உயிரை விடுவதே நலம் என்று எண்ணியிருந்தார்களாம். ஆனால் இவள் போனபிறகோ இவளால் பிரியமாகப் பாதுகாக்கப்படுவதற்காகவாவது, ஆஸ்பத்திரியில் இருக்கச் சம்மதித்தார்களாம். இந்த அம்மை தனது கஷ்டத்தையும், தேகஸௌக்கியத்தையும் கவனிக்காமல்ஒரே அடியாக 20 மணி நேரம் ஒவ்வொருதினமும் உழைத்து நோயாளிகள் ஒவ்வொருவரிடமும்போய் தேகஸ்திதியை விசாரித்துவிட்டுப் போவது வழக்கமாம். நோயாளிகள் இவள் கையில் விளக்கைப் பிடித்துக்கொண்டு பாதி ராத்திரியில் வரும் வரையில் ஆவலோடு காத்திருந்து அப்பொழுது சுவற்றில் விழும் அவளுடைய நிழலை முத்தமிடுவார்களாம். 1855-ம் வருஷம் பிப்ரவரி மாஸம் 100-க்கு 42 பேர் காயம்பட்டவர்களில் ஆஸ்பத்திரியில் இறந்தார்கள். இந்த அம்மாளுடைய முயற்சியினாலும், பிரியமான பாதுகாப்பினாலும், அநேகர் பிழைத்தார்கள். யுத்தமதிகரித்ததால் காயம்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டவர்கள் ஆயிரக்கணக்காக அதிகரித்தபோதிலும் காயம்பட்டவர்களில் இறப்பவர் வரவரக் குறைந்து கடைசியாக 100-க்கு 2 பேரே இறந்துபோனார்கள்.

இவ்விதம் இவள் தன்னுடைய தேகஸௌக்கியத்தைக்கூட கவனிக்காமல் நோயாளிகளுக்குத்தொண்டுசெய்து வருகையில் இந்த அம்மாளை ஜுரத்தினால் படுக்கும்படி நேர்ந்தது. அப்பொழுதுகூடத் தன்னுடைய நோயாளிகளை விட்டுபோக மாட்டேனென்று சொல்லிவிட்டாள்.

அந்தக்காலத்தில் க்ரிமியா ஆஸ்பத்திரியில் நோயாளிகளுக்கு உணவாகிய மாமிசம் வெளிதேசங்களிலிருந்து வந்துகொண்டிருந்தது. அது அழுகிப்போய்ச் சில ஸமயங்களில்

நினைத்த தோலைப்பார்க்கிலும் கேடாக இருந்தது. உடனே இந்த அம்மாள் நோயாளிகளுக்கென்று சமையல் அறைகள் தயார் செய்து தக்க பரிசாரகர்களை நியமித்து ஸரியான ஆகாரங்கள் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தாள். ஒன்றும் கிடைக்காத யுத்தகளத்தின் நடுவே இவ்வளவு ஏற்பாடு செய்வதற்கு எவ்வளவு சாமர்த்தியம் இவளிடம் இருந்திருக்கவேண்டும்? இதுவுமன்றி ஆயிரக்கணக்கான ஸ்திரீகளும் குழந்தைகளும் உதவியின்றித் திண்டாடுவதைக்கண்டு இந்த அம்மாள் அவர்களுக்கு ஒரு தொழில் சம்பாதிக்க முயன்று நோயாளிகள் உடைகளையும், துணிகளையும், கசக்கித் துவைத்துப்போட ஏற்பாடு செய்ததினால் அவர்கள் தங்கள் தங்கள் சாப்பாட்டிற்குச் சம்பாதிக்க வழி உண்டானதோடு, நோயாளிகளுக்கும் தக்க சுத்தமான உடைகள் கிடைக்க இடமுண்டாயிற்று.

இவ்விதம் உதவிசெய்த இந்த அம்மாளுடைய கீர்த்தி இங்கிலாந்தில் பரவவே யுத்தம் முடிந்ததும் இவளை அழைத்து வரப் பிரத்தியேகமான சண்டைக்கப்பல் ஒன்று கவர்ன்மெண்டாரால் அனுப்பப்பட்டது. இது அவளைக் கௌரவப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டது. ஆனால் இவள் கௌரவத்தை விரும்பாதவளாகி ஒரு ஸாமானிய கப்பலில் ஏறி ஒருவருக்கும் தெரியாமல் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்துவிட்டாள். வந்ததும் இவளுக்கென்று 50,000 பவுன் இங்கிலாந்தில் வசூல் செய்து இவளுக்கு நன்கொடையளித்தார்கள். இதை இவள் தன் சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளாமல், அந்தப் பணத்தைக்கொண்டு தாதிகளைப் பழக்குவதற்காக “நைடிங்கேல் ஆச்ரமம்” என்ற ஒரு தாதிச்சாலையை ஸ்தாபித்தாள்.

இதுவுமன்றி இவள் ராணுவ வைத்திய சாலைகள் ஸ்தாபிக்கும் விஷயத்தில் தன் கருத்துக்களை வெளிப்படுத்தியது ராணுவ இலாகாவிற்குப் பேருபகாரமாக இருந்தது. 1858ம் வருஷத்தில் “வியாதிக்காரர்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய சில குறிப்புகள்” என்ற சில உபயோகமான விஷயங்களைக் கொண்ட ஒரு புஸ்தகத்தை வெளியிட்டாள். வியாதிக்காரர்களுக்குத் தக்க காற்று, வெளிச்சம், சீதோஷ்ண நிலை, தேக சுத்தம், உடம்பை அலட்டிக் கொள்ளாதிருத்தல், ஸரியான பத்தியம் இவைகள் அவசியம் என்பதையும், அவைகளைத்தக்கபடி ஸுலபமாய்த் தேடிக்கொள்ளும் வழிகளையும் எடுத்துக் காட்டினாள். இங்கிலாந்திலும், வெளிநாட்டிலும், பெரிய ஆஸ்பத்திரிகள் கட்டும்பொழுது இந்த அம்மாளுடன் கலந்து யோசித்துத்தான் செய்வது வழக்கம். இந்தியா ஜனங்களின் சுகாதாரம், குழந்தைகள் ஆஸ்பத்திரி, பிரஸவ ஆஸ்பத்திரி இவைகளைப் பற்றியும், இன்னும் இம்மாதிரியான அநேகவிஷயங்களைப்பற்றியும் அதிகமாக எழுதியிருக்கிறாள். உபாத்தியாயர்கள் பல தேசங்களிலிருந்து இந்த அம்மாளிடம் போய்ப் பள்ளிக்கூடங்கள், சாப்பாட்டுச் சாலைகள், இவைகளை நடத்தும் விஷயத்தில் உத்தமமான வழிகளைக் கற்பதுமுண்டு.

இவ்விதமாக அன்பு, ஜீவகாருண்யம், பரோபகாரம், முதலிய நற்குணங்களெல்லாம் ஒருங்குதிரண்டு, உருவெடுத்தாற் போன்ற இந்த அம்மணி வாழ்நாள் முழுவதும் நோயாளிகளையும், காயம் பட்டவர்களையும், திக்கற்றவர்களையும், காப்பாற்றுவதில் தன் மனது, உடம்பு, உடைமை, எல்லாவற்றையும் செலவழித்துக் கடைசியில் போன ஆகஸ்டு௴ 13ம் தேதி மரணமடைந்தாள். இம்மாது சிரோன்மணியின் பூதவுடம்பு இப்பொழுது அழிந்துவிட்ட போதிலும் அவளுடைய எசஸ் இந்த உலகத்தில் என்றும் நிலைத்து நிற்கும் என்பதற்கு ஸந்தேகமில்லை.

எஸ். பஞ்சாபகேச சர்மா.

SELECTIONS.

விசேஷத்திரட்டு.

NEW VARIETIES OF SUGARCANE.

நூதன கரும்பு வகைகள்.

நாட்டுத் தினுசுகளை விட அதிக மாசூல் கொடுக்கக் கூடியதும், மிகவும் தித்திப்பாயிருப்பதுமான அநேக நூதன கரும்பு தினுசுகளை விவஸாய இலாகாதாரர்கள் இந்த ராஜதானி முழுமைக்கும் அனுப்பி அங்கங்கே பயிரிடச் செய்துவருகிறார்கள். இவைகள் தூரதேசங்களிலிருந்து பற்பல காலங்களில் கொண்டுவரப்பட்டன. அந்தந்த இடங்களில் இதற்கு முன்னமே பயிர் செய்யப்பட்டு வரும் கரும்பு தினுசுகளை விட இவைகள் வாஸ்தவத்தில் மேன்மையானவைகள் தானா என்று பார்ப்பதற்காக அவைகளை வெளியே அனுப்புவதற்கு முன்பு ஸர்க்கார்ப் பண்ணைகளில் பயிரிட்டு பரீக்ஷித்தறிந்து கொள்ளுகிறார்கள்.

அனேக வருஷங்களுக்கு முன்னமே மோரீஸ் தீவிலிருந்து கரும்புவகைகளை சென்னைக்கு கொண்டுவந்து அங்கே பயிரிட்டார்கள். அப்பால் அவைகளை இந்த தேசத்திலுள்ள பற்பல இடங்களுக்கும் அனுப்பி, வடக்கே விசாகப்பட்டணம், கோதாவரி ஜில்லாக்களிலும், தெற்கே கோயம்புத்தூர் ஜில்லாவிலுமுள்ள குடிகள் அவைகளைப் பயிரிட்டார்கள். தற்காலத்தில் அங்கங்கே பயிரிடப்படும் நாட்டுக்கரும்புகள் எழுபது வருஷங்களுக்கு முன்பு நூதனமாய்க் கொண்டுவந்து பயிர் செய்யப்பட்ட தினுசுகளின் வம்ச பரம்பரையைச் சேர்ந்தவைகள்தான். ஆனால் இவைகள் நாளடைவில் கேவலஸ்திதியை யடைந்து போனதுமன்றி, அநேகம் நோய்நொடிகளுக்கு உட்பட்டிருக்கின்றன. கோதாவரி ஜில்லாவில் இந்த வியாதியானது ஸர்க்காரில் கவனம் செலுத்தும் படியாய் அவ்வளவு கெடுதியையுண்டாக்கி விட்டது. இதற்கு நிவர்த்தி யேதாவதுண்டாவென்று கண்டு பிடிப்பதற்காக எட்டு வருஷங்களுக்குமுன் ஸாமல்கோட்டாவில் ஸர்க்கார்ப் பண்ணை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. சென்னை ராஜதானியில் எல்லா இடங்களிலிருந்தும், இந்தியாவின் மற்றப் பாகங்களிலிருந்தும், நூதன தினுசுகளைத் தருவித்து அவைகளெல்லாவற்றையும் அந்த ஜில்லாவில் முன்னமேயிருந்த அநேகம் தினுசுகளுடன் சாமல்கோட்டாவில் பயிரிட்டுப் பார்த்தார்கள். அடுத்த வருஷத்தில் விசாகப்பட்டணம் கலெக்டரான மிஸ்டர் கில்மன் துரையவர்கள் மோரீசிலிருந்து நூதனக் கரும்பு தினுசுகளைக் கொண்டுவந்து அந்த ஜில்லாவில் ஒரு தோட்டத்தில் பயிராக்கியிருப்பதாகத் தெரியவந்தது. இவைகளைப் பரிசோதித்துப் பார்த்ததில், அவைகளில் சில தினுசுகள் மிகவும் சிலாக்கியமானவைகளாயிருந்தன. ஆகையால் அவைகளை ஸாமல்கோட்டாவில் பயிரிடுவதற்காகக் கொண்டு போனார்கள். இவைகளை அங்கே அனேக வருஷங்களாகப் பயிர்செய்து வருகிறார்கள். அவைகளில் ஐந்து தினுசுகள் மிகவும் நேர்த்தியானவைகள். ஆகையால் அவைகளை இப்போது அவ்விடத்திலிருந்து பல இடங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

அவைகளின் பெயர்களாவன :—

சிவப்பு மோரீஸ்; மோரிஸ் நாமம்; சாம்பல் நிறமான மோரிஸ்; சிவப்பு விகற்பம்; பச்சை விகற்பம்.

இந்தக் கரும்பு வகைகளை அதிக விஸ்தீரணத்தில் பயிரிடுகிற கோதாவரி தீரத்தில் அடியில்கண்ட காரணங்களால் முன் பயிராகி

வந்த நாட்டுத்தினுசுகளே இப்போது பயிராவதில்லை :—

நாட்டுக்கரும்பை விட இலைகள் பெரிதாய் வளர்ந்து அதிகமான கரும்புகளை உண்டாக்குவதுமல்லாமல் அந்தக் கரும்புகள் கனமானவைகளாகவும் இருக்கின்றன.

இவைகளின் சார் மிகவும் தித்திப்பாயிருப்பதால், வெல்லக்கட்டிகள் பெரியதாயிருக்கின்றன. நாட்டுக் கரும்புகளில் அநேகத்தில் கிடைக்கும் வெல்லத்தைவிட இதன் வெல்லத்தில் மேன்மையான நிறமும் சுவையும் பொருந்தியிருக்கின்றன.

ஜாக்கிரதையுடன் பயிரிட்டால் இவைகளுக்கு நாட்டுக் கரும்பைப்போல அவ்வளவு அதிகமாய் நோய் தாக்குவதில்லை.

இந்தக் கரும்பானது கோதாவரி ஜில்லாவில் துனி, பித்தாபுரம், பெத்தாபுரம், முதலான தாலூகாக்களிலும், விசாகப்பட்டணம் ஜில்லா முழுவதிலும் பயிராவதைக் காணலாம். இவ்விடங்களில் இந்தக் கரும்பின் சாகுபடி அதிகமாய்ப் பரவிவருகிறது. விசாகப்பட்டணம் ஜில்லாவில் 'கில்மன் நாமாலு' என்று பெயர் வழங்கிவரும் நாமக் கரும்புக்கு நோய் தாக்கினால் அது வெகுவாய் நஷ்டமடைந்து போவதால், நோய் நொடிகள் தாக்காத ஜில்லாக்களில் அது ஸாதாரணமாய்ப் பயிராகும் தினுசாயிருக்கலாம். அதன் மாசூல் மிகவும் அதிகம். அதன் வெல்லம் வெகு நேர்த்தியானது. இந்தக் தினுஸு மற்றவைகளை விடத் தண்ணீர்த் தட்டை அதிகமாய்த் தாங்கும் தன்மையுடையது. பம்பாய் அல்லது கொஸ்டா கரும்பு என்று சொல்லப்படும் தினுஸும் அதிகமாய்ப் பயிராய் வருகிறது. அது எல்லாவற்றிற்கும் முன்னால் அயல் தேசத்திலிருந்து கொண்டுவந்த தினுஸுகளில் ஒன்று போலும்.

FIGS.

சீமை அத்தி.

அதிக லாபந்தரும் பழவகைகளில் சீமை அத்திப் பழம் நம் இந்தியா தேசத்திலுள்ள மற்ற எவ்விதப் பழங்களிலும் மேன்பட்டதென்று சொல்ல இடமுண்டு. இதன் உண்மை பல்லாரி, கடப்பை, பெங்களூர், புனா முதலிய இடங்களுக்குப் போனவர்களுக்கு நன்றாய்த் தெரியும். இந்தப் பழத்தின் குணம் உஷ்ண சாந்தியும், ரத்த சுத்தியும் செய்வதோடு, மனித சரீரத்தில் உபாதைக்கு மூலமாகிய துர்மலத்தை வெளிப்படுத்தி, அதாவது மலச்சிக்கலை நீக்கி சுகத்தைக்கொடுப்பதை மேற்படி பழத்தை சாப்பிட்டவர்கள் அறிந்திருக்கலாம்.

மண்.—மணல் கலந்த செம்பாடான பூமி இதற்கு எடுத்தது. கீழ் மண்ணுக்குக்கீழ் சுக்கானிருந்தாலும் அநுகூலமானதென்றே அனுபோகத்தால் தெரியவருகிறது. ஆகவே இப்படிப்பட்ட பூமிகள் இந்த நாட்டில் அநேக இடங்களிலிருப்பதால், குடித்தனக்காரர்கள் இது விபரமறிந்து மேற்படி மரத்தைவைத்து பரீக்ஷைசெய்து விருத்தியடைய முயலுவது அத்யாவசியமானது.

ஜலம்.—மரத்தடியில் ஜலம் தங்கக்கூடாது. இதற்காக மாரி காலங்களில் மரங்களுக்கிடையிலுள்ள பூமிகளில் புஞ்சைப் பயிர் செய்வது வழக்கம்.

விருத்திசெய்வது.—கிளைகளை வெட்டி நிழலில் பதித்தால் வேர் இறங்கும். வெளியூர்களிலிருந்து வெட்டுக் கொம்புகளை கொண்டு வந்து விருத்திசெய்ய விரும்புகிறவர்கள் மேற்படி கொம்பின் வெட்டுப் பக்கத்தை பசுஞ்சாணத்தால் நன்றாய்க் கட்டி நாள் தாமதமன்றி கொண்டுவந்து வைத்துப் பயிர் செய்யலாம். ஆரம்பத்தில் 2 மடங்கு மண்ணும், 6 மடங்கு மல எருவாவது அல்லது மட்கின ஆட்டெருவாவது கலந்து ஒரு கூடைக்குள்ளிட்டு மேற்படி வெட்டுத்துண்டை இதற்குள் நட்டு தண்ணீர் ஊற்றிவர வளர்ச்சியுண்டாகும். பிறகு மேற்படி கூடையை தயாரித்த ஒரு குழியில் வைத்து மேற்படி குழியை மணல் எரு, பன்றி எரு, முதலிய எருக்களினால் மூடி நீர் பாய்ச்சி வரலாம். இன்னும் மேற்படி செடியை சிறு கன்றுகளினாலும், பதியத்தாலும் பயிர் செய்யலாம். இதைப்பற்றி வேண்டிய விபரம் தெரிந்துகொள்ள விருப்பமுடையவர்கள் புதுக்கோட்டை விவஸாயப் போதகருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம். ஆகஸ்டு, ஸப்டம்பர் மாஸங்களில் வளர்ந்த கன்றுகளை பூமியில் நடவேண்டும்.

வெட்டுக் கோத்து முதலியன.—மாதத்திற்கொருமுறை மண்ணைக் கொத்துவது நலம். இல்லாவிட்டால் வருஷத்திற்கு இருமுறை ஸப்டம்பர், பிப்ரவரி மாஸங்களில் கொத்தி பல தினுசு எருக்கள் கலந்த எருவையாவது, பல எருவையாவது, அல்லது மட்கின ஆட்டெருவும், மாட்டெருவும் கலந்த எருவையாவது, வைக்க நல்ல விளைவு கிடைக்கும்.

பலன்.—இந்த மரம் வருஷத்திற்கு இருமுறை காய்க்கும். ஜூலை, ஸப்டம்பரில் ஒரு மகசூலும், பிப்ரவரியில் மற்ற மகசூலும் கிடைக்கும். மாதத்திற்கு 500 பழத்திற்குக் குறையாமல் கிடைக்கும். பல்லாரி வகையரா இடங்களில் ஸாதாரணமாக மாதத்திற்கு 10 ரூ கிடைக்கிறதாகத் தெரியவருகிறது ஒரு ஏகரா நிலத்தில் 12 அடிக்கு ஒரு மரமாக 300 மரங்கள் நட்டுப் பயிர் செய்யலாம். ஆகையால் காடாரம்பமான இந்த புதுக்கோட்டை நாட்டுக்குடிகள், முக்கியமாய் கிணறுள்ள சிறுதோட்டங்களையுடையவர்கள், மேற்படி மரத்தை வைத்துப் பயிர் செய்து, மாரியில்லாமையினுடைய கொடுமையை நிவர்த்தி செய்து கொள்வதோடு பெரும்பயனையும் அடைவார்களென்று நம்புகிறோம்.—புதுக்கோட்டை விவஸாய அபிவிருத்திசபையின் பத்திரிகை.

THE ILUPPAI TREE.

இலுப்பை மரம்.

—:o:—

முன்னுரை.—நமது இந்தியாவில் பலன் தரும் மரங்களுள் இலுப்பை மரம் ஒன்று. இது பாலுள்ள வகையைச் சேர்ந்தது. இது நீண்ட காலமாயுள்ளது. இந்த மரம் தக்க பலனைக் கொடுக்கக்கூடியது. இது நமது சென்னை ராஜதானியிலும் இதன் சுற்றுப் பக்கங்களிலும் விசேஷமாயுள்ளது. தமிழ்ப்புஸ்தகங்களில் இந்த மரம் இருப்பையென்று வழங்கப் பட்டிருக்கிறது. இதுவே இதின் இயற்பெயரென்று கொள்ளவேண்டும். இருப்பையென்பது இலுப்பை யெனத் திரிந்து இந்தக் காலத்தில் வழங்குகிறதென்றும் கூறலாம்.

பூமி —வெண்மணல் பாங்கான பூமியும், சற்றுக் களிப்புள்ள இருமண் பூமியும், இது பயிர் செய்வதற்கு மிக உரித்தானவை. புன்செய் பெருத்த இடங்களே இதற்குச் சிறந்தது. அல்லாமலும் கடற்கரையோரங்களில் இந்த மரங்கள் செவ்வையாக வளர்ந்து நல்ல பலனைத் தருகின்றன.

பயிர் செய்தல்.—முப்பத்திரண்டடிக்கு ஐந்தடியாழம் குழி தோண்டி இதில் தழை முதலிய எருப்போட்டு, குழி யொன்றுக்கு ஒரு கொட்டை வீதம் ஆடி அல்லது தை மாஸத்தில் போட்டுத் தண்ணீர் விட்டுக்கொண்டு வரவேண்டும். ஆடு, மாடு முதலியவை இந்தக் குழியை மிதித்துக் கெடுதி செய்யாமல், 6 அடி உயரம் வேலியினால் கூண்டுகட்ட வேண்டியது. விதைபோட்ட ஒருவாரம் வரையில் தினமும், பின் ஒரு மாஸம் வரையில் மூன்று நாளைக்கு ஒரு தினமும், பின் வாரத்திற்கு ஒரு முறையும் தண்ணீர் விடவேண்டும். இவ்வரையறை யின்றி மழை பெய்த காலத்தில் நிறுத்தியும், வெயில் காய்ந்த காலத்தில்

அடிக்கடியும் தண்ணீர் விட்டுக்கொண்டு வர வேண்டும். மூன்று வருஷம் வரையில் செவ்வையாய்க்கவனித்து வந்தால் மரம் சற்று உயர்ந்து ஆறு, ஏழு அடி வளர்ந்து கிளைகளும் நாலா பக்கத்திலும் பரவும். மரம் கூண்டுக்கு மேல் கிளம்பி விட்டால் பின்பு இதற்கு அவ்வளவு கண் பார்வை தேவையில்லை. கோடை காலத்தில் மாத்திரம் தண்ணீர் ஊற்றிக் கொண்டு வந்தால் போதுமானது. இப்படி இந்தப் பயிரை நன்கு கவனித்து வந்தால் அதிக செழுமையாக வளர்ந்து பலனை சீக்கிரத்தில்கொடுக்கும். காடுகளிலும் மலையைச்சார்ந்த இடங்களிலும் இந்த மரங்கள் பெருங்கூட்டங்களாக வளர்கின்றன. அம்மரங்கள் நூறு வருஷத்திற்குமேல் அழியாமல் நிற்கும். இருபது அல்லது இருபத்தைந்து அடி உயரம் ஒரே ஒழுங்காய் வளர்ந்து, பின்பு அதிலிருந்து பெரிய கிளைகள் நாலா பக்கங்களிலும் பரவும். இந்த மரங்களின் சுற்றளவு பத்தடிமுதல் இருபதடி வரையிலிருக்கும். நீண்ட காலத்து மரங்கள் இதைப்பார்க்கிலும் சுற்றளவுள்ளவைகளாக இருக்கும். இது சித்திரை, வைகாசி மாஸங்களில் பூத்து, அற்பசி, கார்த்திகை மாஸங்களில் பழுக்கும். இந்த இரண்டு மாஸங்களிலும் பழம் விழுந்துகொண்டே யிருக்கும்.

பயிரிடும் நிலத்தின் எல்லை.—உதாரணமாக 100 குழி நிலம் எடுத்துக் கொள்ளுவோம். இதில் இருபத்தைந்து மரத்திற்குக் குறையாமலும் முப்பது மரத்திற்கு அதிகப்படாமலும் பயிர் செய்யவேண்டியது.

செலவு.—நிலத்தின் சொந்தக்காரர் கொஞ்சம் கண்காணித்து வந்தால் செலவு மிகக் கொஞ்சமாகவே அடங்கும். தாராளமாய் செலவுசெய்து பயிர் செய்தாலும் இது பலன் தரும் வரையில் ரூ. 150-க்கு மேலாகாது.

மராமத்து.—வருஷா வருஷம் ஆடி, தை இந்த இரண்டு மாஸங்களிலும் மரத்தைச்சுற்றி 5 அல்லது 6 அடி ஆழம் கொத்தித் தழை, மாட்டெரு, உமி, பதர் முதலியவைகளை எருப் போட்டு பாத்தி கட்டி வைக்கவேண்டும். இவ்வித மராமத்து பெரிய மரங்களுக்குச் செய்ய வேண்டியது. இப்படிச் செய்வதினால் மழை காலத்தில் தண்ணீர் நின்று இந்த எருக்களின் ஸாரம் அடிவேர்களில் உரைப்பதினால் மரத்திற்கு பலமும், நல்ல பலனும் கொடுக்க ஹேதுவுண்டு.

இலை—இலைகளை வதக்கிக் கால் வீக்கத்திற்கும், வாயுவுக்கும் வைத்துக் கட்டினால் அந்த வியாதிகள் குணமாகும். ஆட்டுக்கு நல்ல தீனி. கழனிகளுக்கு நல்ல எரு.

பால்.—வீக்கத்திற்கும், வாயுவுக்கும் போட்டால் குணமாகும். அல்லாமலும், கண்வலிக்கு இந்தப்பாலை கண்ணைச்சுற்றிலும் புருவம் முதலான இடங்களில் தடவினால் குணமுண்டு. உழவர் முதலிய கீழ்ஜாதி மக்கள் இதைக் கையாடி வருகிறார்கள்.

பூ:—கீழ்ஜாதி மக்கள் இந்தப்பூவை அதிகமாகப் பொறுக்கிக்கொண்டுபோய் வெயிலில் காயவைத்து, வெல்லப்பாகு செய்து இதில் அதைக்கொட்டிக் 'கிண்டி விலிக்கட்டி.' எனப் பெயர் பெறும் ஓர் விதமான உருண்டைப் பக்ஷணஞ் செய்துண்டு வருகிறார்கள். இந்தப் பூவை தேள்கடிக்கு அரைத்து கடிவாயில் உபயோகப்படுத்துகிறார்கள்.

பழம்:—இவ்வாறு வைத்த மரங்கள் ஏழு வருஷத்தில் காய்ப்புக்கு வரும். காய்ப்புக்கு வருவது அதன் செய்நேர்த்திக்குத் தக்கவாறுண்டு. இந்தப்பழத்தின் தோலை ஏழை ஜனங்கள் உண்டு வருகிறார்கள். பெரிய வெளவால் கூட்டம் கூட்டமாக வந்து இரவில் வீழ்ந்து பழங்களைத் தின்று கொட்டைகளை நாலு பக்கங்களிலும் போடுகின்றன. இதனால் இம்மாசூல் கெடுதியுண்டாகிறது. இதைத் தடுக்க பெரிய வலைக்கட்டி வெளவாலை பிடிக்கிற வழக்கமுண்டு. காக்கைகளும் இப்பழத்தையுண்டு கொட்டைகளை வெவ்வேறிடங்களில் போடுகின்றன. இம்மாசூல் காலத்தில் ஒரு மைல் அல்லது இரண்டு மைலுக்கு அப்பாலும் கொட்டைகளிருப்பதை நாம் பார்க்கிறோம்.

கொட்டை.—தோலை நீக்கிக் கொட்டைகளைப் பொறுக்கி வெயிலில் காயவைத்து அடித்து அதன் ஓட்டைப் போக்கிப் பருப்பு எடுத்து நன்றாய் எண்ணெய் கசிவுண்டாகும் வரையில் காயவைத்து பின்பு செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கிறது வழக்கம்.

எண்ணெய்.—இந்த எண்ணெய் விளக்கு எரிவதற்கும், பலகாரபக்ஷணங்கள் செய்வதற்கும் உபயோகப்படுகிறது. இது நெய்மாதிரியுரையுந் தன்மையுடையது. தேகத்திற்கு யாதொரு விதமான கெடுதியும் செய்யாது. தேகத்திற்கு ஸௌக்கியமே.

வருமானம்.—இப்படி கண்காணித்து வந்த மரம் ஒன்றுக்குக் குறைந்தது இரண்டு ஆடப் பருப்பு காணும். ஆடம் ஒன்றுக்கு ரூபா 6 முதல் ரூபா 8 வரைக்கும்விற்கிறது. உத்தேசமாய்க் கணக்குப் பார்க்கின் மரம் ஒன்றுக்கு பொறுக்குக் கூலி முதலிய செலவுபோக ரூபா 10 தடையின்றிக் கிடைக்கும். 25 மரங்களுள்ள 100 குழி புன்செய் நிலத்திற்கு வருஷா வருஷம் ரூபா 250 கிடைக்கும்.

பிண்ணாக்கு.—இதன் பிண்ணாக்குக்கு அரப்புக் கட்டியென்று பெயர். இதற்கு எண்ணெயைப் போக்கும் குணமுண்டு. இக்காரணம்பற்றியே நம் நாட்டு ஜனங்கள் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் அதைப்போக்குமாறு அரப்புத் தேய்த்து ஸ்நானஞ் செய்கிறார்கள். அல்லாமலும் வாழை முதலிய மரங்களுக்கு எருவாகவும் உபயோகப்படுகிறது.

மரம்.—மிகவும் அழுத்தமுள்ளது. உத்தரம், தூண் முதலியவைகளுக்கு உபயோகமாகிறது. தேக்க மரத்திற்கு இரசற்குணமுண்டு இம்மரத்திற்கு அக்குணமில்லை. சீக்கிரத்தில் மடித்துப்போகிற தன்மையும் இதற்குக்கிடையாது. இம்மரத்தை உத்திரம் முதலியவைகளுக்கு உபயோகித்து வீடு கட்டினால், அவ்வீடு வலிமையுடையதாய் நீண்டகாலம் இருக்கிறது. அல்லாமலும்செக்குக்கு உலக்கையாகவும் உபயோகப்படுகிறது.

"விவேகபோதினி."

KASAVARGAMDARS.

காசாவர்க்கத்தார்கள்.

◆

காசாவர்க்கத்தார்கள் சம்பந்தமாய் ஹைகோர்ட்டில் இப்போது அப்பீலில் பெண்டிங்கிலிருக்கும் ஒரு தாவாவை ஸரிவர முடிவு செய்யும் பொருட்டு மேற்படி ஹைகோர்ட்டார், தஞ்சாவூர் ஜில்லா ஜட்ஜை தஞ்சை ஜில்லாவில் காசாவர்க்கத்தார்களுடைய அனுபோகங்கள் எப்படியிருக்கின்றன என்பதை விசாரித்து ரிபோர்ட் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதின் பேரில் மேற்படி ஜட்ஜ் இந்த ஜில்லாவிலுள்ள சில தக்க மிராசுதார்களுக்கு ஸம்மன் அனுப்பி விசாரித்தார். அவர்களில் நாளது மாஸம் 24-ந்தேதியில் திவான் பகதூர் ரகுநாத ராயர் அவர்கள் அது சம்பந்தமாய் ஜட்ஜி அவர்கள் முன்பாக எழுதி வைத்த வாக்குமூலம் பின்னால் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

(கோர்ட்டார் கேள்விகளுக்குப் பதில்):—என்னுடைய பெயர் ரகுநாத ராயர். என் தகப்பனார் பெயர் வெங்கட்ட ராயர். எனக்கு 80 வயது. நான் கும்பகோணத்தில் வசிக்கிறேன். எனக்குப்பென்ஷன் உத்தியோகம். நான் ரெவினியூ உத்தியோகஸ்தனாயும், ராஜாங்க நிர்வாகியாயுமிருந்ததுடன் மிராசுதாராயுமிருக்கிறேன். சுமார் 1,000 ரூபாய் வரையில் ஸர்க்காருக்கு வருஷம் ஒன்றுக்கு கிஸ்தி செலுத்துகிறேன். நான் ரெவினியூ உத்தியோகஸ்தனாயிருந்தபொழுது நாகப்பட்டணத்திலிருந்து திருச்சினாப்பள்ளி வரையில் தென் இந்தியா ரயில்வேக்காரருக்காக நிலங்கள் வாங்கிக்கொடுத்தேன். அதில் காசாவர்க்கம் சம்பந்தமான நிலங்களும் அடங்கியிருந்தன. அப்படி வாங்கின காலத்தில் நிலத்தினுடைய கிரயத்தைச் சொந்தக்காரர்களுக்கும், மேல்

கட்டிடத்தின் கிரயத்தை, அதைக் கட்டிக்குடியிருக்கப்பட்டவர்களுக்கும் கொடுத்தேன். ஒருவரும் புகார் செய்யாமலும் அப்பீலுக்குப் போகாமலும் எல்லாரும் திருப்தியடைந்தார்கள். சுமார் 50 அவார்டுகள் நான் செய்திருக்கலாம் கலெக்டர் ஆபீஸ் ரிகார்டைப் பார்த்தால் எவ்வளவென்று தெரியும். "தனக்குச் சொந்தமில்லாத நிலங்களில் வீடு கட்டிக் குடியிருக்கப்பட்டவர்களுக்கு காசாவர்க்கத்தார்கள் என்று பெயர்."

என்னுடையதான கோயிலடி கிராமத்தில் எண்மனையில் குடியிருந்த சுமார் ஆறு பேர்களை மனையை விட்டு வெளிப்படுத்த வேண்டியதாயிருந்தது. ஹைகோர்ட் வரையில் தாவாக்களும், அப்பீல்களும் சென்று எல்லாம் எனக்கு அனுகூலமாகவே முடிந்தன. நான் என்னும் வார்த்தையை என்னுடைய அவிபக்த குடும்பமென்னும் தாத்பர்யத்துடன் உபயோகிக்கிறேன். நான் உள்பட எனக்கு சகோதரர்கள் 3. காசாவர்க்கம் நிலங்களில் குடியிருந்தவர்கள் செய்துவந்த தொந்தரவினால் அவர்களிடமிருந்து பகுதிச் சீட்டு வாங்கிவிட்டேன். அவர்கள் கொடுப்பதாய்க் கண்ட வாடகையோ வெகு சொற்பம். அதாவது ஒரு வருஷத்திற்கு ஒரு அணா. அதோடு எங்களுக்கு வேண்டிய ஊழியமும் அவர்கள் செய்யவேண்டியவர்கள். தச்சன், கொல்லன், சாணான், பரியாரி, காவல்காரன், சக்கிலியன் முதலியவர்களைப் போலொத்த தொழிலாளிகளுக்கும் வாடகை ஏற்பட்டிருந்தால் அதைச் செலுத்துவதுடன் அவர்களிடமிருந்து கிராமத்தாராலேயோ, அல்லது குறிப்பிட்ட மிராசுதாராலேயோ ஏவப்பட்ட தொழில் சம்பந்தமான வேலைகளையும் அவர்கள் செய்யக் கடமைப்பட்டவர்கள். பரியாரியைப் போலொத்தவர்கள் பக்கங்களில் பெற்றுக்கொள்ளும் கூலியைக் காட்டிலும் குறைத்துக்கொடுக்க எனக்குப் பாத்தியமிருக்கிறது. ஆனால் அப்படி நான் குறைத்துக் கொடுக்காமல் ஜாஸ்தியாகவே கொடுக்கிறேன். மரமேறிகளும் அவ்வாறே சொற்ப வாடகையைச் செலுத்துவதுடன் பந்தல் போடுவது, பந்தம் தயார் செய்வது, கூந்தல் தயார்செய்வது முதலியவைகள் போலொத்த தொழில்களையும் செய்யவேண்டியவர்கள்தான். அவர்கள் எப்பொழுது தொழில் ஸரிவரச்செய்யவில்லையோ, சொன்னபடி கேட்கவில்லையோ, தொழிலை செய்யத் தெரியவில்லையோ, செய்யச் சாத்தியமில்லையோ, அல்லது தாங்கள் வசிக்கும் நிலத்தினுடைய பாத்தியம் தங்களுக்கு என்று பாத்தியம் கொண்டாட ஆரம்பிக்கிறார்களோ, அப்பொழுது மாத்திரம் மனைகளிலிருந்து அவர்களை விலக்குவது வழக்கமே தவிர, வெகு நேர்த்தியான வேலை தெரியவில்லையென்றாவது, வேறு எந்த ஸாமான்யமான காரணங்களுக்காவது நாங்கள் விலக்குவதில்லை.

அவர்கள் வேலை செய்ய லாயக்காயிராமலிருந்தாலும் அல்லது சந்ததிகள் வேலை செய்யக்கூடிய ஸ்திதியில்லாமலிருந்தாலும் அப்பொழுது வேறு யாரையாவது நாங்கள் ஏற்படுத்துவது வழக்கமுண்டு. சந்ததி பெண்ணாயிருந்தால் அவள் வேலை செய்தாலும் சரி, கலியாணம் பண்ணிக்கொண்டு புருஷனைக் கொண்டு செய்வித்தாலும் சரி, அல்லது யாரைக்கொண்டாவது எங்களுக்கு ஊழியம் ஒழுங்காய் செய்து கொண்டுவரும் வரையில் புத்திர பௌத்திர பாரம்பரையாய் நிலத்திற்குச் சுவான் பாத்தியமின்றி அனுபவித்து வரலாம். பங்குவழி கிராமங்களிலெல்லாம் காசாவர்க்கம் நிலங்கள், மனைக்கட்டுகள் உண்டு. பங்கு வீதப்படி ஒவ்வொரு மிராசுதாருக்கும் மனைக்கட்டுகளிலும், பொது வடைகளிலும் விதங்களுண்டு தொழிலாளிகள் தங்கள் மிராசுதார்களுக்குச் செய்யவேண்டிய தொழிலைச் செய்து விட்டு பாக்கி நேரங்களில் பக்கங்களில் வேலை செய்து சம்பாதித்துக் கொள்வதில் எங்களுக்கு யாதொரு ஆக்ஷேபமுமிராது. நான் குத்தகைச் சீட்டு வாங்கிய பிறகு காசாவர்க்கம் குடிகள் எனக்கு இல்லை. கோர்ட்டுக்குப் போய் அதன் மூலமாய் குடிகளை வெளிப்படுத்தும்படி எனக்குநேரவில்லை. காசாவர்க்கம் என்ற பதமானது காரணம் என்று பொருள் படுகிற "காசா" என்ற மஹாராஷ்ட்ர வார்த்தையாலும், வகுப்பு என்று பொருள் படுகிற 'வர்க்கம்' என்கிற ஸமஸ்க்ருத வார்த்தையாலும் அமையப் பெற்றது."

கிராமங்களில் பைமாஷ் காலம் முதல் நாளது வரையில் ஒவ்வொரு நம்பரும் அடைந்திருக்கிற மாறுதலைக் கண்டு தன்னால் தயாரிக்கப்பட்ட ஒரு படத்தையும் ஜட்ஜயவர்களிடம் கொடுத்துப் பின்னும் மிராசுதார்களுக்கு ஸாதகமான சில விஷயங்களையும் எழுதி வைத்தார்கள்.

சுதேசமித்திரனில் வ. ராமய்யர்.

CONSERVATION OF CATTLE URINE.

மாட்டு மூத்திரத்தை எருவாய் உபயோகிக்கும் விதம்

◆

மாட்டு மூத்திரம் எவ்வளவு நல்ல உரம் என்று அறியும்பொருட்டு மத்திய மாகாணத்து விவஸாய டிப்பார்ட்டுமெண்டார் சோதனைகள் செய்ததில் அது மிகவும் சிறந்ததென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு எருதின் மூத்திரத்தை சில பக்குவங்கள் செய்து சேகரித்தால், அது அந்த எருது அதே காலத்தில் போட்ட சாணியைவிட மேலான உரம் என்று தெரிகிறது. முன் சொன்ன சோதனைகளில் மாட்டு மூத்திரத்தைக் காப்பாற்றுவதற்குப் பின்வரு முறையை அனுஸரித்தார்கள்:—

தொழுவின் தளத்தில் மண் சிதறுண்டு போகாதபடி நாலுபக்கமும் ஆறங்குல உயரமுள்ள பலகைகளை அணைத்து அது நிறைய உலர்ந்த கொழி மண்ணை (தெள்ளுமண்) போடவேண்டும். இந்த மண், மூத்திரத்தை கிரகித்துக் கொண்டு நைட்ரோஜன் என்னும் உப்புவாயு வெளிப் போகாமல் நிறுத்திக்கொள்ளுகிறதினாலே, மிகவும் சிறந்த எருவாகிறது. மண்வெட்டி அல்லது வேறு ஒரு கருவியைக் கொண்டு, இந்த மண்ணின் மேல் மட்டத்தை தினசரி கிளறிக்கொடுத்து பொலு பொலுவென்று புழுதி கிடக்கும்படி வைத்திருக்க வேண்டியது. இந்தப்படி கட்டுத் தரையில் ஒரு மாஸம் இருந்த பிறகு, இந்த மண்ணை ஒரு குழியில் போட்டு வைக்கவேண்டியது. அல்லது நிலங்களில் பரப்பிவிடவேண்டியது. பின்பு கட்டுத்தரையில் திரும்பவும் புதிதாய் மண் போட்டுவிடவேண்டும். இந்த முறையை சற்று மாற்றிக்கொண்டால் இந்த ராஜதானியிலும் எளிதாய்க் கையாடலாம். கால் நடைகளை குடியிருக்கும் வீட்டுக்குள் கட்டிக்கொள்ளும் வழக்கமிருக்கும் பல்லாரி, கர்நூல், கடப்பை ஜில்லாக்களிலும், மற்ற இடங்களிலும், இந்த முறை வழக்கத்துக்கு வந்து விட்டால் குடிகளுக்கு அதிக ஸௌக்கியம் உண்டாகும். இந்தப்படி செய்வதினால் தரையிலிருந்து துர்நாற்றம் வீசாமல் குடிகளும், கால் நடைகளும் நோயில்லாமல் ஸௌக்கியமாயிருப்பதோடுகூட, இந்த விஷயமாய் எடுத்துக்கொள்ளும் சிரமத்துக்குப் பதிலாக நல்ல ஸத்துள்ள உரம் கிடைக்கிறது. திருநெல்வேலியிலும், மதுரை, கோயம்புத்தூர் ஜில்லாக்களில் சில இடங்களிலும், இவைபோன்ற பல இடங்களிலும் ஏற்கெனவே மாட்டெருவை பாது

காப்பதில் விசேஷ கவனம் செலுத்தி வருகிறார்கள். எருவை குழிகளில் போட்டு வைத்திருந்து ஏறக்குறைய வாரத்துக்கொருதடவை மண்ணையாவது, குளத்து வண்டலையாவது கொஞ்சம் போட்டு மூடிவைக்கிறார்கள். எரு அதிகமாய் உலர்ந்துபோகாதபடி சிலர் தண்ணீர் விட்டும் வருகிறார்கள். மேலே சொன்ன மண் அல்லது வண்டல் மண்ணை குப்பைக் குழியில் போடுவதற்குப் பதிலாக மணல்சாரியான மண்ணை தொழுவின் தளத்தில் போட்டு முன்னே சொன்ன விதமாய் மூத்திரத்தை உள்கொள்ளும்படி செய்தால், கிடைக்கிற எருவுக்கு இரட்டிப்பு ஸத்துண்டாகும். மேல் சமுத்திரக்கரையை ஒட்டிய நாடுகளில் தென் கன்னடம் ஜில்லாவில் மாட்டு மூத்திரத்தையும், எருவையும் பாதுகாக்க ஒரு சிலாக்கியமான முறை ஏற்கெனவே இருந்து வருகிறது. தரைக்கு சுமார் 3 அடிக்குக் கீழே பள்ளத்தில் மாட்டைக் கட்டுகிறார்கள். இதில் விழும் சாணியை எடுக்காமல் காட்டிலிருக்கும் பச்சை இலை குழைகளைக் கொண்டுவந்து தினசரி அது மறையும்படி போட்டு மூடுகிறார்கள். இந்தப்படி குழிநிறையும் வரையில் போட்டு வருவார்கள். நிறைந்ததும் குழியைக் காலிசெய்து எருவை நிலங்களுக்குக் கொண்டுபோய்ப் போடுவார்கள். அல்லது நேர்த்தியாய் ஒரு இடத்தில் குவித்து வைப்பார்கள். காட்டுக் குழை (தழை) கிடைத்துக்கொண்டு வரும் வரையில் இதைக்காட்டிலும் சிலாக்கியமான பக்குவம் ஒன்றுமில்லை. அநேகமாய் எல்லாக் காலத்திலும் குழை கிடைக்கிற தில்லை. கோடைகாலத்தில் பசுந்தழை கிடையாததால் அப்பேர்ப்பட்ட இடங்களில் உலர்ந்த மண்ணைப்போட்டு மூத்திரத்தைக் கிரகிக்கச் செய்யும் உபாயத்தைக் கையாடலாம். மலையாளத்தில் ஸாத்தியப்படும் இடங்களில் பசுந்தழையை கால் நடைகளுக்கு விரிப்பாக உபயோகப்படுத்தும் தென்கன்னடத்து வழக்கத்தை அநுசரிக்கலாம். பசுந்தழை கிடையாத கடற்கரையை அடுத்த இடங்களில் உலர்ந்த மண் போடும் உபாயத்தைச் செய்து பார்க்கலாம். மலையாளத்தில் எருவை சேகரிக்கும் முறை ரொம்ப சீர்கேடாயிருக்கிறது. வருஷத்தில் அநேக மாஸங்களில் எரு குழம்பு போலிருந்து வெயிலிலும், மழையிலும் கிடக்கிறதினாலே உரத்திலுள்ள ஸத்தையெல்லாம் தண்ணீர் அடித்துக்கொண்டுபோய் விடுகிறது. மழை காலத்திலும், மழைக்குப் பின்னிட்டும் அபரிமிதமாய் உண்டாகும் இலைகளையும், கிளை, கொம்பு, செடி, செத்தைகளையும் இத்துடன் சேர்த்தால் எல்லாம் கலந்து இறுகிப்போகும். உலர்ந்த மண்போட்டு மாட்டு மூத்திரத்தைச் சேகரிக்கும் முறையை அநுஸரிப்பதால் கிடைக்கிற உலர்ந்த மண்ணை சாணியோடு போட்டால் நாளாவட்டத்தில் எல்லாம் ஒன்று சேர்ந்துகொள்ளும். தஞ்சாவூரிலும் வேறுபல கீழ் ஸமுத்திரக்கரையிலுள்ள ஜில்லாக்களிலும் கால் நடைகளைக் கட்டுவதற்கு அதிக சிரமப்பட்டு வஸதியான இடம் ஏற்படுத்துகிறார்களே யொழிய அவைகளின் மூத்திரத்தைப் பத்திரப்படுத்த சற்றும் பிரயத்தனம் செய்கிறதில்லை என்று தெரிகிறது. அதைத்தொழுவின் இறுகின தரையில் சுவறும்படி விட்டுவிடுகிறார்கள். அல்லது கிராமத்துத் தெருக்களில் ஆபாசமாய் ஓடவிடுகிறார்கள். மத்திய மாகாணங்களில் வழக்கத்திலிருக்கிறபடியும், மேலே விவரித்தபடியும் உலர்ந்த மண் போட்டு மூத்திரத்தைப் பாதுகாக்கும் முறைகளை இங்கும் தாராளமாய் அநுசரிக்கலாம். அநுஸரிப்பதால் முன்னிலும் ஜாஸ்தி எருக் கிடைத்து விளைவும் அதிகரிக்கும்.

எச். ஸ. ஸாம்ஸன்,
விவஸாய டிப்டி டைரக்டர்.

REVIEW OF THE PRESS.
பத்திரிகை ஆராய்ச்சி.

ADVICE TO SMOKERS.
சுருட்டுப் பிடிப்பவர்களுக்குப் போதனை.

ஆகஸ்டு மாஸத்து "பிரஜானுகூலன்" பத்திரிகையில் இந்த விஷயமாக ஒரு சிறு வியாஸம் காணப்படுகிறது.

(1) சுருட்டு பிடிப்பவர்கள் காலை போஜனம் சாப்பிடாமலாவது, வெறும் வயிற்றோடு இருக்கும்போதாவது, சுருட்டுப் பிடிக்கக்கூடாதென்பதைப் பிரமாணமாகக்கொள்ளவேண்டும்.

(2) சரீரப்பிரயாஸையான ஆட்டம், பாட்டம், ஓட்டம், பைஸிகில் ஸவாரி, தண்டுவரித்தல், முதலிய நேரங்களில் சுருட்டு உபயோகிக்கக்கூடாது.

(3) ருஷியரும், பிரான்ஸியரும் அனுசரிக்கிற கெட்ட வழக்கத்தைப்போல் புகையை மூக்கின் வழியாய் விடக்கூடாது.

(4) கண்ணிலும், மூக்கிலும் புகைபடாதபடி சுருட்டுக்குழாயை நீளமாய் வைத்துக்கொள்ள வேண்டும். சிறு குழாயை உபயோகிக்கக்கூடாது.

(5) சுங்கான் பிடிப்பது முதன்மையும், அதற்கடுத்தது சுருட்டும், மிகக்கேடானது ஸிகரெட்டுமாம்.

(6) ஒரு சுருட்டில் 5-ல் நாலு பாகத்தை பிடித்தவுடன் மிகுதியை எறிந்துவிடவேண்டும்.

(7) சுருட்டின் நுனிப்பாகம் மிகத் தீமையானது என்பதையும், அதில் விஷமிருக்கிறதென்பதையும், ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

(8) ஸிகரெட்டுகளே பொதுவாய்க் கெட்டவை. அதிலும் கீழ்நாட்டு ஸிகரெட்டுகள் மிகவும் கெட்டவை.

(9) சுருட்டுப் பிடிப்பவர்கள் எப்போதும் வாயைக் கழுவ வேண்டும். சாப்பிடும் போது மட்டுமல்ல. படுக்கும்போதும், மத்தியான நேரங்களிலும் கூட பலதரம் கழுவவேண்டும். அப்படிக்கழுவும் ஜலத்தில் ஒரு கரண்டி சுத்தி செய்த உப்புப் போட்டுச் சுத்தமாய்ப் பல்லிடுக்கு முதலிய இடமெல்லாம் நன்றாய்க்கழுவிக் கொப்பளித்து உமிழவேண்டும்.

(10) சுருட்டை அதிகநேரம் வாயில் வைத்திருக்கக்கூடாது.

CONDUCT TOWARDS CHILDREN.
குழந்தைகளுடன் நாம் பழகும் முறை.

இந்த விஷயமாக அக்டோபர் மாஸம் வெளிவந்த "பூரண சந்திரோதயம்" என்னும் பத்திரிகையில் சிவராம சுப்பிரமணியம் என்பவர் ஒரு சிறு வியாஸம் எழுதியிருக்கிறார்.

குழந்தைகளோடு பழகும்போது நாம் கொஞ்சமும் கோபம் காட்டக்கூடாது. கோபத்தை வெளிக்குக் காட்டாமல் மனதுக்குள் அடக்கிவைத்திருந்தாலும் அந்தக்கோபம் குழந்தைகளுக்குக் கொடுமையைச்செய்யும். ஒரு குளத்தில் சிறு கல்லைப் போட்டால் எவ்விதம் அலைகள் பெருகிக்கொண்டே போகின்றனவோ அவ்விதமே கோபம் நம்முடைய மனதில் அலைகளை உண்டாக்கும். அந்த அலைகள் குழந்தைகளின் மனதைத்தாக்கி தீமையை உண்டாக்கும். குழந்தை என்றால் இளம்பயிர். இளம்பயிர் அதிக உஷ்ணத்தால் வாடும், காற்றால் ஒடியும், குளிர்ச்சியால் சக்திகுன்றும். அதைப்போலவே குழந்தைகளும் என்று நினைக்கவேண்டும்.

குழந்தைகள் பரபரப்பாய் இருக்கும். விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதில் அதிகப்பிரியப்படும். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நம்மால் பதில் சொல்லமுடியாது. அதனால் நமக்குக் கோபமுண்டாகும். அவ்விதம் உண்டாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். குழந்தைகளின் தவறுதல்கள், குற்றங்கள் முதலியவைகளை நாம் ஸகித்துக்கொள்ளவேண்டும். அவர்கள் செய்கைகளில் அதிகப்பெருமை பாராட்டவேண்டும். குழந்தைகளுடன் ஸரியாய்ப்பழகும் பாக்கியமும், நல்லவழியில் அவர்களை நடத்தும் பாக்கியமும் எல்லாருக்கும் கிடைக்க மாட்டாது.

குழந்தைகள், சரீரத்தைப்பற்றியமட்டில் குழந்தைகளாகவும், அறிவிலும், அனுபவத்திலும் நம்மைவிட முதிர்ந்தவர்களாகவும் இருக்கக்கூடும். இவ்விஷயங்களை உபாத்தியாயர்கள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். ஏழுவயதுக்குமேலேயே குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேண்டும். அது வரையில் பெற்றோர்கள் கவனிக்கவேண்டும்.

HISTORY OF KISSING.

முத்தமிடலின் வரலாறு.

இந்த விஷயமாக வி. சுப்பிரமணிய ஐயர் என்பவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பிரசுரமாகும் "செந்தமிழ்"ப் பத்திரிகையின் ஆவணி மாஸச் சஞ்சிகையில் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார்.

ஆசார தருமத்தைப் பிரதானமாகக் கொண்டிருக்கும் இந்தியா தேசத்தில் ப்ரம்ம, க்ஷத்ரிய, வைசியர்களாலுங்கூட எச்சலிட்டு முத்தமிடும் வழக்கம் ஆதிகாலந்தொட்டே அனுஷ்டானத்தில் இருந்து வருகிறதை பிரத்தியக்ஷமாகவும், சாஸ்திர மூலமாகவும் அறிகிறோம். எச்சில், தீட்டு, அநாசாரம், முதலியவைகளை மிகவும் வெறுத்து ஒதுக்கும் இந்தியர்கள் முத்தமிடுதலை, விலையேறப்பெற்ற ஆணிமுத்துகளைக்காட்டிலும் அதிக விலையுள்ளதென்று கருதுகிறார்கள். இந்த வழக்கம் ஜப்பான் முதலிய தேசங்களில் இல்லை. ஆனால் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய தேசங்களில் முத்தமிடும் வழக்கம் வெகுநாளாய் இருந்து வருகிறது.

மேல் நாட்டார் மற்ற விஷயங்களை ஆராய்ச்சி செய்வது போலவே இந்த முத்தமிடும் வழக்கத்தின் வரலாற்றைப்பற்றியும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். மிகுந்த தீக்ஷண்ய புத்தியுடைய மேனாட்டு வித்துவான் ஒருவர் பின்வருமாறு காரணஞ்சொல்லுகிறார்.

"மனிதர்கள் ஆதிகாலத்திலே மாமிசம் சாப்பிடுகிறவர்களாய் இருந்தார்கள். அந்தக்காலத்தில் புருஷன் ஒரு ஸ்திரீயினிடத்தில் கொண்ட விசேஷப் பிரியத்தை அவளுக்கு நன்றாய்ப் புலப்படும்படிச் செய்வதற்காக தன்னுடைய பற்களினால் அவள் உதடுகளிலும், கன்னங்களிலும் கடித்துத் தன்னுடைய பிரியத்தைவெளிப்படுத்துவான். இதன் தாத்பரியம் என்னவென்றால் அவளை ரசமுள்ள மாம்பழம் போல் விழுங்கவேண்டுமென்று தனக்கிருக்கும் அவாவைக்காட்டுவதாம். இந்த வாடிக்கைதான் நாகரீகமான காலத்தில் மாறி முத்தமிடும் வழக்கம் உண்டாயிற்று."

இவ்விதமாக அந்த வித்துவான் சொல்லுகிறார். வேறொரு வித்துவான் இன்னொரு விதமான காரணஞ்சொல்லுகிறார்.

"அமெரிக்காவில் உள்ள ஒருவகைப் பிராசீன ஜாதியார் தங்கள் குழந்தைகளுக்கு பாத்திரங்களில் பால் முதலியவைகள் கொடுக்கும் வழக்கம் ஆதிகாலத்தில் இல்லை. குழந்தையின் தாயார் தன்னுடைய வாயில் பாலையோ, தண்ணீரையோ, ஆடுமாடுகளைப் போல் உறிஞ்சி, பின்பு தன் வாயில் உள்ளதைக் குழந்தையின் வாயில் உமிழ்ந்து புகட்டுவாள். இந்தவழக்கம் இன்றைக்கும் சில பாகங்களில் இருந்து வருகிறது. இந்தப்பழக்கதிலிருந்தே முத்தமிடும் வழக்கம் உண்டாயிருக்க வேண்டுமென்று" இவர் சொல்லுகிறார்.

"ஒரு ஆண்புறா தன் பேடையினிடத்துண்டாகிய அன்பின் மிகுதியால் மூக்குடன் மூக்குச்சேர்த்து உராய்ந்து கொண்டிருந்ததைப்பார்த்த தலைவனும், தலைவியும் அவ்வாறே தம்முடைய உதட்டுடன் உதட்டை அன்புறச்சேர்த்து வைத்துக்கொண்டனர் என்னும் விஷயம் இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ளலாகும். பக்தி, விசுவாசம், மரியாதை முதலியவைகளைக்காட்டும் அறிகுறியாக பழைய காலத்து யூதர்களிடத்தில் முத்தமிடும் வழக்கம் இருந்துவந்தது. அவர்களிடத்திலிருந்து கிறிஸ்தவ மதத்தை அனுசரிக்கும் மேனாட்டாருக்குப்போனது. ஈஸ்டர்கிஸ் என்கிற மதஸம்பந்தமான கோட்பாடு க்ரீச்சர்ச் என்னும் வகுப்பினராகிய கிறிஸ்தவர்களால் அனுசரிக்கப்படுகிறது. மகம்மதியர்களுக்குள்ளும் இந்த வழக்கம் இருந்து வந்திருப்பதாக அவர்களுடைய பழைய புராணங்களால் தெரிகிறது. இனி நம்முடைய தமிழ் நூல்களிலோ சொல்லவேண்டியதில்லை. ராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களிலும், புராணங்களிலும் முத்தமிடுவதைப்பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுகிறது. பிள்ளைத்தமிழ் என்று சொல்லப்படும் ஒருவகைப் பிரபந்தத்தில் முத்தப்பருவம் என்றே தனியாக ஒன்று வகுத்திருக்கிறார்கள். இந்த வழக்கம் கெட்ட வழக்கமென்றும், அதை ஒழிக்கவேண்டுமென்றும் அநேகர் முயன்றுவருகிறார்கள். இந்த வழக்கம் நின்றால் இதற்குப்பதிலாக இதைப்போலவே அன்பை வெளிப்படுத்தக்கூடிய வழக்கம் வேறு ஒன்றும் இல்லையே என ஒருவர் ஆலோசனையில் ஆழ்கிறார்!".

NURSING OF SICK ANIMALS.

வியாதிப்பட்ட பிராணிகளின் போஷணை.

இந்த விஷயமாய் அக்டோபர் மாஸத்துக் "கிருஷிக"னில் ஒரு வியாஸம் காணப்படுகிறது. அதில் வியாதிப்பட்ட கால் நடைகளைப்பற்றிக் கவனிக்க வேண்டிய மூன்று முக்கியமான விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன :—(1) ஸமயோசிதமான ஸௌக்கியமும், ஸௌகரியமும்; (2) வியாதியின் தன்மைக்குத் தக்க பிரகாரம் மிதமான ஆகாரம் ஜாக்கிரதையாய்க் கொடுத்தல்; (3) காலந்தப்பாமல் ஸரியான அளவுப்படி மருந்து கொடுத்து வருதல்.

ஜீவ ஜந்துக்களின் சரீரம் ஒரு நீராவி யந்திரத்தைப்போல் இருக்கிறது. தண்ணீரும், நிலக்கரியும், அக்கினியும் இருக்கிறவரையில் யந்திரம் வேலைசெய்யும். அதுபோலவே ஜந்துக்களின் சரீரமும் போஜனமில்லாவிட்டால் தளர்ச்சியடைந்து மெலிந்துவிடும். அதனால் மரணமும் நேரிடும். நீராவி யந்திரத்தில் புகையும், ஆவியும் வெளியாகிக் கொண்டிருப்பதைப் போல ஜீவ ஜந்துக்களின் சரீரத்திலிருந்து கழிவுப் பொருள்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஒரு பக்கத்தில் வஸ்துக்கள் கழிக்கப்பட, மற்றொரு பக்கத்தில் ஆகாரம் உட்கொள்ளப்பட்டு ஜீரணமடைந்து ரத்தத்துடன் கலந்து சரீரத்தைப் போஷிக்கிறது. பிராணிகளின் சரீரத்தில் ஐந்தில் நாலு பங்கு நிறையுள்ளவஸ்து தண்ணீர்தான். தண்ணீரே ஜீவ ஜந்துக்களுக்கு மிகவும் முக்கியமான ஆகாரம். தண்ணீர் மற்ற ஆகார வஸ்துக்களைக் கரைத்து ஜீரணமடையச் செய்யும். ரத்தத்தைச் சுத்தம் செய்யும். பிராணிகளுக்கு வேண்டிய தண்ணீர் கொடுக்கப்படவில்லையானால் தாகமுண்டாகி சரீரம் தளர்ந்து அஸௌக்கிய முண்டாகும். ஸௌக்கியமாயிருக்கும் பிராணிகளுக்குத்தான் தண்ணீரின் உபயோகம் இவ்வித மிருக்கிறது. இனி, வியாதிப்பட்ட பிராணிகளுக்கோ வியாதிக்குக் காரணமாயிருக்கும் பலவிஷ பதார்த்தங்களை சரீரத்திலிருந்து வெளியே கழிப்பதற்காக தண்ணீர் உபயோகப்படுகிறது. மனிதர்களுக்குப் பலவகையான விஷ ஜுரங்கள் காணும்போது இயல்பிலேயே தாகம் மிதமிஞ்சி அதிகமாவதும், ஜுரத்தின் விஷவஸ்துக்களை சரீரத்திலிருந்து வெளியே போக்குவதற்குத்தான்.

சுத்தமான காற்று தண்ணீரைப் பார்க்கிலும் முக்கியமானது. ரத்தத்தில் பிராணவாயுவைப் புகச்செய்து சுத்திகரிக்கச் செய்யும், உஸ்வாஸ நிஸ்வாஸங்களை நடத்தவும், சரீரத்தின் கழிவுப் பொருள்களை வெளியாக்கவும், சுத்தமான காற்று உபயோகப்படுகிறது. ஸௌக்கியமாயிருக்கும் பிராணிகளுக்கு அவசியமான பரிசுத்தக் காற்று, வியாதிப்பட்ட பிராணிகளுக்கு இன்னும் அதிகமான அவசியம்.

வியாதிப்பட்ட பிராணிகளுக்கு ஆகாரம் மிகவும் ஜாக்கிரதையாய்க் கொடுக்கப்படவேண்டும். மேலும் அது எளிதில் ஜீரணமாகக் கூடியதாயிருக்கவேண்டும். அப்படி யில்லாவிட்டால் வயிற்றுநோவு, வயிற்றுப்போக்கு முதலியவைகள் உண்டாகும். ஆகையால் வியாதிப்பட்ட பிராணிகளுக்கு தவிட்டுக்களி அல்லது கஞ்சி ஏற்ற ஆகாரமாயிருக்கும். வியாதியின் இயல்புக்குத் தகுந்தது போல் ஆகாரத்தில் பாலாவது, கோழிமுட்டை முதலிய ஸத்துள்ள பதார்த்தங்களையாவது கலந்துகொடுக்கலாம். மருந்துகளை ஆகாரத்துடன் கலந்து கொடுக்கலாம். அப்படிச் செய்தால் பிராணிகள் மருந்தை எளிதில் உட்கொள்ளும்.

WOOL BEARING SHEEP.

கம்பளி ஆடு.

புரட்டாசி மாஸத்துக் "கிருஷிக"னில் இந்த விஷயமாக ஒரு சிறந்த வியாஸம் இருக்கிறது. அதைச்சுருக்கி எழுதினால் அதனுடைய ஸாரம் போய்விடுமாதலால் அதை இங்கே அப்படியே பிரசுரிக்கிறோம்.

இந்து தேசத்தில் தற்காலத்தில் செய்யக்கூடிய விவஸாய அபிவிருத்தியில் கம்பளி ஆடுகளை விருத்தி செய்தல் ஒன்று. வட ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சினாப்பள்ளி, மதுரை இந்த ஜில்லாக்களில் தற்காலத்தில் 'குரும்பாடு' என்னும் ஒருவகை ஆடுகள் இருக்கின்றன. இவைகளைக் 'குரும்பர்' என்னும் ஒரு ஜாதியார் வைத்து மேய்த்துப் பரிபாலித்து வருகிறார்கள். சில இடங்களில் மற்ற இடையரும் இவ்வாடுகளை வளர்க்கிறார்கள். இவர்கள்

வருஷத்துக்கு ஒன்று அல்லது இரண்டு முறை இந்த ஆடுகளின் கம்பளி ரோமத்தைக் கத்திரித்துக் குரும்பருக்கு விற்றுவிடுகிறார்கள். குரும்பர் தாங்கள் பரிபாலித்துவரும் ஆடுகளின் ரோமத்தையும், விலைக்கு வாங்கும் ரோமத்தையும் கலந்து, திரித்துப் பலவகையான கம்பளிகள் நெய்கிறார்கள். இவ்வேலை முக்கியமாகக் குரும்பரின் ஸ்திரீகளால் செய்யப்படுகிறது. இந்தக் கம்பளிகள் ஒவ்வொன்றுக்கு 2 ரூபாய் முதல் 10 ரூபாய் வரையில் கிரயம் பெறும்படியாய்ப் பல தரங்களாய் நெய்யப்படுகின்றன. இவையெல்லாம் முரட்டுக்கம்பளிகளாகவே யிருக்கும். ஏனென்றால் நம் நாட்டுக் குரும்பாடுகளின் ரோமம் மெல்லியதல்ல. முரட்டு ரோமம். மேல்நாட்டுக் கம்பளி ஆடுகளின் ரோமம் அநேகமாய் மெல்லியதாயிருக்கும். இழைகள் ஒன்றுடன் ஒன்று சேர்த்துத் திரிப்பதற்கு ஏற்றதாயுமிருக்கும். அங்கே திரிக்கப்படும் கம்பளி நூலும் மெல்லியதாயிருக்கும். அதனால் அங்கே நெய்யப்படும் கம்பளங்களும் மெதுவாயும், விலையுயர்ந்தனவாயும் இருக்கின்றன. மேலும் இத்தேசத்தில் ஒவ்வொரு குரும்பாட்டில் வருஷம் ஒன்றுக்கு ஸராஸரியில் அரை ராத்தல் ரோமந்தான் கிடைக்கிறது. அயல் நாடுகளில் பத்து ராத்தல் வரையும் கிடைக்கிறது; இதனால் நாம் குரும்பாடுகளை விருத்திசெய்யவேண்டியது அவசியமென்பது நன்றாய் வெளியாகும். அயல் தேசத்து ஆடுகளைக் கொண்டுவந்து குரும்பாடுகளுடன் கலக்கச்செய்தால், அவைகளுக்குப் பிறக்கும் குட்டிகளுக்கு அதிகமான கம்பளி ரோமம் உண்டாகும். இவ்விஷயத்தை முன்னமே சைதாப்பேட்டை விவஸாயப்பண்ணையில் மிஸ்டர் ராபர்ட்ஸன் துரையவர்கள் தொடர்ந்து பரிக்ஷித்துப் பல வருஷங்களாக இத்தேசத்து ஆடுகளை விருத்திசெய்து காட்டியிருக்கிறார். ஆகையால் இது நூதனமாக நாம் பரிக்ஷித்தறிய வேண்டிய சந்தேகாஸ்பதமான காரியமல்ல. இது பலிக்குமோ பலிக்காதோ என்று ஒருவரும் சந்தேகங்கொள்ளவேண்டியதில்லை.

பாட்னாவிலிருந்து சிலகம்பளி ஆட்டுக் கிடாக்களையும், மைசூரிலிருந்து சில கிடாக்களையும், கோயம்புத்தூரிலிருந்து சில கிடாக்களையும் கொண்டுவந்து, அவைகளைச் சைதாப்பேட்டையிலுள்ள சாதாரண ஆடுகளுடன் கலக்கவிட்டிருந்தார்கள். இதனால் ஐந்தாறு வருஷங்களில் ஆடுகள் வர்க்க விருத்தியடைந்து, அவைகளிலிருந்து ஸராஸரியில் இரண்டு ராத்தல் கம்பளி ரோமம் கிடைத்தது, மேலும் அவைகள் நாட்டு ஆடுகளை விட இரண்டு மடங்கு அதிகப் பருமனுள்ளவைகளாய் வளர்ந்தன. இரண்டு வயதில் 120-ராத்தல் நிறையுள்ளவைகளாயின. ஆடு ஒன்றுக்கு ரூ. 10-க்கு அதிகமாக விற்கப்பட்டன. ஆட்டிறைச்சியும் சிலாக்கியமானதென்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதுமட்டுமல்ல. "ஸௌத்டௌன்ஸ்" வர்க்க ஆடுகள் என்று பெயர் வழங்கும் ஒருவகை ஆடுகள் ஐரோப்பாவின் தென்பாகங்களில் இருக்கின்றன. அவைகளைக் கொண்டுவந்து மைசூர்நாட்டிலுள்ள ஆடுகளுடன் கலந்து வைத்திருக்கிறார்கள். அவைகளையும் கொண்டுவந்து சைதாப்பேட்டை ஆடுகளுடன் கலந்து வர்க்க விருத்தி செய்தார்கள். அவைகளாலும் நாட்டு ஆடுகள் வெகு சிலாக்கியமாய் விருத்தியடைந்தன.

குளிர்ச்சியுள்ள தேசங்களில்தான் கம்பளி ஆடுகள் விருத்தியாகுமென்றும், இத்தேசத்தில் உஷ்ணத்தால் அவைகள் க்ஷீணித்துப் போகுமென்றும் சிலர் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இது ஸரியான அபிப்பிராயமல்ல. ஏனென்றால் உஷ்ண தேசமாகிய ஆஸ்திரேலியாவில் கம்பளி ஆடுகள் விருத்தியாகி மிகவும் மேன்மையான கம்பளி ரோமத்தைக் கொடுக்கின்றன. அங்கிருந்து ஆட்டுக் கிடாக்களைத் தருவித்து நம்முடைய ஆடுகளுடன் கலக்கச் செய்யலாம். அதனால் விசேஷமாய் வர்க்க விருத்தியுண்டாகும்.

கோயம்புத்தூர் ஜெயில் ஸூப்ரின்டென்டெண்ட் மிஸ்டர் காட்ஸ்டன் துரையவர்கள் மெரினோ ஆடுகளைத்தருவித்து வர்க்க விருத்தி நடத்திவருகிறார். இந்த ஆடுகளின் ரோமம் நீளத்திலும், தரத்திலும் உயர்ந்ததென்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மிஸ்டர் ராபர்ட்ஸன் துரையவர்கள் வெகுகாலமாய் சிரமப்பட்டு வர்க்க விருத்திசெய்த "சைதாப்பேட்டை வர்க்கம்" என்னும் ஜாதி இப்போது விவஸாய இலாகா உத்தியோகஸ்தர்களால் கவனிக்கப்படாமல் போனது வியசனிக்கத்தக்க காரியம். ஒருவர் நடத்தி வந்த விவஸாய விருத்தியை அவருக்குப் பின்னுள்ளவர்களும் தொடர்ச்சியாய் ஐரோப்பாவில் செய்துவருகிறபடி நடத்தி வந்தால் தான் நமது தேசத்துக்கு க்ஷேமமுண்டாகும். நமது துரதிர்ஷ்டத்தால் அடிக்கடி உத்தியோகஸ்தர்கள் மாறுதலடைகிறார்கள். அதனால் அபிவிருத்தியின் தொடர்ச்சி அழிந்துபோய் முன்னோர்களின் முயற்சி பலனற்றுப்போகிறது.

கோர்ட் ஆப்வார்ட்ஸ் ஆளுகைக்குள் அமைந்திருக்கும் ஜமீன்களில் இக்காரியத்தை எளிதில் நடத்தலாம். மற்ற ஜமீன்தார்களும், விவஸாய சங்கங்களும் இவ்விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொள்ளலாம். இதில் பணச்செலவும் சிரமமும் அதிகமில்லை. 10-ரூபாய் அல்லது 15-ரூபாய் விலையில் பாட்னாவிலிருந்து அல்லது மைசூரிலிருந்து ஒரு கம்பளி ஆட்டுக்கிடாவை வாங்கி, உள்ளூர்களிலிருக்கும் ஆட்டுமந்தைகளில் கலந்து மேயும்படி செய்யவேண்டும். இதைத்தவிர வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. இரண்டு மூன்று வருஷங்களில் இதனால் வர்க்க விருத்தி விசேஷமாய் உண்டாகும். காலதாமதமில்லாமல் எல்லா விவஸாய சங்கத்தாரும், ஜமீன்தார்களும், மிராசுதாரர்களும், கிருஷிகரும் இந்த விஷயத்தைக் கவனித்து நடத்துவார்களென நம்புகிறோம்.

THE BOYS' SECTION.

சிறுவர் பகுதி.

The Strength of a Bird's Wing.

பக்ஷியின் இறக்கையின் பலம்.—ஒரு பக்ஷியினுடைய கனத்தையும், மனுஷனுடைய கனத்தையும் சராசரியாகப் பார்த்தால், மனுஷன் கையைவிட பக்ஷியின் இறகு 20 மடங்கு அதிக பலமுள்ளதாம்.

A Leafless Tree.

இலையில்லாத மரம்.—பஸிபிக் மகாசமுத்திரத்திலுள்ள அநேக தீவுகளில் இலையில்லாத மரங்கள் வளர்கின்றனவாம். இவை குடை விரிந்த மாதிரி பல கிளைகள் விட்டு சுமார் 30 அடி உயரம் வளர்கின்றனவாம். இந்த மரங்களுக்கு இலையாகிலும், பூவாகிலும் கிடையாதாம். இந்த மரத்தின் ஸாரம் மருந்துக்கு உபயோகமாகிறது. ஆனால் மரம் இரும்பைவிடக் கடினமாயிருப்பதால் மற்றப்படி விறகுக்குக்கூட உபயோகமாகிறதில்லையாம்.

Gama, the Wrestler.

காமா என்ற பயில்வான்.—தேர்ச்சிபெற்ற காமா என்ற பயில்வான், இங்கிலாந்தில் குஸ்திசெய்ததில் அநேக ஐரோப்பியப் பயில்வான்களையும், அமெரிக்கர்களையும் தோற்கடித்து நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுவிட்டாராதலால், அலகபாத்தில் நடைபெறப்போகும் காட்சி சபைக்கு ஐரோப்பாவிலிருந்து புறப்பட்டுவிட்டார், உலகத்திலுள்ள, எந்தப் பயில்வானுடனும், எதிர்த்துக் குஸ்திசெய்வதாகச் சொல்லுகிறாராம்.

The Age of the Cocoanut.

தென்னையின் வயது.—தென்னையின் வேர் முதல் உச்சி வரையில் நீண்டு கிடக்கும் மரத்தை உற்றுப் பார்த்தால் அதில் பாளை மட்டை முதலியன இருந்த வடுக்கள் காணப்படும். இவைகள், தென்னை வளர்ந்து வரும்பொழுது ஸுமார் வருஷத்திற்கு ஒரு சுற்று உலர்ந்து விழுவதால் இந்த வடுக்களின் கணக்கே தென்னையின் வயஸாகும். தென்னைக்கு ஸராஸரி ஸுமார் மனிதரைப்போல் 100-வயது வாழ்நாள் என்று முற்றிய மரத்திலிருக்கும் வடுக்களால் தெரியவருகிறது.

Gibralter.

ஜிப்ரல்டர்.—இது ப்ரிட்டிஷ் அரசாட்சியில் மிகச்சிறிய இடமாக இருக்கின்றது. இதன் விசாலம் இரண்டு சதுர மைல்தான். ப்ரிட்டிஷ் அரசாட்சியில் மிகப்பெரிய இடம் கன்னடாவாம். இது 37 லக்ஷத்து 46 ஆயிரம் சதுர மைலையுடையதாம்.

The Age of Frogs.

தவளைகளின் வயது.—தவளைகளில் பலவகைகள் உண்டு; நாட்டுத்தவளை, மேட்டுத்தவளை, தேரை, கல்லினுள்தேரை. இதில் நாட்டுத்தவளையே வெகு நாள் ஜீவித்திருக்கும். மேட்டுத்தவளை ஜலதாரைகளிலும், கானாறுகளிலும் இருப்பது. தேரை குப்பைகூளங்களிலும் சாணிக்குவியல்களிலும், சதுப்பு நிலங்களிலும் வெகுவாய்க் காணப்படும். கல்லினுள்தேரை என்பது கற்பாறைகளுக்கு நடுவிலிருந்து ஜீவிப்பது. முதலில் குறிப்பிட்ட நாட்டுத்தவளையானது கிணறுகளிலும், குளங்களிலும் இருந்து ஜீவிப்பது. இந்த தவளைதான் 15 வருஷம் ஜீவனோடு இருக்குமாம். மற்றவைகளுக்கு ஆயுள் அல்பம்.

Do not Believe Implicitly.

வெளுத்ததெல்லாம் பாலல்ல.—என்னதான் மனிதர்கள் எல்லாரும் ஒன்றென்று நாம் சொன்னபோதிலும், ஒவ்வொருவர்க்குள்ளும் சில வித்தியாசங்கள் உண்டு. யோக்கியர்களும் அயோக்கியமான காரியத்தை ஒரு ஸமயத்தில் செய்து விடுகிறார்கள்; அந்தஸ்துள்ள மனிதன் அற்ப விஷயங்களையும் செய்து விடுகிறான்; நல்லவன் கெடுதியையும், கெட்டவன் நல்லதையும் ஒரு ஸமயத்தில் செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். ஆகையால் ஒவ்வொருவரையும் நாம் பரிசோதித்துப் பார்க்கவேண்டுமென்று ஏற்படுகிறது. ஒரு மனிதன் தான், மிகவும் கௌரவமுள்ளவனென்று சொல்லிக்கொள்வான்; ஐயோ அப்படியே அவன் சொல்லிக்கொள்ளட்டும்; அதைப்பற்றி நமக்கு ஒன்றும் பொறாமை வேண்டாம். ஆனால் அவன் சொல்வதை நம்பி நமது கைப்பொருளை அவனிடம் ஒப்புவித்து வைப்போமேயானால் நம்மைவிடப்பெரும் மூடர்கள் இல்லை. "தன்னாயுதமும் தன் கையிற் பொருளும் பிறர்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே."

THE HEN.

பேட்டைக் கோழி.—கோழிக்கு மூன்று வயதானதும் நல்ல முட்டைகளை இடும். அதன் ஆயுளில் 300 முதல் 500 வரையில் முட்டைகளிடுமாம்.

A 5 YEAR OLD MUSICIAN.

ஐந்து வயதுள்ள ஒரு ஸங்கீத வித்வான்.—பாபு பசந்து குமார சாட்டர்ஜி அவர்களின் புத்திரராகிய மதன்மோஹன் என்ற மகாக் கியாதிபெற்ற ஸங்கீத வித்வானுடைய ஐந்தாவது பிறந்தநாள் கொண்டாட்டம் வங்காளத்தில் நடந்தது.

கல்கத்தா ஹைகோர்டு ஜட்ஜாயிருந்த ஸர் குருதாஸ் பானர்ஜி முதலிய பெரிய மனிதர்கள் வந்திருந்தார்கள். அந்தக் குழந்தைக்கு இன்னும் எழுதப் படிக்கக்கூடத் தெரியாது; ஆயினும் அதிக அற்புதமான கானங்களும், பாட்டுக்களும் ஸுமார் நூறு வரையிலும் ஒப்புவிக்கக்கூடுமாம். ஸங்கீதத்தில் தேர்ச்சிபெற்ற சிறுவயதுள்ள பையன்கள் அநேக இடங்களில் இருந்தபோதிலும், இப்பையனுடைய ஸங்கீதவித்வத்துவம் உலகத்தில் மற்ற எவரையும் தோற்கடிக்கக் கூடியதாய் இருக்கிறது. மகா கஷ்டமான ராகங்களையும், எள்ளளவும் பிசகில்லாமல் கானம்செய்வார். சாரீரம் இளவயதுக்குரிய இனிமையுடையதாய், கிணீரென்று இருப்பதோடு அதி நுட்பமாயும், உயர்ந்ததாயும் இருக்கிறதாம். எப்பேர்ப்பட்ட ஸங்கீத வாத்தியங்களை வாசித்தாலும் அவைகளுக்குச் சரியாய் தாமும் பாடிவருவார். இவர் பதினாறு மெடல்கள் அணிந்திருக்கிறார். 15 தங்கத்திலும் ஒன்று வெள்ளியிலும் செய்யப்பட்டவை.

SNAILS.

நத்தைகள்.—நத்தைகள் மரங்களிலும், புல்லுள்ள இடங்களிலும், இலைதழைகளைத் தின்றுபிழைக்கும். வெயில் காலமெல்லாம் ஓயாமல் வேலைசெய்து மழைகாலமெல்லாம் ஓரிடத்தில் உறங்கிக்கிடக்கும். நத்தை திருகாணியைப் போன்ற சுருள்களையுடைய ஒட்டைத் தனக்குக் கவசமாகக் கொண்டிருக்கிறது. இளநத்தைகளுக்கு வயது ஏற ஏற அவைகளின் முதுகில் மிருதுவான தோலிலிருந்தே அவற்றின் கூடுகள் ஏற்படுகின்றன. அந்தக்கூடு உறுதியடைந்து முடிவில் ஓடாகமாறுகிறது. இவைகள் உட்கொள்ளும் ஆகாரத்தின் சிலபாகம் தேகத்தை வளர்க்கிறது. வேறு சில பாகம் ஓட்டை வளர்க்கிறது. பட்சிகள் நத்தைகளைத் தின்ன ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும். நத்தைகளுக்குத் தலைகளில் கொம்புகள் போன்ற உறுப்புகள் நான்கு உண்டு. இரண்டு நீண்டும், இரண்டு குறுகியும் இருக்கும். நீண்டவைகளில் இருக்கும் இரண்டு கண்களையும் கவனிக்கவேண்டும். இந்தக்கொம்புகளை நத்தைகள் வேண்டும்போது எளிதில் உள்ளே இழுத்துக் கொள்ளக் கூடும். அப்படி இழுத்துக்கொள்ளும்போது கொம்புகளின் வெளிப்புறம் உட்புறமாகமாறும். வஸ்துக்களை முகர்ந்து அறிய குறுகிய இரண்டு கொம்புகளை உபயோகப்படுத்துகின்றன. கூட்டுக்கு வெளிப்புறத்தில் காணும் கீழ்ப்பாகத்திற்கே அடியென்று பெயர். நத்தை ஊரும்போது அது சுருங்கிக்கொள்ளும். நத்தைக்கு விலா எலும்புகளே பற்களாகும். இவற்றுள் சுமார் 11,000 பற்கள் உண்டென்று சொல்லுகிறார்கள். இன்னும் வஸ்துவை துண்டித்து மெல்லக்கூடிய கூர்மையான பற்களும் நத்தைக்கு உண்டு. இவைகள் மழைகாலத்தில் உறங்கிக் கிடக்கும். உணவு எடுக்காது. ஆனால் பிராணதாரமானகாற்று அவசியம்.

THE PRICE OF SOME ANIMALS.

சில மிருகங்களின் விலைகள்.—ஆப்பிரிக்காவில் இப்போது யானைகள் தந்தத்திற்காக அதிகமாய் வேட்டையாடப் படுகிறபடியால் கவர்ன்மெண்டுகள் தக்க ஏற்பாடுகள் செய்யாவிடில் அந்தக் கண்டத்தில் வெகு சீக்கிரத்தில் யானைகள் அற்றுப்போகுமென்று அஞ்சுகிறார்கள். அதனால் தான் இப்போது அவைகளின் விலையும் ஏறியிருக்கிறது. ஆப்பிரிக்கா யானைகள் 1,200 பவுன் துவக்கி 1,400 பவுன் வரையில் விற்கப்படுகின்றன. இந்திய யானைகள் 1,000 பவுனுக்கு வாங்கலாம். ஜிராப் என்ற ஒட்டகச்சிவிங்கிகள் மிகவும் அருமையாயிருக்கிறதைப்பற்றி அவைகளும் ஆப்பிரிக்கா யானைகள்போல் விற்கப்படுகின்றன. ஒரு அழகிய நீர் யானையை 600 பவுனுக்கு வாங்கலாம். ஆப்பிரிக்காச் சிங்கம் 200 பவுன் முதல் 300 பவுன் வரையிலும், ஆப்பிரிக்காப் பெண் சிங்கம் 160 பவுன் முதல் 180 பவுன் வரையிலும் விற்கப்படுகின்றன. பங்காளப் புலிகள் 160 பவுன் முதல் 180 பவுன் வரையில் விற்கப்படுகின்றன. ஒட்டகங்களோ 80 பவுன் முதல் 100 பவுன் வரையில் விற்கப்படுகின்றன.

THE LADIES' SECTION.

ஸ்திரீகள் பகுதி.

FOOD TASTING.

சாப்பாடு ருசிபார்த்தல்.—ஒரு ஸ்திரீக்கு புதிய தொழிலென்னவென்றால் சாப்பாடு ருசிபார்ப்பதுதானாம். இந்தப்பெண் பர்ஷிய ஜாதியிலுள்ள பழக்கவழக்கங்களையுடையவள். சாப்பாட்டுக்காக பாகம் செய்யப்பட்டிருக்கும் வீடுகளுக்குச் சென்று, அந்தச் சாப்பாடுகளை ருசிபார்த்து, அவைகளைச் சீர்திருத்தவேண்டிய வழிவகைகளை சமையல்காரர்களுக்குச் சொல்வதுடன் புதிதாய்க் கறிகள் சமைக்கும் விதங்களையும் சமயற்காரனுக்குக் காட்டிக்கொடுக்கிறாள். இந்த வேலையோ அதிக சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்கது. இதற்குச் சம்பளமும் அதிகம்.

MALATI DEVI SARASWATI.

மாலதி தேவி சரஸ்வதி :—எட்டாவாவில் வசிக்கும் இந்தஸ்திரீ ஜம்னா நதிக்கு ஒரு நாள் ஸ்நானம் செய்யப்போயிருந்தாள். இவளோடு மற்றொரு ஸ்திரீயும் தன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு ஸ்நானத்திற்குச்சென்றாள். இவளுடைய குழந்தைகளில் மூத்தவனான ராமசந்திரனென்பவன் தவறி ஆற்றில் விழுந்து விட்டான். உடனே மாலதி தேவி ஆற்றில் குதித்து அந்தக்குழந்தையைக் காப்பாற்ற முயன்றாள். ஆனால் மாலதி தேவிக்கோ நீந்தத் தெரியாதபடியால் இவளையும், அந்தப் பையனையும், ஆற்றின் பிரவாகம் வெகுதூரம் இழுத்துக் கொண்டு போய்விட்டது. நீந்தத்தெரிந்தவர்களில் சிலர் இவர்களைக் கண்டு நீந்திச்சென்று கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். தெய்வகதியால் இருவரும் உயிருடன் இருந்தார்கள். நீந்தத் தெரியாமலிருந்தும் ஒரு குழந்தையைக் காப்பாற்ற வேண்டி ஜலத்தில் குதித்த இந்த மாதின் தைரியம் ஆச்சரியப்படத்தக்கதல்லவா?

QUEEN MARY'S TREASURES.

மேரி ராணியாரின் பொக்கிஷம்.—மாட்சிமை தங்கிய நம்முடைய சக்ரவர்த்தியின் பாரியாராகிய மேரி ராணி அருமையும், நூதனமுமான பொருள்களைச் சேகரிப்பதில் மிகவும் ஆசை கொண்டவர். இவரிடத்தில் பலவகைப்பட்ட ஆபரணங்கள், சித்திரப்படங்கள், புஸ்தகங்கள், பீங்கான்வகைகள், மற்றும் பலவகை நூதன ஸாமான்கள் ஏராளமாயிருக்கின்றன. மேரி ராணிக்கு கலியாணம் செய்தபோது விசேஷ வெகுமதிகள்வந்தன. அவைகளெல்லாவற்றிலும் விசேஷமானது மால்பரோ மாளிகையிலிருக்கும் ஒரு சுழல்மேசையேயாம். அது 1,890 ரூ. விலை பெற்றது. அதிலே இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்ட 80 திவுச நன்னூல்கள் இருக்கின்றன. அவைகள் அழுத்தமும், மேன்மையுமான தோலிட்டுக் கட்டப்பட்டு வர்ணமலாம் கொடுக்கப்பட்டன. ராணியார் ஒருபக்கத்திலிருந்து கொண்டு மேசையைச் சுழற்றுவதால் தேவையான நூலெதையும் லகுவிற் றம்முன்வரச் செய்துகொள்வார். லண்டன்பட்டினத்திலுள்ள சிறு பாடசாலைகளில் கல்விகற்கும் சிறுபிள்ளைகளால் இந்த வெகுமதி கொடுக்கப்பட்டது. பென்னிகளாகவும், பார்திங்குகளாகவும் அதாவது (அணாவும், காலணாவுமாகச்) சேர்த்து அவர்கள் இந்தப் பெரிய வெகுமதியை அமைப்பித்துக்கொடுத்தார்கள்.

THE MYSORE WIDOWS' HOME.

மைசூர் கைம்பெண்மடம்.—மைசூரில் கைம்பெண்மடம் ஒன்றிருக்கிறது. இது ராவ்பகதூர் அம்பல நரசிம்ம ஐயங்கார் அவர்களுடைய நன்முயற்சியால் ஆரம்பம் செய்யப்பட்டது. இந்த மடத்தில் 32 கைம்பெண்கள் கல்வி கற்றுவருகிறார்கள். 17 பேர்கள் கோஷாவிலிருக்கிறார்கள். மேற்குறித்த கனவானுடைய செலவிலேயே இவர்கள் போஷிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்குக் கல்வி கற்பிக்க ஏழு உபாத்தியாயர்களிருப்பதுடன் இந்த மடத்துக்கு உதவிபுரிய 5 சேவகர்களும், 2 சமையல்காரர்களும் இருக்கிறார்கள். செலவு மாஸம் ஒன்றுக்கு ரூ. 500 ஆகிறது. இதில் மைசூர் கவர்ன்மெண்டார் ரூ. 100-ம், தேவராஜ பகதூர் அவர்களுடைய தர்மத்திலிருந்து ரூ. 100-ம் கொடுபட்டு வருகின்றன. மீதித் தொகையை ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் அவர்களே செலவிட்டு வருகிறார்கள். இவருக்குத் தள்ளாப்பருவமாயிருக்கிறபடியால் இந்த மடத்தை மைசூர் மகாராணியார் காலேஜுடன் சேர்த்துவிடப் பிரயத்தனம் செய்துகொண்டு வருகிறாராம்.

Singing Strengthens the Lungs.

ஸங்கீதத்தினால் சுவாசாசயம் பலப்படும்.—வாய் விட்டுப் பாடுவதனாலே சுவாஸமானது சற்று நின்றும், சற்று சீக்கிரமாய்ச் சென்றும் இருக்க வேண்டியிருக்கிறது. எப்போதும் போல் மூச்சுவிட ஸரிப்படுவதில்லை. பாடகன் உச்சஸ்வரத்தில் பாடும்போது மூச்சுப்பிடிப்பதும், தாழ்ந்த ஸ்வரத்தில் பாடும்போது மூச்சுவிடுவதும் எவருக்கும் நிதர்சனமாய்த் தெரிந்தது. இவ்விதம் மனித சரீரத்திற்குள் செல்லும் வாயுதாரா மின்றிப் போவதன் காரணமாக சுவாசாசயம், விலாப்புறத்தசை நரம்புகள், மார்புக்கும், வயிற்றுக்கும் நடுவிலுள்ள 'டையப்ரம்' என்று சொல்லப்படும் சர்மம், ஆகிய இவைகள் கொஞ்சம் வேலை செய்யவேண்டி வருகிறது. சோம்பலாய்போட்ட இடத்திலில்லாமல் வேலை செய்வோர் பலிஷ்டராயிருப்பாரல்லவா? அது போல சுவாசாசயத்திற்கு வேலை கொடுப்பதனாலே நாளாவர்த்தியில் அது பலப்பட்டு வரும்; அதனாலே சுவாசாசயத்தினிடம் வியாதி எளிதில் அணுகமாட்டாது. பின்னும் விலாப் புறத்தசை நரம்புகளின் வழியாய் ரத்த ஓட்டமும் திருப்திகரமாயிருக்கும். சரீரத்திற்குள்ளிருக்கும் உறுப்புகள் ஒன்றின்மேலொன்றாய் விழுந்து ஒட்டாமல் அவையவையிருக்கவேண்டிய ஸ்தானங்களிலிருந்து வேலை செய்யும். முக்கியமாய் பாடகர்களுக்கு க்ஷயரோகம் வராதென்பதை அவர்களது சுவாசாசயம் பலமாயிருப்பதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

Patriotism of Parsee ladies.

பாரஸீக ஸ்திரீகளுக்குள்ள தேசாபிமானம்.—ருஷிய, ஜப்பானிய யுத்தத்திற்கு முன்பு மேல்நாட்டு ஸ்திரீகளுக்குத்தான் தேச பக்தியும், பொது நல நோக்கமும் உண்டென்று நினைத்துக்கொண்டிருந்தோம். ஆனால் ருஷிய, ஜப்பானிய யுத்தத்தில் ஸ்திரீகள் காட்டிய வீரச்செயல்களும், தேசாபிமானமும், நமது எண்ணத்தை மாற்றி, கீழ் நாட்டு ஸ்திரீகளுக்கும், தேசாபிமானம் மிகுந்திருக்கிறதென்று அறிந்தோம். ருஷிய, ஜப்பானிய யுத்தத்தில் ஸ்திரீகள் தங்களுடைய புருஷர்கள், குமாரர்கள் முதலியவர்களை மனப்பூர்வமாய் யுத்தத்திற்கு அனுப்பி யுத்தத்தில் மடிந்தார்களென்ற செய்தி கேட்டும் தேசத்திற்காக, உயிரைக் கொடுத்ததைப் பற்றிச் சந்தோஷப்படுகிறதாய்ச் சொன்னார்களல்லவா? இது நிற்க, இவர்களின் ஸகாவாக, இப்பொழுது பாரஸீக ஸ்திரீகள் துணிந்திருக்கிறார்கள். இப்பொழுது பெர்ஷியா தேசம் ஜனட்பிரதியாட்சியைப் பெற்றிருக்கிறது. தேசத்தில் உண்டாயிருந்த அநேக குழப்பங்களையும், அராஜாங்கங்களையும் அடக்கி ராஜாங்கமுறையை நிலைநாட்டுவதற்கு, ஏராளமான பணம் வேண்டியதாக இருக்கிறது. இதற்கு அந்நிய ராஜாங்கத்தாரிடம் பணம் கடன் வாங்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இப்பேர்ப்பட்ட ஸந்தர்ப்பங்களில் அந்நியர்களுக்கு இடங்கொடுப்பதினாலேயே, அவர்களின் ஸ்வாதீனம் நாட்டில் பலத்து, நாட்டிற்கு ஆபத்துண்டாகக் காரணமாகிறதென்றும், அந்நியர்களிடம் கடன் வாங்கக் கூடாதென்றும், எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும், தேசாபிமானத்தை உத்தேசித்து ஸ்திரீகள் கொடுக்க வித்தமாயிருப்பதாயும் தெரிவித்திருக்கிறார்களாம். ஸ்திரீகளெல்லாம் ஒன்று கூடி அந்நியர்களிடம் கடன் வாங்குவதென்ற கவர்ன்மெண்டு தீர்மானத்தைக் கான்ஸெல் செய்யும்படி வாதாடுகிறார்கள். இதற்குத் தலைமையாயிருக்கும் மாது மிஸ்டர் இப்ராகிம் என்ற ஒரு போலீஸ் இலாகா தலைவரின் மனைவியாராம். ஏராளமான பாரஸீக ஸ்திரீகள் சேர்ந்து கொண்டு தங்களுக்குரிய நகை, நாணயங்களை விற்று கவர்ன்மெண்டு செலவுக்குக் கொடுக்கிறார்களென்று ஸென்ட்பீட்டர்ஸ்பர்க் பத்திரிகைகள் எழுதுகின்றன. ஆனால் பொதுவாய், பெர்ஷியர்களுக்கு அன்னியர்களிடத்தில் கடன் வாங்க இஷ்டமேயில்லை. ஏனென்றால் "எலிபோக இடங்கொடுத்தால் எருதும் பொறியும் உள்ளே வரும்" என்று அவர்கள் நன்றாயறிந்திருக்கிறார்கள். அந்த ஸ்திரீகளுக்குள்ள தேசாபிமானம் வியக்கத்தக்கதே. உள்ளவற்றை யிழந்தாகிலும் தேசத்தைக் காப்பாற்றவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டிருக்கிறது. நம் நாட்டுப்புருஷர்களுக்கோ, அவர்களில் ஆயிரத்திலொருபங்கு தேசபக்திகூட ஏற்படக் காணோம்.—"பாண்டியன்."

DEPARTMENTAL NOTES.

பகுதிக் குறிப்புகள்.

AGRICULTURAL NOTES.

விவஸாயக் குறிப்புகள்.

Cocoanut Topes.

தென்னந் தோப்புகள்.—கன்றுத் தென்னைமரங்களுள்ள தோப்புகளில் இலைகளையும், குப்பை, செத்தைகளையும் மரங்களைச்சுற்றி போட்டுவைப்பது நலமாம். இப்படிச் செய்தால் மரங்கள் நன்றாய் வளருமாம்.

The Taliparamba Farm.

தலிப்பரம்பா விவஸாயப்பண்ணை.—மலையாளம் ஜில்லாவைச் சேர்ந்த தலிப்பரம்பாவில் கவர்ன்மெண்ட் விவஸாயப்பண்ணை யொன்றிருக்கிறது. விவஸாயத் தொழிலில் அக்கரைப்பட்டவர்கள் இந்த ஸமயம் அந்தப்பண்ணையை வந்து பார்த்துவிட்டுப்போக வேண்டுமென்று மலையாளம் கலெக்டர் ஒரு ஸர்குலர் பிறப்பித்திருக்கிறபடியால் ஒவ்வொரு தாலூகா விவஸாயிகளும் தங்கள் தங்கள் தாசில்தாரோடு கூட வந்து அந்தப் பண்ணையைப் பார்த்துவிட்டுப் போகிறார்களாம்.

The Madras Gingelly Crop.

சென்னையில் எள்ளுப் பயிர்.—இந்த மாகாணத்தில் போன ஸப்டம்பர் மாஸக் கடைசிவரையில் 3,43,700 ஏகர் எள்ளு சாகுபடியாயிருக்கிறது. போன வருஷ சாகுபடிக்கு இந்த வருஷ சாகுபடி 100-க்கு 22-கம்மி. போன வருஷத்து சாகுபடியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பல்லாரி, அனந்தப்பூர், வட ஆற்காடு, கோயமுத்தூர் ஆகிய இந்த ஜில்லாக்களில் இந்த வருஷம் எள் சாகுபடியாயிருக்கும் நில விஸ்தீரணம் வெகு குறைச்சல் என்று தெரியவருகிறது. அப்படி அந்த ஜில்லாக்களில் சாகுபடி குறைந்துபோனதற்கு விதைக்கவேண்டிய பருவத்தில் மழை பெய்யாமையே காரணம்.

The Madras Cotton Crop.

சென்னையில் பருத்திச் சாகுபடி.—சென்னை மாகாணத்தைச்சேர்ந்த சிறப்பு கிராமங்களில் போன ஸப்டம்பர் மாஸக் கடைசிவரையில் 8,54,800 ஏகரில் பருத்தி விதைக்கப்பட்டிருக்கிறது. போன வருஷம் இதே காலத்தில் பருத்தி விதைக்கப்பட்டிருந்த நில விஸ்தீரணத்தைவிட இந்த வருஷம் பருத்தி விதைக்கப்பட்டிருக்கும் நில விஸ்தீரணம் 100-க்கு 20 அதிகமாகும். 1,25,200 ஏகர் நிலத்தில் முந்தின பட்டத்திலும், 7,29,600 ஏகர் நிலத்தில் பிந்தின பட்டத்திலும், பருத்தி விதைக்கப்பட்டிருக்கிறது. போன வருஷத்தை விட இந்த வருஷத்தில் டெக்கான் ஜில்லாக்களிலும், குண்டேரிலும், கோயமுத்தூரிலும், மதுரையிலும் தான் அநேகமாய்ப் பருத்தி அதிகமாக விதைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஸரியான பருவத்தில் போதுமான மழை பெய்ததும், பருத்தி விலை தூக்கி நிற்பதும் காரணங்களாம்.

The Madras Paddy Crop.

சென்னையில் நெற்பயிர்.—போன ஸப்டம்பர் மாஸக்கடைசியோடு சென்னை ராஜதானியில் 41,05,900 ஏகர் நிலத்தில் நெல் சாகுபடியாயிருக்கிறது. ஆனால் இந்த வருஷம் சாகுபடியாயிருக்கும் நிலங்கள் போன வருஷம் சாகுபடியான நிலங்களைவிட 100-க்கு 2 கம்மி யென்றே தெரிகிறது. கர்ணாடக ஜில்லாக்களில் போன வருஷத்தைவிட இந்த வருஷம் அதிக நிலங்கள் நெல் சாகுபடியாயிருக்கின்றன. அப்படிச் சாகுபடியாயிருப்பதற்கு நல்ல பருவத்தில் மழை பெய்ததே காரணம். கஞ்சம், கிருஷ்ணா ஜில்லாக்களிலும், தஞ்சாவூர் ஜில்லாவிலும் இந்த வருஷம் சாகுபடியாயிருக்கும் நிலங்கள் குறைவேயாகும். தஞ்சாவூர் ஜில்லாவில் குறைந்த நிலங்கள் சாகுபடியாயிருப்பதற்கு காவிரியாற்றில் நாட்கழித்து ஜலம் வந்ததும், பருவம் தப்பி மழை பெய்ததும் காரணங்களெனப்படுகிறது. முந்திய வருஷங்களைப்போலவே ஜுலை, ஆகஸ்டு, ஸப்டம்பர் இந்த மூன்று மாஸங்களிலும் விதைகள் விதைக்கப்பட்டனவாம். ஜுலை, ஆகஸ்டு மாஸங்களில் விதைக்கப்பட்ட விதைப்பு பட்டத்தில் விதைக்கப்பட்ட விதைப்பென்றும், ஸப்டம்பர் மாஸத்தில் விதைக்கப்பட்ட விதைப்பு பட்டம் பிந்தி விதைக்கப்பட்ட விதைப்பென்றும் தெரிகிறது. ரெவினியூ அதிகாரிகள் பயிர் நன்றாயிருப்பதாகவே ரிபோர்ட் செய்திருக்கிறார்கள்.

SEEDS.

விதைகள்.—நல்ல விதைகளைப் பொறுக்கித் தயார்செய்வது மிக அத்தியாவசியமானது. சிலாக்கியமில்லாத விதையிலிருந்து நல்ல பயிர் உண்டாக மாட்டாது. மேல் நாடுகளில் எந்தப் பயிருக்கும் நல்ல விதைகளென்று தீர்மானிக்கப்பட்ட விதைகளை விற்பதே தங்களுக்குப் பிழைப்பாகக்கொண்ட நம்பிக்கையான விதை வியாபாரிகள் அநேகரிருக்கிறார்களாம். இந்த தேசத்தில் அப்படியில்லாமையால் ஒவ்வொரு ஸம்ஸாரியும் தனக்கு வேண்டிய விதைகளைத் தானே தயார்செய்து வைத்துக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. பின் சொல்லப்படும் விஷயங்கள் பொதுவாய் எல்லாப் பயிர் வகைகளுக்கும் பொருந்தும். சாகுபடி எவ்வளவு நன்றாய்ச் செய்தாலும், எவ்வளவு தாராளமாய் எருவிட்டாலும், நல்ல விதை விதைக்கப்படாதவரையில் சிலாக்கியமான பயிரையும் நல்ல கண்டுமுதலையும் எதிர்பார்க்க முடியாது. விதை பொறுக்குவதில் அனுசரிக்க வேண்டிய சில வழிகளாவன :—

1. நிலத்தின் சிலாக்கியமான பாகத்தை விதைக்கென்றே தனியாக எரு முதலானவைகளை நன்றாய்ப் போட்டு செய்நேர்த்தி செவ்வனே செய்து இந்தப் பாகத்திலுண்டாகும் பயிரை மறு வருஷத்து விதைக்காக நிறுத்தி விடவேண்டியது.

2. நிலத்தில் பயிரிருக்கும்போது சுற்றிப் பார்த்து சிலாக்கியமான பயிரிருக்கும் பாகங்களைக் குறித்து வைத்து இவைகளிலிருந்து விதை எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

3. சீக்கிரமாய்க் காய் முதிரும்படியான பயிரை உண்டாக்க வேண்டுமானால் இவ்விரண்டு வகையும் உதவாது. சீக்கிரமாய் முதிருங் காய்களைப்பொறுக்கி எடுத்து அவைகளிலிருந்து மட்டும் விதைகளைப் பொறுக்கி வைக்கவேண்டும்.

4. இன்னொருவிதம் என்னவென்றால் பயிர் முழுமையிலும் நன்றாய்ப்பருத்து முதிர்ந்து காத்திரமாயிருக்கிற காய்களிலிருந்து விதை எடுத்து வைப்பது.

இந்த விதைகளுக்குப் பயிரில் வியாதி முதலியவை அண்டவிடாமற் செய்யவும். அகஸ்மாத்தாய் வருபவைகளிலிருந்து லகுவாய் ஈடேற போதுமான வலிமையும், வீறும் இருக்கும்.

THE PALUR FARM.

பாலூர் விவஸாயப்பண்ணை.—நெல்லிக்குப்பத்துக்கடுத்த பாலூர் விவஸாயப்பண்ணையில் செய்யும் பயிர்களைப் பார்ப்பதற்குரிய காலங்களாவன :—

செப்டம்பர் மாஸம் 20தேதி வரையில்.

புன்செய் நிலங்களில்—(1) பலவித கதிர் தானியப் பயிர்களுடன் மணிலாக்கொட்டை (நிலக்கடலை) கலந்து செய்யும் பரிசோதனைப் பயிர்களும்

(2) நன்செயில் பசுந்தழைக்காக விதை யெடுக்க வேண்டி புன்செயில் பயிராகும் பசுந்தழைப் பயிர்களும்

(3) பல மணிலாக்கொட்டை தினுசுகளும்

(4) நன்செயில் ஒற்றை அலகு நட புன்செயில் தெளிவாக விட்டிருக்கும் நெல் நாற்றங்கால்களும் பார்வையிடலாம்.

நன்செயில்—மத்திய மாகாணத்திய அநேகவித முதல்போகத்துக் குரிய நெல் தினுசுப் பயிர்களையும்

பசுந்தழை எருவிட்ட பூமியில் செழிப்பாய் நெல் பயிர் வளர்ந்திருப்பதையும் பார்க்கலாம்.

கரும்புப்பயிர் செய்பவர்கள் அநேக கரும்பு தினுசுகள் பயிராயிருப்பதைப் பார்க்கலாம்.

நன்செய் பசுந்தழைக்கென்று பயிராகிவரும் சில பசுந்தழை எரு தினுசுகளையும் பார்க்கலாம்.

ஜனவரி, பிப்ரவரி மாஸங்களில்.

ஒற்றை அலகு நட்டு பயிராகி கதிரிலிருக்கும் அநேகவித சம்பா நெல் தினுசுகள் பார்க்கத்தகுந்தவை.

அப்பொழுது நன்றாய் வளர்ந்த கரும்பையும் பார்க்கலாம்.

இறைப்பு பூமியில் பயிராகும் பரிசோதனையையும் பார்க்கலாம்.

தென்னாற்காடு ஜில்லாவிற்கு கம்போடியாப் பருத்தி மிக சிலாக்கியமானதும், லாபகரமானதுமாகக் காணப்படுகிறது.

மே, ஜூன் மாஸங்களில் நன்செய் நிலமுள்ள தாலூகா தாசில்தார்கள் வந்து பார்த்தால் நன்செய் பூமிகளில் பசுந்தழை எருவகைகள் சாகுபடி அவர்களது மனதைக் கவரும்.

நெல்லிக்குப்பத்துக் கடுத்த பாலூர் விவஸாயப் பண்ணை மானேஜருக்கு முன்னமே தெரிவித்தால் பண்ணைக்கு ஒரு மைலிலிருக்கும் பாலூரில் தங்குமிடத்திற்கும், ரெயில் மார்க்கமாய் வரப்பட்டவர்களுக்கும், நெல்லிக்குப்பத்திலிருந்து விவஸாயப்பண்ணைக்கு வரவேண்டிய சாமான்களுக்கும், ஏற்பாடு செய்வார்.

INDUSTRIAL NOTES.

கைத்தொழில் குறிப்புகள்.

PUNJAB INDUSTRIES.

பஞ்சாப் மாகாணத்துத் தொழில்கள்.—பஞ்சாப் மாகாணத்துத் தொழில் இலாகா டைரெக்டர் அந்த மாகாணத்திலே எந்தத் தொழில்களை என்னமாதிரி விருத்தி செய்ய முயன்றால் அந்த முயற்சி பலனைத் தருமென்று விசாரித்தறிந்து வருகிறார்.

INDUSTRIES IN JAPAN.

ஜப்பானில் கைத்தொழில்கள்.—ஜப்பான்தேசம் ருஷியா யுத்தத்துக்குப் பிறகு கைத்தொழில்களை ஸ்தாபிப்பதிலும், அந்நிய வர்த்தகத்தை வளர்ப்பதிலும், தீவிரமான முயற்சிகள் செய்துவருகிறது. ஸமீப காலத்துக்குள் விருத்திக்கு வந்திருக்கும் கைத்தொழில்களில், பருத்தி நூல் செய்தலையும், தீக்குச்சி செய்தலையும் முக்கியமாய்ச் சொல்லலாம். பல புதுத் தொழிற்சாலைகளில் பருத்தி நூல் ஏராளமாய்ச் செய்து சைனாவுக்கு அனுப்பி, அங்கே நமது நூல் விலையாவதைக் குறைத்து வருகின்றது. பம்பாய், ஆமிதாபாத் முதலிய இடங்களிலுள்ள நமது பஞ்சாலைக்காரர்கள் செய்துவரும் நூல் இதுவரையில் விசேஷமாய்ச் சைனாவுக்கு அனுப்பப்பட்டு, நல்ல லாபம் கொடுத்து வந்தது. அது இப்போது ஜப்பானின் போட்டியாலும் நம்மவர்களின் ஊக்கக் குறைவாலும் குறைந்துவருகிறது.

A COTTON GIN.

ஒரு பருத்தி அரைக்கும் யந்திரம்.-திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் ஏராளமாய்ப் பருத்தி விளையக்கூடிய பெரம்பலூர் தாலூகாவிலுள்ள மிராசுதார்களும், வியாபாரிகளும் பருத்தியை அரைத்து விதையை வேறாகச்செய்வதில் படும் கஷ்ட நஷ்டங்களை நிவர்த்தித்து, அனுகூலத்தையும், ஆதாயத்தையும் சுதேசியர்களாகிய நமக்கு உண்டுபண்ண வேண்டுமென்ற எண்ணங்கொண்டு, தேவகோட்டை ராம. அரு. அரு. ராம. அருணாசலம் செட்டியார், திருநெல்வேலி கே. கோபால கிருஷ்ணய்யர், இவர்கள் இருவரும் கஸ்பா பெரம்பலூரில் பருத்தி அரைக்கும் யந்திரமொன்று ஸ்தாபிக்க வேணுமென்ற எண்ணத்துடன் சென்ற ஒரு வருஷ காலமாய் ஊருக்கு மேல்புறம் கால் மைல் தூரத்தில் ரூ. 35,000 வரையில் செலவு செய்து தகுதியான கெட்டிக்கட்டிடமொன்று கட்டி, மேற்படி மெஷினையும் ஸ்தாபித்தார்கள். மேற்படி ஜின்னிங் பாக்டரியின் வேலை ஆரம்ப விசேஷ தினத்தில் அகஸ்மாத்தாய் கஸ்பா பெரம்பலூருக்கு விஜயஞ்செய்த திருச்சினாப்பள்ளி கலெக்டர் மிஸ்டர் யங் அவர்களைக்கொண்டு மேற்படி பாக்டரியை திறப்பிக்க வேண்டுமென்று உத்தேசித்து, அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மிஸ்டர் கே. கோபால கிருஷ்ணய்யரின் கோரிக்கைபடி 25-7-10 மாலை 6-30 மணிக்கு கலெக்டரவர்களால் பாக்டரி திறக்கப்பட்டுப் பருத்தி அரைப்பும் நடந்தேறியது.

THE PUNALORE PAPER MILL.

புனலூர் பேபர் மில்.—திருவாங்கூர் சமஸ்தானத்தில் கொல்லம் டிவிஷனைச் சேர்ந்த புனலூர் என்ற ஊரில் சில காலத்துக்கு முன்னால் ஸ்தாபிக்கப்பட்டுப் பிறகு கைவிடப்பட்டுப்போன ஒரு காயிதத் தொழிற்சாலையை ஸமீபத்தில் சில நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் வாங்கி நடத்தி வருகிறார்கள் என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். செல்வம் பெருத்தவர்களான செட்டிமார்கள் இம்மாதிரி கைத்தொழில் நடத்துவதில் பிரவேசிப்பது அரிது. பிரவேசித்தால் வேண்டிய மூலதனத்தைப் போட்டு நடத்துவார்களென்று நம்பலாம். இந்தப் பேபர் மில்லுக்கு இப்போது லக்ஷ ரூபாய் மூலதனம் வைத்திருப்பதாகவும் அதில் பங்கொன்றுக்கு 100 ரூபாய் விகிதம் 850 பங்குகள் செட்டிமார்களே வாங்கிக் கொண்டிருப்பதாகவும் அறிகிறோம். பாக்கி 150 பங்குகள் விற்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேபர் மில் ஸரியாய் நடத்தப்படுமானால் நூற்றுக்கு முப்பது வரையில் லாபம் வருமென்று சொல்லப்படுகிறது.

இந்த மில்லில் மானேஜரா யிருந்து நடத்துகிறவர் சென்னை நாஷனல் பண்டு தொழிற் சங்கத்தாரின் உதவியால் ஜப்பானுக்குப் போய் பேபர் செய்யும் தொழிலைக் கற்றுப்பிறகு அங்கு கற்ற வித்தையை மற்றத் தேசங்களுக்குப் போய்ப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்த மிஸ்டர் கே. பி. கரியப்பா என்பவர். இதை நடத்தும் செட்டிமார்கள் இவர் ஆலோசனையைக் கேட்டும் ஸமயோசிதமாய் செலவு செய்தும் மில்லை நடத்துவார்களானால், அவர்கள் விசேஷ லாபம் பெறுவதுமன்றி தேசத்துக்கு நன்மை செய்கிறவர்களுமாவார்கள். இந்த மில்லுக்கு ஸெக்ரிடெரியாயிருப்பவர் மிஸ்டர் எஸ். கே. ஆர். லக்ஷ்மணன் செட்டியார்.

EDUCATIONAL NOTES.

வித்யா விஷயக் குறிப்புகள்.

The Tanjore Educational Exhibition.

தஞ்சாவூரில் கல்விப் பொருட் காக்ஷி.—தஞ்சாஊரின் ஸமீபத்தில் கவர்ன்மெண்டு ட்ரெயினிங் ஸ்கூலில் கல்விப் பொருட்காக்ஷி ஒன்று நடந்தது. அப்பொழுது அனேக உபாத்தியாயர்களும், பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளும் சேர்ந்திருந்தார்கள். அந்தக் காக்ஷி ஸ்கூல் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் வி. ஆர். வெங்கடராம அய்யரால் திறக்கப்பட்டது. இந்த வருஷம் அதில் காண்பித்த பொருள்களெல்லாம் சுதேசப்பொருளாகவே இருந்தன. இந்தக்காக்ஷியையொட்டி அனேக உபன்னியாஸங்களும் நடந்தன.

Primary School Teachers.

ப்ரைமரி பள்ளிக்கூட உபாத்தியாயர்கள்.—திருவாங்கூர் சமஸ்தானத்தில் கீழ்த்தர ஸ்கூல்களை நடத்தும் உபாத்தியாயர்களின் சம்பளம் அதிகக் குறைவாயிருக்கிறபடியாலும்; தற்காலம் எல்லா ஜனங்களுக்கும் ஜீவனம் கஷ்டமாகிவிட்டபடியாலும் அவர்களுடைய சம்பளத்தை ஏழு ரூபாயிலிருந்து பத்து ரூபாயாக உயர்த்துவதாய் அந்த சமஸ்தானத்துக் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். நல்ல திறமையுள்ள உபாத்தியாயர்களாயிருந்தால் அவர்களுக்கு இந்த சம்பளத்தோடு, 5, 7, 10, 15 இம்மாதிரியாகக் கூட்டிக் கொடுக்கப்படுமென்றும் அறிகிறோம். இந்த ஸ்கூலை நடத்துவோர் எங்கேயாவது பீ. ஏ. பட்டம் பெற்றவராயிருந்தால் அவருக்கு 10 ரூபாய் சம்பளத்தோடு 15 ரூபாய் கூட்டிக் கொடுக்கப்படுமாம்.

Moral Training in Schools.

ஸ்கூல்களில் ஒழுக்கப்பயிற்சி.—சென்னப்பட்டணத்தில் கவுன்ஸில் ஆப் நேடிவ் எடுகேஷன் என்று ஒரு ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதாவது நம் ஜனங்களுடைய படிப்பைப்பற்றி ஆலோசனை சொல்லும் ஸங்கம். இதில் பச்சையப்பன் காலேஜில் ஒரு உபாத்தியாராகிய மிஸ்டர் எஸ். ராஜகோபாலாசாரியார் ஸெக்ரிடரி. நம் அட்வொகேட் ஜெனரலாகிய கனம் ஆனரெபில் சிவசாமி அய்யர் ப்ரொவிடெண்டு. ஸமீபத்தில் இந்த ஸங்கத்தார் அங்கங்குள்ள ஹைஸ்கூல்கள், காலேஜ்கள் இவைகளுடைய தலைவர்களுக்கு ஒரு சுற்றுக்கடிதம் அனுப்பி அதில் பிள்ளைகளுக்கு மதப்பயிற்சியும், ஒழுக்கப்பயிற்சியும் செய்வதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன, என்ன ஏற்பாடுகள் செய்யக்கூடும் என்று கேட்டு விட்டிருக்கிறார்கள். உயர்ந்த வகுப்புகளில் விவாகமான பிள்ளைகளைச் சேர்ப்பதில்லை என்று கட்டுப்பாடுசெய்ய முடியுமாவென்றும் கேட்டு விட்டிருக்கிறார்கள்.

Madras Primary Schools.

சென்னை ப்ரைமரிப் பள்ளிக்கூடங்கள்.—சென்னைப்பட்டணத்திலுள்ள ப்ரைமரிப் பள்ளிக்கூடங்களுக்கு நல்ல கட்டிட வஸதி அமைப்பதைப்பற்றி ஆலோசனை செய்து சொல்ல கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட கமிட்டியார் தங்கள் ரிபோர்ட்டை அனுப்பியிருக்கிறார்கள். அதில் பாதிரிமார்களின் ஸ்கூல்கள் அல்லாத மற்ற ப்ரைமரிப் பள்ளிகூடங்களுக்கு ஸரியான கட்டிடங்களில்லையென்றும், ஆகையினாலே சென்னை முனிஸிபாலிட்டி 20 டிவிஷன்களுக்கும், ஒரு டிவிஷனுக்கு 2 ஸ்கூல்கள் வீதம் 40 மாடல் அதாவது மாதிரிப் பள்ளிக்கூடங்கள் முனிஸிபாலிட்டியார் கட்டிவிட வேண்டுமென்றும், ஒவ்வொரு பள்ளிக்கூடமும் 8,000 ரூபாய் அல்லது 10,000 ரூபாய்ச் செலவில் கட்டவேண்டுமென்றும், 10 வருஷ காலத்தில் அவ்வளவு பள்ளிக்கூடங்களையும் கட்டி முடித்து விடவேண்டுமென்றும், ஒவ்வொரு பள்ளிக்கூடத்தையும் வைத்து நடத்த வருஷத்தில் 1,500 ரூபாய் பிடிக்குமென்றும், அந்தக்கணக்குப்படி 40 பள்ளிக்கூடங்களுக்கும் வருஷத்தில் 60,000 ரூபாய் பிடிக்குமென்றும், சம்பள வசூலில் கிடைக்கும் வரும்படி 12,000 ரூபாய் போக முனிஸிபாலிட்டி கையைப் பொறுக்கும் செலவு வருஷத்தில 48,000 ரூபாயாகுமென்றும், அவ்வளவு தொகை செலவாகக்கூடியதை உத்தேசித்து கார்போரேஷன் அதிகாரிகள் இப்போது முனிஸிபாலிட்டியிலுள்ள ப்ரைமரிப் பள்ளிக்கூடங்களுக்கு வருஷந்தோறும் 20,000 ரூபாய் திரவிய சகாயம் செய்யவேண்டியதாயிருக்கும் பொறுப்பை அவர்கள் தலையில் கவர்ன்மெண்டார் போடாமலிருக்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

LITERARY NOTES.

புஸ்தகக் குறிப்புகள்.

The Present State of Tamil.

தமிழின் தற்கால நிலைமை.—நாளது அக்டோபர் மாஸம் 24-ம் தேதி யன்று சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ் ஸங்கத்தின் முன்பு "பிழைக்கும் வழி" யின் பத்திராதிபர் "தமிழின் தற்கால நிலைமை" யைப் பற்றி தமிழ் பாஷையிலேயே ஒரு உபந்யாஸம் செய்தார். ஹைகோர்ட்டு ஜட்ஜ் கனம் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் அக்கிராஸனம் வகித்தார். தற்காலத்தில் சில தமிழ் பண்டிதர்கள் எழுதுவதில் கடினமான வார்த்தைகளை உபயோகப்படுத்துவதாலும் ஸந்தியை அதிகமாய்ச் சேர்த்து எழுதுவதாலும் வசனங்களின் அர்த்தம் தெளிவாகத் தெரிகிறதில்லை. ஸாமான்ய ஜனங்கள் பேசுவது ஒரு வரம்புக்கும் உட்படவில்லை. ஆகையால் இந்த இரண்டு வகை நடைகளையும் அங்கீகரிக்க முடியாது.

இங்கிலீஷ் தமிழ் இரண்டும் படித்தவர்கள் பண்டிதர்களைப்போல் கடினமாயும், ஸாமான்ய ஜனங்களைப்போல் கேவலமாயும் எழுதாமல் இலக்கணப் பிழைகளில்லாமல் ஜனங்களுக்குத்தெரியும்படிக்கும், தற்கால நவீன உணர்ச்சி, எழுச்சி, முயற்சிகளுக்குத் தக்கபடியும் எழுதிவருவதால், இப்படிப்பட்டவர்களுடைய நடையே அங்கீகரிக்கத்தக்கதென்று சொன்னார்.

தவிர, தற்கால நாகரிகம், சாஸ்திரம், இவைகளைக் குறிக்கும் இங்கிலீஷ் வார்த்தைகளுக்கு ஸரியான பிரதி பதங்கள் தமிழில் இல்லாவிட்டால் இங்கிலீஷ் வார்த்தைகளையே தமிழில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், இப்படிப்பட்ட வார்த்தைகளை அவைகளின் உச்சரிப்புப் பிரகாரமே தமிழில் எழுதுவதற்கு அந்தபாஷை அக்ஷரங்கள் போதாததால், வேண்டிய அக்ஷரங்களை கிரந்தத்திலிருந்து சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் சொன்னார். அக்கிராஸனாதிபதி மேலே சொல்லிய விஷயங்களெல்லாம் தமிழில் பாண்டித்யமுள்ளவர்கள் செய்யவேண்டிய வேலைகள் என்றும், அதற்காக ஒரு ஸங்கம் ஏற்படவேண்டும் என்றும் சொல்லி முடித்தார்.

Mr. Minakshisundaram Pillai's Works.

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு.—தமிழ்நாடெங்கும் தம்பேர் நிறுவிச்சமீபத்திலே காலஞ்சென்ற மகாவித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களையறியாத தமிழரொருவருமிலர். இவரியற்றிய நூற்கள் பல. அதிவிரைவிற் கவிபாடுவதிலும், சொல்லழகும், பொருளழகும், சந்தவினிமையு மொருங்கே வாய்ப்பச் செய்யுள் அமைப்பதிலும் இவருக்கு நிகராகப் பண்டைக்காலத்துப் பெரும்புலவர்களையே சொல்லல் வேண்டும். இவராலியற்றப்பெற்ற பதிகங்கள், கலம்பகங்கள், கோவைகள், உலாக்கள், தூதுகள், புராணங்கள், பிள்ளைத்தமிழ்கள் முதலியவை பல. தவிர, அவ்வக்காலத்துவந்தியற்றிய பாயிரங்களும், சமயோசிதமாகக்கூறிய தனிப்பாடல்களும் பல. இவர்தம் நூற்கள் பலவற்றுள் மிகச்சிலவே இதுவரை அச்சாயிருக்கின்றன. மற்றவை கையெழுத்திலும், மனப்பாடத்திலுமிருந்து வந்தன. நாளாக இவை செல்லரித்தும், மறந்தும், உருமாறியும் போகக்கூடுமாதலானும், பெரியோர் மொழிகளைப் பொன்னே போற் போற்றுதல் வேண்டுமாதலானும் மகாமகோபாத்தியாயர் பிரம்மஸ்ரீ வே. ஸாமிநாதய்யரவர்கள் இவற்றையெல்லா மொருங்குதிரட்டிப் பதிப்பித்த உதவி தமிழரால் மறக்கத்தக்கதன்று. ஸாமிநாதய்யரவர்களுடைய கல்வி வல்லமையும், ஆராய்ச்சிப் பெருக்கும், நுண்ணிய அறிவும் நம்மாலளவிடப்படுபவையல்ல. தமிழ் நூற்களைப் பிழையறப்பரிசோதித்து அழகுபெற அச்சிடும் பெரிய வல்லமை ஐயரவர்களுக்கு இபற்கையிலேயே அமைந்திருக்கிறது. மிக்க சிரமமெடுத்துப் பலவிடங்கள் சென்று, பன்முறை ஆராய்ந்து இந்நூலைப் பதிப்பித்திருக்கின்றார்கள். புத்தகம் மிகவும் அழகாய் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது. விலை ரூபா 2-8-0. பிள்ளையவர்களுடைய சரித்திரமும் ஐயரவர்களாலெழுதப்படுகின்றதென்றும் விரைவில் வெளிவருமென்றுமறிந்து மிகவும் சந்தோஷிக்கிறோம்.

LEGAL NOTES.

சட்டக் குறிப்புகள்.

A KARNAM FINED.

ஒரு கணக்கப்பிள்ளைக்கு அபராதம்.—அனந்தப்பூர் ஜில்லாவில் கல்யாணதுர்க் என்னும் ஒரு கிராமத்தில் வெங்கட்டராவ் என்னும் ஒரு கணக்கப்பிள்ளை ரிவினியூ இன்ஸ்பெக்டர் அனுப்பிய ஸம்மனுக்கு ஆஜராகத்தவறி விட்டாராம். இவர் ஸம்மனுக்கு ஆஜராகவேண்டிய தேதியில் தான் அஸௌக்கியமாயிருந்ததாய் தெரிவித்துக் கொண்டார். இவருக்கு தாசில்தார் ரூபா 10 அபராதம் விதித்தார். மேற்படி சிக்ஷை அனந்தபூர் டிவிஷன் மாஜிஸ்டிரேட்டாரால் காயப்படுத்தப்பட்டது.

இரண்டு கோர்ட்டார்களுடைய தீர்ப்பையும் மாற்றும்படிக்கு அனந்தபூர் கலெக்டர் ஹைகோர்ட்டுக்கு ரிபர் செய்தார்.

அங்கே ஜட்ஜி கீழ் கோர்ட்டாருடைய தீர்ப்பை மாற்ற ஸரியான காரணமில்லை என்று அபிப்பிராயப்பட்டு கேஸைத் தள்ளிவிட்டார்.

RECEIPT.

ரசீது.—ஒத்தி பெந்தகப் பத்திரத்தின் தொகையின் ஒரு பாகத்தைச்செலுத்தி அது ரூபா 100-க்கு மேற்பட்டிருந்து ரசீது பிறந்தால் அந்த ரசீது ரிஜிஸ்டராகவேண்டும். ரிஜிஸ்டர் செய்யப்படாவிட்டால் கோர்ட்டில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. ஆயினும் ரசீதைக் கோர்ட்டில் தள்ளிவிட்டாலும் சாட்சிகளைக் கொண்டு தொகை செல்லாகிவிட்டதாக ருஜுப் படுத்தலாம்.

SINGLE WITNESS.

ஒரு சாக்ஷி.—அடமான பத்திரமாவது அல்லது ஜாமீன் பத்திரமாவது ஒரு சாக்ஷியால் மட்டிலும் கையெழுத்து செய்யப்பட்டிருந்தால் அது சௌமணியாகமாட்டாது. பத்திரத்தின் பின்புறத்தில் சப் ரிஜிஸ்டாருடைய கையெழுத்தும் சாக்ஷியினுடைய கையெழுத்து மிருப்பது மேற்படி பத்திரத்தை ருஜுப்படுத்த போதுமான சாக்ஷியமாகமாட்டாது. கிரீந்திரநாத் முக்கார்ஜி V. பீஜாய் கோபால் முக்கார்ஜி. 26-கல். 247.

MORTGAGE.

அடமானம்.—அடமானம் வைத்தவன் பணத்தை திருப்பிக்கொடுக்கவேண்டிய காலத்தில் கொடுக்காவிட்டால் மத்தியஸ்தர்கள் என்ன விலை அந்த சொத்திற்கு மதிப்புப்போடுகிறார்களோ அந்த விலைக்கு விற்றுப்போடுகிறதென்று அடமானம் வைத்தவனும் அடமானம் வாங்கினவனும் எக்ரிமென்ட் செய்துகொள்வது சொத்தை மீட்கும் நியாயத்திற்கு விலக்காயிருக்கிறபடியால் இந்த எக்ரிமென்டை ஊர்ஜிதப்படுத்த முடியாது. கானரன் V. கட்டேலி 21 சென். 110.

CONTEMPT OF COURT.

கோர்ட்டாரை அலக்ஷியம் செய்தல்.—கிருஷ்ணா ஜில்லாவில் ஒரு சப் மாஜிஸ்ட்ரேட் கேசு விசாரித்துக்கொண்டு இருக்கையில் ஒருவன் "கிருஷ்ணு. ஜடா" போட்டுக்கொண்டு அடுத்த தாழ்வாரத்தில் சத்தம்பட நடந்தானாம். கோர்ட்டில் வேலைசெய்வது இந்த சத்தத்தினால் தடைபட்டு விட்டது என்று பினல்கோடு 228வது பிரிவுப்படி சப் மாஜிஸ்ட்ரேட் அவனுக்கு இரண்டு ரூபாய் அபராதம் போட்டார். அவன் கோர்ட்டு வேலையை தடை செய்யவேணும் என்கிற எண்ணத்துடன் அப்படி நடந்தான் என்பதற்கு சாக்ஷியமில்லை என்றும், அபராதம் விதித்திருக்கப்படாதென்றும் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் தெரிவிக்க, அபராதத்தை ஹைகோர்ட்டில் மாற்றி சப்மாஜிஸ்ட்ரேட் அதிகாரவரம்பை மீறி இருக்கிறார் என்றும் ரிமார்க்கு செய்திருக்கிறார்கள்.

SHARE OF THE PROFITS.

லாபத்தில் பங்கு.—வியாபாரம் செய்யும் ஒருவன் தான் அந்த வியாபாரத்தை விட்டுவிட்டு அந்த வியாபார ஸ்தானத்தையும், அந்த வியாபார நாமதேயத்தையும், மற்றொருவனுக்கு விக்கிரயம் செய்தான். விக்கிரயம் செய்த நன்மைக்கு வாங்கினவன் செய்யும் வியாபாரத்தில் லாபத்தில் கொஞ்சம் வருஷாசலமாக விற்றவனுக்குக் கொடுக்கவேண்டியதென்று விக்கிரய தஸ்தாவேஜில் யெழுதிக் கொள்ளப்பட்டது. இந்த வருஷாசலத்தைப் பெற்றுக்கொண்ட மாத்திரத்தில் விற்றவன் வாங்கினவனுடைய வியாபாரத்தில் பாகஸ்தனாகமாட்டான். பாகஸ்தனுக்கு இருக்கும் ஜவாப்தாரித்தன்மை இப்படி விற்றவனுக்குக் கிடையாது.

SCIENTIFIC NOTES.

சாஸ்திரீயக் குறிப்புகள்.

HUMAN RESPIRATION.

மனிதரின் மூச்சு.—மூச்சை உள்ளிழுப்பதும், வெளிவிடுவதும் எல்லாருக்கும் ஒரே தன்மையாயிராது. அவரவருடைய தேகவாசியைப் பொறுத்திருக்கும். ஜர்மன்தேச வைத்தியரொருவர் பொதுவாக ஒரு மனிதனின் உள் சுவாஸம், வெளிச் சுவாஸங்களைக் கணக்கிட்டிருக்கிறார். அதாவது ஒருவன் ஒரு நிமிஷ நேரத்துக்குள் 20 தடவை மூச்சுவிடுவதுண்டென்றும், ஒரு தடவை மூச்சை உள்ளிழுத்து வெளிவிட மூன்று விநாடியாகுமென்றும், இந்தக் கணக்குப் பிரகாரம் பார்த்தால் ஒரு மணிக்கு 1,200 தடவை ஒருவன் மூச்சுவிடுவதே கிரமமாகுமென்றும் கண்டுபிடித்திருக்கிறார்.

SILK WORMS IN THE SEA.

கடலில் பட்டுப்பூச்சி.—மெடிட்டரேனியன் கடலில் பின்னா என்ற ஒருவிதக் கணவாய் மீனிலிருந்து பட்டு எடுக்கப்படுகிறது. இந்த மீனானது ஒரு பசுபசுப்பான பட்டை நூற்கக்கூடிய சக்தியுடையதாயிருக்கிறது. ஸிஸிலித்தீவார் அந்த இழையை எடுத்து வஸ்திரம் நெய்து வியாபாரஞ் செய்கிறார்கள். இந்த மீன் கற்பாறைகளில் தன்னைப் பலப்படுத்திக்கொண்டு சிலந்திப்பூச்சி எவ்விதம் தன் உமிழ்நீரைக்கொண்டு வலை செய்துகொள்ளுகிறதோ அது போலவே கடலில் வலை செய்துகொள்ளுகிறது. அது தனக்குப் பிரியமான இடத்துக்கு இழையைச் செலுத்தி அதைக் கற்பாறையில் நன்றாய் ஒட்டி ஸ்திரப்படுத்திப் பிறகு வேறு இழைகளை வேறு இடங்களில் செலுத்தும். ஒரு இழை அறுந்து போனால் உடனே அதற்குப் பதில் வேறொன்று உண்டாக்கிக்கொள்ளும். கடலில் தண்ணீர் வடிந்து போயிருக்கையில் ஜனங்கள் கடற்கரைக்குப்போய் அந்த இழைகளைச் சேகரித்து சவர்க்காரத் தண்ணீரில் கழுவிக் காயவைத்து, நீட்டி, சிக்கில்லாமல் சீவி, இழையிழையாய்ப் பிரித்து, வேலைக்கு ஆயத்தப்படுத்திக்கொள்ளுகிறார்கள். அதை நூற்றெடுத்தால் பட்டு வஸ்திரமாகிறது. பொன்னிறத்தில் கபில வர்ணங் கலந்ததுபோல் பார்வைக்குத் தோன்றும்.

SCIENTIFIC KNOWLEDGE.

சாஸ்திர ஞானம்.—நம்மவர்களுக்குள்ளே அநேகர் பூதபௌதிக சாஸ்திரம், வான சாஸ்திரம், கணித சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், முதலியவற்றில் கல்வி பயின்று பாண்டித்தியம் பெறுவதெல்லாம் உயர்ந்த பரீக்ஷைகளில் தேறிபிறகு உத்தியோகம் செய்வதென்னும் சேவகத்துக்குத்தான் என்று மதிமயக்கங் கொள்ளுகிறார்கள். இவர்கள் இப்படியிருக்க, விவஸாயம், வர்த்தகம் முதலியவைகளில் பிரவர்த்திக்க விருப்பமுடையவர்களோ மேலே சொன்ன சாஸ்திரங்களில் பயில்வது முற்றும் அனாவசியமென்று நினைக்கிறார்கள். இவ்விருதிறத்தாருடைய அபிப்பிராயங்களும் தப்பானவை. மேல் கண்ட சாஸ்திரங்களின் உணர்ச்சி கிருஷிகர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், தேசம் சீர்படுவதற்கேற்ற கைத்தொழில் முதலியவற்றில் பிரவர்த்திக்கிற எல்லாருக்கும் அத்தியாவசியம். அர்த்த சாஸ்திர உணர்ச்சியையும், பொருள்களின் குணாகுணங்களைப்பற்றிய சாஸ்திர உணர்ச்சியையும் பூரணமாய் அடையப்பெற்ற வர்த்தகர்கள் அப்படிப்பட்ட உணர்ச்சி கொஞ்சமேனும் இல்லாத வியாபாரிகளைவிட பெருத்த லாபம் அடைவார்கள். இதற்கு உதாரணமாக அடியில் வருவதைக் காட்டுகிறோம்:—

ஐந்து ரூபாய் பெறுமான இரும்புத்துண்டு ஒன்றை குதிரை லாடங்களாகச்செய்து வியாபாரம் பண்ணினால் அது பத்தரை ரூபாய்க்கு விலை போகிறது. அதே இரும்புத்துண்டை ஊசிகளாகச் செய்து விற்றால் 385 ரூபாய்க்கு விலையோடுகிறது. அதே இரும்புத்துண்டை இறகுகள் சீவுவதற்கான கத்திகளாகச்செய்து விற்பனை செய்தால் 2,285 ரூபாய் கிடைக்கிறது. அதே துண்டை கடிகாரங்களுக்கு உதவத்தக்க ஸ்பிரிங் அதாவது வில்லுகளாகச்செய்தால் 3,50,000 ரூபாய் கிடைக்கிறது.

இப்படிப்பட்ட விஷயத்தை அறிவதற்குப் பதார்த்தங்களின் குணாகுணங்களையும் அவைகளின் உபயோகங்களையும் அவைகளைக்குறித்த மற்றும் அநேக விவரங்களையும் தெரிந்திருப்பது அத்தியாவசியம் அல்லவா? ஆகையால் வர்த்தகன் எவ்வளவு சாஸ்திர உணர்ச்சியுடையவனாயிருத்தல் வேண்டுமென்பது இதனால் விளங்கும். இப்படியே கிருஷிகன் முதலிய எல்லாருமென்று அறிக.

MEDICAL NOTES.

வைத்தியக் குறிப்புகள்.

OX BILE.

கோரோஜனம்.—மாடு கன்றுகளின் பித்த கோசத்தில் கிடைக்கும் பித்தரஸத்தை நாம் சுத்திசெய்து குழந்தைகளுக்கு அஜீர்ண ஸம்பந்தமான நோய்களில் உபயோகப்படுத்துகிறோம். இதற்கு கோரோஜனமென்று பெயர். இதன் உபயோகம் நமது நாட்டாருக்குத் தெரியாது. பித்தம், மஞ்சள் வர்ணமாயும், கசப்புள்ளதாயும் இருக்கும். சில ஸமயங்களில் பித்தம் கல்லைப்போல் கட்டியாயும் இருக்கும். கோரோஜனம் பித்த கோசத்திலும் கிடைக்கிறது. கட்டியாய்க்கிடைக்கும் பித்தரஸத்தை சிகாகோ நகரத்தார் கசாப்புக் கடைக்காரர்களிடமிருந்து வாங்கி சுத்திசெய்து ஜப்பான்முதலிய இடங்களுக்கு அனுப்புகிறார்கள். இதன் விலை பௌண்டு ஒன்றுக்கு 300 முதல் 500 ரூபாய் வரையிலாகும். பட்டுத் துணிகளுக்கு வர்ணமிடவும், மற்றக் கைத்தொழில்களுக்கும் இதை உபயோகப் படுத்துவார்கள். நமது தேசத்தில் மாடு கன்றுகளின் மாம்ஸத்தையும், அதன் கண்டங்களையும் ஆகாரமாய் உபயோகப்படுத்துகிறார்கள். பித்த கோசம் முதலானவைகளை நிஷ்பிரயோஜனமென்று எறிகிறார்கள். இனியாவது கட்டியாய்க் கிடைக்கும் பித்த ரஸத்தை சுத்திசெய்தால் நல்ல லாபம் உண்டு.

GINGER POWDER.

இஞ்சிச் சூரணம்.—இஞ்சி பலம் 6. சுக்கு, மல்லி, ஜீரகம் தினுஸுக்குப் பலம் 3. சுக்கு ஒழிந்த மற்றச் சரக்குகளையெல்லாம் 8 எலுமிச்சம்பழ ரஸத்தில் ஊறவைத்து சற்றுநேரம் கழிந்தபின்பு நிழலில் உலர்த்தவும். இஞ்சியை வில்லை வில்லையாக நறுக்க வேண்டும். மேற்படி சரக்குகளையெல்லாம் கொஞ்சம் நெய் விட்டுப் பொன்னிறமாக வறுத்து, இடித்து, வடிகட்டி வஸ்தரகாயஞ் செய்துகொள்ளவும். சூரணத்தோடு ஸமமாக ஜீனிசர்க்கரை சேர்த்து கூடிய சூரணத்தை ஒரு புதிய கல்யத்திலாவது அல்லது சுத்தமான சீசாவிலாவது நிரப்பி வைத்துக்கொண்டு, வேளை ஒன்றுக்கு நான்கு விரல்கொண்ட அளவு, நாள் ஒன்றுக்கு மூன்று வேளை இரண்டு வாரம், சாப்பிடுவதற்கு 15 நிமிஷத்திற்கு முன், சாப்பிட வேணும். ஸகலவித பித்தமும் பித்தத்தாலுண்டாகும் வியாதிகளும், தலை கிறுகிறுப்பு, வாயில் நீர் ஊறுதல், முதலிய ரோகங்களும் நிவாரணமாகும். இது கைகண்ட மருந்து.

THE SKIN.

தோல்.—நமது தேகத்தின்மேல் காணும் தோலை தேக அமைப்பு சாஸ்திர ரீதியால் நாம் இரண்டு பாகமாகப் பிரிக்கலாம். முதன் முதல் நாம் பார்க்கிற வெளித்தோல் பொய்த்தோல். இந்தத் தோலில் நரம்பு ஓட்டமில்லை. ஆகையால் இதற்கு உணர்ச்சியென்பது கிடையாது. நாம் மண் வெட்டியைப் பிடித்து முதன் முதல் வெட்டும்பொழுது நமக்குத் தெரியாமல் நமது கை கொப்பளிக்கிறதை நாம் பார்த்திருப்போம். இது பொய்த் தோலாலுண்டாகும் கொப்பளம். இந்தப் பொய்த் தோலின் கீழ் ஒரு தோல் இருக்கிறது. இதை நாம் சருமமென்று விவகரித்துப் பேசுவோம். இந்தச் சருமம் வெகு உறுதியும் பலமுமான உறுப்பு. இதில் நரம்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சருமத்தில் ரத்த ஓட்டம் உண்டு. இந்தச் சருமத்தில்தான் நமது தேகத்திலிருந்து வேர்வை வெளியிலே கிளம்பும். வேர்வைக் குழல்கள் அதேமாதிரி சிலவித தைலத்தை வெளியில் கக்கும். தைலக்குழல்கள், மயிர், நகம், இவைகளுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேர்வைக் குழல்கள் அநேக சிறு குழல்கள் ஒன்றாகச் சேர்ந்துச் சுற்றப்பட்டு சிறு துவாரங்கள் வழியாய்ப் பொய்த்தோலின் மேல் வாயைத்திறந்து கொண்டிருக்கும். இந்த வாய்களை நாம் நம்முடைய ஸாதாரண கண்களால் காணமுடியாது. பூதக் கண்ணாடியால் நாம் பார்க்கும்பொழுது நமது தேகத்தின்மேல் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் 400 முதல் 2,000 வரையில் இந்த சிறு துவாரங்கள் காணப்படும். இந்த துவாரங்கள் நமது உள்ளங்காலிலும், உள்ளங்கையிலும் அதிகம். நமது முதுகில் கொஞ்சம் இம்மாதிரியிருக்கும். வேர்வை துவாரங்கள் நமது தேகத்தில் நாம் காணும் மயிர்களைவிடச் சிறியவைகளாயிருக்கின்றன. இந்தக் குழல்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்கிட்டுப்பார்த்து அவைகள் சற்றேறக்குறைய 2⅝ மைல் நீளம் இருப்பதாக பிரசித்த வைத்தியர் ஒருவர் சொல்லியிருக்கிறார்.

PERSONAL NOTES.

மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

SIR GEORGE CLARKE.

ஸர் ஜார்ஜ் கிளார்க்.—பம்பாய் கவர்னர் ஸர் ஜார்ஜ் கிளார்க் அடுத்த நவம்பர் மாஸத்தில் மிஸ்ஸஸ் ரெயினால்ட்ஸ் என்ற ஸ்திரீயைக் கலியாணஞ் செய்துகொள்ளப்போகிறாரென்றும், அம்மாது அவருடைய மூத்த மனைவியாகிய லேடி கிளார்க்குக்கு சொந்தக்காரியென்றும் அறிகிறோம்.

CONVERTS TO MUHAMMADANISM.

மகமதியரானார்கள்.—நீலகிரிமலையிலுள்ள நார்மன் என்ற ஒரு ஐரோப்பிய ப்ளான்டர், அதாவது கிருஷிகரும், அவருடைய பெண்ஜாதியும், மகமதியர்களாகி விட்டார்கள். நார்மன் என்பவருக்கு அப்துல்லா என்றும், அவருடைய பெண்ஜாதிக்கு அமீனா என்றும் பெயர்வழங்குகிறது.

PROFESSOR GOLDWIN SMITH.

ப்ரோபெஸர் கோல்ட்வின் ஸ்மித்.—அமெரிக்காவிலுள்ள கனடா தேசத்தில் ஒரு காலேஜ் போதகராயிருந்து அநேக நூல்கள் இயற்றிப் பிரசுரம் செய்துவந்த காலஞ்சென்ற மிஸ்டர் கோல்ட்வின் ஸ்மித் ஆசிரியர் அங்குள்ள ஒரு ஸர்வ கலாசாலைக்கு 30 லக்ஷம் ரூபாய் தருமமாய் கொடுத்திருக்கிறார்.

MR. RAJA MAHENDRA PRASAD.

ராஜா மஹேந்திர ப்ரஸாத்.—வட இந்தியாவிலுள்ள மட்ராவில் ராஜா மகேந்திர ப்ரஸாத் என்ற ஒரு கனவான் தம்முடைய ஆஸ்தியில் பாதியை எழுதிவைத்து ஒரு தொழிற் கல்விச்சாலை ஸ்தாபித்திருக்கிறாரென்றும், அந்தக் காலேஜில் ஜாதி மதம் பேதமின்றி பெரிய தொழில்களும், சிறிய தொழில்களும் இந்தியர்களுக்குச் சொல்லி வைக்கப்படுகின்றனவென்றும் தெரிகிறது.

SIR ROBERT LAIDLAW.

ஸர் ராபர்ட் லேயிட்லா.—இந்தியாவிலுள்ள ஆங்கிலோ இந்தியர்கள், யுரேஷியர்கள் இவர்களின் கல்வி அபிவிருத்திக்காக ஒரு ஆங்கிலேய கனவான் 50,000 பவுன் (7,50,000 ரூபாய்) உபகரித்திருப்பதாய் கல்கட்டா பிஷப் தெரிவித்திருக்கிறார். அப்பேர்ப்பட்ட கனவான் ஸர் ராபர்ட் லெயிட்லாவையன்றி வேறொருவருமல்லவென்று கல்கட்டா "ஸ்டேட்ஸ்மான்" பத்திரிகை சொல்லுகிறது.

LORD MINTO.

லார்ட் மிண்டோ.—கல்கட்டா இந்தியர்கள் போன ஜூலை மாஸம் 20-ந் தேதி ப்ரிட்டிஷ் இந்தியன் அஸோஸியேஷன் கட்டிடத்தில் மீட்டிங்கு கூடி, லார்ட் மிண்டோ ஜன்மதேசம் புறப்பட்டுப் போகும்போது அவரைத் தக்கபடி உபசரிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். இவர்கள் தமக்குச் செய்யும் உபசரிப்பை ஏற்றுக்கொள்ள லார்ட் மிண்டோ சம்மதித்து விட்டதாய்த் தெரிகிறது. அந்த உபசரிப்பு கல்கட்டா டவுன் ஹாலில் நவம்பர் மாஸம் 15-ந் தேதி நடக்கும். அன்று சாயங்காலம் லார்ட் மிண்டோவை ஒரு உல்லாசக் கச்சேரிக்கு வரவழைத்து உபசரிப்பார்கள்.

APPAYYA DIKSHITAR.

அப்பய தீக்ஷிதர்.—நம்முடைய நாட்டில் அப்பய தீக்ஷிதர் என்பவர் மிகவும் பேர் போன சிஷ்டர். இவர் (இங்கிலீஷ் கி. பி. 1553-) பிரமாதீச வருஷம், புரட்டாசி மாஸம், கிருஷ்ணபக்ஷம், பிரதமை உத்திரட்டாதி நக்ஷத்திரம், கன்னியா லக்கினத்தில், வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள "அடையப்பாலம்" என்ற ஒரு கிராமத்தில், விஸ்வஜித்து, ஸர்வதோமுகம், என்ற மகாயாகங்களைச் செய்து முடித்தவரும், அருமையான அத்வைத கிரந்தங்களை இயற்றினவருமான ரங்கராஜ தீக்ஷிதருடைய குமாரர். இவரை அவருடைய தகப்பனார் மிகவும் சிரத்தையுடன் வளர்த்து, ஸரியான காலத்தில் ஸகல சாஸ்திரங்களையும் கற்றுக்கொடுத்தார். அப்பய தீக்ஷிதரால் 104-சிறந்த கிரந்தங்கள் இயற்றப்பட்டன. அவைகளில் முக்கியமானவை:—அத்வைதத்தில் நியாயரக்ஷாமணி, பரிமளம், விதிரஸாயனம், நக்ஷத்திர வாதாவளி முதலியவைகளும், சைவத்தில்—"சிவார்க்கமணி தீபிகை" என்ற ஸ்ரீகண்ட பாஷ்யத்தின் வியாக்கியானமே மிகச் சிறந்தவைகள். தவிர சங்கரமதம், ராமானுஜம், ஆனந்த தீர்த்தீயம், ஸ்ரீ கண்டீயம், முதலிய இந்த நாலு நூல்களுடைய அபிப்பிராயத்தையும் அனுஸரித்து சதுர்மதலேச சங்கிரகம் என்ற வியாக்கியானம் இயற்றியிருக்கிறார்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

A Sanyasi.

ஒரு ஸ்வாமிகள்.—ஒரு ஸ்வாமிகளுக்கு பஞ்ச பக்ஷிய பரமான்னத்துடன் செவ்வையாய் விருந்திட்டார்கள். ஸ்வாமிகளும் போஜனப் பிரியராகையால், வயிறு முட்ட சாப்பிட்டுவிட்டு திண்ணையில் உட்கார்ந்திருக்கையில், வீட்டு எஜமானி வந்து “ஸ்வாமி! கொஞ்சம் பகவத்கீதை பாராயணம் செய்விக்கட்டுமா?” என்று கேட்க, ஸ்வாமிகள் வயிற்றைத் தடவிக்கொண்டு “அப்பப்பா! இனிமேல் ஒன்றும் எடுத்துக்கொள்ள முடியாது” என்று பதில் சொன்னார்.

Impatient Fault Finding.

அவஸரப்பட்டுக் கூச்சல் போடுதல்.—ஒரு குளக்கரையில் இரண்டு செம்படவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் யார்தான் அதிகமாக மீன்கள் பிடிக்கிறார்களென்று பந்தயம் போட்டுக்கொண்டார்கள். இருவரும் வெகு கவனத்துடன் குளத்தின் கரையோரத்தில் நின்றுகொண்டு மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் ஒருவன் கால் தவறி ஜலத்தில் விழுந்துவிட்டான். உடனே மற்றொருவன் பிரமாதமாக கூச்சலிட்டுக்கொண்டு “இந்தப் பந்தயத்துக்கு நான் ஒத்துக்கொள்ளவே யில்லை. தூண்டிலிட்டு மீன் பிடிக்கிறதாகப் பேச்சேயொழிய நேரே ஜலத்திற்குள்போய் கையிட்டு பிடித்து வருவதாக பேச்சேயில்லை” யென்றான்.

Worthless Questions.

அனாவசியமான கேள்விகள்.—ஒரு தாவா விசாரணைகாலத்தில் வாதிதரப்பில் சாக்ஷி சொல்லிய ஒரு உபாத்தியாருக்குப் பிரதிவாதி தரப்பு லாயர் எத்தனையோ சிக்கானகேள்விபோட்டு, “வாதிக்கும், பிரதிவாதிக்கும் இந்த சம்பாஷணை நடந்தபொழுது நீர் அவர்களுக்கு எவ்வளவு தூரத்திலிருந்தீர்?” என்று கேட்டார். அதற்கு அவர், “நான்கு கஜம், இரண்டடி, ஏழங்குலம் தூரத்திலிருந்தேன்” என்று பதில் சொல்லவே, லாயர் “அங்குலத்துடன் கூட அவ்வளவு ஸரியாய் நீர் தெரிந்துகொண்டு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் ஆச்சரியமாய் இருக்கிறது. அதற்கென்ன காரணம் சொல்லுகிறீர்?” என்று குறுக்குக்கேள்வி கேட்டார்; “எவனாவது வேலையில்லாதவன் கேட்பான் என்று நினைத்தே அளந்துபார்த்து ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறேன்” என்று உபாத்தியாயர் பதில் சொன்னார்.

Alexander and the Brahmins.

அலெக்ஸாண்டரும் பிராமணர்களும்.—அலெக்ஸாண்டர் இந்தியாவின்மேல் படையெடுத்து ஜெயித்தபோது தண்டி யென்ற பிராமணக் கல்விமான் ஒருவர் இருந்தாராம். அலெக்ஸாண்டர் தண்டியைப் பார்க்கவேண்டுமென்று சொல்லி அனுப்பினாராம். தண்டி அவரைப் போய்ப் பார்க்கவில்லையாம். அதன்மேல் அலெக்ஸாண்டர் “ஹிந்து மதத்தின் மர்மங்கள் சிலவற்றை நான் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. தாங்கள் தயவுசெய்து வரவேண்டு” மென்று கடிதம் எழுதியனுப்பினாராம். அதற்கு தண்டி நீண்டதோர் பதில் அனுப்பினாராம். அதில் பிராமணர்களின் அக்காலத்திய குடிவாழ்க்கையின் இயல்பைப்பற்றி விஸ்தாரமாய் எழுதிவிட்டு “நீர் பேராசைக்காரராயிருக்கிறீர். உம்மை வந்து பார்க்க எனக்கு இஷ்டமில்லை. உம்மை முகஸ்துதி செய்ய என்றால் முடியாது” என்று சொல்லியிருந்தாராம். அம்மாதிரிக் கடிதம் கிடைக்கவே அலெக்ஸாண்டர் தண்டியைப் பார்த்தே தீருகிறதென்று தீர்மானித்து அவரைப் பார்த்தார். அலெக்ஸாண்டரும் தண்டியும் மத விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். கடைசியாகத் தண்டி “நீங்கள் சாவென்றால் பயப்படுகிறீர்கள். பிராமணர்களாயுள்ள நாங்கள் அப்படி பயப்படுகிறதில்லை. உங்களுடைய ஜாதி சமூகத்தில் திருப்தி என்பதே கிடையாது. எங்களுடைய ஜாதி சமூகத்தில் அதுவே மேலாடியிருக்கிறது” என்று சொன்னார். அலெக்ஸாண்டர் தமக்கு தண்டியோடு சம்பாஷிக்கக் கிடைத்ததைப் பற்றி வெகு சந்தோஷப்பட்டு “நீர் சொல்லுவதுண்மையே. எனக்கு ஓய்ச்சல் ஒழிவென்பதே கிடையாது. எப்போதும் கலக்கத்தின் மத்தியிலே வசிக்கிறேன். என்னுடைய ஜனங்களிடங்கூட எனக்குப் பயந்தான். என்னுடைய பகைவர்களிடம் எனக்குள்ள பயத்தைவிட என்னுடைய சிநேகிதர்களிடம் எனக்குள்ள பயம் அதிகமாகும்” என்றார். அப்பால் அலெக்ஸாண்டர் தண்டிக்குத் தக்க வெகுமதிகள் கொடுப்பதாய்ச் சொன்னார். தண்டி தமக்கு ஒன்றும் வேண்டாமென்று சொல்லிவிட்டார். அலெக்ஸாண்டர் தண்டியைப் பார்க்கக் கிடைத்ததே யென்ற ஆறுதலோடு தமது அரண்மனைக்குத் திரும்பிப்போனார்.

CURIOSITIES.

விநோதங்கள்.

Two Branches in a Cocoanut Tree.

ஒரு தென்னை மரத்தில் இரண்டு கிளை.—நன்னிலந் தாலூகா குருவாடி கிராமத்தில் ஒரு தென்னை மரம் உயரமாக வளர்ந்து, இரண்டு கிளைகளாகப் பிரிந்து இரண்டிலுங் காய் காய்த்திருக்கிறது.

A Child with Three Legs.

மூன்று கால்களுடன் பிறந்த குழந்தை.—வயநாட்டிலுள்ள ஒரு கூலிப்பெண்பிள்ளைக்கு மூன்று கால்களுடன் ஒரு குழந்தை பிறந்ததாகவும், அது ஸௌக்கியமாயிருந்து கொண்டிருப்பதாகவும், ஒரு பத்திரிகை தெரிவிக்கிறது.

Siamese Twins.

இரட்டைச் சிசு.—சில நாளைக்குமுன் குன்னத்தூரிலிருந்து ஸௌபாக்கியம்மாள் என்னும் ஒரு சூத்திரப்பெண், பிரஸவிக்க முடியாததினால், சென்னை திருவல்லிக்கேணி கோஷா ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்குக் கொண்டுவரப்பட்டாள். அவளை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்த காலத்தில், கர்ப்பத்திலிறந்துவிட்ட குழந்தையின் தலையும், கைகளும் காணப்பட்டன. உடனே மேற்படி ஆஸ்பத்திரி லேடி ஸூபரின்டெண்டெண்டாகிய மிஸ் எப். ஜி. வெல்ஸ் அது ஒரு ராக்ஷஸப் பிறப்பாயிருக்கவேண்டுமென்று சந்தேகித்தார். உடனே சிகிச்சைசெய்து குழந்தையை அரைமணி நேரத்தில் வெளியிலெடுத்தார். அது இரண்டு தலைகள், நாலு கண்கள், நாலு காதுகள், இரண்டு மூக்குகள், நாலு கைகளோடு இருந்தது. வைத்திய சாஸ்திரத்தில் அதற்கு ஸையாமீஸ், இரட்டைப் பிறப்பு என்று பெயர். இது இரட்டைப்பெண் பிறப்பு. இந்த இரட்டைப் பிறப்பு நல்ல தேகத்தோடிருந்தது. முன்னதாகவே அந்தப்பெண்ணை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்திருந்தால் இந்தக் குழந்தைகளை ஜீவிக்கும்படி செய்திருக்கலாம். இந்த இரட்டைக் குழந்தைகளுக்கு ஒரே மார்புதான். இந்த குழந்தைகளின் பிரேதத்தை பரீக்ஷிக்க எண்ணி மேற்படி மிஸ் வெல்ஸ் அவைகளைத் தங்களுக்கு கொடுக்கும்படி கேட்டார். அப்படியே அந்தத் தாயார் கொடுத்து விட்டாள். குழந்தைகளின் தாய் ஸௌக்கியமாய் இருக்கிறாள்.

School for Dogs.

நாய்களுக்குப் பள்ளிக்கூடம்.—பாரிஸ்பட்டணத்திலே ஒரு பள்ளிக்கூடம் நாய்களுக்காக ஏற்பட்டிருக்கிறது. அதில் நாய்களுக்குப் படிப்புக் கற்றுக்கொடுக்கிறதில்லை. மரியாதைதான் கற்பிக்கப்படுகிறது. மற்ற பள்ளிக்கூடங்களைப்போல் அந்த நாய்ப்பள்ளிக் கூடத்திலும் மேஜை, நாற்காலி, ஜமுக்காளம் முதலானவைகள் குறைவில்லாமலிருக்கின்றன. பிறர் வீட்டுக்கு வந்தால் அவர்கள் வீட்டாருடைய இஷ்டர்களாயிருக்கும் பட்சத்தில் நாய்கள் தாங்கள் படுத்திருந்த இடத்தை விட்டெழுந்து குதித்து வாலையாட்டி லேசாய்க் குரைத்து அவர்களுக்கு மரியாதை செய்யும். அவர்கள் வீட்டுக்குப் போகையில் நாய்கள் அவர்களைத் தெருவாசல் படியில் கொண்டுபோய் விட்டுத் தலையைத் தரைமட்டும் குனிந்து அவர்களுக்கு மரியாதைசெய்யும். கைக்குட்டை, குடை, மேல்ஜோடு முதலானவைகள் கீழே விழுந்துவிட்டால் அந்த நாய்கள் அவைகளை எடுத்துச் சொந்தக்காரரிடத்தில் கொடுக்கப் பழக்கப்பட்டிருக்கின்றன. மேலும் தங்கள் எஜமானிகளுடன் வெளியில் உலாவப்போகையில் பெருந்தன்மையாயும், காம்பீரமாயும் நடந்துபோக விசேஷமாய்க் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

Curious River Water.

ஓர் நூதனமான ஆற்று ஜலம்.—ஸ்பானியா தேசத்தில் டின்ற்ரோ வென்ற ஓர் நதி ஓடுகிறது. அந்த ஆற்றுத் தண்ணீரின் குணம் என்னவென்றால் மணலைக் கல்லாக்குகிறதாம். அந்த ஆற்றில் ஒரு கல்லை விட்டெறிந்தால் அந்தக்கல் அடியில் போனவுடன் மற்ற கல்லுடன் சேர்ந்து ஒரே கல்லாய் விடுகிறதாம். இப்படி அந்த ஆற்றின் அடிப்பாகம் முழுவதும் ஒரே பாறையாயிருக்கிறதாம். மீன்கள் அதில் வஸிக்கிறதில்லை. கரையோரங்களில் எந்தச் செடிகளும் வளருகிறதில்லை. புது ஜலம் வருகையில் ஆற்றின் மேல் பாகங்களிலிருந்து ஏராளமான மணல் அடித்துக்கொண்டு வருகிறது. ஆகிலும் அது கடலுக்குப் போகிறதற்குள் கல்லாய்ப் போகிறபடியால் முகத்துவாரம் எப்போதும் சுத்தமாயிருக்கும். பூகோள சாஸ்திரிகள் அந்தத் தண்ணீரில் மணலைக் கல்லாக்குகிறதற்கு என்ன குணமிருக்கிறதென்று அறிய வெகுகாலமாய்ப் பிரயாசைப்பட்டு வருகிறார்கள். நாளது வரையில் அதைக் கண்டுபிடித்தவர்கள் ஒருவருமில்லை.

NEWS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

INDIAN NEWS.

இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

THE CONGRESS PRESIDENT.

காங்க்ரேஸ் அக்ராஸனாதிபதி.—இந்த வருஷம் அலகாபாத்தில் கூடப்போகிற காங்க்ரெஸ் மகா ஸபையின் தலைமையை வகிக்க ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் அடுத்த டிஸம்பர் மாஸம் 16-ந் தேதி பம்பாய் வந்து சேருவாரென்று தெரிகிறது.

PRIVATE POST CARDS.

ப்ரைவேட் போஸ்டு கார்டுகள்.—ப்ரைவேட்டில் செய்த உள்நாட்டு போஸ்டு கார்டுகளுக்கு தபால் சார்ஜ் முன்னதாகச் செலுத்தவேணுமென்பது இனி அத்தியாவசியம். அப்படி முன்பாக செலுத்தப்படாத கார்டுகளைத் தடாலாபீஸ்காரர்கள் இழித்து எறிந்துவிடுவார்கள்.

AVIATION.

ஆகாயத்தில் பறத்தல்.—அலகாபாத்தில் கூடப்போகிற ஐக்கிய மாகாணப் பொருட்காட்சி ஸம்பந்தமாய் காப்டன் விண்டாம் என்ற ஒருவர் புகைரதமேறி ஆகாயத்தில் பறக்க அமர்த்தப்பட்டிருக்கிறார். ஜனங்கள் பொழுது போக்காய் வேடிக்கை பார்ப்பதற்காகவே அவர் புகைரதமேறிப் பறக்க அமர்த்தப்பட்டிருக்கிறார்போலும். அந்த வேடிக்கை டிஸம்பர் மாஸம் 28-ந்தேதி முதல் அடுத்த வருஷம் ஜனவரி மாஸம் 3-ந்தேதி வரையில் நடக்கப்போகிறது.

TWO NEW TALUKS.

இரண்டு புது தாலுகாக்கள்.—அடுத்த நவம்பர் மாஸம் 15-ந்தேதி முதல் தஞ்சாவூர் ஜில்லாவில் பாபநாசம் தாலூகா என்றும், அறந்தாங்கி தாலுகா என்றும், இரண்டு தாலூகாக்கள் புதிதாய் ஏற்படப் போகின்றன. அன்று தேதிமுதல் பட்டுக்கோட்டை டிப்டி கலெக்டர் டிவிஷனின் தலைமை ஸ்தானம் தஞ்சாவூரிலிருந்து பட்டுக்கோட்டைக்கே மாற்றப் பட்டுப் போகும்.

REGISTRARS OF CO-OPERATIVE CREDIT SOCIETIES.

ஐக்கிய நாணயச்சங்க ரெஜிஸ்ட்ரார்கள்.—எல்லா மாகாணத்து ஐக்கிய நாணயச்சங்க ரெஜிஸ்ட்ரார்களின் மீட்டிங்க் ஒன்று அலகாபாத்தில் அடுத்த ஜனவரி மாஸம் 7-ந் தேதி முதல் 10-ந் தேதி வரையில் நடக்கும் என்று தெரிகிறது. அந்தச் சங்கங்களைப் பொறுத்த பொது விஷயங்கள் சில அப்போது கவனிக்கப்படும். ஐக்கிய நாணய நிதிச்சங்க சட்டத்திருத்த மசோதாவொன்று ராஜப்பிரதிநிதியின் சட்ட ஸபையில் இந்த வருஷம் மாரி காலத்தில் கொண்டு வரப்படலாம்.

PRICES IN ALLAHABAD.

அலகாபாத்தில் விலை வாசிகள்.—அலகாபாத்தில் ஐக்கிய மாகாணப் பொருட் காட்சி நடக்கும் ஸமயத்தில் உணவுப் பொருள்கள் எல்லாம் விலை தூக்கி விற்குமென்று தோன்றுகிறது. அந்த ஊர் பால்காரர்கள் இப்போதே தங்களிடம் பால் வாங்கும் வாடிக்கைக்காரர்களுக்கு டிஸம்பர் மாஸம் முதல் ஒரு ரூபாய்க்குத் தங்களால் 4 சேர் பால் தான் கொடுக்க முடியுமென்றும், இப்போது போல ரூபாய்க்கு 8 சேர் பால் கொடுக்க முடியாதென்றும் தெரிவித்துவிட்டார்களாம். பால் இரண்டு மடங்கு விலை விற்கும்போது மற்ற உணவுப் பொருள்களும் விலை தூக்கித்தான் விற்கும்.

NATIONAL FUND STUDENTS.

நாஷனல் பண்டு மாணாக்கர்கள்.—சென்னை நாஷனல் பண்டு ஸபையாரிடம் பொருளுதவி பெற்று இங்கிலாந்தில் தோல் பதனிடும் தொழிலையும், வேறு சில தொழில்களையும் கற்றுக்கொள்ளப் போன மிஸ்டர் குலாம்காதர் அந்தத்தொழில்களைக் கற்றுத் திரும்பி வந்து விட்டார். தமது ஸொந்த ஊராகிய ஈரோடில் வந்திருக்கிறார். ஸமீபத்தில் சென்னைக்கு வந்து பாட்டரி அதாவது மட்பாண்டங்கள் செய்யும் தொழிலை ஸ்தாபிக்க விரும்புவதாகத் தெரியவருகிறது. அந்த நாஷனல் பண்டின் உதவியைப்பெற்று கோபாலகிருஷ்ணன் என்ற மைலாப்பூர் சிறுவனொருவன் பட்டு செய்யும் தொழிலைக் கற்பதற்காக கப்பலேறி கொஞ்ச நாளைக்கு முன் ப்ரான்ஸுக்குப் போனான். மாஸம் 40 ரூபாய் கொடுப்பதாக நாஷனல் பண்டு ஸபையார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

REGISTERED DOCUMENTS.

ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பத்திரங்கள்.—ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பத்திரங்களை, ரெஜிஸ்ட்ரேஷனுக்காகத் தாக்கல் செய்தவர்கள் இப்போது காத்துக் கிடந்து வாங்கிக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. இப்போதைய இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரெஜிஸ்ட்ரேஷன், ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட பத்திரங்களை போஸ்ட் மூலமாய் அவர்களுக்கு அனுப்பி விடலாமென்று சிபார்சு செய்ய, கவர்ன்மெண்டார் அடுத்த ஜனவரி மாஸம் முதல் ரெஜிஸ்டராவதற்கு தாக்கல் செய்யப்பட்ட பத்திரங்களை ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ் அதிகாரிகள் போஸ்டு மூலமாய், அவைகளை தாக்கல் செய்தவர்கள் கேட்டுக்கொண்டால், அனுப்பிவிடலாமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள்.

THE CALCUTTA GHEE MERCHANTS.

கல்கத்தா நெய் வியாபாரிகள்.—கல்கத்தாவில் உணவுப் பதார்த்தங்களை விற்கும் கடைக்காரர்கள் கலப்பற்ற சரக்குகளை வைத்து விற்காவிட்டால் கனத்த அபராதம் போடப்படுகிறார்கள். ஸமீபத்தில் அந்த ஊர் நெய் வியாபாரிகளுக்கும், எண்ணெய் வியாபாரிகளுக்கும் கலப்படமாய் விற்றதற்காக முனிசிபல் அதிகாரிகள் கடுமையான அபராதங்களை விதித்துவிட்டார்கள். அதனாலே நெய் வியாபாரிகளில் 300 பேர் சேர்ந்து ஒரு சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தை அவர்கள் ரெஜிஸ்டர் செய்துவிட்டு கல்கத்தா கார்பொரேஷன் சேர்மனுக்கு நெய்யை வாங்கிவைத்து விற்கும் தங்களைப் பிடித்து ஹிம்ஸிக்கக் கூடாதென்றும், கலப்படமான நெய் செய்கிறவர்கள் மேல் நடவடிக்கைகள் நடத்த வேண்டுமென்றும் விண்ணப்பம் செய்து கொள்ளப் போகிறார்களாம்.

POISON IN BETEL LEAVES.

வெற்றிலையில் விஷம்.—வங்காளத்தில் வெற்றிலையில் விஷப்பூச்சி ஏதோ இருப்பதாகவும் பலபேர்கள் வெற்றிலை போட்டுக்கொண்டதால் இறந்து போனதாகவும் பெரிய வதந்தி கிளம்பி அநேகம் பேர்கள் வெற்றிலை போட்டுக்கொள்வதையே நிறுத்திவிட்டார்கள். என்ன சொல்லியும் ஜனங்களுக்கு வெற்றிலையில் விஷப்பூச்சிகள் இருக்கத்தான் வேண்டுமென்ற சந்தேகம் பலத்துப் போய்விட்டபடியால் வங்காள லெப்டினண்ட் கவர்னர் வெற்றிலையில் விஷமிருக்கிறதா இல்லையா என்று விசாரணை நடத்த கல்கத்தா மெடிகல் காலேஜ் தலைவர் கர்னல் ட்ரூரியையும், கவர்ன்மெண்ட் ரஸாயனச்சோதகர் கர்னல் ப்ளாக்கையும், டாக்டர் டட்டையும் ஒரு கமிட்டியாய் நியமித்தார். அந்தக் கமிட்டியார் வெற்றிலையில் யாதொரு தோஷமுமில்லையென்றும், முற்றாத பாக்கை வெட்டி வெற்றிலையோடு சேர்த்துப் போட்டுக் கொள்வதால் சிலருக்கு மாரடைப்பும், மயக்கமும் உண்டாயிருக்கலாமென்றும், சிலருக்குப் புகையிலையின் சம்பந்தத்தால் மாரடைப்பும், மயக்கமும் உண்டாயிருக்கலாமென்றும் ரிபோர்ட் அனுப்பிவிட்டார்கள். அந்த ரிபோர்ட் கல்கத்தா கெஜட்டில் பிரசுரமாயிருக்கிறது.

DR. COOMARASAMI'S PRIZE.

டாக்டர் குமாரஸாமியின் வெகுமதி.—ஐக்கிய மாகாணப் பொருட் காட்சியைச் சேர்ந்த சித்திரத் தொழில் பொருள் கூட்டத்தின் தலைமையை வகித்து வரும் டாக்டர் ஆனந்த குமாரஸாமி "இந்தியாவில் வர்த்தகச் சங்கங்கள்" என்ற விஷயத்தைக் குறித்து எழுதியனுப்பப்படும் முதல்தரமான வியாஸத்துக்கு ரூ. 250 வெகுமதி கொடுப்பதாய் அறிக்கை செய்திருக்கிறார். அந்த விஷயத்தைக்குறித்து எழுதியனுப்பும் போட்டி வியாஸங்கள் அடுத்த டிஸம்பர் மாஸம் 31-ந் தேதிக்குள் அவருக்குக் கிடைக்கும்படியாய் அனுப்பவேண்டும். அந்த வியாஸங்களை அவர் ஏகதேசத்தில் மதிப்பிடுவார். வியாஸம் எழுதும் போட்டிக்காரர்கள் தொழில்கள் நடக்கிற பட்டணங்களில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிற வர்த்தகச் சங்கங்களைப் பொறுக்கி யெடுத்துக்கொண்டு அவைகளின் சரித்திரம், அமைப்பு, அவைகளை நடத்தும் மீட்டிங்குகள், வர்த்தகம் நடப்பதைப்பற்றி அவைகள் செய்திருக்கும் ஒழுங்குகள், அவைகள் தகரார்கள் ஒழிக்கும் மாதிரி, அவைகள் செய்யும் தருமம், முதலானவைகளைப்பற்றிய விவரங்களை யெடுத்து எழுதவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். சக்தியுள்ளவர்கள் பார்க்கலாம்.

FOREIGN NEWS.

அன்னிய நாட்டு ஸமாசாரங்கள்.

Chinese and Groundnuts.

சீனர்களும் வேர்க்கடலையும்.—சீனர் சாதத்துடன் ஒரு கைபளவு வேர்க்கடலைப் பருப்பைச் சாப்பிடுவார்கள். இதனால் பித்தம் இல்லை. தேகத்துக்கு வலிவு ஏறுகிறது.

Paupers in England.

இங்கிலாந்தில் பாப்பர்கள்.—இங்கிலாந்தில் பாப்பர்ப் பேர்வழிகளின் தொகை 100-க்கு 28 குறைந்திருப்பதாய்த் தெரிகிறது.

A Monster Railway Engine.

இராக்ஷத ரெயில்வே யந்திரம்.—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்திலுள்ள பால்ட்வின் தொழிற்சாலையில் ஒரு ரெயில்வே யந்திரம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் நிறை 266 டன். இதுவரையில் உலகத்தில் செய்யப்பட்ட பெரிய யந்திரத்தின் நிறை 143 டன்தான்.

Talking Clocks.

பேசுங் கடிகாரங்கள்.—ஸ்விட்ஸர்லாண்டில் முகமும், முள்ளுமில்லாத நூதனவகையான கடிகாரங்கள் செய்யப்பட்டுவருகின்றன. இந்தக் கடிகாரங்களைப் பார்த்து மணி தெரிந்துகொள்ள முடியாது. தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஒரு பொத்தானை அழுத்தவேண்டும். அப்போது இத்தனை மணியென்று கடிகாரம் சத்தமிடும். பேசுங் கடிகாரமும் வந்துவிட்டன.

Drunken Persons.

குடிகாரர்கள்–நியூஸீலண்ட் தீவு அரசாட்சியார் குடிவெறியால் குற்றஞ்செய்பவர்களை ஜெயிலுக்கனுப்பாமல் ரக்ஷண்ணிய சேனையாரிடம் ஒப்புக்கொடுத்து சீர்ப்படுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் புறம்பான ஒரு தீவுக்கனுப்பி அங்கே விவஸாயம், மீன் பிடிக்குந்தொழில் முதலானவைகளை அவர்களுக்குப் பயிற்றிவருகிறார்கள். ரக்ஷண்ணிய சேனையார் அவர்களைச் சந்தித்து, நற்போதனைகள் செய்வர். இந்தப் பரீட்சைகளால் அப்படிப்பட்டவர்களுக்குள் விசேஷ மாறுதல் காணப்படுகிறதாம்.

The Guests of Our Emperor.

நம்முடைய சக்ரவர்த்தியின் விருந்தினர்கள்.—இனிமேல் அந்நிய அரசர் எவரேனும் மகா ராஜாவின் விருந்தினராய் இங்கிலாந்துக்கு வரும் பக்ஷத்தில் அந்தச் செலவு ஸிவில் லிஸ்டிலிருந்து, அதாவது ராஜ குடும்பச் செலவுக்காக ஏற்பட்ட தொகையிலிருந்து கொடுக்கப்படும். இந்தப் பொதுச் செலவுக்கு ஈடாக மகாராஜாவினிடம் இன்கம் டாக்ஸ் வசூல் செய்யப்படமாட்டாது.

A Strange Disease.

ஒரு நூதன நோய்.—ஐரோப்பாவில் ஸ்பெயின் தேசத்தில் ஒரு நூதனகொள்ளைநோயுண்டாயிருக்கிறது. சடுதியாய் முகத்திலும், கழுத்திலும் சிவத்த புள்ளிகள் காணப்படும். இவை காணப்பட்ட சில நிமிஷத்துக்கெல்லாம் ஆள் மடிந்துபோகிறான்.

A New Vehicle.

ஒரு புதிய வண்டி —பிரஞ்சு யுத்த அதிகாரிகள் நிலத்திலும், நீரிலும் செல்லக்கூடிய தானாக ஓடும் ரதமொன்று சம்பாதித்திருக்கிறார்கள். இது நால்வரை யேற்றிக்கொண்டு நிலத்தில் 40 மைல் வீதமும், நீரில் 12 மைல் வீதமும் செல்லுமாம்.

Indian Coolies to Ceylon.

லங்கைக்குப்போகும் இந்தியக்கூலி ஜனங்கள்.—1861-ம் வருஷம் தொடங்கி 1871-ம் வருஷம் வரைக்கும் 5,34,339 கூலி ஜனங்களும், 1871-ம் வருஷம் தொடங்கி 1881-ம் வருஷம் வரைக்கும் 6,81,248 கூலி ஜனங்களும், 1881-ம் வருஷம் தொடங்கி 1891-ம் வருஷம் வரைக்கும் 7,25,853 கூலி ஜனங்களும், 1891-ம் வருஷம் தொடங்கி 1901-ம் வருஷம் வரைக்கும் 9,51,740 கூலி ஜனங்களும் இந்தியாவிலிருந்து லங்கைக்குப் போயிருக்கிறார்கள். இவர்களெல்லாரும் குறித்த காலத்தின்பின் மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்பி வரும் வழக்க முடையவர்கள்போல காணப்படவில்லை. லங்கைக்குப் போகிறவர்களில் நூற்றுக்கு 70 பேர் வீதம் மீளவும் இந்தியாவுக்குத் திரும்பிவிட, நூற்றுக்கு 30 பேர் வீதம் அங்கேயே குடியேறி விடுகிறார்கள். இந்தக் காரணத்தினாலேயே லங்கைக் குடிஜனம் எப்போதும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது.

Indian Temple in America.

அமெரிக்காவில் இந்தியர் கோவில்.—அமெரிக்காவிலுள்ள ஸான்ப்ரான்ஸ்கோ என்ற நகரில் ஒரு ஹிந்து தேவாலயம் லக்ஷத்து எண்பத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. 100 பேர் வரையில் அந்தக் கோவிலுக்கு வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். இதன் மடத்தில் அமெரிக்கர் உள்பட 7 பேர்கள் கைங்கரியம் செய்துகொண்டு ஹிந்து மதத்தைக்கற்று அதை அந்த பாகங்களில் பரப்பமுயன்று கொண்டிருக்கிறார்கள். ஹிந்து மதத்தின் உண்மையை அமெரிக்கர்களுக்குத் தக்கவண்ணம் எடுத்துப் போதித்தால், நம்நாட்டிலுள்ள கோவில்களைக்காட்டிலும் அந்த நாட்டில் அதிகக் கோவில்கள் ஏற்படும் என்பதற்கு ஸந்தேகமில்லை.

Coffee Drinking Countries.

காபி சாப்பிடும் தேசங்கள்.—காபி சாப்பிடும் வழக்கமுள்ள தேசங்களில் இங்கிலாந்து கடைசியானதாக இருக்கிறது. வருஷத்துக்கு ஸராஸரி பார்க்கும்போது, இங்கிலாந்தில் தலைக்கு அரைப் பவுண்டு (ராத்தல்) காபி வீதம் ஏற்படுகிறது; யுனைடெட் ஸ்டேட்ஸ், ஸ்விட்ஸர்லண்ட் இவைகளில் தலைக்கு 10 பவுண்டு; ப்ரான்ஸ், ஜெர்மனி இவைகளில் 5 பவுண்டு; ஹாலண்டில் 17 பவுண்டு; என்று ஒருவர் கணக்குப் பார்த்தெழுதுகிறார். இங்கிலாந்தில் காபி குடிப்பது குறைவென்று ஏற்பட்டாலும் அங்கே டீ சாப்பிடுவது அதிகம் என்று நினைப்பில் வைக்கவேண்டும். ஆயினும் மொத்தத்தில் உலகமெங்கும் காபியில் மோகம் இப்போது ரொம்ப குறைந்துவருகிறதென்று சொல்லப்படுகிறது இந்த விஷயத்தில் இந்தியாவின் ஸ்திதி எப்படியென்று ஆராய்ந்து நிர்ணயிப்பாரைக்காணோம். ஆராய்ந்தால் காபிகுடிக்கும் வழக்கம் நம்முள் எவ்வளவு அபாரமாய் அதிகரித்து வருகிறதென்று விளங்கும். காபிகுடித்தே இப்பொழுது அநேக குடித்தனங்கள் அழிகின்றன.

New Customs Duties in Japan.

ஜப்பானில் புது இறக்குமதி வரிகள்.—ஜப்பானிய கவர்ன்மெண்டார் இறக்குமதி வரிகளை அதிகப்படுத்தி வசூல் செய்யத் தீர்மானித்திருப்பது வருகிற 1911-ம் வருஷம் ஜூலை மாஸம் முதல் அநுஷ்டானத்துக்கு வரும். இந்த இறக்குமதிச் சரக்குகள் ப்ரிட்டிஷ் தேசத்திலிருந்தே விசேஷமாய் வருகிறபடியால், ப்ரிட்டிஷ் வியாபாரம் குறைந்துபோமென்று ப்ரிட்டிஷ் வர்த்தகர்கள் அஞ்சுகிறார்கள். ஜப்பான் துறைமுகங்களில் வஸிக்கும் ஆங்கிலேயர் அவர்களுக்கு வேண்டிய ஸாமான்களுக்கு அதிக விலை கொடுக்கும்படி நேரிடும். ருஷிய யுத்தத்துக்குப் பிறகு ஜப்பானில் விலைவாசிகள் உயர்ந்துபோயிருக்கின்றனவாம்.

Australian Grapes.

ஆஸ்திரேலியா திராட்சை.—திராட்சைப் பழத்தைப் பச்சையாகவே கெட்டுப்போகாமல் வெளியூர்களுக்கு ஏற்றுமதிசெய்ய ஆஸ்திரேலியன் கவர்ன்மெண்டார் சில புது முறைகளைச்செய்து பார்த்தார்கள். அந்த முறை மிகவும் நன்றாய்ப் பலித்துவிட்டது. லண்டனுக்கு இந்த முறைப்படி அனுப்பப்பட்ட திராட்சை கெட்டுப் போகாமல் இருந்ததோடு லண்டன் மார்க்கெட்டில் அதிக விலையும் போயிற்றாம். ஐரோப்பாவில் திராட்சை கிடைக்கும் காலம் கழிந்துபோன ஸமயத்தில் இந்த திராட்சைகள் லண்டனில் சேர்ந்ததால் இவைகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது. மேற்கு ஆஸ்திரேலியாவில் மட்டும் 200 லட்சம் ஏக்கர் நிலம் திராட்சை பயிராகக்கூடியதாயிருக்கிறதாம். ஆதலால் ஆஸ்திரேலியாவில் ஒரு முக்கியமான தொழில் விருத்தியடைய ஹேது இருக்கிறது.

Our New Governor-General.

நமது புதிய கவர்னர்ஜனரல்.—இந்தியாவுக்குப் புதிதாய் நியமிக்கப்பட்ட கவர்னர்ஜனரலாகிய லார்டு ஹார்டிஞ்ஜ் இங்கிலாண்டை விட்டுப் புறப்படுவதற்குமுன் சக்ரவர்த்தி அவரை வரவழைத்து இரண்டு தடவை பேசியிருக்கிறார். எந்த ராஜப்பிரதிநிதியானாலும் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னால் சக்ரவர்த்தியைப் போய்ப்பார்த்தல் வழக்கமாயினும் லார்டு ஹார்டிஞ்ஜை சக்ரவர்த்தி இரண்டு தடவை வரவழைத்துப் பேசியதால் ஏதோ விசேஷமிருக்கவேண்டும்.

SEASON.

கால ஸ்திதி.

RAINFALL.

மழை.—ஏப்ரல்௴ 1-தேதியிலிருந்து, அக்டோபர் மாஸம் 31-ம் தேதி வரையில் பெய்தமழை அளவும் இந்தக் காலத்தில் சராசரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், கீழே அங்குலக் கணக்காகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	58	42
வால்டேர்	51	35
காக்கிநடா	34	31
மசூலிப்பட்டணம்	46	34
நெல்லூர்	27	21
மதராஸ்	29	30
கூடலூர்	38	30
நாகப்பட்டணம்	35	23
பாம்பன்	60	13
கொழும்பு	46	58
திருவநந்தபுரம்	62	51
கொச்சி	106	106
கள்ளிக்கோட்டை	99	109
மங்களூர்	109	121
மெர்க்காரா	121	122
ஹைதராபாத்	7	28
ரெய்ச்சூர்	20	29
பல்லாரி	21	17
கர்நூல்	26	27
கடப்பை	41	27
ஹாஸ்ஸான்	36	32
பெங்களூர்	41	31
கொடைக்கானல்	57	42
உதகமண்டலம்	50	..
கோயம்புத்தூர்	18	15
வேலூர்	55	..
சேலம்	36	34
திருச்சினாப்பள்ளி	35	23
புதுக்கோட்டை	33	..
மதுரை	34	26
திருநெல்வேலி	16	14

MARKET REPORT.

மார்க்கெட் நிலவரம்.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—ஸெப்டெம்பர் ௴ 24-தேதியிலிருந்து அக்டோபர் ௴ 22உ வரையில் அந்நிய தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி ஸாமான்களின் விவரம்.

நூலும் முறுக்கு நூலும் 5,27,375 ராத்தல், காரிகத்துணிகள் 40,09,412 கஜம். சலவைத்துணிகள் 19,58,643 கஜம். இதர நிறமுசுத் துணிகள் 31,15,155 கஜம். இதேகாலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 34,883 அந்தர் துணி ஸாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். அக்டோபர் மாஸம் 25-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூலின் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-3 வரையில் இருந்ததாகத் தெரிய வருகிறது.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற ஸெப்டெம்பர் மாஸம் 24-ந்தேதிமுதல் அக்டோபர் மாஸம் 22-ம் தேதி வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 50 அந்தரும், ஜாவாதீவிலிருந்து 51,365 அந்தரும், இதர தேசங்களிலிருந்து 52 அந்தரும் இறக்குமதியாயின.

WANTED AGENTS.

ஏஜெண்டுகள் தேவை.

"பிழைக்கும் வழி"க்கு ஸந்தாதாரர்கள் சேர்க்க ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் ஏஜெண்டுகள் தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சங்குராம செட்டித்தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

Supplement to the "Practical Life"

"பிழைக்கும் வழி" க்கு அனுபந்தம்.



NEW JAPANESE CHRYSANTHEMUM.

ஜப்பானின் புதிய ஜவந்திப்பூ.

REGISTERED
10 DEC 1910
OFFICE OF THE ... MADRAS

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. ஏ. வைத்தியராமன், பி. ஏ.,
பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. | ஸாதாரண௵ கார்த்திகை௴—NOVEMBER 1910. | ஸஞ்சிகை 11. No. 11.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		*Foreign.* Rs. A. P.
Per annum ...	4 0 0	...	... 6 0 0
Single copy ...	0 6 0	...	... 0 8 0
Sample copy ...	0 2 0	...	... 0 3 0

RATES OF ADVERTISEMENT.

1 Page ...	5 0 0	per month.
½ do ...	2 8 0	do
¼ do ...	1 4 0	do
Less than ¼ page ...	0 8 0	per *inch* per month.

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors.—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4 Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜாலக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்நிய நாடு.
வருஷம் 1க்கு ..	4 0 0	..	6 0 0
தனிப்பிரதி ..	0 6 0	..	0 8 0
மாதிரி காபி ..	0 2 0	...	0 3 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு	5 0 0
½ பக்கத்திற்கு	,, ,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,, ,,	1 4 0
¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம்	ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு	0 8 0

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும் எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்.

பிழைக்கும் வழி.
PRACTICAL LIFE.

புஸ்தகம் 2 Vol. 2. ஸாதாரண௵ கார்த்திகை௴—NOVEMBER 1910 ஸஞ்சிகை 11. No. 11.

பொருளடக்கம்.

பத்திராதிபர் குறிப்புகள் பக்கம்.
கருவைக்காய்கள்—வியாதியைத் தொலைத்தல் 451–152
விசேஷ வியாஸங்கள்
மழையை அளத்தல் —எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ், எம். ஏ., எல். டி. 453
குருவையில் ஒற்றை அலகு சாகுபடி. —எஸ். சாம்பசிவ ஐயர் 457
கணக்கு வைத்துக்கொள்ளல் —வி. பஞ்சாபகேச ஐயர் 458
சவுக்கு சாகுபடி —பு. து. ரத்தினம் பிள்ளை .. 460
ஆத்தூரில் விவஸாயம் —எல். அநந்தராம ஐயர் 464
ஸாமான்ய ஜனங்களுக்கு ஏற்ற கல்வி —ஆர். ரங்கசாமி ஐயங்கார், பி. ஏ., எல். டி. 465
வௌவால் —எஸ். முத்தைய பிள்ளை .. 468
ஹார்டிஞ்சின் வம்சம் 471
விசேஷத் திரட்டு
மணிலாக்கொட்டையும் அதன் பிரயோஜனமும்—கம்பெனிகளும் அவைகளை ஸ்தாபிப்பவர்களும்—காலரா—உப்புவரி .. 473–480
பத்திரிகை ஆராய்ச்சி
மரங்களுக்குக் காணும் வியாதிகள்—நெல்—கிராம பாங்கிகளின் நன்மை—மதுரை நாய்க்கர் ஸமஸ்தானம்—த்யாகையர் .. 481–484
சிறுவர் பகுதி 485–486
ஸ்திரீகள் பகுதி 487–488
பகுதிக் குறிப்புகள்
விவஸாயக் குறிப்புகள்—கைத்தொழில் குறிப்புகள்—வித்யா விஷயக் குறிப்புகள்—புஸ்தகக் குறிப்புகள்—சட்டக் குறிப்புகள்—சாஸ்திரீயக் குறிப்புகள்—வைத்தியக் குறிப்புகள்—மனிஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்—வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்—விநோதங்கள் 489–499
தயானம் 500–504

CONTENTS.

PAGE.
Editorial Notes
BABUL PODS–THE CONQUEST OF DISEASE ... 451-452
Special Articles
MEASUREMENT OF RAINFALL
M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T., *Assistant Professor of Physics, Presidency College, Madras* 453
SINGLE PLANTING IN KURUVAI
S. Sambasiva Aiyar 457
ACCOUNT KEEPING
V. Panchapagesa Aiyar 458
CASUARINA CULTIVATION
P. D. Ratnam Pillai 460
AGRICULTURE IN ATUR
L. Anantharama Aiyar 464
LINES OF MASS EDUCATION
R. Rangasami Aiyangar, B.A., L.T. 465
THE BAT
S. Muthayya Aillai 468
THE HARDINGE FAMILY 471
Selections
GROUNDNUT AND ITS USES 473
COMPANIES AND COMPANY PROMOTERS .. 474
CHOLERA 476
THE SALT TAX 478
Review of the Press
Diseases of Trees 481
Paddy 481
The Advantages of Village Banks 482
The Naik Kingdom in Madura 482
Thyagaiyar 483
The Boys' Section 485-486
The Ladies' Section 487-488
Departmental Notes
Agricultural Notes 489
Industrial Notes 491
Educational Notes 492
Literary Notes 493
Legal Notes 494
Scientific Notes 495
Medical Notes 496
Personal Notes 497
Fun and Anecdote 498
Curiosities 499
News of the Month 500-504

EDITORIAL NOTES.
பத்திராதிபர் குறிப்புகள்.

Babul Pods.

கருவைக்காய்கள்.—இப்பொழுது ஸர்க்கார் நிலங்களிலுள்ள மரங்களின் பழங்கள், கருவைக்காய்கள் இவைகளை ஏலம் போட்டு, ஏலத்தொகையை ஸர்க்காரில் எடுத்துக் கொள்ளுகிறார்கள். கருவைக்காயை ஆடுகளுக்கு அடித்துப்போடுவதைத் தவிர ஜனங்கள் வேறு விதமாக உபயோகிப்பதில்லை. இந்த வகையில் ஸர்க்காருக்குக் கிடைக்கும் வரும்படி ஸராஸரியில் வருஷத்தில் 35,000 ரூபாய்க்கு மேலேயில்லை. இந்த அற்பத் தொகையைச் சேர்ப்பதற்கு ஜனங்களுக்கு தொந்தரவு கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்து, இப்பொழுது ஏல கெடுவானவுடனே இனிமேல் ஸர்க்கார் நிலங்களில் கருவைக்காய்களை ஏலம் போடவேண்டியதில்லை என்று கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். ஆனால் ஸர்க்கார் பழமரங்கள் மட்டும் வழக்கம்போல் ஏலம் போடப்படும்.

The Conquest of Disease.

வியாதியைத் தொலைத்தல்.—போன வருஷத்து அற்பசி மாஸத்து ஸஞ்சிகையில், ஸாதாரணமாய் உலகத்திலுள்ள வியாதிகளுக்கெல்லாம், பாக்டீரியா என்று சொல்லப்படும் கண்ணுக்குத் தெரியாத வெகு நுட்பமான க்ருமிகளே காரணம் என்று சொல்லியிருக்கிறோம். இவைகள் எவ்வளவு நுட்பமானவைகளென்பதை அவைகளின் குறுக்களவு ஒரு அங்குலத்தில் இருபத்தையாயிரத்தில் ஒரு பாகமென்பதால் அறிந்துகொள்ளலாம். இவைகளுக்கு உயிருண்டு. பயிர்களிலிருந்தும், அழுகின இந்திரிய வஸ்துக்களிலிருந்தும் அவைகள் வேண்டிய ஆகாரத்தைக்கிரகிக்கும். ஒரு க்ருமி ஒரு நாளில் 170-லக்ஷம் க்ருமிகளாக ஆகிவிடக்கூடும். இப்படிப்பட்ட பூச்சிகள், உலகத்தில் உண்டென்பதே 1659-ம் வருஷத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனாலும் சுமார் 60 வருஷத்திற்கு முன்னால் வரைக்கும் இவைகளால்தான் உலகத்தில் வியாதிகள் உண்டாகிறதென்பது தெரியாமலிருந்தது. 1849-ம் வருஷத்தில் அடைப்பான் வியாதி ஸம்பந்தமாய் ஒரு விதப்பூச்சியைக் கண்டார்கள். ஆனாலும் அந்தப் பூச்சிதான் அடைப்பான் வியாதிக்குக் காரணமென்று, பிறகு 14 வருஷத்திற்குப் பின்புதான் ஏற்பட்டது. பிற்பாடு ஒவ்வொரு வியாதியும் ஒவ்வொரு வித க்ருமியினால் உண்டாகிறதென்று கண்டுபிடித்து வருகிறார்கள். ஒருவித க்ருமி குஷ்டரோகத்திற்குக் காரணமென்று 1879-ம் வருஷத்திலும், இன்னொருவித க்ருமி ஜன்னிபாதஜ்வரத்திற்குக் காரணமென்று 1880-ம் வருஷத்திலும், இன்னொருவித க்ருமி க்ஷயரோகத்திற்குக் காரணமென்று 1882-ம் வருஷத்திலும், இன்னொருவித க்ருமி காலராவிற்குக் காரணமென்று 1884-ம் வருஷத்திலும், இன்னொருவித க்ருமி 'இன்புளுயன்ஸா' என்னும் ஜ்வரத்திற்குக் காரணமென்று 1892 ம் வருஷத்திலும், இன்னொருவித க்ருமி 'ப்ளேக்' வியாதிக்குக் காரணமென்று 1894 ம் வருஷத்திலும், இன்னொருவித க்ருமி வயிறு கடுப்புக்குக் காரணமென்று 1900 ம் வருஷத்திலும், இன்னொருவித க்ருமி கிரந்திப் புண்ணுக்குக் காரணமென்று 1905-ம் வருஷத்திலும், ஆக உலகத்தில் வியாதிகளெல்லாம், ஒவ்வொரு வித க்ருமியால் உண்டாகிறதென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகையினாலே ஒருவனுக்கு வியாதி வாராமலே யிருக்கவேண்டுமானால் மேலே சொல்லப்பட்டவைகள்

போன்ற க்ருமிகள் அவனை அண்டாமல் செய்யவேண்டும். இவைகள் உடம்பின் ரத்தத்தில் கலந்து விடும் பக்ஷத்தில், அவைகளை விழுங்கி அழித்து விடுவதற்காக 'பாகோஸைட்டுகள்' என்று சொல்லப்படும் சில நுட்பமான சிகப்பு க்ருமிகள், ரத்தத்தில் இயற்கையாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குமீறும் க்ருமிகளால்தான், வியாதி உண்டாகிறது. இந்த க்ருமிகளால் உண்டாகும் வியாதியை அம்மை குத்துதல் போன்ற முறைகளால் ஒருவாறு தொலைக்கலாம். ஆனால் ரோக க்ருமிகள், மனிதனை அண்டாமற் செய்வதே நல்ல காரியம். இப்படிச்செய்து, அநேக வியாதிகளை அடக்கி இருக்கிறார்கள். உதாரணமாக முறை ஜ்வரத்தை எடுத்துக்கொள்வோம். முதலில் இது கொசுக்கடியால் உண்டாவதாக எண்ணிவந்தார்கள். பிற்பாடு ஸர் பாட்ரிக் மான்ஸன் என்பவர் ஆனைக்கால் வியாதியை ஆராய்ச்சி செய்துவரும்போது, கொசுவானது முறைக் காய்ச்சலை உண்டாக்கும், க்ருமியைத் தின்று ஜீரணித்து பிறகு மனிதனைக் கடித்துத் தான் அந்தக் காய்ச்சலை உண்டாக்குகிறதென்று கண்டுபிடித்தார். பிறகு ராஸ் என்பவர் ஆராய்ச்சி செய்து பார்த்து முறைஜ்வரமுள்ள ஒரு மனிதனைக் கொசு கடித்து இரத்தத்தை உறிஞ்சும் பொழுது, முறை ஜ்வர க்ருமிக்கருவையும் உறிஞ்சுவதாயும், இந்த க்ருமிக்கருக்கள் கொசுவின் உமிழ் நீர்ப்பைகளில் போய்ச் சேர்வதாயும், பிறகு அந்தக்கொசு ஒரு மனிதனைக் கடிக்கும்போது உமிழ் நீரோடு, அந்தக் கருக்களையும் தள்ளுவதாயும், கண்டுபிடித்தார். இன்னொரு விசேஷம் என்னவென்றால் 'அநோபிலீஸ்' என்னும் ஒரு விதக்கொசு மாத்திரமே இப்படிச் செய்வதாகக் கண்டுபிடித்தார். இந்தக் கொசுக்கள் குளம் குட்டைகளிலும், ஆற்றங்கரையோரங்களிலும் முட்டையிட்டு விருத்தியாகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட கொசுக்களைத் தொலைப்பதற்கு, ஓரிடத்திலும் ஜலம் தங்காமல் ஓட்டவடித்து விடுவதே சிறந்த வழியாகும். இப்படி ஜலத்தை வடிக்கமுடியாத இடங்களில், ஜலத்தின் மேல் கொஞ்சம் கெரோஸின் எண்ணெயை ஊற்றினால், அது ஜலம் மட்டம் முழுவதும் பரவி ஜலத்திலுள்ள சிறு கொசுக்களை மூச்சுவிட முடியாமல் செய்வதால், அவைகள் செத்துப்போம். தவிர, 'பார்பிடோஸ்' தீவுகளில் 'மிலியன்ஸ்' என்று சொல்லப்படும் சிறு மீன்கள் மேலே சொல்லிய சிறுகொசுக்களை தின்று அழித்துவிடுவதால் அந்தத் தீவுகளில்முறைக் காய்ச்சல் என்பதே கிடையாது. இந்த மாதிரியாக கொசுவைத் தொலைப்பதால் ஆப்பிரிக்கா கண்டத்து ஈஜிப்டு தேசத்தில், 1903-வது வருஷத்தில் 214 பேர்களுக்கு முறை ஜ்வரமடிக்க, 1904-வது வருஷத்தில் 93 பேருக்குத்தான் முறை ஜ்வரம் கண்டது. 1905-வது வருஷம் முதல் அங்கே முறை ஜ்வரம் என்கிற பேச்சே கிடையாது.

இதேமாதிரியாக ஈக்களால் அநேகம்வியாதிகள் உண்டாகின்றன. ஈக்கள் கொசுவைப்போல் ரோகக்ருமிகளை தின்று ஜீரணித்து மனிதர்களைக்கடித்து விஷத்தைச் செலுத்தாமல், அந்த க்ருமிகளை அப்படியே தூக்கிக்கொண்டு போய், பால் தயிர் முதலிய ஆகாரவஸ்துக்களில் இறக்கி விடுகின்றன, அந்த ஆகாரங்களை சாப்பிடுவதால், காலராபோன்ற வியாதிகள் உண்டாகின்றன. ஆகவே முக்கியமாய், கொசுவையும்,ஈயையும் தொலைத்தால் உலகத்திலுள்ள முக்கால்வாசி வியாதிகள் ஒழியுமென்று எண்ண ஹேதுவுண்டு.

MEASUREMENT OF RAINFALL.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU, M. A., L. T.
Assistant Professor of Physics, Presidency College, Madras.

மழையை அளத்தல்.

[ALL RIGHT RESERVED.]

சூரிய வெப்பத்தாலும், உஷ்ணக்காற்றாலும் ஜலம் ஸதா நீராவியாக மாறிக்கொண்டே இருக்கிறதென்றும், இந்த நீராவி ஆகாயத்தில் வியாபித்திருக்கிறதென்றும், நமக்குத் தெரியும். இந்த நீராவியை தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும்சக்தி ஆகாயத்திற்கு உண்டு என்றாலும், இந்த சக்தி காலத்திற்குத் தக்கபடி வேறுபடும். இந்த சக்திக்கு மீறினால், நீராவி மழையாகப் பெய்துவிடும். சீதோஷ்ண நிலைமைக்குத்தக்கபடி, ஒருகன அங்குலக்காற்றில் அடங்கி இருக்கக்கூடிய நீராவியும் ஏற்றத்தாழ்ச்சி அடையும். வெயில் காலங்களில் கீழ்க்கடல் ஓரங்களில் டெம்பரேச்சர் அதாவது உஷ்ணத்தின் தீக்ஷணியம் அதிகமாவதால், ஆகாயத்தில் ஏராளமான நீராவி பரவியிருந்தாலும், அது மழையாக கீழே இறங்குவதில்லை. அதேகாலத்தில் மேற்குக் கடற்கரையை அடுத்த உயர்ந்த மலை உச்சியில்தாக்கும், நீராவி அடர்ந்து தென்மேற்குக்காற்றால் அடித்துக்கொண்டு வரப்பட்ட, காற்று குளிர்ந்து தன்னிடத்துள்ளயிருந்த நீராவியை மழையாக பூமியில் கொட்டி விடுகிறது. இதேமாதிரியாக கிழக்குக் கடற்கரையிலும், ஐப்பசி கார்த்திகை மாஸங்களில் அதிக மழை பொழிகிறது இம்மாதிரி இடத்திற்கும் காலத்திற்கும் தக்கபடி ஏற்றத்தாழ்ச்சியாக மழை பெய்வதால், இந்த ராஜதானியிலுள்ள முக்கியமான பட்டணங்களில் பெய்வதை அளவிட்டு, ஜில்லா கெஜட்டுகளிலும், ராஜதானி கெஜட்டிலும், மற்றுமுள்ள முக்கியமான பத்திரிகைகளிலும் பிரசுரம் செய்கிறார்கள். இந்த "பிழைக்கும் வழி" பத்திரிகையில். பிரதி மாஸமும் கடைசிப் பக்கத்தில் 'காலஸ்திதி' என்னும் தலைப்பில் மழையைப்பற்றி சில குறிப்புகள் காணப்படுகின்றன. அதை வாசிப்பவர்களுக்கு தெளிவாய்த் தெரியும் பொருட்டு, மழையை அளப்பது எப்படி என்பதையும், மழையை கணக்கிட்டு பதிந்துவைப்பதால் பிரயோஜனம் உண்டு என்பதையும், ஒரு அங்குலம் மழை என்றால் எவ்வளவு என்பதையும் விவரிக்க இங்கு முயல்வோம்.

மழை பெய்தால் அதை ஸாதாரணமாய் ஜனங்கள் எப்படி வர்ணிக்கிறார்கள்? சில கிராமங்களில் இத்தனை செவி மழை என்றும், சில இடங்களில் இத்தனை செய் மழை என்றும், வேறு சில ஜில்லாக்களில் இத்தனை உழவு அல்லது ஏர் அல்லது பதனு மழை என்றும், பேசிக்கொள்வதை நாம் கேட்டிருக்கிறோம். வேறு சிலர், மழையை ஒருவிதமாயினும் உத்தேசமாய் கணக்கிட முடியாமல் தங்கள் ஊரிலுள்ள ஏரிகளில் நிரம்பிய தண்ணீரைக் கவனித்து ஏரிக்கணக்காய் சொல்லுவதும் உண்டு. பஞ்சாங்கங்களில் வருஷ மழை இவ்வளவு வள்ளம் என்றும், இவ்வளவு குறுணி, பதக்கு, தூணி என்றும், கணக்கிடப்பட்டிருப்பதை கவனித்துப் பார்த்தால் முற்காலத்தில் மழையை மரக்கால் முதலியவைகளால் அளவிட்டு வந்தார்கள் என்று தெரிய வருகிறது. ஆனால் ஒரு செவி மழை என்றால் நிச்சயமாய் இவ்வளவுதான் என்றும், அதையும் அதன் அரைக்கால் முதலான பாகங்களையும் எப்படிக் கணக்கிடுவதென்றும் தெரிந்து சொல்லுகிறவர்கள் ஒருவரும் இல்லை. மரக்கால் அளவு பஞ்சாங்கத்தில் காணப்படு

கிறதே தவிர அதன் பரிமாணம் இவ்வளவு தான்' என்றும், எப்படி மழையை அளக்கிறது என்றும், நமக்குக் காட்டுகிறவர்களையும் நாம் கண்டதில்லை ஒரு உழவு மழை என்றாலோ, புஞ்சை நிலத்தின் உறுதிக்குத் தக்கபடி அந்த மழையின் கணக்கும் வித்யாஸப்பட வேண்டியதுதானே. ஆதலால் ஸாதாரண பழக்கத்திலுள்ள அளவைகளால், ஸகலரும் ஒரே மாதிரி தெரிந்துகொள்ளும்படியாக, வரையறுத்து மழையை வர்ணிக்கமுடியாது. பெய்தமழையின் பரிமாணத்தை இந்த அளவைகளால் பெரும்படியாய்த்தான் சொல்லமுடியும்.' இந்தக் காலத்தில் இந்தியா கவர்ன்மென்டாரும், மற்ற நாகரிகம் அதிகமான தேசங்களிலுள்ளவர்களும் அங்குலக் கணக்கில் மழையை கணக்கிடுவதால், அதையே நம்முடைய நண்பர்கள் வழக்கத்திற்கு கொண்டுவர முயலவேண்டுமென்பதை வற்புறுத்திச் சொல்லவும் வேண்டுமோ ?

ஒரு அங்குலம் மழை என்றால் எவ்வளவு ? மழை ஜலத்தை மரக்கால் முதலான முகந்து அளக்கும் கருவிகளால் அளத்தல் ஸகஜமாகத் தோன்ற, கெஜக்கோலால் அங்குலக் கணக்கில் அளப்பது என்பது விநோதமாகத் தோன்றுவது இயல்பே. தெரிந்துகொண்ட பிறகு விநோதம் ஒன்றும் தென்படாது. ஒரு ஊரில் மழை பெய்வதாக வைத்துக்கொள்வோம். அங்கே ஒரு மைதானத்தில் செங்குத்தான பக்கங்களையுடைய தாம்பாளம் ஒன்றை வைத்தால் பெய்த மழைஜலம் எல்லாம் அந்தத்தாம்பாளத்தில் இருக்கும். மழை பெய்த பிறகு அந்தப்பாத்திரத்திலுள்ள ஜலத்தின் ஆழத்தை அளந்தால் ஒரு அங்குலம் பள்ளம் இருக்குமானால் ஒரு அங்குல மழைபெய்தது என்கிறோம். தாம்பாளம் பெரியதாயிருந்தாலும், சிறியதாயிருந்தாலும், மழை ஜலத்தின் ஆழம் வேறுபடுமோ ? வாயகன்ற தாம்பாளமானால் ஜலம் அதிகமாய் உள்ளே விழுமாகையால் தாம்பாளம் எவ்வளவு பெரிதானாலும், அதில் விழுந்த ஜலம் ஒரு அங்குல ஆழமுள்ளதாகவே இருக்கும். ஊர் முழுவதும் ஒரே சீராய் மழைபெய்திருக்குமானால் ஒவ்வொரு சதுர அங்குல இடத்திலும் 1 கன அங்குல மழைஜலம் விழுந்திருக்க வேண்டும். இம்மாதிரி கணக்கிடுவதால் ஒரு அங்குல மழையில் ஒரு ஏகரா நிலத்தில் 100-டன் மழை ஜலம் விழுந்திருக்கவேண்டுமென்றும், ஒரு சதுரமைல் விஸ்தீரணத்தில் 60,000 டன் ஜலம் கொட்டியிருக்க வேண்டுமென்றும் நாம் கண்டு கொள்ளலாம். கிராமங்களில் ஏரிகளைக்கட்டும்போது, ஏரி வாயிலுள்ள நிலங்களின் விஸ்தீரணத்தையும், அந்தக் கிராமத்தில் பெய்யும் ஸராஸரி வருஷ மழை அங்குலங்களையும் கவனித்து, ஏரிக்கு வரக்கூடிய ஜலத்தைக்கணக்கிட்டு அதற்குத் தக்கபடி ஏரியின் விஸ்தீரணத்தையும், அதன் கரையின் உயரத்தையும் நிர்ணயிக்கிறார்கள்.



ரெயின் கேஜ்,
Block by courtesy of Messrs Oakes & Co., Ltd

மழையை அளப்பதற்காக உபயோகிக்கப்படும் 'வருஷமானி' என்னும் கருவியின் படம் ஒன்று மேலே வரையப்பட்டிருக்கிறது. இந்தக்கருவிக்கு இங்கிலீஷில் 'ரெயின்கேஜ்' என்று பெயர் (கேஜ் என்கிற பதத்தில் ககரத்தை, கெஜம் என்னும் பதத்தில் உள்ள ககரத்தை உச்சரிப்பது போல் உச்சரிக்கவேண்டும்). இந்த ராஜதானியில் அநேக முக்கியப் பட்டணங்களில் தெரிந்தெடுத்த இடத்தில் இந்தக் கருவியை வைத்து மழையை அளக்க ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். இந்தக் கருவிகள் எல்லாம் ஒரே அளவினவாக அமைக்கப்பட்டுள்ளன. இதில் மழைத்துளிகளை சேகரிப்பதற்கு ஒரு தகரப் புனலும், ஜலத்தைச் சேர்த்துவைப்பதற்கு ஒரு கண்ணாடிச் சீசாவும், அதை அளக்க ஒரு கண்ணாடி அளவையும் உண்டு. புனலின் வாய் வட்டமாய் 8 அங்குல குறுக்களவு உள்ளது. ஆதலால் அதன் வாய் 50 சதுர அங்குல பரப்புள்ளது. உள்ளே சேகரிக்கப்பட்ட மழை ஜலம் அளப்பதற்குமுன் காற்றாலும், வெயிலாலும் ஆவியாக மாறுவதைத் தடுக்க புனலின் கீழ் துவாரம் சிறியதாகவும், வளைவாயும் செய்யப்பட்டிருக்கிறது. சுற்றுப் பக்கத்திலுள்ள தரையில் பட்டு மழைத்துளிகள் தெறித்து புனலில் விழுவதைத் தடுக்க, ரெயின் கேஜை 2, 3 அடி உயரமுள்ள ஒரு கட்டையின்மேல் வைப்பார்கள். அது வைக்கப்பட்ட இடத்தைச் சுற்றிலும் 7, 8 அடி தூரத்திற்கு நாலாபக்கமும் மரங்கள் இல்லாத ஸமதரையாய் இருக்கவேண்டும். ஒரு ஸமயத்தில் ஒரு அங்குல மழை பெய்திருக்குமானால், புட்டிக்குள் சேர்ந்த ஜலம் 50 கன அங்குலமுள்ளதாயிருக்கவேண்டியது தானே. மழை ஜலத்தை அளந்து பார்ப்பதால் மழை இவ்வளவு அங்குலம் என்றுசொல்லிவிட முடியும். இந்த ரெயின்கேஜுடன், 25 கன அங்குல ஜலம் கொள்ளும்படியானதும், அதில் 50ல் 1 பங்கை அதாவது ½ கன அங்குல ஜலத்தை எளிதில் காட்டக்கூடிய கோடுகள் வரையப்பட்டதுமான ஒரு கண்ணாடி பாத்திரம் அனுப்பப்பட்டிருக்கும். ஒரு அங்குல மழை ஒரு தினத்தில் பெய்திருந்ததானால், கேஜிலுள்ள ஜலத்தை, கண்ணாடிப் பாத்திரத்தில் இரண்டு தடவை அளக்க வேண்டி இருக்கும். கொஞ்சமாக மழை பெய்து, ஜலம் 4 கோடு அளவ்தான் இருந்தால் அதை 4 ஸெண்டு என்கிறோம். (ஒரு ஸெண்டு என்றால் 100ல் 1 பங்கு). மழையை அங்குலத்திலும், ஸெண்டிலும் கணக்கிடுகிறோம். 4·78 இன்ச் மழையென்றால், 4 அங்குலமும், 78 ஸெண்டும் என்பதுதான். முற்கூறிய பரிமாணங்களையுடைய புனல்களையும், சீசாக்களையும் மாத்திரம் உபயோகிக்கவேண்டியது என்னும் கட்டாயம் இல்லை. எந்த அளவுள்ள புனலையும் உபயோகிக்கலாம். புனல் வாயின் குறுக்களவை அளந்து சதுரப்பரப்புக் கணக்கிட்டால் ஒரு அங்குல மழைக்கு இவ்வளவு ஜலம் சேகரிக்கப்பட்டிருக்கவேண்டு மென்பதை தெரிந்து கொள்ளலாம் அதன்படி மழையை இன்சிலும், அதாவது அங்குலத்திலும் ஸென்டிலும் கணக்கிடலாம். வீடுகளில் மண் எண்ணெய்க்காக உபயோகப்படுத்தும் சீசாவையும், புனலையும் வைத்தே கணக்கிட்டுப்பார்க்கலாம். ஜலத்தை அளக்க ஒரு ஸன்ன சீசாவை எடுத்து அதன் உள்ளே பிடிக்கும் ஜலத்தை கன அங்குலத்தில் கணக்கிட்டு வைத்துக்கொள்ளவேண்டும்.

இம்மாதிரி ரெயின்கேஜ் வைத்திருக்கும் இடங்களிலெல்லாம், உத்தியோகஸ்தர்கள் தினம் தினம் காலை 8-மணிக்கு வந்து மழை ஜலத்தை அளந்து சென்னையில் நட்சத்திர

ஆபீஸுக்கு தந்திமூலமாய்க்கணக்கு அனுப்புகிறார்கள். இம்மாதிரி பல இடங்களிலிருந்து வந்தகணக்குகளை சென்னையில் ஸுமார் பகல் 11 மணிக்கு, இன்னும் காலஸ்திதியைக் காட்டும் மற்ற குறிப்புகளுடனும் பிரசுரம் செய்கிறார்கள். இதைத் தான் வர்த்தமான பத்திரிகைகளில் தினம் தினம் அச்சிடுகிறார்கள். இவைகளை கவனித்துக் கொண்டே வருவதால், ஒரு வருஷத்தில் ஸாதாரணமாய் வழக்கம் போல மழை பெய்து வருகிறதா, இல்லையா, எவ்வளவு ஏற்றத்தாழ்ச்சி, எந்த ஜில்லாக்களில் மழை குறைச்சல் என்ற விஷயங்களையும், இன்னும் வேறு விவஸாய வியாபார சம்பந்தமான விஷயங்களையும் நாம் ஊகிக்கலாம்.

அனேக தேசங்களின் மழைக்கணக்கை கவனித்ததில் சில விஷயங்கள் நமக்கு நன்றாய்த் தெரிகின்றன. (1) ஈக்வேடர் என்று சொல்லப்படும் பூமத்தியரேகையை அடுத்த பிரதேசங்களில் மழை அதிகமாகவும், அடிக்கடியும் பெய்கிறது. (2) சமுத்திரக்காற்று அடிக்கும் மார்க்கத்தில் உன்னதமான மலைத் தொடர்கள் இருந்தால், காற்றுப்பக்கத்துள்ள பாகங்களில் அபரிமிதமான மழையும், மற்ற பக்கங்களில் குறைந்த மழையும் உண்டு. (3) காடுகள் அடர்ந்த தேசங்களில் மழை அதிகமாய்ப் பெய்கிறதென்று தெரியவருகிறது. காடுகள் இருந்த தேசங்களில் காடுகள் அழிக்கப்படுவதால் மழைகுறைந்துபோகிறதென்றும், காடுகளை வளர்த்து அபிவிருத்தி செய்த இடங்களில் மழை முன்னிலும் அதிகமாய் பெய்கிறதென்றும் தெரியவருகிறது. இந்த நன்மையை உத்தேசித்தே, இந்த ராஜதானியில், பாரஸ்டு டிபார்ட்மெண்டு என்னும் காட்டு ஸம்ரக்ஷணை இலாக்கா உத்தியோகஸ்தர்கள் காடுகளைக் காப்பாற்றுவதற்கும், விருத்தி செய்வதற்கும், தகுந்த ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். (4) சமுத்திரத்தை அடுத்த பாகங்களில் மழை அதிகம். சமுத்திரத்திலிருந்து காற்று பூமியை நோக்கி அடிக்குமானால், மழை இன்னும் அதிகம் என்பதற்கு நம்முடைய ராஜதானியில் நெல்லூர் முதல் மதுரை ஜில்லாவரையிலும், சமுத்திரக்கரை ஓரமாய் ஐப்பசி, கார்த்திகை மாஸங்களில் கன மழை பெய்வதே அத்தாக்ஷியாகும்.

ஆற்றிலே கொட்டினாலும் அளந்து கொட்டு என்கிற பழமொழிப்படி, மழையை அளந்து எழுதிவைப்பதால் தற்காலத்தில் பிரயோஜனம் ஒன்றும் தெரியாதபோதிலும் கூட, பிற்காலத்தில் எவ்விதமாயாவது இந்தக் குறிப்புகள் உபயோகப்படும் என்பதை உத்தேசித்தே கணக்கிடுவது உசிதமல்லவா?

எம். வி. எஸ். அநந்தபத்மநாபராவ்.

◆

Chrysanthemum.

ஜவந்திப்பூ.—ஜவந்திப்பூ அநேகமாய், எல்லா தேசங்களிலும் உண்டு. இந்தியாவில், நவம்பர், டிஸம்பர், ஜனவரி மாஸங்களில் ஏராளமாய்ப் புஷ்பிக்கிறது. கோவில்களில் அர்ச்சனை முதலியவைகளுக்கும், ஸ்திரீகள் தலையில் அணிந்துகொள்ளுவதற்கும், பிரயோசனப்படுகிறது. இதை சாமந்திப்பூ என்றும் சொல்வதுண்டு. ஜப்பானியர்களும், சீனர்களும், இந்தப் புஷ்பத்தினிடத்தில் மிகுந்த ப்ரேமை வைத்திருக்கிறார்கள். இவர்கள் இரண்டாயிர வருஷமாய், இந்தப் பூவை, பல தினுசுகளாக விருத்தி செய்திருக்கிறார்கள். ஒரு தினுஸை இந்த ஸஞ்சிகையிலுள்ள படத்தில் பார்க்கலாம்.

SINGLE PLANTING IN KURUVAI.

BY

S. SAMBASIVA AIYAR.

குருவையில் ஒற்றை அலகு சாகுபடி.

இதைப்பற்றி விசேஷமாய் இந்தப்பத்திரிகையில் எழுதப்பட்டு வருகிறதென்று சிலபேர் கொஞ்சம் அதிருப்திபடலாம். ஆனால் இதனால் இருக்கிற லாபத்தையும், இதை எவ்வளவு சாகுபடி செய்யவேணுமோ அவ்வளவு செய்யாமலிருக்கிறதையும், நெல் சாகுபடியாகிற நிலத்தின் விஸ்தீரணத்தையும் ஒற்றை அலகாய் சாகுபடியாகிவருகிற நிலத்தின் அளவையும், 100-க்கு 84 பேருக்குமேல் உழுது பிழைக்கவேண்டி இருப்பதையும், பார்க்கும்போது, "பிழைக்கும் வழி"யில் குறைந்தது மாஸத்துக்கு ஒரு வியாஸமாவது ஒற்றை அலகு சாகுபடியைப்பற்றி, ஜனங்கள் பூராவாயும் தெரிந்துகொண்டு அவ்விதம் செய்கிற வரையில் எழுதி வரவேண்டியது அவசியம்.

இதற்கு முந்தி சம்பா, சிறுமணியன், வாடன் இவைகளைப்பற்றி மட்டும் எழுதப்பட்டிருந்தன. நான் இப்பொழுது, குருவை (90 நாள் பயிர்) ஊடு (குருவையோடு ஒட்டடன் சேர்த்து) சாகுபடி செய்து பார்த்ததைத் தெரிவிக்கிறேன். விதை விடுதல், நாற்றங்கால் செய் நேர்த்தி, விஸ்தீரணம், எல்லாம் சம்பாவுக்கு முன் எழுதியபடியே செய்யவேணும். நாற்றை மட்டும் விதை விட்ட 18 நாளைக்கு மேல் 20 நாளைக்குள் பறித்து நட்டுவிடவேணும். அவ்விதம் நட்ட 70 நாளைக்குள் அறுவடை.

நான் கும்பகோணத்துக்கு ஸமீபத்திலுள்ள பெரும்பாண்டி கிராமத்தில் 1⅔ ஏகர் (5-மா) வீதம் இரண்டு இடத்தில் ஒற்றை அலகு சாகுபடி செய்தேன். சில பேர்கள் நாற்றுப் பறிப்பதிலும், நடுவதிலும் அதிக சிரமமும், செலவும் ஆகிறதென்று சொன்னார்கள். ஆனால் அது சரியல்ல. வழக்கம்போல் ஒரு ஏகர் நடவேண்டியதற்கு நாற்றுப்பறி முதல் நட்டாகிற வரையில் பிடிக்கும் கூலி ரூ. 2-8-0. ஒற்றை அலகாய் நடப்பிடிக்கும் கூலி ரூ. 2-10-6. ஆகையால் அதிகம் பிடிக்க கூடியது ரூ. 0-2-6. குருவையில் ஏகர் 1-க்கு 54 பட்டணம் படி விதை தெளிக்கிறது வழக்கம். ஒற்றை அலகாய் நட 7 படி விதை போதும். ஆனதால் விதையில் 47 படி லாபம் (கிரயம் ரூ. 3-15-0) இருக்கிறது. இதன்வித்தியாஸம் நன்றாய்த் தெரிகிறது

கண்டுமுதலிலும் லாபமிருக்கிறது. நடவானவுடன் பார்த்தால் பயிர் கேவலமாய்த்தான் தோன்றும். நட்டு 20 நாளைக்குப் பிறகு அதிகமாய் தூர்கட்ட ஆரம்பித்து ஒவ்வொரு முதலுக்கும் 8-க்கு மேல் 15 வரையில் தூர்கட்டிவிடுகிறது. அறுவடைக்கு முன் எவ்வளவு மழைபெய்தாலும் தாள் சாய்கிறதில்லை. கொத்துக்கொத்தாய் நட்டவைகள் தூற்றலைக் கண்டவுடன் தலை சாய்ந்து தண்ணீரில் மிதந்து, முளைத்து நஷ்டம் உண்டுபண்ணுகின்றன. ஒற்றை அலகு நடும்போது, பறைச்சிகளிடம் அருகாமையில் இருந்து வேலை வாங்குகிறதில் சிரமம் அதிகம். நட்ட 15 நாள் வரையில் அதிக தண்ணீர் விடக்கூடாது. வயல் காயவும் கூடாது.

நல்ல திறமான 1⅔ ஏகர் நிலத்தில் (ஆனால் கொஞ்சம் தண்ணீர் கட்டக்கூடியது) நான் ஒற்றை அலகாய் நட்டு கண்டு முதல் செய்தது 1,056 பட்டணம் படி (44 கலம்). இதில் போன வருஷம் வழக்கம்போல் நட்டு 42 கலம் கண்டு முதல் செய்தேன்.

பொட்டையான 1⅔ ஏகர் நிலத்தில் (வடிகால் வஸதி அதிகம்) சுமார் 40 வண்டி முனிஸிபல் குப்பைபோட்டு ஒற்றை அலகாய்

நட்டு 1,200 படி (50 கலம்) கண்டு முதல் செய்தேன். சென்ற வருஷத்தில் அதே இடத்தில் 35 கலம் கண்டு முதல். போன வருஷத்தை விட இந்த வருஷத்தில் ஒற்றை அலகாய் நட்டத்தில் 15 கலம் அதிகம்.

சிலபேர் வைக்கோல் குறைந்து விடுமென்று சொன்னார்கள். ஒரு ஏகருக்கு சுமார் 10 திரை தான் குறைவு. இதன் விலை ரூ. 1-8-க்கு மேல் இராது. ஒற்றை அலகில் இருக்கிற மொத்த லாபத்தை உத்தேசிக்கும்போது வைக்கோல் குறைவு அல்பம்.

ஊடு.—½ ஏகர் நிலம் நட 3½ பட்டணம் படி குருவையும், ஒட்டடன் 2 படியும் கலந்து நாற்றுவிட்டு நட்டேன். குருவை கண்டு முதல் ஆகிவிட்டது. ஒட்டடன் பயிர் மிகவும் நன்றாயிருக்கிறது. நான் சம்பா, தாளடி (இரண்டாம் போகம்) ஒற்றை அலகு நட்டிருக்கிறேன். சம்பாப்பயிர் 18-க்குமேல் 25 வரையில் தூர்கட்டியிருக்கிறது. தாளடிப் பயிர்களும் நன்றாயிருக்கின்றன. நான் இந்த வருஷம் ஒற்றை அலகு நடாத இடங்களில் விதையைக் குறைத்து முன் திட்டத்தில் பாதிதான் விட்டேன். நாற்று அதிகமாய்க் கண்டு நடவாய் சுமார் 15 மாடுகளுக்கு, 4 நாள் மிகுந்த நாற்றை தீனியாகப் போட்டேன். குருவையில் நல்ல விதை எடுத்து வைத்திருக்கிறேன் வேண்டியவர்களுக்குக் கொடுக்க முடியும்.

எஸ். சாம்பசிவன்.

WANTED AGENTS.
ஏஜெண்டுகள் தேவை.

"பிழைக்கும் வழி"க்கு ஸந்தாதாரர்கள் சேர்க்க ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் ஏஜெண்டுகள் தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித்தெருவு, மதராஸ்.

ACCOUNT KEEPING.

BY

V. PANCHAPAGESA AIYAR.

கணக்கு வைத்துக்கொள்ளல்.

நம்மவர்களில் பெரும்பாலர் தங்களுடைய சொந்த வரவு செலவுகளுக்கு ஸரியான கணக்கு வைத்துக்கொள்வதில் சிரத்தையுள்ளவர்களாயிருப்பதில்லை. ஒழுங்காய்க் கணக்குகள் வைத்துக்கொள்வதால் உபயோகமான காரியங்களில் கிரமமான செலவுகளைக் குறைக்காமலும், வீண் வழிகளில் அக்கிரமமான விரயங்களைத் தடுக்கவும், ஏதுவாவதன்றி, அந்தந்தக் குடும்பத்தின் சரித்திரத்திற்கும் மதிப்பில்லாத ஆதாரமுமாகும். கணக்குகள் வைத்துக் கொள்ளாததற்குச் சிலர் (1) சாவகாசமில்லை யென்றும், (2) கணக்கு எழுத பரீக்ஷை தேறினவர்கள்வேண்டுமென்றும், (3) குமாஸ்தா வைத்துக்கொண்டு சம்பளம் கொடுக்கவேண்டியதுடன் தங்கள் மர்மங்களெல்லாம் அவர்களுக்குத் தெரியும்படி நேரிடுமென்றும், (4) வேறு சிலர் தங்கள் செல்வத்தை எழுதிக்கணக்கு செய்தால் லக்ஷ்மி கடாக்ஷம் குறையுமென்றும், இன்னும் பல விதமாகக் காரணம் சொல்லுகிறார்கள். இவைகளெல்லாம் யோசியாமல் சொல்லும் சமாதானங்கள். பிறர் அபேக்ஷை இல்லாமல் வரவு செலவு செய்யும் ஒருவனுக்கு தான் செய்பவைகளை உடனுக்குடன் ஒரு வரி குறித்து வைப்பது காலதாமதத்தை கொடுக்குமென்பதாவது, குமாஸ்தாவின் உதவியை வேண்டுமென்பதாவது ஸரியல்ல. கணக்கின் மதிப்பு, புஸ்தகத்தின் பெருமையையாவது, கடிதாசியின் திறத்தையாவது, எழுத்தின் நேர்மையையாவது பொறுத்ததல்ல. அதில் அடங்கியிருப்பவைகளின் உண்மையைப் பொறுத்ததாகும். ராஜாங்கத்தாரும், பெருத்த ஐசுவர்யவான்களும், வியாபாரிகளும், தங்கள் ஐசுவர்யங்களைக் காப்பாற்றுவதற்குக் கணக்குகளையே முக்கிய ஆதாரமாகக் கொண்டிருப்பது நிதர்சனமாயிருக்கும்போது, கணக்கு வைத்துக் கொள்ளுவதால் லக்ஷ்மி கடாக்ஷம் குறையுமென்பதும் ஓர் மூட நம்பிக்கை யென்பதில் வினோதமொன்றுமில்லை.

மேலும் நம் கண் முன்பாக பலர் பல விதத்தில் தங்கள் சொத்துக்களைத் தோற்று பரிதவிப்பதைப் பார்க்கிறோம். தெய்வச்செயலால் நேரும் நஷ்டங்களைத் தவிர மற்றவைகளுக்கு கணக்குகள் இல்லாமையை ஒரு முக்கிய காரணமாகக் கொள்ளலாம். மனிதர்களின் சித்தவிருத்தியில் பலமாறுதல்கள் உண்டு. சிலர் சிற்றின்பத்திலேயே பற்றுள்ளவர்களாயிருப்பார்கள். சிலர் விசேஷ டம்பச் செலவு செய்வதில் விருப்பமுள்ளவர்களாயிருப்பார்கள். சிலர் வியாபாரத்தில் மூர்க்கமுள்ளவர்களாயிருப்பார்கள். இவ்விதமாக ஏதாவது ஒன்றில் மிதமிஞ்சின ஆஸ்தியுடன் இருப்பது தீங்கை விளைவிக்கிறது. இப்படிப்பட்டவர்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படி நடப்பதில் நேரிடும் நஷ்டங்களை அறிந்துகொண்டு, அதைப் பரிகரிப்பதற்கு, ஸரியானபடி கணக்குகள் இல்லாவிட்டால், மார்க்கமில்லாமல் போகிறது. தங்களுக்கு வேண்டியிருக்கும் செலவுகளுக்கு எவ்வளவு நிர்ப்பந்தத்தின் பேரிலானாலும் கடன் வாங்கிக்கொண்டு, தங்கள் நோக்கப்படி நடந்து கொள்வதிலேயே உற்சாகமுள்ளவர்களாயிருப்பார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் அவர்கள் வாங்கும் கடன் தொகைகள் மட்டும் விஷம்போல் ஏறிக்கொண்டு போகுமேயல்லாமல், இதர இனங்களிலுள்ள ஆதாயம் தேய்பிறைச் சந்திரனைப் போல் குறைந்துகொண்டேதான் வரும். கடைசியில் சொத்துக்களெல்லாம் கோர்ட்டுக்கும், கடன் காரர்களுக்குமாகப்போய்ச்சேர்ந்து துன்பப்படும் ஸமயத்தில்தான் இவர்களுக்கு கணக்குத் தெரியும். பின்பு முந்தியே இம்மாதிரி வருமென்பதை யோசியாமல் போய் விட்டோமே யென்று துக்கிப்பார்கள். இப்படிப் பட்டவர்கள் ஒழுங்கானபடி கணக்கு வைத்துக்கொண்டிருந்து ஒவ்வொரு வருஷத்திலும் தங்கள் ஆஸ்தியையும், வருமானத்தையும், நிதானித்துக்கொண்டு வந்தால், நாளாவர்த்தியில் ஏமாந்து போகாமல் அவர்கள் குறைவையறிந்து, அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளவேண்டுமென்ற எண்ணம் பிறக்கக் காரணமாகுமல்லவா ?

கணக்கு வைத்துக்கொண்டிருப்பவர்களில் சிலர் கையிருப்புகளைத் தணிக்கை செய்யாமலே எழுதிக்கொண்டும், சிலர் வரவேண்டியதும், கொடுக்கவேண்டியதுமான இனங்களை மட்டில் பதிந்து கொண்டும் வருகிறார்கள். இம்மாதிரியான கணக்குகளில் பெரும் தவறுகள் நேர்ந்துவிட இடமுண்டு. ஆகையால் ஸாதாரணமாய் வரவு செலவு செய்பவர்கள் அடியில்சொல்லுகிறபடி சுலபமாய் கணக்குகளை வைத்துக்கொள்ளலாம்:—

1. குறிப்பு.—ஒவ்வொரு வரவு செலவையும் உடனுக்குடனே இதில் குறித்துக்கொண்டு வரவேண்டும். இதன்படிக்கையிருப்பை வாரத்துக் கொருமுறையாவது ஸரி பார்க்கவேணும். இதுதான் எல்லாவற்றிற்கும் ஆதாரமான கணக்கு.

2. ஜர்னல் அல்லது இனவாரிக் கணக்கு.—இதில் வரவு செலவுகளை இனவாரியாகப் பிரித்து குறிப்பிலிருந்து வாரத்துக் கொருமுறையாவது, அல்லது மாஸத்துக் கொருமுறையாவது பதிந்து வரலாம். ஒரு இனத்தில் செலவாயிருக்கும் தொகையை எப்போதாவது அறிய வேண்டுமானால் இதிலிருந்து லகுவில் தெரிந்துகொள்ளலாம்.

3. லெட்ஜர் அல்லது பேரேடு.—இதில் பத்து வரவு செய்யும் பேர்வழிகளின் கணக்கை

அவரவர் தலைப்பில் குறிப்பிலிருந்து 2-வது சொன்ன மாதிரியாக பதிந்து வரலாம். பத்து வரவுசெய்யும்பேர்வழிகள் அதிகமாயிருந்தால் இந்தக் கணக்கிலிருந்து அவர்கள் கணக்கை சீக்கிரத்தில் கண்டு பிடிக்கக்கூடும்.

இவைகளில் முதலாவது கணக்கு மாத்திரம் எல்லாரும் முக்கியமாய் வைத்துக்கொள்ள வேண்டியது. 2,3-வது கணக்குகள் அவரவர்கள் அவசியத்தைப் பொறுத்ததாகும். ஸாதாரணமாய் கணக்கை எழுதிக்கொண்டே போவதோடு மட்டில் நிற்கக்கூடாது. வருஷத்துக் கொருமுறை (1) அந்த வருஷத்தில் இனவாரியாய் நடந்திருக்கிற வரவு செலவுகளுக்கு ஒரு ஜப்தா எடுக்கவேண்டும். (2) லாப இனங்களையும், செலவு இனங்களையும், கணக்கிட்டு செலவுபோக மீதியாகும் லாபம் இவ்வளவென்பதையும் நிச்சயிக்கவேண்டும். (3) அந்த வருஷத்துக் கடைசித் தேதியில் வரவேண்டியவைகளையும், கொடுக்கவேண்டியவைகளையும் கணக்கெடுத்து, கொடுக்கவேண்டியது போக, ஆஸ்தி இவ்வளவென்று கண்டு பிடிக்கவேண்டும். முந்திய வருஷத்துக் கடைசியிலிருந்த ஆஸ்தியும், ஷை வருஷத்திலுள்ள லாபமும் சேர்ந்து, ஆஸ்தித்தொகையாயிருக்க வேண்டும்.

இம்மாதிரியாக எடுக்கும் ஜப்தாக்களிலிருந்து வருஷத்தில் நடமுதல் லாபங்களுக்குக் குறைவு நேரிட்டிருந்தாலும், நஷ்டமுண்டாயிருந்தாலும், இன்ன இனங்களிலுள்ள அதிகச் செலவு, அல்லது குறைந்த வருமானத்தால் அது நேர்ந்ததென்று அறிந்து, அதற்குத் தகுந்தபடி அடுத்த வருஷத்தில் செலவைக் குறைத்துக் கொள்ளவேண்டும். இந்த விதமாக நடந்து வருவதிலிருந்து ஒரு வருஷத்தில் ஒவ்வொரு இனத்திலும் வரக்கூடிய தொகையையும், செலவாக்கக்கூடிய தொகையையும், முந்தியே ஊகிக்கலாம். அந்தப்படி பிரதி வருஷத்துக்கும் ஒரு பட்ஜட் தயார்செய்து, அந்த நிதானத்துக்குமேல் அதிகச் செலவாகாமல் பார்த்துக்கொண்டு வந்தால், கிரமமான செலவுகளை ஸரிவரச்செய்து வரவும், வீண் செலவுகளுக்கு இடங்கொடாமல் பாதுகாத்து வரவும் சாதனமாகும்.

பஞ்சாபகேசன்.

CASUARINA CULTIVATION.

BY

P. D. RATNAM PILLAI.

சவுக்கு சாகுபடி.

முன்னுரை.— இது நமது நாட்டில் நெடுங்காலமாகப் பயிர்செய்யப்படுகிறது. இது முக்கியமாய் விறகுக்காகவே சாகுபடி செய்யப்படுகிறது. சிலர் வேலிக்கால்களிலும் பயிர்செய்கிறார்கள். திருமுல்லைவாசல், கூடலூர், ஆலம்பாக்கம் முதலிய இடங்களில் அநுசரிக்கப்படும் முறைமையைக் கீழே எழுதுகிறேன்:—

இயல்பு.—இந்தப்பயிருக்கு உப்பு ஆகாரம் தேவை. இந்தக் காரணம்பற்றியே இது சமுத்திரக் கரையோரங்களிலும், உப்புத் திடல்களிலும் நன்றாய்ப் பயிராகும் குணமுள்ளது. இதன்தழை பூமியை வளப்படுத்துந் தன்மையுள்ளது.

மண்.—உவர் ஸம்பந்தமுள்ள மணல்சாரியே உசிதமானது. உவர் ஸம்பந்தமில்லாத இடத்திலும் வளரும். களிமண், மணல், இவை இரண்டும் ஸம்பந்தமுள்ள பூமியும் குற்றமில்லை. முழுவதுங் களிவாய் கூடாது.

விதை தேரிந்து எடுத்தல்.—காய் நன்றாய்ப் பழுத்தவுடன் விதை எடுத்தல் கூடாத காரியம். பழுத்தவுடன் காய்வெடித்து விதைகளெல்லாம் கீழே விழுந்து விடுகின்றன. இதற்காகவே பழுக்க ஆரம்பித்த உடனே காய்களைப்பறித்து ஒரு புது மண்குடத்தில்போட்டு அதன்வாயை வைக்கோலினால் மூடிவைக்கவேண்டும். இரண்டொரு நாள் ஆனபிறகு வெயிலில் துணியை விரித்து அதில் இந்தக் காய்களை எல்லாம் கொட்டி மேலே ஒரு துணியினால் மூடி நான்கு மூலைகளிலும் பாரம் வைக்கவேண்டும். இந்த விதையானது உமிபோலுள்ளது. காற்றில் பறந்துபோகும். இதனால் தான் இவ்வளவு ஜாக்கிரதையாக விதையை எடுக்கவேண்டும். பிறகு காயை நீக்கி, விதையைத் தனியாக எடுத்து, முன்போலவே துணிகளில் காயவைக்கவேண்டும். இரண்டு மூன்று நாள் காயவைத்து பிறகு எடுத்து பத்திரமாக வைக்கவேண்டும். இரண்டுமாஸம் கழித்து விதைப்பதே நல்லது.

பாத்தி தயார்செய்து விதைத்தல்.--விதை விடுகிறதற்காக வைத்திருக்கும் நிலத்தை நன்றாய் உழுது, புல் பூண்டுகளை நீக்கி, மண்வெட்டிகளினால் கொத்தி வாங்கி, மேடு பள்ளமில்லாமல் சமமாக்கி 10-அடி நீளம், 3-அடி அகலமுள்ள பாத்திகளாகக்கட்டவேண்டும். ஒரு ஆள்தாராளமாய் நடந்து போகும்படியாக வரப்புகள் கட்டவேண்டும். பிறகு விதையைத்தெளிக்கவேண்டும். விதைகளின்மேல் சாம்பல் எருத்தூள் இவைகளைத் தெளிக்கவேண்டும். பின்பு வைக்கோலினால் மூட்டம் போடவேண்டும் ஒரு ராத்தல் விதையின் விலை அணா10. மூவாயிரங்கன்றுகள் ஒரு ராத்தல் விதைகளிலிருந்து உண்டாகும். ஒரு ஏகர் நிலத்திற்கு முக்கால் ராத்தல் விதை போதுமானது. பாத்திக்கு எருவிடக்கூடாது. ஏனென்றால் பிறகு வைக்கும் இடம் எருவில்லாத பக்ஷத்தில் அங்கே நன்றாய்ப் பயிராகாது. இதனாலே எருப்போடுகிறதில்லை. மேடுசெய்து அதில் விதைத்தால் எவ்வளவு உயரம் வளருகிறதோ அதற்கு இரண்டு பங்கு வேர் இறங்கும்.

தண்ணீர் விடுதல்.—தகரப்புனலினால் விதைகள் ஒன்று சேராதபடி மெதுவாகத் தெளிக்கவேண்டும். விதை விதைத்த ஒரு வாரம் வரையில் காலை மாலை தெளிக்கவேண்டும். ஏழாம் நாள் முளைகாணும். ஒரு வாரத்திற்குப் பிறகு காலையில் தண்ணீர் விடவேண்டும். இப்படி ஒரு மாஸம் வரையில் தண்ணீர் விடவேண்டும். பிறகு இரண்டுமாஸத்தில் பதியன்போடலாம்.

பதியன் போடுதல்.—திருமுல்லைவாசலிலும், இதன் சுற்றுப்பக்கங்களிலும்தான் இந்த வழக்கம் அநுசரிக்கப்படுகிறது. அதாவது கன்றுகள் மூன்று அங்குல உயரம் வளர்ந்தவுடன் முன்போலவே பாத்திகள் தயார்செய்து, இரண்டு அங்குலத்திற்கு ஒரு கன்று வீதம், ஒரு கூரான குச்சியினால் பூமியைக்குத்தி அதில் நடவேண்டும். இதற்கும் ஒரு வாரம் வரையில் காலை மாலை தண்ணீர் புனலினால் விடவேண்டும். புனல் அகப்படாத பக்ஷத்தில் மண்குடத்தை ஒரு இடத்தில் புனல்மாதிரி துவாரங்களைச் செய்துகொள்ளுகிறார்கள். பிறகு இரண்டு நாளைக்கு ஒரு முறை வீதம் ஒரு மாஸம் வரையிலும், பின்பு மூன்று அல்லது நான்கு நாளைக்கு ஒரு முறை வீதமும், தண்ணீர் விட்டுக்கொண்டு வரவேண்டும். ஆறுமாஸத்திற்கு மேல் ஒரு வருஷத்துக்குட்பட்ட கன்றுகளைப் பிடுங்கி நடலாம். இப்படிப் பயிர்செய்யப்பட்ட கன்றுகளுக்குப் பதியன் கன்றுகள் என்று பெயர். பதியன்கன்றுகளே சிறந்தவைகள். சில இடங்களில் பதியன் போடாமலே பிடுங்கி நிலங்களில் வைக்கிறார்கள். ஆனால் இது நன்றாய் வளரவும், பெருக்கவும் காணோம். அல்லாமலும் பதியன்கன்றுகள் வெயிலுக்கும், மழைக்கும் சமாளித்துக்கொள்ளும். ஆனால் ஸாதாரணக் கன்றுகளுக்கு இந்தத் தன்மை அவ்வளவு இல்லை. ஆகையினால் தான் பதியன் கன்றுகள் விசேஷமென்று யாவரும் சொல்லுகிறார்கள். அநுபோகத்திலும் அப்படியே.

விஸ்தீரணம்.—ஒரு ஏகர் நிலம் இந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளுவோம்.

நிலம் பண்படுத்தல்.— இந்தப் பக்கங்களில் அனேகமாய் சவுக்கு சாகுபடி செய்யும் நிலங்களை உழுது கொத்திப் புல் பூண்டு நீக்குகிற வழக்கமில்லை. இது ஸாதாரணமாய் மேடுகாடு

கள் முதலிய இடங்களிலெல்லாம் குழிபோட்டு இந்தக் கன்றுகளை நடுகிறது வழக்கம். இது கூடாதென்பதே நம்முடைய அபிப்பிராயம். இந்த நிலத்தை நன்றாய் உழுது,கொத்திப் புல் பூண்டுகளை நீக்கி, நிலத்தைச் சமன்படுத்திப் பயிரிடுவதே சிறந்தது. உதாரணமாக கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிறதற்காக வெட்டும் ஊற்றுக்களுக்கு ஸமீபமாகவுள்ள மரங்கள், மற்றை மரங்களைவிட இரட்டிப்புப்பெருத்து இருப்பதை ஒவ்வொருவரும் பார்க்கலாம். இது பெருத்திருக்கிறதற்குக் காரணம் என்னவென்றால் ஊற்று வெட்டும்போது அடிமண் ஓரங்களில் போடப்படுகிறதினாலேயே என்று தெரிந்துகொள்ளலாம். இது விஷயம் ஒவ்வொருவரும் கண்ணாரக் கண்டிருந்தும் நிலத்தை உழுது செப்பனிட்டு கன்றுகளை வைக்கும் வழக்கம் இல்லை. இதைக் கவனித்து, சாகுபடி செய்வோருக்கு சொல்லுவோர் இல்லாமையே காரணம். உழுது புல் பூண்டுகளை நீக்கி கன்றுகளைவைத்துச் சாகுபடி செய்துபார்த்ததில் நன்றாய் சீக்கிரத்தில் வளருகிறது. ஆகையினால் ஒவ்வொருவரும் இந்த விஷயத்தைக் கைப்பற்றவேண்டும். குழிகளை வெட்டிக் கன்றுகள் வைப்பதிலும் எருப் போடும் வழக்கமில்லை. மடித்த ஆட்டெரு, மாட்டெரு, சாம்பல், வண்டல், பொருக்கு இவைகளில் கிடைத்ததை குழிக்குக் கொஞ்சம் போடுவது நல்லது. நிலத்தை நன்றாய் உழுது கொத்திவாங்கி, புல் பூண்டுகளை நீக்கி, ஆறு அடிக்கு ஒரு குழி வீதம், குழிவெட்டி ஆறப் போட வேண்டும்.

கன்று வைத்தல்.—மேற்கூறிய வயதுக்குட்பட்ட கன்றுகளைப் பிடுங்கி காலையிலாவது, மாலையிலாவது குழிக்கு ஒரு கன்று வீதம் வைக்கவேண்டும். ஸாதாரணமாய் ஜனவரி, பிப்ரவரி மாஸங்களிலாவது அல்லது ஜூலை, ஆகஸ்டு மாஸங்களிலாவது கன்றுகளை வைக்க வேண்டும். கன்றுகளை வைத்தவுடன் ஒவ்வொரு குழிக்கும் இரண்டு பனைமட்டையினால் நிழல் கட்ட வேண்டும். ஆறு அடிக்கு ஒரு கன்று வீதம் நட்டால் ஒரு ஏகருக்கு 1,610 கன்றுகள் பிடிக்கும்.

பாசனம்.—கன்று நன்றாய் வேர் ஊன்றுகிற வரையில் தினம் ஒரு முறை தண்ணீர் விட வேண்டும். அதாவது சுமார் இரண்டு மாஸம் வரையில் ஊற்றுவது மேன்மை. பிற்பாடு இரண்டு தினத்திற்கு ஒரு முறை இரண்டு மாஸமும், பிறகு நான்கு தினத்திற்கு ஒரு முறை ஆறு மாஸமும் விடுவது வழக்கம். பின்பு வாரத்திற்கு ஒரு முறையும், ஒரு வருஷத்திற்குப்பின்பு இரண்டு முறை வீதமும் தண்ணீர் ஊற்றவேண்டும். மழை பெய்த காலத்தில் நிறுத்தியும், கோடையில் அதிகமாக ஊற்றியும், மேற் கூறிய வரைகடந்து செய்யவேண்டும்.

பழுதுபடும் கன்றுகளுக்குப் பதில் கன்றுகள் வைத்தல்.—நூற்றுக்குப் பத்து கன்று வீதம் பழுதுபடும். இதற்கு வேறுகன்றுகள் முதல் முதல் கன்றுவைத்து, முதல் ஆறுமாஸம் வரையில் பழுதுபோகும் கன்றுகளுக்கு புதிய கன்றுகள் வைக்கவேண்டும்.

வேலியடைத்தல்.—இந்த நிலத்தை நன்றாய் வேலியடைத்துப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால் மாடு மிதித்துத் துவைத்துவிடும். ஆடு நுனியைக் கடித்துவிடும். பிறகு வேறு கன்று தான் நடவேண்டும். ஆகையினால் ஆடு மாடு தின்று அழிக்காமல், ஸர்வ ஜாக்கிரதையாகக் காப்பாற்றவேண்டும்.

இடைவெளிப்பயிர்.—இதன் இடைவெளியில் கொட்டைமுத்து, கேழ்வரகு, கடலை, முதலிய பயிர்களை, முதல் இரண்டு வருஷம் வரையில் பயிர்செய்யலாம். இப்படிப்பயிர் செய்வதனால் இரண்டுவித லாபமுண்டு. இதன்பயிரினால் லாபமும், இப்படிச் செய்வதனால் பூமி உரப்பட்டு இதனால் சவுக்குக் கன்றுகள் செழுமையாய் வளரும் ஹேதுவாகியலாபமும், ஆகிய இரண்டு வகையாம்.

செய்நேர்த்தி.—வருஷா வருஷம் பக்கத்துக் கிளைகளைக் கழித்து மரத்தை ஒழுங்காய் வளரவிடவேண்டும். கோணலான மரங்களை வெட்டவேண்டும்.

மரத்தை ஒரு ஆள் உயரம் வளர்த்து கொடுக்கச் செலவு.—ஆயிரம் கன்றுகள் இவ்விதமாக வைத்து ஒரு ஆள் உயரம் வளர்த்துக்கொடுப்பவனுக்குக் கூலி ரூ. 31-4-0. ஒரு ஆள் உயரம் வளர்ந்தபிறகும், அருங் கோடையில் தண்ணீர் ஊற்றவேண்டும். பிறகு ரூ. 15 செலவு செய்தால் போதுமானது.

தழை.—ஒரு ஏகருக்கு வருஷா வருஷம் ஒரு டன் முதல் ஒன்றரை டன் வரைக்கும் கிடைக்கும். இது நல்ல உரமானது. இதைச் சிலர் கூட்டிக்கொண்டு அடுப்பெரிக்கிறார்கள். இப்படிச்செய்யாமல் நிலத்திலே மக்கும்படி செய்தால் மிக்க நல்லது.

மாசூல்.—சிலர் இதை ஆறு வருஷத்தில் வெட்டுகிறார்கள். சிலர் பதினைந்து வருஷத்திலும் வெட்டுகிறார்கள். இதில் கூறிய முறைப்படி அனுசரித்து வந்தால் எட்டாவது வருஷம் வெட்டிவிடலாம். பிரதி வருஷமும் சில மரங்கள் பட்டுக்கொண்டே வரும். பட்டமரங்களை அப்போதைக்கப்போது இதர மரங்களுக்குக் கெடுதிவராமல் வெட்டிவிட வேண்டும். இதை வெட்டாவிட்டால் நல்ல மரத்திற்கும் கெடுதியுண்டு. இப்படி ஒரு ஏகருக்கு சுமார் முன்னூறு மரங்கள் பட்டும், கோணலாயும், முறிந்தும் போகும். பாக்கி சுமார் 1,300 மரங்கள்தான் தேறும். நல்ல மரமாக இருந்தால் 6 மரம் ஒரு டன் காணும். சுமார் ஒரு ஏகருக்கு 200 டன் காணும். தோப்பிலேயே விலை டன் 1-க்கு ரூ. 6-முதல் 7-வரையில் விற்கிறது. குறைந்தது ரூ. 1,200 கிடைக்கும். சுமார் ரூ. 100 தான் செலவழியும். இதற்கு 8 வருஷத்திற்கு வட்டி 100-க்கு ஒன்றுவீதம் ரூ. 96. ஆகமொத்தம் ரூ. 196 தான். லாபம் ரூ. 1000. இதை மாத்திரம் கவனித்துப் பார்த்தால் இந்த லாபம் கிடைக்கும் என்பது திண்ணம்.

விறகு.—இது மிகுதியாய் விறகுக்கும், இன்ஜின்களுக்கும் உபயோகப்படுகிறது. இதனால் சமையல் செய்கிறதில் உஷ்ணம் அதிகம்.

உத்திரம், தூண்.—சிலர் வீடுகட்டுகிறதற்கு உத்திரம், தூண் இவைகளாக உபயோகப்படுத்துகிறார்கள். நாளடைவில் உளுப்பிடிக்கும். அதனால்தான் இதை உபயோகிக்கிறதில்லை. கலியாணப் பந்தலுக்குக் காலாகவும், விட்டமாகவும் உபயோகப்படுகிறது. மாட்டுக்கொட்டகை கட்டுகிறதற்கும் உபயோகமாகிறது.

குறிப்பு.—நமது நாட்டில் இந்தப்பயிர் சாகுபடி செய்ய வேண்டியநிலமிருக்கிறது. இதை ஒழுங்கான முறையுடன் பயிரிட்டால் தக்க லாபத்தை அடையலாம். சிலர் சோம்பேறிகளாய் உல்லாச சம்பாஷணையினாலேயே தங்கள் காலத்தைக் கழித்து, உடுக்க உடைக்கும், உண்ணச் சோற்றுக்கும், ஏங்கித் தவிக்கிறார்கள். நம்மவர்களிடத்தில் முயற்சிக் குறைவு அதிகம். காலத்திற்கேற்ற முறைகளை அனுசரிக்காதது அதிலும் பெருங்குறைவு. இத்தகைய வியாஸங்களை எழுதுவது பலரும் பார்த்துப் பயன்படவே. நம்முடைய நாடு முன்னுக்கு வரவேண்டுமானால் பலரும் உழைத்து செல்வவிருத்தி செய்தால்தான் முடியும். ஆகையால் நம் முயற்சியை நன் முயற்சியாகச் செய்யுமாறு வேண்டுகிறோம்.

பு. து. ரத்தினம்.

AGRICULTURE IN ATUR.

BY

L. ANANTHARAMA AIYAR.

ஆத்தூரில் விவஸாயம்.

சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூகா நடுவலூர் கிராமத்தில் அவுரி நீலித் தொட்டிகள் அனேகம் இருக்கின்றன. நஞ்சை நிலங்களில் கம்புடன் அவுரியைக் விதைத்து, கம்பு அறுத்தானபிறகு அவுரியைக் கொத்தி விடுகிறார்கள். மழை பெய்ந்ததின்மேல் அவுரி செம்மையாய் வளர்ந்து புரட்டாசி மாஸத்தில் அதை அறுத்து அவுரித் தொட்டிகளில் போட்டு நீலிமருந்து எடுத்துக்கொண்டு சக்கைகளை நஞ்சை நிலங்களுக்கு சிரேஷ்டமான பசுந்தாள் எருவாக உபயோகப் படுத்துகிறார்கள். இதனால் நிலம் அதிகமாக மதாளிக்காமல் ஸரியான நெல் மாசூல் கிடைப்பதாகச் சொல்லுகிறார்கள்.

வருஷத்துக்கொருதடவை புரட்டாசி மாஸதில் இவ்வூரில் நீலித் தொட்டிகளில் நீலி மருந்து காய்ச்சுகிறார்கள். இதனால் ஏகர் ஒன்றுக்கு 50 ரூ. பெறுமான நீலிமருந்து உற்பத்தியாகிறதாகச் சொல்லுகிறார்கள்.

ஒருவருஷத்தில் ஒரே தோட்டத்தில் தை மாஸத்தில் சோளம் விதைத்து, வைகாசி மாஸத்தில் அறுவடையானதின்மேல் நிலத்தை உழுது எருவிட்டு, கம்பும், அவுரியும் கலந்து விதைப்பதாகவும், கம்பந்தாளை அறுத்தபிறகு அவுரி செம்மையாய் வளர்ந்து விடுவதாயும், அப்படி விதைத்த அவுரியை புரட்டாசி மாஸத்தில் அறுத்து நீலி எடுத்துக் கொண்டு அதே நிலத்தில் அவுரிச் சக்கையை எருவாகப்போட்டு உழுது சம்பா நெல் நாற்று நட்டு, தை மாஸத்தில் அறுவடைச் செய்வதாகவும் தெரியவருகிறது. புரட்டாசி மாஸத்தில் புஞ்சை நிலங்களில் கொத்துமல்லி சாகுபடி செய்து வருகிறார்கள். இதற்கு தொழு எரு வேண்டியது அவசியம். இரண்டொரு மழை பெய்துவிடும் பக்ஷத்தில் வருஷத்தில் ஏகர் ஒன்றுக்கு 150 ரூ. பெறுமான (தனியா) கொத்துமல்லி உற்பத்தியாகிறதாகத் தெரிய வருகிறது

இந்த ஆத்தூர் தாலூகாவில் அனேக கிராமங்களில் தீர்வை ஏற்பட்ட ஸர்க்கார் தரிசு நிலங்கள் இருக்கின்றன. 300 - 4 0 - 500 ஏகர் புஞ்சை தரிசு நிலங்கள் ஸமநிலமாக இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலங்களில் குரும்பர்கள், குரும்பாடுகளை மேய்த்து, ஆட்டுரோமங்களை ஆறுமாஸத்திற்கு ஒருதடவை கத்தரித்துக் கம்பளிகள்செய்தும், விவஸாயிகளுக்கு பட்டிபோட்டுக்கொடுத்து அதனால் வரும்படி பெற்றும் வருகிறார்கள். ஒவ்வொரு குரும்பரும் ஆயிரக் கணக்காக குரும்பாடுகளை வளர்த்து வருகிறார்கள். பெரம்பலூர், ஆத்தூர் தாலூகாவின் தென்பாகமும், முசிறி தாலூகாவின் பெரும்பாகமும், நாமக்கல் தாலூகாவின் கீழ் பாகமும், ஆகிய இவைகளில் மேற்கண்டமாதிரியாக குரும்பாடுகள் பட்டிபோடுவதற்காகவும், ரோமத்திற்காகவும், குரும்ப ஜாதியார்களால் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி, தூத்துக்குடி முதலான இடங்களிலிருந்து இந்த தாலூகாவுக்கு சில விவஸாயிகள் வந்து தரிசாயிருக்கும் நிலங்களை தர்க்காஸ்து செய்து அடமானம் பெற்று சாகுபடிக்குக் கொண்டுவந்து, இனிமேல் இந்த நிலங்களில் பருத்தி சாகுபடி செய்வதற்காக பிரயத்தனம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த கிராமத்தில் சுமார் 450 ஏகர் நிலத்தை தூத்துக்குடியிலிருக்கும் ஜுஸாக் என்பவர் தன் ஏஜெண்டுகளைக் கொண்டு சாகுபடிக்குக் கொண்டுவருகிறார். முதலில் நிலத்தில் சோளம், கம்பு, கொள்ளு, முதலிய தானியங்களைப் பயிரிட்டுப்பார்த்து, பிற்பாடு ஆட்டுப்பட்டி முதலிய எருப்போட்டு பருத்தி சாகுபடி செய்யப் போவதாய்க் கேழ்விப்படுகிறேன். இந்தப் பிரதேசத்தில் ஏராளமான தரிசு நிலங்களிருந்தும் பசுமாடுகள் நல்ல கறவையுள்ளவைகளாயிருப்ப தில்லையென்றும், சேலத்தில் ஒரு படிபால் கறக்கும் பசு இந்த தாலூகாவுக்கு வந்தால் அரைப்படி பால்கூட கறப்பதில்லையென்றும் சொல்லுகிறார்கள். மாடுகளும், எருதுகளும் கொழுத்திருக்கவில்லை அவைகளுக்கு ஏராளமாக தீனி போட்டாலும் விருத்தியாகிறதில்லையாம். இந்ததாலூகாவில் ஒவ்வொரு கிராமத்திலும் சிற்றாறுகளிருக்கின்றன. அவைகளில் எப்போதும் ஊற்றுநீர் இருந்துகொண்டே இருக்கிறது. ஆற்றோரங்களில் கமுகு (பாக்குமரம்) தென்னை முதலிய மரங்கள் விசேஷமாய் பலிதமாய் வருகின்றன. பாக்குத் தோட்டத்தால் விசேஷ லாபத்தை அடைகிறார்கள்.

இந்த தாலூகாவின் தென் பாகத்திலும் பெரம்பலூர், முசிறி, நாமக்கல் தாலூகாவின் கீழ்ப்பாகம் ஆகிய இவைகளிலும், புஞ்சைக் கரிசல் நிலங்களில் ஏராளமாய் உக்கம் பருத்தியை வரகுடன் கலந்து விதைத்து ஏராளமான பருத்தியை உற்பத்தி செய்கிறதாய்த் தெரிய வருகிறது. மேல்கண்ட பிரதேசங்களில் "வாதநாராயணன்" மரத்திலிருந்து போத்துகளை போர்பட்டிகளிலும், மற்ற புஞ்சை நிலங்களிலும் நட்டு விருத்திசெய்து அந்த மரங்களிலிருந்து உற்பத்தியாகும் தழைகளை நஞ்சைக்கு எருவாக உபயோகிப்பதனால் நெல்லுப்பயிருக்கு கொழுப்புண்டாகி நல்ல மாசூல் கிடைப்பதாய் உழவர்கள் சொல்லுகிறார்கள். எங்கேபார்த்தாலும் "வாதநாராயணன்" மரங்கள் இருக்கின்றன.

எல். அநந்தராமன்.

LINES OF MASS EDUCATION.

BY

R. RANGASAMI AIYANGAR, B.A., L.T.

ஸாமான்ய ஜனங்களுக்கு ஏற்ற கல்வி.

இந்த வியாஸத்தில் ஸாமான்ய ஜனங்களென்று குறிப்பிடுவது முக்கியமாய் நாட்டுப்புறங்களில் விவஸாயத்தொழிலில் அமர்ந்து அதையே தங்களுடைய ஜீவனமாகக் கொண்டிருக்கும், நமது இந்தியாவின் பெரும்பான்மையராகிய விவஸாயிகளே யென்று சொல்லலாம். சிறியதும், பெரியதுமாகிய பட்டினங்களை யடைந்து அவ்விடங்களிலுள்ள பல விதக் கைத்தொழில்களிலும், வியாபாரங்களிலும் அமர்ந்திருப்பவர்களைப்பற்றி நாம் இவ்விடத்தில் விசேஷமாகச் சொல்லவில்லை. நாடுகளிலுள்ள கனவான்களாகிய பெரிய ஜமீன்தாரர்களைப்பற்றியாவது அல்லது மற்றுமுள்ள இதர பெரிய மிராசுதாரர்களைப் பற்றியுமாவது அடியில்கண்ட விஷயங்களைச் சொல்லவில்லை.

விவஸாயத் தொழிலிலேயே அமர்ந்து அதையே ஜீவனமாகக் கொண்டிருக்கும் ஜனங்களை மிராசுதாரர்களென்றும், நிலத்தை யுழுது ஸாகுபடி செய்கிறவர்களை வேலைக்காரர்களென்றும், இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். இந்த இருதிறத்தாருக்கும் தக்கபடி கல்விப் பயிற்சிக்கு ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியமாகிறது.

இப்படிச் செய்வதில் பொதுவாக ஏழைகள் பணக்காரர்கள் ஆகியஎல்லாப்பிள்ளைகளுக்கும், அவரவர்களுக் கேற்ற விஷயங்களையும், நூல்களையும் தெரிந்தெடுக்கவேண்டும். அதாவது பிள்ளைகளின் பெற்றோர்கள், உற்றோர்கள் எவ்வித நிலைமையிலுள்ளவர்கள்? அவர்களுடைய

நாகரிகம், புத்தி நுட்பம், திறமை எப்படிப்பட்டன? அவர்களுக்கு என்ன சொத்து இருக்கிறது? பிள்ளைகளை எவ்வளவு பிராயம் வரையில் பள்ளிக்கூடத்தில் படிக்கவைப்பார்கள்? பிள்ளைகள் படித்தபிறகு என்ன செய்வார்கள்? ஆகிய இந்த விஷயங்களையெல்லாம் கவனித்தே அவைகளுக்குத் தக்கபடி பாடங்களையோ, அல்லது மற்ற விஷயங்களையோ நாம் ஏற்பாடு செய்யமுடியும். உதாரணமாக:—நாட்டுப்புறத்திலுள்ள உழவன் மகன் ஒருவனுக்கும், பட்டினத்திலுள்ள மிகவும் புத்திசாலியாகிய வக்கீல் அல்லது உத்தியோகஸ்தர் குமாரன் ஒருவனுக்கும், பரம்பரை ஜமீன்தார் மகன் ஒருவனுக்கும், மலைகளிலேயே பிறந்து மலைகளிலேயே வஸிக்கும் நாகரிகமற்ற ஜாதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவனுக்கும்—ஆகிய இவர்களெல்லாருக்கும் ஒரே விதமான பாடங்களையும், பயிற்சியையும் ஏற்படுத்த முயல்வது அறியாமையாகு மல்லவா? ஆதலால் அவரவர்களுடைய நாகரிகம் முதலிய மேற்சொல்லிய குணாதிசயங்களுக்குத் தக்கபடி அவரவர்களுக்குக் கல்வியைப்பற்றிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்பது தெளிவாகும். அதாவது பாடசாலைகளில் போதிக்கப்படும் பாடங்களும், செய்யப்படும் இதர ஏற்பாடுகளும், அந்தப் பாடசாலைகளின் பெரும்பான்மையராகிய பிள்ளைகளின் நிலைமைக்குத் தக்கபடி அவர்களுக்குப் புத்தி விசாலத்தை உண்டுபண்ணவும் அவர்களுடைய ஜீவனோபாயத்துக்குக் கூடிய வரையில் அநுகூலமாகவும், ஏற்றவைகளாகவும் இருப்பது அவசியம்.

ஆகவே விவஸாயிகளாகிய ஸாமன்ய ஜனங்களுக்காக ஏற்படும் கல்வி ஏற்பாடுகளெல்லாம் அவர்களுடைய நிலைமை முதலியவற்றிற்கும், ஜீவனத்துக்கும், பின்வாழ்க்கைக்கும், ஏற்றவைகளாக இருக்கவேண்டும். இன்னும் சாகுபடி செய்பவர்களாகிய வேலைக்காரர்களுக்கும், நிலத்தின் சொந்தக்காரர்களாகிய மிராசுதாரர்களுக்கும், வித்யாஸங்கள் ஏதாகிலும் இருக்குமானால் அந்த வித்யாஸங்களுக்கு ஏற்ற படிப்பு ஏற்பாடுகளிலும் வித்யாஸப்படுத்துவது நியாயமும் அவசியமுமாகும்.

எல்லாருக்கும் புத்தி விசாலத்தையும், உலக அநுபவத்தையும் அதிகரித்து மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதாகிய பாஷா ஞானமும், ஆன்றோர்களால் செய்யப்பட்ட பல ரஸங்களமைந்த கிரந்தங்களின் பழக்கமும், அவசியமென்று சொல்லவேண்டியதில்லை. ஆனால் இவ்வித அறிவின் அளவில் மட்டும் மேலே சொல்லிய இருதிறத்தாருக்கும் ஒருவித ஏற்றத் தாழ்வை எதிர்பார்த்து அதற்குத் தக்கபடி வேண்டிய ஏற்பாடுகள் செய்வது அவசியம்.

மேலான நிலைமையிலுள்ள மிராசுதாரர்களைச் சேர்ந்த சிறுவர்கள் விசேஷமாக இயற்கையிலேயே அதிக புத்தி நுட்பமுடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் வேறு வகைப் பிள்ளைகளைவிட அதிக காலம் பள்ளிக்கூடத்தில் பயிலக்கூடும். ஆகையால் அவர்களிடத்தில் அதிகத் தேர்ச்சியை உண்டுபண்ணமுடியுமென்பது ஸித்தம்.

மேலே சொல்லப்பட்ட பாஷா ஞானத்தையும், புத்தி விசாலத்தையும், கொடுக்கும்படியான நூல்கள் இயல், இசை, நாடகமென்ற மூவகை இனத்தினவாயிருத்தல் நலம்.

புத்தி விசாலத்தை யுத்தேசித்தே இந்து தேச சரித்திரமும், ராஜாங்கம் நடைபெறும் விதமும், நம்முடைய ராஜ்யத்தை இந்தக் காலத்தில் ஆள்பவராகிய இங்கிலீஷ்காரர்களுடைய பழக்க வழக்கங்களும் ஆகிய இவைகளைத் தெளிவாக அறிந்திருப்பதும் அவசியமாகும். ஆதலால் இந்த விஷயங்களைப் பற்றி

நமது கிராமப் பாடசாலைகளில் போதிப்பது அவசியமாகும்.

மேலும், மனிதருக்கு உற்சாகத்தைக் கொடுத்து சோர்வு நேரங்களில் ஒருவித ஸந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதான ஸங்கீதம், சித்திரம் முதலிய ரஸமான பாடங்களை படிப்பிப்பது எவ்வளவு உபயோகமானதென்று நாம் ஒவ்வொருவரும் நன்கு உணர்வோம். இந்த விதப்பயிற்சிகள் தமிழ் நாட்டில் பிராசீனமாகவே நடைபெற்று வந்திருக்கின்றனவென்பதை, தஸரா, மகாநோன்பு முதலிய பண்டிகை காலங்களில் பழைய தெருப் பள்ளிக்கூடங்களில் வழங்கிய ஸங்கீதம், கோலாட்டம் முதலியவைகளிலிருந்தும், ஒரொரு காலத்தில் அந்தப்பள்ளிக்கூடங்களில் ஆடப்பட்டு வந்த ராமநாடகம், பிரகலாத சரித்திரம், இரணிய நாடகம், முதலிய ஆட்டங்களிலிருந்தும் நாம் அறிவோம். இப்படிப்பட்ட விஷயங்களை ஏன் இந்தக்காலத்திலும் நடத்தக்கூடாதென்பது விளங்கவில்லை.

இனி, புத்தி விசாலத்தையும், பயிற்சியையும், கொடுப்பதுடன் ஜீவனோபாயத்துக்கும் ஒருவாறு அநுகூலமா யிருக்கும்படியான பாடங்களை ஆலோசிக்குங்கால் முதல் முதல் "எண்ணும் எழுத்துங் கண்ணெனத் தகும்" என்றபடி, எழுத்தும் கணிதமும் இன்றியமையாதவைகளென்பது தானாகவே புலப்படும். ஆனால், எழுத்து என்பதில் கையெழுத்துடன் வியாஸமும், சுலபமான வர்ணனையும், எழுதுதலையும், கணிதம் என்பதில் வாய்க் கணக்காக நமது பழைய முறைப்படியே, வட்டிச் சிட்டை, கிரயப்பட்டி, முதலியவைகளை ஸுலபத்தில் போடும் தேர்ச்சியடைதல், ஆகிய இந்த விஷயங்களையும் சேர்த்துக் கற்பிப்பது அவசியமாகும்.

மேலும் சிறுவர்களெல்லாரும் தங்கள் வாழ்நாள் முழுமையும் பூமியையே சார்ந்து அதனாலேயே தங்கள் ஜீவனத்தைத் தேடப் போகிறவர்களாகையால், பூமியின் அளவு விஸ்தீரணம் முதலிய விஷயங்களைப்பற்றிய அறிவும், கிராமக் கணக்குகளில் முக்கியமான சிலவற்றின் பழக்கமும் அடைந்திருத்தல் எவ்வளவு உபயோகமானதென்று எளிதில் அறியக் கூடியது.

அன்றியும் தங்கள் கிராமத்தைச் சுற்றிலும் சிறிது தூரம் மட்டிலாவது உள்ள பிரதேசத்தின் முக்கியமான குணாதிசயங்களும், அதில் விளையும் பயிர், பச்சை மற்றுமுள்ள ஸ்தாவரப் பொருள்கள், ஆகிய இவைகளைப்பற்றிய விசேஷங்களும், அதில் நடைபெறும் கைத்தொழில் வியாபார விவரங்களும், ஒருவாறு பிள்ளைகளுக்குத் தெரிந்திருப்பது மிகவும் அவசியமும் உபயோகமுள்ளது.

இவையன்றி கிராமங்களில் சுகாதார விஷயமாயும், பொது நன்மை விஷயமாயும் அவசியம் கவனிக்கவேண்டிய விஷயங்களைப் பற்றி அறிவை உண்டுபண்ணும் பாடங்களும் ஒவ்வொரு பாடசாலையிலும் இன்றியமையாதவைகள் என்றே எண்ணவேண்டும். அம்மாதிரியே பொதுவாகப் பிள்ளைகளை ஒற்றுமை, பரோபகாரம் முதலிய நற்குணங்களிலும், ஸன்மார்க்க முறையிலும், பழக்குதல் ஒவ்வொரு பாடசாலையின் முதன்மையான கடமையாமென்பது அவசியம் வற்புறுத்தத் தக்கது.

மற்றெல்லாவற்றையும்விட விவஸாய ஸம்பந்தமான விஷயங்களைப் பற்றிய அறிவானது நாம் எடுத்துக்கொண்ட இருதிறத்தாருக்கும் அத்தியாவசியமானதினால், அப்படிப்பட்ட தொழிலைத் தாங்கள் பெரியவர்களாகும் பொழுது செவ்வையாகவும், மிகுந்த லாபகரமாகவும் செய்யும் பொருட்டு, சிறுவர்கள்

பாடசாலையில் படிக்குங்காலத்திலேயே அப்படிப்பட்ட அறிவுக்கும், தேர்ச்சிக்கும் அநுகூலமாகும்படியான, ஒருவிதப்படிப்பையோ, அல்லது பயிற்சியையோ ஏற்படுத்துவது மிக அவசியமானதென்பது யாவராலும் ஒத்துக்கொள்ளத்தக்கதே. ஆயினும், எந்தவிதப் படிப்பை அல்லது பயிற்சியை ஏற்படுத்துவதென்பதை மாத்திரம் இது வரையில் எல்லாருஞ் சேர்ந்து ஒன்றாக அங்கீகரித்தபாடில்லை, என்றாலும், கீழே குறிக்கப்படும் ஏற்பாட்டைப் போன்ற ஒருவித ஏற்பாடானது விசேஷமாக நமது நோக்கத்துக்குக் கூடிய மட்டும் பயன்படக்கூடியதென்று தோன்றுகிறது. அதாவது ஒவ்வொரு பாடசாலையிலும், பொதுவாகச் செடிகளின் தன்மை, அவைகளின் அங்கங்கள், அந்த அங்கங்களின் வேலை முதலியவைகள், ஸாமான்யமாய் அனுபவத்தில் வரக்கூடிய செடிகளைப்பற்றிய ஜீவிய சரித்திரம்—ஆகிய இவைகளைப்பற்றிக் கற்பிக்கும் பக்ஷத்தில் அவைகளே மேற்கூறிய நோக்கத்தை யடையத்தகுந்த ஸாதனங்களாகுமென்பதில் ஸந்தேகமில்லை. இவைகளைவிட ஜாஸ்தியாக விவஸாய விஷயத்தைப் பற்றி விஸ்தாரமாக பாடசாலைகளில் போதிப்பது ஸாத்தியமாகவாவது, அல்லது நியாயமாகவாவது ஆகுமென்று தோன்றவில்லை.

இப்படிப் போதிப்பதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் பள்ளிக்கூடத் தோட்டமொன்று இன்றியமையாததாகும். அதன் மூலமாகத்தான் மேற்சொன்ன விஷயங்களைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டு அறிந்துகொள்ளும்படி செய்யக்கூடும். அதனால் பிள்ளைகளுக்கு உற்றுப் பார்த்தல், ஊகித்தல் முதலிய சக்திகள் விருத்தியடையும் இதுதான முக்கிய விஷயம். இதுதான் பள்ளிக்கூடங்களில் செய்யக்கூடியதுமாம்.

ஆர். ரங்கஸாமி.

THE BAT.

BY

S. MUTHAYYA PILLAI.

வௌவால்.

“பிழைக்கும் வழி”யின் ஏப்ரல் மாஸத்து ஸஞ்சிகையில், வௌவாலைப்பற்றி 132-வது பக்கத்தில் எழுதியிருந்த வியாஸத்தில், வௌவாலை மிருகம் என்று சொல்வதற்குச் சில காரணங்களைக் காட்டியிருந்ததை, 19—7—1910ல் தெரிந்தேன் அவை எவரும் ஒப்புக்கொள்ளக் கூடாதவை.

வௌவாலை மிருகம் அல்லவென்று சொல்வதற்குச் சில காரணங்களுண்டு. மிருகங்களைப்போல் வௌவாலுக்குப் பற்களிருத்தல், குட்டிகளைப் பெற்றுப் பால்கொடுத்து வளர்த்தல், முதலிய காரணங்களால் அதை மிருகமென்று சொல்லக் கூடாது. திமிங்கிலம் முதலிய சில பிராணிகளும் குட்டிகளைப் பெறுதல் முதலிய வித்யாஸத்தைக் கொண்டிருக்கின்றன.

பற்களைக் கொண்டிருத்தல், குட்டிகளைப் பெற்றுப் பால்கொடுத்து வளர்த்தல், முதலிய காரணங்களால், வௌவாலை மிருகமென்று சொல்ல ஆரம்பித்துவிட்டால், எழுவகைப் பிறப்புகளையும், அறுவகைப் பிறப்புகளாக்கி, மனிதர்களையும், மிருகங்களென்றே சொல்லவேண்டும். ஆனால், மனிதர்களை மிருகங்களென்று சொல்லமாட்டோம். அதுபோலவே வௌவாலை மிருகமென்று சொல்வது பிசகு.

பல பறவைகளுக்கும், வௌவாலுக்கும் உள்ள வித்யாஸங்களைப் போல, மிருகங்களிலும் பல வித்யாஸங்களுண்டு.

மாடுகளுக்கு ஒரு பக்கம் பற்களிருப்பது போல, மற்றொரு பக்கம் இல்லாமல் வித்யாஸமாயும், சில மிருகங்கள் கொம்புகளுடையனவாயும், சில மிருகங்களின் கொம்புகள் வித்யாஸமாயும், யானை துதிக்கையுடையதாயும், அந்தத்துதிக்கையை மூக்காய் உபயோகப்படுத்தியும், இன்னும் பல வித்யாஸங்களைப் பெற்றிருக்கின்றன. இவ்வாறு பல வித்யாஸங்களிருந்தாலும், நடப்பதற்கு ஆதாரமாகிய நான்குகால்களும், குட்டிகளைப் பெற்று பால் கொடுத்து வளர்த்தலும் உடைய பிராணிகளுக்குப் பெயர் மிருகம் என்பது, யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயம். இப்படியிருக்க, கால்களிருந்தும் மிருகங்களைப் போல் நடவாமல், பறக்கிற வௌவாலை மிருகமென்று சொன்னால், ஒருவரும் திருப்திகரமாய் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

வௌவால் பறவையென்று சொல்வதற்கு பல காரணங்களுண்டு.

எல்லாப் பிறப்பிலும் அவைகளின் அநுகூலத்திற்குத் தக்கபடி பல பேதங்கள் கடவுளால் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், மிருகங்களில் பல வித்யாஸங்களிருப்பது போல, பறவைகளிலும் உற்பத்தி முதலிய பல வித்யாஸங்களுண்டு.

பல பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரிக்கின்றன. குயில்கள் முட்டைகளை மாத்திரம் இட்டுக் காக்கையின் உதவியால் குஞ்சுகளைப் பொரிக்கச்செய்கின்றன. தேனீக்கள், முட்டையிலிருந்து பாதமும் சிறகுமில்லாமல் ஒருவிதக்கொழுத்த புழுக்கள் வடிவமாய்ப் பிறந்து, சில நாட்களுக்குப்பின் சிறகு முதலியவைகள் உண்டாகிப் பறவைகளாகின்றன. வண்ணாத்திப்பூச்சி முதலிய பறவைகள், முட்டையிலிருந்து கம்பளிப்பூச்சிகளாய்ப் பிறந்து, சிலநாட்களுக்குப் பின் வேறுவிதப் புழு வடிவத்தை அடைந்து, பின்னும் சிலநாட்கழித்துச் சிறகு முளைத்துப் பறவைகளாகின்றன. இன்னும் சில சிற்றினப் பறவைகள் வேறுவிதங்களாயும் பிறக்கின்றன. இவைகளைப்போல, வௌவாலும் முட்டையில்லாமலே பிறத்தல் முதலிய வித்யாஸமுடைய பறவையென்பதற்குச்சந்தேகமில்லை.

வெண்பா.

பண்புளருக் கோர்பறவை பாவத்திற் கோரிலக்கம்
நண்பிலரைக் கண்டக்கா னாற்காலி—திண்புவியை
ஆள்வார் மதுரையழகிய சொக்கர்க் காவம்
நீள்வா கன நன் னிலம்.

என்று மகாகவியாகிய காளமேகப் புலவர் கூறியபடி, ஈ என்னும் பிராணியையும் பறவையினத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆதலால், வண்ணாத்திப்பூச்சி முதலியவைகளும், பறவை யினத்தில் சேர்ந்த சிற்றினப் பறவைகளென்பது தெளிவாய் விளங்குகிறது.

சூடாமணி 11-வது நிகண்டில்

அஞ்சனங் கறுப்புமைதிக் கானையிலொன் றுமுப்பேர்
மஞ்சரியே பூங்கொத்து மாலைசெந் தளிருமாகும்
அஞ்சலி வணங்கல்வாவற் பறவையு மாகுமென்ப
இஞ்சியே புரிசையிஞ்சி யெருமெழன்பவ லிதண்
[டாமே.

என்னும் ஞகரவெதுகை மூன்றாவது விருத்தத்தில், வௌவாலை வாவற்பறவை யென்று கூறியபடியாலும்,

சேவலே காவலோடு சேறுபுள் ளாண்முப்பேரே
கேவலந் தனிமைமுத்தி கீரமென் பதுபால்கிள்ளை
பூவைசாரிகை காயாவாம் புலிசிங்க முழுவைசாந்தே
வாவலஞ் சலிகைப்புள்ளுந் தாவலும் வகுக்கலாமே.

என்னும் வகரவெதுகை 9-வது விருத்தத்தில், வௌவாலை அஞ்சலிகைப்புள் என்று கூறியபடியாலும், வௌவால் பறவையினமென்பது பட்டப்பகல்போல் வெட்டவெளியாகிறது.

வண்டை பொம்மைய னாயக்கரென்னும் ஒரு பிரபுவின்மேல்,

மாரியன்ன மஞ்சனத்தி வாவலுள்ளான் வண்டுக
தாரிகருடன் குருகு தாராபோய்—நாரையுறு.

தூக்கணத்தான் கொண்டலைத்தான் சூழ்வானம்பாடி
காக்கை வண்ட பொம்முதுங் காகா. [மயில்

என்று மாம்பழக்கவிச்சிங்க நாவலர் பறவைகளின் பெயர்களைப் பொருத்திக் கூறிய வெண்பாவில், வாவலென்னும் பெயரை யுடைய வெளவாலைக் கூறியிருக்கிறார்.

நாய் நரிசிங்கம் மாடானை மிளாபன்றிகடு
வாய்குதிரை கவரிமான் புல்—வாயொட்
டகங் கழுதை யாட்டுக்கடா புலிகாண்டாமி
ருகங் காடி யெருமை.
சக்கரவாகங் கிளியாந் தைநாரை யன்னங்க
ரிக்குருவி கௌதாரி காடையன்றில்—கொக்கு
குயில்கருடன் காக்கைபுறா கோழியிரா சாளி
மயில் கழுகு கோட்டான் வெளவால்.

என்று அழகிய சொக்கநாதபிள்ளை யென்னும் ஒரு வித்வ சிரோன்மணியார், அடைமொழிகளில்லாமல் கூறிய இரண்டு வெண்பாக்களில், சில மிருகங்களின் பெயர்களைக் கட்டிய முந்திய வெண்பாவில் வெளவாலைக் கூறாமல், சில பறவைகளின் பெயர்களைக் காட்டிப் பிந்திய வெண்பாவில் வெளவாலைக் கூறியிருக்கிறார்.

நமது கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சராசரங்களனைத்தும், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்று எழுவகைப் பிறப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில்:—

பறவை அல்லது புட்கள் பறக்கின்ற காரணத்தால், அவற்றிற்குப் பறவைகளென்று ஒரு பெயர் இடப்பட்டிருக்கின்றன. ஆனால், சிலமீன்களும், பல்லிகளும் பறக்கின்ற காரணத்தால், அவற்றையும் பறவையினமென்றுதானே சொல்லவேண்டு மென்றால், வாத்து முதலிய சிலபறவைகள் நீரிலும் சஞ்சரிக்கின்ற காரணத்தால், அவற்றை பறவையினத்தில் சேர்க்காமல் மீன்முதலியவற்றைப் போல நீரில் வாழ்வனவற்றில் சேர்க்கவேண்டும். ஆனால், எல்லாருக்கும் வயிறு, மண்டையென்னும் அவயவங்களிருக்க, பெரிய வயிறுடையவனை வயிறனென்று சொல்வதுபோலும், பெரியமண்டை யுடையவனை மண்டையனென்று சொல்வதுபோலும், வாத்து முதலியவற்றைப் பறவையினமென்றே யெல்லாரும் சொல்கிறோம். அதுபோலவே மீன் முதலியவற்றையும் அவ்வவற்றிற்கு உரித்தான இனத்தில் சேர்த்துச்சொல்லவேண்டும். அகட்டுத்தே என்றும், வாங்கியுண்ண வழி காத்தான் வயிற்றுச்சாமி யென்றும், விநாயகரைக் கூறியிருப்பதும் உணர்க.

இலக்கண விதிப்படி, பறப்பன எவற்றிற்கும் பறவையென்றும், நீரில்வாழ்வன எவற்றிற்கும் நீரில்வாழ்வன என்றும் பெயர் ஏற்பட்டிருந்தாலும், பறவையாகிய புட்களுக்கு, காரண இடுகுறிப்பெயரால் பறவையென்றும், மீன்முதலியவற்றைச் சுட்டிக் காட்டவேண்டுமென்றால், காரணப்பெயரால் பறவை மீன் பறவைப் பல்லியென்றும், மீன் முதலியவற்றிற்கு காரண இடுகுறிப்பெயரால் நீர்வாழ்வனமுதலிய அவ்வவற்றிற்கு உரித்தான பெயரைக்கொண்டும், வாத்து முதலியவற்றைச் சுட்டிக் காட்டவேண்டுமென்றால், காரணப்பெயரால் நீர்வாழும் பறவை யென்றும் சொல்லவேண்டும்.

> " எப்பொருளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
> செப்பின ரப்படிச் செப்புதன் மரபே."

என்றபடி, அணிற்பிள்ளை, கீரிப் பிள்ளை யென்பதுபோல், நாயின்குட்டியை நாய்ப்பிள்ளை யென்று சொல்லமாட்டோம். பசுவின் கன்று, மான்கன்று என்பதுபோல், பன்றி, கழுதை முதலிய மிருகங்களின் குட்டிகளை, பன்றிக்கன்று, கழுதைக் கன்று என்று சொல்ல மாட்டோம். இவற்றைப் போல, நம்முடைய முன்னோர்களால் வெளவாலைப் பறவையினத்தில் சேர்க்கப்பட்டிருப்பது நிச்சயமாய்த் தெரிகிறது. ஆதலால், நாமும் வெளவாலைப் பறவையினத்திற் சேர்த்தே சொல்லவேண்டும். மிருகமென்று சொல்வது எத்துணிவு கொண்டோ!

எஸ். முத்தையபிள்ளை.

THE HARDINGE FAMILY.

ஹார்டிஞ்சின் வம்சம்.

மகாகனம் பொருந்திய நமது ராஜப் பிரதிநிதி லார்டு மிண்டோ நம் இந்தியாவுக்கு வந்து 5-வருஷம் ஆகிவிட்டபடியால் அவருக்குப் பிறகு நமக்கு கனம் பொருந்திய லார்டு ஹார்டிஞ்சு என்பவர் ராஜப் பிரதிநிதியாய் நியமிக்கப்பட்டு நாளது நவம்பர் மாஸம் 21-ம் தேதியில் உத்தியோகஸ்தானத்தை வகித்தார். இவர் ஒரு பெரிய வம்சத்தைச் சேர்ந்தவர். இவருடைய பாட்டனாரும் 1844-ம் வருஷம் முதல் 1848-ம் வருஷம் வரையில் இந்தியா ராஜப் பிரதிநிதியாய் இருந்துவந்தார். அவர் பெரிய யுத்தவீரர். அவர் ஐரோப்பாவில் லிக்னி என்னுமிடத்தில் நடந்த சண்டையில் தன் கையை இழந்தார். உலகப்பிரசித்தியான வெல்லிங்டன் சேனாதிபதியின்கீழ் இருந்துகொண்டு ஐரோப்பா முழுவதும் நடுங்கச் செய்த நெப்போலியனை எதிர்த்து போராடின சண்டைகளில் அவரும் இருந்து யுத்தம் செய்து கீர்த்திபெற்றவர். அவர் இந்தியாவுக்கு ராஜப்பிரதிநிதியாய் வந்ததும் 1839௵த்தில் சாமர்த்தியமுள்ள மிக்க பலாஷ்டிகரான ரஞ்சிட்ஸிங் மகாராஜா இறக்கவும் ராஜ்யம் கலக்கமுற்று தாறுமாறாய் இருந்ததினால் முதல் சீக்கியர் யுத்தம் உண்டாயிற்று. அந்த யுத்தத்தில் ஆங்கிலேயரை ஜயம் அடையச்செய்தது அவரே. அவர் இந்தியாவில் இருந்த நாள் முழுவதும் யுத்த யோஜனைகளிலேயே கவனத்தை செலுத்த நேரிட்டபோதிலும் இடையிடையில் கிடைத்த அவகாசங்களில் இதரவிஷயங்கள் அவருடைய கவனத்தைக்கவராமல் போகவில்லை. தேசபாஷைகளின் படிப்பு அதிகமாக கற்பிக்கப் படவேண்டுமென்று விரும்பினார். தவிர அவர் கங்கையிலிருந்து வாய்க்கால் வெட்டுவதற்கு சிபார்சுசெய்தார் சேனையைக் குறைத்து சேனைச்செலவை மட்டுச்செய்தார். இப்பொழுது எல்லா ஆபீஸ்களிலும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறைநாளாய் ஏற்பட்டிருப்பது இவரால்தான் முதல்முதல் ஏற்படுத்தப்பட்டது. அவருக்குஇரண்டுகுமாரர்கள்உண்டு. மூத்த குமாரன் பெயர் சார்லஸ் ஸ்டீவர்ட் ஹார்டிஞ்சு. இவர்தான் இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் ராஜப்பிரதிநிதியின் தகப்பனார். இவர் 1824-ம் வருஷத்தில் பிறந்தார். இவர் க்ரைஸ்ட் கலாசாலையில் பயின்று பி. ஏ. பட்டம்பெற்றார். இவருடைய பிதா இவரைச் சேனையில் சேர்க்க இஷ்டம் கொண்டிருந்ததாயும், ஆனால் சிறுவயதில் இவருக்கு நேர்ந்த ஒரு விபத்தினால் கால்முடமாய்ப்போக ஆயுள் முழுமையும் போலிக்கால்கட்டிக்கொண்டு நடமாட நேர்ந்ததாகவும், ஆகையால் இவரை ராணுவத்தில் சேர்க்க இல்லை என்றும் தெரிய வருகிறது.

இந்தியாவுக்கு இவரும் தன் தகப்பனாரோடு வந்து அவருக்கு ப்ரைவேட் ஸெக்ரெடரியாக இருந்துவந்தார். இவருடைய தாயார் நடுவழியில் உடம்பு அஸௌக்கியமாய்ப் போகவே அவள் திரும்பி இங்கிலாந்துக்கேபோக நேரிட்டது. இந்தியாவில் வேலைபார்த்துவிட்டு திரும்பித் தகப்பனாரோடு இங்கிலாந்துக்குப் போனதும் 1851 ம் வருஷத்தில் ஹவுஸ்அப் காமன்ஸ் மெம்பரானார். இதே வேலையை 1856-ம் வருஷத்தில் தன்பிதா இறக்கும் வரையில் பார்த்துவந்தார். தன்னுடைய பிதாவுக்குப்பிறகுதான் பிரபுப்பட்டத்துக்கு வந்து, 1848-ம் வருஷத்தில் பார்லிமெண்டாரால் இவர் தகப்பனார் காலம் முதல் மூன்று தலைமுறைக்கு ஏற்படுத்தப்பட்ட வருஷம் 3,000 பவுனையும் பெற்றுவந்தார், தகப்பனார் இறக்க

5 மாஸத்துக்குமுன் ஒரு பெரிய வம்சத்தில் பிறந்த லவீனு என்னும் சீமாட்டியைக் கலியாணம் செய்துகொண்டார். ஆனால் பெண்சாதியோடு நெடுநாள்வாழக் கொடுத்துவைக்கவில்லை. கலியாணம் ஆன 8 வருஷத்திற்கெல்லாம், 1864-௵த்தில் அம்மாதுசிரோமணி 8 புதல்வர்களை விட்டுவிட்டு காலகதியானாள். அந்தமாதின்ஞாபகத்தைஎன்றும்அவர்மறந்தவரல்ல. அகமுடையாள்பேரிலிருந்த விசுவாசத்தால் பிறகு அவர் ஆயுள்கால முழுமையும் இதர ஐரோப்பியர்களைப்போல புனர்விவாகம் செய்துகொள்ளவே இல்லை தன் ஸம்ஸாரம் இறந்தபிறகு எல்லாவற்றிலும் பற்றுவிட்டு இவர் தனிமையிலேயே இருந்து சித்திர வேலையிலிருந்த அவாவினால் அதிலேயே வேலைசெய்து காலத்தைக் கழித்துவந்தார். கடைசியில் 1894-ம் வருஷத்தில் 72 வயதில் காலதசை அடைய இவருடைய பத்னியின் பக்கத்திலேயே அடக்கம்செய்யப்பட்டார்.

இவருடைய இரண்டாவது பிள்ளைதான் இப்போது நமக்கு ராஜப்பிரதிநிதியாய் நியமனமாயிருப்பவர். இவர் 1858-ம் வருஷத்தில் பிறந்தார். இவருடைய தாயார் லவீனு சீமாட்டி விழுந்துபோய் இப்போது 48 வருஷ காலமாகிறது. ஆனாலும் இவர் தாயாரின் நற்குணங்கள் இவரிடத்திலும் அதிகமாய் பிரதிபலித்திருக்கின்றன பார்ப்பவர்கள மனதைக் கவரும் முகமும், வசீகர நடையும், விசாலபுத்தியும், ஸமயத்துக்குத் தக்கபடி நடக்கும் திறமையும், இவர் தாயாரிடமிருந்தே பெற்றார் என்று சொல்லவேண்டும். இவருடைய பத்னி இவர் தாயாரின் உடன்பிறந்தாளின் பெண். இம்மாது தன்குணாதிசயங்களால் முன்னமேயே நமது அலெக்சாந்திரா ராணியின் மனதைக்கவர்ந்து விட்டாள். இச்சீமாட்டி இவருக்கு ஸம்ஸாரமாக அமைந்தது நமது நல்ல அதிர்ஷ்டந்தான். இவர்களுக்கு இரண்டு குமாரர்களும் ஒரு பெண்ணும் உண்டு

இவர் சில நாளைக்குமுன் பம்பாயில் வந்து இறங்கினபொழுது அந்நகர முனிஸிபாலிட்டியார் அவருக்கு ஒரு அட்ரெஸ் கொடுத்தார்கள். அப்பொழுது லார்ட் ஹார்டிஞ்ச் அவர்களுக்கு பதில் சொன்னார். பம்பாய் பட்டினமானது ஸுமார் 250 வருஷங்களுக்கு முன்னால் எவ்விதச் சிறப்புமில்லாத சிறு தீவாயிருந்தது ஆனால் அப்போதே அந்த இடத்தில் ஒரு பட்டினத்தை நிர்மாணிப்பதாக அந்தக் காலத்திலிருந்த பேர் போன கவர்னர் ஒருவர் நினைத்து. அப்படியே கட்டப்பட்டது இந்தப் பட்டினம். இப்போது இந்தியாவில் இது எவ்விதத்திலும் தலைமை பெற்ற பட்டினமாயிருப்பதுமன்றி, உலகத்துக்கே அதுபிரசித்தி பெற்ற பிரதான பட்டினங்களில் ஒன்றாய் விளங்குகிறது. அங்குள்ள ஒரு கிறிஸ்தவக் கோயிலில் காப்டென் ஜார்ஜ் நிகோலஸ் ஹார்டிஞ்ச் என்ற ஒரு கடற்படை உத்தியோகஸ்தரின் மரணத்துக்குக் துக்கித்து ஒரு சிலை நாட்டப்பட்டிருக்கிறதாம். அந்தக்காலத்தில், அந்தப் பக்கத்துக் கடலில் இந்தியக் கப்பல்களுக்குப் பயத்தையும், ஆபத்தையும் விளைத்துக்கொண்டிருந்த ஒரு ப்ரென்சுக் கடற்படையை துரத்தி, லங்கைக் கரையோரத்தில் மூன்று தினம் சண்டை செய்து, அந்த ப்ரென்சுக் கடற்படையைப் பிடித்துக்கொண்ட ஸமயத்தில் அந்த காப்டென் ஹார்டிஞ்ச் மாண்டு போனாராம். அந்த ஹார்டிஞ்ச் நமது புது ராஜப்பிரதிநிதிக்கு மூதாதைகளில் ஒருவராம். அவர் வெற்றிபெற்று மாண்டுபோய் 102 வருஷமாகிறபடியால், நமது ராஜப்பிரதிநிதியினுடைய குடும்பத்துக்கும், பம்பாய்க்கும் உள்ள ஸம்பந்தம் முதலாவது லார்ட் ஹார்டிஞ்சின் காலத்தைவிட தாண்டினதாயுள்ளதென்று சொன்னார்.

இவர் உத்தியோககாலத்திலும் மிண்டோவின் ஆளுகையைப்போலவே ஜனங்களுக்கு நன்மைகள் அதிகரித்து அவர்களுக்குச் சுகத்தைக்கொடுக்கக்கூடிய மார்க்கங்களைத்தேடி ஆளுகிறவர்களுக்கும் ஆளப்படுகிறவர்களுக்கும், திருப்திகரமாக இவர் நடந்துகொள்ளுவாரென்று நம்புகிறோம்.

SELECTIONS.

விசேஷத்திரட்டு.

GROUNDNUT AND ITS USES.

மணிலாக்கொட்டையும் அதன் பிரயோஜனமும்.

மணிலாக்கொட்டை யென்றால் இன்னதென்று நேயர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். அடிக்கடி சிறுக்காரர்கள் ஈ. வே. என்று சொல்லிக்கொண்டு வீதி வீதியாய் விற்றுப் போவதை நாம் பார்க்கிறோம். மதுரை, தஞ்சை, திருச்சி முதலிய இடங்களிலிருப்பவர்கள் அதை நிலக்கடலை என்பார்கள். சென்னையில் வசிப்பவர்கள் அதை வேர்க்கடலை என்று சொல்லுவார்கள். அக்கொட்டையில் நாட்டுக்கொட்டை என்றும், மோரிசுக் கொட்டை என்றும் இரண்டுவகை. இப்போது கடலூர் ஜில்லாவிலும், மற்ற ஜில்லாக்களிலும் அது அதிகம் பயிர் செய்யப்படுகிறது. அக்கொட்டையைப் பயிர் செய்வது வெகு எளிது. அதனை வெட்டியெடுப்பதுதான் கஷ்டம். உருளைக்கிழங்குகளைப் பொறுக்கி எடுக்க ஒரு யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது போல, மணிலாக்கொட்டையையும் பொறுக்கி யெடுக்க ஒரு யந்திரம் கண்டு பிடிக்கப்படுமானால் அந்த யந்திரம் அதிகமாய் விலைபோகுமென்று சொல்லலாம் ஒரு ஏகர் பூமியில் மணிலாக்கொட்டை ஒரு விவஸாயி பயிர் செய்வதாயிருந்தால் முதலில் நிலத்தை 10 முறை உழவேண்டு மென்றும், அதற்கு 5 ரூபாய் பிடிக்கு மென்றும், 72 படி விதை வாங்க 6 ரூபாய் செல்லுமென்றும், இருமுறை, களை யெடுக்க 5 ரூபாய் ஆகுமென்றும், 30 வண்டி மாட்டு மந்தை சாணமும் சாம்பலுமாய் உரமிட 15 ரூபாய் பிடிக்குமென்றும், ஜலம் பாய்ச்சவும், பயிரழிந்து போகாமல் காக்கவும் 5 ரூபாய் ஆகுமென்றும், ஒருதரம் மண்எண்ணெய் யந்திரத்தின் உதவியைக்கொண்டு ஜலம் இறைத்துவிட ரூபா $1\frac{1}{4}$ வீதம் வாரம் ஒரு முறையாக 3 மாஸம் அடிக்கடி ஜலம் இறைத்துப் பாய்ச்ச 15 ரூபாய் செலவாகுமென்றும், விளைந்த மாசூலைப் பொறுக்கிச் சேர்க்க 51 ரூபாய் பிடிக்குமென்றும் தெரியவருகிறது. இத்தனை செலவு செய்து பயிரிடப்படும் மணிலாக்கொட்டை எவ்வளவு மாசூலைக் கொடுக்குமென்றால், ஒரு ஏகர் நிலம் நல்ல மாசூலைக் கொடுக்கிறதாயிருந்தால் 200 கலம் கொட்டை கிடைக்கும். கலம் $1\frac{1}{4}$ ரூபாய் வைத்தாலும் 200 கலத்துக்கு 250 ரூபாய் ஆகிறது. அதில் பயிரிடப்பிடித்தசெலவு 102 ரூபாய் போக ஆதாயம் ரூபாய் 148 கிடைக்கிறது. என்ன குறைந்தபோதிலும் 100 ரூபாயாவது ஆதாயம் கிடைக்கும். இந்த லகுவான தொழிலைக் கூட நம்மவர்கள் கவனிக்காமல் வீண் வாதங்களில் காலத்தைப்போக்கி வருகிறார்கள். அமெரிக்கர்கள் இந்த மணிலாக் கொட்டையின் மேல்தோலை எடுத்துவிட்டு முழுப்பருப்புகளை நெருப்புச்சட்டியில் போட்டு அவைகளிலிருந்து எண்ணெய் கசிந்து ஆவிவருகிற வரையில் வறுத்துக் கொஞ்சம் பொடிசெய்த உப்பைத்தூவிக் கிளறி வைத்துக்கொண்டு காப்பிக்கொட்டை யந்திரத்தைப் போன்ற கலாய் பூசிய ஓர் யந்திரத்திற் போட்டு ஆட்டினால் துவையலைப் போன்ற வெண்ணெய் வெளியே வந்து விழுகிறது. இதை கண்ணாடி டப்பிகளில் அடைத்து அதற்கு "பீநட் பட்டர்" என்று பெயரிட்டு அதை விற்று நல்ல லாபத்தை அடைந்து வருகிறார்கள். அவ்விடத்திலுள்ள ஜனங்கள் அதை அப்பம், ரொட்டி முதலிய தின் பண்டங்களில் வெண்ணெய்க்குப் பதிலாகத் தடவி சாப்பிடுகிறார்கள். இதில் உப்பு கொஞ்சம் சேருவதால் கொட்டையின் பித்தமும் சமனமாகி விடுகிறதாம். யந்திரம் கிடைக்கா விட்டால் கொட்டையை மட்டும் மேற்சொன்ன முறைப்படி எடுத்து கலவத்திலாவது, அம்மியிலாவது வைத்து அரைத்துக் கொண்டு உபயோகித்துப் பார்க்கலாம். நாம் என்ன சொன்னபோதிலும் நம்மவர்கள் கேட்டிருந்து ஆச்சரியப்படுவார்களே யன்றி, அதைச் செய்ய முயற்சிசெய்கிறதில்லை.

"சுதேசபரிபாலினி."

COMPANIES AND COMPANY PROMOTERS.

கம்பெனிகளும் அவைகளை ஸ்தாபிப்பவர்களும்.

நம் தேசத்தில் இப்போது தொழில், வர்த்தகம் முதலிய அலுவல்களில் ஜனங்களுக்கு சிரத்தை யுண்டாகி வருவது பொதுவாய் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியது. 1910௵ அக்டோபர்மீ 12-ம் உ சனிவாரம் பம்பாயில் பிரசித்தி பெற்ற மன்மோகன் தாஸ் ராம்ஜி என்ற பஞ்சுவர்த்தகர், தேசத்தின் ஸ்திரமான க்ஷேமம் தொழில் வளப்பத்தா லுண்டாக வேண்டுமே யன்றி வீண் கனவுகளான ஆசைகளால் உண்டாகா தென்று சொன்னார். இது உண்மையென்று நம் மித்திரனில் பலமுறை காட்டியிருக்கிறோம். "எந்தேசத்தில்தொழில் இல்லையோ அந்தேசத்தில் செல்வமில்லை. செல்வ மில்லாவிட்டால் வேறெதுவு மில்லை." என்பது அனுபவசித்தம். தனி மனுஷனுக்குப் பொருள் இல்லாவிட்டால், அவன் எப்படிப் பொருட்டாக மதிக்கப்படுவதில்லையோ, அப்படி ஜன சமூகத்துக்கும் செல்வமில்லையானால் அது உலகத்தாரால் பொருட்டாக மதிக்கப்படாமல் பல சிறுமைகளுக்கு உள்ளாகும். இந்த உண்மையை நம் ஜனங்கள் சிறிது சிறிதாக அறிந்து வருகிறார்கள். தொழில்கள் செழிப்பதற்கு பணத்தை மிகுத்துச்சேர்க்க வேண்டும். பணத்தை மிகுத்து சேர்ப்பதற்குப் பாங்கிகள், நிதிகள், கம்பெனிகள் இவைகள் அவசியம். தற்காலம் நம்தேசத்தில் இவைகள் பெருகிவருவதை நல்ல குறியாகவே கொள்ளவேண்டும். இப்படியிருக்க, இவைகளிற் பல ஜனங்களுக்கு நன்மை செய்வதைவிட்டு, ஏழைகளை அழித்து வருகின்றன. சில நிதிகளும், கம்பெனிகளும் மோசக்காரர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, ஏழைகளை ஏமாற்றிப் பணம் பிடுங்கிவருகின்றன. தவிர, அக்கம்பெனிகளின் ஸ்தாபகர்கள் கம்பெனிகள் பேரால் கடன் வாங்கி விழுங்கி விடுகிறார்கள். சில ஸமயங்களில் கம்பெனிகள் நல்லெண்ணம் உள்ளவர்களால் நல்ல நோக்கத்துக்காக ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், பிறகு டைரெக்டர்களாய் இருந்து அவைகளை நடத்துவோர் ஜாக்கிரதை யின்மையாலும், அறியாமையினாலும், கம்பெனிகளை மூடிவிடும்படிச் செய்து, பணம் போட்டவர்களை நஷ்டப்படுத்துகிறார்கள். பெரிய கம்பெனிகளாக லக்ஷக்கணக்கான முதலைக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்டவைகளுங்கூட, எதிர்பாராத பல காரணங்களால் டைரெக்டர்களுடைய குற்றமில்லாமல் மூடப்பட்டுப் போகின்றன. இவைகளைப்பற்றி நாம் வருத்தப்படுவதில் பயனில்லை. எத்தேசத்திலும் நீண்டகாலம் செழிப்பாய் நடத்தப்பட்டு வந்த கம்பெனிகளுங்கூட, திடீரென்று மூடப்பட்டுப்போகின்றன. நல்ல அனுபோகஸ்தர்களாலும் எதிர்பார்க்க முடியாத காரணங்களால் இப்படி நேரிட்டுவிடுகின்றது. பணம் போட்ட ஆயிரக்கணக்கான ஜனங்கள் சிறிய தொகைகளையும் பெரிய தொகைகளையும் இழந்து வருகிறார்கள். அனேக குடும்பங்கள் அப்படி நேரிடும் நஷ்டத்தால் கவிழ்ந்தே போகின்றன. ஆயினும் இப்படி நல்ல கம்பெனிகள் மூடப்பட்டுப் போவதை தெய்வச் செயலாய் நினைத்து ஒருவாறு நாம் தேர்ச்சி அடைகிறோம். மனுஷயத்தனங்களுக்கு இடையூறுகள் நேரிடுவது சகஜமென்று நினைத்து மனதை ஸமாதானப்படுத்திக் கொள்ளுகிறோம். ஆனால் அயோக்கியர்கள் ஏழைகளை மனதறிந்து மோசம் செய்யும்போது மனத்தேர்ச்சி எங்ஙனம் சாத்தியம்? அப்படிப்பட்டவர்களை கவர்ன்மெண்டார் கண்டிப்பான சட்டம் செய்து தண்டிப்பது நியாயமாகும். டைரெக்டர்களென முன்வந்து கம்பெனிகள் நடத்துவோர் அறியாமையாலும், அஜாக்கிரதையாலும் பங்கு போட்டவர்களை நஷ்டப்படுத்தினால் அதனாலும் தேர்ச்சி யுண்டாதல் கஷ்டம். அப்படிப்பட்ட டைரெக்டர்களைத் தக்க காலத்தில் எச்சரிக்கவும், எச்சரிக்கை பயன்படாவிட்டால் தண்டிக்கவும் சட்டமிருக்கவேண்டும்.

1910௵ அக்டோபர்மீ 18-ம் உ "மெயில்" பத்திரிகையில் மிஸ்டர் ஹாரிஸ் டன்ஹில் என்னும் ஆங்கிலேயர் இந்த விஷயமாய் எழுதியிருக்கும் நிருபத்தில், 1882-ம் வருஷத்து இந்தியன் கம்பெனீஸ் ஆக்டு 220. பி. கிளாஸின் படி, மேற்கண்ட நிதிகளையும், கம்பெனிகளையும் மேல்விசாரணை செய்வதில் போதுமான அதிகாரம் இருக்கிறதென்றும், இந்த அதிகாரத்தை மட்டும் குறைவில்லாமல் கவர்ன்மெண்டு செலுத்திவருமானால் மோசங்கள் நேரிடாவென்றும், அப்படிச் செலுத்தாததினாலேயே அயோக்கியர்களும் சிரத்தையில்லாத டைரெக்டர்களும் ஏழைகளை மோசம்பண்ணவும், நஷ்டப்படுத்தவும் ஸாத்தியமாகிறதென்றும், எழுதுகிறார். இன்னொன்றும் இவர் சொல்லுகிறார். என்னவெனில்:—1900-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் பிரசுரித்த ஒரு தீர்மானத்தில் மாகாணக் கவர்ன்மெண்டுகளுக்கு கம்பெனிகளை மேல்விசாரணை செய்வதற்குப் போதுமான அதிகாரமிருக்கின்றதென்றும், அதைப்பூராவும் செலுத்த வேண்டுமென்றும், வற்புறுத்தினார்கள். இந்தத் தீர்மானத்தை சென்னைக் கவர்ன்மெண்டார் திருப்பிப் பிரசுரம்செய்து பின்வருமாறு உத்தரவு பிறப்பித்தார்கள். "கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்கெனவேயுள்ள அதிகாரத்தை அவர்கள் பூராவும் செலுத்தவேண்டும். எங்கே மோசம் நடப்பதாகச் சந்தேகமில்லாமல் தோன்றுகிறதோ, அங்கே அந்த மோசத்தை வெளிப்படுத்தக் கூடுமானால் தண்டனைக்குக் கொண்டு வரவேண்டும். இந்தியன் கம்பெனீஸ் ஆக்டின் நிபந்தனைகளைக் கண்டிப்பாய் அமுல் படுத்தவேண்டும். நஷ்டப்பட்டவர்களின் புகார்களை விசாரிக்கவேண்டும். எந்தக் கம்பெனிகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவமானமாய் நின்றுபோமென்று தோன்றுகின்றனவோ, அவைகளில் கீழ் உத்யோகஸ்தர்கள் சம்பந்தப்படக்கூடாதென்று எச்சரிக்கப்படவேண்டும்." இப்படிச் சட்டமும் கவர்ன்மெண்டாருடைய கருத்துமிருக்க, அயோக்கியர்கள் மோசம்செய்து செழிப்பது எங்ஙனம் சாத்தியமாகின்றதோ? அல்லது டைரெக்டர்கள் அஜாக்கிரதையாயிருந்து அவர்களாலேயே நியமிக்கப்பட்டுச் சம்பளம் பெறும் ஸெக்ரிடெரிகளை நம்பி இருந்துவிட்டதாகச் சாக்குச் சொல்லுவதும் எங்ஙனம் சாத்தியமாகின்றதோ? மிஸ்டர் டன்ஹிலைப்போல் பம்பாயில் பேசின மிஸ்டர் மன்மோகன்தாஸ் ராம்ஜியும் இந்தியன் கம்பெனீஸ் ஆக்டை மாற்றுவது அவசியமென்று வற்புறுத்தினார். ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளை அடமானம் வைப்பது கூடாதென்றும், தடுத்துவிடவேண்டுமென்றும் சொன்னார். தற்சமயம் நம் தேசத்து ஜனங்கள் கம்பெனிகள் வைத்து நடத்துவதைப் புதிதாய்க் கற்றுக்கொண்டு வரும்போது, அயோக்கியர்கள் சேர்ந்து கம்பெனிகள் ஸ்தாபிப்பதாகச் சொல்லி, அறியாத ஜனங்களை மோசம் செய்து லாபம் பெறவிடுவது, தேச நன்மைக்கு விரோதமென்றும் சொன்னார்.

"சுதேசமித்திரன்."

CHOLERA.

காலரா.

காலரா அல்லது வாந்திபேதி என்று சொல்லும் வியாதி மிகவும் சிறிய ஒருவிதக் கிருமியால் மனுஷனுக்கு வருகிறது. அந்த கிருமியானது ரொம்பவும் சிறிதாயிருப்பதால் நேரில் கண்ணால் பார்க்கமுடியாது. சிறிதைப் பெரிதாகக்காண்பிக்கும் பூதக்கண்ணாடியால் அதைப் பார்த்தால் அப்போது அது நெளிகிறதையும் ஒன்று இரண்டாக விருத்தியாகிறதையும் கண்ணால் பார்க்கலாம்.

இந்தக் கிருமிகள் இந்த வியாதி வந்தவன் குடலில் கோடிக்கணக்காய் இருக்கின்றன. குடலிலிருந்து அவன் கழிக்கும் மலத்தின் மூலமாயும், அவன் எடுக்கும் வாந்தியாலும் வெளியே வருகின்றன. இவை பூமியில் சேரும்போது கிருமிகளும் பூமியில்சேர்ந்து விருத்தியாகின்றன.

இந்த வியாதி வந்தவன் குளக்கரையிலாது, ஆற்றங்கரையிலாவது முதலில் சரீரத்தில் பலமிருக்கும்போது ஒன்று அல்லது இரண்டு தடவை மலபாதைக்குப் போகிறான். ஒரு மழை பெய்தால் காலரா கிருமி நிறைந்த மலமானது குளத்து ஜலத்திலோ, ஆற்று ஜலத்திலோ கரைந்து வந்து சேரும்.

தவிர, வாந்தபேதி வந்தவன் சரீரத்தில் பலமில்லாமல் வீட்டுக்குள்ளேயே மலம் போய்க்கொண்டிருக்கும் போது அந்த வீட்டிலுள்ள துணிகளினால் அதைத் துடைக்கிறார்கள். இந்தத் துணிகளை வீட்டுப் பெண்பிள்ளை தான் செய்யும் செய்கையினால் பிறருக்கு நேரும் ஆபத்தை அறியாமல் குளத்திலோ, அல்லது ஆற்றிலோ கொண்டுபோய் கசக்குகிறார்கள். இந்த விதமாயும் காலரா ஜலத்தில் சேருகிறது.

அல்லது வீட்டில் போன மலத்தின்பேரில் சாம்பலைப் போட்டு மூடி அந்த சாம்பலை எருக்கிடங்கில் கொண்டுபோய்க் கொட்டுகிறார்கள். எருக்கிடங்கானது அநேக ஊர்களில் அநேக வீடுகளில் குடி தண்ணீருக்கு உபயோகப்படும் குளத்தின் கரையிலிருக்கிறது. மழை பெய்தால் காலரா கிருமியும், மலமும் சேர்ந்த சாம்பலைக் கரைத்து அல்லது ஜலத்தில் சேர்த்து விடுகிறதல்லவா?

இவ்விதமாக அந்தக் கிருமி ஜலத்தில் சேர்ந்தவுடன் விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. முதலில் ஜலத்தில் சேர்ந்தவைகள் கொஞ்சமானாலும் அவைகள் வெகு சீக்கிரத்தில் கோடிக்கணக்காய் ஆகின்றன. இந்த ஜலத்தை எடுத்துக்கொண்டுபோய் அக்கினி பகவானுக்குக் காட்டினால் அந்தக் கிருமி அற்ப ஜீவனை உடையதாதலால் வெகு சீக்கிரத்தில் இறந்து விடுகிறது. அதைக் குடித்தால் கெடுதலில்லை. ஆனால் ஜலத்தைக் கொதிக்கவைத்துச் சாப்பிடுவதுதான் எல்லா பேருக்கும் வழக்கமில்லையே? மேலும் குடிக்கிற ஜலத்தைக் கொதிக்கவைத்தாலும் சமைத்த சாதத்திற்கு விடும் ஜலத்தைக்கொதிக்க வைக்கிற வழக்கமில்லை. மோருக்கு விடும் ஜலம் கொதிக்க வைக்காமலே விடப்படுகிறது. இப்படிக் காலரா மலம் சேர்ந்த ஜலத்தைக் கொதிக்க வைக்காமல் சாப்பிட்டாலாவது அல்லது சாதத்தில் சேர்த்தாலாவது (ஜலம் விட்ட சாதம்) அல்லது மோரில் சேர்த்து ஒருவன் உட்கொண்டாலாவது அவன் குடலில் அந்தக் கிருமிசேரும்போது அங்கே அதற்கு ஏராளமான ஆகாரம் கிடைக்கிறபடியால் அது கணக்கில்லாமல் விருத்தியாகிறது. அது விருத்தியாகும்போது தன்னுடைய விஷத்தைக் குடலில் விடுகிறது. குடலிலிருந்து ரத்தத்தில் அந்த விஷம் சேருவதனால் காலரா என்ற வியாதி உண்டாகிறது.

சரீரத்திற்கு ரக்ஷணையான ரத்தமானது இந்த விரோதியாகிய புழுவையும், அதன் விஷத்தையும் வெளியே அடித்துக்கொண்டு போகும் பொருட்டு தன்னிடமிருந்து ஏராளமான ஜலத்தை குடலில் தள்ளுகிறது. அதனால்தான் அந்த வியாதிக்காரனுக்கு மலம் தாராளமாய் வெளியேபோய்க் கொண்டிருக்கிறது. மலம் போகிறது மாத்திரந்தானே ஒரு கெடுதலாக மாட்டாதென்பதை அறியலாம். ஏனென்றால் அந்த வியாதியின் புழுவும், விஷமும் சரீரத்தினின்று வெளியே அப்புறப் படுத்தப்படுகிறதல்லவா?

இந்தக்கிருமிதான் அந்த வியாதிக்குக் காரணம் என்பதை என்னமாய் அறியலாம் என்று கேட்டால், இந்த வியாதிக்காரனுடைய மலத்தில் ஒரு குண்டூசியின் தலையளவு எடுத்து ஒரு கண்ணாடியில் தடவி பூதக்கண்ணாடியில் வைத்துப் பார்த்தால் இந்தப்புழு நெளிந்து விளையாடுவதையும் ஒன்றிரண்டாக விருத்தியாவதையும் கண்ணால் பார்க்கலாம். குண்டூசியின் தலையளவு அம்மலத்திலிருந்து எடுத்து ஒரு குடம் ஜலத்தில் கரைத்தால் அந்தத் தண்ணீரைக் குடிக்குமொருவனுக்கு அவ்வியாதிவரும். அவனுடைய மலத்திலும் இந்தப்புழுவை கண்ணாடி மூலமாய்ப் பார்க்கலாம். இது கண்ணால் நேரில் பார்த்து ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம்.

ஒரு ஊரில் ஒரு டாக்டர் இந்தப்புழுவை ஒரு சிறு குப்பியில் வளரவைத்துப்பார்த்துக் கொண்டிருக்கும்போது அவருடைய சேவகன் அதை அறியாமல் குப்பியைச் சுத்தம் பண்ணி வைக்கவேண்டுமென்று நினைத்து ஒரு அண்டாவில் வைத்திருந்த ஜலத்தில் அந்தக் குப்பியை அமிழ்த்திக் கழுவினான். இதையறியாமல் அந்த ஜலத்தை 19 பேர்கள் சாப்பிட்டார்கள். மறு நாள் 9 பேருக்கு வாந்திபேதி கண்டது. ஐந்து பேர்கள் இறந்தார்கள். இதை விட வேறு சாட்சி வேணுமா. இறந்தவர் மலத்தில் இந்தப்புழு இருப்பதை கண்ணாடி மூலமாய் அறியப்பட்டது.

நிலத்தில் விதைத்த விதையெல்லாம் முளைக்கிறதில்லையே, விதைமாத்திரம் போதுமா, நிலமும் அதற்குச் செம்மையாய் இருக்கவேண்டுமல்லவா? அதுபோல் காலரா புழு எவன் குடலில் சேருகிறதோ அவனுக்கெல்லாம் காலரா உண்டாகமட்டாது. அவன் குடலில் அதற்கு ஸமயம் கிடைத்தால் தான் அது வளரும். இல்லாவிட்டால் அது இறந்து விடும். ஆகையால்தான் ஒரே ஜலத்தைக் குடிக்கும் சில பேருக்கு மாத்திரம் காலரா வருகிறது. சிலருக்கு அது வருகிறதில்லை.

புதுஜலம் ஆற்றில் வருகிறபோது காலரா விசேஷமாய் வருகிறதைக் காண்கிறோம். கரையில் தள்ளியிருந்த மலத்தையும் சேர்த்து வெள்ளம் வரும்போது கரைத்து வருகிறதல்லவா? ஆகையால் இது வரையிலும் ஜலத்தில் சேராத காலரா மலம் வெள்ளம் வரும்போது சேருகிறதினால் அந்த ஜலம் போய் உபயோகப்படும் இடங்களில் காலரா வருகிறதைக் காண்கிறோம்.

திடீரென்று ஒரு ஊரில் காலரா வரக் காரணம் :—காலரா மலம் குடிதண்ணீரில் சேராமல் பூமியிலே இருக்கலாம். பூமியிலே அதன் கிருமியானது வளர்ந்து கொண்டிருக்கலாம். மழை பெய்து குடிதண்ணீரில் அம்மலத்தைக் கரைக்கும்போது வாந்திபேதி வரும்.

கிணற்று ஜலத்தில் மலம்சேரக் காரணம் இல்லாததால் அதை உபயோகிப்பவர்களுக்

குக் காலரா வரும் என்கிறபயம் இல்லை. அம்மலம் கிணற்று ஜலத்தில் சேருமானால் அந்த ஜலத்தைக்குடித்தாலும் வரும். ஆனால் நல்ல கிணற்றில் அம்மலம் ஸாதாரணமாய்ச் சேருகிறதில்லை. ஆதலால் குளத்து ஜலத்தையாவது, ஆற்று ஜலத்தையாவது உபயோகிக்கும்போது இருக்கவேண்டிய கவலையும் வரும் ஆபத்தும், கிணற்று ஜலத்தை உபயோகிப்போருக்குக் கிடையாது. ஆனால் பல பேர்களுக்கு ஒரே கிணற்றிலிருந்து ஜலம் எடுக்க வேண்டுமானால் ஒரே ஸொந்தமான கயற்றையும், அழுக்கில்லாமல் தேய்த்த ஒரே பாத்திரத்தையும் உபயோகிக்கவேண்டும். அவர்கள் கொண்டுபோகும் பல பல கயிறுகளையும், பாத்திரங்களையும் கொண்டு ஜலம் மொள்ளக் கூடாது. ஏனென்றால் அழுக்குள்ள பாத்திரங்களைக்கொண்டு ஜலம் மொண்டால் அசுத்தமான பதார்த்தங்கள் கலந்து ஜலம் கெட்டுப்போய் விடும்.

கிணறு இல்லாத ஊரில் இரண்டு மூன்று குளங்களாவது, அல்லது ஒரு குளமும், ஆறும் இருக்குமானால் ஒரு குளத்து ஜலத்தை குடிக்கவும், சமயலுக்கும் மாத்திரம் உபயோகப்படுத்தவும்வேண்டும். ஸ்நானம் செய்யவோ, துணிகளைக் கசக்கவோ அதில் விடக்கூடாது. ஸ்நானம் செய்து துணிகளைக்கசக்கும் குளத்திலிருந்தோ, ஆற்றிலிருந்தோ ஜலம் சமையலுக்கும், பானத்துக்கும் எடுத்துக்கொள்ளக் கூடாது.

அப்படி எடுக்க நேரிட்டால் வீட்டில் காலையிலெழுந்தவுடன் முதல் காரியம் என்னவென்றால், ஒரு பானை ஜலத்தைக் கொதிக்க வைத்து எடுத்து மூடிவைக்கவேண்டும். அந்த ஜலத்தைக் குடிக்கவும், ஸாதத்திற்கோ, மோருக்கோ ஜலம் விடவேண்டுமானால் அந்த ஜலத்தை விடவும்வேண்டும். காலரா இருந்து கொண்டிருக்கும்போது இம்மாதிரி செய்வதுடன், வெளியிலிருந்து கண்ட ஜலம் சேர்ந்த மோரை வாங்கக்கூடாது. அம்மோரை வாங்கினால் அக்கினி பகவானுக்குக் காட்டி கொதிக்க வைக்கவேணும்.

காலராவை வராமல் தடுப்பது எளிது, வந்தால் சொஸ்தமடைவது கஷ்டம். மலம் சேராத ஜலத்தைச் சாப்பிட்டால் அது வர மாட்டாது. நம் முன்னோர்களெல்லாம் எந்த ஜலத்தைச் சாப்பிட்டார்கள், அவர்களுக்கு ஏன் வரவில்லையென்று கேட்டால், முன்னோர்களெல்லாம் காவேரியென்றால் பக்தியோடல்லவா இருந்தார்கள். காவேரிக் கரையில் மல ஜலபாதைக்குப் போவார்களா? அல்லது அதில் துணியை கசக்குவார்களா? அவர்கள் அந்த ஜலத்தைச் சுத்தமாக வைத்திருந்தார்கள். இப்போது காவேரிக் கரையிலும், குளக் கரையிலுந்தானே எல்லாரும் போவது வழக்கமாக இருக்கிறது. ஜலத்தை இம்மாதிரி அசுத்தி செய்துவிட்டு அதை உபயோகப்படுத்துவதில் கவனமில்லாமல் இருந்தால் கஷ்டப்படுவது ஜனங்கள்தான்.

பொது நன்மையைக் குறித்துக் காலரா மலத்தையும், வாயிலெடுப்பையும், துணிகளையும் அதிலுள்ள கிருமிகள் குடி ஜலத்தில் சேராமல் இறந்துபோகும் பொருட்டு உமியைக் கலந்து கெரோஸின் எண்ணெயை விட்டுக் கொளுத்துவது அவசியம்.

காலரா மருந்துகளை கிராம முன்ஸீப்களிடத்திலிருந்தும், ஸர்க்கார் அல்லது முனிஸிபல் ஆஸ்பத்திரிகளிலும், இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

THE SALT TAX.

உப்பு வரி

அநாதிகாலமாக உப்புவரியானது இந்தியாவில் வருமான ஆதாரங்களில் ஒன்றாய் இருந்து வருகிறது. மேலும், நடுத்தரமான நிலைமையிலுள்ளவர்களாய் பூஸ்திதியில்லாமலும், வியாஜ்யம் செய்யாமலும், சாராயம் அல்லது அபினியை உட்கொள்ளாமலும் இருக்கும் இந்தியர்கள் செலுத்தவேண்டிய வரி இப்போது இது ஒன்றுதானென்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரியானது தலையொன்றுக்கு வருஷந்தோறும் ஸராஸரி 2½ அணா ஆகிறது. 1858-ம் ௵த்தில் உப்பு வரியானது வங்காளத்தில் ஒரு மணங்குக்கு (சுமார் 82 ராத்தலுக்கு) 2½ ரூபாயாகவும், சென்னை மாகாணத்தில் (உப்பு உண்டாக்கும் செலவு உள்பட) ஒரு மணங்குக்கு ஒரு ரூபாயாகவும், பம்பாயில் 12 அணாவாகவும், வட இந்தியாவில் ஒரு மணங்குக்கு 2 ரூபாயாகவும் இருந்தது. 1859-ம் ௵த்தில் இந்த வரி விதங்கள் முறையே ரூபாய் 3, 1, 2½ ஆக உயர்த்தப்பட்டன. 1861-ம் ௵த்தில் வங்காளத்தில் 3¼ ரூபாயாகவும், சென்னை மாகாணத்தில் 1½ ரூபாயாகவும், வட இந்தியாவில் 3 ரூபாயாகவும் அவைகள் மறுபடியும் உயர்த்தப்பட்டன. 1865-ம் ௵த்தில் பம்பாய் வரி விதம் மணங்கொன்றுக்கு 1½ ரூபாயாக உயர்த்தப்பட்டது. வங்காளத்தில் வெகுகாலத்துக்கு முன், அதாவது 1837-ம் ௵த்திலேயே, மணங்கொன்றுக்கு 3¼ ரூபாய் விதம் வரி விதிக்கப்பட்டிருந்தது. இந்த வரியானது இறக்குமதியான உப்பின்மேல் துறைமுகப் பட்டணங்களிலும் ப்ரிடிஷ் இந்தியா உப்பின்மேல் கடற்கரை அல்லது உப்பு விளையும் இதர இடங்களிலும் விதித்து வசூல் செய்யப்பட்டது. சுதேச சமஸ்தானங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட உப்பின்மேல் அந்த வரியானது பஞ்சாபையும், வடமேற்கு மாகாணங்களையும், மத்தியமாகாணங்களையும் சுற்றிச் செல்வதாய் உள்நாட்டு வழியாய்ப்போகும் 2,000 மைல் நீளமுள்ள சுங்க ரஸ்தா மூலமாக விதித்து வசூல் செய்யப்பட்டது. இந்த ரஸ்தாவில், கீழ்த்திசையாய்ப்போகும் ஸகல உப்பின்மேலும் மேல்திசையாய்ப்போகும் ஸகல சர்க்கரையின்மேலும் வரி விதித்து வசூல் செய்யப்பட்டது.

1870-ம் ௵த்துக்கும், 1878-ம் ௵த்துக்கும் இடையில் உப்பு உற்பத்தியாகும் இடங்களைச் சொந்தமாகவுடைய சுதேச சமஸ்தானங்களுடன் சில ஏற்பாடுகள் செய்துகொள்ளப்பட்டன. அவைகளின்படி, அந்த சமஸ்தானங்களின் அதிபதிகள் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரிடத்திலிருந்து வருஷந்தோறும் பெருத்த தொகைகள் பெற்று, அதற்குப் பிரதி ப்ரயோஜனமாக தங்கள் சமஸ்தானங்களுக்குள் உற்பத்தி செய்யப்படும் உப்பின்மேல் விசாரணை அதிகாரம் செலுத்தவும், வரி விதிக்கவும் இந்த கவர்ன்மெண்டாருக்கு அனுமதி கொடுத்தார்கள். உப்பு உற்பத்தியாகும் இடங்களுக்கு இருப்புப்பாதைகள் போடப்பட்டன. ஆகவே, கவர்ன்மெண்டார் உப்பு உற்பத்தியாகும் இடங்களில் சரக்கு வெளியே போகாமல் தடுப்பதற்கு ஸ்வல்ப சிப்பந்திகளை ஏற்படுத்தி, அங்கிருந்து ப்ரிடிஷ் இந்தியாவுக்குள் கொண்டு வரப்படும் எல்லா உப்பின்மேலும் வரி விதிப்பதற்கு ஸாத்தியமாயிற்று. இப்படிச் செய்ததனால், உள்நாட்டுச் சுங்க ரஸ்தாவை எடுத்து விடுவதற்கும், உப்பு வரிகள் இந்தியாவின் ஸகல பாகங்களிலும் ஒரே ஸமமாயிருக்கும்படி செய்வதற்கும் வழி ஏற்பட்டது. இந்தக் காரியத்தை முடிப்பதற்கு அவசியம் செய்யவேண்டிய முயற்சியாக, 1878-௵த்தில் உப்பு வரியானது சென்னப்பட்டணத்திலும், பம்பாயிலும் உயர்த்தப்பட்டு, இந்தியாவின் மற்ற பாகங்களில் குறைக்கப்பட்டது. 1882-ம் ௵த்தில் இந்த வரியானது பர்மாவைத் தவிர இந்தியாவின் எல்லா பாகங்களிலும் ஒரே மாதிரியாய் மணங்கொன்றுக்கு 2 ரூபாய் விதம் இருக்கவேண்டுமென்று நிஷ்கரிஷை செய்யப்பட்டது. ஆனால், பர்மாவிலே அப்படியில்லாமல் மூன்று அணா அல்லது சுமார் ⅕ ரூபாய் ஆகிய தாழ்ந்த விதம் விதிக்கப்பட்டுவந்தது. உள்நாட்டு சுங்கச் சாவடிகள் எடுத்துவிடப்பட்டன; அதனால் 2,000 மைல் தூரம் வரையில் உள்ள ஒரு அகன்ற பிரதேசத்தின் நெடுக இருக்கிற ஜனங்களுக்கும், வர்த்தகத்துக்கும் முன்னிருந்த பெரும் தொந்தரை ஒழிந்ததுமல்லாமல், உள்நாட்டில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோகப்படும் சர்க்கரையின்மேல் விதிக்கப்பட்டிருந்த கொடுமையான வரிகளும் நின்றுபோய்விட்டன. இந்த ஏற்பாடுகளின் பயனாக உப்பு முன்னிலும் வெகு அதிகமாய் வாங்கி உபயோகிக்கப்பட்டது. வரி விதிக்கப்பட்ட உப்பானது, 1868-ம் ௵த்தில் எவ்வளவு வாங்கி உபயோகிக்கப்பட்டதோ அதை விட நூற்றுக்கு 50 விதம் அதிகமாய் 1888-ம்

௵த்தில் உபயோகிக்கப்பட்டது. 1888-ம்௵த்தில் வெள்ளிக்குப் பொன் நாணய ரூபமாய் ஏற்பட்ட விலை குறைந்துபோகவே முக்கியமாய் அதனால் அரசிறை விஷயத்தில் நேர்ந்த கஷ்டங்களுக்கு ஈடு கொடுக்கும் பொருட்டு, உப்பு வரியை மணங்கொன்றுக்கு 2 ரூபாயிலிருந்து 2½ ரூபாயாக உயர்த்தவேண்டியது அவசியமாயிற்று. இந்த விதப்படி 1903-ம்௵ வரையில் வரி விதிக்கப்பட்டு வந்தது. அது 1903-ம்௵த்தில் மணங்குக்கு 2 ரூபாயாகவும், 1905-ம்௵த்தில் மணங்குக்கு 1½ ரூபாயாகவும், 1907-ம்௵த்தில் மணங்குக்கு ஒரு ரூபாயாகவும் குறைக்கப்பட்டது.

மொத்தத்தில் இந்தியாவில் உப்பானது 50 வருஷங்களுக்கு முன்னாவது அதற்கு முன் இந்துதேச சரித்திரத்தில் எந்தக் காலத்திலாவது இருந்ததைவிட இப்போது எவ்வளவோ நயமாயிருக்கிறது. இப்போதுள்ள வரியின் விதமானது முன்னிருந்ததாகத் தெரியவரும் எல்லா விதங்களைக்காட்டிலும் மிகக்குறைந்ததாயிருப்பது மாத்திரமல்லாமல் இருப்புப் பாதைகள் விஸ்தாரமாய்ப் போடப்பட்டது காரணமாக இந்தச் சரக்கு நயத்திருக்கும் விஷயமும், இதை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோவதற்கு ஏற்பட்டிருக்கும் ஸௌகரியமும் முன்னாட்களில் தெரியாத விஷயங்களாம். 1903-ம்௵த்துக்கும், 1908-ம்௵த்துக்கும் மத்தியிலுள்ள காலத்திலே ஸமீபத்தில் உப்பு வரி குறைக்கப்பட்டது. இந்தக்காலத்தில், வரி விதிக்கப்பட்ட உப்பில் ஜனங்கள் உட்கொண்ட அளவானது நூற்றுக்கு 22 விழுக்காடு அதிகப்பட்டது. இந்தியா முழுவதிலுமுள்ள ஜனத்தொகைக்கு வருஷவாரியில் செலவாகும் உப்புக்கு ஸராஸரி கணக்கெடுத்தால், இப்போது அது தலைக்கு 12 ராத்தல், அல்லது 50 வருஷங்களுக்கு முன்னிருந்ததைவிட கிட்டத்தட்ட இரட்டத்தனையாயிருக்கிறது. உப்பானது பெருத்த அளவாயிருக்கும் சரக்கு; மேலும், இந்தியாவின் பெரும்பாலான பாகங்கள் உப்பு உற்பத்தியாகும் இடங்களிலிருந்து அனேக நூறு மைல் தூரத்திலிருக்கின்றன. உதாரணமாக, இந்தியாவின் நடுவிலுள்ள நாகப்பூருக்கும், பம்பாயைச்சேர்ந்த உப்பு உற்பத்தியாகும் இடங்களுக்கும் 500 மைல் தூரம் இருக்கிறது. ஆகவே, மணங்குக்கு 3 ரூபாய் விதம் வரி ஏற்பட்டிருக்கும் காலத்தில் இந்த இடத்தில் உப்பை ரூபாய்க்கு 11 ராத்தல் விழுக்காடு சில்லறையாக விற்பது வழக்கமாயிருந்தது. 1866-ம்௵த்தில் நாகப்பூருக்கு இருப்புப்பாதை போடப்பட்டது. அதன் மேல் ஒரு வருஷத்துக்குள் நாகப்பூரில் உப்பின் வழக்கமான விலை ரூபாய்க்கு 19 ராத்தலாய் விட்டது. இப்போது நாகப்பூரில் உப்பின் விலை ரூபாய்க்கு 30 ராத்தலாய் இருக்கிறது. இந்த விலையானது ராத்தலுக்கு அரை பெனி அளவு விதத்துக்குக்கிட்டத்தட்ட ஸமமாகிறது. இது ஒரு அதிக விலையாகாது. இருப்புப்பாதைகளினால் அயோத்தியின் கிழக்கு பாகத்திலும், ரோஹில்கண்டிலும் உப்பின் விலையில் உண்டான மாறுதலானது இதைப்போலவே கவனிக்கத்தக்கதாயிருக்கிறது. முன்னாட்களில் இந்த பிரதேசங்களுக்கு ராஜபுதனத்திலிருந்து மிகுந்த கஷ்டத்துடன் அதிக விலைக்கும் உப்பு கிடைத்துக்கொண்டிருந்தது. ஏனென்றால், அந்த பிரதேசங்களுக்கும், ராஜபுதனத்துக்கும் பொதிமாடு, ஒட்டகம், வண்டி இந்த ஸாதனங்களினால் இரண்டுமாஸப் பிரயாணம் செய்யவேண்டிய தூரம் இருந்தது. இப்போதோ, உப்பு எவ்வளவு வேண்டுமானாலும் ரெயில் மார்க்கமாய் ஒப்பிக்கப்படுகிறது. வரி உள்பட அதன் விலையும் இங்கிலாந்தில் போஜனத்துக்காக உபயோகிக்கப்படும் டேபில் ஸால்ட் என்னும் சுத்தப்படுத்தின உப்பின் சில்லறை விலையைவிட மிகவும் அதிகமாயில்லை 1861-ம்௵த்தில் எல்லா செலவும் போக உப்பு மூலமாய் வந்த வருமானம், ஸராஸரி 2½ ரூபாய் வரியுடன் சேர்ந்து 3,94,10,000 ரூபாய் ஆயிற்று 1886-87-ம்௵த்தில் அது ஒரேவிதமான 2 ரூபாய் வரியுடன் சேர்ந்து 6,17,10,000 ரூபாய் ஆயிற்று. இதைவிட உயர்ந்ததாகிய 2½ ரூபாய் வரி விதிக்கப்பட்டிருந்த கடைசி வருஷமாகிய 1902-03-ம்௵த்தில், அந்த வருமானம் 8,37,90,000 ரூபாய் ஆயிற்று. 1907-08-ம்௵த்தில் மணங்கு ஒன்றுக்கு 1 ரூபாய் ஆகிய ஒரேவிதமான வரி விதம் சேர்ந்து அது 5,00,00,000 ரூபாய் ஆயிற்று.

REVIEW OF THE PRESS.

பத்திரிகை ஆராய்ச்சி.

DISEASES OF TREES.

மரங்களுக்குக் காணும் வியாதிகள்.

"வைத்தியபோதினி" என்பது ஒரு சிறந்த மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை. இது கும்பகோணத்தில் டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்களால் பிரசுரிக்கப்படுகிறது. இதன் வருஷ ஸந்தா ரூ. ஒன்றுதான். இருந்தபோதிலும் அதில் வைத்திய விஷயமாயும், சுகாதார விஷயமாயும் அடங்கிய விஷயங்களுக்கு விலையில்லை. இந்தப் பத்திரிகையின் ஸமீபத்து ஸஞ்சிகையொன்றில் மேலே சொல்லிய விஷயமாய் டி. வி. ரமணய்யர் என்பவர் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார்.

மைஸூர் ராஜ்யத்தில் கொஞ்ச காலத்திற்கு முந்தி சந்தன மரங்களுக்கு ஒருவிதமான வியாதி தோன்றி மரங்கள் பட்டுப்போயின. அப்படி நேருவதற்குக் காரணங்களையும், பரிகாரங்களையும் அறிந்து சொல்லுகிறவர்களுக்கு வெகுமதி கொடுப்பதாக கவர்ன்மெண்டார் சொன்னதாகவும் கேள்வி. சந்தன மரங்கள் வளர்ந்துள்ள பூமியானது காற்று உள்ளே பிரவேசிக்க முடியாமலும், தண்ணீர் உட்சென்று வேரின் நுனியில் எட்ட முடியாமலும் இறுகிப்போனால் கறையான் போன்ற ஒரு சிறு பூச்சி உற்பத்தியாகி நாளாவட்டத்தில் வேர்களின் நுனியிலுள்ள வாய்களை அரித்துவிடும். சிறிது தினத்திற்குள் மரம் பட்டுப்போம். மரத்தின் அடிப்புறத்தைச் சுற்றிலும் இரண்டு அடி அகலத்திற்கும், ஒரு அடி ஆழத்திற்கும் பள்ளம் வெட்டி, மரத்தின் பரிமாணத்திற்குத் தக்கபடி உப்பும், சாம்பலும் கலந்து கொட்டி மண்ணால் மூடி, தண்ணீர் நிற்கும்படிப் பாத்திகட்டிக்கொண்டு மூன்றுநாள்தொடர்ச்சியாய் விடாமல் காலை வேளைகளில் எதேஷ்டமாகத் தண்ணீர் ஊற்றவேண்டும். இப்படிச் செய்தால் சந்தன மரத்தைப் பிடித்த செந்நிறப் பூச்சிகள் அழிந்துபோம். இவ்வளவு தானென்று அலட்சியம் செய்யாமல் பொறுமையுடன் செய்யவேண்டும்.

PADDY.

நெல்.

"தென்னிந்தியா விவஸாயம்" கார்த்திகை மாஸத்து ஸஞ்சிகையில் இந்த விஷயமாக ஒரு சிறு வியாஸம் காணப்படுகிறது.

நம்முடைய தேசத்தில் அரிசி மனிதர்களுக்கு உணவாகவும், வைக்கோல் மாடுகளுக்குத் தீவனமாகவும், உமி தவிடு கோழிகளுக்குத் தீனியாகவும், உபயோகப்படுகிறது. ஆனாலும் சாஸ்திர யுக்தமான உபயோகத்தை நம்மவர்கள் அறிந்துகொள்ளவில்லை. அமெரிக்காவிலோ நெல்லை ஸாகுபடிசெய்து சாஸ்திர யுக்தமாய் அதனுடைய உபயோகத்தை அறிந்து வருகிறார்கள்.

வைக்கோலில் மாமிசஸத்து உண்டாக்கும் 'சிகண' வஸ்து நூற்றுக்கு 4·72 பாகமும், 'மாவு நார்' 32·21 பாகமும், தைலம் 1·87 பாகமும் இருக்கிறது. பழமையாகும்போது இனிப்பு அதிகமாகி கால்நடைகளும், குதிரைகளும் இஷ்டமாய்த் தின்கின்றன. நமது நாட்டில் குதிரைகளுக்கு வைக்கோலைக் கொடுத்தால் குதிரை கெட்டுப்போகுமென்று கொடுப்பதில்லை. 162 ராத்தல் நெல்லை அரிசி செய்தால் 100 ராத்தல் அரிசி, 7 ராத்தல் குருணை, 20 ராத்தல் தவிடு,35 ராத்தல் உமி கிடைக்கின்றன. உமி மாட்டுக்குத் தீவனமல்ல. இதில் உலோகப்பொருள் அதிகமாயிருந்தாலும் இதை மாடு அதிகமாய்த் தின்றால் வயிற்றுவலி, பல்தேய்வு, முதலியன உண்டாகும். இதை நொறுக்கி உமித்தவிடு என்று விற்பதுண்டு. அரிசித்தவிடு முக்கியமானதும், ஸத்துள்ளதுமான ஆகாரம். நல்ல தவிட்டில் 100-க்கு 12½ பாகம் 'சிகண'மும், 10 பாகம் தைலமும், 10 பாகம் நாரும், 9 பாகம் சாம்பலும் இருக்கின்றன. புதுத் தவிடு இனிப்பாய் இருப்பதால் மாடுகள் நன்றாய்த் தின்னும். கார் அரிசித்தவிடு மிகவும் இனிப்பாயிருக்கும். தவிடு காரலெடுக்காதிருப்பதற்கு அரிசி குத்தியானவுடன் தவிட்டை நன்றாய் வறுத்து வைத்துக்கொள்ளலாம். அரிசித் தவிட்டை விட வேர்க்கடலைப் பிண்ணாக்கில் சிகணவஸ்து அதிகமானதால் அதைத் தவிட்டுடன் சேர்த்து மாடுகளுக்குக் கொடுக்கலாம். அமெரிக்காவில் குதிரைகளுக்கும், கோவேறு கழுதைகளுக்கும், தவிடு தீனியாக உதவுகிறது.

THE ADVANTAGES OF VILLAGE BANKS.

கிராம பாங்கிகளின் நன்மை.

ஐக்கியநாணயச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு கிராம பாங்கி என்ன நன்மை செய்திருக்கிறதென்பதை விசாரித்து ஸமீபத்தில் "சுதேசமித்திரன்" பத்திரிகையில் அ. சேதுராமய்யர் ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். தஞ்சாவூர் ஜில்லா "கீடாமங்கலம் விவஸாய பாங்கி" ஏற்படுத்தப்பட்டு ஐந்து வருஷமாகிறது. இந்தப்பாங்கி ஏற்படுத்துவதற்கு முன்னால் நடை முதல் வட்டி மாஸம் 1-க்கு ரூபாய் 100-க்கு ரூபாய் 1 முதல் ரூபாய் 2 வரையிலிருந்தது. இந்தப்பாங்கி ஏற்பட்ட பிறகு, இந்தப் பாங்கி மாஸம் 1-க்கு ரூபாய் 100-க்கு அணா 12-6 வீதம் வட்டி வாங்குகிறது. கவர்ன்மெண்டார் செய்திருக்கிற "ஸ்டாம்பு வரி தள்ளுபடி," "ரிஜிஸ்தர் செலவு தள்ளுபடி," "வில்லங்க ஸர்டிபிகேட் தள்ளுபடி", "கவர்ன்மெண்டு செலவில் கணக்கு சோதனை" முதலிய ஸௌகரியங்களைத் தவிர, இந்தப்பாங்கே தன் மெம்பர்களுக்கு கடன் வாங்கிக்கொடுக்கும் விஷயத்தில் ரொம்ப ஸௌகரியங்கள் செய்திருக்கின்றது. மொத்தக் கடனைச் சில்லரை சில்லரையாகத் திருப்பிக்கொடுக்கலாம். அப்படித் திருப்பிக்கொடுக்கையில் எதிர் வட்டி கழித்துக்கொடுக்கப்படுகிறது. வட்டிக் கணக்குப் பண்ணுவது நாள் கணக்கேயொழிய சில இடங்களில் பண்ணுகிறதுபோல் மாதக்கணக்கல்ல. இந்த வருஷம் புதிதாய் ஒரு வஸதி பண்ணப்பட்டிருக்கிறது. அதாவது, ஒழுங்காய் கடனையும், வட்டியையும் திருப்பிக்கொடுக்கிறவர்களுக்கு வருஷத்தில் கூடுதலாகும் மொத்த வட்டியில் பத்தில் ஒரு பாகத்தைப்பிரித்து, பங்கு வீதப்படி கடைசியில் மெம்பர்களுக்குக் கொடுப்பதென்பதே. இதனால் மெம்பர்களுக்குக் கட்டும் செட்டும், ஒழுங்கும் படிவதன்றி மாஸம் 1-க்கு ரூபாய் 100-க்கு அணா 10-வட்டியும் ஏற்படலாம்.

இவ்வளவு ஸௌகரியங்களோடு வருஷா வருஷம் ஸுமார் 10,000 ரூபாய் நல்ல பிரயோசனமான செலவுகளுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. கடன் எல்லாம் கூட்டு ஜவாப்தாரியின் பேரிலும், 50 ரூபாய்க்கு உள்பட்ட சொற்பத்தொகையாகவுந்தான் அநேகமாய் கொடுக்கப்படுகிறது. இப்படி இந்த பாங்கி செய்வதால், கிராமத்தார்கள் வருஷம் 1-க்கு ரூபாய் 1,000 லாபம் அடைகிறார்கள். முன் வட்டிஜாஸ்தியினால் 1,000 ரூபாய் கொடுத்துக் கொண்டு வந்த இடத்தில் இப்போது ரூபாய் 500 தான் கொடுக்கும்படி ஏற்படுகிறது. இந்த லாபம் அன்னியில், ஜாஸ்தி வட்டிக்குக் கடன் கொடுத்துக் கொண்டு வந்தவர்களையும், குறைந்த வட்டிக்குக் கொடுக்கும்படிச் செய்துவிட்டது. இதனால் வருஷம் 1-க்கு கிராமத்தார்களுக்கு இன்னுமொரு 500 ரூபாய் லாபம்.

இதன்னியில் இந்தப் பாங்கி கூட்டுறவைப் பலப்படுத்துவதால், ஐக்கிய பத்தியம், ஒற்றுமை, பரஸ்பர நம்பிக்கை, ஒழுங்கற்றவர்களைக் களைதல் முதலிய குணங்களை விருத்திபண்ணி நன்மை செய்கிறது. உதாரணமாக, இந்தப்பக்கங்களில் நெல்வயல் அறுப்பானவுடன் பசுமை எருவுக்கு அவுரி முதலிய பசுந்தாள் உரப்பயிர் கிராமம் அடைத்தாப்போல் சாகுபடி செய்வது வழக்கமில்லை. சென்ற வருஷத்தில் இந்தப் பாங்கி மெம்பர்கள் ஸுமார் ரூபாய் 150-க்கு அவுரி விதை வாங்கிச் சுமார் 300 ஏகராவில் பசுந்தாள் உரத்துக்காகச் சாகுபடி செய்தார்கள். இந்த உரத்தினால், ஒரு ஏகராவுக்கு ஒரு ரூபாய் அதிக வரும்படி வந்தாலும், கிராமம் மொத்தத்துக்கு 300 ரூபாய் லாபம்.

◆

THE NAIK KINGDOM IN MADURA.

மதுரை நாய்க்கர் ஸமஸ்தானம்.

புரட்டாசி மாஸத்து "செந்தமிழ்"ப் பத்திரிகையில் இந்த விஷயமாக ஒரு வியாஸம் காணப்படுகிறது.

மதுரையில் நாயுடுகாரு ஸமஸ்தானத்தை ஸ்தாபித்தவர்களில் முதன்மையானவர் ஸ்ரீவிசுவநாத நாயுடுகாரு என்று ஸ்தலபுராணங்களாலும், கவர்ன்மெண்டு ரிகார்டுகளாலும் தெரிகிறது. இவர் மதுரையில் நாயக்க ஸமஸ்தானத்தை ஸ்தாபித்த காலம் கி. பி. 1559-ம் வருஷம். இவருடைய தகப்பனார் விஜய நகர ஸமஸ்தான உக்கிராண கர்த்தராயிருந்த நாகப்ப நாயுடு. இவர் பிறகு அந்த ஸமஸ்தான தளகர்த்தராயுமிருந்தார். இவருக்கு அநேக குதிரைப்பட்டாளங்களும், காலாட்படைகளும் சொந்தத்தில் இருந்தன. ஆர்க்காடு முதல் திருவனந்தபுரம் வரையிலிருந்த சிற்றரசர்களிடம் கப்பம் வாங்கிக்கொள்ளவும் இவர் அதிகாரம் பெற்றிருந்தார். இவருடைய புத்திரரான விசுவநாத நாயுடு காசிக்குப்போய் தவமிருந்து பெற்ற பிள்ளையானதால் இவருக்கு விசுவநாதர் என்னும் பெயர் வைக்கப்பட்டது. இவர் மதுரைக்கு அதிபதியானபோது இவருக்கு நாற்பது வயதுக்குள்தானிருக்கும். விசுவநாதர் சிறுவயதிலேயே கல்வி கேள்விகளில் சிறந்தவரானதோடு தகப்பனாரைப்போல் யுத்தப்பயிற்சியிலும் தேர்ச்சிபெற்று விஜய நகரத்தை நாடிவந்த மகமதியரைத் தாக்கித் தம்முடைய வலிமையைக் காட்டினார். 1535-ம் வருஷத்தில் அந்த ஸமஸ்தானத்தில் சேனைத்தலைவராக நியமிக்கப்பட்டார். மதுரை, பாண்டிய வமிசத்தில் உதித்த சந்திரசேகர பாண்டியனால் ஆண்டுவரப்பட்டபோது தஞ்சையிலிருந்த வீரசேகர சோழன் படையெடுத்துச் சென்றான். பாண்டியன் விஜயநகர ஸமஸ்தான அதிபதியாகிய தேவராயலு என்பவரை உதவி கேட்டான். அவர் அப்படியே ஒரு பெரிய சேனையை நாகமநாயுடுவின் தலைமையின் கீழ் அனுப்பி சோழனைத் தோற்கடித்து பாண்டியனிடம் மதுரையை ஒப்புவித்து வரும்படிக் கட்டளையிட்டு அனுப்பினார். நாகமநாயுடு மதுரையைப் பிடித்து சோழனைத் தோற்கடித்து விட்டார். ஆனாலும் விஜயநகர ஸமஸ்தானபதி சொன்னது போல் பாண்டியனிடம் மதுரையை ஒப்புவிக்காமல் தாமே ஆளத்தொடங்கினார். இது செய்தியைக் கேட்ட விஜயநகர ஸமஸ்தானபதி மிகவும் துக்கப்பட்டு என்னுடைய கட்டளையை மீறி ராஜத்துரோகமும், அக்கிரமும் செய்த நாகம நாயுடுவைப் பிடித்துவரக்கூடிய தைரியம் ஒருவருக்கும் இல்லையா என்று ஸபையோரைக் கேட்டார். அப்போது எல்லாரும் பேசாதிருக்க ராஜ விசுவாசத்திலும், தெய்வ பக்தியிலும், நீதியிலும் சிறந்த விசுவநாத நாய்க்கர் எழுந்து "பிரபு! ராஜத்துரோகியும் எனது தகப்பனுமாகிய நாகம நாயுடுவை, அவருடைய குமாரனாகிய நான் போய் பிடித்து வருகிறேன். உத்தரவு கொடுக்க வேண்டும்" என்று சொன்னாராம். ஸமஸ்தானபதி முதலில் சந்தேகப்பட்டாலும் பிறகு சந்தேகம் நீங்கி விசுவநாத நாயுடுவை அனுப்பினார். இவர் போய் தமது பிதாவுடன் பிரமாதமாய் யுத்தம் செய்து, அவரைத்தோற்கடித்து ஜெயிலில் அடைத்து விட்டார். பிறகு இந்த ஸமாசாரத்தை விஜயநகர ஸமஸ்தானபதி கேள்விப்பட்டு சந்தோஷங் கொண்டவராய் இவர் நிமித்தம் இவருடைய தகப்பனை ஜெயிலிலிருந்து விடுவித்ததோடு, இவரை மதுரையிலேயே இருந்து பாண்டியனுக்கு உதவியாக ராஜ்ய நிருவாகத்தில் உதவிசெய்ய ஆக்கியாபித்தார். அவ்வரசனுக்கு பிறகு அவருடைய குமாரராகிய வீரபாண்டியன் இளவயதில் இறந்துவிட ஜனங்கள் விசுவநாத நாய்க்கரையே மதுரைக்குப் பட்டங்கட்டி வைத்தார்கள்.

THYAGAIYAR.

த்யாகையர்.

"வித்தியா விஹாரிணி"யின் புரட்டாசி மாஸத்து ஸஞ்சிகையில் கே. என். கிருஷ்ணசாமி அய்யர் த்யாகையரைப்பற்றி ஒரு வியாஸம் எழுதி இருக்கிறார். கர்நாடக ஸங்கீதத்தைப் பலரும் கொண்டாடும்படி அதை அதியுன்னத பதவிக்குக்கொண்டுவந்த, ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருவாரூரில் பிறந்தவர். இவருக்கு ஒரு ஜேஷ்டரும், ஒரு ஸகோதரியும் உண்டு. ராமப்ரம்மம் என்னும் இவர் பிதாவிற்கு, ஐவேஜி ரொம்பவும் சொற்பம். அவர், தினம் ராமாயணத்தைத் தன்னிடம் வரும் பக்தர்களுக்கு ப்ரஸங்கம் செய்வதிலேயே காலங்கழித்து வந்தார்.

கடைசியில் ஸம்ஸாரம் வலுத்து, ஆஸ்தியும் நாஸ்தி யானபடியால், திருவாரூரைவிட்டு, திருவையாற்றையடைந்து, அங்குள்ள ஒரு குஜராத்திப் பிராம்மண தனவானுடைய உதவியைப்பெற்று வந்தார். த்யாகையருககு கிரமப்படி உபநயனம் நடந்தது. பிறகு அத்தியயனம்பண்ண ஆரம்பித்து ஸமஸ்க்ருதத்திலும் உபாயத்தேர்ச்சி அடைந்தார். இப்படிப்படித்து வாலிப பருவத்தை அடைந்து

வருகையில், ராமப்ரும்மம் தேகவியோகமானார். த்யாகையரின் சகோதரரான பட்டாபிராமய்யர் குடும்பத்தை நடத்திவந்தார்.

த்யாகையர் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஜண்டி வெங்கடராமய்யர் என்னும் ஒரு பாடகர் தன் பையனை சிக்ஷையில் வைத்துப் பாட்டுச்சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தார். நம் த்யாகையரும் இவைகளைக் கேட்டுவந்தபடியினாலேயே இவருக்கு ஸங்கீதம் கற்றுக் கொள்ளவேண்டும் என்கிற ஒரு ஆசை ஏற்பட்டது. 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' என்கிறபடி, மேற்படி வெங்கடராமய்யருக்கு, த்யாகையர் ஸங்கீத சாஸ்திரத்தில் பூர்ண பாண்டித்திய மடைவர் என்று மனதில் பட்டது. உடனே த்யாகையரையும் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, இருவருக்கும் பாடம் சொல்லிக்கொண்டுவந்தார். இவ்விருவர்களுள், நம் த்யாகையரே சீக்கிரத்தில் தேர்ச்சிபெற்று, நாலுமாஸத்திற்குள் விசேஷப் பயிற்சியையும் அடைந்தார். த்யாகையருககு இருபத்தைந்தாவது வயதில் விவாகம் நடந்தது. பிறகு சீக்கிரத்தில் தனக்கும் தன் தமையனுக்கும் குடும்பத்தில் பாகம் நடந்தது. இவர் வீதத்தில் தங்களுடைய வம்ச பாரம்பரியமாய்ப் பூஜிக்கப்பட்டு வந்த ராமவிக்ரஹமும் கிடைத்தது. தினம் அந்த விக்ரஹத்திற்குப் பூஜைசெய்வதும், ஆராதனம் செய்வதும், ஸதாஸர்வகாலமும் ராமஸ்மரணை பண்ணிக்கொண்டிருப்பதும், இப்படியாகவே காலம் கழித்துவந்தார்.

இவைகளை எல்லாம் இவர் தமையன் பட்டாபிராமய்யர் கண்டு, த்யாகையருக்கு ஏதோ பைத்தியம் பிடித்துவிட்டதாக எண்ணி, ஒரு நாள், அந்த ராம விக்ரஹத்தை யெடுத்து, காவேரிப் பிரவாகத்தில் எறிந்து விட்டார். விக்ரஹம் காணாமற்போகவே ஸ்ரீராமனைக்குறித்து அபாரமாக ஸ்தோத்திரம் பண்ணவே, ஒரு நாள் ராத்திரி, காவேரிக் கரையில் இன்ன இடத்தில் தேடினால் அகப்படும் என்று, ஸ்ரீராமன் பிரத்தியக்ஷமாய்ச் சொன்னதாக ஒரு கனவுகண்டார். மறுநாள் காலமே, குறிப்பிட்ட இடத்தில் போய்ப்பார்க்கையில், விக்ரஹம் அகப்படவே, மிகுந்த சந்தோஷத்துடன் வீடுவந்து சேர்ந்தார். ஒருநாள் ஒரு ஸன்யாஸி த்யாகையர் வீட்டுக்கு வந்து, ஸங்கீத ஸாஹித்தியங்களைக் கேட்டு ஆனந்திக்க வந்ததாகத் தெரிவித்தார். த்யாகையரும், ஸன்யாஸிகளுக்கு உபசாரங்களைச் செய்து, சில கீர்த்தனங்களைப் பாடவும், அந்த ஸன்யாஸி மிகுந்த சந்தோஷமடைந்து, த்யாகையருக்கு, ராமதாரகமந்திரத்தை உபதேசம் பண்ணி, ஸ்வரார்ணவம் என்னும் ஒரு நூலையும் கொடுத்து, அந்தர்த்தானமாய் விட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படி வந்தவரை, நாரத பகவான் என்றும் பிற்காலத்தவர் சொல்லுகிறார்கள்.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு த்யாகையர் ஸ்தலயாத்திரை செய்ய விருப்பம் கொண்டு, திருப்பதி, திருவள்ளூர், திருவல்லிக்கேணி, திருவொற்றியூர், முதலிய ஸ்தலங்களுக்குப்போய் ஸ்வாமி தரிசனம் பண்ணிக்கொண்டு, திரும்பி பஞ்சநத க்ஷேத்திரத்தை அடைந்தார்.

நம் த்யாகையருக்கு அந்திய காலம் கிட்டியது. இறப்பதற்கு மூன்று தினத்திற்கு முன்னால் ஸன்யாஸம் வாங்கிக்கொண்டார். பராபவ வருஷம் புஷ்ய சுத்த பௌர்ணிமை அன்று, (1847 வருஷம் ஜனவரி மாஸம்) தன்னுடைய சிஷ்யர்கள் நீர் ததும்பிய கண்களுடன் ராமபஜனம் செய்துகொண்டிருக்க, பகல் பதினைந்து நாழிகைக்கு 'ஜானகீ ஜீவனஸ்மரணே' என்று ஒருதரம் உச்சரித்து, ஸ்வாமிகள் ஸித்தியடைந்தார்.

த்யாகையர் ஒரு பெரிய ஸாது. ப்ராம்மணனுக்கு ஏற்பட்ட நித்திய கர்மானுஷ்டானங்களை செய்ய சற்று தவறினால் அதை மஹாபாபமென்று கருதுவார். ஐசுவரியத்தினிடத்தில் அளவிடாத வெறுப்புக்கொண்டவர்.

த்யாகையருடைய கீர்த்தனங்களெல்லாம், நாமஸங்கீர்த்தன ஸம்பந்தமானவைகளே. வசன நடையில் நௌகா சரித்திரம் என்னும் ஒரு புஸ்தகம் எழுதி இருக்கிறார். இவருக்கு ஸந்ததி இல்லை. ஆயினும் இவருடைய கீர்த்தனங்கள், இவ்வுலகில், ஜனங்களென்றும், நாகரிகமென்றும், சங்கீதமென்றும் வழங்கிவரும் வரையில், அளவற்ற மஹிமையை அடைந்து, அழியாப் புகழ்பெற்று நிற்கும்.

THE BOYS' SECTION.

சிறுவர் பகுதி.

The Speed of Certain Birds.

சில பறவைகளின் வேகம்.—கருடன், பருந்து, ராஜாளி ஆகிய மூன்று பக்ஷிகளும் மணி ஒன்றுக்கு முறையே 100, 90, 80 மைல் வீதம் ஆகாயத்தில் பறக்குமாம்; புறா 60 மைலும், அண்டங்காக்கை 24 மைலும், ஆயாஸமில்லாமல் போகுமாம்.

Swimming in America.

அமெரிக்காவில் நீந்துதல்.—அமெரிக்காவில் பாடசாலைகளில் படிக்கும் ஒவ்வொரு பிள்ளையும் நீந்தக்கற்றுக்கொள்ளவேண்டுமாம். ஒரு மாதுதான் இவ்வித பிரயத்தனத்தை முடிவுக்குக்கொண்டு வந்தாளாம். நமது தேசத்திலும் ஜலமுள்ள இடங்களில் பிள்ளைகளை நீந்தப் பழக்கிவைத்தால் அநேக காரியங்களுக்கு அநுகூலமாயிருக்கும்.

The Bee in War.

சண்டையில் தேனீ.—ஆப்ரிக்கா கண்டத்தில் நைஜீரியா தேசத்தில் சண்டையுண்டானால் எதிரிகள் தேனீக்களின் ஸகாயத்தைத் தேடுகிறார்கள். அது எப்படியெனில், அந்த தேசத்தில் சதுரக்கள்ளிகாடுகள் ஏதேஷ்டமாயிருக்கின்றன. அந்தக் காடுகளில் தேனீக் கூட்டங்கள் பல உண்டு. ஒரு கக்ஷியார் எதிரிகள் கையில் அபஜெயப்பட்டு ஓடிப்போகும்போது, அந்தத் தேனீக் கூட்டங்களைக் கலைத்துவிட்டு, அப்புறம் போய்விடுவார்கள். ஈக்கள் கூடுகளை விட்டு வெளியே கிளம்பி, மகா கோபத்துடன் அங்குமிங்கும் பறந்து அருகில்போகும் ஜனங்களைக் கொட்டும். தோல்வியடைந்தவர்களைத் துரத்திக்கொண்டு ஓடிவரும் கக்ஷிக்காரர் அந்தத் தேனீக்களால் மகா சங்கடப்படுவார்கள். தங்களைத்தானே காப்பாற்றிக் கொள்ளும்படியாய்ச் சத்துருக்களைத் தொடர்ந்துபோவதை ஒழித்துப்போட்டு எங்கேயாகிலும் போய் ஒளிந்துகொள்ளுவார்கள். சென்ற டிஸம்பர் மாஸம் சில துஷ்டர்களைத் தண்டிக்க ஒரு சின்ன பிரிட்டிஷ் பட்டாளம் அனுப்பப்பட்டது. அதில் சத்துருக்கள் கையில் மாண்டவர்கள் கொஞ்சம் பேர்கள்தான். தேனீக்களால் கொட்டப்பட்டுச் சொல்லமுடியாத உபத்திரவப்பட்டவர்கள் பலர்.

Coughing Plants.

இருமுகிற செடி.—சுண்டெலிகளைச் சில செடிகள் புசிக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்த விதச் செடிகளுக்கு மாமிசபக்ஷணம் செய்யும் செடி என்று பெயர். ஆனால் இருமும் செடி இருப்பதைப் பற்றி நாம் இதுவரையிலும் கேட்டதே இல்லை. உஷ்ணந்த ரேகைக்குள் இருக்கும் தேசங்களில் இவ்விதசெடி இருக்கிறதாம். இதன் காய் அவரைக் காயைப்போல் இருக்கிறதாம். இதன் விதைகள் இலைகளின்மேல் விழுந்தவுடன் சுவாசம் விடும் பாகத்தில் காற்று நிறைந்து, ஒரு குழந்தை ஜலதோஷத்தால் இருமுகிறதுபோல் புழுதிகளை மேல் எழுப்பி நாசத்தத்துடன் தள்ளிக்கொண்டிருக்குமாம். இது அழகுக்காக அந்த பிரதேசங்களில் வளர்க்கப்படுகிறதாம்.

The World's Way.

உலக வழி.—மீனை மூக்கில் கொத்திக்கொண்டு ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்த ஒரு பருந்தை, மற்றைப் பருந்துகளும், காக்கைகளும் கூட்டமாய்ச் சேர்ந்து கா, கூ என்று கத்திக்கொண்டு பின் தொடர்ந்து பறந்து, அதனிடத்திலிருந்த மீனை எப்படியாவது பிடுங்கிக்கொண்டுபோகப் பார்த்தன. அந்தப் பருந்து எந்தப்பக்கம்போனாலும், அங்கே மற்றப் பருந்துகளும், காக்கைகளும் கூச்சலிட்டுக் கொண்டு கூடவே பறந்து சென்றன. கடைசியில் அது இந்தத் தொந்தரவைப் பொறுக்கமுடியாமல் மீனைக் கீழே போட்டுவிடவே, மற்றொரு பருந்து அதை அந்தக்ஷணமே கொத்திக்கொண்டது. உடனே அந்தப் புதிய பருந்தை, மற்றைப் பருந்துகளும், காக்கைக்கூட்டமும் தொடர்ந்து சென்றன. முதற்பருந்து தொந்தரவு நீங்கி ஒரு மரக்கிளையின் மேல் கவலையற்று நிச்சல சித்தத்துடன் போய் உட்கார்ந்தது. இப்படி எண்ணமுற்று உட்கார்ந்திருக்கும் பக்ஷியின் சாந்தமான நிலையை அவதூதர் பார்த்து வணங்கி, "பருந்தாரே, நீ தான் எனக்குக் குரு, ஏனென்றால், மனிதன் தன் தலைமேலிருக்கும் உலக ஆசைகளின் சுமையைக் கீழே தள்ளாதவரையில் கவலையற்று நிச்சலசித்தமாய் இருக்கமுடியாதென்பதை எனக்கு நீ இன்று போதித்தாய்" என்றார்.

THE TEMPERANCE CONFERENCE.

மதுவிலக்கு ஸபை.—சென்னை ராஜதானி மதுவிலக்கு ஸபையார் நாளது நவம்பர் மாஸம் 23, 24, 25 ஆகிய இந்த மூன்று தேதிகளில் சென்னப்பட்டணத்தில் கூடி, தற்காலத்தில் குடி அதிகரித்து வருகிறதென்றும், அதைத்தடுக்கவேண்டுமென்றும், பல தீர்மானங்கள் செய்தார்கள். சிறு பிள்ளைகளுக்குச் சிறுவயதிலேயே குடியினால் உண்டாகும் கெடுதிகளை எடுத்துக்காட்டி, ஸ்கூல்களில் போதிக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். சிறுவர்கள் குடிப்பதில்லை என்பது நிச்சயம். ஆனாலும் அவர்கள் பெரியவர்களான பிறகு அநேகருக்கு அந்த துர்வழக்கம் ஸகவாஸ தோஷத்தால் ஏற்பட்டு விடுகிறது. புத்தி சாலியானவர்கள் குடியின் கெடுதியை அறிந்து அதன் வழி போகமாட்டார்கள். "உதயதாரகையி" லிருந்து எடுத்த அடியில் கண்ட பாட்டை சிறு வயதிலேயே உருப்போட்டு என்னாளும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு குடிக்கவேணும் என்ற ஆசை எப்போதாவது தோன்றினால் மேற்படி பாட்டை சிந்தித்தால் அனேகமாய் ஒருவரும் கெட்டுப்போகமாட்டார்கள்.

என்னைக்குடித்தவர்கள் என்னைப் புகழ்ந்து கொண்டாடிப்
பித்தம்பிடித்தவர்போல் பேசாதும் பேசிடுவார்
மானிடர்க்குள் நான்புகுந்து மாறாட்டம் செய்து வைப்பேன்
சண்டைகளுமென்னாலே சவுரியமுமென்னாலே
ஆண்மைகளுமென்னாலே அடிதடிகளென்னாலே
குத்துவெட்டுமென்னாலே குடிகெடுவதுமென்னாலே
கீழ்விழுந்துமேல்புரண்டு கிடப்பதுவுமென்னாலே
கச்சேரி கோர்ட்டுகளைக் கண்டறிவதுமென்னாலே
பெண்பிள்ளை தாலிவிற்றுப் பேர்கெடுவதுமென்னாலே
அழியாத செல்வங்களை அழிப்பதுவுமென்னாலே
குறையாத செல்வங்களைக் குறைப்பதுவுமென்னாலே
காணிவிற்பதுமென்னாலே கடன்படுவதுமென்னாலே
பூமிவிற்பதுமென்னாலே புண்படுவதுமென்னாலே
சபையிலுள்ளபேர்களெல்லாம் தலைகுனிவதுமென்னாலே
கொற்றவரும் மாதர்களும் குணங்கெடுவதுமென்னாலே
மன்னர்களும் மாதர்களும் மனமழிவதுமென்னாலே
சீச்சியென்பதுமென்னாலே சீரழிவதுமென்னாலே
போபோவென்பதுமென்னாலே பொல்லாங்காவதுமென்னாலே
என்னுடைய கெடுதிகளை எல்லாம் சொல்லப்புகுந்தால்
எண்ணித்தொலையாது ஏட்டிலுமேயடங்காது
சொன்னசொல்லைக்கேட்டு நீரும் சுகம்பெறவே வழிதேடும்
இல்லையென்றால் ஏமாந்து இழுக்கடைவீர் இது நிஜமே.

THE USES OF THE COCOANUT.

தென்னையின் உபயோகம்.—தென்னையின் ஒவ்வொருபாகமும் மிகுந்த உபயோகமானதாக இருக்கிறது. தென்னையின் வேர் அடுப்பெரியக்கூடிய மிகுந்த உஷ்ணம் கொடுக்கும் விறகாயும், பல மருந்துக்கு உபயோகமாயும் இருக்கிறது. இதன் தண்டு வீடுகளுக்குத் தூண்களாகவும், பாலங்களாகவும், பெரிய கற்களை உருட்டும் உருளைகளாகவும், இதனுள் வயிரம் இல்லாத பாகமிருப்பதால், இது வாய்க்கால்களுக்குத் தூம்புகளாகவும் உபயோகப்படுத்தப்படுகிறது. மட்டைகள் வீடுகளுக்கு மூடும் கீற்றுக்களாகவும், கூடைகளாகவும், குடலைகளாகவும் முடையப்படுகின்றன. ஓலைகளிலிருக்கும் ஈர்க்குகள் துடைப்பமாகின்றன. மட்டையின் நடுப்பாகம் சுண்ணாம்பு முதலியன அடிக்கும் பட்டைகளாகின்றன. பன்னாடை நல்ல நாராகவும், கட்டுவதற்குத் தகுந்த துணியாகவும் ஆகின்றது. குரும்பை தங்கி இருக்கும் குச்சிகள் பற்குச்சிகளாகின்றன. குருத்தோலைகள் சுபகாலங்களில் அலங்கரிக்கும் தோரணங்கள், கிளிகள் முதலியன செய்ய உபயோகப்படுகின்றன. தேங்காயின் உபயோகங்கள் யாவருக்கும் தெரிந்தவை. அதன் சவுரி (உரிமட்டையிலுள்ள கதம்பைநார்) கயிறு, தோப்பா (மிருகங்கள் தேய்க்கும் கை உறை) முதலிய அதிக உபயோக வஸ்துக்கள் செய்யவும், கொட்டாங்கச்சி, அகப்பை, குடுக்கை, மோதிரம், சித்திர வேலைகள் முதலியன செய்யவும், உஷ்ணமான நெருப்பு, தைலம் முதலியவைகள் உண்டாக்கவும் உபயோகப்படும். இம்மாதிரி இந்த மரம் பலவிதமாக மனிதர்களுக்கு உதவியாகிறது.

THE LADIES' SECTION.

ஸ்திரீகள் பகுதி.

READ TILL DEATH.

பாடையேறினும் ஏடு கைவிடேல்.—வாஷிங்டன் பட்டணத்து ஸர்க்கார்க் கலாசாலையில் ஒரு ஸ்திரீ தன் 79-ம் பிராயத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் ஒப்பேறியிருக்கிறாள். இன்னும் பி. ஏ. பரீக்ஷையில் தேறுகிறமட்டும் படிப்பேன் என்று படித்து வருகிறாளாம்.

A JEALOUS HUSBAND.

ஒரு ஸந்தேக புருஷன்.—'நிஜமாக உன் ஆசையெல்லாம் என்னிடத்திலேயே இருக்கிறதா? இன்னும் வேறு ஒருவர் மேலேயும் இல்லையா?' என்று அநுமான அசாத்தியாமன் தனது அடங்கா அகமுடையாளை கேட்டான். 'அப்பா எத்தனை பெயரையோ நான் பார்த்திருக்கிறேன். ஆனால் உங்களைப்போல் ஸந்தேகம் பிடித்த மனுஷனைக் கண்டதேயில்லை' யென்று அவள் பதில் சொன்னாள்.

A WIDOW REMARRIAGE.

ஒரு ஆசாரத்திருத்தக் கலியாணம்.—மங்களூர் வாஸியும், சென்னைச் சட்டஸபைக்குப் புதிதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் மெம்பருமாகிய ஆனரெபில் ராவ்சாகிப் என். சுப்பராவின் இளங்கைம்பெண் குமாரத்தியாகிய பார்வதிபாய்க்கும், மிஸ்டர் பி. லட்சுமணராவுக்கும் ஸமீபத்தில் மிஸ்டர் சுப்பராவின் வீட்டில் கலியாணம் நடந்ததாகவும், அதற்கு அனேக இந்திய ஸ்திரீகளும், புருஷர்களும் போய் இருந்தார்கள் என்றும் தெரியவருகிறது. பார்வதிபாய்க்கு 20 வயதென்றும், அம்மாது இப்போது ஸீனியர் எப். ஏ. வகுப்பில் மங்களூர் காலேஜில் வாசித்துக்கொண்டிருக்கிறாள் என்றும், அவளைக்கலியாணம் செய்துகொண்ட மிஸ்டர் பி. லட்சுமணராவுக்கு 27 வயது என்றும், அவர் ரங்கூனிலே வரவுசெலவுக் கமிஷனர் ஆபீஸில் உத்தியோகமா யிருக்கிறாரென்றும் அறிகிறோம். கலியாண காலத்தில் சென்னை, பம்பாய், கள்ளிக்கோட்டை, ரங்கூன், இவ்விடங்களிலிருந்து வாழ்த்துத் தந்திகள் வந்தன என்றும் சொல்லப்படுகிறது.

ASSAFETIDA.

பெருங்காயம்.—குடல்வாயுவைக் கண்டிக்கும். வயிற்று உப்பிசம் தீரும். அதைக் கொஞ்சம் தண்ணீர் விட்டு அரைத்து வெளியே பிரயோகம் பண்ணினால் நரம்புச் சிலந்தி சொஸ்தமாகும். சிறு மாத்திரைகளாகச் செய்து நீரிழிவு உபத்திரவத்தால் வருந்துகிறவர்களுக்குக் கொடுத்தால் மரணதாகம் போன்ற தீராததாகம் தீரும். ஸ்திரீகளுக்கு மாஸத்திற்கு ஒரு முறை சம்பவிக்கிற ருதகத்தில் ஏதாவது கெடுதி ஏற்படுபவதால்தான் கருப்ப வலி என்றும், கருப்ப வாய்வு என்றும் சொல்லப்படும் வியாதிகள் தோன்றும். இதைத்தான் தெரியாத பேதைகள், பேய் பிசாசு பிடித்திருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இது சுத்தப் பிசகு. ரசத்திலாவது, குழம்பிலாவது அதிகமாகப் பெருங்காயத்தைப் போட்டு கருப்பவலியுள்ள பெண்களுக்குக் கொடுத்தால், அவ்வியாதி நிவாரணவாகும்

THE SEVA SADAN.

ஸேவாஸாதன்.—இந்தப் பெயருள்ள ஸபை ஒன்று பம்பாய் பட்டணத்தில், சென்ற 1908௵ ஆகஸ்டு மாஸத்தில் ஏற்பட்டது. அந்த ஸபையை ஸ்தாபித்தவர்கள் கல்விபயிற்சியும், அறிவுமுள்ள பெண்பாலர்களாம். அவர்களில் ஹிந்து, பார்ஸி, மகம்மதிய ஸ்திரீகள் இருக்கின்றார்கள். ஜனசமூகத்தில் நன்மையை உண்டாக்கும் கைங்கரியங்களைச்செய்ய அநுகூலமாக இந்த ஸபையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஸபையை நடத்துகிறவர்கள் முக்கியமாக பெண்பாலர்களே! புருஷர்களும் உதவிசெய்கிறார்கள். இவர்கள் வெண்தாமரை 'புஷ்பத்தைத் தங்கள் கருத்தைக்குறிப்பிடும் அறிகுறியாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஸ்திரீகளின் ஹிருதயம் வெண்தாமரைப்புஷ்பம்போல மாசற்றது. உலகத்தில் நேரிடும் துக்கங்களையும், துயரங்களையும் கண்டவுடனே இரங்கி உதவிசெய்யும் தன்மையுடையது. சொற்பகாலத்திற்குள் இந்த ஸபையானது பொதுஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டு ஆதரிக்கப்படுகிறதென்பது சென்ற 1909௵த்திய ரிப்போர்ட்டினால் தெரியவருகிறது.' சென்ற 1909௵ ஜூன்மீ வரையில் மொத்தவரவாய் ரூ 92,126, செலவு ரூ 25,368, ஸ்திரமான பொது முதல் சுமார் ரூ 66,658.

ADVICE TO JAPANESE WOMAN.

ஜப்பானிய ஸ்திரீகளுக்கு புத்திமதி.—ஜப்பானில் பெண்களுக்கு விவாகமானவுடன் அவர்கள் தாய்மார்கள் தங்கள் புத்திரிகள் சுகமாக கணவருடன் வாழ்ந்துவரவும், எப்பொழுதும் தம்பதிகள் மனச்சந்தோஷத்துடனிருந்து வரவும், தக்க புத்தி புகட்டி வருகிறார்களாம். அவை பின் வருமாறு:—

1. உனக்கு விவாகமாய்விட்டது. இனி நீ என் குமாரத்தியல்ல. உன்னுடைய மாமனார், மாமியார் தான் உன் பெற்றோர்கள் நீ இதுவரையிலும் உன் தாய் தந்தையர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்த மாதிரி அவர்களிடத்திலும் கீழ்ப்படிந்து நட.

2. உன் கணவன்தான் உனக்கு யஜமானன். தாழ்மையாயும் மரியாதையாயுமிரு. கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலே ஒரு மனைவிசெய்யும் சிறந்த தர்மமாகும்.

3. உன் மாமியாரிடத்தில் எப்பொழுதும் சிநேகமாயும், அன்பாயுமிரு.

4. பொறாமையுள்ளவளாயிராதே; ஏனெனில், அந்த துற்குணம் உன் கணவரின் பிரியத்தைக் கெடுத்துவிடும்.

5. உன் கணவர் தப்பிதம் செய்தபோதிலும் பொறுத்துக்கொண்டிரு. கோபம் கொள்ளாதே. அவர் கோபம் தணிந்தவுடன் மெதுவாகவும், பட்சமாகவும் அவருடன் பேசு.

6. அதிகமாகப் பேசாதே. அயலாரைப்பற்றி தூஷித்துப் பேசாதே. ஒருபொழுதும் பொய் சொல்லாதே. உண்மையைப் பேசு.

7. அதிகாலையில் எழுந்திரு; பகலில் தூங்காதே. உனக்கு வயது 50 ஆகும்வரையில் ஜனங்கள் கூடுமிடங்களுக்குப் போகாதே. அவ்வித ஸபைகளில் முக்கிய வேலையொன்றும் செய்யாதே.

8. குறி சொல்லுகிறவனைக் கூப்பிட்டு ஒன்றும் கேட்காதே.

9. கிருக கிருத்யத்தில் நல்ல எஜமானியாயிரு. முக்கியமாய் உன் வீட்டுச் செலவில் சிக்கனமாயிரு.

10. சிறுவர்களிருக்கும்படியான ஸபைகளுக்குப் போகாதே.

11. அழகான வஸ்திரங்களை யணியாதே. ஆனால் உனது உடுப்புகள் ஸாமான்யமானவைகளாகவும், சுத்தமானவைகளாகவும் இருக்கட்டும்.

12. உன் தகப்பனார் செல்வத்தையோ, அந்தஸ்தையோ குறித்து கர்வப்படாதே. உன் தகப்பனார் தனவந்தராயிருந்தால் உன் கணவரது பந்துக்களுடன் அவரைப்பற்றி பேசவே பேசாதே.

THE WORLD'S OLDEST WOMAN.

உலகத்தாருக்குள் மூத்தவள்.—பல்கேரியா நாட்டைச்சேர்ந்த ஒரு கிராமத்திலிருக்கும் கிழவியே தற்போது உலகத்திலுள்ள எவரிலும் மூத்தவள். இந்தக் கிழவி கிறிஸ்தமாது. இவளுடைய ஸபை டாப்பின்படி இவள் 1784-ம் வருஷம் ஜெனனமாயினளென்று தெரிகிறது. ஆகையால் இப்போது இவளுக்கு வயது 126 ஆகிறது. இப்போது இந்தக் கிழவி வழக்கமான வேலைகள் செய்யமாட்டாள். ஆனால் இவள்நடை தள்ளாடவில்லை. சாயங்காலங்களிலே ஊன்று கோலுடன் வெளியான இடங்களிலே உலாவுகிறாள். சில காலத்துக்கு முன் வயல்வேலைகள் செய்துவந்தாள். ஒரு முறை சொற்ப சுகக்குறைவு உண்டாயிற்று. அதன்பின் அவள் அந்த வேலைக்குப் போகிறதில்லை. இந்தக் கிழவி நெடுக நல்ல தேகக்கட்டும், உறுதியுமுள்ளவளாயிருந்தாள். இவ்வளவு வயது சென்றும் இவளுடைய கண், காதுக் கூர்மைகள் மனோசக்தி முதலானவைகள் சிறிதும் மழுங்கவில்லையாம். இவளுக்கு இப்போது 100 வயதுள்ள ஓர் புத்திரக் கிழவன் இருக்கிறானும். இவன் பல்கேரிய ராஜ்யத்திலே ஓர் போர் வீரனாக ஏற்பட்டு அதிக காலம் சேவித்தவன். இவனது வீரதீரத்தையும், மற்றும் சிறப்புகளையும்பற்றி அந்த தாய்க்கிழவி எப்போதும் பெருமை பாராட்டிக்கொண்டிருக்கிறாள். இவன், பலவருஷங்களுக்குமுன் நடந்த பல்கேரிய யுத்தத்திலே மிகுந்த தைரியத்துடன் நின்றபொழுது விசேஷ விருதுகள் பெற்றவன். இப்போது பயிர் வேலைசெய்து கொண்டிருக்கிறான். கிழவிக்கு இப்போது நூற்றுக்கு மேற்பட்ட பேரப்பிள்ளைகளும், கொட்பேரப்பிள்ளைகளும் உண்டு. புருஷன் சில காலத்துக்கு முன்னே இறந்துபோனான். இந்தக் கிழவியைப்பார்ப்பதற்காக நூறுமைலுக்கு அப்பாலிருந்தும் ஜனங்கள் வந்து போகிறார்களாம். 'ஆத்ம தேக சுகத்தைக் காத்துக்கொள்ளத்தக்க சுத்தமான நடையும், தேகாப்பியாஸமுமே தீர்க்காயுளையும், சந்தோஷத்தையும் அளிக்குமென்று' தன்னைப் பார்க்கவரும் யாவருக்கும் கிழவி புத்தி சொல்லி வருகிறாளாம்.

DEPARTMENTAL NOTES.

பகுதிக் குறிப்புகள்.

AGRICULTURAL NOTES.

விவஸாயக் குறிப்புகள்.

POONAC AS MANURE.

பிண்ணாக்கு உரம்.—நமது வயல்களைப் பரிசோதித்த சாஸ்திர நிபுணர்கள் அதிலே நைட்ரோஜன் என்கிற வாயு ஸத்து மிகவும் குறைந்திருக்கின்றதென்றும், அந்தக் காரணத்தால் புஷ்டியான விளைச்சலை எதிர் பார்ப்பதற்கு இல்லாமல் இருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். இந்த வாயுவை உண்டுபண்ணும் ஸத்து பிண்ணாக்கில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஜப்பானியர் தமது நாட்டிற்குத் தேவையான பிண்ணாக்குகளைத் தாங்களே உற்பத்தி செய்வதுடன், அவைகள் போதாமல் வெளிநாடுகளிலிருந்தும் தருவித்து வயல்களுக்கு அவைகளை விசேஷ எருவாக உபயோகப்படுத்துகிறார்கள். அன்னிய தேசங்களில் பலர் இந்தப் பிண்ணாக்கை ஏற்றுமதி செய்யாமல் தங்கள் தேசத்திலேயே உபயோகமாகும்படியான விதமாக, வெகு பத்திரமாய் சேகரித்து வயல்களுக்கு உரமாகப் போடுகிறார்கள். நாமோ இந்த விஷயங்களை அறியாமல் நஷ்டப்படுகிறோம்.

THE TANJORE AGRICULTURAL ASSOCIATION.

தஞ்சாவூர் விவஸாயச் சங்கம்.—தஞ்சாவூர் கலெக்டர் மிஸ்டர் ஆஸ்டினுடைய தூண்டுதலின் மேல் தஞ்சாவூர் விவஸாயச் சங்கத்தின் கிளைச் சங்கங்களுக்குக் கொஞ்சம் உயிர் உண்டாயிருக்கிறது. அந்தக் கிளைச் சங்கங்கள் தெரிந்தெடுத்து நியமித்த பிரதிநிதிகள் ஆஜராயிருந்த மீட்டிங்கொன்று ஸப்டம்பர் மாஸம் 3-ந் தேதி யன்று தஞ்சாவூரில் கலெக்டர் அக்கிராசனத்தின் கீழ் நடந்தது. அதில் தஞ்சாவூர் தலைச் சங்கத்துக்கு டிவிஷனல் கிளைச் சங்கங்கள் பொருளுதவி செய்யவேண்டியதில்லையென்றும், அந்த தலைச்சங்கம் கிளைச் சங்கங்கள் ஸரியாய் வேலை செய்து வருகின்றனவாவென்று பார்த்துக்கொள்ளும் பொறுப்பை ஏற்குமென்றும், தலைச் சங்கத்தில் 24 மெம்பர்களுக்குக் குறையாமலும், 36 மெம்பர்களுக்கு அதிகப்படாமலும் இருப்பார்களென்றும், அந்தச் சங்க மெம்பர்கள் தலைக்கு ஒரு வருஷத்துக்கு ரூபா 3 சந்தா கொடுப்பார்களென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தப் புதிய தலைச் சங்கத்துக்கு கலெக்டர் ப்ரெஸிடெண்ட், பாபா நாடு ஜமீன்தார் வைஸ் ப்ரெஸிடெண்ட், ஏ. எஸ். ராமசந்திர அய்யர் காரியதரிசி.

LUCERNE.

லூஸர்ன்.—சென்னை கால்நடை வைத்திய இலாகா இன்ஸ்பெக்டராகிய வி. பி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் மாட்டுத் தீவனத்திற்காக லூஸர்ன் பயிர் என்று சொல்லப்பட்ட குதிரை மசாலாப் புல் செடியை ஸுமார் ஒரு ஏகரா விஸ்தீரணத்தில் கிணற்றிறவையில் சாகுபடி செய்ததாயும், அதை மாஸாமாஸம் வெட்டி மாடொன்றுக்கு நாள் ஒன்றுக்கு 7-ராத்தலுக்கு மேற்படாமல் அருங் கோடைகளில் மாடுகளுக்குத் தீவனமாய் உபயோகப் படுத்தியதில் மாடுகள் நல்ல ஸ்திதியிலிருந்ததாயும் தெரியவருகிறது. இந்த வருஷம் இந்தப்பயிரை அநேக விவஸாயிகள் திருநெல்வேலி ஜில்லாவில் பயிர்செய்யப் போகிறதாகக் கேள்விப்படுகிறோம்.

YIELD OF PADDY.

நெல் விளைவு.—அமெரிக்கா தேசத்தில் ஆர்கன்ஸாஸ் மாகாணத்திலுள்ள நிலங்களில் ஏகர் ஒன்றுக்கு 40-புஷல் நெல் விளைகிறதாம். இந்தியாவில் நன்செய் நிலங்களில் ஸராஸரியில் ஏகர் ஒன்றுக்கு 10-புஷல்தான் விளைகிறது. அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் தென்கரோலினாப் பிரதேசத்தில் ஏகர் ஒன்றுக்கு 25-புஷல் விளைகிறதாம். இதனாலே நம்முடைய நன்செய் சாகுபடியில் இன்னும் விசேஷமான விருத்தியுண்டாக்க இடமிருப்பதாக ஏற்படுகிறது.

ENSILAGE.

என்ஸிலேஜ்—மழைகாலத்திலுண்டாகும் புல்லை அறுத்துக் குழிகளில் புதைத்து மேலே பாரமேற்றி வைத்துக்கொஞ்ச காலத்துக்குப் பின் எடுத்துக் கால்நடைகளுக்கு உபயோகிப்பதற்கு 'என்ஸிலேஜ்,

என்றுபேர். சென்னை ராஜதானியில் காட்டிலாகாதார்கள் என்ஸிலேஜ் செய்து பார்த்ததில் ஆடுகளுக்கும் வெள்ளாடுகளுக்கும் அதை ஆகாரமாக உபயோகிப்பது கூடாதகாரியமென்றும், மாடுகளைக் காப்பாற்றுவதற்காக அதை உபயோகிக்கலாமென்றும், அதையுண்டாக்கும் செலவைப்பற்றியும், ஒவ்வொரு பிராணிக்கு எவ்வளவு என்ஸிலேஜ் தேவை என்பதைப் பற்றியும், பரிக்ஷைகள் நடத்தித் தெரிவிக்கும்படி கவர்ன்மெண்டார் ரெவினியு போர்டாரைக் கேட்டிருக்கிறார்கள்.

FERRUGINOUS STONE.

இரும்புக் கிட்டக்கல்.—திருநெல்வேலி ஜில்லா, அம்பாஸமுத்திரம் தாலூகா, ஆழ்வார் குறிச்சி கிராமம், செட்டி குளம் பக்கத்தில் ஒரு இரும்புக் கிட்டக்கல் குன்று இருக்கிறது. அதன் பக்கம் இறவைப் புன்செய்களில் வைத்திருக்கிற தென்னை மரங்கள் சிறுத்து சிறிதுகாலத்தில் தலைமாறி மரம்படுமென்று தோன்றின. அந்த மரங்களுக்கு மேற்குறித்த குன்றின் அடியிலுள்ள மண்ணை எடுத்துத் தென்னையைச் சுற்றித் தோண்டிவைத்தார்கள். இப்படி 2-வருஷம் செய்தார்கள். இப்பொழுது அந்தத் தென்னைமரங்கள் மட்டை நாலா பக்கமும் கவிழ்ந்து, மண்டை விரிந்து, ஸரியான காய்ப்பு கொடுத்துக்கொண்டிருக்கின்றன. தென்னை பலன் தருவதைப் பார்த்த பக்கத்து விவஸாயிகள் ஒவ்வொருவரும் இதை உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

MANAVARI LANDS.

மானாவாரி நிலங்கள்.—சென்னை மாகாணத்தில் நிலங்கள் பொதுவாய் நன்செய்களென்றும், புன்செய்களென்றும் பிரிக்கப்பட்டிருந்தாலும் மானாவாரி நிலங்களென்று சொல்லப்படும் சில நிலங்களும் இருக்கின்றன. நிலங்களில் தேங்கப்பட்ட மழை ஜலம், குளம் குட்டைகளில் தேங்கியிருக்கும் மழை ஜலம், இவைகளின் உதவியைக்கொண்டு சாகுபடி செய்யப்படும் நிலங்களும், குளத்து உள் வாய்ப் பரப்பு நிலங்களும் அந்த மானாவாரி நிலங்களாகும். அந்த நிலங்களுக்கு நன்செய்களுக்கு விதிக்கப்படும் தீர்வைக்குக் கொஞ்சம் குறைச்சலாயும், புன்செய்களுக்கு விதிக்கப்படும் தீர்வைக்குச்சற்று அதிகமாயும் தீர்வை விதிக்கப்படுவது வழக்கம். மானாவாரி நிலங்களை நன்செய்களாகவாவது, புன்செய்களாகவாவது மாற்றவும், நன்செய் புன்செய்களை மானாவாரியாக மாற்றவும் கவர்ன்மெண்டார் இப்பொழுது ஜில்லா கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஸெட்டில்மெண்டு நடக்காத காலத்தில் இப்படிச் செய்வதானால் பட்டாதாரர்களுடைய அனுமதியைப் பெற்றே செய்யவேணும்.

CHEAP MONEY FOR AGRICULTURISTS.

விவஸாயிகளுக்கு ஸ்வல்ப வட்டிக்குக் கடன்.—விவஸாயிகள் தங்கள் விவஸாயத் தொழிலுடன் கைத்தொழில்களையும் அநுஸரித்து வந்தால்தான் அவர்களுடைய ஜீவனம் ஸுகமாக நடக்கக்கூடும். தற்கால நிலைமையில் பூர்வீகத்தில் குடும்பங்களிலே செய்யப்பட்டுவந்த தொழில்கள் மாண்டுபோனபடியால் விவஸாயிகளின் பிழைப்பு அதிக கஷ்டமாகிவிட்டது. அவர்களில் பெரும்பாலர் அதிகமான வட்டிக்குக் கடன்பட்டு முழுகிப்போகிறார்கள். விசேஷமாக அவர்களின் முற்போக்குக்குப் பணக்குறைவே பெரிய காரணம். பணக்குறைவால் தானிய வர்க்கங்களை ஸரியான விலைக்கு மார்க்கெட்டுகளில் கொண்டுபோய் விற்றுவருவதற்குக்கூடாமல் தரகர்களிடத்திலும், கடன் கொடுத்தவர்களிடத்திலும் ஒன்றுக்குப் பாதியாக விற்று கஷ்டப்படுகிறார்கள். இதை நிவர்த்தித்து ஸௌலபமான வட்டிக்குக் கடன் கொடுப்பதற்காக ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஏற்பாடாகி இருக்கின்றன. ஸ்வல்ப வட்டிக்கு நிலத்தின் மேல் கடன் கொடுக்கப்படுகிறது. இவ்வாறாக ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஏற்பட்டு வேலை செய்துவருவதில் விவஸாயிகள் அதிக பலன்களை அடைந்துவருகிறார்கள். இந்த ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு மொத்தமாகக்கடன் கொடுத்து உதவுவதற்காக சென்னை, குளித்தலை, சேலம் முதலிய இடங்களில் பாங்கிகள் சுதேசிகளால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கோயமுத்தூரிலும் இப்போது 100-ரூபாய் வீதம் ஆயிரம் பங்குகளாகச் சேர்ந்து ஒரு லக்ஷம் ரூபாய் முதலுடன் இந்த நோக்கத்தைத் தழுவி ஒரு பாங்கி ஸ்தாபிதமாகி கவர்ன்மெண்டின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கின்றது.

INDUSTRIAL NOTES.

கைத்தொழில் குறிப்புகள்.

FROG'S SKIN.

தவளைத்தோல்.—ஜப்பான் தேசத்தார் தங்கள் தேசத்திலிருக்கும் விதம் விதமான தவளைகளைப் பிடித்து அவைகளின் தோல்களை உரித்துப் பதப்படுத்தி இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா முதலான தேசங்களுக்கு அனுப்புகிறார்கள். தவளைத் தோலால் மணிப்பர்ஸ் (பணப்பை) முதலிய விநோதமான ஸாமான்கள் செய்கிறார்கள். ஒருதோல் ஸுமார் 4 அணாவுக்கு விலைபோகும். ஜப்பானியர் வருஷா வருஷம் ஏறக்குறைய பதினாயிரம் ரூபாய் பெறுமான தவளைத்தோலை ஏற்றுமதி செய்கிறார்கள்.

TILE WORKS.

ஓட்டுத்தொழிற்சாலை.—கோயமுத்தூரில் வெள்ளியங்கிரி கவுண்டரும், வென்லால் நாயடுவும் வீடுகள் கட்டுவதற்கு உபயோகப்படக்கூடிய ஓடுகள் செய்யும் தொழிற்சாலை யொன்று ஏற்படுத்தியிருக்கிறார்களென்றும், அதற்குப் புதுமாதிரியான யந்திரங்கள் முதலியவை வரவழைத்து இருக்கிறார்களென்றும் அறிகிறோம். மங்களூர், கள்ளிக்கோட்டை, தலைச்சேரி, இவ்விடங்களில் பேஸல் மிஷன் அதிகாரிகளும் மலையாளத்தில் பெர்போக்கில் ஹொம்கீஸ் கம்பெனியாரும் ஸ்தாபித்து நடத்தும், தொழிற்சாலைகளில் செய்யப்படும் ஓடுகள் ப்ரஸித்தி பெற்று அவைகளில் நல்ல வியாபாரம் நடக்கின்றன. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தொழிற்சாலையில் செய்யப்படும் ஓடுகள் வேகவைக்கப்படும் சாளவாய்ப் புகைப்போக்கி 120 அடி உயரம் இருப்பதாயும் அது வெகு புது மாதிரியாயிருப்பதாயும் சொல்லப்படுகிறது.

CARPETS MADE OF PAPER PULP.

காகிதபசியலைக்கொண்டு கம்பளம் நெய்தல்.—பிரான்சு தேசத்திலும், ஜெர்மனி தேசத்திலும் சில கடுதாசி ஆலைகளில் கடுதாசி பசியலைக் கொண்டு நூல் நூற்கிறார்கள். இந்த நூல் அல்லது பாகைக் கொண்டு தரையில் விரிக்கும் கம்பளங்களும், ஜமுக்காளங்களும் செய்கிறார்கள். இப்போது ஸ்வீடன் தேசத்திலும் ஒரு ஆலை ஏற்படுத்தப்போகிறார்கள். ஏற்கனவே அந்த தேசத்தில் காகிதத்தால் கம்பளம் செய்துகொண்டுவருகிறார்கள். ஆனால் அவைகள் மெல்லிய காகித நாடாக்களால் பாய் முடைகிறது போல் முடையப்படுகின்றன. இப்போது செய்யப்போகிற விதமோ என்றால், முதலில் காகிதம் செய்யப் பதமாயிருக்கும் பசையைக்கொண்டு நூல் நூற்றுக்கொள்ளுகிறது. பிறகு அந்த நூலைக்கொண்டு புடவை நெய்கிறது போல் கம்பளம், ஜமுக்காளம் முதலானவைகளாயும் நெய்கிறதுதான். காகிதத்தால் தந்திக்கம்பிகள் தாங்க ஸ்தம்பங்கள் செய்யப்படுகின்றன. இப்போது கம்பளம், ஜமுக்காளம் முதலானவைகளும் செய்யப்படுகின்றன. இன்னும் என்னென்ன விநோதங்கள் காகிதத்தால் செய்யப்படவிருக்கின்றனவோ ?

THE OIL INDUSTRY.

எண்ணெய் ஆடும் தொழில்.—கடலை, தேங்காய், எள்ளு இவைகளின் பிண்ணாக்குகளை நம்மவர்கள் மாடுகளுக்குத் தீனியாக வைக்கிறார்கள். இவைகளைப்போலவே பருத்திக் கொட்டையையும் அப்படியே உணவாக வைக்கிறார்கள். இந்தப் பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கலாமென்பதாக இப்போது தெரியவருகிறது. நாம் பருத்திக் கொட்டையை அப்படியே மாடுகளுக்கு வைத்துவிடுவதில், அதிலிருந்து கிடைக்கக்கூடிய எண்ணெய் வீணாய்ப்போகிறது.

ஸமீபத்தில் அலகாபாத்தில் நடக்கப்போகும் பொருட்காட்சியில் பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கும் விதத்தைச் செய்து காட்டப் போகிறார்களாம். இங்கிலாந்திலுள்ள மெஸர்ஸ் கிரீன்வுட் பேட்லி அண்ட் கம்பெனியாரும், கல்கத்தா ஜெஸ்ஸாப் அண்ட் கம்பெனியாரும், கான்பூர் மெஸர்ஸ் பெக் ஸதர்லண்ட் அண்ட் கம்பெனியாரும் ஒன்று சேர்ந்து பொருட் காக்ஷியின்போது பருத்திக் கொட்டையிலிருந்தும், இன்னும் மற்றவைகளிலிருந்தும் யந்திர உபயோகத்தால் எண்ணெய் எடுக்கும் வழிகளைக் காண்பிக்கப்போகிறார்களென்று அறிகிறோம். இந்த அருமையான ஸந்தர்ப்பத்தை, எண்ணெய் ஆட்டும் தொழிலில் நோக்கமுள்ளவர்கள் விட்டு விடாமல் நிதானமாய்ப் போய்ப்பார்த்து தொழிலைச் சிறப்புடனும், லாபத்துடனும் செய்ய முயற்சி செய்வார்களென்று நம்புகிறோம்.

EDUCATIONAL NOTES.

வித்யா விஷயக் குறிப்புகள்.

INDUSTRIAL EDUCATION IN MADRAS.

சென்னையில் தொழில் படிப்பு.—கைத்தொழில் டைரெக்டர் ஆபீஸில், இந்தவித படிப்பில் ஆவலாயுள்ள சில கனவான்களின் கூட்டம் ஒன்று ஸமீபத்தில் கூடிற்று. அனேக கனவான்கள் வந்திருந்து ப்ரேரேபிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றி அதிக ஊக்கத்தோடு பேசினார்கள். (1) கைத்தொழில்சாலைகளை எப்படிப் பிரிக்கவேண்டியது? (2) கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்படுவதற்கு இந்தச்சாலைகளுக்கு ஏற்படுத்தவேண்டிய நிபந்தனைகள் என்ன? (3) போதிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? (4) போதிக்கும் வழிகள் என்ன? (5) தொழிற்கல்வியையும், பொதுப் படிப்பையையும் பிரிக்கவேண்டியதா? ஆகிய இந்த விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. இதுவரையில் சென்னை ராஜதானியில் இவ்வித படிப்புச்சாலைகள் அனேகம் ஏற்பட்டிருந்தபோதிலும் மேற்கண்ட விஷயங்களை ஒத்து ஒரே விதமான மார்க்கங்களை அநுஸரித்து இவைகள் நடக்கவில்லை என்றும், இவ்விதமாகவே எல்லா சாலைகளும் ஒத்து ஒரேவிதமான ஏற்பாட்டின் கீழ் நடக்கவேண்டுமென்றும் பேசினார்கள். மேற்சொன்ன விஷயங்களில் ஒரு விதமான தீர்மானத்திற்கு வராவிட்டாலும் அனேக முக்கியமான விஷயங்கள் அவ்விடத்தில் வெளியாயின. இந்த மீட்டிங்குக்கு 22 தொழிற்படிப்புச்சாலையிலிருந்து மெம்பர்கள் வந்து பேசியபடியால் அவ்விடத்தில் பேசின விஷயம் முக்கியமானவைகளாகவே இருக்க வேண்டும்.

PIAL SCHOOL.

திண்ணைப் பள்ளிக்கூடங்கள்.—சென்னை "மெயில்" பத்திரிகை இந்த விஷயத்தைப்பற்றி எழுதியிருக்கும் வியாஸத்தில் இந்தத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் என்ன காரணத்தினால் அழியாமலிருந்து வருகின்றனவென்று கேட்கின்றது. இந்தியருடைய கல்வி அபிவிருத்தியில் கருத்து வைத்த புத்திமான்கள் இந்தக் கேள்விக்கு ஸமாதானம் சொல்லவேண்டுமென்று வற்புறுத்துகின்றது. இந்தத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் ஆடம்பரமும், ஆசையும் அறியாத கிராம வாஸிகளுக்கு அனுபோகத்தில் உபயோகப்படக் கூடியதும், அவர்கள் பூர்வீக ஒழுக்கத்துக்கு உற்றதுமான படிப்பு கிடைக்கிறபடியால், அவைகள் அழியாமலிருந்து வருகின்றன என்று சுதேசமித்திரன் பத்திராதிபர் பதில் சொல்லுகிறார்.

A FREE ELEMENTARY SCHOOL.

ஒரு தர்ம எலிமெண்டரி ஸ்கூல்.—வி. சுப்பிரமணியரின் தர்ம எலிமெண்டரி பள்ளிக்கூடமென்று ஒரு ஸ்கூல் சென்னப்பட்டணம் தங்கசாலைத் தெருவு 316 நெ. வீட்டில் திறக்கப்பட்டது. நான்காவது ஸர்க்கிள் ஸ்கூல் இன்ஸ்பெக்டராகிய மிஸ்டர் எ. வி. பிரணதார்த்திஹர அய்யர் அக்கிராசனாதிபத்தியம் வகித்தார். அன்று இ சுப்பிரமணிய முதலியார் மேற்படி பள்ளிக்கூடத்தின் உற்பத்தியைப் பற்றியும், அது செய்யவேண்டிய காரியத்தைப் பற்றியும் தமிழில் பேசினார். அவருக்குப் பின் மிஸ்டர் கிருஷ்ணமாசாரியார் இந்த தர்ம பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்த கனவானுக்குப் பொது ஜனங்களின் மிகுந்த நன்றி அறிவைக்காண்பித்துப் பேசினார். அக்கிராசனாதிபதி இந்த பள்ளிக்கூடத்தைத் திறந்தவுடன் சொன்னதாவது, சென்னையில் அவசியமாய் வேண்டியிருந்த மேற்படி இடத்தில் இந்தப் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்ததைப் பற்றி இதன் ஸ்தாபக கர்த்தருக்கு அதிக சிரேயஸ் உண்டாக வேண்டுமென்றும், இறந்து போய்விட்ட தனது புத்திசாலியான ஏக புத்திரனின் ஞாபகச் சின்னத்திற்காக மேற்படி தர்ம பள்ளிக்கூடத்தை மிஸ்டர் முருகேச முதலியார் பொது ஜனங்களுக்குத் தந்தாரென்றும், சென்னை எலிமெண்டரி படிப்பு அதிக அதிருப்தியான நிலைமையில் இருக்கிறதென்றும், மேற்படி பள்ளிக்கூடம் ஒருவராலேயே நடத்தமுடியாதாகையால் அதற்குச்சென்னைவாசிகள் சகாயம் செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

LITERARY NOTES.

புஸ்தகக் குறிப்புகள்.

THE MORAL OF THE RAMAYANA.

ராமாயணத்தினால் நாமறிந்துகொள்ள வேண்டியது.—ராமாயணத்தைப் படித்து பரிசோதித்து முடிவில் அறிந்துகொள்ளவேண்டியதென்னவென்றால் உலகத்தில் மனிதன் ஒருவருக்கும் மனவருத்தத்தைக் கொடுக்கக்கூடாதென்பதும், கேவலம் ஒரு பிச்சைக்காரனாய் இருந்தபோதிலும் அவனால் நமக்கு என்ன தீங்கு நேரிடுமென்று நினைக்கக்கூடாதென்பதுமேயொழிய வேறல்ல. இதுவே ராமாயணத்தின் முக்கியமான ஸாரமாகும். இதுதான் தன்னைப்போல பிறரை நேசிக்க வேண்டுமென்பது. இதையே ஸர்வமதங்களும், ஸர்வ வேதங்களும், ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸமரஸ ஸன்மார்க்கங்களும் போதிக்கின்றன. இதைப்பார்க்கிலும் மேலான ஆத்மஞானம் வேறுகிடையாது. இதுதான் பிரபஞ்ச ஒழுக்கம். ஸ்ரீராமனுக்கு அவர் தந்தையாகிய தசரதர் பட்டஞ் சூட்டவேண்டி முடிவு செய்து நாளை பட்டமென்று நகர்முழுதும் அறிவித்தாரே, அவர் அறிவித்தபடியே ஸ்ரீராமருக்கு பட்டம் சூட்டியிருந்தால் ராமாயணமேது ராவண ஸம்ஹாரமேது? லக்ஷ்மணர் ஸீதை முதலானவர்கள் மரவுரி தரித்துக் காட்டுக்கு ஏன் போய் அநேக கஷ்டத்தை அனுபவிக்கப் போகிறார்கள். இவ்வளவுக்கும் காரணம் என்னவென்று யோசிக்கும்பொழுது கூனிதான் காரணமேயொழிய வேறல்ல. அவள் கேவல மனுஷி, வீட்டு வேலைக்காரி. அவளால் ஸ்ரீராமர், அவர் பெண்ஜாதி சகோதரர், முதலானவர்களும் எவ்வளவு பாடுபட்டுப்போனார்கள் பார்த்தீர்களா? ஸ்ரீராமர் சிறு பிள்ளையாய் விளையாடிக் கொண்டிருக்கும் காலத்தில் கூனியின் முதுகின்மேல் ஏதோ விளையாட்டாக சிறு கல்லை விட்டெறிந்து விளையாடினாராம். அது கூனியின் மனதிற்கு கொஞ்சம் வருத்தத்தைக் கொடுத்தது. ஆனால் அந்தக் காலத்தில் பதிலுக்குப் பதில் செய்ய முடியாதிருந்தது. காலம் எப்போது வருமென்று அவள் பார்த்துக்கொண்டிருந்து காலம் வந்தவுடனே இதுதான் நம்முடைய பகையை முடித்துக்கொள்ள வேண்டிய காலமென்று உடனே கைகேசியைக் கலந்து பரதன் நாடாளவும் ஸ்ரீராமன் காடாளவும் வேண்டிய காரியத்தை முடிவு செய்து, ஸ்ரீராமனை காட்டுக்கு அனுப்பிவிட்டாள். இதனால் நாம் அறிந்துகொள்ளவேண்டியதென்னவென்றால் அயோத்தியில் ஸ்ரீராமனுக்கு கூனியைத் தவிர மற்றவர்களெல்லாம் மித்துருக்கள். கூனி ஒருத்தியே சத்துரு. இந்த ஒரு அற்ப சத்துருவினால் விளைந்த ஆபத்தைத் தடுக்க ஒருவராலும் முடியாமல் போய்விட்டதல்லவா? ஆகையால் நாம் எப்போதும் பிரபு முதல் பிச்சைக்காரன் வரையில் ஒருவரையும் கேவலமாக மதித்து அவருடைய மனதிற்கு வருத்தம் உண்டாகும்படி யாதொரு காரியத்தையும் செய்யாமல் தன்னைப்போலவே யாவரையும் நேசித்து. யாவருக்கும் நல்லவனாயிருக்கத் தன்னால் கூடிய வரையில் முயற்சிக்கவேண்டுமென்பதே ராமாயணத்தின் கருத்து.

BOOKS RECEIVED.

புஸ்தக வரவு.

SATHIAVALLI.

ஸத்யவல்லி.—இது ஒரு தமிழ் கற்பனைக் கை, ஆர். பி. குழந்தைஸாமி பிள்ளை, பி. ஏ, எல். டி அவர்களால் இயற்றப்பட்டு சென்னை ஜனரல் ப ளிஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டது. வி அணு 12.

A MANUAL OF AGRICULTURE.

கமத்தொழிற்போதம்.—உயரப்புலம் சின்னை முதலியார் செய்தது. விலை சதம் 30.

THE ORIENT.

ப்ராசீ ராமாயணம்-மகாபாரதம்.—சென் ஓரியண்டல் அச்சுக்கூடத்தில் எல். வி. ராமசந் அய்யரால் அச்சிடப்பட்டன. விலை தனித்தனி அணு 2.

இரட்டைப்புலவர் சரிதம்.—இந்தப் புஸ்தக கோயம்புத்தூர் சாரதாவிலாஸ தமிழ்ச் சங்க காரி தரிசி சி. கு. நாராயணஸாமி முதலியாரால் தொ கப்பட்டது. விலை அணு 3.

SUGGESTIONS FOR SOCIAL HELPFULNESS.

ஜன ஸமூகத்திற்கு உதவிசெய்ய சில யோஜ கள்.—இது லாகூரில் பார்மன் க்ரிஸ்டியன் காலேஜ் ரெவரெண்ட் டி. ஜே. ப்ளெமிங்க், எம்.ஏ., அவர் களால் இங்கிலீஷில் எழுதப்பட்டது. விலை அணு 8. சென்னப்பட்டணம் ஜி. ஏ. நடேசன் கம்பெனியில் கிடைக்கும்.

LEGAL NOTES.

சட்டக் குறிப்புகள்.

Gift of Land by a Daughter.

பெண்ணால் செய்யப்பட்ட பூமி தானம்.—ஒருவன் இறந்து போகும் காலத்தில் பிள்ளையும், பெண்சாதியும் இல்லாததால், அவனுடைய ஆஸ்தியெல்லாம் பெண்ணுக்குக் கிடைத்தது. இந்தப் பெண் கோதாவரிக் கரையில் புஷ்கர புண்ணிய காலத்தில் தகப்பனாருக்கு சிரார்த்தம் செய்து அப்பொழுது சொல்ப பூமி தானமும் செய்தாள். இந்த தானம் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல என்று தகப்பனாருடைய வார்ஸுகள் வாதாடினார்கள். ஹிந்து லாப்பிரகாரம், ஒரு விதவைக்கு தன் புருஷனிடத்திலிருந்து கிடைத்த ஸொத்தில் எவ்வளவு சுதந்தரம் உண்டோ அதுபோலவே தான் (பிள்ளையில்லாத) பெண்ணுக்கும். ஆகவே, பெண் தகப்பனாருடைய சிரார்த்தம் முதலிய விஷயங்களுக்கு மிதமாகச் செலவிடும் செலவெல்லாம் ஒப்புக் கொள்ளவேண்டியவைகளே. இந்தக்கேஸில் தானம் செய்த பூமி மொத்த ஸொத்தில் அற்ப பாகமானதால் அது நியாயமானதாகும்.—8 மதராஸ் லா. டை. 74 பக்கம்.

Professional Tax.

தொழில் வரி.—திருநெல்வேலியிலிருக்கும் வர்த்தக ஷேக்மீரு ராவுத்தர் என்பவர் சென்னபட்டணத்தில் சரக்குவாங்க அடிக்கடி தன்னுடைய குமாஸ்தாவை அனுப்புவைக்கிறதுண்டு. குமாஸ்தா சென்னையில் ஒரு வீடு வாடகைக்கு வாங்கிக்கொண்டு தானும் அதில் குடியிருந்து வாங்கும் சரக்குகளை அதில் அடுக்கிவைத்து ரயில் மூலமாக திருநெல்வேலிக்கு அனுப்புகிற வழக்கம். அந்த வீட்டில் யாதொரு வியாபாரமும் நடத்தப்படுகிறதில்லை. மேற்படி குமாஸ்தா சரக்குகள் வாங்கி மேற்படி வீட்டில் அடுக்கிவைத்து அனுப்புவதை ஷேக்மீரு ராவுத்தர் முனிஸிபல் எல்லைக்குள் வியாபாரம் நடத்துவதாக எண்ணி, சென்னபட்டணம் முனிஸிபாலிடியார் அவருக்குத் தொழில்வரி விதித்தார்கள். இது பிசகென்று இரண்டு ப்ரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டுகளிடம் அப்பீல் செய்துகொண்டதில் இருவரும் பேதப்பட்ட அபிப்பிராயம் கொடுத்தார்கள். ஆகவே கேஸ் ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்டது. அவர்கள் ஷேக்மீரு ராவுத்தருக்கு சென்னபட்டணத்தில் யாதொரு வர்த்தக ஆபீஸுமில்லை என்றும், அவர் சென்னையில் வியாபாரமும் செய்யவில்லை என்றும், முனிஸிபல் ஆக்ட் 120-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் தொழில் வரி அவருக்கு விதிக்கக்கூடாது என்றும் தீர்மானித்தார்கள்.

Trading Families.

வியாபாரம் செய்யும் குடும்பங்கள்.—குடும்ப மானேஜர், குடும்ப வியாபாரத்தின் பொருட்டு வாங்கும் கடனை வரப்பற்ற கடன்காரன் இந்துக் குடும்பத்தாரின்மேல் தாவா செய்தால், குடும்ப ஆஸ்தி எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கே மற்றக் குடும்ப பாகஸ்தர்கள் ஜவாப்தாரிகள் என்றும், குடும்ப ஆஸ்தியின்மேல் மாத்திரம் டிக்ரி செய்யவேண்டுமென்றும், அந்தக் கடன் பத்திரம் இந்த மானேஜர் ஒருவனே யெழுதிக் கொடுத்திருக்கிறதாக தஸ்தாவேஜில் எழுதியிருந்தாலும், நிஜஸ்த்தில், மற்ற குடும்பஸ்தர்களுங்கூட, இந்தக் கடனை வாங்கும்படி, முதலிலேயே சொல்லியிருந்தால், இந்தபாகஸ்தர்களும், இந்தக் கடனைத் தீர்க்கக் கட்டுப்பட்டவர்களாயிருக்கிறார்கள் என்றும், அவர்கள்மேல்கூட டிக்ரி செய்யவேண்டுமென்றும், மதராஸ் ஹைகோர்ட்டார் 22-வது வால்யூம் 166-வது பக்கத்திலும், 23-வது வால்யூம் 597-வது பக்கத்திலும், மதராஸ் லா ஜர்னல் 18-வது வால்யூம் 347-வது பக்கத்திலும், அலஹாபாத் ஹைகோர்ட்டார் 29-வது வால்யூம் 166-வது பக்கத்திலும், 176-வது பக்கத்திலும் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். இந்த ஜாயிண்டு ஹிந்து குடும்பத்தார் செய்யும் குடும்ப வியாபார விஷயத்தில், அவர்கள் செய்ய வேண்டியனவாய் நேரிடும் கோர்ட்டு வழக்குகளில், இந்தக்குடும்பத்தில் இருக்கும் மைனரை வாதியாகச் சேர்க்கவேண்டியது அவசியமில்லையென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் 27-வது வால்யூம் 157-வது பக்கத்திலும், பம்பாய் ஹைகோர்ட்டார் 27-வது வால்யூம் 157-வது பக்கத்திலும் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஜாயிண்டு ஹிந்து குடும்பத்தில் சேர்ந்தவர்களும், இந்தக் குடும்பத்துக்கு சம்பந்தமில்லாத இதர மனுஷர்களும் சேர்ந்துசெய்யும் கூட்டு வியாபாரத்தில் வழக்குகள் நேரிட்டால், அந்த வழக்குகள் காண்ட்ராக்ட்டு ஆக்ட்டுப் பிரகாரம் தீர்மானிக்கவேண்டியதென்று அலஹாபாத் ஹைகோர்ட்டார் 25-வது வால்யூம் 378-வது பக்கத்திலும், மதராஸ் ஹைகோர்ட்டார் 25-வது வால்யூம் 149-வது பக்கத்திலும் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள்.

SCIENTIFIC NOTES.

சாஸ்திரீயக் குறிப்புகள்.

The Goldsmith's Fraud.

தட்டானுடைய மோசம்.—நாம் தட்டானிடத்தில் பொன் கொடுத்து நகை செய்யச்சொன்னால் பொன்னை உரைகல்லில் உரைத்து அந்த உரைகல்லை வாங்கி வைத்துக்கொண்டு பிற்பாடு நகைவந்ததும் உரைகல்லிலிருக்கும் தங்கத்தின் 'மாற்றையும்' நகையின் 'மாற்றையும்' பார்த்து மோசமிருக்கு இல்லை என்று தெரிந்து கொள்ளுகிறோம். ஆனால் இதில் பிசகு நடந்தால் எல்லாராலும் ஸுலபமாய்க் கண்டுபிடிக்க முடியாது. சாஸ்திர ஞானமுள்ளவர்கள் ஸுலபமாய் அறிவார்கள். இந்த உண்மை மாதர் மனோரஞ்சினியில் பிரசுரமாயிருக்கும் அடியில் கண்ட கதையால் நன்றாய் விளங்கும்.

ஸிராகூஸ் என்னும் தேசத்து அரசனான "ஹீரோ" என்பவன், ஒரு தட்டானிடம் சுத்தமான பொன் கொஞ்சம் கொடுத்து, அதைக்கொண்டு ஒரு க்ரீடம் பண்ணும்படி உத்தரவு செய்தான். கொடுப்பதற்கு முன் தங்கத்தை நிறுத்துப்பார்ப்பது யாருக்கும் ஸகஜந்தானே!! க்ரீடம் பண்ணி முடிந்தது; தட்டானும் கொண்டுவந்து கொடுத்தான். அரசன் முன் எவ்வளவு எடை பொன் கொடுத்தானோ அவ்வளவு எடை, க்ரீடமும் இருந்தது. ஆகையால் தட்டான் போய்விட்டான். ஆனால் க்ரீடத்தைப் பார்த்ததும் அரசனுக்கு சுத்தமான தங்கத்தால் செய்யப்படவில்லைபோல் தோன்றிற்று. ஆகையால் அரசன் அந்த க்ரீடத்தை சாஸ்திர பண்டிதனான ஆர்க்கிமீடிஸ் என்பவரிடம் அனுப்பி 'க்ரீடம் சுத்தமான தங்கமா? அல்லது தட்டான் தங்கத்தைத் திருடிக்கொண்டு அதே எடையுள்ள வேறு உலோகங்களைக் கலந்துவிட்டானா?' என்று பார்க்கும்படி உத்தரவு செய்தான்.

பண்டிதரும், எப்படி கண்டறிய முடியுமென்று ஆலோசித்துப்பார்த்தார். ஒன்றும் கூடவில்லை. பல நாள் கழிந்தன. ஒருநாள் ஸ்நானத்திற்குத் தொட்டியில் ஜலம் நிரப்பியிருந்தது; பண்டிதர் ஸ்நானத்திற்கு இறங்கினார்; அப்பொழுதும் அரசனுடைய உத்திரவைப்பற்றியேதானே எண்ணிக்கொண்டிருக்கிறார்! இறங்கவே ஜலம் தன் உடலைத்தாங்குவதை அறிந்தார்; உடலின் பருமன் எவ்வளவோ அவ்வளவு ஜலத்தின் இடத்தை உடல் அடைத்துக்கொள்ளுமல்லவா? உடனே அரசன் கேள்விக்குப்பதில் ஆர்க்கிமீடிஸின் மனதில் உதித்தது. உதித்ததுதான் தாமதம்; குதித்தார் தொட்டியிலிருந்து; ஓடினார் தெருவழியாய்; நான் கண்டேன்! கண்டேன்!! தெரிந்தது!!! தெரிந்தது!!!! என்று ஓலமிட்டுக்கொண்டு ஒரே ஓட்டமாய் அரசன் மாளிகைக்கு ஓடினார்.

என்னதெரிந்துகொண்டார்? இது தான். தங்கம் ஜலத்தைவிட 19 பங்கு கனமானது; அதாவது பொருள் நெருக்கமுடையது. ஆகையால் கொஞ்சம் எடை தங்கத்தைத் திருடிக்கொண்டு, (10 ரூபாய் எடைத்தங்கம் என்று வைத்துக்கொள்வோம்.) அதே எடை தாமிரத்தைப்போட்டு விட்டானானால், நிறுத்துப்பார்த்தால் ஸரியாய்தானே இருக்கும்; ஆனால் தாமிரம் ஜலத்தைவிட 9 பங்கு கனமுள்ளது. ஆகையால் சுத்தத்தங்கம் எவ்வளவு பருமன் இருந்ததோ அதைவிட இரண்டுமுறை பருமனாக அல்லவோ இருக்கும் தாமிரம். தட்டான் திருடி இருப்பானேயானால், அரசன் கொடுத்த தங்கத்தின் பருமனைவிட க்ரீடத்தின் பருமன் அதிகமாகவல்லவா இருக்கும்? இப்பொழுது பண்டிதனும் அரசனும் சேர்ந்து செய்யவேண்டிய பரீக்ஷை ஒன்றுதான். முன் எவ்வளவு தங்கம் தட்டானிடம் கொடுக்கப்பட்டதோ அவ்வளவு சுத்தத் தங்கம் எடுத்துக்கொண்டு அதைஜலத்தில் போட்டுப் பார்க்கவேண்டியது. க்ரீடம் எவ்வளவு இடத்தை அடைத்துக்கொள்ளுகிறதென்று பார்க்கவேண்டியது. இரண்டும் ஸரியாய் இருந்தால் தட்டான் திருடவில்லை என்பது நிச்சயம். க்ரீடம் அதிக இடம் அடைத்துக்கொண்டால் தங்கத்தைத்திருடி அவ்வளவு இடையுள்ள வேறு உலோகத்தைச் சேர்த்து இருக்கிறான் என்று சொல்லலாம்.

இவ்விதம் பரீக்ஷைசெய்து பார்க்கவே, ஹீரோ தன் க்ரீடம் அதிக இடம் வேண்டிற்று என்பதைக் கண்டான்; தட்டான் திருட்டு வெளிப்பட்டது; தட்டானைத்தண்டித்தான் என்று சொல்லவேண்டியதில்லையே!!

MEDICAL NOTES.

வைத்தியக் குறிப்புகள்.

VOMITTING BLOOD.

இரத்த வாந்திக்கு.—பசுவின் நெய் சேர் ¼, எலுமிச்சம் பழச்சாறு சேர் ¼, இவைகளைக் கலந்து மூன்று நாட்களுக்கு கொடுத்துவர ரத்தவாந்தி நீங்கும்.

BURNS.

நெருப்புப்புண்கள்.—ஊமத்தை இலைச்சாற்றில் நல்லெண்ணெய் கலந்து பூசவும். செம்பை இலைச்சாற்றில் நல்லெண்ணெய் கலந்து தடவவும். ஆவாரங்கொழுந்தையும், நல்லெண்ணெயும் கலந்து தடவவும். பசலை இலையை மோரில் அரைத்தும் பூசலாம்.

HEADACHE.

மண்டையிடி, மண்டைக்குத்து, ஒற்றைத் தலைவலி இவைகளுக்கு.—நெய், நல்லெண்ணெய், வேப்பண்ணெய், விளக்கெண்ணெய் வகைக்குப் பலம் 3, இந்திரமூலம், கஸ்தூரி பணவெடை 1, கரிசிலாங்கண்ணிச்சாறு சேர் 5. இவற்றைச் சேர்த்துப் பதமாய்க்காய்ச்சி வடித்துத் தலை முழுகவும்.

THE VENKATRAMANA DISPENSARY.

வெங்கட்டரமண வைத்திய சாலை.—மைலாப்பூரில் இப்போது ஹைகோர்ட்டு ஜட்ஜியாக இருக்கிற கனம் வி. கிருஷ்ணஸாமி அய்யர் அவர்கள் தம்முடைய பிதா அவர்களின் ஞாபகச்சின்னமாக இந்த வைத்திய சாலையையும், ஒரு ஆயுர்வேத பாட.சாலையையும் சில வருஷங்களுக்கு முன் ஸ்தாபித்தார்கள். இந்த தர்மங்கள் மிகவும் உபயோகமானவைகள். சென்ற 1909-௵த்திய ரிபோர்ட்டினால், 27,801 வியாதியஸ்தர்கள், இந்த வைத்திய சாலையில் வைத்தியம் பண்ணிக்கொண்டார்கள். மருந்துகள் பெற்றார்கள். இவர்களில் 26,246 பெயர்களுக்கு மருந்து இனாமாகக் கொடுக்கப்பட்டது. தினம் 76 பெயர்கள் இதில் வைத்திய உதவிபெறுகிறார்கள். இந்த வைத்திய சாலைக்கும், பாடசாலைக்கும், மூல திரவியம் ரூ. 30,000 இருக்கிறது. வைத்திய சாலையைச் சேர்ந்த பாடசாலையில் 8 பெயர்கள் படித்தார்கள். அவர்களில் நாலுபேர்கள் கடைசிப்பரீக்ஷை செய்யப்பெற்றார்கள். மூவர் யோக்கியதா பத்திரம் பெற்றிருக்கிறார்கள். அந்த மூன்று பேர்களில் இரண்டு பேர்கள் இந்த வைத்திய சாலையிலேயே வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். மற்றொருவர், வைத்தியத் தொழிலை திருவல்லிக்கேணியில் நடத்திவருகிறார்.

OFFENSIVE BREATH.

நாற்றமான சுவாசம்.—கெட்டசுவாசம் பின்வரும் காரணங்களால் உண்டாகலாம். அவையாவன:—க்ஷீணித்துப்போன பற்கள், வாயின்மேல் தோலின் சீர்கேடு, அப்படியே தொண்டையிலும் வயிற்றிலுமுள்ள புண்கள், வாயில் அல்லது மூக்கிலுள்ள வியாதிப்பட்டிருக்கும் எலும்புகள், வயிற்றில் ஸரியான ஜீரணமாகாதது முதலியவைகளே. நாற்ற சுவாசமானது வயிற்றிலிருக்கிறவைகளால் உண்டாயிருக்குமானால், அதை அடிக்கடி சுத்திசெய்து கொள்ளும்படியாக மரக்கரி ஆகாரத்தை அடிக்கடி உட்கொள்ளவேண்டும். மற்ற வகையானவைகளாய் இருந்தால், பல் கெட்டுப்போனதினால் அல்லது வாயின் அஸௌக்கியமான காரணத்தினாலுண்டானதாயிருந்தால், அவைகளை நன்றாய்ச் சுத்திசெய்வதால் அல்லது கொப்பளிப்பதினால் அந்த நாற்றத்தைக் குறைத்துக்கொண்டே வரலாம். இந்த வகையானதுக்குக் காண்டியின் திராவகம் ஆனது மிக்கநேர்த்தியானது.

REMEDY FOR PARALYSIS.

பாரிசவாய்வுக்கேற்ற அனுபோக முறை.—ஒரு கோழி முட்டையில் ஒரு சிறுதுவாரஞ்செய்து அதற்குள் இரண்டு மிளகெடை சுத்தமான பெருங்காயத்தை உட்செலுத்தி மேற்படி துவாரத்தை மாவினால் மூடி முழுவேக்காடாக வேகவைத்து, உதயத்தில் பல்லிற்படாமற் சாப்பிடவேண்டியது. முட்டை சாப்பிட்ட ஒருமணி நேரத்திற்குப் பிறகு காப்பித் தண்ணீராவது, வேறு ஏதாவது சாப்பிடவேண்டியது. இப்படி 16-நாளைக்குச் சாப்பிட்டு வந்தால் எப்பேர்ப்பட்ட வாயுவையும் கண்டித்து, ஸுகத்தைக்கொடுக்கும். பத்தியம் யாதொன்றுமில்லையென்றாலும், வாயு பதார்த்தங்களையும், கெடுதலானசெய்கைகளையும், விலக்கிவைக்கவேணும். முட்டை வாயுகுண முடையதென்றாலும், காரஞ்சேருகிறபடியால் வலுவைக் கொடுத்து வாயுவைக் கண்டிக்கும். (எஸ். வி. மாரல், புதுப்பேட்டை, சென்னை.)

PERSONAL NOTES.

மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

LORDS MORLEY AND CREWE.

லார்டு மார்லியும் க்ரூவும்.—லார்டு மார்லி இந்திய மந்திரி வேலையை ராஜீனாமாக் கொடுத்து விட்டார். அவருக்குப் பதிலாய் லார்டு க்ரூ இந்தியா மந்திரியாய் நியமிக்கப்பட்டிருக்கிறார். லார்டு க்ரூ இதுவரையில் குடியேற்ற நாட்டு மந்திரியாய் இருந்து வந்தார். லார்டு ஸபையில் லிபரல் கட்சியாருக்குத் தலைவர். இவருக்கு இப்போது 52 வயது.

OUR EMPEROR.

நம்முடைய சக்ரவர்த்தி.—நமது மகாராஜா அவர்கள் மீன் பிடித்தல், மான் வேட்டையாடுதல், பட்சி மிருகம் முதலியன சுடுதல் ஆகிய வெளியுலாவு வேலைகளைச் செய்வதில் அதிக நேரங்கழித்தாலும், அவர் எழுதுதல் முதலிய வேலைகளையும் அதிகமாகச் செய்கிறாராம். அவர் தினம் அதிகாலையில் எழுந்திருக்கிறார். உடனே மேஜைக் கருகில் வந்து உட்கார்ந்து விடுகிறார். அப்பொழுது அவருடைய அரண்மனையில் ஒருவரும் கண் விழித்திருக்க மாட்டார்கள். அவருக்கு ஒரு கப்பு காப்பியும், ஒரு துண்டு ரொட்டியும் தான் அப்போது ஆகாரமாம். அதை அவர் சாப்பிட்டுவிட்டு 8 மணி 9 மணிக்கு மகாராணி தம்மோடு காலை யுண்டிக்கு வரும்வரையில் வேலை செய்து கொண்டிருக்கிறார்.

MR. KADIRI KOYA.

மிஸ்டர் காதிரி கோயா.—கள்ளிக்கோட்டையில் பிரபலவர்த்தகரும், ஆஸ்திவந்தரும், நற்குண நற்செய்கைகளால் பெரும்புகழ் படைத்தவருமான மிஸ்டர் காதிரி கோயா என்னும் (மாப்பிள்ளை ஜாதி) முஸ்லிமானவரை மதராஸ் பாங்கியார் மோசடி செய்தாரென்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள். இவர் தம்முடைய பண்டகசாலையோடு மூன்று லட்சம் ரூபாய் பெறுமான விலை பெற்ற பொருள்களை மதராஸ் பாங்கியாருக்கு அடமானம் வைத்திருந்தாராம். சில தினங்களின்பின் பாங்கி உத்தியோகஸ்தர் பண்டகசாலையைப் பரிசோதனை செய்ய நேர்ந்தபோது, வைத்திருந்த ஸாமான்களில் அரை லட்சம் ரூபாய் பெறுமதியுடைய ஸாமான்களிருக்கவில்லை; இதற்குப் பதிலாக வெறும் பெட்டிகளும் குறைந்த விலையுள்ள ஸாமான்களடங்கிய பெட்டிகளும் இருந்தனவாம். இதுவே அவர் பேரில் கொண்டுவரப்பட்டிருக்கும் குற்றங்களுக்குக் காரணமாகும். மதராஸ் பாங்கியார் ஈட்டின்பேரில் 3 லட்சம் ரூபாயும், பில்லுகள் பேரில் ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபாயும் கொடுத்திருக்கிறார்கள். இவரைக் கள்ளிக்கோட்டை டிப்டி மாஜிஸ்ட்ரேட் 50 ஆயிரம் ரூபாய் ஜாமீன்பேரில் விட்டிருக்கிறார். இவரை அரெஸ்டு செய்ததானது கள்ளிக்கோட்டையில் பெருங்கிளர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது.

BABU SARADA CHARAN MITTER.

பாபு சாரதசரண மித்ரா.—பாபு சாரதசரண மித்ரா கல்கத்தா ஹைகோர்ட்டு ஜட்ஜ்களில் ஒருவராயிருந்து ஸமீபத்தில் விலகினவர். அவர் வேலையை விட்ட பிறகு, தேச நன்மைக்குற்ற பல விஷயங்களில் அக்கரையும், சுறுசுறுப்பும் காட்டி வருகிறார். இவர் ஒருமுறை லார்டு மார்லியின் திருத்தங்கள் திருப்திகரமல்லவென்று பகிரங்கமாய்ச் சொல்லி, ஆங்கிலேயரின் கோபத்தைச் சம்பாதித்தார். காங்கிரஸ் மகாஸபையின் நோக்கங்களில் இவருக்கு முழு ஒற்றுணர்ச்சியும் இருக்கிறதெனத் தெரிகிறது. ஹிந்து மதாசாரங்களில் அபிமானமுள்ளவர்; ராஜபக்தி முதிரப்பெற்றவர். தேச நன்மைக்கு உரிய எல்லா விஷயங்களிலும் இவருக்கு அபிமானமுண்டாயினும், ஒரே முக்கியமான விஷயத்தைத் தமது ஸொந்த விஷயம் போல் ஏற்று, அதைப்பூர்த்தி செய்வதில் தமது சக்தி முழுமையையும் உபயோகித்தல் நலமென்று நினைத்து, அப்படியே உழைத்து வருகிறார். காங்கிரஸ் மகாஸபை ராஜீய சம்பந்தமான காரியங்களில் புகுந்து, இந்திய ஜனங்கள் எல்லாரும் ஒரு ஜனமாகத் திரளும்படி செய்துவந்தாலும், ஹிந்து ஸமூகம் தற்காலமுள்ள நிலைமையை நோக்கி, அது தனியாய் ஐக்கியமும், பலமும் பெற்று, முன் செல்ல வேண்டிய முயற்சிகள் அவசியமென்றுணர்ந்து, அந்த வழியில் தமது புத்தியையும், காலத்தையும் செலவுசெய்து வருகிறார். சில காலமாக இந்தியா முழுமையும் தேவநாகரிலிபியொன்றே பொதுவான லிபியாக உபயோகப்படவேண்டுமென்று கருதி, அந்த நோக்கத்துடன் ஒரு ஸபை ஸ்தாபித்து, பல இடங்களுக்குப் போய் ப்ரஸங்கங்கள் செய்து வருகிறார்.

FUN AND ANECDOTE

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

A REFLECTION OF THE JUDGE.

நியாயாதிபதியின் தோற்றம்.—நியாயாதிபதி—"நீ திருடனென்று உன்முகம் நன்றாகச் சொல்லுகிறது."

திருடன்—"என்முகம் கண்ணாடியாயிருக்கிறதென்று இப்பொழுது தான் கண்டுகொண்டேன்."

STOLE HIS VESSEL.

தன் சொம்பைத்திருடினான்.—ஒரு திருடன் அயல் வீட்டிற்குப்போய் ஒரு சொம்பைத் திருடிக்கொண்டு தன் வீட்டிற்கு வந்துபார்க்க, அது தன் சொம்பென்று தெரியவந்தது. அப்போது அவன் உதடைக் கடித்துக்கொண்டு—"திருட்டுத் தடியன்! அவனைக் கொன்றாலும் பாவமில்லை" என்று அயல் வீட்டுக்காரனைத் தூஷித்தானாம்.

WASH THE DOG'S MOUTH.

நாயின் வாயை அலம்பி விடு.—ராமஸாமி:—கிருஷ்ணா! உங்கள் வீட்டு நாய் என்னைக் கடித்துவிட்டதடா?

கிருஷ்ணன்:—எங்கே கடித்துவிட்டது?

ராமஸாமி:—இதோபார் காலில் கடித்துவிட்டது, என்று ரத்தக் காயமாயுள்ள காலைக் காட்டினான்.

கிருஷ்ணன்:—கிடக்கட்டும்! எங்கள் நாயின் வாயைக் கழுவி விட்டால் ஸரியாய்ப் போய்விடும்.

INEXPERIENCED BOY.

அறியாத பையன்.—ஒரு கேஸில் ஜூரிமானாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு மருந்து கடைக்காரன், நியாயாதிபதியைப் பார்த்து "ஐயா, என் கடையில் ஒருவரும் இல்லை. ஒரு சிறிய பையன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். என்னை விட்டுவிடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

நியாயாதிபதி—"நான் உம்மை விடமாட்டேன். நீர் இந்த கேஸில் உட்கார்ந்து தீரவேண்டும்."

ஜூரிமான்—"அவ்வளவுக்கு அவ்வளவு உங்களுக்குத்தான் கஷ்டம். பையனை யாராவது விளக்கெண்ணை கொடு என்று கேட்கவந்தால் அவன் கந்தகத்திராவகத்தைக் கொடுப்பான்."

PAID DISCOUNT LAST TIME.

போனதடவை வட்டம்கொடுத்தான்.—ஒரு வைதிகன் கோயிலுக்குப் போய்க்கொண்டிருக்கையில் வழியில் அவருக்கு ஒரு ரூபாய் கிடைத்தது. அந்த ரூபாய் நன்றாய் சப்திக்காததினால் அதை மாற்றுவதற்கு ஒரு அணா வட்டம் கொடுக்க வேண்டியதாய் வந்தது. பிற்பாடு, மற்றொரு நாளும் ஒரு ரூபாய் கிடைக்க, சீ பாழும் ரூபாய்! போன தடவை ஒரு அணா வட்டம் கொடுத்தேன், இந்தத்தடவையும் கொடுப்பேனா? என்று சொல்லிக்கொண்டு அந்த ரூபாயை வீசி எறிந்தானாம்.

SAVED FROM DROWNING.

முழ்கிப் போகாமல் தப்பித்தது.—கோதாவரி நதியில் படகுகள் மூழ்கி ஜனங்கள் இறந்துபோன வர்த்தமானத்தைச் சொல்லிக்கொண்டிருந்த ஸமயத்தில், ஒருவன் தனக்குச் சென்ற வருஷம் நேர்ந்த ஒரு பெரிய விபத்தைத் தன் யுக்தியினால் விலக்கினதாகவும், அன்று தான் ஏறிய படகு மூழ்கி அதிலிருந்தவர்கள் எல்லாரும் இறந்து போயினரென்றும், தன் குழந்தைகளின் அதிர்ஷ்டத்தினால் தனக்கு அந்தத் துர்மரணம் தப்பிற்று என்றும் சொன்னான். எப்படித் தப்பிற்றென்று கேட்போர் ஆச்சரியப்பட்டுக் கேட்க "அந்தப் படகேறிய அன்று பின்னோடே புயல்காற்று அடிக்கும் என்று சில அடையாளங்களால் தெரிந்துகொண்டு பயந்து பிரயாணத்தை நிறுத்தி வீட்டுக்குத் திரும்பிவந்தேன். இல்லாவிட்டால் நான்கூட அன்று கோதாவரி பிரவேசமாயிருப்பேன்" என்று சொன்னான்.

SELLING CHEAP.

குறைந்த விலைக்கு விற்றல்.—புகையிலை விலையைக் காட்டிலும் குறைவாய்ப் புகைச் சுருட்டுகளை விற்பனை செய்துகொண்டிருக்கும் ஒரு சுருட்டு வர்த்தகன், தன்னைக்காட்டிலும் குறைத்து விற்றுக்கொண்டிருக்கும் மற்றொரு சுருட்டு வர்த்தகனைப் பார்த்து ஆச்சரியப்பட்டு "ஓய்! நான் அங்கங்கே புகையிலையைத் திருடிக்கொணர்ந்து நானே கஷ்டப்பட்டு சுருட்டுச்சுருட்டி இந்த விலைக்கு விற்றாலும் எனக்குக்கண்டுமுதல் ஆகவில்லையே! என்னைக் காட்டிலும் நீ குறைந்த விலைக்கு விற்றாயே! உனக்கு எப்படிக் கட்டிவருகிறது?" என்று கேட்டான்; அதற்கு மற்றவன் சிரித்து, "நீ புகையிலை திருடுகிறாய். நானோ சுருட்டையே திருடி விற்கிறேன்" என்று பதில் சொன்னான்.

CURIOSITIES.

வினோதங்கள்.

BORE THREE CHILDREN.

மூன்று குழந்தைகள் பெற்றாள்.—சேலம் ஜில்லா, தர்மபுரி தாலூகா, கோணங்கி அள்ளி கிராமம் மஜரா புதூர் கிராமத்தில், கந்தப்ப ஆசாரி என்கிறவரின் மனைவியார் போன ஆகஸ்டு மாஸம் 4-ம் தேதி செவ்வாய்க்கிழமை தினம் மூன்று ஆண் பிரஜைகளைப் பிரசவித்து, குழந்தைகள் மூன்றும், தாயும் ஸௌக்கியமாக இருக்கிறார்களாம்.

A STORK.

ஒரு நாரை.—ருஷ்யாதேசத்தில் ஒடெஸாவிலே ஒரு நாரை ஒரு குடியானவனுடைய வீட்டிலே கூடு கட்டிற்று. குடியானவன் அந்தக்கூட்டைப் பிய்த்து எறிந்து விட்டான். அதனாலே நாரை அவன் மேலே கோபம்கொண்டு பழிவாங்க நினைந்து பாம்புகளைத் தூக்கிவந்து அவனுடைய அறைகளிலெல்லாம்போட்டு நிரப்பிற்று. ஊராரெல்லாரும் தடிதண்டுகளோடேவந்து அவைகளை அடித்துக் கொன்று தொலைத்துவிடவேண்டிவந்ததாம்.

DIFFERENT COLORED PLOUGH CATTLE.

வெவ்வேறு நிறமுள்ள உழவு மாடுகள்.—அமெரிக்காவில், மெக்ஸிகோ தேசத்துக் குடியானவர்கள் தங்கள் நிலங்களை உழுகையில் காலையில் ஒரு நிறமுள்ள எருதுகளையும், மத்தியானத்துக்குமேல் வேறு நிறமுள்ள எருதுகளையும் ஏரில் கட்டுவார்கள். ஏன் இவ்விதம் செய்கிறீர்களென்று அவர்களைக் கேட்டால் அதன் காரணத்தை அவர்கள் அறியமாட்டார்கள். தங்கள் முன்னோர்கள் அவ்விதம் செய்துவந்ததால் தாங்களும் அவர்களைப்போல் செய்கிறதாகச் சொல்லுவார்கள். அந்த தேசத்து வேளாளர்கள் எருதுகள் வாங்கும்போதே பல நிறமானவைகளை வாங்குகிறார்கள். அல்லது தங்களுக்குள் எருதுகளை வைத்துக்கொண்டிராதவர்கள் காலையிலும் மாலையிலும் வெவ்வேறு நிறமுள்ள எருதுகளை எளிதில் வாடகைக்குப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

MARRIAGE IN PRISON.

கைவிலங்குடன் கலியாணம்.—கலியாணத்தால் ஏற்படும் கஷ்டமான கடமைகளையும், சுவாதீனக் குறைவையும் குறிப்பிட்டுத் தெலுங்கு பாஷையில் கலியாணமாயிற்றா என்று கேட்பதற்குப் பதிலாய் காலுக்கு விலங்கு கிடைத்ததாவென்று கேட்பார்கள். இப்படி உருவகமான பாஷையில் காலுக்கு விலங்கு மாட்டிக்கொள்ளுகையில், இத்தாலி தேசத்தில் ஒருவன் கையிலும் உண்மையாகவே விலங்கு மாட்டிக்கொண்டிருந்த விருத்தாந்தத்தைக் கேளுங்கள். மோர்ந்தே என்ற ஒரு ஊரில் கன்னமிட்டுத் திருடின பெரும் குற்றத்திற்காக ஒரு கள்ளன் பல வருஷங்களுக்குச் சிறைச்சாலையில் போடப்பட்டான். அவன் தான் கட்டிக்கொள்ள இருந்த பெண்ணுக்காகவே அந்தத் திருட்டைத் தான் கட்டிக்கொண்டதால் தன்னை அந்தப் பெண் மணந்துகொள்ள உத்தரவு கொடுக்க வேணுமென்று சிறை அதிகாரியை மிகவும் வருந்திப் பிரார்த்தித்துக் கொண்டான். அந்த உத்தியோகஸ்தர் அவன் மேல் இரங்கி, குருவைக் கூப்பிட்டு ஸங்கதியை அவரிடத்தில் சொல்லவே குரு அதற்கு இணங்கிச் சிறைச்சாலையில் கைவிலங்குடன் அந்தத் திருடனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தார். சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் யாவரும் இந்தக் கலியாணத்துக்குச் சாட்சிக்காரர்களாயிருந்தார்கள். கலியாணம் முடிந்தபின் மிகவும் அழுது பிரலாபித்த மணமகன், மணமகள் இருவரும் பிரிந்தார்களாம்.

9 BRANCHES IN A PALMYRA TREE.

பனைமரத்தில் ஒன்பது கிளைகள்:—திருவல்லிக்கேணி ஏ. ரங்கஸாமி ஐயங்கார் எழுதுகிறார்:—சென்ற அற்பசி ௴ ஸஞ்சிகையின் வினோத பகுதியில் ஒரு தென்னமரத்தில் இரண்டு கிளைகள் நன்னிலம் தாலூகாவில் இருக்கிறதாக எழுதியிருந்தது. இதை வாசித்தவுடன், நான் 4, 5 மாஸங்களுக்கு முன் பார்த்த ஒரு ஆச்சர்யம் ஞாபகத்தில் வருகிறது. மதுரை ஜில்லா (தற்காலம் ராமனாதபுரம் ஜில்லா) காரைக்குடியிலிருந்து குன்னக்குடி மார்க்கமாய் திருப்பத்தூருக்குப் போய்க்கொண்டிருந்தேன். அப்பொழுது என் நண்பர் ஒருவர் 'சாலையின் இடது பக்கத்தில் ஒரு வினோதத்தைபார்' என்று சொன்னார். என்ன வினோதமென்றால், ஒரு பனைமரம் இரண்டு ஆள் உயரம் வளர்ந்து 9 கிளைகளாய்ப்பிரிந்து கிளைகள் ஒரு ஆள் உயரம் போய் ஒன்பது கிளைகளிலும் நொங்குகள் காய்க்கின்றன.

NEWS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

—:o:—

INDIAN NEWS.

இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

◆

THE COCHIN EXHIBITION.

கோச்சி பொருட்காட்சி.—கொச்சி சமஸ்தானத்தில் ஒரு பொருட்காட்சியும், கால்நடைக்காட்சியும் இந்த வருஷக்கடைசியில் நடக்கப்போகிறதாய்த் தெரிகிறது. அந்தக்காட்சிகள் டிசம்பர் மாஸம் 17-ந் தேதி திறக்கப்பட்டு அடுத்த ஜனவரி மாஸம் 2-ந்தேதி வரையில் நடத்தப்படும். அந்தக் காட்சிகளுக்குப் பல வகைப்பட்ட விவஸாயப் பொருள்களும், தொழில் பொருள்களும், பலஜாதிக் கால்நடைகளும் தருவிக்கப்படுமென்றும், அப்பொழுது உழவுப் போட்டி, நெசவுப் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்படுமென்றும், அந்தப்போட்டிகளில் ஜெயித்தவர்களுக்கு வெகுமதிகள் கொடுக்கப்படுமென்றும் பொருட்காட்சிக்குவரும் பொருள்களில் முதல்தரமானவைகளாயிருக்கும் அந்த சமஸ்தானத்துக் காட்சிப்பொருள்களுக்கு ஸ்பெஷல் வெகுமதிகள் கொடுக்கப்படுமென்றும் தெரிய வருகிறது.

THE EMPEROR'S VISIT TO INDIA.

சக்ரவர்த்தி இந்தியாவுக்கு வருவது.—ஜார்ஜ் சக்ரவர்த்தி இந்தியாவுக்கு வரப்போகிறார். 1912-ம் வருஷம் ஜனவரி மாஸம் முதல் தேதி டெல்லி பட்டணத்தில் முடி சூட்டு உற்சவம் நடக்கும்போது தாம் ப்ரஸன்னமாயிருக்க விரும்புகிறாரென்று லார்ட் க்ரூ பார்லிமெண்டில் சொன்னார்.

FAMINES IN INDIA.

இந்தியாவில் பஞ்சங்கள்.—சென்ற நூற்றாண்டில் இந்தியாவில் முப்பது தடவை பஞ்சமுண்டாயிருக்கிறதாம். இவைகளிலுள்ள விசேஷம் ஏதுவெனில் ஒன்றைவிட ஒன்று அதிகக் கொடுமையாய் இருந்ததே. 1878-வருஷத்தில் 50-லக்ஷம் ஜனங்கள் மாண்டு போனார்கள். 1900-வருஷத்துப்பஞ்சம் வெகு கொடிது. கவர்ன்மெண்டாரால் பாதுகாக்கப்பட்டும் கூட 10-லக்ஷம் பிரஜைகள் மடிந்து போனார்கள்.

THE NEW VICEROY.

புதிய ராஜ ப்ரதிநிதி.—நாளது நவம்பர் ௴ 18-ம் தேதி காலை புது ராஜ ப்ரதிநிதியும், பரிவாரமும் பம்பாய் வந்து சேர்ந்தார்கள். பம்பாய்க் கார்பரேஷன் அதிகாரிகள் அன்று அவருக்கு நல்வரவுப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார்கள். 23-ம் தேதி புதன்கிழமை பகல் 1¼ மணிக்குக் கல்கத்தாவில் சார்ஜ் ஒப்புக்கொண்டார். அன்று தினமே பழைய ராஜ ப்ரதிநிதி லார்ட் மிண்டோ தன் சீமைக்குப் புறப்பட்டு விட்டார்.

SOME POSTAL CHANGES.

சில தபால் ஆபீஸ் திருத்தங்கள்.—தபால் ஆபீஸ் விஷயமாக சில திருத்தங்கள் ஆவதாகக் கேள்விப்படுகிறோம். இப்பொழுதிருக்கிறபடி 'வால்யூ பேயபிள்' முறையில் ஏதாவது ஸாமான் வேண்டினால், அனுப்புகிறவர்கள் பலவகையாலும் மோசஞ்செய்ய இடமிருக்கிறது. வெல்லம் வேண்டுமென்றால், 'அல்லம்' (இஞ்சி) அனுப்பிப் பணம் பிடுங்கிவிடுவது ஸுலபம். இனி அப்படியாகவொட்டாமல், மோசம் கண்டவர்கள் உடனே போஸ்டாபீஸுக்குத்தெரிவித்து, அது பைசலாகிறவரையில் மோசக்காரனுக்குப் பணம் செல்லாமலிருக்க வழி பிறக்குமென்று ஸமாசாரம். இது வி. பி. மூலமாய் வியாபாரம் செய்து மோசம் செய்யும் வர்த்தகர்களைக் கண்டிக்க ஏற்படும் திருத்தம். இதோடு இன்னொரு திருத்தமும் செய்யவேண்டியது நியாயம். அதாவது சில பேர்கள் ஸாமானையோ, பத்திரிகையையோ வி. பி. மூலமாய் அனுப்பிக்கிரயத்தையோ, சந்தாவையோ, வசூல் செய்துகொள்ளுகிறதென்று ஆர்டர் கொடுத்து விட்டு, வி. பி. பார்ஸல் போனதும் வேண்டியதில்லை என்று சொல்லி வியாபாரிகளுக்கும், பத்திராதிபர்களுக்கும், வீண் நஷ்டத்தையும், கஷ்டத்தையும் உண்டுபண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கும் தகுந்த நியாயம் பிறப்பிக்கவேணும். தவிர, பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு விளாசம் எழுதி அனேக துஷ்டர்கள் கெட்ட சங்கதிகளைத் தெரிவிக்கிறார்கள். மருந்து விற்பவர்கள்தான் இவ்விஷயத்தில் முழுமோசக்காரர். இனி அப்படியாகாமல், பிள்ளைகள் பேருக்குவரும் கடிதம், விளம்பரம் வகைராக்களை உபாத்தியாயருக்கே கொடுக்கவேண்டுமென்று உத்தரவுண்டாகுமாம். இது போன்ற திருத்தங்களுக்கு நாம் எப்போதும் நல்வரவு கூறலாம்.

161181

ORTHODOX SEA VOYAGE.

வைதீகமுறையான கப்பல் யாத்திரை.—பம்பாய் நகரில், கோவர்தன்தாஸ் கோகல்தாஸ் டெஜ்பால் என்று ஒரு வியாபாரி இருக்கிறார். அவர் ஐரோப்பா கண்டத்திற்கு, வைதீக ஆசாரமுள்ள ஹிந்துக்கள், மடி ஆசாரங்களுக்கு எவ்வித குறைவும் நேரிடாமல் கப்பல் யாத்திரையை நம்மவர்கள் நடத்தும்பொருட்டு ஒரு புகைக்கப்பல் வாடகைக்கு அமர்த்தியிருக்கிறார். 1911-௵ மார்ச்சு௴த்தில் மடி கப்பல் யாத்திரை ஆரம்பமாகும். ஏடன், கெயிரோ, ஆத்தன்ஸ், இத்தாலியா, ப்ரான்ஸ் தேசம், இங்கிலாண்டு, ஜர்மனி முதலான நாடுகளுக்கு இந்த யாத்திரைக்காரர்கள் போவார்கள். 40 ப்ராஹ்மண சமயல்காரர்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கப்பலில் தனிமையாக சமயல் செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். நம்முடைய கிரகத்தில் இருக்கிறதுபோல ஸௌகரியங்களும் ஏற்படும். பேர்வழி ஒன்றுக்கு, சாப்பாட்டுச் செலவு உள்பட ரூ. 2,500, கேள்வு கொடுக்கப்படும். மாமிசாதி உணவுகளென்ற பேச்சேயிருக்க மாட்டாது. ஸகலமும் வைதிக முறைகளையொட்டியேயிருக்கும். ஜார்ஜ் சக்ரவர்த்தியின் முடிசூட்டு ஸமயத்தையொட்டி ஸ்டீமர் இங்கிலாண்டு போய்ச் சேரும். போன இடத்தில் இந்த யாத்திரைக்காரர்கள் தங்கியிருக்க ஒரு வீடு குடிக்கூலிக்கு அமர்த்தப்படும். லண்டனில் அவர்கள் 6 வாரம் தாமதிப்பார்கள். மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்பிவரும்போது யாத்திரைக்காரர்கள் எல்லாரும் மார்ஸெயில்ஸ் பட்டணத்தில் வந்துசேர்ந்து விடவேண்டும். அங்கிருந்து ஸ்டீமர் நேராய் பம்பாய்க்கு வந்துவிடும்.

THE BENARES STATE.

காசி மகாராஜாவை மகுடபதி ஆக்கினது.—வாரணாசி என்கிற காசி க்ஷேத்திரத்திலுள்ள மகாராஜாவைப் புதுக்கோட்டை, கொச்சி மகாராஜாக்களைப்போல் ஸ்வாதீன அதிகாரம் பெற்ற ஒரு மகுடபதியாக இங்கிலீஷ் கவர்ன்மெண்டார் ஆக்கி விட்டார்கள். இது வரையில் இந்த வம்சத்தார் ஜமீன்தார்களாயிருந்தார்களேயன்றி, க்ரிமினல், ஸிவில் அதிகாரம் செலுத்தக் கூடிய மகுடபதிகளாயிருக்கவில்லை. இனிமேல் இவர் நம் தேசத்திலுள்ள பல அரசரைப் போல், தமக்குள்ள பூர்வீக ஸொத்துக்களைத் தம்மிஷ்டப்படி நிர்வகித்து, அந்த ஸொத்துக்களின் எல்லைக்குள் வஸிக்கும் ஜனங்களைத் தமது பிரஜைகளாகக் கொண்டு, அவர்கள்மேல் வரிகள் விதித்து அவர்களுக்குள் உண்டாகும் க்ரிமினல், ஸிவில் வழக்குகளைத் தம்மால் நியமிக்கப்பட்ட கோர்ட்டுகளைக் கொண்டு தீர்த்து, அவர்களுக்கு இவர் பரிபாலகராயும், இவருக்கு அவர்கள் பக்தியும் அடக்கமும் காட்டவேண்டிய ப்ரஜைகளாயும் தலைமுறைதத்துவமாய் ராஜ அந்தஸ்துப்பெற்று விளங்குவார். இப்போது இவருக்குள்ள ஸொத்துக்கள் 985 சதுரமைல் விஸ்தீரணமுள்ளன. இவருக்குக் கிடைக்கும் வரும்படி 80 ஆயிரம்பவுன், அல்லது 12 லக்ஷம் ரூபாய். இதில், கவர்ன்மெண்டுக்குக்கொடுக்கும் கிஸ்தி 30 ஆயிரம் பவுன், அல்லது 4½ லக்ஷம் ரூபாய் போக, 7½ லக்ஷ ரூபாய்தான் இவருக்குக் கிடைக்கக்கூடிய வரும்படி. இனி, இவர் ஸ்வாதீன அதிகாரம் பெற்ற அசரனானாலும், இவருடைய ஸொத்துக்கள் அதிகமாக்கப்பட்டனவாகத் தெரியவில்லை. ராஜ அந்தஸ்துக்கு லக்ஷணமாக ராம்நகர் என்ற கோட்டையொன்றை அவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கோட்டையைப்பெற்ற பெருமையைப் பாராட்டி 7½ லக்ஷம் ரூபாய் ரெவினியூவைக் கொண்டு இவர் அரசராக விளங்கவேண்டும். இவர் அதிகாரத்துக்கு அடங்கின ஜனங்கள் 4 லக்ஷத்துக்கு அதிகப்படுவார்களென்று தோன்றவில்லை.

இந்தியச் சரித்திரத்தில் பேர்போன செயிட்ஸிங் இவருடைய முன்னோரில் ஒருவர். அவரைத்தான் வாரன் ஹேஸ்டிங்ஸ் இம்ஸித்தாரென்று ப்ரிட்டிஷ் பார்லிமெண்டில் மகா க்யாதிவானான எட்மண்ட் பர்க், வாரன் ஹேஸ்டிங்ஸின்மேல் மற்றக் குற்றங்களோடு இதையும் சாட்டி விசாரணை செய்வித்தார். பெனாரீஸ் மகாராஜாவின் குடும்பத்தார் மற்ற ஜமீன்தார்களைப்போல் நடத்தப்படாமல் சில விசேஷ மரியாதைகளுடன் நடத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். தற்கால மகாராஜாவுக்கு 13 குண்டுகள் மரியாதையுண்டு. இவர் க்ஷத்ரியரல்ல. பிராமண ஜாதியைச் சேர்ந்தவர்.

இப்படி ஒரு ஜமீன்தாரை ராஜாவாக்கினது இதுவரையில் ப்ரிட்டிஷ் ஆட்சியில் நேரிட்டதில்லை. ராஜாக்களை ஜமீன்தார்களாக்கி யிருக்கிறார்களேயன்றி, ஜமீன்தார்களை ராஜாக்களாக்கினதில்லை. இந்தப் புதுமை லார்ட் மார்லிக்கும், லார்ட் மிண்டோவுக்கும் நம் மன்னர்களிடத்திலிருக்கும் மதிப்பின் பலனென்று நினைக்கிறோம்.—"சுதேசமித்திரன்."

FOREIGN NEWS.

அன்னிய நாட்டு ஸமாசாரங்கள்.

CORONATION OF THE EMPEROR.

ஜார்ஜ் அரசரின் முடிசூட்டு.—ஜார்ஜ் அரசரின் முடிசூட்டுக்கு அடுத்த வருஷம் ஜூன் மாஸம் 22-ந் தேதி நாள் குறிக்கப்பட்டிருக்கிறது.

EGYPTIAN CIVILISATION.

ஈஜிப்ட்டு தேசத்து நாகரிகம்.—4,000 வருஷங்களுக்கு மேற்பட்ட சித்திரங்களிலே கலப்பைகளும், உழவுசால்களும், பாம்படிக்கிற குத்தியும் இருப்பதால் ஈஜிப்ட்டு தேசத்தார் அந்தக் காலங்களிலே இவைகளைக் கையாடி வந்தார்களென்று தெரிகிறது.

SUGAR IN EUROPE.

ஐரோப்பாவில் சர்க்கரை.—ஐரோப்பாவில் 1910-ம் வருஷத்தில் 75-லக்ஷம் டன் நிறையுள்ள சர்க்கரை செய்யப்பட்டது; அதற்கு முன் வருஷத்தில் 60-லக்ஷம் டன் சர்க்கரைதான் செய்யப்பட்டது. 1905-06-ம் வருஷத்தில் 70 லக்ஷம் டன் சர்க்கரை செய்யப்பட்டபோது, அது மிகவும் அதிசயமாக எண்ணப்பட்டது. இப்போது இதைக் காட்டிலும் அதிகமாய் செய்யப்பட்டிருக்கிறது.

PUBLISHING A JOURNAL.

பத்திரிகை போடுதல்.—ஜர்மன் தேசத்தரசருக்கு ஸோஷலிஸ்டு அல்லது அபேதவாதிக் கக்ஷியாரின் கொள்கைகளைக் கண்டால் கொஞ்சங்கூட ஆகாது. இப்போது, அவர் அபேதவாதிகள் கக்ஷியாருக்கு விரோதமான கொள்கைகளை ஜனங்களுக்குள் நன்றாய்ப் பரவச்செய்ய ஒரு பத்திரிகை ஸொந்தத்தில் வைத்து நடத்த எண்ணுகிறார் என்று ஒரு பாரிஸ் பத்திரிகை சொல்லுகிறது.

LIVING 1000 YEARS.

ஆயிரம் வயது ஜீவிப்பவர்.—அமெரிக்காவில் போஸ்ட்டன் பட்டணத்திலே 2½ லட்சம் பேர் மரக்கனி பதார்த்தங்களையும், கொட்டைகளையும் தின்று பிழைக்கிறார்களாம். இவர்கள் வெண் வஸ்திரம் தரித்து, காற்றோட்டமுள்ள இடங்களில் நித்திரைசெய்து, பாலைத் தவிர்த்து, தினம் அரைமணி நேரம் தனித்திருக்கிறார்களாம். இதெல்லாம் என்னத்திற்கு? ஆயிரம் வருஷம் பிழைத்திருக்க.

KRUPP FACTORY.

குருப் தொழில் சாலை.—ஜனஸம்ஹாரம் செய்யும் ஆயுதங்கள் முக்கியமானவைகளில் குருப் என்னும் பீரங்கி ஒன்றாகும். இந்தப் பீரங்கிச் சாலை ஜெர்மனி தேசத்தில் எஸ்ஸென் என்னுமிடத்தில் இருக்கிறது. இதில் நாள் ஒன்றுக்கு 68,726 பேர் வேலை செய்கிறார்கள்.

INTRODUCTION OF EXOTICS.

நூதன செடிகளைச் சேர்த்தல்.—அமெரிக்கர் 1909௵ ஏப்ரல்௴ 1 தேதி முதல் ஜூன்௴ 30 வரையில் 585 செடிகளையும், வித்துக்களையும், அயல் நாடுகளிலிருந்து தங்கள் தேசத்திற்குச் சேர்த்திருக்கிறார்கள். முதலிலிருந்து 25,717 புதிய செடிகள் அந்த நாட்டுக்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

THE UNEMPLOYED IN LONDON.

லண்டனில் வேலை அகப்படாதவர்கள்.—ஸமீபத்தில் லண்டன் நகரத்தில் வேலை ஒன்றுங் கிடைக்காமல் கஷ்டப்பட்ட 1,175 உபாத்தியாயர்களில் சிலர் டைப்ரைட்டர் அச்சு யந்திரத்தில் அச்சடிப்பவரும், லெட்டர்களுக்கு கவர் செய்பவரும், குதிரை வண்டி ஓட்டுபவருமாக இருக்கவேண்டி வந்ததாம்.

UNBURNT CARBON.

புகைக் கரி.—லண்டன் நகரத்து புகைப்போக்கி குழாய்களிலிருந்து ஒரு வருஷத்தில் ஐம்பதினாயிரம் டன் கொண்ட புகைக்கரி எடுக்கப்படுகிறது. இது பயிர்களுக்கு எருவாக்கப்பட்டு, ஒரு ஏகராவுக்கு அரை டன் கரி உபயோகிக்கப்படுகிறது. இந்தக் கரி வருஷத்தில் சுமார் 40,000 பவுன் விலை பெறும்.

PADDY CULTIVATION

நெல் சாகுபடி.—ஆப்பிரிக்காவுக்கு மேற்கேயுள்ள ஸிராலியோன் என்ற இடத்தில் இப்போது உயர்ந்த நெல் சாகுபடி செய்து வருகிறார்கள். இந்தியாவில் விளையும் அரிசியைக் காட்டிலும் அது மிகவும் உயர்ந்ததாயும், ஸாரமுடையதாயும் இருக்கிறது. ஆனால் அங்கே ஏராளமாய் இன்னும் பயிர் செய்யவில்லை. இனிமேல் இந்த விஷயத்தில் மிக்க கவனம் செலுத்தி விஸ்தாரமாக நெல் சாகுபடி செய்யப்போகிறார்கள்.

A NOVELTY IN GLASS.

கண்ணாடியில் ஒரு நூதன வஸ்து.—இத்தலி தேசத்து வெனிஸ் நகரத்தில் ஒரு கண்ணாடிச் சாலையில் கண்ணாடியை உருக்கி வார்த்து வெகு ஸன்னமாய்ப்பரப்பி துணிபோல் செய்கிறார்கள். உயர்ந்த பட்டுப்போல் மினுமினுப்பும், பகட்டும், பளபளப்பான வர்ணமும் இதில் காணப்படுவதால், உயர்ந்த தொப்பிகளில் இதையே பட்டுக்குப் பதிலாய் உபயோகிக்கிறார்கள். ஆதலால் அந்தக்கண்ணாடிச்சாலைக்காரர்கள் வெகு அபாரமான வியாபாரம் நடத்திவருகிறார்கள். இந்தக்கண்ணாடிப் பட்டின் விசேஷம் என்னவென்றால், அதில் ஈரம் ஒட்டாது; ஆகையால் மழைத்தூறல் அதில் விழுந்தாலும் தொப்பிகள் கெட்டுப்போகா. இதற்குமுன் ஐரோப்பாவில் கண்ணாடியால் மயிர் போன்ற மெல்லிய இழைகளைச் செய்து ஒரு ஆபரணமாகவும், அபூர்வமாகவும் விற்று வந்தார்கள். இப்போது கண்ணாடிப் பட்டுத் துணியில் பலமான வியாபாரம் நடக்கிறதாகத் தெரிகிறது.

COCOANUT TOPES IN THE MALAY STATES.

மலாய நாடுகளில் தென்னந் தோப்புகள்.—மலாய நாடுகளின் கவர்னராகிய ஸர் ஜான் அண்டர்ஸன் தம் தவணை முடிந்து விட்டபோதிலும், இன்னும் மூன்று வருஷங்களுக்கு கவர்னர் அலுவலைப் பார்க்க உத்தரவு பெற்றிருக்கிற விஷயத்தில் அந் நாடுகளின் குடிகள் யாவருக்கும் மிகத்திருப்தியாம். அவருடைய முக்கியமான கவலை என்னவென்றால் மலாய நாடுகளிலெல்லாம் தென்னந் தோப்புகளை ஏதேஷ்டமாய் உற்பத்தி செய்கிறதுதான். தென்ன மரங்களுக்குத் தகுந்த தேசம் மலாய நாடுகள்தான். அங்கே நம் தேசத்தைப்போல் மழை காலம், வெய்யில் காலம் என்ற பருவ வித்தியாஸம் கிடையாது. ஸதா மழை பொழிந்துகொண்டேயிருக்கும். ஆகையால் தென்னம்பிள்ளைகளை நமது தேசத்தில் செய்வது போல அவ்வளவு கவனமாய்ப் பராமரிக்க வேண்டியதில்லை. ஜலம் பாய்ச்சவும் வேண்டியதில்லை. மணல் தாக்குகளில் வரிசையாய் வைத்துவிட்டால், வெகு சீக்கிரத்தில் வளர்ந்து பலன் கொடுக்கும். மேலும் நமது பாகங்களின் தேங்காய்களை விட அவைகள் இரண்டத்தனை பங்கு பெரியனவாயும் இருக்கின்றன. தேங்காய்க்கு மலாய பாஷையில் கிளாப்பா என்று பெயர். ஆனால் கொப்பரைத் தேங்காய்க்குக் கொப்பரா என்றுதான் அந்தபாஷையில் சொல்லுகிறார்கள்.

A COSTLY BEDROOM.

விலைகொண்ட படுக்கை அறை.—அமெரிக்காவிலுள்ள ஸாவுகார்களில் பிரபலமான மிஸ்டர் பீர்பாண்ட மார்கன் என்ற பிரபு ஸின்ஸினாட்டி நகரில் நடக்கும் சர்ச்சு காங்கிரஸ் என்று சொல்லப்பட்ட மத ஸம்பந்தமான ஸபைக்கு நியூயார்க் ஸெயிண்ட் ஜார்ஜ் கோவில் சங்கத்தின் பிரதிநிதியாய்ப் பிரயாணப் படுகிறாராம். அவர் அங்கே 3 வாரம் வரையில். தங்குவாராம் அவர் அங்கே தங்கும் அறையில் ராஜோபசாரமாய் நடத்தப்படுவாரென்று அடியிற் கண்ட ஆடம்பரங்களால் தெரியவருகிறது. அவர் படுக்கை வஸதிக்காக, 2,50,000 பவுன் செலவு செய்து நிர்மாணம் செய்த காலஞ்சென்ற அலெக்சாந்தர் மக்டோனாலட் பிரபுவின் கிரகத்தில் 25,000 பவுன் செலவு செய்து படுக்கை அறை ஒன்று தயார் செய்யப்படுகிறது. அந்த அறை விலையுயர்ந்த பட்டுக்களாலும், தங்கமிழைத்த சல்லாக்களாலும் அலங்கரிக்கப் பட்டிருக்கிறதாம்.

THE HEIGHT OF HOUSES.

வீடுகளின் உயரம்.—ஐரோப்பாவில் ஒன்பது அடுக்குகள் கொண்ட மாளிகைக்குமேல் உயரமாக வீடுகளைக் கட்ட விடுவதில்லை. அமெரிக்காவில் ஆகாய அளாவிகள் என்ற உயரமான கட்டிடங்களைக் கட்டி வருகிறார்கள். நியூயார்க் நகரத்தில் ஒரு கட்டிடம் பூமிக்குமேல் 715 அடி உயரம் கட்டப்பட்டிருக்கிறது. மற்றொரு கட்டிடம் 62 அடுக்குகள் மேன்மேலும் வைத்துக் கட்டும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது சுமார் பூமிக்குமேல் 900 அடி உயரமாயிருக்கும். ஒரு வெளியூர் பட்டணத்திலுள்ள ஜனங்கள் முழுவதும் வசிக்க அப்பேர்ப்பட்ட கட்டிடம் ஒன்றே போதும்.

◆

SEASON.

காலஸ்திதி.

RAINFALL.

மழை.—ஏப்ரல்மீ 1-தேதியிலிருந்து, நவம்பர் மாஸம் 29-ம் தேதி வரையில் பெய்தமழை அளவும் அந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், மேலே அங்குலம், ஸெண்டுகளாக குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	59·58	45·48
வால்டேர்	54·52	40·97
கோகனாடா	38·79	36·94
மசூலிப்பட்டணம்	48·48	39·53
நெல்லூர்	..	..
மதராஸ்	32·34	28·01
கடலூர்	44·22	42·68
நாகப்பட்டணம்	42·68	41·92
பாம்பன்	45·36	39·23
கொழும்பு	23·58	24·87
திருவநந்தபுரம்	52·92	72·44
கொச்சி	72·14	57·28
கள்ளிக்கோட்டை	119·07	110·22
மங்களூர்	106·65	113·03
மெர்க்காரா	117·78	123·28
ஹைதராபாத்	125·97	124·41
ரெய்ச்சூர்	27·63	30·57
பல்லாரி	20·71	30·06
கர்நூல்	25·70	19·30
கடப்பை	28·29	27·78
ஹாஸ்ஸான்	46·23	31·05
பெங்களூர்	37·35	34·41
கொடைக்கானல்	46·04	33·80
உதகமண்டலம்	68·66	47·50
கோயம்புத்தூர்	57·82	..
வேலூர்	61·73	..
சேலம்	41·81	37·89
திருச்சினப்பள்ளி	38·31	28·06
புதுக்கோட்டை	37·65	..
மதுரை	39·11	30·30
திருநெல்வேலி	20·98	20·87

MARKET REPORT.

மார்க்கெட் நிலவரம்.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—அக்டோபர் மீ 22-தேதியிலிருந்து நவம்பர்மீ 19௳ வரையில் அந்நிய தேசங்களிலிருந்து சென்னப்பட்டணத்தில் இறக்குமதியான துணி ஸாமான்களின் விவரம்.

நூலும் முறுக்கு நூலும் 7,22,429 ராத்தல், காரிகத்துணிகள் 38,94,892 கஜம். சலவைத்துணிகள் 18,37,768 கஜம். இதர தினுசுத்துணிகள் 37,34,360 கஜம். இதேகாலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 11,484 அந்தர் துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். நவம்பர் மாஸம் 22-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூலின் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-3 வரையில் இருந்ததாகத் தெரிய வருகிறது.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற அக்டோபர் மாஸம் 22-ந்தேதிமுதல் நவம்பர் மாஸம் 19-ம் தேதி வரையில் சென்னப்பட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 14 அந்தரும், ஜாவா தீவிலிருந்து 24,122 அந்தரும், இதர தேசங்களிலிருந்து 306 அந்தரும் இறக்குமதியாயின.

WANTED AGENTS.

ஏஜெண்டுகள் தேவை.

"பிழைக்கும் வழி"க்கு ஸந்தாதாரர்கள் சேர்க்க ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் ஏஜெண்டுகள் தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித்தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

“ பிழைக்கும் வழி” க்கு அநுபந்தம்.



Wm Wedderburn.

வில்லியம் வெட்டர்பர்ன்.

Supplement to the "Practical Life" "பிழைக்கும் வழி"க்கு அனுபந்தம்.

THE VENERABLE VETERANS.

மூன்று பெரியோர்கள்.

HUME. DADABHAI. WEDDERBURN.

ஹியூம். தாதாபாய். வெட்டர்பர்ன்.

MADRAS

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE

ஜி. எ. வைத்தியராமன், பி. எ, பத்திராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 2. Vol. 2. ஸாதாரண௵ மார்கழி௴—DECEMBER 1910. ஸஞ்சிகை 12. No. 12.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		Foreign. Rs. A. P.
Per annum ...	4 0 0	...	... 6 0 0
Single copy ...	0 6 0	...	... 0 8 0
Sample copy ...	0 2 0	...	... 0 3 0

RATES OF ADVERTISEMENT.

1 Page ...	5 0 0	per month.
½ do ...	2 8 0	do
¼ do ...	1 4 0	do
Less than ¼ page ...	0 8 0	per *inch* per month.

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors.—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4 Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ராஜாலக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய சகலருக்கும் உபயோகமான படங்களடங்கிய, ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்நிய நாடு.
வருஷம் 1க்கு ..	4 0 0	..	6 0 0
தனிப்பிரதி ..	0 6 0	..	0 8 0
மாதிரி காபி ..	0 2 0	..	0 3 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. சகலபணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு	5 0 0
½ பக்கத்திற்கு	,, ,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,, ,,	1 4 0
¼ பக்கத்திற்குக் குறைந்தால் மாஸம் ஒன்றுக்கு அங்குலம் ஒன்றுக்கு		0 8 0

வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியது.

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது,

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக நிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில் அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, மதராஸ்,

பிழைக்கும் வழி.
PRACTICAL LIFE.

புஸ்தகம் 2. Vol. 2. | ஸாதாரணஹு மார்கழிமீ—DECEMBER 1910. | ஸஞ்சிகை 12. No. 12.

பொருளடக்கம்.

பத்திராதிபர் குறிப்புகள் பக்கம்.
தமிழ் டைப்ரைட்டர்–புளியஞ்சருகுகளும் உரமாகின்றன 507–508
விசேஷ வியாஸங்கள்
தென் இந்தியாவில் ஜாயிண்ட் ஸ்டாக் வியாபாரம்
—டிவான் பகதூர் கே. கிருஷ்ணஸ்வாமி ராவ், ஸி. ஐ. ஈ. 510
வீட்டுப் பாத்திரங்கள்
—எம். ஸி. எஸ். அநந்தபத்மநாப ராவ், எம். ஏ., எல். டி. 513
இன்னும் சில பசுந்தாள் உரங்கள்
—பி. எல். தேவிசிங் 516
பாய் வியாபாரம்
—ஏ. ராமநாதன் 518
கருவையின் சில பிரயோசனங்கள்
—எஸ். ஸோமஸுந்தர தேசிகர் .. 519
ஒற்றை அலகாக நடவும் நாற்றுக்குத் தனி முதல் எருவும்
—ஸி. நாராயணய்யர் 521
குழந்தைகளுக்கு போதித்தல்
—வி. குப்புஸாமி அய்யர் 523
ஷாஜிஹான் 525
விசேஷத் திரட்டு
ஜாதிய ஊழியம்–விவஸாய காக்ஷிகள்–சீரகம் 529–536
பத்திரிகை ஆராய்ச்சி
வியாதிப்பட்ட பிராணிகளின் போஷணை–பசுக்கன்றுகள்–மரம் வைத்தல்–தர்ம சத்திரங்கள்–மாம்பழம் 537–540
சிறுவர் பகுதி 541–542
ஸ்திரீகள் பகுதி 543–544
பகுதிக் குறிப்புகள்
விவஸாயக் குறிப்புகள்–கைத்தொழில் குறிப்புகள்–வித்யா விஷயக் குறிப்புகள்–புஸ்தகக் குறிப்புகள்–சட்டக் குறிப்புகள்–சாஸ்திரீயக் குறிப்புகள்–வைத்தியக் குறிப்புகள்–மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்–வேடிக்கையும் துக்கடாக் கதைகளும்–விநோதங்கள் . 545–555
மாஸ வர்த்தமானம் 556–560

CONTENTS.

PAGE.
Editorial Notes
TAMIL TYPEWRITER-TAMARIND LEAVES AS MANURE 507-508
Special Articles
JOINT STOCK BUSINESS IN SOUTH INDIA
Dewan Bahadur K. Krishnaswami Rao, C.I.E., *Late Dewan of Travancore* 510
HOUSEHOLD UTENSILS
M. C. S. Anantapadmanabha Rau, M.A., L.T., *Assistant Professor of Physics, Presidency College, Madras* 513
SOME MORE GREEN MANURES
B. L. Davey Singh 516
THE MAT TRADE
A. Ramanathan 518
SOME USES OF THE BABUL
S. Somasundara Desikar 519
INDIVIDUAL MANURING OF SINGLY PLANTED PADDY.
C. Narayana Aiyar *Agricultural Inspector*... 521
TEACHING CHILDREN
V. Kuppusami Aiyar 523
SHAH JEHAN 525
Selections
NATIONAL SERVICE 529
AGRICULTURAL EXHIBITIONS 530
CUMMIN SEED 533
Review of the Press
Nursing of Sick Animals 537
Calves of Cows 537
Tree Planting 538
Choultries 539
The Mango 540
The Boys' Section 541-542
The Ladies' Section 543-544
Departmental Notes
Agricultural Notes 545
Industrial Notes 547
Educational Notes 548
Literary Notes 549
Legal Notes 550
Scientific Notes 551
Medical Notes 552
Personal Notes 553
Fun and Anecdote 554
Curiosities 555
News of the Month 556-560

EDITORIAL NOTES.

பத்திராதிபர் குறிப்புகள்.

Tamil Typewriter.

தமிழ் டைப்ரைட்டர்.-அச்சைபோல் எழுதுவதற்கு இங்கிலீஷ்பாஷைக்கு டைப்ரைட்டர் என்னும் யந்திரம் வெகுநாளாய் ஏற்பட்டிருக்கிறது. அதனுடைய உபயோகம் எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. கையினால் எழுதுவது அநேகமாய் நின்றுபோய் அநேக ஆபீஸ்களிலும், கம்பெனிகளிலும் டைப்ரைட்டரைக் கொண்டு அச்சுப்போல் எழுதிவருகிறார்கள். தமிழ்பாஷைக்கு இவ்விதமான கருவி ஏற்படுத்தவெகுநாளாய் சிரமப்பட்டு கடைசியாக இந்த பாஷைக்கும் டைப்ரைட்டர் ஏற்பட்டு விட்டது. தமிழ்பாஷையானது இங்கிலீஷைப்போல் 26 அக்ஷரங்களுக்குள் அடங்காமல், 330 அக்ஷரங்களுக்குமேல் உள்ளதாய் இருப்பதால் அதற்கு டைப்ரைட்டர் ஏற்படுத்துவது சிரமமே. இங்கிலீஷ் டைப்ரைட்டரில் 15 வருஷத்திற்குமேல் அநுபோகமுள்ளவரும் அதில்கியாதி பெற்றவருமாகிய தஞ்சாவூர் மிஸ்டர் டி. வி. சுந்தரம் அய்யர் தமிழுக்காக ஒரு டைப்ரைட்டரைக் கண்டுபிடித்திருக்கிறார். சென்னப்பட்டணத்தில் 5—6 பேர்கள் இந்தப் புதிய வித்தையைக் கற்றும் வருகிறார்கள். இங்கிலீஷ் டைப்ரைட்டரால் சொல்ப இங்கிலீஷ் படித்தவர்களுக்கு பிழைப்பு உண்டாயிற்று. இப்பொழுது ஐயர் உபகாரத்தால் இங்கிலீஷே தெரியாதவர்களுக்குக் கூட நல்ல பிழைக்கும் வழி உண்டாகிவிட்டது. இந்தக்கருவி தங்கள் காரியங்களை தமிழில் நடத்தும் பிராசுதாரர்களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும், நாட்டுக்கோட்டை செட்டிமார்களுக்கும், கோர்ட்டுகளுக்கும், தாசில்தார் கச்சேரிகளுக்கும், ஸப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களுக்கும் மிக உபயோகமுள்ளதாய் இருக்கும் என்பதில் ஸந்தேகமில்லை.

இந்தக்காலத்தில் பெரிய உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள், பத்திராதிபர்கள், முதலியவர்கள் கவனித்து எழுதவேண்டிய விஷயங்கள் அளவற்றவைகளாயிருக்கின்றன. இவைகளை எல்லாம் அவரவர் ஸொந்தமாகவே செய்வதானால் அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளில் தினம் நாலில் ஒன்று கூட முடியாது. இதற்காக அவர்கள் என்ன செய்கிறார்களென்றால் கோணல் எழுத்து என்று சொல்லப்படும் ஷார்ட்டு ஹாண்டு தெரிந்த ஒருவனை முன்னால் வைத்துக்கொண்டு அவர்கள் தங்கள் கடிதங்கள் முதலானவைகளை எவ்வளவு வேகமாய்ச் சொல்லலாமோ அவ்வளவு வேகமாய்ச்சொல்லிக் கொண்டே போவார்கள். முன்னால் உட்கார்ந்திருப்பவன் எஜமான் சொல்வதை யெல்லாம் கோணல் எழுத்தில் வெகு ஸுலபமாய் எழுதிவிடுவான். இப்படிச் சொல்லி முடிந்ததும் எஜமான் வேறு வேலையைப் பார்க்கப்போய் விடுவான். ஷார்ட்ஹாண்ட் ரைட்டர் அதாவது கோணல் எழுத்தில் எழுதினவன் எல்லாரும் எழுதுவதுபோல் ஸாதாரண அக்ஷரங்களில் எழுதி எஜமானுக்குக் கையெழுத்துப்போட அனுப்பிவிடுவான். பெரிய ஆபீஸ்களாயாவது அல்லது வியாபாரமாயாவது இருந்தால் அனுப்பும் கடிதங்களுக்கெல்லாம் நகல் வைத்துக் கொள்ளுவார்கள் அல்லவா? ஆதி நகல் கோணல் எழுத்தில் இருப்பதால் பிரதியை கையால் ஸாதாரண எழுத்தில் எழுதும் பக்ஷத்தில் வெளியே அனுப்ப ஒரு காப்பியும், ஆபீஸில் ரிக்கார்டுக்கு வைத்துக்கொள்ள ஒரு காப்பியும், ஆக இரண்டுகாப்பி எழுதும் படி ஏற்படுகிறது. இந்த உபத்திரவத்தை நீக்க இங்கிலீஷில் எழுதும் விஷயங்களுக்கு டைப்

ரைட்டர் என்னும் யந்திரம் ஏற்பட்டது. இதன் உதவியால் ஒரே தடவையாய் சில உபாயங்களால் ஐந்து ஆறு காப்பிகளை எடுத்து விடலாம். ஆகையால் இப்பொழுது அபாரமான வேலையுள்ள ஆபிஸர்களும், வர்த்தகர்களும், பத்திராதிபர்களும் கோணல் எழுத்து எழுதவும், டைப்ரைட்டர் யந்திரத்தில் அடிக்கவும் தெரிந்தவர்களை நியமித்து தங்களுக்கு ஆகவேண்டிய விஷயங்களை கோணல் எழுத்தில் எழுதச்சொல்லி பிறகு அதை டைப்ரைட்டரில் ஸாதாரண அக்ஷரத்தில் அடித்து, வேணுமானால் ஆபீஸ் ரிக்கார்டுக்கு ஒரு காப்பி வைத்துக்கொண்டு, பாக்கி காப்பிகளை அனுப்பவேண்டியவர்களுக்கு அனுப்புவது வழக்கம். இதேமாதிரியாக இப்பொழுது தமிழிலும் செய்யலாம். வேலூர் போலீஸ் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராயிருக்கும் மிஸ்டர் எம். சீனிவாஸ ராவ் தமிழ் பாஷைக்கும் கோணல் எழுத்து, அதாவது ஷார்ட் ஹாண்டு கண்டுபிடித்து, அதில் சிலபேர்கள் தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள். இதுவரையில் தமிழ் டைப்ரைட்டர் ஒன்று இல்லாமல் குறையாயிருந்தது. அந்தக்குறையையும் மிஸ்டர் சுந்தரம் அய்யர் இப்பொழுது நீக்கிவிட்டார். இந்த யந்திரத்தை பெரிய ஜமீன்தாரர்கள் முதலியவர்கள் வாங்கிஉபயோகிப்பதால் அவர்கள் வேலையை சீக்கிரத்தில் முடிப்பதோடு, கண்போக சங்கிலி எழுத்தைத் தட்டுக் கெட்டுத்தடுமாறி வாசிக்கவேண்டிய உபத்திரவமும் நீங்கும். இந்த யந்திரம் தமிழ் விவகாரம் ஜாஸ்தியாயுள்ள ஸப்ரிஜிஸ்ட்ரார், தாசில்தார் இவர்கள் ஆபீஸ்களுக்கு, கவர்ன்மெண்டார் இங்கிலீஷ் டைப்ரைட்டரைப்போல் வாங்கி ஸப்ளைசெய்தால், வேலை துரிதமாய் நடப்பதோடு எல்லாருக்கும் ஸௌகரியமாயும் இருக்கும்.

Tamarind Leaves as Manure.

புளியஞ்சருகுகளும் உரமாகின்றன.—செங்கல்பட்டு ஜில்லா பருத்திப்பட்டு கிராமத்தில் ஒருவர் புளியஞ்சருகுகளை எருவாக வயலில் போட்டு அதில் ஸ்வர்ணவாரி நெல் சாகுபடி செய்ததாயும், அதனால் நல்ல மாசூல் கிடைத்ததாயும் எஸ். பத்மா என்னும் நிருபர் நமக்கு எழுதிய வியாஸத்தை புரட்டாசி மாஸத்து ஸஞ்சிகையில் 349-ம் பக்கத்தில் பிரசுரித்து, இந்த விஷயம் மிகவும் நூதனமாயிருப்பதாலும், புளியமரத்தினடியில் ஸாதாரணமாய் ஒரு பயிரும் வளராததாலும், மேற்படி நிருபர் எழுதிய விஷயத்தை தீர விசாரித்தே பழக்கத்துக்குக் கொண்டுவர வேணுமென்று சொன்னோம். இந்த விஷயமாக, சாகுபடியான நிலம் எப்படிப் பட்டது? புளியஞ்சருகுதானா, வேறு சருகு ஒன்றுமில்லையென்று நிச்சயமாகச் சொல்லக்கூடுமா? நிலம் எப்படிப்பட்டது? மேடா பள்ளமா? தண்ணீர்தானாகவே பாய்ந்ததா? அல்லது இறைத்துப் பாய்ச்சப்பட்டதா? என்று விவரமாய் எழுதும்படி நம்முடைய நிருபரை கேட்டுக்கொண்டதற்கு அவர் எழுதுகிறார்:—

"புளியமரம்தவிர வேறுகிடையாது. அருகாமையிலும் புளியமரங்கள்தான். மற்ற மரங்களின் சருகுகள் வரக் காரணமில்லை. ஜலம் இறைத்துப் பயிராக்கப்பட்டது. நன்செய், பள்ளதாக்கு, களிப்பு நிலம், அதைத்தவிரவேறு எருப்போடக் கூடவில்லை. அவ்வளவு அஸந்தர்ப்பமாயிருந்தது. எல்லாரும் புளியஞ் சருகுகளைச் சேர்த்துக்கொண்டும் இருக்கிறார்கள். தாங்கள் தாமதமின்றி யோசியாமல் கேட்பவர்களுக்குப் பதில் சொல்லலாம். அதைப்பற்றி விவஸாயிகளுக்குத் தெரிவித்து அவர்களை பரிசோதித்துப் பார்க்கலாம்."

இந்த விஷயம் கொஞ்சம் புதிதாயிருந்தபோதிலும் புளியஞ்சருகுகளும் நல்ல எருத்தானென்று சொல்ல ஹேது இருக்கிறது. இது விஷயமாக நம்முடைய பத்திரிகையின் அபிமானியாகிய திருநெல்வேலி ஜில்லா இனும் வெள்ளக்கால் வே. ப. திருமலையப்ப முதலியார் எழுதுகிறார்:—

"சென்ற புரட்டாசி மாஸச் சஞ்சிகை 349-ம் பக்கத்தில் குறித்த புளியஞ்சருகு சிரேஷ்டமான பயிருணவுதான். எட்டுவேளையும் ஆயுற வேண்டாம். மஞ்சள், முதலிய கிழங்குவர்க்கப் பயிர்களுக்கு உரமாக வைத்துத்தக்க பலனை கிராமாந்திரங்களில் பழகுவோர் அறிவர். சில கிராமங்களில் புளியஞ்சருகு போடாததால் அவை உரமல்லவென்று உரைப்பது பிசகு. ஒரு கிராமவழக்கம் மற்றோர்கிராமம் தெரிவதற்கன்றோ பத்திரிகை பரவவேண்டுமென்று தேசாபிமானிகள் ஓலமிடுகின்றனர். புளியமர நிழலில் பயிருண்டாகாதென்பது நிதர்சனம். ஆனால் எந்த மரத்து நிழலில்தான் பயிருண்டாகும். ஒரு மரநிழலிலும் பயிர் உண்டாகவே மாட்டாது. புளியமரத்தடி மண்ணைக் கூட உரமாக்கலாம். பலனடையும் மனிதருக்கு எப்படி சுத்தவாயு அவசியமோ, அவ்வாறே செடிகளுக்கும் சுத்தவாயுவும், சூரிய உஷ்ணமும் அவசியம். மனிதர் மூக்கால் சுவாசிப்பர். செடிகளோ இலைக் கண்ணறைகளால் சுவாசிக்கும் தன்மை பொருந்தியுள்ளன. உதாரணமாக க்ரோட்டன் தினுசை எடுத்துக்கொள்வோம்: சூரிய ஒளி படாதபடியும், காற்றுப் பிரவேசியாதபடியும் இருட்டறைகளில் வைத்து ஜலம் விட்டுவருவோம். சிறிதுகாலமல்ல, சில தினம் சென்று பார்ப்போம். அந்த க்ரோட்டன் தினுசு இலை பசுமைமாறி வெளுத்து செடிமெலிந்து கேவலமாய்விடும். ஆகவே பயிர்களுக்கு சூரிய உஷ்ணம் அவசியமென்பது வெளிப்படை."

யாழ்ப்பாணத்தில் நன்செய்கைகளுக்குப் புளியஞ்சருகு எருவிடுவது ஸர்வசாதாரணமாயிருக்கிறதாக யாழ்ப்பாணத்துப் பத்திராதிபர் ஒருவரும் எழுதியிருக்கிறார். ஆடி சருகு கிடையாதபோது பணம்கொடுத்தாகிலும் தூரத்திலிருந்து விவஸாயிகள் சருகுகளைத் தருவிக்கிறார்களாம். இதனால் ஓரிடத்தில் பூர்வீகமான வழக்கம் மற்றொரு இடத்தில் நவீனமாய்த் தோன்றுகிறது. இதேமாதிரி இன்னொரு திருஷ்டாந்தத்தை நம்முடைய நேயர்கள் அறிவார்கள்.

இப்பொழுது புதுமுறையாக கையாளப்பட்டுவரும் நெல் ஒற்றை அலகு நடவானது கிருஷ்ணா ஜில்லா கங்கிப்பாட் என்னும் ஊரிலும், வங்காளத்தில் மைமன்ஸிங் என்னும் இடத்திலும், புராதன வழக்கமாயிருந்து நமக்கு ஸமீபத்தில்தான் தெரிந்தது. இவைகளைப்போன்ற இன்னும் அநேக நல்ல விவஸாய முறைகள் அங்கங்கே வழக்கத்திலிருக்கலாம். கண்ணும் கருத்துமாய்மட்டும் பார்த்து வரும் பக்ஷத்தில் சாஸ்திர ஆராய்ச்சியால் புதிதாய் ஏற்படும் முறைகளோடுபழைய முறைகளிலும் சிலமேன்மையானவைகள் என்று ஏற்படலாம். ஆகையால் ஒவ்வொரு இடத்துப்பயிர்செய்யும் முறைகளையும் இப்பொழுது நடக்கிறபடி எழுதிப்பத்திரிகைகளில் பிரசுரித்தால் பத்திரிகையை வாசிப்பவர்கள் நூதனமாய்த் தோன்றும் விஷயங்களை கவனிப்பார்கள். பிறகு அதைப்பற்றி விசாரணை செய்யத்தொடங்குவார்கள். இப்படிச் செய்வதால் பலபேர்கள் கூடி ஒரு விஷயத்தை யோசிக்கும்பொழுது மூலை முடுக்குகளில் உள்ள விஷயங்கள் யாவும் வெளிவந்துவிடும். கடைசியில் இது நல்லது, இது கெட்டது என்று ஏற்படும். விவஸாய அபிவிருத்தியில் ஊக்கமுள்ளவர்களுக்கு நல்ல ஞானமும், லாபமும் கிடைக்கும். இந்த நோக்கத்துடன் தான் நாம் குறிப்பிட்ட இடங்களில் சாகுபடி முறைகளை நடக்கிறபடி நம்முடைய பத்திரிகையில் பிரசுரித்து வருகிறோம். இப்படிப் பட்ட வியாஸங்கள் பத்திரிகையில் பிரசுரமாகும்போது சிலபேர்கள், "என்ன இது, தெரிந்த விஷயங்களையே போடுவானேன், பழங்கதைகள்" என்று எண்ணலாம். இப்படிச்செய்வதின் கருத்து என்னவென்றால் "ஓட்டைச் சட்டியில் சர்க்கரை இருக்கும்" என்பதே. ஆகையால் நம்முடைய நேயர்கள் அங்கங்கே உள்ள விவஸாய முறைகளைப் பத்திரிகையில் பிரசுரஞ்செய்ய எழுதவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். வியாஸங்கள் பிரசுரமானதும், நிருபர்களுக்கு வழக்கம்போல் ஸம்பாவனை செய்யப்படும்.

JOINT STOCK BUSINESS IN SOUTH INDIA.

BY

DEWAN BAHADUR K. KRISHNASWAMI RAO, C.I.E.

Late Dewan of Travancore.

தென் இந்தியாவில் ஜாயிண்ட் ஸ்டாக் வியாபாரம்.

இந்தியாவின் க்ஷேமமானது விவசாய வியாபார அபிவிருத்தியைப் பொறுத்திருக்கிறதென்பதை ஒருவரும் மறுக்க மாட்டார்கள். சொந்தமாகவே ஒருவரே வியாபாரம் செய்யக் கூடிய பணமும் திறமையுமுள்ளவர்கள் ரொம்ப இல்லை. ஆகவே பெரும் முதலாளிகளும், திறமையுள்ளவர்களும் சேர்ந்தாலொழிய மேலே சொன்ன விஷயங்களில் அபிவிர்த்திக்கு இடமில்லை. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நூற்றுக்கணக்கான கோடீசுவரர்களிருக்கிறார்கள். இவர்கள் வேறொருவருடைய ஒத்தாசையன்னியில் ஏராளமான முதல் போட்டு புதுத்தொழில்களைத் தனித்தனியாகவே ஸ்தாபிக்கக் கூடும். அப்படியிருந்தும் அங்கெல்லாம் எல்லா முக்கிய கைத்தொழில்களுக்கும் பங்குகளாகப் பணம் போட்டு கம்பெனிகளாகச் சேர்ந்து நடத்தி வருகிறார்கள். ஆகவே, இந்தியாவில் வியாபாரம் செய்வதற்குப் பங்குகள் சேர்த்தே ஆகவேண்டும். சென்ற 4, 5 வருஷங்களாக பல காரியங்களுக்கு அநேக ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகளில் அநேகம் முன்னுக்கு வந்ததாகத் தெரியவில்லை. இப்படி முன்னுக்கு வராததற்கு அடியிற்கண்ட விஷயங்களே முக்கிய காரணங்களாகும்.

முதலாவது, ஒருவியாபாரத்துக்கு வேண்டிய முதல் தொகையை ஆரம்பத்தில் குறைத்தே கணக்குப் போடுகிறார்கள். இதற்குக் காரணமென்னவென்றால், கம்பெனியை ஆரம்பிக்கிறவர்கள் ஆரம்பத்திலேயே வியாபாரத்துக்கு ஏராளமான பணம் வேணுமென்று சொன்னால் சேருகிறவர்கள் பங்கு போட யோஜிப்பார்களென்றும், வியாபார்த்தைத்தொடங்கி லாபம் வருமென்றுதோன்றிவிட்டால் பங்குகள்வந்து குவிந்து விடுமென்றும் நினைக்கிறார்கள். ஆனால் இப்படி எண்ணுவது பிசகென்றே அநுபவ ஸித்தமாக ஏற்படுகிறது. வேண்டிய பணமில்லாமல் வியாபாரத்தைத் தொடங்குகிறதைப் பார்க்கிலும் அதைத் தொடங்காமலிருப்பதே நலம். ஏனென்றால் வியாபாரத்தைத் தொடங்காமலிருப்பதால் தேசத்துப் பூர்வ ஸ்திதிக்கு ஹானியொன்றுமில்லை. தொடங்கி நஷ்டமடைந்து விட்டால் பிறகு வெகு காலத்திற்கு கம்பெனி வியாபாரமென்றால் ஜனங்கள் அஞ்சி அதனால் தேசம் லகுவில் முன்னுக்கு வராது.

இரண்டாவது, பங்குகள் எடுத்துக்கொண்டவரிடத்திலிருந்து அவர்கள் கொடுக்கவேண்டிய தொகையை முழுமையும் உடனே வசூல் செய்வதில்லை. பங்குகளையெடுத்துக்கொண்டவர்கள் செல்லான தொகைபோக பாக்கிப் பணத்தை எப்பொழுது வேண்டுமானாலும் செலுத்தக் கடமைப் பட்டிருந்தபோதிலும் பணத்தை வசூல் செய்யாததனால் அநேக தொந்திரவுகள் ஏற்படுகின்றன. கம்பெனிகளில் பங்குகளெடுத்துக் கொண்டால் பங்குப் பணத்தை கம்பெனியார் தவணைகளாகக் கேட்கலாம். ஷேர் ஹோல்டர் அதாவது பங்காளி, முதல் தவணை கொடுத்த பிறகு கம்பெனியார் இரண்டாவது தவணைப் பணம் கேட்கும்போது காலவித்தியாஸத்தினால் அதைக் கொடுக்க அசக்தனாய் விடுகிறான். சிலவேளைகளில் முதலில் பங்கெடுத்தவன் இறந்துபோயிருக்கலாம். அவனுடைய வார்ஸுகளைக் கம்பெனியார் தவணைப்படி பணம் கட்டவேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு இஷ்டமிருக்கிறதில்லை. சில வேளைகளில் கொடுக்க முடியாதவர்களாயுமிருக்கிறார்கள். தவிர, அநேகம் ஷேர் ஹோல்டர்கள் தவணைப்படி பணம் செலுத்தக் கூடியவர்களாயிருந்தாலும் பணத்தைக் கொடுத்தால் நல்ல லாபம் வருமென்று நிச்சயமாய் ஏற்பட்டாலொழிய பணத்தைக் கொடுக்கப் பிரியப்படுகிறதில்லை. ஆகையால் இப்படிப்பட்ட தொந்திரவுகளில்லாமல் ஒரு வியாபாரம் தொடங்க வேணுமானால் பங்குப் பணம் 'முழுவதும் வசூலான பிறகே தொடங்குவது நல்லது.

மூன்றாவது, அநேகம் கேஸுகளில் வியாபாரத்தில் அநுபோகமில்லாத வித்தியாதுரர்கள் வியாபாரத்தைத் தொடங்குகிறார்கள். இவர்கள் வியாபாரத்தைப் பற்றிப் புஸ்தகங்களில் படித்திருக்கலாம். ஆனால் வியாபாரத்தில் லாபமடைவதற்கு அதைப்பற்றிய அநுபோகம் வேண்டும். அது மேலே சொல்லிய வித்தியாதுரர்களிடத்திலில்லை.

ஆரம்பத்தில் சிலவேலைகளில் நஷ்டம் வரத்தான் செய்யும். ஆனால் இதைப் பொதுவாய் ஷேர்ஹோல்டர்கள் ஞாபகத்தில் வைக்கிறதில்லை. அதனால் அவர்களுக்குத் தொடங்கிய வியாபாரத்தில் அதிருப்தியுண்டாகி வியாபாரத்தில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

நாலாவது, எல்லா ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளும் டைரெக்டர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. கம்பெனிகளின் ஆரம்பத்தில் டைரெக்டர்கள் வருமானமேயில்லாமலோ, அல்லது ஸ்வல்ப வருமானத்துக்கோ உழைக்க வேண்டியிருக்கிறது. ஒருவன் வருமானமில்லாமலாவது அல்லது ஸ்வல்ப வருமானத்துக்காவது உழைக்கவேண்டுமானால் அவன் எடுத்துக்கொண்ட காரியத்தில் பொறுப்புள்ளவனாகவோ அல்லது தேசாபிமானியாகவோ யிருக்கவேண்டும். இந்த நற்குணங்கள் இனிமேல்தான் நம்மவர்களுக்குள் வெகுவாய் உண்டாகவேண்டும். ஸ்வதேசி ஸ்வதேசியென்று பேச்சு முழங்குகிறதே தவிர காரியத்தில் ஒன்றையும் காணோம். கம்பெனி விஷயமாகப் பேசுவதற்கு மீட்டிங்கு கூடவேண்டுமென்றால் வரவேண்டிய பங்காளிகள் வராததால் மீட்டிங்குகளை வாரம் வாரம் ஒத்திப்போடவேண்டியதாயிருக்கிறது. நம்மவர்களில் பொறுப் பில்லாததைக் காண்பிக்க வேறு என்ன வேண்டும்? சுய நலத்தை விட பொது நன்மையே பெரிதென்று எண்ண நாம் இனிமேல்தான் கற்றுக்கொள்ள வேண்டும். ஒருகம்பெனியில் ஒரு சேவகனை நியமிக்க ஷேர்ஹோல்டர்கள் எவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ளுகிறார்களோ அவ்வளவு சிரமம் ஒரு டைரெக்டர் நியமிப்பதிலாவது அல்லது வேறொரு உத்தியோகஸ்தரை நியமிப்பதிலாவது எடுத்துக் கொள்ளுகிறதில்லை. வேலையைச் செய்கிறவர்கள் ஏதோ அவர்களால் கூடியமட்டில் நிர்வகித்து வருகிறார்களென்றோ ஷேர் ஹோல்டர்கள் சந்தோஷப்படுகிறதில்லை. வேண்டிய அளவில் கட்டின வீட்டிற்குப் பழுது சொல்லுகிறார்களேயொழிய ஒரு வேலையை இப்படிச் செய்தால் ஸரிவர முடியுமென்று சொல்வாரைக் காணோம்.

ஐந்தாவது, கம்பெனிகளுக்கு யோக்கியதையாயும், புத்திசாலித்தனமாயும் நிலை நின்று நிர்வகித்து வேலை செய்யக் கூடிய சிப்பந்திகள் அகப்படுவது ரொம்ப துர்லபமாயிருக்கிறது. சிப்பந்திகள் கேட்கும் சம்பளமும், கம்பெனியின் வருமானமும், மலையும் மடுவும் போலிருக்கின்றன. சுதேசிக் கம்பெனிகளில் வேலையாயிருப்பவரில் அனேகர் எப்பொழுதும் வேறுவேலை எங்கே அகப்படுமென்றே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு குறிப்பட்ட

காலத்திற்கு உழைக்கவேண்டுமென்று ஒப்பந்தம் செய்துகொண்டாலும், வேலைக்காரன் முழுமனதோடுவேலை செய்வானென்று சொல்ல முடியாது. இப்படி முழுமனதோடு வேலை செய்யாதவனை வைத்துக்கொண்டிருந்தால் நாளடைவில் நஷ்டந்தான் வரும். தவிர, அவன் பிறரையும் கெடுத்து விடுவான்

ஆறுவது, ஷேர் ஹோல்டர்கள் தங்கள் கம்பெனி விஷயத்தில் எவ்வளவு சிரத்தைக் காட்டலாமோ அவ்வளவு சிரத்தைக் காட்டுகிறதில்லை. சிரத்தைக் காட்டாததோடு நிற்காமல் அவர்களும் ஷேர் ஹோல்டர்களோ என்று கேட்பவர்கள் ஸந்தேகப்படும்படியாக தங்களுடைய கம்பெனியைப் பற்றி இகழ்ந்தும் பேசுவதைக் காண்கிறோம் ஸாதாரணமாக ஒரு கம்பெனியில் குற்றங் குறையில்லாமல் எல்லாம் ஸரியாய் நடக்கும் பொழுதே அந்தக் கம்பெனியைப் பற்றிய விஷயங்களை ஜனங்கள் லகுவில் நம்புகிறதில்லை. புதிதாய் ஏற்பட்ட கம்பெனிகளில் நல்ல லாபம் வருவதற்கு முன்னால் எவ்வளவோ கஷ்டப்பட்டு சிரமப்படவேண்டியிருக்கிறது. இவைகளை யெல்லாம் ஜனங்கள் அறிகிறதில்லை. அவஸரப்பட்டு அதிருப்திப் படுகிறதால் வேலை பாழாய்ப் போகிறது.

மேலே சொல்லிய குற்றம் குறைகளெல்லாம் நாம் புதிதாய் கைத்தொழில், வியாபாரம் முதலிய விஷயங்களில் ப்ரவர்த்திப்பதினால் நேரிடுகிறவைகள். இவைகளைப் பார்த்து நாம் பயந்து போகக்கூடாது. ஒரு வியாதி இன்ன காரணத்தால் வந்திருக்கிறதென்று கண்டுகொண்டு விட்டால் அதுவே வியாதியைப்பாதி சொஸ்தப்படுத்தினதாக ஆகிவிடும். அதுபோல நம்மிடத்தில் என்ன குற்றம் குறைகளிருக்கின்றனவென்று தெரிந்துகொள்வதே அவைகளை நீக்க ஸரியான வழி. நாம் முன்னுக்கு வரவேண்டுமானால் விடாமுயற்சி வேண்டும் பிற்கால லாபத்தை உத்தேசித்து தற்காலம் நஷ்டப்படத் தயாராயிருக்கவேண்டும் பலபேர் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும். பரஸ்பர நம்பிக்கைவேண்டும் சிறு குற்றங் குறைகளை மன்னித்து விடவேண்டும். எடுத்த காரியத்தில் ஜெயம் நிச்சயமென்று எப்பொழுதும் மனந்தளராமல் எண்ணவேண்டும். பொது நலத்தை நாடி சுய நலத்தை மறக்கவேண்டும். இவைகளெல்லாவற்றையும் விட நாம் இப்பொழுது செய்வதுபோல் செய்யாமல் ஒப்புக்கொண்ட வேலையை நன்றாய்ச் செய்யவேண்டும். அப்படிச் செய்வது நம்முடைய பொறுப்பு, நம்முடைய கடமை, என்று எண்ணவேண்டும்

கே. கிருஷ்ணஸ்வாமி ராவ்

The Rain Tree of Peru.

பெருதேசத்து மழை மரம்.—இந்த மரமானது தென் அமெரிக்காவிலுள்ள பெருதேசத்தில் உள்ளது. மரம் பருமனாயும், இலைகள் அடர்ந்தும் இருக்கிறது. இந்த மரத்தில் ஒரு அற்புதமான குணமிருக்கிறது. அதாவது, ஆகாயத்திலுள்ள நீராவியைக்குளிரச்செய்து, அம்மரத்தின் கீழ் மழையாகப் பொழிவிக்கிறது. நதிகளில் ஜலம் வற்றிப்போகும் கோடை காலத்தில்தான், அந்த மரத்தின் கட்டை மூலமாயும், இலைகள் மூலமாயும் ஜலம் எப்பொழுது பார்த்தாலும் கொட்டின வண்ணமாய் இருக்கிறது. இப்படிப் பெய்கிற ஜலமானது சிறு அருவிகளாக ஓடுகிறது. நல்ல அருங்கோடையில் ஒரு மரம் இருபத்துநாலுமணி நேரத்தில், 9 காலன் ஜலம் பெய்கிறது இப்படிப் பல மரங்களை வைத்துப் பயிர் செய்து அவைகள் மூலமாய் அருவிகளாக ஓடும் ஜலத்தை அணைகள் கட்டி தேக்கினால் ஸாகுபடிக்கு உபயோகப்படுத்தலாமாம். இந்த மரங்கள் எந்த தேசத்திலும், எந்த பூமியிலும் விருத்தியாகின்றன. இந்தியாவில் தண்ணீரில்லாமல் தவிக்கும் அநேக இடங்களில் இந்த மரத்தைப் பயிர் செய்து பார்க்கவேணும் இது விஷயமாய் நமது ராஜதானி விவஸாய இலாகாக்காரர்கள் கொஞ்சம் சிரத்தை எடுப்பார்களென்று நம்புகிறோம்.

HOUSEHOLD UTENSILS.

BY

M. C. S. ANANTAPADMANABHA RAU, M.A., L.T.,
Assistant Professor of Physics, Presidency College, Madras.

வீட்டுப் பாத்திரங்கள்.

[ALL RIGHTS RESERVED.]

வீடுகளில் புழங்கப்படும் பாத்திரங்களில் சில மண்ணினால்செய்து சுடப்பட்டும், சில பூமியிலிருந்து வெட்டி எடுக்கும் ஒரு விதமான வழவழப்புடன் கூடிய மாக்கல் என்னும் கற்களால் ஸன்ன உளிகளைக்கொண்டு குடைந்து வேண்டிய உருவமாக்கப்பட்டும், வேறு சில தனி உலோகங்களாலும், அநேகம் பித்தளை முதலான கலப்பு உலோகங்களாலும் செய்யப்பட்டும் இருக்கின்றன. மண்பானை, கல்சட்டி முதலான மண்பாண்டங்களையும், கல்பாத்திரங்களையும் அடுப்பின்மேல் வைத்தால், அந்தப்பாத்திரங்கள் சீக்கிரம் சூடேறுவதும் இல்லை. நெருப்புக்குத் தூரத்திலுள்ள பாகங்கள் அதிகம் சுடுவதும் இல்லை. பால், முதலான மெதுவாக காய்ச்சவேண்டிய பதார்த்தங்களையும், காய்ச்சுவதால் சீக்கிரம் தீய்ந்து போகக்கூடிய தோசை முதலான பதார்த்தங்களையும், மண்ணினாலும், கல்லாலும் செய்தபாத்திரங்களிலேயே காய்ச்சுவதையும், பக்குவமாக்குவதையும் நாம் பார்த்திருக்கிறோம். இந்தப்பாத்திரங்கள் எளிதில் உடையுந்தன்மையன வாகையால் இவைகளை வெகு ஜாக்கிரதையுடன் உபயோகப்படுத்த வேண்டும்.

தாமிரத்தால் செய்த வெந்நீர் அண்டாவையும், வெண்கலப்பானையையும், இரும்புச் சட்டியையும், இவைபோன்ற மற்ற உலோகங்களாலும், உலோகக்கலப்புகளாலும் செய்யப்பட்ட பாத்திரங்களையும், அடுப்பின்மேல் வைக்க, அவை சீக்கிரம் காய்ந்துபோவதுடன், அதிகச் சூட்டை பாத்திரத்திலுள்ள பதார்த்தங்களுக்குக் கொடுக்கின்றன. ஒரே வடிவமும், கனமும், உள்ளளவும், உள்ள மாக்கல் பாத்திரம் ஒன்றையும், பித்தளைப் பாத்திரம் ஒன்றையும் எடுத்து அவைகளில் முறையே ஒருபடி ஜலத்தை விட்டு, ஒரே நிதானமாய் எரியும் அடுப்பின்மேல் வைத்துக்காய்ச்சினால் ஒரு படி ஜலம் அரைப்படியாக சுண்டுவதற்கு பித்தளைப் பாத்திரத்தில் ஒரு மணிநேரம் செல்லுமானால், கல்பாத்திரத்தில் சுமார் 20 மணிக்கு மேல் செல்லும். உலோகங்களெல்லாம் உஷ்ணத்தை சீக்கிரம் கிரஹித்து தங்களில் அதிக தூரம் பரவச்செய்து மற்ற வஸ்துக்களுக்குக்கொடுக்கும் சக்தி யுள்ளன வாகையால் சமையலுக்கு அநேகமாய் உலோகங்களால் செய்த பாத்திரங்களையே உபயோகிக்கிறோம். அன்றியும் உலோகங்களை வேண்டிய அளவு ஸன்னத்தகடுகளாகச் செய்யமுடியுமாதலால், நமக்குவேண்டிய பாத்திரங்களை நாம் விரும்பிய கனமுள்ளனவாகவும், பரிமாணமுள்ளனவாகவும் செய்துகொள்ளலாம். மேலும் உலோகங்கள் உறுதி உடையனவாகையால் அவைகளால் செய்தபாத்திரங்கள் புழக்கத்தில் சீக்கிரம் உடைந்துபோவதில்லை. ஆகையால் அடிக்கடி ஊர்விட்டு ஊர்ப்பிரயாணம் செய்துகொண்டிருப்பவர்களும், அவஸரமாய் சமையல் செய்யவேண்டியிருப்பவர்களும், ஸன்னத்தகடுகளால் செய்யப்பட்ட பாத்திரங்களையே உபயோகிக்கவேண்டி இருக்கிறது. ஸமாராதனைகளிலும், சத்திரங்களில் நூற்றுக்கணக்கான ஜனங்களுக்கு சமையல் செய்யும்போதும், உலோகங்களால் செய்யப்பட்ட உறுதியான பாத்திரங்களையே உபயோகிக்கவேண்டும். மேலும் உலோகங்களால்

செய்தபாத்திரங்களை புளி, வண்டல் மண் முதலியவற்றால் தேய்த்துக்கழுவி பளபளப்பாகவும், பார்வைக்கு ரம்மியமாகவும், வைத்துக்கொள்ளமுடியுமாதலாலும், இப்படி சுத்திசெய்துவைத்த பாத்திரங்கள் அழகாய் காணப்படுவதினாலே மனதுக்கு ஒருவித சந்தோஷத்தைத் தருவதாலும், இந்த தேசத்தில் இந்தப்பாத்திரங்களையே உபயோகிக்க எல்லாரும் விரும்புகிறார்கள். மெருகு வைத்த திண்டுக்கல் வெண்கல டம்ளரைப்பார்த்து இதிலல்லவோ நாம் பால் முதலானவைகளைக் குடிக்கவேண்டுமென்று சொல்லுவதை நாம் எவ்வளவு தடவையோ கேட்டிருக்கிறோமே.

இரும்புத் தகட்டினால் செய்யப்பட்டு, பலவர்ண ஸாமான்கள் சேர்த்து உருக்கிய பீங்கான் மண் பூசிய, எனாமல் பாத்திரங்கள் அன்னிய தேசங்களில் செய்து நம் தேசத்தில் அனேகமாய் விலையாகின்றன. இவை உலோகபாத்திரங்களைவிட ஸரஸமாயிருப்பதாலும், பழக்கத்திற்குப் புதிதாக வந்துக்கொண்டிருப்பதாலும் இவைகளை அனேகர் அதிக விருப்பத்துடன் உபயோகிக்கிறார்கள். இவைகளின் மேல்பரப்பு வழவழப்பாயிருப்பதால், அழுக்குகளை சீக்கிரம் போக்கிவிட முடிகிறது. அடுப்பின் மேல்வைத்தால், மேலேபடியும் புகைக் கரியையும் எளிதில் நீக்கமுடிகிறது. மேலும் இந்தப் பாத்திரங்களுக்குள் எவ்விதமான பதார்த்தங்களையும் வைக்கலாம். கச்சிப்போவதும் இல்லை, களிம்பு சேருவதும் இல்லை. ஆனால் பூசியமண் உதிர்ந்த இடத்தில் தென்படும் இரும்பு சீக்கிரத்தில் துருப்பிடித்து பாத்திரம் ஓட்டையாகிவிடுகிறது. உதிர்ந்த தூள்கள் ஆகாரத்துடன் கலந்து நம்முடைய தேகத்தில் சேர்ந்தால் விஷமென்று சிறந்த வைத்தியர்கள் சொல்லுகிறதால், இந்தப்பாத்திரங்களை அன்னிய தேசங்களில் அதிகமாக உபயோகிப்பதை தவிர்த்துக் கொண்டு வருகிறார்கள்.

வீட்டுப்பாத்திரங்களைச் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் தனி உலோகங்களாவன :—இரும்பு, செம்பு, வெள்ளீயம், அலுமினியம், காரீயம், வெள்ளி. செம்பு என்பதைத் தாமிரம் என்றும் தாம்பிரம் என்றும் சொல்லுவதுண்டு. நமக்கு உபயோகப்படும் கலப்பு உலோகங்கள் அனேகம் உள. அவைகளில் வெண்கலமும், பித்தளையும் முக்கியமானவை. பாத்திரங்களைப் பார்த்தாவது, கையிலெடுத்து கனம் முதலானவைகளை அறிந்தாவது, தட்டி தொனியை கவனித்தாவது, அந்தப்பாத்திரங்கள் எந்த உலோகங்களால் செய்யப்பட்டிருக்கின்றனவென்று எளிதில் சொல்லலாம்.

இரும்பின் நிறம் என்னவென்றால் அனேகர் கருப்பு என்றே சொல்லுவார்கள். இது பிசகு. இரும்புச் சட்டியையாவது, இரும்பு ஊசி அல்லது ஆணியையாவது, மேல் தூசி போகும்படி தேய்த்தபின் இரும்பின் நிஜ நிறம் தென்படும். தேய்த்த ஊசி மங்கலான ஒருவித வெண்மை நிறம் உடையதல்லவா? காற்றில் நீராவி கலந்திருக்கிறது. இரும்பைக் காற்றுப்பட வைத்திருந்தால் அது காற்றிலுள்ள பிராணவாயுவுடன் நாளடைவில் சேர்ந்து துரு என்று சொல்லப்பட்ட சிவப்பு நிறமுள்ள ஒரு பொடியாக மாறும். தேய்த்து பளபளப்பாய் வைத்திராத இரும்புப் பாண்டங்கள் மங்கலான சென்னிறமுடையனவாகத் தோன்றும். இரும்பு ஸாமான்களின்மேல் ஜலமும், காற்றும் படும்படியாக வைத்திருந்தால் ஒரு விதமான மஞ்சள் நிறமான துரு உண்டாகிறது. இரும்பு ஸாமான்கள் இம்மாதிரி அஜாக்கிரதையாக வைக்கப்பட்டிருந்தால், கெட்டியாகி

இரும்பெல்லாம் நாளடைவில் துருவாகிப் பொடியாக விழுந்துபோகும். ஆதலால் தேய்த்த இரும்பு ஸாமான்களில் ஜலம் தங்காதபடி துடைத்துவைக்கவேண்டும். ஜலம் மேலே விழாமல் கவனித்து ஸரியான இடத்தில் வைக்கவேண்டும். கொஞ்சம் எண்ணெயை மேலே தடவிவைத்தால் பாத்திரம் துருப்பிடிக்காது. கூர்மையான ஓரங்களையுடைய அம்பட்டன் கத்திமுதலான கருவிகளை இப்படியே காப்பாற்றவேண்டும்.

செம்பின் நிறம் சிவப்பு. செம்பின் நிறம் காற்றினால் இரும்பைப்போல் மாறுவதில்லையென்றாலும், நாளடைவில் சிவப்பு நிறம் கொஞ்சம் மழுங்குகிறது. செம்புப் பாத்திரங்களை புளியால் தேய்க்க, செம்பின் நிறம் நன்குவிளங்கும். ஈயம் என்னும் பதத்தை இரண்டு வித உலோகங்களுக்கு உபயோகப்படுத்துகிறோம். ஒன்று வெண்மை நிறம் அதிகமாயும், மற்றொன்று வெண்மை நிறம் மழுங்கியும் இருப்பதால், முன்னதை வெள்ளீயம் என்றும், பின்னதைக் காரீயம் என்றும் சொல்லுகிறோம். இவ்விரண்டும் கொஞ்சம் நீல நிறம் கலந்துள்ளன. காரீயம் அதிக பளுவுள்ளது. அதை நகத்தால் எளிதில் கீறலாம். காரீயத் துண்டை காகிதத்தின் மேல் உரைத்தால், கரியகோடு விழும். இதனால் ஜனங்கள் காகிதப்பென்ஸில்களில் உபயோகிக்கப்படும் ஸன்ன உருண்டைக் குச்சிகள் காரீயத்தால் ஆனவை யென்று சொல்லுவதுண்டு. இது பிசகு. காகிதப்பென்ஸில் ஒருவித கரிப்பொருளால் ஆனது. வெள்ளீயமும் பளுவுள்ளதே. இதைத்தான் தகரம் என்றும் சொல்லுவதுண்டு. ஆனால் இந்த வெள்ளீயத்தால் முலாம் பூசப்பட்ட இரும்புத்தகடுகளையே தகரம் என்று ஜனங்கள் வழங்குகிறார்கள். இது காகிதத்தின்மேல் கருப்புக் கோடுகிழிப்பது இல்லை. காரீயம் புளிப்பு ஸாமான்களுடன் கலந்து ஒரு விதமான தித்திப்பான விஷ பதார்த்தத்தை உண்டாக்குவதால் காரீய பாத்திரங்களை உபயோகப்படுத்தக் கூடாது. காரீயமும், வெள்ளீயமும் சீக்கிரத்தில் உருகும் தன்மையையுடையன. அடுப்பின்மேல் வைக்கும்போது இவைகளால் செய்த பாத்திரங்களில் ஜலம் வைத்தே சுடவைக்கவேண்டும். ஆதலால் நெய் உருக்குவதற்கும், எண்ணெய் காய்ச்சுவதற்கும், ஈயப் பாத்திரங்களை உபயோகிக்கக்கூடாது.

அலுமினியம் என்னும் உலோகம் புதிதாக வழக்கத்தில் வந்துகொண்டிருக்கிறது. அது அதிக லேசானது. வெண்மை நிறமுடையது. இராணுவ இலாகாவில் சிப்பாய்கள் அடிக்கடி இடம் விட்டு இடம்பெயர்ந்து செல்ல வேண்டியிருப்பதால் இந்த உலோகத்தால் செய்யப்பட்ட லேசான பாத்திரங்களை வழங்குகிறார்கள். இந்தப் பாத்திரங்களுக்குக் கொடுத்த மெருகு அழிந்த பிறகு மறுபடியும் பளபளப்பாக்குதல் கஷ்டமாதலால் இந்த உலோகத்தினால் செய்த கூஜா முதலான ஸாதாரணமாக குடிப்பதற்கு உபயோகிக்கும் பாத்திரங்களை ஜனங்கள் விரும்புகிறதில்லை. உலோகக்கலப்புகளைப் பற்றியும், உலோகங்களின் முக்கிய குணதிசயங்சளைப் பற்றியும் இன்னொரு ஸமயம் விவரிப்போம்.

எம். வி. எஸ். அநந்தபத்மநாப ராவ்.

“பிழைக்கும் வழி”.—கார்த்திகை மாஸத்துப் “பிழைக்கும் வழி”ப் பத்திரிகையில் வழக்கம்போலவே அரிய பெரிய விஷயங்கள் பொதிந்து நிரம்பி இருக்கின்றன. மொத்தத்தில் “பிழைக்கும்வழி”யை விடாது படித்து வருவோர்க்கு அனுவசியமாய் எத்துறையிலாவது “பிழைக்கும் வழி” ஏற்படுமென்பது திண்ணம்.—“இந்து நேசன்.”

SOME MORE GREEN MANURES.

BY

B. L. DAVEY SINGH.

இன்னும் சில பசுந்தாள் உரங்கள்.

போன அக்டோபர் மாஸத்து ஸஞ்சிகையில் பசுந்தாள் உரத்தைப் பற்றிப் பேசும்பொழுது முதல் முதலாக சணலைப்பற்றி விவரித்துச் சொன்னோம். இந்த வியாஸத்தில் இன்னும் சில பசுந்தாள் உரங்களைப்பற்றி விசாரிப்போம்.

INDIGO.

அவுரி.

பயிர் வகை.—இது கோதுப் பயிர் வகையைச் சேர்ந்தது.

பயிர் செய்யும் ஊர்கள்.—கர்நூல், கடப்பை, கிருஷ்ணா, கோதாவரி, கூடலூர், சேலம், திருச்சினாப்பள்ளி முதலிய ஜில்லாக்களில் ஏராளமாய் விளைகிறது.

பயிராகக்கூடிய இடம்.—இது விசேஷமாய் மணல் சாரியான இடங்களில்தான் பயிராகும். தண்ணீர் தாராளமாய் வடிந்து போகும்படியாயிருக்கவேண்டும். இருமண் பாங்கான இடம் முதல் தரமானது. களிமண் பாங்கான இடங்களில் பயிராகிறதேயில்லை.

ஜலக் கட்டு.—தண்ணீர் கட்டுவதென்பதே கூடாது. அதிக ஜலம் இருந்தால் அவுரி சீக்கிரம் அழுகிப்போம்.

நன்செயில் பயிர் செய்யும் விதம்.—சணலைப் போலவே இதை வருஷம் முழுதும் பயிரிடுவது என்பது சாத்தியமல்ல. நன்செய் வயல்களில் பயறு தெளிப்பது போலவே நெல் அறுப்பாவதற்கு சுமார் 20 நாளைக்கு முன் அவுரி விதையைத் தெளித்துவிடவேண்டும். பிற்பாடு பூமியிலுள்ள சொற்ப ஈரத்தைக் கொண்டே பயிராகிவிடும்.

மற்ற உபயோகம்.—இது யாவருக்கும் தெரிந்ததே. துணிகளுக்கு நீலச் சாயம் போடுவதற்கு உதவும்.

WILD INDIGO.

கொழுஞ்சி.

இது அநேகமாய் எல்லா விஷயங்களிலும் அவுரியை ஒத்ததாகவே இருக்கிறது. அவுரி எந்த இடங்களில் பயிராகிறதோ அந்த இடங்களில் கொழுஞ்சியும் பயிராகும். அவுரியைப் போலவே இதையும் நெல் அறுவடையாவதற்குக் கொஞ்ச நாள் முன்னால் தெளிக்கலாம். ஆனாலும், வெடிப்புக் காணக்கூடிய நன்செய் நிலங்களிலும் கொழுஞ்சியைப் பயறுடன் கலந்து தெளித்தால், நிலங்கள் அவ்வளவு வெடிப்புக் காண்கிறதில்லை. ஏனென்றால் பயறு பூமியில் பரவி ஈரத்தைக் காத்துக் கொள்ளுகிறது. ஆகையால் கொழுஞ்சிக்குப் போதுமான ஈரமிருக்கும்.

ஏகர் ஒன்றுக்கு 4 பட்டணம் படி விதை போட்டால் போதுமானது.

வருஷா வருஷம் விதை போடவேண்டுமென்பது அவசியமல்ல. கோடையில் விழுந்த விதை சேற்றிலேயே கிடந்து வயல் அறுவடையானபின் முளைத்துவிடும்.

DHANICHA.

THE FUTURE GREEN MANURE

"தனிச்சா."

மேற்சொன்னவைகளையெல்லாம் உத்தேசித்துப் பார்த்தால் நன்செய் நிலங்களிலேயே களிமண் பாங்காயிருந்தாலும் ஸரி, மணல் பாங்காயிருந்தாலும் ஸரி, ஜலம் கொஞ்சமாயிருந்தாலும் ஸரி, ஜலம் அதிகமாகயிருந்தாலும் ஸரி, கொஞ்சகாலத்திற்குள் தழை எரு கொடுக்கக்கூடிய பயிர் ஒன்று இருந்தால் அது விவஸாயிகளுக்கு எவ்வளவு அனுகூலமாயிருக்குமென்று ஜனங்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ! இப்பேர்ப்பட்ட பயிர் ஒன்று வங்காள ராஜதானியில் மிகவும் உபயோகப்பட்டுவருகிறது. அதற்குப் பெயர் "தனிச்சா" அல்லது "தக்கப்பூண்டு" என்றும் சொல்லுகிறார்கள். இந்த விதையை மன்னார்குடியிலும், கும்பகோணத்திலும் இரண்டொருவர் வாங்கிப் பரிசோதித்துப் பார்த்திருக்கிறார்கள்.

மன்னார்குடியில் போன வருஷம் சம்பா அறுவடையாவதற்குக் கொஞ்ச நாள் முன்னால் பயறு தெளிப்பது போலவே ஒரு ஏகரா சுற்றளவுள்ள நாற்றங்காலில் ஒரு பட்டணம் படி விதை விதைக்கப்பட்டது. சில விதைகள் முளை கண்டன. சில விதைகள் முளைக்கவேயில்லை. முளைத்தவைகளில் சில விதைகள் நாலு ஐந்து நாளில் பட்டுப்போயின. ஆகையால் அவுரியைப்போல் இதையும் பயிர்செய்வதில் பிரயோஜனமில்லை என்பது தெளிவாயிற்று. இந்த வருஷம் அதே இடத்தில் ஜலம் வந்ததும், ஜலத்தை வெட்டிவிட்டு நெல் விதை விதைக்கப்பட்டது. ஆறு மாஸ காலமாக ஒளிந்து கொண்டிருந்த "தனிச்சா" விதைகள் நெல்முளை காண்பதுடன்தானும் முளைகண்டன. நாற்று வளரவளர இந்தப் பயிரும் ஓங்கி வளர ஆரம்பித்தது. நாற்றெல்லாம் 60 நாளைக்குள் ஜாடாவாகப் பறிக்கப்பட்டது. நாற்றுப் பறிப்பதுடன் இந்தச் செடிகளையும் கூடவே பறித்தாய்விட்டது. இந்த வருஷத்தில் ஒரு அடி ஜலம் ஒரே அடியாய் ஒருவாரம் வரையில் எல்லா வயல்களிலும் கன மழையினால் குறையாமல் இருந்தது. நாற்றெல்லாம் அழுகிவிடுமோ என்று பலர் பயப்பட்டார்கள். சிலர் மற்றொரு முறையும் விதை விட்டார்கள். அப்படிக்கெல்லாம் இருந்தபோதிலும் இந்த "தனிச்சா"வானது மிகவும் செழிப்பாக வளர்ந்திருந்தது. அந்த இரண்டு மாஸத்திற்குள் ஆறு அடி உயரம் வளர்ந்தது. இன்னும் கொஞ்ச காலமானால் எவ்வளவு வளருமோ தெரியாது. சுமார் ஒரு ஏகராவுக்கு பாரமான வண்டி ஆறு வரையிலும் கண்டது. ஆகவே ஆறுகளிலும், ஏரிகளிலும் ஜலம் வந்ததும் வயல்களில் ஜாடாவுக்குக் கொஞ்சம் ஜலத்தை சீராக விட்டு இந்த விதையைத் தெளித்தால் எப்படியானாலும் நாற்றைப் பிடுங்கி நடுவதற்கு குறைந்தது நாற்பத்தைந்து நாளேனும் ஆகும். இதற்குள் இந்தச் செடி போதுமான அளவு உயரம் வளர்ந்து விடும். நாற்றுப் பறிக்கும் முன் இந்தப் பயிர்களை அந்த அந்த வயல்களிலேயே போட்டு மிதித்து விட்டு நாற்றை நட்டுவிடலாம். இந்த விதையை வரவழைத்து எல்லாரும் உபயோகிக்க வேண்டியது அவசியமான காரியம். இந்தச் செடியானது உருவத்தில் "பெருநெட்டி"போல் இருக்கிறது. இலைகளைப் பார்த்தால் முள்ளு முருங்கைபோல் கொஞ்சம் மழுங்கின முள்ளும் எல்லாவிடத்திலும் இருக்கிறது. வேரைப் பார்த்தால் நெட்டியைப் போல் லேசாயிருக்கிறது. மேலும் வேர் வெண்மையாயும், மூன்று நான்கு பிளவு பட்டதாயுமிருக்கிறது. அநேகமாய் இதை ஒரு வகை "நெட்டி" யென்றே சொல்லலாம். இந்தப் பயிரை ஆடு மாடுகள் தின்கின்றன. இதை சணல்போல் சேகரித்து வைத்துப் பிற்பாடு எருவாகப் போடுவது என்பது முடியாதென்று புலப்படுகின்றது.

பி. எல். தேவிஸிங்க்.

THE MAT TRADE.

BY

A. RAMANATHAN.

பாய் வியாபாரம்

பாய் அநேக இடங்களில் விசேஷமாய் நெய்யப்படுகிறது. பாய் நெய்யக் கோரைவேண்டும். கோரைக் கிழங்கென்னும் ஒருவகைக் கிழங்கிலிருந்து கோரை உற்பத்தியாகிறது. கோரைப் பயிருக்கு அடிக்கடி நீர்பாய்ச்ச வேண்டி இருப்பதால் கோரையை நஞ்சைப் பயிரென்றே சொல்லலாம். ஒரு ஏகராவில் கோரை நட்டால் ஸுமார் ரூ. 250 முதல் ரூ. 400 மதிப்புள்ள கோரை உற்பத்தியாகிறது.

கோரை மார் அளவு அதாவது 4 அல்லது 4½ அடி உயர்ந்த பிறகு அறுத்துவிடப் படுகிறது. பிறகு இரண்டு பக்கங்களிலும் கூரான கத்தியால் கோரைகளை மெல்லியதாகப் பிளந்து வெயிலில் உலர்த்தி கட்டுகளாகக் கட்டிவைத்து விடுவார்கள். பிளந்த கோரைகளில் கொஞ்சங் கொஞ்சம் சிகப்பு, பச்சை, மஞ்சள் முதலிய சாயங்களிட்டு உலர்த்தி வைப்பார்கள். பாய்க்காரர்கள் கோரைகளை ஸன்னக் கோரை யென்றும், கனக் கோரை யென்றும் பிரித்து, உயர்ந்த பாய்கள் நெய்ய ஸன்னக் கோரையையும் மட்டப் பாய்கள் நெய்ய கனக் கோரையையும் உபயோகிக்கிறார்கள்.

பாய் நெய்தல் மிகவும் சுளுவான கைத்தொழில். பாய் நெய்தலை ஒரே தினத்தில் கற்றுக்கொள்ளலாம். ஆனால் பாயின் தலைப்புக் கட்டுவதை நன்றாய்க் கற்றுக்கொள்ள ஒரு வார சாவகாசம் வேண்டும். தவிர, கல்யாண காலங்களில் படியில் போடும் 'சொக்கட்டான்' பாய் நெய்தலை பாய் நெய்கிறவனுடைய உதவி இல்லாமல் கற்றுக்கொள்ள முடியாது. இந்த ரகம் பாய் நெய்ய கற்றுக்கொள்ள ஸுமார் ஒரு மாஸ காலம் பிடிக்கும். கனக் கோரை ஸன்னக் கோரையைக் காட்டிலும் விலை மட்டு. 6 அடி நீளமும் 3 அடி அகலமுமுள்ள ஸாதாரண கனக் கோரைப் பாயை நெய்ய 6 மணி நேரம் பிடிக்கும். அதற்குத் தலைப்புக் கட்ட 1 மணி செல்லும். இங்கே குறித்திருக்கும் காலத்தில் ஸ்னானம் செய்யும் காலமும் சாப்பிடும் காலமும் சேர்ந்திருக்கின்றன. நெய்ய வல்லமை உடைய ஒருவன் காலை 6 மணி முதல் ஸாயங்காலம் 6 மணி வரையில் இப்படிப்பட்ட பாய்கள் 2 நெய்கிறான். ஆனால் ஒரு சொக்கட்டான் பாய் நெய்ய ஒரு பகல் பிடிக்கிறது. கூலி, வேலையை ஒத்தது. முன்சொன்ன ரகம் பாய் நெய்தால் 2½ முதல் 3 அணா வரையில் கூலி அகப்படுகிறது. பின் சொல்லிய ரகப் பாய் நெய்ய 5 அணா முதல் 6 அணா கூலி அகப்படும்.

(1) 6 அடி நீளமும் 3 அடி அகலமுமுள்ள கனக் கோரை பாயின் கரீது விலை.

கோரை விலை	ரூ. 0—2—6
கத்தாழை நார்	ரூ. 0—1—6
நெய்யக் கூலி	ரூ. 0—3—0
மொத்தம்	ரூ. 0—7—0

விற்கும் விலை 9 முதல் 12 அணா. லாபம் ஸுமார் நூற்றுக்கு 30 முதல் 40.

(2) 6 அடி நீளமும் 3½ அடி அகலமுமுள்ள ஸன்னக் கோரைப் பாய் கரீது விலை.

கோரை விலை	ரூ. 0—3—0
இரட்டை தாருக்கு நார் விலை	ரூ. 0—2—0
கூலி ...	ரூ. 0—3—6
மொத்தம்.	ரூ. 0—8—6

விற்கும் விலை. 12 முதல் 15 அணா. லாபம் முன்போல்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
31 DEC 1910
MADRAS.

(3) சொக்கட்டான் பாய் 6 அடி நீளம் 4 அடி அகலம்.

கோரை விலை	ரூ. 0—4—0
நார் ...	ரூ. 0—2—0
கூலி ...	ரூ. 0—6—0
மொத்தம்	ரூ. 0-12—0

விற்கும் விலை ரூ 1-4-0 முதல் 1-8-0 வரையில் லாபம் .நூற்றுக்கு 60 முதல் 90.

வட ஆற்காடு ஜில்லாவில் அநேக இடங்களில் பாய் நெய்கிறார்கள். வந்தவாசிப் பாய்கள் பேர்போனவை. ஆம்பூரிலும் அதைச் சுற்றிலும் பாய் நெய்கிறார்கள். நெய்யும் பாய்கள் மைஸூர் மாகாணத்தில் பவுரிங்கி பேட்டை-கோலார் முதலிய இடங்களில் ஏராளமாய் விலையாகின்றன. பாய் நெய்து லாபமடைய விரும்புகின்றவன் கோரையை விலைக்கு வாங்கினால் தகுந்த லாபம் கிட்டாது. ஒரு ஏகரா நிலத்தில் கோரை உற்பத்தி செய்தால் அவனுக்கு வருஷ மளவும் போதுமான கோரை உற்பத்தியாகும். ஒரு ஏகராவில் உற்பத்தியாகும் கோரை சுமார் 3000 முதல் 4000 பாய்கள் நெய்ய போதுமானது. இத்துடன் புஞ்சை நிலங்களில் கத்தாழையும் பயிரிட்டு வந்தால் போதுமான கத்தாழை நார் கிடைக்கும். ஆகையால் பாய் நெய்கிறவன் கட்டாயமாய் தனக்கு வேண்டிய நாரை தானே உற்பத்தி செய்யவேண்டும். இல்லாவிட்டால் நார் குறைந்தபக்ஷம் ஐந்தில் ஒரு பங்கு லாபத்தையாவது சாப்பிட்டு விடும். கத்தாழையிலிருந்து நாரை எடுக்க கத்தாழையை அறுத்து கட்டாகக் கட்டி சேற்றில் ஊறும்படிசெய்து பிறகு நாரை எடுக்கிறார்கள். இப்படிச் செய்வதைக் காட்டிலும் கத்தாழைப் பாளை ஒவ்வொன்றையும் நன்றாய் நசுக்கி கத்தாழையிலுள்ள சோற்றை முக்கால் பங்கு முதலிலேயே எடுத்துவிட்டுப் பிறகு சேற்றில் ஊரவைத்தால் நாரை சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளலாம். பாய் நெய்து வியாபாரம் செய்யும் ஒருவன் தன்னிடத்தில் மூன்றுவித ஆட்களை வைத்திருத்தல் அவசியம். அதாவது பாய் நெய்யும் ஆட்கள், கோரை கிழித்தல், உலர்த்தல், சாயம் இடல் இவைகளுக்கு ஆட்கள், நார் எடுத்துத் திரிப்பது முதலியவற்றிற்கு ஆட்கள். ஆனால் வீட்டிலிருக்கும் பெண்டுகளுக்கு நூல் திரிப்பதையும், பாயின் தலைப்புக் கட்டுதலையும் கற்றுக்கொடுத்தால் கூலிப்பணம் அதிகப்படாது. சில இடங்களில் பெண்டுகள் ஒழிந்த வேளைகளில் பாய்கள் கூட நெய்கிறார்கள்.

ஏ. ராமநாதன்.

SOME USES OF THE BABUL.

BY

S. SOMASUNDARA DESIKAR.

கருவையின் சில பிரயோசனங்கள்.

நம் நாட்டில் கருவைமரம் இன்னதென்றும் இவ்விடம் கிடைக்குமென்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆயினும் அதனுடைய பிரயோசனங்கள் இவைதானென அறிந்தவர்கள் சிலர்தான் என்று நிச்சயமாகச் சொல்லக்கூடும். ஆகையால் அதன் விவரத்தைக் கொஞ்சம் தெரிவிப்போம்.

இந்த மரத்தை நமது வயல் கரைகளிலும், வாய்க்கால் கரைகளிலும், ஆற்றோரங்களிலும் விசேஷமாகக்காணலாம். இது கரைகளைத் தவிர மற்ற இடங்களில் வளராதோவென்றால் வளரக்கூடியதுதான். ஆனால் தோப்பாக வளர்ப்பதில்லை. திருச்சினாப்பள்ளி ஜில்லா உடையார்பாளையம் காட்டிலும் கொள்ளிடக்கரை ஓரமாயும் ஏதேஷ்டமாக இருக்கின்றன.

இதன் பிரயோசனங்களாவன. முதலில் தழை விழுந்து நிலங்களுக்கு ஸரியான எருவாகிறது. காய்கள் ஆடுமாடுகளுக்கு விருப்பமான ஆகாரம். அவைகள் இலைகளையும் தின்னும். இதன் கிளைகள் கூடைபின்ன உதவுகின்றன. இதனால் பின்னப்பட்ட கூடைகள் பலமுடையனவாக இருக்கின்றன. மரம் கிளைகள் ஏர் கலப்பை, வண்டிச்சக்கரங்கள், பார்கள் முதலியவற்றிற்கு பலமானதென கொண்டாடப்படுகின்றன. சிலர் வீடுகளுக்கு சாத்தாகவும் உபயோகித்திருக்கிறார்கள். இதிலிருந்து வடியும் பிசின் அதிக விலை போகக்கூடியதும், மருந்தாக உபயோகப்படக்கூடியதுமாய் இருக்கிறது இங்கிலீஷ் பாஷையில் கருவை மரத்துக்கு அகேஷியா ஆராபிகா என்று பேர். பொட்டகிராப்பை கண்ணாடியினின்றும் பி. ஒ. பி. என்னும் அச்சுத்தாளில் கொண்டு வருவதைவிட விசேஷமாகக் கொண்டுவர இந்தக் கருவைப்பிசினை உபயோகிக்கலாம். நம்நாட்டுச் சிறுவர்கள் ஒரு காகிதத்தில் கோந்தினால் எழுதிவிட்டு மேலே கரியைத்தடவி பிறகு ஜலத்தில் கழுவி எடுக்க கோந்துபட்ட இடம் எழுத்துப்படிந்திருக்கப் பார்த்ததில்லையா? அதேமாதிரிதான் பொட்டகிராப்பை கண்ணாடியிலிருந்து கடிதத்திற்கு கொண்டுவர இது நன்றாய் உபயோகப்படுத்தப்பட்டுவருகிறது. லண்டனில் மெஸர்ஸ் மார்ட்டன் கம்பெனியார் இந்தப்பிசினை பவுண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் விற்கிறார்கள். இது மற்ற மருந்துகளுடன் சேர்த்து வயிற்றுப் போக்குக்கு கொடுக்கலாமாம். வெள்ளை விழுதலுக்கு இன்னும் சில மருந்துகளுடன் சேர்த்துக்கொடுக்கப்படுகிறது. இருமல் முதலியவைகளுக்கும் கொடுக்கலாம். இப்படி மார்ட்டன் கம்பெனியார் ஒரு ரூபாய்க்கு விற்பதை நாம் அரை ரூபாய்க்கு விற்றால் நமக்கு லாபம் கிடைக்காதா? மரங்களில் ஒருநாள் ஒன்றுக்கு 2 முதல் 4 அவுன்ஸ் நிறை வரையில் பிசின் வடியும். இப்படி இரண்டு மாஸங்களுக்குத்தான் வடியும். இதற்கு செலவோ ஒன்றுமில்லை. இதைத் தவிர்த்து, பட்டையும் உதவுகிறது. இது தோல் பதனிட உபயோகப்படும். பளபளப்புள்ள சிவந்த வர்ணமேருகிறது. இதைத் தவிர்த்து பட்டையை ஜலத்தில் கொதிக்கவைத்துப்புண்களைக் கழுவினால் சீக்கிரத்தில் அவைகள் ஆறும். நல்லெண்ணெயுடன் பட்டையை நன்றாகப் பொடியாக்கி தூளாகச்சேர்த்துத்தடவ பிளவை முதலியவை சொஸ்தமாகுமாம். மரம் உரல் குந்தாணி, உலக்கை முதலியவைகளுக்கும் உபயோகப்படுவதுடன் விறகுக்கும் உபயோகப்படுகிறது. இப்படி பலவிதமாகவும் உபயோகப்படும் கருவையை நாம் விருத்தி செய்கிறோமா? இல்லவேயில்லை. நான் சிறுவயதில் பார்த்ததில் நாலில் ஒரு பங்கு கூட காணுவதில்லை. இதை சுலபமாக விருத்தி செய்யலாம். முதல் வேண்டுவதில்லை. பங்குனி, சித்திரை மாஸங்களில் மரத்தடியில் விழுந்து கிடக்கும் விதைகளைப் பொறுக்கி ஆவணி புரட்டாசி மாஸங்களில் மழை பெய்து பூமி ஈரமாய் இருக்கும் போது போட்டு விட்டால் பிறகு ஜலம் விடவேண்டியதில்லை. குறைந்தது 10 அடிக்கு ஒன்றுதான் இருக்கவேண்டும். முளைத்த பிறகு ஆடுகள் கடிக்காமலும், வேலை ஆட்கள் முள் குத்துமே என்று வெட்டிவிடாமலும் மாத்திரம் கவனிக்கவேண்டும். இரண்டு வருஷத்தில் அரை அடிச் சுற்றுக்கு மேல் ஆகிறது. இதை முள் இல்லாமலும் உண்டாக்கலாம். விதைகளைப் பொறுக்கி சாணிப்பாலில் இரண்டு நாளைக்கு ஊற வைத்து விட்டு பிறகு ஊன்றிவிட்டால் முள் இராது.

எஸ். ஸோமஸுந்தர தேசிகர்.

INDIVIDUAL MANURING OF SINGLY PLANTED PADDY.

BY

C. NARAYANA AIYAR,

Agricultural Inspector.

ஒற்றை அலகாக நடவும் நாற்றுக்குத் தனிமுதல் எருவும்.

நெல் சாகுபடியில் சிரத்தையுள்ளவர்கள் சென்ற சுமார் 5, 6 வருஷமாக நாற்றங்காலில் விதையைக் குறைத்துப் பரவி, அப்படி சிறுக விதைவிடப்பட்ட நாற்றங்காலிலிருந்து கிடைக்கும் நாற்றை ஒவ்வொரு அலகாக (தனி முதலாக) நடுவதினால், விதை லாபமட்டுமல்லாமல், நல்ல கண்டுமுதலையும் அடையலாமென்று செவ்வையாய்க் கண்டு கொண்டிருக்கிறார்கள். ஒற்றை அலகுநடவை புதிதாய் எத்தனித்தவர்கள் முதல் ஒன்று அல்லது இரண்டு வருஷத்தில் கொஞ்ச விஸ்தீர்ணத்தில் பரீக்ஷார்த்தமாக நட்டபோதிலும், வரவர தங்களுடைய முழு விஸ்தீர்ணத்திலும் ஒற்றை அலகாகவே நடப் பிரயாசப்பட்டுவருகிறார்கள். அவ்விதமாய் சாகுபடி செய்து வருகிறவர்களை விசாரித்தால் உண்மையாகவே தங்களுடைய முழுநிலத்திலும் ஒற்றை அலகு நடுவதில் ஸாதாரணமாய்ப் பிடிப்பிடியாக நடுவதினால் ஏற்படும் செலவைக்காட்டிலும் ஜாஸ்தியாவதில்லை என்றும் சொல்லுகிறார்கள். ஆனால், அப்படி நட்டு அனுபவமில்லாதவர்களோ, ஒற்றை அலகு நடுவதற்கு நாற்றங்காலுக்கும், வயலுக்கும் ஏராளமான உரம் முதலிய செய்நேர்த்திகள் செய்யவேண்டுமென்றும், ஜாஸ்தி கூலி பிடிக்குமென்றும், இன்னும் பலவிதமான ஆக்ஷேபங்களும் சொல்லுவார்கள்.

ஒற்றை அலகே அப்பியாஸமாகக் கையாடி வருபவர்களுக்கு ஷை அபிவிருத்தி மார்க்கத்தினால் உண்டாகும் கண்டு முதலைக் காட்டிலும் ஜாஸ்தியான கண்டு முதலைக் கொடுக்கக்கூடிய கஜ நடவு தனிமுதல் எருவிடுதல் என்னும் அபிவிருத்தியைப்பற்றி கீழே சொல்லப்பட்ட குறிப்புகள் உபயோக முள்ளனவா யிருக்கும். மேலே சொல்லப்பட்ட நடவு, சென்ற வருஷத்தில், கும்பகோணம் தாலூகா, பாபநாசம் ஸ்டேஷனுக்குத் தெற்கே ஸுமார் 4 மைல் தூரமுள்ள, திருக்கருகாவூரில் (திருக்களாவூர்) மகா-ள-ள-ஸ்ரீ டி. எஸ். நாராயணஸாமி அய்யர் அவர்களால் பரீக்ஷார்த்தமாக நடப்பட்டது.

பரீக்ஷார்த்தமாக நடப்பட்ட விஸ்தீர்ணம் 41 ஸெண்டு நிலம். நடப்பட்ட ஸ்தலம் குருவை விதை விடப்பட்டு நாற்றங்கால் ஆனதாலும், ஷை பரீக்ஷை செய்ய யோஜனை அவருக்குப் பிற்பாடு தோன்றினபடியாலும், ஷை நடவுக்காக தனியாக நாற்றுத் தயாரிக்கப்படவுமில்லை, ஷை. வயலுக்கு விசேஷித்த வேலைகளும் செய்யப்படவில்லை. நடப்பட்ட வயல் முன்னால் மண்வெட்டியால் கொத்தப்பட்டு மூன்று சால் உழப்பட்டிருந்தது. ஸாதாரணமாக நெருக்கமாக விதை விடப்பட்ட பெரும் சம்பா (செம்பாளை) நாற்றிலிருந்து பட்டை உரப்புள்ளதாக பொறுக்கி நாற்பதாம் நாள் பறிக்கப்பட்டு, அற்பசி மாஸ மத்தியில் நடவு நடப்பட்டது. நடவு, சாலை சாலையாக எக்கண்டமும் $2\frac{1}{2}$ அடி இடைவெளி கொடுத்து ஒரே அலகு நடப்பட்டது. நடுவதற்குமுன் ஒவ்வொரு முதல் நடக்கூடிய இடத்தில் ஒரு சிராங்கை மணலுடன் ஒரு சிராங்கை தொழு (சாணி) எருவும் போட்டு கையால் குழப்பப்பட்டு, ஒரே நாற்று நடப்பட்டது. இப்படி எருவிட 12 வண்டி தொழு எருவும், 24 வண்டி மணலும் செல்லும், களை எடுக்கும்

தருணத்தில் இடைவெளி மண் வெட்டியால் கொத்தப்பட்டது. அந்த ஸமயத்தில் ஒரு ஏகருக்கு ஒரு பாரம் வீதம் ஷை 41 ஸெண்டுக்கு உள்ள 8 மணங்கு கடலைக் கொட்டைப் பிண்ணாக்கை 2 வண்டி சாம்பலுடன் கலந்து, அதை 2 தடவையாகப் பிரித்து, 20 நாளைக்கொருதரம் அதை முதலின் பேரில் வீதம் செய்து ஒவ்வொரு முதலைச் சுற்றியும் கையால் பறித்துக்கொண்டு எருவைக்கப்பட்டது. அறுவடையாகும் வரையில் ஒரு அங்குலம் ஜலம் பாய்ச்சப்பட்டது. முதல் ஒன்றுக்கு 60 கிளைக்குக் குறையாமல் 100 அலகு வரையிலும் இருந்தது. இதற்கு ஆள் கூலி, எருக்கிரயம் ஜாடாவாக ஏற்பட்ட செலவு ரூபாய் 11-0-0 ஆயிற்று. இதே விஸ்தீர்ணமுள்ளதும், இதே மாதிரி குருவை விதை விட்ட நாற்றங்காலில் ஸாதாரண நடவில் 6 கலம் (144 பட்டணம் படி) நெல்லும், 12 கட்டு வைக்கோலும் காண, இந்த வயலில் 26 கலம் நெல்லும் (ஏகர் ஒன்றுக்கு 1,522 பட்டணம் படி) 36 கட்டு வைக்கோலும் கிடைத்தன.

இந்த வருஷத்திலும் மகா-௱-௱-ஸ்ரீ நாராயணஸாமி அய்யரவர்கள் மேலே சொல்லிய நடவை ஸுமார் 4·33 ஏகர் நிலத்தில் நடத்தியிருக்கிறார்கள். அதில் 3·33 ஏகர் பெரும் சம்பா என்ற செம்பாளை நெல்வகையையும், மீதி ஒரு ஏகர் நிலத்தில் மத்திய மாகாணத்திலிருந்து இந்த ராஜதானிக்குப் புதிதாய் சில வருஷங்களுக்குமுன் கொண்டுவரப்பட்ட பாங்கு நெல்லையும் பரீக்ஷார்த்தமாய் நட்டிருக்கிறார்.

பெரும் சம்பா.—நாற்றங்காலில் ஸெண்டு ஒன்றுக்கு ¾ பட்டணம் படி வீதம் ஆடி மாஸ முதலில் விதை விடப்பட்டு, ஆவணி மாஸம் 15 தேதியில் நடவு செய்யப்பட்டிருக்கிறது. வரிசைகள் சென்ற வருஷத்தைப் போலவே 2½ அடி தூரத்திலிருக்கின்றன. ஆனால் வரிசையில் முதல்கள் ஒரு அடி தூரத்தில் நடப்பட்டிருக்கின்றன. ஸுமார் 1 பட்டணம் படி விதையைக்கொண்டு 2-2½ ஏகர் நிலம் நடவாகியிருக்கிறது. நடவாகி இப்போது (1910-ம் வருஷம் அக்டோபர் மாஸம் 10-ம் தேதி) ஒரே மாஸமாகியிருந்தும், ஒரு முதலுக்கு 50 கிளைக்குக் குறையாமலும், ஸராஸரியில் 60-65 கிளைக்குக் குறையாமலும் இருக்கின்றன. நடுவதற்குமுன், சென்ற வருஷத்தைப் போலவே, எருவைக்கப்பட்டதைத் தவிர, வேறு எரு இன்னும் வைக்கப்படவில்லை. இடைவெளி ஒரு தடவை, நடவான 25-ம் நாள மண்வெட்டியால் கொத்தப்பட்டு இப்போது முதல்களுக்கு எருவிடத் தயாராயிருக்கிறது

பாங்கு நெல்.—4½ மாஸ வயதுள்ள இந்த நெல் தினுசானது வைகாசி மாஸம் முதலில் நாற்றங்காலில் விதை விடப்பட்டு ஆனி மாஸம் முதலில் நடவாகியிருக்கிறது. வரிசைக்கு வரிசை 2 அடியும், வரிசையில் 1 அடியும் வைத்து ஒரே முதல் நடப்பட்டிருக்கிறது. நட்ட 1½ மாஸத்தில் இடவெளி கொத்தப்பட்டு ஏகர் ஒன்றுக்கு 5 மணங்கு கடலைக் கொட்டைப் பிண்ணாக்கும், 2 வண்டி சாணி எருவும் முதலின் பேரில் வீதம் செய்துவைக்கப்பட்டது. இப்போது பயிர் கதிராகி இன்னும் ஒருவாரம் அல்லது 10 நாளில் அறுவடையாகும் ஸ்திதியிலிருக்கிறது. ஒரு முதலில் 30 கிளைக்குக் குறையாமலும், ஸராஸரிக்கு 35 முதல் 50 கிளை வரையிலும் இருக்கின்றன.

மேலே சொல்லப்பட்ட இரண்டு வகைகளும் காலத்தில் நடப்பட்டு இப்போது பயிர் இருக்கும் ஸ்திதியைக் கவனிக்கும்போது சென்ற வருஷத்தில் கிடைத்த கண்டுமுதலைக் காட்டிலும் இரட்டிப்புக்கண்டுமுதல் கிடைக்குமென்று தோன்றுகிறது. ஷை சாகுபடியையும், இன்னும் ஒற்றை அலகில் பத்தி நடவு என்ற சாலை நடவையும் பார்வையிட இது நல்ல ஸமயமாகையால், இந்த நூதன முறையை தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள மிராசுதாரர்கள் திருக்கருகாவூருக்குப்போய் நேரில் பார்த்து தங்களுடைய பண்ணைகளில் கொஞ்ச விஸ்தீரணத்திலாவது அடுத்த வருஷத்தில் நட்டு பெருத்தலாபத்தை அடையவேண்டுமென்ற நோக்கத்துடன் இது எழுதப்பட்டது.

சி. நாராயணய்யர்,

TEACHING CHILDREN.

BY

V. KUPPUSAMI AIYAR.

குழந்தைகளுக்கு போதித்தல்.

ஸ்வாமியினால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்தில் ஒவ்வொன்றும் அதனதன் வளர்ச்சியில் வித்தியாஸப்பட்டிருந்தபோதிலும் சில இயற்கை விதிகளை ஒத்தே விருத்தி அடைகின்றன. இதன் உண்மையை எந்த சாஸ்திரத்திலும் காண்கிறோம். மனிதனுடைய தேக அமைப்பையும், இதர சில மிருகங்களினுடைய அமைப்பையும் ஒத்திட்டுப் பார்க்கும்போது சில சிறு விஷயங்களில் வித்தியாஸமிருந்தாலும் பெரும்பான்மையாய் ஒற்றுமை இல்லாமலிருக்கிறதா? மனிதனும் மூச்சுவிடுகிறான், மரமும் மூச்சு விடுகிறது. மனிதனும் சாப்பிடுகிறான், மரமும் உணவை உட்கொள்ளுகிறது. இவைகளைப் பற்றி யோசிக்கும்போது உலகத்தில் வஸ்துக்கள் வேறுபட்டிருந்தபோதிலும் அவைகளில் பொதுவான சில அம்சங்களைக் காண்கிறோம். வேறுபட்டிருக்கிற வஸ்துக்களிலே ஒற்றுமை இருக்கும்போது ஒரேவிதமான வஸ்துக்களின் கூட்டத்தில் எவ்வளவு அதிகமாக ஒற்றுமை இருக்கவேண்டும்?

முன்னாளில் படிப்புக்காக சில வித்வான்களிடத்தில் சிறுவர்கள் நான்கு அல்லது ஐந்து பேர் விடப்பட்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் வித்வான்களாக இருந்தபடியாலும், அவர்களிடத்தில் விடப்பட்ட சிறுவர்களின் தொகை கொஞ்சமாக இருந்ததினாலும், ஒவ்வொரு சிறுவருடைய போக்கை அறிவது கஷ்டமாக இல்லாதபடியினால் அவர்கள் தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட சிறுவர்களுக்கு அவரவர்களுக்குத் தகுந்தபடி கல்வியை ஊட்டி, யோக்கியதையை உண்டாக்கினார்கள். தற்காலத்திலோ ஒரு உபாத்தியாயரிடத்தில் சில வேளைகளில் 50 அல்லது 60 பிள்ளைகள் விடப்படுகிறார்கள். இவர்கள் எல்லாருடைய போக்கையும் அறிந்து அவரவர்களுக்குத் தகுந்தபடி, அதாவது எந்த சாஸ்திரத்தில் அவர்களுக்கு உற்சாகம் இருக்கிறதோ அந்த சாஸ்திரத்தைப் போதிப்பது எவ்வளவு கடினம்? தவிர சாஸ்திரங்களோ நாளுக்கு நாள் அதிகரித்து மேல் மேலும் அதிக பாகங்களாகப் பிரிக்கப்பட்டும் வருகின்றன. இதையெல்லாம் உத்தேசித்துத் தற்காலத்தில் ஒவ்வொரு உபாத்தியாயரும் தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட சிறுவர்களுக்கு அவரவர்களுக்குத் தகுந்த போதனை புகட்டத் தன்னாலியன்ற வரையில் முயலுவது கடமையேயாகும். இது எப்படி முடியும்? எந்த வழியை அனுஸரித்தால் சுலப சாத்தியமாகும்? என்கிறதைப்பற்றி ஒவ்வொரு உபாத்தியாயரும் யோசனை செய்யவேண்டியது. இதற்கு ஸுலபமான மார்க்கம் எது வென்றால் குழந்தைகளுடைய வளர்ச்சிக்குரிய இயற்கை விதிகளை அனுஸரித்து நடப்பதே. இயற்கை விதிகளுக்கு விரோதமாக எதுவும் செய்ய முடியாது. குழந்தைகள் எப்படி வளருகின்றன? எதை இச்சிக்கின்றன? எப்படி அவைகளுக்குச் சந்தோஷமான வழிகளில் போதனை செய்யலாம்? என்று நாம் கட்டாயம் பார்க்க வேண்டும்.

ஒரு குழந்தை பிறக்கிறது. பூமியில் பிறக்கும்போது கத்திக்கொண்டே விழுகிறது. கொஞ்ச நாளைக்கெல்லாம் கை கால்கள் முளைத்து தவழ்ந்து விளையாடுகிறது. இவைகளெல்லாம் அவ்வளவாக நம்முடைய கவனத்தைக் கவராமல் போய்விடுகின்றன. ஆனாலும்

இவைகள்தான் குழந்தையினுடைய விருத்தியை நமக்குக் காட்டுகின்றன. குழந்தை ஸாதாரண வஸ்துக்களைக் கண்டு ஆச்சரியப்பட்டு நிற்கிறது. எதையும் தொட்டுத் தொட்டுப் பார்க்கிறது. எதிரில் விளக்கை வைத்திருந்தாலும் விளக்கு சுடும் என்று தெரியாமையினால் அதைத் தொட ஓடுகிறது. கையில் எது அகப்பட்டாலும் அதை உடைக்க முயலுகிறது. விளையாட்டிலோ மிக ஆவல் கொள்ளுகிறது. தன்னைப்போலச் சிறு குழந்தைகளைக் கண்டு விட்டால் கொண்டாட்டம்தான். பெரியவர்கள் எந்த விதமாக நடந்துகொள்ளுகிறார்களோ, அந்த விதமாகத் தானும் தன்னுடைய விளையாட்டில் நடிக்க ஆரம்பிக்கிறது. தொட்டிலில் கட்டித் தொங்க விட்டிருக்கும் பஞ்சவர்ணக் கிளிகளைப் பார்க்கப் பார்க்க உற்சாகம் கொள்ளுகிறது. கையில் ஒரு கரித்துண்டு அகப்பட்டு விட்டால் சுவரெல்லாம் நாசந்தான். என்ன அழுதாலும் தாயின் தாலாட்டுக் குரலைக் கேட்டுத் தூங்கிவிடுகிறது. தெருவில் மேளம் வந்து விட்டால் ஸங்கீத வித்வான்போல் தலையை அசைத்துத் தாளம் போட்டு ஆனந்தப் படுகிறது. நாய் பக்கத்திலில்லாமல் சாப்பிடுவதில்லை. இன்னும் எவ்வளவோ சேஷ்டைகளைப் பார்க்கிறோம். அவைகளெல்லாவற்றையும் எழுதுவதென்றால் இடம் போதாது. உபாத்தியாயர்கள் இவைகளை யெல்லாம் கவனித்துக்காரணங்களை உணர்ந்து, அதற்கேற்ற போதனையை ஆரம்பித்தால் பிள்ளைகளுக்குக் கல்வியில் எவ்வளவு ஆனந்தம் உண்டாகும்?

மேற்கண்ட குறிகளுக்கெல்லாம் காரணங்கள் ஸாதாரணமாகப் பின் வருபவைகளென்றே சொல்லலாம் :—

(1) குழந்தைகளுக்கு சுறுசுறுப்பில் பிரியம். ஒரு குழந்தையாவது ஒரு நிமிஷம் கூட சும்மா இராது. ஏதாவது செய்துகொண்டுதான் இருக்கும்.

(2) அழகான வஸ்துக்களைப்பார்க்க உற்சாகம். ஸாதாரணமான சிவப்புக் காகிதத்தைக் கண்டதும் என்ன ஆனந்தப்படுகிறது.

(3) உண்மையை அறிந்து கொள்வதில் ஊக்கம். கையில் ஒரு கண்ணாடிப் பதுமை அகப்பட்டால் அதற்குள் என்ன இருக்கிறது என்பதைப்பார்க்க ஆவல்கொண்டு உடனே அதை உடைக்கிறது,

(4) பாட்டில் பிரியம்.

(5) அதன் விசுவாசம்.

இவைகள் நற்குணங்களின் முளைகளல்லவா? கல்வியின் பயனென்ன? மேற்சொன்ன முளைகளைப்பாதுகாத்து விருத்திசெய்து அந்தக் குணங்களுக்குத் தகுந்த நடத்தையை உண்டுபண்ணுவதே கல்வியின் நோக்கம். இவ்வாறிருக்க, ஏற்கனவே குழந்தைகளிடத்தில் இருக்கிற சிறிய விதைகளைத் தண்ணீர் வார்த்து வளரவிட்டு, கெட்ட குணங்களாகிய களைகளைப் பிடுங்கி, நன்னடத்தையாகிய பூவும், காயும், பழமும் கொடுக்கச் செய்வது நலமா? அல்லது இருக்கிற விதைகளை மக்கச்செய்து, வேறுவிதைகளை நட்டு, வேறுவிதத்தால பயிரிட்டு மாசூல் அறுப்பது நலமா? எது சுலபம்? எது சாத்தியம்?

மான்ஷர் செயிலி என்பவர் இந்தியாவைப் பற்றி எழுதுகிறார்: "பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொள்ளுகிற பிள்ளைகளைவிட, பள்ளிக்கூடங்களுக்கு வெளியேயுள்ள பிள்ளைகள் புத்திசாலிகளாக இருக்கிறார்கள், ஏன்? பள்ளிக்கூடத்தில் புகட்டப்படுவதெல்லாம் புதிதாக இருக்கின்றன. முன்னால் அதைப்பற்றி அவர்களுக்குக் கொஞ்சம் கூடத்தெரியாது. ஒரு சிறிய கிராமப்பையனுக்கு அவன் பார்க்கிற ஒவ்வொரு செடியையும் பற்றித்தெரியும். அவன் வீட்டிலுள்ள ஒவ்வொரு பாத்திரத்தின் உபயோகமும் அவனுக்குத் தெரியும். ஆகாயத்தைப் பார்த்து மழை சீக்கிரத்தில் உண்டா, இல்லையா என்று சொல்லத்தெரியும். சக்கரம் சரியாக சுழல அடிக்கடி மைபோடவேண்டும் என்றும் தெரியும். இப்படி இனைப்படி ஸாதாரணமாய்ப் பார்க்கிற அநேக விஷயங்களைச் சிறுவர்கள் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொள்ளுகிறதில்லை." இதன் உண்மை எல்லாருக்கும் தெரியவரும். பி. ஏ. பரிக்ஷையில் முதலாகத்தேறின எத்தனைபேருக்கு

நெற்பயிருக்கும், இதரப்பயிருக்கும் வித்தியாஸம் தெரியாமலிருக்கிறது? மின் சாரத்தைப் பற்றி ஒரு நாள்முழுவதும் பேசக்கூடிய ஒரு பி. ஏ. க்கு நெல் எப்படி விளைகிறது என்று தெரியாமலிருந்தால் இவருடைய படிப்பு, படிப்பு என்று சொல்லத்தகுமா? இவர் குழந்தையாயிருக்கும்போது முதல் தன் உபாத்தியாயரை மின்சாரத்தைப்பற்றிக் கேட்டுவந்தாரா? இவைகளுக்கெல்லாம் என்ன காரணம்? குழந்தையாயிருக்கும்போது பக்கத்திலுள்ள வஸ்துக்களைப்பற்றி அறிய வேண்டிய ஆசை இராமல் இராது. குழந்தைகள் வஸ்துக்களை அறியும் ஆசையின் பொருட்டு ஏதாவது புத்திசாலித்தனமான கேள்விகள் கேட்கும்போது "சீ, உனக்கு அது வேண்டியதில்லை. நான் சொல்லுவதை மாத்திரம் கேட்டுக்கொள். இதைப் படித்தால் போதும்," என்று சொல்லி பிள்ளைகளை வாயெடுக்கவொட்டாமல் அடக்கும் உபாத்தியாயர்கள் எத்தனை பேரைப பார்த்திருக்கிறோம். இது அல்லவா காரணம்? பிள்ளைகளுக்கு அவர்கள் காண்கிற வஸ்துக்களைப் பற்றி எல்லா விஷயங்களையும் விவரமாய் ஆசையோடு போதிப்பதும், அவரவர்களுக்கு எவ்வெவற்றில் ஆசையுண்டாயிருக்கிறதோ அவ்வவற்றில் பின்னும் கொஞ்சம் உற்சாகத்துடன் கற்பிப்பதும், சிருஷ்டியின் விநோதங்களை அவரவர்களுக்குக் காண்பித்து ஒவ்வொன்றிலும் ஆசையுண்டாக்குவதும், தன் குருட்டுவழியில் அவர்களைக்கொண்டு வராமல் குழந்தைகள் குணங்களின் ஸ்வபாவங்களை ஒட்டி நடந்து வந்தால் மேலேசொன்னபடி மான்ஷர் செயலி எழுதுவதற்கு இடமிருக்குமா? ஆதலால் உபாத்தியாயர் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்தின் அதிசயங்களைப் பிள்ளைகளுக்கு எடுத்துக் காட்டி, எல்லாப் பிள்ளைகளுக்கும் பொதுவான இயற்கை ஸ்வபாவங்களை அனுஸரித்து உபயோகமுள்ள வழியில் போதனை செய்தால் கூடிய சீக்கிரத்தில் நம் சிறுவர்கள் எல்லாவற்றிலும் தங்களுக்கு இயற்கையில் உள்ள ஆவேசத்துடன் வயது சென்றகாலத்திலும் உழைத்து தேசத்தை முன்னுக்குக் கொண்டு வருவார்கள்.

வி. குப்புஸாமி அய்யர்.

SHAH JEHAN.

ஷாஜிஹான்.

ஷாஜிஹான் என்பவர் பதினேழாம் நூற்
றாண்டின் முற்பகுதியில் இந்தியாவை அர
சாட்சி செய்த ஒரு மொகலாய சக்ரவர்த்தி
இவர் "டாஜ்மஹால்" என்னும் ஒரு சிறந்த
கட்டிடத்தைக் கட்டினவர் என்பதைத்தான்
அநேகர் அறிந்திருப்பார்கள். ஆனால், அவ
ருடைய வியசரித்திரத்தையும், குணாதிசயங்
களையும் ஊன்றிப்படித்தால், அவருடைய
காலத்தில் பிரஜைகள் அவரை அன்புடன்
கொண்டாடியதற்கும், பிற்காலத்தார் அவ
ரைச் சிலாகிப்பதற்கும், காரணமான சிறந்த
பல குணங்கள் ஷாஜிஹானிடமிருந்தன என்
பது தெளிவாகும். இந்திய சரித்திர நூலா
சிரியர்களும், ஐரோப்பிய சரித்திர நூலாசிரி
யர்களும், ஷாஜிஹானைப்பற்றி வேறு விஷயங்
களில் அபிப்பிராய பேதங் கொண்டவர்கள
யிருந்தாலும், அவர் நடுவுநிலைமையோடும் நீதி
யோடும் கூடியவர் என்பதைமட்டும் எல்லா
ரும் ஒரேமனதுடன் அங்கீகரிக்கிறார்கள்
மனிதர்களுடைய இயல்பையும், அந்தஸ்தை
யும் கவனியாமல், எல்லாருக்கும் ஒரேவித
மான நீதியைச் செலுத்துவதில் ஷாஜிஹான்
மிகவும் கவனம் செலுத்தும் இயல்புடையவர்
இதனால் அவருடைய கீழ் உத்தியோகஸ்த
கள் மிகுந்த ஜாக்கிரதையுடன் நீதி செலுத்
வதில் கவலைகொண்டவர்களாகவே இருப்பா
கள். ஏனெனில் நீதி தவறி ஒருகாரியத்
தைச் செய்துவிட்டால் தங்களுடைய வேலை
யும் போய், சக்ரவர்த்தியின் கோபத்து
கும் பாத்திரமாக வேண்டும் என்பதை அவ
கள் நன்றாய் உணர்ந்தவர்கள். இதனால் ஷாஜ
ஹானுடைய ராஜ்யம் பெரிதாயிருந்தாலும்
வாரத்தில் இருபது வியாஜ்யங்களுக்குமே

அவரிடத்தில் விசாரணைக்கு வருவதில்லை. அதுவும் மதசம்பந்தமானதும், வெட்டு, கொலை முதலியவை சம்பந்தமானது மாகவே பெரும்பாலுமிருக்கும். அப்படிப்பட்ட வியாஜ்யங்களை உள்நுழைந்துபார்த்து சாமர்த்தியமாகவே ஷாஜிஹான் முடிவு செய்வார். லஞ்சம், சிபார்சு, முதலியவைகளை ஏற்றுக்கொள்ளும் ஜட்ஜிகளிடம் ஷாஜிஹானுக்கு அருவருப்பு அதிகம். டெல்லி நகரத்துக் கொத்தவால் ஒரு ஸமயத்தில் ஒரு வியாபாரியிடமிருந்து லஞ்சம் வாங்கி விட்டானாம். இந்த ஸங்கதியை அறிந்த ஷாஜிஹான் ஒரு உத்தியோகஸ்தன் மூலமாய் நல்லபாம்பை உயிருடன் அனுப்பி அந்தக்கொத்தவாலைக் கடிக்கும் படிச்செய்வித்தாராம். பாம்புகடித்து அந்தக் கொத்தவால் சிறிது நேரத்துக்குள் இறந்துபோனானாம்.

ஷாஜிஹான் அவருடைய காலத்தில் கொள்ளைக் காரர்களை வேரோடு அழித்தார். இவருடைய காலத்துக்குமுன்பு கொள்ளையும், வழிப்பறியும் ஸர்வ ஸாதாரணமாயிருந்தன. இவர் அந்தந்த ஜில்லாக்களில் நடக்கும் கொள்ளை, வழிப்பறி முதலியவைகளுக்கு, அந்தந்த ஜில்லாவிலிருக்கும் உத்தியோகஸ்தர்களை உத்தரவாதிகளாக வேண்டுமென்று கட்டளையிட்டார். இதனால் கீழ் உத்தியோகஸ்தர்கள் அவைகள் நடவாதிருக்கும்படியான முயற்சியைச் செய்தார்கள். ஸூரத்து நகரத்தில் வந்திருந்து வியாபாரம் செய்த உலாந்தக்காரர்களுடைய பொருள்கள் ஒரு இரவில் கொள்ளை போய் விடவே, ஸூரத்து கவர்னர் அந்த வியாபாரிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று ஷாஜிஹான் அவரைக்கட்டாயப்படுத்திக் கொடுக்கும்படிச்செய்தார். போர்த்துகல் தேசத்துக் கொள்ளைக் காரர்கள் வெகு காலமாக வங்காள நாட்டைக் கொள்ளையடித்தும், ஜனங்களை ஹிம்ஸித்தும் வந்தார்கள். ஷாஜிஹான் அவர்களுக்குக் கொடுத்த கடுந் தண்டனையால் கடைசியில் அவர்கள் வங்காளத்தை விட்டு ஓடிப்போனார்கள். டேவிட் வில்ன்க்லேர், டெயிலர் போன்ற பாரபட்சமுள்ள சில சரித்திர நூலாசிரியர்கள், ஷாஜிஹானுடைய மதப்பற்றும், அவருக்குக் கிறிஸ்தவ மதத்திலிருந்த ஒரு வித வெறுப்பும், அவர் தமது தகப்பனுக்கு விரோதமாய்க் கலகம்செய்தபோது, போர்த்துகல் தேசத்தார் தமக்கு உதவி புரிய மறுத்ததால் ஏற்பட்ட கோபமுமே, அவர்களை அடித்துத் துரத்தும்படி சக்ரவர்த்தியைச் செய்தன என்று சொல்லுகிறார்கள். ஆனால் பாரபட்சமில்லாத யெல்பின்ஸ்டன், கீன், பெர்னியர், போன்ற சரித்திர நூலாசிரியர்களின் கருத்து வேறுவிதமானது.

“ஷாஜிஹானுடைய நோக்கம் மத சம்பந்தமானதும், தன்னைப்பற்றியதுமான நோக்கமல்ல; ராஜீய சம்பந்தமான நோக்கமாகும். குடிகளைப் பாதுகாத்து ரக்ஷிக்கவேண்டியது அவருடைய கடமையாதலால், வருஷக் கணக்காய் ஜனங்களை ஹிம்ஸித்து வந்த பெருந்தன்மையில்லாத ஐரோப்பியர்களை அடக்க முயற்சித்தது முற்றும் நியாயமேயாகும்” என்று இவர்கள் அபிப்பிராயப்பட்டு எழுதியிருக்கிறார்கள்.

ஷாஜிஹான் வீண் பெருமையையும், உயர்வையும் பாராட்டும் இயல்புடையவரல்லர். இவருடைய பெருந்தன்மையைக் குறித்து இங்கே ஒன்று சொல்லுவோம். அந்தக் காலத்தில் ராஜாக்களுக்கு குடிகள் கீழே விழுந்து நமஸ்கரிப்பது வழக்கம். இப்படி ஜனங்கள் செய்வது ஷாஜிஹானுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. பட்டத்துக்கு வந்த உடனே அவர் அந்த வழக்கத்தை நீக்கிவிட்டுத் தரையைத்

தொட்டு முத்தமிட்டுக் கொண்டால் போதுமானதென்று ஆக்யாபித்தார். அந்த வழக்கமும் நல்லதல்ல வென்று அவருக்குப்பட்டது. உடனே அதையும் தள்ளிவிட்டு மரியாதைக் குறிப்பாக, மூன்று தடவை ஸலாம் செய்தால் போதுமானதென்று ஏற்படுத்தினார். இந்த வழக்கத்தை க்குடிகள் அநுஸரித்தால் போதுமானதென்று ஸர்க்குலரும் வெளிப்படுத்தினார். இந்தச் செய்கை ஷாஜிஹானுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறதல்லவா?

துணிகரமான வீரச் செயல்களைச் செய்வதில் ஷாஜிஹானுக்குப் பிரியம் அதிகம். புலி வேட்டை, யானைச் சண்டை முதலியவைகளை அவர் தானே செய்வதுண்டு. அவர் தம்முடைய குமாரர்களையும் இப்படிப்பட்ட வீரச் செய்கைகளில் பழக்குவித்தார். இவருடைய குமாரர்களில் ஒருவராகிய அவுரங்கஸிப் என்பவர் இரண்டு யானைகள் சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது மத்தியில் பிரவேசித்து, அந்தச் சண்டையை விலக்கி விட்டார். இந்த வீரச் செயலுக்கு ஷாஜிஹான் மகிழ்ந்து பதினாயிரம் குதிரைகளுக்குத் தலைவராக அவரை நியமித்து, தக்ஷணபாகத்து கவர்ன்மெண்டையும் அவர் வசம் ஒப்புவித்தார். 1633-ம் வருஷத்தில் அவுரங்கஸிப் தக்ஷணத்துக்குச்சென்றார். ஷாஜிஹான் சரீர சம்பந்தமான பலத்தையும், வீரத்தனத்தையும் நேசித்ததோடு மட்டுமில்லை. பயமின்றி உள்ளதையுள்ளபடி வெளியிடும் வார்த்தைகளைக் கேட்பதில் அதிக ஆசையுடையவர். அப்படி வெளியிடுகிறவர்கள் சத்ருவாயிருந்தாலும் ஸரியே; மித்ருவாயிருந்தாலும் ஸரியே. பட்டாளத்திலுள்ள ஒரு உத்தியோகஸ்தன் இவருக்கு முன்னால் மரியாதையில்லாமல் உட்கார்ந்திருந்தானாம். இவர் கோபம்கொண்டு அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டதோடு, பென்ஷனும் கொடுப்பதில்லை என்று சொல்லிவிட்டார். மறுநாளும் அவன் முன்போலவே வந்து உட்கார்ந்துகொண்டு “சக்ரவர்த்தியே! நான் இப்போது உங்களுடைய சம்பளத்தில் இல்லை. ஆதலால் நான் என்னுடைய சுயேச்சைப்படி நடக்கக்கூடிய சுதந்தரனானேன்” என்று சொன்னானாம். அவனுடைய சுதந்தர உணர்ச்சியை ஷாஜிஹான் சிலாகித்து மறுபடியும் அவனை முன்போலவே வேலையில் வைத்துக்கொண்டாராம்.

ஷாஜிஹான் ஏழைகள் படும் துன்பத்தையும், துக்கத்தையும் கண்டு சிறிதும் மனம்பொறாத அவ்வளவு இளகிய நெஞ்சையுடையவர். ஏழைகளுடைய கஷ்டத்தை நீக்கும்படியான சந்தர்ப்பம் நேரிட்டபோதெல்லாம் சுயலாபத்தைக் கருதாமல் உதவிசெய்து கொண்டேவந்திருக்கிறார். தக்ஷணத்தில் ஒரு ஸமயம் கொடுமையான பஞ்சம்நேரிட்டு ஜனங்கள் மிகுந்த கஷ்டப்பட்டார்கள். ஷாஜிஹான் இந்த ஸமயத்தில் சும்மா இருக்கவில்லை. தற்காலத்தில் செய்யப்படுவதைப்போல பேருக்குப் பஞ்சநிவர்த்தி நிதி சேர்க்க அவர் முன்வரவில்லை. எங்கெந்த இடங்களில் பஞ்சம் நேரிட்டதோ, அந்தந்த இடங்களில் அன்னசாலைகள் ஸ்தாபித்து, எல்லாருக்கும் இலவசமாய் சாதம்போடும்படி பெர்ஹாம்பூர், அகமதாபாத், ஸூரத் முதலிய இடங்களிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு ஆக்யாபித்தார். பெர்ஹாம்பூரில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் 5,000 ரூபாய் இந்த தருமத்துக்காகச் செலவு செய்யப்பட்டது இப்படியாக இருபதுசோமவாரங்களுக்குள் 1,00,000 ரூபாய்க்கு மேல் தருமச்செலவாயிற்று. அகமதாபாத்தில் 50,000 ரூபாய் உண்மையாய்க் கஷ்டப்பட்டவர்களுக்குப் பகுத்துக் கொடுக்கப்பட்டது. சுமார் 70,00,000 ரூபாய் வரியையும் வஜா செய்தார். 1650-ம் வருஷத்தில், மகமதியர்களுக்கு உரித்தான நோன்பு தினங்களில் ஏழைகளுக்கு தர்மம் செய்யும் பொருட்டு தர்ம நிதி ஏற்படுத்தவேண்டுமென்று சிலர் ஷாஜிஹானிடம் சொன்னார்கள். சக்ரவர்த்தி அதற்கு இசைந்து 60,000 ரூபாய் கொடுத்ததோடு ஒவ்வொரு வருஷத்திலும் ரம்ஸான் பண்டிகையின்போது இப்படியே கொடுத்துவர ஏற்பாடுசெய்தார்.

கண்களைக் கவரத்தக்க விதமாய் அரண்மனைகள் கட்டுவதிலும், “தர்பார்” வைப்பதிலும் ஷாஜிஹானுக்கு அதிக ஆசையென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். முதலில் டெல்லி நகரத்தைப் புதுப்பித்து அநேக சித்திரவேலைகளுடன் கூடியதும், அழகானதும், பெரிதானதுமான பதினொரு கோட்டை வாசல்களை அந்த நகருக்கு அமைத்தார்,

ஷாஜிஹான் காலத்தில் இந்தியாவுக்கு வந்திருந்த ஒரு வெனீஸியர் போட்ட பிளான்படி இரண்டு பெரிய தோட்டங்களை ஷாஜிஹான் ஏற்படுத்தினார். திராட்சைத் தோட்டங்கள் விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்தினார். தோட்டங்களுக்குத் தண்ணீர் பாய்வதற்காக யமுனை நதியின்போக்கைத் தகுந்த விதமாய்த் திருப்பினதுமன்றி, வேறுபல கால்வாய்களும் வெட்டுவித்தார். அந்தக் கால்வாய்களில் பெரும் பெரும் மீன்களிருந்தன. அவைகளுடைய மூக்கில் துவாரமிட்டு தங்கவளையங்கள் போட்டிருந்தாராம். ஒவ்வொரு வளையங்களிலும் ஒரு சிவப்பும், இரண்டு வைரமும் பதிப்பிக்கப்பட்டிருந்தனவாம்.

ஷாஜிஹானுக்குத் தன் மனைவியிடமிருந்த அளவற்ற காதலே "டாஜ்மஹால்" என்னும் சிறந்த கட்டிடத்தைக் கட்டுவதற்கு முக்கிய ஹேதுவாயிற்று. இந்த மாளிகையை மேனாட்டார் "ஸலவைக்கல்லில் இப்படியும் கட்ட முடியுமோ?" என்று வர்ணித்திருக்கிறார்கள். தன்னுடைய அருமை மனைவியாகிய மம்டாஜ் மஹால் இறந்தபின் ஒரு வாரம் வரையில் ஷாஜிஹான் ஒருவரையும் பார்க்கவில்லை. ராஜ்ய விஷயங்களையும் கவனிக்கவில்லை. நல்ல உடுப்புகள் அணிந்து கொள்ளுவதையும், வாஸனைகள் பூசிக்கொள்ளுவதையும், ஆபரணங்கள் பூட்டிக்கொள்வதையும் அவர் அடியோடு ஒழித்துவிட்டார். பிறந்த நாள்கொண்டாட்டம், முதலிய விசேஷ தினங்களில் வாத்தியங்கள் வாசிப்பதையும், ஸங்கீதங்கள் பாடுவதையும் வேண்டாமென்று நிறுத்திவிட்டார். மனைவி இறந்த துக்கத்தினால் அவருடையமயிர் நரைத்துப்போயிற்று. கண்ணீர் வெள்ளம் போல் பெருகிக்கொண்டேயிருந்தது. "ராஜ்யமும் எனக்கு இன்பத்தைக்கொடுக்கவில்லை, ஜீவியமும் எனக்கு இன்பத்தைத் தரவில்லை, ...எவருடைய முகமும் இனி எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்காது" என்று அவர் தாமே வருத்தப்பட்டு சொல்லியிருக்கிறார். ஷாஜிஹானுக்கு வேறு இரண்டு மனைவியர்களிருந்தார்களென்பது வாஸ்தவமே. ஆனால் அவர்கள் ஒப்புக்கு மனைவியர்களாயிருந்தார்களேதவிர, உண்மை ஆசையோடு கலியாணம் செய்துகொள்ளப்பட்டவர்களல்ல.

மும்டாஜ்மஹால் தன்னுடைய காதலனின் முழுமனதையும் வசப்படுத்தி விட்டபடியால் அவருடைய மனதில் வேறு விஷயங்கள் இருப்பதற்கு இடம் சிறிதுமில்லை. எங்கே இருந்தபோதிலும் ஸரியே; எங்கே போனபோதிலும் ஸரியே; ஷாஜிஹான் அவளைத் தன்னுடன் வைத்துக்கொண்டிருப்பாரே தவிர, அவளைவிட்டுப் பிரிந்து அரை நிமிஷமும் இருக்கமாட்டார். ஆகவே அப்படிப்பட்ட அருமை மனைவி இறந்தபிறகு அவளுடைய ஞாபகார்த்தமாய் அறுநூறு கோடி ரூபாய் செலவுசெய்து அவளுடைய பெயராலேயே "டாஜ்மஹால்" என்னும் உன்னதமாளிகையை ஆக்ரா பட்டணத்தில் ஷாஜிஹான் வெள்ளை ஸலவைக்கல்லுகளால் கட்டினது ஒரு ஆச்சரியமல்ல. "இந்தியாவின் பெருமையும், உலகத்தின் புகழ்ச்சியும்" என்று அந்தக் கட்டிடத்தைப் பலரும் புகழ்வதும் ஒரு ஆச்சரியமல்ல. மொகலாயர்கள் காலத்தில் சித்திரமும், கட்டிடவேலையும் எவ்வளவு உன்னத பதவியிலிருந்தனவென்பதை விளக்க இந்த மாளிகையே போதுமான அத்தாட்சியாயிருக்கிறது.

ஜாதிமதபேதத்தை ஷாஜிஹான் சிறிதும் பாராட்டுவது கிடையாது. எந்த மதஸ்தராயிருந்தபோதிலும், எந்த ஜாதியாராயிருந்தபோதிலும், எந்த தேசத்தாராயிருந்தபோதிலும், தகுந்த சாமார்த்தியமுடையவர்களாயும், உண்மையுடையவர்களாயுமிருந்தால், அவர்களைக் கௌரவித்து வேலை கொடுத்து வந்தார். இத்தலி தேசத்து சிற்பசாஸ்திரியாகிய விரோனியோ என்பவர் ஒரு அரண்மனை கட்டிக் கொடுத்ததற்காக ஷாஜிஹான் அவருக்கு மூன்றுகோடி ரூபாய் கொடுத்திருக்கிறாரென்றால், வேறென்ன சொல்லவேண்டும்? ஆஸ்டின் போர்டோ என்னும் பிரஞ்சுக்காரரை ஷாஜிஹான் வேலையில் வைத்துக்கொண்டிருந்தார். மசூதிகளையும், அரண்மனைகளையும் உயர்ந்த ரத்தினக்கற்களால் அலங்கரிப்பதுதான் இந்தப் பிரஞ்சுக்காரருடைய வேலை. இவருடைய வேலையைக்கண்டு மெச்சினவராய் இவருடைய உருவத்தைப்போலவே தன்னுடைய அரண்மனையில் செய்து அமைக்க ஷாஜிஹான் இடங்கொடுத்திருக்கிறார். இந்த மொகலாய சக்ரவர்த்தியைப் பற்றிய சிறந்த விஷயங்கள் இன்னும் பல இருக்கின்றன.

SELECTIONS.

விசேஷத்திரட்டு.

NATIONAL SERVICE.

ஜாதீய ஊழியம்.

கன்ஸர்வேடிவ் அல்லது யூனியனிஸ்ட் கட்சியின் தலைவரான லார்டு மிடில்டன் போன மாஸம் எடின்பர்க் பட்டினத்தில், "ஜாதீய ஊழியம்" என்கிற விஷயத்தைப் பற்றி ஒரு சிறந்த பிரசங்கம் செய்தார். எந்த ஜனமானாலும், அது கட்டுப்பாடுள்ளதாயும், தலைவர்களுக்கு அடங்கினதாயும், தேசத்துக்கு ஊழியம் செய்வதில் ஆத்மத்தியாகம் செய்யக்கூடியதாயும் இருக்கவேண்டும். எந்தத் தேசம் அப்படி இல்லையோ, அது தாழ்ந்த நிலைமையை நோக்கிச் செல்லும். இங்கிலாந்து தேசமானது தற்காலம் மேற்கண்ட குணங்களை இழந்து வருவதாய்த் தோற்றுகிறது. கட்டுப்பாடும், அடக்கமும் இல்லாமல் ஒவ்வொருவனும் சொந்த நன்மையைப் பெரிதாகக்கருதி, தேசத்துக்கு ஊழியம் செய்வதைத் தனக்கு ஒரு பிழைப்பாகக் கருதி வருகிறான். தேசத்தை நிர்வகிக்கும் கவர்ன்மெண்டானது, தனக்குத் தானே செய்துகொள்ள வேண்டிய கடமைகளைச்செய்யவேண்டுமென்று நினைத்து, தான் கல்வி பெறுவதும், ஜீவிப்பதும், முதுமைப் பருவத்தில் சுகமாக வசிப்பதும், கவர்ன்மெண்டால் ஆகவேண்டுமென்று கேட்கிறான். தனக்குப் பல வழிகளில் நன்மை செய்யும் சமூகக் காவலன் போல் இருக்கும் கவர்ன்மெண்டுக்குச் சகாயம் செய்வது தனது கடமையென்று உணர்வதில்லை. சமூகம் ஒரு சரீரம் போன்றதென்றும், அதில் ஒவ்வொரு தனி மனிதனும் ஒரு அவயவமென்றும், சமூகத்தின் க்ஷேமத்தைக் காக்க தான் கடமைப்பட்டிருக்கிறானென்றும், அது நல்ல நிலைமையிலிருத்தல் தனது நன்மைக்கு அவசியமென்றும், ஒவ்வொருவனும் அறிந்து அதன்படி நடக்கவேண்டும் இப்படி நடக்கும் ஜனங்கள் ஜெர்மானியரும், ஜப்பானியரும் என்று லார்டு மிடில்டன் உதாரணமாகச் சொன்னார். ஜர்மெனி சுமார் 50 வருஷத்துக்குள்ளாக எவ்வளவோ உயர்ந்த நிலைமையை அடைந்துவிட்டது. ராணுவ பலத்தில் அதற்குச் சமமான தேசம் உலகத்தில் இல்லை. கல்வி, தொழில், வியாபாரம், முதலியவைகளிலும் அது மற்றத் தேசங்களை மீறிக்கொண்டு வருகிறது. ஜப்பான் சென்ற 50 வருஷத்துக்குள் செய்திருக்கும் அற்புதமான காரியங்களை உலகம் அறியும். இந்த இரண்டு தேசங்களும் மேற்குறித்த கட்டுப்பாடு, அடக்கம், தன் மறுப்பு, தேச பக்தியாகிய பெருங் குணங்களினாலேயே இந்த உயர்ந்த நிலைமைக்கு வந்திருக்கின்றன.

சில காலத்துக்கு முன்பு இடலி தேசமானது ஆஸ்டிரியா தேசத்துக்கு அடங்கி சிறுமைப்பட்டுவர, அதற்கு சுவாதீனத்தையும், பெருமையையும் சம்பாதித்துக்கொடுத்த தேசாபிமானிகளில், ஜோஸப் மாஜினி என்பவர் ஒருவர். அவர் என்ன சொல்வது வழக்கமென்றால், ஒவ்வொருவனும் தன் ஆயுளில் சில காலத்தைத் தன் தேசத்தின் நன்மைக்காக அர்ப்பணம் செய்ய வேண்டுமென்று சொல்வது வழக்கம். இந்த மகாவாக்கியம் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் வாயிற்படிக்கு மேல் பொன்னெழுத்துக்களில் எழுதி வைக்கப்படவேண்டுமென்று லார்டு மிடில்டன் சொன்னார். தேசத்தினால் நாம் எவ்வளவோ நன்மைகளை அனுபவிக்கிறோம். நமது அன்ன, வஸ்திரங்களும், வசிப்பிடமும் நம் தேசத்தினாலேயே கிடைக்கின்றன. நம் முன்னோர்கள் பெரும் காரியங்கள் செய்து கீர்த்திபெற்று மாண்டுபோக, அவர்களுடைய அஸ்திசேஷம் நம் தேசத்து மண்ணோடு மண்ணாய்க் கலந்திருக்கின்றது. தேசத்துக் கவர்ன்மெண்டாலேயே நாம் சாவதானமும், அமைதியும் பெற்று வாழ்கிறோம். அன்னியர் புகுந்து நம்மை இம்சிக்காமல் நமது தேசத்தின் காரியஸ்தனாயிருந்து கவர்ன்மெண்டு காக்கின்றது. இப்படியிருக்க, அந்தத் தேசத்துக்கு நமது நன்றியைக் காட்டும் பொருட்டு, நமது ஆயுளில் சில காலத்தை அதன் க்ஷேமத்துக்கும், பெருமைக்கும் அர்ப்பணம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்படிப் பொருள்படப் பேசிவிட்டு இங்கிலாந்தானது உலகத்து முதல் அந்தஸ்து தேசங்களில் ஒன்றாய் விளங்க வேண்டுமானால், ஜாதீய ஊழியமே ஆதாரமாகக்கொண்டு ஜனங்கள் தங்கள் யோக்கியதையை நிலை நிறுத்த வேண்டுமென்று லார்டு

மிடில்டன் பேசினார். இத்தகைய கருத்துக்கள் கொண்ட பிரசங்கங்கள் ஜனத்தலைவர்கள் அடிக்கடி செய்து ஜனங்களை உற்சாகப்படுத்துவதால், ஜனங்கள் கேவலம் சுய நலத்தைப் பாராட்டாமல் தேசத்தில் அபிமானத்தை வளர்த்து, அதற்கு ஊழியம் செய்வது சொந்த நன்மையைத் தேடுவதுபோல் தங்கள் கடமை என்று உணருகிறார்கள். இங்கிலாந்திலேயே லார்டு மிடில்டன் போன்றவர்கள் இவ்விதம் ஜனங்களை எச்சரித்தல் அவசியமென்று நினைப்பார்களானால், இந்தியாவில் இத்தகைய எச்சரிப்பு மிகவும் அவசியமன்றோ?

"சுதேசமித்திரன்."

AGRICULTURAL EXHIBITIONS.

விவஸாயக் காக்ஷிகள்.

சென்ற சில வருஷங்களாக தேசாபிமானிகள் விவஸாய விஷயமாய்க் கவனம் எடுத்துக்கொண்டு, சங்கங்களைப் பல காரணங்களால் உண்டாக்கி, பலரிடத்திலும் சந்தா வசூல் செய்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டாரும், அனேக கலெக்டர்களும், மற்ற ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும், சுதேச உத்தியோகஸ்தர்களும், ஜமீன்தாரர்களும், மிராசுதாரர்களும் இவ்விஷயமாய்ப் பணத்தைக் கொடுக்கிறார்கள். குடித்தனக்காரர் ஏழைகளாயும், விவஸாய விருத்தி விஷயங்களை அறியாதவர்களாயும், இருப்பதாலும், குடித்தனத்தாரின் க்ஷேமமே கோரி அவர்கள் விவஸாய விருத்தியை நடிப்பார்களானால் தேசக்ஷேம பரிபாலனம் பல வழிகளிலும் தனக்குத்தானே உண்டாகுமென்றும், மேற்கண்ட தேசாபிமானிகள் தர்மார்த்தமாய்ப் பணத்தைக் கொடுக்கிறார்கள். இவ்வாறு ஆதரவினால் உண்டான விவஸாய சங்கங்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் அனேகமாய் உயிர்த்திருக்கின்றது. இந்த சங்கங்கள் எவ்விதமாய் வசூல் செய்த பணத்தைச் செலவிடுகின்றனவென்பது சென்னை மத்திய விவஸாய சங்கத்து ரிபோர்ட்டால் வெளிப்படுகின்றது. இச்சங்கங்கள் தேசவிருத்திக்கென்று உண்மையோடு பாடுபடுவது மெச்சத்தகுந்ததே. ஆனால் அவைகளுக்கு விவஸாயத்தொழில், சாஸ்திர சம்பந்தத்துடன் அனேகமாய்த் தெரியாதாகையால் தீரத்துடன் செய்யும் வேலை இன்னதென்று தெரியாமல் அவைகள் பல விதமாய்த் திகைக்கின்றன.

அப்படியிருந்தும் கடப்பை, மஞ்சக்குப்பம், திருச்சினாப்பள்ளி, சேலம் ஜில்லாக்களைத் தவிர மற்ற இவ்விராஜதானி ஜில்லாக்கள் விவஸாயக் கால்நடை காக்ஷியில் மிகச் சிரமமெடுத்துக்கொண்டு பல ஆயிரம் ரூபாய்களைச் செலவு செய்து கியாதி பெற்றிருக்கின்றன. இவ்வாறு நடப்பிக்கும் வேலை விஷயமாய் அபிப்பிராயங்கள் வேறுபட்டிருக்கின்றன. நமது கவர்ன்மெண்டார் இக்காக்ஷிகள் நடத்தப்படவேண்டுமென்று உறுதியாய் இருக்கிறார்கள். கால்நடைவிருத்தி இலாகா அதிபதி இக்காக்ஷிகளில் குணமில்லையென்றும், அதற்குச் சார்பாக பூசா கான்பரென்சில் நடந்த தீர்மானத்தையும் தெரிவித்திருக்கிறார். இவ்விஷயமாய் சீர் தூக்கிப் பார்க்கையில் பின்வருமாறு யோசனை உண்டாகிறது.

விவஸாயக் காக்ஷிகள் இருப்பதினால் ஒவ்வொரு ஜில்லாவிலும் பலபெயர் ஓரிடத்தில் கூடிக்கலந்து அனுபவங்களைத் தெரிந்துகொள்ள மார்க்கமுண்டு. பல ஜந்துக்களையும், விளைவு பண்டங்களையும், ஒருமிக்கப் பார்ப்பதில் குணாகுணங்கள் அறிவதற்கு முகாந்திரம் உண்டாகிறது. பரிசு பெற்றவர்களைப்பார்த்து, மற்றவர்கள் அடுத்த வருஷத்தில் மேன்மையான பண்டங்களைக் காக்ஷிக்குக் கொண்டுவருவதற்கு, இது தூண்டுகோலாயிருக்கிறது. பல வஸ்துக்களை விற்கவும், வாங்கவும் இக்காக்ஷி சந்தைகளைப்போல் உதவுகிறது. விவஸாய மேன்மைகளைக் கற்பதற்கு இக்காக்ஷிகள் மாணாக்கர்களுக்கு பெரிய பள்ளிக்கூடமாயிருக்கின்றன. கைத்தொழில் கருவிகள் விவஸாய யந்திரங்கள் முதலியவைகளின் மேன்மையும், முதன்மையும், தெரிவதற்கு இவ்விடம் சிரேஷ்டப்பட்டிருக்கிறது.

இன்னும் பல உபயோகங்களும் இக்காக்ஷிகளால் விளைகின்றன. இக்காக்ஷிகள் ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளில் இன்றியமையாததாய் இருக்கின்றன. இக்காக்ஷிகளின் முழுப்பயன் அங்கிருக்கும் குடித்தனக்காரருக்கு நன்றாய் விளங்கியிருக்கிறது. அங்கே காக்ஷி நடப்பதற்குமுன் அனேக மாஸங்களுக்கு முன்னதாகவே பிரசுரங்கள் செய்து முயற்சிகள் நடந்தேறுகின்றன. அங்கே காக்ஷிகளில் பரிசு பெற்ற ஜெந்து, வஸ்து இவைகளின் மேன்மைகளைப் பரிசு பட்டங்களில் எழுதி வைப்பார்கள். காக்ஷிகளில் கவனித்துப் பயன்படும் விஷயங்களைச் சில உத்தியோகஸ்தர் உபந்நியாச மூலமாய்த் தெரிவிப்பார்கள். குடித்தனக்காரர் பிரார்த்தனை செலுத்துவதுபோல் விவஸாயக் காக்ஷிக்குப்போய் நூதன விஷயங்களைக் கற்று தங்கள் கிராமத்தில் அவலம்பிப்பார்கள். அங்கே காக்ஷிகள் பெரிய பள்ளிக்கூடங்கள் போல் உதவுகின்றன. அங்கே காக்ஷிகள் பொருளை உண்டு பண்ணும் முகாந்தரங்களாக உதவுகின்றன. ஆகவே அத்தேசத்தார் விவஸாய காக்ஷிகள் இல்லாமல் தங்கள் தொழிலை நடப்பிக்கமாட்டார்கள். கவர்ன்மெண்டார் உதவியையும், தேசாபிமானிகளின் உதவியையும், முக்கியமானதாக எதிர்பார்க்காமல், தொழிலாளிகளே தங்கள் வருமானத்தில் சொத்து சேர்த்து காரியம் நடப்பிக்க வல்லவர்கள். அங்கே இப்படியிருக்க, நம்மூரிலோவெனில் குடித்தனக்காரர் அனேகமாய் படிப்பில்லாதவர்கள். இவர்களுக்கு விவஸாய காக்ஷியென்றால் வேடிக்கைப் பார்க்கும் கண்காக்ஷிதான். இக்காக்ஷிகள் என்னவியப்பு அடே! எவ்வளவு பெரிய மக்காசோளம் வந்திருக்கிறதடா! எவ்வளவு பெரிய பரங்கிக்காயடா! எத்தனை பெரிய தென்னங்கொலை! எத்தனை தினிசு அவரைக்காய்கள்! எவ்வளவு பெரிய பசு! யானைபோன்ற எருது! கன்று குட்டிபோல ஆடு! பெரிய பன்றி! அழகான கோழிகள்! குஞ்சு பொரிக்கும் பெட்டி! ஜலம் இறைக்கும் இஞ்ஜின்! எருதில்லாமல் ஓடும் வண்டி! குதிரை இழுக்கும் கலப்பை! என்று பலவிதமான ஆச்சரியப்படத்தக்க என்றும் பாராத வினோதங்கள் என்று சொல்லிப்போகிறார்கள். இவர்கள் ஒவ்வொரு வஸ்துவின் மேன்மை தாழ்மையும், விருத்தி விருத்தாந்தமும் அறிய முயலுவதில்லை. வஸ்து பெரிதாயிருப்பதை மாத்திரம் பார்க்கிறார்களே யொழிய அதின் குணத்தைப் பார்ப்பதில்லை. இந்நாட்டில் பரிசு கொடுப்பதற்கு என்று ஏற்படுத்தும் மத்தியஸ்தரும் அனேகமாய் அவ்வாறே இருக்கிறார்கள். பெரிய கத்திரிக்காய்க்குப் பரிசு, இதை அரிந்து பார்த்து சதை கத்திக்கு உறுதியாயிருப்பதையும், காய் பல விதத்தில் உருசி சத்து முதலியவைகளில் மேன்மை பட்டிருப்பதையும் கவனித்துப் பரிசு கெடுப்பதில்லை. மாடு, பசு, எருதுகளுக்குக் கொடுக்கும் பரிசுகளும் ஒரு காலை நேரத்துக்குள்ளே முடிந்துவிடுகிறது. பரிசு கொடுப்பவர்கள் ஒவ்வொரு ஜெந்துவுக்கும், வஸ்துவுக்கும் சீட்டொன்றுபோட்டு அவைகளில் உள்ள மேன்மை குணங்களையும், தாழ்மை குணங்களையும் குறிப்பிட்டு அவ்வஸ்துக்களில் கட்டியிருந்தால் காக்ஷிக்கு வருகிறவர்களுக்கு பெரிய பயனாயிருக்கும். அமெரிக்காவில் மக்கா சோளக்காக்ஷியில்

பின்வருமாறு குணங்களை அறிந்து பரிசு கொடுப்பதுண்டு.

1. முற்றுதல் விதையின் தன்மை	மார்க்கு	10
2. ஒன்றுபோலிருத்தல்	,,	15
3. முத்து	,,	15
4. கதிரின் பளுவு	,,	10
5. நீளமும், மணியின் பிரமாணமும்	,,	10
6. அடி	,,	10
7. முளை	,,	5
8. வரிசையின் சந்து	,,	10
9. நிறம்	,,	5
		90

காக்ஷிக்கு 10 கதிர் அனுப்புவதுண்டு.

1. முற்றியிருப்பது எல்லாவற்றிலும் முக்கியமானது.—விதை முளைக்காவிட்டால் என்ன பயன்? கதிர் உறுதியாயும், பூ கனமில்லாமலும் இருக்கவேண்டும். கையால் அழுத்தி முறுக்கிப் பார்ப்பதுண்டு. விதை பளபளப்பாயும், உமியில்லாமலும், மயிர் ஒட்டியிராமலும் இருக்கவேண்டும். முளை பருத்தாவது, சுருங்கியாவது இருக்கப்படாது.

2. ஒன்றுபோலிருத்தல்.—ஜாதி தனிப்பட்டாற்போல் காட்டும். கதிர் நீளத்திலும், தடிப்பிலும், உருவத்திலும், நிறத்திலும், மணி பிடித்தலிலும், அச்சிலிட்டு எடுத்தாற்போல், ஒன்றைப் பார்த்தால் மற்றொன்று வேறுபடாமலிருத்தல். இவ்வாறு இருப்பதால் இந்த வித்திலிருந்து அதுபோலவே கதிர் உண்டாகுமென்று விளங்குகிறது.

3. முத்து.—ஒன்றுபோலவும் ஒருவாறு அடி சிறுத்தும், தலை பெருத்தும் இருக்கவேண்டும். கதிர் முழுவதும் ஒரே மாதிரி வித்து இருக்கவேண்டும். வித்தின் உருவத்தினால் கதிரில் நிறைந்திருப்பதும், இடைவெளி அதிகம் இருப்பதும் தெரியவரும். ரஸாயன பாகத்திலும் விதை ஒன்றுபோல் பரீக்ஷையில் காட்டவேண்டும். முளை பெருத்திருக்கும் வித்தில் தைலம் அதிகம் உண்டு. இல்லையானால் மாவு அதிகம் உண்டு முளை ஒரு நிதானமாய் வித்தில் இருக்கவேண்டும். வித்தின் ஓரங்கள் ஒழுங்காய் இருக்கவேண்டும். அப்போது இடைவெளி இல்லாமல் அனேக வித்து கதிரில் பொருந்தும். வித்து ஒன்றுபோல் தடித்திருக்கவேண்டும். வரிசை கோணல், மாணல், இல்லாமல் ஒழுங்காயிருக்கவேண்டும்.

4. கதிரின் எடையும், அதிலுள்ள மணியின் எடையும் அறிவது அவசியம்.—சில வகையில் ஒரு செடிக்கு ஒரே கதிர்வந்து அதன் மணிகள் ஒரு ராத்தல் இருக்கும். வேறு சில வகையில் இரண்டு மூன்று கதிர் கண்டு கதிர் ஒன்றில் ½ ராத்தல் மணி இருக்கும்.

5. கதிர் நீளம் முதலியன.—சில வகை 9½-10 அங்குலம் நீண்டும் சில வகை 11-12 அங்குலம் நீண்டும் இருக்கும். கதிரின் அடியிலிருந்து இரண்டு அங்குலத்து உயரத்தில் சுற்றளவானது கதிரின் நீளத்தில் மூன்றில் இரண்டு பங்கு இருக்கவேண்டும். இதைவிட அதிகம் பருத்திருந்தால் அக்கதிர் முதிர்வதற்கு அனேக நாள் செல்லும். கதிர்கள் ரூல் தடிபோல் இருக்கவேண்டும். அடி பெருத்தும், தலை சிறுத்தும் இருப்பது பிசகு. கதிரின் மத்தியில் வித்து நிறைந்தும் உறுதியாயும் இருக்கவேண்டும்.

6. கதிரின் அடியும், நுனியும்.—விதை நிறைந்திருந்தால் மாசூல் அதிகப்படும். அடி கிண்ணத்தில் அச்செடுத்ததுபோல் இருந்து, மணி சந்தில்லாமல் பிடித்திருக்கவேண்டும். அடி சிறுத்திருந்தால் கதிர் தொங்கிப்போம். பெருத்திருப்பது சிரேஷ்டம். அடி நிதானமாய் சொல்பம் அகன்று இருக்கவேண்டும்.

7. வரிசை.—கிரமமாக மத்தியிலிருப்பது போலவே, நுனியிலும் வரிசைகள் இருக்கவேண்டும். நுனி சிறுத்திருப்பது தக்கபடி போஷாப்பில்லாததும், மழை பெய்யாததுமே நுனி நிறைந்திருப்பது மாசூல் அதிகத்தைக் காட்டும்.

8. வரிசை இடைவெளி.—இது நெருக்கமாயிருந்தால் மாசூல் அதிகம். கதிரின் சுற்றளவு சக்கரம்போல் இருப்பதால் அதிலுள்ள மணிகள் கிணற்று கட்டிடத்துக்கு உதவும். செங்கல்போல் ஒரு பக்கம் சிறுத்தும், மறு பக்கம் பெருத்தும் இருந்தால், சுற்று நெருங்கி இருக்கும்.

9. நிறம்.—ஒன்றுபோல் பளபளத்து இருப்பது கோமளமாய் வளர்ந்ததைக் காட்டும். கதிரில் கலப்பு நிறம் இருக்கப்படாது.

இவ்வாறு குதிரை, எருது, பசு, ஆடு, பன்றி முதலிய மிருகங்களுக்கும், பலவித தானியங்களுக்கும், பழங்களுக்கும், காய்களுக்கும், குணாகுணங்களைக்குறிப்பிட்டுப் பரிசு கொடுக்கவேண்டும்.

அமெரிக்கா, ஐரோப்பா தேசங்களில் நடக்கும் விவஸாய காக்ஷிகளும், நமது நாட்டில் நடக்கும் காக்ஷிகளும், உபயோகத்தில் வேறுபட்டிருப்பது ஜனங்களின் வித்தியாபிவிருத்தி அறிவை அனுசரித்திருக்கிறது. நமது நாட்டிலும் காக்ஷிகளின் பலனை அடையவேண்டுமானால், ஜனங்களுக்கு வித்தை கற்பிக்கவேண்டும். இவ்வித்தை பள்ளிக்கூடத்தில் கற்பிப்பது அல்ல. பல விதங்களில் விவஸாய டிபார்டுமெண்டு விஷயங்களை பேபர்கள், பத்திரிகைகள், விவஸாய சங்கங்கள், பரீக்ஷார்த்த பண்ணைகள், பிரத்தியக்ஷத்தில் விஷயங்களைக் காட்டுதல், மாஜிக் லாண்டர்ன் மூலமாய் கற்பித்தல், அமெரிக்கரைப்போல் ரயில் வண்டியில் வித்தை கற்பித்தல், முதலிய மூலமாக அதிக பணம் செலவிட்டாவது, முதலில் கற்பிப்பது அவசியம். பிறகு விருத்தி தானே உண்டாகும் —“தென்னிந்தியா விவஸாயம்.”

CUMMIN SEED.

சீரகம்.

—o—

இவ்விராஜதானியில் சீரகம் கடப்பை ஜில்லாவிலும், கோயம்புத்தூர் ஜில்லாவின் சில தாலூகாகளிலும் விளைவாகிறது. அநேகமாகப் பம்பாய் இராஜதானியிலிருந்துதான் சீரகம் இவ்விராஜதானிக்குக் கொண்டு வரப்படுகிறது. இங்கு விளையும் சீரகம் மிகவும் கொஞ்சமே. சீரகம் சாகுபடி செய்வதற்குச் செவ்வல் மண் நிலமும், மற்றவகைப் பசலைமண் நிலங்களும் ஏற்றவையென்று சொல்லலாம். அடிமண் நீர் வடிவுள்ளதாய் இருந்தால் மிகவும் நலம்.

இந்தப் பயிரைச் சாகுபடி செய்யுமுன் நிலத்தை நன்றாய் உழுது புழுதியாக்கவேண்டும். கடப்பை ஜில்லாவில் மழைகள் பெய்து ஓய்ந்துவரும் காலத்தில் நிலம் காய்ந்துவரும் தருணம் பார்த்து 5-முதல் 7-தரம் உழுது கட்டி பரம்படிப்பார்கள். ஏகர் ஒன்றுக்கு 8-முதல் 12-வண்டி தொழு எருவை நிலத்தில் சிதறி, கொர்ருக் கலப்பையைக்கொண்டு இரண்டுதரம் உழுது, எருவை மண்ணுடன் நன்றாய்க் கலக்கச் செய்வார்கள். இதன் மேலும் சிலவேளைகளில் ஒருமுறை பரம்படிப்பார்கள். நிலத்தில் ஈரம் சுண்டின பிற்பாடு குண்டகாவைக்கொண்டு மண்ணைக் கிளறுவார்கள். அதற்குப்பின் மழைபெய்து மண் உறைந்துபோனால் மறுபடியும் கொர்ருக் கலப்பையைக் கொண்டு உழவு செய்து மண்ணை நெகிழ்த்திவிடுவார்கள். கடைசியாகக் கொர்ருக் கலப்பையைகொண்டு இரண்டுமுறை உழுத பிற்பாடு, நிலத்தில் கொஞ்சம் ஈரம் இருக்கப் பார்த்து, ஏகர் ஒன்றுக்கு 12-படி விதை வீதம் கையினால் வீசி விதைத்து, விதை மறையும்படி கொர்ருக்

கலப்பையைக்கொண்டு குறுக்கே உழுவார்கள். இதன்மேல் ஒன்று அல்லது இரண்டுதரம் பரம்படிப்பார்கள். மூன்று நாட்கள் கழித்து குண்டகாவைக் கொண்டு மேல்மண்ணை லேசாய்க் கிளறிவிடுவார்கள். அதன்பின் 12-அடி சதுரமுள்ள பாத்திகளாகும்படி பக்கத்திலுள்ள மண்ணை லேசாய் வரண்டி சிறு வரப்புகள் போடுவார்கள். இப்படி உண்டாக்கிய பாத்திகளைச் சாதாரண உப்புப் பாத்திகளை ஸமதளப்படுத்தும் அச்சுக்கட்டு தந்துலு என்னும் கருவியைக்கொண்டு வேலைசெய்து ஸமதளப்படுத்துகிறார்கள். இந்தப் பாத்திகளின் வரப்பு ஓரங்களில் நாட்டுக் கலப்பையைக் கொண்டு சற்று ஆழமாய் உழுது தண்ணீர் பரவும் கால்களாக்குகிறார்கள். இந்த வேலை எல்லாம் விதைத்த நாலு நாட்களுக்குள் நடத்தி முடிக்கவேண்டும். ஐந்தாம் நாள் பாத்திகளில் இறவைத்தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். சிலவேளைகளில் விதைக்கும்போது போதுமான ஈரமில்லாவிட்டால் புழுதி விதைப்புக்குப் பருவம் செய்வதைப்போல் செய்து, விதைத்த உடனேயே பாத்திகளைக் கட்டி, மறுநாள் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். முதல் தண்ணீர் பாய்ச்சிய மூன்றாம் நாள் இரண்டாம் தண்ணீர் விடுகிறார்கள். வேறு சில இடங்களில் முன்சொன்னபடி நிலத்தை நன்றாய்ப் புழுதியாக்கியபின், வரப்புகள் போட்டுப் பாத்திகளாக்கிக் கால்கள் பிடித்து, அதன் பின்னே பாத்திகளில் விதைத்து உடனேயே தண்ணீர் பாய்ச்சி, அச்சுக்கட்டி தந்துலு என்னும் கருவியைக்கொண்டு மண்ணை நிரவி ஸமதளப்படுத்துகிறார்கள். இதற்கு ஐந்து நாள் பொறுத்து கொஞ்சமாக இரண்டாம் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். முன் சொன்ன இரண்டு முறைகளைவிட இம்முறையே மேன்மையானதென அங்குள்ள கிருஷிகர் நினைக்கிறார்கள். விதைத்த 11-நாள் முதல் 13-நாட்களுக்குள் பயிர் முளைக்கும். அப்படி 13-நாட்களுக்குள் முளைக்கவில்லையானால், கடைசி முறை தண்ணீர் பாய்ச்சியதற்கு 4-நாட்கள் கழித்து லேசாய் ஒரு தண்ணீர் பாய்ச்சுவார்கள். அதாவது முக்கால் பாத்தியில் தண்ணீர் பாய்ந்த உடனே மறுபாத்திக்குத் தண்ணீர் மாறிவிடுவார்கள். இதில் பயிர் திட்டமாய் முளைத்துவிடும். விதைத்த 12-நாட்களுக்குள் பயிர் முளைத்துவிட்டால், முளைத்த 12-நாட்கள் வரைக்கும் தண்ணீர் பாய்ச்சமாட்டார்கள். முளைப்பதற்கு முன் கடைசியாய்த் தண்ணீர் பாய்ச்சியது முதல் 8-நாள் பொறுத்து கைக்களைபறண்டியைக் கொண்டு பயிர் சேதமடையாமல் நிலத்திலுள்ள களையைப் பறண்டுவார்கள். ஏகர் ஒன்றுக்கு 12-முதல் 20-ஆட்கள் வரையில் இதற்குச் செல்லும். இவர்கள் வரப்புகளின் மேல் உட்கார்ந்தபடியே பாத்திக்குள் இறங்காமல் களை பறண்டுவார்கள். இப்படிக் களை பறண்டின பின் 3-அல்லது 4-நாட்கள் பொறுத்துப் பயிர் வாட்டம் கண்ட உடனே தண்ணீர் பாய்ச்சுவார்கள். இதற்கு 12-அல்லது 13-நாட்கள் பொறுத்து பூ அரும்புகள் உண்டாகும். உடனே ஒருமுறைதண்ணீர் பாய்ச்சுவார்கள். இதற்கு 'சிவப்பு பூத்தண்ணீர்' என்று பெயர். இதற்கப்பால் 10-நாட்கள் கழித்து ஒருமுறை தண்ணீர் பாய்ச்சவேண்டும். இதற்குக் காய்த்தண்ணீர் என்று பெயர். அதற்கப்பால் அறுவடைக்கு முன் 2-அல்லது 3-நாட்களுக்கு முன் கடைசித்தண்ணீர் பாய்ச்சுவார்கள். அதற்கு 'அறுவடைத் தண்ணீர்' என்று பெயர். காய்களிலுள்ள விதைகள் விளைந்து கொஞ்சம் காய்ந்த உடனே செடிகளை வேருடன் பிடுங்குவார்கள். ஓர் கைப்பிடி செடிகள் பிடுங்கி ஆன உடனே அவைகளின் தலைப்புறம் மெதுவாய்க் கீழே வைத்துப் பின்வேர் பக்கம் வைக்கிறார்கள். இவ்விதமாகப் பயிர் அறுவடையாகும். உடனே பிடுங்கிய செடிகளைக்கூட்டி எடுத்துப் பெரிய கூடையில் வைத்துக் களமேட்டிற்குக் கொண்டு போய் போட்டு ஸமமாய்ப் பரப்பி ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு காயவிடுவார்கள். இப்படிக் காயும்போது ஒவ்வொரு நாளும் மூங்கில்தடி கொண்டு ஒருவன் இச்செடிகளைத் தூக்கி அலைத்துப் புரட்டிப் போட்டு லேசாய்த் தட்டுவான். அப்படிச் செய்யும்போது கொஞ்சம் காய்ந்த இலைகளும், கொஞ்சம் காய்ந்த விதைகளும் நிலத்தில் உதிரும். இப்படி ஐந்தாறு நாள் செய்த பின் தாள்களைச் சேர்த்துச் சற்று தூரத்தில் குவித்து விட்டு உதிர்ந்திருக்கும் விதைகளையும், இலைகளையும் கூட்டி, எடுத்துக் காற்றில் தூற்றி, விதைகளைப் பிரித்து வைத்துக் கொள்ளுகிறார்கள். குவித்துவைத்த தாள்களை ஒன்று அல்லது இரண்டு நாளைக்குக் காயவிட்டு, மாட்டுக் காலில்போட்டுப் பிணையலடிப்பார்கள். இப்படி அடிக்கும்போதே தாள்களைப் புரட்டிக் கொடுப்பார்கள். விதைகள் முழுவதும் உதிரும்படி பிணையலடித்த பின் தாள்களை அரித்து வேறாக்கி விதைகளைக் கூட்டி எடுத்துத் தூற்றிச் சேர்த்து வைத்துக் கொள்ளுகிறார்கள். விதைகள் நன்றாய்க் காயாவிட்டால் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குக் காயவைத்துப் பத்திரப் படுத்திக் கொள்வார்கள்.

சீரகம் 2½-மாஸம் அல்லது 80-நாள் பயிர். கடப்பை ஜில்லாவில் ஸாதாரணமாய் ஆருத்ர கார்த்தியில் அதாவது ஜனவரி மாஸம் ஆரம்பத்தில் விதைக்கிறார்கள். ஒன்று முதல் இரண்டு அடி வரையில் வளரும். புஷ்பிக்கும் வரையில் நோய்நொடிகள் கிடையாது.

புஷ்பித்த பின் 'அக்னிமண்டை' நோய் என்று ஒரு வித நோய் உண்டாகும். இதனால் செடிகள் தீயில் வாட்டி எடுத்ததுபோல் கருகி, சுருண்டு, கருத்து, உருமாறி இருக்கும். இந்த வியாதி பயிர் புஷ்பித்த உடனே காணுமானால் அதில் மாசூல் ஒன்றும் அகப்படாது. சில நாட்கள் கழித்து உண்டானால் கொஞ்சம் மாசூல் கிடைக்கலாம். இந்த வியாதி உண்டான உடனே தண்ணீர்ப் பாய்ச்சுவதை நிறுத்தி விடவேண்டும் ஏனென்றால் வியாதி தண்ணீரின் வழியாய் ஒரு செடியிலிருந்து வேறொரு செடிக்குத் தொத்தக்கூடும். சீரகப் பயிரைத் தாக்கும் மற்றொரு வியாதிக்கு 'மோர்நோய்' அல்லது 'சாம்பல்நோய்' என்று பெயர். ஏனென்றால் இந்த வியாதி தாக்கின செடிகள் முழுமையும் மோர் அல்லது சாம்பல் தெளித்ததுபோல் நிறம்கெட்டுத் தோன்றும். இந்த வியாதி அநேகமாகக் காய்கள் விளைவாகும் தருணத்தில் உண்டாகிறது. சில சமயங்களில் பயிர் அறுவடை செய்து களமேட்டில் கொண்டுபோய் வைத்திருக்கும் போதுகூட வைத்த ஒரு நாளைக்குள் வந்தாலும் வரும். இதனால் சீரகம் மாசூலின் தரம் குறைவாகும். நிலத்தில் பயிர் நிற்கும்போது இந்த வியாதி உண்டானால் உடனே அறுவடை செய்து விடவேண்டும். இந்தப் பயிருக்கு இன்னொரு வியாதியும் உண்டாகிறது. அந்த நோயில் தண்ணீர் பாய்ச்சும்போது செடிகள் அடியோடு சாய்ந்துவிடும். ஆனால் இந்த வியாதியால் நஷ்டமடையும் செடிகள் கொஞ்சமே. அப்படி சாயும் செடிகளைத் தலை தூக்கி நிறுத்தி மண் அணைத்து வைக்க வேண்டும். மழையும், கடும்பனியும், மூடு மேகமும் மந்தாரமுந்தான் இந்த நோய்க்குக் காரணமென்று அபிப்பிராயப் படுகிறார்கள். ஸரியானபடி விளைந்தால் ஏகர் ஒன்றுக்கு 15-முதல் 20-மணங்கு சீரக மாசூல் அகப்படும். ஏகர் ஒன்றுக்கு மொத்தவருமானம் ரூபா 120 ஆகும். இதற்குச் செலவு:—7 உழவு ரூ. 7; 10 வண்டித் தொழு எரு ரூ 10; கொர்ரு உழவு, குண்டகா உழவு, மரமடித்தல் ரூ. 5; நீர்ப் பாய்ச்சல் ரூ. 8; களை பறித்தல் (16 பெண்கள்) ரூ 3; அறுவடை (5-ஆண்+16 பெண்கள்) ரூ. 4-8; அடித்து ஒப்படி செய்தல் ரூ. 3 8; விதைக்கிரையம் ரூ 9; மொத்தம் ரூ. 50; செலவுபோக லாபம் ரூ. 70.

கோயம்புத்தூர் உடுமலைப்பேட்டை தாலூகாவில் இந்தப் பயிர் ஜூன் மாஸத்தில் விதைத்து ஆகஸ்டு மாஸத்தில் அறுவடை

செய்கிறார்கள். தாராபுரம் தாலூகாவில் டிசம்பர் மாஸத்தில் விதைத்துப் பிப்ரவரி மாஸத்தில் அறுவடை செய்கிறார்கள். இந்த ஜில்லாவில் சீரகம் சாகுபடிசெய்யும் முறை கடப்பை ஜில்லாவின் முறைக்கு சற்று வித்தியாஸமாயிருக்கிறது. கரும்பு நடுகை முதலிய வேலைகள் முடிந்தவுடனே கோயம்புத்தூர் கிருஷிகர் நிலத்தை நன்றாய் உழுது புழுதியாக்கி வைக்கிறார்கள்; முதல் உழவில் கட்டிகளாகப் பெயர்ந்தால் சம்மட்டி போன்ற கட்டைகளால் அந்தக் கட்டிகளை உடைத்து நிலத்தை 5,6-தரம் உழுகிறார்கள். சீரகம் விதை சிறியதாகையால் கட்டி கட்டியாயிருக்கும் நிலத்தில் ஸரியாய் முளைக்காமல் கெட்டுப்போகும். அதனால் நிலம் சமதளமாயும், தெள்ளுப் புழுதியாகவும் இருக்கவேண்டியது அத்தியாவசியம். இந்தப் பயிர் சாகுபடி செய்வதில் கவனிக்கவேண்டிய மற்றொரு காரியம் என்னவெனில், இதற்கு நன்றாய் மக்கின பழைய எருவே மிகவும் உபயோகமானது. கோயம்புத்தூர் கிருஷிகர் ஒரு நிலத்தில் ஒரு வருஷத்தில் சீரகம் பயிர் செய்யவேண்டுமானால் அதற்கு முந்திய பயிருக்கு அதிகமான தொழு எருவையும், குப்பை எருவையும் கொட்டுகிறார்கள். அது ஒரு வருஷகாலமாக மக்கி நிலத்தில் கலந்து ஸரியாய்ப் பக்குவமடைந்திருக்கிறது. அந்த ஸ்திதியில் சீரகப் பயிருக்கு அது செழிப் பூட்டுகிறது. ஒரு நிலத்தில் ஒரு வருஷம் கரும்பு, கோதுமை, கேழ்வரகு முதலாகிய தோட்டக்கால் பயிரிட்டால், மறுவருஷம் அதில் பருத்தி மானாவாரியில் பயிரிடுகிறார்கள். அந்தப் பருத்தி மாசூல் எடுத்து முடிந்தவுடன் நிலத்தை முன் சொன்னபடி உழுது பருவப் படுத்திச் சீரகம் விதைக்கிறார்கள். கரும்புக்கும், பருத்திக்கும் போட்ட எரு சீரகப் பயிருக்கும் உபயோகப் படுகிறது. இப்படி முன் கூட்டித் தக்கபடி எருவிடாத நிலங்களில் மக்கின சாணி எருவைப் போட்டுக் கலந்து உழுது சீரகம் விதைக்கிறார்கள். உடுமலைப்பேட்டை தாலூகாவில் சில இடங்களில் நீர் பாய்ச்சாமலே மானாவாரிப் பயிராகச் சீரகம் பயிரிடுகிறார்கள். தண்ணீர்த் தட்டைத் தாங்கக் கூடியதான கருமண் நிலங்களில் அப்படி மழையின் உதவியால் பயிர் செய்கிறார்கள்.

இறவைத் தண்ணீர் அகப்படும் தோட்டக்கால் நிலங்களில், நிலத்தில் தண்ணீர் பாய்ச்சி, புழுதியில் உழுது, பருவம் வந்தபோது பாத்திகளாக்கி, விதையை விதைத்துக் கையினால் மண்ணைப் பரப்பி, லேசாய் விதையை மூடிவிடுகிறார்கள். நிலத்திலுள்ள ஈரத்திலேயே விதைகள் முளைக்கின்றன. விதைத்தபின் விதை முளைப்பதற்காகத் தண்ணீர் பாய்ச்சும் வழக்கம் இங்கு அவ்வளவாயில்லை. பயிர் வளர்ந்து வரும்போது சீரகச் சக்களத்தி, அல்லது, காட்டுச் சீரகம், கோரை, புல் முதலியவைகளைச் சிறு முனைக் கொம்புகளால் கொத்தி எடுத்து எறியவேண்டும். இளம் பயிரில் சீரகத்துக்கும் அதன் சக்களத்திக்கும் தெளிவான வித்தியாசம் தெரியாது. கொஞ்சம் அநுபவமுள்ள வேலையாட்களுக்குத் தெரியும். இந்தப் பயிர் 23-அங்குல மழையளவும், உஷ்ண பூரியாயுமுள்ள கடப்பை ஜில்லாவில் உண்டாகிறது. 25½ அங்குலம் மழைப்பதமும், குளிர்ச்சியுள்ள நாடாகிய கோயம்புத்தூர் ஜில்லாவிலும் உண்டாகிறது. ஜூன் மாஸத்திலும் விதைக்கிறார்கள். டிசம்பர் மாஸத்திலும் விதைக்கிறார்கள். அதாவது சாரல் காலத்திலும், மாரி காலத்திற்குப் பின்னும் இது பயிராகிறது. இந்தப் பயிருக்கு அதிக மழை ஆகாது. கொஞ்சம் பனி அவசியமெனத் தெரிகிறது. ஆனால் கடும் பனியும், மப்பு மேகமுமாயிருந்தால் நோயுண்டாகும். சீரகம் கருவடி மண்ணிலும் பயிராகிறது. செவ்வல் மண்ணிலும் பயிராகிறது. இதனால் எல்லா ஜில்லாக்களிலும் பயிர் செய்யக்கூடும் என்று வெளியாகிறது. குளிர்ச்சியுள்ள இடங்களிலும் 40-அல்லது 50-நாட்களுக்குத் தொடர்ந்து பனி பெய்யக்கூடிய எல்லா இடங்களிலும், அக்காலத்தில் சீரகம் பயிரிடக்கூடும். இது கிருஷிகருக்கு லாபம் கொடுக்கக்கூடிய பயிர்களில் ஒன்று. மூன்று மாஸக்காலத்துக்குள் 5, 6-முறை மட்டும் தண்ணீர் இறைத்து, எல்லாச் செலவுகளும் போகத் தனி லாபம் ரூ. 70-அடையக்கூடுமானால், அது சிலாக்கியமான பயிரல்லவா? இந்தப்பயிரைத் தென் ஜில்லாக் கிருஷிகர் ஸாகுபடி செய்து கிருஷியை விருத்திசெய்வார்களென நம்புகிறோம்.

"கிருஷிகன்."

REVIEW OF THE PRESS.

பத்திரிகை' ஆராய்ச்சி.

NURSING OF SICK ANIMALS.

வியாதிப்பட்ட பிராணிகளின் போஷணை.

இந்த விஷயமாக நவம்பர் மாஸத்து "கிருஷிகன்" பத்திரிகையில் ஒரு வியாஸம் காணப்படுகிறது. வியாதிப்பட்ட பிராணிகளுக்கு வியாதியின் இயல்புக்குத் தகுந்தபடி ஆறுமணி நேரத்திற்கு ஒரு முறையாவது கஞ்சி கொடுக்கவேண்டும். ஒரு பிராணிக்குவைத்த ஆகாரத்தை அது உண்ணாமலிருந்தால் ஆகாரத்தை உடனே எடுத்துவிடவேண்டும். தளர்ச்சியும், ஆயாசமும், உண்டாகக் கூடிய சில வியாதிகளில் அதிசீக்கிரத்தில் ஜீரணமடைந்து சரீரத்தில் சேரக்கூடிய மேன்மையான ஆகாரத்தை கொடுக்கவேண்டும். சிலவேளைகளில் வியாதி சொஸ்தமடையும்போது பசி அதிகமாயிருக்கும். அப்பொழுது கால் நடைகளுக்குச் சரியான ஆகாரத்தைக் கொடுத்து அஜீரணமாகாமல் பாதுகாக்க வேண்டும். கால்நடைகளைக் கட்டிவைக்கும் கொட்டங்களில் சரியானபடி காற்றோட்டம் இருக்க வேண்டும். கொட்டங்களில் சாணிமுதலான அசுத்தங்களை அப்புறப்படுத்தி விடவேண்டும். வியாதிப்பட்ட பிராணிகளிருக்கும் இடத்தில் அரைமணி நேரமாவது வெய்யில் படவேண்டும். சூரிய ஒளியினால் ரத்தம் விருத்தியடைகிறது. துர்க்கந்தம் பறந்துபோய்விடுகிறது. சுகமான மல ஜல விஸர்ஜனங்களுக்கு அனுகூலமான ஷேமது உண்டாகிறது. விஷக்கிருமிகள் நாசமடைகின்றன. படுக்கை விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். பிராணிகள் படுத்துப் புரளுவதற்கு தகுந்த விதமாய் வைக்கோல்படுக்கை அமைக்கவேண்டும். குளிர்ந்த காற்று அடிக்கும் போதும், மழை பனி பெய்யும் போதும், வியாதிப்பட்ட பிராணிகளிக்கு கம்பளிப் போர்வை அவசியம். சில வியாதிகளில் கால் நடைகள் ஒரு பக்கமாகவே படுக்கும். அவைகளுக்கு ஸௌகரியமானபோது எழுந்திருக்கக் கூடிய சக்தியிருந்தால் அப்படிப்படுப்பதைத் தடுக்கக்கூடாது.

CALVES OF COWS.

பசுக்கன்றுகள்.

இந்த விஷயமாய் புரட்டாசி மாஸ "தென்னிந்தியா விவஸாய"த்தில் ஒரு சிறந்த வியாஸம் காணப்படுகிறது.

கர்ப்பத்திலேயே கன்று போஷிக்கப் படவேண்டும். தகுந்த தீனியில்லாத பசுக்களின் கன்று பின்னால் எவ்வளவு பராமரிக்கப்பட்டாலும் ஸுகப் படுவதில்லை. ஜாதிகாளை பொலியும்படிச் செய்த பசுவுக்குத் தகுந்த ஊட்டம் கொடுக்கவேண்டும். கன்று பிறந்த உடன் பசு அதை நக்காவிட்டால் துணியாலாவது, வைக்கோலினாலாவது, அதை உலரும்படி துடைக்கவேண்டும். பால் குடிக்கும்படி முலைக்காம்புகளை வாயில் வைக்கவேண்டும். முதல் சீழ்ப்பாலைக்கன்று குடிப்பது அவசியம். ஏனென்றால், இந்தப்பாலில் 100-க்கு 17·6 பாகம் சிகண வஸ்துவும், அதிக 'சாம்பல்' ஸத்தும் இருக்கின்றன. சாதாரணப்பாலில் இருப்பதை விட ஆறு மடங்கு அதிகமான சிகணவஸ்து சீழ்ப்பாலில் இருக்கிறது. சீழ்ப்பால் வயிற்றுச் சிக்கலைக் கண்டித்துக் கன்றின் வயிற்றிலுள்ள அசுத்தத்தை வெளியாக்குகிறது. அது பலத்தையும் கொடுக்கிறது. ஒருவாரம் வரையில் கன்று தாய்ப்பால் குடிக்க வேண்டியது அவசியம். பிறகு மற்றப் பசும்பாலையும் குடிக்கும்படி செய்யலாம். இயற்கையில் பசுவோடு கன்று திரிந்தால் ஒரு நாளில் 10-15 தரம் பால் ஊட்டும். பசுவின் வயிற்றிலிருந்து கன்று பிரிந்ததும், 18-24 மணிநேரம் கன்றைப் பட்டினி போடுவதுண்டு. முதல் முதல் பால் குடிக்கக் கன்றுக்குத் தெரியாததால் பால் பொறை யேறுவதுமுண்டு. அப்படி நேராமலிருக்க கன்றைக் கீழ்பார்க்கும்படிக் கற்றுக் கொடுக்கவேண்டும். இரண்டு, மூன்று விரலைப் பாலில் நனைத்து அதைச் சப்பும்படி கற்பிக்கவேண்டும். வெண்ணெய் அதிகமிருக்கும் பாலைக் கொடுத்தால் கெடுதியுண்டாகும். 100-க்கு 3-பாகம் வெண்ணெய் உள்ள பாலைக் கொடுப்பது நலம். கன்று தீனி தின்னு விட்டால் பாலில் வெந்நீர் கலந்தாவது, பாலைக் காய்ச்சியாவது கொடுத்தால் தீனிதானே தின்னும். புளித்த பாலைக் கன்றுக்கு

ஒரு பொழுதும் கொடுக்கக்கூடாது. தானியமும், புல்லும் கொடுத்தால் கன்று கொழுக்கும். ஆளி விதையை அரைத்து 3-4 வாரம் வரையில் பாலில் கலந்து கொடுக்கலாம். தவிடு தெளித்தால் தானியத்தை சீக்கிரம் தின்னக் கற்கும். நாக்கிலும் தடவவேண்டும். இளம் புல் கொடுப்பதுண்டு. கன்று தண்ணீரை அதிகம் குடிக்கும். தொட்டி ஜலம், பால் பாத்திரம் முதலியவைகள் சுத்தமாயிருந்தால் பேதி, சொரி, முதலியவைகள் வாரமல் தடுக்கலாம். வேளா வேளையில் தீனி கொடுக்க வேண்டும். இரண்டு கரண்டி விளக்கெண்ணெயைக் கொதிக்கும் பாலில் விட்டுக் கொடுத்தால் வயிறு சுத்தப்படும். பால் குடிப்பது நின்ற உடன் சிகண வஸ்துக்கள் நிறைந்த தானியம், பிண்ணுக்கு முதலியவைகளைக் கொடுக்கவேண்டும்.

TREE PLANTING.

மரம் வைத்தல்.

இந்த விஷயமாக மார்கழி மாஸத்துத் "தென்னிந்தியா விவஸாய"த்தில் ஒரு சிறந்த சிறு வியாஸம் காணப்படுகிறது.

மரம் நட்டால் காற்றின் கொடுமை தொலைந்து அநேக தோப்புகளுக்கும், செடிகளுக்கும், நஷ்டம் வராமல் காப்பாற்றலாம். மரங்களிருந்தால் காற்று குளிர்ந்திருக்கும். கோடைகாலங்களில் ரஸ்தாவில் நடப்பவர்கள் சாலை மரம் வரும்போது குளிர்ந்து சந்தோஷப்படுவதும், வெட்ட வெளியில் அவஸ்தைப் படுவதும் சொல்லவேண்டியதில்லை. அதே காரணத்தினாலேயே காடுகள் குளிர்ந்திருக்கின்றன. மரமற்ற வெளிகள் சூடாயிருக்கின்றன. மரங்களிருந்தால் மழை பல மாஸங்களில் பெய்யும். பெய்யும் மழை புரண்டு மண்ணை அடித்துக்கொண்டு ஆறுகளில் வண்டலாகப்போய் ஆற்றோரத்து வயல்களிலும், முக்கியமாய் சமுத்திரத்திலும்சேர்க்கிறது. மழைப்பெருக்கால் ராஜாங்கத்துக்கு உண்டாகும் நஷ்டங்கள் பல. ஆற்றங்கரைகள் உடைந்துபோவதும், ரோட்டுகள் அறுந்துபோவதும், வாராவதிகள் முறிந்துபோவதும், ஏரிகள் உடைந்துபோவதும், ராஜாங்கத்துக்கு நஷ்டங்கள். செய்கால் நிலத்தில் நயமான எருப்போன்ற மேல் மண்ணை எடுத்துப் போவதும், நிலங்களைக் கிழித்து பள்ளங்கள் செய்வதும், குடித்தனத்துக்கு நஷ்டங்கள். மரங்கள் எங்கும் இருந்தால் பெய்யும் மழை பூமியில் துளித் துளியாய் விழும். அப்போது அதை மண் குடிக்கும். ஜலம் சேர்ந்து வெள்ளமாகப் புரண்டுபோக சாவகாசமிருக்காது. இப்படி நிதானமாக விழும் ஜலத்துளிகள் மண்ணுக்குள் சென்று ஊற்றுக் கண்களைப் போஷித்து, அவ்வூற்றுக் கண்கள் அங்கங்கே வெளிப்பட்டு ஆறுகளுக்குப்போய் தற்காலம் வெட்டாறாய் இருக்கும் ஆறுகள் ஜீவநதிகளாகிவிடும். கிணறுகள் வெட்டினால் ஊற்றுகள் அகப்பட்டு, ஜலம் அமோகமாய்க் கிடைக்கும். கிணற்றுக்கு அதிக ஆழம் வெட்டவேண்டியிராது. பணச் செலவும் குறையும். மரங்களிருந்தால் பலவித காய்கனிகள், பழங்கள், வித்துக்கள் அதிக சிரமமில்லாமல் கிடைத்து அனேக உயிரைப் போஷிக்கும். காட்டுப் பதார்த்தங்களாகிய தேன், மெழுகு, அரக்கு, பட்டு முதலியவைகள் ஏராளமாய்க் கிடைக்கும். பலவித மரங்கள் வீடு கட்டவும், வேலைக்கு உதவவும் கூடும். விறகு வேண்டியவரைக்கும் கிடைக்கும். அடுப்புக்கரி செய்வதில் பலவித தைலங்கள் கிடைக்கும். அவைகளைச் சேர்க்க சில தொழில்கள் விருத்தியாகும்.

மரம் இருந்தால் பக்ஷிகள் வந்து அடையும். இவைகள் குடித்தனத்துக்குப் பெரிய உபகாரிகள். நாசம் செய்து நஷ்டத்தை உண்டாக்கும் பலவிதப் பூச்சிகளைப் பக்ஷிகள் அழித்துவிடும். மரங்களை வளர்ப்பதில் கெடுதிகளும் இருப்பதால் அவைகள் உண்டாகாதபடி மரங்களை தூரம் தூரமாகவும், வேலிக்கால்களிலும், ரஸ்தா ஓரங்களிலும் உபயோகமில்லாத இடங்களிலும் நட்டுப் பயிர் செய்வது தேசக்ஷேமத்தை உண்டாக்கும் வழி. இம்மரங்கள் வெவ்வேறு நிலத்துக்கு வேறுபட்டிருக்கிறபடியால் அவைகளைத் தெரிந்து பரிபாலிக்கவேண்டும்.

களர் நிலத்தில் நுணா, கருவேலி, கொருக்காபுளி, வேம்பு, புளியம், விளாம், தென்னை, கருவேலம், ஈச்சை முதலிய மரங்களும்.

கரிசல் நிலத்தில் வேம்பு, வேலமரங்களும்.

கல் நிலத்தில் வெள்வேல், வாடமடக்கு, மாமரம், வேப்பமரங்களும்.

மணல் நிலத்தில் கொருக்காபுளி, தேக்கு, தென்னை, மா, பலா, முந்திரி, மூங்கில், புன்னை, பனை, ஈச்சு, சவுக்குமரங்களும்.

செவ்வல் நிலத்தில் தோட்டக்கால் மாதினுசுகளும்.

செவ்வல், மணல் நிலங்களில் ஜலம் கிடைக்கும் இடங்களில் எல்லாவித மரங்களும் வளர்கின்றன.

CHOULTRIES.

தர்ம சத்திரங்கள்.

இவைகளைப்பற்றி நவம்பர் மாஸத்து "பூர்ண சந்திரோதய"த்தில் ஒரு வியாஸம் காணப்படுகிறது.

முன்காலங்களில் புண்ணிய தீர்த்தங்களின் மகிமையும், ஈசுவர லீலைகளைவிளக்கிக் காட்டும் மூர்த்திகளுடைய ஆலயங்களும் ஜனங்களை யாத்திரை செய்யும்படித் தூண்டின. இந்த யாத்திரைக்காரர்களுடைய ஸௌகரியங்களை உத்தேசித்து, மார்க்கங்களில் காதவழிக்குட்பட்டு நீர்வளம்பொருந்திய இடங்களில், அரசர்களும், பிரபுக்களும் சத்திரங்கள் ஏற்படுத்தினார்கள். முதல் முதலில் பிராமணர்களுக்கும், பிறகு எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்பட்டன.

முதலில் இந்தப் பாதைகளெல்லாம் கால் நடைப் பாதைகளாக இருந்தன. பிறகு வண்டிப்பாதைகளாக மாறின. அவைகளின் வழியாய் வியாபாரிகளும் செல்லத் தலைப்பட்டார்கள். க்ஷேத்திரங்களில் உற்சவங்கள் ஏற்படவே வியாபாரங்கள் பலப்பட்டன. இதனால் சிறு கிராமங்களாக இருந்தவைகள், நாளடைவில் பட்டணங்களாகத்தொடங்கின. இவைகளில் முன் ஏற்படுத்தப்பட்டிருந்த சத்திரங்களும் வரவர விருத்தியடைந்தன. முக்கியமாய் காசி, ராமேசுவரம் என்ற இரண்டு பெரும் க்ஷேத்திரங்களுக்குச் செல்லும்படியான பாதைகளில் சத்திரங்கள் மிகவும் அபிவிருத்தியாயின.

இந்தக் காலத்திலோ முக்கிய ஸ்தலங்களுக்கெல்லாம், ரயில் பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஸாமான்கள் விலைக்குச் சுலபமாய்க் கிடைக்கின்றன. கிளப்புகளும், காப்பிக்கடைகளும் எங்கும் ஏற்பட்டுவிட்டன. ஆகையால் மேலே சொல்லப்பட்ட சத்திரங்கள் இந்தக் காலத்தில் முன்போல் பிரயோஜனப்படுவதில்லை.

முன் காலத்தைக் காட்டிலும் இந்தக் காலத்தில் ஜனங்கள் அதிகமாக ஸ்தலயாத்திரை செய்தாலும், அவர்கள் செய்யும் யாத்திரை விரைவாகவே நடைபெறும் பொருட்டு, சிறு க்ஷேத்திரங்களுக்கு அநேகமாய்ப் போகிறதில்லை. ஆகையால் சிறு கிராமங்களிலுள்ள சத்திரங்களின் அன்ன பானாதிகளை நிறுத்தி விடுதல் மிகவும் நலமாம். ஆனால் இப்படிச் செய்ய சட்டம் இடங்கொடுக்காது. ஆகையால் சட்டத்தை மாற்றுவது அவசியம். பெரிய உற்சவங்களில் மட்டும் முன் ஏற்பாட்டைக் கைக்கொண்டு மற்றைக் காலங்களில் செய்யும் செலவுகளை மீதப்படுத்தி பெரிய க்ஷேத்திரங்களிலும், ஜன ஸமூகங்கள் கூடுகிற முக்கியமான நகரங்களிலும், ஜனவாஸத்துக்கு அதிக சத்திரங்கள் ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக முற்காலத்தில் சோழவந்தான் என்னும் கிராமமானது ராமேசுவர யாத்திரைக் காரர்கள் தங்கும் இடமாக இருந்தது. ரயில் ஏற்பட்டபின் அதிலுள்ள இரண்டு பெரிய சத்திரங்களும் பயன்படாமற்போயின. அவைகளுக்கு மூவாயிரம், நாலாயிரம் ரூபாய் வருஷ வரும்படி ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சத்திரங்கள் இதுவரையில் மதுரைத் தாலூகா போர்டு விசாரணைக்குள்ளிருந்தது. தாலூகா போர்டார் அதன் ஐவேஜியிலிருந்து அந்தச் சத்திரங்களுக்கு அவசியமான பொருளைச் செலவுசெய்து மீதித்தொகையைக்கொண்டு மதுரை ரயில்வே ஸ்டேஷனுக்கு ஸமீபத்தில் இரண்டு பெரிய கட்டிடங்கள் ராமேசுவர யாத்திரைக்காரர்களின் ஸௌகரியத்துக்காகக் கட்டியிருக்கிறார்கள்.

இப்படி இன்னும் அநேக ஜில்லாக்களிலும் முன் காலத்தில் ஏற்பட்ட சத்திரங்கள் இப்பொழுது பிரயோஜனமில்லாமலிருக்கும். ஆகையால் அவைகளை தற்கால வேறுபாடுகளுக்குத் தக்கபடி யாத்திரிகள் தங்குவதற்கும், உற்சவகாலங்களில் ஜனங்கள் தங்குவதற்கும், ஜல வஸதியுடனே நாலு ஜாதியாருக்கும் வெவ்வேறாகக் கட்டிடங்கள் கட்டவேண்டும். அங்கஹீனர்களுக்கும், பரம ஏழைகளுக்கும், தள்ளாக் கிழவர் முதலியவருக்குமட்டும் அன்ன பானாதிகள் கொடுத்து மீதித் தொகையைக்கொண்டு ஆயுர்வேத வைத்தியசாலைகள் அவ்விடங்களுக்குச் சமீபத்திலேயே அமைக்கவேண்டும். இன்னும் மீதமிருக்குமானால் ஊருக்குத் தக்கபடி வித்தியாசாலைகள் ஏற்படுத்தலாம்.

இதே மாதிரியாக தேவகோட்டை கானாடு காத்தான்முதலிய கிராமத்துச் செட்டிமார்களும் அவர்களுடைய சத்திரங்களில் ஏழைகளுக்கும், வியாதியஸ்தர்களுக்கும் அன்னபானாதிகள் கொடுத்து

பாக்கி திரவியத்தைக்கொண்டு கைத்தொழில் சாலைகளையும், பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தி நாட்டின் அறிவையும், செல்வத்தையும் அபிவிருத்தி பண்ணலாம். வித்தியாசாலைகளிலேயே அவரவருக்கு ஏற்ற தொழில்களைக் கற்பித்துக்கொடுக்கலாம். அவ்வாறு செய்யும் பக்ஷத்தில், நாட்டுக்கு மிகவும் நன்மையுண்டு. தர்மம் செய்பவர்களுக்கும் நீடித்த சுகிர்தம் உண்டு. தவிர நம் நாட்டில் அநேகம் பேர்கள் ஏழைகளாயிருக்கிறார்கள். அவர்களுக்கு எப்பொழுதும் பயன்படக்கூடிய கைத்தொழில்களைக் கற்பிப்பது பெரும் புண்ணியமாகும். ஆகையால் ஏழைகளுக்குத் தொழில் பாடசாலைகள் ஏற்படுத்தித் தொழில் கற்றுக்கொடுப்பதைப்போன்ற புண்ணியம் தற்காலத்தில் வேறில்லை. இதற்குத் தற்காலம் பெரும் பொருள் சத்திர ஐவேஜுகளிலேயே காணலாம். அதுவே தர்மமாகும். அதுவே "பிழைக்கும் வழி" கற்பிக்கச் சாதனமாக வேண்டுவது.

THE MANGO.

மாம்பழம்.

நம்முடைய விவஸாயிகள் பெரும்பாலும் அவர்களுக்கும், அவர்களுடைய கால்நடைகளுக்கும், ஆகாரத்துக்கு வேண்டிய விளை பொருள்களையே பயிர் செய்கிறார்களே ஒழிய, ஒரு பயிரைச்செய்தால் அதனால் அதிக லாபம் அடையலாமென்று எண்ணிச் செய்வதில்லை. இதற்குக் காரணம் வழக்கமும், அறியாமையுமேயாகும். கொஞ்ச காலமாகத்தான் சில திறமையுள்ள விவஸாயிகள் பருத்தி, மணிலாக்கொட்டை முதலிய விலை உயர்ந்த பயிர்களை சாகுபடிசெய்து நல்ல லாபம் உண்டென்று கண்டுகொண்டிருக்கிறார்கள். இவைகளைப்போல அநேக பயிர்கள் செய்ய இடமிருக்கிறது என்று "கிருஷிகன்" பத்திரிகை எழுதுகிறது. உதாரணமாக மாம்பழத்தை எடுத்துக்கொள்ளுவோம்:—

"பட்டணங்களில் ஒட்டு மாம்பழங்களை அதிக விலை கொடுத்து ஜனங்கள் வாங்குவது சில நாட்டுப்புறத்துக் கிருஷிகருக்குத் தெரியாமல் போனாலும், அநேகருக்கு அது நன்றாய்த் தெரிந்திருக்கும். பம்பாயிலிருந்து வியாபாரிகள் மாமரங்களிருக்கும் ஊர்களுக்கெல்லாம் போய் அங்கே வருஷா வருஷம் கிடைக்கக்கூடிய மாம்பழங்கள் முழுமையையும், குத்தகையாய் விலைபேசி வாங்கிப் பழுக்கும் முன்னமே மூங்கில் கூடைகளில் அடைத்து, ரெயில் மார்க்கமாய் பம்பாய்க்கு ஒவ்வொரு நாளும் அனுப்புவதை, ரெயில்வே ஸ்டேஷன்களிலும், கிராமங்களிலும் பார்க்காதவர்களுண்டோ? அப்படி அனுப்பும் மாம்பழங்களுக்கு அந்த வியாபாரிகள் மிகவும் உயர்ந்த விலை கொடுக்கிறார்கள் என்பதும் எல்லாருக்கும் தெரியும். இந்த பம்பாய் வியாபாரிகள் வருவதற்குமுன் நம் ஊர்களில் மாம்பழம் வெகு ஸரஸமான விலைக்கு விற்கப்பட்டு வந்தது. இப்போதோ என்ன விலை கொடுத்தபோதிலும் நல்ல மாம்பழங்கள் கிடைப்பதில்லை. இப்படி இருப்பதற்குக் காரணம் பம்பாய் வியாபாரிகள் தானென்று எல்லாருக்கும் தெரியும். என்றாலும் யாராவது அந்தந்த ஊர்களில் மாமரங்கள் முன்னமே உண்டாகும் இடங்களுக்குப் பக்கத்தில் புதிதாய் ஒட்டு மாங்கன்றுகளைத் தருவித்து வைத்து விர்த்தி செய்கிறார்களா? அப்படிச் செய்பவர்கள் வெகு சொற்ப பேர் தானிருப்பார்கள். எல்லாரும் ஏன் இதில் முயற்சி செய்வதில்லையென்றால் அவர்களின் அறியாமையும், ஊக்கமில்லாமையுந்தான் காரணம்."

மாம்பழத்தில் நல்ல லாபம் உண்டென்பதை அக்டோபர் மாஸத்துக் "கமத் தொழில்" விளக்கத்தில் பிரசுரமாயிருக்கும் ஒரு சிறு வியாஸத்தினால் அறியலாம். ஜெமெய்கா என்னும் தீவில் கார்டனர் என்பவருடைய மாந்தோப்பிலுள்ள ஒரு மரத்தின் வரும்படி வருஷமொன்றுக்கு 1,050 ரூபாயாம். இந்தத் தீவில் முதலில் மாமரங்களே கிடையாது. லங்கையில் கவர்னராயிருந்த ஸர் ஹென்றி ப்ளேக் என்பவர் ஜெமெய்காவுக்குக் கவர்னராயிருந்தபோது, இந்தியாவிலிருந்து சில மாங்கன்றுகளை அங்கே கொண்டுபோய் நடச்செய்தார். அவைகள் மூலமாய் உண்டான கன்றுகளே இப்பொழுது அந்தத் தீவில் நன்றாய்ப் பலித்து நல்ல லாபத்தைத் தருகின்றன. இந்த மரங்களில் 'பம்பாய்' அல்லது 'பீட்டர்' என்ற ஜாதி ஒன்று மிகவும் சிறந்தது. இது நன்றாய்க் காய்க்கும். தண்ணீர் வரட்சியைத்தாங்கும். இதன் பழங்கள் சீக்கிரத்தில் அழுகிப்போவதில்லை. ஆகையால் அவைகளை தூரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்து நல்ல லாபம் சம்பாதிக்கலாம். ஒரு பழம் ஒரு ராத்தல் முதல் ஒன்றரை ராத்தல் நிறை இருக்கும். லண்டன் பட்டணத்தில் பழம் ஒன்றுக்கு ௹ 3-2-0 முதல் ௹ 4-0-0 வரையில் விலைபோனதாகவும் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட விலையுயர்ந்த பயிர்களை ஆராய்ந்து பார்த்துப் பயிர் செய்தால் விவஸாயிகள் எவ்வளவு நல்ல ஸ்திதியில் இருப்பார்கள்?

THE BOYS' SECTION.

சிறுவர் பகுதி

A GLUTTON.

சாப்பாட்டு ராமன்.—ஹெரிபோட்ஷயர் என்ற இடத்தில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் நடத்திய சிறு விருந்துக் கொண்டாட்டத்தில் ஒரு சிறுவன் 20 துண்டு ரொட்டி தின்று 14 கோப்பை டீ குடித்தானாம்.

SMELLING.

வாசனையால் அறிதல்.—காற்று தன் வாட்டமாயிருந்தால், மனிதன் அரைமைலில் இருக்கும்போதே நரி வாசனையால் தெரிந்துகொள்ளும். எலி பால் கட்டி 50-அடி தூரத்தில் இருப்பதை முகர்ந்து தெரிந்துகொள்ளும். மான் எவ்வளவு அயர்ந்த தூக்கத்தில் இருந்தாலும் மனிதன் 200-அடி தூரத்தில் இருப்பதை உஸ்வாஸத்தால் அறிந்துகொள்ளும்.

THE MONKEY'S HABIT.

குரங்கின் குணம்.—குரங்குகளுக்குப் பரிகாஸ புத்தி ஜாஸ்தி. மனிதன் செய்யும் காரியங்களைத் தாமும் செய்யமுயலும். பழகின குரங்கானது எஜமானன் க்ஷவரம் செய்துகொள்வதைப் பார்த்து அவன் போன பிறகு தானும் க்ஷவரம் செய்யமுயலும். அவன் தலைப்பாகை வைத்துப் போவதைப் பார்த்துத் தானும் எதையாவது எடுத்துத் தலையின் பேரில் கவிழ்த்துக்கொள்ளும்.

THE HABITS OF THE JACKAL.

நரியின் வழக்கம்.—நரிகள் காடுகளில் கூட்டம் கூட்டமாய்ச் சேர்ந்து வஸிக்கும். ஒரு நரி நண்டு பிடிக்கும்பொழுது முதலில் தன் வாலை வளையில் விட்டுப்பார்க்கும். நண்டு இருந்தால் அது நரியின் வாலை இறுகப் பிடித்துக்கொள்ளும். நரி உடனே அதை வெளியில் இழுத்துத் தின்றுவிடும். நரிகள் தனிமையான இடத்தில் ஒரு மனிதனைக் கண்டால் அவன் கண்களின்பேரில் மண்ணைக் கால்களினால் வாரிப்போட்டுத் தூத்தும். சில ஸமயங்களில் ஒன்றாகச் சேர்ந்து கொன்றும் விடும்.

AN EXHIBIT.

ஒரு காக்ஷிப் பொருள்.—அலஹாபாத்தில் நடக்கப்போகும் பொருட்காக்ஷிச் சாலைக்கு ஜோகேந்திர நாத் சட்டர்ஜீ என்ற ஒரு வங்காள வாலிபன் ஒரு போஸ்டு கார்டைக் காட்சிப் பொருளாய் அனுப்பியிருக்கிறான். அதன் விசேஷம் என்னவென்றால் அந்தக்கார்டில் அவனுடைய பேர் உள்பட 320¼ வரிகள் எழுதப்பட்டிருக்கின்றன. அக்கார்டில் அடங்கியமொத்த வார்த்தைகள் 9,380. இந்த வார்த்தைகளிலுள்ள அக்ஷரங்கள் 40,991. அந்தக் கார்டில் இருப்பதை ஸாதாரணமாய்ப் படிக்க முடியாது. பூதக்கண்ணாடி வைத்துத் தான் படிக்க முடியும். இவ்வளவு நுட்பமாய் எழுதும் திறமை ஜேகேந்திரநாத்துக்கு எவ்விதம் வந்ததோ? ஆச்சரியம்!

PEN AND INK IS WIT'S PLOUGH.

வல்லவனுக்குப் புல்லாயுதம்.—பெரியோர்கள் தமது காரியங்களை முடிக்கும்பொழுது கருவிகளின் விசேஷங்களைக் கவனிப்பதில்லை. அவைகள் எம்மாதிரியான குணமுடையவைகளாக இருந்தாலும், அவைகளின் மூலமாகவே தம்மாலியன்றவரையில் பிரயோஜனம் பெற்றுத் தமது காரியங்களை வெகு சாமர்த்தியமாக முடித்துக்கொள்வார்கள். திறமையில்லாத ஒருவனே தன் கருவிகளைக் குற்றங்கூறுவான். ஆதலால் ஒரு காரியத்தை முடிப்பதற்கும், ஆயுத ஸகாயம் வேண்டியிருந்தபோதிலும், அவைகளைக் கிடைத்தவரையில் வைத்துக்கொண்டு, தமது திறமையாலேயே தமது காரியங்களைப் பெரியோர் முடிப்பார் என்பதே இப்பழமொழியின் கருத்து.

SOME HYGIENIC RULES.

சில ஸுகாதார விதிகள்.—சரீர ஸுகத்திற்கு ஐந்து விதமான விதிகள் சொல்லப்படிருக்கின்றன.

1. ஸுகமான போஜனம் இருக்கவேண்டும்.
2. சுத்தமான காற்று.
3. உடுத்திக் கொள்ளவும், போர்த்துக் கொள்ளவும், போதுமான வஸ்திரங்கள் இருக்கவேண்டும்.
4. சுத்தமாயிருக்கப்பழகவேண்டும்.
5. போதுமான உழைப்பும், அவசியமான காலத்தில் சிரமபரிகாரமும் இருக்கவேண்டும்.

ஸுகக்குறைவுண்டாவதற்கு மூன்றுகாரணங்கள்,

1. அறியாமை, 2. அஜாக்கிரதை, 3. இது கெடுதல் என்றறிந்த பின்னும் மறுப்பது.

THE THREE GEMS.

விரும்பக்கூடிய மும்மணிக்கோவை:—தைரியம், சாந்தம், அன்பு.

மெச்சக்கூடிய மும்மணி:—அரிய ஞானம், மேன்மை, தயை.

வெறுக்கக்கூடிய மும்மணி:—குரூரம், கர்வம், நன்றியறியாமை.

இகழக்கூடிய முப்பொருள்:—அற்பத்தனம், பொறாமை, பாசாங்கு.

பூஜ்யதைக்கு அருகமுள்ள முப்பொருள்:—தெய்வக்கொள்கை, தர்மம், சுயநயமின்மை.

ஆனந்தப் படக்கூடிய மும்மணி:—அழகு, சுயேச்சை, கபடமின்மை.

வேண்டக்கூடிய மும்மணி:—தேகாரோக்கியம், துணைவர்கள், சந்தோஷமனம்.

கொண்டாடக்கூடிய மும்மணி—ஞானம், சாமர்த்தியம், உறுதி.

நீக்கக்கூடிய முப்பொருள்:—சோம்பல், வாயாடித்தனம், வீண்வம்பு.

சண்டையிட்டுப் பெறக்கூடிய மும்மணி:—கண்ணியம், தேசம், துணைவர்கள்.

அடக்கி ஆளவேண்டிய முப்பொருள்:—கோபம், நாக்கு, வேகம்.

அனுபவிக்க சித்தமாக இருக்கவேண்டிய முப்பொருள்:—துக்கம், அழிவு, மரணம்.

EMPEROR EDWARD AND BOOT MAKING.

எட்வர்ட் சக்ரவர்த்தியும் பூட்ஸும்—காலஞ்சென்ற எட்வர்ட் சக்ரவர்த்தியின் பிதாவுக்குக் குழந்தைகளை வேலைசெய்யாமல் சும்மாவிருக்க இடங்கொடுக்க இஷ்டமிருக்கிறதில்லை. ஆகவே, எட்வர்ட் அரசரின் சகோதரிகளில் ஒருவருக்குக் கிளாஸ் செய்யுந்தொழில் கற்றுக்கொடுக்கப்பட்டது. மற்றொரு குமாரிக்கு நன்றாய் விசிறி செய்யத்தெரியும். வேறொரு இளவரசிக்குப் புக் பைண்டிங் வேலை தெரியும். எட்வர்ட் அரசருக்குப் பூட்ஸ்செய்யும் தொழில் கிடைத்தது. அவர் ஒரு தினத்தில் நேர்த்தியான ஒரு ஜதை பூட்ஸ் செய்துவிடுவாராம். ஒருதரம், அவர் நார்பக் ஜில்லாவிலுள்ள அவருடைய ஸாண்ட்ரிங் ஹாம் எஸ்டேட்டுக்கருகே ஒரு கிராமத்தில ஒரு கிழவன் பூட்ஸ் தைத்துக்கொண்டிருக்கக்கண்டு, அவன் செய்யும் வேலையைப் பிடுங்கித் தான் வெகு நேர்த்தியாய்ச் செய்து காண்பித்தாராம். அந்தக்கிழவன் வேலையின் திறமைக்காக ஆச்சரியமடைந்தானாம். தவிர, எட்வர்ட் அரசர் சித்திரம் எழுதுவதிலும் கெட்டிக்காரர். இவர் எழுதின ஒரு சித்திரம் ரூபா 8,000க்கு விற்கப்பட்டிருக்கிறது. நமக்குச் சக்ரவர்த்தியாயிருந்தவர் பூட்ஸ் தைத்தார் என்றால் நாம் என்னவேலைதான் செய்யக்கூடாது? திருடாமல், பொய் சொல்லாமல் எந்தத்தொழிலாகிலும் செய்து உழைத்து ஸம்பாதிப்பதனால் யாதொரு கௌரவக்குறைவும் இல்லை.

AN INTELLIGENT MOUSE.

ஒரு யுக்தியுள்ள சுண்டெலி.—நியூயார்க் பட்டணத்தில் சில காலங்களுக்குமுன் தந்தி ஸ்தம்பங்கள் நடுவதற்காகத் தோண்டப்பட்ட குழியொன்றில் ஒரு சுண்டெலி விழுந்து தவித்துக்கொண்டிருக்கிறதை வேலைக்காரர்கள் பார்த்து அது எவ்விதம் வெளியில் வரப்போகிறதென்று ஆச்சரியப்பட்டு அதைக் கொல்லாமல்விட்டு என்ன செய்கிறதென்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். துவக்கத்தில் அனேக மணி நேரங்களாக அந்தச் சிறு பிராணி அங்குமிங்கும் குதித்துத் தாவிச் சுற்றிக்கொண்டு வந்தது. பிறகு அப்படிச் செய்வதால் பிரயோஜனமில்லையென்று உணர்ந்து, குழியின் உள்பாகத்தில் நத்தை ஓட்டைப்போல் சுற்றிச் சுற்றி வரும்படியான ஒரு வழியைத் தோண்டத் துவக்கிற்று. இரவும் பகலும் வேலை செய்துகொண்டு வந்தது. இடையில் இளைப்பாறுகிறதற்காக ஒவ்வோரிடத்தில் விசாலமான மாடங்கள்போல் செய்து அங்கே சற்று நேரம் தங்கியிருக்கும். பிறகு மறுபடியும் வேலையைத் தொடர்ச்சியாய்ச் செய்துகொண்டுபோகும். வேலைக்காரர்கள் அநேக தடவை அதற்கு அந்த மாடங்களில் தீனிவைத்தார்கள். எலி அதைத் தின்று மறுபடியும் பலத்துடனும், தைரியத்துடனும் வேலையைச் செய்யும். இப்படியாகச் சலியாது அந்தச் சிறு பிராணி மூன்று நாளில் அந்த வேலையை முடித்து நாலாம் நாளில் குழியைவிட்டு மேலேறியது. அப்போது அதைக் கவனித்துக் கொண்டுவந்த தந்தி ஆபீஸ் வேலைக்காரர்களெல்லாம் மகா சந்தோஷத்துடன் அதைக் கொண்டாடினார்கள். அற்ப பிராணியாகிய ஒரு சுண்டெலிக்கு இத்தனை மனத்தைரியமும், விடா முயற்சியும் இருக்கையில், சொற்ப காரியங்களில் மனிதர்கள் அதைரியப் படுகிறது என்ன வெட்கக்கேடு!

THE LADIES' SECTION.

ஸ்திரீகள் பகுதி.

NUTMEG TEST.

ஜாதிக்காயை பரீக்ஷை செய்யும் விதம்.—ஒரு ஜாதிக்காயை எடுத்து, அதை ஒரு குண்டூசியில் குத்தினால், காய் நல்லதாய் இருந்தால், குத்தின இடத்திலிருந்து எண்ணெய் வெளிக்கிளம்பிவரும்.

HEIGHT OF LADIES.

ஸ்திரீகள் வளர்த்தி.—கிரேட்பிரிட்டனில் ஸ்திரீகள் வரவர உயரத்தில் விருத்தியடைந்து வருகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் 25 வருஷங்களுக்கு முன்னிருந்ததைவிடச் சராசரி 2 அங்குலம் உயரமடைந்திருக்கிறார்களாம்.

A BATHING TANK.

ஒரு ஸ்நானத்தொட்டி.—லிண்டஹர்ஸ்ட் நகரத்தில் ஹெலன் கூல்ட் என்னும் வாலிபப்பெண் நீந்தி விளையாடி ஸ்நானம் செய்வதற்காக ஒரு தொட்டி கட்டியிருக்கிறாள். இது 140 அடி நீளமும், 60 அடி அகலமுமுடையது. இதைக்கட்டிமுடிக்க அவள் கிட்டத்தட்ட இரண்டு லக்ஷம் ரூபாய் சிலவழித்திருக்கிறாளாம்.

A REMARRIAGE.

ஒரு மறு விவாகம்.—காகிநாடாவில் காமேசுவரம்மாள் என்ற ஒரு பிராம்மண கைம்பெண்ணுக்கு ஸமீபத்தில் மறு விவாகமாயிற்று. அந்தப்பெண்ணுக்கு 16 வயதென்றும், அவளைக் கலியாணம் செய்து கொண்டவரின் பேர் வியாக்ரேசுவரரென்றும், அவருக்கு 27 வயதென்றும் தெரிகிறது.

LADY SANITARY INSPECTRESS.

கல்கட்டா கார்பரேஷனுக்கு ஸ்திரீ இன்ஸ்பெக்டர்கள்.—கல்கட்டா கார்பரேஷன் ஹெல்த் ஆபீசர் (சுகாதார அதிகாரி) அந்தக் கார்பரேஷனைச் சேர்ந்த ஒரு ஜில்லாவில் ஸ்திரீகளை ஸானிடெரி இன்ஸ்பெக்டர்களாய் நியமித்துப் பார்த்து அப்படிச் செய்வதில் அனுகூலமிருக்கிறதென்று தெரிந்துகொண்டு இப்போது அந்த கார்பரேஷனைச்சேர்ந்த ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஸ்திரீ ஸானிடெரி இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதைப் பற்றிப் பிரேரணைகள் செய்திருக்கிறார்.

WATERED MILK.

தண்ணீர் கலந்த பால்.—ஒரு பாத்திரத்திலுள்ள பாலை தண்ணீர் கலப்பான பாலென்று அறிய ஒரு சுலபமான வழியுண்டு. அதாவது, ஒரு பளபளப்பான குண்டூசியைப் பால் நிரப்பியுள்ள பாத்திரத்தில் விட்டு உடனே வெளியே எடுத்துப் பிடிக்க, பால் கலப்புள்ளதாயிருப்பின் ஊசியில் ஒட்டிக் கொண்டிராது.

A BRAVE GIRL.

ஒரு தைரியப்பெண்.—பர்மா நாட்டின் வடகிழக்கு தூரதேசத்தில் பதினாறு வயதுள்ள சிறு பெண் ஒரு பெரிய வேங்கைப்புலியைக் கொன்று வீழ்த்தியதாக டேவிட்வில்ஸன் என்பவர் ஒரு பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். "றாவேபின்" என்ற அந்தச்சிறுமி தன் இளைய சகோதரிகளை நடத்திக்கொண்டு அடுத்த கிராமத்துக்குப் போவதற்காக ஒரு காட்டைத்தாண்ட நேரிட்டபோது ஒரு புலி திடீரென்று பாய்ந்து இளைய சகோதரியைப் பற்றித் தூக்கிக்கொண்டோடவே "றாவேபின்" தன் கையிலிருந்த ஒரு கைக்கோடரியோடு பாய்ந்து சென்று புலியை நெருங்கி அதன் நெற்றியில் ஒரு போடுபோட அப்புலி திகைத்து நின்றதாம். சிறுமி தைரியத்தைக் கைவிடாமல் அடிமேலடியாய் நெற்றியிலே கொத்த புலி வீறிட்டுப் பிள்ளையை நழுவவிட்டு பொத்தென்று விழுந்து செத்ததாம். "இவளல்லவோ தைரிய லட்சுமி குடிபுகுந்தவள்."

A CLEVER THEFT.

ஒரு சாதுர்யத் திருட்டு.—ஸ்திரீகள் எப்போதும் துணையில்லாமல் எங்கேயும் போகக்கூடாது. "அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்" என்பது ஆண்பிள்ளை, பெண்பிள்ளையாகிய இருதிறத்தாருக்கும் கூறிய நன்மொழி. பம்பாயில் ஒரு பிராமண ஸ்திரீ தனியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் ஒரு திருடன் எதிர்ப்பட்டு அவளுடைய கழுத்திலிருந்த காசுமாலையை வெடுக்கென்று அறுத்தான். ஸ்திரீ தைரியசாலியாதலால் அவனுடைய கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கூவினாள். தக்ஷணமே மற்றொருவன் ஓடிவந்து, "அம்மா! அவன் கையை விடுங்கள், நான் அந்தப்பயலை உதைக்கிறேன்" என்று சொன்னான். சொல்லவே அவள் நிஜமென்று கையை விட்டாள். இரண்டு திருடர்களும் நகையோடு ஓட்டம் பிடித்தார்கள். ஸ்திரீ பிரமித்து நின்றாளாம்.

THE INDIAN LADIES CONFERENCE.

மாதர்களின் சங்கம்.—இந்த மாஸக் கடைசியிலே அதாவது கிறிஸ்மஸ் விடுமுறை காலத்தில், பாரத ஸ்திரீ மகா மண்டலி என்ற எல்லா இந்திய மாதர்கள் சங்கத்தின் ஆதரவின் கீழ் அலஹபாத்திலே ஒரு மகில பாரிஷத், அதாவது இந்திய மாதர்களின் கான்பரென்ஸ் ஒன்று கூடப்படுமென்றும், அதற்கு நம் நாட்டிலுள்ள இந்திய ஸ்திரீகளும் (அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களா யிருந்தாலும் ஸரி) ஆங்கிலேய இந்திய ஸ்திரீகளும் அழைக்கப்படுகிறார்களென்றும், பிரதிநிதிகளாய் வருவோர் அவர்களுடைய வரவைத் தமக்கு இந்த மாஸம் 15-ந் தேதிக்குள்ளாகத் தெரிவிக்க வேண்டுமென்றும், லாகூர் வாஸியாகிய மிஸஸ் சார்ளதேவி "சௌதாரணி" பத்திரிகைக்கு எழுதி விளம்பரம் செய்திருக்கிறார். இந்தக் கான்பரென்ஸின் தலைமையை வகிக்க இசையும்படி போபால் நாட்டு மகமதிய அரசி பீகம்சாகிபாவை செய்வதற்கு கூடியவரையில் முயற்சி செய்யப்பட்டு வருவதாய்த் தெரிகிறது.

ATTENTION TO BREATHING.

சுவாஸம் விடுவதில் கவனம்.—மனுஷராய்ப் பிறந்தவர்கள் தேகா ரோக்கியமுடையராய் இருப்பதற்கு முதல் முதல் சுவாஸிக்கும் காற்று நல்லதாய் இருக்கவேண்டும். சுவாஸத்தில் இருவகையுண்டு. உச்சுவாஸம், நிச்சுவாஸம். உச்சுவாஸமென்பது உள்ளே வாங்கும் மூச்சு, நிச்சுவாஸமென்பது வெளியே விடும் மூச்சு. இவ்விரண்டும் வெவ்வேறு விதமான காரணப்பொருள்கள் கொண்டது. உதாரணமாக:—சுண்டெலி யொன்றைப் பிடித்து காற்றுப்போகாத ஒரு சிறு பாத்திரத்துக்குள் போட்டு நாம் விடும் நிச்சுவாஸத்தை ஒரு குழாய் வழியாகப் பாத்திரத்தினுள் போக விட்டு சற்று நேரத்திற்கெல்லாம் பாத்திரத்தைத் திறந்து பார்த்தால் சுண்டெலி மயங்கிக்கிடப்பதைக் காணலாம். நல்ல காற்றைச் சுவாஸிப்பதில் தேகாரோக்கியத்தோடு இருக்க முடியும். இதன்றி நாம் படுத்தூங்கும் போது உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஒரே மூட்டமாய்ப் போர்த்துப் படுத்து விட்டால், நிச்சுவாஸித்த காற்று வெளியேற வகையில்லாமல் திரும்ப அதுவே உச்சுவாஸக் காற்றாய் உள்ளே போகிறது. அசுத்தமான காற்றை சுவாஸிப்பதனால் தேகாரோக்கியம் கெட்டுப் போகுமென்பது அனுபவ சித்தாந்தம். ஆதலால் தாய்மார்கள் தம் குழந்தைகள் விஷயத்தில் தொட்டிலில் போட்டுப் போர்த்தும் போதோ, தூளியில்போட்டு ஆட்டும் போதோ ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

TWINS BORN UNDER SPECIAL CIRCUMSTANCES.

இரட்டைக் குழந்தைகள் பிறந்த சில விசேஷ சந்தர்ப்பங்கள்.—'ஸாம்பையர்' என்னுங் கப்பல் சேதமடைந்து அதிலுள்ள ஜனங்கள் சிறிய படகுகளிலும், துண்டு, துணிக்கைகளிலுமாகத் தொற்றி உயிர் தப்பி யோடும்போது, இரண்டு மரக்கட்டைகளால் இணைக்கப்பட்ட ஒரு சிறிய தெப்பத்தில், ஒரு மாது இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அந்தத் தெப்பத்திலுள்ள எத்தனையோ ஆடவர் அலையால் எறியப்பட்டும், பசியால் களைத்தும் மடிய, இந்தப் பெண்மணியும், அவள் இரு கண்மணிகளும் தெய்வாதீனமாய் உயிர் பிழைத்து கரை வந்து சேர்ந்தார்களாம்.

சில வருஷங்களுக்குமுன் ஸ்பெயின் தேசத்து முக்கிய பட்டிணமாகிய மாட்ரிட் நகரத்தில் நடந்த ஸர்க்கஸ் ஆட்டத்தில் கார்லோ லாம்புரோ என்பவருடைய மனைவி, சிங்கம், புலி முதலிய துஷ்ட மிருகங்களோடு விளையாடிக்கொண்டிருக்கும் தருணத்தில் அவைகளின் கூண்டுக்குள்ளேயே யாவருமதிசயிக்க இரட்டைப் பிள்ளைகளைப் பெற்று குழந்தைகளுக்காவது அவளுக்காவது துஷ்ட மிருகங்களால் யாதொரு துன்பமும் இல்லாமல் வெளியேறினளாம்.

பிராஞ்சிய ஜெர்மானிய யுத்தத்தில் மாடம் கொல்லட் என்பவள் இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்த சரித்திரம் மிகுந்த ஆச்சரியத்தைத் தரத்தக்கது. மாடம் கொல்லட் என்பவள் பிராஞ்சிய சைனியத்துக்கு ஆகார பதார்த்தம் ஸப்ளை செய்துகொண்டிருந்த கண்ட்ராக்ட்காரரின் மனைவி. ஸிடான் நகரத்தில் 2000-க்கு மேற்பட்ட ஜெர்மானிய பீரங்கிகள் வாயைத்திறந்து அக்கினியைக் கொந்தளித்துப் பிராஞ்சியப் படைகளை ஹதமாக்கும்போது கொல்லட் துரைசாணி படைமுகத்தில் தங்கியிருந்த கூடாரம் குண்டுபெற்று சிதறுண்டுபோயிற்று. அவளுக்கு துணையாய் நின்ற அவள் பர்த்தாவும் குண்டுபட்டு அவள் பக்கத்திலேயே மடிந்தான். அப்போது அந்தப் பதிவிரதை இரண்டுபெண் மக்களைப் பெற்று யாதொரு தீங்குமில்லாமல் ஆச்சரியப்படத்தக்க விதமாய் அவளுடைய இரண்டு மக்களோடும் தப்பிக் கொண்டாளாம். "முஸ்லிம் நேசன்."

DEPARTMENTAL NOTES.

பகுதிக் குறிப்புகள்.

◆

AGRICULTURAL NOTES.

விவஸாயக் குறிப்புகள்.

A GOOD REMEDY.

ஒரு நல்ல மருந்து.—புங்கன் வேரைச் சுரண்டிப் பிழிந்து கால்நடைகளின் புண்ணுக்கு அல்லது புழுத்திருக்கும் கொம்புக்குப் போட்டால் உடனே குணப்படும்.

MANURE FOR COCOANUTS.

தென்னைக்கு உரம்.—சொற்ப காலத்தில் பலன் தரும் கீரை கத்தரி முதலிய பயிர்களுக்கே உரம் விடவேண்டுமானால் நெடுநாள் பலன் தரும். தென்னைக்கு உரம் விடவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். புதுச்சேரியில் ஒரு தென்னைமரம் புஞ்சை நிலத்தில் இருபத்தைந்து வருஷமாகப் பாதுகாக்கப் படாமல் இருந்து அதனால் தலைசிறுத்து, அடித்தண்டு பன்னிரண்டு அங்குலமும், தலை நாலங்குலமும் இலை இரண்டரை அடி நீளமும் இருந்தது. அம்மரத்தைச் சுற்றிலும் ஆறு அடி தூரம் வெட்டி, இரண்டு ராத்தல் பிண்ணாக்கும், ஐந்து ராத்தல் எலும்புத்தூளும் போட்டுத் தண்ணீர் பாய்ச்சிவர, ஒரு வருஷத்தில் இலைவிட்டுப் பதினைந்து அடி நீளமாயிற்று. ஒன்றரை வருஷத்தில் முதல் பாளை வந்தது. அப்போது ஐந்து ராத்தல் பிண்ணாக்கும், இரண்டு ராத்தல் எலும்புத்தூளும் போடப்பட்டது. இரண்டரை வருஷத்தில் குலை பருத்து மரம் எங்கு உடைந்துவிழுந்துவிடுமோ என்று நினைக்கவேண்டியதாயிற்று. இரண்டாவது தரம் போட்ட உரத்திட்டப்படி ஒவ்வொரு வருஷமும் மூன்று வருஷம் வரையில் போடப்பட்டது. அம்மரம், நாற்பது ராத்தல் பிண்ணாக்கும், 13 ராத்தல் எலும்புத்தூளும் போட்டதற்கு நூற்றியெழுபது தேங்காய்கள் கொடுத்தது. பட்டினியால் வருந்தும் ஜனங்கள் போலும், பஞ்சத்தால் தீனி குறைந்த மாடுகள் போலும் நமது நிலங்களுக்கு உணவில்லாமல் பூஸாரம் அற்றுக் குறைந்துக் கொண்டு வருகிறது.

YOUNG COCOANUT TREES.

தென்னங்கன்றுகள்.—தென்னங் கன்றுகள் நன்றாய் வளராவிட்டால் அவைகளைப் பெயர்த்து வேறிடத்தில் குழி வெட்டி எருப்போட்டு அந்தக்குழியில் நடலாம். இப்படிப்பெயர்த்து நட்டால் கன்றுகள் நன்றாய் வளரும்.

WATER FOR CROPS.

பயிர்களுக்குத் தண்ணீர்.—ஒரு வினாடியில் ஒரு கன அடி ஜலம் பாய்ந்தால் ஒரு நாளில் கங்கையில் 189 ஏகராவும், யமுனையில் 214 ஏகராவும் பாய, தஞ்சாவூர் ஜில்லாவில் 44 ஏகரா பாய்கிறது. மைஸூரில் 35 ஏகரா பாய்கிறது. ஆவியாய்ப் போவதற்கும், மற்ற விஷயமாய் நஷ்டமாவதற்கும் இந்தியாவில் அநேக இடங்களில் ஒரு நாளுக்கு ½ அங்குலம் அதாவது ஒரு ஏகராவுக்கு 1,815 கன அடி ஜலம் விடுவதுண்டு. நெல்லுக்கு 8 நாளுக்கு 4 அங்குலம் ஜலம் வேண்டும். ஒரு வினாடிக்கு ஒரு கன அடி 50 ஏகராவுக்குப் போதும். கோடை காலத்து தானியப் பயிருக்கு 20 நாளைக்கு 4 அங்குலம் போதும். அதாவது 14,520 கன அடி ஒரு ஏகராவுக்குவேண்டும். பம்பாய் தக்ஷிண நாட்டில் 40 ஏகரா நெல்லுக்குப்பாயும் ஜலம் 100 ஏகரா கரும்புக்கும், குளிர் காலத்துப் பயிர் 150 ஏகராவுக்கும், மழை காலத்தில் 200 ஏகராவுக்கும் போதுமாய் இருக்கிறது.—தே. வி.

IRON PLOUGHS.

இரும்புக்கலப்பை.—லங்கையிலே இரும்புக் கலப்பைகள் பழக்கத்துக்கு வரவேண்டுமென்று கிருஷிச்சங்கத்தார் விரும்புகிறார்கள். அங்கங்கேயுள்ள கிளைச்சங்கங்கள் மூலமாகவே ஒவ்வொரு இடத்திலும் இதை ஒப்புக்கொள்ளச் செய்யவேண்டுமென்பது அவர்கள் கருத்து. சில கிளைச்சங்கங்கள் இதைப்பரீட்சித்துத் தாய்ச்சங்கத்தின் யோசனை தகுதியானது தானென்று கண்டிருக்கின்றன. தென்மாகாணக்கிளைச் சங்கமொன்று கிசா என்னும் இடத்திலே இந்தக்கலப்பையை உபயோகித்துப்பார்த்து அதனால் அதிக நலமுண்டென்று கண்டிருக்கிறது. லங்கைக் கிருஷிச்சங்கத்தவரால் நியமிக்கப்பட்ட இரு உபாத்திமார் அங்கே இந்தப்பரீட்சையை நடப்பித்து ஜனங்களுக்கு ருசிகாட்டி வருகிறார்கள்.

THE WEIGHT OF SOME ANIMALS.

சில மிருகங்களின் நிறை.

அந்தர்

யானையின் தூக்கம் 60 = 6720 ராத்தல்

பீரங்கி இழுக்கும்

குதிரை 11 = 1232 ,,

ஸவாரிக் குதிரை 8 = 895 ,,

விவஸாயக் குதிரை 14 = 1568 ,,

ஒட்டகம் 10½ = 1176 ,,

சிறிய எருது 6 = 672 ,,

பெரிய எருது 10 = 1120 ,,

பசு 6½ = 728 ,,

பன்றி 3½ = 392 ,,

பெரிய பன்றி 3¾ = 420 ,,

ஆடு 65 ,,

பெரிய ஆடு 90 ,,

REMISSION PETITIONS.

தீர்வை வஜா மனுக்கள்.—ஸமீபத்தில் நம்முடைய ராஜதானி சட்ட ஸபையின் மீட்டிங்கொன்று நடந்தது. அதில் ஆனரபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை, சாவிக்காக ரெவினியூ வஜா செய்ய வேண்டி வரும்போது, விவஸாயிகள் முன்னதாக மனுச் செய்துகொள்ள வேண்டுமென்ற ஒழுங்கை மாற்றவேண்டுமென்று பிரேரணை செய்தார். மிஸ்டர் கேசவப்பிள்ளை கொண்டு வந்த தீர்மானம் விவஸாயிகளின் நன்மைக்கு அவசியமா யிருந்தாலும், அதை கவர்ன்மெண்டு மெம்பர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனரபில் மிஸ்டர் அட்கின்ஸன் விவஸாயிகள் மனுச்செய்துகொள்ள வேண்டுமென்ற ஒழுங்கை எடுத்து விட்டால், அவர்கள் இப்போதைவிட அதிகமாய்க் கிராமக் கர்ணங்களுடைய தயவை யண்டினவர்களாகிக் கஷ்டப்படுவார்களென்றார். வஜாவை வேண்டும் விவஸாயிகள் அதிகாரிகளுக்கு விண்ணப்ப மூலமாய்த் தெரிவித்துக் கொள்ளாவிட்டால், அதிகாரிகள் கர்ணம் ரெவினியூ இன்ஸ்பெக்டர் இவர்கள் சொல்லுகிறபடி செய்யவேண்டி வருமாகையால், விவஸாயிகளின் நிலைமை இன்னும் கெட்டுப்போமென்றும் சொன்னார். இப்படிச் சொன்னதில், சிறிது உண்மை இருக்கிறதென்றே ஒப்புக்கொள்ள வேண்டும். ஆயினும், உண்மை எப்படி என்று அவ்வவ்விடத்து அனுபோகத்தைக் கொண்டு தெரிந்துகொள்ள வேண்டியதாகையால், மிஸ்டர் கேசவப் பிள்ளையின் தீர்மானத்துக்கு 17 பிரதிநிதி மெம்பர்கள் ஸாதகமாய் வோட்டுக் கொடுத்ததைக் கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டும். இந்த 17 மெம்பர்கள் அனைவரும் அனுபோகஸ்தர்களாயும் விவஸாயிகளின் நிலைமையை அறிந்தவர்களாயும் இருப்பதால், அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கவர்ன்மெண்டார் அசட்டை செய்யக்கூடாது.

DISEASES OF PLANTS.

செடிகளின் நோய்கள்.—காப்பிச் செடிகளுக்கு கருப்பு என்பதாக ஒரு கொள்ளை நோய் உண்டாவது ஸகஜம். இது செடிகளின்மேல் கறுப்பான தாரைப் பூசினால் எப்படித்தோற்றுமோ, அவ்விதமாய் ஒரு விதக் கறுப்பான சிறிய பூச்சிகளுண்டாய் வெகு சீக்கிரத்தில் செடிகளையே பாழாக்கிவிடுகின்றன. இதற்கு இன்றும் தகுந்த ஔஷத முறைகண்டு பிடிக்கப்படவில்லை. நீலகிரி மலையில் உள்ள காப்பித் தோட்டங்களில் இந்த வியாதி தோன்றி செடிகளைப் பாழாக்கித் தோட்டக்காரர்களை கஷ்டத்திற்குள்ளாக்குகிறது. கரும்பு, சோளம் முதலிய சில பயிர்களுக்கும் சோகை என்பதாக ஒரு விதமான காய்ச்சல் நோய் திடீரென்று கண்டு, தோகை அல்லது தழைகளை வாட்டி, வெளுக்கச்செய்து பயிரையே பாழாக்கிவிடுகிறது. உருளைக் கிழங்குப் பயிர்களுக்குப் புள்ளி நோய் என்பதாக ஒரு வியாதி தோன்றுவதுண்டு. அவரையை மசி என்பதாக ஒரு விதப் பூச்சிகள் விழுந்து பாழாக்குவதுண்டு. இவ்விதமாய்ப் பயிர்களுக்கும், செடிகளுக்கும், நேரும் வியாதிகளுக்கும், கால் நடைகளுக்கு உண்டாகும் கொள்ளை நோய், கோமாரி, முதலியவைகளுக்கும் காரணங்களை யறிந்து தக்க பரிகாரங்களையும், முறைகளையும் அறியவேண்டியது விவஸாயிகளின் கடமை. இவைகளின் விஷயமாகப் பரிசோதனைகள் செய்து சிகிச்சை செய்ய கவர்ன்மெண்டார் நிபுணர்களை நியமித்திருக்கிறார்கள். ஆகையால் மேலே சொல்லப்பட்ட விதமாய் ஏதாவது தொந்தரவு நேரிட்டால் உடனே விவஸாய இலாகா உத்தியோகஸ்தருக்கு எழுதிப் பரிஹாரத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்.

INDUSTRIAL NOTES.

கைத்தொழில் குறிப்புகள்.

BONE.

எலும்பு.—இதைக் கடைசல் பிடித்துக் குமிழ்கள், கைப்பிடிகள், 'பொத்தான்' முதலிய ஸாமான்கள் செய்யலாம். இதைத் தீயிற்சுட்டால் எலும்புக் கரியாகும். எலும்புக் கரியானது சர்க்கரையைச் சுத்தப்படுத்துவதற்கு உபயோகப்படும்.

AN INDUSTRIAL CONFERENCE.

ஒரு தொழில் ஆலோசனைக் கான்பரென்ஸ்.—அடுத்து வரும் மாரிகாலத்தில் பஞ்சாப் நாட்டில் மாகாணத்தொழில் ஆலோசனைக் கான்பரென்ஸ் ஒன்று கூட்டப்படுமென்றும், அந்த கான்பரென்ஸின் தலைமையை லெப்டினன்ட் கவர்னர் ஸர் லூயி வகிப்பாரென்றும் தெரிகிறது.

A SPINNING AND WEAVING MILL.

ஒரு நூற்பு நெசவு மில்.—கோயமுத்தூரில் ஸமீபத்தில் காளேசுவரர் தொழிற்சாலையென்ற பேருடன் ஒரு நூற்பு நெசவு யந்திரத் தொழிற்சாலை கோயமுத்தூர் கலெக்டர் மிஸ்டர் கில்மானால் திறக்கப்பட்டது. அந்தத் தொழிற்சாலையை ஸ்தாபிக்கும் யோசனைக்கு மூலகாரணமாயிருந்தவர் மலையாள நூற்புத் தொழிற்சாலையின் மானேஜ்மெண்டை வகித்துப்பார்க்கும் தேவகோட்டை ஜமீன்தார் அருணாசல செட்டியார்தானும்.

CANDLE.

மெழுகு வர்த்தி.—பல வகையான கொழுப்புகளை உபயோகித்து வர்த்திகள் செய்கிறார்கள். திமிங்கிலத்தின் தலையிலுள்ள கொழுப்பைக் கொண்டு செய்யும் வர்த்தி உயர்தரமானது. பன்றி, ஆடு முதலியவைகளின் கொழுப்பைக் கொண்டு செய்வது மட்டமானது; மெழுகுவர்த்தியிலிருக்கும் நூல் வர்த்தியைப் பின்னியிருப்பதனால் அது எரியும்பொழுது வளைகின்றது. எண்ணெய் விளக்குகளின் வர்த்தியைப்போல அடிக்கடி அதைத் தூண்டிக்கொடுக்க வேண்டியதில்லை. அந்த வர்த்தியைச் செய்தவுடன் வெண்காரநீரில் தோய்த்துக் காயவைக்கிறார்கள். இதனால், அது சாம்பல் தட்டாமல் எரிகிறது.

THE SEMBIUM TANNERY.

செம்பியம் தோல் பதனிடுஞ் சாலை.—சென்னப் பட்டணத்துக்கு அடுத்துள்ள செம்பியத்தில் தாங்கள் ஸ்தாபித்து நடத்திவந்த க்ரோம் டானரியை (க்ரோம் முறைப்படி தோல் பதனிடுஞ்சாலையை) கவர்ன்மெண்டார் மூடி விட்டார்கள். அந்தத் தொழிற்சாலையை அவர்கள் மத்திய இந்திய நாடுகளிலுள்ள ரீவா சமஸ்தானத்துக்கு விற்று விட்டார்கள். அந்த சமஸ்தானத்தார் இப்போது பொம்பூரில் அந்த வேலையை நடத்தி வருகிறார்கள்.

A PENCIL FACTORY.

ஒரு பென்ஸில் செய்யும் பாக்டெரி.—கல்கத்தாவுக்கு ஸமீபத்தில் டாலிகன்ஜ் என்னும் இடத்தில் பென்ஸில் செய்வதற்காக ஒரு சிறு கம்பெனி ஏற்பட்டு வேலைசெய்து வருகிறது. இதற்கு முதல் ரூபாய் 46,000. அங்கேயுள்ள யந்திரத்தால் 120 க்ரோஸ் பென்ஸில்கள் செய்யலாம். ஒரு க்ரோஸ் என்பது பன்னிரண்டு டஜன் அதாவது 144 ஆனால், தற்காலம் 5,760 பென்ஸில்கள்தான் ஒரு நாளில் உண்டாக்கப் படுகின்றனவாம். இது அபிவிருத்தியானால் இந்தியா முழுவதுமுள்ள பள்ளிக்கூடங்களுக்குப் போதுமான பென்ஸில்கள் கொடுத்து உதவலாம்.

A BUTTON FACTORY.

ஒரு பொத்தான் செய்யும் சாலை.—வங்காளத்தில் பொத்தான் தொழிற்சாலை ஒன்றிருக்கிறது. ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஒஸாகாசென்று பொத்தான் செய்யும் தொழிலைக் கற்றுக்கொண்டு வந்திருக்கும் மிஸ்டர் சைலேந்திர தத்குப்தா என்பவரால் இந்தச்சாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில் 40 வங்காளச் சிறுவர்கள் வேலை செய்து வருகிறார்கள். அத்தொழிற்சாலையில் செய்யப்படும் பொத்தான்கள் அந்நிய நாடுகளிலிருந்து வந்து இந்நாட்டில் விலையாகும் பொத்தான்களுக்கு இளப்பமாயிருக்கவில்லை எனப்படுகிறது. சிப்பிகள், கொட்டைகள், குளம்புகள், தேங்காய்க் கொட்டாங்கச்சிகள், கொட்டைப் பாக்குகள் இவைகளெல்லாம் அந்தத்தொழிற்சாலையில் பொத்தான் செய்ய உபயோகப் படுகின்றனவாம்.

EDUCATIONAL NOTES.

வித்யா விஷயக் குறிப்புகள்.

THE POOR BOY'S FUND.

ஏழைப் பையன்களுக்கான நிதி.—ஏழை மாணாக்கர்களுக்குத் திரவிய ஸகாயஞ்செய்து கல்விபயிற்றுவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சென்னப்பட்டணத்திலுள்ள சில கனவான்கள் இந்த நிதிசேர்த்திருக்கிறார்கள். 1910-11-ம் வருஷத்துக்கு ப்ரொபஸர் எம். ரங்காச்சாரியாரும், கே. பி. ராமநாதய்யரும், மிஸ்டர் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியாரும், கமிட்டி மெம்பர்களாக இருக்கிறார்கள். சென்னை காலேஜ்களில் படிக்கும் இந்து மாணாக்கருக்கே உதவி செய்வதாகத் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்டர் மீடியட் படிப்புக்கு மாஸம் ரூபாய் 7-ம், பி. ஏ. படிப்புக்கு ரூபாய் 10-ம், ஸ்காலர்ஷிப் கொடுத்து வருகிறார்கள். ஒவ்வொரு மாணாக்கனும் ஆறுமாஸத்துக்கொருதரம் காலேஜ் அதிகாரியிடமிருந்து தன் அபிவிர்த்தியைக் குறித்து ஸர்டிபிகேட் வாங்கவேண்டும். இந்த ஸ்காலர்ஷிப்பைப் பெறும் பொருட்டு 106-அப்ளிகேஷன் வந்ததில், 33 ஏழைப் பையன்கள் அதற்குத் தகுதியானவர்களென்று தெரிந்தெடுக்கப்பட்டார்கள். ஸீனியர் பி-ஏ. கிளாஸில் 7-பேரும், ஜூனியர் கிளாஸில் 8-பேரும், ஸீனியர் இன்டர் மீடியட் கிளாஸில் 8-பேரும், ஜூனியர் கிளாஸில் 10-பேரும் படிக்கிறார்கள். இவர்களில் 15-பேர் பச்சையப்பன் காலேஜிலும், 9-பேர் கிறிஸ்டியன் காலேஜிலும், 7-பேர் வெஸ்லி காலேஜிலும், 2-பேர் பிரஸிடென்ஸி காலேஜிலும் படிக்கிறார்கள். ஆனால் இவர்களுள் ஒரு மாணாக்கன் படிப்பை நிறுத்திவிட்டான். மற்றொருவன் வேறொரு ஸ்காலர்ஷிப்பை அபேக்ஷித்து இதை விட்டுவிட்டான். இன்னும் மூன்றுபேர் இதரவழிகளில் திரவிய ஸகாயம் பெறுவதாகத் தெரிந்ததால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் நிறுத்தப்பட்டது. ஆகையால் 28 ஏழை மாணாக்கர்கள் போன செப்டம்பர் மாஸம் வரையிலும் ஸ்காலர்ஷிப் பெற்று வந்திருக்கிறார்கள். இந்த நிதிக்கு சேர்க்கப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 2,434. இது இந்தியன் பாங்கில் வைக்கப்பட்டிருக்கிறது. சென்ற செப்டம்பர் மாஸத்தில் இந்த நிதியின் கையிருப்பித் தொகை ரூபாய் 1,271-9-7.

SILK REARING.

பட்டுப்பூச்சி வளர்த்தல்.—மைஸூர் கவர்ன்மெண்டார் பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழிலை அந்த ஸமஸ்தானத்துப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு பிரகிருதி சாஸ்திரபாடமாய் கற்றுக்கொடுக்கும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள். அதற்காக பெங்களூர் டாடாவின் பட்டுப் பூச்சி வளர்க்கும் பண்ணையில் கற்றிருக்கும் உபாத்தியாயர்களை தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

AN INDUSTRIAL SCHOLARSHIP.

ஒரு தொழில் ஸ்காலர்ஷிப்.—சென்னை கவர்ன்மெண்டாரின் சிபார்சின்மேல் இந்தியா கவர்ன்மெண்டார் மிஸ்டர் டி. குமான் நாயருக்கு, அவர் இங்கிலாண்டு சென்று பர்மிங்காம் யூனிவர்ஸிடியில் பொன், வெள்ளி, செம்பு, போன்ற உலோகங்களில் வேலைசெய்யும் தொழிலைக்கற்றுவர ஒரு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். இந்தியா மந்திரி மிஸ்டர் நாயர் பர்மிங்காம் யூனிவர்ஸிடியில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்.

A NEW UNIVERSITY IN CAPE COLONY.

கேப் காலனியில் ஒரு புதிய ஸர்வகலாசாலை.—கேப் காலனி என்பது தென்னாப்பிரிக்காவிலுள்ள குடியேற்ற நாடுகளில் ஒன்று. அங்கே அநேக இந்தியர் குடியேறி இருக்கிறார்கள். இருந்தாலென்ன? அவ்விடத்தில் நல்வாழ்க்கைக்குரிய ஸாதகங்கள் அவர்களுக்குப் பயன் படுவனவல்ல. அந்த கேப் காலனியில் க்ரூடெஸ் சர் என்ற ஊரில் ஒரு புதிய ஸர்வகலாசாலை ஸ்தாபிப்பதற்காக இரண்டு செல்வவான்கள் 5 லக்ஷம் பவுன் அதாவது 75 லக்ஷம் ரூபாய், நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். மிஸ்டர் ஆல்ப்ரெட்பேட் என்பவர் 2 லக்ஷம் பவுனும், ஸர் ஜூலியஸ்வெர்ன்ஹர் 3 லக்ஷம் பவுனும் கொடுத்திருக்கிறார்கள். நமது சக்ரவர்த்தியின் சிற்றப்பனுடைய ட்யூக் அப்கானட்டு இப்போது அங்கிருந்து ஸமீபத்தில் இந்தப்புதிய ஸர்வகலாசாலை மண்டபத்துக்கு அஸ்திவாரம் நாட்டினார். அப்போது அந்த ஸர்வகலாசாலைக்குப் போதுமான ஐவேஜு கிடைத்து அது நிறைவேறுமானால், தென்னாப்பிரிக்கா வெள்ளை ஜனங்களின் ஒருமித்த வாழ்க்கைக்கும், புத்தி அபிவிர்த்திக்கும் காரணமாகுமென்று சொல்ல, அதற்கு இசைந்து இந்த இரண்டு பெரும் தருமங்களும் செய்யப்பட்டனவாம்.

LITERARY NOTES.

புஸ்தகக் குறிப்புகள்.

A CAR LIKE MAP.

தேர்போன்ற ஒரு படம்.—திருஞான சம்பந்தஸ்வாமிகளாலும், திருமங்கை யாழ்வாராலும் செய்யப்பட்ட திரு எக்கூற்றிருக்கையை வெகு சாதுர்யமாய் தேர்போன்ற படரூபமாக சுவற்றில் ஒட்டிவைக்கும்படி சென்னப்பட்டணம் இந்தியன் பேட்ரியெட் அச்சாபீஸ் போர்மனுகிய சு. ப. நாதமுனி நாயடு அவர்களால் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. விலை 6 தம்படி, வேண்டியவர்கள் அவருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

A FAMOUS BOOK.

ஒரு பேர்பெற்ற கதைப் புஸ்தகம்.—மிஸ்டர் சாரத்குமார் கோஷ் என்பவர் இங்கிலீஷில் “ப்ரின்ஸ் ஆப் டெஸ்ட்டினி” என்பதாக மகா அருமையான ஒரு கதைப் புஸ்தகம் இங்கிலாந்தில் பிரசுரம் செய்திருக்கிறார். இது எல்லா ஐரோப்பியராலும் மிகவும் மெச்சப்படுகிறது. இந்தப் புஸ்தகம் நார்வே தேசத்தில் நார்வே பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்தியர் எழுதிய இங்கிலீஷ் புஸ்தகம் இதுதான் முதல் தடவையாக அந்நிய ஐரோப்பிய பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. மேரி அரசி அந்தப்புஸ்தகத்தை வந்தனத்துடன் பெற்றுக்கொண்டதோடு, நார்வே தேசத்து அரசியும் இதை ஆசிரியரிடமிருந்து சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

A PUN.

ஒரு சாதுர்யவார்த்தை.—ஒரு காலத்தில் பிரபல வித்வானொருவர் சீட்டுக் கவியொன்று எழுதிக்கொண்டு தியாகம் வாங்குவதற்காக ஒரு ஜமீன்தாரிடம் போனார். ஜமீன்தார் அவர்கள் சீட்டுக் கவியைக்கேட்டு மிக மகிழ்ந்து புலவருக்குத் தியாகம் கொடுக்க எண்ணி ஒரு வெள்ளித் தட்டில் கறுப்பு நிறம் பொருந்திய பட்டுசால்வை யொன்று வைத்து அதன்மேல் ரூபாய் 50 வைத்துப் புலவரிடம் கொண்டுவந்தார். சன்மானம் செய்தது புலவருக்குத்திருப்திகரமாக இல்லை. இன்னும் அதிகமாய்ப் பெறவேண்டுமென்னும் கருத்துக்கொண்டு “இதென்ன காரித்துப்பட்டா” என்று சொன்னார். உடனே ஜமீன்தாரவர்கள் புலவருடைய சாதுர்யத்தை அறிந்து தக்கபடி சன்மானம் செய்தார்கள். (காரித்துப்பட்டா என்பது கறுப்புச்சால்வைக்கும் காரித்துப்புதல் என்ற அசங்கியமான செய்கைக்கும் ஆவதைக்கவனிக்க.)

BOOKS RECEIVED.

புஸ்தக வரவு.

HARISCHANDRA.

அரிச்சந்திரன்.—இந்த நாடகம் ராவ் ஸாஹிப் ச. பவாநந்தம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. விலை ரூ. 2-0-0. சென்னப்பட்டணம் ஜி. ஏ. நடேசன் கம்பெனியில் கிடைக்கும்.

VIJIASUNDARAM.

விஜய ஸுந்தரம்.—ஒரு தமிழ் நாவல். இது ரங்கூன் பேபர் கரென்ஸி ஆபீஸ் காஷியராகிய ராவ் ஸாஹிப் திரிசிரபுரம் ம. பொன்னுஸாமி பிள்ளை அவர்கள் இயற்றியது. விலை ரூ. 2-0-0.

NEW JAPAN.

புதிய ஜப்பான்.—இரண்டாவது புஸ்தகம், சுதேசமித்திரன் பத்திராதிபராகிய ஜி. சுப்பிரமணிய அய்யர் இயற்றியது. விலை ரூ. 1-0-0. சென்னப்பட்டணம் “சுதேசமித்திரன்” ஆபீஸில் கிடைக்கும்.

YOUTH AND CHARACTER.

இளமையும் ஒழுக்கமும் அல்லது இரண்டு பிள்ளைகள்.—இது ஒரு புதிய தமிழ் கதை. சி. ப. வெங்கடராம ஐயர், எம். ஏ. அவர்கள் எழுதியது. விலை அணா 8. இந்தப் புஸ்தகம் வேண்டியவர்கள் சென்னப்பட்டணம் திருவல்லிக்கேணி ஹநுமந்த லாலா வீதி, 22 நெம்பர் வீட்டில் சி. ப வெங்கடராம ஐயருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

THE RAMAYANA.

ஸ்ரீமத்ராமாயணம் ஸஞ்சிகை 2.—சென்னப்பட்டணம் ஓரியண்டல் அச்சுக்கூடத்தில் எல். வி. ராமசந்திர ஐயரால் அச்சிடப்பட்டது.

LONGMAN'S TAMIL COPY BOOK NO. 3.

லாங்மன்ஸ் தமிழ் காப்பி 3-ம் புஸ்தகம்.—பம்பாய் 8 ஹார்ன்பிரோட், லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியில் கிடைக்கும். விலை அணா 1.

LEGAL NOTES.
சட்டக் குறிப்புகள்.

REVERSIONARY RIGHT.

வார்ஸ் பாத்தியதை.—ஒருவன் பிள்ளையில்லாமல் பெண்ஜாதியை மாத்திரம் விட்டு விட்டு இறந்து போனான். பெண்ஜாதி கோர்ட்டாரை வார்ஸ் ஸர்டிபிகேட் கேட்டபோது அவர்கள் மூன்று லக்ஷம் ரூ. ஜாமீன் கேட்டார்கள். இதற்கு ஒருவர் 88,000 ரூபாய்க்கும் இன்னொருவர் 2,25,000-க்கும் ஜாமீன் கொடுத்தார்கள். இப்படி ஜாமீன் கொடுப்பதற்காக ஜாமீன் கொடுத்த இருவரும் அந்த விதவையோடு என்ன ஏற்பாடு செய்து கொண்டார்களென்றால் அவள் தன் ஸொத்து முழு மானேஜ்மென்டையும் ஜாமீன் கொடுத்தவர்களிடத்தில் விட்டு விடவேண்டும். எல்லா விஷயங்களிலும் அவர்கள் பேச்சையே கேட்கவேண்டும். இப்படி அவள் ஜாமீன்தார் இருவருக்கும் அதிகாரப் பத்திரம் கொடுத்து விட்டாள். மேலே கண்ட ஸொத்துக்களுக்கு வார்ஸ் தாரன் எஸ்டேட்டை ஒரு ரிஸீவர் வசத்தில் ஒப்புவிக்க வேண்டுமென்று வியாஜ்யம் கொண்டுவந்தான். கேஸை விசாரித்ததில் விதவையானவள் ஸொத்து மானேஜ்மென்ட் விஷயத்தில் ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை என்றும் செலவெல்லாம் வரவைக் கொண்டு நடந்ததா, அல்லது மூல ஸொத்தைக் கொண்டு நடந்ததா என்று ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லை என்றும் ஏற்பட்டது. தவிர, எஸ்டேட்டை விதவையைக் கேட்டால் தான் மானேஜ் செய்யவில்லை என்றும் அவளுடைய ஏஜெண்டைக் கேட்டால் அவர்கள் தாங்கள் மானேஜ் செய்யவில்லை என்றும் சொன்னார்கள். போதாததற்கு விதவை வார்ஸ்களைக் கட்டுப்படுத்தாத சில கடன்களையும் வாங்கியிருப்பதாக ஏற்பட்டது. இவைகளை எல்லாம் உத்தேசித்து கோர்ட்டார் ஒரு ரிஸீவரை நியமிக்க உத்தரவு செய்தார்கள். விதவைக்கு வார்ஸ்தாரை மோசம் செய்யவேணுமென்ற எண்ண மொன்றும் இல்லாததால் ஆஸ்தியில் மிகுதியாகும் ஐவேஜி முழுமையையும் அவள், ஆயுஸ் முழுமையும் அடைய வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். 8 மதராஸ் லா. டை. 189-ம் பக்கம்.

SRIDHANAM.

ஸ்திரீ தனம்.—ஒரு விதவை அவளுக்குக் கிடைத்த ஜீவனாம்சத்திலிருந்து மிகுந்து ஸொத்து வாங்கும் பக்ஷத்தில் அது அவளுடைய ஸ்ரீதனமாகும்.

ATTESTING.

சாக்ஷிபோடுதல்.—ஒருவன் ஒரு சாஸனத்துக்கு சாக்ஷிபோடும் பக்ஷத்தில் அதனால் அவன், ஸொத்தை விற்கிறவனுக்கு அதைவிற்க பாத்தியம் உண்டு, என்று சொல்லுவதாக எண்ணக்கூடாது.—8 மதராஸ் லா. டை. 171 பக்கம்.

DISTRIBUTION OF WATER.

தண்ணீரைப் பங்கிடுதல்.—ரயத்துவாரி நிலங்களுக்கு ஒருவித குறையுமில்லாமல் வேண்டிய ஜலத்தைக் கொடுத்துவிட்டு கவர்ன்மெண்டார் அவர்கள் இஷ்டப்படி ஸர்க்கார் ஜலாதாரங்களிலுள்ள மிகுந்த ஜலத்தை எப்படிவேணுமோ அப்படிப் பங்கிடலாம்.

SALE AFTER ATTACHMENT.

ஜப்திக்குப் பிறகு விற்பனை.—ஒரு நிலம் ஜப்தியான பிறகு அதை ஸொந்தக்காரன் விற்றால் அந்த விற்பனை செல்லாது. ஆனால் ஜப்தியாவதற்குமுன் அதை விற்பதைப்பற்றி ஸொந்தக்காரனுக்கும் இன்னொருவனுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருந்து ஜப்தியான பிறகு விற்றால் அதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். 8 மதராஸ் லா. டை. 197-ம் பக்கம்.

RENT RECOVERY ACT.

ரெண்ட் ரெக்கவரி ஆக்ட்.—ஒருவன் பேரில் நிலம்முழுமைக்கும் பட்டா இருந்தது. ஆனால் அவன் அந்த நிலத்தில் ஒரு பாகத்தை இன்னொருவனுக்கு விற்று விட்டான். பட்டா மட்டும் முன் இருந்தது போலவே விற்றவன் பேரிலேயே இருந்தது. பாகத்தை வாங்கினவன் இடத்திலிருந்து நேரில் ஜமீன்தார் மேல் வாரத்தை வாங்கிக்கொண்டு வந்தார். ஒருதடவை பட்டாதாரன் கொடுக்கவேண்டிய மேல் வாரத்துக்காக பட்டா நிலம் முழுமையையும் ஜமீன்தார் விற்பனைக்குக்கொண்டு வந்தார். இந்தக் கேஸில் சாஸனமாயிருந்த பாகத்தை விற்பனைக்குக் கொண்டுவந்தது பிசகென்று தீர்மானிக்கப்பட்டது. 8 மதராஸ் லா. டை. 284-ம் பக்கம்.

SCIENTIFIC NOTES.
சாஸ்திரீயக் குறிப்புகள்.

BIG WAVES.

பெரும் அலைகள்.—சமுத்திர அலைகளில் வட அட்லாண்டிக் சமுத்திரத்து அலைகளே மிகவும் பிரமாண்டமானவைகளென்று இது வரையில் எண்ணப்பட்டிருந்தன. இங்கத்திய அலைகள் சுமார் 20-முதல் 25-அடி உயரம் வரையில் எழும்புவதாக கணக்கிடப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போதோ ஆப்பிரிக்காவின் தென்கோடியான நன்நம்பிக்கை முனையில் வடமேற்குத் தென்றலினால் உண்டாகும் அலைகள் சுமார் 40-அடி உயரம் எழும்புவதாய் கணக்கிடப்படுகிறது.

FEVER IN PLANTS.

மரஞ்செடிகளுக்கும் ஜ்வரம்.—லெக்ளேர் துய் சாப்ளோன் என்ற ப்ராஞ்ச சாஸ்திரியொருவர் ஜீவராசிகள் மாத்திரமல்ல, ஸ்தாவரவர்க்கங்கள் முதலியவைகளும் ஜ்வரத்தினால் பீடிக்கப்பட்டு சாகக்கூடுமென்று சொல்லுகிறார். காயத்தினால் ஒரு செடிக்குக் காய்ச்சல் உண்டாகலாம். காய்ச்சல் அதிகமாய் இருந்தால் அந்தச் செடி வெகு சீக்கிரத்தில் மெலிந்து வாடிவதங்கி செத்துப்போகிறது. ஷை சாஸ்திரியார் உருளைக்கிழங்குச் செடிகளைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தி அவைகளுக்கு ஜ்வரம் வரும்படியாகச்செய்து பரீட்சித்துப் பார்த்தாராம். ஆயினும் காயம் லேசாயிருந்தால், ஜ்வரம் சீக்கிரத்தில் நின்று போய் செடி பிழைத்துக்கொள்ளும். ஆனால் வியாதிப்பட்டவன் மெலிந்துபோய் பழைய தேகத்தை மறுபடியும் அடைய வெகுநாட்செல்வதுபோல அந்தச்செடி முன்போல் செழிப்பாய் வளருகிறதற்குச் சிலகாலம் பிடிக்குமாம்.

THE RAT'S TEETH.

எலியின் பல்லுகள்.—எலிகள் எப்போது பார்த்தாலும் எதையாகிலும் கடித்து நாசமாக்குகிறதை நாம் காணும்போது அந்த துஷ்ட ஜெந்துகளுக்குத் தீமை செய்கிறதுதான் பிரியமென்று தீர்மானிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆயினும் உண்மையைப் பரிசோதித்துப் பார்த்தால் கட்டாயத்தின்மேல் எலிகள் பண்டங்களைக் கடிக்கின்றனவென்று தெரியவருகிறது. நமது குழந்தைகளுக்குப் பிறக்கும்போது பல்லில்லை. பிறந்த இரண்டு வருஷத்துக்குள் வாய் நிறையப் பல்லுகளிருக்கின்றன. ஆயினும் அவைகள் ஏழெட்டு பிராயத்தில் விழுந்து போய் அவைகளுக்குப் பதிலாய் வேறு பற்கள் முளைகின்றன. பல்லுகள் முளைத்து பருவமடைந்த பின் அவைகள் அப்படியே நின்றுபோகின்றன. எலிகளுக்கோ அப்படியல்ல. அவைகளின் பற்கள் எக்காலமும் வளர்ந்துகொண்டேயிருக்கின்றன. ஆகையால் அவைகள் பற்களை எந்நேரமும் ராவிக்கொண்டிராவிட்டால் அவைகள் வெகு நீளமாய் வளர்ந்து போய் எலிகளுக்கு உபத்திரவத்தை யுண்டுபண்ணும். ஆனதுபற்றி ஆகாரத்துக்கு வேண்டிய காரியங்களைக் கடித்துத் தின்றபின், பற்களுக்கு வேலை கொடுப்பதற்காக மரக்கட்டை, கல், கதவுநிலை, கந்தைத்துணி, உயர்ந்த ஜவளியென்ற வித்தியாஸம் பாராமல், அகப்பட்டதையும் கொந்தி நாசமாக்குகின்றன.

TEETH.

பல்லுகள்.—மனிதர்களுக்குப் பல்லுகள் முளைக்கும் க்ரமம் பின்வருமாறு:— ஒவ்வொருவருக்கும் இரண்டு வகையான பல்லுகள் முளைக்கின்றன. முதலாவது முளைக்கும் பல்வகைக்குப் பால்பல்லுகள் என்றும், இரண்டாவது முளைக்கும் பல்வகைக்கு ஸ்திரப்பல்லுகள் என்றும் பெயர். பால்பல்லுகள் கொஞ்சகாலமிருந்து பிறகு விழுந்துவிடும். பால்பல்லுகள் மேல்தாடையில் பத்தும், கீழ்த்தாடையில் பத்துமாக குழந்தை பிறந்த ஏழுமாஸம் முதல் இரண்டு வருஷத்திற்குள்ளாக அடியில் வரும் காலக்கிரமப்படி முளைக்கும். ஏழாம் மாஸத்தில் இரண்டு முன் பல்லுகளும், எட்டாம் மாஸத்தில் பக்கத்து இரண்டு முன்பல்லுகளும், ஒருவருஷ அளவில் இரண்டு கடைவாய்ச் சிறிய முன்பல்லுகளும், ஒன்றரை வருஷ அளவில் இரண்டு கோரைப்பல்லுகளும், இரண்டு வருஷ அளவில் அடுத்த இரண்டு கடைவாய்ச் சிறிய பல்லுகளும் க்ரமமாக முளைத்துவரும். பொதுவாகக் கீழ்த்தாடையில் பல்லுகள் முதலில் முளைத்த பிறகு அவைகளுக்கு ஜதையான பல்லுகள் மேல்தாடையில் முளைக்கும். ஆனால் பல்லுகள் எல்லாருக்கும் ஒரே நிதானமாய் முளையாமல், சில குழந்தைகளுக்கு சீக்கிரமாகவும், சில குழந்தைகளுக்குத் தாமதமாகவும் முளைப்பதுண்டு. பெரும்பான்மையாக இரண்டு வயதுக்குள் இருபது பால்பல்லுகளும் முளைத்துவிடும். அவைகள் ஆறு வயதுவரையில் உதவுகின்றன.

MEDICAL NOTES.

வைத்தியக் குறிப்புகள்.

Discharge from the Ear.

காதில் சீழ்வடிதல்.—ஜாதி நாரத்தம்பழரஸம், எலுமிச்சம்பழரஸம், பசுமஞ்சள்ரஸம், ஆதண்டச்சாறு, பசும்பால், நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், நெய் வகைக்குச்சேர் 1, அரத்தை 2, மரமஞ்சள், சதகுப்பை வகைக்கு பலம் 5. இவைகளைப் பதமாய்க் காய்ச்சி எடுத்து வைத்துக்கொண்டு தலை முழுகவும்.

Snake-bite.

பாம்புகடி.—பாம்பு கடித்தவுடனே பாம்பைக் காணாவிட்டாலும், அல்லது கண்டும் இன்ன பாம்பு என்று தெரியாவிட்டாலும், கடித்த இடத்தைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். அநேக பல்லுகள் வரிசையாகப்பட்டிருக்கும் குறிகளிருந்தால் அந்தக்கடி விஷப்பாம்பினுடையதல்ல. ஒரு பல்லின் குறியும் கொஞ்சதூரம் விட்டு மற்றொரு பல்லுக்குறியும் காணப்பட்டால், அதுவே விஷப்பாம்பின் கடிக்குச் சரியான அடையாளமாம். விஷப் பாம்பென்று தெரிந்தவுடனே தகுந்த சிகிச்சைகளைச் செய்யவேண்டும். "பொட்டாஸியம் பெர்மாங்கனேட்" என்ற ரஸாயனமருந்து பெரும்பாலும் பாம்பு கடிக்கு உபயோகமாகிறது.

Cold Rice.

பழையது.—நம்மவர்களுக்குள் பொழுது விடிந்து பல் தேய்த்ததும் குழந்தைகளுக்குப் பழையது போடுவது வழக்கம். சில வீடுகளில் மிகுந்த சாதத்தை தினமும் ஏற்கனவேயுள்ள பழையதோடு போட்டு வைப்பதுண்டு. இதனால் சாதம் வெகு புளிப்பாய் இருக்கும். புளித்த பழையது ஜீரணகாரி என்று சொல்லுவார்கள். ஆனால் பழைய அரிசி சமையல் செய்த பிறகு 24-மணி நேரந்தான் உபயோகப்படுத்துவதற்கு யோக்யதையுள்ளதாய் இருக்கிறதாம். 24-மணி நேரத்திற்கு மேற்பட்ட பழையதை உபயோகப்படுத்தினால் வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு முதலிய தொந்தரவுகள் சம்பவிக்கும். மேலும் அந்தப் பழையதில் யாதொரு சத்துமில்லை. காலரா காலங்களில் பழையது சாப்பிடக்கூடாது.

Foreign Bodies in the Ear.

காதுக்குள் வஸ்துக்கள்.—ஒரு குழந்தை ஸ்லேட்ப்பென்ஸில், குன்றுமணி, ஆமணக்குக்கொட்டை, புளியங்கொட்டை முதலிய வஸ்துக்களில் ஒன்றை காதுக்குள் செலுத்திவிட்டால் தாய் தகப்பன்மார்கள் அதிக ஆத்திரத்தோடு காதுக்குரும்பி வாங்கியையாவது அல்லது கொண்டை ஊசியையாவது கொண்டு குடைந்து எடுக்க ஆரம்பிப்பார்கள். இப்படிச் செய்வதினால் காதுக்குள் சென்ற வஸ்து அதிக உள்ளே போய் விடுமாதலால் அதை திரும்ப வெளியேற்றுவது அதிக கஷ்டம். ஆனால் அப்படிச் செய்யாமல் இரண்டொரு நாள் தேங்காயெண்ணெயையாவது, க்ளிஸரினையாவது நாலைந்து துளி காதுக்குள் விட்டு அடைத்து வைத்திருந்து, பின்னால் சுடுதண்ணீரில் ஸோப்பைக் கரைத்து அந்தத் தண்ணீரை பீச்சாங்குழலினால் காதுக்குள் அடிக்கவேண்டும். முதலில் அழுக்கு முதலியவைகள் வெளியேறும், அவைகளுக்குப் பின்னால் மேற்படி வஸ்துவும் வெளியே வந்துவிடும். முற்றிலும் வெளியே வராவிட்டாலும் செவித்துவாரத்தின் எதிரிலாவது வந்துவிடும். பின்பு சிறுபற்றுக் கொரட்டினால் அதை மெல்ல வெளியேற்றிவிடலாம். ஜலமடிக்கும்போது மத்தியில் நேராக அடிக்காமல், துவாரத்தின் மேல்தளத்தைப் பார்க்க அடிக்கவேண்டும். அப்போதுதான் அந்த ஜலம் அடைந்திருக்கும் வஸ்துவின் பின்பக்கம் லேசாகப் போய் திரும்ப வரும்போது அந்த வஸ்துவை இழுத்துக்கொண்டு வந்துவிடும். அப்படியில்லாமல் நேராக மத்தியில் ஜலம் அடித்தால் அடைத்திருக்கும் வஸ்து துவாரத்தின் உள்பிரிவுக்குள் சென்று விடும். அப்புறம் அதை வெளியேற்றுவது அதிககஷ்டம். ஜலமடித்து அந்த வஸ்து வெளியேறினவுடன் செவி துவாரத்தை நன்றாய் ஈரமில்லாமல் துடைத்து க்ளிஸரினையாவது கர்பாலிக் எண்ணெயையாவது இரண்டு நாள் காதுக்குள் விட்டு அடைத்து வரவேண்டும். சில பிள்ளைகள் காதுக்குள் ஏதாவது வஸ்துவைப் போட்டு விட்டதாக தாய் தகப்பன்மாருக்குத் தெரிந்தால் ஒருவேளை அடிப்பார்கள் என்ற பயத்தினால் சொல்லாமல் இருந்து விடுவார்கள். அப்பால் சில நாட்களுக்குள் காதுக்குள் வலி, சீழ்வடிதல், மந்தம் முதலியவையுண்டாகும். ஆகையால் பிள்ளைகள் காதில் வலியாயிருக்கிறதென்று முறையிடும்போது, காது வலிக்கு மருந்து தேடுமுன் காதுக்குள் ஏதாவது வஸ்து புகுந்திருக்கிறதா என்று முதலில் சோதித்துப் பார்ப்பது மெத்த உத்தமம்.

PERSONAL NOTES.

மனுஷ்யர்களைப்பற்றிய குறிப்புகள்.

J. D. Rockefeller.

ஜே. டி. ராக்பெல்லர்.—ஜே. டி. ராக்பெல்லர் என்பவர் மண்ணெண்ணெய்க்கு அரசர். தேகபலம் குறைந்து கொண்டு வருவதால், அவரை அடிக்கடி சாராயத்தில் ஸ்நானம் செய்யும்படி வைத்தியர்கள் சிகிச்சை சொல்லியிருக்கிறார்கள்.

Hon. Mr. Sayid Ali Imam.

ஆனரபில் மிஸ்டர் ஸையத் ஆலி இமாம்.—ஆனரபில் மிஸ்டர் ஸையத் ஆலி இமாம் ராஜப்பிரதிநிதி சர்க்கார ஸபையில் மிஸ்டர் ஸின்ஹாவுக்குப் பதிலாய் இந்திய மெம்பராக சக்ரவர்த்தி அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருடைய நியமனத்தை இந்தியாவில் எல்லா வகுப்பாரும் பொதுவாய் நல்ல நியமனமென்று சொல்லுகிறார்கள். மிஸ்டர் ஸின்ஹாவைப்போல் இவரும் கல்கத்தா ஹைகோர்ட்டில் பாரிஸ்டராய் இருந்தவர். வங்காள கவர்ன்மெண்டுக்கு சட்ட சம்பந்தமான விஷயங்களில் ஆலோசனை சொல்லும் ஸ்டாண்டிங் கௌன்ஸெலாய் இருப்பதோடு, மாஸம் ஸுமார் 15,000 ரூபாய் சம்பாதித்துக்கொண்டிருந்தவர்.

Lala Raja Babu.

லாலா ராஜா பாபு.—பாடியாலா ஸமஸ்தானத்தில் வேலையாயிருக்கும் லாலா ராஜா பாபு என்பவர் எதிர் நேராய் வரும் இரண்டு ரெயில் வண்டிகள் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளாமலிருக்க ஓர் உபாயம் புதிதாய்க் கண்டுபிடித்திருக்கிறார். அந்த ஸமஸ்தானத்து அரசருக்கு மஹாராஜாவின் முழு அதிகாரமும் ஸமீபத்தில் கொடுக்கப்பட்ட அந்த விசேஷதினத்தில், ராஜா பாபு இரண்டு மாதிரி எஞ்சின்கள் செய்து, இரண்டு பக்கங்களிலிருந்து எதிராய் ஓட்டி குறித்த இடத்தில் அவைகள் தானாகவே திடீரென்று நின்று போவதைக் காண்பித்தார். மேலும், அவர் ஸிம்லா ரெயில்வே கான்பரென்ஸிலும் இந்த உபாயத்தைச் செய்து காட்டினார்.

Lord Hardinge.

லார்டு ஹார்டிஞ்ச்.—நமது ராஜப்பிரதிநிதி லார்டு ஹார்டிஞ்சும், சேனாதிபதி ஸர் ஓமூர்க்ரீயும், நவம்பர் மாஸம் 25-ம் தேதி தினம் காலையில் கல்கத்தாவின் மைதானத்தில் குதிரை ஸவாரி போனார்கள். ராஜப்பிரதிநிதியின் குதிரை எதையோ கண்டு வெருண்டு ஓடியபோது, தன்மேல் சவாரிசெய்யும் ராஜப்பிரதிநிதியைக் கீழே தள்ளிவிட்டது. இது கண்ட சேனாதிபதி சரசர வென்றோடிவந்து ராஜப் பிரதிநிதிக்கு உதவிசெய்ய முயன்றபோது தம் குதிரையும் தம்மைக் கீழே தள்ளிவிட்டது. நல்ல வேளையாய் இரண்டு பேருக்கும் யாதொரு காயமுமில்லை. தமக்கு இவ்வித அவதி நேர்ந்ததைபற்றி ஒருவருக்கொருவர் நகைத்துக்கொண்டு திரும்பினார்கள்.

Mr. Nathan Stores.

மிஸ்டர் நேதன் ஸ்டோர்ஸ்.—மிஸ்டர் நேதன் ஸ்டோர்ஸ் என்பவர் ஒரு அமெரிக்க ஜனோபகாரி. இவர் நியூயார்க்கிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்றபோது தமது குழந்தைக்கு வாங்கிக்கொடுத்த பால் அசுத்தமானதாய் இருந்து, அந்தப்பிள்ளையின் மரணத்துக்கு ஹேதுவாயிற்றென்பதை அறிந்து, இப்படி எத்தனை சிசுக்கள் அசுத்தப்பால் குடித்து இறக்க நேருமோ என்று பரிதாப சிந்தனை கொண்டார். இந்த எண்ணத்தோடு அவர் அமெரிக்காவுக்குத் திரும்பியவுடன் தமது ஸொந்தப் பொருள் செலவிட்டு, மாடுகள் பலவற்றை வாங்கி, அவை மேய்வதற்குரிய இடங்களைச் செப்பனிட்டு அவைகளில் அவைகளின் உணவுக்கேற்ற நல்ல செடிகளை உண்டாக்கிப் பால் வர்த்தகம் செய்யத் தொடங்கினார். வர்த்தகமென்றால் லாபம் ஸம்பாதிப்பதற்கல்ல. ஜனங்கள் சொற்ப விலைக்குச் சுத்தமான பால் பெற்றுக்கொள்ளும் கருத்தோடு அவர் இப்படிச் செய்யத் தலையிட்டார். இரண்டு லட்சம் பவுன் இந்த விஷயத்தில் செலவிட்டிருக்கிறார். இருபது வருஷமாக இந்தத் தொழிலை நடத்தி வருகிறார். தற்காலத்தில் நியூயார்க்கில் மாத்திரம் பதினான்கு பட்டிகள் உள. வருஷந்தோறும் ஒவ்வொரு நாளும் பதினாயிரம் புட்டி பால் மிகக் குறைந்த விலைக்குச் சிறுபிள்ளைகளுடைய உபயோகத்துக்காக விலைப்படுகிறது. அந்த அற்பக் கிரயத்தைக் கொடுக்க முடியாதவர்களுக்குக் கிரய மில்லாமலும் பால் கொடுக்கப்படுகிறது. இன்னும் பல இடங்களில் இப்படி பால் சாலைகள் அமைப்பதற்கும் முயற்சி செய்கிறார்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

WANTS HIS WAGES.

கூலி கேட்கிறன்.—கூலிக்காரன் (எஜமானனைப் பார்த்து) ஐயா! கூலி கொடுத்தால் தேவலை, எஜமான் தயவுபண்ணவேணும், வேலைசெய்து ஒரு மாமாங்கம் ஆகப்போகிறது; காலும் நோவெடுத்துக்கிட்டுது!

எஜமான்:—எலே! காரியமாய் வெளியில் போகுறேன், சுருக்க நம்ப வீடுபோய் நேற்று ஓடிமாத்தினவன் கூலிக்குக் காத்திருக்கான், அந்த அடையாளஞ்சொல்லி சம்பளம் வாங்கிக்கோ! ஓடு! ஆ!

WANTS TO TAKE MEDICINE.

மருந்து சாப்பிட வேணுமாம்.—ஒரு நோயாளி ஒரு செல்வவானை நோக்கி:

"ஐயா! நான் ஒரு ஏழை நோயாளி. இந்த இருமலுக்கு வைத்தியர் ஒரு மருந்து சாப்பிடச் சொல்லுகிறார். அதற்கு—"

"அந்த மருந்தை வாங்கிக்கொடுக்கும்படி கேட்கிறாயோ?" என்று படபடப்புடன் செல்வவான் தடுத்துக்கேட்டான்.

"இல்லை, ஐயா, இல்லை; மருந்து வாங்கி ஆகிவிட்டது. அதைத்தினந்தோறும் காலையிலும், மாலையிலும் போஜனத்துக்குப் பிறகு சாப்பிடவேண்டுமாம். போஜனத்துக்குத்தான் தாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்!

A TALUK OFFICE CLERK.

ஒரு தாலூகா ஆபீஸ் கிளார்க்.—சற்று நேரம் சென்று வந்த ஒரு கர்ணத்தைப் பார்த்து வெகு கோபத்துடன், ஓய்! ஏன் இவ்வளவு நேரம்? உமக்கு இஷ்டப்பட்ட பொழுது வருவது, நான் உன் வேலைக்காரனைப் போல் காத்திருப்பதா? என் அப்பன்மேல் ஆணைப்படிக்கு உன் வேலையை நான் இப்பொழுது பார்க்கமாட்டேன். உன் வேலையை தாசில்தாரிடம் சொல்லி விடுகிறேன், ஓய் பார்த்துவிடுகிறேன், அவ்வளவு அகமா நூ, நூ:

கர்ணம்.—கைகட்டி வாய்புதைத்து ஐயா, தயவு செய்யணும், கோபம் வேண்டாம், சற்று கீழே பார்த்துப் பேசுங்கோ!

கிளார்க்.—கர்ணம் வைத்த பெட்டிஷனுக்கு கீழே நாலு ஒரு அணா நாணயத்தைப்பார்த்து மனதுக்குள் மிக்க சந்தோஷப்பட்டு முதலில் தான் ஆணையிட்டதையும் மறந்து, ஸரி இனிமேல் அப்படிச்செய்யாதேயும், இந்தத்தடவை உமக்கு மாப்புவிட்டோம் என்று சொன்னார். 4-அணாவும் பைக்குச் சென்றது.

A BOUQUET EVERY DAY.

தினம் ஒரு பூச்செண்டு.—சில மாஸங்களுக்கு முன் ருஷியாதேசத்து கோடீசுவரர் ஒருவர், பாரிஸ் நகரத்தைப் பார்க்கத் தன்னுடைய பணிவிடைக்காரனுடன் வந்திருந்தார். அந்த அழகிய பட்டணத்தின் சந்தோஷம் அனுபவிக்கவரும் யாவரும் ஸாதாரணமாய்ச் செய்வதுபோல அந்தப் பிரபு நாடகசாலைக்குப் போகையில் தன் வேலைக்காரனிடம் பணம் கொடுத்துப் பிரதானமான நடினைக்காரிக்குத் தன்பேரால் ஒரு அழகிய பூச்செண்டு வாங்கிக் கொடுக்கும்படியாகக் கட்டளையிட்டார். ஏனென்றால் அப்படிச் செய்வதுதான் பாரிஸ் பட்டணத்தின் மரியாதை என்று நினைத்தார். அந்தப்பிரபு பார்க்கவேண்டிய அதிசயங்களை எல்லாம் பார்வையிட்டானபின் பயணத்துக்கு முஸ்திப்பாயிருக்கையில், நடினக்காரி தன்னைக் காண வந்திருக்கிறதாகச் சொன்னார்கள். வரலாமென்று கோடீசுவரர் உத்தரவு கொடுத்ததன்மேல் கூத்தாடிச்சி உள்ளே வந்து, "ஐயா நீர் என்மட்டில் காட்டின ஓயாத கவலையைப்பற்றியும், அன்பைப்பற்றியும் நான் மிகவும் நன்றி அறிதலுள்ளவளாய் இருக்கிறேன்" என்றாள். அதற்குப் பிரபு "நான் உனக்கு ஒரேயொரு பூச்செண்டுதானே அனுப்பினேன். அதுவும் ஒரு மாஸத்துக்கு முந்தி அல்லவோ?" என்று ஆச்சரியத்துடன் சொன்னார். நாடகக்காரி "உம்முடைய வேலைக்காரன் தினமும் ஒன்று கொண்டுவந்து கொடுத்தானே" என்றாள். உடனே வேலைக்காரனைக் கூப்பிட்டு விசாரித்தபோது, உண்மை வெளியாயிற்று. அவன் சொன்னதென்னவென்றால் "நான் முதல் செண்டை உமதுபோல் கொடுத்தபோது, இந்த அம்மாள் எனக்கு ஐந்து பிரான் காசு இனாம் கொடுத்தாள். செண்டின் விலை மூன்று பிரான் காசு மாத்திரம். ஆனபடியால், அன்று முதல் என் செலவில் தினம் ஒரு செண்டு வாங்கி அம்மாளிடத்தில் கொடுத்து, ஐந்து பிரான் காசு பெற்றுக் கொண்டு வந்தேன்." என்றதும் பிரபுவும், நாடகக்காரியும் மறு வார்த்தை பேசாமல் பிரிந்துபோனார்கள்.

CURIOSITIES.

விநோதங்கள்.

A CURIOUS BIRTH.

அதிசயப் பிறவி.—திருநெல்வேலி ஜில்லா நாங்குனேரித் தாலுக்கா பரும்பளஞ்சி என்னும் கிராமத்தில் ஒரு பெண் கடந்த மாஸம் 24-ம் தேதியன்று ஒரேசூலில் ஒரு ஆணும், ஐந்து பெண்ணுமாக ஆறு குழந்தைகளை ஈன்றதாகவும், சிசுக்கள் உடனே மரித்துப்போனதாகவும், தாய் அபாயஸ்திதியில் இருப்பதாகவும் ஒருவர் எழுதுகிறார்.

SEVEN BRANCHES IN A PALMYRA TREE.

ஒரு பனையில் எழுகிளைகள்.—நாகபட்டணத்தைச் சார்ந்த ஒடாச்சேரிக் கிராமத்தில் ஒரு பனை மரத்தில் எழுகிளைகள் இருக்கின்றனவாம். யாழ்ப்பாணத்தைச் சார்ந்த கொட்டைக்காட்டில் ஒரு தோட்டத்தில் ஏறக்குறைய 100 இளம் பனைகள் வளர்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒன்று முதல் பத்துக்குக் குறையாத கிளைகளையுடையனவாய் இருப்பதை நேரில் கண்டதாக ஒருவர் எழுதுகிறார்.

KING'S DYING DESEASED.

வியாதியால் சாகும் அரசர்கள்.—முன் காலத்தில் யுத்தத்தில் இறவாமல் நோயால் இறந்த அரசர்களை ஸ்வர்க்கம் புகுவிப்பதற்காக, அவர்களுடைய உடம்பை தருப்பையில் போட்டு வாளால் பிளத்தல் வழக்கமாம். நான்கு வேதங்களையும் கற்று வல்ல அந்தணர் பசுந்தருப்பைப் புல்லைப் பரப்பிக் கிடத்த "உண்மையான போர்வீரராய் வேந்தர் செல்லும் உலகத்திலே செல்க" என்று அந்த உடலை வாள் வீசிப் பிளத்தல் வழக்கமாம்.

A BIG HALL.

ஒரு பெரிய ஹால்.—ஒரே கூரையுடையதாயும், நடுவில் யாதொரு விதமான தூண் முதலிய சார்புமில்லாமல் ஒரு கட்டிடம் ருஷிய நாட்டிற்குப் பிரதான பட்டிணமாகிய ஸெண்டு பீட்டர்ஸ்பர்க்கிலிருக்கிறது. அது நீளத்தில் 620 அடியும், அகலத்தில் 150 அடியுமுள்ளது. பகலில் துருப்புகள் படை பயிலக்கூடியதாயும், இரவில் 20,000 வத்திகளிருந்தால்தான் வெளிச்சம் கொடுக்கக்கூடியதாயுமிருக்கிறது. இது ஒரே ஒரு இரும்பு ஓட்டின் பலத்தில் நிற்கிறது.

A WATER-PROOF NEWSPAPER.

தண்ணீரில் நனையாத ஸமாசாரப் பத்திரிகை.—பிரான்ஸ் தேசத்தின் கரையோரப் பட்டினங்கள் இரண்டில் லீக்கரியர் டீயஸ் பேக்னீயோர்ஸ், லாநைடீ என்னும் இரண்டு பத்திரிகைகள் பிரசுரம் செய்யப்படுகின்றன. அவைகள் தண்ணீரால் சிறிதும் பழுதடையா இயல்புடைய கடுதாசியில் அச்சிடப்படுகின்றன. கடலிலாவது, ஆறு, குளங்களிலாவது இறங்கித் தொழில்புரிபவர்கள், ஸ்நானம் செய்கிறவர்கள் எல்லாரும் ஈரக்கையுடன்வைத்து வாசித்துக்கொள்ளலாம். மீன்பிடிக்காரரின் வஸதிக்காகவே அது இப்படிப்பட்ட காகிதத்தில் அச்சடிக்கப்படுகிறதாம்.

A HORSE WORTH 12,000 DOLLARS.

ஒரு குதிரையின் விலை 12,000 டாலர்.—அமெரிக்காவில் ஒரு குதிரையை வளர்த்து இங்கிலாந்துக்கு கொண்டுவந்திருக்கிறார்கள். இதன் வால் 19 அடி நீளமும், கழுத்துமயிர் 12 அடி உயரமும், நெற்றிக்கு மேல் காதுகளுக்கு மத்தியில் 4 அடி நீளமுமாய் இருக்கின்றன. இப்பேர்ப்பட்ட குதிரை பிரபஞ்சத்திலேயே கிடையாதென்று சொல்லுகிறார்கள். அது 7 அடி உயரம் இருக்கிறது. இந்த அபூர்வக்குதிரையை 12,000 டாலர்களை கொடுத்து வாங்கிக்கொண்டார்களாம். டாலர் என்றால் ரூபா 3 அணா 2 விலையுள்ள ஒரு வெள்ளி நாணயம்.

A FISH THAT SWALLOWED A CHILD.

சிசுவை விழுங்கிய மீன்.—மலையாளத்திலுள்ள பள்ளிபுரம் என்னும் ஊரில் சிலவலைஞர் ஒன்று சேர்ந்து வலைபோட்டு மீன் பிடித்தபோது ஒரு பெருத்த மீன் அகப்பட்டது. அதை வெகு சிரமப்பட்டு வெளியில் இழுத்து அறுத்தார்கள். ஆ ஆ! அவர்களது ஆச்சரியத்தை என்னவென்று சொல்வது! அந்த மீனின் வயிற்றில் யாதொரு காயமும் இல்லாமல் ஒரு பெண் சிசு காணப்பட்டது. அதற்கு 2 வயதிருக்குமாம். சிசு தண்ணீரண்டைபோய் இருக்கும்போது அந்த மீன் அந்த சிசுவை விழுங்கியிருக்க வேண்டுமென்று ஊகிக்கப்பட்டது. 2 வயது காலம் வளர்த்த புத்திரியை கேவலம் மீனுக்குப் பறிகொடுக்க நேர்ந்த பெற்றோர் இன்னாரென்பது புலப்படவில்லையாம்.

NEWS OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

INDIAN NEWS.

இந்தியநாட்டு ஸமாசாரங்கள்.

THE INDIAN SOCIAL CONFERENCE.

இந்திய ஆசாரத்திருத்தக் கான்பரென்ஸ்.—இந்திய ஆசாரத்திருத்தக் கான்பரென்ஸ் இந்த மாஸம் 29-ந்தேதி அலஹாபாத் காங்கிரெஸ் பந்தலில் நடத்தப்படும். அதன் தலைமையை வகிக்கும்படி ராஜா ராம்பால் ஸிங்கைக் கேட்டு விட்டிருக்கிறார்கள்.

GUARDIAN TO H. H. THE SANKARA CHARIAR.

சங்கராசாரியாருக்குக் கார்டியன்.—கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியாரவர்களுக்குக் கார்டியனாய் மேற்படியூர் முதல் க்ரேட் ப்ளீடர் மிஸ்டர் ஏ. வி. நாராயணசாமி ஐயரைக் கார்டியன் சட்டத்தின் பிரகாரம் நியமிப்பதற்காக ஜில்லா கலெக்டரால் தஞ்சாவூர் ஜில்லா கோர்ட்டில் அப்ளிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது.

POSTAL PROGRESS.

தபாலாபீஸின் அபிவிருத்தி.—தற்காலம் நம் இந்தியாவில் 160,000 மைல்களுக்குத் தபால் மார்க்கம் ஏற்பட்டிருக்கிறது. ஸுமார் 70,000 தபால் ஆபீஸ்கள் இருக்கின்றன. 80 கோடி கடிதங்களும், பத்திரிகை முதலியவைகளும் தபால் வழியாய்ப் போகிறதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். கால் அணாவுக்கு 3,000 மைல் தூரம் வரையில் கார்டுகொண்டு போய்க் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஸகல செலவும்போக 15 லக்ஷம் ரூபாய் மீதம் ஆகிறதாம். ஸேவிங்ஸ்பாங்கி 8,000-க்கு மேல் இருக்கின்றன. 12 லக்ஷம் பேர்கள் பணம் கட்டுகிறார்கள். கோடி பவுன் மொத்தத் தொகை ஆகிறது. 2 கோடியே 50 லக்ஷம் பவுனுக்கு மணியார்டர் அனுப்பப்படுகின்றன. இந்த இலாகாவைப்போல் ஜனங்களுக்குப் பெருத்த நன்மை செய்யக்கூடிய இலாகா இந்த ப்ரிட்டிஷ் இராஜாங்கத்தில் வேறில்லை.

THE INDUSTRIAL CONFERENCE.

தொழில் ஆலோசனை கான்பரென்ஸ்.—அலஹாபாத்தில் காங்கிரெஸ் மகாசபை நடக்கும் ஸமயத்தை யொட்டி நடத்தப்படப்போகிற இந்தியத் தொழில் ஆலோசனைக் கான்பரென்ஸ் உபசரணைக் கமிட்டிச் சேர்மனாய் ஆனரெபில் பண்டித மதன் மோஹன் மாலவியா தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இந்த ஸபைக்கு என். ஜி. முகர்ஜி என்பவர் அக்ராஸனம் வகிப்பார். இவர் வங்காளத்தில் ஒரு பெரிய கண்ட்ராக்ட் வியாபாரி. மார்ட்டின் அண்ட் கம்பெனியில் பெரிய பங்காளி. சிறு ரெயில்கள் போடுவதில் நல்ல பேர்போனவர்.

SIR WILLIAM WEDDERBURN.

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்.—அலஹாபாத் காங்கிரெஸுக்குப் ப்ரஸிடெண்டாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் பம்பாய் வந்து சேர்ந்து ஜே. பி பெடிட்டின் விருந்தினராயிருந்தார். அவர் இந்தியாவிலிருக்கிறவரையில் ஆனரெபில் மிஸ்டர் கோகலே அவருக்கு ப்ரைவேட் ஸெக்ரெடெரியாயிருப்பார். அவர் காங்கிரெஸ் தலைமையை வகித்துவிட்டு அடுத்த ஜனவரி மாஸம் 14-ந்தேதி இங்கிலாண்டுக்குப் ப்ரயாணமாவார்.

BACK TO HINDUISM.

இந்து மதத்திற்குத் திரும்பி விட்டார்கள்.—மிஸ்டர் குலாபாய் ரகசாபாய் என்பவரும், அவர் மனைவியாரும் 18 வருஷங்களுக்கு முன்னால் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்து, இப்போது இந்து மதத்திற்குத் திரும்பிவர விருப்பங்கொண்டதால், ப்ரோச என்னும் இடத்திலுள்ள ஆரிய ஸமாஜத்தார் அவர்களுக்கு ப்ராயச்சித்தம் செய்து வைத்தார்கள். மிஸ்டர் குலாபாய், இந்து மதத்தின் உயர்ந்த கருத்துக்களையும், கொள்கைகளையும், கொஞ்சமும் அறியாமல் கிறிஸ்தவ மதத்துக்குச் சென்றார் என்றும், பிறகு ஆரிய ஸமாஜத்தார் நமது ஆரிய மதத்தின் மகிமைகளை வெகு அழகாய் எடுத்துக் காட்ட அவைகள் அவர் மனதில் நன்றாய்ப் பதியப்போதெல்லாம் அவர் செய்த காரியத்திற்காகத் தீராத் துக்கம் கொண்டவராய்ப் பூர்விக மதத்திற்கே மனந் திரும்பினரென்றும், அவைகளைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் விவரமாக ஆரிய ஸமாஜத்தின் முன்பு எடுத்துரைத்தார்.

THE ALLAHABAD EXHIBITION.

அலஹாபாத் பொருட்காட்சி.—ஐக்கிய மாகாணப் பொருட்காட்சியை நாளது டிஸம்பர் மாஸம் முதல்தேதியில் அலஹாபாத்தில் அம்மாகாண லெப்டினண்ட் கவர்னர் திறந்து வைத்தார். அக்காட்சிக்கூடம் ஒரு சிறிய பட்டணம் போல் ஜொலிக்கிறதாம். ஏழை ஜனங்கள் அக்காட்சிக்குள் சென்று வேடிக்கை பார்ப்பது சாத்தியமாகும்படி வாரத்தில் ஒரு நாள் (புதன்கிழமை யன்று) அந்த காட்சிக் கூடத்துக்குள்ளே போக வாங்கப்படும் கட்டணத்தைக் குறைத்து வாங்கி வருகிறார்கள். அன்று தினம் மட்டும் 4 அணா கட்டணந்தான் வாங்கப்படுகிறது.

POPULATION OF SOME COUNTRIES.

சில தேசங்களின் ஜனத்தொகை.—

தேசங்களின் பெயர்.	ஒரு சதுர மைலுக்கு ஜனத்தொகை.
ஆஸ்திரியா ஹங்கேரி	196 22
ஆஸ்திரியா	233·031
பெல்ஜியம்	627·95
டென்மார்க்	167·58
ப்ரான்ஸ்	189·51
ஜெர்மனி	289·60
இத்தலி	303·74
ஜப்பான்	324·91
நெதர்லாண்ட்ஸ்	445·12
ஸ்விட்ஸர்லாண்டு	216·57
இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காத்லாந்து.	356·11
இந்தியா	166·62

மேலே கண்டிருப்பதில் ப்ரான்ஸ், ஜப்பான், நெதர்லாண்ட்ஸ், க்ரேட் ப்ரிட்டன், இந்தியா, இவைகளின் ஜனத்தொகைக் கணக்கு 1906-ம் வருஷத்துக்கென்பதையும், மற்றத்தேசங்களின் ஜனத்தொகை 1905-ம் வருஷத்துக்கென்பதையும், நேயர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். மேற்கண்ட கணக்கால் இந்தியாவிலே ஜனத்தொகை மிகவும் குறைவு என்பது விளங்குகிறது.

RISE IN PRICES.

உணவுப்பொருள்களின் விலை.—சென்னை ஹிந்து பத்திரிகைக்கு வடஸர்க்காரிலிருந்து ஒருவர் எழுதுகிறார்.—மேற்படி விஷயத்தைப்பற்றி அனேகம் பேருக்கு அனேக விதமான அபிப்பிராயம் இருக்கிறபடியால் வடஸர்க்காரில் உணவுப் பொருள்களின் விலையைப்பற்றிச் சென்ற 30 வருஷத்தின் ஸ்டேட்மெண்டு ஒன்று கீழே போடப்பட்டிருக்கிறது.

	1880-ஆ முதல் 1890 வரையில் ஸராஸரி விலை.			1890-ஆ முதல் 1900 வரையில் ஸராஸரி விலை.			1900-ஆ முதல் 1910 வரையில் ஸராஸரி விலை.		
அரிசி	ரூபாய்க்கு 18 சேர்			ரூபாய்க்கு 13 சேர்			ரூபாய்க்கு 7 சேர்		
நெய் வீசை	0	13	0	1	0	0	2	0	0
நல்லெண்ணெய்	0	6	0	0	8	0	0	13	0
விளக்கெண்ணெய்	0	6	0	0	7	0	0	10	0
புளி	0	0	9	0	2	0	0	4	0
உப்பு சேர்	0	2	6	0	1	6	0	1	0
மிளகாய் வீசை	0	2	6	0	4	0	0	12	0
சர்க்கரை	0	4	0	0	4	6	0	7	0
பால் சேர்	0	1	6	0	2	0	0	4	0
விறகு டன்	3	0	0	5	0	0	10	0	0
இறைச்சி சேர்	0	2	0	0	4	0	0	6	0
முட்டை டஜன்	0	1	0	0	2	0	0	3	0
வங்காயம் வீசை	0	0	4	0	0	6	0	0	2

இந்த விலைகள் வட ஸர்க்காரில் மாத்திரமல்ல ராஜதானி முழுவதும் கொஞ்சம் ஏறக்குறைய இப்படியேதானிருக்கின்றன. ஆகையால் இப்பொழு, ஜீவஸ்ரேயாயத்திற்கு முன்னிருந்ததைக் காட்டிலும் மூன்றுபங்கு வருமானம் அதிகமாய் வந்தாலல்லவோ ஸுகமாய் ஜனங்கள் ஜீவிக்கலாம். வருமான மில்லாததால் அனேக ஜனங்கள் ஜீவிப்பதற்கே அதி கஷ்டப்படுகிறார்களென்பது நமது அபிப்பிராயம்.

FOREIGN NEWS.

அந்நிய நாட்டு ஸமாசாரம்.

WHEAT AND RICE.

கோதுமையும் அரிசியும்.—உலகத்தில் எவ்வளவு கோதுமை சாப்பிடுகிறார்களோ கிட்டத்தட்ட அவ்வளவு அரிசியும் சாப்பிடுகிறார்கள். 19,000 கோடி பவுண்டு (ராத்தல்) கோதுமையும், 17,500 கோடி பவுண்டு அரிசியும் உலகத்தில் விளைவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

AMERICAN COWS.

அமெரிக்கா பசுமாடுகள்.—அமெரிக்காவில் நல்ல பசு நாள் ஒன்றுக்கு 45 ராத்தல் பால் கொடுக்கிறது. அதாவது 4½ காலன்—12 படி.

TOUR ROUND THE WORLD.

உலகத்தைச் சுற்றல்.—வர்த்தக விருத்தியைக் குறித்து நூறு மாணாக்கர்களோடு ஜப்பானியக் கப்பலொன்று உலகத்தைச் சுற்றிவரப் புறப்பட்டிருக்கிறதாம்.

THE WORLD'S POPULATION.

உலகத்து ஜனத்தொகை.—உலகத்திலேயுள்ள குடி ஜனத்தின் தொகை 150 கோடி. இவ்வளவு ஜனமும் 5,000 பாஷைகளைப்பேசி 1,100 மதங்களையனுஸரித்து வருகிறார்கள்.

DOGS ON POLICE DUTY.

போலீஸ் வேலையில் நாய்கள்.—இங்கிலாந்தில் நாடிங்ஹாம் என்னுமிடத்தில், இரவில் காப்புத் தொழிலைச் செய்யும் போலீஸ்காரர் நாய்களைப் பின்னோடு வைத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நாய்கள் துப்பறியும் வேலையை ஸாமார்த்தியமாய்ச் செய்யும்படி பழக்கப்பட்டிருக்கின்றன.

A VALUABLE BULL.

விலை உயர்ந்த காளைக்கன்று.—ஸ்காட்லாந்தில் ஆபர்டீன் என்னுமிடத்தில் மிஸ்டர் டுதி என்பவர் தன் 8 மாதக்காளைக் கன்று ஒன்றை 16,000 ரூபாய்க்கு விற்றார். அவர் இன்னும் அநேக கன்றுகளை விற்றதில், மிகவும் குறைந்த விலைக்கு விற்றது 8,000 ரூபாய்க்குத்தான்.

TAX ON BACHELORS AND SPINSTERS.

கலியாணமில்லாதவர்களுக்கு வரி.—ருஷியாவில் வயதுவந்தும் விவாகம் செய்துகொள்ளாதிருக்கும் ஆடவர்களும், பெண்களும் வரிகொடுக்க வேண்டுமென்பதாய் ருஷியாவில் ஒரு சட்டம்கொண்டுவர ஆலோசித்திருக்கிறார்கள்.

BURNING KEROSENE.

மண்ணெண்ணெய் பற்றிக்கொள்ளுதல்.—இடாலி தேசத்து ஒரு வைத்தியப் பத்திரிகை, மண்ணெண்ணெய் பற்றிக்கொண்டால் அதை அவிக்க ஜலம் விடுவதைக் காட்டிலும், பாலைவிட்டால், எண்ணெயும் பாலும் கலந்து குழம்பாய்ப் போய்விடுவதால், எண்ணெய் தனியாகப் பிரிந்து எரிய இடமில்லை என்று எழுதுகிறது. வாஸ்தவந்தான். பாலுக்கு எங்கே போகிறது?

DWARFS.

குள்ளர்.—நியூகினி தீவிலே ஒருவித குள்ளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஸராஸரி உயரம் 4 அடி 3 அங்குலம். இந்த ஜாதியாரின் ஸந்ததியார் அந்தமான் தீவு, மலாயாக்குடாநாட்டின் வடபகுதி, பிலிப்பையன் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த லூசோன் தீவு முதலான இடங்களில் திரள்திரளாய் வாஸம் பண்ணுகிறார்கள். இவர்களில் ஆண்களின் உயரம் 4 அடிக்குமேல் இல்லை.

HAWKING IN THE STREETS.

தெருக்களில் ஸாமான்களை விற்றல்.—பதினான்கு வயதுக்குட்பட்ட பையன்களும், பதினாறு வயதுக்குட்பட்ட பெண்களும் ஸாமான்களைத் தெருவில் எடுத்துக்கொண்டுபோய் விற்கக்கூடாதென்று இங்கிலாந்தில் ஒரு சட்டம் ஏற்படுத்தப் போகிறார்கள். 1909-௵ ஜூலை மாஸம் 14-வயதுக்குட்பட்ட 10,466 பையன்களும், 16-வயதுக்குட்பட்ட 900 பெண்களும் லண்டன் நகரத்துத் தெருக்களில் ஸாமான்களை விற்று வந்தார்களென்று ஏற்படுகிறது. அந்தப்பையன்களில் பாதிபேர்கள் ஸமாசாரப் பத்திரிகைகளைத் தெருவில் எடுத்துக்கொண்டுபோய் விற்றார்கள். பெண்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் புஷ்பங்களை விற்றார்கள். இந்த விஷயத்தைப்பற்றி ஒரு பொது விசாரணை செய்யப்பட்டுவருகிறது. சீக்கிரத்தில் இதைத்தடுக்கச் சட்டம் ஏற்பட்டுவிடும்.

THE MAT TRADE IN JAPAN.

ஜப்பான் தேசத்து பாய் வியாபாரம்.—ஜப்பான் தேசத்தில் வருஷம் 1-க்கு சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள கோரைப்பாய்களை அயல்தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இதனால் அந்த தேசத்தில் ஸ்திரீ புருஷர்களெல்லாம் ஏராளமாய் பாய் பின்னும் வேலைகளில் ஊக்கமாயிருப்பதோடு இதைப்போல பற்பல கைத்தொழில்களிலும் சுறுசுறுப்புடையவர்களாய் இருப்பதாகத்தெரிகிறது.

LORD CREWE AT LIVERPOOL.

லார்ட் க்ரூ லிவர்பூலில் பேசியது.—புதிய இந்தியா மந்திரி லார்ட் க்ரூ லிவர்பூலில் ஸமீபத்தில் பேசியபோது தமக்கு இந்தியா மந்திரி ஸ்தானம் தாம் வேண்டுமென்று கேட்டதின் மேல் கிடைக்கவில்லை என்றும், இருந்தாலும், இதற்குமுன் யாரும் குடியேற்ற நாட்டு மந்திரியாயிருந்து விட்டு, தொடுத்தாப்போல இந்தியா மந்திரியாயிருந்ததில்லை ஆகையால், தாம் அந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டதாகவும் சொன்னார். சக்ரவர்த்தி இந்தியாவுக்கு விஜயம் செய்வதை யொட்டிப் பேசியதில் அது யாவரும் தங்கள் ஞாபகத்தில் பல்லாண்டு வைக்கக் கூடிய விஷயமாய் முடியுமென்று சொன்னார்.

PATRIOTISM IN SOUTH AFRICA.

தென் ஆப்பிரிக்காவின் தேசாபிமானம்.—தென் ஆப்பிரிக்கா முழுவதும் ஒன்றாய் ஐக்கியமாகி சுய ஆட்சி கொடுக்கப்பட்டதை அந்த தேசத்தவர்கள் மிகவும் அருமையாய்ப் பாராட்டுகிறபடியால், காலஞ்சென்ற எட்வர்டு அரசர் அந்த சுய ஆட்சியை அளித்ததாக எழுதினபோது அவர் உபயோகித்த மேஜையையும், பேனாவையும், இங்கிப்புட்டியையும் தென்னாப்பிரிக்கா யூனியன் கவர்ன்மெண்டுக்கு பரிசளித்தார். எட்வர்டு சக்ரவர்த்தியின் தம்பியாகிய கானாட்டுக் கோமகன் முதல் யூனியன் பார்லிமெண்டைத் திறப்பதற்கு முன்னால் அந்த மேஜையையும், பேனாவையும், இங்கிப்புட்டியையும் பார்லிமெண்டு ஹாலில் வைக்கப்படும்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள். இதே மாதிரியாக, கனடா பார்லிமெண்டும், ஆஸ்டிரேலியா பார்லிமெண்டும், சுய ஆட்சி பெற்ற விசேஷ ஸமயத்தை அருமையாய் ஞாபகம் வைத்திருக்கும் பொருட்டு, அதேமாதிரி சின்னங்கள் தருவித்து வைத்திருக்கிறார்கள்.

AGRICULTURE FOR JUVENILE OFFENDERS.

சிறு குற்றவாளிகளுக்கு விவஸாயம்.—ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாகாணத்தில் குற்றவாளிப் பையன்களுக்கு 14 முதல் 18 வயதுக்குள் விவஸாய விஷயமான படிப்பு திறமையாயும், பிழைக்கக் கூடியதாயும் கற்றுக்கொடுக்கிறார்கள். இப்படியே அமெரிக்காவில் காமஸ்டாக் சிறைச்சாலையில் விவஸாயம் கற்பிக்கப்படும். இப்படிச்செய்வது விவஸாயத்தின் நூதன முறைகள் பரவுவதற்கான நல்ல உபாயமென்று நாம் முன்னமேயே எழுதியிருக்கிறோம்.

BUTTER FROM COCOANUT.

தேங்காயிலிருந்து வெண்ணெய்.—ஜர்மனி தேசத்திலே சமையலுக்கு தைல பதார்த்தங்கள் அதிகம் தேவை. பசுவின் வெண்ணெய் தேவைக்குத் தக்கபடி அகப்படாததனால், அமெரிக்கா பருத்திக்கொட்டை எண்ணெயிலிருந்து வெண்ணெயுண்டாக்கி வந்தார்கள். தற்போது தேங்காயிலிருந்து மிக நேர்த்தியான வெண்ணெய் செய்யலாமெனக் கண்டு பிடித்ததின்பேரில் ஜெர்மனியிலும், ப்ரான்ஸிலும் அதிகமாக இந்தவேலை நடத்திவருகிறார்கள். கொப்பராவை இடித்து எண்ணெய் பிழிந்து முதல்தர எண்ணெயிலிருந்தே இது செய்யப்படும். கொப்பராவில் 100-க்கு 60 அல்லது 70 பங்கு வெண்ணெயாக்கலாமாம். இதை வண்ணார் உபயோகிக்கும் சாரமண்ணுடன் கலந்து தெர்மாமிட்டர் என்னும் சூட்டளவுக் கருவியில் 250 டிக்ரீ வரையில் சில ரஸாயன பதார்த்தங்களும் போட்டுக்காய்ச்ச, தேங்காயின்மணம் ருசிமுதலியன எல்லாம் எடுபட்டு மிக நேர்த்தியான வெண்ணெயாக வரும். சுத்தவெண்ணிறமாக பிரகாசிக்கிற வெண்ணெய் கிடைக்கும். இதிலிருக்கும் விசேஷம் எல்லாவகையான வெண்ணெய்களுக்குள்ளும் உருகுந்தன்மையில் குறைவுள்ளது. 80 டிக்ரீ அனலுக்குத்தான் உருகும். அது மாத்திரமல்ல. நல்லவாசனையுள்ளது. பழுதடையாமல் வெகுகாலத்துக்கு இருக்கும். இதின் நிமித்தமாகவே கொப்பரா அதிகமாய் மேற்குத்தேசங்களுக்கு ஏற்றப்படுகிறது. கடவுள் இயற்கையில் மனுஷனுக்குத் தேவையானவைகளை எல்லாம் அமைத்திருக்கிறார். அவைகளை எடுத்துக் கையாடிப் பிரயோஜனப்படுத்தவேண்டியது மனுஷன் கடமை.

SEASON.

காலஸ்திதி.

Rainfall.

மழை.—ஏப்ரல்௴ 1-தேதியிலிருந்து, டிஸம்பர் மாஸம் 19-ம் தேதி வரையில் பெய்தமழை அளவும் இந்தக் காலத்தில் ஸாஸரியில் பெய்திருக்கவேண்டிய மழை அளவும், இதே அங்குலம், ஸெண்டுகளாக குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	59·58	46·11
வால்டேர்	54·52	42·70
காக்கிநாடா	38·79	37·66
மசூலிப்பட்டணம்	48·48	40·33
நெல்லூர்	32·34	29·53
மதராஸ்	44·22	47·90
கூடலூர்	42·68	48·30
நாகப்பட்டணம்	45·36	48·64
பாம்பன்	23·58	31·83
கொழும்பு	57·16	77·33
திருவனந்தபுரம்	72·14	59·17
கொச்சி	119·09	111·68
கள்ளிக்கோட்டை	106·65	113·82
மங்களூர்	117·78	123·55
மெர்க்காரா	125·91	125·97
ஐதராபாத்	27·63	30·70
ரெய்ச்சூர்	20·71	30·06
பல்லாரி	25·70	19·47
கர்நூல்	28·29	27·88
கடப்பை	46·23	32·09
நாஸ்லான்	37·35	34·59
பெங்களூர்	46·04	34·22
கொடைக்கானல்	58·66	51·48
உதகமண்டலம்	57·82	..
கோயம்புத்தூர்	22·23	19·39
வேலூர்	61·73	..
சேலம்	41·81	38·85
திருச்சிறாப்பள்ளி	38·91	30·13
புதுக்கோட்டை	37·85	30·13
மதுரை	39·11	31·23
திருநெல்வேலி	21·01	23·3[illegible]

16118

MARKET REPORT.

மார்க்கெட் நிலவரம்.

COTTON GOODS IN MADRAS.

மதராஸில் துணி ஸாமான்கள்.—நவம்பர்௴ 19-தேதியிலிருந்து டிஸம்பர்௴ 10உ வரையில் அந்நிய தேசங்களிலிருந்து சென்னபட்டணத்தில் இறக்குமதியான துணி ஸாமான்களின் விவரம்.

நூலும் முறுக்கு நூலும் 6,90,080 ராத்தல், காரிகத்துணிகள் 63,57,212 கஜம். சலவைத்துணிகள் 17,43,828 கஜம். இதர தினுசுத்துணிகள் 41,22,935 கஜம். இதேகாலத்தில் சென்னபட்டணத்திலிருந்து ரெயில் வழியாய் 15,805 அந்தர் துணி சாமான்கள் வெளி ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு அந்தர் என்பது 112 ராத்தல். ஒரு ராத்தலுக்கு சுமார் 2½ கஜம் துணி என்று வைத்துக்கொள்ளலாம். டிஸம்பர் மாஸம் 13-ம் தேதியன்று பம்பாயில் 20-ம் நெ. காரிக நூலின் விலை ராத்தல் ஒன்றுக்கு 0-7-6 முதல் 0-8-3 வரையில் இருந்ததாகத் தெரிய வருகிறது.

IMPORT OF SUGAR.

சர்க்கரை இறக்குமதி.—சென்ற நவம்பர் மாஸம் 19-ந்தேதிமுதல் டிஸம்பர் மாஸம் 10-ம் தேதி வரையில் சென்னபட்டணத்தில் இங்கிலாந்திலிருந்து 87 அந்தரும், ஜாவா தீவிலிருந்து 19,569 அந்தரும், இறக்குமதியாயின.

WANTED AGENTS.

ஏஜெண்டுகள் தேவை.

“பிழைக்கும் வழி”க்கு ஸந்தாதாரர்கள் சேர்க்க ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் ஏஜெண்டுகள் தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

ஜி. ஏ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சங்குராம செட்டித்தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.